Or b m 211, No3 NA
No 3.19
161986

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறு ஆடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே
ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 19. ஜனவரி 1921. இலக்கம் 1.

THE NEW YEAR.

புது வருஷம்.

பரதேசம்போய் தன் சுய தேசம் திரும்பும் பிரயாணி எவனும் பிரயாணஞ் செய்யச் செய்ய, தான் நடந்த தூரத்தைக் கணக்கிட்டுத் தன் ஊர்போய்ச் சேர இன்னும் இத்தனை கல் தூரம் அல்லது இன்னும் இத்தனை நாட் பயணந்தானுண்டென்று தனக்குட் சொல்லிக்கொண்டு, சீக்கிரமாய்த் தன்னூர்போய்ச் சேரவும், தன் பெற்றோர் உற்றோர் உறவின் முறையாரைக் கண்ணாரக்கண்டு களிக்கவும் மிக்க உற்சாகமாய்ப் பிரயாணஞ்செய்வானன்றோ? இவ்வாறே நாம் ஒவ்வொருவரும் இவ்வுலகில் பிரயாணிகளாயிருக்கிறோம். இப்பிரபஞ்சம் நமக்குப் பரதேசம். பரலோகமே நமக்கு சுயதேசம். அந்த சுயதேசத்துக்குத்தான் நாம் ஒவ்வொருவரும் பிறந்த நாள் முதற்கொண்டு பிரயாணமாய்ப் போகிறோம். ஆனால், நம்முடைய சுயதேசமாகிய பரலோகஞ் சேரவும், அவ்விடத்தில் நமதன்பார்ந்த தந்தையாகிய சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசித்துச் சகல பேரின்ப பாக்கியங்களைச் சுகிக்கவும் இன்னும் எத்தனை காலத்துக்குப் பிரயாணஞ்செய்யவேண்டியவர்கள் என்பதை மாத்திரம் நாம் அறியோம். ஆயினும், இது சம்பந்தமாய் ஒரு விஷயம் நம்மெல்லோருக்கும் நன்றாய்த் தெரியும். அஃது யாதெனில், இப்பிரபஞ்சத்தில் நாம் சீவிக்கும் ஒவ்வொரு நிமிஷமும், நாளும், நம்மை மோட்ச இராச்சியத்தை நெருங்கிச் செல்லச்செய்கின்றதென்பதேயாம். ஆம், கடந்த 1920-ம் வருஷத்தில் நாம் மோட்ச இராச்சியத்தைக் கிட்டியிருந்ததைவிட இன்று பிறந்திருக்கிற புது வருஷமாகிய 1921-ம் வருஷத்தில் அதை அதிகமாய்க் கிட்டியிருக்கிறோமல்லவா?

ஆயினும், எந்தப் பிரயாணியும் தன் ஊர்போய்ச் சேர அதை நோக்கிச் செல்ல வேண்டியது. தன் ஊர் வடக்கிலிருக்க, இவன் தெற்கைநோக்கி பிரயாணஞ்செய்வானானால், ஒருகாலும் தன் ஊர்போய்ச் சேரானென்பது திண்ணம். இப்படியே மோட்சத்துக்குப் பிரயாணஞ்செய்யும் நாமும் மோட்சவழியில் நடந்துசென்றாலன்றி மற்றப்படி மோட்ச இராச்சியத்தில் பிரவேசிக்க மாட்டோம். அப்படியானால், நாம் மோட்ச வழியில் செல்லுகிறவர்களாய்த்தான் இருக்கிறோமா? மோட்சவழி எதென்று நாம் அறியாதவர்களல்ல. சர்வேசுரனுக்கு ஊழியம் செய்வதே அவ்வழியல்லவா? சர்வேசுரன்

161986
600 008

நம்மை ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்கிக் காத்துக் காப்பாற்றிக்கொண்டுவருகிறபடியால், அவரே நமக்குத் தகப்பன், எஜமான். அவரே நமக்குச் சகலமும். நாம் அவருக்குப் பயபக்தியுடன் பணிந்து பணிவிடை செய்ய கடமைப்பட்டுள்ள ஊழியர். "உன் கர்த்தாவான சர்வேசுரனுக்குப் பயந்து அவருக்குமாத்திரம் ஊழியம் செய்வாயாக" (தேயோத். VI. 13). ஆனதுபற்றி இவ்வுலகில் தன் வாழ்நாட்களை தேவ ஊழியத்தில் செலவழியாத எவனும் அவைகளை வீணாக்கிக்கொண்டு தன் கதியைவிட்டு விலகி, அதாவது மோட்சவழி தப்பி நடந்து, அதை யடையாமற்போகிறான். அந்தோ! அவனுடைய கதி அதோகதிதான். அவன் சுவிசேஷத்திற் சொல்லப்பட்ட (மத். XXV. 30) தகாத ஊழியனைப்போல் புறத்திப்பட்ட இருட்சிறைச்சாலையில் அடைபட்டு, அவ்விடத்தில் நித்தியகாலத்துக்கும் சொல்லிமுடியாத வாதை வேதனைகளுக்கும், துக்க துயரங்களுக்கும், அழுகை கூக்குரலுக்கும் பற்கடிப்புக்கும் உள்ளாகிறான். இந்த நித்திய கேட்டுக்குத் தப்பித்துக்கொள்ள நாம் எவ்வளவோ பிரமாணிக்கமாய்ச் சர்வேசுரனுக்கு ஊழியம் செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். இக்கடமையைத் தம் உள்ளத்தில் நன்றாய் உணர்ந்த ஒரு உத்தமர் ஒரு நாள் பீடத்துக்குமுன் சாஷ்டாங்க தண்டனிட்டு "ஓ! சர்வேசுரா, தேவரீருக்கு ஊழியம் செய்வதற்காகவே நான் இவ்வுலகில் இருக்கிறபடியால், உம்முடைய அடியானாகிய என்னிடத்தில் தேவரீர் எத்தகைய ஊழியத்தை ஆசிக்கிறீர்" என மன்றாடவே, உடனே பின்வரும் மூன்று வார்த்தைகள் அவர் காதில் ஒலிக்கக் கேட்டார். "விசுவசி," "அனுசரி," "பெற்றுக்கொள்." இவ்வார்த்தைகளை இவர் சரிவரக் கண்டுபிடியாமல், மீளவும் சர்வேசுரனை நோக்கி, "ஆண்டவரே, இவ்வார்த்தைகள் அடியேனுக்கு நன்கு விளங்கும்படிக் கிருபைசெய்யும்" என்று கேட்டுக்கொள்ளவே, "திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கிற சத்தியங்களையெல்லாம் முழுமனதுடன் விசுவசி," "சர்வேசுரனுடையவும் திருச்சபையினுடையவும் கற்பனைகளைப் பிரமாணிக்கமாய் அனுசரி," "தேவத்திரவிய அனுமானங்களை பயபக்தியுடன் பெற்றுக்கொள்" என்று விவரமாகச் சொல்லக் கேட்டபடி, இவர் தன் சீவியகாலமெல்லாம் சர்வேசுரனுக்கு ஊழியம் செய்து, பாக்கியமான மரணத்தையடைந்து பரகதி சேர்ந்தார். இந்தப் புண்யாத்துமாவைப் போல் நாமும் சர்வேசுரனுக்கு ஊழியம் செய்தாலன்றி நாம் மோட்சவழியில் நடந்துபோகிறவர்களுமல்ல, பரலோக இராச்சியத்திற் பிரவேசிக்கிறவர்களுமல்ல.

மேற்சொன்னபடி, தன் ஊர்போய்ச் சேர ஆசிக்கும் பிரயாணி வழிதப்பிப்போகாதபடி ஜாக்கிரதையெடுத்துக்கொள்வதுடன், வழியில் தனக்கு வரும் ஆபத்துக்களுக்குத் தப்பித்துக்கொள்ளவும் எச்சரிக்கையாயிருக்கக்கடவான். கள்ளர்களாலும் துஷ்டமிருகங்களாலும் அவனுடைய உடலுக்கும், உயிருக்கும் பொருளுக்கும் சேதம் நேரிடலாகும். ஆகையால், அவன் க்ஷேமமாய்த் தன் ஊர் போய்ச் சேர எந்த நேரத்திலும், எந்த வேளையிலும் பிரயாணஞ்செய்யாமல் முன் பின் யோசனைசெய்து பிரயாணஞ்செய்யவேண்டியதல்லவா? பரலோகப் பிரயாணிகளாகிய நாமும் க்ஷேமமாய் அவ்விடம்போய்ச் சேர சர்வ ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியதென்பது சொல்லாமலே விளங்கும். நம்முடைய பிரயாணத்தில் நமக்குப் பற்பல ஆபத்துக்கள் நேரிடுமென்பது வாஸ்தவம். ஏனெனில், பசாசானது தேவ ஊழியமென்னும் மோட்சவழியில் க்ஷேமமாய் நம்மை நடந்துசெல்ல விடாதபடி, நமக்கு அநேக கேடுபாடுகளை விளைவிக்கின்றது. அர்ச். இராயப்பர் கூறியுள்ளவண்ணம் "பசாசு கர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல் யாரை விழுங்கலாமோவென்று தேடிச் சுற்றித்திரிகின்றது" (I இரா. V. 8). இதற்கு உடன்பட்டு உழைக்கும் உலகமும் இப்பிரபஞ்ச வாழ்வே பாக்கியமென்றும், இதுவே சதமென்றும், இதுவே சகலமுமென்றும் நமக்குப் பசப்பிக் காட்டி, தேவ ஊழியத்துக்கடுத்த காரியங்களை நாம் கவனியாமல், சர்வேசுரனையும் அவருடைய கற்பனைகளையும் புறக்கணிக்கவும், இப்பிரபஞ்ச நன்மைகளை நியாயம் அநியாயம் பாராமல் சம்பாதிக்கவும் நம்மைத் தூண்டிவிடுகின்றது. ஆனபடியால் அல்லவா அர்ச். அருளப்பர் "உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் சிநேகியாதேயுங்கள். உலகத்தை சிநேகிக்கிறவனிடத்தில் பிதாவானவருடைய சிநேகமிராது" (II. 15) என்கிறார். பசாசினாலும் உலகத்தினாலும் நமக்கு வரும் ஆபத்துக்கள் இவ்வாறிருக்க, பசாசின் மற்றொரு கூட்டாளியாகிய சரீரத்தினால் வரும் துன்பங்களும் இடையூறுகளும் இன்னும் அதிக ஆபத்துக்குரியவைகளென்பதற்குச் சந்தேகமில்லை. "உடன்பிறந்தார் சுற்றத்தாரென்றிருக்கவேண்டாம் உடன்பிறந்தே கொல்லும் வியாதி" என்பதற்கொப்ப, நாம் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய்ப் பாராட்டி சீராட்டிப் பராமரித்து வரும் நம்முடைய சொந்த சரீரமே நமக்குப் பெரும் சத்துருவாய் இருந்துவருகின்றது. ஆம், நம்முடைய ஐம்புலன்களும் நாடித் தேடும் அடாத இச்சைகளுக்கும், இன்பசுகங்களுக்கும் நாம் எவ்வளவோ இலேசாய் இடங்கொடுத்து ஏமாந்துபோகிறோம். ஆகையினால் பசாசும் அதன் உடன்பங்காளிகளான உலகமும், உடலும் நம்மை நம்முடைய மோட்சப்பிரயாணத்தில் வழிமறித்தடிக்குங் கள்ளர்களாயும், துஷ்டமிருகங்களாயுமிருக்கிறபடியினால், நாம் எம்மாத்திரம் விமரிசையுடனும் விழிப்புடனும் நம்முடைய பிரயாணத்தைச் செய்துமுடிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம்!

பிரயாணி எவனும் தன் ஊர் நெருங்க, நெருங்க மிக்க உற்சாகங்கொண்டு விரைவாய் நடந்துசெல்லுவான். இப்படியே நம்முடைய இப்பிரபஞ்ச சீவியத்தில் கடந்துபோகும் பிரதி தினமும் மாசமும் வருஷமும் மேற்சொன்னபடி நம்மை மோட்ச இராச்சியத்தை நெருங்கச்செய்கின்றபடியால், இப் புது வருஷத்தின் ஒவ்வொரு நாளையும் நாம் எவ்வளவோ உற்சாகத்துடன் தேவ ஊழியத்திற் செலவழிக்கவேண்டியது. நமக்குள் அநேகர், 30, 40, 50 இன்னும் இதற்கு அதிகமான பிராயமுள்ளவர்களாயிருக்கலாம். இத்தனை வருஷங்களையும் இவர்கள் தேவ ஊழியத்தில் செலவழித்தார்களோ? ஒருகால் இவர்கள் ஒரு வருஷத்தையாவது அல்லது ஒரு மாசத்தையாவது அல்லது ஒரு வாரத்தையாவது தேவ ஊழியத்தில் சரியானபடி செலவிடாதுமிருந்திருக்கலாம். அப்படியானால், இன்று தொடங்கியுள்ள இப்புது வருஷத்திலும் இவர்கள் தங்கள் வழக்கம் போல் நித்திய கேட்டுக்குச் செல்லும் வழியில் நடந்துசெல்லலாமோ? ஒருவேளை இவ் வருஷம் அவர்களுடைய சீவியகாலத்தின் கடைசி வருஷமாயிருக்கலாம். "சென்ற நாளெல்லாம் சிறு விரல் வைத்தெண்ணலாம் நின்ற நாள் யார்க்கும் நினைவரிது." "சாவு ஒரு திருடனைப்போல் வரும்" என்னும் சுகிர்த வாக்கியங்களுக்கொப்ப, சென்ற வருஷத்திலிருந்த நம் சிநேகிதர், சுற்றத்தார் முதலானவர்களில் எத்தனையோ பேர் மரித்து மண்ணுக்கிரையாய்ப் போயினர். நமக்கும் அக்கதி இவ்வருஷத்தில் வாராதென்று திட்டமாய்ச் சொல்ல யாராலாகும்? ஆனபடியால், உடனே மோட்சவழியாகிய தேவ ஊழியத்தைக் கடைபிடித்து நடப்பது புத்தியல்லவா? வருஷப் பிறப்பு நாளாகிய இன்றையத்தினத்திலேயே நாம் ஒவ்வொருவரும் சர்வேசுரனை நோக்கி: "என் ஆண்டவரே! என் தேவனே! இன்றுமுதற்கொண்டு என் மரணபரியந்தம் உம்மை மோட்சத்தில் முகமுகமாய்த் தரிசித்து, சகல பேரின்பபாக்கியங்களையும் அடைய வழியாயிருக்கும் உம்முடைய ஊழியத்திலேயே என் வாழ்நாட்களைப் போக்கப் பிரதிக்கினைசெய்துகொள்ளுகிறேன். என் பிரதிக்கினையில் நான் நிலைகொண்டிருக்க கிருபாநோக்கம்பாலித்தருளும்" என்று வேண்டிக்கொண்டு இப்புது வருஷத்தைத் தொடங்குவோமாக!

"நல்ல ஆயன்" சந்தாதாரர்களனைவர்களுக்கும், அதன் நல்லிருப்பையும் அபிவிருத்தியையுங் கோரி, அதற்குப் பொருள் தானம் விஷயதானம் செய்தோருக்கும், இன்னும் இவர்களுடைய உற்றார் உறவினருக்கும் மேற்சொன்ன பிரதிக்கினையே எமது புது வருஷத்திய சோபனமாகக் கூறுகிறோம். இந்த நல்ல பிரதிக்கினையில் இவர்களெல்லோரும் இந்தப் புது வருஷத்தில்மாத்திரமல்ல, ஆனால் இன்னும் பல புது வருடங்களுக்கும் நிலைத்திருக்கக் கோருகிறோம். இந்த எமது கோரிக்கை நிறைவேற இன்று திவ்யபூசைசெய்தும் ஒப்புக்கொடுப்போம்.

உலகத்திலுண்டான யாவற்றையும் நான் அறிந்தும் தேவ சிநேகம் என்னிடத்தில் இல்லாதபோனால், என் நடத்தையைக்கொண்டு எனக்குத் தீர்வையிடும் சர்வேசுரனுக்கு முன்பாக, அதினால் எனக்கென்ன உதவி?

அறியவேண்டுமென்ற மிதமிஞ்சின ஆசையை விட்டுவிடு; ஏனெனில் வெகு கவலையும் மோசமும் அதிற் காணப்படுகின்றன.

கற்றவர்கள் பிறரால் புகழப்படவும், ஞானிகளென்றழைக்கப்படவும் வலிய ஆசிக்கிறார்கள்.

அறியத்தேடுகிற காரியங்களில் ஆத்துமத்திற்குச் சொற்பப் பிரயோசனமாத்திரம் உள்ளவை, அல்லது பிரயோசனமேயற்றவை அநேகமுண்டு.

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

XX
ரோஜாமலர்.

"ஜெரிக்கோவிலுள்ள ரோஜா செடிபோல் (ஆனேன்) (சர்வ. XXIV. 18).

மலர்களில் சிறந்தது ரோஜா. புஷ்பங்கட்குள் ளரசியென்றுஞ் சொல்லலாம். அவ்வாறே மாதர்களில் சிறந்தவள் மரியாய். இகபரலோக வாசிகளின் இராக்கினியுமவளாம்.

1. முட்களுள்ள காம்பினின்று மலர்கின்றது ரோஜாப்பூ. ஆயினும் முட்களால் குத்தப்படுவதில்லை. மிருதுவாகவும் அழகாகவுமிருப்பதால் பார்ப்போர் கண்ணைக் கவர்கின்றது. பாவ மாசுபடிந்த மானிடசந்ததியினின்று மரியாய் உதித்தபோதிலும் மாசு அவளிடத்துக் கிடையாது. தேவ அருளால் அலங்கரிக்கப்பட்டு எழில் பொருந்தி விளங்கினாள். ரோஜா செடியின் முட்களை யூதர்களுக்கும், மலரைக் கன்னிமரியாய்க்கும் ஒப்பிடுகிறார் அர்ச். தமசீன் அருளப்பர். ஆகவே, "ஓ! ரோஜாமலரே! முட்கள் போன்ற யூதரிடத்திலிருந்து உதித்தவள் நீயன்றோ? எப்பக்கமும் மோக்ஷ பரிமளம் வீசுகின்றாய் நீ!" என்று அதே சுத்தவாளர் கூறுகின்றார். அர்ச். மரியாயையும் ஏவாளையும் ஒப்பிட்டுச் சொல்லுகையில் அர்ச். பெர்நார்து வசனிப்பதாவது: "ஏவாள் ஓர் முள். அவள் தான் கட்டிக்கொண்ட பாவத்தால் மானிடசந்ததியைப் புண்படுத்தினவளானாள். எல்லோருக்கும் மரணத்தையூட்டினாள். மரியாயோ ரோஜாமலர். மனிதரின் தீவினைகளை யகற்றுகிறாள். மரணத்தினின்று மீட்டாள்" என்பதே.

2. ரோஜாமலரின் சிவந்த நிறமும் சுகந்த பரிமளமும் கண்ணைப் பகட்டி மனதை இரம்மியப்படுத்தும். இவைகள் மரியாயின் புண்ணியங்களை உவமிக்கின்றன. மரியாயினிடத்துத் துலங்கிய பிரதான புண்ணியந் தேவ சிநேகமே. அதனிடத்தில் பிறர்சிநேகமுங் குறைபடாது விளங்கியது. ஏனெனில் பின்னையதில்லாது முன்னையதிராது. "யார் யார் கடவுளை நேசிக்கின்றனரோ அவர்கள் பிறரையும் நேசிப்பர்" என்பது அர்ச். அருளப்பரின் வாக்கு. கன்னிமரியாயைப் போல் கடவுளை நேசித்தவர் இத்தரணியில் ஒருவருமில்லை. ஏனெனில் தேவ நேசத்தைக் குறைக்கவோ, கெடுக்கவோ வல்ல சுய நேசம் அவளிடமிருக்கவில்லை. "சேசுநாதரைத் தவிர, மரியாயைவிடக் கடவுளை யதிகமாய் நேசித்தவர் ஒருவருமில்லை" என்று அர்ச். பெர்நார்து பகர்கின்றார். மரியாய் சேசுநாதரை எவ்வளவு நேசித்தாளென்றால் அவர்பொருட்டு அவள் வேதசாட்சிகளின் இராக்கினியானாள். உலகத்தை எவ்வளவு நேசித்தாளென்றால் தன் ஏக குமாரனையே கொடுத்தாள்.

3. மரியாயினது புண்ணியங்களின் வாசனை எங்கும் வீசினது—வீசுகின்றது. அவள் சீவியத்தைத் தியானிப்போர் புண்யகந்தம் சுகிப்பர். "தேவ இரகசியத்தைக் கொண்டிருக்கிற ரோஜாவின்" மணத்தைப் பெற விரும்பாதார் யார்? அப்பரிமளத்தால் கவரப்படாதவர் எவர்? சேசுவின் மதுர வாடை மரியாயின் வழியாகவே மானிடருக்கு வீசினது. வேதத்தைப் போதிப்பதினால் அர்ச். சின்னப்பர் "நாங்கள் கிறீஸ்துவின் நல்ல வாசனையாயிருக்கின்றோம்" என்று செப்பியிருக்க மரியாய் தனது சாதனையினால் நமக்கு நல்ல வாசனையாயிருக்கின்றாள் என்பதற்கு சந்தேகமா? ஆகவே, நெஸ்தோரியுஸைக் கண்டித்து அர்ச். சிரில் சொல்லுகிறதாவது "தமதிரீத்துவம் உலகோரால் ஆராதிக்கவும் மகிமைப்படுத்தவும்பட்டுவருகிறது இக்கன்னிகையாலே. அவளாலேயே மோக்ஷம் அக்களிக்கின்றது. தூதர்களும் அதிதூதர்களும் ஆனந்திக்கின்றார்கள். பேய் துரத்தப்படுகின்றது. சபிக்கப்பட்ட மானிடசந்ததி மோக்ஷந் திரும்புகிறது. விக்கிரஹ குருட்டாட்டத்திலிருந்தவர் மெய்ம்மறை வெளிச்சம் பெறுகின்றனர். பலவிடத்திலுந் சத்திய வேதம் நிலைத்திருக்கிறது. கிறீஸ்துவர்கள் நல்வழி கொண்டுவரப்படுகிறார்கள். சுருங்கச் சொல்லின், அவளுதவியாலேயே இருளிலும் நிழலிலுமிருந்தவர்களுக்கு மெய்யான பிரகாசம் கிடைத்தது. தீர்க்கதரிசிகள் பின்வருவனவற்றை அறிவித்தனர். அப்போஸ்தலர் அஞ்ஞானிகளுக்குப் போதித்தார். மரித்தோருக்கு உயிர்கொடுக்கப்படுகின்து. அரசர் கடவுள்பேரால் ஆட்சிபுரிகின்றனர். னது புண்யமாதிரிகையாலுஞ் சுகுணங்களாும் நம்முடைய சீவியத்தை நலம்படச்செய்கின்ாள். அத்தாய் தம்மை நேசிப்போர்க்கு—அண்டப்போவோர்க்கு—அபரிமிதமாய்ப் புண்ய பரிமளம் வீசி கஷ்டமான புண்ய பாதையை இலகுவாக்குகின்றாள்.

4. முள்ளானது பாவத்திற்குச் சமானமென்று முன் சொன்னோம். இவ்வுலகின்கண் நமக்கு நேரிடுங் கஸ்தி துன்பங்களுக்கும் அது ஒப்பாயிருப்பது வெளிப்படை. முள்ளானது ரோஜாமலரைக் குலைத்துவிடாது. அதனிடத்துள்ள வாசனையையும் பங்கப்படுத்தாது. அதுபோலவே மரியாயின் வியாகுலங்கள் அவளது புண்ணியங்களைச் சற்றேனுஞ் சிதைக்கவில்லை. அதற்குமாறாக மரியாயின் புண்யங்கள், கஸ்தி உண்டாக உண்டாக அதிகரித்துக்கொண்டே வந்தன. ஆகவே வேதசாட்சிகளின் இராக்கினியானாள்.

மரியாயை ரோஜாமலருக்கு ஒப்பிட்டிருப்பதாலும், பரம இரகசியத்தைக்கொண்டிருக்கிற ரோஜாமலர் என்று திருச்சபை யழைப்பதாலும் அத்தாயின்பேரால் பன்முறை ஜெபிக்கும் பிரியதத்த மந்திரக் கோர்வைக்கு 'ரோஜாமாலை' (செபமாலை) எனப்பெயர்கொடுத்தது தகுதியே. இச்செபங்களால் இணைத்த மாலை மரியாய்க்கு மிக்கப் பிரியமானது. அம்மாலையை யவள் பாதத்தில் சமர்ப்பிப்போர்க்கு விசேஷ அருள் பெற்றீய்கின்றாள். பின்வருஞ் சரிதை யதற்கோர் அத்தாட்சியாம்.

ஓர் சிறு பையன் தேவதாயின்மேல் பக்தியுள்ளவனாயிருந்தான். தனதன்பைக் காட்டும் வண்ணம் நாள்தோறும் ரோஜாமலர்களால் மாலையொன்று செய்து மாதாவிற்குச் சாத்துவான். இவனது பெற்றோர் அவனைச் சந்நியாசி மடத்திற்கனுப்பிவிட்டார்கள். அங்கு போனதும் மாலை செய்து சமர்ப்பிக்கக்கூடவில்லை. இது விஷயமாய்க் கஸ்திப்பட்டான். இதை யறிந்த சிரேஷ்டர் "மகனே! நீ சஞ்சலப்படவேண்டாம், வாடிப்போகும் புஷ்பமாலைக்குப்பதிலாய் வாடா மலர்மாலையாகிய செபமாலையைச் செபித்து ஒப்புக்கொடு. அது நமது தாய்க்குப் பிரியமாயிருக்குமென்றார். அவனும் அப்படியே செய்துவந்தனன்.

பையன் நாளடைவில் பக்தியிலும் படிப்பிலும் வளரவே சந்நியாச உடையுந் தரிக்கலானான். பின்னர், ஓர் மடத்திற்குச் சிரேஷ்டரானார். இப்பதவியிலிருக்கையில் தனது மடத்து சந்நியாசிகளிலொருவரோடு அலுவலினிமித்தம் வேறூருக்குக் காட்டின் வழியாய்ச் செல்ல நேரிட்டது. இவர்களிருவரும் வருவதைக்கண்ட கள்வர் வழிமறித்துப் பொருள் பறிக்க எத்தனித்தனர்.

காட்டிலிருக்கையில் சிரேஷ்டர் துணைவரைப்பார்த்து "சகோதரரே, நானின்று சொல்லவேண்டிய செபமாலையை யின்னுமுடிக்கவில்லை. ஆகையால் இங்கு சற்று தாமதித்து செபித்தபின் போவோம்" என்று சொல்லி முழங்கால்படியிட்டு செபிக்க வாரம்பித்தார். கள்வரிவரைப் பார்த்திருந்தனர். அவர்முன்பாக சௌந்தரியம்பொருந்திய ஓர் மாது நிற்பதாகவும் அவரின் வாயினின்று வரும் ரோஜாமலரை ஒன்றொன்றாக அவளெடுத்து மாலையாகக் கோர்த்துத் தரித்துக்கொண்டதாகவுங் கண்டார்கள். சிரேஷ்டர் செப முடிந்து எழுந்திருக்கவும் கள்வர் அவர் முன் வந்து உன் முன்னின்ற மாது யாரென விளம்பாவிடின் உன் உயிரை வைக்கமாட்டோம்! என்று பயமுறுத்தினார்கள். "பிரியமான பிள்ளைகளே! நான் அப்பேர்க்கொத்த பெண்ணைப் பார்க்கவில்லையே" எனப் பகர்ந்தார் சிரேஷ்டர். "பொய், பொய், நாங்கள் பார்த்தோம். அது யாரென்றும் அவளிடம் நீ என்ன பேசினையென்றும் அறிய விரும்புகிறோம்" என்றார்கள். அவர்கள் செப்பியதிலிருந்து அந்த மாது கன்னிமரியாயாய்த்தானிருக்கவேண்டுமென்றெண்ணி சிரேஷ்டர் தான் மரியாய்க்காக அநுதினமும் சாத்திவருஞ் செபமாலையைப்பற்றிச் சொல்லவே, அவர்கள் மனதிளகிப் பொறுத்தல் கேட்டனர். நல்ல பாவசங்கீர்த்தனம்பண்ணி உத்தமர்களாய் சீவித்தார்கள்.

சிரேஷ்டரோ தேவதாய் செய்த உபகாரத்திற்காகத் தனது புண்ய முயற்சியில் மிக்கப் பிரமாணிக்கமாயிருந்துவந்தார்.

(இன்னும் வரும்)

M. S. M.

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

9-ம் அதிகாரம்.

கடைசி கண்டம்—அகுஸ்தீன் இருதயத்தில் சந்தேகமே சர்வ வியாபகமாயிருக்கிறது—அர்ச். அமிர்தநாதரை அர்ச். மோனிக்கம்மாள் சகாயத்திற்கு அழைக்கிறள்—தன் குமாரன் இரட்சணியமடைய முன்னேவிட இருமடங்காய் ஞான வைராக்கியத்துடன் பாடுபடுகிறள்.

(க. அ. 384—386.)

(முன் தொடர்ச்சி.)

அர்ச். மோனிக்கம்மாளோவெனில், அமிர்தநாதருடைய முதல் வார்த்தைகளே அகுஸ்தீனுடைய மனதில் அப்படிப்பட்ட மாறுபாட்டை உண்டாக்கியபடியால் அவரே அவரை மனந்திருப்புவாரென்று நம்பிக்கைகொண்டு, அவரைக் கண்டவுடன் கோவென்று அழுதாள். பரிசுத்த மேற்றிராணியாருடைய பத்தி, மாதுரிய குணம், வித்தைத்திறமை ஆகிய இவைகளை மோனிக்கம்மாள் எவ்வளவுக்கு அதிகமாய் அறிந்திருந்தாளோ, அவ்வளவுக்கு அவர் தன் குமாரனை மனந்திருப்புவாரென்று அவளுடைய நம்பிக்கை யதிகரித்து, தன் மக்களைப் பாதுகாத்துக் காப்பாற்றி, அவர்களைக் கடவுள்பாரிசமாய்த் திருப்பும் தேவமனிதன்மட்டில் ஒவ்வொரு தாயாரும் கொள்ளும் பலத்ததும் தூய்மையுள்ளதுமான சிநேகத்தை அவள் முதல்முதலாக உணர்ந்து தன் இருதயத்தை முழுதுமாய் அவருக்குத் திறந்துகாட்டினுள்.

மோனிக்கம்மாள் மிலான் நகரில் தங்கியிருந்தகாலத்தில் அவரைத் தன் ஆத்தும குருவாகத் தெரிந்துகொண்டாளென்பதில் சந்தேகங் கிடையாது. அகுஸ்தீனை மனந்திருப்ப, கர்த்தர் தெரிந்துகொண்ட இம்மேற்றிராணியாருக்கல்லாமல், மற்றப்படி யாருக்கு உத்தமமான விதமாய்த் தன் ஆத்தும கவலைகளை வெளிப்படுத்துவாள்? இக்காலத்தில் அவளது சீவியப ஒரேயொரு நோக்கத்தில்நிலைக்கொண்டிருந்தது அவள் புரிந்துவந்த எல்லா காரியங்களிலும், அ நோக்கமே விளங்கிவந்தது.

அர்ச். மோனிக்கம்மாள் இன்னும் அதிக வயதுசென்றவளாய் இராதபோதிலும், அவள் பூலோகத்தைவிட்டுப் பிரிய இரண்டு வருஷங்கள் தானிருந்தன. ஆகையால் அவள் ஆத்துமம் வேக மாய்ப் பக்குவமடைந்து, புண்ணியப்பயிற்சியில் மெத்தவும் சிரேஷ்டமாய் விளங்கிவந்தது.

இந்த இரண்டு வருஷங்களையும் சிறந்த இவ் வாத்தும குருவின் பராமரிப்பில் செலவழிக்க வேண்டுமென்று தேவ திருவுளத்தில் ஏற்பாடா யிருந்தது. எப்போதும் கடவுள் ஓர் ஆத்துமத்தை நடத்திவரும் விதம் இப்படியே. ஒரு ஆத்துமப தனி வாசத்தில் மொக்குவிட்டு, அழகுவாய்ந்த புஷ்பமாய் புஷ்பிக்கவிருக்கும் சமயத்தில் உடனே கடவுள் அதை வேறிடத்திற்குக் கொண் டுபோய், அதனைப் பரிபக்குவப்படுத்தும்படி தாப இரகசியமாய் ஏற்படுத்தியிருக்கும் ஒரு ஆத்தும குருவின் பராமரிப்பில் வைப்பார்.

பரிசுத்த மேற்றிராணியாருக்கும் அகுஸ்தி னுக்கும் பரிட்சையானபிறகு, இவர்களுள் சிநே கம் வர்த்திக்கும்படியாக வெகுவாய் பிரயாசைப் பட்டாள். தான் மேற்றிராணியாரைக் காணப் போகும்போது, சில சமயங்களில் உபாயமாய் அவரையும் கூட கூட்டிக்கொண்டுபோவாள் வேறு சில சமயங்களில், ஏதோ ஒரு சாக்கு போக்கைச்சொல்லி, அவரை அமிர்தநாதரிடம் அனுப்பிவைப்பாள். ஆனால் உண்மையில் அவர்க ளிருவருக்கும் தொடுப்பு உண்டாக்கவேண்டு மென்பதே அவள் நோக்கம்.

சனிக்கிழமையன்று ஒருசந்தியிருக்கவேண் டியதோ, அல்லவோவென்று, ஒரு நாள் அவ ளுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. ஆப்பிரிக்கா தேசத்தில் அத்தினத்தில் எப்போதும் ஒருசந் தியிருப்பது வழக்கம். ஆனால் மிலான் தேசத் திலோ அப்படியல்ல. ஆதலால் தான் ஆப்பி ரிக்கா தேசத்து வழக்கத்தை யநுசரித்து அத்தி னத்தில் ஒருசந்தியிருப்பதோ, அல்லது மிலான் தேசத்து வழக்கத்தை யநுசரித்து ஒருசந்தியைத் தள்ளிவைப்பதோவென்று சந்தேகங்கொண் டாள்.

தானே அமிர்தநாதரிடம்போய் எப்படிச் செய்வது தகுதியென்று நேரில் அறிந்துகொண்டுவர அவளால் கூடுமாயிருந்தது. ஆனாலும் ஒரு பத்தியுள்ள தாய்க்கிருக்கும் விவேகத்துடன் அதை யறிந்துவர, அகுஸ்தீனை யநுப்பிவைத்தாள். அவர் மேற்றிராணியாரிடம்போய் கொண்டுவந்த சிறந்த மறுமொழி யாதெனில் "ஊருடன் ஒத்துவாழ்" என்கிறபடி, நீ எங்கேயிருக்க நேரிடுகிறதோ, அந்தத் தேசத்துத் திருச்சபை வழக்கத்தை யநுசரி. நீ உரோமாபுரியிலிருந்தால், அத்தேசத்துத் திருச்சபையாரோடு நீயும் ஒருசந்தியாயிரு. ஆனால் நீ மிலானிலிருந்தால் மிலான் திருச்சபையார் ஒருசந்தி யநுசரியாதபோது நீயும் ஒருசந்தியிராதே" என்பதேயாம்.

மோனிக்கம்மாள் அர்ச். அமிர்தநாதர்மட்டில் கொண்டிருந்த நேசம், கீழ்ப்படிதல், சங்கை, வணக்கம், எத்தகையானவையென்று இன்னொரு காரியம் நமக்குக் காட்டுகிறது. அதேதெனில், ஆப்பிரிக்கா தேசத்து திருச்சபையார் வேதசாட்சிகளுடைய கல்லறைகளைச் சந்திக்கப் போகும்போது, உரொட்டி, திராட்ச ரசம், பணிகாரங்கள் கொண்டுபோய், அவைகளை அவர்களுடைய கல்லறைகளின்மேல் வைத்து, பிறகு ஏழைகளுக்குப் பகிர்ந்துகொடுப்பது வழக்கம். மோனிக்கம்மாள் மிலானுக்குப் போனபிறகு கொண்டாடப்பட்ட முதல் வேதசாட்சி திருநாளன்று, தன் வழக்கப்படி மேற்படி காணிக்கைப் பொருள்களை, ஒரு சிறுகூடையில் வைத்து தன் கரத்தில் ஏந்திக்கொண்டு கோவிலுக்குப்போனுள். ஆனால் கோவில் சேவகன் வாசலண்டையிலேயே அவளை நிறுத்தி, இந்த வழக்கத்தில் ஒரு தோஷமுமில்லையாயினும், இதனால் உண்டாகும் துராசாரங்களைப்பற்றி, இதனை யநுசரிக்கக்கூடாதென்று அதிமேற்றிராணியார் விலக்கியிருக்கிறதாகச் சொன்னுன். இதைக் கேட்டு மோனிக்கம்மாள் அதிசயித்தாள்.

மோனிக்கம்மாளுக்கு இந்தக் கட்டளை சற்றேனும் தெரியாது. ஆதலால் கோவில் வாயிலில், நாலா ஜனங்கள் தன்னைப் பார்க்க; இவ்விதமாய் சேவகன் தன்னைக் கண்டித்து நிறுத்தினதைக்கண்டு, அவள் திடுக்கிட்டு மனம் நொந்திருப்பாள். ஆனால் அப்படிப்பட்ட மனவருத்தத்தின் அற்ப சாயலையாவது தன் முகத்தில் தோன்றவிடவில்லை.

அர்ச். அகுஸ்தீன் சொல்வது: "அவள் மனப்பூர்வமாய் அக்கட்டளைக்கமைந்து, அத்தினத்திலிருந்து உரொட்டி திராட்சரசம் முதலிய காணிக்கைப் பொருள்கள் நிறைந்த கூடையை யேந்திக்கொண்டு போவதற்குப்பதிலாய், தேவ நற்கருணையுட்கொண்டு தன்னுலானமட்டும் தரித்திரர்களுக்குத் தானமாய்த் தரும்படியாக, தன்னிருதயத்தில் உத்தம பிரதிக்கினைகளைச் செய்துகொண்டு, வேதசாட்சிகளின் கல்லறைகளைச் சந்தித்து ஏழைகளுக்குத் தருமஞ்செய்வாள்." அவளுடைய கீழ்ப்படிதல் எப்படிப்பட்டது! அர்ச். அகுஸ்தீன் சுசீலத்துடன் சொல்வது: "அர்ச். அமிர்தநாதரை அவள் சங்கித்துவந்த அத்தனை சங்கையோடு சங்கித்திராத வேறு யாராவது அந்த வழக்கத்தை விலக்கியிருந்தால், சில சமயம் அவள் அவ்வளவு சீக்கிரமாய் இணங்கியிருக்கமாட்டாள். என்னுடைய இரட்சண்யத்தைப்பற்றி அவள் அவரை எவ்வளவாக நேசித்துவந்தாளோ, அவரும் அவள் செய்யும் ஞான சம்பாஷணையைப்பற்றியும், கோவிலுக்குவரும் ஜாக்கிரதையைப்பற்றியும் தரும காரியங்களைச் செய்துவரும் உதாரத்துவத்தைப்பற்றியும், அவளை அவ்வளவாக நேசித்துவருவார். ஆதலால் அவர் என்னிடம் அடிக்கடி அவளைப் புகழ்ந்துபேசி, நான் எப்படிப்பட்ட மகன் என்பதை யறியாமல், எனக்கு அப்படிப்பட்ட தாயாரிருப்பதைப்பற்றி, என்னை மெச்சி வாழ்த்துவார்."

ஆனால் அகுஸ்தீன் இருதயத்தில், பரிசுத்த மேற்றிராணியார்மட்டில் சிறந்த அபிமானம் உண்டாகும்படியாக கர்த்தர் காரியாதிகளை நடத்திக்கொண்டுவந்தார்.

ஒரு ஆத்துமம் உண்மையாகவே சிறந்ததா யிருக்கும்பட்சத்தில், அது மாட்சிமை யடையும் படியான சமயாசமயம் ஒன்று வருவதுண்டு அவதூறும் துன்பமும், கடும்புசலுக்கொத்த ஆக்ரோஷத்துடன் எவ்வளவாய் அதனைத் தாக் குமோ, அதன் மாட்சிமையும் பெருமையும் அவ்வளவு ஸ்பஷ்டமாய் வெளிப்படும். சில வருஷங்களுக்குமுன் ஜூஸ்தினியா என்னும் சக்கரவர்த்தினி மிலான் நகருக்கு விஜயஞ்செய்தபோது, முகஸ்துதிக்காரர்களாயிருந்த எரியன் பிரிவினைசபையார்களுள் சிலர் அவளோடு வந்தார்கள். அவர்கள் தன்னேடு கூடவா அவள் சம்மதித்தது தப்பு. இதிலும் பெரிய தப்பென்னவென்றால்,

குழப்பக்குணமுள்ள அச்சபையார்கள் சொல்லுக்குத் தான் பணிந்து நடந்துவந்ததுதான். அவள் அவர்களுடைய துர்ப்போதனையால் தூண்டப்பட்டு, பட்டணத்தின் மதிலுக்குப் புறம்பேயிருந்த கோவிலையாவதுசரி, அல்லது அமிர்தநாதர் சாதாரணமாய் பூசை செய்துகொண்டுவந்த புதிய மேற்றிராசனக் கோவிலையாவதுசரி, இரண்டிலொன்றை ஏரியன் பிரிவினை சபையாருக்குக் கொடுத்துவிடும்படியாக இன்னும் இளவரசாயிருந்த தனது குமாரன் வலென்சியான் பேரால் அமிர்தநாதரைக் கேட்டாள். இது நடந்தது. கி. அ. 385-ம் வருஷத்தில் பாஸ்கு காலத்தில்தான்.

அமிர்தநாதரோவெனில் தேவாலயத்திற்கு இரண்டகம் செய்வது குருவுக்கு அடாதென்று அத்தியந்த காம்பீரத்துடன் சக்கரவர்த்தினிக்குச் சொல்லி, அவளது கோரிக்கைப்படி கோவிலைக் கொடுக்கமுடியாதென்று மறுத்துவிட்டார். சக்கரவர்த்தினியோ அகங்காரி, பெருமையும் மேட்டிமையுமுள்ளவள். தான் தனதென்ற ஆணவந் தலைமட்டும் கொண்டவள். பெருங் கோபக்காரி. தான் பிடித்ததே பிடியென்று சாதிக்கும் சண்டைக்காரி. மேற்றிராணியார் சொன்ன மறுமொழியைக் கேட்டதும், கோபம்பொங்கி, நச்சு நாகம்போல் சீறி, இதற்கு வட்டியும் முதலும் வாங்கவே வாங்குவேனென்று சபதங்கூறினாள். மேலும் அவ்வளவில் அவரை விட்டவளல்ல. உடனே சைன்யங்களை யனுப்பி, பட்டணத்தின் மதில்சுவருக்குப் புறம்பேயிருந்த கோவிலைப் பிடுங்கிக்கொள்ளும்படி உத்தரவு செய்தாள். முதலில் அர்ச். அமிர்தநாதருடைய கோவிலை சிப்பாய்கள் சூழ்ந்துகொண்டார்கள். ஆனால் இந்தச் சிப்பாய்களில் ஒருத்தன் குறையாமல் எல்லோரும் அதிமேற்றிராணியார்மட்டில் அதிக பற்றுதல்கொண்டவர்களானபடியால், அக்கோவிலுக்குள் பிரவேசிக்கத் துணியாமல் அதை விட்டுவிட்டு, மதிலுக்குப் புறம்பேயிருந்த மற்றொரு கோவிலை நாடிச்செல்ல, இதைக்கண்டு கிறீஸ்துவர்களுள் சிலர் ஆக்ரோஷங்கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்து ஓட, அவர்களுக்கும் இவர்களுக்கும் மிலான் நகரில் சில நாட்கள் வரைக்கும் பெருத்த யுத்தம் நடந்துவந்தது.

இதனிடையில், அமிர்தநாதர் கோவிலை விட்டுப் போகாமல் பீடத்திலிருந்துகொண்டு, தன்முகாந்தரமாய் யாருக்கும் உயிர்ச்சேதம் உண்டாக கூடாதென்று அழுகையுடன் கர்த்தரைப் பார்த்து மன்றாடுவார். அல்லது பிரசங்கமேடையிலிருந்து ஜனங்களைப்பார்த்து சாந்தமாயிருக்க வேண்டுமென்றும், தேச சட்டங்களுக்கு அமைந்து கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றும் பிரசங்கஞ்செய்வார். அதே சமயத்தில், ஆத்துமங்களின் சுதந்தரத்தையும், கிறீஸ்துவர்களுடைய அடைக்கலமும் இராச்சியமும் தாயுமாயிருக்கும் திருச்சபையின் சுதந்தரத்தையும், சொல்வன்மையோடும் பொருள்வன்மையோடும் எடுத்துக்காட்டுவார்.

சக்கரவர்த்தினியின் தோழர்களும், இராணுவ உத்தியோகஸ்தர்களும், அமிர்தநாதரிடம் வந்து, கோவிலானது சக்கரவர்த்திக்குச் சொந்தப்பொருள் என்றும், அதன்மேல் அவனுக்குச் சர்வ சுதந்தரமுண்டென்றும், அக்காரணத்தைப் பற்றி அதை யவனுக்குக் கொடுத்துவிடவேண்டியதென்றும் அவரிடம் வற்புறுத்திப் பேசினார்கள். அதற்கு அவர் சொன்ன மறுமொழியேதெனில், "எனக்குரியவையெல்லாம் ஏழைகளுக்குச் சொந்தமானதாயினும், அவைகளைத் தரும்படி சக்கரவர்த்தி கேட்டால் இல்லையென்று மறுக்கமாட்டேன். ஆனால் கடவுளுக்குரியவைகள் எனக்குச் சொந்தமானவையன்று. என் பிதிரார்ச்சித சொத்து சக்கரவர்த்திக்குத் தேவையோ எடுத்துக்கொள்ளட்டும். என் சரீரம் அவருக்கு வேண்டியதோ? இதோ அவர் சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறேன். என்னைச் சங்கிலிகளால் கட்டுகிறீர்களோ? அல்லது சிரச்சேதம் செய்கிறீர்களோ எவ்வித தங்குதடையாவது செய்யேன். உங்களை எதிர்க்கமாட்டேன். அல்லது கோவிலுக்குள் அடைக்கலமாக ஓடிப்போர்க்க மாட்டேன். அங்கு என் இரத்தத்தைச் சிந்தி உயிரைக்கொடுத்து அதனைத் தீட்டுப்படுத்துவதை விட, இங்கேயே—இவ்விடத்திலேயே என் உயிரைக்கொடுக்கத் தயாராயிருக்கிறேன்" என்று[...]

கலிகோனுஸ் என்னும் பாரபத்தியன் அ[...]ரைப்பார்த்து "வலென்சியான் கோமானுடைய கட்டளையை நீ புறக்கணிப்பாயேயானால், ந[...] உன்னைச் சிரச்சேதம் செய்வேன்" என்று இ[...] முழக்கம்போல் கூவிச் சொன்னான். அ[...] அவர் முன்னினும் அதிக அஞ்சாத நெஞ்ச[...] அளித்த விடை யாதெனில் "நீர் பயமுறு[...]கிறபடி என்னைச் சிரச்சேதம் செய்யும்படியாகக் கர்த்தர் அருள்புரிவாராக. நான் என்னமோ மேற்றிராணியாராகச் சாவேன். உமது கிருத்தியமோவெனில், புருஷத்துவமில்லாத அண்ணகனுக்கடுத்த கிருத்தியமாயிருக்கும்" என்றார்.

(இன்னும் வரும்.)

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா அல்லது மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—5.

அதிசயச் செயல்கள்.

பென்தாவீதனுடைய சிபாரிசின்பேரில் ரூபனிடம் வாங்கிய குதிரையின் திறமையைச் சோதித்துப் பார்ப்பதற்கான தருணங் கிடைத்ததென செபஸ்தியான் நினைத்தான். அந்தக் குதிரை கால்களால் நடப்பதற்குப்பதிலாய் பறந்தோடுவதுபோலவும், அதன் அவயவங்கள் எஃகினால் செய்யப்பட்டனபோலவுந் தோன்றிற்று. செங்குத்தான மலைகளைக் கடந்து, பாதாளப் படுகுழிகளின் பக்கமாயுள்ள குறுகிய பாதைகளில் மிக்க வேகமாகவும் தைரியமாகவும் காற்றிலும் கடுக நடந்தது அவ்வதிசய அசுவம்.

பகல் பன்னிரண்டுமணி சுமாருக்கு நமதிளவீரன், நகரைவிட்டு வெகுதூரம் வந்துவிட்டபடியால், எதிரிகள் தன்னை இனித் தூரத்திப் பிடிக்கமுடியாதென்னும் நம்பிக்கையுடன், வழியில் ஒரு மணிநேரம் சற்றே இளைப்பாறினான். அவனுக்குச் சம்பவிக்கவிருந்த விபத்து நீங்கியபோதிலும், அவனுடைய நண்பர் கதி யென்னவாயிற்றோ என்று நினைக்க நினைக்க அவன் மனங் கலங்கித்தது. இளைப்பாறியதும் உடனே எழுந்து [...]காஸ் என்னும் ஊரை நோக்கித் தன் குதிரையை விட்டான்.

[...]தின் போகப்போக வழி மாளவில்லை. மாலைப்பொழுதும் நெருங்கிவிட்டது. அந்த மலைப்பிரதேசத்தில் வழி தவறிவிட்டதாக அப்போது உணர்ந்தான். அச்சமுந் திகிலுங்கொண்ட நெஞ்சினனாய், அம்மலையின்மீதுள்ள காட்டிலேயே அவ்விரவைக் கழிப்பதெனத் தீர்மானித்தான். அப்போது திடீரென ஒரு குழலோசையின் எதிரொலி வெகுதூரத்திலிருந்து வருவதுபோல் அவன் செவியில் விழுந்தது. உடனே அவன் ஓரிடத்திலொளிந்துகொண்டான்; சற்றுநேரத்துக்கெல்லாம் குதிரைவீரர் சிலர் உல்லாசிகளாய் இஸ்பானிய பாஷையிற் பேசிக்கொண்டு நமதிளவல் பதுங்கியிருக்கும் பக்கமாய்ப் போயினர். அவர்கள் பேசிய பாஷையிலிருந்து, செபஸ்தியான் அவ்வீரர்கள் கிறீஸ்துவர்களெனத் தெரிந்துகொண்டு "காஸ்டைல்!" என்று கூவினான்.

"காஸ்டைல்! லேயோன்!!" என்று அக்குதிரைவீரர் தங்குதிரைகளை சட்டென்று நிறுத்தி மிக்க ஆச்சர்யத்துடன் பதிலளித்தனர்.

அக்காலத்திய வழக்கப்படி தேவையுள்ளவர்களிடம் சம்பளத்துக்கமர்ந்து யுத்தம் செய்யும் நோக்கத்துடன் அந்நாட்டின் பலபாகங்களிலும் சுற்றித்திரியும் கிறீஸ்துவ வீரர்களின் ஒரு சிறிய சேனை அது. பலதடவைகள் அந்த வீரர்கள் தாமே துலுக்கருடன் போராடி, அவர்கள் ஊர்களைத் தாக்கி சூறையிட்டதுண்டு. நமது யௌவன வீரன் மறைவினின்றும் வெளியேவந்து தன்னை இன்னானென்றும் தன் வரலாற்றின் விபரத்தையும் சொல்லிக்கொண்டான். யாவர்க்கும் பொது சத்துருவாகிய துலுக்கரிடமிருந்து செபஸ்தியான் தப்பித்தோடுவதாக அவ்வீரர் தெரிந்துகொண்டதும், அவனைத் தம்முடன் சேர்ந்துகொள்ளும்படி வற்புறுத்தினார்கள். அவனும் அதற்கிசைந்து, அவர்களைப் பின்பற்றிச்சென்றான். இரவு சுமார் பன்னிரண்டு மணிக்கு அவர்கள் மரங்களடர்ந்த ஓரிருண்ட காட்டை யடைந்தனர். அச்சமயம் கீழ்த்திசையில் சந்திரன் உதயமாயிற்று; அதன் ஒளியால் வானத்தை யளாவிய பெரிய மரங்களின் மத்தியில் அகழி சூழ்ந்த ஒரு பாழடைந்த கோட்டையைக் கண்டான். வீரர்களில் ஒருவன் சங்கேதப்படி ஏதோ ஒரு குறிப்பைக் காட்டினதும், இழுவைபாலம் விடப்பட்டது. கோட்டையிலுள்ளவர்கள் எழுந்து பரபரப்பாய் அங்குமிங்கும் நடப்பதால் உண்டாகும் சந்தடி வெளியிற் கேட்டது. வீரர்கள் யாவரும் உள்ளே நுழைந்தனர். வீரர் தலைவன் ஏதோ

எதிரிகளைச்சேர்ந்த ஒரு ஊரைத் தாக்கி, அங்கே கைப்பற்றிய அபரிமிதமானப் பொருட்குவியலுடன் கோட்டைக்குத் திரும்பிவந்ததால், அங்கேயிருந்தவர்கள் அவனை மிக்க மரியாதையுடன் வரவேற்று, அவன்போரால் ஒரு பெரிய விருந்து வைத்துத் திருவிழா கொண்டாடினுர்கள்.

செபஸ்தியான் பிரபுவையும் விருந்துக் கழைத்தார்கள். அவன் வழிப்பிரயாணத்தால் அலுத்துப்போயிருந்தபோதிலும், அந்த வீரர்களின் தலைவனை மரியாதைசெய்து அவனேடு சிநேகமாகவேண்டுமென்னும் எண்ணத்துடன், மற்ற வீரர்களோடு விருந்திற் சேர்ந்துகொண்டான். போசன மண்டபத்தில் சுமார் நூறு வீரர் கூடியிருந்தனர். சேனுத்தலைவன் அங்கே போடப்பட்டிருந்த மேஜைகளின் ஒரு கோடியில் சற்றே உயர்ந்த ஓர் ஆசனத்தில் வீற்றிருந்தான். மேஜைகளின் இருமருங்கும் வீரர்கள் உட்கார்ந்து பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். மேஜைமேல் வைக்கப்பட்டிருந்த ருசிகரமான கனிவகைகளையும் மதுரமான திராட்சரசத்தையும் மறந்தவர்கள்போல் அவ்வீரர்கள் தத்தமக்கு நேர்ந்த விபத்துக்களையும், தத்தம் வீரபராக்கிரமங்களையும், சேகரித்த பொருள்களையும்பற்றி ஒருவர் ஒருவரிடம் பேசுவதில் கவலையுடையவர்களாய்த் தோன்றினர்.

காம்பீர பார்வையும் திடகாத்திரமுமுடைய வீரர் தலைவன், செபஸ்தியான் பிரபு அந்த மண்டபத்தில் நுழையும்போது அவனை யுற்று நோக்கினுன்; ஆனல் சற்றுநேரத்துக்கெல்லாம் அவன் முகத்தில் ஒருவித ஆச்சர்யமும் சந்தோஷமுந் தோன்ற தன்னுசனத்தைவிட்டெழுந்து நமதிளவலை நோக்கி நடந்தான். ஒரு காலத்தில் பரிசுத்த ஸ்தலத்தில் தன்னுடனின்று துலுக்கரோடு சண்டைசெய்த தன் நண்பனுகிய மிராந்தா பிரபுவே தன்னை நோக்கி வருவதைக் காண செபஸ்தியானுக்கு உண்டான ஆச்சர்யத்துக்கும் ஆனந்தத்துக்குமளவில்லை. இரண்டு சிநேகிதர் வெகு நாள் பிரிந்திருந்து எதிர்பாராதவிதமாய்ச் சந்திக்க நேர்ந்ததால், அவர்களிருவரும் ஒருவர் ஒருவரைத் தழுவி, முகமன் கூறி, யளவளாவி யோக்ஷேமங்களை விசாரிக்கலாயினர். அந்தக் கோட்டையின் உக்கிராண அறையிற் கிடைக்கக் கூடிய உயர்ந்த இன்பண்டங்களெல்லாம் மேஜையிற் கொண்டுவந்து வைத்தாயிற்று. உணவருந்திக்கொண்டே இரண்டு நண்பர்களும் வெகு உல்லாசமாய்ப் பல விஷயங்களைப்பற்றி சம்பாஷிக்கலாயினர்.

பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வந்தபிறகு தன் கோட்டையை நாசப்படுத்தி தன் பூஸ்திதியையெல்லாம் துலுக்கர் பறிமுதல் செய்துவிட்டபடியால் தனக்குண்டான நஷ்டத்தையும் கஷ்டத்தையும் நிவர்த்திசெய்யும்வரையில் சில வீரர்களைச் சேர்த்துக்கொண்டு, சமயம் வாய்த்தபோதெல்லாம் துலுக்கரோடு போரிட்டு அவர்கள் நகரங்களைக் கொள்ளையிடுவதே சரியெனத் தீர்மானித்து, அவ்வாறே நடத்திவருவதாக வீரர் தலைவன் மொழிந்தான்.

மிராந்தா.—செபஸ்தியான் நம்மிருவருக்கும் உற்ற நண்பரான கார்சியாஸ் பிரபுவை சிறைமீட்பதற்கு என்னுலான உதவி புரிய சித்தமாயிருக்கிறேன். கிறிஸ்துவ வீரத்துவத்துக்கே ஓராபரணம் போன்ற அம்மகானுபாவனை பாதகராகிய துலுக்கர் சிறையிற் கிடந்தழியும்படிவிட்டு நாம் சும்மா இருப்பதிலும் வேறு அவமானம் நமக்கென்னுளது? என்னிடம் இருப்பவர் யாவரும் உனக் கடங்கினவர்கள் என்று நினைத்துக்கொள். நமக்குள் வித்தியாசம் வேண்டாம்! மிக்க தைரியமும் வீரபராக்கிரமமும் நிறைந்த இருநூறு போர் வீரர் என்னிடம் இருக்கிருர்கள். ஐந்நூறு அல்லது அறுநூறு துலுக்கர் வந்தாலும் அஞ்சாமலெதிர்க்கக்கூடிய திறமைவாய்ந்தவர்கள். அஞ்சாத்திரம்படைத்த வீரன் ஒருவனுல் தாண்டிக் குதிக்கமுடியாத உயர்ந்த மதிற்சுவரும் துணிந்து நுழையமுடியாத காவல் நிறைந்த கோட்டையுமுண்டோ? மனத்திடனும் முன் யோசனையும் இருந்தால் மலைகளையுந் தாண்டிவிடலாம். எனக்குத் தெரிந்தவரையில் அல்பான்சோ அரசர் கூடியசீக்கிரத்தில் ஆல்டீமன்மீது படையெடுத்துப்போவாரென்று தெரிகிறது. அதுமட்டும் நீ யென்னுடன் தங்கியிருப்பாயென்று நம்புகிறேன்.

செபஸ்தியானுக்கு அப்போது கொஞ்சம் நம்பிக்கையுண்டாயிற்று. தன் ஆப்த நண்பரை எப்படி மீட்பதென, நடுக்கடலில் திசைதப்பித் திகைக்கும் மாலுமியைப்போல் கலங்கியிருந்த நமது யௌவனவீரன், மிராந்தாவின் வார்த்தைகளால் சற்று தேறுதலடைந்து, அவன் ஆலோசனையின்படியே நடப்பதாகத் தீர்மானித்தான்.

அப்படியே அவன் அக்கோட்டையில் ஒரு வாரம் வரை தங்கிவிட்டான். அந்த ஒரு வாரம் அவனுக்கு ஒரு வருஷம்போலிருந்தது; ஒரு காரியத்தை மேற்கொண்டால், அதைச் செய்துமுடிக்கும்வரையில் மன நிம்மதியில்லாத குணமுடையவனுன நமதிளவல் அத்தனை நாள் பொறுமையாயிருந்தது ஆச்சர்யமே; எட்டாவது நாள் டொலிடோ நகருக்கு மாறுடையணிந்துபோயிருந்த ஒரு வீரன் கோட்டைக்குத் திரும்பிவந்திருப்பதாகத் தெரிந்தது. அவனிடம் சென்று விசாரித்ததில் வழக்கப்பிரகாரம் வேனிற்காலத்தில் அரசன் மகளாகிய காஸில்டாவென்னும் இளவரசி ஓலையாஸ் நகரிலுள்ள தன் சிறந்த சிங்காரவனத்துக்குப்போயிருப்பதாகவும், அங்கே அவள் சில வாரங்கள் தங்கியிருப்பாளென்றுங் கேள்விப்பட்டான். அவ்வீரன் மாறுடையணிந்திருந்தமையால் அவனை டொலிடோ நகரில் யாருங் கவனிக்கவில்லை. மேலும் அவ்விளவரசி அரண்மனையைவிட்டுப் போகையில், அவளைச் சூழ்ந்து பல சேனுவீரர்களும், வேலைக்காரர்களும் அணியணியாய்ச் சென்ற வைபவத்தைப்பற்றி வெகு நேரம் வர்ணித்தான். இதைக் கேட்டுக்கொண்டிருக்கையில் நமது செபஸ்தியான் மனதில் திடீரென ஓரெண்ணம் உதித்தது; உடனே கொஞ்சமுந் தாமதியாமல் தன் எண்ணத்தை மிராந்தா பிரபுவிடந் தெரிவிக்க விரைந்துசென்றுன்.

மிராந்தா பிரபு செபஸ்தியான் ஏற்பாட்டை முழுவதுங் கேட்டபின்பு சற்றே யோசித்து "உன் ஏற்பாடு மிகவும் ஆபத்துக்குரியது; ஆம், மிக்க ஆபத்தானது!" என்றுன்.

செபஸ்தியான், தீர்மானத்தைக் காட்டுங் குரலுடன், "கார்சியாஸ் பிரபுவுக்காக நான் ஏற்கெனவே செய்த சூழ்ச்சியினுல் உண்டான விபத்தைப்பார்க்கிலும் இது பெரிதென்று நினைக்கிருயா? என்னுயிர்தானேபோகும், அவசியமில்லை. உயிருக்குத் துணிந்திருக்கிறேனென்று உனக்குத் தெரியும். இந்த நாட்டின் பலபாகங்களையும் நான் நன்ருய் அறிந்திருக்கிறேன். தைரியசாலிகளான இருபது வீரர்களை என்னுடன் அனுப்பு; நான் கட்டாயம் இந்தத்தடவை ஜயமடைவேனென்று நம்புகிறேன்" என்றுன்.

"அப்படியே ஆகக்கடவது! உனக்குப் பிரியப்பட்டவர்களை நீயே தெரிந்துகொள்" என்றுன் மிராந்தா.

செபஸ்தியான், அக்கோட்டையிலிருந்த சிறிய சேனையில் சிறந்த வீரர்களைத் தெரிந்தெடுத்து, அவர்கள் இதுவரையில் அடைந்திராத அவ்வளவு விலையுயர்ந்த பொருள்களும் பிரியங்களும் தான் சம்பாதித்துத் தருவதாக அவர்களுக்கு உறுதிமொழிகூறி, அவர்களை உற்சாகப்படுத்தினுன்.

அன்றிரவு பன்னிரண்டு மணிக்கு அவர்கள் யாவரும் சாரணியரைப்போல் மாறுவேஷம் புனைந்து, அக்கோட்டையைவிட்டுக் கிளம்பி, வழியில் எங்குந் தங்காமல் இரவெல்லாம் சவாரி செய்து விடியுந்தருணத்தில் தேகஸ் நதிக் கரையை அடைந்தார்கள். செபஸ்தியான் அநேகம் விசை அப்பக்கம்போய்ப் பழகியிருந்தபடியால், அவ்வாற்றைக் கடக்கும் இடத்தைச் சுலபமாய்த் தேடித்திரிந்து, வீரருடன் நதியைக் கடந்து அக்கரை சேர்ந்தான்.

தேகஸ் நதியின் இடதுகரையில் ஒரு பக்கம் காடுகளும், மற்றொரு பக்கம் அத்திமரங்கள் நிறைந்த சோலைகளும் பொருந்தியுள்ள மலைத்தொடர் ஒன்று தென்பட்டது. அந்த மரங்களடர்ந்த காடுகள் மறைவில் ஒளிந்து சவாரி செய்துகொண்டே இளவரசி வேனிற்காலத்தை வேடிக்கையாய்ப் போக்கப் போயிருக்கும் ஆல்டீமனுடைய சிங்காரவனத்துக்கு செபஸ்தியானும் அவனைப் பின்பற்றிவந்த வீரரும் இரண்டொரு மைல் தூரத்தில்வந்து சேர்ந்தார்கள்.

பின்னர் அவர்கள், இளவரசியின் சிங்காரவனத்தை நோக்கி மறைந்து மறைந்து குதிரைகளை நடத்தினர். அந்தத் தோட்டத்துக்கு நூறு கெஜ தூரத்தில் எல்லோரையும் மரங்களடர்ந்த ஓரிடத்தில் மறைவாய் நிறுத்தி, தான் சொல்லும்போது உடனே புறப்படுவதற்குத் தயாராயிருக்கும்படி எச்சரித்துவிட்டு, நமதிளவல் மட்டும் ஆல்டீமன் மாளிகையை நோக்கி மெதுவாய்க் குதிரையை விட்டான்.

அவன் போகையில் அந்நாட்டின் வளத்தையும் இயற்கை விநோதங்களையும் பார்த்துக்கொண்டே போனுன். அங்கே தோன்றியவை யனைத்தும் கண்ணுக்கினிய காட்சிகளே. மலைக்கும் நதிக்கும் இடையிலிருந்த பள்ளத்தாக்கு காண்பவர் மனதைக் கவர்ந்து நாவினுல் வர்ணிக்கமுடியாத அவ்வளவு சிறப்பாய் விளங்கிற்று. கண்ணுக்கெட்டியவரையில் இளவள

வென்று செழித்து வளர்ந்துள்ள பசும்புற்றரையில் ஆங்காங்கு தீங்கனி யுதவும் திவ்ய விருட்சங்களும் அவைகளைச்சுற்றிப் பலவர்ண புஷ்பச் செடிகளும் வளர்ந்திருந்தன. இடைக்கிடையே நீர் நிறைந்த பல வாய்க்கால்களோடி, பக்கங்களிலுள்ள நிலங்களுக்குத் தண்ணீருதவின. அதற்கப்பால் கோதுமையும் நெல்லும் பயிரிடப்பட்டு செழிப்பாய் விளங்கும் வயல்களும், ஆங்காங்கு மாதுளை முதலிய மரங்கள் நிறைந்த சோலைகளும் தோன்றின. ஆற்றோரத்தில் ரோசா, லீலீ, முதலிய மலர்ச்செடிகள் விநோதமாய் வளர்ந்து புஷ்பித்திருந்தன. அந்த ஸ்தலம் ஆதியில் கடவுள் ஏற்படுத்திய சிங்காரவனமோ என்று சந்தேகிக்க இடமிருந்தது. மேலும் சிற்சில இடங்களில் கிச்சிலி, எலுமிச்சை முதலிய மரங்களில் பொன்னிறமாகிய கனிவர்க்கங்கள் நிறைந்து குலுங்கிக்கொண்டிருந்ததானது, அப்பள்ளத்தாக்கின் அற்புதக் காட்சியை அதிகப்படுத்திற்றென்னலாம்.

இந்தச் சிங்காரக் காட்சியைவிட்டு எப்படிப் பிரிவது என்னும் எண்ணத்துடன் அஸ்தமிக்கப் போகும் சூரியன் தன் கிரணங்களால் அப்பள்ளத்தாக்கைத் தடவிக்கொண்டிருப்பதுபோலிருந்தது. அச்சமயம் செபஸ்தியான் இராஜமாளிகையைச்சேர்ந்த சிங்காரவனத்தின் மதிற்சுவரண்டைவந்து சேர்ந்தான். கீழே இறங்கிக் குதிரையை ஒரு மரத்திற் கட்டிவிட்டு, தைரியமாய் மதிற்சுவரேறித் தோட்டத்திற் குதித்துவிட்டான். இயற்கையும் செயற்கையும் ஒன்றுடன் ஒன்று போட்டிப்போட்டுக்கொண்டு அந்த நந்தவனத்தை அலங்கரித்திருக்கின்றனவோ என்று சொல்லும்படியாய் அவ்வளவு விநோதமாகவும் ஆச்சர்யமாகவும் அப்பூஞ்சோலை விளங்கிற்று. ஆங்காங்கு சிறிய தடாகங்களும் அவற்றைச்சுற்றிலும் பலவித மரங்களும், அம்மரங்களுக்கு மாலை சூட்டியதுபோல் பலவகை விநோத மலர்க்கொடிகள் அவற்றின்மேல் தாவிப் படர்ந்து பக்கத்தில் தொங்குவதுடன், மரங்களில் ஒன்றை ஒன்றுடன் பிணிப்பனபோல் விநோதமாய்ப் பின்னிக்கொண்டிருக்க, அந்தத் தடாகங்களினின்று நறுமணம் வீசுவது பார்ப்பதற்கு வெகு இரம்மியமாயிருந்தது. சிற்சில விடங்களில் குழாய்நீர் வீழ்ச்சிகளும் சிறிய நீரோடைகளும் இருந்தபடியால், அச்சோலை குளுகுளுவென்று மிகவும் மனோகரமாயிருக்க, வேறு சில பாகங்களில் சலவை கற்களால் கட்டப்பெற்று அழகிய தொட்டிகளிற் குளிர்ந்த ஜலம் நிரப்பி, அங்கு வருபவர்களை நீராடிப்போகும்படி யழைப்பனபோல் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த மனோகரமான இனிய காட்சிகள் கண்களுக்கு எவ்வாறு இன்பத்தை விளைத்து மகிழ்வித்தனவோ, அவ்வாறே அந்த வனத்தில் நிறைந்த பலவித பட்சிகளின் மதுரகானங்கள் செவிகளுக்கு இன்பம் தந்தன. அச்சோலையை இவ்வாறு அலங்கரித்து நின்றவை புள்ளினங்கள் மட்டுமல்ல, ஆனால் பலவர்ண மச்சங்கள் தடாகங்களிலும் நீர் நிலைகளிலும் பாய்ந்து குதித்து விளையாடியிருந்தன. மேலும் ஆங்காங்கு விநோதமா யமைத்துள்ள கூடுகளில் ஆசியா, ஆபிரிக்கா முதலிய கண்டங்களிலிருந்துகொண்டுவரப்பட்ட பலவகை மிருகங்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

(இன்னும் வரும்)

ச. செல்வன்.

A SHORT SKETCH OF THE LIFE OF FR. BESCHI.

சங். வீரமாமுனிவருடைய சரித்திரச் சுருக்கம்.

(முன் தொடர்ச்சி.)

5-ம் பிரிவு.

ஜாதியில் பஞ்சமத்தானான ஒருவன் தன்னை உயர்குலத்தானாக பிதற்றி பண ஆசையால் தூண்டப்பட்டு தூத்துக்குடியில் ஞானஸ்நானம் பெற்றான். இவனும் லோகநாதனைப்போல் வேதவிரோதியாகி, சில காலத்துக்குப்பின் அவ்வூரைவிட்டு பக்கிரி வேஷம் போட்டுக்கொண்டு, இந்துக்களுக்குத் தன்னை இந்துவென்றும், துலுக்கருக்குத் துலுக்கனென்றும், கிறீஸ்துவர்களுக்குக் கிறீஸ்துவனென்றும் பக்குவமாய்ச் சொல்லி வயர் வளர்த்துவந்தான். இந்தச் சண்டாளன் வடக்கன்குளத்துக்குச்சென்று எவ்வளவு கபடு வஞ்சகமாய்ப் பேசினானெனில் அவ்வூர் கிறீஸ்துவர்கள் அவனை

உத்தம கிறீஸ்துவனென்று நம்பினார்கள். ஆனால் அவ்வூர் குருசுவாமியார் அவனைத் தமது சமுகத்துக்கு வரவழைத்து அவர் அவனைக் கேட்ட கேள்விகளுக்கு அவன் சொன்ன மறுமொழியை அவர் கேட்டு, அவன் பெரும் வஞ்சகனென்று அறிந்துகொண்டு, அவன் போட்டிருந்த பக்கிரி வேஷத்தை மாற்றிவிட கற்பித்து அவசரமான புத்திமதிகளைச் சொன்னார். ஆனாலவன் அவ்விடத்தில் போட்ட பாசாங்கு பயன்படாததினாலும், அவ்விடத்தில் ஒரு காசும் அகப்படாததினாலும் துக்கித்து வீரமாமுனிவருடைய பங்கு விசாரணை ஊர்களில் ஒன்றாகிய தென்காசிக்கு அன்றிரவே ஓட்டம்பிடித்தான். அங்கே அவன் தன்னை வேதம் போதிக்கும் குருவென்று பிதற்றி ஜனங்களை ஏய்க்கத்தொடங்கினான். இப்பேர்ப்பட்ட நூதன படிப்பினையைப்பற்றிக் கேள்விப்பட்ட கிறீஸ்துவர்கள் அவன்மட்டில் சமுசயங்கொண்டு தங்கள் உபதேசியாருக்கு அச்சங்கதியை அறிக்கையிட்டார்கள். இந்த உபதேசியார் பெயர் சவரியடியான். இவர் கல்விமானும் தேவ விஸ்வாசியுமான பக்திமான். இவர், குருவேஷம் பூண்டு வந்தவனை வரவழைத்து அவனுடைய போதகத்தையும் அவன் வைத்திருந்த புஸ்தகங்களையும் முழுதும் பரிசோதனை செய்தபோது, அவன் பெரும் வஞ்சகனென்று அறிந்து, அவன்மீது ஆக்ரோஷங்கொண்டு, அவனைக் கண்டித்து, அவனை ஒரு மரத்தில் கட்டிவைத்து அடிக்கும்படி கற்பித்தார். பிறகு அவனை அவிழ்த்துவிட்டு அவனிடத்திலுள்ள புஸ்தகங்களைப் பிடுங்கிக்கொண்டு, இனி அவன் வேதத்தைப்பற்றிப் பேசுவானாகில், இதிலும் அதிகமாய்த் தண்டிக்கப்படுவானென்று அறியச்செய்தார்.

அடிபட்டவனோவெனில் அடிபட்ட சர்ப்பம்போல் வெகுளித்து கோபோக்கிரமங்கொண்டு குருக்கள்பட்டிக்குச்சென்று அங்கு வீரமாமுனிவருடன், உபதேசியார் தனக்குச் செய்த அநியாயத்தைப்பற்றி முறையிட்டான். சுவாமியார் இதைப்பற்றி கேள்விப்பட்டபோது, உபதேசியாருடைய விமரிசையற்ற நடத்தை வேதகலகம் உண்டாவதற்குக் காரணமாகுமென்று மனதில் கருதி, அடிபட்டவனுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி உபதேசியாரை வரவழைத்து சங்கதியை விசாரிப்பதாக அவனுக்கு அறிவித்தார். அவ்வூர் கிறீஸ்துவர்களும் அவனுடைய காயங்களையும் இரத்தத்தையும் பார்த்து பயந்து, இசா மதஸ்தரால் தங்களுக்கு பொல்லாப்பு ஏதாவது உண்டாகுமென்று அஞ்சி, அவனுக்குப் பணங்கொடுத்து நல்வார்த்தை சொல்லி ஆறுதல் வருத்தினார்கள்.

அந்நாட்களில் இராஜபட்டாளம் ஒன்று குருக்கள்பட்டிக்கு அருகாமையில் பாளையமிறங்கியிருப்பதைப்பற்றிக் கேள்விப்பட்டு ஷை விலங்கமத்தான் பக்கிரி வேஷத்துடன் அவ்விடத்துக்குச்சென்று பட்டாளத்தில் அனேக துலுக்க சிப்பாய்களிருப்பதைக்கண்டு, சந்தோஷித்து, தனக்கு கிறீஸ்துவர்களாலுண்டான அநியாயங்களை தெரியப்படுத்தி, தன் காயங்களைக் காட்டி, பேரொலிபாய்ச்சி, கோவென அழுது, நீங்களிந்த கிறீஸ்துவர்களை பழிவாங்காவிடில் மகமது உங்களைத் தண்டிப்பாரென்று உரோஷம் வருவிக்கத்தக்க, வார்த்தைகளைக் கூறவே, மத வைராக்கியரான துலுக்கச்சேவகர்களும் அவர்களுடைய படைக்கர்த்தர்களும் பிராமணனான தங்கள் தளவாயிடம் ஷை பக்கிரியை அழைத்துக்கொண்டுபோய், அவனுக்குக் கிறீஸ்துவர்களால் செய்யப்பட்ட அநீதத்தைத் தெரியப்படுத்தி, அவர் அவர்களை தட்சணமே தண்டியாவிடில் தாங்கள் ஆயுதத்தைக் கையில் எடுக்கமாட்டோம் என்று தளவாயை பயமுறுத்தினார்கள். தளவாய் முறைப்பாட்டைக் கவனியாமலிருப்பதைக்கண்ட பக்கிரி அவரைப்பார்த்து “சுவாமிகளே! கிறீஸ்துவர்களின் குருவிடத்தில் திரண்ட திரவியமிருக்கிறது” என்று கபடமாய்ச் சொன்னான். பணம் என்ற வார்த்தையைக்கேட்ட பணப்பாசங்கொண்ட பிராமண தளவாய் சற்றுந் தாமதியாமல் 200 காலாட்படையையும் 40 குதிரைப் படையையுந் தயார்செய்யக் கற்பித்து, அந்தப் பட்டாளத்துக்குத் தன் குமாரனைத் தலைவனாக நியமித்து குருக்கள்பட்டிக்குச்சென்று குருவையும் உபதேசிமாரையும் சிறைப்படுத்தி கோவிலிலுள்ள திரவியத்தை கொள்ளையடித்துத் தனக்குக் கொண்டுவரும்படி தாக்கீதுசெய்தான்.

பொழுதுபோனபின் காலாட்படையுங் குதிரைப்படையும் அவ்வூரைச் சூழ்ந்துகொண்டு உபதேசிமாரைத் தேடிப்பிடித்து அவர்களை வாதித்து வேதனைப்படுத்துகிறதைக்கண்ட கிறீஸ்துவர்கள் அழுது கூக்குரலிட்டார்கள். அந்நேரத்தில் வீரமாமுனிவர், கோவிலில் கர்த்தர் பிறந்த, திருவி

மூாவுக்காக மாட்டுக்கொட்டகை சிங்காரித்துக் கொண்டிருந்தார். கிறீஸ்துவர்களின் கூக்குரலைக்கேட்டு வெளியே சென்று பார்த்தபோது, சேவகர்களும் அங்கு சேர்ந்து தளவாயின் கட்டளையை அவருக்கு அறிவித்தார்கள். அதற்கு அவர், “ஆயுதபாணிகளான பட்டாளமேன்? தளவாய் ஓர் ஆளை அனுப்பியிருந்தால் நான் அவரிடம் போவேனே” என்று சொல்லி தமது உபதேசிமாருடன் சென்றார். தளவாய் குருவானவரைப் பார்க்கவே, “நீ இந்த ஊரில் என்ன செய்கிறாய்?” என்றான். “நான் சத்திய வேதத்தை ஜனங்களுக்குப் போதித்து அவர்களுக்கு மோட்ச வழியைக் காட்டுகிறேன்” என்றார் குருவானவர். “பிராமணருக்குக்கூட போதிக்கிறாயோ?” என்றதற்கு, “ஆம், சகலருக்கும் போதிக்கிறேன்” என்றார். இதை அவன் கேட்கவே, ஆங்காரத்தால் மனம் பொங்கி “ஓகோ! நீ பிராமணருக்குக்கூட வேதம் போதிக்கத் துணிந்தாயோ?” என்று வாய்க்குவந்தபடி குருவானவரைத்திட்டி தூஷணித்து குருவானவரையும் இரு உபதேசிமாரையுஞ் சங்கிலியால் கட்டி சிறையிலடைத்து அவர்கள் கிறீஸ்து வேதத்தை மறுதலிக்கும்படி அவர்களுக்கு துற்புத்தி சொல்லும்படி கற்பித்தான். உபதேசிமாரிருவரும் பிராமணனுடைய துற்புத்திக்கு இடங்கொடுத்து வேதத்தை மறுதலியாததினால் அவர்களை சேவகர் குரூரமாயுபாதித்து சித்திரவதைப்படுத்தி குற்றுயிராய் விட்டார்கள். வீரமாமுனிவரும் சேவகருடைய நயபயத்துக்கு அஞ்சா தைரியமாயிருப்பதைப் பற்றிக் கேள்விப்பட்ட தளவாய் அவரைத் தன்னிடம் வரவழைத்து பெரும் பணத்தொகையைத் தனக்குக் கொடுத்தால் அவரை அக்ஷணமே விடுதலைசெய்வதாக அறிவித்தான். சந்நியாசியான தம்மிடம் பணமில்லை என்றார். இதைக் கேட்ட பிராமணன் கோபவெறிகொண்டு அவருக்கு மரணத்தீர்வை விதித்து சிறையிலடைப்பித்தான்.

பிறகு ஸ்வாமியாரையும் இரு உபதேசிமாரையும் சேவகர் தளவாயிடம் கூட்டிக்கொண்டு போக தளவாயின் குமாரன் கோவிலையும் அறைவீட்டையும் தேடிப்பார்த்தபோது தான் எதிர்பார்த்த திரண்ட திரவியத்தைக் காணாததினால் வெட்கத்துக்கும் கஸ்திக்குமுள்ளானான். இதைக் கண்ட ஷை பக்கிரி வேஷக்காரன் தன்னை தளவாய் தண்டிப்பானென்று பயந்து கூட்டத்தினின்று பாம்புபோல் நழுவி அவ்வூரைவிட்டு ஓட்டம்பிடித்தான். மறுபடியும் தளவாயின் குமாரன் மூலைமுடுக்கெல்லாம் தேடிப்பார்த்தபோது தகதகவென்று மின்னும் பொன்னைப்போலொத்த நாணயங்கள் ஒரு பையில் கட்டப்பட்டிருப்பதைக்கண்டு சந்தோஷத்துடன் பையையும் அங்குள்ள சில நாற்காலிகளையும், பூசை வஸ்திரங்களையுமெடுத்துக்கொண்டு மகா சந்தோஷத்துடன் தன் தகப்பனிடஞ் சென்றான்.

ஸ்வாமியார் பிடிபட்ட சங்கதியை அறிந்த ராஜவம்மிஷத்தாளான ஒரு ஸ்திரீயும், ஒரு பெரிய பிரபுவின் அரண்மனையில் உயர்ந்த உத்தியோகத்திலிருந்த வேறொரு ஸ்திரீயும் ஆக இருவரும் பாளையத்துக்குப் பின்சென்று அங்கு ஸ்வாமியார் விஷயமாய் நடக்கும் சங்கதிகளை பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஸ்வாமியார் மரணத்துக்கு தீர்வையிடப்பட்டதை அவ்விரு சீமாட்டிகள் கேள்விப்பட்டபோது மகா துக்கத்துடன் அழுது குருக்கள்பட்டிக்குத்திரும்பிவந்து இக்கஸ்திக்குரிய சங்கதியை அறிவிக்கவே, அவர்களனைவோரும் வெகு துக்கப்பட்டு அழத்தொடங்கினார்கள். ஷை சீமாட்டிகளிருவரும் தைரியத்துடன் தளவாயிடஞ் சென்று ஸ்வாமியாரை விடுதலை செய்யும்படி எவ்வளவு தைரியத்தோடும் வாய்ச்சாலகத்தோடும் பேசினார்களெனில், தளவாய் தனக்குக் கிடைத்த பொன் நாணயங்களால் திருப்தியடைந்து குருவானவரை விடுதலை செய்ய சம்மதித்தான். அந்த க்ஷணமே பேராசைக்காரனான பிராமணன் ஒரு தட்டானை வரவழைத்து தனக்குக்கிடைத்த பொன் நாணயங்களைப் பரீட்சித்து இடைபோடும்படி சொன்னான். தட்டான் அதை சோதித்துப்பார்த்தபோது அது பித்தளையென்று சொன்னதைக் கேட்ட தளவாய் தன் மகன்மேல் கோபோக்கிரமங்கொண்டு, அதைச் சரியாய் பரிசோதியாமல் கொண்டுவந்ததற்காக அவனைக் கடிந்துகொண்டான். ஷை பையில் அகப்பட்டவை பொன் நாணயங்களல்ல; வருஷப்பிறப்பு நாளில் கோவிலில்கூடும் ஜனங்களுக்குக் கொடுக்கும்படி மதுரை சிரேஷ்ட ஸ்வாமியாரால் வீரமாமுனிவருக்கு அனுப்பப்பட்ட சிறு சுரூபங்கள். இவை முலாம்பூசப்பட்டதால் பொன்போல கண்ணுக்குக் காணப்பட்டன. பேராசைக்காரனான பிராமணன் ஷை இரு ஸ்திரீ

களின் வேண்டுகோளின்மேல் ஸ்வாமியாரையும் இரு உபதேசிமாரையும் விடுதலைசெய்து கோவிலிலிருந்து கொண்டுவரப்பட்ட சாமான்களையும் அவர்களுக்குக் கொடுத்து, ஒரு நேர்த்தியான சால்வையை ஸ்வாமியாருக்கும் உபதேசிமாருக்கு தாம்பூலமுங் கொடுத்தனுப்பினான்.

வீரமாமுனிவர் பிடிபட்டுச் சிறைப்படுத்தப்பட்ட சங்கதியை லோகநாதன் அறிந்தவுடனே சந்தோஷித்து மகிழ்ந்தான். அன்றிரவே அவன் தளவாயிடஞ் சென்று கிறீஸ்துவ குருவைப் பிடித்து சிறைப்படுத்தினதற்காக அவனுக்கு வந்தனங்கூறி தன் இருப்பிடத்திற்குத் திரும்பினான். கிறீஸ்துவ குரு பிடிபட்டு கொலைசெய்யப்படப்போகிற சுபசெய்தியை கயத்தாற்றுக்கு அனுப்பிவைத்தான். இதைப்பற்றி கேள்விப்பட்ட இந்துக்களுக்குப் பெருஞ் சந்தோஷமும் கிறீஸ்துவர்களுக்குத் துக்கமுமுண்டானது. மறுநாள் லோகநாதன் கயத்தாற்றுக்குப்புறப்பட்டுப்போய் கிறீஸ்துவர்களைப் பயமுறுத்தி கிறீஸ்து வேதத்தை மறுதலியாவிட்டால் அவர்களுடைய குருவுக்கு சம்பவிக்குங் கதியே அவர்களுக்குமுண்டாகுமென்று கூறியும் கிறீஸ்துவர்கள் வேதத்தில் தத்தளியாமல் தைரியமாய் இருந்தார்கள். லோகநாதன் பிராமணரையும் பூசாரிகளையும் ஏவிவிட்டு கிறீஸ்துவர்களுக்குத் துற்புத்தி சொல்லி அவர்களைக் கெடுக்கும்படி சொன்னான். இவர்கள் கிறீஸ்துவர்களை எவ்வளவு மிரட்டி பயமுறுத்தியும் வேதத்தில் உறுதியாயிருப்பதைக்கண்ட லோகநாதன் கிறீஸ்துவர்களுடைய கோவிலையும் அறைவீட்டையும் கொள்ளையடித்து அவற்றை யிடித்துப் பாழாக்கினான். இதற்குப்பிறகு லோகநாதன் தன் கோரிக்கை சபலமானதால் வெட்கி உயர்குலத்தாரான புது கிறீஸ்துவர்களைப் பிடித்து மிரட்டி, அவர்கள் நெற்றியில் திருநீற்றைப் பூசியும் அவர்கள் அஞ்சா தைரியத்துடனிருப்பதைக் கண்டு பலவிதத்திலும் அவர்களைத் தொந்தரிக்கத் தலைப்பட்டான். கிறீஸ்துவர்களில் ஒருவனென்கிலும் வேதத்தை மறுதலித்தவனல்ல.

வீரமாமுனிவர் சிறைப்படுத்தப்பட்ட சங்கதி அர்நாடெங்கும் பரம்பினதினால் தென்காசிக்கு அதிபதியான பிரபு பணஞ் சம்பாதிக்க இது நல்ல சமயமென்று எண்ணி கிறீஸ்துவர்களுடைய வீடுகளுக்கு இராஜ முத்திரையிட்டு தனவந்தரான கிறீஸ்துவ வியாபாரிகள் வீட்டைக் கொள்ளையடித்து குருக்கள்பட்டிக்குப் புறப்பட்டான். ஆனால் வீரமாமுனிவர் தளவாயால் வெகுமானத்துடன் விடுதலை செய்யப்பட்டதை அறிந்து வெட்கத்துடன் தன் பாளையத்துக்குத் திரும்பினான். துர்மார்க்கனான லோகநாதன், தன்னால் பகைக்கப்பட்ட வீரமாமுனிவர் வெகுமானங்களுடன் சிறையினின்று விடுதலைசெய்யப்பட்டதை அறிந்து, வெட்கி நாணி, சத்தியவேதத்துக்கு விரோதமாய் பல தூஷணங்களைக் கக்கி அதை பகைத்துவந்தான். மேலும் “சத்திய தேவனுடைய கோவிலை நான் நாசஞ்செய்ததால் அந்தக் கடவுள் என்னை 6 மாதத்துக்குள் தண்டிப்பாரோ பார்க்கலாம்” என்று சபதங்கூறினான். ஆனால் வெகுசீக்கிரத்தில் அவனுக்குப் பல துன்பங்களுண்டாகி பெருத்த அபராதங்களுடன் சிறையில் வைக்கப்பட்டான். தனக்கு உண்டான இப்பெருந் துன்பதுரிதங்கள் கிறீஸ்துவர்களுடைய கடவுளால் உண்டானதென்று ஒத்துக்கொண்டு தன்னாலுண்டான நஷ்டங்களுக்குப் பரிகாரம் செய்வதாகச் சொன்னான். அவன் சிறையினின்று பரதேசத்துக்கு அனுப்பப்பட்டு நிர்ப்பாக்கியனானான்.

கயத்தாறு வாசிகளான இந்துக்கள் கிறீஸ்து வேதத்தினிமித்தம் சர்க்காரால் தங்களுக்குப் பல இக்கட்டு இடையூறுகள் சம்பவித்ததினால் கிறீஸ்துவர்களைத் தங்கள் கோட்டைக்குள் சேர்த்துக் கொள்ளாதபடி தீர்மானித்துக்கொண்டார்கள். ஆனால் சத்திய வேதத்தின் மகிமையையும் குருக்களுடைய அர்ச்சியசிஷ்டதன்தையும் கிறீஸ்துவர்களுடைய புண்ய ஒழுக்கத்தையுஞ் சற்றுயோசித்துப்பார்த்தபின் தங்கள் தீர்மானத்தை மாற்றினதுடன், குழப்பக்காலம் அமர்ந்தபின் சத்திய வேதத்தில் உட்படுவதாகவும் வாக்குத்தந்தார்கள்.

அக்காலத்தில் நாட்டுக்குழப்பமுண்டாகி அரசருக்கும் சிற்றரசருக்கும் பாளையப்பட்டுக்கும் போர் உண்டாகி அனேக ஊர்கள் சுட்டெரிக்கப்பட்டன. அவ்வூர்களிலுள்ள வீடுகளும் அக்கியானக் கோவில்களும் பாழாக்கப்பட்டபோதிலும்; கிறீஸ்துவர்களின் கோவில்களைத் தொட ஒருவனும் துணிந்தவனல்ல. அதனால் அவ்வூர்களிலுள்ள சத்திய வேதக் கோவில்கள் அற்பமோசமின்றிக் காப்பாற்றப்பட்டன. சிலகாலத்துக்குப்பின் தேசக் குழப்பம் அமர்ந்தபோது, வீரமாமுனிவர் தமிழ் காவியங்களைத் தீரக் கற்

கும்படி உழைத்துவந்தார். இவருக்கு உண்டான பல இக்கட்டு இடையூறில் கடின வியாதியாய் விழுந்து, காலத்தில் சுகப்பட்டபின் மாவன் தேசத்துக்கு மாற்றப்பட்டார். ஆனால் அந்நாட்டில் தேசக்குழப்பமுண்டாகி சண்டையும், கொலையும், கொள்ளையும் மிகுந்திருந்தபடியால், வீரமாமுனிவர் அந்நாட்டில் பிரவேசிக்கக்கூடாததினால் ஏலாகுரிச்சிக்குச்சென்று வேதம்போதித்துவந்தார். நாலா பக்கத்திலும் சிதறியிருந்த கிறீஸ்துவர்கள் கூட்டங்கூட்டமாய் அவரிடஞ்சென்று தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்றுக்கொண்டார்கள். அனேக இந்துக்களுக்கு ஞானதீட்சை கொடுத்தார். இவ்வாறு நல்ல மேய்ப்பனைப்போல் வேதத்துக்காக உழைத்து சகலருக்கும் நன்மை செய்துகொண்டு வருகையில் வீரமாமுனிவர் 1716-ஆம் மதுரை பங்கிற்கு மாற்றப்பட்டார்.

(இன்னும் வரும்)

J. M.

MARIAN CONGRESS.

மரியாயின் மகா சங்கம்.

நடவடிக்கைகளின் கால அட்டவணை.

1921ஆம் ஜனவரிமீ 4-ந் தேதி செவ்வாய்க்கிழமை.

காலை—மகா சங்கத்தில் பரிசுத்த பாப்பானவரின் பிரதிநிதியாக அக்கிராசனம் வகிக்கவரும் மேன்மைதங்கிய பாப்பு ஸ்தானபதியவர்களை வரவேற்றல்.

மாலை—5½ மணிக்கு மகா சங்கத்தின் திறப்பு வைபவம்.

(1) "எக்ஸே சசேர்தோஸ்" என்னும் கீர்த்தனம் பாடுதல்.

(2) "வேனிகிரயாத்தோர்" என்னும் இஸ்பிரீத்து சாந்துவின் கீதம்பாடுதல்.

(3) சங்கத்துக்கு வந்துள்ள பிரதிநிதிகளுக்கு நல்வரவு அளித்தல்.

(4) பாப்பு ஸ்தானாதிபதியவர்களால் மகா சங்கம் ஆரம்பிக்கப்படுதல்.

(5) பம்பாய் அதிமேற்றிராணியார[ா]கிய மிக. வந். கூடியர் ஆண்டவர் அவர்களால் மகா சங்கத்தின் பிரதிஷ்டைப் பிரசங்கம்.

(6) மகா சங்கம் இனிது நிறைவே[று]மாறு பல்லோரால் அனுப்பப்பட்ட தந்தி சமாசாரங்களை வாசித்தல்.

(7) பரிசுத்த பாப்பானவராகிய ப[தி]னைந்தாம் ஆசீர்வாதப்பருக்கா[க] வேண்டுதல்.

(8) பாப்பு ஸ்தானாதிபதியவர்களின் ஆசீர்வாதம்.

(9) "ஓ! தாயாரே! மரியாயே! எங்கள்மீது க்டைக்கண்ணோக்[கி]யருளும்" என்ற இங்கிலீஷ் கீதம்பாடுதல்.

5-ந் தேதி புதன்கிழமை.

மன்றோர் சிலை மைதானத்திலுள்ள மகா சங்கக் கொட்டகையில்

காலை 6½ மணிக்கு—சீரிய மலையாளச் சட[ங்]கின்படி மேற்றிராணியாண்டவ[ர்] அவர்களால் "பொந்திபிக்கால்" என்னும் பெரிய பாட்டுப்பூசை

,, 10 மணி தொடங்கி 12 மணிவரையில் இங்கிலீஷ் பாஷையில் உபந்[நி]யாசங்கள்.

பகல் 2 மணிமுதல் மாலை 4 மணிவரையில் ஷெ பாஷையில் உபந்நியாசம்

மாலை 6 மணிக்கு—கொட்டாயம் மேற்றிராணி ஆண்டவரவர்களால் இங்கிலீஷ் பிரசங்கமும், அதன்பின் தேவநற்கருணை ஆசீர்வாதமும்.

சென்னை அதிமேற்றிராசனக் கோவிலில்.

காலை 6½ மணிக்கு—மேன்மைதங்கிய பாப்பு ஸ்தானாதிபதியவர்களால் திவ்ய பூசையும், மங்களூர் மேற்றிராணியாண்டவர் அவர்களால் இங்கிலீஷில் பிரசங்கமும்.

மாலை 6 மணிக்கு—கண்டி மேற்றிராணி ஆண்டவர் அவர்களால் இங்கிலீஷில் பிரசங்கமும், அதன்பின் தேவநற்கருணை ஆசீர்வாதமும்.

மயிலாப்பூர் மேற்றிராசனக் கோவிலில்.

காலை 6½ மணிக்கு—மேற்றிராணியாருடைய பெரிய பாட்டுப்பூசை.

,, 10 மணி தொடங்கி 12 மணிவரையில் மரியாயி சம்பந்தமாய் தமிழில் உபந்நியாசங்கள்.

பகல் 2 மணி தொடங்கி மாலை 4 மணிவரையில் ஷெ சம்பந்தமாய் தமிழில் உபந்நியாசங்கள்.

மாலை 6 மணிக்கு—மரியாயின்மீது வைக்கத்தக்க பக்தியின்பேரில்—சங். உயிஸ்மான் சுவாமிகளால் இங்கிலீஷில் பிரசங்கம்.

புதுப்பேட்டை அர்ச். அந்தோனியார் கோவிலில்.

காலை 6½ மணிக்கு—மேற்றிராணியாண்டவர் அவர்களால் திவ்யபூசையும், சங். இஞ்ஞாசிநாதர் சுவாமிகளால் பிரசங்கமும்.

,, 10 மணி தொடங்கி 12 மணிவரையில் தமிழில் உபந்நியாசங்கள்.

மாலை 5 மணிக்கு—புதுக்கோவிலுக்கு, பாப்பு ஸ்தானாதிபதி அவர்கள், அஸ்திவாரக்கல் நாட்டுவார்கள். சங். ரோச் சுவாமிகளின் தமிழ் பிரசங்கம். தேவநற்கருணை ஆசீர்வாதம்.

எழும்பூர் இருதயநாதர் கோவிலில்.

காலை 6½ மணிக்கு—மேற்றிராணியாண்டவர் அவர்களால் பெரிய பாட்டுப் பூசை.

,, 10 மணிமுதல் 12 மணிவரையில் மலையாளத்தில் உபந்நியாசங்கள்.

மாலை 2 மணிமுதல் 4 ம்ணிவரையில் ஷெ பாஷையில் உபந்நியாசங்கள்.

பிராட்வே அர்ச். அடைக்கலமாதாக் கோவிலில்

காலை 6½ மணிக்கு—மேற்றிராணியாண்டவர் அவர்களால் திவ்யபூசையும், விசாகப்பட்டணத்து மேற்றிராணியார் அவர்களால் தெலுங்கில் பிரசங்கமும்.

காலை 10 மணிமுதல் 12 மணிவரையில் தெலுங்கில் சங். சின்னப்பநாதர் அவர்களால் உபந்நியாசங்கள்.

மாலை 2 மணிமுதல் 4 மணிவரையில் சங். பிர்மன் சுவாமிகளால் தெலுங்கில் உபந்நியாசங்கள்.

,, 6 மணிக்கு—மாலை ஆராதனை, தெலுங்கில் பிரசங்கம். தேவநற்கருணை ஆசீர்வாதம்.

இராயபுரம் அர்ச். வியாகுலமாதாக் கோவிலில்

மாலை 6 மணிக்கு—சங். ஜி. தொமாத்திஸ் சுவாமிகளால் இங்கிலீஷில் பிரசங்கமும், தேவநற்கருணை ஆசீர்வாதமும்.

பெரம்பூர் அர்ச். லூர்துமாதாக் கோவிலில்.

மாலை 6 மணிக்கு—கொல்லம் சங். சவரிநாத சுவாமிகளால் இங்கிலீஷில் பிரசங்கமும், தேவநற்கருணை ஆசீர்வாதமும்.

6-ந் தேதி வியாழக்கிழமை.

மன்றோ சிலை மைதானத்திலுள்ள மகா சங்கக் கொட்டகையில்.

காலை 6½ மணிக்கு—மேற்றிராணியாண்டவர் அவர்களால் "பொந்திபிக்கால்" என்னும் பெரிய பாட்டுப்பூசை. (சீரிய மலையாளச் சடங்கின்படி)

,, 10 மணிமுதல் 12 மணிவரையில் இங்கிலீஷ் உபந்நியாசங்கள்.

சென்னை அதிமேற்றிராசனக் கோவிலில்.

காலை 6½ மணிக்கு—மேற்றிராணியாண்டவர் அவர்களால் "பொந்திபிக்கால்" என்னும் பெரிய பாட்டுப்பூசை.

மயிலாப்பூர் மேற்றிராசனக் கோவிலில்.

காலை 6½ மணிக்கு—மேன்மைதங்கிய பாப்பு ஸ்தானாதிபதியவர்களால் திவ்ய பூசையும், பம்பாய் அதிமேற்றிராணியாராகிய மிக. வந். கூடியர் ஆண்டவரவர்களால் பிரசங்கமும்,

காலை 10 மணிமுதல் 12 மணிவரையில் தமிழில் உபந்நியாசங்கள்.

புதுப்பேட்டை அர்ச். அந்தோனியார் கோவிலில்.

காலை 6½ மணிக்கு—மேற்றிராணியாண்டவர் அவர்களால் "பொந்திபிக்கால்" என்னும் பெரிய பாட்டுப்பூசை.

,, 10 மணிமுதல் 12 மணிவரையில் தமிழில் உபந்நியாசங்கள்.

எழும்பூர் அர்ச். இருதயநாதர் கோவிலில்.

காலை 6½ மணிக்கு—மேற்றிராணியாண்டவர் அவர்களால் திவ்யபூசையும், சங். பன்சிக்காரன் சுவாமிகளால் இங்கிலீஷ் பிரசங்கமும்.

,, 10 மணிமுதல் 12 மணிவரையில் மலையாள பாஷையில் உபந்நியாசங்கள்.

பிராட்வே அர்ச். அடைக்கலமாதாக் கோவிலில்

காலை 6½ மணிக்கு—மேற்றிராணியாண்டவர் அவர்களால் "பொந்திபிக்கால்" என்னும் பாட்டுப்பூசை.

,, 10 மணிமுதல் 12 மணிவரையில் தெலுங்கில் உபந்நியாசங்கள்.

6-ந் தேதி வியாழக்கிழமை மாலை.

மகா சங்கத்தின் முடிவு வைபவங்கள்.

மாலை 4½ மணிக்கு—கோட்டைக்குத் தெற்கே கடற்கரையிலுள்ள பழய பாண்டு மேடையிலிருந்து வாலாஜாபாத்தின் வழியாய், மகா சங்க கொட்டகைக்கு ஆடம்பரத்துடன் மகா சுற்றுப் பிரகாரஞ்செய்தல். அதன்பின்

மகா சங்கக் கொட்டகையில்.

(1) மகா சங்கத்தின் தீர்மானங்களை வாசித்தல்.

(2) " ஆவே மரியா " என்னும் கீதம் பாடுதல்.

(3) அர்ச். பாப்பானவருடைய ஆசீர்வாதம்.

(4) தேவநற்கருணை ஸ்தாபகம், " தேதேயும் " என்னும் நன்றியறிந்த தோத்திரப்பாடல், தேவநற்கருணை ஆசீர்வாதம்.

(5) " ஜுபிலாத்தே தேயோ " என்னும் பாட்டுப்பாடுதல்.

(6) தீபாலங்காரம், பாணவேடிக்கை.

குறிப்பு.

(1) புதன்கிழமை சாயந்திரம், சென்னப்பட்டணத்திலுள்ள கத்தோலிக்கர் வீடுகள், தெருக்கள், பள்ளிக்கூடங்கள், கோவில்கள் முதலிய எல்லா இடங்களிலும் திபாலங்காரம் செய்யப்படவேண்டும்.

(2) புதன்கிழமை மாலை 6½ மணிக்கு, ஓய். எம். சி. ஏ. கட்டிடத்தில், கத்தோலிக்கால்லாதாருக்கு பிரசங்கம் செய்யப்படும்.

(3) வெள்ளிக்கிழமை காலை 6½ மணிக்கு (மாதத்தின் முதல்வெள்ளி) சென்னையிலுள்ள முக்கிய கோவில்களிலெல்லாம் மேற்றிராணிமார்களால் " பொந்திபிக்கால் " பாட்டுப்பூசைகள் செய்யப்படும்.

விசேஷ கவனிப்பு.

(1) சென்னை அதிமேற்றிராசனக் கோவில், மயிலை மேற்றிராசனக் கோவில், புதுப்பேட்டை அர்ச். அந்தோணியார் கோவில், எழும்பூர் இருதயநாதர் கோவில், பிராட்வே அடைக்கலமாதா கோவில் ஆகிய இவற்றில் நடக்கும் பூசை, பிரசங்கம், உபந்நியாசம் முதலியவற்றிற்கு டிக்கட்டு இல்லாமலே அனைவரும் போகலாம். ஆயினும் காங்கிரஸ் டிக்கட்டு (Congress Cards) உள்ளவர்களுக்கு விசேஷமாய் இடங்கிடைக்கும்.

(2) காங்கிரஸ் டிக்கட்டு உள்ளவர்களுக்கு மாத்திரம் காங்கிரஸ் கொட்டகைக்குள் பிரவேசிக்க உத்தரவுண்டு. ஆயினும், மேற்படி கொட்டகையில் செவ்வாய்க்கிழமை காலை அர்ச். பாப்பானவரின் ஸ்தானாதிபதியின் வரவேற்புக்கும், புதன்கிழமை, காலையிலும் வியாழக்கிழமை காலையிலும் மலையாள மேற்றிராணிமார்கள் சிரிய மலையாள சடங்கின்படி செய்யும் பாட்டுப்பூசைகளுக்கும், புதன்கிழமை மாலையில் நடந்தேறும் பக்திக்கிருத்தியங்களுக்கும் டிக்கட்டு இல்லாமலே போகலாம்.

(3) மேற்குறித்த கோவில்களில் நடக்கும் தமிழ், தெலுங்கு, மலையாள உபந்நியாசங்களுக்குப் போக டிக்கட்டு அவசரமில்லை.

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

வெண்ணெய் தரு மரம்.—அஷான்டி என்னு நாட்டில், தேக்கைப்போன்ற ஒரு மரத்திலிருந்து வெண்ணெய் எடுக்கப்படுகிறதாம். அவ்வெண்ணெய்யை உட்கொண்டால் தேகத்திலுள்ள சூட்டைப்போக்கி உடலுக்கு ஹிதம்பண்ணுகிறதென்று சொல்லப்படுகிறது.

சீப் பிரசிடேன்சி மாஜிஸ்டிரேட்.—மதுரை ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜியாயிருந்த பாரிஸ்டர் மிஸ்டர் பி. சி. லோயோ சென்னை சீப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டாக நியமனம்பெற்று, தம்பதவியை ஒப்புக்கொண்டார். இவர் ஓர் கத்தோலிக்கர். இவருக்கு நாம் நல்வரவு கூறுகிறோம்.

வேலையில்லாக் கஷ்டம்.—கிரேட் பிரிட்டனில் தற்போது சரியான வியாபாரம் நடக்காமையால், அநேக தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதாயும், அதனால் 2 லட்சத்து ஐம்பதினாயிரம் தொழிலாளர் வேலையின்றித் திண்டாட்டப்படுவதாயும் தந்தி சமாசாரம் எட்டுகிறது.

சென்னை நிர்வாக சபை.—கனம் மிஸ்டர் லயொனல் டேவிட்சன், கனம் மிஸ்டர் டாட் ஹண்டர், கான்பஹதூர் முகம்மது ஹபிபுல்லா சாகிப், கனம் கே. சீனிவாசய்யங்கார் ஆகிய நால்வர் சேர்ந்த நிர்வாக சபையார் மாட்சிமைதங்கிய கவர்னர் அவர்கள் தலைமையின்கீழ் சென்னை இராஜதானிக் காரியங்கள் அனைத்தையும் நடத்துவார்கள்.

புதிய கவர்ண்மேண்டு.—புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டப்படி நிர்வாக சபை மெம்பர்களாகவும், மந்திரிகளாகவும் நியமிக்கப்பட்டவர்கள் எல்லோரும் சென்ற டிசம்பர்மீ 17-ம் தேதியன்று இராஜ விசுவாசப் பிரமாணஞ் செய்துவிட்டு, தங்கள் தங்கள் புதிய உத்தியோகங்களை ஒப்புக்கொண்டார்கள்.

உபகாரச்சம்பள உயர்வு.—சிவில் உத்தியோகங்களினின்று விலகி, பென்ஷன் என்னும் உபகாரச்சம்பளம் பெற்றுவருபவர்களின் சம்பளத்தை உயர்த்த இந்தியா மந்திரி உத்தரவளித்துவிட்டார். கூடியசீக்கிரத்தில் சிவில் பென்ஷனர்களெல்லாரும் அதிக பென்ஷன் பெறுவார்கள். மிலிடரி பென்ஷனர்களுக்கும் சம்பளம் உயர்த்திக்கொடுக்க யோசனை நடந்துவருகிறது.

கம்பியில்லாத டேலிபோன்.—கம்பியில்லா தந்தியென்பது சகலருக்கும் தெரிந்த விஷயம். இப்போது கம்பியில்லாமல் டெலிபோன் பேசுவதும் சாத்தியமாய்விட்டது. இம்மாதிரி பேசவும், பேசுவதைக் கேட்கவும் தக்க யந்திரங்கள் அமைத்து, அவை மூலமாய் லண்டன் மாநகரத்திலிருந்து, சுவிட்ஸர்லாந்திலுள்ள ஜெனிவா பட்டணத்துக்கு டெலிபோன் பேச்சு நடத்தப்பட்டதாக ஒரு தந்தி கூறுகின்றது.

இந்திய கிறீஸ்துவ பட்டதாரிகள்.—இவ்வருஷம், சர்வகலாசாலை வித்தியாபட்டம் அளிக்கப்பெற்ற 1,720 மாணவர்களில், 188 பேர்களே இந்திய கிறீஸ்துவர்களென்றும் அவர்களில் 28 பேர் மாதர்களென்றும் தெரிகிறது. ஆனால் இவர்களில் கத்தோலிக்கர்கள் எத்தனை பேர் என்றும், அதிலும் மேற்குக் கரையொழிந்த இதர தென்னாட்டுக் கத்தோலிக்கரின் தொகை என்னவென்றும் விவரந்தெரியவில்லை. அது மிக சொற்பமாகவேயிருக்குமென்பதற் கையமில்லை.

சென்னையில் புது ஷெரிப்.—ராவ்சாஹிப் எம். சி. டி. முத்தைய செட்டியாரவர்கள், 1921-ஆமாகிய இப்புது வருஷத்துக்கு சென்னையின் ஷெரிப்பாக நியமிக்கப்பட்டிருக்கிறாரென்று அறிந்து சந்தோஷப்படுகிறோம். இவர் நாட்டுக்கோட்டையார் வகுப்பைச்சேர்ந்தவர், நல்ல படிப்பாளி, ஐரோப்பாவுக்குச்சென்று திரும்பியவர். வியாபார முறைகள் நன்கறிந்தவர். தாராளத் தருமச்சிந்தையும் பொதுநல ஊக்கமுமுடையவர். இவருக்கு இக்கௌரவ பதவி யளிக்கப்பட்

டதைக் குறித்து சகலரும் திருப்தியடைவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

மகா அற்புத மூலிகைகள்.—அமெரிக்காவைச்சேர்ந்த வெனிஜுவல்லா, கொலம்பியா என்னும் நாடுகளிலுள்ள காடுகளில், இரண்டு அற்புதமான மூலிகைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவாம். அவைகளில் ஒன்று, "யாய்" என்று அவ்வூராரால் அழைக்கப்படுவது. இதன் ரசத்தில் பத்துத் துளிகள் சாப்பிட்டவுடனே தூரதேசத்தில் நடக்கும் சம்பவங்கள் மனதிற்குப் புலப்படுகிறதென்றும், "யாகு" என்றழைக்கப்படும் இன்னொரு மூலிகையின் பட்டையை எடுத்து அதன் மேல்தோலை சீவிவிட்டு, அதன் சதையை நீரில் நனைத்துச் சாப்பிட்டவர்களுக்கு பசிதாகமில்லாமல் இருப்பதோடு, அவர்களை எவ்வியாதியும் அணுகுவதில்லையென்றும், அமெரிக்காவில் பிரசுரமாகும் "டிரக்கிஸ்ட்" என்னும் பத்திரிகை தெரிவிக்கிறது. இதுவும் நம்பத்தக்கதா?

ஆனரபில் திவான்பஹதூர் சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள். — இக்கத்தோலிக்குக் கனவான் டிசம்பர்மீ 16-ம் தேதியிலிருந்து தமது கலெக்டர் உத்தியோகத்தினின்று நீங்கி உபகாரச்சம்பளம் பெற்றுக்கொண்டு, 17-ம் தேதி முதற்கொண்டு, நாம் ஏற்கெனவே வேறோரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி, சென்னை சட்ட சபைக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். சர்வேசுரன் இவருக்கு திடகாத்திரமும் தீர்க்காயுளும் தந்து, இன்னும் மேலான பதவிகள் அளித்துக் காப்பாற்றுவாராக!

ஷீட் காலண்டர் இனம்.—இங்கிலீஷ் தமிழ்தேதி கிழமைகளையும், நமது கத்தோலிக்குத் திருநாட்களையும் விவரமாய்க் குறித்து நேர்த்தியாய் அச்சிடப்பட்ட ஷீட் காலண்டர், பந்தர் தெருவு பாரிய சுருட்டு வியாபாரி, ம-ா-ா-ஸ்ரீ தி. மா. மாணிக்கம் பிள்ளையவர்களால் "நல்ல ஆயன்" சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் இனமாக அனுப்பப்பட்டிருக்கிறது. இது கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுக்கு, மற்ற இந்து மதக் காலண்டர்களைவிட அதிக பிரயோஜனமானது. இதற்காக ஷை பிள்ளையவர்களுக்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

சென்னை சர்வகலாசாலைப் பட்டதாரிகள்.—இந்த சர்வகலாசாலை ஏற்படுத்தப்பட்டு, 63 வருஷங்களாகின்றன. இதுவரையில், 18,500 மாணவர்களுக்கு பற்பல பட்டங்கள் அளிக்கப்பட்டனவென்றும், இவர்களில், 3,700 பேர் கவர்ண்மெண்டு உத்தியோகத்தை நாடிச்சென்றார்களென்றும், 3,700 பேர் உபாத்தியாயர்களானார்களென்றும், 6,000 பேர் வக்கீல்களானார்களென்றும், 765 பேர் வைத்தியர்களானார்களென்றும், 100 பேர் வர்த்தகர்களானார்களென்றும், 4,179 பேர்கள் எப்படியானார்களென்பதற்கு விவரம் தெரியாமலிருக்கிறதென்றும், கணக்கிடப்பட்டிருக்கிறது.

மரியாயின் மகா சங்க விடுமுறை.—மரியாயின் மகா சங்கத்தின் பொதுக் கமிட்டியார் வேண்டுகோளின்பேரில் ஜனவரிமீ 5-ம் தேதிக்குமாத்திரம் கவர்ண்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்கு லீவு கொடுக்கலாம் என்று கவர்ண்மெண்டார் உத்தரவு அளித்திருக்கிறார்கள். 4, 5, 6, ஆக மூன்று நாட்களில் ஷை சங்கம் நடைபெறுவதாயிருக்கையில் ஒரு நாளைக்குமாத்திரம் லீவுகொடுக்கப்பட்டதானது எவ்வளவும் போதாது. இந்த மகா சங்கத்தைத் நடத்த நியமிக்கப்பட்ட காலமானது, உத்தியோகஸ்தர்களுக்கு மெத்தவும் அசௌகரியமானதென்று எங்கும் பெரிய முறைப்பாடாயிருக்கிறது.

மரமேறும் யந்திரம்.— பூமியிலிருந்து யாதோர் மரத்தின் உச்சிக்கு சிரமமில்லாமல் ஏறுவதற்கு சாதகமான ஒரு புது யந்திரம் ருஷ்ய சாஸ்திரி ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். இவ்வியந்திரம் விசேஷமாய், பனை, தெங்கு, கமுகு முதலிய மரங்களேறி, காய், பழம் பறிப்பதற்கோ, கள்ளிறக்குவதற்கோ மிக்க பிரயோஜனப்படுமென்பதற்கோரையமில்லை. இந்த இயந்திரத்தை நம் நாட்டிற் காண என்னாட் செல்லுமோ! இதைக் கண்டவுடன் மரமேறிகளுக்கு மனமடிவு நேரும்போலும்.

பரிதாபமான செய்தி.—ஐரோப்பிய மகா யுத்தத்தின்போது, பிராஞ்சு யுத்தகளத்தில் பிரென்ச்சு காலாட்படையொன்று ஓர் அரணிடத்திருந்து சண்டை செய்துகொண்டிருந்தபோது ஆகாயத்திலிருந்து சத்துருக்கள் போட்ட டார்ப்பிடோ குண்டுகளால் கிளம்பியமண் குவியல்களால் அப்படையைச்சேர்ந்த வீரர்கள் அனைவோரும் துப்பாக்கி யேந்திய கைகளுடன் அவ்வரணிலேயே பூமிக்குள் மூடப்பட்டுப்போயினர். அவர்கள் கையில் பிடித்திருந்தஈட்டிகள் இன்னும் பூமிக்கு வெளியே நீடிக்கொண்டிருக்கின்றனவாம். என்னே நிர்ப்பாக்கியமிது! இந்த சுத்தவீரர்களுக்குரிய ஞாபகச் சின்னமொன்றை பிரான்சுக் குடியரசுத் தலைவர் சென்ற மாதம் திறந்துவைத்தாராம்.

"மரியாயி வசோதயம்".—எனப் பெயர்பூண்ட புத்தகமொன்று நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. இது இம்மாதம் நிகழப்போகிற "மரியாயின் மகா சங்க"த்துக்கு ஒரு ஞாபகச் சின்னமாக உதவும் பொருட்டு பரிசுத்த கன்னிமரியாயின் மகத்துவத்தையும் மேன்மையையும்பற்றிச் சிலாகித்தும், அந்த மாசில்லாக் கன்னித்தாயார் மேல் பதிதர் பிரிவினைக்காரர் பிதற்றும் தப்பறைகளைக் கண்டனஞ்செய்தும், பண்டிதரேயன்றிப் பாமாரும் படித்தறியும் வண்ணம் எளிய தமிழ் நடையில் கும்மிப்பாட்டிராகத்தில் செய்யப்பட்ட ஓர் அரிய நூல். கத்தோலிக்கர் ஒவ்வொருவரும், மரியாயின் பக்தர்கள் அனைவரும் இப்புத்தகத்தை வாங்கி வாசித்தல்வேண்டும். புத்தகம் வேண்டுபவர்கள் யாழ்ப்பாணம், கொழும்புத்துறையிலுள்ள அநாதசாலைக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜோதி விருட்சம்.—சமீபத்தில் அபார மழை பெய்தகாலத்தில் பவானி ஆற்றில் வெள்ளம் போனபோது, அதில் அடித்துக்கொண்டுவந்த கொம்புக்குச்சுகளை, கோப்பிசெட்டிபாளையத்தைச்சேர்ந்த கடலூர் கிராமத்திலுள்ள சிறுபிள்ளைகள் விறகுக்காகப் பொறுக்கிக்கொண்டுவந்து வீட்டு முற்றத்தில் காயவைத்திருந்தார்கள். அவர்கள் தகப்பன் அன்று இராத்திரி வெளியே வந்தபோது முற்றத்தில் போடப்பட்டிருந்த விறகு தீப்பற்றிக்கொண்டிருப்பதாகக் காணப்பட்டது. தண்ணீர்விட்டுத் தீயை அணைக்கப்பார்த்தும் பிரகாசம் போகவில்லை. பிரகாசம் விளக்கு வெளிச்சத்தில் மறைந்துபோய், இருளில் மாத்திரம் காணப்பட்டது. இவ்விஷயத்தைப்பற்றி அண்டைவீட்டுக்காரர்களிடம் தெரிவிக்க, அது முற்காலத்தில் முன்னோர்களால் சொல்லப்பட்ட ஜோதி விருட்சத்தின் கிளைக்கொம்பென்றும், அது அடுத்த பர்வதத்தினின்று ஜலத்தால் அடித்துக்கொண்டு வரப்பட்டிருக்கலாமென்றும் சொன்னார்களாம். அக்கொம்பு பிரகாசித்ததை பிரத்தியட்சமாய்க்கண்ட ஒரு நிருபர் தாமே இவ்விஷயத்தைத்தெரிவிக்கிறார்.

கோசுவைப்போக்க மருந்து.—மஞ்சள் நிறம் கொசுவுக்குப் பொருந்தாதாம். படுக்கையறையை மஞ்சள் நிறமான திரையால் மறைத்தும், அல்லது மஞ்சள் வஸ்திரத்தைக்கொண்டு உடலை மூடிக்கொண்டும் உறங்கினால் கொசுவின் தொந்தரை இராதென்று சொல்லப்படுகிறது. இதைப் பரீட்சித்துப் பார்த்தால் இதன் உண்மை தெரியவரும்.

மெட்ராஸ் மெயிலும், டைம்சும்.—ஆங்கிலேயப் பங்குக்காரர்களால் நடத்தப்பட்டுவரும் பிரபல ஆங்கில தினசரிப் பத்திரிகைகளாகிய "மெட்ராஸ் மெயில்" "மெட்ராஸ் டைம்ஸ்" என்னும் இரண்டு பத்திரிகைகளையும் இப்புது வருஷாரம்ப முதற்கொண்டு ஒன்றுசேர்த்து ஒரு பத்திரிகையாகப் பிரசுரிக்கவேண்டிய ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறதாக அறிகிறோம். இவ்விரண்டும் ஒன்றுசேர்த்து நடத்தப்படுமானால் அதிக பிரயோஜனகரமாயும், நிலைமையுடையதாயுமிருக்குமென்பதிற் சந்தேகமில்லை.

சாப்பாட்டுச் செலவு.—யுத்தத்துக்கு முன்னே இங்கிலாந்தில் ஒரு ஏழையானவன், ஒருவாரத்திற்கு தன் சாப்பாட்டுக்காக ரூபா 16 செலவழித்தால் போதுமானதாயிருந்ததாம். இப்போது ரூபா 43 பிடிக்கிறதாம். அதாவது ஏறக்குறைய இரண்டு பங்கு அதிகமாய்விட்டது. பிரான்சிலோ இதைவிட அதிக மோசமாம். அங்கே ஒருஆளுக்கு ஒரு வாரத்திற்கு சாதாரண சாப்பாட்டுக்கு ரூபாய் 50 வேண்டுமாம். அதாவது முந்திய செலவுக்குமேல் ஏறக்குறைய இரண்டே கால்பங்கு அதிகமாகிறது. இவைகளையெல்லாம் நோக்கும்போது நமக்கு இந்த தேசத்தில் சாப்பாட்டு செலவு அவ்வளவு அதிகமாகவில்லையென்று ஒருவாறு திருப்தியடையவேண்டியதுதான். இந்தியாவில் சாப்பாட்டுச்செலவு ஒன்றுக்கு இரண்டாக இரட்டித்துப்போயிற்றே தவிர அதற்குமேல் ஏறவில்லை.

அயர்லாந்தில் ராணுவச்சட்டம்.—ஐரிஷ்காரர்கள் ஆயுதங்கொண்டு செய்த அநியாயங்கள் அளவுக்கு மிஞ்சிப்போனதால், கவர்ண்மெண்டார் ராணுவச்சட்டத்தைப் பிர

யோசிக்கவேண்டியதாயிற்று. ராணுவச்சட்டமென்றால், சாதாரண போலீஸாருக்கு அடங்காமல் அதிக்கிரமம் பண்ணுகிறவர்களை இராணுவ வீரர்களைக்கொண்டு அடக்குவதற்கான சட்டமாகும். இந்த சட்டப்படி டிசம்பர்மீ 27-ந் தேதிக்குள் யார் யார், ஆயுதங்களையும், தளவாடங்களையும் வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களெல்லோரும், தங்களிடமுள்ள ஆயுதங்கள், தளவாடங்கள் அனைத்தையும், கவர்ண்மெண்டிடம் ஒப்புவித்துவிடவேண்டுமென்றும், அப்படிச் செய்யாதவர்கள் மரணதண்டனைக்குள்ளாவார்களென்றும், அயர்லாந்து சேனாதிபதி ஒரு விளம்பரஞ் செய்திருக்கிறார்.

கானாட்டுக் கோமகன் விஜயம்.— மேன்மை தங்கிய கானாட்டுக் கோமகனார் இம்மாதம் 10-ம் தேதியாகிய திங்கட்கிழமையன்று மாலை நாலரை மணிக்கு "மலேயா" என்னும் மரக்கலமீது வந்து, சென்னைத் துறைமுகத்தில் இறங்குவார். அவரை, சென்னைக் கவர்னர் அவர்களும், அவர் பத்தினியாரும், இராஜாங்க பிரபல உத்தியோகஸ்தர்கள், கனவான்கள் தனவான்களாகிய பிரபுக்கள் சகிதமாய் வரவேற்பார்கள். ஷை மரக்கலம் கண்ணுக்குக் காணப்பட்டவுடன், கோட்டையிலிருந்து மூன்று பீரங்கி வெடியும், அது சென்னைத் துறைமுகத்தைச் சமீபித்தவுடன் அம்மரக்கலத்திலிருந்து 31 வெடியும், அது துறைமுகத்துக்குள் நுழையும்போது, கோட்டையிலிருந்து 31 வெடியும், ஷை கோமகன் கப்பலிலிருந்து கரையிலிறங்கும்போது, 31 வெடியும், அவர் சென்னைக் கவர்னர் மாளிகையிற்போய் இறங்கும்போது, 31 வெடியும், ஆக 127 வெடிகள் அக்காலையில் தீர்க்கப்படும். சென்னைத் துறைமுகத்தண்டை சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பூப்பந்தரின்கீழ், கோமகனாரை ஆசனத்தமர்த்தி அவருக்கு, சென்னை கார்ப்போரேஷன் தலைவர், வந்தனோபசாரப் பத்திரமொன்று வாசித்துக்கொடுப்பார். அதன்பின் கோமகனார் முன்னும் பின்னும் மெய்க்காப்பாளச் சேனைகளுடன், கடற்கரை ரஸ்தா வழியாய் பவனிசென்று பாரி அண்டு கம்பெனியார் கட்டிடம் வரையிற்போய், மேற்கே எஸ்பிளநேட் பாதைசென்று லா காலேஜ் பக்கந் திரும்பி கவர்னர் மாளிகைக்குப்போவார். இவர் செல்லும் பாதையின் இருமருங்கிலும், சேனாவீரர்கள் பாராகொடுப்பார்கள். சென்னைக் கவர்னர் துறைமுகத்திலிருந்து மோட்டார் ரதமீது நேரே கடற்கரை ரோட்டுவழியாய் தம்மில்லஞ்சென்று, கோமகனாருக்கு நல்வரவு அளிப்பார். அவர் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்து திரும்பித் தம்மூர்போமளவும் அவருக்கு நேரும் பிரயாணச் செலவுக்காக லட்சத்து இருபதினாயிரம் ரூபாய் பிரிட்டிஷார் சாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

சென்னை சட்ட சபை எலெக்ஷன்.— இந்த எலெக்ஷனில் பிராமணரல்லாதாரே பெரும்பான்மையாய் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனதினால், புதிய சீர்திருத்தங்களில் ஜனங்களின் பொறுப்புக்கு விடப்பட்ட (மாற்றப்பட்ட) விஷயங்களைக் கவனிக்க கவர்ன்மெண்டார் அந்த பிராமணரல்லாதார்களுக்குள்ளேயே, மந்திரிகளை நியமித்திருக்கிறார்கள்: கல்வி இலாகாவுக்கு திவான்பஹதூர் ஏ. சுப்பராயலுசெட்டியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., முனிசிபாலிட்டி எனும் ஸ்தல ஸ்தாபன இலாகாவுக்கு மகா-ள-ள-ஸ்ரீ பி. ராமராயனையங்கார் அவர்கள், எம்.ஏ., தொழில், கூட்டுறவு இலாகாவுக்கு மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பஹதூர் கே. வெங்கிட்ட ரெட்டிகாரு பி.ஏ., பி.எல்., ஆகிய மூவர்களும், மந்திரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னைச் சட்ட சபைக்கு, சர். பி. ராஜகோபாலாச்சாரியாரவர்கள், சபா நாயகராகவும், மகா-ள-ள-ஸ்ரீ திவான்பஹதூர் எஸ். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள், காரியதரிசியாகவும் நியமனம் பெற்றிருக்கிறார்கள்.

இந்திய கிறீஸ்துவர்களின் தொகுதிகளுக்கு அபேக்ஷகர்களாய் நின்றவர்களில் பின் வருபவர்களையே ஜனங்கள் தெரிந்தெடுத்திருக்கிறார்கள் :—

வடஜில்லாத் தொகுதிக்கு	...	மிஸ்டர் டி. ஏ. பாமர்.
சென்னை நகர்புறத் தொகுதி	...	,, எம். டி. தேவதாஸ்.
மத்திய ஜில்லாத் தொகுதி	...	,, எஸ். அற்புதசாமி உடையார்.
மேற்கு ஜில்லாத் தொகுதி	...	,, இ. சி. எம். மஸ்கரேஞாஸ்.
திருநெல்வேலி இராமநாதபுரத் தொகுதி	...	,, எட்வர்ட் பெரியநாயகம்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

உபாத்தியாயர்
மயிலை பா. மிக்கேல்சாமிப் பிள்ளை.

சென்ற முப்பது வருஷமளவாய், பிளேஸ் தோட்டம், சென்னை, பல்லாரி, மயிலாப்பூர் முதலிய இடங்களில் உபாத்திமைத் தொழில் செய்தவரும், "பெற்றோர் ஒழுக்கம்" "செல்வியர் நியதி" முதலிய அரிய நூல்களை ஆக்கியோனும், நல்ல கத்தோலிக்கருமான மயிலை பா. மிக்கேல்சாமிப் பிள்ளை, சுமார் ஒரு மாத காலமாய் கடின வியாதியுற்று, தீரா வியாதியெனக்கண்டு, அவஸ்தை, நன்மை முதலிய கடைசித் தேவத்திரவிய அநுமானங்களைக் குறைவறப் பெற்று, 1920ஞு டிசம்பர்மீ 26உ ஞாயிற்றுக்கிழமை காலை 3 மணிக்கு மயிலாப்பூரில் கையில் மந்திரித்த மெழுகுதிரியும், பலன் ஸ்தாபித்த பாடுபட்ட சுரூபமும் ஏந்தினவண்ணமாய் "சேசு மரியே சூசை" எனுந் திவ்ய நாமங்களை உச்சரித்துக்கொண்டு தமது 50-வது வயதில் உயிர் துறந்து, அம்பரன் திருவடி யடைந்தார். இதனைக் கண்ணுறும் கத்தோலிக்குச் சகோதரர்கள் கருணைகூர்ந்து, அவர் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பா., பிரி. திரியாவது வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு
தம்பியை இழந்து தவிக்குந் தமயன்
M. P. K.

எழும்பூர்.

எமதரிய நண்பர்களுக்கு துயரத்துடன் தெரிவிப்பதாவது :—பரம கடவுளின் தயவால் கிடைத்த அரிய செல்வ தகப்பனாராகிய டாக்டர் T. M. நாயர் துரையிடம் வேலைபார்த்த மிஸ்டர் V. G. கோவிந்துராஜி சிலகாலம் வியாதியுற்றவராய் இருந்து, 1920-ம் வருஷம் ஞாயிற்றுக்கிழமை காலை 2 மணிக்கு தமது ஏழை பிள்ளைகளையும் மற்றவர்களையும் பரதவிக்கவிட்டு, கடைசி தேவத்திரவிய அநுமானங்களைப்பெற்று பரலோகபிராப்தியடைந்தார். அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளக்கேட்டுக் கொள்ளுகிறோம். தந்தையை இழந்தகுமாரன்

பி. டி. ஆரோக்கியதாஸ்.

எழும்பூர்.

ஐயா, எங்கள் செல்வ மாமனாகிய சோட்டா முருகேசம் திடீரென்று 1920ஞு நவம்பர்மீ 24-ந் தேதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஏழை மைத்துனர்கள், 6 பிள்ளைகள், தம்மனைவி பாதவிக்க, மற்றுமுள்ளவர்கள் துயரமுற்றுப் புலம்ப, பரலோக பாக்கிய சந்தோஷத்தில் மூழ்கினார். இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பா., பிரி., திரி. வேண்டிக்கொள்ள கோருகிறேன். மாமனை இழந்து பரிதபிக்கும் மைத்துனன்

P. D. ஆரோக்கியதாஸ்.

செக்கந்திராபாத்.

சென்னை பெரியமலை மடுவாங்கரையில் வசித்து காலஞ்சென்ற பரஞ்சோதி இராயப்பனின் குமாரரும், 19-வது காலாட்படையின் பென்ஷனரும் வேப்பேரியில் வசித்தவருமாகிய எனது அருமை தந்தை பரஞ்சோதி டேவிட், நிகழும் 1920ஞு நவம்பர்மீ 7-ந் தேதி மாலை 5-30 மணிக்கு, செக்கந்திராபாத், திருமலகிரியில் கடைசி தேவத்திரவிய அனுமானங்களைப்பெற்று தமது 71-ம் வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தனர். இவரால் மெத்த ஊக்கமும் கவலையுமாய் கவனிக்கப்பட்ட எனது மூத்த மகள் சூசைமரி, இவர் மரித்த தினத்திலிருந்து அவரின் ஏக்கங்கொண்டு படுக்கையாய் இருந்து தனது 5 வருஷம் 7 மாதப் பிராயத்தில் தன் அருமை பாட்டனார் மரித்த 10-ம் நாளாகிய 1920ஞு நவம்பர்மீ 16-ந் தேதி மாலை 10-45க்கு கர்த்தருக்குள் நித்திரையடைந்தாள். இங்ஙனம்,

7—12—1920. தேவசகாயம்.

அதிர்ஷ்ட சீட்டுகள்.

ST. FRANCIS XAVIER'S INDUSTRIAL SCHOOL RAFFLE, TANJORE.

பிரைசுகள் 374. ரூபா 2000த்திலிருந்து ரூபா 5 வரை.

இது 2—3—1921ல் துலுக்கப்படும்.

ST. JOSEPH'S ORPHANAGE RAFFLE, CHINGLEPUT.

பிரைசுகள் 100. ரூபா 1000த்திலிருந்து ரூபா 5 வரை.

13—4—1921ல் துலுக்கப்படும்.

ஒவ்வொரு டிக்கட்டும் தனித்தனி அணா 4 தான். 10-க்கு ஒன்று இனாம். புஸ்தகம் விற்ககூடியவர்கள் உடனே எழுதுங்கள். நாள் இருக்கிறதென்று ஏமாந்துபோகவேண்டாம்.

M. G. S. பிள்ளை, சாத்தூர்.

சி. நம்பியந்தல் அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

அடியில் கையொப்பமிட்ட நாம் அதிசயத்துக்குரிய புதுமைகளைச் செய்யும் அர்ச். அந்தோனியார் பெயரால் 1920ஆ வட ஆர்காடு ஜில்லா திருவண்ணாமலை தாலுக்கா சி. நம்பியந்தல் கிராமத்தில் பெரியதோர் தேவாலயம் கட்டத் துவக்கிவிட்டோம். உண்மையில் கையில் காசில்லாவிட்டாலும் நம்முடைய நாட்டார் அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களென்று எமக்கு நன்றாய்த் தெரிந்த விஷயமானதினாலும், அவருடைய பெயரால் துவக்கும் எவ்வலுவலும் தவறாமல் அனுகூலமாகுமென்பதும் எமக்கு நன்றாய்த் தெரிந்த விஷயமானதினாலும் அவருடைய பக்தர்களையே நம்பி தைரியத்துடனும் துணிகரத்துடனும் 20,000 ரூ. மதிப்புள்ள இப்பெரும் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கிவிட்டோம். சர்வேசுரனுடைய மகிமை விளங்கவும் அர்ச். அந்தோனியார் புதுமைகள் துலங்கவும் நேயர்கள் எமக்குதவி செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியார் பக்தர்கள் கொடுத்துதவும் தர்மம் எவ்வளவு சொற்பமாயினும் அதிக சந்தோஷத்துடனும் நன்றியறிதலுடனும் பெற்றுக்கொள்ளப்படும்.

ஏற்கெனவே வசூலான தொகை	ரூ.	145	8	0
Mr. M. A. Joseph	,,	1	0	0
ஆ. மொத்தம் ...		146	8	0

REV. JOS. GNANADICAM, சி. நம்பியந்தல், காஞ்சி P. O., போளூர்.

கவனியுங்கள் ! கத்தோலிக்கரே ! ! கவனியுங்கள் ! ! !

ஓர் நூற்றாண்டளவாய் அனுபோகமும் பிரசித்தியும்பெற்ற

ஆரோக்கியானந்த மாத்திரைகள்,

இன்ப்ளுயன்ஸாமுதல் எல்லா ஜுரங்களுக்கும், குடல்வாதம், கபவாதம், திமிர்வாதம், கைகால் பிடிப்பு, கைகால் தேக ஊதல், ஓய்ச்சல், சூலவாய்வு, நெஞ்செரிவு, அஜீரணம் முதலிய சகல வாதசம்பந்தமான வியாதிகளுக்குஞ் சஞ்சீவியாயிருக்கின்றது. ஒக்காளம், அருக்களிப்பு இல்லாதது. பத்தியம் கிஞ்சிற்றும் வேண்டாதது. ஒரே நாளில் குணத்தைக் காண்பீர்கள். இன்றே ஒரு டப்பியை பரீக்ஷியுங்கள்.

50 மாத்திரை டப்பியின் விலை ரூ. 1—0—0 }
100 ,, ,, ,, ரூ. 2—0—0 } ரெஜிஸ்டர் தபால் சார்ஜ் வேறு.

M. தாஸன் & பிரதர்ஸ்,
16, செய்ன்ட் ஸாவியர் தெரு,
ஜார்ஜ்டவுன், சென்னை.

இலங்கை வர்த்தக நண்பர்களுக்கு ஓர் அறிவிப்பு.

தற்கால நாகரீகத்துக்கேற்ற சுதேச ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் பாவிக்கக்கூடிய பச்சை சிகப்பு நீலநிற வெல்வெட்பட்டிகளும் (Velvet straps) தோல்பட்டிகளும் (Leather straps) போடப்பட்டு உயர்தர தோல்களால் உறுதியாகச் செய்யப்பட்டு பார்வைக்கு அழகாயும் காலுக்கு மிருதுவாயும் யாவரும் பிரியமாக வாங்கக்கூடிய பர்மா செருப்பு பலதினுசுகள் மாதந்தோறும் எங்களுக்கு வந்துகொண்டிருக்கின்றன. சொற்ப லாபத்துக்குக் கொடுக்கக்கூடும். வெளியூர் ஆர்டர்களுக்கு விசேஷ கவனஞ் செலுத்தப்படும். தாமதியாமல் உடனே கேட்லாக்கிற்கு எழுதுங்கள். ஆர்டர் செய்கிறவர்கள் பத்திரிகையின் பெயரை தயவுசெய்து எழுதும்படியாக விரும்புகிறோம்.

M. X. MOTHA & BROS,
Merchant,
Panadure, Ceylon.

The Good Pastor

நல்ல ஆயன்.

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 19. } பெப்ரவரி 1921. { இலக்கம் 2.



சென்னை அதிமேற்றிராணியார் நிருபம்

சென்னை அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த குருக்களுக்கும் கிறீஸ்துவர்களுக்கும் கர்த்தரில் ஆரோக்கியமும் ஆசீரும் உண்டாவதாக.

சேசுக்கிறீஸ்துநாதரில் நமக்குப் பிரியமுள்ள சங்கைக்குரிய சகோதரர்களே, பிரியமான பிள்ளைகளே,

ஆரவாரச்சிறப்பாய் நிகழ்ந்த மரியாயின் மகா சங்கத்தின் பாக்கியகரமான அந்நாட்களில் "மரியாயின் மாசற்ற இருதயமே, இந்தியாவுக்காக வேண்டிக்கொள்ளும்" என்ற ஜெபம் வரையப்பட்டிருந்த சின்னத்தைத் தங்கள்பேரில் ஆயிரமாயிரமானோர் பெருமையுடன் தரித்திருந்தார்களல்லவா? ஆம், அர்ச். கன்னிமரியாயின்பேரில் பக்தி வைக்கவேண்டுமென்பது கத்தோலிக்குத் திருச்சபை போதிக்கும் விசேஷித்த சத்தியமாகும்.

இப்பக்தியெனும் விருதின்கீழ்தான் மரியாயின் மகனை மெய்யானபடி பின்செல்லுகிறவர்கள் அனைவரும் வந்துசேர்வார்கள். ஆனபடியால், சரித்திர சம்பந்தமான இம்மகா சங்கம் கத்தோலிக்க நோக்கத்துக்கும் கருத்துக்கும் மிக்கப் பொருத்தமானதாய் அல்லது அனுகுணமானதாயிருக்கின்றது. அதேனெனில், பரிசுத்த பிதாவாம் பாப்பானவரின் பிரதிநிதி அக்கிராசனம்வகிக்க, இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய நாடுகளைச்சேர்ந்த 22 பேருக்கதிகமான அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களும், பற்பல ஜாதியாரான 300 பேருக்கு அதிகமான குருப்பிரசாதிகளும், சுமார் 25 ஆயிரம் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுடைய பெருந் திரளும் விஜயமாக, இச்சென்னையில் இச்சங்கம் மரியாயின் மகா சங்கமென அழைக்கப்பட்டு நடைபெற்றது.

இச்சங்கத்தின்போது இத்தனை ஆயிரம்பேரும் தங்கள்பேரில் மரியாயின் சின்னத்தை யணிந்தவர்களாய் இந்தியாவானது மரியாயின் மூலமாய் கிறீஸ்துநாதரிடம் வந்தடைய வேண்டிக்கொண்டார்கள்.

இம்மகா சங்கத்துக்கு ஏராளமாய் திரண்டுவந்தவர்கள் எல்லோரும் தங்களுக்குள் ஒருவர் மற்றொருவருக்கு எல்லா விதத்திலும் வேறுபட்டோராயிருந்தும் தங்கள் மத விஷயத்தில்மாத்திரம் ஒன்றுபட்டோராயிருந்தார்கள். எல்லோரும் ஒரே மதத்தைத் தழுவினவர்களாயும், கத்தோலிக்கெனும் ஒரே திருச்சபைக்குச் சொந்தமானவர்களாயுமிருந்தார்கள். இந்த கத்தோலிக்குத் திருச்சபையோ குழந்தை சேசுநாதர் பிறந்த பெத்லேம் ஊரில் உண்டாயிற்று. அப்போது மரியாயும் சூசையப்பரும் அதில் முதன் முதல் உட்பட்டார்கள். தற்போது ஓர் பாரிய குடும்பமாய்ப் பெருகி பிரபல்யமாய் விளங்கும் கத்தோலிக்குத் திருச்சபை பெத்லேம் குகையிலுண்டான குடும்பமேயாம். ஆனபடியால், நாம் எல்லோரும் சேசுக்கிறீஸ்துநாதரின் சகோதரர்களாயும், கன்னிமரியாயின் மக்களாயுமிருக்கிறோம். அர்ச். சூசையப்பரோ நம்முடைய பாதுகாவலர்.

ஓர் விசேஷித்த காரணத்தின் நிமித்தம் திருச்சபைக்குப் பாதுகாவலாயிருக்கும் அர்ச். சூசையப்பருடைய மகத்துவத்தின்பேரில் நாம் உங்களுக்கு இன்று இரண்டோர் வார்த்தை சொல்ல மனதாயிருக்கிறோம். நம்முடைய பரிசுத்த தந்தையர்ம் 15-ம் ஆசீர்வாதப்பர் தம் சுயமனதால் ஏவப்பட்டு, தந்தைக்குரிய நேசத்தோடும் அன்போடும் எழுதியுள்ள நிருபத்தில், என்றும் மறக்கப்படக்கூடாத பரிசுத்த பாப்பானவராகிய 9-ம் பத்திநாதர் அர்ச். கன்னிமரியாயின் பரிசுத்த பத்தாவும், மாம்சமான வார்த்தையின் வைகத்தாதையுமான அர்ச். சூசையப்பரை திருச்சபை முழுமைக்கும் பாதுகாவலராய் நியமித்த அந்த மகா சம்பவத்தின் 50-ம் வருட மகோற்சவத்தை உலக மடங்கலிலும் ஆரவாரச் சிறப்பாய்க் கொண்டாடவேண்டுமென்று மிக்க உருக்கமாய் ஏவியுள்ளார்.

மிகவும் பரிசுத்த பரம திரித்துவத்தின் முதல் ஆள்ளன பிதாவாகிய சர்வேசுரனே சேசுநாதருக்குத் தகப்பன் அல்லாது வேறு உலக தகப்பன் அவருக்கில்லையல்லவா? ஆயினும் சூசையப்பரை பிதாவான சர்வேசுரனிடமாய் அவருக்குத் தகப்பனென்று சொல்லத்தகும். பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வதிப்பர் தம்முடைய நிருபத்தில் எழுதியுள்ளபடி, நமதாண்டவரான சேசுநாதசுவாமி தம்முடைய நித்திய பிதாவினிடத்தில் ஜெனித்து அவருடைய ஏக குமாரனுயிருந்தபோதிலும் "தச்சனுடைய குமாரன்" (மத்.XIII-55) என்றும் "சூசையின் மகன்" (லூக். IV-22) என்றும் அழைக்கப்பட திருவுளங்கனிந்தார். சுவிசேஷகரான லூக்காஸ் என்பவரும் இஸ்பிரீத்துசாந்துவினால் ஏவப்பட்டு "குழந்தையாகிய சேசுநாதரை அவருடைய பிதா மாதா (தேவாலயத்துக்)குள்ளே கொண்டுவந்தார்கள்" (II-27) என்றும், "அவருடைய பிதா மாதாவோவென்றால் அவரைக் குறித்துச் சொல்லப்பட்டவைகளைக் கேட்டு அதிசயித்துக்கொண்டிருந்தார்கள்" (II-33) என்றும், "மகனே உம்முடைய தந்தையும் நானும் வியாகுலத்தோடு தேடி அலைந்தோமே" (II-48) என்று சேசுநாதரை நோக்கி மரியாய் சொல்லுகையில், மரியாயே சூசையப்பரை அவருடைய தகப்பன் என அழைக்கிறாளென்றும் எழுதியிருக்கிறார். சூசையப்பருக்கு சேசுநாதர்மட்டில் ஓர் தகப்பனுக்குரிய அதிகாரமிருந்தது. சேசுநாத

ரும் அவர்களுக்கு (லூக். II-51) அதாவது மரியாயிக்குமாத்திரமல்ல ஆனால் சூசையப்பருக்குங் கீழ்ப்படிந்துகொண்டுவந்தார். சேசுநாதர் தம்முடைய குழந்தைப் பருவத்திலும், நசரேத்தூரில் சூசைப்பர் வீட்டில் தாம் இளைஞனாயிருந்தகாலத்திலும் தமக்கு அநுதினமும் வேண்டிய சகல சவரட்சணைகளையும் தம்முடைய தாதையான சூசையப்பர் கைப்பாடுபட்டு சம்பாதிப்பதிலேயே பெற்றுக்கொள்ள சித்தங்கொண்டார். குழந்தை விஷயத்தில் சூசைப்பருக்குள்ள கடமைகளை சரிவர நிறைவேற்றும்படி அவரை ஏவ சர்வேசுரனும் தம்முடைய தூதர்களை அவரிடம் அனுப்பிவந்தார். திருக்குடும்பத்தின் தலைமையென்னும் முறையில் சூசைப்பர் "குழந்தைக்கு சேசுவெனும் நாமமிடவேண்டும்" (மத். I-21) என்று கற்பிக்கப்பட்டார். மேலும் "குழந்தையையும் அதன் தாயாரையுங் கூட்டிக்கொண்டு எஜிப்துக்கு ஓடிப்போகவும்" (மத். II-13), "எரோது இறந்தபின்போவெனில் இதோ கர்த்தருடைய தூதன் எஜிப்தில் சூசையப்பருக்கு சொப்பனத்தில் தரிசனையாகி, நீர் எழுந்து பிள்ளையையும் அதன் தாயாரையும் கூட்டிக்கொண்டு இசாயேல் நாட்டுக்குப் பயணப்பட்டு போம்" (மத். II-19) என்றும் ஓர் சம்மனசால் ஏவப்பட்டார். சூசையப்பர் மரியாயிக்கு மெய்யான பத்தா ஆனபடியால் தம் குமாரனை சேசுவின்பேரில் மரியாயிக்கிருந்த அதிகாரம் சூசையப்பருக்குமுண்டல்லவா?

பரிசுத்த பிதாவாகிய 9-ம் பத்திநாதர் 1870-ம் ஆண்டில் அர்ச். சூசையப்பரை திருச்சபை முழுமைக்கும் பாதுகாவலராக நியமித்தபோது விடுத்த சாசனத்தில் திருச்சபை துன்பகாலத்தில் எப்போதும் விசேஷ விதமாய் அர்ச். சூசையப்பருடைய உதவி சகாயத்தை இரந்து கேட்டதென்று சொல்லியிருப்பதையே பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வாதப்பரும் நமக்குச் சொல்லுகிறார்: "மனுக்குலமானது தற்காலம் உள்ளாயிருக்கும் இடுக்கண்களை நாம் சிறிது சிந்திப்போமானால், அர்ச். சூசையப்பர்பேரில் நமக்கு மென்மேலும் பக்தி அதிகரித்து, உலகமடங்கலிலுமுள்ள கிறீஸ்துவர்களுக்குள்ளேயும் இது பரவவேண்டுமென்பது அதிக ஸ்பஷ்டமாய் விளங்கும். ஆம், கிறீஸ்துவர்களுக்குள் திருக்குடும்பத்துக்குத் தலைவராயிருந்த அர்ச். சூசையப்பர்மட்டில் பக்தி உண்டாகுமானால், அக்குடும்பத்தைச்சேர்ந்த மற்றவர்களான நமதாண்டவர்மட்டிலும் அர்ச். கன்னிமரியாயின்மட்டிலும் அவசியம் பக்தியுண்டாகும். ஏனெனில் அர்ச். சூசையப்பர் சனுகால் நாம் மரியாயை அண்டிப்போகவும், மரியாயின் சனுகால் எல்லா பரிசுத்ததனத்தின் ஊருணியாகிய சேசுக்கிறீஸ்துநாதரை அண்டிப்போகவும் வழியாகிறது. சேசுக்கிறீஸ்து நாதரோ சூசையப்பருக்கும் தேவமாதாவுக்கும் கீழ்ப்படிந்து நடந்ததினால் குடும்பசம்பந்தமான புண்ணியங்களை பேறுபலனுள்ளவைகளாகச் செய்திருக்கின்றார். மேலும் நமது பரிசுத்த தந்தை, காலஞ்சென்ற 13-ம் சிங்காராயனெனும் பாப்பானவரின் ஞானம் நிறைந்த ஏவுதலையும் நமக்கு ஞாபகமூட்டுகிறார்: "ஏழை எளியவர்கள் விமரிசையாய் நடந்துகொள்ள ஆசிப்பார்களானால் அவர்கள் ஜனத்தலைவர்களின் வீண்வார்த்தைகளை நம்பாமல் அர்ச். சூசையப்பருடைய அடைக்கலத்திலும், அவரைப் பின்பற்றி நடப்பதிலும், திருச்சபையின் தாய்க்குரிய பராமரிப்பிலும் தங்கள் நம்பிக்கையை வைப்பார்களாக. இவர்களுடைய க்ஷேமலாபத்தின்பேரில் திருச்சபை எப்போதும் கவலைகொண்டிருக்கின்றது.

சேசுக்கிறீஸ்துவின் ஞான சரீரமாகிய திருச்சபைக்கு அர்ச். சூசையப்பருடைய அடைக்கலம் எக்காலத்திலும் இருந்ததைவிட இக்காலத்தில் அதிக அவசியம். ஆகையால் பரிசுத்த தந்தையின் தூண்டுதலுக்கிணங்கி நமது அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த விசுவாசிகளனைவரும் அர்ச். சூசையப்பரை அண்டி அவருடைய வல்லமையுள்ள மன்றாட்டினுதவியை யடைய உருக்கமாய் வேண்டிக்கொள்ளவேண்டுமென்று வெகுவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். பிதாவான சர்வேசுரன் அர்ச். சூசையப்பரின் ஆதரவிலும் கண்காணிப்பிலும் தமது ஏக குமாரனை ஒப்படைத்திருந்தபடியால் அவர் சேசுநாதருக்கு உலக தகப்பனைப்போலிருக்கிறார். அர்ச். சூசையப்பர்மட்டில் நமக்குப் பத்தியிருந்தாலன்றி மற்றப்படி நாம் சேசுநாதருக்கும் தேவமாதாவுக்கும் அவ்வளவாய் பிரியப்படமுடியாது. சேசுநாதருடையவும் தேவமாதாவுடையவும் சரீர சவரட்சணைக்கான காரியங்களைச் சவுகரித்துக்கொடுக்க அர்ச். சூசையப்பர் அதிக கவலைகொண்டார். ஆனபடியால் உங்

களுக்காக வேண்டிய உலக காரியங்களின் கவலையனைத்தையும் அவருக்கொப்படைத்து விடுங்கள்.

அர்ச். சூசையப்பரின் வணக்கத்துக்கடுத்த கிருத்தியங்களில் அநேகம் திருச்சபையின் அதிகாரிகளால் அங்கிகரிக்கப்பட்டவைகளானதால் அவைகளை விசுவாசிகளனைவரும் அனுஷ்டிக்கும்படி பரிசுத்த பாப்பானவர் ஆசிக்கிறார். அப்பேர்ப்பட்ட பக்திக்கிருத்தியங்களிலொன்று அவர் நல்ல மரணத்துக்கு பாதுகாவலர் என்பது. இதைக் குறித்துப் பதினைந்தாம் ஆசீர்வாதப்பர் விசேஷித்த விதமாய் எழுதியிருக்கிறதாவது: "சேசுநாதருடையவும் தேவமாதாவுடையவும் கரங்களில் அவர் மரணமடைய பாக்கியம் பெற்றவரானதால், மரணசமயத்திலிருப்போரை ஆதரிக்கிறதில் மிகுந்தவல்லமை பெற்றவராயிருக்கிறாரென்று சொல்ல அதிக நியாயமுண்டு. ஆனபடியால் மரணசமயத்தில் அர்ச். சூசையப்பருடைய மன்றாட்டினுதவியை அடையும்படியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற 'நன்மரண சபை'யையும், ஒவ்வொரு நாளும் மரண அவஸ்தையிலிருப்போரை ஆதரிக்க ஏற்படுத்தப்பட்டிருக்கிற 'அர்ச். சூசையப்பரின் மரண சபை'யையும் எமது சங்கைக்குரிய சகோதரர்கள் தங்களுடைய விசேஷ ஆதரவில் வைத்து அச்சபைகள் விருத்தியாகும்படி தங்களாலான பிரயாசைப்படக்கடவார்களாக."

அர்ச். சூசையப்பரின் வணக்கத்துக்கடுத்த மேற்சொன்ன பக்திக்கிருத்தியங்கள் அல்லாமல் இன்னொரு விசேஷித்த பக்திக்கிருத்தியமுமுண்டு. நாம் அஞ்ஞான இராச்சியமாகிய இந்தியாவில் சீவிக்கிறோம். அஞ்ஞான அந்தகார நிழலில் அமிழ்ந்திக்கிடக்கிற கோடானகோடியோரால் நாம் சூழப்பட்டிருக்கிறோம். இவர்களெல்லோரும் சத்திய மறை இன்னதென்று கண்டு தெளியவும், அர்ச். சூசையப்பரின் ஆதரணையிலும் பாதுகாவலிலும் வைக்கப்பட்டிருக்கும் பரிசுத்த கத்தோலிக்குத் திருச்சபையில் அவர்களும் வந்துசேரவும் அர்ச். சூசையப்பரின் உதவியை இரந்து மன்றாடுவோமாக. சம்மனசானவரின் கட்டளைக்கமைந்து குழந்தையையும் அதின் தாயையும் அழைத்துக்கொண்டு அஞ்ஞான நாடான எஜிப்து தேசத்துக்கு அவர் போனதினால் அர்ச். சூசையப்பரே முதல் வேதபோதகராவர். அர்ச். சூசையப்பர் சகல அப்போஸ்தலர்களுக்கும் மாதிரியென்று அர்ச். ஹிலாரியார் சொல்வதும் நியாயமே. ஆகையினால் தேவமாதா, சூசையப்பர் வழியாக இந்தியா முழுதும் கிறீஸ்துநாதரிடத்தில் வந்துசேர்ந்து அவர்களுடைய வல்லமையுள்ள ஆதரவில் நம்மோடு அவர்களும் சந்தோஷிக்கும்படியாக, அர்ச். சூசையப்பரைப் பார்த்து நீங்கள் வேண்டிக்கொள்வீர்களாக.

திருச்சபை முழுமைக்கும் பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பருக்குத் தோத்திரமாக இந்த தங்க ஜூபிலி வருஷத்தில் உலகமடங்கலிலும் பக்திக்குரிய ஆடம்பரமொன்று நடைபெறவேணுமென்று பரிசுத்த தந்தையவர்கள் ஆக்ஞாபித்திருக்கிறார்கள். ஆகையால் நம்முடைய அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த ஒவ்வொரு பங்கு கோவிலிலும் ஒவ்வொரு துறவற மடத்துக் கோவிலிலும் ஏப்பிரல் மாதம் 10-ந் தேதி ஞாயிறு தொடங்கி திரிநாள் ஜெபம் நடத்தி, ஏப்பிரல் மாதம் 13உ அர்ச். சூசையப்பர் அடைக்கலத் திருநாளைக் கொண்டாட நாம் கற்பிக்கிறதுமன்றி, விசுவாசிகளனைவரும் பாவசங்கீர்த்தனஞ்செய்து அந்த திருநாளன்று சற்பிரசாதம் உட்கொள்ளும்படியாகவும் ஏவுகிறோம்: இத்திருநாளைக் கொண்டாடுங் கருத்தோடு பாவசங்கீர்த்தனஞ்செய்து நன்மைவாங்கி அர்ச். பாப்பானவரின் கருத்து அநுகூலமாகும்படி வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு ஒரு பரிபூரண பலனளிக்கப்பட்டிருக்கிறது. திருநாளன்று நாம்தாமே நமது மேற்றிராசனக்கோவிலில் பெரிய பாட்டுப் பூசை செய்வோம். திரிநாள் கொண்டாடும் விஷயத்தை ஒழுங்குசெய்துகொள்வது அந்தந்த பங்கு விசாரணை சுவாமிமார்களைப் பொறுத்தது.

கடைசியில் அர்ச். பாப்பானவரின் வார்த்தைகளைக்கொண்டே நமது நிருபத்தை முகிக்கிறோம்: நிலைமையான மறுவுலகத்தின் ஒளியைக்கொண்டு நிலையற்ற இம்மையின்னதென்று கண்டுபிடிக்கவும், மறு சீவியத்தின் நம்பிக்கையைக்கொண்டு இவ்வுலக சீவியத்தில் நேரிடுகிற துன்பதுரிதங்களைப் பொறுமையாய்ச் சகிக்கவும் அர்ச். சூசையப்பரிடத்தில் எல்லோரும் கற்றுக்கொள்ளக்கடவார்களாக. தேவசித்தத்துக்கமைந்த மனதோடு அவைகளையடைய பிரயாசிக்கலாம்.—அதாவது மட்டசனத்தோடும், நீதியோடும், பக்தியோடும் இவ்வுலகத்தில் சீவிப்போமாக (தீத்து. II-12).

1921ஆ அர்ச். சின்னப்பர் மனந்திரும்பின திருநாளன்று இந்நிருபம் விடுக்கப்பட்டது.

இந்த நிருபமானது நமது அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த எல்லாக் கோவில்களிலும், சிறிய கோவில்களிலும், மடங்களைச்சேர்ந்த கோவில்களிலும் தபசுகாலத்துக்கு முந்திவரும் ஐம்பதாம் நாள் ஞாயிறன்று வாசிக்கப்படக்கடவது.

சர்வேசுரன் உங்களனைவரையும் தமது பரிசுத்த பாதுகாவலில்வைத்துக் காப்பாற்றுவாராக.

கிறீஸ்துநாதரில் உங்கள் பக்திக்குரிய தந்தையாகிய,

ஏ. மேர்க்கேஸ், ✠ அருளப்ப ஆலன்,
செக்ரடேரி. சென்னை அதிமேற்றிராணியார்.

THE MARIAN CONGRESS.
மரியாயின் மகா சங்கம்.

ஐந்து வருஷகாலமாய் இந்தியா, பர்மா, இலங்கையாகிய இம்மூன்று தேசங்களில்மாத்திரமல்ல, கத்தோலிக்கு உலகமெங்கணுமுள்ள மரியாயின் மக்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மரியாயின் மகா சங்கமானது சென்னைமாநகரத்தில் சொல்லொண்ணா ஆரவாரச் சிறப்பலங்கார ஆடம்பர வைபவத்துடன் நிறைவேறியது. எற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி, 1921ஆ ஜனவரிமீ 4உ மாலை ஆரம்பமாகி, 6உ மாலை, 8 மணிக்கு பாணவேடிக்கையோடு முடிவடைந்தது. இம்மகா வைபவத்தின் அருமையும் பெருமையும், மாட்சியும் மகிமையும், சீரும் சிறப்பும் அலங்காரமும் ஆடம்பரமும் கண்ணாரக் கண்டவரேயன்றி காணாதவர் தெரிந்துகொள்ளுதல் துர்லபம். கண்டவர் காணாதார்க்குக் கண்டவற்றைக் கண்டவாறு பற்றும் பற்றாய்ப் பகர்வதும், வரைவதும் சாத்தியமல்ல. ஏனெனில், அவைகள் அவ்வளவு மேன்மையாயும், மகத்தானவையாயும், பல்வகை வர்ணனையுடையனவாயும் இருந்தன. ஆயினும், இவ்வரிய காட்சிகளைக் கண்டோர் வெகு சிலர், காணாதார் அநேகர். காணாத அநேகருக்கு, விசேஷமாய், நம் சந்தாதாரர்களில் காண ஆவல்கொண்டிருந்தும் பண அசௌகர்யம், தேக அசௌக்கியம், அலுவல் அவசரம் முதலிய காரணங்கள்பற்றி அக்காலை சென்னைக்கு வரக்கூடாதேபோன நண்பர்களுக்காக அவற்றை ஒருவாறு சுருக்கமாய் இங்கே விவரிக்க முயலுவோம்.

அந்த மகா சங்கத்தைச்சேர்ந்த ஆடம்பரச் சடங்குகள், பக்திக்குரிய ஆராதனைகள், மேன்மையான பிரசங்கங்கள், விமரிசையான கூட்டங்கள், கூட்டங்களில் நடைபெற்ற அரிய உபந்நியாசங்கள், ஒழுங்கான தர்க்கங்கள் வாத விவாதங்கள், பிரயோஜனமான தீர்மானங்கள் முதலிய உள்நடவடிக்கைகளையும், நாலு திக்குகளிலுமிருந்து அபாரக் கூட்டங்கூட்டமாய்வந்து குவிந்த கத்தோலிக்குச் சகோதர ஜனத்திரளின் காட்சி, பற்பல தேசங்களினின்றுவந்து குழுமியிருந்த அதிமேற்றிராணிமார்கள், மேற்றிராணிமார்கள், குருக்கள், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள் முதலியோரின் மாட்சி, அதிதிகளுக்காக ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த விசேஷமும் பொதுவுமான பங்களாவீடு வசதிகள், பந்தர்கள், கொட்டகைகளின் நேர்த்தி, விசேஷமாய் மகா சங்கத்தின் முக்கிய நடவடிக்கைகள் யாவும் நடத்

துவதற்காக மன்ரோ மைதானத்தில் பன்னீராயிரவர் அடங்கும்படி அமைக்கப்பட்டிருந்த மகத்தான சொக்கட்டான் பந்தலின் சொகுசு, அந்த நான்கு பந்தல்களிலும் பலவித வர்னக்கொடிகளாலும், புஷ்ப ஆரங்களாலும், விளக்குகளினாலும், தோரணங்களினாலுஞ் செய்யப்பட்டிருந்த அலங்காரம், அதன் நடுமத்தியிலிருந்த சிங்கார மேடையின்மீது நிர்மாணிக்கப்பட்டிருந்த திவ்ய பலிபீடத்தின் மாட்சி, அக்கிராசனாதிபதியாகிய அர்ச். பாப்பு ஸ்தானாதிபதியவர்களும் மற்றும் அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், சிரேஷ்ட குருக்கள் முதலானோர்களும் உட்கார வரிசைக்கிரமமான ஆசனங்கள் அமைக்கப்பட்டிருந்த ரீதி, பந்தலுக்கு வெளியே வாலாஜா வாராவதிமட்டும் இடைக்கிடை நாட்டப்பட்டிருந்த அழகிய தோரணமாடங்கள், வில்மாடங்கள், பாதையின் இருமருங்கிலுமிருந்த துவஜங்கள், கொடிமாலைகள், தென்னஞ்சோலைகள், மகரத் தோரணங்கள் முதலியவற்றின் கம்பீரம், உள்ளூர் வெளியூர்களிலிருந்து ஜெபமாலை, சுரூபம், உத்தரியம், ஜெபப் புத்தகங்கள், ஞானவாசகங்கள் முதலிய கத்தோலிக்கு வேத சாமான்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பற்பல கடைகளின் பாங்கு முதலிய வெளியாடம்பரங்களையும், விசேஷமாய், மேற்றிராணிமார், குருக்கள், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள் உட்பட சுமார் 25,000 விசுவாசிகள் தங்கள் தங்கள் சபை விருது, கொடி, குருசுக்களுடனும், பற்பல வேத விஷயங்களை பிரத்தியட்சமாய் விளக்கிக்காட்டும் விமானங்களுடனும் பயபக்தியாய் ஜெபங்களைச் சொல்லிக்கொண்டும், ஞானப்பாடல்களைப் பாடிக்கொண்டும், ஒரு மைல் தோரணையாய் ஒன்றரை மணிவரையில் செய்த அரிய சுற்றுப்பிரகாரத்தின் ஆடம்பர ஆரவாரச் சிறப்பலங்காரத்தையுங் கண்டவர்கள் அனைவோருங் களிகூர்ந்து "அம்மம்ம! என்னே மகத்தான காட்சி! இதைக் காணக்கிடைத்ததே மாட்சி! இதைப்போல காட்சி நாம் இனி எங்கே காணப்போகிறோம்" எனக் களிக்கலானார்கள். இவ்வபூர்வ காட்சிகளைக்கண்ட இந்துக்கள், மகம்மதியர், புரொடஸ்டாண்டர் முதலானோர்கள் பிரம்மித்து, "இதென்ன காட்சி! இதென்ன வைபவம்! இதென்ன பெருங்கூட்டம், கிறீஸ்துவர்களுக்கு இதென்ன பெருநாள்? இதென்ன திருநாள்? இதுவரையில் நாமெங்குங் கண்டதில்லையே இப்பெருங் காட்சி" எனச் சிலரும், "அம்மம்ம! கிறீஸ்துவர்களின் ஒழுங்கே, ஒழுங்கு! அவர்கள் பக்தியே பக்தி! இத்தகைய மகாப் பெருங்கூட்டத்திலும் என்ன அமைதி, என்ன ஒழுங்கு, என்ன பக்தி, என்ன மேரை மரியாதை! நம் கோவில்களில் திருநாள் உற்சவ காலங்களில் என்ன கூச்சல், என்ன அலங்கோலம்" எனச் சிலரும், தெருக்களிலும் டிராம் வண்டிகளிலும், ரெயில்வண்டிகளிலுங்கூட "என்ன, ஐயா, கிறீஸ்துவர்களுக்கு இன்றைக்கு? என்றுங் காணாத இப்பெருங்கூட்டம். "மேரியன் காங்கிரஸ்" என்கிறார்களே "அதென்ன?" எனச் சிலருமாகச் சென்னையில் எங்கும் நமது மரியாயின் சங்கப் பேச்சாகவேயிருந்தது. இவ்வாறாக, இம்மகா சங்கம் இதர மதத்தினர் உள்ளத்தில் என்றுமில்லாத ஒரு நல்லெண்ணத்தையும், நல்லுணர்ச்சியையும் உண்டுபண்ணிவிட்டதென்பதில் சற்றேனும் சந்தேகமில்லை.

இத்தகைய வெளியாடம்பரங்களில், மிக முக்கியமானதும், இதுவரையில் இந்தியாவிலெங்கும் நடந்திராததும், இதர மதத்தினருக்குக் கத்தோலிக்கர்மட்டில் ஒரு நல்லெண்ணத்தைப் பிறப்பித்ததுமாகிய மகத்தான சுற்றுப்பிரகாரத்தைப்பற்றி ஒரு சிறிது விவரிப்பது அவசியமெனக் கருதுகிறோம்.

சுற்றுப்பிரகாரம்.

கோட்டையிலுள்ள அர்ச். மரியாயின் (புரொடஸ்டாண்டர்) கோவில் கோபுரக் கடிகாரத்தில் நாலரைமணி யடித்த க்ஷணமே எக்காளம் ஊதப்பட்டது. எக்காளத் தொனி கேட்டவுடன் சென்னை அதிமேற்றிராசனப் பங்குக் கிறீஸ்துவர்கள் ஆடவரும் அரிவையரும் தங்கள் விசாரணைக் குருவைத் தலைமையாகக்கொண்டு, குருசு, கொடி, கத்திரிசால்களுடன் சுற்றுப்பிரகாரம் ஆரம்பித்தார்கள். இந்தத் தொகுதியில் வந்தவர்கள்மாத்திரம் 15,000குமேல் இருக்கும். முதல் ஸ்திரிகளும் சிறுமிகளும் அவர்களுக்குப்பின் புருஷர்களும் சிறுவர்களுமாக ஒழுங்காய், அமைதியாய்ப் பக்தியுடன் செபமாலை ஜெபித்துக்கொண்டும், இடையிடையே "கிருபைதயாபத்துக்குமாதாவாகிய எங்கள் இராக்கினியே வாழ்க" என்னும் ஜெபத்தையும், அதற்குரிய பாட்டையும் பாடிக்கொண்டும் சென்றார்கள். அதன்பின்

மரியாயி, சம்மனசுக்களின் இராக்கினி

என்பதை பிரத்தியட்ச சுரூபமாய் விளக்கிக்காட்ட, பரிசுத்த கன்னிமரியாயி மோட்சத்தில் சம்மனசுக்களால் சூழப்பட்டு அவர்களுக்கு அரசியாய் சிம்மாசனத்தில் விளங்கு மேரையாய், கண்ணைப் பறித்துக்கொண்டுபோகும்படியான உடுபாவனைகளால் அலங்கரிக்கப்பட்ட சிறுமிகள் நிறுத்தப்பட்டிருந்த பெரிய விமானமொன்று கொண்டுவரப்பட்டது. நடுவில் நமது நாயகி சிம்மாசனத்தில் மகிமை சோபனமாய் வீற்றிருக்க, அவரைச் சுற்றிலும் சில சம்மனசுக்கள் தங்கள் இறக்கைகளை விரித்துக்கொண்டு கைகூப்பி முழந்தாளிட்டு வணங்குவதும், சில தூபங் காட்டுவதும், சில கின்னரம், தம்புரு, மல்லரி முதலிய வாச்சியக் கருவிகளைக்கொண்டு கானம் செய்வதுமாகக் காட்டப்பட்ட பாவனையைக் கண்டவர்கள் தங்கள் கண்களையே நம்பமுடியாமல், தாங்கள் பூமியிலிருக்கிறோமோ, அல்லது மோட்சத்திலிருக்கிறோமோவென்று எண்ணும்படியாயிருந்தது. பிறகு மயிலை மேற்றிராசனப் பங்குக் கிறீஸ்துவர்கள் மேற்சொன்னபிரகாரம் வரிசைக்கிரமமாய், பக்தியுடன் சென்றார்கள். இவர்களில் விசேஷமாய் நமது இந்திய ஸ்திரிகள் அந்த சுப மங்களகரமான தினத்துக்குத் தக்கபடி, உயர்ந்த சரிகை பட்டுப்பட்டாவணிகளையணிந்துகொண்டு, இத்தகைய பெருங்கூட்டத்தில் ஆங்காங்கு திரும்பிப்பாராமல், அத்தியந்த பக்தியுடன் தலைவணங்கி செபித்துக்கொண்டு போன விதம் குறிப்பிடத்தக்கது. இதற்குப் பின்னால், சுற்றுப்பிரகாரம் நடந்த தினம் ஜனவரி ௴ 6௳ மூன்றிராசாக்கள் திருநாளாகையால், அந்தக் குறிப்பிக்கும்படியாய்,

மூன்றிராசாக்கள்

பெத்லேம் வெல்லைமலைக் குகையில், திவ்ய திருக்குழந்தையையும், கன்னித்தாயையும், சூசைமாமுனிவரையுஞ் சந்தித்து வணங்கும் பாவனை காட்டும் விமானம் வந்தது. அதில் அர்ச். தேவமாதா, அர்ச். சூசையப்பர், திருக்குழந்தை நிஜஸ்வரூபமாய்க் காட்டப்பட்டிருந்தமாதிரியும், கீழ்த்தேயத்து மூவரசர்கள் தங்கள் தங்கள் தேயத்து உடுபாவனையுடன் பொன், தூபம், மீறையாகிய காணிக்கைகளுடன், தேவாதி தேவனாகிய திருக்குழந்தையை வணங்கி நின்ற மேரையும், இடையர்கள் தங்கள் கம்பளப்போர்வையுடனும், கையில் தங்கள் கொம்புடனும் கும்பிட்டு விழுந்த வகையும் மெத்த அற்புதமாயிருந்தது. அதன்பின், சென்னை அர்ச். அருளப்பர் கோவில், மயிலை மாதாசுமாதாக்கோவில், மயிலை காட்டுக்கோவில் பங்குக் கிறீஸ்துவர்கள் மேற்சொன்ன ஒழுங்குடன் சென்றார்கள். இவர்களுக்குப்பின், அன்றையத்தினம் காட்டப்பட்ட உயிருள்ள சுரூபக் காட்சிகளில் மிக நேர்த்தியானதாகிய

"பிரியதத்தத்தினாலே பூரண மரியாயி"

"வாழ்க" என்று ஆண்டவருடைய சம்மனசானவர் கன்னிமரியாயிக்கு மங்கள வார்த்தை சொன்ன அரிய பாவனை அடங்கிய விமானம் காணப்பட்டது. அதில் பரிசுத்த கன்னிகை முழந்தாளிட்டுத் தமது கன்னிமகிமை குன்றாத தூய்மைப்பொலிவுடன் தாழ்ச்சியாய்த் தமது திருக்கரங்களை மார்பில் சாற்றித் தலைவணங்கியிருந்த தன்மையும், அர்ச். கபிரியேல் சம்மனசானவர் தேவதாயை வணங்கி மங்களவார்த்தை சொன்ன பாவனையாய் நின்ற மேரையும், முற்காலத்தில் இச்சம்பவம் வாஸ்தவமாய் நேர்ந்தகாலையில் அருகிலிருந்து தரிசித்தாற்போலவேயிருந்தது. இவ் விமானம் சுற்றுப்பிரகாரத்துடன் மெல்லென நகர்ந்துபோனபோதிலும், இன்னுஞ் சற்றுநேரம் இக்காட்சி காணக்கிடைக்காதாவென்று ஜனங்கள் ஏக்கங்கொள்ளும்படி அவ்வளவு நேர்த்தியாயும், பக்திரசம் பொழிகிறதாயுமிருந்தது. இதற்குப்பிறகு அர்ச். பாப்பானவர் ஸ்தானாதிபதியவர்களும், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்கள் 22 பேர்களும் தங்கள் தங்கள் முடி செங்கோலாதிய சின்னங்களுடன் கீதங்களைப் பாடிக்கொண்டுபோன காட்சி எவருங் காணத்தக்க அரிய காட்சியாகும். சுற்றுப்பிரகாரத்தில் சேர்ந்திருந்த

அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்கள்

பின்வருமாறு: சென்னை அதிமேற்றிராணியார், கொழும்பு அதிமேற்றிராணியார், பம்பாய் அதிமேற்றிராணியார், வொராப்பள்ளி அதிமேற்றிராணியார், ஐதராபாக்கம் மேற்றிராணியார், விசாகப்பட்டணம் மேற்றிராணியார், மயிலாப்பூர் மேற்றிராணியார், கொச்சி மேற்றிராணியார், கொல்லம் மேற்றிராணியார், லாகூர் மேற்றிராணியார், சங்கனாச்சேரி மேற்றிராணியார், எர்ணாக்குளம் மேற்றிராணியார், அலகாபாத் மேற்றிராணியார், மங்களூர் மேற்றிராணியார், கண்டி

மேற்றிராணியார், கோட்டயம் மேற்றிராணியார், யாழ்ப்பாணம் மேற்றிராணியார், கிருஷ்ணகர் மேற்றிராணியார், மைசூர் மேற்றிராணியார், அஜ்மீர் மேற்றிராணியார், திரிகோணமலை மேற்றிராணியார், திருச்சினுப்பள்ளி மேற்றிராணியார். இவர்களன்றி, தாம் நேரே வரக்கூடாத மேற்றிராணிமார்கள் தங்களுக்குப் பதிலாக தங்கள் விக்கர் ஜெனரல்களாகிய சிரேஷ்ட சுவாமியார்களை அனுப்பிவைத்திருந்தார்கள். அவர்கள் பின்வருமாறு : சிம்லா அதிமேற்றிராணியார், புதுச்சேரி அதிமேற்றிராணியார், கோவை அதிமேற்றிராணியார், கும்பகோணம், கோயமுத்தூர், தாமன், ஆக்ரா, காபிரிஸ்தான், காலி, திருச்சூர் ஆகிய ஏழு ஊர்களின் மேற்றிராணிமார்கள். இவர்களுக்குப்பின்னர் அந்நிய போதகர் சபை, கர்மேல் சபை, சேசு சபை, பிராஞ்சீஸ்கு சபை, சலேஷியன் சபை, சீரியன் சபை முதலிய சபைகளைச்சேர்ந்த குருமார்களும், இன்னுமற்ற குருக்களும் சுமார் 300க்கு அதிகமாக வந்தனர். இவர்களுக்குப்பின், சென்னையிலுள்ள பற்பல பங்கு விசாரணைக் கிறீஸ்துவர்களும் அவர்களுடன் வெளியூர்களிலிருந்துவந்து இவ்வூரில் தங்கியிருப்பவர்களுஞ் சேர்ந்து, தொகுதி தொகுதியாக அவ்வாறுபேர் வரிசைவரிசையாய் சுற்றுப்பிராகாரத்தில் சேர்ந்துவந்த சுகிர்தத்தை எடுத்துரைக்க இங்கு இடம்போதாதாகையால், இத்தோடு நிறுத்தி, சுற்றுப்பிராகாரத்தின் இடைக்கிடையே பின்னும் வந்த விமானக் காட்சிகளைப்பற்றிமாத்திரம் சிறிது விவரிப்போம்.

மரியாயி, பரிசுத்த ஜெபமாலையின் இராக்கினி என்பதை நிதர்சனமாகக் காட்டிவந்த விமானத்தின் நடுவில், தேவமாதா தமது திருக்குழந்தையை ஏந்தியிருக்க, ஒரு பக்கத்தில் அர்ச். சாமிநாதரும், மற்றப்பக்கத்தில் அர்ச். சியென்னு கத்தரீனம்மாளும் அவ்விருவரிடத்திலிருந்து செபமாலையைப் பெற்றுக்கொள்ளும் யேரையாய்க் காட்டப்பட்டிருந்தது. ஜெபமாலை இராக்கினி பதினைந்து தேவ இரகசியங்களைக் குறிப்பிக்கும் பாவனையாய்ச் சிங்காரிக்கப்பட்டிருந்த சிறுமிகளால் சூழப்பட்டிருந்தனள். இம்மாதிரி நாமெல்லோரும் படத்தில்பார்த்திருக்கிறோமேயல்லாது மனுஷரே நிஜஸ்வரூபமாய் அவ்வாறு உடை உடுத்தி விமானத்தின்மீது பவனி வருவதை இத்தேசத்தில் எவரும் இதுவரையில் கண்டதில்லை. நாம் படத்தில் பார்க்கும் காட்சிக்கும், இங்கே விமானத்தில் காணப்பட்ட நிஜக்காட்சிக்கும், எள்ளளவும் வித்தியாசமில்லை.

மரியாயி, சகல அர்ச்சியசிஷ்டவர்களின் இராக்கினி.

சகல அர்ச்சியசிஷ்டவர்களின் இராக்கினியானவள் நடுநாயகமாய் மகிமைச்சிம்மாசனத்தில் வீற்றிருக்க, வேதசாட்சிகள், கன்னியர், ஸ்துதியர், அப்போஸ்தலர் முதலிய பற்பல அர்ச்சியசிஷ்டவர்கள் தங்கள் தங்கள் அந்தஸ்துக்குரிய உடுப்புகளை உடுத்துத் தங்கள் தங்கள் விருதுகளையேந்தினவர்களாய், எல்லோரும் ஏகோபித்துத் தங்கள் நாயகியை ஸ்துதித்து, நமஸ்கரித்துப் போற்றிப் புகழு மாதிரியாய் காட்டப்பட்ட விதமானது பெரிதும் வியக்கத்தக்கதாயிருந்தது.

மரியாயி, பரலோகத்தின் இராக்கினி.

நமது மோட்ச இராக்கினியானவள் அர்ச்சியசிஷ்டவர்கள் சம்மனசுக்கள் முதலிய மோக்ஷவாசிகளின் மத்தியில் மகிமைப்பிரதாபமாய் விளங்கின காட்சியானது, மோட்சமே இப்பூவுலகில் இறங்கிவந்ததுபோற் காணப்பட்டது.

மரியாயின் மோட்சாரோகணம்.

பரிசுத்த கன்னிமரியாயி சம்மனசுக்களால் சூழப்பட்டு வானமேகங்களினூடே ஓட்டோலகராய் மோட்சத்துக்கு எழுந்தருளின பாவனை மகா நேர்த்தியாயிருந்தது.

மரியாயி, சமாதானத்தின் இராக்கினி.

சமாதானத்தின் இராக்கினியாகிய கன்னிமரியாயி சமாதானச் சிம்மாசனத்தில் வீற்றிருக்க, அவள் இருமருங்கிலும் இரு சம்மனசுக்கள் "ஆண்டவள் பராக்" என்று சொல்லுந்தன்மையாய் ஜாக்கிரதையுடன் நிற்க, பற்பல நேச தேசத்தினர்களின் உடைகளைத் தரித்த சிறுமிகள் ஒருவருக்கொருவர் நேசபான்மையாய் ஒருமித்து, அந்நாயகியை நோக்கியிருக்கும் பாவனை மெத்த மனோகரமாயிருந்தது. இவர்களில் சடைபின்னிப் பூமுடித்து, தலைசாமான் முதலிய சகல ஆபரணங்களையுந் தரித்திருந்த இந்தியச் சிறுமிகளின் சுந்தரம் குறிப்பிடத்தக்கது.

லூர்து ஆண்டவளின் தரிசனக் காட்சி.

அமலோற்பவக் கன்னிமரியாயி லூர்து மலைக்கெபியில் முத். பெர்னதெத்தம்மாளுக்குத் தந்த தரிசனக் காட்சியானது, மிக வேலைத்தரமாயும், நிஜஸ்வரூபமாயும் காணப்பட்டது.

இவ்வாறு மேலே சொன்னபடி 25-ஆயிரஞ் ஜனங்கள் அடங்கியதும், ஒரு மயிலுக்கதிக விஸ்திரணமுள்ளதுமான இந்த அரிய பெரிய சுற்றுப்பிரகாரமானது, கடற்கரை ரோட்டிலுள்ள பழய பாண்டு மேடையருகிலிருந்து புறப்பட்டு, கோட்டையின் தெற்கு ரஸ்தாவழியாய் மன்ரோ மைதானத்திலுள்ள பெரிய கொட்டகைக்குள் சிறிது சிறிதாக வந்து சேரும்போது மேற்றிராணிமார்களும், குருக்களுமாக எல்லோரும் ஏகோபித்து "ஆவே மாரிஸ்தெல்லா", "மாக்னிபிக்காத்" "சகல அர்ச்சியசிஷ்டவர்களின் பிரார்த்தனை" முதலிய பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார்கள். பிறகு சுற்றுப்பிரகாரம் முழுதும் கொட்டகைக்குள் சேர்ந்தவுடன், மரியாயின் மகா சங்கத்தின் மூன்று கூட்டங்களிலும் இரண்டு நாட்களாக, மேற்றிராணிமார்களாலும், குருக்களாலும், மற்றப் பெரிய விர்ப்பன்னர்களாலும் ஆலோசிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, ஏகமனதாய் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பற்பல தீர்மானங்கள் மகா சபையினோருக்கு வாசிக்கப்பட்டன. அதன்பின், அர்ச். பாப்பானவரின் பிரதிநிதியாய் இம்மகா சங்கத்தின் சபாநாயகராயிருந்து காரியங்களை நடத்திவந்த மிக. வந்திக்கத்தக்க பேதுரு பிசானி ஆண்டவரவர்கள் தமது முடிவுரையாக அரியதோர் பிரசங்கஞ்செய்தார்கள். அதில் மரியாயின் மகா சங்கத்தின் தாற்பரியங்களை சுருக்கமாய் எடுத்துக் காட்டியபின், ஆதிகாலத்தில் யூதேயா தேசத்தில் அர்ச். எலிசபெத்தம்மாளை, தேவமாதா மினவிக்கொண்டபொழுது அந்தம்மாள் தேவதாயாரை நோக்கி, "சகல தலைமுறைகளும் உம்மை பாக்கியவதியென்னும்" என்று வசனித்த நாள்முதல் இதுவரையில் இந்த ஆசியா கண்டத்தில் வெறெங்கும் இப்போது இச்சென்னைமாநகரத்தில் நடந்தமாதிரி பரிசுத்த கன்னிமரியாயிக்கு பகிரங்கப் பொது சங்கை காட்டப்பட்டதில்லை என்றும், இந்த அரிய மகா சங்கத்தில் இஸ்பிரீத்துசாந்துவினால் ஏவப்பட்டுப் பெரியோர்களால் செய்யப்பட்ட பற்பல தீர்மானங்களை, விசேஷமாய், பதிதர், பிரிவினைக்காரர் அஞ்ஞானிகள் முதலியோர்களை சத்திய திருச்சபைக்குத் திருப்பும் விஷயத்தை நிறைவேற்றவேண்டிய சகல முயற்சிகளையும் செய்ய கத்தோலிக்கர் ஒவ்வொருவரும் தம்தம்மாலே இயன்றவரையில் செய்ய முயலவேண்டுமென்றுஞ் சொல்லி முடித்து,

அர்ச். பாப்பானவரின் ஆசீர்வாதம்

கொடுக்கிறேனென்று சொன்னவுடன் பிரஜைகளெல்லோரும் அத்தியந்த பக்தியாவலுடன் முழந்தாட்படியிட, தமது சிரசில் முடிதாங்கி, கரங்களில் செங்கோலேந்தி இஸ்பிரீத்துசாந்துவை யிரஞ்சியபின் பாப்பானவரின் ஆசீர்வாதமளித்தார். பிறகு எண்ணிறந்த மெழுகுவர்த்திகளின் பிரகாசத்தால் ஜொலிக்கின்ற பீடத்தில் தேவநற்கருணை யெழுந்தேற்றஞ்செய்து "தேதேயும்" என்கிற நன்றியறிந்த தோத்திரப் பாடல் பாடப்பட்டு, தேவநற்கருணை யாசீர்வாதம் அளிக்கப்பட்டதுடன் மரியாயின் மகா சங்கம் முற்றுப்பெற்றது. ஜனங்கள் எல்லோரும் கொட்டகையைவிட்டு வாணவேடிக்கை பார்க்க வெளியே வந்தார்கள். கல்கத்தாவிலிருந்து வரவழைக்கப்பட்ட நூதன பாண தினுசுகளில் சிலவற்றைக் கொளுத்தி இரண்டு புகைக்கூண்டுகளை விட்டபின் ஆகாசப்பாணங்களும், புதைபாணங்களுங் கொளுத்தப்பட்டன. ஜனங்கள் எல்லோரும் ஆகாசத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கையில் ஒரு

பயங்கரத்துக்குரிய விபத்து

நேரிட்டது. ஆகாசபாணங்களில் ஒன்று சங்கக் கொட்டகையின்மேல் விழவே அதில் தீப்பற்றிக்கொண்டது. பக்கத்திலிருந்தோர் தீப்பற்றிய பாகத்தில் தடிகம்பங்களைக்கொண்டு அடித்து அதை அணைக்க யத்தனித்தவிடத்தில் தீ பரவி பலமாய்ப் பிடித்துக்கொள்ள, கொஞ்சங்கொஞ்சமாய் அந்தப் பெரிய கொட்டகை முழுதும் அதிலிருந்த சாமான்களுடன் சுமார் 10, 15 நிமிஷத்துக்குள் தீவிரமாய் எரிந்து தரைமட்டமாகியது. இது ஒரு விஷயத்தில் விசனகரமான காரியமாயினும், இது சற்று முன்னே 25,000 கிறீஸ்துவர்கள் கொட்டகையினுள்ளே குழுமியிருந்தபொழுது சம்பவித்திருக்குமாயின் எக்கதியாயிருக்குமென்றெண்ணுங்கால் மனதுக்கு ஒருவித ஆறுதலுண்டாகின்றது. மரியாயின் தாசர்கள் இத்தனையாயிரவர் அவளது அதிக சங்கைக்காகவும் மகிமைக்காகவும் கூடியிருக்கையில் அவர்களுக்கு அத்தகைய ஆபத்து வர விடுவாளோ!

ஒருகாலும் வரவிடமாட்டாள். அதிமுக்கிய விலைமதிக்கப்படாத ஆத்துமமானது நீங்கியபின் அழிவிற்குரிய உடல் எக்கதியானாலென்ன? அவ்வாறே, மரியாயின் சங்கத்து நடவடிக்கைகள்யாவும், அதன் கோரிக்கைகள் முழுதும் நிறைவேறி முற்றுப்பெற்றபின் அவை நடைபெற்ற இடம் எப்படியாயினும் ஆகட்டுமே. அதைப்பற்றி மரியாயி சங்கத்து அதிகாரிகளுக்காவது, அதை நடத்தின ஏனையோருக்காவது என்ன கவ்வை? அக்கொட்டகையைக் கட்டிக்கொடுத்த கண்டிராக்டருக்கு நேர்ந்த நஷ்டத்துக்கோவென்றால், அது ரூ. 12,000 நஷ்டத்துக்கு உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கிறதாக அறிகிறோம். மேலும், தேவாதி தேவனுக்கு வணக்கஞ் செய்யப்பட்ட அக்கொட்டகை வேறு லௌகீக உபயோகத்துக்காகக் கேட்கப்பட்டதால், அவ்வித உபயோகத்துக்கு அது உதவப்படாதென்த் தடுக்கவே திருவுளச்செயலால் அது நாசமாயிற்றென்று சொல்வாருமுளர். அக்கூற்றெவ்வளவு பொருத்தமுடையதென நாம் சொல்லமுடியாது; திருவுளச்செயலின் கருத்தை யறிய வல்லவர் யார்? இது நிற்க மொத்தத்தில் இந்த மரியாயின் மகா சங்க வைபவம் முற்றும் திருப்திகரமாகவும் நன்மையாகவுமே முடிந்ததெனச் சொல்வதற்கு சந்தேகமில்லை.

இம்மரியாயின் சங்கத்தார் செய்த தீர்மானங்கள் பலவாகவும் நீண்டவையாகவும் இருத்தல்பொருட்டு, அவைகட்கு இச்சஞ்சிகையில் இடம்போதாதாகையால் அவை அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

தன் இரட்சண்ணியத்திற்கு உதவியான காரியங்களைவிட மற்றக் காரியங்களைக் கவனிக்கிறவன் பெரும் பைத்தியன்.

அநேகமான வார்த்தைகள் ஆத்துமத்தைத் திருப்திப்படுத்தவில்லை; ஆனால் நல்ல சீவியம் மனதைக் குளிரச்செய்கின்றது. மாசற்ற மனச்சாட்சி சர்வேசுரன்மட்டில் மிகுதியான நம்பிக்கை காண்பிக்கின்றது.

நீ எவ்வளவுக்கதிகமாயும் நன்றாயும் அறிந்திருக்கிறாயோ, அதற்குத் தகுந்தாப்போல நீ அதிக பரிசுத்தமாய்ச் சீவியாமற்போனால், அவ்வளவுக்கதிகக் கடினமாய்த் தீர்வையிடப்படுவாய்.

ஆனதால் எந்த வித்தையையும் அல்லது எந்த சாஸ்திரத்தையும்பற்றி நீ பெருமைகொள்ளாதே; ஆனால் அதற்கு விரோதமாய் உனக்குக் கொடுக்கப்பட்ட சாமார்த்தியத்தைப்பற்றி அச்சப்படு.

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

XXI
வெண்புறா.

"கன்மலையின் வெடிப்புகளிலும், சுவரில் கட்டப்பட்ட மாடத்திலுந் தங்குகிற என் வெண்புறாவே" (உந். சங். 11. 14).

சுத்தவாளரும் பக்தர்களும், மரியாய்க்கு உவமானமாக வெண்புறாவை உபயோகித்துள்ளனர். புறாவைப் பற்றியுள்ள சில வேதாகம வாக்கியங்களைச் சத்திய திருச்சபை தானும் மரியாய்க்கு ஒப்பிட்டுக்காட்டுகின்றது. புறாவைப்பற்றியுள்ள வேத வசனங்கள் ஒவ்வொன்றும் மரியாய்க்கிசைந்ததாம். அன்புடையான் தன் காதலியைக் குறிப்பிடுகையில் "என் புறாவோ, என் உத்தமியோ ஒரேயொருத்தி" என்றும், அவளது அழகை வர்ணிக்கையில் "காட்டுப்புறாவின் அழகுபோலிருக்கின்றன உன் கன்னங்கள்" என்றும், அவளைத் தன் தோட்டத்திற்குள் அழைக்கும்போது "நிகரில்லா என் பிரியமே, என் புறாவே! எழுந்திரு, தீவிரித்துவா" என்றும், அவளைச் சந்திக்கப்போகையில் "என் கபோதமே! மாசற்றவளே! கதவைத் திற" என்றும் பலவாறாகக் கூப்பிடுகின்றான். இவ்வசனங்கள் மரியாய்க்கு நன்கு பொருத்தமுள்ளனவாகும். உத்தம வெண்புறா மரியாய் ஒருவளே! பற்பல புண்யங்களால் சிறந்தோங்கும் மோக்ஷவாளருள் மரியாய் தனித்திலங்குகின்றாள். அவளுக்கு இணைகிடையா. ஏனெனில் அவள் ஒருவளே கன்னிகையுந் தாயுமாயிருக்கின்றனள்.

1. புறாவானது ஏகாந்தத்தை விரும்புகிறது. மற்றப் பட்சிகளோடு கூடாது தனித்து வசிப்பதே அதற்கு இயற்கை. உயர்ந்த கோபுரங்களிலும் தனித்த இடங்களிலுமே அடைகின்றது. ஆகவே உந்நத சங்கீதத்தில் "கன்மலையின் வெடிப்புகளிலும், சுவரில் கட்டப்பட்ட மாடத்திலுந் தங்குகிற என் வெண்புறாவே" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மரியாயும் ஏகாந்தத்தையே விரும்பினள். தமது மூன்றாம் வயதில் தேவாலயத்தில் ஏகாந்தம் புகுந்தாள். பின்னர், தன்னந்தனிமையாய் ஜீவித்தாள். ஏகாந்தத்தில் வசிக்கும் புறா மரியாய். தேவகுமாரன் மனுவுரு தரித்தபின் தேவ காரியங்களிலேயே சிந்தை கவிழ்ந்திருந்தாள். கடவுளுக்காகவே ஜீவித்தாள். "கன்மலையின் வெடிப்புகளிலும் சுவரில் கட்டப்பட்ட மாடத்திலும் மறைந்ததுபோல் வீட்டில் தங்கியிருந்தாள்" என ரெயில் மில்லர் சொல்லுகிறார்.

2. மலையின் வெடிப்புகளும் சுவரிலுள்ள மாடங்களும் நமது இரட்சகரின் ஐந்து காயங்களுக்கு அடையாளமென வேதபாரகர் பகர்கின்றனர். "மலையின் வெடிப்புகள் சேசுவின் திருக்கரங்களிலுங் கால்களிலுமுள்ள காயங்களுக்கும், சுவரின் மாடம் அவரது விலாவின் காயத்துக்கும் அடையாளம். ஓர் ஆத்துமாவானது திருச்சிலுவையைச் சிந்திக்கையில் புறாவைப் போல் மலையின் வெடிப்புகளில் ஜீவிக்கின்றதென்கலாம்" என அர்ச். கிரகோரியார் விளம்புகிறார். "ஆணிகளும் ஈட்டியும் என்னாத்துமா உள்செல்ல வழிகளைத் திறந்தன. மலையின் வெடிப்புகளிலுஞ் சுவரின் மாடத்திலும் புறா அடைகிறதுபோல் ஆணியாலும் ஈட்டியாலும் உண்டான காயங்களில் என்னாத்துமம் அடைக்கலம் புகுகின்றது" என ரூப்பர் மடாதிபதி செப்புகிறார். இதைக் குறித்து அர்ச். பெர்நார்தும் பின்வருமாறு வரைந்துள்ளார்: "மலையின் வெடிப்புகள் சேசுவின் காயங்களின் மெய்யான அடையாளம். ஏனெனில் சேசுவே பாறையாம். பாக்கியம்பெற்ற வெடிப்புகளே! நீங்களே சேசுநாதர் உயிர்த்ததை உறுதிப்படுத்தி அவரது தேவதன்மையை விளக்குகின்றீர்கள். இங்கேயே வெண்புறா அடைகின்றது. பருந்துகளுக்கு அகப்படாது புறா அடைக்கலம் புகுகின்றது இங்கேயே. நாம் அடைக்கலமடைய நமது இரட்சகரின் காயங்களைவிட மேலான இடங்கிடையாது. அங்கே எனக்குப் பயமில்லை. அருகிலிருப்பின் நான் தவறிமாட்டேன். ஏனெனில் அவை பாறையின்கண் இருக்கின்றன. அக்காயங்களிலே மிகுந்த மதுரம், அருட்பெருக்கு, புண்யக்களஞ்சியமுண்டு." அவ்வெடிப்புகளிலேயே மரியாய் சதா ஜீவித்துவந்தாள். அப்பாறையிலேயே தனது இல்லிடத்தை யமைத்தாள். அங்கேயே தன் காலத்தைக் கழித்தாள். கடைசியாய் மோக்ஷ ஜெருசலேம் போகும்வரையில் அங்கேயே தங்கியிருந்தாள்.

3. புறாவானது நேர்மை குணத்திற்கு மாதிரி. "புறாவைப்போல் நேர்மையாயிரு" என நமது இரட்சகர் தமதப்போஸ்தலர் ஒவ்வொருவருக்கும் போதித்தருளினார். அர்ச். பெர்நார்து சொல்வதுபோல் நேர்மையானது ஒரு காரியத்தின்மேல் மாற்றமின்றி உறுதியாயிருக்கும். மனதாயின், உடல் பொருளாவி, மனோ வாக்கு காயங்களைக் கடவுள் சித்தப்பிரகாரம் உபயோகிப்பதே நேர்மையின் சம்பூரணம். கபடு சூது வஞ்சகமாகிய துர்க்குணங்களுக்கு நேர்விரோதம் நேர்மை என்பது கொர்னேலியஸ் தெலாப்பிதே என்பவரின் கருத்து. கபடமாய்ச் செய்வது நேர்மைக்கு விரோதம். கடவுளுக்குப் பொருந்தாதது. "அறிவின் ஆதிமூலமாகிய இஸ்பிரீத்துசாந்துவானவர் அபத்தத்தைவிட்டகலுகிறார்" என்பது ஞானியார் வசனம். (ஞான. I. 5.) 'இரு மனதுடையோர்க்கு ஐயோ கேடாம்' என்று சர்வப்பிரசங்கியார் எச்சரிக்கின்றார். "கபடமெனுங் களங்கமின்றி வீசும் சூரியப்பிரகாசமே நேர்மை" என அர்ச். கிரகோரியார் செப்புகின்றார். நேர்மையுள்ள இருதயத்தைக் கடவுள் மெய்மையால் சுத்தப்படுத்தி தேவப்பிரகாசத்தில் துலங்கச்செய்கிறார். "ஏனெனில் சூதுக்காரன் ஆண்டவருக்கு அருவருப்பாயிருக்கிறான். எதார்த்தரோடுதான் அவருடைய சம்பாஷணை." (பழமொழி III. 32.) தமது திருவுளத்தைக் காட்டுகையில் கடவுள் நம்மோடு சம்பாஷிக்கின்றார். கபடில்லாது அவர் சித்தப்பிரகாரம் நடப்போர்க்கு அவருடைய அருளை ஏராளமாயளிப்பார். அவர்களையே நேசிக்கின்றார். "சூதுமார்க்கனையே ஆண்டவர் அருவருப்பார்." (சங்கீ. V. 6.) மரியாய் மெய்யாகவே நேர்மையாயிருந்தனள். ஏனெனில் கடவுளைமட்டுமே சேவித்தனள். அவரது திருவுளத்திற்கமைந்து நடப்பதே இவளது ஆவல். கடவுளே இவளது பொக்கிஷம். பொக்கிஷம் எங்கேயோ அங்கேயே இருதயம். அப்படியானால் அவளது இருதயம் கடவுளிடமிருந்ததே அவளது நேர்மைக்குத் தவறாத சான்று.

4. ஜலப்பிரளயம் நின்றுவிட்டதாவெனப் பார்க்க நோவே, ஒரு புறாவை வெளியே விட்

னன். அதுவோ சாயங்காலத்தில் பசிய இலைகளையுடைய ஒலிவமரத்தின் ஓர் கொம்பை மூக்கிற் கொத்திக்கொண்டு அவனண்டை வந்தது. இதை மேற்கொண்டு "எமக்கு ஒலிவமரக் கனியை, ஜலப்பிரளயத்தின் இரட்சகரைக் கொண்டுவந்த புறாவே வாழ்க" என அர்ச். ஜெர்மானுஸ் மரியாயைப் புகழ்கின்றார். தனது மரணத்தால் மானிடரை இரட்சித்தவர் சேசுவே. அவரே பிதாவின் கோபத்தைத் தணித்தவர். அவரை யீன்றவள் மரியாய். ஆகையால் அவளே உலகிற்குச் சமாதான சுபசேதி கொண்டுவந்தவளாம். மரியாயே சமாதானங் கொண்டுவந்த புறா. பாவியோ கடவுளின் துரோகி. அவன் அத்தாயின் அடைக்கலம்புகுந்தால், அத்தாயை இரந்து மன்றாடினால், கடவுளுக்கு அவன்மீதுள்ள கோபத்தைத் தணித்துச் சமாதானத்தையுண்டுபண்ணுவாள். "பரிசுத்தமுந் தயையும் பொருந்திய பரலோக புறாவே! உமது குமாரனிடம் எனக்காகப் பரிந்துபேசி, என்னை அவரிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பீராக." (அர்ச். பெர்நார்து.) (இன்னும் வரும்)

M. S. M.

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

9-ம் அதிகாரம்.

கடைசி கண்டம்—அகுஸ்தீன் இருதயத்தில் சந்தேகமே சர்வ வியாபகமாயிருக்கிறது—அர்ச். அமிர்தநாதரை அர்ச். மோனிக்கம்மாள் சகாயத்திற்கு அழைக்கிறாள்—தன் குமாரன் இரட்சண்யமடைய முன்னையிலும் இருமடங்காய் ஞான வைராக்கியத்துடன் பாடுபடுகிறாள்.

(க. அ. 384—386.)

(முன் தொடர்ச்சி.)

ஜனங்கள் கோபாவேசங் கொண்டு செய்யுங் கலகத்தை அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கண்டு அஞ்சி, அவர்களைச் சாந்தப்படுத்தும்படியாக மேற்றிராணியாரைக் கோரினார்கள். அதற்கவர் "ஜனங்களுடைய கோபத்தை யெழுப்புவது நானல்ல, அது எனக்குத் தகுதியுமன்று. ஆனால் அவர்கள் கோபாவேசங்கொண்டபிறகு, அவர்களைச் சாந்தப்படுத்த கடவுளால் தவிர வேறு யாராலும் முடியாது" என்றார். இதைக் கேட்டு அவர்கள் "நீ நிஷ்டூரன், சண்டாளன், ஜனங்கள் பேரில் உனக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு, வலென்சியான் மன்னன் தன் சிங்காசனத்தையிழந்துபோக வழிதேடுகிறாய்" என்று வைதார்கள். அமிர்தநாதர் புன்சிரிப்புடன் "நீங்கள் இப்படி சொல்லுகிறீர்களோ; சரி, சரி, மக்சிமியான் மன்னன் என்னைப்பற்றிச் சொல்வது அப்படியன்று. ஏனெனில் அவன் இத்தாலியா தேசத்தின்மேல் படையெடுத்துவர விரும்பிய போது, நானே அவன் வராமல் தடைசெய்தேனென்று முறையிடுகிறானென்றார்." உண்மையில், மக்சிமியான் மன்னன் வலென்சியான் மன்னனுடைய தேசத்தைப் பிடிக்க ஆல்ப்ஸ் பருவதத்தைக் கடந்துவந்தபோது, அமிர்தநாதர் தான் அவனுக்குச் சமாதானஞ்சொல்லி யனுப்பிவிட்டார்.

மீளவும், மேற்றிராணியார் சொல்வது "நான் நிஷ்டூரனாயிருந்தால் என்னை நீங்கள் சாகடிக்காமல் தாமதிப்பதென்ன? தைரியம் என்னும் ஒரு ஆயுதந்தவிர, வேறு ஆயுதங்கள் ஒன்றும் என்னிடங் கிடையாது. நான் உயிர்கொடுக்கத் தயாராயிருக்கிறேன். ஆனால் சேசுக்கிறீஸ்து நாதருடைய காணியாட்சிகளுக்கும், என் முன்னோருடைய காணியாட்சிகளுக்கும், திருச்சபைக்காக பரதேசத்தில் மரித்த அர்ச். தெனிஸ் உடைய காணியாட்சிகளுக்கும், பரிசுத்த வேதபாரகராகிய இயூஸ்டோர்ஜியுஸ் உடைய காணியாட்சிகளுக்கும், மிரொகலஸ் உடைய காணியாட்சிகளுக்கும், என் பிதாக்களாகிய மற்ற எல்லா பரிசுத்த மேற்றிராணிமார்களுடைய காணியாட்சிகளுக்கும், நான் இரண்டகம்பண்ணுதபடி கடவுள் என்னைத் தாபரிப்பாராக. செஸாருக்குரிய காரியங்களை செஸாருக்கும், கடவுளுக்குரிய காரியங்களைக் கடவுளுக்கும் செலுத்துகிறேனேயொழிய மற்றப்படியல்ல" என்றார்.

மேலும் இராயனுடைய கட்டளைக்குப் பணிந்து நடக்கத் தான் ஆயத்தமாயிருப்பதைக் காட்டும்படியாக, தான் வழக்கமாய் வசிக்கும் இடத்திலேயே யிருந்துகொண்டு, இரவிலும் பகலிலும் தன் அறைக்கதவைத் திறந்துவைத்துக்கொண்டு உத்தரவு எப்படி வருமோ அப்படி பரதேசத்திற்காவது சிறைக்கூடத்திற்காவது போவதென்று தயாராயிருந்தார்.

அப்படிப்பட்ட தைரியத்தை ஜஸ்தீனியா சக்கரவர்த்தினி கண்டு கலக்கங்கொண்டு அவருடைய கோவிலைப் பறித்துக்கொள்ளவேண்டுமென்று தான் முதலில் பிறப்பித்த கட்டளையை சீக்கிரத்தில் ரத்துசெய்தாள். இதினிடையில் அமிர்தநாதரை மேற்கொள்ள இன்னொரு யுக்தியெடுத்தாள். ஆரியன் மதத்தைச்சேர்ந்த ஒரு குரு, திடீரென்று மிலான் நகரத்து மேற்றிராணி என்னும் பட்டத்தை வகித்துக்கொண்டான். சக்கரவர்த்தினியானவள், தனக்கும் தன் கட்டளையை மறுத்த அமிர்தநாதருக்கும் நடுவனாக மேற்படியானை நியமித்து அவன் மேற்படி விஷயத்தில் நியாயந்தீர்க்கும்படியாக திட்டஞ்செய்து, அவனது நீதியாசனத்தின்முன் அமிர்தநாதரை வரும்படி கட்டளையிட்டாள். அமிர்தநாதரோவெனில் அப்படிப்பட்ட நீதியாசனத்தின்முன் வரேனென்று மறுத்தபடியால், "நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினதே சாக்கு" என்றபடி அமிர்தநாதர் சரியான மேற்றிராணி அதிகாரம் பெற்றவரல்லவென்றும், புரளிக்காரரென்றும் தீர்மானித்து அவரைப் பரதேசம் போகும்படி தீர்ப்பிட்டாள். மேலும் உடனே சிப்பாய்கள் அவரைப்பிடித்து இத்தாலியா தேசத்துக்குப் புறம்பே கொண்டுபோகும்படியாக உத்தரவளித்தாள். அந்தச் சந்தர்ப்பத்தில் முன்போலவே அர்ச்சிய சிஷ்டவர் மேற்றிராசனக்கோவிலில் அடைக்கலம் புகுந்தார். தன் மனச்சாட்சிக்குக் கிஞ்சித்தும் விரோதமாய் நடவாமல், சர்வ புண்ணிய லட்சணங்களால் விளங்கப்பெற்ற இந்த வயோதிப பரமாத்மா, தன் சொந்த கோவிலுக்குள் இருக்க, சமுத்திரத்தின் அலைகள் கற்பாறையின் பேரில் எவ்வளவுதான் மோதி யடித்தபோதிலும், அதைச் சற்றேனும் அசைக்கமுடியாதது போல், சக்கரவர்த்தினியானவள் தன் திரண்ட சைன்னியங்களைக்கொண்டு அக்கோவிலை எவ்வளவு சமார்த்தியத்துடன் தாக்கி எதிர்த்தபோதிலும் அவள் கையால் ஒன்றும் ஏலாமற்போனது எப்படிப்பட்ட காட்சியென்னலாம்.

கிறீஸ்துவர்கள் அனைவரும் இரவெல்லாம் ஆயுதபாணிகளாய் கோவிலுக்குள்ளேயேயிருந்து, தங்கள் மேற்றிராணியாண்டவரைச் சூழ்ந்துகொண்டு சிப்பாய்களை விரட்டிக்கொண்டிருந்தனர்.

இவ்விதமான முற்றுகை, கி. அ. 386-ம் வருஷத்தில் சுமார் பாஸ்குகாலத்தில் 8 அல்லது 9 நாட்கள்வரையில் நடந்தேறிவந்தது. கிழக்கு திருச்சபையில் தாவீதிராசாவின் சங்கீதத்தைப் பாடுகிற இராக வரிசையாய், மிலான் கோவிலிலும் பாடும்படியாக இக்காலத்தில்தான் மேற்றிராணியார் ஏற்பாடுசெய்தார். நாளாவட்டத்தில் அவ்விதமாகவே, மேற்கு திருச்சபை கோவில்களனைத்திலும் பாடும் வழக்கமாய்விட்டது.

இவ்விதமாய் கீதம்பாடுவதில் கொஞ்சம் மாற்றமுண்டாகும்படியாகவும், ஜனங்களுக்குள் உற்சாகம் பிறப்பிக்கும்படியாகவும், சமயத்திற்குத் தக்கபடி தானே இயற்றிய சில பாடல்களை அ[illegible]தத்தோடு சேர்த்தார். இப்பாடல்களைப் பாடப்பாட ஜனங்களுக்குள் அப்படிப்பட்ட வைராக்கியமும் சமயோன்மத்தமும் உண்டானபடியால் ஏதோ மந்திரப்பாட்டுகளால் அவர்களை மயக்கிவிட்டாரென்று அவரது சத்துராதிகள் தீர்மானித்தார்கள். அப்பாடல்களுள் பெரும்பான்மை இன்னும் இருக்கின்றன. அவைகளை நாம் வாசிக்கும்போது மறுநாள் பொழுதுவிடியுமட்டும் தான் உயிர்பிழைத்து இருப்பதுவே நிச்சயமின்றி, அன்று சாயங்காலத்திற்குள் பரதேசத்திற்கோ, அல்லது சிறைக்கூடத்திற்கோ, கொண்டுபோகப்படும்படியான நிலைமையிலிருந்த அந்த வயோதிப மேற்றிராணியாண்டவர், கோபாவேசங்கொண்ட பெருந் திரளான சத்துருக்கள், கத்தி கட்டாரிகளையும், குண்டு துப்பாக்கிகளையும் ஏந்திக்கொண்டு, கோவிலைச் சூழ்ந்திருப்பதைப் பார்த்துக்கொண்டும், அவ்வாயுதங்களின் ஓசைகளைக் கேட்டுக்கொண்டுமிருக்கும் சமயத்தில் இயற்றிய பாடல்கள் இவ்வளவு சிறப்பமைந்தவையாயிருப்பது எப்படியென்று நமக்கே அதிசயமுண்டாகிறது. இப்பாடல்களைவிட புஷ்கள மாதுரியமானவைகளும், நிஷ்களங்கமானவைகளும், மேலான எண்ணங்களைப் பிறப்பிக்கத்தக்கவைகளுமான பாடல்கள் வேறு கிடையா. உதாரணத்திற்கு இந்த அருணோதயப்பாட்டைப் பாருங்கள்.

தேவாரப்பண்.

நித்திய பிதாவின் திவ்ய சாயலே உதயகாலச்
சுத்த சூரியனால் பூமி துலங்கிட வியற்றுந் தேவே!

துத்தியச் சுடரே வற்றாச் சுகிர்த வூருணியே ஞான
சத்ய சூரியனே யென் றுந் தமியரைக் காத்தாள்.

மாறிலாவுமது சோபமா சவுந்தரிய மாட்சி போற்றி
மீறிய ஜொலிப்போடும்மை விரும் பெம்மாத்துமங்
[கள்மீது
வீறிலா தெழுந்துவாரும் விழைந்தும திவ்பிரீத்து
ஊறிலாக் கதிரெம் பஞ்சேந்திரியமேல் வீசுவீரே.

ஏங்களுள்ளாந்தரிய எண்ணங்க ளுமதுபக்கம்
தங்கிடத் திருப்புந் தியாசைகளெம் மிருதயத்தை
மங்கிடக் கறைசெய்யாமல் மகிழ்ந்து நல்லிருதயத்தை
இங்கித மனதை யெங்கட்கினி தளித்தாளுந் தேவே.

நிருமல வின்பிரீத்தை நீரருள்புரி யெங்கட்கே
உருமச் சூரியனைப்போலே உமதடியார்கள் நாங்கள்
பரிசுத்தர் அடக்கமுள்ளோராக யாமிருப்போ
[மெங்கள்
அரும் விசுவாசம் பட்டப்பகலைப்போ லிருப்பதாக.

மனமருட்சி யுண்டாக்கும் இன்னொரு வைக றைப்பாட்டின் துவக்கம் வருமாறு :

இருளெங்க ளாத்துமங்களினி விராதொழிக காலை
வரு நட்சத்திர மாகாய மறைந்துபோகின்றதல்லால்
இருள் கொஞ்சங் கொஞ்சமாக வகுகின்றதுவே திவ்ய
அருட்சுடரே யெம்மாத்மங்களி லெழுந்தருளுவீரே.

அடியில் வருவது மாலைப்பாட்டு. அக்காலத்தில் செய்யுள் எந்த ஸ்திதியிலிருந்ததென்றும், இந்தப் பரிசுத்த விருத்தரால் அது புதிய ஜனனத்தை யடைந்ததென்றும் நாம் யோசிக்கும் போது அமிர்தநாதர் எப்படிப்பட்ட மாதுரிய குண இலட்சணமுள்ளவராயிருந்திருப்பாரென்றும் அக்குண இலட்சணங்களினால் ஜனங்களின் இருதயத்தை எவ்விதமாகக் கொள்ளைகொண்டிருப்பாரென்றும் நாம் அறியக்கூடும்.

நித்திரைச் சுகத்தாலெங்கள் நிகழ்கைகால் திடங்
[கொண்டுற்சா
கத்துடன் எழுகிறோம்யாம் கனிகரப்பிதாவே நாங்கள்
துத்யமும் புகழ்பாடுங்கால் துணையெங்க ளருகில்
[நில்லும்
உத்தம நேசமெல்லா வுளங்களில் துடிக்கவென்றே.

உமதுபே ரவர்கள் நாவில் உலவுவதாக இன்று
எமது செய்கைக ளும்மாலேயே சித்தியடைவதாக
தம நாகினுக்காளாக்க சங்கியப் பாவத்துக்காம்
சமய மூலம் வேரோடு தகர்த்தெமை ரட்சிப்பீரே.

இனி யெங்கள் தூய்மையான இருதயத்துள் ளுமக்கே
புனிதராய்த் துலங்கும்வண்ணம் புகழ்புரிந்திருக்க
[வெங்கள்
கனி நிர்ப்பாக்கியத்தை யங்கலாய்ப்பையுந் தெரிவிக்
[கின்றோம்
தனிரகசியவெம் பாவஞ் சாற்றியே கவல்கின்றோமே.

அடியில்வரும் இப்பாட்டிலன்றி மற்றதெதிலும் அக்காலத்தில் அங்கு பரவியிருந்த தேச கலக்கத்தைப்பற்றி குறித்தில்லை.

எம்முடைக் கண்ணீர்ப்பார்த்து எங்கள் வேண்டு
[தலைக்கேட்டு
விம்முமெங்களை மன்னித்து விழைந்தெமை யாசீர்
[செய்வீர்
இம்மையில் உண்மையின்ப ஞான வைராக்யத்தோடு
செம்மையாய் நடக்கத் தேவே திருவுளமதருள்
[செய்வீரே.

(இதுவுமது)

இராகம்—சங்கராபரணம்—ஆதிதாளம்.

பல்லவி.

ஆதி பராபரப் பொருளே – யாண்டருளே
ஆதி பராபரப் பொருளே (ஆதி)

அநுபல்லவி.

சோதி ஞான பூரண – ஓதும் வேத காரண

சரணங்கள்.

சுயமஸ்தி பரதிவ்ய – மயமுற்ற கதி தியாக
தய சர்வஸ்தான பூர்ண – ஷயஜீவ ரூபாரூப (ஆதி)

2

நித்திய சுயம்ப நாதி – சத்யந்தவறு நீதி
மத்தியிலழிய திரி – தத்துவ மகத்வமான (ஆதி)

3

அறுகுண கரவொரு – மறுகனு காதபர
உறுகணொழித்துச் செல்வம் – பெறும்படிக் கருள்புரி
(ஆதி)

(தேம்பாவணிக் கீர்த்தனை.)

ஊரெங்கும் அமளிகுமளியாயிருக்கிற சமயத்தில், இப்படிப்பட்ட இன்னிசையான பாடல்களை இயற்றிப் பாடவேண்டுமானால், உண்மையாகவே அமிர்தநாதர் எப்படிப்பட்ட ஆண்மையும் சித்த ஸ்வாதீனமுள்ளவருமா யிருந்திருக்க வேண்டியது. அப்பாடல்களைக்கேட்டு கிறீஸ்துவர்கள் மெத்த மதவைராக்கியங்கொண்டு அல்லும் பகலும் ஓயாமல் அவைகளைத் திருப்பித் திருப்பிப் பாடி, தங்கள் மேற்றிராணியாரோடு தாங்களும் உயிர்விடுவோமென்பார்கள். இடைக்கிடை அமிர்தநாதர் பாட்டை நிறுத்தி பிரசங்க மேடையின்மேலேறி ஜனங்கள் தம்மட்டில்

கொண்டிருக்கும் பாசபட்சத்திற்காக ஒப்புவமையில்லாத வாக்குச்சாதுரியத்துடன் கர்த்தருக்குத் தமது நன்றியறிதலை யொப்புக்கொடுப்பார்.

இந்தக் காரியங்களெல்லாம் நடந்தது சுமார் க. அ. 385—386-ம் வருஷத்தில். அக்காலத்தில் அகுஸ்தீன் மிலான் பட்டணத்தில் வாத்தித்தொழில் புரிந்துகொண்டிருந்தார். அவர் அவிசுவாசியாயிருந்தபோதிலும் வாக்குச்சாதுரியம், செய்யுள், கண்ணியம், ஆத்துமத்தின் பெருமை, ஒவ்வொருவனும் தன் தன் மனசாட்சியின்படி நடக்க அவனவனுக்குண்டான மனச்சுதந்தரம் ஆகிய இவைகளின்மட்டில் அத்தியந்த மதிப்புகொண்டவரானபடியால் இக்காட்சி அவரது மனதில் எவ்வளவு ஆழமாய்ப் பதிந்திருக்கும்.

தன் அடைக்கலத்தில் வைக்கப்பட்டிருந்த கோவிலுக்கு இரண்டகஞ் செய்யாமல் தான் மரண ஆபத்திலிருந்தபோதிலும், தன்னிடம் ஒரு ஆயுதமு மில்லாதிருந்தபோதிலும் அதைரியங் கொள்ளாமல் தன் கடமையை அஞ்சாநெஞ்சுடன் நிறைவேற்றி தன் சபையாரால் மெச்சப்பட்டும், நன்றிபாராட்டப்பட்டும்வந்த இந்த வயோதிப மேற்றிராணியாரை அவர் எவ்வளவாய் நேசித்திருக்கமாட்டார்!

அவர் சொல்வது “என் தாயார் கிறீஸ்துவர்களுடன் சேர்ந்துகொண்டு, இராக்கண் விழித்து, அல்லும்பகலும் ஜெபம் செய்துகொண்டு, என்ன ஆகுமோ, எது ஆகுமோ வென்று, அங்கலாய்த்துக்கொண்டிருப்பாள். நானோவெனில், என் கர்த்தாவே, ஞானக்காரியங்களில் வெதுவெதுப்புள்ளவனாயிருந்தபோதிலும், தேசமுழுதும் இருக்கும் அமளிகுமளியைக் கண்டு மனக்கலக்கங்கொண்டேன்.” அமிர்தநாதர் சம்மனசுக்களுக்கடுத்த பரிசுத்தத்தனத்தினால் விளங்கிவந்தபடியால், அவரது முகம் கதிர்விட்டு ஜொலிக்கும். இதைப்பற்றி அகுஸ்தீன் மனமுவந்து சொல்வதேதெனில்: “அமிர்தநாதர் அவ்வளவு கண்ணியத்தோடு மதிக்கப்பட்டுவந்தபடியால், உலகத்தின் தீர்மானப்படி அவர் பாக்கியவான் என்றே நினைத்தேன். ஆனால் அவர் சமுசாரமில்லாமல் விரத்தராயிருப்பதுதான் எனக்கு மனவருத்தத்தை விளைவித்தது. என்ன பிரதிபலனை எதிர்பார்த்து அவர் அப்படி தன் சரீரத்தை அடக்கி விரத்தராயிருந்தாரென்றும், தனது உந்நத அந்தஸ்தைச் சூழ்ந்திருந்த கஷ்ட நிர்ப்பந்தங்களுடன் எவ்விதமாய் மல்லுகட்டிப் போராடிவந்தாரென்றும், தனது நிர்ப்பாக்கிய நிலைமையில் எத்தகையான மன ஆறுதலடைந்து வந்தனரென்றும், சீவியமுள்ள அப்பத்தைச் சாப்பிடுவதில் எப்படிப்பட்ட திவ்யமான சந்தோஷத்தை யநுபவித்துவந்தனரென்றும், அப்போது எனக்கு ஒன்றும் தெரியாது.”

அர்ச். மோனிக்கம்மாளோவெனில், தனது குமாரனுடைய இரட்சண்யத்திற்கு உபகரணமாயிருப்பாரென்று தான் நம்பிவந்த தனது ஞானத் தந்தை, பராக்கிரமசாலியாயும், அர்ச்சியசிஷ்டவராயும் விளங்குவதைக் காணவே, அவளது இருதயம் அபரிமித சந்தோஷத்தினால் துள்ளி துடித்தது. அவள் கோவிலையே தனது உறைவிடமாகக்கொண்டு, வண்டானது தாமரை புஷ்பத்திலிருக்கும் தேனை உறிஞ்சியெடுத்து களிப்படைவது போல், அமிர்தநாதரின் பிரசங்கத்தைக் கேட்டு ஆனந்தமடைந்து தேச நிலைமையைப் பற்றி, துக்கமும் சஞ்சலமுங்கொண்டு கடவுளுக்காக சீவித்துவந்தாள். எண்ணிக்கையில்லாத தீபங்களின் வெளிச்சத்தினால் ஜொலித்து இடையறாமல் எரிக்கப்பட்ட சாம்பிராணி தூபங்களினால் பரிமளிக்கப்பட்டு, வானோர்க்கடுத்த ஸ்தோத்திர கீதங்களினால் நிரப்பப்பட்ட அக்கோவிலில், மோனிக்கம்மாள் தியான பரவசத்தில் அமிழ்ந்தி, கர்த்தருக்கே தன்னை ஒப்புக்கொடுத்து, சாங்கோபாங்கத்தில் மேலும் மேலும் தேர்ச்சியடைந்துவந்தாள். விசுவாசம், தேவசிநேகம், உருக்கமான நேசம், சமாதானம், கடவுள்மட்டில் நம்பிக்கை ஆகிய இவ்விலட்சணங்கள் அவளது ஆத்துமத்தைத் தங்கள் மாதுரியத்தினால் நிரப்பவே, அவள் சாங்கோபாங்கத்தின் உச்சத்தையடைய சமயமாச்சுதென்பதாக யாவருக்கும் சுலபமாய்த் தெரியவந்தது.

(இன்னும் வரும்)

நீ அனேக காரியங்களை அறிந்திருக்கிறாயென்றும் அவைகளைப் போதுமானமட்டும் நன்றாய்க் கண்டுபிடிக்கிறாயென்றும் உனக்குத் தோன்றினால், நீ அறியாத அனேகானேக காரியங்களிருக்கின்றனவென்றும் தெரிந்துகொள்.

தன்னை மெய்யாகவே அறிவதும் நிந்திப்பதுமே உன்னதமானதும் மிக்க பிரயோசனமானதுமான பாடம்.

WHAT IS PENANCE?
தபசாவது யாது?

இம்மாதம் 9௨ தபசுகால ஆரம்பம். அன்று குருவானவர் ஒவ்வொருவர் நெற்றியிலும் மந்தரித்த நீற்றைச் சிலுவையடையாளமாக வரைந்து "ஓ! மனிதா! நீ தூசியாயிருக்கிறாய்; மறுபடியும் தூசியாய்ப்போவாயென்று நினைத்துக்கொள்" என்கிறார். இவ்வார்த்தைகள் நமக்கெதை நினைப்பூட்டுகின்றன? பாவத்தினால் நமக்குவந்த நித்திய கேட்டை ஞாபகப்படுத்தி அதைப் பரிகரிக்க தபசு அதிக ஆவசியகமென்று நம்மை உணரச் செய்கின்றது.

அனேக கிறீஸ்துவர்கள் தபசு யாதென்று சுத்தமாய் அறியார். அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் என்னவெனில், தபசுகாலத்தில் ஸ்நானஞ்செய்து சுத்தபத்தமாய் ஒரு சந்தி பிடிக்கும்படி கவுச்சுபட்ட பண்டபாத்திரங்களையகற்றி, ஆக்கி அரிக்கப் புதுப்பாண்டங்களை வாங்கவேண்டுமென்பதே; இன்னும் சிலர் கொள்ளும் அபிப்பிராயம் யாதெனில், "என்ன! இக்காலத்தில் தபசுகாலம் வருவதும், போவதும் தெரிகிறதில்லை; முன்போல 40 நாட்களிலும் சுத்தபோசனக் கடனில்லை" என்றும், இன்னும் சிலர் சொல்வது: தபசுகாலத்தில் பாஸ்குக் கடனைத் தீர்த்துப்போடாவிடில் குருக்கள் கோபித்துக் கொள்வார்கள், நல்லடக்கத்திற்கு ஆக்ஷேபனை செய்வார்களானதால் "இப்போது தபசுகாலம்; 5-ம் அல்லது 6-ம் கிழமையிலாவது பாஸ்குக் கடனைத் தீர்த்துப்போடவேண்டும்" என்று பேருக்குமாத்திரம் இக்கிருத்தியங்களைச் செய்து தபசுகாலத்தின் பலனை யடையாமற்போகிறார்கள். துவக்கப்போகிற தபசுகாலத்தில் சரியான விதமாய் தபசுசெய்ய அஃதென்னவென்று பின்வருமாறு அறிந்துகொள்வோமாக.

"சகோதரரே! சர்வேசுரனுடைய வரப்பிரசாதங்களை விருதாவாகப் பெற்றுக்கொள்ளாதேயுங்கள்: இது இரட்சண்யத்தின் காலம்." (2 கொரி. VI. 1) என்று அர்ச். சின்னப்பர் வசனிக்கிற வார்த்தைகளைப் பரிசுத்த திருச்சபை தபசுகாலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை நிருபத்தின்வழியாய் நமக்குத் தெரிவித்து, சர்வேசுரனுடைய வரப்பிரசாதங்களை அலக்ஷியஞ்செய்யாமலிருக்க வெகு அன்போடு எச்சரிக்கின்றது. ஏனெனில், தன் வயலில் விளைந்த தானியத்தைச் சமுசாரி அறுப்பு காலத்தில் அறுத்துத் தன் களஞ்சியத்தில் சேர்த்துக்கொள்ளாவிடில் அவனுக்கு நஷ்டமுண்டாவதுபோல், தபசுகாலத்தில் சர்வேசுரன் உதாரமாயளிக்கும் அருட்பிரசாதங்களை தபசைக்கொண்டு அறுத்து சேகரித்துக்கொள்ளாவிடில் ஆத்தும நஷ்டமடைவோமென்பது திண்ணம். வேத புஸ்தகத்தைத் திறந்துபார்த்தால், தபசுதான் இரட்சண்ணியத்திற்கு வழியென்று நிச்சயமாய் அறிந்துகொள்ளலாம். சர்வேசுரனும் அப்போதைக்கப்போது, ஓர் தருணத்தில் பட்சமாயும், இன்னோர் தருணத்தில் உருட்டியும், மிரட்டியும் தபசுசெய்ய ஜனங்களை எச்சரித்திருக்கிறாரென்றும் வேத புஸ்தகத்தில் பலவிடங்களில் காணலாம். (இசை. I. 16, 18; பழ. I. 24, 27; ஜெரெ. XXV. 5.) நமது கர்த்தரும் "பரலோக இராச்சியம் சமீபித்திருக்கின்றது. தபசு செய்யுங்கள். தபசு செய்யாவிடில் நீங்களனைவோரும் சேதமாய்ப் போவீர்களென்றும்" போதித்துவந்தார். தபசானது நமதிரட்சண்ணியத்திற்கு இம்மாத்திரந் தேவையானதைப்பற்றி தபசு செய்வது நமக்கு கடமை. ஆனால் தபசு யாதென்று நாம் அறியாவிட்டால் நாம் எப்படி தபசு செய்வது? தபசாவதென்ன? அல்லது தபசு எதில் அடங்கியிருக்கின்றது? அர்ச். சின்னப்பர் (உரோ. XIII. 11.) தெரிவிப்பதுபோல் "நித்திரையைவிட்டு எழுந்திருப்பது" அதாவது பாவ மயக்கத்தை அகற்றிவிடுவது, அல்லது பாவத்தினின்று விடுதலாக்கப்படுவதுதான் தபசு. இன்னும் விபரமாய்ச் சொல்லுங்கால் பாவத்தை யருவருத்துத் தள்ளி புதிதான சீவியமுள்ளவர்களாய் அப்புதிய சீவியத்தில் நிலைக்கொண்டு பரிசுத்தத்தனத்தில் நாளுக்குநாள் அதிகரிக்க வருந்துவதே தபசாகும். பரிசுத்தமாவதில்தான் தபசு அடங்கியிருக்கிறதெனில், அப்பரிசுத்தத்தனத்தை யடைய வழியாது? நம் சுபாவம் பாவத்தின்மட்டில் நாட்டமும், புண்ணியத்தின்மட்டில் வெறுப்புங் கொண்டிருப்பதால், தபக்கிரிகைகள் என்னப்படுகிற உபவாசம், ஜெபம், தானம் இவைகளைக்

கொண்டு நமது கிரிசைக்கெட்ட சுபாவத்தை ஜெயித்து நாம் பரிசுத்தராகவேண்டும்.

உபவாசமென்றால் ஒறுத்தல். ஒறுத்தலில் உள் ஒறுத்தல், வெளி ஒறுத்தலென இருவகையுண்டு. நமது ஆசாபாசங்களோடு எதிர்த்து போராடுவதும், நமது ஒழுங்கற்ற ஆசைப் பற்றுதல்களை விசேஷமாய் மிதமிஞ்சின பிரபஞ்ச கவலை, வீண்பெருமை, சிலாக்கியம், பேராசை, சுயபட்சம், பிறர்சிநேகமற்றதனம் ஆகிய இவைகளோடு போராடி ஜெயங்கொள்வது உள் ஒறுத்தலாகும். வெளி ஒறுத்தலாவது, இறைச்சி முதலான இப்பேர்க்கொத்த உருசிகரமான பதார்த்தங்களையும், போதையைக் கொடுக்கும் மதுபானங்களையும் விலக்கியும், அல்லது மட்டுப்படுத்தியும், பஞ்சேத்திரியங்களை யடக்கி, விசேஷமாய் கண், காது, வாய் இவைகளைக் கட்டிக் காப்பதிலும், உலக சுகானுபவங்களை விலக்குவதிலும் வெளி ஒறுத்தல் அடங்கியுள்ளது. ஆகையால் பிரிய சகோதரரே, நாம் பரிசுத்தராகவேண்டுமானால் நல்ல பாவசங்கீர்த்தனத்தினால் நமது பாவங்களையெல்லாம் போக்கி இனி பாவத்தைச் செய்யாதிருக்கவும் பொறுக்கப்பட்ட பாவங்களுக்கு பரிகாரமாக திருச்சபை நியமித்திருக்கிற உபவாச ஒறுத்தல்களை யனுசரிக்கவும்வேண்டியது.

தபசுக்கு ஜெபமும் அவசரம். ஜெபமின்றி தபமில்லை. மேலும் ஜெபமின்றி உபவாசமுமில்லை. ஏனெனில் ஜெபமும், உபவாசமும் ஒன்றோடொன்று சம்பந்தப்படுகின்றன. புண்ணியவான்களனைவோரும் ஜெபத்தைக்கொண்டே தங்கள் ஆசாபாசங்களை ஜெயித்தார்கள். ஆகையால் பிரிய சகோதரரே! தபசுகாலத்தில் அந்திசந்தி ஜெபங்களையும் திரிகால ஜெபத்தையுஞ் சிலுவைப்பாதை முதலான ஜெபங்களையும் அதிக பயபக்தியோடு செய்வதுடன் ஞாயிற்றுக்கிழமைகளிலும் கூடுமானால் நாடோறும் பூசைகண்டு பரிசுத்தராகப் பிரயாசைப்படுவோமாக.

தானதர்மம் பரிசுத்தமாவதற்கு வழியும் உபகரணமுமாகும். நம் பாவங்களைப் பரிகரிக்க நமது கர்த்தர் பரதேசியாய்ப் பிறந்து 33 வருஷகாலம் தாரித்திரராய் சீவித்து சகல துன்பதுரிதங்களையுமனுபவித்து சிலுவையில் உயிர்விட்டதனால் நம்மேல் அவருக்கிருந்த சிநேகம் விளங்குகிறதன்றோ? நாமும் பரதேசிகளை சிநேகித்து நம்மாலான தானதர்மம் செய்வோமானால் சர்வேசுரன் நமது பாவங்களைப் பொறுத்துக்கொள்ளமாட்டாரோ? அதிதூதரான இரபயேல் சம்மனசு தோபியாசுக்கு அறிவித்ததுபோல் தானதர்மமானது நித்திய மரணத்தினின்று மீட்டு நமது பாவங்களைப் போக்க வல்லதாகுமென்று உணர்வோமாக. (தோ. XII. 8, 9.)

ஆகையால் நமது ஆத்துமம் அடையவேண்டிய பரிசுத்தத்தனத்தில் தபசு அடங்கியிருக்கிறதென்றும் அதை அடைய மேற்சொன்ன மூன்று தபக்கிரிகைகள் அவசியமென்றும் அறிந்து துவக்கப்போகிற தபசுகாலத்தில் அவைகளை யனுசரித்துவருவீர்களானால் இந்தத் தபசுகாலமானது உங்களுக்கு இரட்சண்யகாலமாயிருக்குமென்று அறிவீர்களாக.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

ஓர் நல்லபிப்பிராயம்.

எனது சோதர நண்பர் கனம் K. Joseph என்பவரால் அத்தியந்த பிரயாசையோடு எழுதி "கத்தோலிக்கருக்கு நல்லொழுங்குகள்" எனத் தலையங்கமிட்டு, நல்லாயன் பத்திரிகாசிரியர் சங். இராஜரிஷி A. R. ஜான் குருஸ்வாமிகள் முகவுரை தாங்கி, நல்லாயன் அச்சியந்திரசாலையில் மேற்படி சுவாமிகளால் மரியாய் மகா சங்கம் (Marian Congress) ஞாபகார்த்தமாக பிரசுரித்துள்ள அரிய பெரிய பிரபந்தமொன்று அடிமைக்குக் கொடுக்கப்பட்டு அதனை யதிகக் கவனத்தோடும், ஊக்கத்தோடும் ஆதிமுதலந்தம் வரையில் வாசித்தறிந்ததில் ஓர் கத்தோலிக்கு குடும்பத்தில் ஜனனமாகும் குழந்தை அதின் குழந்தைப்பருவமுதல் கிழமாய்க் கல்லறைக் கெடுத்துக்கொண்டுபோகும்வரையில் அநுசரிக்கவேண்டிய சருவ ஒழுக்கப்பழக்கங்களும் கிரம அநுசாரணைகளும் அதிக தெள்ளிய தமிழில் ஆடவர் பெண்டிர் பாலர்முதல் விருத்தரும் வாசித்தறியக்கூடிய எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறதாக அறிந்து ஆனந்தங்கொண்டேன். ஒருவன் இப்பிரபஞ்சத்தின்கண் தெய்வபக்தி மேரைமரியாதை கீழ்ப்படிதல் முதலிய சற்குணங்களோடு உத்தமனாய் ஒழுக விருப்பமிருந்து இவ்வரிய நூலை யோர்முறை கவலையோடு வாசிப்பானேயா

கில் அவன் தேவ கட்டளை திருச்சபை கட்டளைகளைச் சிரமேற்கொண்டு நடந்தவனாய் தேவத்திரவியாநுமானங்களைக் குறையறப் பெற்றவனாய் மனந்திரும்பி யோக்கியனாகப் பெயர்வஹித்து உத்தம கிறீஸ்துவனாயொழுகி கௌரவமாய் ஜீவித்து நல்லவனெனப் பல்லோர் புகழும் பெருமைவாய்ந்து அவன் இவ்வுலகில் என்னத்துக்காகச் சிருஷ்டிக்கப்பட்டுவந்தானோ அன்னவிதமாயொழுகி கடைசியில் பேரின்ப நாடாகும் நித்திய மோட்ச பதவி யடையும் பாக்கியத்துக்காளாவானென்பது சத்தியம்; ஆகவே இஃது ஒவ்வொரு குடும்பத்திலும் விசேஷமாய் ஒவ்வொரு வாலிபரிடத்தும் வாசகசாலை பாடசாலை பஜனைக்கூடங்களிலும் ஓர் பிரதியேனுமில்லாதிருப்பது பெருங்குறைவேயாகும். எனதன்பர் இதனை யத்தியந்த பிரயாசையோடு பொதுநன்மையைக் கருதி எழுதியிருப்பதால் கத்தோலிக்கு ஜனசமூகம் அவருக்குக் கடமைப்பட்டிருத்தல் அவசியமே. இவர் இந்நூலன்னியில் வேறு பல நூற்களும் தம் பெயரைக் காட்டாமலே தமது கிறீஸ்துவ சகோதர சகோதரிகளின் நன்மைகளையும் முன்னேற்றத்தையும்பெரிதுங் கவனித்து எழுதி பிரசுரித்திருக்கிறார். இவருக்கு சருவஜன சம்ரக்ஷகனாகும் ஏக பரம்பொருள் தீர்க்காயுளையும் திடகாத்திரத்தையும் அளித்து இன்னும் பற்பல நூல்களெழுதும் நல்லறிவையுங் கிருபைசெய்வாராக.

பிளாக்பள்ளி, }
பெங்களூர். } C. S. G. பிள்ளை.

[பெரிய தாழைகடிதம் அடுத்தமாத சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். ப—ர்.]

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

கண்ணாடி சிம்னி உடையாத வழி.—சிம்னியை உப்பிட்ட தண்ணீரில் அமிழ்த்தி வைத்துக் கொதிக்கவைத்து ஆறினபின்னர் அதைத் துடைக்காமல் ஈரத்தோடு விளக்கில்மாட்டி விளக்கை யெரியவிட்டால் சிம்னி உடையாதாம். இது மலேயா நாட்டில் செய்யப்படுகிறதாம். ஈரச் சிம்னி தப்பாமல் உடையுமென்கிறார்களே. இதைப் பரீட்சை செய்து பார்க்கவேண்டும்.

நாலாம் நூற்றாண்டின் கோவில்.—ஒலிவேத்து மலையடிவாரத்தில் நமது ஆண்டவர் இரத்த வியர்வை வியர்த்த ஜெத்சேமனி என்னும் பூங்காவில் சமீபத்தில் யாதோ சிறு கட்டிடங்கட்ட அஸ்திவாரந் தோண்டியபோது, நாலாவது நூற்றாண்டில் கட்டப்பட்ட ஒரு கோவில் காணப்பட்டதாம். அதை தொன்மையாராய்ச்சி இலாக்கா அதிகாரிகள் அழிக்காமல் காப்பாற்றி வைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

பிராஞ்சும் பாப்பானவரும்.—திருச்சபையை விரோதித்திருந்த பிராஞ்சு தேசமானது ஐரோப்பா யுத்தத்திற்குப் பிறகு அர்ச். பாப்பானவரோடு உறவாட விருப்பங் கொண்டிருந்தது. சமீபத்தில் பிராஞ்சில் கூடிய மந்திராலோசனை சபையில் பெரும்பான்மையோரால் கோரியபடி திருச்சபையோடு மறுபடியும் உறவு ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதென்று அறிந்து சந்தோஷமானோம்.

புதிய இராஜப்பிரதிநிதி.—சென்ற சில மாதங்களாய் இந்திய இராஜப்பிரதிநிதியின் ஸ்தானத்துக்கு பற்பல பேர்கள் நியமிக்கப்படப்போவதாய் வதந்திகள் உலாவிவந்தன. கடைசியாய் எவரும் எதிர்பாராத யூத ஜாதியைச்சேர்ந்த பிரபு ஒருவர் நியமிக்கப்பட்டுவிட்டார் எனத் தெரியவருகிறது. இவர் இயற்கைப்பெயர் ரூப ஸ்தானியல் ஐசக்ஸ், பட்டப் பெயர் லார்டு ரீடிங்காகும். இவர் ஒரு பெரிய நியாயவாதி. இக்காரணம்பற்றி இவர் இந்த தேசத்துக் காரியா காரியங்களை நியாயமான விதமாய் நடத்துவாரென எதிர்பார்க்கலாம். இவர் கொண்ட கருத்தைச் சாதிக்கவல்லவரென்றும், பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அதிக செல்வாக்குள்ளவரென்றும் சொல்லப்படுகிறது.

ஸ்ரீமான் அருமைநாதப் பிள்ளை அவர்கள்.—பழய சட்ட நிரூபண சபையில் சென்ற இரண்டு வருஷகாலமாய் நல்ல வேலை செய்த இவர், கத்தோலிக்கருக்கும், புரொடஸ்டாண்டருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி மறுபடியும் புது சட்ட சபைக்கு அபேட்சகராய் நிற்க முடியாமற்போய்விட்டது. ஆயினும், அவர் ஏற்கெனவே செய்துள்ள நல்ல வேலையை உத்தேசித்து, கவர்ண்மெண்டாரே அவரை சட்ட சபையின் அங்கத்தினராய் நியமித்திருக்கிறார்கள் என்று கேட்டு சந்தோஷிக்கிறோம்.

ஓர் கன்னியாஸ்திரியின் மரணம்.—சென்னை, வேப்பேரி, அர்ச். பெலவெந்திரார் ஆலயத்துக் கன்னியாஸ்திரி மடத்தைச்

சேர்ந்த மரிய மதலேனாள் என்னுஞ் சகோதரி, ஜெனரல் ஆஸ்பத்திரியில் இரண்டோர் நாள் வியாதியுற்றிருந்து, சென்றமீ 18உ இப்பூவுலகத்தைத் துறந்து பரகதியடைந்தனள். இச்சகோதரி, எண்ணூர் எனுங் கத்திப்பாக்கத்தில் ஷெ மடத்தாரால் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட சிறுவர் சிறுமியர் பள்ளிக்கூடத்தில் உபாத்திமைத்தொழில் புரிந்துவந்ததாக தெரிகிறது. இச்சகோதரியின் ஆத்துமம் சர்வேசுரனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது!

அர்ச். பாப்பானவரும் மரியாயின் சங்கமும்.—மரியாயின் சங்கம் கூடியபொழுது, அதிற் கூடியிருந்த அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், குருக்கள், விசுவாசிகள் முதலிய எல்லோர்பேராலும் அர்ச். பாப்பானவரை வாழ்த்தி அவர்மட்டில் எல்லோருக்குமுள்ள உருக்கமான பக்தியையும் விசுவாசத்தையும் தெரிவித்துக்கொடுத்த தந்திக்குப்பதில் அவரிடமிருந்துவந்த தந்தி பின்வருமாறு:—

"சென்னை மரியாயின் சங்கம் நமதுமட்டிலுள்ள பட்சமும் பக்தியுமுள்ள கீழ்ப்படிதலைத் தெரிவித்துக்கொடுத்த தந்தி சமாசாரத்தைப்பார்த்து மெத்த சந்தோஷமானோம். இந்தியா, பர்மா, இலங்கையாகிய தேசங்களிலுள்ள ஜனங்களையெல்லாம் அர்ச். மரியாயி தம் தாயடைவான பாதுகாவலில் வைத்துக் காப்பாற்றவேண்டுமென்று அவளை மன்றாடுவதுடன், குருப்பிரசாதிகள் விசுவாசிகள் முதலியோருக்கு எமது அன்பார்ந்த அப்போஸ்தோலிக்குஆசீர்வாதத்தை அளிக்கிறோம்" என்பதே.

இம்பீரியல் சட்ட சபை.—இந்தியா அல்லது இம்பீரியல் சட்ட சபைக்கு,இந்திய கிறீஸ்துவர்களின் பிரதிநிதியாக, புரொடஸ்டாண்டு சகோதரர்களில் ஒருவராகிய ஸ்ரீமான் டி. கோட்டிலிங்கம் அவர்கள் எம். எ., கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நமது சத்திய வேதத்தை பாதிக்கக்கூடிய சட்டதிட்டங்கள் ஏற்படுத்தக்கூடிய இந்திய சட்ட சபையில் நமது கத்தோலிக்குப் பிரதிநிதிகள் இருப்பது நமக்கு மெத்த அவசரம். இவ்விஷயத்தைப்பற்றி, கத்தோலிக்கு இந்தியா சங்கமாவது, மற்றெந்தப் பொதுஸ்தாபனமாவது தக்க முயற்சியெடுக்காமற்போனது விசனத்துக்குரிய காரிமாகும். என்றாலும் இந்த சந்தர்ப்பத்தில், கத்தோலிக்கருக்குப் பாதகமான யாதோர் சட்டம் ஷெ சபையினோர் ஆலோசனைக்குக் கொண்டுவரப்படுகையில், நமக்கு வேண்டிய விஷயங்களை விவரமாய் நமது ஷெ கோட்டிலிங்கம் அவர்களுக்கு எடுத்துச்சொன்னால் அவர்கள் நமக்குச் சாதகமாய்ப் பேசுவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. இவர் ஆழ்ந்த கல்வியும், பெருந்தன்மையும், விசால நோக்கமுமுடையவர். நமது அவசரங்களில் இவரை நம்பிப்போகலாம்.

ஒத்துழையாமை அல்லது பகிஷ்காரம் என்னும் தீயானது இந்தியாவெங்கும் தீவிரமாகப் பரவிவருகிறது. கௌரதாபட்டங்களை மறுக்கிறதும், சட்டசபைகளை வெறுக்கிறதும், வக்கீல் வேலைகளையும் கௌரவ மாஜிஸ்டிரேட் வேலைகளையும் விடுகிறதுமாயிருந்த கிளர்ச்சி இப்போது பள்ளிக்கூடத்து மாணாக்கர்களையும், பரீட்சைக்குப் போகிறவர்களையும்பற்றிக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் கல்கத்தாவில் பி. எல். பரீட்சைக்குப் போகவிருந்த 620 பேர்களில் 150 பேரே போனார்களென்றும்,அந்தப் பரீட்சை நடக்கவிருந்த ஹாலின் வாசற்படியண்டை உள்ளே பிரவேசிக்கக்கூடாதபடி அநேக மாணாக்கர்கள் வழியில் தரையில் படுத்துக்கொண்டார்களென்றுந் தெரிகிறது. ஒத்துழையாமைக்குக் குருவாகிய, மிஸ்டர் காந்தி கல்கத்தா மாணவர்களுக்குப் பெரிய கூட்டமொன்று வைத்து, அவர்கள் கலாசாலையை விட்டுவிட வேண்டுமென்றும், கிராமந்தோறும் சென்று கிராமவாசிகளுக்குப் போதித்து அவர்கள் வரி கொடுக்காமலும் கிஸ்தி செலுத்தாமலுமிருந்து ஒத்துழையாமையை சாதிக்கவேண்டுமென்று அவர்களை வற்புறுத்தும் வேலை மாணவர்களுடையதாயிருக்க வேண்டுமென்றும், அவர்களால்தான் சுயராஜ்ஜியம் கிடைக்கவேண்டுமென்றும், அவர்கள் விடாமுயற்சியாய் உழைத்தால் ஒரு வருஷத்துக்குள் சுயராஜ்ஜியம் கிடைப்பது நிச்சயமென்றும் சொல்லி அவர்களை உற்சாகப்படுத்தினார். என்னே பைத்தியமிது? எரியின்மேல் கோபித்துக்கொண்டு கால் கழுவாமற்போனவனது பைத்தியத்துக்கு ஒப்பாகும் இந்த ஒத்துழையாமை.

மெட்ராஸ் பாங்க் "பாங்க் ஆப் மெட்ராஸ்" என்று சென்னையிலும், சென்னை

இராஜதானியில் பற்பல ஊர்களிலும் உண்டில் முதலிய பாங்கிங் வேலை நடத்திவந்த பெரிய பாங்கியானது, சென்றமீ 27உ தொடங்கி கல்கத்தா, பம்பாய் நகரங்களிலுள்ள இரண்டு இராஜதானிப் பாங்கிகளுடன் சேர்க்கப்பட்டுப்போனதால், அந்தத் தேதி முதற்கொண்டு அதன் பேர் "இம்பீரியல் பாங்க் ஆப் இண்டியா" என மாற்றப்பட்டுவிட்டது. "பாங்க் ஆப் மெட்ராஸ்" அல்லது "மெட்ராஸ் பாங்க்" என்னும் பேரை இனி உபயோகிக்கக்கூடாதென்பதை நேயர்கள் கவனிப்பார்களாக.

பண்ணூர், பாஷீயம் சாந்தைய நாயுடு பாடசாலை.—இந்த கத்தோலிக்கு எலிமென்டரி பாடசாலையின் பிரதம வருஷோத்சவ அறிக்கையின் நகலொன்று வரப்பெற்றோம். இது 1911ஆம் ஆரம்பிக்கப்பட்டு சென்ற 10 வருஷங்களாக ஷெ ஸ்ரீமான் பாஷியம் சாந்தைய நாயுடு அவர்களின் சொந்த பொருளுதவியினால்செவ்வனே நடைபெற்று வருகிறதென்று ஷெ அறிக்கையினால் வெளியாகிறது. எல்லாத் தருமங்களிலும் சிறந்த தருமமாகிய கல்வி தருமத்தை பண்ணூர்சிறுவர்களுக்குச் செய்துவரும் ஷெ நாயுடுவின் பரோபகாரச் செய்கை பெரிதும் பாராட்டப்படத்தக்கது. இதில் தற்காலம் 80 மாணாக்கர்கள் கல்விபயின்றுவருகிறார்கள்; தமிழிலும் தெலுங்கிலுமேயன்றி இங்கிலீஷிலும் தனி வகுப்புகள் வைத்து நல்ல வேலை செய்துவருகிறதாகத் தெரிகிறது. இந்தப் பள்ளிக்கூடத்தில் படித்த 15 மாணாக்கர்கள், திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையில் 3-வது பாரத்தில் சேர்ந்து வாசிக்கிறார்கள். இப்பாடசாலை இன்னும் அதிகமாய் விருத்தியடைய வேண்டுமென்பது எமது கோரிக்கை.

பெங்களூர், கத்தோலிக்கு கோவாப்பரேடிவ் சோஸைட்டி.—இந்த கத்தோலிக்கு ஐக்கிய நாணயச் சங்கத்து 1918, 19வது வருஷாந்த அறிக்கைப் பத்திரத்தின் நகலொன்று வரப்பெற்றோம். அதன் காரிய நிருவாகச் சபையாருடைய விசேஷமாய் காரியதரிசியாகிய Mr. கே. ஜோசப் அவர்களுடைய விடாமுயற்சியாலும், பிரயாசையாலும் நல்ல வேலை செய்திருக்கிறது. வருஷத் தொடக்கத்திலிருந்த 443மெம்பர்கள் 1,798 ஷேர்களும் வருஷக் கடைசியில் 508 மெம்பர்கள் 2,520 ஷேர்களாகப் பெருக்கமடைந்தன. பிரஸ்தாப வருஷத்தில் மெம்பர்களுக்கு ரூ. 2,734 சுலபமான வட்டிக்குக் கடன் கொடுக்கப்பட்டது. இதில், பழய கடன்களைத் தீர்க்க ரூ. 10,608ம் கலியாணங்கள் நடத்த 5,912ம் வீடுவாங்க அல்லது மராமத்துசெய்ய 2,600ம் குடும்ப அவசரங்களுக்காக 1,124ம் வாங்கப்பட்டதாகத் தெரிகிறது. எல்லா செலவும் போக வந்த லாபம் 2,055. இதில் க்ஷேமநிதி, தருமகாரியமுதலானவைகளுக்கு எடுத்துக்கொண்டதுபோக, மிகுதியில் மெம்பர்களுக்கு நூற்றுக்கு ரூ. 7½யாக டிவிடெண்ட் கொடுக்கப்பட்டது. இச்சங்கம் மேன்மேலும் தழைத்தோங்கி கத்தோலிக்குச் சகோதரர்களுக்கு அதிக நன்மை செய்யவேண்டுமெனக் கோருகிறோம்.

மதராஸ்.—மதராஸ் அல்லது மெட்ராஸ் என்னும் பெயர் இச்சென்னப்பட்டணத்துக்கு எப்படி வந்தது என்பதற்கு பலவித காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவைகளில் ஒன்று சென்ற மரியாயின் சங்க சம்பந்தமாய் கொழும்பு குருக்களில் ஒருவரான சங். வெர்ஸ்டிரேடன் என்னும் சேசு சபை சுவாமிகள், சென்னை கோக்கலே ஹாலில், கத்தோலிக்கரல்லாதாருக்கு மரியாயின் சங்கத்தின் நோக்கங்களைப்பற்றிச் சொன்ன பிரசங்கத்தில் குறிப்பிடுகிறார். அதாவது: சென்னைமாநகரம் முதன்முதலில் 1639-வது வருஷத்தில், கத்தோலிக்கரான போர்த்துகேயரால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும், அப்போது அதற்குத் தங்கள் பாஷையில் தேவமாதா என்றர்த்தங்கொள்ளும் "மாதரே தி தியூஸ்" என்னும் பேரை இந்நகருக்குக் கொடுத்து, அதை மரியாயின் பாதுகாவலுக்கு ஒப்புக்கொடுத்தார்களென்றும், அது நாளாவட்டத்தில் மற்றையோரால், "மெட்ராஸ்" என வழங்கலாயிற்று என்றுஞ் சொன்னார். இன்னொரு விருத்தாந்தம்:—மேற்கண்டபடி போர்த்துகேயர் இவ்விடத்துக்குவந்து தங்கியிருந்தார்கள் என்றும், அப்போது இவ்வூர் ஜனங்களிற் சிலரை சத்திய வேதத்தில் திருப்பினார்களென்றும், அவர்களுக்குப்பின், ஆங்கிலேய வர்த்தகர் இவ்விடத்துக்கு வந்தபோது இங்கிருந்த ஒருவனை இவ்வூர் பேரென்னவென்று ஆங்கிலத்தில் கேட்க, அவன் தன் பேரைத்தான் கேட்கிறார்களென யூகித்து, தன் பேராகிய "மரியதாஸ்" என்று சொல்ல, அப்பேரே இப்பட்டணத்துக்கு ஆங்கிலேயரால், "ஹாமில்டன் வாராவதி" அம்பட்டன் வாராவதியானதுபோல, "மரியதாஸ்" என்பது "மெட்ராஸ்" என வழங்கலாயிற்றென்றுஞ் சொல்லப்படுகிறது. எப்படியாயினும் சென்னப்பட்டணத்துக்கு மரியாயின் திருநாமம் சம்பந்தப்படுதலால் அந்த ஆண்டவளின் வேண்டுதலால் இந்தப் பட்டணமுழுவதும் கத்தோலிக்குப் பட்டணமாகவேண்டுமென்று கோருவோமாக!

சங். அந்தோனி சகோதரர்.—பல்லாரி அர்ச். பிராஞ்சிஸ்கு சபை சந்நியாசிகளின் சிரேஷ்டராயிருந்துவந்த இவர் இரண்டுவாரங்களாய் அசௌக்கியமுற்றிருந்து சென்ற மாதம் 14-ந் தேதி தமது 64-ம் பிராயத்தில் அம்பரன் திருவடியடைந்தாரெனக் கேள்வியுற்று பெரிதும் விசனிக்கிறோம். இவர் பிளேஸ் தோட்டத்திலிருந்து கலைந்துபோன சந்நியாசி மடத்திற் சேர்ந்திருந்து, பிறகு குண்டூர் ஜில்லாவிலுள்ள பிரங்கிபுரம் என்னும் ஊரில் காலஞ்சென்ற சங். டிக்மன் சுவாமிகளின் அநுமதியின்பேரில் ஒரு பிராஞ்சிஸ்கு சபை மடத்தை ஸ்தாபித்த சிலகாலம் பொறுத்து, அதைப் பல்லாரிக்குக் கொண்டுவந்து, அங்கே சென்ற 19 வருஷமளவாய் அதை வெகு திறமையுடன் நடத்திவந்ததுமல்லாமல், தெலுங்குப் பிள்ளைகளின் கல்வி விஷயத்தில் அதிக ஊக்கமும் உற்சாகமுங்கொண்டு, அவர்களுடைய சௌகரியத்துக்காக தம் சுயப்பிரயாசையினால் பெரிய போர்டிங் விடுதியொன்று கட்டுவித்து, மேற்படி பிள்ளைகளின் தேர்ச்சிக்காக மிக்கப் பிரயாசைப்பட்டுவந்தார். இந்த் போர்டிங்கிலிருந்த பிள்ளைகளில் 5 அல்லது 6 பேருக்கதிகமானோர் இப்போது குருக்களாகி கர்த்தரின் திராட்சைத்தோட்டத்திலுழைத்துவருகிறார்கள். வேறு சிலர் பல குருமடங்களில் குருப்பட்டத்துக்காகப் படித்துவருகிறார்கள்; அநேகர் கவர்ண்மெண்டு, ரயில்வே முதலிய இலாகாவில் பாரிய, மத்திம உத்தியோகங்களும் வகித்துவருகிறார்கள். இவர் இந்த சென்னை அதிமேற்றிராசனத்தில் இன்னும் பலவிதமாயும் உழைத்துள்ளார். இஞ்சினியர் அல்லது ஓவர்சியர் பரீட்சையில் தேர்ச்சியடைந்த பட்டதார் அல்லவென்றாலும், இவர் தம் சுயபுத்தியாலும், சமர்த்தாலும், அநுபோகத்தாலும் பல கட்டிடங்களும் கோவில்களும் கட்டியுள்ளார். இவருடைய பார்வையில் பிரங்கிபுரம், குண்டூர், ராயவரம், பிட்ரகுண்டா, அரக்கோணம் முதலிய இடங்களில் மிக்க நேர்த்தியான கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோவில்கள் இவருக்கிருந்த சிற்பசாஸ்திரத்தின் சிறந்த ஞானத்துக்குச் சாட்சி பகர்கின்றன. சங். அந்தோனி சகோதரர் மிக்க ஊக்கமும், உற்சாகமும், உழைப்பும், பொறுமையும் காரிய நிர்வாகமும்பொருந்தியவர். இவரை இழக்க நேர்ந்து பரிதபிக்கும் இம்மடத்துச் சகோதரர்களோடு நாமும் அநுதாபப்பட்டு, எமது சந்தாதாரர்கள் எல்லோரும் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக 1-பர., பிரி., திரி. வேண்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஒரு வேடிக்கைக் கதை.—பரலோக ராஜ்ஜியத்துக்கு அதிபதியாகிய நமது ஆண்டவர் ஒரு நாள் அதைச்சுற்றி உலாவிவரும் பொழுது, அங்கே தமக்குத் தெரியாமல் அளவற்றபேர்கள் வந்து குவிந்திருப்பதைக் கண்டு, மோட்சத் திறவுகோலைக்கொண்டு, மோட்சத்துக்கு "கேட் பியூன்" வாயிற்காப்போனாயுள்ள அர்ச். இராயப்பரை நோக்கி, "இதென்ன கொள்ளை? எங்கேயோ கிடந்த கூளங்களெல்லாம் இங்கேவந்து நிரம்பிக்கிடக்கிறதே, இவர்களை உள்ளே சேர்த்ததார்?" என்று வினவ, அவர் மாறுத்தரம் ஒன்றுஞ் சொல்லாமல் ஆண்டவரை அழைத்துக் கொண்டுபோய் ஒரு மூலையைக் காண்பித்தார். அங்கு அவர் (தம்முடைய) தாயாராகிய அர்ச். கன்னிமரியாயி, தொட்டியைக் கீழே பூலோகத்தில்விட்டு, அங்கிருந்து தொட்டி தொட்டியாக ஜனங்களைச் சேந்தி சேந்தி மேலே விட்டுக்கொண்டிருப்பதைக்கண்டு, புன்சிரிப்புகொண்டு ஒன்றுஞ் சொல்லாமல் போய்விட்டாராம். இதைக்கண்ட இராயப்பரோவெனில் "பேருக்குமாத்திரம்நான்மோட்சத் திறவுகோலை வைத்திருக்க, இந்தம்மாள் தமக்கிஷ்டமானவர்களையெல்லாம் தூக்கித் தூக்கி விட்டுக்கொண்டிருக்கிறதானால், சாவி என்னிடம் எதுக்கு?" என்று சாவியை வீசியெறிந்துவிட்டு, கோபித்துக்கொண்டுபோய் விட்டாராம். பிறகு, அங்குள்ள மோட்சவாசிகளிற் சிலர் இராயப்பரைக் கூப்பிட்டு, சமாதானஞ்சொல்லி, "அர்ச். கன்னிமரியாயி மோட்சராக்கினியாயிற்றே, அவளுக்கில்லாத சுதந்தரம் நமக்கென்ன? அப்பேர்ப்

பட்ட சாட்சாத் சர்வேசுரனே தம் தாயார் செய்வதைப் பார்த்து ஒன்றும் பேசாமல், புன்னகை புரிந்துக்கொண்டே போய்விட்டாரே, நாமெல்லாம் எந்த மூலே. சும்மா கௌரவத்துக்காகிலும் சாவியை வைத்திரும். அந்தப் பெருமைகூட எங்களுக்கில்லேயே. நீர் அந்தமட்டும் கொடுத்துவைத்தவர்காணும்" என்று சொல்லி சமரசப்படுத்தினார்களாம். இந்தக் கதை இத்தாலியர்களுக்குள் வழங்கியருவதாகச் சொல்லப்படுகிறது.

கத்தோலிக்கு டைரக்டரி.—இந்தியா முழுவதிலும் உள்ள பற்பல மேற்றிராசனங்களேப்பற்றியும், அவைகளில் நடைபெறும் கத்தோலிக்கு விஷயங்களேப்பற்றியும், விசேஷமாய் பள்ளிக்கூடங்கள், மடங்கள், கோவில்கள், அவைகளே நடத்தும் குருக்களேப்பற்றியும் விவரமாய் விஷயங்களே விளக்கிக்காட்டும் ஆங்கிலப்புத்தகம் 1921ஸுத்துக்காக அச்சிடப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. விலே ரூ. 1-8-0 வேண்டியவர்கள் சென்னே, பிராட்வே, கத்தோலிக்கு சப்ளே சொஸைடிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்றிராணிமார்கள் கூட்டம்.—மரியாயின் சங்கத்துக்கு வந்திருந்த மேற்றிராணிமார்களில் ஏறக்குறைய எல்லோரும் அச்சங்கம் முடிந்தபின், மறுநாள் மயிலாப்பூர் மேற்றிராணியாரின் மாளிகையில், கூட்டங்கூடி பற்பல விஷயங்களேப்பற்றி ஆலோசனே செய்திருக்கிறார்களெனத் தெரிகிறது. வெள்ளிக்கிழமை காலேதொடங்கி, திங்கட்கிழமை மாலேவரையில் ஆக நான்கு நாள் கூடிப்பேசியிருக்கிறார்கள். ஆயினும் அவர்கள் பேசி தீர்மானித்தவைகள் இன்னும் வெளியாகவில்லே.

ராவ் பஹதூர் அருளானந்தம் பிள்ளேயவர்கள் கத்தோலிக்கு கல்விமான்களில் ஒருவரும் கவர்ண்மென்டு உதவித்தொழிற் கமிஷனருமாகிய ஸ்ரீமான் டி. அருளானந்தம் பிள்ளே பி. ஏ. பி. எல். அவர்கள் ஒடுக்கப்பட்ட ஜாதியார்கள் விஷயமாயும் மற்ற வகையிலும் செய்துள்ள நல்ல வேலேயை கவர்ண்மென்டார் மதித்து அதற்கு சன்மானமாக, அவர்களுக்கு, "ராவ் பஹதூர்" என்னும், கௌரவதாபட்ட மளித்ததைக் குறித்து நாம் சந்தோஷித்து அவர்களுக்கு சுபசோபன வாழ்த்துக் கூறுகிறோம். அவர்கள் இன்னும் மேலான பட்டங்கள் பெறுவதற்கு அருகாரவாரெனக் கோருகிறோம்.

மரியாயின் சங்கக் கொட்டகை தீ பற்றியெரிந்த மறுதினம், ரிக்ஷா வண்டியிழுக்கும் ஒரு மகமதியன், அந்த பந்தர் எரிந்த விடத்திலிருந்த கொம்பு, குச்சி, சாம்பல் முதலிய குப்பைகளேக் கிளறிப் பார்த்துக்கொண்டிருந்தபொழுது, அதனருகே ஒரு 'ஆகாசபாணம் இருக்கக்கண்டு, அதை எடுத்து அதன் சுபாவத்தை அறியாதவனுய் வேடிக்கையார்த்தமாய் அதைக் கொளுத்த, உடனே அது வெடித்து அவன் தேகத்தை சின்னுபின்னமாய்க் காயப்படுத்திவிட்டது. அதன்பயனுக அவன் அரை மணிநேரத்திற்கெல்லாம் அநியாயமாய் உயிர்துறந்தான். வேடிக்கை வினேயாய் முடிந்தது. அதன் முன்னுள் நடந்த அப்பெருவிபத்தில் ஒருவருக்கும் ஒரு சிறு காயமுதலாய் நேராமலிருக்க, அடுத்த நாள் இம்மகம்மதியன் இறக்க நேர்ந்தது ஆச்சரியமாயிருக்கிறது.

வேலே நிறுத்தம்.—எங்குபார்த்தாலும் வேலே நிறுத்தங்களாயிருக்கின்றன. கல்கத்தாவில் கனமோசம். வண்டி யோட்டுகிறவர்கள் 500 பேர் வேலே நிறுத்தஞ் செய்திருக்கிறார்களாம். அப்பெரிய நகரம் சந்தடியில்லாமல், காலியாக்கப்பட்ட நகரம்போல் காணப்படுகிறதாம். சென்னேயிலோ பக்கிம்ஹாம் மில் தொழிலாளர்கள் 3 மாதம் வேலே நிறுத்தஞ் செய்திருந்து இப்போதுதான் வேலேக்குப் போனுர்கள். டிராம்வே வேலேக்காரர்கள் சென்ற 20 நாளாய் நின்றிருக்கிறார்கள். ஊரைச் சுத்தஞ்செய்யும் தோட்டிகளும் ஒரு வாரமாய் நின்றிருந்தார்கள். அவரவர்களும் தங்கள் குறைகளின் நிவர்த்திக்காக வேலே நிறுத்தஞ் செய்கிறார்களானுலும், அதனுல் பொது ஜனங்களுக்கு மெத்த அசௌகர்யங்கள் நேருவதைப்பற்றியெங்கும் பெரிய முறைப்பாடாயிருக்கிறது. எங்கும் சுய நிர்ணயமாயிருக்கிறது. ஒருவர் மற்றவரை நேசித்து ஒத்துவாழ்வது காணேம். எஜமானரும் ஊழியரும் ஒருவர் குறையை யொருவர் கவனித்து பரஸ்பர நேசம் பாராட்டினுலல்லாது, காரியம் ஈடேருது.

இந்தியர்களுக்கு ஞாபகச் சின்னம்.—மகா யுத்த சமயத்தில் உயிரிழந்த இந்திய வீரர்களுக்கு ஞாபகச் சின்னம் ஒன்று கட்டுவதற்காக பிரைட்டன் நகர பரிபாலன சங்கத்தார் 43 ஏக்கரா பூமியைவாங்கி யிருக்கிறார்கள். இந்த ஞாபகச் சின்னத்தை வேல்ஸ் இளவரசர் சமீபத்தில் திறந்துவைப்பார்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக் கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினுலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

ப—ர்.

நன்மரண அறிக்கை.

சிலோன்.

எமது அருமையுடைய கிறீஸ்தவர் யாவருக்கும் தெரியப்படுத்துவதாவது:—இரத்னம், மோஸெ, ஜோண், இஸக்கியேல், சிசெலிமேரி, ரேஸ்மேரி, மேரி, கிறீஸ்ட்டியன், வில்லியன் என்ற பேருடையவர்களின் தாயும் எனது மாமியும் ஆகிய சதானந்தம் அம்மாள் ஸிலோன் நூரெலியா வழுக்குபாறை தோட்டத்தில் 1921ஸு ஜனவரிமீ 8-ம் தேதி ஆகிய சனிக்கிழமை காலேயில் 6 மணிக்கு தம் எளிய மக்கள் மருமக்கள் உற்றூர் உறவினரையும் மனம்தலங்கவிட்டு தமது 38-ம் வயவில் கர்த்தருக்குள் பாக்கியமான நித்திரையடைந்தனள். இதைக் கேள்வியுறும் ஸகோதரர் ஸகோதரிகள் இவ் ஆத்தும இளேப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டும்படிக்கு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம், மாமியாரை இழந்த மருமகன்
N. F. MARIAN.

அருவங்காடு.

எங்களின் நேசத்தந்தையரான ம-ா-ா-ஸ்ரீ, தம்பாஎன்று அழைக்கும் பிரான்சீஸ் என்பவர் திடீரென்று இரண்டொருநாள் வியாதியாயிருந்து டாக்டர்களால் குணப்படாமல் ஏகமகனேயும் மனேவியையும், பந்துக்களேயும் பரிதவிக்கவிட்டு சென்ற 1920ஸு நவம்பர்மீ 24உ புதன்கிழமை இரவு 2-மணிக்கு பரலோக பிராப்தியடைந்தனர். மறுநாள் வியாழக்கிழமையன்று சொந்தபந்துக்களாலும் ஆப்தர்களாலும் மிகுந்த வியாகுலத்துடன் வெலிவட்டன் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டனர். அவர் ஆத்துமத்தின்பேரில் 'உமது தயையின் விசாலத்திற்குச் சரியானபடி இரக்கமாயிரும் சுவாமி, இரக்கமாயிரும்.' இதை கண்ணுறும் நண்பர்களே அவர் ஆத்தும இளேப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள கோரும் நிர்பாக்கியன்

நேசதந்தையை இழந்து துயருறும்
JOSEPH SON OF THAMBA FRANCIS.
R. I. P.



பொன் கில்ட் ஸ்பிரிங்கு ப்ரேஸ்லெட் கெடியாரம்.

இது பார்வைக்கு வெகு அழகுடையது. முழுமையும் பொன் கில்ட் போட்டது. நேர்த்தியான வேலேத்தாமுள்ளது. சிறிய கைக்கும் பெரிய கைக்கும் உபயோகிக்க ஸ்பிரிங்கு வில் இசைத்திருக்கிறது. சரியான காலம் காட்டக்கூடிய நல்ல கெடியாரம். உயர்ந்த சாமான்களால் செய்யப்பட்டது. புருஷர்களும் ஸ்ரீகளும் கையில் தரிக்க வெகு சுந்திரமுள்ளது. விலே சகாயம். பொன்கில்ட் ஸ்பிரிங் ப்ரேஸ்லெட் கெடியாரம். 1-க்கு ரூபா 8—8—0.

ஷை கெடியாரம் செக்கனுண்டும் பேன்சி மெடல் டயலு முள்ளது. ரூபா 9—8—0.

ரோல்ட்கோல்ட் ரிஸ்லெட் ரேடியம் கெடியாரம்.



இதைப் பார்ப்பவர்கள் அசல் பொன் கெடியாரமென்றே சொல்லுவார்கள். இதன்மீதுள்ள தங்கபூச்சு 5 வருஷம்வரை தேயாமல் இருக்கும். இரவில் மணி நன்றுய்த் தெரியும். சரியான காலம் காட்டக்கூடியது. உத்த சாமான்களால் தயார் செய்யப்பட்டது. இதைப் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். உயர்ந்த தோல்பட்டையுடன் ரோல்ட்கோல்ட் ரிஸ்லெட் ரேடியம் கெடியாரம் 1-க்கு ரூபா 13.

நம்மிடம் அநேகவித கெடியாரங்கள் கிடைக்கும். பெரிய கேட்லாக்கு வேண்டியவர்களுக்கு இனமாய் அனுப்பப்படும்.

சி. ஏ. செங்கல்வராய நாயுடு,
நெ. 25, பெருமாள் கோவில் தோட்டம், 1-வது தெரு, மதறஸ்.

அர்ச். அந்தோனியாருக்கு ஓர் அலங்காரமான புது ஆலயம்.

அர்ச். பாப்புவின் ஸ்தானாபதியே இவ்வா
லயத்திற்கு 1921ஞ ஜனவரி 5ல
அஸ்திவாரமிட்டார்.



அதை மெற்றாணியார்களும் குருக்களும்
கிறீஸ்துவர்களும் அச்சடித்துக்
ஜெபம் செய்திருக்கிறார்கள்.

பிரிய சகோதரரே! கடந்த மாதம் சென்னையில் நிறைவேறின மரியாயின் மகா சங்கக் காலத்தில் அர்ச். பாப்பானவரின் ஸ்தானாதிபதி ஆண்டவரால் இவ்வளவு ஆரவாரத்துடன் அஸ்திவாரக்கல் போடப்பட்டு அர்ச். அந்தோனியார்பேரால் சென்னை புதுப்பேட்டையில் கட்டப்பட்டு வரும் இப்புதுக்கோவிலைத் துரிதத்தில் கட்டிமுடிப்பது நமது கடமையல்லவா? இவ்வாலயம் கத்தோலிக்கு திருச்சபைக்கு ஓர் ஆபரணமாகவும் அர்ச். அந்தோனியாருக்குத் தக்க ஞாபகார்த்த நிலையமாய் இருப்பதுடன் மரியாயின் மகா சங்கத்தை எக்காலத்திற்கும் நினைப்பூட்டும் ஓர் ஞாபகச் சின்னமாயிருக்குமென்பதையும் மறவாதீர்கள். இக்கோவிலைக் கட்டி முடிக்க எமக்கு ஏறக்குறைய ரூ. 60,000 தேவை. ஆகையால் அர்ச். கன்னிமரியாயின்பேராலும் அர்ச். அந்தோனியாருக்குத் தோத்திரமாகவும் உங்கள் உதவிப்பொருளைத் தயைசெய்து எமக்கு அனுப்பும்படி கோருகிறோம். அர்ச். அந்தோனியார் உங்களுக்கு ஒன்றுக்கு நூறாக பலனளிப்பார். உங்களுடைய உதவி எவ்வளவு சொற்பமேயாயினும் வெகு நன்றியறிதலுடன் பெற்றுக்கொள்ளப்படும். அனுதினமும் திவ்யபூசையில் எமது உபகாரிகளுக்காக ஜெபம் ஒப்புக்கொடுக்கப்பட்டுவருகின்றது.

	Rs.	A.		Rs.	A.
Cliant of St. Antony, *(Madras)* ...	1,000	0	D. Francis	5	0
Mr. S. R. de Fonseka *(Colombo)* ...	100	0	D. Arokiasamy	2	0
,, M. D. D'Souza, *(Madras)* ...	10	0	Charity	4	0
,, C. Lovejoy	2	0	Samuel Pillay *(Secundrabad)* ...	5	0
A Cliant	3	0	T. P. Gabriel *(Ceylon)*	3	0
Gnanapusanal	10	0	A Cliant of St. Antony	1	0
J. M. Sylvester	1	0	A Cliant *(Dindigal)*	50	0
J. Moses, *Basra*	20	0	P. F. Vas *(Nasik)*	5	0
Charity	25	0	D. Antonidoss *(Calcutta)* ...	2	0
Mr. Dequi *(Mylapore)*	5	0	Major F. D. de Cruze	25	0
Mrs. Goollamier *(Rayapet)*	10	0	Savariya Pitchai *(Ceylon)* ...	10	0
Mr. J. Leumas *(Narasingapuram)* ...	10	0	Mr. J. Rawcliff *(Khanpur)* ...	100	0
D. W. J. Fernandez	10	0	Parishioners	987	0
Mr. A. D'Cruze	1	0			
,, Roberts	3	0	Rs.	2,431	0
Chinnappavoo Chetty	2	0			
F. J. Hadfield	20	0			

(To be continued)

இப்படிக்கு,
Rev. Y. ARULAPPA,
St. Antony's Church, Pudupet, Madras.

The Good Pastor

நல்ல ஆயன்

OFFICE OF THE REGISTRAR 5-MAR 1921

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 19. } மார்ச்சு 1921. { இலக்கம் 3.

THE "GOOD PASTOR"
"நல்ல ஆயன்" பத்திரிகை.

உரோமாபுரியில் செர்வுலுஸ் எனும் பெயருடைய பிச்சைக்காரன் ஒருவனிருந்தான். இவன் அந்நகரிலுள்ள அர்ச். சாந்தப்பர் கோவிலுக்குச் சென்று அதன் முன் மண்டபத்தில் படுத்துக்கிடப்பது வழக்கம். தனக்குண்டாயிருந்த பக்ஷவாத நோயால் நேராய் நிமிர்ந்துநிற்கவும், புரண்டு படுக்கவும், அன்னபானாதிகளைத் தன் கையால் எடுத்து அருந்தவுமுதலாய்க் கூடாத நிலைமையிலிருந்துவந்தான் இவன். தனக்குக் கிடைக்கும் தானதர்மத்தில் இவன் எப்படியாவது மிச்சம் பிடிப்பதைக்கொண்டு அத் தேவாலயத்துக்குத் திருயாத்திரையாய் வரும் தன்னைப் போன்ற பிச்சைக்காரர்களுக்கு உதவி செய்வதுமல்லாமல், விசுவாசத்துக்கும் நல்லொழுக்கத்துக்கும் உரிய பத்திரிகைகள், துண்டு புத்தகங்களையும் வாங்கிவருவதுமுண்டு. இப்படியாக இவன் வாங்கிவந்த பத்திரிகைகள் துண்டு புத்தகங்களின் சேர்க்கையானது ஓர் சிறிய புத்தகசாலைக்கொப்பாயிற்று. ஆயினும், இவனோ எழுத்து வாசனையறியாத நிரக்ஷரகுக்ஷி. தனக்கு இருப்பிடமாயிருந்த ஓர் சிறு குடிசையில் அப்போதைக்கப்போது தங்கவரும் திருயாத்திரை பிச்சைக்காரரில் வாசிக்கத் தெரிந்தவர்கள் யாரையாவது கொண்டு அவைகளை வாசிக்கும்படி செய்வான். வாசிப்பதைக் கவனமாய்க் கேட்பான். கேட்பதைத் தன் மனதில் நன்றாய்ப் பதியும்படிச் செய்ய அதன்பேரில் அப்போதைக்கப்போது சிந்தனைசெய்வான். இவ்வாறாக இவன் தன் ஆத்தும இரட்சண்யத்துக்கடுத்த வேத சத்தியங்களை நன்றாய்க் கற்றறிந்துகொண்டு, அவைகளின்படி நடந்து, ஓர் பெரிய புண்யாத்துமாவாக விளங்கினபடியால், மற்றவர்களும் நன்னெறியில் ஒழுக இவன் ஓர் பெரிய தூண்டுகோலாயிருந்துவந்தான். இவனிடத்தில் பொறுமையையும் புண்யமே மிக்கச் சிறந்து விளங்கிற்று. தனக்கு உண்டாயிருந்த நிஷ்டூரத்துக்குரிய வியாதியில் சிறிதும் முறைப்படாமல் அதை பொறுமையாயும் உற்சாகமாயும் இவன் பட்டனுபவித்துவந்தது எல்லோருக்கும் போசச்சரியத்தை உண்டுபண்ணிற்று. இத்துன்பங்களுக்கிடையில் அவன் என்றும் சர்வேசுரனைத் துதித்துப்புகழ கீதங்கள்பாடவும், அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்யவும் தவறினவனல்ல. கடைசியாக இவனுக்கு அந்தியகாலம் நெருங்கிவந்தது. இதை அவன் அறிந்து, தனக்கு அறிமுகமானவர்

களை வரவழைத்து, தாவீது இராசா பாடின சில சங்கீதங்களைத் தன்னோடு அவர்களும் பாடும்படிக் கேட்டுக்கொண்டான். இப்படியாக எல்லோரும் பாடிக்கொண்டிருக்கையில் அவர்களைச் சட்டென நிறுத்தி "இதோ! பரலோகத்தில் முழங்கும் கீதநாதங்களை நீங்கள் கேட்கிறதில்லையோ?" என்று சொல்லி, தன் கண்களை மூடி அமரிக்கையாய் உயிர் விட்டான். உடனே அக்குடிசை முழுதும் கமகமவென்று பரலோக பரிமளம் வீச, எங்கிருந்துவரும் நறுமணம் இதுவென்று யாரும் அறியாமல் வியப்புற்று நின்றார்கள்.

செர்வுலுஸ் எனும் இப்பிச்சைக்காரனைப்பற்றிய இவ்வரலாறு ஒரு பொய்யல்ல, புரளியல்ல, புளுகல்ல; ஒரு கட்டுக்கதையுமல்ல. அர்ச். கிரகோரியாரால் எழுதிவைக்கப்பட்டுள்ள ஒரு மெய்யான வர்த்தமானம். செர்வுலுஸ் வாசிக்கத் தெரியாத ஓர் ஏழைப்பரதேசியேயாயினும், அவனுக்கு நல்ல புத்திமதிகளுள்ள பத்திரிகைகள், புத்தகங்கள்பேரில் உண்டாயிருந்த ஆவலும், ஆசையும், அவைகளை அவன் வாசிக்கக்கேட்டதினால் ஓர் நல்ல கிறீஸ்துவனாய் ஒழுக கற்றுக்கொண்ட விதமும், இக்கண்ணீர் கணவாயில் தான் அநுபவித்துவந்த இடுக்கண் துன்பங்களையெல்லாம் மிக்கப் பொறுமையுடன் சகித்து, புண்ணிய பயிற்சியில் தேர்ச்சியடைந்து, பாக்கியமான மரணம் அடையப்பெற்றதும் சகல கிறீஸ்துவர்களுக்கும் ஒரு நல்ல படிப்பினையும் போதனையுமென்று சொல்லாமலே விளங்கும். ஆம், அர்ச். பெர்நார்து கூறியுள்ளபடி கத்தோலிக்குப் பத்திரிகைகளும் புத்தகங்களும் நாம் நமது சத்திய வேதத்தை நன்றாய்க் கற்றறியவும், நம்மிடத்திலுள்ள துர்க்குணங்களையும், துர்வழக்கப் பழக்கங்களையும் வேரோடு பிடுங்கியெறியவும், நம்மிடத்திலுள்ள குறைகளையொழிக்கவும், இப்பிரபஞ்ச மாய இன்பசுகங்களினால் மோசம்போகாமலிருக்கவும், நல்ல கிறீஸ்துவர்களாய்ச் சீவிக்கவும் உத்தமமான வழிவகைகளாயும் உபகரணங்களாயுமிருக்கின்றன. அர்ச். கிரகோரியாரோ அவைகளை ஒரு முகக்கண்ணாடிக்கு ஒப்பனையிட்டு வசனித்திருப்பதாவது: "நல்ல வாசக புத்தகங்களும் பத்திரிகைகளும் சர்வேசுரனால் நமக்குக் காட்டப்படும் கண்ணாடி. அக்கண்ணாடியைக்கொண்டு நமது ஆத்துமத்தை நன்றாய் உற்றுப்பார்த்து, அதிலுள்ள பாவக்கறைகளைப் போக்கவும், அதைப் புண்ணியங்களால் அலங்கரிக்கவுங்கூடும் என்பதே. சிறந்த வேதசாஸ்திரியாகிய அர்ச். அகுஸ்தீன் அவைகளை, சர்வேசுரனும் மோட்சவாசிகளும் மோட்சத்திலிருந்து பூலோகத்திலுள்ளவர்களான நமக்கெழுதியனுப்பும் கடிதங்களென்கிறார். இக்கடிதங்கள்மூலமாய் மோட்சத்துக்குப் பிரயாணஞ்செய்யும் நாம் வழியில் மிக்க எச்சரிக்கையாயிருக்கவேண்டுமென்றும், நம்மை வழிமறித்தடிக்கும்படி நம்முடைய ஞான சத்துருக்கள் பதுங்கி ஒளிந்துகொண்டிருக்கும் இடங்கள் எவையென்றும், அவைகள் கையிலகப்படாதபடி நாம் எப்படி தப்பித்துக்கொள்ளவாகுமென்றும், சோர்வுகளைப்புங்கொள்ளாமல் நம்முடைய பிரயாணத்தை உற்சாகமாய்ச் செய்துமுடிப்பது எவ்வாறென்றும் இவை முதலியவைகள் நமக்கு அறிவிக்கப்படுகின்றன.

கத்தோலிக்குப் பத்திரிகைகள், புத்தகங்களினால் விளையும் நன்மையும் பிரயோசனமும் இவ்வாறாயிருந்தும், அவைகளின்பேரில் ஆவலும், ஆசையும், அக்கரையுங்கொண்டு அவைகளை வாங்கி வாசித்து பயனடைகிறவர்களை அவ்வளவாய்க் காணோம். அத்திபூத்தாப்போல் இரண்டோர் கததோலிக்குத் தமிழ் பத்திரிகைகள்தான் தென் இந்தியாவில் பிரசுரிக்கப்பட்டுவருகின்றன. அப்பேர்ப்பட்டவைகளில் "நல்ல ஆயன்" ஒன்று. இப்பத்திரிகை இரு அதிமேற்றிராணிமார்களுடையவும் ஐந்து மேற்றிராணிமார்களுடையவும் ஆசீரும் அங்கிகாரமும் பெற்றிருப்பதுடன், அனேக குருப்பிரசாதிகளுடைய நல்லபிமானமும்பெற்று கடந்த 18 வருடங்களாய் மாதம் ஒரு முறை பிரசுரிக்கப்பட்டு, இந்தியா, பர்மா, சிலோன், நெட்டால், சிங்கப்பூர், பினங், மோரிஸ், ஏடன் முதலிய நாடுகளில் உலாவிவருகின்றது. இப்பத்திரிகைக்கிடப்பட்டிருகிற "நல்ல ஆயன்" எனும் நாமதேயமே இதன் நோக்கத்தையுங் கருத்தையுஞ் சுட்டிக்காட்டுகின்றது. நல்ல ஆயனான நமதாண்டவர் 3 வருடகாலமாய் யூதேயா நாடு முழுதும் அலைந்து திரிந்து சத்திய மறையை போதித்துவந்தது போலவே, தமிழ்ப்பாஷை பேசுகிறவர்கள் மத்தியில் இப்பத்திரிகையும் உலாவி அவர்களுக்கு சத்திய மறையை போதிக்கப் பிரயாசைப்பட்டுவருகின்றது. இப்பிரயாசை வீணாகாதபடிக்கும், அது ஒன்றுக்கு நூறாக

பலனளிக்கும்படிக்கும் தமிழ்ப்பாஷை பேசுங் கிறீஸ்துவர்களுடைய உடனுழைப்பும் முயற்சியும் இதற்கு இன்றியமையாததென்பது தெளிவு. ஆடுகளின்றி ஆயன் இருந்து பிரயோசனமென்ன? ஆனபடியால் அதற்கு அநேக சந்தாதாரர்களிருக்கவேண்டியது. இதற்காக ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு பத்திரிகை வாங்கப் பிரையாசைப்படவேண்டியது. சந்தாதாரர்களும் தங்கள் சந்தாவைக் கிரமமாய்ச் செலுத்துவதுடன் அது தங்கள் வீடுவந்து சேர்ந்தமாத்திரத்தில் அதை ஆத்திரமாத்திரமாய்த் திறந்து அதிலுள்ள சமாசாரங்களைப் பார்வையிட்டுவிட்டு, சுருட்டி மடக்கி எங்கேயாவது எறிந்துவிட்டு, அல்லது இறவானத்தில் சொருகிவிட்டுப்போகாமல், அதைப் பத்திரப்படுத்திவைத்து ஒழிந்த நேரங்களில் அதிலுள்ளவைகளையெல்லாம் வாசிக்கவும்வேண்டியது. அல்லது ஒருவர் வாசிக்க வீட்டிலுள்ள மற்றவர்களெல்லாம் மேற்சொன்ன பிச்சைக்காரனை செர்வுலுஸ் என்பவனைப்போல கவனமாயும் கருத்தாயுங் கேட்டு அவனைப்போல் அவைகளின்பேரில் சிந்தனைசெய்து, நம்முடைய சத்தியவேதத்தின் சட்டதிட்டங்களையும், கொள்கை கோட்பாடுகளையும் கற்றுக்கொண்டு, அவைகளின்படி நடந்து, நல்ல கிறீஸ்துவர்களாய் வாழ்ந்துவரவேண்டியது. நாமோ தமிழ்ப்பாஷை பேசும் ஆயிரமாயிரமான அஞ்ஞானிகள் மத்தியிலும் இன்னும் அநேக புறமதத்தினர் மத்தியிலும் சீவித்துவருகிறோம். நம்முடைய நல்லொழுக்கமும் நன்மாதிரிகையும் அத்தனை ஆயிரம்பேரும் சத்திய திருச்சபையில் வந்துசேர வழியாயிருக்கவேண்டியதல்லவா? ஆகையால், "நல்ல ஆய"னின் பிரயாசை வீண்போகாதபடி, அதில் வாசிக்கும் புத்திமதிகளின்பிரகாரம் நடந்தும், பரம ஏழையுங் கொடுக்கக்கூடிய வருஷ சந்தா கேவலம் ரூபாய் ஒன்றே காலை முன்பணமாகச் செலுத்தியும், அநேக சந்தாதாரர்கள் அதற்குச் சேரும்படி செய்தும் அதனுடன் ஒத்துழைக்கவேண்டியது.

"நல்ல ஆயன்" அபிவிருத்தியையும் அதன் நல்லிருப்பையும் சில சந்தாதாரர்கள் கோரி, அதை மாதம் இரு முறை பிரசுரிக்க பிரேரேபிக்கின்றனர். தற்போது 1,900 பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகின்றன. இவைகளுக்காக செலவாகும் தொகையோ வசூலாகும் சந்தா தொகையைவிட அதிகமாகின்றது. மேலும் அச்சுக்கூலியும், காகிதம், மை முதலியவைகளின் கிரயமும் முன்னையவிட இப்போது மும்மடங்கு அதிகப்பட்டிருக்கின்றது. ஆயினும், இன்னும் 1,000 சந்தாதாரர்கள் சேர்வார்களானால் மாதம் இரு முறை "நல்லாயன்" வெளியாக சௌகரியப்படும். ஆகையால் ஒவ்வொரு சந்தாதாரரும் ஒரு புது சந்தாதாரரைச் சேர்க்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம். இவ்வாறு செய்வார்களானால் 1,000த்துக்கதிகமாகவே புது சந்தாதாரர்கள் சேர்ந்துவிடுவார்கள். இந்த எமது விண்ணப்பம் கர்னகத்தில் ஒலிக்கும் குரலுக்கு ஒப்பாகாதென்பது எமக்குள்ள நம்பிக்கை.

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

10-ம் அதிகாரம்.

அர்ச். மோனிக்கம்மாளுடைய மன்றாட்டுக்குக் கர்த்தர் செவிசாய்க்கிறர்—அகுஸ்தீன் இருதயத்தில் வெளிச்சம் உதயமாகிறது—அர்ச். அமிர்தநாதரால் தொடுக்கப்பட்டு, அர்ச். மோனிக்கம்மாளால் நடத்தப்பட்ட உபாயத்தின் விவரம்.

நாம் மேலே கூறினதுபோல், அர்ச். மோனிக்கம்மாள் அர்ச். அமிர்தநாதரைக் காணப் போகும்போது, அகுஸ்தீன் தன்னோடுகூட வருவதுமாத்திரம் அவளுக்குப் பற்றாது. ஆனால் அமிர்தநாதர் பிரசங்க மேடையின்மேலேறிப் பிரசங்கஞ்செய்யும்போதெல்லாம், அவர் தன்னோடுவந்து அவருடைய பிரசங்கத்தைக் கேட்கவேண்டுமென்று அதிக ஆவலுள்ளவளாயிருந்தாள். இது அசாத்தியமான காரியமல்ல. ஏனெனில், அர்ச். அமிர்தநாதருடைய வாக்குச்சாதுரியத்தைக்கண்டு, அகுஸ்தீன் அதிசயமடைவாராகையால், தன் தாயார் மிலான் நகருக்கு வருகிறதற்கு முன்னதாகமுதலாய், அடிக்கடி அவர் பிரசங்கத்தைக் கேட்கப்போனதுண்டு. மேற்றிராணியார் தமது

சபையோருக்குப் பிரசங்கஞ்செய்யும்போது, உட்கார்ந்துவந்த சலவைக்கல் நாற்காலியை இன்னும் காணக்கூடும். க. அ. 385—386-ம் வருஷங்களில், தமது எதிரில் மோனிக்கம்மாளும், அவள் பக்கத்தில் அகுஸ்தீனும் உட்கார்ந்திராமல், அவர் ஒருபோதும் அவ்வாசனத்தில் வீற்றிருந்ததே கிடையாது.

ஆனால் என்ன பிரயோசனம்? அகுஸதீன் பிரசங்கம் கேட்கத் தன் தாயாரோடு போகும்போது, தேவவாக்கு தன்னாத்துமத்தில் பதிந்து பலன்தரும்படியான மனச்சார்புடன் போனவரல்ல; ஆனால்,

"உண்டுகுண மிங்கொருவர்க் கெனினுங்கீழ் கொண்டு
புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும் பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி" என்கிற மூதுரைப்படி

அவர், சீஷன் குருவின் போதனையைக் கேட்கப் போவதைப்போல் போகாமல், அவரது பிரசங்கத்தின் பாஷாலங்காரத்தை யறியவும், அதில் பிழை தேடவுமே போனார். அவர் சொல்வது: "அமிர்தநாதர் ஜனங்களுக்குப் பிரசங்கஞ்செய்யும்போது ஜாக்கிரதையுடன் காதுகொடுத்துக் கேட்பேன்; நல்ல கருத்துடனல்ல, ஆனால் அவரது வாக்குச்சாதுரியத்தை யறியவும் அவர் வாக்குச்சாதுரியனென்று யாவராலும் புகழப்பட்டு வருவது மெய்யோ பொய்யோவென்று தெரிந்துகொள்ளவுமே போவேன். அவரது பிரசங்கத்தின் மாதுரிய பாஷிதத்தை அநேக மணிநேரம் வரைக்கும் கேட்டுக்கேட்டு ஆனந்த சந்தோஷங்கொள்வேன். அப்போது பிரசங்கத்தின் பாஷாலங்காரத்தைமட்டும் கவனிப்பேனேயொழிய அதன் பொருளை நிராகரித்துத் தள்ளுவேன்."

அர்ச். அமிர்தநாதருடைய பிரசங்கத்தையிப்படிப்பட்ட மனச்சார்புடன் அவர் கேட்டுவந்தாரென்பது சரியே. ஆனால் தேவ வெளிச்சம் அவரது ஆத்துமத்தில் இறங்கத் துவக்கிற்று. அவர் சொல்வது "அவர் என்னத்தைச் சொல்லுகிறாரென்று கவனிக்காமல், எப்படிச் சொல்லுகிறாரென்பதைமாத்திரம் கவனித்துவருவேன். அச்சமயத்தில் நான் வெகுவாய் மதித்துவந்த சொல்வன்மையிலிருந்து நான் அவமதித்துவந்த பொருள்வன்மையை என்னால் பிரிக்கக்கூடாமற்போனபடியால் சொல்வன்மையும் பொருள்வன்மையும் சேர்ந்த அவரது வாக்கு என் ஆத்துமத்தில் பதிந்தது. அவரது பிரசங்கத்தின் வாசாலத்திற்கு நான் மனங்கொடுத்துவரும்போதே, அப்பிரசங்கத்தில் வெளிப்படுத்தப்பட்டுவந்த சத்தியமும் எனக்குந் தெரியாமல் மெள்ள மெள்ள என் ஆத்துமத்தில் பதிவடைந்தது."

அகுஸ்தீன் இப்படிப்பட்ட சக்தியினால் வெல்லப்பட்டு, மனுப்புத்திக்கெட்டாதவிதமாய் சத்தியத்தை நாடத் துவக்கினார்.

அவர் சொல்வது "அமிர்தநாதர் சொல்லுங் காரியங்கள் ஒத்துக்கொள்ளக்கூடியவைதான்: மனேக்கியர்களும் மற்றவர்களும் கத்தோலிக்கு திருச்சபைக்கு விரோதமாய் சொல்லும் ஆட்சேபனைகளுக்கு எவ்வித தக்க சமாதானமும் சொல்ல அவரால் ஏலாதபோதிலும், புறத்தோற்றத்தின்படியாவது ஒருவர் அவற்றை யேற்றுக்கொண்டு அநுசரிக்கக்கூடும். அமிர்தநாதரின் பிரசங்கத்தைக் கேட்க மட்டில்லா ஆவல்கொண்டேன். அவரது போதனைகளைச் சத்தியமென்று ஒத்துக்கொள்ள நான் முஸ்திப்பாயிராவிட்டாலும், அவைகள் சத்தியத்திற்கு நேர்விரோதமானவைகளென்று எனக்குத் தோன்றவில்லை. கத்தோலிக்கு வேதபோதனைகளின்மட்டில் நான் எவ்வளவுதான் சந்தேகம் கொண்டிருந்தபோதிலும், அவ்வேதத்தின்பேரில் சுமத்தும் பழிகள் முழுதும் அபாண்டமானவைகளென்பதாய் எனக்கு நிச்சயமாய்த் தெரியவந்தது. ஆதலால் என்ன செய்வதென்று தெரியாமல் இருதலைக் கொள்ளியிலகப்பட்ட எறும்புபோல் என் மனது அலைபாய்ந்தது. மேலும் நான் குழந்தையாயிருக்கும்போது எனக்கு கிறீஸ்துநாதரின் நாமதேயத்தைக் கற்பித்த கத்தோலிக்குத் திருச்சபையானது, நான் இதுவரைக்கும் எண்ணியிருந்தபடி புத்திக்கொவ்வாத போதனைகளைப் போதிக்கிறதில்லையென்று அறிந்து இரகசியத்தில் சந்தோஷங்கொண்டேன்."

இப்படி அவரது இருதயம் கொஞ்சங்கொஞ்சமாய் மாறுபாடு அடைந்துவந்தது. திருச்சபையின் போதனையானது தாம் அதுவரைக்கும் நினைத்துவந்ததுபோல் தப்பறையானதல்லவென்று நாள் போகப்போக அவர் அறிந்து சந்தோஷங்கொண்டார். அர்த்தசாரமற்றவையென்று அவர் நினைத்துவந்த சில வேத வாக்கியங்கள், நியாயத்திற்கிசைந்து பொருளடங்கினவையென்றும் உச்சிதமான எண்ணங்களைப் பிறப்பிக்கக்கூடியவையென்றும் அவருக்குத் தெரியவந்தது. சத்திய திருச்சபையானது நாலுபேர் கேட்டு நகைக்கத்தக்கதும், சீயென்று வெறுக்கத்தக்கதுமான போதனைகளைப்போதிக்காமல் புத்திமான்களான சகலரும் சரிசரியென்று ஒத்துக்கொள்ளக்கூடியதும் புத்திக்கிசைந்ததுமான போதனைகளைப் போதிப்பதாகக் கண்டறிந்தார். அவர் நேர்மையுள்ள குணசாலி. ஆதலால்தான் கத்தோலிக்கு திருச்சபையை யிதுவரைக்கும் சரியாயறியாமல், மனேக்கியர்கள் அதன்பேரில் அபாண்டமாய்ச் சொல்லிவந்த பொய்புரட்டுகளை யுண்மையென்று நம்பி அவற்றை அவமதித்துவந்ததை நினைத்து நாணமடைந்தார்.

அவர் சொல்வது "கத்தோலிக்கு வேதத்தையல்ல, ஆனால் பிறருடைய பேச்சைக்கேட்டு என் புத்தியில் நான் உருபிகரித்துக்கொண்ட ஒரு போலித் திருச்சபையைத்தான். மலையைக் கண்டு குலைத்த வெறிநாயைப்போல நான் அநேக வருஷங்களாய் இகழ்ச்சிசெய்துவந்ததையெண்ணி எனக்கே கூச்சமுண்டாயிற்று. ஏனெனில் கத்தோலிக்கு வேதத்தின் உண்மையேதென்று நான் ஆற அமர விசாரணைசெய்து அறிந்துகொள்ளுவதைவிட்டு அதன் எதிரிகள் அதற்கு விரோதமாய்ச் சொல்லிவந்த அபாண்டங்களையெல்லாம் சத்திய வாக்கைப்போல் முன்பின் யோசனையின்றி நம்பிக்கொண்டேன்."

அவரிருதயத்தில் முதல் மங்கலான ஒரு சோதிக் கதிரும் அதற்குப்பிறகு அதிலும் சோதியான இனனொரு கதிரும் இறங்கின. அமிர்தநாதருடைய பிரசங்கத்தைக் கேட்டபிறகு சத்தியத்தின்மட்டில் கத்தோலிக்கர்களுடைய நிலைமையெவ்விதமாயிருக்கிறதென்று ஆராயத் துவக்கினார். வேதசத்தியங்களைச் சாதனப்படுத்தக்கூடாமற்போனபோதிலும் அவைகள் நிச்சயமானவையென்று முழுமனதோடு நம்பவேண்டுமென்றும் மனுப்புத்திக்கு ஒரு மட்டும் திட்டமும் உண்டாதலால் அப்புத்திக்கு எட்டாத போதனைகளைமுதலாய் சத்தியமென்று சங்கையுடன் அங்கிகரிப்பதில்தான் விசுவாசத்தின் முக்கிய லட்சணம் அடங்கியிருக்கிறதென்றும் கத்தோலிக்கர்கள் சாதிக்கிறார்களென உணர்ந்தார்.

பதிதர்களோவெனில் மனுப்புத்தியின் சுதந்தரமென்றும், எதற்கும் அத்தாட்சியென்றும் ஆராய்ச்சியென்றும், சகலத்தையும் பரிசோதித்தறிய ஒவ்வொருவனுக்கும் இருக்கும் சுதந்தரமென்றும் கண்டபடி பிதற்றி கடைசியில் உருபிகரிக்கக்கூடாத அநேக சத்தியங்களை நம்பவேண்டியதென்று சாதித்துவருகிறார்கள். இவர்கள் ஞாயத்தோடு கத்தோலிக்கர்களுடைய ஞாயத்தை ஒத்துப்பார்க்குமிடத்து கத்தோலிக்கர்களே நேர்மையுள்ளவர்களென்று அவருக்குக் காணப்பட்டது. மனுப்புத்தி மட்டுக்குரியதாதலால் வேத சத்தியங்களைக் கண்டுபிடிக்க அதனால் ஏலாது. ஆதலால் சங்கையுடன் அவைகளை யேற்றுக்கொள்ளவேண்டுமென்று கத்தோலிக்கு வேதம் போதிக்கிறது. பதிதமதமோவெனில் மனுப்புத்தி மட்டுக்குரியதல்ல, எதையும் திருத்தமாய்க் கண்டுபிடித்தால்மாத்திரம் நம்பவேண்டியது என்கிறது. இருந்தும் கண்டுபிடிக்கக்கூடாத அநேக சத்தியங்களை நம்பவேண்டுமென்று தன் சபையாருக்குப் போதிக்கின்றதே. இதெப்படிப்பட்ட ஒவ்வாமையென அறியலானார்.

சத்தியத்தின்மட்டில் கத்தோலிக்கு மதம் கொண்டிருக்கும் நிலைமை நேர்மையுள்ளதென்று அவருக்குத் தோன்றிற்று. மேலும், மனுப்புத்தியின்மட்டில் அது வெகு சொற்ப நம்பிக்கை வைத்தபோதிலும் அப்படிப்பட்ட சொற்ப நம்பிக்கை வைப்பது நியாயமாயும் மனுச்சுபாவத்திற்குச் சரியொத்ததாயுமிருக்கின்றது. அகுஸ்தீனைச் சூழ்ந்துகொண்டிருந்த அசத்தியம் என்னும் கார்மேகம் இவ்விதமாகக் கொஞ்சங்கொஞ்சமாய்க் கலைந்து மறைந்து ஒழிந்துபோவதைப் பார்ப்பது எப்படிப்பட்ட காட்சி! அவர் சொல்வது "எத்தனையோ காரியங்கள் நடக்கும்போது நான் அவைகளைப் பார்க்கவேயில்லை. ஆகிலும் அவைகள் உண்மையாகவே நடந்த காரியங்கள் என்று சரித்திரத்தில் படித்து நம்புகிறேன். அநேக பட்டணங்களைப்பற்றியும் நாடு நகரங்களைப்பற்றியும் என் சிநேகிதர்கள் சொல்லக்கேட்டேனேயொழிய அவைகளை நான் கண்ணால் பார்க்கவில்லை. ஆயினும் அவைகள் உண்டென்று பூரணமாய் நம்புகிறேன். இன்னும் அநேக விஷயங்களை நானே பரிசோதித்தறியாதபோதிலும் என் நேசர்கள், வைத்தியர்கள், மற்ற மனிதர்கள் சொல்ல எனக்குத் தெரியவந்தது. இருந்தும் அவைகளையெல்லாம் நான் மனப்பூரணமாய் நம்புகிறேனேயென்று இப்படி பலவாறாய் என் மன

தில் சிந்தித்தேன். இவ்விதமாய் நான் எதையும் நம்பாமல் ஒவ்வொரு காரியத்தையும் கண்ணாரக் கண்டு பரிசோதித்தறிந்தபிறகுமாத்திரம் நம்ப வேண்டியதென்றால் அது முழுதும் அசாத்திய மான காரியம். 'வித்தில்லாதசம்பிரதாயம்மேலு மில்லை கீழுமில்லை' என்றபடி நான் பத்ரீஸி யூஸூக்கும் மோனிக்கம்மாளுக்கும் பிறந்த மகன் என்பது சரிதான். இதை நான் உறுதியாய் விசு வசிக்கிறேன். ஆயினும் பிறர் சொல்லக்கேட்டு அங்ஙனம் விசுவசிக்கிறேனேயன்றி மற்றப்படி என் சொந்த விசாரணையால் அல்லவே."

வர்த்தகம், வாணிபம், தொழில் முதலிய விஷயங்களிலும், ஜனசங்கத்திற்கடுத்த காரியங் களிலும், இப்பேர்ப்பட்ட நம்பிக்கையில்லாமல் எதுவும் முடியாதென்றால், ஞானக் காரியத்தில் மாத்திரம் அப்படிப்பட்ட நம்பிக்கை தேவை யில்லையென்று சொல்வதெப்படி? இவ்வுலகத் தில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும், அவனு டைய தாயாவது, தந்தையாவது, அவன் வாசஞ் செய்யும் நகரின் அதிகாரிகளாவது, அவனோடு புழங்கிவரும் ஜனமாவது, ஏதாவதொன்றை அவ னுக்குக் கற்பிப்பது முறையாயிருக்க, அவனைச் சிருஷ்டித்த கடவுள்மாத்திரம், ஏன் அவனுக்கு ஒன்றையுங் கற்பிக்கக்கூடாது? அப்படியவர் உண்மையாகவே போதிப்பாரேயானால், அவன் அவருடைய போதனைகளை நம்பி, வேதவழிப்படி நடக்கவேண்டியதல்லவோ? ஒரு குடும்பம் ஒற் றுமையாய்ச் சீவிக்கவும், சிநேகிதர்கள் வாஞ்சை யாய் ஒருவரையொருவர் நேசித்துவரவும், ஜனங் கள் யாவரும் சன்மார்க்கத்தில் நடந்து திவ்ய உணர்ச்சிகளால் பூரிக்கப்பட்டு, உத்தம கிருத்தி யங்களைப் புரிந்துவரவும், வேதவழிப்படி நடப் பதுமுற்றிலும் அவசரமான காரியமாமே.

அகுஸ்தீன் தனக்குள் தர்க்கித்தது இப்படித் தான். அவரது உருக்கமும் நேசபாசமுமுள்ள சுபாவத்தை நாம் அறியாதிருந்தால், தன் தாயா ருடைய ஏவுதலின்பேரில்தான் அப்படி எழுதினா ரென்று எண்ணியிருப்போம். ஏனெனில், ஓர் உத்தம கிறீஸ்துவ பெண்பிள்ளை, வேதபோத னைகளை யேற்றுக்கொள்வது இப்படிப்பட்ட ஞாயத்தைக் கொண்டுதான். வேதபோதனை களுக்கு ஆதாரமாயிருக்கும் பிரதம ஞாயங்கள், அவ்வளவு கருகலாயும், புத்திக்கெட்டாதவையா யும், பரமரகசியமுள்ளவையாயும், மேம்பாடுள்ள வையாயுமிருப்பதால், அவைகளைப்பற்றித் தர்க் கிக்கமாட்டாள். அவ்வாதாரங்களின்மேல் ஸ்தா பிக்கப்பட்டிருக்கும் சத்தியத்தை மாத்திரம் உணர் வாள். இப்படிப்பட்ட இயற்கையுணர்ச்சி, தெளி வுள்ளதும், ஆழ்ந்ததுமாதலால், அதற்கும் மனுப் புத்திக்கும் யாதொரு சம்பந்தமுங்கிடையாது. அவ்வுணர்ச்சி இருதயத்திலிருந்தே புறப்படுகின் றது.

அகுஸ்தீன் இவ்வாதாரத்தை யொருதரம் கண்டுபிடித்து ஏற்றுக்கொண்டபிறகு, அவ்வாதா ரம் சத்தியத்திற்கிசைந்துவரும்படியாக, தன் சத் துவமெல்லாங்கூட்டி, நுட்பமாய் விசாரணை செய்து தனக்குள் தர்க்கித்தார்.

அவர் சொல்வது "கடவுள் மனிதனுக்குச் சில காரியங்களை வெளிப்படுத்தினாரென்று வைத் துக்கொள்வோம். அவர் திருவாய்மலர்ந்து சொல்லும் வார்த்தைகள் எத்தன்மையானவை யாயிருக்கும்! மனிதன் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளைவிட, உச்சித லட்சணங்கொண்ட வையாயிருக்குமன்றோ? மனிதன் கேவலமான வன், மட்டுள்ளவன், அவன் ஆயிசு சொற்பம். அவன் வார்த்தைகளும் அப்படி சொற்பமானவை களே. இதற்குமாறாக, கடவுளோவெனில் ஆதி யும் அந்தமுமில்லாதவர், நித்தியர். எக்காலத்தி லும் எவ்விடங்களிலும் எவ்வாத்துமங்களிலும் என்றும் சிரஞ்சீவியாயிருக்கப்பட்டவர். அப்படி யிருக்க அவர் திருவாய்மலர்ந்தருளிய வார்த்தை கள் எப்படிப்பட்டவையாயிருக்கவேண்டும்." இவ் வாறாக அவர் தனக்குள் விசாரணைசெய்துவருங் காலையில், கத்தோலிக்கு வேதமானது தேவ வார்த்தை யடங்கப்பெற்ற திரு புத்தகமென்று அநேக யுகங்களாக நம்பப்பட்டு பூச்சியமாய்க் காப் பாற்றப்பட்டுவரும் வேதாகமங்களைத் திறந்து பார்த்தார். இவ்வாகமங்களை வாசித்துப்பார்க்கவே, அவைகளில் தான் கண்ட அருமையான விஷயங் களுக்கு நிகரான விஷயங்கள், தான் இதுவரைக் கும் படித்துவந்த எத்தனையோ விதமான சிறந்த புஸ்தகங்கள் ஒன்றிலும் கண்டில்லையென்றறிந்து, அதி ஆச்சரியங்கொண்டார். பூலோகம் எவ்வ ளவு பழமைகொண்டதோ, அவ்வாகமங்களும் அவ்வளவு பழமைகொண்டவை. பூலோகம் எவ் வளவு விரிவுகொண்டதோ, அவ்வாகமங்கள் அவ் வளவு விரிவுகொண்டவையே. அவைகள் சத்தியத் தைப்போல ஏகமாயும், புண்ணியத்தைப்போல் பரிசுத்தமுள்ளதாயுமிருந்தன. மேலும் அவிசு வாசிகள் அவைகளை ஓயாமல் எதிர்த்துவந்தபோ திலும், மாற்றத்திற்கும் அழிவுக்கும் ஏதுவில்லா மல், அதிசயத்துக்குரிய பலினத்துவங்கொண்டு, உந்நத அழகுவாய்ந்தவையாயிருந்தன. இவை களையெல்லாம் சிந்தித்துப்பார்த்தால், அவ்வாக மங்கள் நித்தியரும், சர்வ வியாபகரும், மாற்ற முந்திரிபுமில்லாதவரும், சர்வ வல்லவருமாகிய சர்வேசுரன், அதாவது கடவுளிடமிருந்தே வந்தி ருக்கக்கூடுமான திவ்ய வார்த்தைகளென்பதற் குச் சந்தேகங்கிடையாது.

ஆனால் அகுஸ்தீனுக்கு முக்கியமாய் ஆச்சரி யம் விளைவித்தது எதுவெனில், அத்திருவார்த் தைகளுக்கும் மனுச்சுபாவத்திற்கும் உள்ள பொருத்தந்தான். அப்பொருத்தம் அவ்வளவு ஆழ்ந்ததாயும் மனோகரமுள்ளதாயும் இருந்தபடி யால், அவைகள் மனிதனின் ஆத்துமத்தை உண்டாக்கின சர்வேசுரனிடமிருந்தே கண்டிப் பாய் வந்திருக்கவேண்டியது. அவர் சொல்வது "அவ்வார்த்தைகள் உச்சிதமானவையென்றும், விசுவசிக்கத்தக்கவையென்றும், எனக்கு எதி னால் திட்டமாய்த் தெரியவந்ததென்றால், அவை களைக் கண்டுபிடிப்பது சுலபமாயினும், அப்படிச் சுலபமாயிருக்கும்போதே, அவைகளில் பரம இரகசியங்கள் அடங்கியிருப்பதினாலேயே. அத் திருவார்த்தைகளின் பாஷை, நடை, அனைவரும் அறியும்படி சுலபமாயும், தெளிவாயும், எளிதா யுமிருந்தபோதிலும், அவைகளைக் கண்டுபிடிக்க, வித்தையிற்றேர்ந்த மகான்கள், தங்கள் புத்தியா வையும் உபயோகிக்கவேண்டியதாயிருக்கிறது. வேதாகமங்கள், தனது இருகரங்களை விரித்து யாவரையும் தன் கொடுங்கையில் அணைத்துக் கொள்வனவாயும், அதே சமயத்தில் கூரிய புத்தி யுள்ளவர்கள், விசாரத்துடன் யோசிக்கவேண்டிய ஆழ்ந்த சத்தியங்கள் அடங்கப்பெற்றவையாயு மிருக்கின்றன."

(இன்னும் வரும்)

"மேட்டிமையான எண்ணங்கொள்ளாதே" ஆனால் உன் அறிவீனத்தை அதிகமாய் ஒத்துக் கொள்ளு. உன்னைவிட அதிகமாய்க் கற்ற சாஸ் திரிகளும், ஞானத்தில் அதிகமாய்த் தேர்ந்தவர் களும் அநேகரிருக்கக்கொள்ள, அவர்களுக்கு மேலாக உன்னை நீ நினைக்க ஆசைப்படுவதேன்!

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா

அல்லது

மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—5.

அதிசயச் செயல்கள்.

(முன் தொடர்ச்சி.)

நமதிளவல் தன்னைச் சுற்றிலுமுள்ள இயற்கை விநோதங்களில் ஈடுபட்டு அங்கேயே திகைத்து நிற்கவில்லை. அவன் கொஞ்சநாளைக்குமுன் அங்கே மெய்க்காப்பாளனாய் வேலைபார்த்துவந்தவனானகை யால், அத்தோட்டத்தின் ஒவ்வொரு மூலை யும் அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆதலால் அவன் சற்றும் யோசனைசெய்யாமல், மடமட வென்று நடந்து, புதர்களூடே மார்போடு நகர்ந்து, தோட்டத்தின் மத்தியிலுள்ள ஒரு மேட்டை அடைந்தான். அம்மேட்டின்மேல், சலவைக் கற்றூண்களால் தாங்கப்பெற்ற வெள் ளிக் கூரையையுடைய ஒரு சிறந்த மண்டபம் வெகு சிங்காரமாயமைக்கப்பட்டிருந்தது; சுவர் களும் கூரையின் உள்பாகமும் பொன்னாலும், நவரத்னங்களாலும் விநோதமாய் வேலைசெய்யப் பட்டிருந்தன; அம்மண்டபத்தின் மத்தியில் ஒரு அழகான கண்ணாடி பாத்திரம் தொங்கிக்கொண் டிருக்க, அதிலே சுகந்தம் வீசும் புஷ்பச்செடி யொன்று எப்பவும் மலர் நிறைந்து விளங்கிற்று. கதவுகளோ கருங்காலி மரத்தால் செய்யப்பட்டு இடையிடையே தந்தத்தால் சித்திரிக்கப்பட் டிருந்தன. கதவுகள்மூலமாய் சூரியகிரணங்கள் அம்மண்டபத்துக்குள் நுழைந்து, அங்கேயுள்ள பலவர்ண கற்களின்மீது படவே, அந்த இட முழுதும் ஒரே பிரகாசமாய்த் தோன்ற, பார்ப்ப வர் கண்களைப் பறித்துக்கொண்டுபோவதுபோ லிருந்தது.

இச்சிறந்த மண்டபந்தான் காஸில்டாவுக்கு மிக்கப் பிரியமான இடம்; அவள் அங்குவந்து வேனிற்காலத்தைக் கழிக்கையில், சதா அங்

கேயே இருப்பாள் என்று நமது யௌவன வீரனுக்குத் தெரியும். ஆனால் அவன் எதிர்பார்த்தவண்ணம் அவள் அச்சமயம் அங்கேயில்லை. ஆயினும் அவன் கூர்மையான பார்வை அவள் இருக்குமிடத்தை உடனே காட்டிவிட்டது. அருகாமையிலுள்ள மரங்களடர்ந்த ஒரு சோலையின் கண்ணிருந்த ஒரு சிறிய குளக்கரையில் இரண்டு இளமாதர் நின்று, மீன்களுக்கிரைதெளித்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். சிரத்தில் அணிந்திருந்த சித்திர முடியாலும், அவள் பக்கத்தில் நின்ற சிறு மாதினிடந் தோன்றிய பயபக்தியாலும், செபஸ்தியான் காவில்டா யாரென்று தெரிந்துகொண்டான். உடனே அவன் அம்மண்டபத்தைவிட்டிறங்கி அம்மாதரை நோக்கி நடந்து அவர்களை நெருங்கிவிட்டான். அப்போது காவில்டாவின் தோழி தவறிக் குளத்தில் விழுந்துவிட்டாள். இராஜகுமாரியோ சற்றும் கலக்கமடையாமல் உடனே மிக்கத் தைரியத்துடன் அவளுடைய ஆடையைப் பிடித்து மேலே இழுத்துக்கொண்டு சிரித்தவண்ணம் கூறுவாள், "என், பாத்திமா! மச்சங்களோடு நீந்த உனக்குப் பிரியமோ?" பாத்திமா என்னும் அந்தச் சிறிய தோழிப்பெண் நன்றாய் நனைந்து தண்ணீர் சொட்டிக்கொண்டிருக்கும் ஆடையுடன் முழந்தாட்படியிட்டு தன் எஜமாட்டியின் முந்தானையைப் பிடித்து தன்னன்றியின் அறிகுறியாய் முத்தமிடப்போகையில், காவில்டா அவளைத் தடுத்து, "ஓ! கூடாது! போய் உன் ஆடையைக் களைந்து வேறுடை தரித்துக்கொள். சுல்மாவை என்னிடம் அனுப்பு, போ" என்றாள். அந்தத் தோழிப்பெண் அவளைவிட்டுப்பிரிய மனமில்லாமல், தயங்கி நிற்கையில் காவில்டா இரண்டு மூன்று தரம் அவளைப் போகும்படி வற்புறுத்திச் சொல்லவே, அவள் அவ்விடத்தைவிட்டகன்றாள். அப்போது காவில்டா ஏகாங்கியாய் நின்றாள்; செபஸ்தியான் தன் ஏற்பாட்டை செய்துமுடிக்க இதுவே தருணம்; இதை விட்டால் வேறு சமயம் கிடைப்பது குதிரைக்கொம்புதான்! அரசன் மகளை அவளுடைய இருப்பிடத்திலிருந்தே தகுந்த பக்கபலமின்றித் திருடிக்கொண்டுபோக முயல்வது மதியீனமான ஏற்பாடு என்பதிற் கொஞ்சமுஞ் சந்தேகமில்லை; ஆயினும் சந்தர்ப்பம் நமது இளவீரனுக்கு அநுகூலமாயிருந்தது அவன் அதிர்ஷ்ட பாக்கியமே. காவில்டா சுபாவத்திலேயே தைரியசாலி; எப்போதும் மெய்க்காப்பாளர் அல்லது தோழியர் தன்னைச் சூழ்ந்துகொண்டிருப்பதை அவள் வெறுத்துவந்தாள்; அதுவும் தன் வேனிற்கால சுகந்த மாளிகையிலும் அவள் அவ்வாறே இருப்பதென்றால் அவள் மனதுக்குக் கொஞ்சமேனும் பிடிக்கிறதேயில்லை; தனிமையாயிருந்து, சுயேச்சையாய் காலங்கழிப்பதே அவளுக்குப் பேரானந்தம். மேலும் மூரிய இராஜகுமாரிகளை பேரிளம் பெண்களின் கண்டிப்பான காவலில்வைத்தாளுவது அக்காலத்திய வழக்கமல்ல.

இந்த விபரங்களெல்லாம் செபஸ்தியானுக்குத் தெரியும்; மேலும் தன்னைப்போன்ற வீரர்கள் துலுக்கரோடு போரிடுகையில், இதைவிட எவ்வளவோ கஷ்டமான விஷயங்களையும் ஆபத்தான காரியங்களையும் சாதித்திருக்கிறார்கள்; கார்சியாஸ் பிரபுவின் பரிதாப நிலைமையை நினைக்கையில், அவரை மீட்பதற்கு எத்தகைய அபாயச் செயலையும் அஞ்சாமற் செய்துமுடிப்பதைத்தவிர வேறு மார்க்கமில்லையென்று அவன் புத்தியில் ஸ்திரமாய்ப் பதிந்துவிட்டது.

தான் மறைந்து நின்ற இடத்தினின்றும் வேகமாய் வெளிவந்து ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து காவில்டாவண்டை நின்றான். அப்பெண்மணியோ, உடனே விலகியிருந்த தன் முகமூடியைச் சரிப்படுத்திக்கொண்டு, கோபக் குரலில் "ஏ! அடிமைப்பயலே! நீ எக்காரணத்தால் கொஞ்சமும் பயமின்றி இங்கே வந்தாய்?" என்று பயமுறுத்துவதுபோல் பேசினாள்.

செபஸ்தியான்.—ஒரு கிறீஸ்துவ வீரனை அடிமைப்பயலென்று கேவலமாய்ப் பேசவேண்டாம். நான் ஒரு கிறீஸ்துவ வீரன். நினது உயிருக்கும் கௌரவத்துக்கும் ஒருபோதும் யாதொரு கெடுதியும் வாராதென்று என் வேதமறிய சொல்லுகிறேன். ஆனால் நின்னை சிறைப்படுத்தி பிணையாளியாக என்னிடம் வைத்திருப்பேன்" என்று மொழிந்தான்.

இந்த வார்த்தைகளுக்குப் பதில் சொல்ல முதலில் அவளால் முடியவில்லை; அவை தன் செவிகளில் விழாதனபோலிருந்தாள்; ஆயினும் அப்படிப் பேசமுடியாமலிருந்தது பயத்தாலல்ல, ஆனால் ஆச்சரியத்தாலாம்.

Supplement to the "Good Pastor" 1st March 1921.

கத்தோலிக்கு இந்தியர் பரோபகார சபை, சென்னை

1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 5 MAR 1921 MADRAS.

சபையின் பிரதம போஷகர்களாகிய ஆதரணைக்கர்த்தாக்கள்.


சென்னை அதிமேற்றிராணியார்.


அர்ச். பாப்பானவரின் ஸ்தானாதிபதி.

சென்னை திருமயிலை மேற்றிராணியார்.

இந்தியா முதலிய கீழ்த்திசை நாடுகளுக்கு அர்ச். பாப்பானவரின் ஸ்தானாதிபதியாய் விளங்கும் மாக்ஷிமைதங்கிய பேதுரு பைசானி ஆண்டவரவர்களுக்கு சபையின் விருத்தாந்தமும் கருத்துகளுமடங்கிய வரவேற்பு வந்தனோபசார பத்திரமொன்று திருமயிலை மேற்றிராசன மாளிகையில் சபைப் பேரால் இவ்வருடம் ஜனவரிமீ 12௳ அளிக்கப்பட்டது. நமது அநாத பிள்ளைகளுக்கும் ஏழைச் சிறுவர்களுக்கும் மடம் (Orphanage), கல்வி, கைத்தொழிற்சாலை (Industrial School) இதுகாறும் இப்பெரும் பட்டணத்தில் இல்லாமையைக் கண்டு மெத்தவு மனதிரங்கி, தாம் இச்சபைக்கு உடனே பரிபாலகராகி உதவிபுரிவதுமன்றி கூடியசீக்கிரத்தில் சபையார் ஸ்தாபிக்க இருக்கும் மடங்களையும், கல்வி, கைத்தொழிற்சாலைகளையும் நடத்துவிக்க நம்மவர்களிலேயே சந்நியாசிமார்களையும், ஞான ஊழியத்திற்கு குருவானவரையும் நியமிப்பதாய் திருவாக்களித்ததுமன்றி அடியிற்கண்ட அங்கீகாரப் பத்திரத்தையும் சபைக்கு அனுப்பியிருக்கின்றனர்.

அப்போஸ்தோலிக்க ஸ்தானாதிபதி அவர்களின் அங்கீகாரப் பத்திரம்.

பெங்களூர், 30–1–21.

சென்னை, கத்தோலிக்கு இந்தியர் பரோபகார சபையின் நோக்கங்களை நாம் மனப்பூர்வமாய் அங்கீகரிப்பதோடு அதனுடைய மெம்பர்களையும் உதவி கர்த்தாக்களையும் ஆசீர்வதிக்கின்றோம்.

✠ பேதுரு பைசானி,
கான்ஸ்டான்ஸாபதி அதிமேற்றிராணியாரும் இந்தியா
முதலிய கீழ்த்திசை நாடுகளுக்கு அப்போஸ்
தோலிக்கு ஸ்தானாதிபதியும்.

கொள்கை.—“ தம்மைத்தாம் ஆதரிக்கிறவர்களைத் தற்பரன் ஆதரிக்கிருர்.”

கருத்து.—“ அன்பு, சகோதரத்துவம், தருமம்.” “ஏழைகளுக்கிடுகிறவன் சர்வேஸ்வரனுக்கு கடனளிக்கிருன்.”

நிதி உதவிக்காக விண்ணப்பம்

“ சந்தோஷத்தோடே கொடுக்கிறவன்பேரில் சர்வேசுரன் பிரியப்படுகிருர்.” (அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கெழுதிய II-வது நிருபம், 9-ம் அதிகாரம், 7-ம் வசனம்.)

இப்பிரபஞ்சத்தின்கண் மானிடர்களடையவேண்டிய மேம்பாட்டிற்குரிய மார்க்கங்களின் வாயிலை யடைக்குந் திரைபோன்ற ஜாதிபேதத்தைப் பாராட்டாத கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுக்குள் ஒற்றுமை, பிறர் சிநேகம், அன்னியோன்னியம், பொருட்சகாயம், கல்வியபிவிருத்தி, குரு பக்தி, இராஜ விசுவாசம் என்னும் முக்கிய சாதனங்களைச் செய்யவும், அநாத பிள்ளைகளுக்கு மடமும், சிறுவர்களுக்குக் கைத்தொழிற்சாலையும் ஸ்தாபித்து ஆதரிக்கும்பொருட்டும் இச்சபை முன்வந்துளது. இப்பெரும் முயற்சியைப் பூர்த்திசெய்வதற்கோ மூலதனமாகச் சுமார் (ரூபாய் 20,000,) இருபதினுயிரம் வேண்டியதாயிருக்கின்றது. இதுகாறும் நமது குருப்பிரசாதிகள் மற்றும் புண்யோத்தமர்கள் அநேகரிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுள்ள தொகையில் கட்டிட சாமான்கள் சில வாங்கவும் மற்றும் தரும விஷயமாய் செலவிட்டது போக இருப்பு ரூ. 1,281—3—11. இந்த தொகை சென்னை போஸ்ட் ஆபீஸ் சேவிங்ஸ் பாங்கில் சபையின் பெயரால் இருக்கின்றது. இந்த கணக்கிற்கு பொருப்பாளர் சபையில் ஐவர். காரியங்களை சரிவர நடத்தவும், சபையின் வரவு செலவு கணக்குகளைப் பரிசோதிக்கவும் 20 மெம்பர்கள் கூடிய காரிய நிர்வாக சபையொன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.



முடிவாகாத கோவில் கட்டிடம்.

சென்னை பெரம்பூருக்கடுத்த மாதவரத்தில் சுமார் 11 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தை அதிற் கட்டியுள்ள மேற்காட்டிய முடிவாகாத கோவில் கட்டிடத்தோடு, சென்னை அதிமேற்றிராணியாராகிய மிகவும் வந்திக்கத்தக்க அருளப்ப ஆலன் ஆண்டவரவர்கள் மடங்கள் கட்டுவதற்காக சபைக்கு அளித்திருக்கின்றனர்.

சபையின் முக்கிய கருத்துக்கிசைந்து ஷை கோவில் கட்டிட வேலையைப் பூர்த்தியாய் முடிப்பதோடு, அநாத பிள்ளைகளை ஆதரிக்கும்பொருட்டு மடம் ஒன்று கட்டுவது சபையின் கோரிக்கை. இக்கோவிலும், மடமும், நமது சமூகத்தவர்களின் விசேஷ பாதுகாவலரும் பேர்பெற்று விளங்கும் அர்ச்சியசிஷ்டவர்களிலொருவருமான அர்ச். செபஸ்தியாருடைய திருப்பெயரால் வழங்கப்பட்டுவரும். தர்ம சிந்தையுள்ள கத்தோலிக்கு இந்திய கனதனவான்கள் சபையின் நன்நோக்கங்களை முன்னிட்டு தங்களால் கூடிய பொருளுதவியளித்து ஆதரிப்பார்களென்று வெகு ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியாவில்மட்டுமன்றி, பர்மா, இலங்கை, மலாயா தீவுகள், தென் ஆப்ரிக்கா, மெசப்பொடேமியா முதலிய பிரதேசங்களிலுமுள்ள தர்ம இஷ்ட பிரபுக்கள் சபையின் வேண்டுகோளுக்கிரங்கி உதவியளிக்க முன்வருவார்களாகில் சபையின் கருத்துகள் இவ்வருஷத்திலேயே முடிவுபெறுமென்பதற்கு ஐயமில்லை.

கட்டிட வேலையை துவக்க ஏற்கெனவே சில சாமான்கள் சித்தஞ்செய்யப்பட்டிருக்கின்றன.

சபையின் மெம்பர்கள், மற்றும் தர்மகர்த்தாக்களின் ஆத்தும சரீர நன்மைக்காக பிரதி மாதம் சபை மெம்பர்களாகிய குருப்பிரசாதிகளால் திவ்யபூசை ஒப்புக்கொடுக்கப்படுவதோடு அவர்களுடைய பெயர்கள் சபையின் ரிஜிஸ்டரில் பதிவுசெய்யப்பட்டு அப்புத்தகம் மடத்தின் கோவிலில் சதா ஞாபகக்குறியாக காப்பாற்றிவைக்கப்படும்.

சபைக்கு அனுப்பப்படும் நன்கொடைகள் எவ்வளவு சிறிதாயினும் நன்றியறிதலோடு ஏற்றுக்கொள்ளப்பட்டு சபையின் பேருபகாரிகளின் பெயரும் அவர்களுடைய நன்கொடையும் பிரதி மாதம் இந்த “ நல்ல ஆயன் ” பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

கடிதங்களும் பொருளுதவியும் சபையின் பொது காரியதரிசியவர்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு அனுப்ப தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

M. R. மகிமைதாசன்,
சபைத்தலைவர்.

நன்கொடைகளின் விபரம்.

பிரதம போஷகர்கள் ...	... நன்கொடை ...	...	ரூ.	300—0—0.
ஜீவகால அங்கத்தவர்கள் (முதல் வகுப்பு)	,, ...	...	,,	100—0—0.
ஜீவகால அங்கத்தவர்கள் (2-ம் வகுப்பு)	,, ...	...	,,	50—0—0.

இவர்கள் மேற்காட்டிய தொகையை ஒரே முறை மொத்தமாய் கொடுத்தாவது, அல்லது 20 மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த காலத்திலேயே மாதமாதம் தங்களுக்கிசைந்தவண்ணம் கொடுத்தாவது உதவலாம்.

பிரதம போஷகர்கள், ஜீவகால அங்கத்தவர்களாகிய நன்கோடையாளரின் நாமதேயங்கள் மடம் கட்டி முடிவானவுடன் சலவைக்கல்லில் எழுதப்பட்டு கட்டிடத்தின் சுவற்றில் பதிக்கப்பெறும்.

மெம்பர்களின் வருட சந்தா விபரம்

முதல் வகுப்பு	1—0—0.
இரண்டாவது வகுப்பு ...	0—8—0.

மாதத்திய வரவு

1921௵ ஜனவரி மாதத்தில் சபைக்கு அனுப்பப்பட்ட நன்கொடை, சந்தா முதலியன வந்தனத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றின் விபரம் கீழ்வருமாறு :—

அப்போஸ்தோலிக்கு ஸ்தானாதிபதியாகிய மாகூிமைதங்கிய பேதுரு பைசானி அதிமேற்றிராணியாண்டவர் அவர்களான பிரதம போஷகரின் நன்கொடை (முதல் தவணை)	ரூ	50—0—0
சங். H. வெஸ்ட்ராப் சுவாமிகள் (பூனா), நன்கொடை	,,	10—0—0
சர். A. ஜெகநாத பிள்ளையவர்கள் (2-வது வகுப்பு ஜீவகால அங்கத்தவர்) நன்கொடை (முதல் தவணை)	,,	5—0—0
உண்டி தண்டல்	,,	41—6—4
M. M. காணிக்கம், வருட சந்தா	,,	1—0—0
P. M. வேளாங்கண்ணி	,,	0—8—0
A. நீதிமாணிக்கம், அரை வருட சந்தா	,,	0—4—0
D. S. தேவசகாயம் ,, ...	,,	0—4—0

சபையின் ஆபீசு,
சென்னை, பிராட்வே 134-வது நெம்பர்,
1921௵ பிப்ரவரி௴ 20௳.

F. C. விநோதராஜ்,
போது காரியதரிசி.

Address :—**Post Box No. 178, Madras.**

G. P. PRESS, MADRAS.

இதற்கிடையில் நமதிளவல் அவகாசமின்மையால் அவளைப் பிடிக்க நெருங்கினான். காவில்டா அதைக் கண்டு பின்வாங்கவுமில்லை, உதவி வேண்டுமெனக் கூவி ஏவலரை யழைக்கவுமில்லை; ஆனால் செபஸ்தியானை யுற்றுப்பார்த்துக்கொண்டே நடுநடுங்கிய குரலுடன், "ஆம், நீதான்! உன்னை யாரென்று தெரிந்துகொண்டேன். இதுதானா நீ எனக்குச் செய்யுங் கைம்மாறு? என்னுதவியால் சுயேச்சையடைந்த நீ என் சுயேச்சையைக் கெடுக்க முயல்கின்றாய்! டொலிடோ நகர சிறைச்சாலையில் உன் தலைக்கே தீங்கு நேரும்போலிருந்த அந்த நள்ளிரவை மறந்தனையோ?" என்று கூறினாள்.

செப.—ஆ! சிறையில் தோன்றிய அதிசய உருவம் நீதானா?

காஸில்டா.—ஆம், நான்தான்; ஆல்டிமனுடைய மகளாகிய நான்தான்.

இதைக் கேட்டதும் செபஸ்தியானுக்குத் தன்மேல் இடிவிழுந்ததுபோலிருந்தது. அவன் மனதில் தோன்றிய வருத்தத்தையுங் குழப்பத்தையும் ஒருவாறு அடக்கிக்கொண்டு, இராஜகுமாரியிடம் தான் பெற்ற உதவிக்கு நன்றியறிதல் புரியவிரும்பிப் பேச வாயெடுத்தான்.

"பேசாதே! இவ்விடத்தைவிட்டு ஓடிப்போ! தப்பித்தோடப்பார்! என் மெய்க்காப்பாளர் இங்கேவந்து உன்னைக் கண்டால், அத்துடன் நீ தொலைந்தாய் என்பது நிச்சயம்" என்று அம்மாதரசி மிக்கக் காம்பீரமாய் மொழிந்தாள்.

செப.—என்னை பேராபத்தினின்றுங் காப்பாற்றிய மாதுசிரோன்மணியின் மன்னிப்பையடையாமல் நான் இதைவிட்டு காலடியெடுத்து வைக்கவேமாட்டேன். கடுங்காவலில் இருக்கும் ஒரு நண்பருடைய நிர்ப்பாக்கிய நிலைமையாலும், நான் அவரை மீட்பதெனச் செய்துகொண்ட பிரதிக்கினையாலுமே நான் இந்த அடாத காரியத்தைச் செய்யத் துணிந்தேன்.

காஸி.—என்ன சொன்னாய்?

இராஜகுமாரியைச் சிறையெடுத்துப்போய், கார்சியாஸ் பிரபுவை விடுதலைசெய்தால்மட்டுமே அவளை அவள் தந்தையிடம் ஒப்புவிப்பது என்று தான்செய்திருந்த ஏற்பாட்டை விஸ்தாரமாய் காவில்டாவிடந் தெரிவித்தான். "ஏனெனில் கார்சியாஸ் பிரபுவின் மனைவி தன்னாலான பிரையாசையெல்லாம்பட்டு தன்னிடமிருந்த ஆடையாபரணங்கள் தட்டுமுட்டுச் சாமான்கள் முதலிய யாவற்றையும் விற்றும், அவள் கணவனை மீட்பதற்குப் போதுமான பணம் சேகரிக்கமுடியவில்லையென்று நான் தெரிந்துகொண்டுதான், கடைசியாக இந்த விபரீதச் செயலைச் செய்து முடிப்பதெனத் துணிந்தேன்" என்றான். காவில்டா வீரன் வார்த்தைகளைக் கவனமாய்க் கேட்டாள்; பிறகு அவள் கழுத்திலணிந்திருந்த வைரகண்டி மாலையைக் கழற்றி அவனிடங் கொடுத்து, "இம்மாலையின் விலை என் தந்தை கேட்குந் தொகையைவிட பன்மடங்கதிகம்!" என்று வீரனை ஓடும்படி சைகை காட்டி, வேகமாய் மண்டபத்தை நோக்கி நடந்தாள்.

"என்ன அன்பு! என்ன ஜீவகாருண்யம்! இவள் கிறீஸ்துவளாய் மட்டுமிருந்தால், கிறீஸ்துவநாடுகளில் முதன்மையான சிங்காதனத்தை அலங்கரித்தேறும் யோக்கியதையுடையவள் இவளே!" என்று செபஸ்தியான் மனதிளகினவனாய்த் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

பிறகு அவன் தன்னாபத்தான நிலைமையையுணர்ந்தவனாய் தான்வந்த வழியே திரும்பி ஓடினான். மதிற்சுவரண்டை வந்ததும் ஒரேத்தாண்டாய் தாண்டி யேறிக்குதித்து ஒரு நொடியில் தன் பரிவாரங்களுடன் சேர்ந்துகொண்டான். மறுதினம் பகல் சுமார் 12 மணிப்பொழுதுக்கு பாழடைந்த கோட்டைபோய் சேர்ந்து, அவனுக்காக ஆவலுடன் காத்திருந்த வீரர் தலைவனிடம் தான் காவில்டாவைக்கண்ட வர்த்தமானத்தை விபரமாய் எடுத்துக்கூறினான்.

"நல்லது நீ சொன்னவையனைத்துஞ் சரிதான். இனி நீ என்ன செய்ய யோசித்திருக்கிறாய்?"

"நான் உடனே சென்று இந்த வைரமாலையை விற்று பணமாக்க முயலுவேன். அவ்வாறு செய்வதற்குச் சுலபமான வழி பென்தாவீதனை நாடிச்செல்வதே" என்றான் செபஸ்தியான்.

அவன் நண்பனாகிய வீரனும் அவ்வபிப்பிராயமே சரியென்று ஆமோதிக்கவே, நமதிளவல் மறுநாள் காலையில் புறப்பட்டு ரியாஸா பட்டணத்துக்கு பிரையாணமானான்.

(இன்னும் வரும்) ச. செல்வன்.

A SHORT SKETCH OF THE LIFE OF FR. BESCHI.

சங். வீரமாமுனிவருடைய சரித்திரச் சுருக்கம்.

5-ம் பிரிவு.

(முன் தொடர்ச்சி.)

வீரமாமுனிவர் இந்தியாவுக்குவந்த ஆறு வருஷத்துக்குள் பல விடங்களுக்கு மாற்றப்பட்டுவெகுசிரத்தையுடன் வேதம்போதித்துவந்தார். தமிழ்ப்பாஷையைத் தீர்க்கக் கற்று பண்டிதரானதினுல் ஞான ஒடுக்கங்கள் ஜனங்களுக்குக் கொடுத்துவந்தார். இவர் வடுகர்ப்பேட்டையில் பங்கு விசாரணை செய்த காலத்தில் அநேகப் புது கிறீஸ்துவர்களுக்கு தியானங்கொடுத்தார். இந்த ஞான முயற்சியை அவர் எவ்வளவு உருக்கத்துடன் போதித்தாரெனில் அந்தக் கிறீஸ்துவர்கள் கண்ணீர் அழுகையோடும் உத்தம மனஸ்தாபத்தோடும் அந்த ஞான முயற்சியைச்செய்து நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து தங்கள் நடத்தையை முற்றிலும் மாற்றிக்கொண்டு உத்தம கிறீஸ்துவர்களாய் நடந்துவந்தார்கள். இதைக்கண்ட சுவாமியார் அதிக ஆறுதல்கொண்டு அநேகமுறை நூற்றுக்கணக்கான கிறீஸ்துவர்களுக்கு தியானங்கொடுத்தார்.

வீரமாமுனிவர் உபதேசிமாரை அதிகமாகக் கவனித்து அவர்கள் தங்கள் மேலான தொழிலின் கனகனத்தை உணர்ந்து அதன் கடமைகளை உத்தமமாய்ச் செலுத்தும்படி அவர்களுக்கு உபதேசித்து அப்போதைக்கப்போது எட்டு நாள் தியானங்கொடுத்துவந்தார். இந்த ஞான முயற்சி நடக்கும்போது, தங்களுக்கு விளக்கிக்காட்டப்படும் விஸ்வாச சத்தியங்களையும் ஆத்தும இரட்சண்ய அலுவலின் அவசியத்தையுங் கண்டுணர்ந்து கண்ணீர் விம்மலுடன் அந்த ஞான முயற்சியைச்செய்து தங்கள் ஞான வேலையை உற்சாகத்தோடும் சிரத்தையோடும் நிறைவேற்றிவருவார்கள். அந்த உபதேசிமார்களில் சிலர் புறத்தியாருடைய ஆத்தும இரட்சண்ய வேலையை எப்பேர்ப்பு[illegible]ரியத்தோடும் உதாரகுணத்தோடும் நடத்தினார்களெனில், தங்கள் பந்துக்களின் ஆலோசனைக் கிணங்காமல் கொள்ளைவியாதிக்காருடைய வீடுகளைச் சந்தித்து தங்களால் கூடுமான உதவி சகாயங்களைப் புரிந்துவந்ததினுல் அவர்களில் ஒரு உபதேசியார் பிரசிநேகத்தின் பலியாக அதே வியாதியால் மடிந்தார்.

இந்த ஞான ஒடுக்கத்தைச்செய்த கிறீஸ்துவர்களும் தர்ம வழியில் உத்தமமாய் ஒழுகி, சிற்சில சமயத்தில் புதுமை செய்யும் வரமும் பெற்றார்கள். அதெவ்வாறெனில்: சாகக்கிடந்த ஒருவனை ஒரு கட்டிலில் கிடத்தி அதைச் சிலர் அருகாமையிலிருந்த ஊருக்குத் தூக்கிக்கொண்டுபோனார்கள். தியானஞ்செய்தவர்களில் ஒருவனான ஒரு கிறீஸ்துவன் அந்த வழியே செல்லுகையில், வியாதிக்காரனைப்பார்த்து சேசுக்கிறீஸ்துநாதரை விஸ்வசித்து எழுந்து நடவென்றான். அவ்வாறே வியாதிக்காரன் கட்டிலைவிட்டிறங்கி நடக்கத் தொடங்கினான். சற்று நேரத்துக்குப்பின் இவன் வியாதிக்காரனை நோக்கி உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்றான். என்ன ஆச்சரியம்! சாகக்கிடந்தவன் தான் படுத்திருந்த கட்டிலை தலைமேல் சுமந்துகொண்டு நடந்துபோனான். இதைக் கண்ட கிறீஸ்துவர்களும் அஞ்ஞானிகளும் அதிசய பிரமைகொண்டார்கள்.

வீரமாமுனிவர் தேவதாயார்மீது அதிகப் பக்திவைத்து புது கிறீஸ்துவர்களும மோட்ச இராக்கினிமீது பத்திவைக்கும்படி புத்தி பிரசங்கங்களினால் அவர்களை தூண்டிவந்தார். ஏலாக்குரிச்சியில் அடைக்கலமாதாபேரால் ஒரு கோவிலைக் கட்டிவைத்து வருஷாந்தரம் அதில் மகா ஆரவாரத்துடன் திருவிழாக் கொண்டாடினார். அந்த திருவிழாவுக்கு சகல இடங்களிலுமிருந்து அனேக கிறீஸ்துவர்கள் அவ்விடம் சேர்ந்து மகா பக்தி விசுவாசத்துடன் அந்த மகா நாளைக் கொண்டாடுவார்கள். தங்களுக்கு உண்டாகும் வியாதியிலும் அபாயங்களிலும் சங்கடங்களிலும் அடைக்கலமாதாவின் நாமத்தை உச்சரித்து அவளுதவியை மன்றாடுவார்கள். ஒரு நாள் ஒரு ஊரில் நெருப்புப்பிடித்து அனேக வீடுகள் சாம்பலாயின. அன்னேரத்தில் கிறீஸ்துவர்கள் ஒரு இடத்தில் கூட்டமாய்க்கூடி தங்கள் வீடுகளை நெருப்பினின்று காப்பாற்றும்படி அடைக்கலமாதாவை மகா பக்தி விசுவாசத்துடன் மன்றாடினார்கள். அவர்கள் விசுவாசம் வீணாய்ப் போகவில்லை. அதெப்படியெனில் கிறீஸ்துவர்களுடைய வீடுகள், நெருப்புப்பிடித்து வேகும் அக்கியானிகளுடைய வீடுகளுக்கு அருகாமையிலிருந்தபோதிலும், நெருப்புப்பொறிகள் அவைகள்மேல் பறந்து விழுந்தபோதிலும், அக்கியானிகள் அதிசயித்து பிரமிக்க, கிறீஸ்துவர்கள் வீடுகள் நெருப்பால் மோசம்நேராமல் காப்பாற்றப்பட்டன. ஒரு அக்கியானி மரணவஸ்தைப்பட்டு சாகக்கிடந்தான். அவன் எவ்வளவு கேவலஸ்திதியிலிருந்தானென்னில், அவன் மரித்தானென்று எல்லோரும் நம்பினார்கள். இவனுடைய விருப்பப்பிரகாரம் தேவமாதா கோவிலுக்கு இவன் கொண்டுபோகப்பட்டு இவனுக்கு ஞானஸ்நானம் அளிக்கப்பட்டமாத்திரத்தில் பூரண சௌக்கியமாகி, எழுந்து யாதொரு உதவியுமின்றி தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான். இதைக்கண்ட அவ்வூரார் அதிசயித்தார்கள், ஆனால் அவன் வீட்டாரனைவரும் வேதத்தைக் கற்றறிந்து ஞான தீட்சை பெற்றார்கள்.

வீரமாமுனிவர் வசித்த இடத்துக்கு சற்று தூலையில் ஒரு வயலிருந்தது. அதில் பசாசு வாசஞ் செய்கிறதென்று ஜனங்களுக்குள் பிரஸ்தாபமாயிருந்தது. சில அக்கியானிகள் துணிந்து அதில் ஏர்கட்டி உழுதார்கள். சில நாளைக்குள் ஏர் கட்டினவர்களும் அதில் உழுத எருதுகளும் மாண்டன. வேறு சில அஞ்ஞானிகள் மறுபடியும் அதில் சாகுபடி செய்தபோது அவர்களுக்கும் அவர்கள் எருதுகளுக்கும் அதே கதி சம்பவித்தது. இதைக்கண்ட எந்த அஞ்ஞானியும் அதில் ஏர்கட்ட துணிந்தானில்லை. கிறீஸ்துவர்களில் சிலர் தேவமாதாவை பக்தியுடன் வேண்டிக்கொண்டு சற்றுமஞ்சாமல் அந்த வயலில் ஏர் கட்டி உழுதார்கள். அதில் வேலை செய்த ஒரு பெண்பிள்ளை நடுமத்தியானத்தில் அருகாமையிலிருந்த மரத்தடியில் படுத்து இளைப்பாறினாள். அந்நேரத்தில் நரகப் பேய் அவளுக்கு காணப்பட்டு அவளுக்குப் பல துன்பங்களை உண்டாக்குவதாக பயமுறுத்தின சமயத்தில் அவள் தேவமாதா பெயரை உச்சரித்து அந்த ஆண்டவளைப் பார்த்து வேண்டிக்கொண்டாள். உடனே, பேயானது அந்தப் பெண்பிள்ளையைப் பார்த்து "கிறீஸ்துவர்களாகிய நீங்கள் இவ்வாறு அந்த ஆண்டவளுடைய ஆதரவைத் தேடுவதால் இரட்சிக்கப்படுகிறீர்கள். அவள்மேல் பக்தியுள்ளவர்களுக்கு தின்மைசெய்ய என்னால் கூடாமல் போகிறது" என்று சொல்லி மறைந்தது.

தஞ்சாவூரில் ஒரு பூசாரி ஒருத்தியைப் பிடித்திருந்த பேயை ஓட்டிக்கொண்டிருக்கையில், கத்தோலிக்காயிருந்து பண ஆசையினிமித்தம்பதித மதத்தைச்சேர்ந்த புருஷன் பெண்சாதியான இருவர் பூசாரியினிடம்நின்றுகொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். பூசாரி பேயோட்டும்போது, ஆவேஷமானவளிடத்திலிருந்த பசாசு புறப்பட்டு அருகாமையில் நின்றுகொண்டிருந்த பதிதப் பெண்பிள்ளையைப் பிடித்துக்கொண்டது. இதைக்கண்ட பூசாரி அதிசயித்து, ஏன் இந்தப் பதிதப் பெண்பிள்ளையைப் பிடித்துக்கொண்டாயென்று வினவியபோது, நான் முன் ஆவேஷமேறின இந்து ஸ்திரீ என் சொந்தப்பொருளாயிருப்பதுபோல் இந்தப் பதிதப் பெண்பிள்ளையும் என் சொந்தப்பொருளென்றது. இதைக்கேட்ட பதிதப் பெண்பிள்ளையின் புருஷன் துக்கமும் வெட்கமுங்கொண்டு ஏலாக்குரிச்சிக்குச்சென்று, கத்தோலிக்கு வேதத்தை மறுதலித்ததுக்காக மனஸ்தாபப்பட்டு தரையில் விழுந்து மகா துக்கத்துடன் அழுது புலம்பி தன் பாதகத்துக்காக பொறுத்தல் கேட்டு தன் கண்ணீரால் நனைந்த மண்ணையெடுத்து மகா விசுவாசத்துடன் தன் மனைவியின் தலையில் வைத்தமாத்திரத்தில் பசாசு அவளைவிட்டு ஓடிப்போனது. இப்பேர்ப்பட்ட அதிசயங்களைக்கண்ட இந்துக்களும் பதிதரும் கத்தோலிக்கு வேதமே சத்திய வேதமென்று நம்பி ஞானத்தீட்சை பெற்றார்கள்.

வீரமாமுனிவர் தேவதாயார்மீது மிகவும் பக்திவைத்து அவளுடைய உதவியால் அநேக உபகாரங்களைப் பெற்றதுடன், அர்ச். கித்தேரியம்மாள்மட்டிலும் அதிகப் பக்திவைத்து, அந்தப் பக்தி மற்ற கிறீஸ்துவர்களுக்கும் உண்டாகும்படி பிரயாசைப்பட்டுவந்தார். கன்னிகையும் வேதசாட்சியுமான அர்ச். கித்தேரியம்மாள் செய்த கணக்கற்ற புதுமைகளைப்பற்றி போர்த்துக்கால் தேசத்தார் பூர்வகாலந்தொட்டு அந்த அர்ச்சியசிஷ்டவள்மீது வெகு பக்திவைத்து அவள் சகாயத்தை மன்றாடிவருகிறார்கள்.

வீரமாமுனிவர் பேர்போன அர்ச். கித்தேரியம்மாளுடைய பக்தி இந்து தேசத்திலும்பரம்பும்

படி புத்தி பிரசங்கஞ்செய்ததுடன் அந்த அர்ச்சியசிஷ்டவளுக்குத் தோத்திரமாக கித்தேரியம்மாள் அம்மானையென்னும் ஒரு காவியத்தையும் உண்டுபண்ணி பாடியிருக்கிறார். கிறீஸ்துவர்கள் கூட்டங்கூட்டமாய் ஏலாக்குரிச்சிக்குச்சென்று அவளுடைய சுருபத்தை வணங்கி அவளுடைய வேண்டுதலால் தாங்கள் பெற்றுக்கொண்ட நன்மை உபகாரங்களை சகலருக்கும் வெளிப்படுத்தி சர்வேசுரனை ஸ்துதித்தார்கள்.

1693௵ ஓரியூரில் அருளானந்த சுவாமியார் வேதத்துக்காகக் கொல்லப்பட்டாரென்று நாமனைவோரும் அறிவோம். வேதசாட்சி கொல்லப்பட்ட விஷயங்களையும், அவரால் நடந்த புதுமைகளையுங்கண்டு சாட்சிகள்மூலமாய் விசாரிக்கும்படி மைலே மேற்றிராணியார் அனேகங் குருக்களுடன் மரவன் தேசத்துக்கு புறப்பட்டபோது, தமிழ்ப்பாஷையில்தேர்ந்த வீரமாமுனிவரைத் தமது விசேஷத்துணையாகக்கூட அழைத்துக்கொண்டுபோனார். வீரமாமுனிவருடைய விடாமுயற்சியாலும் பிரயாசையாலும் வேண்டிய சங்கதிகளையெல்லாம் மேற்றிராணியாண்டவர் அறிந்துகொண்டு அவைகளை அர்ச். பாப்பானவருக்கு அனுப்பிவைத்தார். 1856ல் 9-ம் பியுஸ் என்னும் பாப்பானவர் அருளானந்த சுவாமியாருக்கு முற்றிப்பேறு பட்டம் கட்டளையிட்டார்.

வீரமாமுனிவர் எழுதிய ஒரு புஸ்தகத்தில், அருளானந்த சுவாமியாரின் வேண்டுதலால் நடந்த கணக்கற்ற புதுமைகளைப்பற்றிப் பேசி, "அந்தந்த ஊரில், அந்தந்த வீட்டில், எந்தெந்த ஜாதியானான அந்த பேர்கொண்டவனைப் பார்! அருளானந்த சுவாமியாரால் அவனுக்கு நடந்த புதுமையை அவன் வாயால் சொல்லக் கேட்பா" யென்று விவரவமாய் எருதியிருக்கிறார்.

(இன்னும் வரும்.)

J. M.

எதையாவது உனக்குப் பிரயோசனமாக அறியவும் படிக்கவும் நீ ஆசைப்பட்டால், "நீ பிறரால் அறியப்படாதிருப்பதையும் நீ ஒன்றுமில்லாமையென்று பிறரால் மதிக்கப்படுவதையும் நேசி."

தன்னைப்பற்றி யாதொரு நல்ல எண்ணங் கொள்ளாததும், பிறரைப்பற்றி எப்போதும் நன்றாகவும் மேலாகவும் நினைப்பதுவுமே உயர்ந்த ஞானம்; உன்னத உத்தமதனம்.

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.)

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

பெரியதாழை.
அர்ச். பிரான்சீஸ் சவியேர் வாசகசாலை வருஷப்பூர்த்தி மகோற்சவக்கூட்டம்.

ஐயா!

ஜனவரி௴ 9உயாகிய ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு அர்ச். விக்டோரியா மாதா கோவில்முன் விஸ்தீரணமான மைதானத்தில் கூட்டத்திற்கென்று நியமிக்கப்பட்டிருந்த இடம் பலவர்னக் கொடிகளாலும், மலர்களாலும், துவஜதோரணங்களாலும், தீவட்டி, சையினலாம்பு முதலிய தீபாலங்காரங்களாலும் ஜோடினை பெற்றிருக்கக் கூட்டத்தின், சபாநாயகராக, எங்க்ள் பங்கு விசாரணை, கனம் மரியசூசைநாதர் சுவாமியவர்களைக் கூட்டம் சங்கீதத்துடன் அழைத்துவந்ததும், வழக்கம்போல் இஸ்பிரீத்துசாந்துவே வாரும் என்ற சங்கீதத்துடன் மிக்க அலங்காரமாய் அமைக்கப்பட்டிருந்த ஆசனத்தில், (கரகோஷத்துடன்) அவர் அக்கிராசனம் வகிக்கக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கனம் அக்கிராசனாதிபதியவர்கள் முகவுரையாக வாசகசாலை யடையக்கூடிய நன்மைகள் அனந்தமெனவும் அத்தாலடையவேண்டிய பயன் பலவெனவும் இன்னுமனேக புத்திமதிகளையும் வெகு இனிமையாக சொல்லி முடிந்ததும், (கரகோஷம்) வாசகசாலைப் பஜனைக் கமிட்டியார் பஜனை ஆரம்பித்து முடிக்க, ஸ்ரீமான் C. M. P. பெர்னாந்து அவர்கள் ஜப்பான் தேசத்தின் முன்னேற்றத்தையிட்டும், ஸ்ரீமான் சேசுக்கோஸ்தா அவர்கள் பாரதரின் பூர்வீக மகிமையையிட்டும், ஸ்ரீமான் S. பெர்னாந்து வாயிஸ் அவர்கள் கல்வியினவசியத்தையிட்டும், ஸ்ரீமான் செபமாலை வாயிஸ் அவர்கள் மதுபானத்தால் ஏற்படும் கஷ்டநஷ்டத்தையிட்டும், ஸ்ரீமான் ச. குரூஸ் பெர்னாந்து அவர்கள் ஒற்றுமை என்னும் விஷயத்தையிட்டும், முறையே உபந்நியாசித்தார்கள். ஒவ்வொரு உபந்நியாசகர்க் கிடைக்கிடையே பஜனை நடந்தேறியது.

ஸ்ரீமான் பெர்னாந்துவாயிஸ் அவர்கள் வாசகசாலைக் கட்டிட ஸ்தாபகவிஷயமாய் பொருள் உதவி செய்துவருகிற கனதனவான்களுக்கும், பணப்பிரிவு ஜாபிதாவைப் பெற்று, பொதுநலமே சுயநலமாகக் கருதிப் பிரையாசித்துவரும் னவான்களுக்கும் வாசகசாலையார் வெகு நன்றியறிதலுள்ளவர்களாகக் கடமைப்பட்டிருப்பதாவும், பரத மக்களின் நன்னோக்கம் ஒன்றே காண்டு ஸ்தாபித்த இவ்வாசகசாலை கட்டிடதியைப் போஷித்துழைத்துவருகிற கனதனான்களுடைய இகபர நன்மைக்காக, வாசகசாலைப் பாதுகாவலனும், சிஷ்டசவியேர் முனீந்திரனைப் பிரார்த்தனை செய்வதாகவும், அனேக ன்றியறிதலுடன் பாராட்டி புகழ்ந்து பேசினார். (கரகோஷம்)

கனம் மரியசூசைநாதர் சுவாமியவர்கள் முடிரையில் இவ்வாசகசாலையை எவ்வளவும் நல்ல றக்கியமாக ஒன்றுசேர்ந்து உழைத்துவர ஒவ்வொருவரையும் உற்சாகமூட்டி அனேக மேலான ல்ல கிருத்தியங்களை எடுத்துச் சொல்லிமுடித்தார்கள். (கரகோஷம்)

கடவுள் நமது பாப்பரசரைக் காப்பாராக ன்ற கீதம்பாட வெகு ரூபலாவண்ணியமாய் சித்ரிக்கப்பட்டிருந்த அர்ச். பிரான்சீஸ் சவியேர் கரூல் மூன்று வேஷதாரருடன் வாசகசாலைலிருந்து கூட்டத்திற்குக் கொண்டுவரவே கூட்த்திற்கு சமூகம் தந்திருந்த அனைவோருடன் வட்டி தீபாலங்காரத்துடனும் சையினுக்கடுதாசிராம்பும் பலவர்னக்கொடிகளாலும் அணிவகுத்து ர்பினு, பிற்றில், தப்லாக், அக்காடின், மௌத்கார்கன் முதலிய சங்கீதக்கருவிகள் தொனிக்க பஜனைக் கமிட்டியார் வெகு இனிமையாகப் பாட்டுகளைப்பாடி ஊர்சுற்றிவர வாசகசாலைக்கு முன் நிறுத்தப்பட்டு அனேக வாழ்த்துக்கவிகளைப்பாடி வெகு பேரொலியுடன் முழங்க இரவு 10½ மணியளவில் கூட்டம் முடிவுபெற்றது.

உபகாரியதரிசி. T. J. VAIS.

சிலோன்.

கத்தோலிக்கரின் நன்மையே பெரிதெனக் கருதும் கனம் "நல்லாயன்" பத்திராதிபரவர்களுக்கு,

தங்களினது மகத்தான பெப்ரவரி௴ சஞ்சிகையில் ஒத்துழையாமை பரிஷ்கார விஷயத்தைப்பற்றியும் அதன் தலைவரான மகாத்மா காந்தியவர்கள் மாணவர்களுக்கு உபதேசஞ்செய்யும் பான்மையைப்பற்றியும் ஓர் முதுமொழியை ஆதாரமாகக்கொண்டு அதற்கொப்பாகவே ஒத்துழையாமை திட்டம் உருப்படுத்தியிருப்பதாக வரையப்பட்டிருந்தது.

இதை ஆட்சேபிக்க முன்வந்த நான் ஓர் சிறந்த கத்தோலிக்கனும் அர்ச். சவேரியாரின் ஞானப்பிள்ளை வம்ஸத்தைச்சார்ந்த பூரத மரபினனுமெனத் தெரியப்படுத்துவதோடு ஒத்துழையாமையே இந்தியர்களாகிய நம்மவர்களுக்கு பூரண சுயராஜியத்தைக் கொடுத்து சம்பன்னராய் வாழ ஏற்ற வழியும் ஒப்பற்ற ஔஷதமுமாயிருப்பதோடு அதன் தலைவர்களில் முதன்மையாகிய மகாத்மா காந்தி மாணவருக்கு உபதேசம் செய்யும் பான்மையானது அவரது சிறந்த தேசசேவையை மெச்சி அதின்படி மாணவர்கள் நடந்துகொள்ளின் ஒரு வருடமல்ல 9 மாதத்திற்குள் அம்மகத்தான சுய நிர்ணயம் கிடைத்தே தீருமென்பதை தைரியமாய் தெரியப்படுத்துகிறேன். அவை அவ்வாறிருக்க சுதந்தர புருஷராய் வாழ கத்தோலிக்காகிய நாம் மட்டும் பின்வாங்கும் காரணம் யாது? சுய நிர்ணய சட்டம் ஏற்பட்டால் நம்மதத்திற்கு நேரும் விபத்துதானென்ன? தற்போதைய கவர்ண்மென்டின்கீழிருப்பதால் நமக்கு அதிக செல்வாக்கு கொடுத்திருப்பதுதானென்ன? இவைமுதலிய விஷயங்களை தக்க ஆதாரத்தோடு தாங்களாவது சந்தா நேயர்களாவது மேற்கூறிய சந்தேகத்தை நிவர்த்திசெய்ய முன்வருவார்களானால் நானும் இதே கொள்கையுடைய இன்னும் அநேகரும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். ஆதலால் காலதாமதமின்றி மறு சஞ்சிகையிலேயே விடை கிடைக்குமென எதிர்நோக்கும்,

தங்கள் பிரிய வைப்பார் புலி
M. I. பர்னாந்தீஸ்.

[பின்வரும் கடிதத்தில் இக்கடித நேயருக்கு கூடுமானவரையிலும் போதுமான விடை கிடைக்கப்பெற்றிருக்கின்றதென்பது எமது அபிப்பிராயம். ப—ர்.]

புதுக்கோட்டை.

புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள பிரியமுள்ள சகோதரர்களே, கனவான்களே, நமது

சமஸ்தானத்தின் பிரதான நகரமாகிய புதுக்கோட்டையில் பிரிட்டிஷ் கவர்ண்மென்டு செலுத்தும் நீதிபரிபாலன விஷயத்தில் பலர் பலவிதமாய்ப் பேசுகிருர்கள். கனவான்களே :— ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று பொதுஜனசமூக நன்மையை உத்தேசித்துச் செய்யும் எந்த வேலையிலும், யாருக்கும் யாதொரு துன்பத்தையாவது, கஸ்தியையாவது, அவமானத்தையாவது உண்டுபண்ணுவது பொதுஜன நன்மையாகமாட்டாது. உலகமானது 2 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஆளுவோர், ஆளப்படுவோர். இவ்விருவகுப்பாரும், மனச்சமாதானம் உடையவராகவே யிருக்கவேண்டியது. இவ்விருவகுப்பில் மனச்சமாதான குறைவு ஏற்படுமாஞல் தேசத்தில் குழப்பம், சண்டை முதலிய தொந்தரவுகள் நேரிடுவது சகஜம். இந்நிலைமையில் இவ்விருதாரத்தாருடைய ஒழுங்கின் மேரையை சற்று கவனிப்போம். முதலாவது : ஆளுவோர் நிலைமை எப்படிப்பட்டதாகும் ; தேசபரிபாலன வகையில் பார்த்தால் எல்லாவற்றிற்கும் கீழேயுள்ள வட்டம் கர்ணம் தனது தாலுக்கா தாசில்தாரிடமிருந்தும், தாலுக்கா தாசில்தார் தனது டிஸ்டிரிக்ட் கலெக்டரிடமிருந்தும், கலெக்டர் தனது பிரிசிடென்சி கவர்ணரிடமிருந்தும், கவர்ணர் அரசரிடமிருந்தும், அரசர் தமது தேசபிரஜைகளின் சம்மதத்தோடு கடவுளிடமிருந்தும் அதிகாரம் பெற்றவர்களாகிருர்கள். முறையே ஒவ்வொருவரும் தம்தம் அதிகாரவரம்புக்குள்பட்ட ஜனங்களை ஆளப் பாத்தியமுடைவர்களாகிருர்கள். இதுநிற்க, இரண்டாவதாகிய ஆளப்படுவோர் நிலைமை எப்படியென்று பார்ப்போம். உலகம் ஆதிதுடங்கி ஆளுவோராகிய முதல்வருக்கு ஆளப்படுவோராகிய இரண்டாவது வகுப்பார் மனத்திருப்தியுடன் கீழ்ப்படிந்து நடந்துவந்ததாகவே தேச சரித்திரங்களில் நாம் படித்திருக்கிறோம். உரோமையர் உலக ஏக சக்ராதிபதியாய் அரசாண்டகாலத்தையும், பின் மற்ற அரசர்கள் தம்தம் நாட்டை செங்கோல் செலுத்தியகாலத்தையும் கவனித்துப்பார்த்தால் தம் அதிகாரவரம்புக்குட்பட்ட அதிகாரிகளிடம் ஜனங்கள் ராஜவிஸ்வாசத்துடன் பெரும்பாலும் அடங்கி நடந்துவந்ததாகவே காணப்படுகின்றது. சிற்சில சமயங்களில் சிறிதேனும் தொந்தரவுகள் இம்முறைக்கு விரோதமாய்க் காணப்பட்ட விடத்தும் அவை உலகின்கண் ஒருபொருட்டென்று சொல்லத்தகாதொழிய அது நீளித்தகாலமும் வெகு சொற்பமாகவேயிருக்கும். ஆகையால் ஆளுவோருக்கு, ஆளப்படுவோர் அதிகார வரம்பிலும் நீதிமுறையிலும் வழுவாதொழுக கடமைப்பட்டவர்களே.

ஓர் குடும்பத்திற்கு ஓர் தகப்பனும், ஓர் ஊருக்கு ஓர் தலைவனும், ஓர் நாட்டிற்கு ஓர் அதிபதியும், ஓர் தேசத்திற்கு ஓர் அரசனும் அவசரம். இம்முறை தவறுமாஞல், எல்லாம் கலகம், எல்லாம் குழப்பம்; மனச்சமாதானம், மனதிருப்தியென்பது கிடையவே கிடையாது. இப்படியிருக்க நம்மிந்தியா தேசமானது சொஞ்சகாலத்திற்குமுன் அன்னிபெசண்டு, டிலாக், காந்தி என்னப்பட்டவர்களால் தூண்டப்பட்டு அபரிமிதமான ஓர்வித கிளர்ச்சிக்கு உள்ளாயிருக்கிறது. அக்கிளர்ச்சியானது நாளுக்கு நாள் விருத்தாப்பியர்முதல் பால்யர்வரையிலுமுள்ள சகலருடைய இருதயத்தையும் கவர்ந்துகொண்டேபோகிறது. அத்தகைய் விசேஷம் பயனைத் தருமோவென்னும் கேள்விதான் இதில் முக்கியமானது. அதை யோசிக்குங்கால் முற்றிலும் சந்தேகத்துக்கே இடம் தருகின்றது. நமது தேசவாசிகள் தங்கள் இந்து புராணங்களில் விளக்கியிருப்பதற்கொப்ப முற்காலத்தில் பிரபல்ய புத்திமான்களும், வீர பராக்கிரமசாலிகளும், படிப்பில் தேறிய வித்வான்களும் இருந்ததாகவே காணப்படுகின்றன. ஆஞல் பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்தியாவுக்கு வருமுன் தேச நீதிபரிபாலனம் ஒழுங்காய் நடைபெற்றதாக தேச சரித்திரங்களில் காணப்படவில்லை. வெட்டும், குத்தும், கொலையும், திருட்டும், அக்கிரமங்களும் இருந்ததாகவே காணப்படுகின்றன. அப்போது நாகரீகமானபடிப்பு இல்லை. இப்போது நாகரீகமான படிப்பு உண்டு. அதிலிருந்து எவ்வளவோ செய்யத்திராணியுண்டென்று சொல்லப்படுமாயின் அதையும் கொஞ்சம் யோசிக்கவேண்டும். இப்போது அப்பேர்ப்பட்ட மேலானபுத்தி நாகரீகம், நமக்கிருக்குமாஞல் மிகவும் நல்லதுதான். ஆஞல் அதற்கு ஊற்றுக்கண் எங்கேயிருந்துவருகிறது? மேல்நாட்டு கிணற்றிலிருந்தல்லவா? இதை எல்லோரும் ஏகோபித்து ஒப்புக்கொள்வாரென்றே நினைக்கிறேன். கிணற்றை மூடிவிட்டால் ஊற்றுக்கண் அடைபட்டுப் போகுமல்லவா? தாயைக் கொன்று பாலைக் குடிக்கும் குழந்தையை காண்பதரிது. இந்நிலைமையில் ஓர் கேள்விக்கு இடமுண்டு. நமது கவர்ண்மென்டாரிடத்தில் நாம் ஒன்றுமே கேட்கக்கூடாதாவென்ற கேள்வி இதில் முக்கியம். நமது கஷ்டங்களைச் சொல்லி நிவர்த்தித்துக்கொள்ள எப்பொழுதுமே நமக்கு சர்வ பாத்தியமுமுண்டு. ஆஞல் மட்டுதிட்டத்தோடேயும், ஒழுங்கோடேயும் கேட்பதிஞல் நமது கேள்வி வீண்போகமாட்டாது. இதற்கு விரோதமாய் Mr. டிலாக், காந்தி இவர்கள் சொல்வதுபோல ஒத்துழையாமலிருத்தலும், தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தலும், மாணவர்களை பள்ளிக்கூடங்களை விட்டுவிடச் செய்தலும் ஆகிய இவைமுதலியவை சிரிப்புக்கும் நகைப்புக்கும் இடமாயிருப்பதே தவிர வேறே என்ன பயனைத் தரக்கூடும்? நமது மாட்சிமைதங்கிய பிரிட்டிஷ் ஆதிக்கம் இதுவரை இந்தியாவுக்கு செய்த கெடுதியை ருஜூப்படுத்தவல்லவஞர்? ஒருவேளை கவர்ன்மெண்டு செய்யுங் காரியங்கள் நம்மவரில் சிலருடைய மனதிற்குக் கெடுதியாகத் தோன்றக்கூடுமேயொழிய, வாஸ்தவத்தில் கெடுதியென்று ருஜூப்படுத்த ஒரு ஆதாரமும் காஞேம்; ஒரு ஆதாரமும் கொடுக்கவும் முடியாதென்பது நிச்சயம். சகல பவரிலும் அளவுகடந்ததும், தேச நீதிபரிபாலன விஷயத்தில் சொல்லொண்ணு திறமைவாய்ந்ததுமான மாக்ஷிமைதங்கிய பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் தன்மையை நாம் அறியவேணுமாஞல், மற்ற தேச சட்டங்களோடு, நம் அன்புள்ள பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு சட்டங்களை ஒப்பிட்டுப் பார்த்தலே போதுமானதாகும். அப்படியிருக்கக் குறைகூறுவதும் துவேஷிப்பதும் நன்றிகெட்ட தன்மையேயாகும். இந்நெருப்பு எம் புதுக்கோட்டை சமஸ்தானத்திலும் நுழைந்துவிட்டது பெரும் விசனத்துக்குரியதே. ஆயினும் புதுக்கோட்டையிலுள்ள எம் சகோதரர்களென்ன, படிப்பு, ஐஸ்வரியம், உத்தியோகம்வாய்ந்த கனவான்களென்ன, இவர்கள் இக்கொள்ளி நெருப்பில் கால் வைக்கமாட்டார்களென்பது எனது கோரிக்கை. கடவுளும் அதற்கிசைந்தவண்ணம் அநுக்கிரகித்தருள்வாராக.

S. M. CASIMIR.

நமது "நல்ல ஆயன்" பத்திராதிபர் சங். A. R. ஜான் சுவாமியார் அவர்கள் குருப்பட்டம் தரித்த வெள்ளி ஜூபிலி.

பாப்புமார்கள், மேற்றிராணிமார்கள், குருமார்கள் தேவ திராட்சத்தோட்டத்தில் உழைத்துவரும் கால அளவில் 25 அல்லது 50 அல்லது 60 வருஷகாலம் முடிந்தால் முறையே வெள்ளி ஜூபிலியென்றும், சுவர்ன ஜூபிலியென்றும், வைர ஜூபிலியென்றும் கொண்டாடுவது தொன்றுதொட்டு நடந்துவரும் வழக்கம். இத்தகைய கொண்டாட்டம் கொண்டாடவேண்டியது அவசியம். ஒருபக்கம் அங்ஙனம் உழைத்துவரும் தேவ ஊழியர்கள்மட்டிலும் மறுபக்கம் அவர்கள் உழைப்பின் பலனை அநுபவிததுவரும் விசுவாசிகள்மட்டிலும் உண்டு. தேவ ஊழியர்களோவெனில் தாங்கள் அத்தனை வருஷகாலம் அவ்வூழியத்தைப் புரிந்துவர அநுக்கிரகஞ்செய்த கடவுளுக்கு நன்றிசெலுத்தி முன்னிலும் அவ்வூழியத்தைத் தொடர்ந்து நடத்த தேவ சகாயத்தை மன்றாடுவார்கள். விசுவாசிகளோவெனில் தங்களுடைய இகபர நன்மைகளுக்குக் கடவுளுக்குப்பிறகு காரணஸ்தராயிருந்த அத்தேவ ஊழியர்களுக்கு நன்றி செலுத்தி அவர்களை வாழ்த்திப் புகழ்ந்து அவர்களுக்குத் தீர்க்காயுசும் பூரண சுகமும் அருள்புரியும்படி கடவுளைப் பார்த்து மன்றாடுவார்கள்.

"நல்லாயன்" என்னும் அருமைவாய்ந்த நாமத்தைப் பூண்டு தேவ ஆயனுக்குண்டான இலட்சணத்துடன் தமிழ் கிறீஸ்துவர்களாகிய நம்மைத் தேற்றி, உபசரித்து, நமக்கு நற்புத்தி புகட்டிவரும் மாதாந்திரப் பத்திரிகையை திறமை சாமர்த்தியத்துடன் நடத்திவரும் சங்கைக்குரிய A. R. ஜான் சுவாமியாரவர்கள் குருப்பட்டம் பெற்று நிகழும் 1921ஞு பெப்ரவரிமீ 17-ந் தேதியோடு சரியாய் 25 வருஷம் முடிந்தது.

இப்பத்திரிகையானது சுமார் ஏறக்குறைய 2,000 சந்தாதாரர்களால் சன்மானிக்கப்பட்டு வருகிறதென்பதொன்றே இதன் பெருமையை விளக்கப்போதியது. படத்தின் பெருமை சித்திரந் தீர்த்தவனைச் சார்வதுபோல் இப்பத்திரிகையின் பெருமை A. R. ஜான் சுவாமிகளைச் சாரும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கமான காரியம். கொடிய யுத்தகாலத்தில்—

என் இன்னமுந்தான்—காகிதம், மை முதலிய அச்சு சாமான்களின் விலை அபாரமாய் ஏறிப் போயிருக்கிறகாலத்தில் எத்தனையோ பத்திரிகைகள் மறைந்து ஒழிந்தபோதிலும், விசேஷ ஆதார திரவியம் இல்லாத இப்பத்திரிகை எவ்வித குறைபாடும் முறைப்பாடுமின்றி சாவி கொடுக்கப்பட்ட கடியாரத்தைப்போல் கிரமமாய் நடைபெற்றுவருவது ஒரு விசேஷம். தானிய தவசத்தின் விலை ஏறிப்போன காரணத்தினாலும் எஜமானருக்கும் ஊழியருக்கும் முன்னிருந்த பரஸ்பர விசுவாசம்போய் ஊழியர்கள் அற்ப சொற்ப காரணங்களுக்கெல்லாம் வேலைநிறுத்தம் செய்யும் தொத்துவியாதி காட்டைப் பிடித்த நெருப்பைப்போல் பரவிவரும் இக்காலத்தில் 'அன்பு' என்னும் தடைமருந்தின் சக்தியால் அவ்வியாதி 'நல்லாயன்' ஆபீஸை அண்டாமல் போனது ஒரு விசேஷம். பத்திரிகை வெளிவருவது ஒன்றே போதாதென்பதுபோல கூடவே இடைக்கிடை காலத்தை அநுசரித்து சிறும் பெரும் புஸ்தகங்கள் பிரசுரமாவது அதிலும் விசேஷம். இத்யாதி விஷயங்களை நாம் பற்றும்பற்றாய் யோசித்துவருங்காலையில் சங். சுவாமியார் அவர்களுடைய சாமர்த்தியத்திற்கும், விடாமுயற்சிக்கும், உழைப்பிற்கும், மற்றும் குணலட்சணங்களுக்கும் கத்தோலிக்குத் தமிழ் உலகம் விசேஷமாய் பத்திரிகையின் சந்தாதாராகிய நாம் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆதலால் இன்னும் இரண்டொரு மாதத்தில் அவருடைய குருத்துவ வெள்ளி ஜூபிலி கொண்டாடப்படுங்காலையில், அவருடைய உழைப்பின் பலனுள் பெரும் பாகத்தை யனுபவித்து வருபவர்களாகிய நாமும் நன்றி மறப்பது நன்றன்று என்னும் முதுமொழியை யநுசரித்து, அவ்வைபவத்தில் கலந்து 'நல்லாயன்' சந்தாதாரர்களின் ஜூபிலி காணிக்கையென்று ஒரு காணிக்கையை நமது நன்றியறிதலின் அறிகுறியாக அவருக்குச் சமர்ப்பித்து, அவரை வாழ்த்திப் புகழ்ந்து, அவருக்குச் சில மாதங்களுக்குமுன் நேர்ந்த மரணபாயமான வியாதியிலிருந்து அவரைக் காத்திரட்சித்த சர்வ வல்லபமுள்ள கடவுளுக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அவருக்குப் பூரண சுகமும் மனோதிடனும், இன்னும் தம்முடைய சுவர்ன ஜூபிலி, வைர ஜூபிலி ஆகிய சம்பவங்களைக் காணும்படியான தீர்க்காயுசும் அருள்புரியும்படியாக மன்றாடுவது நியாயம்.

சந்தாதாரர்களும், மற்றும் சங். குருவானவர்மட்டில் அபிமானங்கொண்ட அனைவரும் அடியேனுடைய விண்ணப்பத்தை அங்கீகாரஞ் செய்து தங்களால் இயன்றது—குறைந்தது தலைக்கு 8 அணா விழுக்காடாவது—'நல்லாயன்' பத்திராதிபருடைய குருத்துவ ஜூபிலி பண்டுக்கென்று Mr. M. P. குழந்தைசாமி பிள்ளை, 2/74, பிராட்வே, மதராஸ் என்றவிலாசத்துக்கு அனுப்பிவைத்தால், 'பலதுளி பெருவெள்ளம்' என்னும் முதுமொழிப்படி நல்ல ஜூபிலி பண்டு சேர, அத்தொகையை ஜூபிலி தினத்தன்று அவருக்குக் காணிக்கை செலுத்தக்கூடும். இப்படிச்செய்தால், நன்றியறிதல் என்னும் நமது கடமையை நிறைவேற்றினோம் என்னும் மனோதிருப்தி நமக்குண்டாவதுடன் தமது ஊழியர்மட்டில் காட்டும் வணக்கத்திற்காக கடவுளும் நம்மை ஆசீர்வதிப்பார்.

சங்கைக்குரிய பத்திராதிபரவர்கள் இக்கடிதத்தை தங்களுடைய பத்திரிகையின் ஓர் கோணத்தில் பிரசுரிக்கும்படியாகவும், சந்தாதாரர்கள், அபிமானிகள் இவ்விண்ணத்தை அநுசரித்து அனுப்பிவைக்கும் நன்கொடைகளை 'நல்லாயன்' பத்திராதிபர் குருத்துவ ஜூபிலி பண்டு என்னும் தலைப்பின்கீழ் விவரத்துடன் பிரசுரிக்கும்படியாகவும் வேண்டுகிறேன்.

Bangalore,
15—2—1921. K. JOSEPH.

இந்திய கத்தோலிக்கரின் பொதுஜனக் கூட்டம்.

1921௵ பெப்ரவரி௴ 20-ந் தேதி, மாலை 5 மணிக்கு சென்னை, புதுப்பேட்டை அர்ச். அந்தோனியார் பள்ளிக்கூடத்தில் கூடிய இந்திய கத்தோலிக்கரின் பொதுக்கூட்டத்தில் பின்வருந் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

1. சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த நல்லாயன் பத்திராதிபர், சங். ஜான் சுவாமியார், பாக்காலா பங்கு குருவானவர், சங். சாவியேர் சுவாமியார், இராயவரம் பங்கு குருவானவர், சங். சாவியேர் சுவாமியார் இவர்கள் மூவரும் நமதாண்டவரின் திராட்சசோலையில் கடந்த 25 வருஷங்களாய் பிரமாணிக்கத்துடன் உழைத்துவந்த இந்திய குருக்களானமையால், அம்மூவருடையவும் வெள்ளி ஜூபிலியைத் தக்கவிதமாக இவ்வருஷம் ஜூன்௴ 12-ந் தேதி கொண்டாடிச் சிறப்பித்தல்.

2. இந்த நல்ல விஷயத்துக்கான பணத் தண்டல் முதலிய காரியங்களைக் கவனித்து ஏற்பாடுசெய்ய 12 அங்கத்தினர் சேர்ந்த ஒரு காரிய நிர்வாக சபையை நேமித்தல். இதன் காரியதரிசி வேப்பேரி ம-ா-ா-ஸ்ரீ தம்பிப் பிள்ளையவர்கள். இந்த சபையில் வேறு அங்கத்தினரை வேண்டுமானால் சேர்த்துக்கொள்ளலாம்.

3. இந்த ஜூபிலி திருநாள் கொண்டாட்டம் சென்னை அதிமேற்றிராசனத்தில் பல பாகங்களில் உழைத்த மூன்று குருக்களுக்கும் பொதுவாயிருக்குமாகையால், சென்னையிலும் வெளி ஜில்லாக்களிலும் உள்ள இந்திய கத்தோலிக்கர் எல்லோரையும் இக்காரியத்துக்குப் பொருளுதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ளுதல்.

மேற்கூறிய மூன்றாவது தீர்மானத்தின்படி இந்த ஜூபிலிக்குப் பொருள் உதவி தனியாகவோ, தண்டல்செய்தோ அநுப்பவிரும்புவோர், சென்னை, வேப்பேரி, 2, வடமலைப்பிள்ளை தெரு, ம-ா-ா-ஸ்ரீ தம்பிப் பிள்ளையவர்களுக்கு எழுதும்படியாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை, 25—2—21. *S. Selva Raju.*

[அடுத்த மாத சஞ்சிகையில் புத்தந்துறை கடிதமும், சிங்கப்பூர் கடிதமும் வெளியாகும். ப—ர்.]

MARIAN CONGRESS.

மரியாயின் மகா சங்கம்.

இந்தியா, பர்மா, சிலோனைச்சேர்ந்த அதிமேற்றிராசன, மேற்றிராசன, அதிமேற்றிராணிமார்களும் மேற்றிராணிமார்களும் பிரதிநிதிகளும் விஜயமாயிருக்க, கான்ஸ்டன்ஸா நகர் அதிமேற்றிராணியாராகிய மிகவும் வந்திக்கத்தக்க பேதுரு பைசானி ஆண்டவரவர்கள் பரிசுத்த பிதாவாம் 15-ம் ஆசீர்வாதப்பரின் பிரதிநிதியாக அக்கிராசனம் வகிக்க, நாளது 1921௵ ஜனவரி௴ 4, 5, 6-ந் தேதிகளில் நடைபெற்ற மரியாயின் மகா சங்கத்தின்போது தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களும், பிரேரணைகளும்.

மரியாயும் கத்தோலிக்கு சீவியமும்.

I. கத்தோலிக்கு இல்லம் :—கத்தோலிக்கு இல்லங்கள் கூடுமானவரையில் நசரேத்தூரில் வசித்துவந்த திருக்குடும்ப இல்லத்துக்கு ஒத்ததானவைகளாயிருத்தல். அன்றியும் கத்தோலிக்கு இல்லங்களனைத்தையும் இவ்வித நிலைமைக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் செய்ய முயலுதல்.

ஆனபடியால்—(1) ஒவ்வொரு பங்கு விசாரணையிலும் "கத்தோலிக்கு இல்ல சபை" என்றழைக்கப்படும் ஒரு சபையை ஏற்படுத்தவேண்டுமென்றும், இச்சபைபெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் சர்வேசுரன் மட்டிலும், தங்களுக்குள் ஒருவர் ஒருவர் மட்டிலும், புறத்தியார்மட்டிலுமுள்ள கடமைகளைச் சுட்டிக்காட்டும்படிக்கான வழிவகைகளை நிர்ணயிக்கவேண்டுமென்றும், ஒரு குடும்பம் மெய்யான கத்தோலிக்கு குடும்பமாக விளங்க அதன் நல்லொழுக்கத்துக்குரிய ஒழுங்கு திட்டங்களை சௌகரித்துக் கொடுக்கவேண்டுமென்றும், (2) இவையனைத்தும் அந்தந்த மேற்றிராசன மேற்றிராணியாருடையவும் அந்தந்த பங்கைச் சேர்ந்த பங்கு சுவாமியாருடையவும் அனுமதியின்பேரில் தாமதமின்றி வெளிவர வேண்டுமென்றும், (1892–1893௵ ஜூன்௴ 14௳) 13-ம் சிங்கராயரென்னும் அர்ச். பாப்பானவர் திருக்குடும்ப சபையாருக்கு விடுத்த நிருபத்தை யொட்டினதாயும், பற்பல பத்திரிகைகளில் இவ்விஷயமாய்ப் பிரே

ரிக்கப்பட்டவைகளையும், அந்தந்த இடத்தையும் அந்தந்த கிறீஸ்துவர்களுடைய அனுசரணையையும் பொருந்தினதாயுமிருக்கவேண்டுமென்றும், (3) இச்சபைகள் சாஸ்வதமாய் நிலைத்திருந்து நடவடிக்கைகளை நிறைவேற்றும்பொருட்டு ஒவ்வொரு சபையும் அததன் நடவடிக்கைகளின் விருத்தாந்தத்தை வருஷா வருஷமும் அததன் மேற்றிராணியாருக்கு அறிவிக்கவேண்டுமென்றும் இம் மகா சங்கம் பிரேரிக்கின்றது.

இதற்கனுகுணமாக, கத்தோலிக்குதாய்மார்கள் (1) தேவமாதாவின் வணக்கத்துக்கடுத்த புத்தகங்களையும் பத்திரிகைகளையும் வாசிக்கவேண்டுமென்றும், (2) தங்கள் வீடுகளில் அசங்கியமான படங்களை வைக்காமல் பக்திக்குரிய கத்தோலிக்குப் படங்களை வைக்கவேண்டுமென்றும், (3) கன்னிப் பெண்களுக்கும், கலியாணப் பெண்களுக்கும், தாய்மார்களுக்கும் மாதிரிகையாயிருக்கும் அர்ச். கன்னிமரியாயைத் தங்கள் குமாரத்திகள் கண்டுபாவிக்கும்படி அவ்வாண்டவளுடைய சீவிய வரலாறுகளடங்கிய புத்தகங்களை அவர்கள் வாசிக்கும்படிச் செய்ய வேண்டுமென்றும் பிரேரிக்கப்படுகிறது.

II. கத்தோலிக்கு ஆரம்ப கல்வி :— (1) கத்தோலிக்கு பிள்ளைகள் ஒவ்வொருவரும் அவர்கள் எவ்வந்தஸ்தினராயிருப்பினும் இலெளகிக ஆரம்பக் கல்வியைத் தக்க உபாத்தியாயர்களிடங் கற்கவேண்டும். அவர்கள் படிக்கும் பள்ளிக்கூடங்கள் கத்தோலிக்கு பள்ளிக்கூடங்களாயும், அவைகளில் கற்பிக்கும் உபாத்திமார்கள் கத்தோலிக்கர்களாயும், வேத சத்தியங்களை நன்றாய் கற்றறிந்து போதிக்கத் திறமைவாய்ந்தவர்களாயுமிருத்தல். (2) அநேக தேசங்களில் சர்க்கார் பள்ளிக்கூடங்களில் ஆரம்பக் கல்வியை கட்டாயக்கல்வியாகப் படிப்பித்துவருகிறபடியால் நம்முடைய கத்தோலிக்குப் பிள்ளைகளுக்கு வேத விஷயத்தில் யாதோர் கெடுதி வாக்கூடுமென்பது.

ஆனபடியால்—(1) ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் இவ்விஷயங்களை கண்காணிப்பதற்காக ஓர் அதிகாரி நியமிக்கப்படவேண்டுமென்றும், அவர் அந்த மேற்றிராசனத்தில் பாடசாலைக்குப் போகத்தக்க வயதுள்ள பிள்ளைகள் எத்தனை பெயரென்றும், அவர்களில் எத்தனை பெயர் கத்தோலிக்குப் பாடசாலைகளில் படித்துவருகிறார்களென்றும், இதர பாடசாலைகளில் படித்துவருகிறவர்களுண்டானால் அதற்குண்டான காரணம் இன்னதென்றும், பாடசாலைகளின் வைதிக லெளகிக ஸ்திதி எத்தன்மையானதென்றும் இவைமுதலியவைகளைத் தீர ஆராய்ந்து மேற்றிராசனத் தலைவருக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும், (2) கத்தோலிக்கு பிள்ளைகளின் பாடசாலைகளை சுலபமாய் அதிகமாக்கவும் நிருவகிக்கவும் வேண்டிய நிதியைச் சேர்ப்பதில் உடன்பட்டுழைக்கவேண்டுமென்றும் இச்சங்கம் பிரேரிக்கின்றது.

(இன்னும் வரும்)

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

ஓர் விசேஷ வேண்டுகோள்.—இப்பத்திரிகையில் தலையங்கமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கும் "நல்ல ஆயன்" பத்திரிகையெனும் வியாசத்தை எமது சந்தாதாரர்களனைவரும் சிறிது கவனஞ்செலுத்தி வாசிக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்தியாவுக்குவந்த முதல் ஜேர்மன் கப்பல்.—மகா யுத்தத்தின்பின் பிரான்பெல்ஸ் என்ற ஸ்டீமர் ஜெர்மன் கொடியுடன் ஜனவரிமாதத்தில் காராச்சி துறைமுகம்வந்து நங்கூரம் இட்டதாம்.

ஏ. யி. ரேன்கான்டர் துரையவர்கள்.—இந்தத் துரையவர்களைச் சென்னை சட்டசபையின் அங்கத்தினராக நியமித்திருக்கிறார்களெனக் கேட்டுப் பெரிதும் சந்தோஷிக்கிறோம். இவர் பொதுநலப்பிரியரும், பெருந்தன்மையும், பரோபகாரமும், உதார குணமும் வாய்ந்த ஓர் நல்ல கத்தோலிக்குச் சீமான். இப்போது சென்னை சட்ட சபையிலுள்ள கத்தோலிக்கர் இவரோடு நான்கு பேர் ஆவர்.

அதிக நீண்ட பகல்.—ஐரோப்பாவின் வடபாகமாகிய நார்வேயின் வடகோடியில் மே மாதம் 21-ம் தேதிமுதல் ஜூலை மாதம் 22-ம் தேதிவரையில் இரவே யில்லாமல் 60 நாளும் ஒரே பகலாயிருக்கிறது. வடதுருவத்தில் 6 மாதங்கொண்டவொரே பகலும் 6 மாதங்கொண்ட ஒரே இரவுந்தானுண்டு.

அட்லான்டிக் மகா சமுத்திரம்.—இம் மகா சமுத்திரம் எவ்வளவு விரிந்து பாவியுள்ளதெனில், உலகின்கண்ணுள்ள பூபாகங்களனைத்தையும் அதன் மூன்றில் ஓர் பாகத்தில் அடக்கிப்போடலாமாம்.

நாற்பது நாளில் நாலடுக்கு மெத்தை வீடு.—அமெரிக்காவில் இரும்பும் சிமிட்டியுஞ்சேர்த்து 546 அடி நீளமும் 186 அடி அகலமும் நாலடுக்கு உயரமுமுள்ள மெத்தைவீடொன்றை அவ்விடத்துக் கொல்லத்துக்காரர் 40 நாளில் கட்டி முடித்தனராம்.

புது கவர்னர் ஜெனரல்.—நம்மிந்தியாவுக்கு கவர்னர் ஜனாலாக வாவிருக்கும் லார்டு ரீடிங் என்ற பிரபவர்கள் இங்கிலாந்திலிருந்து தமது பத்தினியாரோடு புறப்பட்டு இஜிப்டிலுள்ள கெய்ரோ பட்டணத்துக்கு நாளது மாதம் 23-ம் தேதி வந்துசேர்வாரென்றும், அவ்விடத்தில் லார்டு ஆலன்பி என்ற பிரபுவால் உபசரிக்கப்படுவாரென்றுந் தெரிய வருகிறது.

திருநாள் விளம்பரம்.—கோலாலம்பூர் சென்றல் ஒற்குஷாப்பு அர்ச். சூசையப்பருடைய பரிபாலனத் திருநாள் 1921ளு ஏப்பரல்மீ 8உ வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கி; ஒவ்வொரு நாளிலும் குறிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவருடைய உபயம் நடைபெற்றுக் கடைசி நாளாகிய 17-ந் உ ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மூன்று சப்பரச் சுற்றுப்பிரகாரம், சுரூப ஆசீர்வாதத்துடன் முடிவுபெறுமென ஒருவர் எழுதியுள்ளார்.

பூர்வீக் தஸ்தாவேஜுகள்.—பற்பல தேசங்களுக்கு வேதபோதகர்களாய்ச் சென்ற சேசு சபைக் குருமார்கள் அந்தந்த தேசங்களினின்று வேதம் பரம்புதல் விஷயமாய்த் தங்கள் சேசு சபை அதிசிரேஷ்டருக்கு எழுதியனுப்பியுள்ள பூர்வீக தஸ்தாவேஜுகள் நாற்பத்தெட்டு வாலியங்களடங்கியவை ஹெர்கான்ராய் எட்கார் என்பவரின் புத்தகசாலையினின்றெடுக்கப்பட்டு, லட்சத்துப் பதினாயிரம் டாலருக்கு நியுயார்க்குப் பட்டணத்தில் ஏலத்தில் விற்கப்பட்டனவாம்.

தபால் இலாகா.—இந்த இலாகாவைச் சேர்ந்த ஆபீசுகள் சென்ற 1920-ம் வருஷத்திய கணக்கின்படி 19,439 என்றும், அவைகளில் அலுவல் பார்க்கிறவர்கள் 100,894 பேர்களென்றும் செலவுபோக கிடைத்த வரும்படி ரூ. 73,64,682 என்றும் சொல்லப்படுகிறது. இந்த இலாகாவினால் சர்க்காருக்கு நல்ல இலாபமுண்டாவதுமல்லாமல் ஜனங்களுக்கும் அதிக் செளகரியமும் பிரயோசனமு முண்டாகிறது.

வேப்பேரி இந்திய கன்னியர் மடம்.—இம்மடத்தில் சென்றமீ 2உ இருவர் நவ கன்னியாஸ்திரி பட்டமும், ஐவர் கன்னியாஸ்திரி பட்டமும் பெற்றனர். இவர்கள் சர்வேசுரனுடைய மகிமைக்காகவும், ஆத்துமங்களின் இரட்சண்யத்துக்காகவும் நல்ல சுகமும் நீடிய ஆயுளும்பெற்று பல்லாண்டு பாடுபட்டுவரவும், இவர்களுடைய மடம் வளர்பிறைபோல் வளர்ந்து விருத்தியாகவும் கருணையங் கடவுள் கருணைபுரிவாராக.

கர்தினலாகிய கிப்பன்ஸ் ஆண்டவர் அவர்கள்.—இவர் அமெரிக்காவில் பெரும் கீர்த்தியும் வாய்ந்து எல்லோராலும் மிக்க மதிக்கப்பெற்றுவரும் மகா பெரிய கர்தினல். இவர் 87 வயதுள்ள வயோதிபர். 1854-ம் ஆண்டில் உரோமாபுரியில் வத்திக்கான் அரண்மனையில் கூடின மகா சங்கத்திற்கு உலகத்தின் பல பாகங்களிலிருந்துவந்து விஜயஞ்செய்திருந்த அனேகானேக கர்தினல்மார்கள், அதிமேற்றிராணிமார்கள், மேற்றிராணிமார்கள், குருப்பிரசாதி முதலானோருக்குள் இன்னும் உயிரோடிருப்பவர் இவர் ஒருவரே. இவர் இப்போது மிக்க அசெளக்கியமுற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவர் இன்னும் பல்லாண்டு திருச்சபைக்குத் துணையாயிருக்க சர்வேசுரன் கிருபைபுரிவாராக.

ஒலிவேத்து மலையும் மனந்திரும்பிய யூதரும்.—மனந்திரும்பி சத்திய கத்தோலிக்கு வேதத்துக்குவந்து சேர்ந்த யூதர்களிற் சிலர் ஜெருசலேமுக்கருகிலுள்ள ஒலிவேத்து மலையின்பேரில் கட்டப்பட்ட இருதய சேசுநாதருடைய தேவாலயத்தைச் சேர்ந்தாப்போல் ஒரு கோவில் கட்டுகிறதென்றும், அங்குள்ள யூத கிறீஸ்துவர்கள் அனைவருஞ்சேர்ந்து உரோமாபுரிக்குத் திருயாத்திரைபோய், கத்தோலிக்கு மதத்தைச்

சேர்ந்த உலக மடங்கலுமுள்ள எல்லா யூதரின் நாமதேயங்களுந் தங்க அட்சரத்தால் பதியப்பெற்ற ஓர் புத்தகத்தை அர்ச். பாப்பானவருக்குப் பாதகாணிக்கையாய் சமர்ப்பிக்கிறதென்றும், அங்கிருந்து ஜெருசலேமுக்குத் திரும்பிவந்து சியோன் கன்னியாஸ்திரி மடத்தில் " இதோ மனிதன் " என்ற பெரிய தேவாலயத்தில் தங்கி, சேசுநாதருக்கு நேர்ந்த சகல நிந்தையவமானங்களுக்கும் பரிகாரஞ்செய்கிறதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்ளாம்.

கருதினல்மார்கள்.—நாளது 1921-ம் வருஷத்தில் உலக மடங்கலுமுள்ள கருதினல்மார்களின் மொத்த தொகை 58 என்றும், அவர்களில் 30 பேர் இத்தாலியரும், 28 பேர் வேறுபல ஜாதியாருமென்றுந் தெரியவருகிறது. இவர்களில் கேள்விமூலமாயும் பத்திரிகைகள்மூலமாயும் பரிச்சயமுள்ள சில கருதினல்மார்களின் வயதையும், அவர்கள் கருதினல்பட்டத்தை வகித்து வருகிற கால அளவையும் இதனடியில் குறித்திருக்கிறோம்.

நாமதேயம்	தேசம்	வயது	கருதினல் பட்டம் வகித்த காலம்
கர்தினல் தெ காபிரியேரெஸ்	பிரஞ்சு	91	10 வருஷம்
கிப்பன்ஸ்	அமெரிக்கா	87	34 ,,
வானுதெல்லி	ரோம்	85	32 ,,
பிகின்	கனடா	81	7 ,,
லோக்	ஐர்லாண்டு	81	28 ,,
காஸ்கெட்	ரோம்	75	7 ,,
மெர்சியர்	பெல்ஜியம்	70	14 ,,
தெ லாய்	ரோம்	68	14 ,,
வான்ரோசம்	ரோம்	67	10 ,,
ஓ கான்னெல்	அமெரிக்கா	62	10 ,,
போர்ன்	இங்கிலாண்டு	60	10 ,,
மெர்ரிடெல் வால்	ரோம்	56	18 ,,

எல்லோரிலுங் கொஞ்சம் வயதுள்ளவர் ஆஸ்காலெசி என்ற இத்தாலிய கருதினல். இவருக்கு வயது 49 மாத்திரமே.

முதிர்ந்த குருப்பிரசாதி.—வட அமெரிக்காவைச் சேர்ந்த கனடா மாகாணத்திலுள்ள மானிடோபா நகரத்தில் சங். டமேசுஸ் டான்டுரான்ட் என்னும் பெயருடைய கத்தோலிக்குக் குருவானவர் தாம் குருப்பட்டம்பெற்ற தினத்தின் 79-ம் வருடபூர்த்தி விழாவை சமீபத்தில் கொண்டாடினாராம். இவருக்கு தற்போது வயது 101 என்றும், இந்தத் தளர்ந்த வயதிலும் அவர் தம் ஞான அலுவலை அணுவளவும் பிசகாது நடத்துவதோடு இராஜீய விஷயமாகவும் வெகு விமரிசையுடன் நடந்துவருகிறாரென்றும் சொல்லப்படுகிறது. "வேத நூற்பிராய நூறு" என்ற வயது திட்டத்தையும் கடந்து வெற்றி பெற்ற இந்த பிரமாணிக்கமுள்ள ஊழியனுக்கு சர்வேசுரன் தீர்க்காயுளையும், திடகாத்திரத்தையுங் கட்டளையிட்டருள்வாராக.

கத்தோலிக்கு இந்தியர் பரோபகார சபை.—இப்பத்திரிகைக்கு அனுபந்தமாக இதனுள் அடக்கியனுப்பப்பட்டிருக்கும்இச்சபையின் விண்ணப்பத்தை நமது சந்தாதாரர்கள் சன்மானியாமற்போகாரென்பது நமக்குள்ள நம்பிக்கை. ஜாதிபேதம்பாராட்டாத கத்தோலிக்குக் கிறீஸ்துவ சகோதரர்களுடைய முன்னேற்றமே இச்சபையின் நோக்கமும் கருத்துமாயிருப்பதனால் இஃது எல்லோருடைய அநுதாபத்துக்கும், உதார குணத்துக்கும், ஒற்றுமைப்புக்கும் உரியது. இச்சபையை சர்வேசுரன் ஆசீர்வதிப்பாராக!

சென்னை டிராம்வே வேலை நிறுத்தம்.—சென்ற ஒரு மாதத்துக்கதிகமாய் வேலை நிறுத்தம் செய்திருந்த டிராம்வே தொழிலாளர்கள் சென்றமீ 26வ முதல் வேலைக்குத் திரும்பிவந்துவிட்டார்கள். டிராம்வே வண்டிகள் பழயபடி எல்லா பிரிவுகளிலும் ஓடிக்கொண்டிருக்கின்றன. தொழிலாளர்கள் எக்கருத்துக்காக வேலை நிறுத்தஞ் செய்தார்களோ அக்கருத்து நிறைவேறவில்லையென்றும், டிராம்வே கம்பெனியார் சொன்ன நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டே தொழிலாளர்கள் திரும்பவும் வேலையை ஒப்புக்கொண்டிருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது.

பாப்பு ஸ்தானதிபதியின் சுற்றுப்பிரயாணம்.—நமது பரிசுத்த பாப்பானவரின் கிழக்கு இந்திய ஸ்தானாதிபதியாகிய மிக. வந். பீட்டர் பைசானி ஆண்டவரவர்கள் சென்றமீ 26வ இலங்கைக்குச் சுற்றுப்பிரயாணமாய்ப் புறப்பட்டுவிட்டார்கள். இம்மாதம் 10வவரையில் கொழும்பில் தங்கியிருந்துவிட்டு, கண்டிக்கு 11வ புறப்பட்டுப்போய் அங்கு 20வவரையில் தாமதித்திருந்து, பிறகு நியூரெலியாவுக்குப்போய் அங்கு இரண்டு மாதம் அதாவது மேமீ

20-ந் தேதிவரையில் தங்கியிருப்பார். அவர்களுக்கு கடிதமெழுதுபவர்கள் மேற்கண்ட இடங்களுக்கு எழுதிக்கொள்ளலாம்.

மதுபான அபிவிருத்தி.—அபிவிருத்தியாக வேண்டுமென்று ஆவலாய் விரும்பப்படும் அநேக நற்காரியங்களெல்லாம் விருத்திமுகங்காட்டாது சோம்பியிருக்க், "ஒழி," "தவிர்," "நீக்கு," "போக்கு," "தடு," "தள்ளு," என்று "டெம்பரென்ஸ் சொசைடி," என்னும் எண்ணிறந்த மதுவிலக்குச் சபைகளாலும், குருக்கள் முதலிய பெரியோர்களாலும் பலகாலும் கண்டிக்கப்பட்ட இந்த மதுபானம் தினேதினே விருத்தியாகி வருவதானது தேசாபிமானிகள் யாவருக்கும் மனவருத்தத்தை உண்டுபண்ணமற் போகாது? ஆப்காரி இலாகா வெளியிட்ட வருஷாந்த ரிப்போர்ட்டிலிருந்து எடுக்கப்பட்ட பின்கண்ட விவரங்களால் மதுபான அபிவிருத்தி நன்கு புலப்படும் :—

	1918—19.		1919—20.
நாட்டுச் சாராயத்தின் பேரில் வசூலான வரிப்பணம்.	ரூ. 189 லட்சம்	...	ரூ. 220 லட்சம்
கள்ளுக் குத்தகை வசூல் தொகை.	215 ,,	...	249 ,,
கள்ளுக்கடையின் சங்கியை.	10,727	...	11,034

பீங்கான் நாணயம்.—பண்டமாற்றுக்காக ஏற்பட்ட நாணயங்கள் முதன்முதல் தங்கத்தினாலும், பிறகு வெள்ளியாலும், கடைசியாய்ச் செம்பினாலும் செய்யப்பட்டு வழங்கிவந்தன நெடுநாளாய். அதன்பிறகு, காகித நாணயங்கள், அதாவது நோட்டுகள் வழங்கலாயின. பின் நிக்கல் என்னும் வெள்ளைச்செம்பையொத்த ஒரு கூட்டு உலோகத்தால் செய்யப்படலாயின. இந்த ஐரோப்பா யுத்தத்தின்பிறகு இரும்பு நாணயங்களும், காகித அட்டை நாணயங்களும் வழங்கத் துவக்கி, இப்போது ஜெர்மனியைச் சேர்ந்த சாக்ஸனி என்ற மாகாணத்தில் பீங்கானல் வெகு அழகாகச் செய்யப்பட்ட நாணயங்கள் வழங்குகின்றனவாம். "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்பதற்கேற்ப அரசன் எதைக்கொடுத்து எப்படி அழைக்கச் சொல்லுகிறானோ அப்படியே பிரஜைகள் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

3-வது வகுப்பு ரெயில்வே பிரயாணிகள்.—மூன்றாவது வகுப்பு ரெயில்வே பிரயாணிகள் டிக்கட்டு வாங்கும்போதும், வாங்கி ஸ்டேஷன் பிளாட் பாரத்துக்குள் நுழையும்போதும், ரெயில்வண்டியில் ஏறும்போதும், அங்கு பிரயாணம் செய்யும்போதும், பிறகு குறித்தவிடத்தில் இறங்கும்வரையிலும் படுந் துன்பங்கள், அல்லல்கள் கொஞ்சமல்லவென்பது ஜெகத்பிரசித்தம். இவர்களைக் கவனித்து இவர்கள் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்காக ஒவ்வொரு ஸ்டேஷன்களிலும், வழி நெடுகவும் சூப்பரின்டெண்டுகள் நியமிக்கப்பட வேண்டுமென சட்ட சபையில் ஸ்ரீமான் இரங்காச்சாரியார் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேறியது. இத்தகைய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டபிறகு நமது 3-வது வகுப்புப் பிரயாணிகளின் நிலைமை எவ்வாறிருக்கிறதென தெரிந்தபின்னரே பின்னும் அது விஷயமாய் வேண்டும் பரிகாரம் நிர்ணயிக்கப்படவேண்டும்.

சென்சஸ்.—10 வருஷங்களுக் கொருமுறை யெடுக்கப்படும் கனிஷ்வாரிக் கணக்கெனும் ஜனக்கணிதம் இம்மாதம் 17, 18, 19-ம் தேதிகளில் எடுக்கப்படும். அந்த மூன்று நாட்களிலும் இந்த இராஜதானியில் எல்லா கவர்ன்மெண்ட் ஆபீசுகளும், பள்ளிக்கூடங்களும் மூடப்படும். இக்கணக்கின் விஷயமாய் நமது கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் கவனிக்கத்தக்கது ஒன்றுண்டு. இதுகாறும் தங்களுக்குப் புரோடஸ்டான்டாரென்று பெருமையாய்ப் பெயரிட்டுக்கொண்டிருந்த பதிதர்கள் தற்போது தங்களையும் கத்தோலிக்கரென்று சொல்லிக்கொள்ளத் தலைப்பட்டுவிட்டார்கள். ஆனபடியால் ஜனக்கணக்கெடுக்க வரும் உத்தியோகஸ்தரிடத்தில் நமது கிறீஸ்துவர்கள் தங்களை **உரோமான் கத்தோலிக்க**ரென்று சொல்லி பதிவு செய்ய மறக்கப்படாது.

அறிக்கை.

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் வருஷாந்தப் பொதுக்கூட்டம் 1921ளு மார்ச்சுமீ 28வ சென்னையில் நடைபெறும்.

அது கூட்டப்படும் இடமும், நேரமும் பின்னால் அறிக்கை செய்யப்படும். கத்தோலிக்கர் அனைவரும் அக்கூட்டத்துக்கு விஜயஞ்செய்யும்படி மனப்பூர்வமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கிளைச்சங்கங்களால் அனுப்பப்படும் பிரதிநிதிகளுக்குப் பிரவேசச்சீட்டுகள் கொடுக்கப்படும். பிரதிநிதிகளல்லாத அங்கத்தினர்களும், விஜயஞ்செய்ய விரும்பும் ஏனையோர்களும் கீழே கைச்சாத்திட்டிருப்பவருக்கு எழுதிக்கொண்டால் அவர்களுக்கு விசேஷ இடவசதிச்சீட்டுகள் அனுப்பப்படும். கூட்டத்தின்முன் யாதோர் பிரேரணை கொண்டுவர விரும்புபவர்கள் 15 நாளைக்குமுன் காரியதரிசிக்கு அறிக்கை செய்யவேண்டுமென்ற நிபந்தனையடங்கிய 30-வது ஒழுங்கு அங்கத்தினர்களுக்கு நினைவூட்டப்படுகின்றது.

(உத்தாவின்படி)

சென்னை, 24—22—1.

த. அருமைநாதப் பிள்ளை,
கௌரவ காரியதரிசி,
9, கிழக்கு மாடவீதி,
மைலாப்பூர்.



பொன் கில்ட் ஸ்பிரிங்கு ப்ரேஸ்லெட் கெடியாரம்.

இது பார்வைக்கு வெகு அழகுடையது. முழுமையும் பொன் கில்ட் போட்டது. நேர்த்தியான வேலைத்தாமுள்ளது. சிறிய கைக்கும் பெரிய கைக்கும் உபயோகிக்க ஸ்பிரிங்கு வில் இசைத்திருக்கிறது. சரியான காலம் காட்டக்கூடிய நல்ல கெடியாரம். உயர்ந்த சாமான்களால் செய்யப்பட்டது. புருஷர்களும் ஸ்ரீகளும் கையில் தரிக்க வெகு சுந்திரமுள்ளது. விலை சகாயம். பொன்கில்ட் ஸ்பிரிங் ப்ரேஸ்லெட் கெடியாரம். 1-க்கு ரூபா 8—8—0.

ஷை கெடியாரம் செக்கனுண்டும் பேன்சி மெடல் டயலுமுள்ளது. ரூபா 9—8—0.



ரோல்ட்கோல்ட் ரிஸ்லெட் ரேடியம் கெடியாரம்.

இதைப் பார்ப்பவர்கள் அசல் பொன் கெடியாரமென்றே சொல்லுவார்கள். இதன்மீதுள்ள தங்கபூச்சு 5 வருஷம்வரை தேயாமல் இருக்கும். இரவில் மணி நன்றாய்த் தெரியும். சரியான காலம் காட்டக்கூடியது. உாத்த சாமான்களால் தயார் செய்யப்பட்டது. இதைப் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். உயர்ந்த தோல்பட்டையுடன் ரோல்ட்கோல்ட் ரிஸ்லெட் ரேடியம் கெடியாரம் 1-க்கு ரூபா 13.

நம்மிடம் அநேகவித கெடியாரங்கள் கிடைக்கும். பெரிய கேட்லாக்கு வேண்டியவர்களுக்கு இனாமாய் அனுப்பப்படும்.

சி. எ. செங்கல்வராய நாயுடு,
நெ. 25, பெருமாள் கோவில் தோட்டம், 1-வது தெருவு, மதறாஸ்.

விஷபேதி.

கால்ராவென்னும் மிகக் கொடிய ரோகமானது தற்போது அநேக இடங்களிற் றோன்றி அநேக உயிர்களைக் கொள்ளைகொண்டுபோகின்றது. ஆபத்திற்கிடமான இவ்வியாதி விசேஷமாக இராக்காலங்களிற்றான் தோன்றுவது சகஜம். இந்தக் கொடூர ரோகத்திற்கு நெடுநாள் தவஞ்செய்து பெற்ற அரிய மித்திரனைப்போல் வெகுகால ஆராய்ச்சியில் கண்டுபிடித்த "அமெரிக்கன் ஒரிஜனல் கால்ரா மிக்சர்" என்ற மருந்தே மேலானது. இந்த மருந்தை உபயோகித்த ஒரு கேஸாவது தவாவில்லை. எத்தேசத்திலும், எக்காலத்திலும் எவ்வித பத்தியமுமின்றி உபயோகிக்கலாம். எல்லாவித வயிற்றுப்போக்குக்கும் கைகண்டது. வெளியூர் ஏஜெண்டுகள் தேவை. தக்கக் கமிஷன் கொடுக்கப்படும். புட்டி ஒன்றுக்கு விலை ரூபாய் ஒன்று.

அமெரிக்கன் ஒரிஜனல் கம்பேனி,
55, திருவேங்கட நாய்க்கன் தெரு,
புதுப்பேட்டை, சென்னை.

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சோாத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 19. } ஏப்பிரல் 1921. { இலக்கம் 4.

THE ANNUNCIATION.
மங்களவார்த்தைத் திருநாள்.

இந்தத் திருநாள் மார்ச்சுமீ 25-ந் தேதி கொண்டாடப்படும் திருநாள். இவ்வருஷம் மார்ச்சுமீ 25 உ அர்ச்சியசிஷ்ட வாரத்தில் வா நேர்ந்ததைப் பற்றி இந்தத் திருநாள் நாளதுமீ 4உ கொண்டாடப்படும். இந்தத் திருநாள் தேவகுமாரனாகிய சுதனை சர்வேசுரன் அர்ச். கன்னிமரியாயின் திரு உதாத்தில் மனுக்குலத்தை மீட்டிரட்சிக்க மனிதாவதாரம் எடுத்த பாம இரகசியத்தை நமக்கு ஞாபகப்படுத்துகின்றது. ஆனபடியால் இப்பாம இரகசியத்தின்பேரில் சிறிது சிந்திப்போமாக.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் I. 27–38 வசனங்களில் "தாவீது கோத்திரத்தாராகிய சூசையப்பரென்னப்பட்ட ஓர் மனிதனுக்கு விவாகபந்தனமான ஓர் கன்னிகையிடத்தில் காபிரியேல் என்னுஞ் சம்மனசு சர்வேசுரனால் அனுப்பப்பட்டார். அந்தக் கன்னிகையோவென்றால் மரியாயி என்ற நாமத்தையுடையவளாம். தேவதூதன் அவளிருந்த இடத்திற் பிரவேசித்துப் பிரியதத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க, கர்த்தர் உம்முடனே பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே என்றார். இந்த வாக்கியத்தைக் கேட்டமாத்திரத்தில் மரியாயி கலங்கி இம் மங்களம் ஏதென்று சிந்தித்திருக்கையில், பாமதூதன் அவளை நோக்கி: மரியாயே நீர் அஞ்சவேண்டாம், ஏனென்றால், சர்வேசுரனிடத்தில் கிருபை பெற்றிருக்கிறீர். இதோ உமது உதாத்தில் கருப்பந்தரித்து ஓர் குமாரனைப் பெற்றெடுப்பீர். அந்தப் பிள்ளைக்கு சேசுவென்கிற நாமதேயஞ் சூட்டுவீராக. அவர் மாட்சிமையுள்ளவராகி உன்னதமானவருடைய சுதனென்னப்படுவார். ஆண்டவரான சர்வேசுரன் அவர் தந்தையான தாவீதின் சிங்காசனத்தை அவருக் களிப்பார். ஆதலால், அவர் யாக்கோபின் கோத்திரத்தில் என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய அரசாட்சிக்கு முடிவிராதென்றார். அப்போது மரியாயி தேவதூதனைப்பார்த்து, இதெப்படியாகும் நான் புருஷனை அறியேனே என்று சொல்ல, தேவதூதன் மாறுத்தாரமாக இஸ்பிரீத்துசாந்து உமதுமேல் எழுந்தருள உன்னதருடைய வல்லபமானது உமக்கு நிழல் செய்யுமாகையால் உம்மிடத்தில் பிறக்கும் பரிசுத்தர் தேவசுதனென்னப்படுவார். அல்லாமலும்; இதோ உமது பந்துவாகிய எலிசபேத்தும் தனது முதிர் வயதில் ஓர் புத்திர

ளைக் கருப்பந்தரித்து மலடி என்னப்பட்ட அவளுக்கு இது ஆறுமாதமாகிறது. ஏனென்றால் சர்வேசுரனால் கூடாதது ஒன்றுமில்லை என்றார். அப்போது மரியாயி சொன்னது, இதோ ஆண்டவருடைய அடிமையானவள் உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவதென்றாள். என்றவுடனே வானவன் அவளைவிட்டு அகன்றுபோனார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வாக்கியங்கள் நமக்கு விளக்கிக் காட்டுவதென்ன? அர்ச். சூசையப்பருக்கும் அர்ச். கன்னிமரியாயிக்கும் விவாகம் நடந்தபடியால், அவர்களிருவரும் மெய்யான புருஷனும் பெண்சாதியுமென்றும், விவாக பந்தனத்தின்படி அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் விசுவாச பிரமாணிக்கமுள்ளவர்களாயிருந்துவந்தாலும், சமுசாரிகளைப் போல் வாழாமல், சகோதரன் சகோதரியைப் போல் வாழ்ந்துவந்தார்களென்றும், ஆனபடியால் கபிரியேல் சம்மனசானவர் அர்ச். கன்னிமரியாயிக்கு "இதோ உமது உதரத்தில் கருப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெற்றெடுப்பீர். அந்தப் பிள்ளைக்கு சேசுவென்கிற நாமதேயஞ் சூட்டுவீராக" என்று அறிவித்தபோது, அவள் "இதெப்படியாகும் நான் புருஷனை அறியேனே" என்று சொன்னதினால், தாம் விவாகபந்தனமுள்ளவளாயினும், புருஷனை யறியக்கூடாத அந்தஸ்தில், அதாவது கன்னியாஸ்திரி அந்தஸ்தில் மரணகாலமட்டுமிருக்கக் கடமைப்பட்டுள்ளவளென்று சம்மனசானவருக்கு அறிவித்தாளென்றும், அப்போது சம்மனசானவர் அவளுடைய கற்புக்கு யாதோர் பழுதும் நேராமல் இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரன் தமது வல்லமையினால் அவளது திரு உதரத்தில் சுதனாகிய சர்வேசுரனுக்கு ஓர் சரீரத்தை உருவாக்குவாரென்று சொல்லக் கேட்டதின்பேரில், அவள் "இதோ ஆண்டவருடைய அடிமையானவள் உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவது" என்று சொல்லி, தெய்வ சித்தத்துக் கமைந்து, சுதனான சர்வேசுரனைத் தமது கருப்பத்தில் பிள்ளையாகத் தரிக்கச் சம்மதித்தாளென்றும் நமக்கு ஸ்பஷ்டமாகத் தெரியவருகின்றது.

ஆனதுபற்றி, அர்ச். கன்னிமரியாயி "இதோ ஆண்டவருடைய அடிமையானவள் உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவது" என்று சொன்னமாத்திரத்தில் அவளது நிர்மல உதரத்தில் நிகழ்ந்த அற்புத ஆச்சரியம், அல்லது சுபாவத்துக்கு மேலான சம்பவமென்ன? ஆதியில் ஆதாமை எப்படி சர்வேசுரன் மண்ணால் உருவாக்கினாரோ, அப்படி இப்போது இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரன் அர்ச். கன்னிமரியாயின் நிர்மல இரத்தத்தைக்கொண்டு அவளது கர்ப்பத்தில் சுதனாகிய சர்வேசுரனுக்கு ஓர் சரீரத்தை * சகல உறுப்புகளுடன் சம்பூரணமாய் உண்டாக்கினதுமல்லாமல் ஒரு ஆத்துமத்தையும் † (அவ்வாத்துமமும் குறைவற்ற புத்தி விவரம் நிறைந்துள்ளதாயிருந்தது) படைத்து, இவ்விரண்டையுஞ் ஒன்றிக்கும் அதே க்ஷணத்தில் சுதனான சர்வேசுரன் அந்த சரீரத்தோடும் ஆத்துமத்தோடும் தம்மை எவ்வளவு ஐக்கியமாய், எவ்வளவு அந்நியோந்நியமாய், எவ்வளவு பொருத்தமாய், எவ்வளவு இறுக்கமாய் பந்தனப்படுத்தினாரென்றால் இதுவரையிலும் தேவனாகமட்டுமிருந்தவர் இப்போது நம்மைப்போல் மனிதனாகவும் அவதாரமானார். அதாவது, அவாது தேவ ஆளில் தேவ சுபாவமும் மனித சுபாவமும் ஐக்கியமாயிற்று. இதுவே தேவகுமாரன் மனிதாவதாரமெடுத்த பரம இரகசியமாகும். தேவன் என்னும் வகையில் அவருக்கு பிதாவான சர்வேசுரனே தகப்பன்—தாயில்லை. மனிதன் என்னும் வகையில் அவருக்குத் தகப்பனில்லை. இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரனாவது அர்ச். சூசையப்பராவது அவருக்கு தகப்பன் ஆகமாட்டார்களென்பது வெளிப்படை—தாயோ அர்ச். கன்னிமரியம்மாள். இக்கன்னிகை தேவகுமாரனை கருப்பந்தரித்தபடியால் தேவமாதாவென்றும் அழைக்கப்படுவது நியாயத்திலும் நியாயமே.

மேற்சொன்னபடி சுதனாகிய சர்வேசுரன் சர்வேசுரனாயிருந்துகொண்டே நம்மை இரட்சிக்கமனிதாவதாரமெடுத்திராவிட்டால் நமக்கு இரட்சண்ணியபாக்கியங் கிடைக்கப் பெறுவோமோ? பெறமாட்டோம். ஏனெனில், மனிதன் யார்? சர்வேசுரன் யார்? மனிதனோ தூசியும் தூளியும், ஊத்தையும் கசுமாலமுமானவன். சர்வேசுரனோ உத்தம சம்பன்னரும், உதாரகுணசீலரும், ஒப்பற்ற மாட்சிமையும், சிறப்பும், வல்லமையும் பொருந்திய அளவில்லா சகல நன்மை சொரூபி. இவ்வளவு தாழ்வும் இழிவும்பொருந்திய மனிதன் அவ்வளவு உயர்வும் உந்நதமும்பொருந்திய சர்வேசுரனை பாவத்தினால் பழித்து அவமதிப்பானானால், அவரைத் துவேஷித்து நிந்திப்பானானால் அந்த அவமானமும் நிந்தனையும் எப்பேர்ப்பட்டதாகும்! அவன் அவைகளுக்குப் பரிகாரஞ்செய்ய வல்லவனாவானோ? அவமதிக்கிற வஸ்துவுக்கும் அவமதிக்கப்படுகிற வஸ்துவுக்கும் எவ்வளவு வித்தியாசமுண்டோ அவ்வளவு பெரிய தோஷமும் துரோகமுமாகும் அந்த அவமானமென்று வேதசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆகையினால், அளவில்லா சர்வேசுரனுக்கு அளவுள்ள மனிதன் பாவத்தினால் புரியும் இரண்டகமும் துரோகமும் பரிகரிக்கமுடியாததாகும். தனக்குச் சமானமான வேறொரு அரசனால் அரசன் ஒருவன் நிந்திக்கப்படுவானானால், நிந்திக்கிற அரசன் நிந்திக்கப்படுகிற அரசனுக்கு பரிகாரஞ்செய்யவாகும். ஆனால், ஒரு பிச்சைக்காரன் அந்த அரசனை அவமதிப்பானானால் அந்த அவமதிப்பை அவனால் சரியானபடி உத்தரிக்க முடியாது. இப்படியே ஒரு சிருஷ்டியான நீச மனிதன் சகல சிருஷ்டிகளையும்விட அளவில்லாத மேரையாய் உயர்ந்தவரான சர்வேசுரனுக்கு பாவத்தினால் வருவித்த அவமானத்துக்குப் பரிகாரஞ்செய்யமுடியாதன்றோ? ஆனபடியால், சுதனான சர்வேசுரன் தமக்குச் சரிசமானமான பிதாவான சர்வேசுரனுக்கு நம்முடைய பாவாக்கிரமங்களினால் உண்டாகும் நிந்தை அவமானங்களுக்குத் தக்க பரிகாரஞ்செய்து, நம்மைப் பசாசின் அடிமைத்தனத்தினின்று மீட்கவும், நாம் இழந்துபோன மோட்சபாக்கியத்தை நமக்கு அடைந்துகொடுக்கவும் மனிதாவதாரம் செய்தார்.

* சுபாவ முறையில் இப்படி நிகழ்வதன்று. பெண்சாதியானவள் புருஷன் உதவியைக் கொண்டு தன் உதரத்தில் கருதரித்தபிறகு அக்கரு காலக்கிரமத்தில் தான் உருவாகும்.

† சுபாவ முறையில் கருவுடன் ஆத்துமம் உண்டாகிறதில்லை. காலத்தில் அது சர்வேசுரனால் உண்டாக்கப்படுகிறது.

இப்படியாக மனிதாவதாரஞ்செய்த நமதிரட்சகர் தாம் மனிதாவதாரமெடுத்த அந்த க்ஷணத்திலிருந்தே நம்முடைய பாவங்களுக்காக உத்தரிக்கச் சித்தங்கொண்டார். அதெப்படியெனில், அர்ச். கன்னிமரியாயி அவருக்குத் தாயாராகச் சம்மதித்த உடனே, அவளுடைய உதரத்தில் மேற்கூறியபடி அவர் உயிரும் புத்தி விவரமுமுள்ள சிசுவாக அமைந்தார். ஆனதுபற்றி, மற்ற சிசுக்கள் தங்களுக்கு முழு உடலும் உயிரும் உணர்வும் சுவாப முறைப்படி கிடைக்கப்பெற 9 மாச காலம் தத்தம் தாயின் கருப்பத்தில் அடைபட்டிருப்பதுபோல இவரும் அடைபட்டிராமல் உடனே பிறக்க திருவுளங்கனிந்திருக்கலாம். ஆயினும் சரியாய் 9 மாசம் அதாவது மார்ச்சுமீ 25உ முதற்கொண்டு டிசம்பர்மீ 25உவரையிலும் தம் தாயின் கருப்பத்தில் உயிராய் ஒரு கல்லறையிலடக்கப்பட்டிருந்ததுபோல் அடக்கப்பட்டிருக்கச் சித்தமானார். ஏன்? அப்படி தாம் அடக்கப்பட்டிருப்பதினால் தாம் அனுபவிக்க நேரும் இடுக்கண் துன்பங்களையெல்லாம் நம்முடைய பாவங்களுக்குப் பரிகாரமாகத் தம்முடைய தேவபிதாவுக்கு ஒப்புக்கொடுக்கக் கூடுமென்றுதான்.

தேவகுமாரன் நமக்காக மனுஷாவதாரமெடுத்த பேருபகாரத்துக்கு நாம் என்றும் அவருக்கு நன்றிபாராட்டக்கடமைப்பட்டுள்ளோமல்லவா? என்ன! யாதோர் கடமையும் கட்டாயமுமின்றி தம்முடைய அன்பின் மிகுதியினால் பரலோகத்தைவிட்டுப் பூலோகத்துக்கு வரவும், தம்முடைய மகிமை, மகத்துவம், வல்லபம் முதலியவைகளையெல்லாம் தாமெடுத்த நரஜென்மத்தில் மறைத்து, நம்முடைய கடன்களையெல்லாம் தம்மேல் சுமந்துகொண்டு, அவைகளுக்காக உத்தரிக்க உடன்பட்டதும் எப்பேர்ப்பட்ட உபகாரமும் காருண்யமுமாகும்! ஆ! இத்தகைய உபகாரிக்கு நாம் என்னதான் கைம்மாறாகச் செய்யக்கூடாது? நம்மையும் நமக்குள்ள சகலத்தையுமே அவருக்குக் கையளிப்பினும் அதுவும் அதற்கு ஈடாகுமோ? ஈடாகாதன்றோ? அப்படியானால், அவருக்கு நம்முடைய நன்றியறிதலையாகிலும் காட்டவேண்டாமோ? சின்ன தோபியாஸ் தனக்கு இரபேல் சம்மனசானவர் செய்த உபகார சகாயங்களுக்கு நன்றியறிதலைக் காட்டத் தான் தன் பெண்சாதி வீட்டிலிருந்து கொண்டுவந்தவைகளில் பாதியைக் கொடுக்கத் தன் தகப்பனிடம் உத்தரவு கேட்டார். நாம் நமது நன்றியறிதலை நம்முடைய இரட்சகருக்குக் காட்ட நாம் செய்யவேண்டியதென்ன? நாம் செய்யவேண்டியது இன்னதென்று அர்ச். அகுஸ்தீன் எழுதியுள்ளதா

வது: "சுத்த அரூபியாகிய தேவகுமாரன் உன்பேரில் வைத்த அன்பினால் உன்னைப் போல மனிதனாக சரீரமெடுத்தார். ஆனால் நீயோ மனிதனானபடியால், உன் சரீரம் இச்சிக்கிற இவ்வுலக இன்பசுகங்களை வெறுத்து, கூடினமட்டும் ஓர் அசரீரியைப்போல சீவிக்கப் பிரயாசைப்படு. மேலும் அவர் உன்னோடு சம்பாஷித்து சல்லாபஞ்செய்ய ஆசிக்கிறார். நீயும் அவர் ஆசைக்கிசைந்து உன்னுடைய ஜெபத்தியானங்களினால் அவரோடு சம்பாஷித்துக்கொண்டுவா."

ENCOURAGING THE DEVINE VOCATION.

தேவ ஊழியத்திற்கழைக்கப்படுகிறவர்களை ஆதரித்தல்.

(மரியாயின் மகா சங்கத்தின்போது உபந்நியாசிக்கப்பட்டது).

தேவ அழைப்பு.

சேசுநாதர் ஒரு நாள் தமது சிஷ்யர்களோடு பிரயாணஞ்செய்கையில், மத்தேயு என்கிற ஆயக்காரன் பணம் எண்ணிக்கொண்டிருப்பதைக் கண்டார். அவனை யுற்று நோக்கினார். அவனும் ஏறெடுத்துப் பார்த்தான். இருவர் கண்களுஞ் சந்தித்தன. "என் பின்னால் வா" என்று விளம்பினார் சேசு. அக்ஷணமே, மத்தேயு எல்லாவற்றையும் விட்டுவிட்டு முன்வைத்த காலை பின்வைக்காது அவர் பின்னால் சென்றார். அப்போஸ்தலரானார். அர்ச்சியசிஷ்டவரா யிருக்கிறார். இன்னொரு நாள் சம்பத்துள்ள ஓர் வாலிபன் சேசுவண்டைவந்து "ஆண்டவனே! நித்திய சீவியமடைய நான் என்ன செய்யவேண்டும்?" என்று வினவினான். "கற்பனைகளை யனுசரி" என்றார். "சிறுவயதுமுதல் அனுப்பிசகாது நிறைவேற்றிவருகிறேன், பின்னும் யான் புரியவேண்டியதென்ன?" "இன்னுஞ் சுத்தனாயிருக்க விரும்பின், உன் ஆஸ்திபாஸ்திகளை ஏழை எளியோர்க் கீந்துவிட்டு வா—என்னைப் பின்பற்று" என முடிவாகச் செப்பினார் தேவசுதன். கேட்டான், திகைத்தான், எல்லாவற்றையும் விட்டுவிட மனமொப்பவில்லை, அவரைப் பின்பற்றவுமில்லை. இவ்விரு சம்பவங்களும் நடந்து ஏறத்தாழ 2,000 வருஷங்கள் கடந்துவிட்டன. கடவுளின் குரல் இன்னும் பல வாலிபர் பாலிகைகளின் இருதயத்தின் கதவைத் தட்டுகிறது. சிலர் மனமொப்பிக் கடவுள் வார்த்தைக்கமைந்து தேவ ஊழியத்திற்குத் தம்மைப் பரித்தியாகஞ்செய்கின்றனர். வேறு சிலர், அஞ்சியோ, உலகவாஞ்சைவாய்ப்பட்டோ செவிசாய்க்கின்றாரில்லை. கடவுள் அழைப்பைப் புறக்கணித்துவிடுகின்றனர். அதனாலன்றோ "அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்தெடுக்கப்பட்டோர் சிலர்" எனத் திருவாய்மலர்ந்தருளினார் சேசுநாதர். ஆகையால், யார்யார் அழைக்கப்படுகின்றனரோ அவர்கள் மனந்துணிந்து லௌகிக சுகபோகங்களைக் களைந்து சர்வேஸ்வரனுக்கு ஊழியஞ்செய்யப் பின்வாங்கலாகாது. "கடவுளைச் சேவிப்பது அவரோடு ஆள்வதற்குச் சமானம்."

தேவ ஊழியர் அவசரம்.

தேவசுதன் மனுவா யுதித்துத் தமது அரிய பாடுகளினாலும் திரு இரத்தத்தினாலுங் கொடிய மரணத்தினாலும் மனிதரை இரட்சித்தார். அந்த ஆத்தும இரட்சண்ணிய அலுவலைத் தொடர்ந்து நடத்த, அஞ்ஞானத்தை யோட்டி, மெஞ்ஞானத்தை யூட்ட வேலையாட்கள் வேண்டாமோ? அவர்கள்தான் தேவ ஊழியர், குருக்கள். அவர்களே இருட்படர்ந்த உலகிற்கு ஞான ஒளி வீசுந் தீபங்கள். அவர்களின் நாமமே அதற்குச் சான்று. 'கு' என்பது உலகம், 'ரு' என்பது ஒளி என்று பொருள்படும். ஆகையால் குருவெனும் ஆப்த பதத்திற்கு உலகின்கண் மூடியிருக்கும் அஞ்ஞான அந்தகாரத்தை அகற்ற வல்ல மெய்ஞ்ஞானப் பிரகாசம் என்பதர்த்தமென்று தெற்றென விளங்கும். எவ்வளவுக்குப் பிரகாசமானது சால விரிந்து பரவியிருக்குமோ அவ்வளவுக்கு இருள் குன்றி அற்றுப்போகும். உலகமுற்றும் 160 கோடி ஜனங்களுளர். அவர்களில் கத்தோலிக்கர் 31 கோடி; பதிதர் முதலியோர் 27 கோடி. அஞ்ஞானிகள் நூறு கோடிக்குமேலாவர். நம்மிந்தியாவின் ஜனத்தொகை 31½ கோடி. அவற்றினுள் 27 லக்ஷமே கத்தோலிக்கர். பதிதர் 10 லக்ஷமாவர். அஞ்ஞானிகள் 30 கோடிக்குமேலேயேயிருக்கின்றனர். ஈண்டுள்ள குருக்கள் 2,700. அவர்களில் ஐரோப்பியர் 900. இந்தியர் 1,800. இந்தியர்களில் மலையாளம், கோவைக் குருக்கள்மட்டும் 1,120. இந்தியாவில் 3,000 குருக்களிருப்பதாக மதிப்பிட்டபோதிலும் 1 லக்ஷத்து 5,000 ஜனங்களுக்கு ஒரு குருவானவர். அதாவது 1,000 கிறீஸ்துவர்களை விசாரிக்கவும் 104,000 இந்துக்களை மனந்திருப்பவும் ஒரு குருவானவரே. அநேக பங்குகளில் 1 குருவானவர் பல்லாயிரங் கிறீஸ்துவர்களைக் கண்காணித்துவருவது தெரிந்த விஷயம். இவ்வாறு நமது திருச்சபை இங்கு நடைபெற்றுவருமானால் சீக்கிரத்தில் பெருகுவதானது அசாத்தியம். அத்திப்பூ என்றே சொல்லலாம். வருடமொன்றிற்கு இந்தியாவில் சராசரி 17,500 பேர் கிறீஸ்துவர்களாகிறார்களாம். 27,000 மரணத் தருவாயிலிருக்குஞ் சிறுவர் ஞானஸ்நானம் பெறுகிறார்கள். இந்த சீரில் வேதப்பரம்புதல் நடைபெறுமானால் இந்தியரை மனந்திருப்ப 17,000 வருஷங்களாகுமென்று சாலஸ்கியாண்டவர் எழுதியுள்ளார். ஆதலால் அத்தியாவசியமான குருக்களை யதிகப்படுத்தப் பெரு முயற்சியெடுப்பது முதன்மையான காரியம். சத்திய திருச்சபைக்குக் குருக்கள்மட்டுமல்ல, விரத்தர்கள், சந்நியாசிகள், கன்னியர்களும் அவசரமானவர்களே. 'தேவ உதவியுடன் விசுவாசப் பரம்புதலுக்கு அநுகூலமான யத்தனங்களாகவிருக்கும் பள்ளிக்கூடங்கள், அநாதை மடங்கள், வைத்தியசாலை முதலிய தர்மக்காரியங்களை நடத்த, அவர்கள் தகுந்த உதவியாவார்கள். இதுவே 15-ம் ஆசீர்வாதப்பரின் கருத்து.

சுதேச குருக்கள்.

நமது நாட்டை மனந்திருப்ப ஐரோப்பாவினின்று எண்ணிக்கையற்ற வீர குருக்களுஞ் சன்னியாசிகளுஞ் கன்னியர்களும்வந்து உழைத்தனர்—உழைத்தும் வருகின்றனர்—இந்தியாவின் ஜனத்தொகைக்கேற்ற அளவு அவர்களில்லை. அவர்களோடு ஒத்துழைக்க முன்வந்திருக்குஞ் சுதேச ஊழியர்களும் மிகச் சொற்பமே. இக்குறையை நிரப்ப இனிமேல் ஐரோப்பாவினின்று ஏராளமான தேவ ஊழியர் வருவாரென்றெண்ணுவது முடவன் கொம்புத்தேன்தான். கடந்துபோன பாரி யுத்தத்தினிமித்தம் ஐரோப்பா பாழாய்ப்போக, அந்தப் பாலைவனத்தைப் பண்படுத்த ஊழியர்கள் அங்கு அகத்தியமாயிருக்கக்கொள்ள அவர்கள் ஈண்டுவந்து நமக்கு உதவவேண்டுமென்பது தர்மமன்று. இதை முன் யோசித்தே இறந்துபோன சிறந்த 13-ம் சிங்கராயர் "இந்தியாவே! உன் மக்களே உனக்கு இரட்சணியங் கொண்டுவருவார்களாக!" என வசனித்தார். 15-ம் ஆசீர்வாதப்பரும் இந்த அவசரத்தை நன்குணர்ந்தே மிஷன்களின் தலைவர்கட்குப் பின்வருமாறு உரைத்துள்ளார். "மிஷன்களை யாள்வோருக்கிருக்கவேண்டிய முக்கிய கவலை தாங்கள் வசிக்கும் நாட்டிலுள்ள சுதேசிகளுள் சிலரைக் குருத்துவத்துக்குத் தெரிந்துகொண்டு, அவர்களை அத்தொழிலுக்கு ஏற்றபடி பயிற்றுவித்தலாம். ஏனெனில், அவர்கள்தான் திருச்சபையின் எதிர்கால நம்பிக்கையின் அஸ்திவாரம். பிறப்பு, குணகுணங்கள், உணர்ச்சி, அபேட்சை முதலியவைகளால் ஒரு சுதேச குருவானவர் தம் ஜாதி ஜனங்களுடன் பிணைக்கப்பட்டிருப்பதால், சத்திய விசுவாசத்தை யவர்கள் புத்தியில் புகட்டுவதற்கான அபூர்வ சாமார்த்தியம் அவரிடமுண்டு. ஏனையோரினும் அவரே அவர்களை வற்புறுத்தி வசப்படுத்தும் வன்மைவாய்ந்தவர். ஆனதுபற்றி அந்நிய நாட்டுக் குருக்கள் காலடியெடுத்து வைக்கமுடியாத இடங்களிலுமுதலாய் இவர்கள் சுலபமாய்ச் செல்வது சகஜமாய் நேரிடுங்காரியமன்றோ." (15-ம் ஆசீர்வாதப்பர் எழுதிய நிருபம்.)

தற்காலம் இந்தியாவில் திருச்சபையை யாளும் ஐரோப்பிய தலைவர்கள் சுதேச குருக்களைத் தமது அலுவலை நடத்தத் துணையாக ஏற்படுத்தியிருக்கின்றது வெளிப்படை. இந்திய குருக்கள் அவர்களது அலுவலிலுங் கஷ்டத்திலுஞ் சேற்று நிலத்து ஊன்றுகோல்போல் நிற்கின்றார்கள். எப்போதும் இப்படியே இருக்குமா? ஒருகாலம் வரலாம். அப்போது இந்திய குருக்களே இந்திய திருச்சபை நிலைத்திருப்பதற்கு ஆதாரமாயிருக்க நேரிடும். இதற்குமுன்னுமப்படி சம்பவித்துள்ளது. அதற்குச் சரித்திரமே சாட்சி. பிராஞ்சு தேசத்தில் வேதகலாபனை ஒருபக்கத்தில், மறுபக்கத்தில் நெப்போலியன் தொடுத்த போர் முதலியவற்றின் காரணங்களாலும், சேசு சபை நிறுத்தப்பட்டதின் முகாந்திரத்தினாலும் ஐரோப்பிய குருக்கள் நம் தேசம் வரக்கூடாதுபோயிற்று. அப்போது திருச்சபை சிதைந்து குலைந்துபோகாது அதைக்

காப்பாற்றியவர் சுதேச குருக்களே! சென்ற மகா யுத்தத்தின்போது அநேக ஐரோப்பிய குருக்கள் தத்தந் தேசம்போக நேரிட்டது. அக்காலையில் அவர்கள் விட்டுவிட்டுப்போன பங்குகளை (மிஷன்களைக்) கண்காணித்துவந்தவர்களும் சுதேச குருக்களே.

வேதகலாபனை காலத்தில் திருச்சபையைக் காப்பாற்ற ஏதுவானவர்களுஞ் சுதேச குருக்களே. சீன தேசத்தில் 14-ம் நூற்றாண்டில் 11 மேற்றிராணிமார் அதிமேற்றிராணிமார்களிருந்தனராம். ஆகையால் அநேக குருக்களும் இருந்திருப்பார்கள். எல்லோரும் ஐரோப்பியர்களே. 1 லக்ஷம் கிறீஸ்துவர்களிருந்தார்களாம். வேதகலாபனை தொடங்கியது. நற்றேசிகர் சேசுவிற்காகத் தத்தம் உயிரைத் தானஞ்செய்தார்கள். கடைசி குருவானவர் 1483-ம் ஆண்டு கொலை செய்யப்பட்டார். இது நடந்து 2 நூற்றாண்டுகளுக்குப்பின் சேசு சபை சுவாமியார் 'பெக்கின்' நகரில் பிரவேசிக்கிறபோது கிறீஸ்து வேதம் அங்கு ஒருக்கால் இருந்த அடையாளமே கிடையாதுபோயிற்றாம். ஆரம்பத்திலேயே சுதேச குருக்களை ஏற்படுத்தியிருப்பாராகில் இது சம்பவித்திருக்காதென்றும், அர்ச். சவேரியாரின் யோசனையை மேற்கொண்டு சுதேச குருக்களை ஜப்பான் தேசத்தில் ஏற்படுத்தியிருப்பாராகில் அங்கு திருச்சபை காப்பாற்றப்பட்டிருக்குமென்றும் Mgr. Freri எனும் அமெரிக்கா குருவானவர் சொல்லுகிறார். இதை 15-ம் ஆசீர்வாதப்பரின் மொழிகள் உறுதிப்படுத்துகின்றன. எங்கெங்கே தேவ அழைப்புக்கு யோக்கியதையுடையவர்களான சுதேச குருக்கள் பயிற்சியிலும் தொகையிலும் போதுமானபடி தேர்ந்து விளங்குகிறார்களோ அங்கே ஒருக்கால் வேதகலாபனை கிளம்பி திருச்சபையை அழிக்க நேர்ந்தாலும், பகைவரின் தாக்குதலுக்கு அது அசையுமென்று அஞ்ச இடமிராதபடி அதன் வேர்களும் அஸ்திவாரங்களும் நன்றாயூன்றி உறுதிப்பட்டுப்போயிற்றென்று கருதலாகும் (15-ம் ஆசீர்வாதப்பர் நிருபம்). சுதேச குருக்கள் இந்தியாவிற்கு அதிமிக்கத் தேவையென மேற்றிராணிமார்கள் பலர் உறுதிபகர்ந்திருக்கின்றனர். தென்னிந்தியா மேற்றிராணிமார்கள் சிற்சிலரின் வார்த்தைகள் ஈண்டு குறிப்பிடற்பாலன. "எமது மிஷன்களின் பராமரிப்பு அந்நிய தேசத்துக் குருக்களின் கையில்மட்டு மிருக்கும்பக்ஷத்தில் அவற்றின் விருத்தியும் க்ஷேமலாபங்களுந் திருப்திகரமாயிருக்காது. நான் சொல்வது இந்தியாவின்மட்டும் விசேஷமாய்ப் பொருந்தும். அங்கு சுயராச்சியக் கிளர்ச்சி மும்முரமாகத் தோன்றி கிறீஸ்துவ சமூகத்தினிடத்தும் பரவியிருக்கின்றது. இந்திய குருக்கள் வேண்டுமெனும் சப்தம் எங்குந் தொனிக்கின்றது" எனச் சரியாய் வந்திக்கத்தக்கப் 'பெரினி' ஆண்டவர் வரைந்திருக்கிறார். "சுதேச குருக்களை ஏற்படுத்துவதிலேயே பிற்கால திருச்சபையின் அபிவிர்த்தியடங்கியிருக்கிறது" என்று சரி. வந். கிளார்க் ஆண்டவர் சொல்லுகிறார். இன்னொரு தென்னிந்திய மேற்றிராணியார் சுதேச குருக்களின் தேவையைப் பல காரணங்களாலெடுத்துக் காட்டிவிட்டு முடிவுரையாக "சுதேச குருக்களை யதிகரிக்கச்செய்வது எங்களது பெருங்கடமை, அதை நாங்கள் உடனே செய்யவேண்டும்" என்று சொல்லுகிறார். இது எவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வ சம்மதமன்றோ?

(இன்னும் வரும்)

L. D. S. M.

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

10-ம் அதிகாரம்.

அர்ச். மோனிக்கம்மாளுடைய மன்றாட்டுக்குக் கர்த்தர் செவிசாய்க்கிறார்—அகுஸ்தீன் இருதயத்தில் வெளிச்சம் உதயமாகிறது—அர்ச். அமிர்தநாதரால் தொடுக்கப்பட்டு, அர்ச். மோனிக்கம்மாளால் நடத்தப்பட்ட உபாயத்தின் விவரம்.

(முன் தொடர்ச்சி.)

கத்தோலிக்கு வேதத்தின் அதிசயத்துக்குரிய ஏற்பாடனைத்தையும் அகுஸ்தீன் கண்டுபிடிப்பதற்கு, இந்த இரண்டாம் இலட்சணம் உதவியாயிருந்தது. அதாவது, கத்தோலிக்கு வேதமானது கடவுளைப்போலவே, எல்லா யுகங்களுக்கும், எல்லா ஸ்தலங்களுக்கும், இதற்கு மேலாக எல்லா ஆத்துமங்களுக்கும், பொதுவாகவிருக்கின்றது. மேலும் அது மேலோராயினும் கீழோராயினும், அவர்களுக்கு ஒரேவிதமான வெளிச்சத்தைத் தந்து, கழுகுகளாயினும் மாடப்புறாக்களாயினும், அவைகளை ஒரேவிதமான ஞான உணவால் போஷித்துவருகின்றது. மற்ற தத்துவசாஸ்திரச் சங்கங்களும், பதித பிரிவினை சபைகளுமோவெனில், தங்களை யேற்படுத்தினவர்களின் மனம் போலவே, எப்போதும் இடுக்கமுள்ளவைகளாயும், மட்டுள்ளவைகளாயும், ஒரே இடத்திற்குரியவையாயுமிருக்கின்றன. சில சபைகளின் போதனைகளை, வித்தையிற்றேர்ந்த நிபுணர்கள்மாத்திரம் கண்டுபிடிக்கக்கூடுமாகையால், சாமான்ய ஜனங்களின் புத்திக்கு அவைகள் எட்டா. வேறு சிலரின் போதனைகளோவெனில், சாமான்ய ஜனங்களுக்குமாத்திரம் ஏற்றவைகளாகையால், கல்விமான்கள் அவைகளை இகழ்ந்து தள்ளுவார்கள். ஆதலால் அப்போதனைகளிலெல்லாம் ஒரு குறைபாடுண்டு. அக்குறைபாடேதெனில், எல்லா காலங்களுக்கும், எல்லா இடங்களுக்கும், விசேஷமாய் எல்லா ஆத்துமங்களுக்கும ஏற்றபடி தங்களைச் சரிப்படுத்திக்கொள்ள ஏலாத குறைபாடுதான்.

அர்ச். அகுஸ்தீன் கடவுளைப் பார்த்து "என் கர்த்தாவே என் எண்ணங்கள் இப்படிப்பட்டவை. நீரும் என்னுடன் இருந்தீர். நான் உம்மை நோக்கிப் பெருமூச்சுவிட்டேன். நீரும் என் பெருமூச்சைக் கேட்டீர். நான் சந்தேகம் என்னும் அலைகளால் அலைக்கழிக்கப்பட்டபோது, நீர் எனக்குக் கைலாகுகொடுத்து வழிநடத்தினீர். நான் பூலோகத்தின் அகன்ற பாதையில் வழி நடந்தபோது, நீர் என்னைக் கைநெகிழவில்லை."

இந்தப் புது யோசனைகள் அர்ச். அகுஸ்தீனுக்கு மனமருட்சியை யுண்டாக்கின. ஆயினும் அவைகளால் அவர் மனந்திரும்பவில்லை. கத்தோலிக்கு திருச்சபையானது தனக்கு விரோதமாய் அதன் சத்துராதிகள் கொண்டுவரும் ஆட்சேபனைகளனைத்தையும் எதிர் நியாயம் காட்டிக் கண்டிக்க அதனால் கூடுமென்றும், அதன் போதனைகளைப் படித்தறிந்து அதன்படி நடப்பதினால் மனிதன் உந்நத நல்லொழுக்கத்திற் பயிற்சியடைவானென்றும் அவருக்குத் தெரிந்தபோதிலும், அக்காரணங்களைப்பற்றி அது சத்தியமான வேதமென்று அவர் தீர்மானிக்கவில்லை. ஆனால் அதன் போதனைகள் சிறந்தவைகளென்றும், ஞாயத்திற்கிசைந்தவைகளென்றும், உச்சிதமானவைகளென்றும், அமிர்தநாதரைப்போல கீர்த்தி வாய்ந்த கல்விமான்களும், தன் தாயாரைப்போல் தங்கள் நேர்மையின்மட்டில் சந்தேகப்படவிடமிராத ஆத்துமாக்களும், அவைகளை ஏற்றுக்கொண்டு அதியோக்கியபக்தியுடன் விசுவசித்துவருகின்றனரென்று மாத்திரம் ஒத்துக்கொண்டார்.

இக்காலத்தில் தன்னாத்துமமிருந்த நிலைமையை அதிசயத்துக்குரிய வார்த்தைகளால் எடுத்துக்காட்டுகிறார். அநேகர் சத்தியத்தை நாடித் தேடும்போது கொண்டிருக்கும் மன நிலைமையை, அவ்வார்த்தைகள் நமக்கு விளக்கமாய்க் காட்டுகின்றன. "அதாவது கத்தோலிக்கு வேதம் என்னை ஜெயிக்கவில்லை. நான் அதை ஜெயிக்கக்கூடவில்லை" என்பதாம்.

அப்போதிலிருந்து திருச்சபையைப் பரிகாசம் செய்வதை விட்டுவிட்டார். விசுவாசத்தின் மட்டில் அவர் கொண்டிருந்த அவமதிப்பு, அன்றுமுதல் அவரது இருதயத்தைவிட்டுத் தொலைந்தது. வெளிச்சத்தின் பாரிசமாய் இன்னொரு அடி எடுத்துவைத்தார். அவர் சொல்வது "ஆதலால் சர்வமத போதனைகளையும் முழுதுமாய் விட்டுவிட்டு, எந்தப் பக்கம் என் மனதைச் செல்லவிடுவதென்று தேவ வெளிச்சத்தினால் நான் கண்டறியுமட்டும், என் தாயார் எனக்குக் காட்டிய கத்தோலிக்கு திருச்சபையின் போதனைகளைத் தீரமாய் படித்தறிதலே சரியென்று தீர்மானம் செய்துகொண்டேன்."

தன் மனதிலிருந்த இப்போராட்டங்களை யாருக்காவது தக்கவர்களுக்குத் தெரிவித்திருப்பாரேயானால், தான் தேடிய ஞான வெளிச்சத்தைக் கண்டடைவது அவருக்குச் சுலபமான காரியமாயிருந்திருக்கும்.

ஆனால் பாமர வைத்தியர்களிடம் மருந்து வாங்கிச் சாப்பிடும் வியாதியஸ்தனைப்போல, தன் நிலைமையைத் தகுந்தவர்களுக்குத் தெரிவிக்கத் தத்தளித்தார். ஒருவரிருந்தார். அவர்மாத்திரம் அகுஸ்தீனிடம் இதைப்பற்றிப் பேசி அவரது மன நிலைமையை யறிந்திருக்கக்கூடும். அவர் யாரென்றால் அமிர்தநாதர்தான்.

ஆனால் இது ஒரு ஆச்சரியம். அமிர்தநாதர் அகுஸ்தீனை அவ்வளவாய் நேசித்துவந்தபோதிலும், தம்மட்டில் அப்படிப்பட்ட உருக்கமுள்ள பட்சத்தை யவர் மனதில் பிறப்பித்திருந்தபோதிலும், அவருக்கு மனக்கலக்கத்திற்கும் சிந்தாகுலத்திற்கும் காரணமாயிருந்த விஷயத்தைப் பற்றி, முழுதும் அசட்டையாயிருந்ததாகத் தோன்றிற்று.

அகுஸ்தீன் சொல்வது: "வேத விஷயமாய் நான் கொண்டிருந்த சந்தேகங்களைப்பற்றியும், நானிருந்த ஆபத்தான நிலைமையைப்பற்றியும் அமிர்தநாதர் ஒன்றும் அறியார். எனெனில், எண்ணிறந்த ஜனங்கள் அவரிடம் ஏதாவதொன்றைப்பற்றி ஆலோசனை கேட்கவும், ஏதாவதொரு சகாயத்தை யடையவும், நான் போகும்போதெல்லாம் அவரைச் சூழ்ந்திருப்பார்களாகையால், நான் விரும்பியபடி அவரோடு தனிப்பட சம்பாஷணை செய்யக்கூடாமற்போயிற்று. ஒழிந்த நேரத்தில் தன் சரீரத்திற்குப் போஷணையாக போசனம் அருந்தவும், ஆத்துமத்திற்குப் போஷணையாக ஞான புஸ்தகங்களை வாசிக்கவும், அவருக்குச் சரியாயிருக்கும்."

அகுஸ்தீன் மேலே சொல்லுகிறபடி, அவருடைய நிலைமையை அமிர்தநாதர் உண்மையாகவே முற்றிலும் அறியாதிருப்பாரென்பது முழுதும் கண்டுபிடிக்கக்கூடாத காரியம். அமிர்தநாதரும் அகுஸ்தீனும் அந்நியோந்நிய சிநேகப்பழக்கமுள்ளவர்கள். அகுஸ்தீன் உந்நத பதவியிலிருந்தபடியாலும், வாக்குச்சாதுரியத்தில் பேர்பெற்ற வல்லவராயிருந்தபடியாலும், இப்படிப்பட்ட சிநேகப்பழக்கம் அவர்களுக்குள் உண்டாவதற்கும் விருத்தியடைவதற்கும் கூடுமாயிருந்தது. இதுவுமன்றி, அர்ச். மோனிக்கம்மாளும், தன் குமாரன் ஆத்தும நிலைமையை யவருக்குத் தெரிவித்திருப்பாள். அடிக்கடி அவரைக் காணப் போய், நெடுநேரம் அவரோடு சம்பாஷிப்பாள். வியாகுலம் நிறைந்த தாயார், தம் குமாரனுடைய இரட்சண்யம் ஒன்றிற்காகவே உலகத்தில் சீவிக்கக் கோரியிருந்தபடியால், அக்குமாரன் சத்திய மார்க்கத்தில் சேர இருந்த விக்கினங்களைப்பற்றியும், அவ்விஷயமாய் தான் பட்டுவந்த மனோவாதனைகளைபற்றியுமேயன்றி, வேறு எதைப் பற்றியும் அவ்வளவு தீர்க்கமாயவரிடம் பேசியிருக்கமாட்டாளென்பது சொல்லாமலே விளங்கும். காரியம் அப்படியிருக்குமேயானால், வித்தையிற்றேர்ந்த நிபுணரும், ஆத்தும ரட்சண்யத்தின்மட்டில் வைராக்கியம் கொண்டவரும், கண்ணியம் பொருந்திய சீமானுமாகிய மேற்றிராணியாண்டவர், தேவ மகிமையை யதிகரிப்பிப்பதில் உதவியாயிருக்கக் கூடுமான இவ்வாலிபனை மனந்திருப்ப அக்கறைகொள்ளாதிருந்த தெப்படி? அவருக்கு வேலையதிகமென்று அகுஸ்தீன் சொல்லுகிறார். தன் சந்தேகங்களை நிவர்த்திசெய்துகொள்ள அகுஸ்தீன் நேர்மையுள்ளமனதுடன் அலைகிறபடியாலும், அப்படியவர் சந்தேகந்தெளிந்து சத்தியதிருச்சபையில் சேர்வாரேயானால், அதன் ஆபரணமாகவும் ஆதார ஸ்தம்பமாகவும் துலங்குவாராகையாலும், இச்சமயத்தில் அவருக்குத்வியாயிருந்து நல்ல வழியைக் காட்டுவதைவிட, உசிதமானதும், மகிமை தங்கியதும், கர்த்தருக்குப் பிரியமானதும், மேற்றிராணித்துவ அந்தஸ்துக் கடுத்ததுமான கிருத்தியம் வேறு யாதுண்டு?

இருந்தும் அர்ச். அமிர்தநாதர் இந்த உந்நத கிருத்தியத்தை யாரம்பிக்கச் சமயம் தேடாமற்போனதுமன்றி, அன்றூடம் அகுஸ்தீனுடன் சம்பாஷிக்கும் போதெல்லாம், ஆத்தும ரட்சண்யத்தைப்பற்றிப்பேச உண்டான சமயத்தையும் உபயோகிக்காமல் விட்டுவிட்டார். சித்திரக்காரன் ஒரு காட்சியைப் படத்தில் விவரமாய்க் காட்டுவதுபோல், அத்தனை துலக்கமாக, அர்ச். அகுஸ்தீன் தாம் அமிர்தநாதரைக்கண்டு அடையும் பேட்டியை அடியில் விவரித்துக்காட்டுகிறார். அதை நாம் வாசிக்கும்போது, நமது புத்தியின் கண்ணுக்கு எப்படி தோன்றுகிறதென்றால், தங்கமயமான ஒரு இருப்பிடத்தில், அருளே அவதாரமானாற்போல் துலங்கும் முக இலட்சண வடிவோடும், திடவிசுவாசம் விளங்கும் கம்பீரப்பார்வையோடும், அமிர்தநாதர் வீற்றிருக்க, அவரது பாரிசத்தில், அவரது தோற்றத்திற்கு நேர் விரோதமான தோற்றத்துடன் மனவமைதியற்ற பால்ய அகுஸ்தீன், இதெப்படி அதெப்படி யென்று அவரைக் கேட்கத்துணியாமல், மவுனத்துடன் அவரையுற்று நோக்கி ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார் என்பதே.

அகுஸ்தீன் சொல்வது "ஒருவரும் அவரிடம் போகக்கூடாதென்னும் விலக்கங்கிடையாது. இன்னார் வருகிறாரென்று அவருக்கு முன்னெச்சரிக்கை கொடுக்கும் வழக்கமுமில்லை, அவர் தனியாயிருக்கும்போது, தனக்குத்தானே ஏதாவதொரு புஸ்தகத்தை வாசித்துக்கொண்டிருப்பாரேயன்றி மற்றப்படி வேறு அலுவலாயிருந்ததை யறியேன். அவ்வளவு கவனத்துடன் அவர் வாசித்துக்கொண்டிருக்கும்போது, அவருக்குத் தொந்தரவுகொடுக்க யாருக்குத்தான் மனதுவரும்? மற்றவர்களுடைய தொந்தார்த்தமில்லாமல் அவர் தன் மனோ இளைப்பாற்றிக்காக கொஞ்ச நேரம் வாசித்துக்கொண்டிருக்கும் சமயத்தில், அவருக்கு இடைஞ்சல் செய்வது சரியல்ல. சப்தமாய் வாசித்தால், கிட்டஇருந்து கேட்டுக்கொண்டிருப்பவர்கள் ஏதாவதொரு அரிய விஷயங்களை வியாக்கியானிக்கும்படி கேட்பார்கள். அக்கோரிக்கைக்கிசைந்து அங்ஙனம் வியாக்கியானிக்கத் தொடங்கும்பட்சத்தில், இன்னம் மற்றதையும் படிக்கத் தமக்கு நேரமிராதென்று பயந்தோ, அல்லது தொண்டை நோகுமென்று அஞ்சியோ, மெதுவாகத் தனக்குத்தானே படித்துக்கொண்டிருப்பார். இதை நான் நெடுநேரம் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்து போய்விடுவேன். அமிர்தநாதர் என்ன காரணத்தைப்பற்றி இப்படி தனக்குத்தானே வாசித்துக்கொண்டிருப்பாரென்று நாம் அறியாதபோதிலும், இவ்விஷயத்தில் அப்பேர்ப்பட்ட புண்ணியாத்துமாவின் கருத்து உண்மையாகச் சிறந்ததென்றே சொல்லவேண்டியது." (இ-ம்.)

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா

அல்லது

மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—6.

பென்தாவீதும், ஆல்டிமனும்.

ரியாசாவென்பது ஒரு சிறிய பட்டணம்; அதிலே கிறீஸ்துவர்களைவிட யூதர்கள் அதிகம். அதுவே பென்தாவீதனுடைய வாசஸ்தலம். அவ்வூருக்கருகாமையிலுள்ள ஒரு மலையடிவாரத்தில் கட்டப்பட்டுள்ள அவன் வீடு, சாதாரணமாய் அத்தேசத்தில் இஸ்பானியருந் துலுக்கருங் குடியிருக்கும் வீடுகளைப்போலவே தோன்றிற்று; ஒரே ஒரு மெத்தை வைத்துக் கட்டப்பட்டு, முன்பாகத்தில் சுவரால் சூழப்பட்ட ஒரு முற்றத்துடன் விளங்கிற்று; முற்றத்தின் மத்தியில் சதா தண்ணீர் மேல்கிளம்பி விழும் ஒரு சூத்திரக் குழாயிருந்தது. அந்த வீடு வெளிப்பார்வைக்கு சர்வசாதாரணமாய்த் தோற்றியபோதிலும், உள்ளே சென்றதும் அதை ஒரு சிறந்த மாளிகையென்றே சொல்லவேண்டியிருந்தது. விசாலமான கூடங்களும், கூடங்களுக்கிடையில் நன்கலங்கரிக்கப்பெற்ற அறைகளும், எங்கே பார்த்தாலும் பலவர்ண இரத்தினக்கம்பளங்களும், விலையுயர்ந்த நிலைக்கண்ணாடிகளும், சித்திரப்படங்களும், மேசை நாற்காலிகளும், கட்டில்களும் பார்ப்பவர் கண்களுக்கு இன்பத்தை விளைக்குமாறு ஒழுங்காக வைக்கவேண்டிய இடங்களில் வைக்கப்பட்டிருந்தன. அம்மாளிகைக்குப் பின்னால் நன்றாய் செழித்தடர்ந்த பல்வகை மரங்களும் புஷ்பச்செடிகளும் நிறைந்த ஒரு பெரிய நந்தவனம் விளங்கிற்று..

காலம் மாலை. நந்தவனத்தில் பலவர்ண ரோஜாமலர்க் கொடிகள் படர்ந்து நிழல் தரும் ஓர் அழகிய வளைவு பந்தர்க்கீழ் ஓராசனத்திற் சாய்ந்தவண்ணம் பென்தாவீது கையில் ஏதோ புஸ்தகம் ஒன்றை வைத்து வாசித்துக்கொண்டிருந்தான். பிரயாணஞ்செய்யும்போதும், துலுக்கருடனும், கிறீஸ்துவர்களுடனும் வியாபார சம்மந்தமாய்ப் பேசும்போதும் பென்தாவீதன் தோற்றியதுபோலல்லாமல், அவன் மாளிகையில் ஒரு புது மனிதனாய் விளங்கினான். அவன் முகத்தில் அப்போது, வெளியில் சாதாரணமாய்த் தோன்றும் சந்தேகம், பயம் முதலியனத் தோன்றவில்லை. வதனம் அன்றலர்ந்த தாமரை மலர்போல் பிரகாசிக்க, திடச்சித்தனாய் தன்னிடம் இருக்கும் ஆஸ்தியால் தனக்கெவ்வளவு உற்சாகம் உண்டாகக்கூடுமோ அவ்வளவையும் பூரணமாய்ப் பெற்றவன்போல் காணப்பட்டான். அவனிடம் சந்தேகப்பார்வை அணுவளவுமில்லை. —பயமென்பது அவனிடம் கொஞ்சமுமில்லை. நமதிளவல் அவனைத் தேடிச்சென்ற சமயத்தில் அவன் முகத்தில் ஒருவித பிரகாசம் ஜொலிக்க, அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அவன்

மனைவி மீரியாம் என்பவள் கேட்கும்படி எதையோ வாசித்துக்கொண்டிருந்தான்.

அவன் வாசித்த வசனமாவது :—" ஆண்டவர் நின்னிடத்திலிருந்தும், நின் சகோதரரிடத்திலிருந்தும், என்னைப்போன்ற ஒரு தீர்க்கதரிசியை எழுப்புவார் ; அவருக்கே நீங்கள் செவி சாய்ப்பீர்களாக." (மோசேஸ் புத்த. V. 18,15) " ஓ! மிரியாம்! மோயீசன் நமது முன்னோர்களிடம் வந்ததுபோல, மேற்கூறிய தீர்க்கதரிசியானவர் நம்மிடம் வந்து நமக்குச் சுயேச்சையும் இரட்சண்யமும் கொடுக்கும்படித் தேவன் கிருபைபுரிவாராக! ஆ! அவர் வந்திருந்தால்? மிரியாம், ஒரு நாள் நான் செவில் நகரில் ஒரு கிறீஸ்துவ குருவானவர் பிரசங்கிக்கும்போது, அகஸ்மாத்தாய் நான் அப்பக்கம் போக நேர்ந்தது. அவர் சொல்லிய வார்த்தைகள் என் புத்தியிலும் மனதிலும் பசுமரத்தாணிபோல் பதிந்துவிட்டபடியால் அவைகளை நான் எவ்வளவு முயன்றும் மறக்கமுடியவில்லை. ஆம், என் பிரிய மிரியாம், நான் மீண்டும் சொல்லுகிறேன், அவைகளை மறக்கமுடியவில்லை. அவர் வார்த்தைகளை வேண்டும் வேண்டாம் நான் கேட்டே தீரவேண்டியிருந்தது. அந்நகரத் தெருக்களில் அலுவலாய் நடந்துபோகையில், கையில் கத்தியுடன் இரண்டு துஷ்ட மூரியர் என்னைப் பின்பற்றிக் கொல்லவந்தார்கள் ; கொஞ்சம் தாமதித்திருந்தால் என்னைக் கொன்றேயிருப்பார்கள். நல்லவேளை அங்கே ஒரு கிறீஸ்து கோவிலிருந்தது. அதன் கதவுகள் திறந்திருக்க, உள்ளே அநேக போர்வீரர்கள் வெகு கவனமாய் அங்கே செய்யும் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அன்று அவர்களுக்கு ஓய்வு நாளானபடியால் ஆராதனையும் தொடங்கும் சமயம். நான் சரேலென அக்கோவிலுக்குள் நுழைந்தேன் ; அப்போர்வீரரில் அநேகர் நான் வேடிக்கைப் பார்க்கவும் பழித்துப்பேசவும் வந்திருக்கிறேன் என்று நினைத்து என்னை வெளியில் தள்ள முயன்றார்கள். இரண்டொருவர் என் கழுத்தைப்பிடித்துத் தள்ளிக்கொண்டே கதவண்டை வந்துவிட்டார்கள். வெளியே என்னைப் பின்பற்றிவந்த இரு பாதகர்களும் உருவிய கத்தியுடன் துஷ்ட மிருகங்களைப்போல் நிற்பதைக் கண்டேன் ; என் குலை நடுங்கிவிட்டது. ஆனால் நமது பிதாப்பிதாக்களின் தேவன் அப்பாதகர் கையிற் சிக்காமல் என்னைக் காப்பாற்றினார். அச்சமயம் எனக்கு உதவியாக வந்தது யாரென்று நினைக்கிறாய்? ஓ! மிரியாம்! அங்கே பிரசங்கம் செய்துகொண்டிருந்த கிறீஸ்துவ குருவே. கடவுளே அவரை அங்கே அனுப்பினார் என்று நினைக்கிறேன். அக்குருவும் என்னை யழைத்துக்கொண்டு கோவிலின் ஒரு மூலையில் இருக்கும்படி ஏவி, மீண்டும் மேடைமீதேறிப் பிரசங்கிக்கத் தொடங்கினார். மெய்யாகவே, மிரியாம், நான் சற்றுமுன் படித்த மோயீசன் வசனத்தையே எடுத்துக் கூறி, வியாக்கியானஞ்செய்தார். பிறகு தேவகுமாரனென்று அவர்கள் வணங்கும் கிறீஸ்துவே அந்த வசனத்தில் குறிக்கப்பட்டுள்ள தீர்க்கதரிசியென்று சில நியாயங்களால் ரூபிக்க முயன்றார். மோயீசன் வாக்களித்த தீர்க்கதரிசி கிறீஸ்துவேயென்று அவர் உறுதியாய்ச் சொல்லியதுடன், அதற்கத்தாட்சியாக மோயீசன் முதலிய் பல தீர்க்கதரிசிகள் எழுதிவைத்த நூல்களினின்றும் பல மேற்கோள்களை எடுத்துக்காட்டினார். அவர் பேசியபோது அவரிடம் விளங்கிய காம்பீரமும் நம்பிக்கையும் என்னென்பேன்! நானே அவர்தம் நியாயங்களை மறுக்கமுடியாமல் மனந்தடுமாறினவனாய் அவர் அன்று போதித்தவை சத்தியமென விசுவசித்து, அவர்கள் வேதத்தைக் கைப்பற்றுவதே சரியென அச்சமயம் நினைக்கும்படியாயிருந்தது. ஓ! மிரியாம்! நான் சொல்வதை நம்பு, நான் மூன்று நாள் ஒருசந்தியிருந்தேன். தபசுசெய்தேன், ஏழைகளுக்குத் தானம் வழங்கினேன், ஆண்டவர் நான் அச்சமயம் செய்த பிழையை மன்னிக்கவேண்டுமென்று இவ்வளவும் செய்தேன். ஆயினும் இப்போதுகூட அக்குருவின் வார்த்தைகள் என் செவிகளில் சப்திப்பதுபோல் தோன்றுகிறது. " கிறீஸ்துவே தீர்க்கதரிசி! அவரே மெஸையா!"

மிரியாமுக்கு இந்த வார்த்தைகள் பிடிக்கவில்லை. " உமது முன்னோர்கள் வணங்கிவந்த தேவனை நீர் விட்டுவிடுவானேன்?" என்று சற்று மன எரிச்சலுடன் கேட்டு, மீண்டும் சொல்வாள் : " அவருடைய கிருபையால் கிறீஸ்துவர்களும், மகம்மதியர்களும் உம்மை மிக்க மரியாதையுடன் நடத்தவில்லையா? அவர்களுக்குள் நீர் பெருமையாய் விளங்கவில்லையா? விசேஷமாய் தற்சமயம் அஞ்ஞானியாகிய டொலிடோ நகரத்தரசன் தன் மகள் கலியாணத்துக்காக விலையுயர்ந்த வைரங்களும் நகைகளும் வாங்கவேண்டுமென உமக்கு ஆளனுப்பி உம்மைக் கனப்படுத்தவில்லையா?"

" என்னே மிரியாம்! நீ சொல்வது உண்மைதான் ; என் விஷயத்தில் ஆண்டவர் வைத்துள்ள கிருபை யளாந்தம் என் றறிவேன். ஆனால் செவில் நகரில் நடந்த பிரசங்கத்தைக் கேட்டது முதல் என் இருதயம் இரு பாகமாகப் பிரிந்து பல சந்தேகங்களுக்கிடமாயிருப்பது என்னுடைய தப்பிதமா சொல்லு! என்னை யறியாமலே இச்சந்தேகங்கள் என் மனதில் உதிக்கின்றன. நான் என்ன செய்வேன்? சத்தியம் எங்கேயிருக்கிறது? யூதர்களிடமா அல்லது கிறீஸ்துவர்களிடமா? மெசையாஸ் ஏற்கெனவே நமக்குள் வந்துவிட்டாரா? அல்லது நாம் நினைப்பதுபோல் இனி வரப்போகிறாரா?"

" ஆ! என் பிரிய காதலா! இஃதென்ன விபரீதமான யோசனை? விபத்துக்குரிய காரியம்? உமது சிறுபோதிருந்து நீர் பிரமாணிக்கமாய் அநுசரித்துவந்த உமது முன்னோர்களின் கோட்பாடுகளை உமது முதிர்ந்த வயதில் விட்டுவிடுவீரா? தேவனுடைய கற்பனைகளைப் புறக்கணித்து, பொற்கன்றின் பிரகாசத்தால் மதிமயங்கிவிடப்போகிறீர், சாக்கிரதை! விஷங்கொண்ட சர்ப்பங்களின் தலையை நசுக்குவதுபோல் உமது மனதில் தோன்றியிருக்கும் இந்தத் துராலோசனைகளைத் தலைகாட்டாமல் நசுக்கி யழுத்திப்போடும். இந்தக் கிறீஸ்துவப் பாதிரிகள் பேசும் நயவஞ்சகமான சொற்களுக்கு செவி சாய்க்கவே சாய்க்காதீர். அவர்களுடைய விஷ வார்த்தைகள் உமது மனதுக்குள் நுழையவிடாதீர். உம்முடைய விசுவாசம் உறுதியாயிருக்கட்டும். அவர் வருவார், ஆம், அவர் வருவார், குறித்தகாலம் வந்தபோது மெசையா கட்டாயம் வருவார். அவர்மூலமாய் அவருடைய பிரசைகளின் நாமம் கனப்படுத்தப்படும். அவர்களுக்குப் பூலோக இராச்சியத்தைக் கொடுப்பார் ; உலகத்திலுள்ள நாடுகள் யாவும் அவர்களுடையதாகும்."

பென்தாவீதன் தன் மனைவி சொன்ன வார்த்தைகளைச் சரியென்று அங்கிகரித்துக் கொள்வதன் அடையாளமாய், மிகுந்த ஊக்கத்துடன் தன் கண்களை வானத்தை நோக்கி யுயர்த்தி, தாழ்ந்த குரலில் பின்வருமாறு செபித்தான். " உமது அடியான் ஆவலாய் எதிர்பார்க்கும் வெளிச்சம் வானிலிருந்து இறங்கிவருவதாக! ஆண்டவரே! உமது வழியில் என்னை நடத்தும் ; உமது இரட்சண்யத்தின் சத்தியங்களை நான் கண்டுணருமாறு என் கண்களைத் திறப்பீராக."

மீரியாம்.—" என் பிரிய காதலா! நாம் இதுகாறும் பேசியிருந்ததைவிட்டு, வேறு விஷயத்தைப் பேசுவோம். உமது புத்தி நினைவுகளை வேறு வழியில் திருப்பும். நேற்றிரவு நான் கண்ட கனவைப்பற்றிச் சொல்லுகிறேன் கேளும். அக்கனவு எனக்கு மிக்க கவலையும் விசனமும் கொடுத்தது" என்று தன் கனவை விவரிக்கத் தொடங்கினதும், அன்னம்மாள் என்னும் அவளுடைய வேலைக்காரி அங்கேவந்து, எஜமானருடன், ஏதோ ஒரு முக்கிய விஷயமாய் உடனே பேசிப் போகவேண்டுமென்று ஒரு கிறீஸ்துவ வீரர் வந்திருப்பதாகத் தெரிவித்தாள். பென்தாவீதன் உடனே எழுந்து மாளிகையின் முன்கூடத்துக்குவந்து எதிர்பாராத விதமாய் அங்கே செபஸ்தியான் பிரபுவைக் காணவே, அவனுக்குண்டான ஆனந்தத்துக்கும் ஆச்சரியத்துக்கும் அளவின்று! உடனே ஆளனுப்பி, அவள் கணவனைக் கள்வரினின்றுங் காப்பாற்றிய மகானுபாவனை வரவேற்று நன்றி செலுத்தும்படியாக மிரியாமை அழைத்துவரச் சொன்னான். அவளும் சற்றேனுந்தாமதிக்காமல் அவ்விடம் வந்து நமதிளவலை வரவேற்று, தன் கணவனை ஆபத்தினின்றுங் காத்து இரட்சித்ததற்காகத் தான் மிகவாய் நன்றியறிந்திருப்பதாகக் கூறி அவனைப் புகழ்ந்தாள். செபஸ்தியானுக்கு யாதொரு குறைவுமின்றி உபசாரணை நடந்தது. கிச்சிலி, அத்தி முதலிய பலதினுசு பழங்கள் வெள்ளித்தட்டுகளிலும், உயர்ந்த திராட்சரசங்கள் பொன்பாத்திரங்களிலும் கொண்டுவந்து அவன்முன் வைத்து, உண்டு களையாறும்படி சதிபதிகளிருவரும் அவனை யுபசரித்தார்கள். ஆனால் அவன் தான் யோசித்துவந்த காரியத்தை யூதனிடம் சொல்லுமுன்னர் ஒன்றையும் தொடமுடியாதென்று கண்டிப்பாய் மறுத்துவிட்டான்.

" ஏ! பென்தாவீது! உன்னுடைய ஜாமீன் பேரில் ரூபனிடம் வாங்கிய குதிரைக்கு நான் இன்னும் பணங்கொடுக்கவில்லையாதலால், நான் உனக்குக் கடனாளியாகிறேன். அக்கடனைத் தீர்க்

கவே நான் இங்கே தற்சமயம் வந்தது. ஆனால் என்னிடத்தில் பணங்கிடையாது. அதற்குப்பதிலாய் விலையுயர்ந்த ஒரு பொருளைக் கொண்டுவந்திருக்கிறேன்" என்று செபஸ்தியான் தன் பையிலிருந்து வைரகண்டிமாலையை எடுத்து யூதனிடங் காட்டினான்.

இந்த அபூர்வமான பொருளைக் காணவே, பென்தாவீதனுக்குண்டான ஆச்சரிய பிரமிப்புக்களவேயில்லாததுடன், அதை மறைக்கவும் அவனால் முடியவில்லை.

பென்தாவீது.—மகாப்பிரபூ! இந்த உன்னத மாலையின் விலை என்னவோ?

செபஸ்தியான்.—அதன் விலையை நீயே மதிப்பிட்டுச்சொல்லு; நீ யோக்கியனானபடியால், நீ சரியாய் மதிப்பிடுவாயென்று எனக்குத் தெரியும். உனக்கு லாபமாக ஐம்பதினாயிரம் பொன்காசுகளும், குதிரை வாங்கினதில் உனக்குச் சேரவேண்டியதையும் எடுத்துக்கொண்டு மிகுதியை எனக்குக் கொடு.

பென்தா.—ஆண்டவனே! இவ்வாபரணத்தை வாங்கக்கூடியவர்கள் அரசரே என்பது தங்களுக்குத் தெரியுமா?

செபஸ்.—மெத்த சந்தோஷம், பென்தாவீது. ஏனென்றால் எனக்கு அளவற்ற திரவியம் வேண்டியிருக்கிறது. யூதர்களாகிய நீங்களோ, அரசருடைய பொக்கிஷத்துக்கே யுரியவர்கள் போல, என்னேரமும் அவர்கள் பையில் கை நுழைத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

இந்தச் சமயத்தில் அங்கே நின்றுகொண்டிருந்த மிரியாம், "ஓ! அதை வாங்காதீர்! வாங்காதீர்! நான் உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன் வாங்காதீர்!" என்று மெதுவாய் அவள் கணவனிடம் எச்சரிக்கையில், அவள் முகத்தில் மரணத்துக்குரிய பயமுந் திகிலும் பரவிவிட்டது. "என் நேசக் காதலா! நான் சொல்லுகிறதைத் தள்ளிவிடாதீர். இதே வைரங்களை என் கனவிற் கண்டேன். அவை முதலில் கறுத்து, பிறகு இரத்தத்தைப்போல் செகப்பாய்த் தோன்றின. ஏதோ சம்பவிக்கப்போகும் நிர்ப்பாக்கியத்தை முன்னதாக இவ்வாபரணந் தெரிவிப்பதாக்கும். ஆதலால் அதை வாங்கவேண்டாம்" என்று தடுத்துவிட்டாள்.

ஆனால் ஒரு கனவைமுன்னிட்டு இவ்வளவு லாபகரமான வியாபாரத்தை விட்டுவிடுபவனல்ல பென்தாவீது. மேலும் இந்த மாலை நல்ல சமயத்தில் அவன் கைக்ககப்பட்டது. ஏனெனில் ஆல்டீமன் உத்தரவின்படி அவனிடம் கொண்டுபோக சந்தர்ப்பத்துக்குத்தகுந்த நகை இவ்வைரகண்டிமாலையே என்றெண்ணிவிட்டான். அரசனும் இதைப் பார்த்தால் தன்னை மெச்சுவதுடன் ஏராளமான திரவியத்தைக் கொடுக்கப் பின்வாங்கான் என்றும் நினைத்து மனமகிழ்ந்தான்.

ஆதலால் புன்னகை புரிந்தவாறு, நமது வீரன்பக்கந் திரும்பி, "பிரபூ! என்னை இருமுறை பிராணபாயத்தினின்றுங் காத்த கரங்களினின்றும் எனக்கேதோ தீங்குண்டாவதுபோல், இவ்வைரமாலையை நான் வாங்கினால் எனக்கேதோ கெடுதி நேரிடுமென்று என் மனைவியஞ்சுகிறாள்" என்றான் யூத வியாபாரி.

"பயப்படாதே, பென்தாவீது! அம்மா மிரியாம் நீ ஏன் பயப்படவேண்டும்? நீ இம்மாலையை வாங்குவதால், உனக்கெப்படி கெடுதியுண்டாகக்கூடுமோ தெரியவில்லை" என்றான் நமதிளவல்.

பென்தா.—ஆண்டவனே! இந்த வைரமாலை எப்படித் தங்கள் வசம் வந்ததென்று நான் அறியலாமோ?

செபஸ்.—அஃது அனாவசியம்! நான் அதை நியாய வழியில் சம்பாதித்தேனென்று நினைக்கிறாயா அல்லது சந்தேகிக்கிறாயா? அப்படியானால் நான் சொல்வதைக் கேள்! அதை அணிந்துகொள்பவர் எவராயினுஞ்சரி, ஒரு இராணியாயிருப்பினும் சரிதான், ஒருவரும் அதை பகிரங்கமாய் அணிந்துகொள்ளக் கூச்சமாவது வெட்கமாவது படவேண்டியதேயில்லை.

(இன்னும் வரும்)

ச. செல்வன்.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

சிங்கை அர்ச். லூர்துமாதாவின் மகோற்சவ கொண்டாட்டம்.

இச்சிங்கைமாநகரின்கண் தமிழ் பங்கில் எழுந்தருளியிராநின்ற அர்ச். லூர்துமாதாவின் திருநாளானது வழக்கம்போல் 1921௵ பெப்ரவரி௴ 4௳ துவக்கி, அவ்வாண்டவள் ஓர் ஏழை சிறுமிக்கு லூர்து கெபியில் தரிசனமான தினமாகிய 11௳ வெள்ளிக்கிழமை முடிக்க இருந்ததை மாற்றி அதிக ஆடம்பரத்துடன் 13௳ ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. நவநாட் தினங்களில் நாடோறும் காலை 7 மணிக்கு பாட்டுப்பூசையும், மாலை 7 மணிக்கு தேவமாதாவை நோக்கி ஜெபதபமுதலிய பக்திக்கிருத்தியங்களும் திவ்யநற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றுவந்தன. பெப்ரவரி௴ 13௳ ஞாயிற்றுக்கிழமை காலையில் அத்திருநாயகியின் திருநாளை சிறப்பிக்கும்பொருட்டு வீதிகளில் தண்ணீர் தெளிக்கும் பாவனையாய் மழை வருஷித்துக் கொண்டிருக்க, 8 மணிக்கு எமது ஞானத்தந்தையாகிய சங். எல். பர்காபர் (Rev. L. Burghoffer) சுவாமியாரால் பாட்டுப்பூசை ஆரம்பிக்கப்பட்டு இன்பகரமான சங்கீதங்களுடன் பூசையில் நூற்றுக்கணக்கான விசுவாசிகள் சம்மனசுகளின் போசனமாகிய சற்பிரசாத பந்தியில் அமர்ந்தனர். தேவாலயமும், பலிபீடமும் பலவர்ணக் கொடிகளாலும், நூற்றுக்கணக்கான மெழுகுவத்திகளாலும், புஷ்பங்களாலும், நானாவித ஜோடினைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அர்ச். லூர்துநாயகியின் கெபியில் எரிந்துகொண்டிருந்த விளக்குகள், பச்சை மரகதத்தில் பதித்த கெம்புகளைப்போல் துலங்க, கெபிவாயலில் சித்திரிக்கப்பட்டிருந்த "Ave Maria Gratia Plena" என்னும் வார்த்தைகள் பார்க்கப்பார்க்க வியக்கத்தக்கவிதமாய்க் காணப்பட்டன.

மாலை 7 மணிக்கு கனம் வந்திக்கத்தக்க வைக்கர் ஜெனராலாகிய சங். ஈ. ஜெ. மாரியட் (Very Rev. E. J. Mariette, v. g.) சுவாமியாருக்கு உதவியாக சங். தீவால் (Rev. Deval) சுவாமியார், டீக்கனாகவும், சங். ஜி. ஆங்குய்ன் (Rev. G. Anguin) சுவாமியார் சப் டீக்கனாகவும் நின்று சுற்றுப்பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டது. வழக்கம்போல் பாடுபட்ட சுரூபம், முன்செல்ல, சிறு பிள்ளைகள் வரிசை வரிசையாகவும், அவர்கள் மத்தியில் சேசுவின் திரு இருதய சபையார் பொன் சரிகையினால் சித்திரித்த இருதய ஆண்டவர் கொடியை கையில் ஏந்திக்கொண்டு செல்ல, பாட்டுக்காரர்கள் அருமையான பாடல்களையும், தேவமாதாவின் பிரார்த்தனையையும், பாடிக்கொண்டு செல்ல, பரதேசிகளுக்கு ஆதரவும் பாவிகளுக்கு அடைக்கலமுமாகிய அர்ச். லூர்துநாயகியின் சுரூபம் வெள்ளி சரிகையினாலும், இமிடேஷன் பூக்களாலும், ரோஜாமலர்களாலும் சோடிக்கப்பட்டிருந்த ரதத்தின்மீது எழுந்தருளிவர அதைப் பின்தொடர்ந்து விசுவாசிகளின் பெருங்கூட்டம், மெழுகுவத்தியைக் கையில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு செல்ல, பீரங்கி வெடிகளைப்போல் அதிர்வெடிகள் முழங்க, அதிவிமரிசையாக சுற்றுப்பிரகாரம் கோவில் வந்துசேர சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரப்பாடலைப் பாடி திவ்யநற்கருணை ஆசீர்வாதங் கொடுக்கப்பெற்று திருநாள் முடிவாயிற்று.

சிங்கப்பூர்,
17—2—21. } G. S. D.

புத்தந்துறை அர்ச். ஜெபமாலைமாதா திருவிழா.

ஐயா, பத்திராதிபரே,

கொல்லம் மேற்றிராசனத்தைச்சேர்ந்த புத்தந்துறை அர்ச். ஜெபமாலைமாதாவின் ஆலயத்தில் வழக்கம்போல், இவ்வருடம் ஜனவரி௴ 28௳ மாலை சுமார் 5 மணிக்கு கொடியேற்றப்பட்டு அன்றுதொட்டு மற்றும் 9 நாள்களிலும் காலையில் திவ்ய பாடற்பூசையும் மாலையில் தேவமாதாவின் திருச்சுரூப ஆசீர்வாதமும் அளிக்கப்பட்டது. 10௳ திருநாள் காலை சுமார் 9 மணிக்கு பெரிய பாடற்பூசையும் பூசையின்போது அனேகர் திவ்யசற்பிரசாதமுமருந்தினர். பூசை முடிய சுமார் 11 மணியளவில் பலநிற வர்ணக்கடுதாசிப் பூக்களால் சித்தஞ்செய்யப்பட்ட சிங்கார ரதத்தின்மீது எங்கள் பங்கு சுவாமியார் அவர்களால் திருச்சுரூபம் தேரில் பெலப்பிக்கப்பட்டு வெடி கொடிகளுடனும் பாண்டு வாத்தியத்துடனும், மணி ஓசைகளுடனும் சிறுவர் சிறுமியர் பூக்கள் அள்ளி யிறைக்கவும் இரதத்தின்பின்பால் சபைப் பிள்ளைகள் 153 மணி ஜெபம் ஜெபித்துப் பின்செல்ல, பாடகர் தங்கள் இனிமையான பாக்களால் ஸ்துத்தியஞ் செய்தும், மற்றும் கிறீஸ்துவப் பிரசைகள் ரதத்தைப் பின்துடர்ந்து செல்லவும், இத்தகையான ஆரவாரச்

சிறப்புகளுடன் இவ்வூரில் முக்கிய தெருக்களினூடேச் சுற்றுப்பிராகாரம் வந்த காட்சி ஆத்மானந்தத்தை அதிகரிக்கச்செய்யும் காட்சியாயிருந்தது. தேவதாயின் திருத்தேர் வந்த வீதிகளில் தண்ணீர் தெளித்துச் சுத்தமாக வைத்திருந்தார்கள். ரதத்தின் பின்வந்த கிறீஸ்துவர்களுக்கும் இந்துக்களுக்கும் தயிரும் தண்ணீரும் ஏராளமாய் கொடுக்கப்பட்டது. திருத்தேரும் சப்பரங்களும் தெருவீதிசுற்றி பந்தரில் வந்ததும் திருச்சுரூபமிறக்கி கோவிலினுள் எழுந்தேற்றம் பண்ணினவுடன் கோவிலுக்குள்ளிருக்கும் பீடமுழுவதும் கொளுத்தப்பட்டிருந்த மெழுகுவத்திகள் கோடி சூரியப்பிரகாசம்போல் விளங்கவும், திவ்ய தூபவர்க்கத்தின் புகையானது கோவிலின் எப்பக்கத்திலும் பரிமளிக்கவும், பாடகர் பாடின திவ்ய கீதங்கள் தேவகானமோ என்று ஜனங்கள் மலைக்கவும், இவ்வித நானாவித வைபவங்கள் நடுவில் பரிசுத்த பரம திவ்யநற்கருணைக்கு, ஆராதனையும் ஸ்துதி நமஸ்காரங்களுஞ் செலுத்தப்பட்டபின்னர் ஆசீர்வாதமும் கொடுக்கப்பட்டது. இதன்பின் திருக்கொடி இறக்க ஜெபமாலைமாதாவின் திருவிழா இனிது முடிவாயிற்று. இத்திரு உற்சவத்தை இனிது கொண்டாட எம் பங்கு சுவாமியாராகிய அதி வணக்கத்துக்குரிய சைமோன் கொன்சாகோ அவர்களாலும் எம் குல ஸ்ரீமான் எம். ஐயர் பிள்ளையவர்கள் நன்முயற்சியாலும் இனிது முடிவானது போல இனிமேலும் இத்திரு உற்சவத்தை தக்க சிறப்புகளுடன் கொண்டாட இவருக்கு வேண்டிய தீர்க்காயுளையும் திரண்ட நற்சுகத்தையும் இத்திருவன்னை கருணைபாலிப்பாளாக.

அர்ச். ஜெபமாலைமாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

இங்ஙனம்,
எம். அலங்காரப் பாறுண்டிஸ்.

கத்தோலிக்கு இந்தியர் பரோபகார சபை.

சங். பத்திராதிபர்களே!

மார்ச்சுமீ நல்ல ஆயன் சஞ்சிகையின் அநுபந்தமாக பிரசுரஞ்செய்யப்பட்ட கத்தோலிக்கு இந்திய பரோபகார சபையின் விண்ணப்பத்தையும் தாங்கள் தயவாய் அதன் விஷயமாய் எழுதியுள்ள விஷயங்களையும் நமது நேயர்கள் வாசித்து சபையின் நன்னோக்கங்களை அறிந்திருப்பார்களென்பது திண்ணம். வெளியிலனுப்பியுள்ள விண்ணப்பத்தின் முதல் பலனாக நமது சகோதரர் ஒருவர் சபையின் பிரதம போஷகராக முன்வந்து தமது நன்கொடையின் முதல் தவணையாக ரூ. 50 அனுப்பியுள்ளார். இந்நற்குணசீலரின் முன்மாதிரிகையைப் பின்பற்றி இன்னும் அநேக கனதனவான்கள் முன்வந்து சபையை ஆதரிக்குமாறு அவரிடமிருந்து வரப்பெற்ற அடியிற்கண்ட அன்பார்ந்த கடிதத்தையும் பிரசுரிக்குமாறு பணிவுடன் கோருகிறேன்.

B. தைரியம்,
காரியதரிசி.

ராபர்ட்சன்பேட்டை,
10—3—21.

கத்தோலிக்கு இந்திய பரோபகார சபை ஸ்ரீமான் M. R. மகிமைதாஸ் அவர்கட்கும் ஷை சபையின் அங்கத்தின் அனைவருக்கும் அன்பின் வந்தனம். நீங்கள் பட்சமாய் அனுப்பிவைத்த கடிதமும் சபையில் Book Postம் பெற்றுக்கொண்டேன். ஷை சபையின் பிரதம போஷகனாக முன்வந்திருக்கும் இவனுடைய மொத்தத் தொகையில் ரூ. 50 (ஐம்பது) இன்சுர் செய்திருப்பதைத் தயவாய் பெற்றுக்கொள்ளவும். 1916ளு Inaugural Meeting 1917ளு Extraordinary Meeting இவ்வைபவ நேரத்தில் அன்பர்கள் வந்துசேர்ந்து எடுத்த போட்டோவைக்கண்டு அகமகிழ்ந்தேன். ஆனால் இப்போட்டோவில் பதிந்திராநின்ற அன்பர்கள் ஒவ்வொருவரும் ஷை சபையின் ஆழ்ந்த கருத்துகளையும் குலாபிமான வைராக்கியத்தையும் கடைப்பிடித்து மன உற்சாகத்தோடும் சபை முன்வரவேணுமென்ற தீரத்தோடும் வேலைசெய்தால் திராக்ஷ தோட்டத்தைப்போல் பலனையடைய சந்தேகமில்லை. இத்தோடு தேசமெங்கும் பாவியிராநின்ற நமது அன்பின் சகோதரர்கட்கு இச்சபையின் கருத்துகளை எப்படித் தெரிவித்து அவர்களையும் நமது சபைக்கு உதவி போஷகராக்கலாமென சங்கத்தின் ஆலோசனையில் விட்டு உத்தமமானதும் சொற்ப செலவில் நிறைவேறக்கூடியதுமான ஓர் வழியைத் தெரிந்துகொள்ளவேணும். இம்மட்டும் இதை அன்பாய் முடிக்கலானேன்.

இங்ஙனம்,
M. S. லாசரஸ்.

குரும்பாகரம்
மாதர்கள் சாஸ்வத கோவில் பண்டு.

சேசுவின் திரு இருதயத்தில் பிரிய சகோதரமே!

நம் இந்தியா தேசத்தில் சத்திய வேதம் பரம்பி அநேக நூற்றாண்டுகளாயினும், நம்மில் தனவந்தர், தர்மசீலர், தர்மசீலிகள் பலர் இருப்பினும், இன்னும் நாம் மேனாட்டு உதவிக்கும் பிச்சைக்கும் கையேந்தி நிற்பது நமக்கோர் பெருங் குறையல்லவா? எத்தனை காலத்துக்குத்தான் தாய்ப்பால் மறவாக் குழந்தைகளாயிருப்போம். எவ்விதத்திலாவது இப்பெருங் குறையை நிவர்த்திபண்ணுவது நமது கடமை.

விசுவாசப்பரம்புதல் சபையானது நமக்கு ஞான மேய்ப்பர்களைத் தந்தும், பல தர்ம சபைகளை உதவியும் நம்மை இதுவரையிலும் ஆதரித்துவந்ததல்லாமலும், இப்போதும் ஆதரித்துவருகிறது. அது ஒவ்வொருவரிடத்திலும் பெரும்பாலும் ஏழை எளியவர்களிடத்திலும் வாரம் ஒன்றுக்கு நாலு காசுவீதம் தண்டல்செய்து வசூலாகுந் தொகையை உரோமாபுரிக்கு அனுப்ப, அதிலொரு பாகத்தை அர்ச். பாப்பானவர் நம்முடைய தேசத்திற்கனுப்பிவருகிறார். நிகழ்ந்த கொடிய யுத்தத்தின் காரணமாய் இத்தொகையும் வரவரக் குறைந்துபோகிறது; காலக்கிரமத்தில் இதுவும் நின்றுவிடும்போலும்.

தம் தூரதிருஷ்டியால் இச்சம்பவத்தைத் தீர்க்கதரிசனம்போலறிந்திருந்த காலஞ்சென்ற பரிசுத்த தந்தை 13-ம் சிங்கராயரும், இதைத் கண்ணாரக் காணும் 15-ம் ஆசீர்வாதப்பரும் முறையே 1893-ம் ஆண்டு ஜூன்மீ 24-ந் தேதியிலும் 1919-ம் ஆண்டு நவம்பர்மீ 3-ம் தேதியிலும் எழுதி விடுத்த அப்போஸ்தலிக்கு நிருபங்களில் அந்தந்த தேசத்தவர்களும் அந்தந்த தேசத்திய ஞானக்காரியத்துக்கடுத்த யாவற்றையுஞ் சேகரஞ்செய்து நிர்வகித்துவரவேண்டுமென்றும் பிரரேபித்திருக்கிறார்கள்.

பிரிய சகோதரமே! உன் விசுவாசக்கண்ணைச் சற்றுத் திறந்து உற்றுப்பார். உண்மையில் உன் குடும்பத்தை முன்னுக்குக் கொண்டுவர நீ பாடுபடுகிறாயல்லவா? உன் கூரைவீட்டை மச்சு வீடாகவும், மச்சுவீட்டை மெத்தைவீடாகவும், உன் ஒரு வேலி நிலத்தைப் பத்து வேலி நிலமாகவும், கையிலுள்ள ஆயிரரூபாயைப் பத்தாயிர ரூபாயாகவும் விருத்திக்க நீ சர்வப்பிரயாசமும்படுகிறாய். இவ்விஷயத்தில் உனக்குள்ள ஆசைக்கு அளவும், மட்டுங் கிடையாது. இப்படியிருக்க, இவ்வூரிலுள்ள எல்லாக் குடும்பங்களுக்கும் சொந்தமானதும், எல்லாக் குடும்பங்களையும்விட சிரேஷ்டமானதும், சென்ற அறுபது வருஷகாலமாய்த் தான் தலையெடுக்க அந்நிய தேசத்தாரிடத்தில் பிச்சைக்குக் கையேந்தி நிற்கிறதுமான ஒரு குடும்பம் உண்டு. அக்குடும்பம் இந்தக் குரும்பாகர பங்காகிய அர்ச். பிலவேந்திரர் கோவில் பங்கேயாம். இக்குடும்பத்துக்குப் பொருளாசையுமில்லை, பேராசையுமில்லை. தன் சவரட்சணைக்கு வேண்டியது போக மீதியை உனக்கே செலவிடும். இத்தகைய நற்குணம் பொருந்திய இக்குடும்பம் தன்னை யாதரிக்கும்படி தன் இருகரங்களையும் நீட்டி உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறது. நீ அதன் வேண்டுகோளுக்கும் விண்ணப்பத்துக்கும் செவிசாயாமலிராயென்பது நமக்குள்ள நம்பிக்கை.

ஆனதுபற்றி இப்பங்குக்குச் சாஸ்வதமான ஒரு நிதியைச் சேர்க்கவேண்டியது நமக்குள்ள கடமையாமே. ரூபாய் ஏழாயிரமாகிலும் வேண்டுமென்பது பெரியோர்களின் அபிப்பிராயம். பங்கு சுவாமியாரும், கிறீஸ்துவர்களும் ஏற்கெனவே திருச்சபை சட்டங்களை இவ்விஷயமாய் அனுசரித்து செய்திருக்கிற ஏற்பாட்டின்படி ஷை தொகையின் வட்டிமாத்திரம் செலவிடப்படும். ஆகையால் மாதம் ஒன்றுக்கு அறுநூறு ரூபாயாகிறது. தொகை சேரச்சேர ஒவ்வொரு மாதமாகப் பூர்த்திசெய்யப்படும். நமது பங்கில் பல தர்மசீலிகள் இருக்கிறார்கள். சுவாமி கிருபையால் அவர்களுக்குத் தக்க பொருளும் உண்டு. மனதுவைப்பார்களானால் மூல தொகை (7,000 ரூ.) ஏழாயிரம் ரூபாய் சேர்ந்துவிடும்.

ஆம், பிரிய சகோதரமே! உனக்கு மனதிருந்தால் நமது கோரிக்கை நிறைவேறப் பல வருஷம் செல்லாமல் இவ்வருஷமே நிறைவேறிவிடும். "மாதர் மனதே சுவாமி மனது" (Ce que femme veut, Dieu le veut) என்னும் பிராஞ்சு சுலோகப்படி தெய்வமே உன் விஷயம் இப்படி நடக்கக் கோரினால், உன் நோக்கத்தையும் கருத்தையும் அறியும் உன் புருஷன் உன் வேண்டுகோளுக்குச் செவிகொடாதிரார். குடும்பத்தில் உன் எண்ணமும், கருத்தும்

உடனே சித்தியாகாவிடில் சமயம் கிடைக்கும் போதெல்லாம் நீ எடுக்கும் உபாயத்திற்குக் கணக்குண்டோ? கடைசியாய் உன் அலட்டலைச் சகிக்கக்கூடாமல் குடும்ப சமாதானத்தை நாடி நீ கேட்டதையெல்லாம் கணவன் உனக்குக் கொடுத்துவிடுவார்.

ஏராளமான நன்மைகளைப் பொழிந்துவரும் விசுவாசப்பரம்புதல் சபையை ஏற்படுத்தினது பிராஞ்சு தேசத்து ஓர் ஏழைப் பெண்பிள்ளையாகிய ஸ்ரீமதி ஜாரிக்காட் (Miss Jaricot) அல்லவா?

சேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுடன் பட்டணங்களையும், கிராமங்களையும் சுற்றித் திரிந்து சுவிசேஷத்தைப் போதிக்குங்காலையில் அவருக்கும் அவருடன் இருந்த சகலருக்கும் சாப்பாடு பரிமாறுதல் முதலிய சகல பணிவிடைகளையும் செய்துவந்தவர்கள் ஸ்திரீகள்தான். "மதலேன் என்ற மரியம்மாளும், எரோதனுடைய காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய அருளாயும், சூசன்னா முதலிய அநேக புண்ணியவதிகளும், தங்கள் சொந்தச் செலவில் சேசுவைப் பராமரித்துவந்தார்கள்." (லூக்காஸ் சுவிசேஷம், 8-ம் அதிகாரம், 2, 3-ம் வசனம்.)

இந்த ஞாயங்களை மனதில் இருத்தி, சகோதரமே! நீ சேர்க்கும் தொகைக்கு மாதர் பண்டு என்று பெயர் இட்டிருக்கிறது.

"கோவில் விளங்கினால் குடி விளங்கும்." "தர்மம் தலைகாக்கும், தர்மம் சகல பாவத்தையும் போக்கும்."

"அப்பொழுது (தர்மம் செய்யும்போது) நீங்கள் எல்லாவற்றிலும் ஐசுவரியவான்களாகிச் சகலவிதக் கபடற்றதனத்திலும் தனவான்கள் ஆவீர்கள்." (அர்ச். சின்னப்பர், கொரிந்தியர் 2-ம் நிருபம், 10-ம் அதிகாரம், 11-ம் வசனம்.)

"சுவிசேஷத்தைப் போதிக்கிறவர்கள் சுவிசேஷத்தால் பிழைப்பார்கள்" என்று ஆண்டவர் இட்டிருக்கும் கட்டளையை மறக்கலாகாது.

இதற்குமேல் நாம் உங்களுக்கு அதிகமாய்ச் சொல்வது அநாவசியமென்று நினைத்து உங்கள் உதாரகுணத்தைச் சேசுவின் திரு இருதயத்திற்கும், அர்ச். பிலவேந்திரருக்கும் ஒப்புக்கொடுத்துவிட்டு உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிக்கின்றோம்.

1920ஆ பிடி அரிசியில் வரவு	...	45	1	6
ஷை நெல்லில் வரவு	...	77	8	6
செல்வரத்தினம், மத்தளங்குடி	...	1	0	0
கஸ்தூரிமரி, அன்னவாசல்	...	1	0	0
அந்துவானேத், குரும்பாகரம்	...	1	0	0
மாதரசம்மாள், ,,	...	1	0	0
காணிக்கைமரி, ,,	...	1	0	0
இராஜாத்தியம்மாள், ,,	...	30	0	0
ஆ மொத்தம்	...	157	10	0

சங். அல்போன்ஸ் சுவாமியார்,
விசாரணை குரு,
குரும்பாகரம், நெடுங்காடு,
தஞ்சாவூர் ஜில்லா.

வெள்ளி ஜூபிலி மகோற்சவம்.

சர்வேசுரனுடைய நாமம் மகிமைப்படுவதற்கும், ஆத்துமாக்கள் குணப்பட்டு, இரட்சண்யமடைந்து சர்வேசுரனுடைய பாதத்தண்டை சேர்வதற்கும் சங். குருப்பிரசாதிகளே காரணர். சேசுநாதசுவாமியுடைய ஞான அதிகாரத்தைப் பெற்ற அப்போஸ்தலர்களும், அவர்களின் பின்னடியார்களாகிய சங். குருப்பிரசாதிகளும் ஆண்டவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவர் மட்டில்கொண்டுள்ள அன்பினாலும் பக்தி வைராக்கியத்தாலும் ஏவப்பட்டு, மண், பெண், பொன் எனு மூவாசையையும் வெறுத்து, தம் உடல், பொருள், ஆவி யாகியவற்றை அவருக்குத் தத்தஞ்செய்து, உலகமெங்குஞ் சென்று படாத பாடுகள் பட்டு, வேதம்போதித்து திருச்சபையை ஸ்தாபித்துவருவதினாலே சேசுநாதசுவாமி வசனித்தவண்ணம், "உங்களைக் கனம்பண்ணுகிறவன் என்னைக் கனம்பண்ணுகிறான்" என்பதற்கேற்ப அப்படிப்பட்ட தேவ ஊழியர்களுக்கு செய்யப்படும் எவ்வித மரியாதை சிறப்புக் கொண்டாட்டங்களும் சர்வேசுரனுடைய நாமத்துக்கு மகிமையும் தோத்திரமுமாகும்.

அந்நிய மதஸ்தர்கள் தங்களில் மகாத்மாக்களாகவும், பெரியவர்களாகவும் மதிக்கப்பட்டவர்களின் வரவேற்றலை அல்லது ஜனன நாட்களை எவ்வளவோ பணவிரயஞ்செய்து சிறப்புடன் கொண்டாடி ஆனந்திக்கின்றார்கள். உலகத்தை

வெறுத்து துறவிகளாய் ஜீவிக்கும் கத்தோலிக்கு குருக்கள்மட்டில் கிறீஸ்துவர்களாகிய நாம் எத்தனைக்கதிகமாக அன்பும் அநுதாபமும் காட்டி அவர்களுடைய விசேஷித்த நாட்களையும் உற்சவங்களையுங்கொண்டாட கடமைப்பட்டுள்ளோம்.

ஆகவே நமது பத்திராதிபராகிய சங். ஜான் சுவாமிகள் தமது ஞான அதிகாரத்தை நடத்திய காலத்தில் அவரை அறிந்த பங்கு கிறீஸ்துவர்களும், நல்ல ஆயன் சந்தாதாரர்களும் அவருடைய வெள்ளி ஜூபிலி மகோற்சவத்தைக் கொண்டாட முன்வந்திருப்பது மெத்த உத்தமமும், அவசியமுமான காரியமென்பதற்கோற் ஐயமில்லை. ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்ததுமுதல் இற்றைய வரையில் நமது பத்திராதிபர் அச்சியந்திரசாலை சாமான்களின் விலையேற்றத்தினாலும், தொழிலாளரின் தொல்லையினாலும் அனுபவித்துவந்த கஷ்டமும் நஷ்டமும் மெத்த.

ஆயினும் சங். ஜான் சுவாமிகள், பத்திரிகை நேயர்களின் நன்மை ஒன்றையே கருதினவராய், பத்திரிகைகள் பல முட்டுப்பட்டு வீழ்ந்தகாலத்திலும், "வெள்ளம் வருமுன் அணைபோடு" என்கிற வாக்கியத்திற்கிணங்க எப்பாடுபட்டோ வேண்டும் நிதி சேகரஞ்செய்து மற்றும் சமயோசிதமாய் சாம பேத தான தண்டோபாயங்களைப் பிரயோகித்து, அச்சியந்திரசாலையையும், நம தன்பார்ந்த "நல்ல ஆயனை"யுங் காப்பாற்றிவந்திருப்பது மெத்தவும் பாராட்டத்தக்கது. இவ்விதமாய் அரிய வேலைசெய்துள்ள சங். ஜான் சுவாமிகளுக்கு பெங்களூர் ஸ்ரீமான் K. ஜோசப் பிள்ளை அவர்கள் குறித்த தொகைக்குக் குறையாவண்ணம் நல்ல ஆயன் சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நன்கொடையளித்து அவர்களது ஜூபிலி தினத்தில் அவரைத் தக்கவாறு சன்மானிக்கக்கடவோமாக.

சென்னையில் 14 வருஷங்களாக மூன்று கோவில்களில் பங்கு சுவாமிகளாகவும் 11 வருஷம் "நல்ல ஆயன்" பத்திராதிபராகவும் உழைத்தவராகிய சங். ஜான் சுவாமிகளுடையவும், கிறீஸ்துவர்களும், கோவிலுமுதலாய் இராத இடங்களில் பிரமாண்டமான கோவிலைக் கட்டி ஏராளமான ஜனங்களை கிறீஸ்துவின் மந்தையில் சேர்க்க ஊண் உறக்கமின்றி கடின பாடுபட்டு உழைத்திருக்கும் பாக்காலா பங்கு சங். சவியேர் சுவாமிகளுடையவும், இராயவரம் பங்கு சங். சவியேர் சுவாமிகளுடையவும் வெள்ளி ஜூபிலி மகோற்சவத்தை நல்ல ஆயன் சந்தாதாரர்களும் மற்றும் பங்கு கிறீஸ்துவர்களும் ஒருங்குசேர்ந்து சிறப்புடன் கொண்டாடக்கடவோமாக.

சந்தாதாரரில் ஒருவர்
C. V. தோமாஸ் பிள்ளை.

சங். A. R. ஜான் சுவாமியாரவர்களின் வெள்ளி ஜூபிலி மகோற்சவம்.

நமது சங். ஜான் சுவாமிகளின் வெள்ளி ஜூபிலி மகோற்சவம் ஜூன்மீ 12-ந் தேதி கொண்டாடவேண்டுமென்று கடந்த பிப்ரவரிமீ 20-ந் தேதி புதுப்பேட்டை அர்ச். அந்தோனியார் பள்ளிக்கூடத்தில் தீர்மானித்ததைப்பற்றி பெரும்பாலோர் வருந்துகிறார்கள்.

ஏனெனில் ஷை மாதத்தில் கோடைகால விடுமுறையாகிறபடியால் கவர்ன்மெண்டு ஆபீசு மலைக்குப் போய்விடும். கோர்ட்டுகளும், காலேஜ்களும், ஸ்கூல்களும் மூடப்படுகின்றன. மூடினவுடன் அவரவர் தங்களுடைய சொந்த ஊர்களுக்கோ, வெளியூர்களுக்கோ தேகசௌக்கியமுதலிய காரணங்களை முன்னிட்டு போய்விடுவார்கள்.

ஆதலினால் ஷை உத்தியோகச்சாலைகளிலும் ஸ்கூல்களிலும் இருக்கப்பட்ட எத்தனையோ பேர் உத்தியோகஸ்தர்கள் மாணாக்கர்கள் சங். ஜான் சுவாமிகளின் ஜூபிலி மகோற்சவத்தைக் கண்ணாரக்கண்டு களிக்கக்கூடாமற்போய்விடும்.

ஆகையால் இதை நமது சந்தாதாரர்களும் தென் இந்தியா கிறீஸ்துவர்களும் ஷை ஜூபிலி கமிட்டியாரும் தயவுசெய்து கவனித்து எந்த மாதத்தில் ஜூபிலி கொண்டாடினால் எல்லோருக்கும் சௌகரியமாயிருக்குமோ அந்த மாதத்தில் ஷை மகோற்சவத்தைக் கொண்டாட ஏற்பாடு செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சங். பத்திராதிபரவர்கள் தயவுசெய்து இக்கடிதத்தைத் தங்களுடைய பத்திரிகையின் ஓர் கோணத்தில் பிரசுரிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

C. MARIASUSAI PILLAI, Korukkupet

[இதர கடிதங்களும், வியாசங்களும் அடுத்த மாத சஞ்சிகையில் வெளியாகும். ப.—ர்.]

சங். ஏ. ஆர். ஜான் சுவாமியாரவர்களின் வெள்ளி ஜுபிலிக்காக

"நல்ல ஆயன்" சந்தாதாரர்களின் நன்கொடை.

"நல்ல ஆயன்" பத்திரிகாசிரியராகிய சங். ஏ. ஆர். ஜான் சுவாமிகளின் வெள்ளி ஜுபிலி மகோற்சவகாலத்தில், அக் குருதேசிகருக்கு "நல்ல ஆயன்" சந்தாதாரர்களால் ஒரு பணப்பை காணிக்கையாக சமர்ப்பிக்கவேண்டுமென்ற பிரேரணையை ஆதரித்து, அதற்காகப் பின்கண்ட நன்கொடைகளை அனுப்பிவைத்த நண்பர்களுக்கு ஷை ஜுபிலி கமிட்டியார் பெரிதும் நன்றியறிந்த வந்தனஞ் செலுத்துகிறார்கள். இவர்களைப்போல் இன்னும் மற்ற நண்பர்களும் தங்களால் கூடிய தொகைகளை அனுப்பி, கோரிய காரியம் இனிது முடியுமாறு உதவிசெய்வார்களெனப் பெரிதும் நம்பப்படுகிறது.

2/74, பிராட்வே, மதராஸ், 28—3—21. எம். பி. குழந்தைசாமி, பொக்கிஷதாரன்.

10 ரூபாய்.—Messrs. A. S. ரொதிரிகஸ், தூத்துக்குடி ; I. X. பெரைரா, தூத்துக்குடி ; C. V. தேமாஸ் பிள்ளை, தேனும்பேட்டை.

5 ரூபாய்.—Messrs. C. V. பர்னபாஸ், வேலூர் ; S. R. தெய்வசகாயம்பிள்ளை, நீலகிரி ; சங். M. A. சாவியேர் சுவாமியார், புரத்தாக்குடி ; சங். A. சாவியேர் சுவாமியார், மேகளத்தூர் ; இ. அ. அருளானந்தம் பிள்ளை, திருமயம் ; சங். K. ரெத்தின சுவாமியார், கொன்னக்குடி ; A. சுவாமிக்கண்ணுப் பிள்ளை, தனுஷ்கோடி ; சங். G. ரோச் சுவாமியார், மணப்பாடு ; S. A. ஞானப்பிரகாசம் பிள்ளை, காட்பாடி ; L. P. J., மசகான் ; பிரான்சிஸ் டேவிட் பிள்ளை, மோவ் ; சங். ஹெட்மாஸ்டர், கபிரியேல் பாடசாலை, சென்னை ; ரொதிரிகஸ் அண்டு கம்பெனி, பேட்டை ; சங். J. ரோக் சுவாமியார், தோளூர்பட்டி ; D. தேவசகாயம், D. P'Khan ; A. சந்தனம் பிள்ளை, தனுஷ்கோடி ; ஒரு அபிமானி, பெங்களூர் ; காபிரியேல் கோமஸ், அவிசவிளை ; சங். M. மோத்தா வாஸ் சுவாமியார், கருங்கண்ணி ; A. முத்துசாமி, தஞ்சாவூர் ; A. V. பெர்னாண்டெஸ், தெகிவெட்டா.

3 ரூபாய்.—Mrs. அற்புதமரியம்மாள், பெங்களூர் ; Messrs. K. V. பிரான்சிஸ் சாவியேர், சேந்தமரம் ; M. பொன்னுசாமி முதலியார், கும்பகோணம் ; பிரான்சிஸ் ஜமேதார், ஐயனூர் ; ராவ் சாஹிப் D. அருளானந்தம் பிள்ளை, B.A., B.L., தஞ்சாவூர் ; சரியாய் வந். A. Faisandier, S.J., திருச்சினாப்பள்ளி மேற்றிராணியாரவர்கள் ; D. அந்தோனி, பெங்களூர் ; W. ஆரோக்கியசாமி, தும்டிங் ; A. D. மரியசாமி, கல்கத்தா ; Mrs. S. மரினி, செங்குன்னூர் ; P. சவரி, இரங்கூன் ; R. S. இராசப் பிள்ளை, பெங்களூர் ; F. B. அபிரகாம், குரன்பாண்டுகோடா ; S. A. ஜோசப், கோகவட்டா.

2½ ரூபாய்.—Messrs. F. சுவாமிநாத பிள்ளை, கண்டுகூரு ; M. டானியேல், கல்கத்தா.

2 ரூபாய்.—Messrs. A. G. குரூஸ் பிள்ளை, வெல்லிங்டன் ; M. S. லாசரூஸ், ராபெர்ட்சன்பெட் K.G.F ; T. C. இஞ்ஞாசிமுத்து, பெங்களூர் சிட்டி ; D. புஷ்பம் பிள்ளை, ஆரணி ; V. D. அந்தோனி, வெல்லிங்டன் ; சங். C. Petite, போதனூர் ; S. லூர்துசாமி பிள்ளை, திருப்பனந்தாள் ; A. L. அந்தோனி குரூஸ், ஊர்காம் ; ஒரு சிநேகிதர், காரைக்கால் ; K. மாணிக்க ஆச்சாரியார், உதகமண்டலம் ; J. பெர்னாண்டெஸ், நெல்லம்பட்டி ; F. C. ரொசாரியோ, மைசூர் ; S. A. இஸ்ராயேல், பௌரிங்பெட் ; சங். L. பிரகாசநாத சுவாமியார், பெரும்பண்ணையூர் ; T. N. மோத்தா, திருவனந்தபுரம் ; M. ஆரோக்கியசாமி பிள்ளை, பெங்களூர் ; R. தேவராஜ், கோட்டகிரி ; A. திவியன், சந்திரநாகூர் ; சங். பால் எருவ சுவாமியார், நாகப்பூர் ; S. V. ஆரோக்கியசாமி, வெல்லிங்டன் ; C. S. ஞானப்பிரகாசம் பிள்ளை, பெங்களூர் ; A. S. துரைசாமி, பெனுகொண்டா ; சங். J. P. சாவியேர் சுவாமியார், அத்திக்கோடு ; மிக்கேல் அன்ட் சன்ஸ், ராபர்ட்சன்பெட் ; அந்தோனி ரோசாரியோ, கல்கத்தா ; M. பால், மாத்தளை ; A. P. ராயன், நாவலாபிற்றியா ; அந்தோனி முத்து அவுல்தார், குவெற்று ; S. சந்தியாகு, சாங்கார் ; L. தேவசகாயம், மீரட் ; B. V. டேவிட்,

ஊர்காம் ; சங். A. பாக்கியநாதர் சுவாமியார், முத்துப்பேட்டை ; X. P. பைவா, தூத்துக்குடி ; சங். A. குட்டூரியெர், சேந்தமரம் ; போஸ்ட் மாஸ்டர், சேந்தமரம் ; ஜமேதார் A. இராயப்பன், N.W.F. ; F. மரியதாஸ், கல்கத்தா ; M. தம்புசாமி பிள்ளை, மவுண்ட்ரோட் ; ஓர் சிநேகிதர் ; மெ. ஆரோக்கிய உடையார், காளியார் கோவில் ; L. R. பெர்னாண்டோ, தஞ்சாவூர்.

1½ ரூபாய்.—Mr. G. பிரான்சிஸ் பிள்ளை, எர்ணாக்குளம் ; சங். F. X. மரியதாஸ் சுவாமியார், சருகணி ; ம. அருளாந்துடையார், ராயப்பன்பட்டி.

1¼ ரூபாய்.—Mr. D. அருளப்ப செட்டியார், துக்கனுக்கன்பாளயம் ; C. A. அந்தோனி பிள்ளை, பௌரிங்பெட்.

1 ரூபாய்.—Messrs. P. கண்ணுசாமிப் பிள்ளை, குமரபாளயம் ; A. L. ஜோசப், குன்னூர் ; ராஜா அந்தோனி, அருவங்காடு ; S. ஜோசெப், பெங்களூர் ; சவரியப்ப கவுண்டர், கடலூர் ; அலோஷியஸ் துரைசாமி, திருச்சினாப்பள்ளி ; M. சூசை நாயுடு (1-1-0) ; M. A. ஆரோக்கியசாமி, குருடுவாடி ; C. ஜோசெப், கொடைக்கானல் ; T. S. முடியப்பா, பிரஞ்சுராக்ஸ் ; D. சுவாமிநாத முதலியார், கொரடாச்சேரி ; S. கண்ணுசாமி பிள்ளை, உடுமல்பேட்டை ; M. S. G. பிள்ளை, தூத்துக்குடி ; R. பீற்றர், குன்னூர் ; சங். முதலாளி தாயார், ஐரோப்பியர் மடம், கோயம்பத்தூர் ; M. மாணிக்கம், அருவங்காடு ; S. A. அருளாந்து செட்டியார், தேவகோட்டை ; சங். கஸ்தானியே சுவாமியார், கருமுத்தாம்பட்டி ; யாகப்ப மூப்பனார், மதுரை ; N. M. ரோச்சு விக்டோரியா, சாத்தூர் ; Mrs. பிரான்சிஸ் வாஸ், தூத்துக்குடி ; மார்செல்லின் பெர்னாண்டோ, தூத்துக்குடி ; M. A. ஜேகப் பட்லர், கொரமாண்டல் ; T. ஆரோக்கியசாமி, ஊர்காம் ; C. பிரான்சிஸ் பட்லர், தனுக்கன்தோட்டம் ; P. முனிசாமி, பூந்தமல்லி ; K. S. சவரிமுத்துப் பிள்ளை, கல்லிடைக்குறிச்சி ; S. மரியசூசை முதலியார், பாலக்காடு ; சங். J. ஞானதிக்கம் சுவாமியார், கொட்டாம்பட்டி ; A. அந்தோனி பிள்ளை, கொரொமாண்டல் ; A. D. சைமன் பிள்ளை, புதுப்பேட்டை ; R. சூசையப்ப முதலியார், புதுச்சேரி ; P. பொன்னுசாமி முதலியார், புதுச்சேரி ; S. தேவசகாயம் செட்டியார், சோமனூர் ; Mrs. கித்தேரியம்மாள், குன்னூர் ; C. பாக்கியசாமி, குன்னூர் ; சங். L. ரிவியெர் சுவாமியார், குன்னூர் ; A. ஜான் சுவாமிநாத பிள்ளை, நாகப்பட்டணம் ; சங். L. C. ரெனே சுவாமியார், விழுப்புரம் ; S. பொன்னுசாமி, திருச்சினாப்பள்ளி ; S. அந்தோனியா பிள்ளை, வரகனேரி ; A. C. அற்புதசாமி செட்டியார், தஞ்சாவூர் ; சங். J. மிராண்டா, S.J., திருச்சினாப்பள்ளி ; S. மேரியான் நத்தாலிஸ், கோட்டார் ; Mrs. கிளாரா மிக்கேல், மைலாப்பூர் ; A. மரியான், புதுப்பேட்டை ; S. அப்பாசாமி பிள்ளை, ஆலப்பிழை ; B. A. இராஜரெத்தினம் பிள்ளை, பெங்களூர் ; I. பிரான்சிஸ், பெங்களூர் ; R. A. அற்புதம், ஷோளாப்பூர் ; M. I. ஆரோக்கியசாமி, பெல்காம் ; சங். A. ருரியர் சுவாமியார், சந்திரநாகூர் ; சங். N. அப்பு சுவாமியார், காம்டி ; M. ஞானப்பிரகாச ஆச்சாரி, பூனா ; S. ஆரோக்யசாமி, பெல்காம் ; A. R. குழந்தைசாமி, இராயப்பேட்டை ; M. S. அகஸ்டின் பெர்னாண்டெஸ், கன்னியாகுமரி ; A. குப்புசாமி, கொரோமாண்டல் ; M. மரியதாஸ், செக்கண்டராபாத் ; M. ஆரோக்கியசாமி பிள்ளை, பெங்களூர் ; M. மிக்கேல் பிள்ளை, திருவனந்தபுரம் ; A. ஜான் கிரகோரி, பாப்பாகுடி ; சங். தாயார் கிருஷ்டியானா மரியம்மாள், திருநெல்வேலி ; சங். பங்கு சுவாமியார், உவரி ; இக்னேஷியஸ் குரூஸ் பெர்னாண்டோ, கண்டி ; C. J. ஆரோக்கியசாமி, செக்கண்டராபாத் ; M. அந்தோனி, திருமல்கிரி ; P. C. லூர்துசாமி நாய்க்கர், புதுப்பேட்டை ; C. நல்லதம்பி கவுண்டர், காக்காவேரி ; P. மரியதாஸ் நாயுடு, குண்டுபெரும்பேடு ; L. S. தம்புசாமி, மாரிகுப்பம் ; D. சவரியா கவுண்டர், திண்டுக்கல் ; சங். J. M. அமலதாஸ், வேட்டவலம் ; R. M. ஜான் பிள்ளை, கொல்லம் ; S. குருசாமி பிள்ளை, ஒத்தை ; M. பால், செய்பாசா ; M. ஆரோக்கியசாமி, ஷிமூகா ; M. கபிரியேல், கடாக் ; A. S. பாக்கியசாமி, மூர்ட்டுசாபூர் ; N. D. பெர்னாண்டோ, தனுஷ்கோடி ; சௌ. மே. செ. பெர்னாந்து, ஆலந்தலை ; சௌ. A. ஜெயசீலியம்மாள், பெல்லாரி ; D. ஆரோக்கியசாமி, அருவங்காடு ; M. பூபாலராயன், கோட்டஹேள ; இராஜு நாயுடு, ஐயம்பேட்டை ; G. அகுஸ்தீன், விழுப்புரம் ; N. ஞானப்பிரகாசம் பிள்ளை, குன்னூர் ; N. இன்னைய ரெட்டியார், செட்டிமேடு ; A. Jacob, Mt. Road ; P. ஜெபமணி, கடாக் ; ஜான் Esq., கடாக் ; சூசைப் பிள்ளை, கிளாகுளம் ; V. அடைக்கலசாமி பிள்ளை, கடலூர் ; G. லெயோ தல்மேதா, வேம்பார் ; சங். ஞானப்பிரகாசியார் சுவாமி, ஷெண்பகனூர் ; அ. உ. பே. பொன்னையா பிள்ளை, பேட்டை ; A. மரியதாஸ், கடப்பை ; Mrs. S. M. அடைக்கலம்மாள், செக்குந்திராபாத் ; Messrs. R. அப்பாவுசேர்வை, புதுக்கோட்டை ; பிரான்சிஸ் ஜோசெப், பேச்சுமாரி ; C. பால், பொம்பாய் ; சாமுவேல் டேவிட், பெங்களூர் ; சங். Y. அருளப்ப சுவாமியார் ; புதுப்பேட்டை.

12 அணா.—Messrs. C. C. துரைசாமிப் பிள்ளை, பெங்களூர் ; G. V. ரபேல் பிள்ளை, சாமராஜநகர் ; M. இன்னைய நாயுடு, முளசூர் ; தெ. மி. மரியரெத்தினம், மட்டிகிரி ; A. ஆரோக்கிய பண்டாரம், புல்லம்பாடி.

8 அணு.—Messrs. S. மரியநாயகம், சென்னை; M. லூர்துசாமி பிள்ளை, திண்டுக்கல்; சங். J. Dequiet சுவாமியார், புதுச்சேரி ; S. S. சிலுவைமுத்து பிள்ளை, சாம்பியன் ரீவ்ஸ்; J. சாந்தியன், காசிமேடு ; C. மரியசூசை பிள்ளை, கொருக்குப்பேட்டை ; அந்தோனியம்மாள், வேசர்பாடி ; D. மரியசூசை, மயில்ரங்கம் ; Y. A. குரூஸ், கொல்லம் ; J. S. சிகாமணி, ஊப்ளி ; F. அந்தோனி, சூளை ; W. ஜோசப் பெரோரா, கண்டி ; J. சூசை ஆச்சாரி, திருச்சிறாப்பள்ளி ; சூசைமரி முதலியார், எலாக்குறிச்சி ; M. S. மரியஞானு நாடார், கருங்குளம் ; R. M. ஜோசெப், குன்னூர் ; ச. ஞா. ராயப்பன், பெங்களூர் ; P. மனுவேல் நாடார், தக்கலை.

4 அணு.—Mrs. மரியம்மாள், வேசர்பாடி ; Messrs. டி. தம்புசாமிபிள்ளை, கர்ணுடிக்மில் ; R. A. மிக்கேல் பிள்ளை, அனுமந்தம்பட்டி.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

அந்நிய நாட்டுத் தந்தி.—சமாசாரங்களின் ஒரு வார்த்தைக்கு ரூ 1–2–0 ஆக இருந்தது, இப்பொழுது ரூ 1–4–0 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

பழைய இராஜப்பிரதிநிதியாகிய மேன்மைதங்கிய செம்ஸ்போர்டு பிரபு அவர்கள் ஏப்பிரல்மீ 2உ பம்பாயைவிட்டு சீமைக்குப் புறப்படுவார்கள்.

சிம்னிகள் உடையாமலிருக்க, இன்ஞெரு முறை.—மண்ணெண்ணெய் விளக்குச் சிம்னிகளை வாங்கிவந்தவுடன் பொறுக்கும்படியான வெந்நீரில் பத்து நிமிஷம் வரையில் போட்டுவைத்திருந்து, பிறகு அதை யெடுத்து நன்ருகத் துடைத்து ஈரமெல்லாம் காய்ந்தபின் உபயோகித்தால் உடையவே உடையாதெனச் சொல்லப்படுகிறது. இதையும் பரீட்சித்துப் பார்க்க வேண்டியதுதான்.

தொழிலற்ருர்.—இங்கிலாந்தில் தற்காலம் வேலை கிடையாமல் வாளாவிருக்கும் ஜனங்களின் தொகை 20 லட்சமென்றும், இவர்களுக்காக 120 லட்சம் பவுன் செலவிடப்படுகிறதென்றும், காமன்ஸ் சபையில், இராஜாங்கத்தார் தரப்பில் சொல்லப்பட்டது. நமது இந்திய நாட்டில் தொழிலில்லாமல் திண்டாட்டப்படுகிறவர்களுக்கு கவர்ன்மெண்டார் உதவிசெய்வதாகக் காணப்படவில்லை.

ஒரு விபரீத புத்தி.—ருஷியா தேசத்தைச்சேர்ந்த மாஸ்கோ நகரிலிருந்த ஒரு கோடீஸ்வரன் தான் சாகப்போகுமுன்னே, தனக்கிருந்த ஆஸ்திகளையெல்லாம், பாண்டுகளாகவும், நோட்டுகளாகவும் மாற்றிக் கொண்டுவந்து ஒரே பெருங் குவியலாகத் தன் முன்னே கொட்டச்சொல்லி அவைகளை அக்கினிக்கு இரையாக்கியபின் உயிர் துறந்தனனும். என்னே விபரீத புத்தி!

வைக்கோல் வீடுகள்.—பிராஞ்சு தேசத்தில் வைக்கோலால் செய்த கல்லுகளைக்கொண்டு சுவர்களை யெழுப்பி மரச்சட்டங்களை இடையிடையில் அமைத்து அழகிய வீடுகளைக் கட்டுகிருர்கள். இவ்வித வீடுகள் சண்டையால் அழிக்கப்பட்டு பாழாய்ப்போன பிராந்தியங்களில் கட்டப்பட்டுவருகின்றன. ஓடுகளும் வைக்கோலாலேயே செய்யப்படுகின்றனவாம்.

எழுதி வாசிக்கக்கூடாது.—சட்ட சபை அங்கத்தினர் சட்ட சபைக் கூட்டங்களில் இனி வாய்ப்பேச்சாகப் பேசவேண்டுமேதவிர எழுதிப் படிக்கப்படாதென்று ஒரு ஒழுங்கு ஏற்படுத்துவதற்காக முயற்சி செய்யப்படுகிறதென்று தெரிகிறது. அதனால், ஓட்டுரிமை பெற்றவர்கள், சமயோசிதமாய் திறமையுடன் பேசவல்ல வாய்ச் சம்பிரதாயமுடையவர்களையே தங்கள் பிரதிநிதிகளாக தெரிந்தெடுத்தல் அவசியமென்று பெறப்படுகிறது.

சென்னையின் ஜனக்கணிதம்.—சென்ற மாதம் 18-ந் தேதி யிரவு எடுத்த கணக்கின்படி, சென்னைநகரில் 522,707 ஜனங்கள் இருக்கிருர்கள். இவர்களில் 272,786 பேர் புருஷர்களும், 249,921 பேர் ஸ்திரிகளுமாவர். பத்து வருஷங்களுக்குமுன்னர் இருந்தவர்களைவிட இப்போது 4,047 பேர்கள் தான் அதிகப்பட்டிருக்கின்றனர். அதாவது 100க்கு ஒருவர்கூட ஜனத்தொகை அதிகப்படவில்லை. இதனுல் சென்னையில் ஜனவிருத்தி மெத்தக் குறைவு என்றே சொல்ல வேண்டும்.

லோரேத்தின் வீடு.—நமது பரிசுத்த திருக்குடும்பம் வாசஞ்செய்த இத்தாலியாவைச்சேர்ந்த லொரேத்திலுள்ள அர்ச்சிக்கப்பட்ட வீட்டின் ஒரு பாகம் சென்ற பிப்ரவரி மாதம் 23-ந் தேதி அக்கினிக்கிரையானதாம். கோவிலைச்சேர்ந்த மூலஸ்தானத்தின் சுவர் சேதமின்றித் தப்பினபோதிலும் அழகான பீடமும் மாதாவின் சுரூபமும் சுட்டெரிக்கப்பட்டுப் போயினவாம். இது துஷ்டருடைய வேலையோ, வேறென்ன காரணமோவென்று சந்தேகிக்கிருர்கள்.

பேசும் படங்கள்.—ஸ்வீடன் தேசத்து எஞ்சினீயர், மிஸ்டர் ஸ்பேன் பெர்க்லாந்து என்பவர் படங்கள் பேசும் வகை கண்டுபிடித்திருக்கிருராம். அதைப் பல நிபுணர்கள், பத்திரிகைப் பிரதிநிதிகள், ரசாயன சாஸ்திரிகள் முதலியவர்கள் முன்னிலையில் காண்பித்திருக்கிருராம். இது ஒரு ஆச்சரியத்துக்குரிய விஷயமேயாகும். இந்தக் கருவியை ஒரு கம்பனியார் வியாபார முறையிற் கொண்டுவருவதற்காக 36,000 பவுன் முதல் ஏற்படுத்தியிருக்கின்றனராம்.

ஆகாயக்கப்பல்கள்.—4,000 குதிரை பலமுள்ள பிரமாண்டமான ஆகாயக்கப்பல்களைக் கட்டுவதற்கு பிளான்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், அவை ஒவ்வொன்றும் 100 பிரயாணிகளையும், வேலைக்காரரையும், நிலக்கரி, வழி உணவுக்கு வேண்டிய மற்றுந் தளவாடங்களையும் எடுத்துக்கொண்டு தெம்ஸ் ஆற்றினின்று புறப்பட்டு அட்லாண்டிக் மகாசமுத்திரத்தைக் கடந்து நாற்பது மணிநேரத்தில் வட அமெரிக்காவைச்சேர்ந்த நியு யார்க்கென்ற பட்டணத்துக்குப்போய்ச் சேருமாம்.

தபால் கட்டண உயர்வு.—இராஜாங்கத்தாரின் 1921–22-ம் வருஷத்திய வரவு செலவு திட்டத்தில், வரவைவிட செலவு அதிகமாயிருந்ததினிமித்தம், செலவைக் குறைக்கும் வகை ஒன்றுந் தோன்ருததால், வரவை அதிகப்படுத்தும் வகைகளில் தபால் கட்டண உயர்வு ஒன்ருகத் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. முதலில், தபாற் கார்டுகளின் விலையை காலணுவிலிருந்து, அரையணுவாக உயர்த்தவேண்டுமென்ற பிரேரணை, சட்ட சபை அங்கத்தினரிற் சிலருடைய ஆட்சேபணையில் அடிபட்டுப்போயிற்று. ஆதலால், தபால் கார்டு இதுவரையிலும்போலவே காலணுவுக்குத்தான் விற்கப்படும். ஆனுல் கடிதங்களுக்கும் மற்றவைகளுக்கும், பின்கண்டவாறு தபால் கட்டணங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

கடிதங்கள்			
அரைத் தோலாவுக்கு அல்லது அரை நூக்கு அதிகப்படாத எடையுள்ள கடிதங்களுக்கு...	0	0	6
அரைத் தோலாவுக்குமேல் ஒரு தோலாவரையில்	0	0	9
ஒரு தோலாவுக்குமேல் 2½ தோலாவரையில்	0	1	0
2½ தோலாவுக்குமேலுள்ள ஒவ்வொரு 2½ தோலாவுக்கும் ...	0	1	0
புக் போஸ்டு, அல்லது பாட்டர்ன் போஸ்டுகளுக்கு (Pattern Post)			
5 தோலாவுக்கும் அதற்குக் குறைந்த எடைக்கும்	0	0	6
அதற்குமேற்பட்ட ஒவ்வொரு 5 தோலாவுக்கும்	0	0	6
உள்ளூர் மணியார்டர்கள்			
10 ரூபாய்க்கு அதிகப்படாத எந்தத் தொகைக்கும் கமிஷன் ...	0	2	0
10 ரூபாய்க்கு மேற்பட்டு 25 வரைக்கும்	0	4	0
25 ரூபாய்க்கு மேற்பட்டு பிரதி முழு 25 ரூபாய்க்கும் ...	0	4	0

இந்த விதிகள் வி. பி. மணியார்டர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு.—இம்மாற்றங்கள் இந்த ஏப்பிரல்மீ 18-ந் தேதிமுதல் அமுலுக்கு வருமென்று தெரிகிறது.

குடை வியாபாரிகளின் கூட்டம்.—பம்பாய் நகரின் குடை வியாபாரிகள் விசேஷித்த கூட்டம் ஒன்று கூடி, குடைகளின்பேரில் விதித்திருக்கும் நூற்றுக்கு இருபது வீதம் இறக்குமதி வரியை எற்ருமலிருக்கும்படி கவர்ண்மென்டாருக்கு விண்ணப்பம் செய்யத் தீர்மானித்தார்கள். ஏனெனில் குடைகள் ஜனங்களெல்லோருக்கும் அவசியமான பொருளேயன்றி செல்வவந்தருக்கு மாத்திரம் உரித்தான பொருளன்று.

துர்க்கியின் ஜெயம்.—துர்க்கியானது சண்டையில் தோர்வையடைந்தும், லண்டன் நகரில் சமீபத்தில் கூடின ஆலோசனை சங்கத்தில், முன் துர்க்கிக்கு செவ்ரெஸ் சமாதான உடன்படிக்கையில் விதித்திருந்த அநேக கடினமான நிபந்தனைகள் நீக்கப்.

பட்டுஅநேக அநுகூலங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இதன் விஷயத்தில் தூர்க்கியரும் அநேகமாய் இந்திய மகம்மதியரும் சந்தோஷிக்கிறார்கள்.

ஓர் நூதன மோட்டார்வண்டி.—மத்திய ஏர்கிரப்டு கம்பெனியார் மோட்டார்வண்டி ஒன்று செய்திருக்கிறார்களாம். அந்த மோட்டார்வண்டி ஜனங்களின்பேரில் ஏறிச்சென்றாலும் அவர்களுக்குக் காயம் ஒன்றும் ஏற்படுவதில்லையாம். அதை அதன் சொந்தக்காரன் முதுகில் சுமந்துகொண்டு தன் வீட்டிற்கு எடுத்துச் செல்லக்கூடியதாக அவ்வளவு பளுவற்றதாயிருக்கிறதாம். அது சராசரியாக மணிக்கு 20 மைல் ஓடுமாம். 1 காலன் பெட்ரோல் எண்ணெயைக் கொண்டு 100 மைல் தூரம் செல்லுமாம். அதன் கனம் 155 பவுண்டென்றும் விலை 78 கினியென்றும் சொல்லப்படுகிறது.

உலக சர்வஜனக் கத்தோலிக்கு சங்கம்.—நமது இந்தியாவில் அடுத்த டிசம்பர் மாதம் கூடயிருக்கும் சர்வ இந்திய கத்தோலிக்கு ஜனசங்கத்தைப்போலவே, உலகத்திலடங்கிய எல்லா தேசங்களிலுமுள்ள பிரதான கத்தோலிக்கர்கள் தங்கள் தங்கள் தேசங்களில் ஸ்தாபித்திருக்கும் சபைகளையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து, உலக சர்வஜன கூட்டுறவு சங்கமொன்று ஏற்படுத்த முயற்சிசெய்துவருவதுடன், நமது பாப்பரசராகிய 15-ம் ஆசீர்வாதப்பரின் அநுமதியும் பெற்று, மற்றப் பிரதேசங்களிலிருந்து பிரதிநிதிகளை வரவழைத்து, பரீஸ்நகரில் ஓர் மகத்தான கூட்டம் நடத்தப்போகிறதாகத் தெரியலானோம்.

மிஸ்டர் ஜோசப் இராயப்பன்.—தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களில் ஒருவரும், இந்திய கிறீஸ்துவ பாரிஸ்டருமாகிய மிஸ்டர் ஜோசப் இராயப்பன் என்பார் சமீபத்தில், சென்னையில், தென் ஆப்பிரிக்கா இந்தியர்களின் நிலைமையைப்பற்றி ஓர் உபந்நியாசம் செய்தார். குடியேற்ற நாட்டு மந்திரி சில தினங்களுக்குமுன் வெளியிட்ட அறிக்கையின்படி, அங்குள்ள இந்தியரின் வருங்கால நிலைமை மிகவுங் கவலைக்கிடமாயிருக்கிறதென்றும், அந்நிலைமையைப் பரிகரித்து இந்தியருக்கு சௌகரியத்தை பெற்றுக்கொடுக்க இந்தியாவிலே செல்வாக்குள்ள கமிட்டி ஒன்று நியமிக்கப்படவேண்டுவது அவசியமென்றும் சொன்னார். இவருடைய முன்னோர்கள் நூறு வருஷங்களுக்கு முன்னே தென் ஆபிரிக்காவுக்குக் குடியேறினவர்களென்றும், அவர்களிடமாய் இவர் டர்பன் நகரில் பிறந்தவரென்றும், இந்தியர்களுடைய பொது நன்மைக்காக உழைத்து முயற்சி செய்ததில், இவர் ஐந்தாறு முறை சிறைவாசஞ்செய்ய நேர்ந்ததென்றும் சொல்லப்படுகிறது.

புதிய வைசிராய்.—சென்றமீ 14உ யன்று நமது மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியவர்களால் இனி இந்தியாவுக்கு கவர்னர் ஜெனரலாக வரவிருக்கும் லார்டு ரீடிங் பிரபுவுக்கு (G.C.S.I.) ஜி.சி.எஸ்.ஐ. என்ற பட்டமும், (G.C.I.E) ஜி.சி.ஐ.இ. பட்டமும் அளிக்கப்பட்டதுமல்லாமல் அவருடைய பத்தினியாருக்கும் இந்தியாவின் கிரீடமும் கொடுக்கப்பட்டது. அடுத்த நாள் 15-ந் தேதியன்று லார்டு ரீடிங் பிரபுவானவர் நமது சக்கரவர்த்தியவர்களைக் காணவந்தபோது இந்தியாவின் வைசிராய் ஆக நியமனம்பெற்றார். பிரபுவானவர் தமது நன்றியறிதலையும் அங்கீகாரத்தையுங் காட்டும்பொருட்டு சக்கரவர்த்தியவர்களின் கரங்களை முத்திசெய்தாரென்று சொல்லப்படுகிறது. இப்பிரபு அவர்கள், "கெய்சரிஹிந்டு" என்னும் மரக்கலமூலமாய் நிகழும் ஏப்பிரல்மீ 1உ பம்பாய்க்குவந்து சேர்வார்களென்றும், 5உ காலை 8 மணிக்கு, இந்திய இராஜதானி நகரமாகிய டில்லிமாநகரில் பஹிரங்கமாக வரவேற்கப்படுவார்களென்றும் தெரிகிறது.

எண்ணூர் கத்திவாக்கத்தில் அர்ச். சூசையப்பர் திருவிழா.—எண்ணூர் கத்திவாக்கத்தில் பிரதிஷ்டையாயிராநின்ற திருச்சபை முழுமைக்கும் பாதுகாவலரான அர்ச். சூசையப்பர் தேவாலயத்தில் ஏப்ரல் மாதம் 7-ந் தேதியாகிய வியாழக்கிழமை சாயரட்சை கொடியேற்றஞ் செய்து, அன்று முதல் காலையில் 7¼ மணிக்கு பூசையும் தேவநற்கருணை ஆசீர்வாதமும், சாயரட்சை 6½ மணிக்கு அர்ச். சூசையப்பர் தேர் சுற்றுப்பிரகாரமும், தேவாராதனையுமிருக்கும். மேற்படி மாதம் 13-ந் தேதியாகிய புதன்கிழமை காலை 7¼ மணிக்கு அர்ச். சூசையப்பரின் தங்கஜூபிலி மஹோற்சவத்தை யனுசரித்து பெரிய பாட்டுப்பூசையும் தேவநற்கருணை ஆசீர்வாதமும், அர்ச். சூசையப்பர் தேர் சுற்றுப்பிரகாரமுமிருக்கும். 16-ந் தேதியாகிய சனிக்கிழமை சாயரட்சை 6½ மணிக்கு பெரிய வெஸ்பராவும், பிரசங்கமும், தேவநற்கருணை ஆசீர்வாதமும் தேர் எழுந்தேற்றமுமிருக்கும். 17-ந் தேதியாகிய மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 5½ மணிக்கு முதற் பூசையும், தேர் சுற்றுப்பிரகாரமும், 7½ மணிக்கு பெரிய பாட்டுப்பூசையும் தேவநற்கருணை ஆசீர்வாதமுமிருக்கும்.

உபகாரச்சம்பளம்.-சிறிய தொகையை உபகாரச்சம்பளமாய் (பென்ஷனை)ப் பெறுபவர்களுக்கு கஜானா ஆபீஸுக்கு வரும் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்காக அவர்கள் இஷ்டப்படுவார்களாகில் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய பணத்தை மணியார்டர்மூலம் அனுப்பவேண்டுமென்று அரசாங்கத்தார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இவ்வழக்கம் பரீட்சார்த்தமாய் ஒரு வருடகாலம்வரை நடத்தப்படும். ரூ 20 அல்லது அதற்குக் குறைந்த தொகையைத்தான் மணியார்டர்மூலம் அனுப்பப்படும். இவ்வழக்கத்தை அனுஷ்டிக்க விரும்புவோர் கஜானா அதிகாரியிடம் நேரில் சென்று எழுதிக்கொடுக்கவேண்டும். கஜானா அதிகாரி இவர்களது அங்க அடையாளங்களைக் குறித்துக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஒவ்வொரு மாதமும் 10-ந் தேதிக்கு முன்பாக மணியார்டர் கட்டணத் தொகைபோக மீதித் தொகை உபகாரச் சம்பளம் பெறுபவர்களுக்கனுப்பப்படும் என்று சென்னை விளம்பரச் சபையார் அறிவிக்கிறார்கள்.

"பலதுளி பெரு வெள்ளம்"—சமீபத்தில் கும்பகோணத்தில் "மகாமகம்" என்னும் இந்துக்கள் உற்சவம் நடந்தபோது, அவ்வூர் நகரபரிபாலன சபையார் வேண்டுகோளின்பேரில், ஷை உற்சவத்துக்காக கும்பகோணத்துக்கு வந்திறங்கிய ஒவ்வொரு நபரிடமிருந்தும் அவர்களுடைய சுகத்தைப் பாதுகாக்கும் செலவுக்காக ஒவ்வொரு அணா ரெயில்வே அதிகாரிகளால் வசூலிக்கப்பட்டது. அந்த உற்சவத்துக்கு வந்தவர்கள் ஒன்றரைலட்சம் ஜனங்களுக்கு அதிகமென்றும், மேற்கண்டவாறு வசூலிக்கப்பட்ட தொகை ஏறக்குறைய ரூ. 10,000 ஆனதென்றும், அத்தொகை, ஷை முனிசிபாலிட்டியாருக்குக் கொடுக்கப்பட்டதென்றும் தெரிகிறது. இதிலிருந்து, யாதொரு பொதுநலக்காரியத்துக்கு ரெயில்வே மூலமாக எவ்வளவு சுலபமாய் நிதி வசூல் செய்யலாமென்று விசிதமாகிறது.

தமிழ் அகராதி.—கவர்ண்மெண்டாரால் பல வருஷங்களுக்குமுன்னே ஆரம்பிக்கப்பட்ட இந்த அகராதி வேலை முடிவுபெற இன்னும் ஏழெட்டு வருஷங்கள் செல்லுமென்றும், மொத்தம் 81 ஆயிரம் வார்த்தைகள் அகராதியில் சேர்க்கப்பட்டு, அதையொட்டிய பூர்வாங்கமான வேலைகள் முடிந்துவிட்டனவென்றும், ஆனால் அதைப் பரிசீலனை செய்ய 4½ வருஷமும், அச்சிட இரண்டு வருஷமும் செல்லுமென்றும், ரெவரெண்ட் சாண்டலர், மிஸ்டர் அநவரதநாயகம்பிள்ளை, திவான் பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளை ஆகிய மூவர்கள் அடங்கிய கமிட்டியே ஷை பரிசீலனை வேலையை ஏற்றுக்கொண்டிருக்கிறதென்றும், இவ்விஷயமாய் ஏற்கெனவே செலவழிக்கப்பட்டுள்ள 105,506 ரூ. போக இன்னும் 116,000 ரூ. வேண்டுமென்றும், கடந்த சர்வகலாசாலைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இப்போதிருக்கிற அகராதிகளில் 10,000 வார்த்தைகளுக்கு அதிகம் எதிலுமில்லை. 81,000 வார்த்தைகள் அடங்கியதானால் அதிலில்லாத வார்த்தை தமிழில் கிடையாதென்றே சொல்லலாம். இவ்வளவு செலவும், சிரமமும், காலமும் கொள்ளும் இந்த அகராதியானது தமிழ் கற்போருக்கேயன்றி கற்றோருக்கும் ஒரு பெரும் பொக்கிஷமாய் உதவுமென்பதற் சந்தேகமில்லை.

ஒரு புதிய புத்தகம்.—"அறநெறி மார்க்கம் மனிதனின் அதி முக்கிய அலுவல்" எனும் பேர் தங்கிய புத்தகமொன்று எமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. இது கிறீஸ்துவர்களுக்கும், கிறீஸ்துவர்களல்லாதார்க்கும், பொதுப்பட அறநெறியை, அதாவது ஆத்துமத்துக்கடுத்த விஷயங்களை விசிதமாய் விளக்கிக்காட்டும் அரியவோர் நீதிநூல் புத்தகமாகும். இதில் மனிதர் செய்யக்கூடிய ஒவ்வொரு தொழில் சம்பந்தமாயும், அவரவர் தம்தம அந்தஸ்தை அநுசரித்துச் செய்யவேண்டிய கடமைகள் எவையென்றும், செய்யத்தகாதவை எவையென்றும் வினா விடையாய் வெகு விவரமாய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. சங். ஜெ. ஜெகன்னாத சுவாமிகளால் இங்கிலீஷ்

விருந்து மொழி பெயர்க்கப்பட்டது. இது கத்தோலிக்கர் ஒவ்வொருவரும் கவனமாய் வாசித்தறியவேண்டிய புத்தகம். விலை அணா 12 (தபாற் செலவு பிரத்தியேகம்). வேண்டியவர்கள், திருச்சினாப்பள்ளி, கன்டோன்மென்டிலிருக்கும் அர்ச். சூசையப்பர் தொழிற் பாடசாலை அச்சுக்கூடத்து சூப்பரின்டென்டுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம.

போலந்து தேசம்.—ஜெர்மனி, ருஷியா, ஆஸ்திரியாவாகிய இந்த மூன்று ராஜாங்கங்களும் சுமார் 200 வருஷங்களுக்கு முன் ஐரோப்பாவில் முதல்தர ராஜாங்கங்களில் ஒன்றாயிருந்த கத்தோலிக்கு போலந்து தேசத்தின்பேரில் பல முறை போர் புரிந்து கடைசியாய் மேற்கண்ட மூன்று ராஜாங்கத்தாரும் போலந்து தேசத்தை பங்கு போட்டுகொண்டார்கள். கடந்த யுத்தத்தின் காரணமாக போலந்து சுயாதீனமடைந்திருப்பதால் அத்தேசத்தில் கத்தோலிக்குத் திருச்சபைக்கு எல்லா சுதந்திரமும் கிடைக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக் கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

ப—ர்.

நன்மரண அறிக்கை.

ஆரணி.

வட ஆற்காடு ஜில்லா ஆரணியில் 1921ஆம் பிப்ரவரிமீ 28உ இரவு 9½ மணிக்கு புதுவை மாஜி தொமேன் உசியே சவரிநாதப் பிள்ளை மற்த்தோ அவர்களின் ஏக புத்திரியும் எனது பிரிய பத்தினியுமாகிய ஆரோக்கியமரி என்கிற பொன்னம்மணி அம்மாள் சில மாதங்களாய் வியாதியாயிருந்து எவ்வித சிகிச்சையாலும் குணப்படாமல் கடைசி தேவத்திரவிய அனுமானங்களைப்பெற்று தனது 3 குமாரர்களையும் ஏக புத்திரியையும் தன் பாதுகாப்பில் வைத்திருந்த தாய் தகப்பனற்ற 5 சிறுவர்களையும் என்னையும் மற்ற பந்துமித்திரர்களையும் இக்கண்ணீர் கணவாயில் பரதவிக்கவிட்டு தன் ஆத்துமத்தை சர்வேசுரன் பாதம் ஒப்புவித்து சங். பங்கு சுவாமியார் அவர்கள் அருகில் முழங்காலிட்டு ஜெபித்திருக்க, கடைசி ஆசீர்வாதமும்பெற்று பரலோக யாத்திரையானாள். மறுநாள் பகல் 11 மணிக்கு Rev. Fr. Chaler சுவாமிகள் ஷை சரீரத்தை பாடி மந்திரிக்க, அது ஆரணி காணிக்கைமாதா ஆலயத்திற்கு வெகு விமரிசையாய் ஞானகீர்த்தனங்களுடன் கொண்டுபோகப்பட்டு அங்கே அவள் ஆத்தும இளைப்பாற்றிக்காக ரெக்குயம் பாடி முடித்தபின்னர் மேற்படி சரீரம் ஷை கோவில் கல்லறைத் தோட்டத்தில் அடக்கஞ்செய்யப்பட்டது. இதை வாசிக்கும் விசுவாசிகள் இந்த ஆத்தும இளைப்பாற்றிக்காக 1-பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளக் கோருகிறேன்.—R. I. P.

பத்தினியை இழந்த நிர்ப்பாக்கியன்,

9—3—21. D. Pushpam Pillai,

1st. cl. Senior Sub-asstt: Surgeon.

சிலோன்.

சிலோன் என்னும் இலங்கை தீவில் சற்றேறக்குறைய 46 வருடகாலமாக காப்பி, தேயிலை முதலிய தோட்டங்களில் கண்டக்டர் (Coductor) உத்தியோகஞ்செய்து சமீபத்தில் இலங்கை சோளாங்கந்தை, கவரக்கொல்லை என்னும் 2 தோட்டங்களிலும் 22 வருஷகாலமாக புகழ்பெற்ற செல்வ பாக்கியத்துடன் வாழ்ந்தவரும், எல்லோரும் நல்லவரென புகழ்ந்து கொண்டாடும்படியான நற்குணம்படைத்தவரும், எனக்கு உயிர்த்துணையாயிருந்த ஒரே அருமை சகோதரருமாகிய Mr. P. C. Kelly என்பவர் 1921-ம் வருஷம் பெப்ரவரி மாதம் 13-ந் தேதியன்று காலஞ்சென்றுவிட்டார். வயது 58. அவரை தெரிந்தவர்கள் இலங்கையிலும் மற்ற தேசங்களிலும் அநேகருண்டு. அவர் காலஞ்சென்றுபோன சங்கதி இன்னமும் தெரியாத நண்பர்கள் அறியும்படிக்கே இதனைப் பிரசுரஞ்செய்கின்றேன். நமது "நல்ல ஆயன்" பத்திரிகையை கண்ணுறுக்கும் ஒவ்வொரு நண்பர்களும் மரித்தவரின் ஆத்தும இளைப்பாறுதலுக்காக ஒரு பர., பிரி., திரி. வேண்டுவார்களென துக்கசாகரத்தில் மூழ்கி பிரலாபிக்கும் அவரின் ஏழை தம்பி மன்றாடுகிறேன்.

J. E. Kelly,

17—3—21. *Rangoon Times Press.*

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 19. } மே 1921. { இலக்கம் 5.

THE ASCENSION OF OUR LORD.
நமது கர்த்தர் மோட்சத்துக்கு ஆரோகணமான திருநாள்.

வருகிற வியாழக்கிழமை நமது கர்த்தர் மோட்சத்துக்கு ஆரோகணமான நாளின் வருஷாந்தரத் திருநாள். இந்த நாள் நமக்கு ஓர் பெரிய நாள். ஏனெனில், மனுக்குலத்தாராகிய நமக்கு அடைக்கப்பட்டிருந்த மோட்சவாசல் திறக்கப்பட்ட நாள். மோட்ச பேரின்ப பாக்கியத்துக்காக உண்டாக்கப்பட்ட நாம் அதில் பிரவேசித்து, அதன் பாக்கியத்தைச் சுகித்தனுபவிக்கவேண்டுமென்று சர்வேசுரன் சித்தமாயிருக்கிறார். ஆனபடியால், அப் பாக்கியத்தை யடைய நாம் செய்யவேண்டியதென்னவென்று சிறிது ஆராய்ந்துபார்ப்போம்.

பேர்போன வேதசாஸ்திரியாகிய அர்ச். தோமாஸ் அக்குவினாஸ் என்பவருக்கு ஓர் சகோதரி யிருந்தாள். இவள் தன் ஆத்தும இரட்சண்ணியத்தின் மட்டில் அதிக ஆவலும் அக்கரையு முள்ளவள். ஆனபடியால், ஒரு நாள் இவள் தன் சகோதரனை யணுகி, "சகோதரனே! நான் மோட்சத்தைச் சுதந்தரித்துக்கொள்ள செய்யவேண்டியது என்னவென்று எனக்குச் சற்று விளங்கச்சொல்லும்" எனக்கேட்டுக்கொள்ள, அவர் "சகோதரியே! நீ மோட்சத்தை யடையவேண்டுமானால் அதன்பேரில் மனது வை" என்றார். ஆம், "மனசுண்டானால் வழியுண்டு." இப் பிரபஞ்சத்தில் அநேகர் சுகமாயும் செல்வாக்காயும் வாழ விரும்பி, அதற்காக எவ்வளவோ மனப்பூர்வமாய் வருந்திப் பாடுபடுகிறார்கள். இவ்வளவாய் அவர்கள் அதற்காக உழைத்தாலும் அவர்களுடைய உழைப்பும் முயற்சியும் பலகாலும் பலிதமாகாமற்போவது பிரசித்தம். ஆனால், மோட்ச பாக்கியத்தை யடைய மெய்யான மனதுடையவர்கள் அதை யடையாமற்போகார்கள்.

மோட்சத்தை யடைய மெய்யான மனதுடையவர்கள் யார்? இன்று நமது கர்த்தர் ஒலிவேத்து மலையிலிருந்து மிக்க மகிமைப் பிரதாபத்துடன் மோட்சத்துக்கு ஆரோகணமானதைக் கண்ணாரக்கண்ட அப்போஸ்தலர்கள், அவர் ஆகாயத்தில் ஏற ஏற அவரை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கையில், ஓர் மேகம் வந்து மறைக்க, அவர் அவர்களுடைய கண்ணுக்கு அகப்படாமல் மறைந்துபோனார். ஆயினும் அவர்கள் தாங்கள் எங்கேயிருக்கிறார்களென்றும், என்ன செய்கிறார்களென்று முதலாய் அறியமுடி

யாதபடி அவ்வளவு மெய்ம்மறந்து பரவச
மாகித் தங்கள் கர்த்தரோடு தாங்களும்
மோட்சத்துக்குப் போகவும், அவரோடு
அங்கே யிருக்கவும் ஆசித்துக்கொண்டிருந்
தார்கள். வெண்ணுடை தரித்திருந்த இரு
சம்மனசுக்கள் அவர்களுக்குத் தோன்றி
"கலிலேய நாட்டாரே நீங்கள் பரமண்ட
லத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டு
நிற்பானேன்?" என்று சொல்லும்வரையில்
அவர்கள் அவ்விடத்தைவிட்டு அசைந்தவர்க
ளல்ல. அப்போஸ்தலர்களைப்போல நாமும்
நம் திவ்ய இரட்சகருடைய மனோவாக்குக்
கெட்டாத மோட்ச மகிமையை யடைய
வும், அவரோடு மோட்ச இராச்சியத்தில் நித்
தியானந்த பாக்கியத்தைச் சுகிக்கவும் ஆசிப்
போமானால், அதன்பேரில் நமது புத்தியை
யும் மனதையும் வைத்து, நாம் அதை
யடையவேண்டுவதற்கான வழிவகைகளை,
எவ்வித சிரமத்துக்கும் துன்பத்திற்கும்
அஞ்சாமல், தேடிச்செய்வோம் என்பதற்
கையமில்லை. மோட்ச பேரின்பமாகிய கரு
மமே கண்ணுயினர்க்கு அதை அடைவ
தில் ஏற்படும் கஷ்டம், துன்பம், இடுக்கண்,
இடையூறு ஆகிய யாவும் ஒரு பொருட்
டல்ல. இப்பிரபஞ்சத்தையும், அதன் ஆடம்
பர வைபவங்களையும் சட்டைபண்ணார்கள்.
ஆனபடியாலல்லவா அர்ச். சின்னப்பரும்
"கிறீஸ்துநாதர் சர்வேசுரனுடைய வலது
பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிற பரமண்டலத்
திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்"
(கொலோ. III. 1) என்கிறார்?

ஆனால் மோட்ச மகிமையின்பேரிலும்
பாக்கியத்தின்பேரிலும், ஆவலும் பற்றுதலு
முள்ளவர்கள் எத்தனை பெயர்? மோட்சத்
தைப்பற்றிக் கேட்டமாத்திரத்தில், இதெல்
லாங் குருக்களுடைய பித்தலாட்டமும் கட்
டுக்கதையுமென்று சொல்லி "மோட்சத்
தைக் கண்டதார் நரகத்தைக் கண்டதார்?
கண்டதே காட்சி கொண்டதே கோலம். இவ்
வுலகமே மோட்சம்" என்று பிதற்றுகிறவர்
களும் இருக்கிறார்கள். அநேகர் மோட்சமுண்
டென்று விசுவசித்த போதிலும் இவர்களு
டைய நோக்கமும் கருத்தும் இப்பிரபஞ்ச
இன்ப சுகங்களின்பேரிலும், கீர்த்திப்பிரதா
பத்தின்பேரிலும் நாட்டமுடையதாயிருப்
பதால் இவைகளையெல்லாம்விட சொல்ல
முடியாதபடி மேலானதாயிருக்கும் மோட்
பாக்கியத்தைக் கவனிக்கிறதுமில்லை, அதன்
பேரில் ஆவல் கொள்ளுகிறதுமில்லை. இப்
பேர்ப்பட்டவர்களெல்லோரும் மோட்
சத்தை யடைவார்களா? அடையார்கள்.

மோட்சத்தின்பேரில் மெய்யான ஆசை
யுள்ளவர்கள் அதை யடைய எவ்வித கஷ்ட
நஷ்டத்துக்கும், துன்பதுரிதத்துக்கும் உள்
ளாகாமற் போகார். இதற்கு நமது கர்த்தர்
ஓர் நல்ல அத்தாட்சியாயிருக்கிறார். இவர்
நமக்காகவும் தமக்காகவும் அடைபட்டுக்கி
டந்த மோட்சத்தை இன்று திறக்கப் பட்ட
பாடென்ன? அடைந்த மரணமென்ன?
அர்ச்சியசிஷ்டவர்களுக்கு மோட்சபாக்கியத்
தின்பேரிலுண்டாயிருந்த ஆவலினால் அவர்
கள் செய்த ஒறுத்தலென்ன? உபவாச
மென்ன? இவர்கள் தங்களுக்குண்டான
சோதனைகளை ஜெயிக்க எடுத்த உபாய
மென்ன? சிலர் உலகத்தை வெறுத்தார்கள்.
சிலர் ஆஸ்திபாஸ்திகளை யிழந்தார்கள். சிலர்
சித்திரவதைகளுக்குள்ளாகித் தங்கள் சிர
சைக் கொடுத்தார்கள். ஆதிரியன் எனும் ஓர்
வாலிபப் போர்ச்சேவகன் அரச கட்டளையின்
படி கிறீஸ்துவர்களை மிக்க நிஷ்டூரமாய்
வாதித்துவந்தான். இவர்கள் தங்களுக்கிடப்
படும் பயங்கரமான ஆக்கினைகளை மிக்க சாந்
தமாயும், சந்தோஷமாயும், தைரியமாயும்
படுவதை இவன் கண்டு, தனக்குள் ஆச்சரிய
முற்று, அவர்களைப் பார்த்து, "நீங்கள் இந்
தக் கொடிய சித்திரவதைகளையெல்லாம் சிறி
தும் முறைப்பாடின்றி அநுபவித்துவருகிறீர்
களே! இதனால் உங்களுக்குக் கிடைக்கும்
நன்மைதானென்ன?" என்று கேட்டதற்கு
அவர்கள் "இப்பிரபஞ்சத்தில் எவனும் கேட்
டிராததும் பார்த்திராததுமான மோட்சபாக்
கியத்தை நாங்கள் சுதந்தரித்துக்கொள்ளும்
பொருட்டே இவ்வாக்கினைகளுக்கு உற்சா
கத்துடனும் சந்தோஷத்துடனும் உடன்படு
கிறோம். மேலும், எங்களுக்கு ஆயிரம் உயிர்
இருந்தபோதிலும் அவையனைத்தையும் இப்
பாக்கியத்துக்காக பலியாக்குவோம்" என்று
சொன்னதைக்கேட்ட அந்த வாலிபப்
போர்ச்சேவகன் உடனே தன்னுடைய அக்
கியான மதத்தை வெறுத்து, ஞானஸ்நானம்
பெற்று, தானும் ஒரு வேதசாட்சியாக மரண
மடைந்தான்.

உண்மையில் மோட்சத்தின்பேரில்
மெய்யான பற்றுதலுள்ளவர்கள் தங்களைப்
பரித்தியாகஞ் செய்வார்கள். ஒருவன் தன்

புறத்தியான்பேரில் பகையும் வர்மமுங்
கொண்டு, அவன் பெயரை முதலாய்க் கேட்
கச் சகியாமல் அவனை ஏசுகிறான், இழிவாய்ப்
பேசுகிறான், அவன் பெயரைக் கெடுக்கிறான்,
அவனுக்குப் பொல்லாப்புக்களைச்செய்ய
தனக்குள் தீர்மானித்துக்கொள்ளுகிறான்.
வேறொருவன் ஓர் பெண்ணின்மேல் வைத்
திருக்கும் அகாத பட்சத்தினால் அவளோடு
பாவத்தில் சீவித்துவருகிறான். இன்னொரு
வன் தான் அநியாயமாய்ச் சம்பாதித்த
சொத்தை உத்தரிக்க வழிவகை தெரியாம
லிருக்கிறான். இன்னுஞ் சிலர் சபிக்கவும்,
தூஷணிக்கவும், தேவதூஷணஞ்சொல்லவும்,
தகாத சொற்களை சரமாரியாய்க் கக்கவும்,
வெறியெடுக்கக் குடிக்கவும் வழக்கப்பட்
டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட பாவ நடத்
தையும், பாவ வழக்கமும் உள்ளவர்கள் எல்
லோரும் தங்கள் ஆத்தும இரட்சண்யத்
தைக் கவனித்து மோட்சபாக்கியத்தை
யடைய மெய்யாகவே ஆசிப்பார்களானால்
அவர்கள் தங்களைக் கட்டாயம் பரித்தியாகஞ்
செய்யப் பின்வாங்கார்கள். அப்படிச் செய்
வது தங்களுக்கு எவ்வளவுதான் கஷ்டமா
யிருந்தபோதிலும், தங்கள் காலை, கையைத்
தரிக்கவேண்டுமென்றாலும் தரித்து, தங்கள்
கண்ணைப் பிடுங்கவேண்டுமென்றாலும்
பிடுங்கிவிட்டு, "நான் இரண்டு காலோடும்,
இரண்டு கையோடும், இரண்டு கண்ணோ
டும் நரகத்தில் புதைபடுவதைவிட, ஒரு
காலோடும், ஒரு கையோடும் ஒரு கண்ணோ
டும் மோட்சத்துக்குப் போவது பாக்கியம்"
என்பார்கள். தன் பாவாக்கிரமங்களை விட்டு
விடாதவனுக்கு மோட்சத்தின்பேரில் ஆசை
பற்றுதல் இல்லையென்பதற் கையமில்லை.

வியாதியாயிருக்கிறவன் தனக்குவியாதி
நீங்கி, தேகம் சொஸ்தமடைவதற்கு மருந்
துண்டு, பத்தியம் பரிகாரஞ் செய்துகொள்
ளுவான். பசியும் பட்டினியுமாய்க் கிடப்ப
வன் பிச்சைவாங்கியாகிலும் சாப்பிடுவான்.
இப்படியே மோட்சத்தை யடைய அவா
உள்ளவன் இரட்சண்யத்தின் வழிவகைகளை
எப்பாடு பட்டாவது கையாடிவருவான்.
அவைகள் மூன்றாகும்:

முதலாவது ஜெபம்.—பாவி தன் பாவ
வழியைவிட்டு புண்யவழியில் செல்ல செபம்
செய்வது அத்தியாவசியம். ஜெபஞ்செய்
யாதவனோ சர்வேசுரனை விட்டு விலகியிருக்கி
றான். மேலும் அவன் மனந்திரும்பி மனஸ்
தாபப்பட இஷ்டமில்லாதவனாயிருக்கிறான்.
இவன் ஜெபஞ்செய்தாலன்றி சர்வேசுரன்
இவன் மனந்திரும்பவும், மனஸ்தாபப்பட
வும் வேண்டிய தேவானுக்கிரகத்தைக்
கொடுக்கமாட்டார். தாவீது இராஜா ஜெபித்
ததினால்தான் தம் பாவங்களுக்காக மனஸ்
தாபப்படவேண்டிய வரத்தை யடைந்தார்.
அப்படியே நல்ல கள்ளனும். அல்லாமலும்
புண்யவான்களும் தங்களுடைய புண்ய வழி
யில் நிலைநிற்கவும், சாங்கோபாங்கத்தை
யடையவும், தங்களுக்குண்டான சோதனை
தந்திரங்களை விலக்கவும் ஜெபஞ்செய்வது
அத்தியாவசியம். "செடிகொடிகள் வாடிப்
போகாமல் செழிப்பாய் வளர ஈரம் எப்படி
அவசரமோ அப்படியே நாம் இரட்சண்யம்
அடைய ஜெபம் அவசரம்" என்று கிறி
சொஸ்தோம் வசனித்திருக்கிறார். மேலும்
அவர் சொல்லியிருப்பதாவது: "எப்படி சரீ
ரத்துக்கு ஆத்துமத்திலிருந்து உயிர் உண்டா
கிறதோ அப்படியே ஆத்துமத்துக்கு ஜெபத்
திலிருந்து உயிர் உண்டாகிறது" என்பதே.

இரண்டாவது புத்திப்பிரசங்கம்.—நம
தாண்டவரான சேசுநாதசுவாமி: "சர்வேசுர
னால் உண்டானவன் சர்வேசுரனுடைய வாக்
கியங்களுக்குச் செவிசாய்க்கிறான்; நீங்கள்
சர்வேசுரனால் உண்டானவர்களல்லவென்கி
றதினால் செவிசாய்க்கமாட்டீர்கள்" என்று
(அருளப்பர். VIII. 4-7) திருவுளம்பற்றி
யிருக்கிறார். பேருக்குப் பிரசங்கங் கேட்கா
மல், கேட்டபடி நடந்தாலன்றி பிரசங்கத்தி
னால் ஆத்துமத்துக்குப் பயனில்லையென்றா
லும், பிரசங்கங்கேட்க இஷ்டமில்லாதவனும்
அதைக் கேட்க நிராகரிக்கிறவனும் சர்வேசு
ரனை நேசிக்கிறதில்லை; ஆனபடியால் இரட்
சண்யமடையமாட்டான். யாருக்கு நன்றாய்ப்
பசியெடுக்கிறதோ அவன் நல்ல சௌக்கியத்
தோடிருக்கிறானல்லவா? பசியில்லாதவனுக்
குத்தான் வாவா ஆகாரத்தின்மேல் அரோசிக
முண்டாக, தேகசுகங்கெட, மரணமுங் கிட்டி
வரும். இவ்வாறே புத்திப்பிரசங்கங்கள் கேட்
கிறவனுக்கும், ஞான புஸ்தகங்களையும், சத்
திய வேத பத்திரிகைகளையும் வாசிக்க ஆசை
யுள்ளவனுக்கும் நல்ல ஞானப்பசி யெடுக்கி
றது. அப்பேர்ப்பட்ட ஆசையில்லாதவர்க
ளுக்கு ஞானப்பசியின்றி தங்கள் ஆத்துமத்
தைச் சேதப்படுத்திக்கொள்வார்களென்பது
சத்தியம்.

மூன்றுவது பாவசங்கீர்த்தனமும் திவ்ய நன்மையும்.—மோட்ச இராச்சியத்தை சுதந்தரித்துக்கொள்ள நமக்கு மனசுண்டானுல் நாம் சுத்த இருதயத்தை யுடையவர்களாயிருக்கவேண்டியது: அதாவது தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் இருக்கவேண்டியது. இப்படி நாம் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருப்பதற்கு அடிக்கடி தக்க ஆயத்தத்தோடு பாவசங்கீர்த்தனஞ்செய்வதும், திவ்ய நன்மைவாங்குவதும் அத்தியாவசியம். ஏனெனில், இந்தத் தேவத்திரவிய அனுமானங்கள் நம்மைப் பரிசுத்தப்படுத்துகின்றன. நம்மைப் புண்ணியத்தில் ஸ்திரப்படுத்துகின்றன. நமக்குண்டாகும் சோதனைகளை ஜெயிக்கச்செய்கின்றன. நம்மை தேவ ஊழியத்தில் நிலைத்திருக்கச்செய்கின்றன.

ஆகையால், ஷெ மூன்று விஷயங்களில் நமது நடத்தை எத்தகையானதாயிருக்கின்றது? மோட்ச இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ள நமக்கு மெய்யான ஆசையுண்டா? நாம் சுறுசுறுப்போடு ஜெபஞ்செய்கிறோமா? புத்திப்பிரசங்கங்களைக் கேட்பதுடன் ஞானப்புஸ்தகங்களையும் கத்தோலிக்குப் பத்திரிகைகளையும் வாசித்து வருகிறோமா? நல்ல ஆயத்தத்துடன் பாவசங்கீர்த்தனஞ்செய்து நன்மை வாங்குகிறோமா? இப்படி இவ்வுலகத்தில் சீவித்துவருவோமானுல், மோட்ச இராச்சியம் நம்முடையது. நம்முடைய நடத்தை இத்தகையானதாயிராவிட்டால் இன்றே அப்படி நடக்கத் தீர்மானித்துக்கொள்வோமாக.

மற்றொருவன் வெளியரங்கமாய்ப் பாவங் கட்டிக்கொள்ளுவதை அல்லது ஏதாவது கனமான அக்கிரமங்கள் செய்வதை நீ கண்டால், அதைப் பற்றி நீ அதிக நல்லவனென்றெண்ணவேண்டாம்; ஏனெனில், நன்னெறியில் நீ எவ்வளவு காலம் நிலைத்திருக்க உன்னுற் கூடுமென்று நீயறிந்திருப்பதில்லை.

நாமெல்லோரும் பலவீனர்; ஆனுல் மற்றெவனும் உன்னைவிட அதிக பலவீனன் என்று எண்ணுதிருக்கக்கடவாய்.

கடந்துபோகும் உவமைகளாலும் வார்த்தைகளாலுமல்ல, ஆனுல் உள்ளதை உள்ளதுபோல, "சத்தியம் எவனுக்குத்தான் போகின்றதோ, அவன் பாக்கியவான்.

நமது கருத்தும் நமது புத்தியும் நம்மை யடிக்கடி மோசம்போக்கும்; மேலும் காரியங்களைக் கொஞ்சமாத்திரந்தான் (அறியவும்).

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.)

ENCOURAGING THE DIVINE VOCATION.

தேவ ஊழியத்திற்கழைக்கப்படுகிறவர்களை ஆதரித்தல்.

(மரியாயின் மகா சங்கத்தின்போது உபந்நியாசிக்கப்பட்டது.)

(முன் தொடர்ச்சி.)

இந்தியர் ஏற்ற தேவ ஊழியரே.

இந்தியர்களுக்குத் தக்க பயிற்சி கொடுத்து, குருக்களாக்கிக் கீழ்த்தரப்படி பதவிகளிலேயே அவர்களை வைக்காது, பொறுப்புள்ள வேலைகளைக் கொடுத்து மதிப்புள்ளோராக்கின், அவர்கள் ஊக்கமுடனுழைத்து, இந்திய திருச்சபைக்குப் பூஷணங்களாக விளங்குவர் என்பது திண்ணம். ஏனெனில், திருச்சபை யலுவல்களை யோக்கியதையோடுஞ் சீராயுஞ் செய்யத் திறமைவாய்ந்துள்ளோர் அவர்கள் என்பதற்கு, இந்திய குருக்கள் இதுவரையில் புரிந்துள்ள வைகங்கிரியங்கள் அதற்குச் சான்றுயினும், சில மேற்றிராணிமார்களின் மொழிகளை நான் சொல்வதை ருசுப்படுத்தும். "எனது மிஷனிலுள்ள சுதேசக் குருக்களின் வேலையைக் கவனிக்கின் எனக்கு ரம்மியமே. அவர்கள் தேர்ந்த மிஷனரிகளாய் விளங்குகின்றனர். அவர்களை அதிகரிப்பதினுல் திருச்சபைக்கே லாபம்" என்று சங். வந். ஜூலியன் ஆண்டவர் செப்புகின்றுர். (Jaffna) "இந்தியர்களை நல்ல குருக்களாக்கலாமென்று நீர் சொல்வதை நானும் உறுதிப்படுத்துகிறேன்..... பாரிய பங்குகளைத் திறமையோடு கண்காணித்து வரும் இந்திய குருக்களை நானறிவேன்" என்று மற்றொரு மேற்றிராணியார் உரைக்கின்றுர். "எனது செமினேரியிலிருந்து பட்டம் பெற்றுப்போன ஆறு சுதேசக் குருக்களும் வெவ்வேறு இடங்களிலமர்ந்து மிக்கத் திறமையோடும் வேத வைராக்கியத்தோடும் வேலைசெய்கிறுர்கள். அவர்கள் 9 வருஷமளவாய் மடத்திலிருக்கையில் அவர்களுக்காக நான் எடுத்துக்கொண்ட கஷ்டங்களுக்குத் தாங்கள் புரிந்துவருந் தேர்ந்த

ஊழியத்தால் எனக்குச் சம்பாவனை யளிக்கின்றனர்" என்பது சரி. வந். பெரினி ஆண்டவரின் மொழிகள். இந்திய குருக்கள் சர்வேசுரனது தயவைக்கொண்டு நல்ல ஊழியஞ்செய்யப் பின்வாங்கமாட்டார்களென்பது பட்டப்பகல். ஆதலால், அவர்கள் தமது தேசத்தில், தமது ஜனங்களின் மத்தியில், பொறுப்புள்ள உத்தியோகம் வகித்து, தேவபணிபுரிந்து திருச்சபையை அதிகரிக்க முயற்சிக்குமாறு தக்கவிதமாய்ச் செப்பனிடப்பட்ட இந்திய குருக்கள் அதிகரிக்கவேண்டியது அவசியமன்றோ? "உள்ளபடி கத்தோலிக்குத் திருச்சபை எவ்வாறு எல்லோருக்கும் பொதுவானதாயும், எந்த ஜாதியாரையும், எல்லா வருணத்தாரையுந் தழுவினதாயுமிருக்கிறதோ, அவ்வாறே ஒவ்வொரு ஜாதியாரும் தங்கள் தங்களுக்குள்ளிருந்தே தங்களுக்கு தேவ நீதிகளைக் கற்பிக்கும் போதகர்களாகவும், ஞானமேய்ப்பர்களாகவும் கொள்ளத்தக்க பரிசுத்த குருக்களை அடைதலாயிருக்கவேண்டும்" என்று 15-ம் ஆசீர்வாதப்பர் வரைந்துள்ளவை ஊன்றி யோசிக்கப்படத் தக்கனவாம்.

தேவ அழைப்பில் ஒத்துழைக்கவேண்டியவர்கள்.

ஒருவர் தேவ ஊழியத்தைத் தெரிந்து கடைசிவரையில் நிலைத்திருந்து, தான் விரும்பிய பதவியை அடையவேண்டின் நாலு பேர் ஒத்துழைக்கவேண்டும். அவர்கள்: (1) கடவுள் (2) அழைக்கப்பட்டவர் (3) மிஷன் தலைவர்கள் (4) அழைக்கப்பட்டோரின் பெற்றோர் ஆவர்.

கடவுள்.

கடவுள் ஒருவனை இம்மேலான அந்தஸ்துக்கழைக்கவேண்டும். "ஆரோனைப்போல் கடவுளால் அழைக்கப்பட்டிருக்கிறவனேயன்றி வேறொருவனும் அவ்விதக் கனமான தொழிலைத் தனக்குத்தானே எடுத்துக்கொள்ளுகிறதில்லை" என்ற அர்ச். சின்னப்பரின் வசனம் யூத குருக்களைக் குறிப்பிடுகின்றது. அப்படியானுல், கிறீஸ்து ஸ்தாபித்த குருக்களை அவரே அழைக்கவேண்டுமன்றோ? அவர் ஒருவனைப் புதுமையினுல் அழைப்பாரென்றல்ல. சில சமயங்களில் அப்படியுஞ் செய்துள்ளார். அர்ச். சின்னப்பரை நினையாச்சமயத்தில் அற்புதமாய்த் தமது ஊழியத்திற்கழைத்தார். அர்ச். ஸ்தனிஸ்லாஸ் கோஸ்காவை வியாதிப்படுக்கையினின்று அழைத்தார். ஆனுல் சாதாரணமாக இப்பேர்க்கொத்த அற்புத சம்பவங்கள் நேரிடா. ஒருவன் அழைக்கப்பட்டிருக்கின்றுனென்று அவனே அறியக்கூடும். அதனுண்மையை ஆத்துமகுருவானவரிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

அழைக்கப்பட்டவர்.

கடவுள் ஒருவனை அழைத்திருப்பின் அவனுக்கு அந்தப் பதவியை அடையவேண்டிய வரப்பிரசாதமளிப்பார். ஆனுல், யார் யார் தனக்குத்தானே உதவிக்கொள்கிறுர்களோ அவர்களுக்கே கடவுள் உதவுகிறுரென்பது எல்லோருக்குந் தெரிந்த உபதேசம். ஆகையால் அழைக்கப்பட்டவன் ஆண்டவரது அழைப்புக்குப் பணிதலுடன் சம்மதிக்கவேண்டும். அவன் இஷ்டப்படாதேபோனுல், வேண்டாமென்று புறக்கணித்துவிட்டால் கடவுள் அவனைக் கட்டாயப்படுத்தமாட்டார். ஆதலால் இப்பேர்ப்பட்ட அழைப்பு ஒருவனுக்கு வந்திருப்பதாக அவன் அறிவானுயின், எவ்வளவு சாக்கிரதையோடு அதற்கிசைந்து நடக்கப் பிரயாசைப்படவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

மிஷன் தலைவர்கள்.

தேவ ஊழியத்திற்கழைக்கப்பட்டிருக்கிறுர்கள் என்று கண்டவுடனே, அவர்களை ஏற்றுக்கொண்டு கடைசிபரியந்தம் நிலைத்திருக்கும்படி பலவிதத்திலும் உதவிசெய்யக் கடமைப்பட்டுள்ளார் மிஷன்தலைவர்கள். "மிஷன்களை ஆள்வோர்க்கு இருக்கவேண்டிய முக்கிய கவலை, தாங்கள் வசிக்கும் நாட்டிலுள்ள சுதேசிகளிற் சிலரைக் குருத்துவத்துக்கு ஏற்றபடி பயிற்றுவித்தல்" என்கிறுர் 15-ம் ஆசீர்வாதப்பர். ஆகவே மிஷன் தலைவர்கள் யார் யார் தேவ ஊழியத்திற்கழைக்கப்பட்டுள்ளாரென்று கண்டுகொண்டார்களோ அவர்களை "திருப்திகரமாய்ப் பழக்கிப் பயிற்றுவித்தல் அத்தியாவசியம். குருப்பட்டம் பெறுவதற்குப் போதுமானதென்று கருதப்படும் அரையுங்குறையுமான பயிற்சி உதவவே உதவாது. ஆனுல் நாகரீகமான ஜாதியாருக்குக் குருமாரைப் பழக்குவதுபோல் இவர்களுக்கும் நானுவிதத்திலும் நிரம்பிய சாமார்த்தியமான சம்பூரணக் கல்வி பயிற்றுவித்தல்வேண்டும்" 15-ம் ஆசீர்வாதப்பர். நமது மிஷன் தலைவர்கள் இது

மட்டும் சிந்தைகூர்ந்து பெருமுயற்சி யெடுக்கவில்லையென்று துணிந்து சொல்வேன். ஆயினும் அர்ச். பாப்பானவரின் வார்த்தைகளைச் சிரமேற்கொண்டு பன்மடங்கு முயற்சிப்பார் என்பதில் சந்தேகங்கொள்ள இடமேயில்லை.

பெற்றோர்.

தேவ ஊழியத்திற்கு அழைக்கப்பட்டோரின் பெற்றோர் மனமொத்து சந்தோஷத்துடன் தம் பிள்ளையை அனுப்பவேண்டும். தம்மால் இயலுமாகில் பண உதவி செய்தலு மவசரம். சர்வகலாசாலையில் படிக்கவைப்பாராகில் பணஞ்செலவிடாரோ? அதே பணத்தை ஏன் இப்போது அவன்மாட்டு செலவிடக்கூடாது? தமது பிள்ளையின் கருத்தை யறிந்தபின் பெற்றோர் தடையாயிருக்கக்கூடாது. ஆனால், ஐயோ! கடவுளைச் சேவிக்கத் துணிவோருக்கு இடையூறாயிருக்கிறார்கள் சில பெற்றோர். அவர்களது நல்லெண்ணத்தை நயபய மொழிகளால் பஞ்சாய்ப் பறக்கடித்துவிடுகின்றனர். இவர்கள் இவ்வாறு செய்வதேன்? தம் மக்கள் படித்து பட்டாதாரியாகிப் பாரி உத்தியோகம் வகித்து செல்வாக்குடன் தம்மோடு இருக்கப் பிரியப்படுகின்றனரோ? இப்படி யெண்ணாத யெண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி இலவுகாத்த கிளிபோலான பெற்றோர் எத்தனை பேர்? தான் நினைத்ததுபோல் தன் பிள்ளை உன்னத பதவி யடைந்திருப்பினும் அப்பதவிக்கும் தேவ ஊழியஞ்செய்யுங் குருக்கள், சந்நியாசிகள், கன்னியர்களின் அந்தஸ்திற்கும் எவ்வளவு பாரதூர வித்தியாசம். ஆதித்தன் வீசும் ஒளிக்கும், மின்மினிப்பூச்சியிற்றோன்றும் ஒளிக்கும் உள்ள பேதமுண்டல்லவா? இதை யறியாததுபோல் காட்டுகின்றனர் நம் நாட்டுப் பெற்றோர் சிலர்.

“இங்கிலாந்திலிருந்த ‘வான்’ துரைக்குப் பிறந்த மக்கள் 13 பேர். ஆண் எட்டு பெண் ஐந்து. தாயானவள் பக்தியில் மூழ்கிப் பிள்ளைகளை நல்வழியில் கொண்டுவா முயன்றாள். அவர்கள் எல்லோரும் உன்னத பதவி யடையவேண்டுமென்பதே அவளது ஆவல். உன்னத பதவி யாது? சர்வேசுரனைச் சேவிப்பதிலும் அதியுன்னத பதவி உண்டோ? இல்லையென்பதை நன்குணர்ந்தாள். ஆகவே, ஆண்டவரளித்த பிள்ளைகளையெல்லாம் அவர் வசமளிக்கவேண்டுமென்னுமாசையே அவளிடமிருந்தது. இவ்வெண்ணஞ் சித்திக்கவே, அவள் இடைவிடாது செபித்த மந்திரம். நாள்தோறும் ஒருமணித் தியாலமாய் திவ்ய சற்பிரசாதநாதர்முன் முழந்தாட்படியிட்டு ஆழ்ந்து தியானிப்பது அவளது வழக்கம். அச்சமயமெல்லாம் அவள் எண்ணம் பலிக்கவே, அவரை வருந்திக் கேட்டுவந்தாள். அநந்த தயை சுரூபியாகிய அவர் அண்டின அடியாளைக் கைவிடவில்லை. அவள் விருப்பம்போல் சிரேஷ்டன் முதல் கனிஷ்டன்வரையில் எல்லோரும் குருப்பட்டத்திற்குப் படிக்க மடம் புகுந்தனர். பெண்பாலர் யாவரும் உலகந் துறந்து, துறவறம் இச்சித்து கன்னியர்மடம்போ யடைந்தனர். ஆனால் ஆண்மக்களில் அறுவர்மட்டும் பலிபீடம் முன்னின்று திவ்யபூசை நிறைவேற்றப் பாக்கியம் அடைந்தனர். மற்றிருவர் ‘தேவ அழைப்பு’ இல்லாமையால் மடத்தைவிட்டு விலகி, இல்வாழ்க்கையிற் புகுந்தனர். நன்மாதிரியாக நடந்துவருகின்றனர். குருப்பட்டம்பெற்ற அறுவரில் ஒருவர் கர்தினாலானார். மற்றொருவர் அதிமேற்றிராணியானார். வேறொருவர் மேற்றிராணியானார். இன்னொருவர் மிஷனேரியானார். பின்னுமொருவர் ஆத்துமாக்களைக் கடவுள் பதங்கொண்டுசேர்க்கப் பிரயாசைப்படுகிறார். கடைவர் தேர்ந்த பிரசங்கியாகி எங்கும் பேர்பெற்று விளங்குகிறார். இதைக்கண்ட தாய் பரவசமடைந்தாளென்றால் அதிகஞ் சொல்லவும்வேண்டுமோ? இப்பேர்க்கொத்த பெற்றோர் நமது இந்தியாவிலிருக்கவேண்டுமென்பதே எனது ஆவல்.

(இன்னும் வரும்.)

L. D. S. M.

மறைவும் இரகசியமுமான காரியங்களைப்பற்றித் தர்க்கமாடுவதில் என்ன பிரயோஜனம்? அவைகளை நாம் அறியாததினிமித்தம் தீர்வையில் நாம் குற்றஞ்சாட்டப்படப்போவதில்லை.

பிரயோசனமும் அவசியமுமான காரியங்களை அசட்டைபண்ணி, விநோதமும் கெடுதியுமானவைகளை நாம் கவனிப்பது பெரிய மதியீனம்; கண்ணிருந்தும் நாம் காண்கிறதில்லை.

இனங்களையும் வகுப்புகளையும்பற்றி நமக்கேன் கவலை?

நித்திய வார்த்தையானவரால் படிப்பிக்கப்பட்டவன் பற்பலவித விபரீத எண்ணங்களால் அலைக்கழிக்கப்படமாட்டான்

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.)

161986

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

10-ம் அதிகாரம்.

அர்ச். மோனிக்கம்மாளுடைய மன்றாட்டுக்குக் கர்த்தர் செவிசாய்க்கிறார்—அகுஸ்தீன் இருதயத்தில் வெளிச்சம் உதயமாகிறது—அர்ச். அமிர்தநாதரால் தொடுக்கப்பட்டு, அர்ச். மோனிக்கம்மாளால் நடத்தப்பட்ட உபாயத்தின் விவரம்.

(முன் தொடர்ச்சி.)

அகுஸ்தீன் அமிர்தநாதரை எவ்வளவு கௌரவத்துடன் மதித்துவந்தாரென்றும், அக்காரணத்தைப் பற்றி அமிர்தநாதர் அவரைத் தன் வீசப்படுத்திக் கொள்வது எவ்வளவு சுலபமான காரியமாயிருந்திருக்கும் என்றும், இவ்வார்த்தைகளால் நமக்குத் தெரியவருகிறது. ஆனால் அமிர்தநாதரோவெனில், பிறருடைய மன நிலைமைக்கடுத்த அவசரங்களைப்பற்றி, முற்றிலும் அறியாதிருந்தவரைப்போல் தோன்றுகிறது.

ஆதலால் அவர் சொல்வது “ஆகாயவாணிக்குச் சமானமாயிருந்த இவருடன், ஒருவன் மிகவுங் கொஞ்சநேரம் மாத்திரம் பேசக்கூடுமாயிருந்ததேயொழிய, தன் மனதைத்திறந்து தாராளமாய்ப் பேசச் சமயமிருந்ததில்லை. அவருக்குப் போதுமான வழியிருந்திருந்தால் என்னுடைய மனக்குழப்பங்களையெல்லாம், நான் நிஷ்கபடமாய் அவருக்கு வெளிப்படுத்தி, அவருடைய நல்லாலோசனைகளை நாடியிருப்பேன். ஆனால் அவருக்கு அவ்வளவு ஒழிவிருந்ததாக நான் எப்போதும் கண்டதில்லை.”

சந்தேகமற இதில் ஏதோ ஒரு பரம ரகசியமுண்டு. பத்து வருஷங்களுக்குமுன் தன் குமாரனோடுவேததர்க்கஞ்செய்யும்படி மோனிக்கம்மாள் அமிர்தநாதரை மன்றாடினபோது, “அதனால் என்ன பயன், ஒன்றும் ஆகப்போகிறதில்லை” என்று ஒழித்துவிட்டார். மோனிக்கம்மாள் மனத்தளர்ச்சிகொள்ளாமல் மேலும் மேலும் அவரைக் கெஞ்சி மன்றாடினபோது, “பொறு பொறு, நீ உன் மகனுக்காக அத்தனை கண்ணீர் சிந்திப் பிரலாபிக்கும்போது அவன் ஆத்துமம் சேதமடைவது கூடாத காரியம்” என்று மறுமொழி சொன்னார். இப்போது மிலான் நகரிலும், அமிர்தநாதர் அதே யுக்தி சூழ்ச்சியைப் பிரயோகித்துவந்தார். அகுஸ்தீன் கொண்டிருந்த சந்தேகங்கள் யாவும் அவருக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் எவ்வித தர்க்கமும் அவரோடு செய்யமாட்டார். தர்க்கத்தினால் வெல்லப்பட்டு மெய்ம்மார்க்கத்தைத் தழுவினவர்கள் யார்? மனிதனுக்குண்டான நியாய விசாரணைத் திறமையைப்பற்றியும், புத்தி சாமர்த்தியத்தைப்பற்றியும், அகுஸ்தீன் பெருமையான எண்ணங்கொண்டிருந்தார். ஆதலால் தான்கொண்டுவரும் ஒரு அபூர்வமான ஆட்சேபனைக்கு மறுமொழி சொல்லாதிருந்தால் அல்லது தக்கவிடையளிக்க யாராலும் ஏலவில்லையென்றவர் நினைத்தால், அல்லது அவர் சொல்லும் அபத்த போதனையைக் கண்டிக்காமற்போனால், அவர் தன் சந்தேகத்தில் இன்னமும் உறுதியடைந்து, போலிமார்க்கங்களென்றுதான் அநுபவத்திலறிந்து தீர்மானித்த பிரிவினைச் சபைகள் தத்துவசாஸ்திரக் கூட்டங்களில் தான் கண்டதுபோலவே, கத்தோலிக்குத் திருச்சபையிலும் சத்தியத்தைக் கண்டுபிடிப்பது அசாத்தியமான காரியம் என்று நம்ப வழியிருந்திருக்கும்.

இதுவுமன்றி அவர் மனது சத்தியத்தின் பாரிசமாய்த் திரும்பினாலும், அவரது இருதயமும் அப்பாரிசமாகவே திரும்புமென்கிற நம்பிக்கையென்ன? நன்மைத்தனத்தில் இருந்தே வெளிச்சமுண்டாகுமென்றும், புண்ணியத்தின் மூலமாய்த்தான் ஆத்துமமானது தன் இறக்கைகளைப் பக்குவப்படுத்திக்கொள்ள முடியுமென்றும் பிறாட்டோவென்பவர் சாதிக்கிறார். இது உண்மையென்று பிறாட்டோவைவிட அகுஸ்தீனுக்கு நன்றாய்த் தெரியும். அகுஸ்தீனுடைய மனக்குழப்பங்களை அமிர்தநாதர் அறிந்திருப்பாரேயானால், அவருடைய இருதயத்தின் அலங்கோலங்களை அதிலும் மேலாக அறிந்திருப்பார். அகுஸ்தீனுடைய இருதயம் தேவபாரிசமாய்த் திரும்பவேண்டுமென்று 14 வருஷகாலம் கடவுளோடு வாதாடிவந்த மோனிக்கம்மாள் இப்போது மிலான் நகருக்கும் அவரைத் தொடர்ந்து

சென்றாள். அங்கு அவர் சீவித்துவந்த பாவச் சீவியம் முழுதும் பகிரங்கமான காரியம். அப்படியிருக்கும்போது வேத தர்க்கத்தினாலாகும் பயனென்ன? கர்த்தர் அவர்மேலிரக்கங்கொள்ளும்படி அர்ச். மோனிக்கம்மாள் அநுதினமும் ஜெபம் செய்துவருகிறாள். அம்மன்றாட்டின்பலனாக அகுஸ்தீனால் மேற்கொள்ளக்கூடாத ஒரு ஞானப்புசல் அவரது இருதயத்தில் எழும்புமட்டும், அதாவது அவர் தன் பாவங்களை வெறுத்துப் பச்சாதாபப்படும்வரையில் காத்திருப்பது நன்றன்றோ?

அர்ச். அமிர்தநாதருடைய கருத்து இதுவே. ஆதலால்தான் அகுஸ்தீனோடு அவ்வளவு சிநேகபந்தனங்கொண்டிருந்தபோதிலும், அவர் மனதில் குடிகொண்டிருந்த சந்தேகங்கள் ஒன்றையும் அறியாதவர்போல் நடந்துகொண்டு, வீண் தர்க்கங்களுக்கிடங்கொடாமல் எச்சரிக்கையுடன் அவைகளை விலக்கினார். இவர் செய்தது எதற்கொக்குமென்றால், ஓர் அரசன் தன் உத்தியானவனத்திலிருந்த ஒரு இனிய பழத்தைத் தினந்தோறும் பார்த்துவந்தும் அதைப் பறிக்காமல், அது நன்றாய்ப் பழுக்குமட்டும் காத்திருந்ததற்கொக்குமென்று சொல்லத்தகும்.

அர்ச். அமிர்தநாதர் அகுஸ்தீன்மட்டில் நடந்துகொள்ளும் விதத்தை மோனிக்கம்மாள் அறிந்துகொண்டு, தன் மகன் கிறீஸ்துவராவதைக்காணத் தான் மெத்த அவாகொண்டிருந்தும், அவ்விஷயத்தில் அநுபவமும் விவேகமுமுள்ள மேற்றிராணியாருடைய யோசனைப்படி நடப்பதே யுக்தமென்று தீர்மானித்து, "அன்பாலழுதும் அலறியும் ஆள்வானை என்புருகியுள்ளே நினை" என்றபடி தாரை தாரையாய்க் கண்ணீர் சிந்தி அவருக்காக மேலும் மேலும் கர்த்தரைப் பார்த்து செபம் புரிந்துவருவாள். அர்ச். அகுஸ்தீன் சொல்வது: "சுவிசேஷத்தில் வரைந்திருப்பதுபோல் அழுகைப்பிரலாபத்துடன் தன் குமாரனுடைய பாடையைத் தொடர்ந்து சென்ற விதவைத் தாயாரைச் சேசுக்கிறீஸ்துநாதர் கண்டு மனமிரங்கி "பால்யனே, இதோ உனக்குச் சொல்லுகிறேன் எழுந்திரு" என்று வசனித்து, அவளது குமாரனை யுயிர்ப்பித்து அவளுக்குக் கையளித்ததுபோல், "என் ஆண்டவரே! என் விதவைத் தாயாரும் தகப்பனில்லாத பிள்ளையாகிய என்னை நீர் கரிசனையுடன் பார்த்து, பால்யனே, இதோ உனக்குச் சொல்லுகிறேன்: பாவச் சகதியிலிருந்து எழுந்திரு, என்று வசனிக்கும்படியாகத் தன் சிந்தனையென்னும் பாடையில், ஞான மரணமடைந்த என்னை எப்போதும் வைத்துக்கொண்டு, உம்மைப் பார்த்து பிரலாபித்து மன்றாடுவாள்."

அர்ச். அமிர்தநாதருடைய கருத்து உத்தமமான கருத்து என்று முடிவில் தெரியவந்தது. எவ்வளவுக்குப் பிறர் அகுஸ்தீனுடன் தர்க்கிக்கவில்லையோ, அவ்வளவுக்கு அவர் தன்னுடன் தர்க்கித்துக்கொள்ளுவார். தாயாரின் கண்ணீர் அதிகமாய் வடிய வடிய, ஞானப்புசலானது அவரது இருதயத்தில் உக்கிரத்துடன் எழும்ப எழும்ப, மனசாட்சியின் கண்டனை அதிக தெளிவாயிற்று. ஆசாபாசமும் மனசாட்சியும் ஒன்றிற்குப்பின் ஒன்றாய்ச் செய்த வாக்குவாதத்தை, அதிசயத்துக்குரிய சல்லாப ரூபமாய் அவரே நமக்கு விவரித்துக்காட்டியிருக்கிறார்.

ஆசாபாசம்.

அகுஸ்தீன் தன் இருதயத்தில் இன்னும் ஆசாபாசம் அரசுபுரிந்துவந்தபோது சொல்வார். "ஓ! ஜங்கவித்துவான்களே! சீவியத்தை ஒழுங்குபடுத்த, எதையும் திட்டமாய் அறியமுடியாதென்று நீங்கள் போதித்தபோதே, சர்வதத்துவ சாஸ்திரங்களையும் மேற்கொண்டீர்கள்."

மனசாட்சி.

"இல்லை இல்லை, நாம் அவநம்பிக்கை கொள்ளாமல் முன்னிலும் அதிக ஜாக்கிரதையுடன் ஆராய்ச்சி செய்வோமாக. அதைரியங்கொள்வதேன்? "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" ஏனெனில் வேதாகமங்களிலுள்ள அநேக வசனங்கள், அர்த்தசாரமற்றவைகளாய் எனக்குத் தோன்றாமல், ஞாயத்திற்கிசைந்தபடி வியாக்கியானஞ்செய்யக்கூடிய உசித வசனங்களாக எனக்குப் புலப்படுகிறது. இது அற்பமான காரியமல்ல. ஆதலால் இங்கேயே, அதாவது ஒரு சிறு குழந்தையாக என் தாயார் என்னை நிறுத்திய கத்தோலிக்குத் திருச்சபையின் வாசற்படியிலேயே இருந்து விசுவாசத்தின் உதயத்திற்கு நம்பிக்கையுடன் காத்திருப்போமாக.

ஆசாபாசம்.

"ஆனால் எப்போது, அல்லது எங்கே சத்தியத்தைத் தேடுவது? என் சந்தேகங்களைக்

கேட்டுத் தெளிவிக்க அமிர்தநாதருக்கோ ஒழிவில்லை. நானேயாவது ஞான புஸ்தகங்களைப் படித்து அச்சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளலாமென்றால் அதற்கும் எனக்கு ஒழிவில்லை. அல்லது எனக்கு ஒழிவிருக்கும்பட்சத்தில், தக்க புஸ்தகங்களை எங்கே சம்பாதிப்பது? அல்லது அவைகளை யெனக்கு இரவலாய்க் கொடுப்பவர்கள் யார்?"

மனசாட்சி.

"இல்லை இல்லை, சற்று பொறுப்போம். ஒரு நாளில் சிலமணி நேரங்களை நமது ஆத்தும ரட்சண்யத்திற்காகச் செலவிடுவோம். பெருத்த நம்பிக்கைத் தோன்றுகிறது. கத்தோலிக்குத் திருச்சபையானது நான் இதுவரைக்கும் நினைத்துவந்ததுபோல, அல்லது அதன் விரோதிகள் அதன்மேல் அபாண்டமாய்ச் சொல்லிவருகிறதுபோல, ஞாயத்திற்கொவ்வாத போதனைகளைப் போதிப்பதில்லை. இத்தனை நாளைக்கு நமக்கிவ்வளவு தெரியவந்தது. ஆதலால் மற்றக் காரியங்களை நாம் ஏன் ஆராய்ச்சிசெய்து அறிந்துகொள்ளக்கூடாது? காலையிலென்னமோ மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பிக்கவேண்டியிருக்கிறது. மத்தியானத்திற்குமேல் என்ன செய்கிறோம். ஏன் அந்த வேளையில் இந்த முக்கியமான விஷயத்தைப் படித்தறியக்கூடாது?"

ஆசாபாசம்.

"அப்படியானால், உந்நத பதவியிலிருக்கும் சீமான்களும் செல்வாக்குள்ளவர்களுமான நமது நேசர்களைப்போய்க் காண்பதெப்போ? பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கவென்று நாம் சம்பளம் வாங்குகிறதால், நாளைக்குக் கற்பிக்கவேண்டிய பாடங்களை இன்று முஸ்திப்பு செய்யவேண்டுமல்லவா? அதற்கு நேரமெங்கே? சோர்ந்து அலுத்துப்போகும் இந்த மனதிற்கு எப்போது தான் இளைப்பாற்றி?"

மனசாட்சி.

"இந்த விழலும் வியர்த்தமுமான காரியங்கள் யாவும் ஒழிந்துபோகும்படியாக, சத்தியத்தைத் தேடும் விஷயத்திலேயே நமது மனதை முற்றிலும் செலுத்துவோமாக. இந்தச் சீவியம் முழுதும் நிர்ப்பாக்கியம் நிறைந்த சீவியம். சாவு எப்போ வருமென்பது தெரியாது. திருடனைப் போல் திடீரென்று நாம் நினையாத வேளையில் வந்துவிட்டால், ஐயோ எந்த ஸ்திதியில் நாம் மறுலோகத்திற்குப்போவது. நாம் அசட்டை செய்துவந்த வேத காரியத்தைக் கற்றறிவது எங்கே? மேலும் அப்பேர்ப்பட்ட அசட்டைத்தனத்திற்குச் சுவாமி விதிக்கும் தண்டனைக்குத் தப்பித்துக்கொள்வதெப்படி?"

ஆசாபாசம்.

"சாவோடு எல்லாம் ஒழிந்துபோனால் அப்புறம் என்ன இருக்கிறது."

மனசாட்சி.

"அப்படியானால் இதையும் நாம் ஆராய்ச்சி செய்யவேண்டியது. ஆனால் இல்லை, ஆராய்ச்சி செய்யவேண்டுமென்னும் எண்ணமே பொல்லாதது. கிறீஸ்து வேதம் உலக முழுவதிலும் பரவிச் சோதி மகிமையுடன் பிரகாசித்துவருகிறதென்பது சாமான்யமான காரியமல்ல. மனிதன் மரணமடைந்தவுடன் அவன் ஆத்துமம் கூடவே ஒழிந்துபோகுமேயானால், கடவுள் அப்பேர்ப்பட்ட உந்நதமும் அதிசயத்துக்குரியதுமான காரியாதிகளை முடித்திருக்கமாட்டார். அப்படியானால் இப்பூலோகத்தின் நம்பிக்கைகளை வெறுத்துவிட்டு, கடவுளையும் உண்மையான பாக்கியத்தையும் நாடாமல் தாமதிப்பதேன்?"

ஆசாபாசம்.

"ஆனால் கொஞ்சம் பொறு. உலக சந்தோஷங்கள் மதுரமும் இன்பமுமானவை. அதிக ஆத்திரமாய் அச்சந்தோஷங்களை வெறுக்கலாகாது. ஏனெனில் ஒருதரம் அவைகளை வெறுத்துவிட்டபிறகு, மறுபடியும் அவைகளை நாடிப்போவது மானங்கெட்ட காரியமாயிருக்கும். எனக்கு இப்போது கௌரவமுள்ள உத்தியோகம் கிடைக்கிறாப்போலிருக்கிறது. அது எனக்குக் கிடைத்தால் சுகமுண்டாகும். ஆஸ்தி சேரும். மேலான உத்தியோகஸ்தர்களும் ஐஸ்வரியவான்களும் எனக்குச் சிநேகிதர்களாயிருக்கிறார்கள். ஒருக்கால் எனக்குத் தேசாதிபதி யலுவல் கிடைத்தாலுங் கிடைக்கும். பிறகு நான் கொஞ்சம் ஸ்திதியுள்ள ஒரு பெண்ணை மணம் புரியக்கூடும். அவள் எனக்கு ஒரு கால்கட்டாயிராமல் நான் பாக்கியமாய் வாழ உதவியாயிருப்பாள். அநேக பிரபலம்பொருந்திய சீமான்கள் மணம்புரிந்து, அப்படி மணம்புரிந்தபிறகும்

ஞானத்தைத் தேடிவந்தார்கள். நான் ஏன் அவர்களைப்போல் நடக்கக்கூடாது. "இப்படியாக" அவர் சொல்வது "எதிர்காற்றிலகப்பட்ட சருகுபோல்; என் மனம் என்ன செய்வதென்று தெரியாமல் கலங்கிற்று. காலம் கடந்துபோய்க்கொண்டிருக்கிறது. நானோ இன்னது செய்வதென்று தெரியாமல் இரு மனங்கொண்டவனாயிருந்தேன்."''

இப்படியாக அகுஸ்தீனுடைய ஆத்துமத்தில் ஞானப்போராட்டந் துவக்கி, மெத்த உக்கிரகத்துடன் ஒரு வருஷம்வரைக்கும் அவரை வாதித்துவந்தது. மனசாட்சியின் கண்டனைகளை யடக்கி, இப்போராட்டத்தை யமர்த்த அடிக்கடி வழிபார்த்தார். ஆனால் இந்தப் போராட்டத்திற்றான் இரட்சண்யத்தின் கடைசி நம்பிக்கையுண்டென்று அவருடைய விவேகமுள்ள தாயார் அறிந்துகொண்டு, அவருடைய மனசாட்சியையெப்போதும் மேலும் மேலும் தூண்டிக்கொண்டேயிருப்பாள். அவளது எண்ணத்தின்படியே இப்போராட்டம் கடைசியாய் ஜெயத்தில்தான் முடிந்தது. ஆனால் அது தாயும் மகனும் சேர்ந்து அரும் பிரயாசையுடன் அடைந்த ஜெயமாக்கும். மனிதன் தனது நாட்டத்திற்கு விரோதமாய் செய்யும் இவ்வதிசயத்துக்குரிய போராட்டமானது, அகுஸ்தீனுடைய நிஜார்த்தமான பெருமித குணத்தை நமக்குக் காட்டுகின்றது. சத்தியத்தைத் தேடுவதும், ஆவலுடன் அதை விரும்புவதும், அதைப்பற்றி உலக இன்பங்களைப் பரித்தியாகம் செய்யவேண்டியிருக்குமேயென்று தத்தளிப்பதும், இருந்தும் கடைசியிலாவது வியசனத்துடன் உலக சிற்றின்பங்களைப் பரித்தியாகம் செய்வதும், செனெக்காவென்னும் நூலாசிரியர் மாட்சிமையுடன் சொன்னதுபோல் கடவுளுக்கடுத்த காட்சியாம். Ecce par Deo spectaculum! vir cum adversis compositus. மீளவும் அர்ச். சின்னப்பர் இதிலும் மேலான சிந்தனைகொண்டு, "இருதலைக்கொள்ளியிலகப்பட்ட எறும்பு" எப்பக்கம் போவதென்று தெரியாமல் தத்தளிப்பதுபோல் மனிதனானவன் நன்மையைப் புரிவதோ தீமையைச் செய்வதோவென்றறியாமல் தத்தளித்து, நன்மையைச் செய்யத் தான் கடமைப்பட்டிருப்பதைப்பற்றிப் பிரலாபித்து, அந்நன்மையைச் செய்யவேவேண்டாம் வேண்டாம் என்று தன் ஈன சுபாவம் இடித்துரைத்தபோதிலும், அந்த நன்மையையே நாடிப்போவதை, சித்திரப் பாவனைப்போல் நமக்கு விவரமாய்க் காட்டி பிறகு கூவிச்சொல்வார். Spectaculum facti sumus Deo et angelis et hominibus.

இப்படிப்பட்ட போராட்டத்தின் காட்சி உந்நதமானதாயினும் இதிலும் உந்நதமான காட்சி வேறொன்றுண்டு. அதேதெனில், உலக ஆசாபாசங்களினால் அடக்கமுடியாத தேவ நாட்டத்தை இளம் வயதிலேயே தங்கள் மக்களுடைய இருதயங்களில் பதியவைக்கவும், அம்மக்கள் ஒரு சமயம் கால் தடுமாறிப் பாவவழியில் நடந்தபோதிலும் தங்கள் பாவாக்கிரமங்களைச் சிந்தித்து பச்சாத்தாபப்படும்படி தங்கள் செபத்தின் சக்தியால் அவர்களுடைய இருதயங்களில் ஞானப்புசலையெழுப்பவும், தாய்மார்களுக்கிருக்கும் சக்தியேயாம். மேலும் நெருப்பானது முழுதும் பூத்துப்போய் வெறுஞ் சாம்பலாய்த் தோன்றினாலும், அச்சாம்பலுக்குள் மறைந்திருக்கும் ஒரு சிறு நெருப்புப் பொறியைக்கொண்டு பழயபடி அக்கினி, சுவாலைவிட்டு, எரியச்செய்யக்கூடுமாப்போல், ஆசாபாசங்கள் ஞான உணர்ச்சியனைத்தையும் ஆத்துமத்திலிருந்து முழுதுமாய்ப் போக்கிவிட்டதாகத் தோனறும்போதே, சிறு நெருப்புபோல் அவ்வாத்துமத்திலிருக்கும் தேவ நாட்டத்தின் சக்தியாலும், ஜெபத்தின் வல்லமையாலும், அவர்களிருதயங்களில் தேவ நேசத்தைக் கிளப்பி, அதைச் சுவாலைவிட்டு எரியச் செய்யக்கூடுமென்பதே. அகுஸ்தீனுக்கானது இப்படித்தான்.

(ஏனெனில்) வார்த்தையானவர் சகலமும் உண்டாக்கினார்; சகலத்தையும் பரிசுத்தப்படுத்துகின்றார். நம்முடன் சம்பாஷணை செய்யும் ஆதிகாரணமானவர் அவரே.

அவருடைய உதவியின்றி சரியாய் எதையும் கண்டுபிடிப்பதுமில்லை, தீர்மானிப்பதுமில்லை.

பரம வஸ்துவாகிய சர்வேசுரன் சர்வமாயிருக்கின்றார் என்று எண்ணி இப்பரம வஸ்துவுக்குப் பிரியமாய் சகலத்தையும் நடத்தி, அதில் சகலத்தையும் காண்கிறவன் எவனோ அவன் கலக்கப்படமாட்டான். அவனுடைய மனது சர்வேசுரனிடத்தில் சமாதானமாய் நிலைகொள்ளும்.

ஓ! சத்திய சுரூபியாகிய சர்வேசுரா! நித்திய நேசபந்தனத்தால் என்னை உம்மோடு ஐக்கியமாக்கியருளும். —(கிறீஸ்துநாதர் அநுசாரம்).

A SHORT SKETCH OF THE LIFE OF FR. BESCHI.

சங். வீரமாமுனிவருடைய சரித்திரச் சுருக்கம்.

5-ம் பிரிவு.

(முன் தொடர்ச்சி.)

வீரமாமுனிவர் இடைவிடாமல் நெடும்பிரயாணஞ் செய்து வேதம் போதித்து தேவத்திரவிய அனுமானங்களை நிறைவேற்றி, தியானப் பிரசங்கங்களைச்செய்து வாலிபருக்குக் கல்வி கற்பித்து உபதேசிமாருக்கு வேதசத்தியங்களைப் படிப்பித்து தேவ தோத்திரத்துக்காக உழைத்துவருங் காலத்தில் தஞ்சாவூர் அரசனுக்கும் துலுக்கருக்குஞ் சண்டை உண்டானது. இந்தப் போர் நடக்கும்போது இரு அரசருடைய சேவகரும் ஊர்களில் சென்று கொள்ளையடித்து விளைச்சல்களை நாசஞ்செய்ததால் குடிகள் பட்ட கஷ்ட வருத்தம் விவரிக்குந்தன்மையல்ல.

இந்தச் சண்டை முடியவே தஞ்சாவூர் அரசன் மறவன் தேசத்தின்மீது படையெடுத்துப் போர்புரிந்ததினால் பிரஜைகள் பெருங் கஷ்டத்துக்கு ஆளானார்கள். தஞ்சாவூரின் படை சென்ற இடமெல்லாம் அநியாய அக்கிரமங்களைப் புரிந்து தங்களுக்கு எதிர்ப்பட்டவர்களை கொலைசெய்து வீடுகளைக் கொளுத்தி பொருள்களைக் கொள்ளையாடி சகலவித அட்டூழியங்களைச் செய்ததினால் அத்தேசத்து ஜனங்கள் சகலவித நிர்ப்பந்தங்களை அனுபவித்து கொடிய பசிதாகங்களுக்குள்ளானார்கள்.

மதுரை இராஜ்ஜியத்தை அரசுபுரிந்த சொக்கநாத நாய்க்கர் மரித்தபோது, அத்தேசத்தின் செங்கோலுக்காக இரு கட்சிகள் ஏற்பட்டு தேசத்தில் குழப்பமுண்டானது. இதனால் அத்தேசத்தார் சொல்லிமுடியாத சங்கடங்களைப் பட்டு அவர்களில் அனேகர் கூட்டங்கூட்டமாய் மதுரை இராஜ்ஜியத்தைவிட்டு வேறு நாடுகளுக்கு ஓடிப்போனார்கள்.

இம்மூன்று கொடும் போர்கள் முடியவே, தேசமெங்கும் பஞ்சமும் கொள்ளைவியாதியுமுண்டாகி கணக்கில்லாத பேர்கள் மடிந்தார்கள். வீரமாமுனிவரோவெனில் இப்பெருஞ் சங்கடகாலத்தில் தேவ உதவியைத் தேடி ஊரூராய்ச் சென்று கிறீஸ்துவர்களைத் தேற்றி ஆறுதல் புரிந்து தம்மால் கூடிய உதவியுஞ்செய்து தேவத்திரவிய அனுமானங்களை நிறைவேற்றி அனேக அஞ்ஞானிகளுக்கு ஞானதீட்சை கொடுக்கப் பாக்கியம்பெற்றார்.

மதுரை தேசத்து அரசனுடைய மந்திரியான ஒரு பிராமணனால் மேற்கூறிய தேசக்குழப்பம் உண்டானகாலத்தில் துலுக்கப் படை அத்தேசத்து இராணியான மீனாட்சிக்கு உதவியாக வந்தபோது, மந்திரி பிடிபட்டு சகலவித வாதைகளுக்குமுள்ளாகி அவலமாய் மாண்டான். இப்பேர்ப்பட்ட சங்கடகாலத்தில் உறையூரிலுள்ள கோவிலும் ஆவூரிலுள்ள கோவிலும் புதுமையாகக் காப்பாற்றப்பட்டதென்று சொல்லலாம். அக்காலத்தில் வீரமாமுனிவர் ஆவூரிலிருந்தார். சில கள்ளர் எருதுகளைத் திருடிக்கொண்டுபோனதினிமித்தம் சில துலுக்க சேவகர் ஆவூரார்மேல் சமுசயங்கொண்டு, அங்கு சென்று விசாரணைசெய்கையில் வீரமாமுனிவர் தமது கிறீஸ்துவர்கள் இவ்வேலையைச் செய்தவர்களல்லவென்று பரிந்து பேசினார். அந்த முரட்டுச் சேவகர் இவரின்னாரென்று அறியாமல் அவரை அவமரியாதையாய்ப் பேசி தங்கள் பாளையத்துக்கு அழைத்துக்கொண்டுபோனார்கள். சுவாமியார் துலுக்கருடைய படைத்தலைவனால் விடுதலை செய்யப்பட்டபின் வீரமாமுனிவர் படைத்தலைவனைப் பார்க்கப் போனபோது அவனவரை மகா வாஞ்சையுடன் அங்கீகரித்து ஆலிங்கனஞ்செய்து தமது பக்கத்தில் உட்காரவைத்து, தமது சேவகர் அவரை அவமரியாதையாய் நடத்தினதற்காக பொறுதி கேட்டு வெகுமான கொடைகளுடன் அவரை அனுப்பிவைத்தான். மேலும் அப்போதைக்கப்போது தன்னை வந்து பார்க்கும்படி அவன் கேட்டுக்கொண்டான். இதைக்கண்ட இந்துக்கள் அதிசயப்பட்டு வீரமாமுனிவரை முன்னிலுங் கனப்படுத்திவந்தார்கள்.

தளக்கர்த்தன் தமக்குக் காட்டிய அன்பு மரியாதையால் வீரமாமுனிவர் அதிக தைரியங்கொண்டு சந்தா சாய்பு என்னப்படும் பெரி

தளக்கர்த்தனைச் சந்தித்து அவனுடன் சம்பாஷிக்கக் கருத்துகொண்டு பெர்சிய பாஷையையும் இந்துஸ்தானி பாஷையையும் மூன்று மாதங்களுக்குள் திரக் கற்றறிந்து அவனுடைய பேட்டிபெற்றார். சந்தா சாய்பு சுவாமியாருடன் சம்பாஷிக்கும்போது அவருடைய புத்தி சாமர்த்தியத்தையும் புண்யத்தையும் அறிந்து இந்துஸ்தானி பாஷையில் மாசற்ற தவசி என்று அருத்தங்கொள்ளும் இஸ்மத் சந்நியாசி என்னும் பட்டத்தை அவருக்குக் கொடுத்தான். இதற்குப்பின் சந்தா சாய்பு சுவாமியாரை பலமுறை கண்டு பேசி வெகு பட்சத்தைக் காட்டினான். சந்தா சாய்பு திருச்சினாப்பள்ளிக்கு நவாபாக வந்தபின் கிறீஸ்துவேதத்தைச் சேர்ந்தவர்கள்மட்டில் அன்புகாட்டி, குருக்களுக்கு மரியாதைகாட்டி, அவர்கள் கோவில்களுக்கு ஆபத்து உண்டாகாதபடி பார்த்துக்கொண்டான். ஒரு நாள் சில துலுக்கச் சேவகர்கள் ஆவூருக்குச்சென்று இரண்டு மூன்று மண்பாண்டங்களையும் தேங்காயையுந் திருடிக்கொண்டுபோனார்கள். இதைப்பற்றிக் கேள்விப்பட்ட நவாபு அவர்களை வரவழைத்து அவர்களை கோபித்துக்கொண்டு ஒவ்வொருவனுக்கும் முதுகின்மேல் பிரம்பால் 40 அடி அடிக்கும்படி கற்பித்ததுடன், இதுமுதல் புண்யவாளரான ரோமான் குருக்களுக்கு அற்ப மோசமுஞ் செய்யாமலிருந்து அவர்களை பாதுகாக்கவேண்டுமென்று சேனைக்கு அறிக்கைசெய்தான். இதைக் கண்ட மற்ற சேவகர் பயந்து முன் செய்துவந்த திருட்டு முதலியவைகளை விட்டுவிட்டார்கள்.

சந்தா சாய்பு கிறீஸ்துவர்கள்மட்டில் இவ்வளவு தயவாயிருப்பதைக்கண்ட சிற்றரசரும் ஜமீன்தார்களும் கிறீஸ்துவர்களை துன்பப்படுத்தாமலிருந்தார்கள். ஏலாகுரிச்சியில் கட்டப்பட்ட கோவிலுக்கு அவ்வூர் ஜமீன்தார் சில நிலங்களை மானியமாகக் கொடுத்தான். மதுரைநாட்டு இராஜாவாகிய திருமலை நாயக்கர் என்பவனும் வீரமாமுனிவருடன் சம்பாஷித்து அவருக்கு மரியாதை செய்து கிறீஸ்துவர்களை காப்பாற்றுவதாக வாக்களித்தான்.

தஞ்சாவூர் இராஜாவின் மனைவிகளுக்குள் இருசகோதரிகள் கிறீஸ்துவளான தங்கள் வேலைக்காரிமூலமாய் சத்திய வேதத்தின் மகத்துவத்தை அறிந்து ஞானஸ்நானம் பெற ஆவல்கொண்டு வீரமாமுனிவரை மன்றாடினார்கள். இவர்களில் ஒருத்திக்குப் பிறந்த குழந்தை பார்வையிழந்து சாகக்கிடக்கையில் இராணியின் உத்தரவின்மேல் ஷை வேலைக்காரி அந்தக் குழந்தைக்கு ஞானஸ்நானங் கொடுத்தாள். கொடுத்தக்ஷணமே குழந்தை கண்பார்வையடைந்து பூரண சுகப்பட்டது. இதைக்கண்ட தாயானவள் வீரமாமுனிவருக்கும் கோவிலுக்கும் அனேக கொடைகளைக் கொடுத்தாள். குழந்தைக்குப் புதுமையாயுண்டான கண்பார்வைக்கு நன்றியறிந்த தோத்திரமாக இரண்டு பொன் விழிகளைச் செய்வித்து கோவிலுக்கு அனுப்பிவைத்தாள். இவ்விரு சகோதரிக்கும் சத்திய வேதத்தில் சேர ஆசையிருந்தபோதிலும் பல விக்கினங்களால் அவர்கள் ஆசை நிறைவேறாமற்போய்விட்டது.

சந்தா சாய்பு திருச்சினாப்பள்ளி நவாபாக வந்தபின் வீரமாமுனிவருக்கு திவான் பட்டம் கொடுத்து, தனது பாட்டன் ஏறிய தந்தத்தால் அமைக்கப்பட்ட பல்லக்கை அவருக்கு அளித்து வருஷத்துக்கு ரூ. 12,000 வருமானங் கொடுக்கத்தக்க 4 கிராமங்களை அவருக்கு மானியமாகக் கொடுத்தான். வீரமாமுனிவர் மந்திரி வேலையை வகித்துவருங்காலத்தில் அந்த உயர்ந்த உத்தியோகத்துக்கேற்றாப்போல் தமது நீண்ட அங்கியைத் தரித்துக்கொண்டு மந்திரி உத்தியோகத்துக்கு நியமிக்கப்பட்ட ஆரவாரச் சிறப்புக்கு உடன்படவேண்டி நேரிட்டது. இவர் வெளியே புறப்படுகையில் அநேக காவலாள் சேனைகளும் குதிரைப்படையும் அவரைப் புடைசூழ்ந்துவர அனேக வாத்தியக்காரர் தம்பூர், வீணை நாகசுரம் முதலிய வாத்தியங்களை வாசித்துக்கொண்டு முன்னே நடப்பார்கள். மந்திரியின் பல்லக்குக்குமுன் 12 குதிரைவீரர் கொடிகளைப் பிடித்துக்கொண்டு சவாரிசெய்ய, அநேக சேவகர் பெருஞ் சந்தடி கூச்சலுடன் மந்திரியவர்கள் விஜயஞ் செய்கிறார்களென்று கட்டியங் கூறிக்கொண்டு முன்செல்வார்கள். இந்தச் சிறந்த பரிவாரத்துக்குப்பின் ஒரு ஒட்டகத்தின்மேல் சிலர் நகராவை அடித்துக்கொண்டும், வேறொரு ஒட்டகத்தின்மேல் சிலர் கைத்தாளம் போட்டுக்கொண்டும் செல்லுகையில், அவருடைய சாமான்களையும் கூடாரங்களையுஞ் சுமந்துவரும் 3 ஒட்டகங்கள் பின்தொடரும்.

சந்தா சாய்பு திருச்சினாப்பள்ளிக்கு நவாபாயிருக்குமட்டும் அந்நாடுகளில் சத்திய வேதம்

பிரபலியப்பட்டுக்கொண்டுவந்ததுடன் குருப்பிரசாதிகளும் அன்பு மரியாதையுடன் சர்க்காரால் நடத்தப்பட்டார்கள். ஆனால், ஒரு சண்டையில் வேலூர் நவாபு பிடிபட்டு, 1743-ம் வருஷம் சந்தா சாய்பு மரித்தபின், வீரமாமுனிவர் மந்திரி உத்தியோகத்தை விட்டுவிட்டு தூத்துக்குடிக்குச் சென்று அவ்விடத்தில் வேதத்துக்காக உழைத்துவந்தார்.

வீரமாமுனிவர் வியாதியால் நொந்து கஷ்டப்பட்டதினால் மலையாளத்தைச்சேர்ந்த அம்பலகாட்டிலுள்ள சேசு சபையாருடைய கல்விச்சாலையை மேற்பார்வை பார்க்கும்படி அவ்விடத்துக்கு அனுப்பப்பட்டார். அவ்விடத்தில் தமது வேலையைப் பிரமாணிக்கத்துடன் நடத்தி, அவருக்கு 67 பிராயம் நடக்கும்போது 1747௵ பிப்ரவரி௴ 4௳ வரையில் தாம் பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்துவந்த கர்த்தர் கையில் தமது ஆத்துமத்தை ஒப்படைத்தார்.

வீரமாமுனிவர் இறந்து அனேக வருஷங்களானபோதிலும் அவர் நடத்திவந்த உத்தம வேலைகள் அழியாமல் நிலைநிற்கிறதைக் காண்கிறோம். அவர் எழுதிய அரிதான பிரபந்தங்கள் வஜ்ஜிரத் தூண்கள்போல் பிரகாசித்து அதினால் நமக்குத் திரண்ட நன்மை உண்டாகிறது. இவருடைய அரிதான கல்வித்திறமையைப் புகழ்ந்து பேசாதவர்களில்லை. அன்னிய தேசத்தாரான இவர், இந்து தேசத்தாரான நமக்கு வேதம் போதிக்கும்படி செழித்தோங்கிய தமது ஜன்ம தேசத்தைவிட்டு சகலவித துன்பதுரிதங்களுக்குமுள்ளாகி ஆத்தும இரட்சண்யத்துக்காக இவ்வளவு பிரயாசைப்பட்டிருக்க, இந்நாட்டிலுள்ளவர்கள் தங்கள் சுதேசத்தாரை நரக இருளில் விட்டுவிட்டு அவர்கள்மட்டில் சற்றுங் கவலையின்றியிருப்பது ஞாயமோ? நமது தேசத்திலுள்ள வாலிபர்களில் அநேகர் வீரமாமுனிவரைப் பின்பற்றி பிறசிநேக வேலையை நடத்துவார்களேயாகில், எத்தனையோ பேர் சத்திய வேதத்தில் திரும்புவார்கள். நமது கர்த்தர் படிப்பித்த இந்த மேலான நேசமில்லாததினால் சுதேசக் குருக்களின் தொகை மிகவும் குறைந்து திருச்சபை இத்தேசத்தில் அபிவிர்த்திகொள்ளாமற்போகிறது. ஸ்திரீ பூமான்களான நண்பர்கள் அப்போதைக்கப்போது தங்கள் பிள்ளைகளுக்கு தேவ அழைப்பைப்பற்றி பேசி அவர்கள் சர்வேசுரனுடைய முந்திரிகைத்தோட்டத்தில் உழைக்கும்படி புத்திப் புகட்டிவந்தால் எத்தனையோ பேர் ஆத்தும இரட்சண்ய வேலையை நடத்துவார்கள்! சீமை தேசத்திலும் கோவை, மலையாள தேசத்திலுமுள்ள கிறீஸ்துவர்களை நாமும் பின்சென்று ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் தேவ ஊழிய வேலையில் சேரும்படி ஆசைகொண்டு அதற்காக சர்வேசுரனை விசேஷ விதமாக வேண்டிக்கொண்டு, நமது பிள்ளைகளுக்கு அப்பேர்ப்பட்ட ஆசையை உண்டாக்கி சமயோசிதம்பார்த்து அவர்களுக்கு புத்தி புகட்டுவோமாக.

முற்றிற்று.

J. M.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

சுயராஜ்ஜியம்.

I

கத்தோலிக்கரின் நன்மையைக் கருதும் கனம் பத்திராதிபருக்கு,

தங்களது மார்ச்௴ சஞ்சிகையில், ஒத்துழையாமை விஷயத்தைப்பற்றியும், அதின் தலைவரான காந்தியவர்கள் மாணவர்களுக்கு உபதேசித்து, 9 மாதத்தில் சுயநிர்ணயம் கிடைத்தே தீருமெனக் கூறிய கூற்றைப்பற்றியும் ஓர் சந்தாதாரரால் வரையப்பட்டிருப்பதைக் கண்ணுற்றேன். நரக சர்ப்பமானது சர்வேஸ்வரனுடைய உதவியைத் தப்புவிக்கத் தேடிய தந்திரம், அதாவது ஆதனையு மேவையையும் இனிய வசனங்களால் பசப்பி, இனிப்பேறிய கனியை அவர்களுக்கு ஊட்டி, அதன் பயனாக மானிடப்பிறவிக்கு சாவையும், ஓயாத தொல்லையையும், மாசில்லா சிசுக்களுக்கும் ஜென்மப்பாவமென்ற ஓர் பெரும் பழியையும் உலக முடிவுபரியந்தம் லபிக்கச்செய்ததை நாம் செம்மையாய் யறிந்திருக்கிறோமல்லவா? மீளவும் நமது ஆங்கிலேய அரசாட்சிக்கு இந்தியா தேசம் அமைந்த சில வருஷங்கட்குப்பிறகு, நமது நாதனின் நாமத்தால் ஞானதீட்சை பெற்றவர்களுக்கும், வேத

போதகர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் நமது இந்து ராஜாக்களால் வந்த தீங்குகளையும் நாம் எல்லோரும் நன்கு அறிவோம். நமது ஆங்கிலேய துரைத்தனத்தார் உயர்தரக் கல்வி, சாஸ்திரீயக் கல்வி, வைதிகக் கல்வி முதலிய கல்விகளை நமக்கு ஊட்டியும், 'இண்டியன் பீனல் கோடு', 'கிரிமினல் புரொசீஜர் கோடு', 'எவிடன்ஸ் ஆக்ட்டு', 'சிவில் லா கிரிமினல் லா' முதலியவற்றால் சட்ட ஞானத்தை விபரமாய் நமக்குக் காட்டியும், பற்பல நவீன நாகரிகாபிவிருத்திக்கான அறிவைப் புகட்டியும் நமக்கு அத்தியந்த நன்மை செய்திருப்பதை இவ்வளவு சீக்கிரம் மறந்து "உண்ட வீட்டுக்கு இரண்டகம் தேடியது போல்" அவர்கள் புகட்டிய அறிவைக்கொண்டே அவர்களை இழிப்பது நலமா? கடந்த 1600-ம் வருடமுதல் இதுபரியந்தம் சுயராஜ்ஜியத்தைக் கருதாமலிருந்ததேது? இதுகாறும் இப்பேர்ப்பட்ட மகாத்துமாக்கள் எங்கேபோய்ப் புகுந்திருந்தார்கள்?

"சும்மா கிடக்கும் சங்கை ஊதிக் கெடுத்தான் சாதன்" என்பதுபோல், துராலோசனை கொண்டு இம்மகாத்துமாக்கள் சுதேசி, வந்தே மாதரம் என்று பகர்ந்து, மாணவர்களை ஏமாற்றி அவர்களுக்கு வீண் கஷ்ட நஷ்டங்களை யுண்டு பண்ணி, அனேகர் சிறைச்சாலையில் மூடப்படுவதற்குங் காரணரானார்களல்லவா? அப்படிச்செய்தும் அவர்கள் கட்சி ஈடேறிற்றா? நமது ஆங்கிலேய இராஜாங்கத்தாரின் அரசாட்சிக்குட்பட்ட பக்கத்து வீட்டாராகிய ஐரிஷ்காரரின் சுயராஜ்ஜிய வேண்டுகோள் பூர்த்திசெய்யப்பட்டதா? அதற்காக எத்தனை வாது! எத்தனை போர்! எத்தனை சண்டை! எத்தனை உயிர்ச்சேதம்! எத்தனை இரத்தக்களறி! எத்தனை கொள்ளை! எத்தனை வீடு நாசம்! எத்தனை அக்கினிப் பிரவாகம்! எத்தனை பொருள் நஷ்டம்! இத்தனை பரித்தியாகம் செய்தும், ஒரே ஜாதியாராயிருந்தும், கல்வி, நாகரிகம் முதலியவைகளில் சமயோக்கியதையுடையவராயிருந்தும் அவர்களுக்கு சுயராஜ்ஜியம் கிடைத்தபாடில்லை. மேற்குறித்த கஷ்ட நஷ்டங்களில் ஒன்றேனும் படாமலும், மேற்குறித்த யோக்கியதைகளில் ஒன்றேனும் இல்லாமலுமிருக்கும் இந்தியருக்கு இவ்வளவு சுலபமாய் சுயராஜ்ஜியங் கிட்டுவது குதிரைக்கொம்புதான். மேலும், இப்பிரயத்தனம் வானத்தை எட்டிப்பார்ப்பேனென்று ஒருவன் ஏணி செய்ததற்கு ஒப்பாகும். அப்படி நடவாதது நடந்தாலும், சுயராஜ்ஜியத்தினால் சிறுபான்மையாரான நமது கத்தோலிக்கருக்கு எவ்விதத்திலும் தீங்கே தவிர சுகங் கிடையாது. சுயராஜ்ஜியம் இல்லாதபோதே நமது சுதேச கிறீஸ்துவர்களுக்கு செய்யப்படும் குறைகள் எவ்வளவோ. முழுதும் கிடைக்குமாயின் நாமெல்லோரும் மரியாயின் நாமத்தை மறந்துவிட்டு, மயான ருத்திரியைத்தான் பூசிக்க நேரிடும்.

இப்படிக்கு,
சந்தாதாரில் ஒருவன்.

II

சென்ற மார்ச்சு மாத சஞ்சிகையில் ஓர் கத்தோலிக்குக் கனவான் சுய ஆட்சி விஷயமாய், மிஸ்டர் காந்தியையும், அவர் கொள்கைகளையும், ஆமோதித்து, 9 மாதமல்ல, 7 மாதத்திற்குள் சுயராஜ்ஜியங் கிடைத்துவிடுமென்றும், பிரிடிஷார் இதுவரை கத்தோலிக்கருக்குச் செய்த நன்மைதானென்ன? இனி செய்யப்போகிற நன்மைதானென்னவென்று வெறுப்புற்றும், சுயராஜ்ஜிய விஷயத்தில் கத்தோலிக்காகிய நாம் மட்டும் ஏன் பின்னால் போகவேண்டுமென்றும் உசாவி எழுதியிருந்தார். மேற்படியார் எழுதியதைப்பார்த்து, நம் கத்தோலிக்கருக்குள்ளும் அவரது வேற்றுமையான எண்ணம் உண்டாகாமற்றடுக்க, எதிர் கட்சியைச்சேர்ந்த யான் பின்வருவதைப் பிரசுரிக்கக் கோருகிறேன்.

சிங்காரவனமென்னும் ஏடன் தோட்டத்தில், ஏவாளெனும் நமது முதல் தாய் கட்டளையை மீறி விலக்கப்பட்ட விருட்சத்தினடியில் சேர, சோதனை புரிவோன் சமயமிதுவென சர்ப்ப வேடம்பூண்டு, மரத்தின் கிளையில் தொங்கும் விலக்கப்பட்ட கனியை, மரச் சார்பில் உலாவி நிற்கும் ஏவாளின் கண்ணில்பட கிளையை ஆட்டி அசைத்துக் காண்பிக்க, விலக்கப்பட்ட விஷம் டி கனியிலிருப்பதையும், கர்த்தன் கட்டளையையும் மறந்து, சோதனை புரிவோனோடு சம்பாஷித்ததனால் ஏவாள் ஏமாற்றப்பட நாமும் இக்கதியானோம்.

நம்மிந்தியாவில் அன்னிபெசண்டு என்னும் அம்மையார் தோன்றி, நியூஸ் பேப்பர் என்னும் ஓர் மரத்தை வளர்த்து, நியூ இண்டியா என்

னும் பேர் சூட்டிய கிளையில் ஓம் ரூல் என்னும் கனியை தொங்கவைத்து, அதனுள்ளிருக்கும் விஷத்தை மறைத்து, பார்வைக்கு சுய ஆட்சியெனும் வர்ணத்தை தடவி, பார்ப்பவர்கள் மயங்கும்படி அமைத்தார்.

அம்மையார் அமைப்பு ஆரியர்க்கனுகூலமானதால், அவர்கள் அம்மையாரை ஆண்டவளென்றும், சரஸ்வதியின் அவதாரமென்றும் போற்றி, அம்மையாரடிபணிந்து, அவரது பாத தூளியை நெற்றியிலிடுவாரும், தலையில் போட்டுக்கொள்வாருமாக அம்மையாருக்கு நடந்த ஆடம்பரங்களும், சுற்றுப்பிரகாரங்களும், வந்தேமாதரத் தொனிகளும் இவ்வளவென்று நான் சொல்லாமலே சகோதரர் அறிந்திருக்கக்கூடும். ஆனால், இப்போது அம்மையார் பேச்சு அயர்ந்துபோச்சு. இவ்வாறு சுய ஆட்சிக் கங்கணங்கட்டி யுழைத்த லோகமான்ய திலகரும் மரணமாய்விட்டார். இப்போது காந்தி பிரகாசிக்கிறார். இவர் போதகம் ஒத்துழையாமை இயக்கமென்பதில் நிற்கிறது. ஏனென்றால், ஒருவரும் ஒத்து வேலைசெய்யாவிட்டால் 9 மாதத்திற்குள் சுய ஆட்சி வந்துவிடுமாம்.

ஆனால் சுய ஆட்சி கேட்பது தேசத்தின் பெரும்பான்மை ஜனங்கள் கேட்கவேண்டுமேயொழிய சிறிய பாகத்தின் ஜனங்கள் கேட்பதில் பிரயோஜனம் ஒன்றுமில்லை. பிராமணர்கள், சுமார் 33 கோடி ஜனத்தொகையில், மிகவும் ஓர் சிறிய கூட்டம். அதை யுத்தேசித்துத்தான், பிராமணர்கள் சுயராஜ்ஜியம் கேட்கும்போது மற்றவர்களையும் சேர்த்துக்கொண்டு, எல்லோரும் என்று கத்துகிறார்கள். இதில் துலுக்கர் என்று சொல்லப்படும் மகமதியர், பெருங்கூட்டத்தாலும், ஒற்றுமையாலும் கட்டுப்பட்ட ஓர் முக்கிய ஜாதியென்றும் அவர்களை விட்டுவிட்டால் காரியம் கைகூடாதென்றுங் கண்டு, மகமதிய சகோதரர்களென்றும், பஞ்சாப் படுகொலையென்றும் சொல்லி பிராமணர்கள் அவர்களைத் தழுவிக்கொள்ளுகிறார்கள். அல்லாவிடில் என்னகாணும் பிராமணா? பாக்ஷா சாய்பு பக்கத்திலிருப்பது தெரியாதோ என்று மகமதிய சகோதரர் கேட்டுவிடுவார். ஆக்ஷேபித்தால் அடித்துவிடுவார். இதற்கு பயந்துதான் இவ்வித கோலம் போடுகிறார்கள். இவர்கள் வார்த்தையை நம்பி இவர்களுக்குள் நாம் அகப்பட்டுக்கொண்டால் நரி வீட்டில் விருந்துக்கழைக்கப்பட்ட நாரைகளைப்போல் ஆகவேணுமேயொழிய வேறில்லை. பிரிடிஷ் அதிகாரம் இருக்கும்பொழுதே, பிரிடிஷ் அதிகாரிகள் இருக்கும்பொழுதே பிராமண அதிகாரிகளிடத்தில் ஓர் உத்தியோகம் அடைவது எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது. ஒரு வேலைக்கு ஒரு வேக்கன்சி இருந்து ஒரு அப்ளிகேஷன் கொண்டுபோனால், ஏற்கெனவே ராமச்சந்திரய்யருக்கு ஆய்விட்டதென்றும், கொஞ்ச நாள் காத்திருந்து வேறொரு வேக்கன்சிக்கு அப்ளிக்கேஷன் கொண்டுபோனால் ஏற்கெனவே சுப்பிரமணியய்யருக்கு ஆய்விட்டதென்றும் சொல்வதை நம் கத்தோலிக்குச் சகோதரர் கவனிக்கவேண்டும். ஆனால் இப்படிப் பேசும்பொழுது என்னை சுயராஜ்ஜியம் வேண்டாமென்று சொல்லும் தேசத்துரோகியாக எண்ணிவிடப்படாது. வாழைப்பழம் வேண்டாமென்று சொல்லும் குரங்குண்டா? சுயராஜ்யம் வரவேண்டுமென்பதுதான் எனக்கும் ஆசை. ஆனால் அதற்கு இன்னும் கொஞ்ச நாள் போகவேண்டும். அந்தக் கொஞ்ச நாள் எப்போவென்று கேட்டாலோ:

1. ஒவ்வொரு பள்ளிக்கூடம், ஹைஸ்கூல், காலேஜ் இவைகளில் தற்சமயம் பெரும்பாலும் பிராமணப்பிள்ளைகளே படிக்கிறார்கள். அப்படிக்கில்லாமல் இதர வகுப்புப் பிள்ளைகளும் அந்தந்த வகுப்பின் ஜனத்தொகைக்குத் தக்கபடி அதிகத் தொகையினர் படிக்கவேண்டும்.

2. அப்படிப்பின் அபிவிர்த்தியால் மேற்சொன்ன பற்பல வகுப்பினரின் ஜனத்தொகையின் ஈவுப்படி அவரவர்களும் உத்தியோகங்களை அடையவேண்டும்.

3. அப்படிப்பின் அபிவிர்த்தியால் மேலான ஞானமடைந்து ஜாதி வித்தியாச துவேஷ மாறி, வேத வியாசர் கட்டுப்பாடு அறவே அழிந்து தொலையவேண்டும்.

இவைகள் சம்பவித்ததன்மேல் நமது காருண்ய கவர்ன்மென்டாரிடம் இந்தியர்களாகிய நாமெல்லோரும் சுயராஜ்ஜியம் கேட்கலாம். அப்போது கவர்ன்மெண்டார் யாதொரு ஆக்ஷேபனையும் சொல்லாமல் உடனே கொடுத்துவிடுவார்கள். இதைப்பற்றி எவரும் சந்தேகிக்கவேண்டியதில்லை. இது நிற்க, இன்னொரு விஷயமும் கவனித்தல்வேண்டும். ஒரே கண்டமா.

கிய ஐரோப்பாவில் பிறந்து வளர்ந்து சாப்பாடு, சம்பந்தம், நிறம், நடை, உடை, பாவனை முதலியவைகளில் யாதொரு வித்தியாசமுமின்றி, பாஷை ஒன்றைமட்டும் வேறாகக்கொண்டிருக்கும், இங்கிலாண்டு, பிரான்ஸ், ருஷியா, ஜர்மனி முதலிய தேசங்கள் ஒவ்வொன்றும் தன் தன் சுய ஜாதி சுயநலம் என்பதினிமித்தம் விகர்ப்பங்கொண்டு, பார்த்தீர்களா சென்ற 5 வருடங்களாக ஒன்றுக்கொன்று குத்தும், வெட்டும், கொலையுமாக நின்று குவிந்த மானிடப் பிரேதங்களுக்குக் கணக்குண்டோ? யோசிக்கும்பொழுதே இருதயம் பதைக்கிறதே. இப்படி நடந்த மகா யுத்தத்தை நம் சகோதரர் அறியாதவரல்லர். அப்படியிருக்க, ஒன்றுக்கொன்று ஒவ்வாத தொள்ளாயிரம் ஜாதியையும், பல்லாயிரம் பாஷையையுங்கொண்ட நம்மிந்தியா தேசத்திற்கு சுய ஆட்சி செல்லுமா? எந்த ஜாதி ஆள எந்த ஜாதி பொறுக்கும்? மிஸ்டர் காந்தி நல்ல யோசனை செய்துவிட்டார். முதலில் மகாத்மா ஜாதிகளை ஒற்றுமைப்படுத்தி, ஜாதித் துவேஷம் அற்றுப் போகச்செய்யட்டும். எல்லோரும் காந்தியாகி ஒரே காந்தியாய் ஜொலிக்கட்டும். அப்போது கத்தோலிக்கராகிய நாமும் அந்த ஜாதியில் கலந்துகொள்ளலாம். நாம் கேட்டு அடையவேண்டிய காரியங்களை மரியாதையோடும், உண்மையான காரணங்களோடும், நமது மாக்ஷிமைதங்கிய கவர்ன்மெண்டாரிடம் சொல்லிக் காரியத்தைப் பெற்றுக்கொள்ளவேணுமே தவிர, காந்தி சொல்லுகிறாரென்று நாமும் அவருடைய கட்சியில் கலந்துகொண்டு, கத்தோலிக்கு கிறீஸ்துவர்களுடைய பாரம்பரை போதகத்துக்கு விரோதமாய் நடந்து, இராஜவிஸ்வாசமென்னும் நற்குணத்தை இழந்து கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுக்குக் கெட்ட பெயர் வராவண்ணம் எச்சரிக்கையாயிருக்கவேண்டுமென்பதை நம் கத்தோலிக்குச் சகோதரர்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன்.

S. M. Casimir.

ஹாஸ்ய விலாசம்.

உண்மையும் ஒளியும் என்றும் மங்காது பிரகாசிக்கும் உன்னத சத்திய மறையை நாளடைவில் இந்துக்களில் அநேகர் எற்கெனவே தழுவியுள்ளதையும், தழுவுகின்றதையும், இனித் தழுவ ஆயத்தமாயிருப்பதையும் மிகவும் கிரய்மகாரத்துடன் நோக்கின ஒரு இந்து பத்திரிகைக்கு தலைக்குமேலே கோபம் பிறந்துவிட்டது போலும்.—ஏனெனில், "இந்துக்களே! உஷார் உஷார்" என அவர்களுக்கு எச்சரிக்கை செய்வதோடு "இந்தியா முழுவதுமே கிறீஸ்துமார்க்கமாய் மாறிவிடும்; இனியும் நாம் பாராமுகமாயிருப்பின் நம் வேதத்திற்குப் பங்கம் நேரிட்டுவிடும். ஆதலால், இந்துக்கள் எல்லோரும் கச்சையைக் கட்டிக்கொண்டு பிரசாரம் செய்ய வாருங்கள்" என அலறி சீறி ஓலமிட்ட ஷை பத்திரிகைக்கு, கத்தோலிக்க நண்பரொருவர் மறுப்புரையொன்று தக்க கோட்பாட்டோடு எழுதியனுப்ப அப்பத்திராதிபர் நவீன யுக்திகொண்டு, "ஜாதி வித்தியாஸமின்றி எல்லா வகுப்பினரையும் நமது இந்து ஆலயங்களில் விட்டால் கிறீஸ்துமார்க்கம் இனி தலை எடுக்காது என்பது எமது கொள்கை" என அபிப்பிராயப்பட்டார். இதைக் கேட்ட நண்பரொருவர் இதென்ன விந்தை? இந்து மத தர்மத்திற்கு இது நேர்விரோதமாயிற்றே என்று பத்திராதிபர் அபிப்பிராயத்தைக் கண்டித்து அவ்வாறு ஜாதி வித்தியாஸமின்றிக் கோவிலில் சமமாக எல்லோரையும் பாவித்தால், புதிய சைவம், பழைய சைவம், மற்றுமுள்ள சந்தேக பிரசன்னங்கள் தோன்றி எல்லாம் பொய்யாகிவிடுமென்று எழுதவே, அவர் சிக்கி முக்கி தீர்க்க ஆலோசித்துப்—போட்டார் ஓர் எம்டன் குண்டு!

அதுதான் "எம்மதமும் சம்மத"மே எனுங் குண்டு. இம்மட்டிலாவது தப்பினரா பத்திராதிபர்? இல்லை. பாவம் என்ன செய்வார். திருச்சி, கத்தோலிக்க நண்பரொருவர் "ஏன் காணும், கிறீஸ்து மார்க்கமாய் இந்தியா முழுதும் மாறிவிடுமென்றும், இந்துக்களே உஷார் என்றும் எச்சரிக்கை செய்த நீர் எம்மதமும் சம்மதமென்கிறீரே இதென்ன ஸால்ஜாப்பு" என்றும், நீதியும் உண்மையும் நிறைந்துலவும் கத்தோலிக்கு மதமே எவ்விடத்தும் எவ்வகுப்பாருக்கும் பொருந்தியதென்றும், அதுவே உண்மைக்கு உறைவிடமென்றும் இன்னுமநேக அநுபவமான நீதிகளை ஒருங்கே திரட்டியும் வெகுரசமாய் எழுதி அனுப்பினர். பார்த்தார் பத்திராதிபர் சீ! சீ! சனியன் வந்து சங்கடத்தில் புகுந்தாப்போல் நம் பிழைப்புக்கே மோசமாகிவிடுமென்றெண்ணி, அதைப் பிரசுரியாமல் மழுப்பிவிட்டார். ஷை பத்திராதிபரைப்போல் நமது சத்திய மறைக்கு விரோதமாக எழுதுபவர்களையும் பேசுபவர்களையும், அப்போதுக்கப்போது தக்கபடி தாக்கி அன்னோர்களின் வாயை அடக்குவது நம் கத்தோலிக்குச் சகோதரர்களின் கடமையாகும்.

வைப்பார் வாசி.

சங். ஏ. ஆர். ஜான் சுவாமியாரவர்களின் வெள்ளி ஜூபிலி நிதி.

"நல்ல ஆயன்" பத்திரிகாசிரியராகிய சங். ஏ. ஆர். ஜான் சுவாமிகளின் வெள்ளி ஜூபிலி மகோற்சவகாலத்தில், அக் குருதேசிகருக்கு "நல்ல ஆயன்" சந்தாதாரர்களால் ஒரு பணப்பை காணிக்கையாக சமர்ப்பிக்கவேண்டுமென்ற பிரேரணையை ஆதரித்து, அதற்காகப் பின்கண்ட நன்கொடைகளை அனுப்பிவைத்த நண்பர்களுக்கு ஷை ஜூபிலி கமிட்டியார் தங்கள் மனமார்ந்த நன்றியறிந்த வந்தனஞ் செலுத்துகிறார்கள். இவர்களைப் போல் இன்னும் மற்ற நண்பர்களும் தங்களால் கூடிய தொகைகளை அனுப்பி, கோரிய காரியம் இனிது முடியுமாறு உதவிசெய்வார்களெனப் பெரிதும் நம்பப்படுகிறது.

☞ அல்லாமலும் இந்த வெள்ளி ஜூபிலி மகோற்சவ காலத்தில் பாலோடு பழம் சேர்ந்ததுபோல நமது பத்திராதிபரவர்களுக்கு பரிசுத்த பாப்பானவரால் மோசிஞ்ஞோர் என்னும் கவுரதா பட்டம் அளிக்கப்பெற்றதை நாமெல்லோரும் சந்தோஷத்துடனறிந்து ஜூபிலி வைபவத்தின்போது இக்கவுரதா பட்டத்திநிமித்தமும் சுவாமியவர்களை சன்மானிப்போமாக.

நன்கொடையாளர் ஒவ்வொருவருக்கும் ரசீது அனுப்புவது சிரம சாத்தியமாவதோடு, அனுவசிய தபாற் செலவுமாகிறபடியால் அப்படிச்செய்யாமல் நன்கொடையாளர் நாமதேயமும், தொகையும் இங்கு பிரசுரிக்கப்படுகின்றன. தொகை அனுப்பியவர்கள் நாமதேயமும் தொகையும் இதில் காணாதேபோனால், அதைப்பற்றிய தகவல் தயவுசெய்து தெரிவித்தால் உடனே அதைப்பற்றி விசாரணைசெய்து விவரம் தெரிவிக்கப்படும்.

2/74, பிராட்வே, மதராஸ்,
28—3—21.

எம். பி. குழந்தைசாமி,
பொக்கிஷதாரன்.

15 ரூபாய்.—Mr. C. S. ஆரோக்கியசாமி, வாசிர்ஸ்டன்போர்ஸ்.

5½ ரூபாய்.—Mr. F. அந்தோனிதாஸ், கல்கத்தா.

5 ரூபாய்.—Rev. Fr. P. தாமஸ், நுங்கம்பாக்கம்; Mr. J. S. பிரான்சிஸ், கல்கத்தா; Rev. Fr. A. T. அந்தோனியோ, உறையூர்; Mr. M. பிரான்சிஸ், இரங்கூன்; Rev. Fr. X. செல்வம் S.J., மார்கில்; Mr. J. B. டிக்ரூஸ் I.M.D., டேரா இஸ்மேல்கான்; Rev. Fr. T. ரோச் S.J., பூங்காவனை சபைத் தலைவர், இரக்ஷகர் கோவில், திருச்சிறாப்பள்ளி; Messrs. A. அலெக்சாண்டர், இரங்கூன்; மிராந்தா அண்ட் சன்ஸ், அநுராதபுரா; ஜோசப் பாய்வா, மணப்பாடு; S. T. A. அந்தேனி, தாதாதிரியா; A. அந்தோனி பிள்ளை, பாக்காலா; X. P. பாய்வா, கொழும்பு; Dr. K. G. M. நாயுடு, சாகேய்ங்.

3 ரூ. 11 அணா.—Mr. A. சவரிமுத்து பிள்ளை, பாலக்கரை; A. M. பிரகாசம், பாகன் செரேய்.

3 ரூபாய்.—Mr. S. S. மரியான் பிள்ளை, இரங்கூன்; Rev. Fr. M. I. அருள்நாதர், கரையூர்; Messrs. C. S. செபாஸ்டியன், கொரமாண்டல்; A. S. ராட்ரிக்ஸ் அண்ட் கம்பெனி, மதராஸ்; C. செலஸ்டைன், பஸ்ரா.

2 ரூபாய்.—Messrs. D. A. டேவிட் பிரான்சிஸ், காலாவ்; R. அருளானந்தம், ஜால்னா; B. பாப்பைய்ய நாயுடு, பன்னூர்; அகுஸ்தீன் மொரேஸ், தூத்துக்குடி; T. V. K. வில்லவராயன், கொழும்பு; S. A. ஞானப்பிரகாசம், பாத்தாகுளம்; ராஜ் பெர்னாண்டோ, குயிலன்; P. மார்டின்,

ஜெனரல் ஆஸ்பத்திரி; பிரான்சிஸ் ஜோசப், மேமியா; P. A. அந்தோனி பிள்ளை, மைசூர்; பிரான்சிஸ் அடைக்கலம், தால்வாகெல்லி; A. S. சவரிமுத்துப் பிள்ளை, லுனுகாலா; J. சவரிமுத்துப் பிள்ளை, குன்னூர்; Rev. L. ஞானுசாமி, பாணகுடி; Rev. Mother பீலிக்ஸ், திரிகோணமலை; Messrs. A. M. ஆரோக்கியசாமி, லாகூர்; C. S. S. ராஜன், பஸ்ரா; பொன்னையா பெர்ஞண்டோ, தூத்துக்குடி; A. சைமன், ஐத்ராபாத்; T. ஜோசப், மின்பு; Rev. Fr. T. மைக்கல், தென்காசி; A. டிமாண்டி, மேமியோ; அந்தோனி டேவிட், பூனு; V. பொன்னுசாமி பிள்ளை, இரங்கூன்; Dr. A. M. அழகியசாமி பிள்ளை, பௌரிங்பேட்டை; S. பால் நாயுடு, திருச்சினுப்பள்ளி; S. சுந்தரம் பிள்ளை, சாத்தூர்; N. அந்தோனி பட்ளர், நான்புரா; சஞ்சீவி பிள்ளை, நாஞ்சூர்; Rev. Fr. S. அம்புரோஸ், கொயம்பத்தூர்; அர்ச். சவரியார் வாலிப சங்கத்தார், கோவில்பட்டி.

1½ ரூபாய்.—Messrs. F. மரியான், காலவெல்லவா; S. சூசை கவுண்டர், குன்னூர்; A. மரியசூசை, குவாலாலம்பூர்; A. தைரியநாதன், குவாலாலம்பூர்.

1¼ ரூபாய்.—Mr. M. ராஜேந்திரம். பெங்களூர்; செக்ரடெரி சேர்வன்ட்ஸ் கிளப், பெங்களூர்.

1 ரூபாய்.—Messrs. ச. துரைப் பிள்ளை, வரகநெறி; A. நிக்கொலஸ், மையாளுங்; M. ஆரோக்கியதாஸ், மாங்கான்; Mrs. சாரா அம்மாள், சாகேயங்; Messrs. K. T. நல்லதம்பி முதலியார், வைரவன்குளம்; மைக்கல்பாக்கியம் டிக்ரூஸ், கொளும்பு; A. சூசைநாதன், சாம்பியன் ரீவ்ஸ்; D. M. சவரிநாத முதலியார், கும்பகோணம்; S. சுவாமிநாத பிள்ளை, கரூர்; T. டென்னிஸ் கருக்கேகாடு; J. R. இக்னேஷியஸ், சீரியாம்; Bro. S. M. மரியசெங்கோல், சசத்தாசன்பட்டி; C. S. ஜோசப் பிள்ளை, நரசிங்கபுரம்; M. ஜேக்கப், பாடுல்லா; S. அமிர்தசாமிப் பிள்ளை, கூடலூர்; ஸ்ரீமதி ஜெயவதி அம்மாள், பெங்களூர்; ராவ் சாஹேப் S. ஆரோக்கியசாமி பிள்ளை, தஞ்சாவூர்; Messrs. B. S. சூசை பிள்ளை, மதுரை; மைக்கல் பட்ளர், நீலகிரி; A. ஞானுதிக்கம் பிள்ளை, உதகமண்டலம்; சவரிமுத்து முதலியார், தொரயம்பாளையம்; ஆந்திரே டக்ளஸ், புதுச்சேரி; S. மரியநாயகம் பிள்ளை, ரக்ஷகர்புரம்; S. T. பல்டானோ, வேப்பேரி; P. இராயப்ப ஐயர், மங்களம்; அன்னுனி, தலுக்கெல்லா; C. அந்தோனி, மதுரை; M. S. ஆரோக்கியம் ஆச்சாரி, சிந்தாமணிப்பட்டி; மதலைமுத்து பிள்ளை, உடையார்பட்டி; P. S. துரைசாமி நாய்க்கர், இராயபுரம்; P. அம்புரோஸ பிள்ளை, கோப்பா கடுர்; ச. சவரிராய பிள்ளை, காரங்காடு; சங். மரியசூசை சகோதரர், காரங்காடு; L. துரைசாமி, சேலம்; A. L. அருள்தாஸ், உரிகம்; F. பெரோரா, ஜகநாய்க்பூர்; M. ஆரோக்கியசாமி ஆச்சாரியார், தஞ்சாவூர்; க. செபஸ்தி உடையார், கும்மங்குளம்; மூ. சூ. ஆரோக்கிய உடையார், கும்மங்குளம்; A. F. சாலமோன், புதுச்சேரி; S. பால், மாண்டலே; Dr. D. M. ஞானப்பிரியம், பெங்களூர்; C. மெனிசெஸ், மின்பு; S. V. மாரல், புதுப்பேட்டை; T. M. வளர்நாதன், கொரமாண்டல்; R. அழகியநாத பிள்ளை; D. இராயப்ப பிள்ளை, தூத்துக்குடி; ச. யா. சவரிமுத்து அம்பலம், கடம்பனேந்தல்; அருள் பிள்ளை, மதுரை; M. ஞானப்பிரகாச முதலியார், தூத்துக்குடி; A. அருள்சாமி, இரங்கூன்; A. M. காபிரியேல் அன்ட் சைமன்; M. குரூஸ் மைக்கல், சிலேவ் ஐலன்ட்; G. ஜோசப், கொளும்பு; M. அருளானந்தம் பிள்ளை, எழுமலை; D. A. முத்துசாமி ரெட்டியார், ஆண்டிமடம்; T. ராஜு, உதகமண்டலம்; நல்லைய்ய நாட்டார், பழையகாயல்; R. V. தம்புசாமி பிள்ளை, ஜோலார்பேட்டை; S. G. அந்தோனி; M. E. போர்ஸ்; செபஸ்டிய நாடார், வள்ளம்; Mrs. மேரியம்மாள், பெங்களூர்.

12 அணு.—Messrs. F. S. சவரிநாத பிள்ளை, உதகமண்டலம்; T. A. அருளானந்தம் பிள்ளை, திருவாடி; சங். நொரோனு சுவாமிகள், பெங்களூர்.

10 அணு.—Mr. S. சூசைய்யா ஆரோக்கியம், திண்டுக்கல்.

8 அணு.—Messrs R. C. சின்னதம்பி, கோலப்பலூர்; காஸ்மிர் பிள்ளை, புதுக்கோட்டை; C. S. தேவசகாயம் பிள்ளை, கொயம்பத்தூர்; J. A. சில்வெஸ்டர், இரங்கூன்; கி. அந்தோனிமுத்து வாயிஸ், சுரண்டை; S. பிலோமென் குழந்தைசாமி, முத்தியால்பேட்டை; பொன்னுசாமி பிள்ளை; C. S. மார்டின், பெங்களூர்; P. லுயிஸ் பிள்ளை, பெட்டூடே; M. தேவசகாயம், கோத்தகிரி; D. நிக்கொலாஸ், கோத்தகிரி; A. அடைக்கலம் பிள்ளை, திருச்சினுப்பள்ளி; C. ஆசீர்வாதம், சூசையப்பர் பட்டணம்; V. தேவசகாயம், கொளும்பு; W. L. டையஸ், பாலன்சீனு, D. P. ஜொவாக்கீம் பிள்ளை, பண்டடட்டெருப்பு.

6 அணு.—Mrs. மரிக்கண்ணம்மாள், காரைக்கால்.

4 அணு.—Messrs. A. பாக்கியம் பிள்ளை, தூத்துக்குடி; R. முத்து, கொளும்பு; S. ஐயர்துரை, மைசூர்; பொன்னையா பிள்ளை, தென்காசி.

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

சக்கரவர்த்தி பிறந்த நாள்.—ஜுன்மீ 4-ந் தேதி சக்கரவர்த்தி பிறந்த நாளாகையால் அன்று எல்லா ஆபீசுகளுக்கும் விடுமுறை நாளாகும்.

காட்சிப் படம்.—நமது சத்தியவேதத்தின் பழய ஏற்பாட்டிலுள்ள சரித்திரங்களை விளக்கும் முப்பதினுயிரம் அடி நீளமுள்ள சினிமாக் காட்சிப் படம் ஒன்று இப்பொழுது அமெரிக்காவில் சித்தமாயிருக்கிறது.

நகரும் மலை.—தட்சண வெல்ஸில் ரிம்னிப் பள்ளத்தாக்கில் ட்ரோட்ரிப்வன்வச் என்ற விநோதமான பெயருள்ள இடத்தில், நகரும் மலையொன்று இருக்கிறதாம்; அது நாளடைவில் கட்டிடங்களை அழித்துவருகிறதாம்.

வரக்கூடாது.—ஜெர்மனியர்கள் இந்தியாவுக்கு வராமல் 5 வருஷம்வரை விலக்கிவைக்கவேண்டுமென்று ஸ்ரீ மான் டேகு முடிவுசெய்ததுபற்றி ஜெர்மன் பத்திரிகைகள் கோபித்து எழுதுகின்றன.

ஏகாதிபத்திய மகாநாடு.—ஜுன் மாதத்தில் இங்கிலாந்தில் கூடப்போகும் ஏகாதிபத்திய மகா நாட்டின் இந்தியப் பிரதிநிதிகளாக ஸ்ரீமான் ஸ்ரீநிவாச சாஸ்திரியாரும், கச்மகாராஜாவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஜனசங்கை.—சமீபத்தில் ஜனசங்கை எடுத்ததின் பயனாக நிர்ணயமான இந்திய மொத்த ஜனம் சுதேச சமஸ்தானங்களுள்பட முப்பத்தொரு கோடியே தொண்ணூறு லட்சமென்று தெரியவருகிறது. முப்பத்து முக்கோடிக்கு ஒரு கோடி பத்து லட்சம் குறைந்துபோயிற்று.

கண்கோளத்தில் பல் வரிசை.—பாரிசில் ஒரு ஸ்திரீயின் கண் கோளத்தில் வாயிலிருக்கும் பல் வரிசையைப்போல் ஒரு வரிசைப் பல்லிருக்கின்றதாம். இந்தப் பல் வரிசை கண்ணைக் கோளத்தினின்றும் அப்புறப்படுத்திக் கண்மணியை யழித்துவிடப் பார்க்கின்றதாம். இந்த அபூர்வத்தைக் கண்டு டாக்டர்கள் ஆச்சரியப்படுகின்றார்களாம்.

நல்ல தீர்மானம்.—சந்திரபுரியில் வசிக்கும் கூலிகள் எல்லோரும் தங்களுக்குள் யாரும் கள்ளு சாராயம் முதலியவைகளை குடிக்கக்கூடாதென்று தீர்மானித்துவிட்டார்கள். இத்தீர்மானத்திற்கு விரோதமாய் எவனாவது நடந்தால் அவனுடைய ஒரு பக்கத்து மீசையும் தாடியும் தலைமயிரும் சிறைக்கப்படவேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

குருடர்கள் படிக்கலாம்.—பிரஞ்சுக்காரரான ஸ்ரீ பர்ஸியர்டி அபே என்பவர் சாதாரண அச்செழுத்துக்களைக் குருடர்கள் படிக்கும்படி உதவிசெய்யும் ஒரு கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார். இதனை கிளாஸ்கோ பார்ஸ்டிரட் கம்பனியார் செய்துவருகின்றனர். இதன் பெயர் ஆப்டோ போன்.

செயற்கைப் பால்.—போர்டு மோட்டார் வண்டிகள் செய்யும் பெரிய தொழிற்சாலையின் தலைவரான ஸ்ரீ ஹென்றி போர்டு என்ற அமெரிக்கக் கோடீசுரர் பசுக்கள் உலகத்திற்கு அவசியமில்லாத காலம் விரைவில் வந்துவிடுமென்று கூறுகிறார். பசுக்கள் உணவாகக் கொள்ளும் புற்களைக்கொண்டே பால் உற்பத்திசெய்துவிடலாமென்றும், அது பசும்பாலைவிடச் சிறந்ததாயிருக்குமென்றும், பசும்பாலில் உள்ள தீமைகள் அதிலிராவென்றும் கூறுகிறார்.

மதவாரி ஜனக்கணிதம்.—உலகத்திலுள்ள ஜனங்களின் தொகையை மதவாரியாக பின்வருமாறு ஒரு சாஸ்திரி கணித்திருக்கிறார்.

கிறீஸ்துவர்கள்	...	43,49,40,000
கன்பூஷியர்கள்	...	30,00,00,000
இந்துக்கள்	...	21,40,0,0000
மகம்மதியர்	...	17,52,90,000
புத்தமதத்தவர்கள்	...	12,10,00,000
யூதர்கள்	...	10,08,60,000
இதர மதத்தினர்	...	1,98,420

மாஜி ஜேர்மன் சக்ரவர்த்தினி.—ஜெர்மன் யுத்தத்தின்பயனாய் தன் சொந்த தேசத்தைவிட்டு ஹாலண்டில் அடைக்கலம் புகுந்து வசித்துவரும் மாஜி ஜெர்மன் சக்ரவர்த்தினியாகிய கெய்சரின் மனைவியார் காலஞ்சென்றுவிட்டார். அவருடைய பிரேதத்தை அடக்கஞ்செய்த சடங்கு மிக ஆடம்பரமாக நடத்தப்பட்டதென்றும், பழய ஜெர்மன் கவர்ண்மென்ட் உத்தியோகஸ்தர்

கள் எல்லோரும் அதற்கு விஜயஞ்செய்து தங்கள் அநுதாபத்தைக் காட்டினார்களென்றுஞ் சொல்லப்படுகிறது.

இந்தியாவுக்கும் பாகம்.—ஜெர்மனியிடமிருந்து வாங்கப்படும் நஷ்ட ஈட்டுத்தொகையில் ஒரு பங்கு இந்தியாவுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று, இந்தியா சட்ட சபையில் வாதிக்கப்பட்டபோது, கவர்ண்மெண்டார் இதைப்பற்றி யோசனைசெய்து, விரோதிகளிடமிருந்து இந்தியாவுக்காக 80,75,000 வாங்கும்படியாக முடிவு செய்திருக்கிறார்களென்று கவர்ண்மெண்ட் தரப்பில் பதிலளிக்கப்பட்டது. யுத்தத்தின்போது, பணத்தையும் மனிதரையும், மற்றசாமக் கிரியைகளையும் ஏராளமாய்க் கொடுத்துதவின இந்தியாவுக்கு ஷை தொகை சற்றும் ஈடாகாதென்பது வெளிப்படை. ஆயினும் வந்த வரையிலும் லாபமன்றோ?

போல்ஷ்விக்கர்களின் சூழ்ச்சி.—ரஷியாவிலுள்ள தேசியக்கலகக்காரர்களான, போல்ஷ்விக்கர்கள் ஆப்கானிஸ்தானத்தோடு ரகஸ்யமான வியவகாரங்கள் வைத்திருப்பதாகவும், சமீபத்தில் ஷையாரின் தலைவரான "டிராட்ஸ்கி" என்பவர் அங்கு சென்றிருப்பதாகவும், "மார்னிங் போஸ்டு" பத்திரிகையிலிருந்து தெரியவருகிறது. ருஷ்ய துர்க்கிஸ்தானத்தில் பலத்த சண்டை நடந்துவருவதாயும் சொல்லப்படுகிறது.

பர்மாவும் இந்தியாவும்.—பர்மா அரசியல் சீர்திருத்த விஷயமாய் கவனஞ் செலுத்தப்போகும் கூட்டுக்கமிட்டியார், இந்தியாவினின்றும் பர்மாவை வேறுபடுத்தி, இலங்கையிலிருக்கிறமாதிரி ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதபடி தனிக் கவர்ண்மெண்டாகச் செய்துவிடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. பர்மாவைத் தனிப்படுத்திவிடவேண்டுமென்ற எண்ணமுள்ள லார்டு சபை மெம்பர்களிற் சிலருடைய செல்வாக்குள்ள முயற்சியால் இப்பிரச்னை கூட்டுக்கமிட்டியாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

ஓர் அபூர்வக் கருவி.—அடைகாக்கவைக்காமலே கோழிமுட்டை குஞ்சு பொரிக்கச்செய்யும் ஒரு யந்திரம் இருப்பது எல்லோருக்கும் தெரிந்த காரியம். அவ்வாறே மனிதர் குழந்தைகளுக்கும் தாய் உஷ்ணம்போல் உஷ்ணம் கொடுத்து அவைகளை உயிர்வாழச்செய்வதற்கு ஏற்ற புதிய கருவியொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். இங்கிலாந்திலுள்ள பர்த்தலோமியோ என்னும் ஆஸ்பத்திரியில் ஆறுமாதக் கருப்பவதியாகிய ஒரு ஸ்திரீ இறந்துவிட, உடனே அக்குழந்தையை வயிற்றியிலிருந்து எடுத்து ஷை கருவியைக்கொண்டு அதற்கு வேண்டிய உஷ்ணங்கொடுத்து அதைக் காப்பாற்றி வைத்திருக்கிறார்களாம்.

சென்னைச் சட்ட சபை.—1921–22-வது வருஷ வரவு செலவு திட்டத்தில் சுமார் பதினைந்து லட்சம் ரூபாய்ச் செலவைச் சபையார் குறைத்துவிட்டார்கள். இந்த சபைக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும் ஓட் சுதந்திரம் ஸ்திரீகளுக்கும் கொடுக்கப்படவேண்டுமென்று தீர்மானமாயிற்று. நியாய விசாரணை இலாகாவென்னும் கவர்ண்மெண்ட் ஜூடிஷியல் ஸெர்விசுக்கு இது முதல் ஐந்து வருஷங்கள்மட்டும் பிராமணரல்லாத இந்துக்கள் மகம்மதியர் சுதேசக் கிறிஸ்துவ வக்கீல்களிலிருந்து நேரே நியமிக்கப்படவேண்டுமென்னும் ஒரு தீர்மானமும் பெரும்பாலரால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேறிற்று.

ஆரம்பக் கல்வி ஆக்ட்.—1921-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து 1920-ம் வருஷத்து ஆரம்பக் கல்வி ஆக்ட் அமுலுக்கு வருமென்று கல்வி மந்திரி தெரிவித்திருக்கிறார். இராஜதானியில் 15 ஜில்லாக்களில் ஜில்லா கல்விச் சபைகள் ஏற்படுத்தும்படியாகவும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சபைக்கு உத்தியோகஸ்தர்கள் டிஸ்டிரிக்ட் கலெக்டர் பள்ளிக்கூடங்களின் இன்ஸ்பெக்டர் ஜில்லா போர்டின் பிரசிடெண்டு ஆகிய மூவர்களும் லோகல் பாடியாரால் தெரிந்தெடுத்து கவர்ண்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட மூவர்களும் ஆக ஆறு பேர்கள். ஐந்து ஜில்லா சபைகள் பிரசிடெண்டுகளைத் தாங்களே நியமித்துக்கொள்ளும்படி அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

ஐயர்லாந்து அலங்கோலம்.—ஐயர்லாந்தில் சென்ற சிலகாலமாய் நடந்துவரும் அலங்கோலத்தை அடக்கி சமாதானத்தை நிலைநிறுத்தும்பொருட்டு பார்லிமெண்டாரால் புதிய சட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் புது சட்டத்தின்படி லார்டு எட்மண்ட் டால்பட் பிரபு ஐயர்லாந்துக்கு முதல் இராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் கத்தோலிக்கராவர். இவர் நன்முயற்சியால், கத்தோலிக்கு நாடாகிய ஐயர்லாந்தில் நித்திய சமாதானம் ஏற்படுமென நம்புகிறோம்.

ஸ்திரீகளுக்கு ஓட்டுச் சுதந்தரம்.—ஸ்திரீகளுக்கு வாக்குச் சீட்டுரிமையுண்டென்று சென்னைச் சட்ட சபையில் தீர்மானிக்கப்பட்டது. இது பொதுவாய் நாகரீக முற்போக்கை விரும்புவோர் அனைவருக்கும் சந்தோஷத்துக்குரிய செய்தியாகும். ஆனால் பெண்களை அடிமைகளைப்போலவும் மிருகங்களைப்போலவும் பாவித்து நடத்திவரும் கர்நாடகக் கொள்கை உடையவர்களுக்கோ பெருங் கஸ்தியை விளைவிக்குமென்பதிற் சந்தேகமில்லை. இத்தகையார் ஷை தீர்மானஞ் செய்தவர்களின்பேரில் தீராக் கோபங் கொண்டுவிட்டிருப்பார். நமக்குள்ளும் இத்தகையினோர் இல்லாமற்போகவில்லை. இவர்கள் முற்போக்கடைவது எந்நாளோ!

ரௌலட் சட்டம்.—ரௌலட் சட்டத்தையும், அச்சுச் சட்டத்தையும், பிரிடிஷ் மந்திரி சபையார் ரத்துசெய்துவிடத் தீர்மானித்துவிட்டனர் எனத் தான் சொல்லக்கூடிய நிலைமையிலிருப்பதாக, கல்கத்தாவிலுள்ள "தியானிக் வசுமதி" என்ற தேசபாஷைப் பத்திரிகை எழுதுகிறது. இது எவ்வளவு தூரம் மெய் என்பது வரவரத் தெரியும். ஆயினும், வட இந்தியாவில் நிகழ்ந்துவரும், ஒத்துழையாமைப் பிரசாரங் காரணமாயும், அராஜக ரூட்சி காரணமாயும் அநேகர் சிறைப்படுத்தப்பட்டு, தண்டிக்கப்பட்டுவருவதைப் பார்த்தால் ரௌலட் சட்டம் முன்னிருந்ததைவிட இப்போதுதான் அதிகமாகப் பிரயோகப்படுத்தப்பட்டுவருகிறதென்று திட்டமாய்ச் சொல்லலாம்.

சுயராஜ்ய வித்யாலயம்.—சுயராஜ்ய வித்தியாலயம் என்றால் சுயராஜ்ய கொள்கையுடையோரால், சிறுவர்களுக்குப் பொதுக் கல்வி கற்பிக்கும் பள்ளிக்கூடம் என்று சாதாரணமாய் அர்த்தங்கொள்ளலாம். ஆனால், நாம் இப்போது குறிப்பிடும் வித்யாலயம், அப்படிப்பட்டதல்ல. இந்தியர் சுயராஜ்யம் அடைவதற்கான வழிவகைகளை முறையாய்ப் போதிக்கும் பாடசாலையாகும். இத்தகைய கல்விச்சாலையொன்று மலையாள ஜில்லாவைச்சேர்ந்த கள்ளிக்கோட்டையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் தேர்ச்சி பெற்ற 60 மாணவர்கள் கிராமாந்தரங்களில் சுயராஜ்யப் பிரசாரஞ்செய்ய அனுப்பப்பட்டனராம். இதில், 20, 20, பேர்களாகச் சேர்க்கப்பட்டு, 15 நாள் போதிக்கப்பட்ட பிறகு ஷை பிரசார வேலைக்கு அனுப்பப்படுகின்றனராம். என்னே தீவிர முயற்சி! சுயராஜ்யம் கிட்டிவந்துவிட்டது!!

தென்னாப்பிரிக்கா இந்தியரும், இந்தியா கவர்ண்மேண்டும்.—நெட்டால் இந்தியர் நிலம் வாங்கும் விஷயமாய் இன்னும் புதிய நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தவேண்டுமென கமிட்டியார் சிபார்சு செய்திருப்பதை உடனே கண்டிக்கவேண்டுமென இந்தியா கவர்ண்மெண்டார் இந்தியா மந்திரிக்குத் தந்தி கொடுத்திருப்பதோடு, இச்சிபார்சு, ஸ்மட்ஸ், காந்தி ஒப்பந்தத்திற்கு ஏற்றதாக இல்லையென்றும், இந்தியர்கள் எந்த நிபந்தனையின்மேல் ஆப்ரிக்காவுக்குள் அனுப்பப்பட்டார்களோ அந்த நிபந்தனைக்கும் விரோதமாயிருக்கின்றதென்றும் கவர்ண்மெண்டார் கூறியிருக்கின்றனர். ஏகாதிபத்திய மகாநாட்டில் இந்தியரின் நிலைமையைப்பற்றி முடிவாக ஏற்பாடு செய்யப்படும்வரையில் ஷை சிபார்சுகளை யநுசரித்து யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமலிருக்கும்படி, யூனியன் கவர்ண்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும் இந்தியா கவர்ண்மெண்டார் இந்தியா மந்திரியைக் கேட்டிருக்கின்றனர். இவ்வாறு ஏழை இந்தியர்மட்டில் நியாயம் நடக்கவேண்டுமென்று நமது கவர்ண்மெண்டார் கங்கணங் கட்டியிருப்பது பாராட்டத்தக்கது. இதன்பயனாக, நெட்டாலிலிருக்கும் நமது இந்திய சகோதரர்களுக்கு சௌகரியங் கிடைக்கவேண்டுமெனப் பெரிதும் விரும்புகிறோம்.

மிஸ்டர் காந்தி.—தன் மனோரதமாகிய சுயராஜ்யமடைவதற்கு மூன்று காரியங்கள் ஆகவேண்டுமென்கிறார். (1) ஒரு கோடி ஜனங்கள் காங்கிரசைச் சேரவேண்டும் (2) ஒரு கோடி ரூபாய் வசூலாகவேண்டும் (3) நூல் நூற்கும் ராட்டினங்கள் 20 லட்சம் வீடுகளில் வேலை செய்யவேண்டும். இம்மூன்று காரியங்களும் சித்தியான அன்றே சுயராஜ்யம் கிடைத்துவிடுமாம். ஒரு கோடி ரூபாய் வசூலிப்பது பெருங் காரியமல்ல.

ஆனால் மற்ற இரண்டு காரியங்களையும் அடைவது துர்லபம். பல பிரிவினைகள், பல கொள்கைகள், பல மதங்கள் பரவியுள்ள இந்தியாவில் ஒரு கோடி ஜனம் ஒருமிப்பதெங்ஙனம்? சமீபத்தில் எடுத்த ஜனக்கணக்கின்படி, இந்தியா முழுவதிலும் 31 கோடி ஜனமே இருக்கிறார்கள். நூற்றில் 30 பேர் காங்கிரசைச் சேர்வார்களா? மேலும், மேல்நாட்டு நாகரிகம் எங்கும்பரவி வேரூன்றிருக்கையில், 20 லட்சம் இராட்டிணங்களில் வேலைசெய்ய அத்தனை ஸ்திரீகள் முன்வருவார்களா? வந்தாலும் அப்படிச் செய்யப்படும் மட்டித்துணிகளை எத்தனை பேர் வாங்குவார்கள்? இது வீண் மனோரதம்! ஒரு மயில் அகலமுள்ளவாயும், அரை பர்லாங்கு நீளமுள்ள பல்லுங் கிடைத்தால், அதோ எதிரில் உள்ள மலையை அப்படியே விழுங்கிவிடுவேன் என்றவன் கதைக்கு ஒப்பாயிருக்கிறது காந்தியின் கூற்று.

ரெயில்வே பிரயாண சௌகரியம்.—ரெயில்வண்டியானது வழியில் அந்தந்த ஸ்டேஷன்களிலும் நின்று, பிரயாணிகளை ஏற்றிக்கொள்ளவும் இறக்கிவிடவும்வேண்டியிருப்பதால், அதிக காலதாமதம் ஏற்படுகிறதல்லவோ? அப்படிக்கில்லாமல் சென்னையில் புறப்படும் வண்டி ஒரே மூச்சாய் குறித்த ஊராகிய பம்பாயோ, கல்கத்தாவோ போய்ச் சேர்வதற்கும், அங்கங்கே பிரயாணிகள் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் தடங்கலில்லாதபடிக்கு ஒரு புதிய யத்தனம் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். அதாவது (Moveable Platform) வண்டியோடே ஓடும்படிக்கான பிளாட்பாரம் (பிரயாணிகள் நிற்கும் மேடை) ஒன்றை சித்தப்படுத்தி அதில் பிரயாணிகளை முன்னதாகவே தயாராய் நிற்கச்செய்திருந்து, ரெயில்வண்டி ஸ்டேஷனருகே வரும்போது அதில் இந்த பிளாட்பாரத்தை மாட்டிவிடுகிறது. வண்டியும் பிளாட்பாரமும் ஓடிக்கொண்டேயிருக்கையில் பிளாட்பாரத்திலுள்ள ஜனங்களெல்லாம் சுலபமாய் ரெயில் வண்டிக்குள் ஏறிவிட இறங்குகிறவர்களெல்லாம் இறங்கினபிறகு ஷை பிளாட்பாரத்தை பிரித்துவிடுகிறது. இதனால் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு அதிசீக்கிரத்தில் போய்விடலாமன்றோ? இந்த மெத்த சௌகரியமான ஏற்பாடு கூடியசீக்கிரத்தில் அநுஷ்டானத்துக்கு வருமென்று நம்பப்படுகிறது.

ஸ்ரீமான் எம். இரத்தினசாமி முதலியார்.—இவர் இங்கிலாந்து சென்று, பாரிஸ்டர் பரீட்சையும், எம். ஏ. பரீட்சையும் கொடுத்தவர். சென்னை இராயபுரி வாசி. மகா புத்திமான். சமீபத்தில் "காத்தலிக் வாட்ச்மன்" பத்திரிகையுடன் கலந்து "காத்தலிக் லீடர்" எனும் புது நாமம் பூண்டுகொண்ட வாராந்தப் பத்திரிகையாகிய "ஸ்டாண்டர்டு" என்னும் ஆங்கிலப் பத்திரிகையை வெகு சாமர்த்தியமாய் நடத்திப் பேரெடுத்த பத்திராதிபர். சென்னை பச்சையப்பன் காலேஜில் சமீபகாலம்வரையில் "சரித்திர போதகாசிரிய"ராயிருந்த இக்கல்விமான் இப்போது, ஷை பச்சையப்பன் காலேஜிக்கே "பிரின்சிபால்" என்னும் தலைமைப் போதகாசிரியராக நியமிக்கப்பட்டாரெனக் கேள்வியுற்றுப் பெரிதும் சந்தோஷமடையலானோம். மேன்மையும், கௌரவமும் பொருந்திய இந்தப் பதவிக்கு இவர் முழுதும் பாத்திரவான் என்பதை சகலரும் ஒப்புக்கொள்வார்கள். இந்தப் பச்சையப்பன் காலேஜிக்கு இதுவரையில் நியமிக்கப்பட்டுவந்த பிரின்சிபால்கள் யாவரும் ஐரோப்பியர்களே இவ்வுந்நதப் பதவிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட இந்தியர் இவரே முதல்வராவர். இந்த நியமனம் பொதுவாய் இந்தியருக்கும், சிறப்பாய் கத்தோலிக்கு இந்தியராகிய நமக்கும் பெருமையை உண்டாக்கிவிட்டது என்பதிற் சந்தேகமில்லை. இக்கனவானுக்கு நாம் நமது மனமார சுபசோபன வாழ்த்து கூறுகிறோம்.

பார்லிமேன்டுக் கூட்டுக்கமிட்டி.—இந்திய ராஜாங்க விஷயமாய் நடத்தப்படும் சகல விஷயங்களின்பேரிலும், சட்டம் முதலான ஏற்பாடுகளின்பேரிலும், விஷயா விஷயங்களைத் தீர்க்காலோசித்து, அறிக்கை செய்வதற்காக காமன்ஸ் சபை மெம்பர்களிற் சிலரும், லார்டு சபை மெம்பர்களிற் சிலருமாகச் சேர்த்துக் கூட்டுக்கமிட்டியென்றொரு நிரந்தரக்கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருப்பது நமது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இந்தக் கமிட்டியார், கமிட்டி நடவடிக்கை முறைகளைப்பற்றி ஒரு தீர்மானம் வெளியிட்டிருக்கிறார்கள் :—அதன்படி (1) பார்லிமென்டாரால் ஆஜர்ப்படுத்தப்படும் எந்த மசோதாவையும் பரிசீலனை செய்து அதன்பேரில் ரிப்போர்ட்டு அனுப்புவது (2) இந்தியா மந்திரியை அழைத்து இன்னது தான் செய்யவேண்டுமென்று அவருக்கு அறிவிப்பது (3) பொது நன்மைக்கு விரோதமில்லாமலும் முக்கியமாயுமுள்ள இந்தியாவைப்பற்றிய பிரசனைகள் பார்லிமென்ட் விஷய அட்டவணையிலிருந்தால் அவைகளைப் பற்றியும் ரிப்போர்ட்டு அனுப்புதல் (4) ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி சாட்சி விசாரணை செய்தல் அல்லது தஸ்தாவேசுகளை ஆஜர்ப்படுத்தச்செய்தல். அவ்வாறு விசாரணைசெய்தபின் தங்களுக்குண்டாகும் அபிப்பிராயங்களை இந்தியா மந்திரிக்காவது கவர்ண்மென்டு இலாக்காக்களுக்காவது இரகசியமாய் அறிக்கை செய்வது முதலியன ஷை நிரந்தரக் கூட்டுக்கமிட்டியின் வேலையாகும்.

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.—இச்சங்கத்தின் 23-வது வருஷாந்தரப் பொதுக்கூட்டம் சென்ற மாதம் 3-ந் தேதி, சென்னை, கபிரியேல் பாடசாலையில், ம-ா-ா-ஸ்ரீ எஸ். அற்புதசாமி உடையார் பி.ஏ., எல்.டி. அவர்கள் அக்கிராசனத்தில் இனிது நிறைவேறியது. இச்சங்கம் ஆரம்பமானதுமுதல் அதன் வருஷாந்தரக் கூட்டங்களில் மேற்றிராணிமார்களும், குருக்களுமே அக்கிராசனம் வகித்து வந்தார்கள். குருப்பிரசாதிகளல்லாத மற்றக் கிறீஸ்துவர்களில் ஒருவர் ஷை கூட்டங்களில் அக்கிராசனம் வகித்தது இதுவே முதல் தடவையாகும். ஷை கூட்டத்தில் கௌரவ காரியதரிசி வாசித்த யாதாஸ்தின்படி பிரஸ்தாப வருஷக் கடைசியில் சங்கத்தில் 900த்துக்கு அதிக மெம்பர்கள் இருப்பதாகவும், வசூலான வரும்படி ரூ 1,162–3–5ல் செலவு ரூ 766–6–6 போக, மிகுதியாயுள்ள தொகையோடு போன வருஷத்துக் கையிருப்புத் தொகையும் சேர்ந்து, தற்கால கையிருப்பு நிதி 7,823–13–6 என்றும் தெரியவருகிறது. கத்தோலிக்குப் பத்திரிகைகளைக் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் அதிகமாகவாங்கி அவைகளை ஆதரிக்கவேண்டுமென்ற ஒரு பிரேரணையும், கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களாயிருப்பவர்கள் அனைவரும் அதாவது, ஐரோப்பியர், இந்தியர், யூரேஷியர் என்னும் விகற்பமில்லாமல், எல்லோருக்குமாக ஒரே ஒரு கத்தோலிக்குச் சங்கம் ஸ்தாபிக்க முயற்சி செய்யப்படவேண்டுமென்ற ஒரு பிரேரணையும் நிறைவேறின. சங்க உத்தியோகஸ்தர்களைத் தெரிந்துகொள்ளும் விஷயத்தில் புருஷர்களுக்குப் போலவே ஸ்திரிகளுக்கும் ஓட்டுரிமைச் சுதந்தரம் கொடுக்கப்பட வேண்டுமென்னும் பிரேரணையொன்று நிறைவேறியது.

ஸ்ரீமான் M. R. மகிமைதாஸ் பிள்ளையவர்கள்.—இவர் நமது கத்தோலிக்கு இந்தியருக்குள் போஸ்ட்டல் இலாகாவில் உத்தியோகம் வகித்து கடந்த 36 வருடம் வெகு திறமையாய் வேலைபார்த்தவர். பர்மாவில் 18 வருடமாகப் போஸ்ட்மர்ஸ்டர் உத்தியோகம் பார்த்த இவரே கத்தோலிக்கு இந்தியரில் முதல்வர். இவர் 1915-ம் வருடமுதல் சென்னையில் டெப்டி போஸ்ட்மாஸ்டர் பதவி பெற்று, தம்முடைய அதிகாரிகளுக்கு பலவிதத்திலும் திருப்தியுண்டாக்கியவர். இவர் பர்மாவிலும் இவ்விடத்திலும்எப்போதும்கத்தோலிக்கு வேதத்தின்மட்டிலும் பிறசிநேக விஷயத்திலும் ஊக்கமெடுத்து உழைத்தவர். இதற்கத்தாட்சியாக இவர் தற்போது ஏற்படுத்தி நடத்திவரும் "கத்தோலிக்கு இந்தியர் பரோபகார சபையே" போதிய சாக்ஷியாகும். இவர் கடந்த ஏப்ரல்மீ 21உ தமது வேலையினின்று ரிட்டையரானது ஒருவாறு கவர்ண்மென்டுக்கு நஷ்டமென்றாலும் கத்தோலிக்கருக்கு நல்லுதவியாயிருப்பாரென்றெண்ணுகிறோம். சர்வேசுரன் இவருக்கு நீடிய ஆயுளைத் தந்து இவரது எண்ணம் இனிது முடியவும் மேற்படி சபை செழித்தோங்கவும் பிரார்த்திப்போமாக.

மரியாயின் மகா சங்கமும் கௌரதா பட்டங்களும்.—கடந்த ஜனவரி மாதத்தில் நடந்தேறிய மரியாயின் மகா சங்கத்தின் பொருட்டுழைத்தோருக்கு பரிசுத்த பாப்பானவரால் சென்னை அதிமேற்றிராசனம் மயிலை மேற்றிராசனங்களுடைய வைக்கர் ஜெனரல்களான சங். D. கஸ், சங். A. M. டெக்ஷா சுவாமிகளவர்களுக்கும், செக்ரிடேரிகளான சங். A. மொர்க்கஸ், சங். F. A. கர்வாலோ சுவாமிகளவர்களுக்கும், "கத்தோலிக் ரெஜிஸ்டர்" பத்திராதிபர் Mr. F. A. டிக்குரூஸ் துரையவர்களுக்கும், கத்தோலிக்கு வேத உழைப்பாளிகளாகிய Messrs. லுயிஸ் ரொஸேரியா, யூஜின்தியடோர் துரைகளவர்களுக்கும் கௌரதா பட்டங்கள் கிடைத்ததை அறிய சந்தோஷிப்போமாக.

THE RELIABLE

FAMILY MEDICINES SUPPLY AGENCY

2/74, Broadway, Madras.

நம்பிக்கைக்குரிய குடும்ப ஒளஷத சப்ளை ஏஜென்ஸி

2/74, பிராட்வே, மதராஸ்.

குடும்ப உபயோகத்துக்கு அடிக்கடி வேண்டுவனவாகிய சில்லறை மருந்துகள் உண்மையானவைகளாயும், யாவரும் நம்பிக்கையுடன் உபயோகித்துச் சுகமடையக்கூடியனவாயுமிருக்கவேண்டுமெனக் கருதி ஷை ஏஜென்ஸியாரால் பின்வரும் மருந்துகள், சிறந்த பண்டிதர்களின் அரிய முறைகளைக்கொண்டு, உயர்ந்த சரக்குகள், மூலிகைகளைச் சேர்த்து, சாஸ்திர முறைப்படி முடித்தெடுக்கப்பட்டிருக்கின்றன. உண்மையான நல்ல மருந்துகள் வேண்டுபவர்கள் இம்மருந்துகளை ஒரு முறையேனும் வாங்கிப் பரீட்சித்துப் பார்ப்பார்களாக !

	மருந்து	ரூ.	அ.
1.	ஆஞ்ஜெல்லா கஸ்தூரி மாத்திரை. 100 கொண்ட சீசா.	0	12
2.	ஆஞ்ஜெல்லா தீபாக்கினி மாத்திரை. 100 கொண்டது ...	0	8
3.	ஆஞ்ஜெல்லா தாம்பூல மாத்திரை. 100 கொண்டது...	0	5
4.	ஆஞ்ஜெல்லா பற்பொடி, நெ. 1. (30 நாளைக்கான தூள் கொண்ட) டப்பி	0	4
5.	ஆஞ்ஜெல்லா பற்பொடி, நெ. 2. (பல்வலி முதலியதுக்கு)	0	4
6.	சுத்தமான அசல் நீலகிரி யூக்கலிப்டஸ் ஆயில் (முதல்தரமானது) அவுன்ஸ் சீசா ...	0	5
7.	ஆஞ்ஜெல்லா ரத்தபுஷ்டி ரசாயனம் (24 வேளை மருந்துள்ள) புட்டி	1	8
8.	ஹாஸ் விக்கோமா பாம் (தலைவலி முதலியதுக்கு) டப்பி	0	10
9.	ஹாஸ் விக்கோமா பல்வலித் தைலம் (ஆச்சரியமான மருந்து) சீசா	0	8
10.	ஹாஸ் விக்கோமா சருமக் களிம்பு (சிரங்கு முதலியவைகளுக்கு) டப்பி	0	8
11.	ஆஞ்ஜெல்லா சந்தனுதிச் சூரணம் (ஸ்நான காலத்தில் உடம்பில் பூசிக்கொள்வது) டப்பி	0	6
12.	ஆஞ்ஜெல்லா சுகபேதி மாத்திரை (50 கொண்டது) சீசா	0	8
13.	ஆஞ்ஜெல்லா கூந்தல் வளர் தைலம் (4 அவுன்ஸ் கொண்ட சீசா)	1	0
14.	ஆஞ்ஜெல்லா ஸ்நான தைலம் (6 அவுன்ஸ்கொண்ட சீசா)	1	4
15.	ஆஞ்ஜெல்லா பரிமளக் கூந்தல் தூபம் (நறுமணமுள்ளது) டப்பி	0	4

தபாற் செலவு பிரத்தியேகம்

மேற்படி மருந்துகளின் முழு விவரங்களையும் அறிய விரும்புவோர்கள் மேற்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொண்டால் முழு விவரக் கேட்லாக் ஒன்று அனுப்பப்படும்.

மேற்படி மருந்துகள் வி. பி. தபால் மூலமாகவும் அனுப்பப்படும். இரண்டு மூன்று மருந்துகளைச் சேர்த்து வாங்குபவர்களுக்கு தபாற் செலவு கூடிவரும்.

நெட்டால், சிங்கப்பூர், பஸரா, மெசபொட்டேமியா முதலிய நாடுகளுக்கு வி. பி. தபால் முறையில்லை. ஆகையால், அங்குள்ள நண்பர்கள் முன்பணம் அனுப்பியே மருந்துகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். நம்பிக்கையாய் பணம் அனுப்பலாம். மோசமிராது. வெளியூர் ஆர்டர்களுக்கு விசேஷ கவனஞ் செலுத்தப்படும்.

புரோப்ரைட்டர். *The Proprietor.*

The Good Pastor

-7- JUN 1921

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 19. ஜூன் 1921. இலக்கம் 6.

WHO ARE TRUE CHRISTIANS?
மெய்யான கிறீஸ்துவர்கள் யார்?

சர்வேசுரன் இசையாஸ் தீர்க்கதரிசியை நோக்கி: "இசையாஸ், கண்களிருந்தும் கபோதிகளாயிருப்பவர்களை அப்புறம் தூரத்திவிடு" என்று வசனித்ததாக வேதபுத்தகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. சர்வேசுரன் வசனித்திருக்கும் இவ்வாக்கியம் நமக்கோர் பரம இரகசியமாயிருக்கின்றதல்லவா? ஆம், வாஸ்தவத்தில் இவ்வாக்கியம் நம்மிடத்தில் போராச்சரியத்தையும் பிரமிப்பையும் விளைவிக்கின்றதென்று சொல்லத் தேவையில்லை. கண்ணுள்ளவனைக் குருடனென்றால் யார்தான் நம்புவார்? ஆயினும், இது சத்தியத்திலும் சத்தியம். இது சர்வேசுரனால் வசனிக்கப்பட்ட வாக்கியம். சர்வேசுரன் வார்த்தைக்கு மறுவார்த்தை யில்லையல்லவா? ஆனபடியால், அக்காலத்தில்மாத்திரமல்ல, இக்காலத்திலும் இத்தகையோர் அநேகர் இருக்கிறார்கள். இவர்கள் யாரென்றால், மறுவுலகத்துக்கடுத்த காரியங்களை நன்றாய் ஆராய்ந்துபார்த்து அவைகளையடைய சிறிதும் முயலாமல் இவ்வுலகத்துக்கடுத்த காரியங்களையே கூர்ந்து நோக்கி, அவைகளின்பேரில் கண்ணுங் கருத்துமாயிருப்பவர்களேயாம். ஆம், மெய்யான நன்மையைக் கண்டடைந்து அதைச் சுகிக்க இவர்களுக்கு புத்தியுமில்லை, மனதுமில்லை. ஆனால் பொய்யான நன்மையை நாடி அதை அநுபவித்துக் களிக்க கூர்ந்த புத்தியுள்ளவர்களாயிருக்கின்றார்கள். இவர்களைக் கண்ணுள்ள கபோதிகளென்றழைக்க ஆட்சேபனை யென்ன?

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திற் சொல்லப்பட்டிருக்கிறபடி இவர்களைத் தங்கள் வலது கண்ணை யிழந்த குருடர்களென்றும் சொல்லுவது நியாயத்துக்கு விரோதமல்ல. நாஆஸ் என்பவனை அம்மோனித்தார்கள் தங்களுக்கு தளக்கர்த்தனாகக்கொண்டு கலாத் நாட்டைச்சேர்ந்த ஜாபேசு ஊரானை எதிர்த்துத் தாக்கினபோது, அவ்வூரார் அவர்களோடு போராட முடியாமல், சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளுவது தங்களுக்கிஷ்டமென்று நாஆஸ் என்பவனுக்கு அறிவித்தார்கள். அவனோ இவர்களை நோக்கி: "உங்கள் எல்லோருடையவும் வலதுகண்களைப் பிடுங்கிப்போடுவேன்............இதுதான் நான் உங்களுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கை" என்று சொல்லி இவர்களை பயமுறுத்தினான். "உங்கள் எல்லோருடையவும் வலதுகண்களைப் பிடுங்கிப்போடுவேன்"

என்று நா ஆஸ் சொன்னதை நாகசர்ப்பமாகிய பசாசு "கண்ணுள்ள கபோதிகளி"டத்தில் நிறைவேற்றிக்கொண்டு வருகிறதென்பதற்கு கிஞ்சிற்றேனும் ஐயமில்லை. அதெப்படியெனில், சகல நன்மைச்சுரூபியாகிய சர்வேசுரனை இவர்கள் தங்கள் உள்ளத்தில் நினைத்து, அவரை நோக்கவும், சிந்திக்கவும் இவர்களுக்கு வலதுகண்ணைப் போலிருக்கும் இவர்களுடைய புத்தியைப் பசாசு மழுங்கடித்து, அழிவுக்கும் இழிவுக்குமுரிய இப்பிரபஞ்ச நன்மைகளின்பேரிலேயே தங்கள் மனதைச் செலுத்தும்படி செய்துவிடுகிறதினாலேயாம்.

இப்படி உலக காரியங்களின்பேரில் சிந்தனையாயிருப்பவர்கள் தங்களைப் படைத்துக் காத்துக் காப்பாற்றிக்கொண்டுவரும் சர்வேசுரனை நேசிக்கவும், கொண்டாடவும், தொழவும், அவர் தங்களுக்குச் செய்கிற பேருபகாரங்களுக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செய்யவும் கூடாத கபோதிகளாகி, சகல நன்மைச் சுரூபியாகிய அவரைப் புறக்கணித்து, மோசநாசத்துக்குரிய இப்பிரபஞ்ச நன்மைகளையே கனமாக மதிக்கிறார்கள். அவைகளையே தங்களுடைய தெய்வமாக கும்பிடுகிறார்கள். ஆ! இது எப்பேர்ப்பட்ட அக்கிரமம்!! அநியாயம்!! சிருஷ்டிகளான இப்பிரபஞ்ச வஸ்துக்களை அவ்வளவாக மதித்து, சிருஷ்டகரான சர்வேசுரனை எவ்வளவோ அற்பமாக எண்ணுவது என்ன அதிக்கிரமம்!! இவர்களைக் குருத்துரோகியாகிய யூதாஸ்கரியோத்துக்கே ஒப்பனையிடவேண்டும். மரிய மதலேனம்மாள் தேவநேசத்தால் ஏவப்பட்டு நம்முடைய திவ்ய கர்த்தர் சிரசின்பேரில் சுகந்த பரிமள தைலத்தை வார்த்தபோது, இந்தத் துரோகி: "ஏன் இந்த நஷ்டம்? இத்தைலம் முன்னூறு வெள்ளிக்காசு பெறுமே! இதை விற்று ஏழைகளுக்குக் கொடுக்கலாமே" என்று சொன்னபோதும், முப்பது வெள்ளிக்காசை வாங்கிக்கொண்டு அவரைப் பிரதான ஆசாரியர் கையில் ஒப்படைக்க சம்மதித்தபோதும் இவன் தன் கடவுளும், குருவும், உபகாரியுமாகிய நமது கர்த்தரை எவ்வளவோ அற்பமாயும், குறைவாயும், இழிவாயும் மதித்தான்! என்ன, நமது கர்த்தர் விலையுயர்ந்த தைலத்தைவிடவும், முப்பது வெள்ளிக்காசைவிடவும் கேவலமானவரோ! இவைகளுக்கெல்லாம் அவர்தானே ஆதிகாரணர். இப்பேர்ப்பட்டவரை இவ்வளவாய் அவமதித்து, நீச தைலத்தையும், கேவலம் முப்பது வெள்ளிக்காசையும் அவருக்கு மேலாக மதித்த யூதாசைப்பற்றி என்ன சொல்வது! ஆகையினால், இப்பிரபஞ்ச வஸ்துக்கள்மட்டில் தங்கள் பற்றுதலையும் பட்சத்தையும் வைத்து சகல நன்மைச்சுரூபியாகிய தங்கள் கடவுளை நினையாமலும், சிந்திக்காமலும், சிநேகியாமலும், அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தாமலுமிருக்கும் கிறீஸ்துவர்களும் மெய்யான கிறீஸ்துவர்களாவாரோ!

அப்படியானால் மெய்யான கிறீஸ்துவர்கள் யார்? இப்பிரபஞ்ச நன்மைகள் அழிவுக்கும், இழிவுக்கும், இன்னும் மோசத்துக்குமுரியவைகளாயிருப்பதினால் நீ சர்வேசுரனை நேசியாமல் யாரை நேசிக்கப்போகிறாய் என்று அர்ச். அகுஸ்தீன் வசனித்திருக்கிறபடி, சர்வேசுரனை சிநேகிக்கிறவர்களே மெய்யான கிறீஸ்துவர்கள். "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்றபடி தங்கள் கண்ணுக்ககப்படும் இப்பிரபஞ்ச நன்மைகளின் மாய்கையால் ஏமாந்துபோகாதபடி, மெய்யான நன்மைச்சொரூபியாகிய சர்வேசுரன் தங்களுக்காக மனிதனாய்ப் பிறந்ததையும், அவர் முப்பத்துமூன்று வருஷகாலம் இவ்வுலகத்திலிருந்து இவ்வுலக நன்மைகளைப்பற்றியும் மறுவுலக நன்மைகளைப்பற்றியும் தம்முடைய நடத்தையாலும் வார்த்தையாலும் புகட்டின புத்திமதிகளைச் சிந்தித்தும், இவ்வுலக நன்மைகளால் வந்துறக்கூடிய கேடுபாடுகளான பாவங்களை விலக்க அவர் தம்முடைய ஒறுத்தல் உபவாசம், ஜெபதபம் ஆகிய இவைகளினால் காட்டிய முன்மாதிரியைக் கைப்பற்றியும், புண்ணியங்களைச் செய்வதினால் அவருக்குப் பிரியப்படும்படி சீவித்தும்வருகிற கிறீஸ்துவர்களே மெய்யான கிறீஸ்துவர்களாவர். நமது கர்த்தர் இப்பிரபஞ்சத்தில் சீவித்துவந்த காலத்தில் அவரைக் கண்ணாரக்கண்டும், அவருடைய புத்திமதிகளைக் காதாரக் கேட்டும் வந்தவர்களான யூத ஜனங்கள் தங்களுக்குண்டான இடுக்கண் துன்பங்களிலும், சோதனை தந்திரங்களிலும், நோவு நொடிகளிலும் "வாருங்கள் மரியாயின் மகனிடம்போய் ஆறுதலடைவோம்" என்று சொல்லி, நமது கர்த்தரிடஞ்சென்று அடைக்கலம் புகுந்ததாக அர்ச். பிரிஜித்தம்மாள் எழுதிவைத்திருக்கின்றாள். இப்படியே மெய்யான கிறீஸ்து

வர்களும் இக்கண்ணீர் கணவாயில் தங்கள் கோவில்களில் திவ்யநற்கருணையில் எழுந்தருளியிருக்கும் தங்கள் கர்த்தரைச் சந்தித்து ஆராதிக்கையிலும், திவ்யபூசை காண்கையிலும், திவ்யநற்கருணை உட்கொண்டு நன்றியறிந்த தோத்திரஞ் செய்கையிலும் அவருடன் அன்னியோன்னியமாய்ச் சம்பாஷித்து ஆறுதலடைவார்கள்.

அல்லாமலும், மெய்யான கிறீஸ்துவர்கள் இன்று தொடங்கியிருக்கும் ஜூன் மாசத்தில் விசேஷ விதமாய் அநுசரிக்கப்படும் சேசுவின் திரு இருதய பக்தியையும் தங்கள் சீவியகாலத்தில் அநுசரிப்பார்கள். சேசுவின் திரு இருதய பக்தி சகல பக்திகளுக்குள்ளே உத்தமமானதும், சகல நன்மைகளுக்கும் ஊற்றும் உற்பத்தியுமாயிருக்கின்றது. இப்பக்தி எதில் அடங்கியுளதெனில்: நமதாண்டவர் மனுமக்கள்மட்டில் வைத்த அணைகடந்த நேசத்துக் கிருப்பிடமான அவர் இருதயத்தை வாழ்த்தித் துதிப்பதிலேயும், அவருடைய மனுஷீக இருதயத்துக்கு தேவாராதனை செலுத்துவதிலேயும், அவருடைய சிநேகத்துக்குப் பிரதிநேசம் காட்டி நன்றிபாராட்டுவதிலேயும், திவ்யநற்கருணையில் அவருக்குச் செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரஞ் செய்ய, தக்க பயபக்தி விசுவாசத்துடன் திவ்யநற்கருணையைச் சந்திப்பதிலேயும், அதை உட்கொள்ளுவதிலேயும், திவ்யநற்கருணை திருநாளையும், திரு இருதயத் திருநாளையும் பக்தி சிறப்போடு கொண்டாடுவதிலேயும் அடங்கியிருக்கின்றது. இக்கிருத்தியங்களை கிறீஸ்துவர்கள் எவ்வளவு ஆசையோடும் உருக்கத்தோடும் அநுசரிப்பார்களோ அவ்வளவுக்கு அவர்கள் சர்வேசுரனை மென்மேலும் சிநேகித்து மெய்யான கிறீஸ்துவர்களாய் விளங்குவார்கள்.

ஆனபடியால் நாம் மெய்யான கிறீஸ்துவர்களோ, அல்லது பேருக்கு மாத்திரம் கிறீஸ்துவர்களோ வென்று சிறிது நிதானித்து யோசித்துப் பார்ப்போமாக. பேருக்கு மாத்திரம் கிறீஸ்துவர்களாயிருப்போமானால், அர்ச். அகுஸ்தீனோடு "ஓ! சர்வேசுரா! நான் தேவரீரை இதுவரையிலும் சிநேகியாமலிருந்தது மெய்தான்" என்று சொல்லி, அதற்காக மனஸ்தாபப்பட்டு அந்த சிநேகத்துக்குத் தடங்கலாயிருப்பவைகளை அறவே யொழித்து, சர்வேசுரனை முழு மனதுடனும் முழு இருதயத்துடனும் சிநேகிக்கப் பிரதிக்கினை செய்துகொள்வோமாக. இல்லாவிட்டால் நாம் வைராக்கிய பற்றுதலுடன் நேசிக்கும், இழிவுக்கும் அழிவுக்குமுரிய இப்பிரபஞ்ச பொருட்களுக்கு நம்மையும் சரிசமானமாக்கிக்கொண்டு அவைகளைப்போல் அதோகதியாகிவிடுவோம்; அதாவது: மோட்ச பேரின்ப பாக்கியத்துக்கு அப்புறப்படுத்தப்படுவோம். "தாங்கள் நேசிக்கும் பொருட்களைப்போல் அவர்களும் அருவருப்புக்குரியவர்களாவார்கள்" (ஓசே. IX. 10).

ENCOURAGING THE DIVINE VOCATION.

தேவ ஊழியத்திற்கழைக்கப்படுகிறவர்களை ஆதரித்தல்.

(மரியாயின் மகா சங்கத்தின்போது உபந்நியாசிக்கப்பட்டது.)

(முன் தொடர்ச்சி.)

பெற்றோர்.

இளைஞர் சிலரின் இருதயத்தில் தேவ அழைப்பென்னும் விதை விழுந்ததைக் கண்டவுடனே சில பெற்றோர் அது அங்கே புதைந்து சிதைந்துபோகும்படி செய்ய விட்டுவிடுகிறார்கள். தனக்கிருக்கிற பிள்ளை ஒன்றேயென்றும், தங்குடும்பத்தைப் போஷித்துவர அவன் அவசியமென்றும், குடும்பம் நசிந்துபோகாது காக்க அவனேதான் என்றும் சாக்குப்போக்குகளைச் சொல்லித் தடைபண்ணும் பெற்றோருமுளர். இவர்கள் விசுவாசமற்றோர் என்று சொல்லலாம். ஒரு பாத்திரம் பச்சைத் தண்ணீர் கடவுள்பேரால் கொடுத்தால் 100 மடங்கு சம்பாவனை யளிப்பதாக வாக்குக்கொடுத்த தேவன், அவர்கள் அவரது ஊழியத்திற்கே தமது புத்திரரை அதுவும் தமக்குதவியாகத் தோன்றும் புதல்வரை மனச்சந்தோஷத்தோடு ஈந்தால், என்ன சம்பாவனைதான் அவர்களுக்களிக்கமாட்டார்? அவர்களைக் கைவிட்டுவிடுவாரோ? பரிச்சேதமில்லை.

"எமது குமாரன் நன்றாய்ப் படித்துப் பரீக்ஷையிற் றேறிப் பட்டாதாரியாகிப் பாரி யுத்தியோகம் வகித்துப் பட்டணங்களில் கெட்டிக்காரனென விளங்கவேண்டுவது எமதாசை. ஆனால் குரு அந்தஸ்திற்கனுப்பினால் அவன் எவ்வளவு சாமார்த்தியனாக இருப்பினும் உயர்பதவிக்கெடுக்கப்படாமல் எப்போதும் மிஷினரிகளின் கீழிருந்தோ அல்லது பட்டிக்காடுகளில் யாருமறியாது காலங்கழித்தோ மிறைகிறான். இதனால் என்ன சலாக்கியம் எமக்கு" என்று சிலர் பற்கூசாது பகர்கிறார்கள். அவர்கள் சொல்வது உண்மைகலந்த பேதமை. பேதமை, ஏனெனில் எப்போது அவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தேவ ஊழியத்திற்கனுப்பிவிட்டனரோ அப்போது அவர்கள் உலக மதிப்பில் அவர்கள் உயர்வதையுந் தாழ்வதையுங் கவனிக்கக்கூடாது. எந்தப் படியினின்று வேலை செய்யினுஞ் சர்வேஸ்சுரனது அதிமிகத் தோத்திரத்திற்கே பணிபுரிகின்றனரென்று மனமுவந்துக் கடவுளை ஸ்துதிப்பதே உத்தமம்.

ஆயினும் அவர்கள் தத்தம் பிள்ளைகளின் தேர்ச்சிக்கொப்ப பாரபக்ஷமின்றி நற்பதவியுற்றிருக்க விரும்புவது பெற்றமன ஆசையாம். உலகிலிருக்குமட்டுஞ் சுயநலஞ் சற்றுமில்லாதாபோகும்? இதுவிஷயத்திலும் அவர்கள் மலைக்கக்காரணமன்று. முற்காலத்தில் மிஷன் தலைவர்கள் சுதேசக் குருக்கள்மட்டில் எவ்வண்ணம் நடந்துள்ளாரென்பதைப்பற்றி நான் சொல்லவேண்டியதில்லை. அவர்கள் இந்திய குருக்கள்மட்டில் தாயன்போடு நடந்துகொண்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இந்தியாவின் திருச்சபை இந்திய குருக்கள் மூலமாய் அபிவிருத்தி அடைய வேண்டுமென்பதே அவர்களது முழு விருப்பம். "அந்நிய தேசப் போதகக் குருக்களடியில் கீழ்த்தரப் பதவிகளை வகிக்கத்தக்க உதவி குருக்களா யிருக்கவேண்டுமென்கிற ஒரே நோக்கத்துடன் சுதேச குருக்களைப் பயிற்றுவிக்காமல், அவர்கள் தேவ ஊழியத்துக்கு யோக்கியதையுடையவர்களாய் ஒரு நாள் தங்கள் ஜாதியாரைத் தாங்களே கௌரவத்துடன் நடத்தி யாளுந் திறமையுடையவர்களாகும்படி செய்தல்வேண்டும்." "மிஷன் தலைவர்கள் இந்த மகத்தான கடமையை அதற்குரிய அக்கரையுடன் கவனித்து அதை ஜாக்கிரதையுடன் நிறைவேற்றும்படி அப்போஸ்தலிக்கு ஆதீனம் அவர்களை எப்போதுந் தூண்டிக்கொண்டேவந்திருக்கிறது. அந்நிய தேசத்தாரின் குருக்களைப் பயிற்றுவிப்பதற்காக ரோமாபுரியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பழய, புதிய வேத கலாசாலைகளும், விசேஷமாய்க் கீழ்த்திசை சடங்கின் கலாசாலைகளும் இதற்கு மறுக்கப்படாத சான்றாகும். பாப்புமார் எவ்வளவுதான் வற்புறுத்தியபோதிலும், அநேக நூற்றாண்டுகளாக வேதம் போதிப்பட்டுவந்துள்ள தேசங்களில் இன்னும் கீழ்த்தரமான சுதேச குருக்களைத் தவிர மேற்றரமான குருக்களில்லாமலிருப்பதைக் காண நமக்கு விசனமாயிருக்கிறது. ஆதியிலேயே சுவிசேஷ ஒளியைப் பெற்றுக்கொண்ட ஜாதியாரில் பலர் தங்கள் அநாகரிகத்தினின்று வெளிப்பட்டு, லௌகீக சாஸ்திர சம்பிரதாயங்களில் பேரோங்கினவர்களாய்ப் பம்பல உத்தியோகங்களிலும், உயர்பதவிக்கு வந்திருந்தும், தங்களை யாதரிக்கக்கூடிய சத்திய சுவிசேஷ திருச்சபையின் உதவியை அநேக நூற்றாண்டுகளாகப் பெற்றுவருகிற இவர்கள் தங்களை யாண்டு நடத்தத்தக்க சுய ஜாதியாரான மேற்றிராணியாரையாவது, தங்களாத்தும காரியங்களை விசாரிக்கத்தக்க தங்கள் சுய ஜாதியாரான குருக்களையாவது பெற்றுக்கொள்ளாதிருக்கிறதைப் பார்ப்பது நமக்கு விசனத்தைத் தருகிறது. ஆகையால் இதுவரை வெவ்வேறிடங்களிலும் சுதேச குருக்களைப் பண்படுத்த அவரவருங் கையாடிய வழிவகை உபாயங்களெல்லாம் பயனற்றவையெனத் தெளிவாகிறது." "குருத்துவத்துக்குச் சர்வேசுரனால் அழைக்கப்படும் மாணவர்களைப் போதக வேலைக்காகப் படிப்பிக்கும்போது அவர்கள் வேதசாஸ்திரங்களையும், லௌகீக சாஸ்திரங்களையும் நன்றாய்ப் படித்துப் பாண்டித்தியமடைவதற்கான சகல முயற்சியும் செய்யவேண்டியது" எனத் திருச்சபையை ஆளும் 15-ம் ஆசீர்வாதப்பர் கூறியிருப்பதாகிலும் இனிமேல் பெற்றோர்களிடமுள்ள ஆயாசத்தைப் போக்கி, சந்தோஷத்தை எழுப்பி மக்களையனுப்பத் தூண்டுமென நம்புகிறேன். லௌகீக வாஞ்சையி லீடுபட்டு, சர்வேஸ்சுரனது வார்த்தைக்கும், புத்தி வற்புறுத்தலுக்குஞ் செவி கொடுக்காது தம் பிள்ளைகளை தேவ ஊழியத்திற்கனுப்பச் சம்மதியாத பெற்றோர்களையும் பந்துமித்திரர்களையும் அர்ச். கிரேகோரியாரின்

பயங்கர மொழிகளாகிலும் மனந்திருப்பாதா? "குருத்துவத்தின் அந்தஸ்திற்கு அழைக்கப்பட்ட பிள்ளைகளைத் தக்க முகாந்தரமின்றி கெடுத்து, அவர்களுடைய அழைத்தலைப் போக்கடிக்கப் பண்ணும் பெற்றோர் கனமான பாவத்துக்குள்ளாகிறார்கள். மேலும் அப்பிள்ளைகளுக்கு மோசம் விளைவிக்கும் பந்துமித்திரர்களும் சர்வேசுரனது கோபாக்கினைக்குள்ளாகிறார்கள்" என அர்ச். கிரேகோரியார் சொல்லுகிறார்.

ஆதரிக்கும் விதிகள்.

"இரக்கமுள்ள சர்வேசுரனது உதவியால் சத்திய வேதத்தில் சேர்ந்து அதன் அளவற்ற நன்மைகளில் பங்கடையும் பாக்கியம் பெற்றவர் யாவரும்" தேவ ஊழியத்திற்கழைக்கப்பட்டவர்களை யாதரிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். இது அவர்களடைந்துள்ள பேருபகாரத்திற்கு காட்டவேண்டிய பிரீதி நன்றியின் ஓர் கூற்று. இக்கடமையை ஜெபத்தாலும் நன்கொடையாலுஞ் நிறைவேற்றலாம். பின்னையது எல்லாராலுஞ் சாத்தியப்படாதென நியாயம் பேச வழி கொடுக்கினும் முன்னையது எவராலுஞ் செய்யக் கூடியதென்பது கரதலாமலகம். "நான் நட்டேன் அப்பெல்லோ தண்ணீர் பாய்ச்சினார். ஆனால் சர்வேஸ்சுரனே பலன் கொடுத்தார்" என்று சொன்னதுபோல் தேவ கிருபையின் உதவி எந்த நல்முயற்சிக்கும் வேண்டுமாயின் தேவ ஊழியர் விஷயத்தில் அதிமுக்கியமாய் வேண்டியதென்பது மறக்கப்படாத உண்மையன்றோ? இத்தகைய உதவியை ஜெபத்தாலடையலாம்.

ஜெபம்.

"எத்தகைய ஜெபம் கேட்கப்படாவிட்டாலும், இவ்விஷயமாய்ச் செய்யப்படுஞ் செபம் அவசியம் கேட்கப்படும். ஏனெனில் இந்த வேலையைப்போல் உன்னதமானதும் சர்வேசுரனுக்குப் பிரியமானதுமான வேலை வேறொன்றுமில்லை" என்று 15-ம் ஆசீர்வாதப்பர் கூறுகிறார். ஆகவே, பிள்ளைகள் அதிகாதிகமாய்த் தேவ ஊழியத்திற்கு வரவும், அவர்கள் மடஞ் சேர்ந்த பின் கடைசிவரையில் நிலைத்திருக்கவும், அவர்கள் பக்தியில் முதிர்ந்து படிப்பில் வளர்ந்து நமது சிந்து தேசத்தில் அந்தகாரத்தை யோட்டி மெய்ம்மறை யொளியைக் காட்டி எங்குஞ் சத்திய வேத போதனையைத் தூவி, எல்லோரையும் நல்வழி நடக்க ஏவி வரத் தேவையானவர்களை அவர்களடையுமாறு எல்லாம் வல்ல நல்லோனை நாம் அல்லும் பகலும் இறைஞ்சவேண்டும். இந்தக் கடமையை நாம் மறந்துபோகாதிருக்கும்படியாக ஜெப அப்போஸ்தலர் சபையிற் சேர்வது நலம். திரவிய உதவி புரிவதென்றால் சிலருக்கு இயலாதிருக்கலாம். ஆனால் இந்தியாவின் இரட்சண்யத்தின்பேரில் அபிலாசை கொண்டுள்ள சேசுவின் திரு இருதயத்தின் கருத்துக்காக எல்லோருந் தத்தங் கிரிகைகளை ஒப்புக்கொடுக்கலாம்.

இந்த விஷயத்தில் சந்நியாசிகளுங் கன்னியர்களும் பெரும்பாலும் உதவுகிறார்கள். சத்திய திருச்சபையில் வெளியில் வந்துழைக்கிறவர்களும் உள்ளிருந்து தியானத்திலேயே காலங்கழிக்கிறவர்களுமாகிய துறவிகள் ஆண்பாலர்க்குள்ளும் பெண்பாலர்க்குள்ளு மிருக்கின்றார்கள். அடைபட்ட சீவியத்தைத் தெரிந்துகொண்டோரைக்கண்டு, இதர மதஸ்தர்கள் கிறீஸ்துவர்களுங்கூட சில சமயங்களில், இவர்கள் வாழ்நாட்களை, ஜனசமூகத்திற்கும் திருச்சபைக்குந் தானே பிரயோஜனமில்லாது வீணாகக் கழிக்கிறார்களென்று குறைகூறுவர்; அது தப்பறை. அவர்கள் வெளிவராதேபோயினும் உள்ளிருந்து செய்யும் பற்பல வேலைகட்குக் கணக்கில்லை. பின்னும் அவர்கள் செய்யும் இன்னொரு முக்கியமான வேலையிருக்கின்றது. அதுதான் ஜெபம். சத்திய வேத விருத்திக்காக ஓயாது பிரார்த்திக்கின்றனர். அர்ச். தெரேசம்மாள் தமது ஜெபத்தாலும் நற்கிருத்தியங்களாலும் அர்ச். சவேரியார் மனந்திருப்பின அம்மாத்திரந் தொகையினரை மனந்திருப்பினதாக நாம் கேள்விப்பட்டதில்லையா? ஆகையால் இவ்வித துறவிகள் ஆத்தும இரட்சண்ணியத்திற்காக வேண்டிக்கொள்வது அத்தியாவசியம். அத்திறத்தினோர் நம் நாட்டில் எங்கும் பரவவும் அதிகரிக்கவும் நமது ஜெபம் பரம பிதாவினிடஞ் செல்லவேண்டும்.

நன்கொடை.

பெரும்பாலும் அக்கியானிகள் அடங்கிய இந்தியாவில் திருச்சபை பரம்பவேண்டுமென்று நாம் ஆசிக்கிறோமல்லவா? திருச்சபை விருத்தியாக அஞ்ஞானிகள் ஞானதீட்சை பெறவேண்டும். அவர்களை மெய்ம்மறை சேர்க்க தேவ ஊழியர் அவசரம். அவர்களதிகரிக்க மடங்கள் ஸ்தா

பிக்கப்படவேண்டும். மடங்கள் ஸ்தாபிக்கப்பட்டால் அவைகள் நிலைத்திருக்கப் பணநிதி ஸ்தாபனம் அகத்தியமன்றோ? ஏனெனில் மடத்தில் சேருகிறவர்கள் உண்ணவேண்டும், உடுத்தவேண்டும், படிக்கவேண்டும். இவைகளுக்கு வேண்டிய காரியாதிகள் சும்மா வருமா? அன்று! ஆகையால் தேவ ஊழியத்திற்கழைக்கப்பட்டவர்களை நாமே யாதரிக்கவேண்டும். "தங்கள் நிலைமைக்குத் தகுந்தாப்போல் உதாரமாய்க் கொடுக்கும்படியாய் சகல விசுவாசிகளையுங் கேட்டுக்கொள்ளுகிறோம். ஏனெனில் 'இவ்வுலக சம்பத்தையுடைய ஒருவன் தன் சகோதரன் இக்கட்டுப்படுகிறதைக் கண்டும், அவனுக்கு இரங்காணுகில் தேவ சிநேகம் அவனிடத்திலிருக்கிறதெப்படி' (1 அருள். 3, 17). வறுமையால் வருந்துவோரைப்பற்றி அப்போஸ்தலராகிய அருளப்பர் இவ்வாறு சொல்லியிருக்கிறார். கணக்கற்ற ஜனங்களை வறுமை, தரித்திரம் முதலிய பல துன்பங்களிலிருந்து காப்பாற்றுவதுமல்லாமல், எண்ணிறந்த ஆத்துமாக்களை அலகையின் அடிமைத்தனத்தினின்று மீட்டு தேவ மக்களின் சுபேச்சைக்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கிடமாயுள்ள இவ்விஷயத்துக்குத் தர்மம் செய்யவேண்டும் என்னும் சட்டத்தால் உண்டாகும் கடமை எவ்வளவோ பரிசுத்தமானதாம்" என்று 15-ம் ஆசீர்வாதப்பர் உரைக்கிறார். ஒவ்வொருவருந் தத்தம் அந்தஸ்துக்குத் தக்காப்போல் அளிப்பது நமது கடமை. அதனால் நமக்கு விளைவது பெரும் லாபம். "உனக்கு மிகுதியான சம்பத்திருக்குமாகில் ஏராளமாய்க் கொடு; கொஞ்சமாயின் கொஞ்சங் கொடு. ஆனால் கொடுப்பதை நன்மனதோடு அளிக்கக் கவனித்துக்கொள். நீ ஈந்த தர்மம் உனது துர் அதிஷ்ட நாளில் உனக்குப் பொக்கிஷமாம். ஏனெனில் தர்மமானது சர்வ பாவத்திலும் (நித்திய) மரணத்திலும் நின்று மீட்பதுந் தவிர ஆத்துமாவை அந்தகாரத்திலுட்பட விடமாட்டாது" (தோபியாஸ் 4. 9, 10, 11).

(இன்னும் வரும்.)

L. D. S. M.

பல காரியங்களை வாசிப்பதுங் கேட்பதும் எனக்கு அநேகமாய் சலிப்பாயிருக்கிறது. நான் விரும்புவதும் ஆசிப்பது முழுமையும் உம்மிடத்தில்தான் இருக்கின்றது.

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.)

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

11-ம் அதிகாரம்.

உண்மையான தடை — அத்தடையை முறிக்க அர்ச். மோனிக்கம்மாள் சுசீலத்துடன் எடுத்துக்கொள்ளும் அரும் பிரயாசைகள்—அகுஸ்தீன் ஆத்துமத்தில் விசுவாசத்தின் உதயம்.

அகுஸ்தீன் இருதயம் பரிசுத்தமானதாயிருந்திருந்தால், விசுவாசமும் தேவ நேசமும் ஒன்றித்து உடனே அக்கினிமயமாய்ப் பற்றி யெரிந்திருக்கும். நாம் அறிந்ததுபோல், கடந்த பதினைந்து வருஷகாலமாக விபசாரம் என்னும் வலையில் சிக்கிக்கிடந்து தன் பாலியத்தில் அவ்வளவாய் விரும்பி ஆசித்த சிற்றின்ப சந்தோஷத்தில் அமிழ்ந்திக்கிடந்தார். ஆதலால் 1,800 மைல் கடற் பிரயாணம் செய்ய உண்டான கஷ்டத்திற்கும், இளைப்பிற்கும், தவிப்பிற்கும் மோனிக்கம்மாள் பின்வாங்காமல் உரோமாபுரிக்கு வந்து சேர்ந்தபோதிலும், அங்கு அவருடைய வைப்பாட்டி அவருடன் ஒன்றித்துச் சீவிப்பதை விலக்க அவளால் கூடாமற்போயிற்று. அவர் மிலானுக்கு வரும்போதே அவளும் கூடவே வந்து இருவரும் புருஷபாரியராய்ச் சீவித்துவந்தார்கள். இவர்களுக்குப் பிறந்த தேவதத்தன் என்பவன், இருவருடைய துர்ச்சிநேகத்தை இணைத்துப் பந்தனம் செய்யும் சங்கிலி வளையத்தைப்போலிருந்து, தன் வயதிற்கு மிஞ்சின மனோ சக்தியினால் இவர்களை உல்லாசப்படுத்திவந்தான். இந்த நிலைமையின் நிர்ப்பாக்கியம் அதிபயங்கரமானது. ஆதலால் இந்தப்பாவத்தளை முறியுமட்டும் அகுஸ்தீன் விசுவாச வெளிச்சத்தையடைவதும் அல்லது ஞானஸ்நானம் பெறுவதும் கூடாத காரியம். இதைப்பற்றியே மோனிக்கம்மாள் இடைவிடாமல் கவலைப்பட்டு வந்தாள். அகுஸ்தீனுடைய மனதில் துவக்கின போராட்டம் கடைசியாய் இருதயத்திற்கு இறங்கினதென்று அவளுக்குத் திட்டமாய்த் தெரியவந்தது. அவர் கடவுளோடு சமாதானமடையாததற்குக் காரணம் ஞான வெளிச்சம் இல்லாத குறையன்று. ஆனால் "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம் என்று மிடும்பை தரும்" என்றபடி அவரிடம் புண்ணிய வொழுக்கம் இல்லாத குறைதான். அதைப்பற்றியே மோனிக்கம்மாள் அஞ்சி நடுங்கினாள். ஏனெனில் அகுஸ்தீனுடைய இருதயத்தையும் அவர் தன் வைப்பாட்டியின்மட்டில் கொண்டிருக்கும் பிரமாணிக்கமுள்ள ஆழ்ந்த பட்சத்தையும் அவள் நன்றாய் அறிந்தாளாகையால், ஒருவரிடமிருந்து மற்றொருவரைப் பிரிப்பது அசாத்தியமான காரியமென்றுணர்ந்து, இந்தப் பெரிய தளையை முறித்தெடுப்பதெப்படியென்று அடிக்கடி சிந்தனையாயிருந்தாள்.

அக்காலத்தில் அகுஸ்தீனோடு ஒரு வாலிபன் இருந்தான். சரித்திரம் போகப்போக அவனுடைய விஷயாதிகள் நமக்கு நன்றாய்த் தெரியவரும். அவன் பெயர் அலிப்பியூஸ். அவன் அகுஸ்தீனுடைய பிராண நேசன். அகுஸ்தீன் ஆப்பிரிக்காவிலிருந்தபோது அவர்மட்டில் உபாசனைகொண்டிருந்தான். பிறகு அவர் உரோமாபுரிக்குப் போகும்போது கூடவே அவரைப் பின்தொடர்ந்து சென்றான். அங்கிருந்து அவர் மிலான் நகருக்கு வந்தபோது, உரோமாபுரியில் தன்னந்தனியாயிருக்கச் சகியாமல் தானும் மிலானுக்குக் கூடவே வந்துவிட்டான். அகுஸ்தீன் தான் அவனுக்குப் பொய்மதக் கோட்பாடுகளைப் போதித்தது. அவனும் அக்கோட்பாடுகளையே தெய்வ வாக்காக நம்பிவந்தான். ஆயினும் இயற்கையாய், புண்ணிய வொழுக்கத்தின்மட்டில் அவனுக்கு ஆழ்ந்த மனச்சார்பிருந்தது. ஆகவே பாலியத்தில் ஏதோ கொஞ்சம் தீயச்செயல்களைப் புரிந்துவந்தவனாயினும், அவைகளுக்காக அத்தியந்த மனஸ்தாபப்பட்டு உத்தமமான சீவியம் சீவிக்கத் தீர்மானித்து அப்போதிருந்து சம்பூரண விரத்தத்துவத்தை யநுசரித்துவந்தான். சுயப் பரித்தியாகம் நிறைந்த ஞான சீவியத்தில் கிடைக்கும் ஆநந்த சந்தோஷத்தையும், அச்சுயப் பரித்தியாகத்திற்குக் கைம்மாறாக உண்டாகும் ஆத்தும சமாதானம், மனோசுதந்தரம், சோதனைகளை யெதிர்க்க பலம் ஆகிய இவைகளையும், அகுஸ்தீனுக்கு எடுத்துக்காட்டி, "இனியது கேட்கில் தனிநெடுவேலோய், இனிது இனிது ஏகாந்தமினிது" என்றபடி தனிவாசமாயிருந்து சத்தியத்தைத் தியானிப்பதினால்தான் அப்படிப்பட்ட சமாதானமும் சுதந்தரமும் பலமும் கிடைக்கலாகுமென்று அவருக்குச் சொல்லி, தன் மாதிரிகையைப் பின்பற்றி விரத்தத்துவத்தை யநுசரிக்கும்படியாக அடிக்கடி யவரைத் தூண்டிவந்தான். ஆனால் கிட்டத்தட்ட 15 வருஷகாலம் தன்னோடு ஒரே சரீரமாய் சீவித்துவந்த பெண்பிள்ளையை யொழித்துவிட்டு, தனியாய்ச் சீவிக்குஞ் சீவியம் ஒன்றுக்கும் உதவாத சீவியமென்று அகுஸ்தீனுக்குத் தோன்றினபடியால், அலிப்பியூஸ் கூறிய நியாயங்கள் யாவும் பன்றிக்குமுன் எறிந்த முத்துக்குச் சமானமாயும், கற்பாறையின்மேல் போட்ட விதைக்கு ஒப்பாயும் நிஷ்பலமாயின. அவர் சொல்வது "அவளது நேசபாசமின்றி நான் சீவிக்கமுடியாதென்று நினைத்தேன். கற்புள்ள ஆத்துமத்திற்குக் கடவுள் தயைபாலிக்கும் சத்துவத்தை யறியாமல், தனிச் சீவியம் முற்றிலும் அசாத்தியமான சீவியமென்றெண்ணினேன். ஆனால் கர்த்தாவே, நேர்மையுள்ள மனதுடன் நான் உம்மை மன்றாடியிருந்தால், ஆழ்ந்த விசுவாசத்துடன் எனது நிர்ப்பாக்கிய நிலைமையை யுமக்குத் தெரிவித்து உமது சகாயத்தைக் கோரியிருந்தால், சத்தியமாகவே நீர் எனக்கு உமது சக்தியையும் பலத்தையும் கடாட்சித்திருப்பீர்!"

ஆனால் ஐயோ தேவசகாயத்தைத் தேடவேண்டுமென்று அவர் கவனம் செலுத்தினதேயில்லை. அவர் சொல்வது "விஷம் நிறைந்த சிற்றின்ப நுகர்ச்சியில் ஆவல்கொண்டு, எங்கே அவ்வின்பத்தை இழந்துவிடுவேனோவென்று பயந்து, என் பாவச் சங்கிலியை இன்னும் இறுகப் பந்தனஞ்செய்துகொண்டேன். மேலும் புண்ணிய வொழுக்கமானது, நான் நேசித்துவந்த பாவ பந்தனத்திலிருந்து என்னை நீக்கிவிடுமென்று பயந்து அப்புண்ணிய வொழுக்கத்தை யாராவது புகழ்ந்து பேசினால், அது காய்ச்சி உருக்கின ஈயத்தை என் செவியில் வார்த்ததற்குச் சமானமாயிருக்கும். "சிற்றின்பஞ் சின்னீரதாயினும் அஃதுற்றார், மற்றின்பம் யாவையுங் கைவிடமுற்றுந்தாம், பேரின்பமாக் கடலாடுவார் வீழ்பவோ, பாரின்பப் பாழ்ங்கும்பியில்."

இப்படிப்பட்ட ஆத்துமரோகத்தைத் தீர்க்க ஒரேயொரு பரமாவுஷதம் உண்டென்று துலக்கமாய்த் தெரியவந்தது. அதேதெனில், விரத்தத்துவ அந்தஸ்தைத் தெரிந்துகொண்டு தனிமையான தவச் சீவியம் சீவிக்க அகுஸ்தீனால் ஏலாதாகையால், கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட விவாக அந்தஸ்தை யேற்றுக்கொள்ளுவதே அவருக்குத் தகுதி. இதை அர்ச். மோனிக்கம்மாள் ஓயாமல் சிந்தித்து, தன் மகன் கலியாணஞ்செய்துகொண்டால் அவருக்கிருந்த ஆத்தும ரோகம் யாவும் தொலையுமென்று நம்பி, இப்படியாவது ஒரு கலியாணம் முடித்துவைக்கும்படி கர்த்தரைப் பார்த்து உருக்கத்துடன் மன்றாடினாள்.

சுலபமான காரியமேதெனில், அகுஸ்தீன் தன் வைப்பாட்டியைக் கலியாணம் செய்துகொள்வதுவே. அவளை மணஞ்செய்துகொள்ளத் தடையாயிருந்த காரணங்களை நாம் திட்டமாயறியாவிட்டாலும் அப்படி மணஞ்செய்துகொள்வது கூடாத காரியமாய்த்தான் இருந்திருக்க வேண்டியது. ஏனெனில், அவளை விட்டுப்பிரிவது அகுஸ்தீனுக்கு மனந் தாளாது என்று நாம் அறிவோம். ஆயினும் தேச சட்டமும் குலாசாரமும் நாமறியாத வேறு பல காரணங்களும் அவளைப் பாணிக்கிரகணஞ்செய்யப் பெருத்த தடையாயிருந்தன. ஆதலால் அவளை விலக்கிவிடுவதோ, அல்லது விவாகஞ்செய்துகொள்ளுவதோவென்று தெரியாமல் இருதலைக் கொள்ளியிலகப்பட்ட எறும்புபோல் தத்தளித்தார். இத்தத்தளிப்பிலும் மனக்கலக்கத்திலும் தாமதத்திலுமே அவரது இரட்சண்ய காரியம் முற்றிலும் அடங்கியிருந்தது.

இந்தக் காரியங்களைத் தாயாரைவிட சரியாயறிந்து கண்கலங்கி அதி விசனமுறுகிறவர்கள் யார்? இருந்தாலும் மோனிக்கம்மாள் சற்றேனும் தத்தளிக்கவில்லை. இந்தப் பாவச் சம்பந்தத்தை விவாகத்தின் மூலியமாய் அர்ச்சிக்கக்கூடாதாகையால் அதைப் பிரிப்பதே சரி. ஒரு தக்கப் பெண்ணைத் தேடி விவாகம் முடித்துவைப்பதாக அவருக்கு நம்பிக்கை கொடுத்தால்தான், தன் வைப்பாட்டியை நீக்கிவிடுவதற்கு அகுஸ்தீன் ஒத்துக்கொள்ளுவாரென்றெண்ணினாள்.

சங்கட்டமான இச்சமயத்தில் தனக்குச் சகாயமாயிருக்கும்படியாக, மோனிக்கம்மாள் அமிர்தநாதருடைய ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் கேட்டிருப்பாள். இந்த முக்கியமான விஷயத்தில் எந்த விதமாக நடந்துகொள்வதென்று தேவ சித்தத்தை யறியும்படியாக முன்னையவிட பதின்மடங்கான உருக்கப் பெருக்கத்துடன் கர்த்தரைப்பார்த்து அபயமிட்டு மன்றாடி வந்தாளென்பது உண்மையே. வேண்டியமட்டும் விசாரணைசெய்ததில் ஒரு நல்ல கிறீஸ்துவ குடும்பத்தில் தன் குமாரனுக்கேற்ற ஒரு கன்னிகையை கண்டுபிடித்தாள். அக்கன்னிகை, சாதாரணமாய்ப் பதிவிரதைகளிடமிருக்கத்தக்க நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நால் வகைப்பட்ட நற்குண லட்சணங்களையும் பூஷணமா யமையப்பெற்ற உத்தமி. இதை அகுஸ்தீனுக்குத் தெரிவித்து அவளை யேற்றுக்கொள்ளும்படியாக மன்றாடினாள். அவரோவெனில் முதலில் அத்தியந்த வியாகுலமடைந்தாலும், தான் கலியாணம் செய்துகொள்வதற்கு உண்டான ஞாயத்தை உணர்ந்து முடிவில் ஆகட்டுமென்றார். மோனிக்கம்மாள் அந்தக்கன்னிகையின் பெற்றோரிடம்போய்த் தன் கருத்தைத் தெரிவிக்க, அவர்களும் நல்லதென்றார்கள். ஆயினும் அக்கன்னிகை இன்னும் வயதுக்கு வாராதிருந்தபடியால், இரண்டு வருஷம் பொறுத்துத்தான் கலியாணம் ஆகவேண்டியதென்று தீர்மானமாயிற்று. இரு குடும்பத்தாரும் இத்தீர்மானத்திற்கு ஒத்துக்கொண்டார்கள். இப்படி கலியாணத்தை இரண்டு வருஷம் ஒற்றிவைக்க இன்னொரு காரணமுமிருந்தது. அதேதெனில், அகுஸ்தீன் இனி ஞானஸ்நானம் பெறவேண்டியிருந்ததால், அவர் சத்திய வேதத்தில் நிலையாயிருப்பதும் அல்லது நிலைதவறிப்போவதும் அதற்குள் தெரியவரும் என்பதே.

கலியான விஷயம் எப்படியிருந்தபோதிலும், அகுஸ்தீன் தன் வைப்பாட்டியோடு இன்னும் துர்ச்சம்பந்தங்கொண்டிருப்பது கூடாத காரியம். ஆதலால் அவளைத் தள்ளிவிடும்படியாக யாவரும் அவரைத் தூண்டினார்கள். அவரும் அப்படியே யவளைத் தள்ளிவிட்டார். தன் வைப்பாட்டி தன்னை விட்டுப்பிரிந்த பிரிவை அர்ச். அகுஸ்தீன் சுருக்கமாகவும் அதிகத் துலக்கமாயும் நமக்குக் காட்டுகிறார். "என்னுடன் ஒரே சரீரம்போலிருந்தவளை என்னை விட்டுப் பிரித்துவிடும்படிச் சம்மதித்தேன். என்னிருதயத்துடன் அவளுடைய இருதயம் அவ்வளவு

கெட்டியாய் ஒட்டிக்கொண்டிருந்தபடியால் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிப்பது, சதையிலிருந்து சதையைக் கிழித்தெடுப்பதற்குச் சமானமாயிருந்தது. ஆகவே அச்சமயத்தில் என்னிருதயத்தின் சதை கிழிந்து காயமடைந்து இரத்தஞ் சொரிந்தது" என்கிறார். மீளவும் "இந்தக் காயம் கொஞ்சத்தில் ஆறாமல் வெகுகாலம் வரைக்கும் எனக்கு அத்தியந்த வேதனையை யுண்டாக்கிற்று" என்கிறார்.

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா

அல்லது

மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—6.

பென்தாவீதும், ஆல்டீமனும்.

(முன் தொடர்ச்சி.)

பென்தாவீதன் சற்றே மௌனமாயிருந்து பின்னர், "பிரபுவே, உம்முடைய உறுதியொன்றே என் சந்தேகத்தைத் தீர்க்கப் போதுமானது. இது விஷயத்தில் எனக்கு முற்றிலும் திருப்தியே. இந்த உயரிய ஆபரணத்தை நானே மதிப்பிடுவது சரியல்ல. ஆண்டவனே, இது சாமான்ய நகையல்ல; இதன் விலை குறைந்தது பத்து லட்சமாவதிருக்குமென்று நினைக்கிறேன்" என்றான்.

இதைக் கேட்டதும் செபஸ்தியான் மனம் சந்தோஷத்தால் பூரித்தது. கார்சியாஸ் பிரபுவின் மீட்பு நிச்சயம் என்று நம்பினான். "பிரபுவே, அநுபோகமும் நாணயமும் வாய்ந்த என் குலத்தவரான மூன்று பேர்களிடம் இவ்வாபரணத்தை மதிப்புக்காட்ட உத்தரவருளவேண்டும். மதிப்புப் பார்ப்பதில் மிக்கத் தேர்ச்சியடைந்தவர்கள். அவர்கள் பார்த்துச் சொல்லும் மதிப்பின்படி அடியேன் தங்களுக்குப் பணங்கொடுத்துவிடுகிறேன். தயவுசெய்து நான் திரும்பி வரும்வரையில் இங்கேயே இரும். ஒரு நொடியில் அவர்களைத் தெரிந்துகொண்டு வந்துவிடுகிறேன்" என்று சொல்லி பென்தாவீதன் வெளியே சென்றான்.

செபஸ்தியான் சுமார் ஒரு மணி நேரம் அங்கேயே உலாவிக்கொண்டே, தான் மேற்கொண்ட கருமம் கைகூடுவதைப்பற்றி ஆழ்ந்து யோசித்துக்கொண்டிருந்தான். ஒரு மணிநேரங் கழியா முன்னரே, பென்தாவீதன் மூன்று யூதரை அழைத்துக்கொண்டு, வீட்டுக்குள் நுழைந்தான். வந்தவர்கள் மூவருந் தங்களுக்குள் யோசனைசெய்து, அம்மாலை பதினைந்து லட்சம் பெறுமானமுடையதென்றும், அதை யணியும் யோக்யதையுடையவர்கள் இராஜஸ்திரீகளேயென்றும் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

"அத்தொகையை இன்னும் பதினைந்து தினங்களில் கொடுத்தால் போதுமோ?" என்று வினவினான் பென்தாவீதன்.

செபஸ்தியான் சரியென்று சம்மதித்து, யூதனிடம் செலவுபெற்றுத் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தான். கார்சியாஸ் பிரபு இன்னும் சில வாரங்களில் மீட்கப்பட—அவரை மனைவி மக்களிடம் தானே கொண்டுவந்து சேர்த்துவிட—இருக்கும் சுபசெய்தியை உரேக்காளுக்குத் தெரிவிக்கும்படி உடனே ஓர் ஆள்வசம் சொல்லியனுப்பினான்.

ஆனால் அவன் ஆவலுடன் எதிர்பார்த்த இந்தக் காரியம் அவ்வளவு சுலபத்திலும் சீக்கிரத்திலும் நிறைவேறவில்லை. வாய்க்கெட்டினது கைக்கெட்டவில்லை யென்பதுபோல், அவன் எண்ணம் அனைத்தும் வீணாயிற்று; ஏனெனில் சிறையிலிருக்கும் பிரபுவைமீட்க, பொன்னிலும் மிக்க விலையுயர்ந்த பொருளொன்று வேண்டிய தவசியமாயிருந்தது.

மறுதினம் பென்தாவீதன் சில துணைவருடன் டொலிடோ நகரம் சென்றான். சாரகோசா நகரின் அரசன், காஸில்டா என்னும் இளவரசியை மணமுடிக்கக் கருதி ஆல்டீமனைக் கேட்கவே, அவனும் அதற்குச் சம்மதித்து, முகூர்த்த நாள் நெருங்கிவிட்டதால், அதற்கு வேண்டியவைகளைத் தயாரித்துக்கொண்டிருந்தமையால், நகர முழுதும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அந்த வைபவத்துக்காகவே நமது யூதனும் அரசருக்

குச் சென்றான். பேராசைக்கொண்ட பேயனாயினும், ஆல்டிமன் தன் மகள் கலியாணத்தைச் சிறப்பாய்க் கொண்டாடுவதுடன், அவளுக்கு வேண்டிய விலையுயர்ந்த ஆபரணாதிகளையும் வாங்கவேண்டுமென்னுங் கருத்துடன், யூதனைத் தன் அரண்மனைக்கு வாவழைத்திருந்தான்.

பென்தாவீதன் தான் கொண்டுவந்திருந்த வைரம் முதலிய நவரத்தினங்களையும் ஆபரணங்களையும் எடுத்து ஆல்டிமனுக்குக் காட்டினான். ஆல்டிமனும் அவற்றை ஒவ்வொன்றாய் எடுத்து மிக்க ஆவலுடன் பார்த்தான். ஆனால் அவனுக்கு ஒன்றும் பிடிக்காததுபோல் தள்ளிவிட்டான்; ஆபரணங்களின் விலையைக் குறைப்பதற்கு அவன் சாதாரணமாய்ச் செய்யும் சூழ்ச்சி இதுவென்று யூதன் அறியாமல், அவனுக்கு மெய்யாகவே ஒன்றும் பிடிக்கவில்லையென்று நம்பினான்.

ஆதலால் அரசனைப் பார்த்து, "என் ஆண்டவனே, இதோ இந்த முத்தாரத்தைத் தயவு செய்து பாரும்; ஒப்புவமையில்லா துயர்ந்த ஆபரணம் இதுவென்பதை மறுக்கமுடியாதென்று நினைக்கிறேன்" என்று அந்த முத்துமாலையை எடுத்துக் காட்டினான்.

மாலையைப் பார்த்ததும் ஆல்டிமன் முகம் சிவந்து கண்களில் தீப்பொறி பறந்தது. "யூதா, இம்மாலை உனக்கு எப்படிக் கிடைத்தது?" என்று இடிமுழக்கத்தைப்போல் கூவினான்.

யூதன் பயந்து நடுநடுங்கினவனாய் "ஆண்டவனே, இதை நான் ஒரு கிறீஸ்துவ வீரனிடம் நேற்றையதினந்தான் வாங்கினேன்" என்றான்.

"ஏ! யூதப்பதரே! நீ சொல்வது பொய்! திருட்டுப்பயலே, இந்த முத்தாரம் கிறீஸ்துவ வீரன் கையில் எவ்வாறு போகக்கூடும்? இது சில நாளைக்குமுன் என் மகள் காசில்டாவின் கழுத்திலிருந்ததே. இதை நீ திருட்டுத்தனமாகவே பெற்றிருக்கிறாய்; நீ திருடாவிட்டாலும், யாரோ ஒருவர் இதைத் திருடி உன்னிடங் கொடுத்தாவது இருக்கவேண்டும். ஆதலால் நீ திருட்டுப் பொருள்களை வாங்குகிற கள்ள வியாபாரியென்று தெரிகிறது. அடே யூதா, பல நாளைய திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பதை மறந்தனையோ?"

அந்த நிர்ப்பாக்கிய யூதன் என்ன செய்வான் பாவம்! பயத்தால் நடுநடுங்கித் தன் மனைவியை நினைத்துக்கொண்டான். "ஓ! மிரியாம்! நீ கண்ட கனவு மெய்யாயிற்று!" என்று பெருமூச்செறிந்து தனக்குள்ளே சொல்லிக்கொண்டே, ஆல்டிமனைப்பார்த்து, "என் ஆண்டவனே, நான் இதை திருடவில்லையென்று என் முன்னோரின் தேவனறிய சத்தியமாய்ச் சொல்லுகிறேன். மேலும் நான் நியாயமாய்ச் சம்பாதித்த பொருளென்று உறுதிமொழி கூறி இதை என்னிடம் விற்ற கிறீஸ்துவ வீரர் மிக யோக்கியர். அவர் விஷயத்தில் எனக்கு எள்ளளவுஞ் சந்தேகங் கிடையாது. மேலும் இவ்விஷயத்தில் ஏதாவது சந்தேகமிருப்பதாக என் புத்தியிற் பட்டிருந்தால், நான் இம்மாலையைத் தங்களிடம் கொண்டுவருவேனோ? அப்படிக் கொண்டுவருவது மூடத்தனமல்லவா? இதனாலேயே என் மேல் குற்றமில்லையென்று தெரியவில்லையா?" என்று பதிலுரைத்தான்.

கடைசியில் மொழிந்த வார்த்தைகளால் யூதன்மேல் குற்றமொன்றுமில்லையென்று ஆல்டிமன் தெரிந்துகொண்டிருக்கலாம்; ஆனால் அவன் யூதன் வார்த்தைகளை செவியேற்றுக் கொள்ளாமல், அவனை சிறையிலடைப்பதே சரியென்று தீர்மானித்தான்.

ஆயினும், அக்கொடியோன், வேண்டுமானால் இவ்விஷயத்தைப்பற்றி பென்தாவீதன் தன் மனைவிக்கு எழுதலாம் என்று உத்தரவளித்தான். பின்னர் ஒரு தூதனை அனுப்பித் தன் மகள் காசில்டாவை உடனே டொலிடோ நகருக்கு அழைத்துவரச்செய்தான்.

அவள் அரசன் கோரியவண்ணம் நகருக்குத் திரும்பிவந்து, தன் தந்தையின் கரத்தில் முத்துமாலை யிருப்பதை அச்சத்துடன் கண்டு திடுக்கிட்டாள். நமது கதாநாயகியாகிய காவில்டா துலுக்க வனிதையேயாயினும் மெய்யை மறைக்கும் பழக்கம் அவளிடம் அணுவளவும் இல்லை; எப்பவும் உள்ளதை உள்ளவாறு பேசுஞ் சத்தியவதி; தான் பொய்யை வெறுத்ததுமன்றி, பொய்பேசுவோரையும் வெறுத்துவந்த உத்தமி. ஆதலால் அவள் முத்துமாலை விஷயமாய் நடந்தவை யனைத்தையும் நடந்தவாறு தன் தந்தையிடம் சொல்லிவிட்டாள். ஒரு கிறீஸ்துவ வீரன் சிறையிலடைபட்டிருக்கும் தன் நண்பனை மீட்கப் போதிய பணந் தன்னிடம் இல்லையென்று அவளை யாசித்ததாகவும், அதன்மேல் அவனுக்குத் தன் முத்துமாலையை விற்றுக்கொள்ளும்படி அதை அவனிடங் கொடுத்ததாகவும் விபரமாய் எடுத்துச்சொன்னாள்.

இதைக் கேட்டதும் ஆல்டிமனுக்கு அடங்கா ஆத்திரம் பொங்கி, "என்ன சொன்னாய்? ஒரு கிறீஸ்துவனுக்கா கொடுத்தாய்? நீ சொல்வது மெய்தானா? கிறீஸ்துவனுக்கா? அதுவும் மகம்மதுவின் புத்திரி ஒருவளால்! நாய்களுக்கு முன்னால் நின் முத்துக்களை என் எறிகிறாய்? இந்த முத்துமாலையின் கனகனம் இன்னதென்று உனக்குத் தெரியுமா?" என்று கூவினான்.

"ஆம், தந்தாய், கொடுத்தது உண்மைதான்! ஆனால் அரசர் வெகுமானம் அளித்தால், அது அவர்கள் உன்னத பதவிக்கு உகந்ததாயல்லவோ இருக்கவேண்டும். மேலும் தாங்கள் இகழ்ந்து பேசும் இந்த கிறீஸ்துவர்களும் தங்களாளுகைக்குட்பட்ட குடிகள்தானே.

"காவில்டா, நீ இந்தக் கேவல அஞ்ஞானிகளான கிறீஸ்துவர்கள்மட்டில் மிக்க நேசம் பாராட்டுகிறாய்போலும்! இது உனக்குத் தகாது! இந்தக் கிறீஸ்துவ நாய்கள் நமது தீர்க்கதரிசியால் சபிக்கப்பட்டவர்கள். மேலும் நீ யாருக்கு இந்த வெகுமானம் அளித்தாயோ, அந்த நாய் என் கையில் எவ்விதத்திலாவது அகப்பட்டுத் தண்டனை யடையாமற்போகாது. இது சத்தியம்."

பின்னர் சாரகோசா நாட்டின் அதிபதி காவில்டாவை விவாகம் செய்துகொள்வதாக யோசனை செய்திருக்கும் விஷயத்தைப்பற்றி அவளிடம் சொன்னான். உடனே காவில்டா அத்தகைய கணவன் தனக்கு வேண்டாமென மறுத்ததுடன், அவ்வாறு செய்யாதிருக்கும்படித் தன் தந்தையைக் கெஞ்சி மன்றாடினாள். இதைக் கேட்டதும் ஆல்டிமனுக்குண்டான கோபத்துக்கும் ஆச்சரியத்திற்கும் அளவேயில்லை. அவளை வாயில் வந்தவாறு பேசியும் பயமுறுத்தியும், கோபத்தால் இன்னது செய்வதென்று தோன்றாமல், சரேலென அவளைவிட்டகன்றான்.

காவில்டாவோ பெருமூச்செறிந்தவளாய் தன் விழிகளை வானத்துக்குயர்த்தி, "ஆ! கடவுளே! என் தந்தையின் தீர்மானத்தின்படி யான் நடப்பேனாகில், என் கதி என்னாகும் என்பது நீரே யறிவீர்! ஆச்சர்யத்துக்குரிய விதமாய் என்னிதயத்தில் ஒருவித நல்லுணர்ச்சியை யுண்டுபண்ணிய நீரே, உம்முடைய அளவற்ற வல்லமையால் என்னை நடத்தி, ஒருவித நல்ல முடிவுக்கு என் காரியத்தைக் கொண்டுவருவது உமது பாரம்!" என்று மொழிந்தாள்.

இதேவிதமாய் பென்தாவீதனும் காவற்கூடத்தில் ஜெபித்துக்கொண்டிருந்தான். இவை நடந்த சில தினங்களுக்குப்பின் பென்தாவீதனை ஆல்டிமன் வரவழைத்தான். யூதனிடம் தனக்கு வேண்டிய அளவு பணம் வாங்குவதற்கும், முத்துமாலையை விற்ற வீரனைத் தெரிந்துகொண்டு அவனை எப்படியாவது பிடிப்பதற்கும் ஒரு தந்திரமான யோசனை தனக்குள் செய்துகொண்டு, யூதனைப் பார்த்து, "ஏ! யூதப்பதரே! நகையை நீயே திருடினதாக ஒத்துக்கொள்ளுகிறாயா, இல்லையா? நீ அப்படி ஒத்துக்கொள்ளாவிட்டால், உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று மிக்க கோபங்கொண்டவன்போல் பயமுறுத்தினான்.

"என் ஆண்டவனே! நான் முன்னதாகவே உண்மையைச் சொல்லிவிட்டேனே, என்னை ஏன் இன்னமுங் கஷ்டப்படுத்துகிறீர்கள்? ஒரு கிறீஸ்துவ வீரரிடமிருந்து அந்த முத்துமாலையை நான் வாங்கினேன் என்பது சத்தியம்! எனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! நான் குற்றமற்றவன் என்று சொல்வதற்கு எனக்குள்ள ருசுவெல்லாம் அது வொன்றே! இதைவிட என்னால் ஒன்றும் சொல்லமுடியாது. மேலும் நான் குற்றமில்லாதவன் என்பதற்கு என் முன்னோர்கள் தேவனே சாக்ஷி; அவரே என்னை இந்த ஆபத்தினின்றும் மீள உதவி செய்வார்.

"உன்மேல் குற்றமில்லாவிட்டால், உன் முன்னோர்களின் தேவன் உனக்குச் சாட்சி சொல்லி உதவி புரிவாரென்று நம்புகிறாயா? தானியேலை சிங்கங்களின் வாயினின்றுங் காப்பாற்றியதுபோல், அவர் உன்னைக் காத்து இரட்சிப்பாரா?"

"ஆம், அவர் என்னைக் காப்பாற்றுவாரென்னும் பூரண நம்பிக்கையுண்டு. வயோதிபனாகிய என்னை அவர் கைவிடமாட்டார். ஆம், சுசான்னாளை அக்காலத்தில் காப்பாற்றியதுபோல், என்மேல் வந்திருக்கும் இந்த அபாண்டமான பொய்க்குற்றத்தினின்றும் என்னை அவர்

மீட்பாரென அவர்மேல் நான் முழு நம்பிக்கை வைத்திருக்கிறேன். என்னிடங் குற்றமிருந்தாலல்லவோ, நான் வருந்தவேண்டும். எல்லா இருதயங்களை யறிகிறவரும், நீதி மயமாய் நிற்கிறவருமாகிய கடவுளே என் நீதி யதிபன் !"

ஆல்டிமன் தன் மனதிலுள்ள கெட்ட எண்ணத்தை வெளிக்குக் காட்டாமல் புன்னகை கொண்டான். "பென்தாவீதா, நீ யுரைத்தது போலவே நீ மாசற்றவனென நானே நம்ப முயல்வேன். உன் நம்பிக்கை உண்மையுள்ளதாவென்றும் உன் முன்னோர்களின் தேவன் மெய்யாகவே உன்னை இரட்சிக்க முயல்கிறார் என்றும் அறிய எனக்கு மிக்க ஆசை. தானியேலை சிங்கக் கெபியினின்றும் அவர் காப்பாற்றினார் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அதுபோலவே உன் மாசற்றத்தனத்தைக் காட்ட ஓர் ஏற்பாடு செய்திருக்கிறேன். இது உனக்கு நல்ல தருணம் ! ஒரு சிங்கத்தோடு எதிர்த்துப் போராடவேண்டும். அப்போரில் நீ ஜயங்கொண்டால், உன்னைக் கட்டாயம் விட்டுவிடுகிறேன்."

இவ்வார்த்தைகள் காதில் விழுந்ததும் இடியோசை கேட்ட நாகம்போல் நடுநடுங்கினான் யூதன். "என் ஆண்டவனே! பத்து மனிதரை ஏக காலத்தில் கொல்லக்கூடிய ஒரு சிங்கத்தோடு வயதுசென்ற கிழவனாகிய என்னைப் போராடவிட நினைப்பது கூடாத காரியம். தங்களை பத்து மாதம் சுமந்து பெற்ற அன்னையின் நாமத்தால் கெஞ்சி மன்றாடுகிறேன். என்பேரில் இரக்கமாயிரும் ! அல்லது சாகவேண்டுமென்பது தங்களுடைய தீர்மானமாயின், என் தலையை இரு துண்டாய் வெட்டி யெறியும்படி உத்தரவு செய்வதற்காக தேவனுடைய நாமத்தால் உம்மைக் கேட்டுக்கொள்ளுகிறேன். கொடிய மிருகங்கள் என்னைச் சின்னாபின்னமாய்க் கிழித்தெறியும்படிச் செய்யவேண்டாம்."

"நீ சாகவேண்டுமென நான் விரும்பவேயில்லை. எனக்கு வேண்டியதெல்லாம் நீ குற்றமற்றவன் என்னும் ருசுவே. என் மெய்யான கருத்து இதுவென்று காட்ட நான் ஒன்று சொல்லுகிறேன், கேள்: உனக்குப்பதிலாய் சிங்கத்துடன் போராட ஒரு வீரனைத் தெரிந்துகொள்ள உனக்கு உத்தரவு கொடுக்கிறேன். அவன் வந்து சிங்கத்தோடு பொருதி வெற்றியடைந்தால், உன் முன்னோரின் தேவன், உனக்காகச் சகாயம் செய்தார் என்று நம்ப இடமுண்டாகுமல்லவா ?"

"ஓ! ஆபிரகாமின் தேவனே! ஓர் ஏழை யூதனுக்காகத் தன்னுயிரைக் கொடுக்கச் சம்மதிக்கும் ஒரு வீரனை நான் எப்படித் தெரிந்துகொள்ளக்கூடும் ? எங்கே அகப்படுவான் ?"

"உனக்கு வேண்டிய வீரனைப்பற்றி நீ நெடுநேரஞ் சிந்திக்கவேண்டியதில்லை. நீ முத்துமாலையை மெய்யாகவே ஒரு கிறீஸ்து வீரனிடம் வாங்கியிருந்தால், உன்னை இந்தப் பெருங் கஷ்டத்துக்குள்ளாக்கிய அவ்வீரனையே தெரிந்துகொண்டு, அவனுதவியை நீ நாடலாமே. உன் ஆபத்தை அவன் கேள்விப்பட்டால், சந்தேகமில்லாமல் அவ்வீரன் உன் வேண்டுகோளுக்கிரங்கி, உனக்குப்பதிலாய் சிங்கத்துடன் போர்செய்ய உடன்படுவான்."

இந்த வார்த்தைகளால் யூதனுக்குக் கொஞ்சம் தைரியமுண்டாயிற்று. ஆனால் அது நெடுநேரம் நிற்கவில்லை. சற்றே மௌனமாயிருந்து, அவன் சொல்வான் : "இந்தச் சமயத்தில் அந்த வீரர் எங்கேயிருக்கிறாரோ ? மேலும் அவர் சிங்கத்துக்கஞ்சாதபோதிலும், முத்துமாலையினிமித்தம் தங்களுடைய கோபத்துக்குப் பயப்படுவார் என்பது திண்ணம். சோதோம் கொமோராவை யழித்த நெருப்பைப் பார்க்கிலும் உக்கிரமுடைய தங்கள் கோபாக்கினியை எதிர்ப்பதினும் சிங்கத்தை ஜெயித்தல் மிகச் சுலபமல்லவா ?"

"அந்த வீரன் நமது நாட்டில் பயமின்றி வந்துபோகலாம் என்று உத்தரவளிப்பதுடன், அவன் சிங்கத்துடன் போருதி வெற்றியடைந்து, தான் முத்துமாலையை நியாயவழியில் சம்பாதித்ததாக ருசுப்படுத்திவிட்டால், அவனையும் உன்னையும் உடனே விடுதலைசெய்துவிடுவதாக உறுதிமொழி கூறுகிறேன்."

இக்கடைசி வசனத்தால்தான் நமதிளவல் ஆல்டிமன் கையில் சிக்கிக்கொள்ள வழியுண்டாயிற்று. யௌவன வீரன் நியாயமாய் மாலையைச் சம்பாதித்ததாக ருசுப்படுத்திய போதிலும், கடைசியில் நியாயாதிபதியாயிருந்து தீர்ப்பிடுவது யார்? வாதியாகிய ஆல்டிமனல்லவா? ஆல்டிமனுடைய உட்கருத்தை அந்த நிர்ப்பாக்கிய யூதன் தெரிந்துகொள்ளாமற் போகவில்லை ; உடனே தன் நம்பிக்கையிழந்தவனாய், "நான் தப்பிப்பது முடியாத காரியம்" முடியவே முடியாது என்று கதறினான்.

ஆல்டிமன் அவனை மீண்டும் சிறைக்கனுப்பிவிட்டான். யூதனைச் சிங்கத்துக் கிரையாக்க வேண்டுமென்பது அவன் கருத்தல்ல. அவனுக்கு அச்சமயம் அவசியமானது வீரனை எவ்விதத்திலாவது தன் கைவசம் சிக்கும்படி செய்யவேண்டுமென்பதே. வீரன் யூதனுக்குப்பதிலாய் டொலிடோ நகருக்குள் நுழைந்துவிட்டால், மறுபடி அதைவிட்டு அவன் போக இடங்கொடான் ஆல்டிமன். அதற்கு மாறாய், உடனே பழிவாங்குவது ஆல்டிமனுக்கு முடியாத காரியமாய்த் தோன்றினால், யூதன் விஷயத்தில் எள்ளளவும் இரக்கங் காட்டாமல், அவன் உயிருக்காக அவனிடம் எவ்வளவு பணம் வாங்கக்கூடுமோ, அவ்வளவையும் வாங்கியே தீருவான் என்பது நிச்சயம்.

ஆல்டிமனுடைய யுக்தியென்னவோ தந்திரமானதுதான். ஆனால் மாசற்றவர்கள் தலையில் விழ இருந்த இடி, குற்றவாளியாகிய ஆல்டிமன் பேரிலேயே விழ நேர்ந்தது விந்தையிலும் விந்தையே. அயலானுக்கு வெட்டிய குழி தனக்கே என்பதுபோல், மற்றவர்களை யழிக்க அப்பாதகன் செய்த சூழ்ச்சிகள் யாவும் அவன்பேரிற் பாய்ந்து, அவனை யழிக்குங் கருவிகளாயின.

(இன்னும் வரும்)

ச. செல்வன்.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

சுயராஜ்ஜியம்.

கனம் பத்திராதிபரவர்களுக்கு,

சென்ற மாதப் பத்திரிகையில் சுய வாசு கட்சியை வெறுத்தெழுதிய இரு சந்தா நேயர்கள் குறித்த சிலவிஷயங்களுக்கு சமாதானம் கூறவேண்டியதிருப்பதால் சுயராஜ்ஜிய கட்சியையாவது அதை ஆதரிக்காத எதிர்கட்சியையாவது சேராத யான் வரையும் இச்சிறு கடிதத்தை தங்கள் பத்திரிகையின் ஓர் கோணத்தில் பிரசுரிப்பீர்களென வேண்டுகிறேன்.

பொதுவாக சுயராஜ்ஜியமென்பது பிறப்புரிமை என்றும் தங்களைத் தாமே யாண்டுகொள்ளுதலென்றும் அர்த்தங்கொள்ளும். இவ்வுரிமையை அநுபவிக்க ஒவ்வொரு மானிடப்பிறவிக்கும் சுதந்தரமுண்டு. இச்சுதந்தரமில்லாதவனை மூடவன் என்றே கூறலாம். இதை யாரிடமும் யாசகம் கேட்டு வாங்கக்கூடிய பொருளுமல்ல.

இந்தியர்களாகிய நாம் மட்டும் இவ்வுரிமையை ஜாதி மதபேதத்தால் இழந்து அந்நியர்களால் ஆளப்படுகிறோம். ஆகவே ஆளப்படும் ஜாதியாராகிய நாம் ஆள்வோரிடம் அவர்கள் ஆளுகைக்குள்ளடங்கிய சுய வாசு கேட்கவேண்டியதாயிற்று. இச்சிறு உரிமையை அதிகாரவர்க்கம் ஏதுகாரணத்தாலோ கொடுக்க மறுதலித்து வருகிறது. இதை எத்தகைய முயற்சியாலடையலாமென்பது Mr. காந்தியின் கவலை. ஆகவே அவர் சில காரணங்களால் அடையலாமென்கிற நம்பிக்கைகொண்டு பலாத்காரமற்ற துறையில் இறங்கி வேலை செய்துவருகிறார். அவை அவ்வாறிருக்க,

இந்தியருக்கு சுய வாசு கொடுத்தால் கத்தோலிக்காரகிய நாம் மரியாயின் நாமத்தை மறந்து மயான ருத்திரியை பூசிக்க நேரிடுமென்று மேமீ சஞ்சிகையின் முதலாவது லிகிதர் ஆச்சரியத்துக்குரிய தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். பேஷ்! இவரது உறுதியான வேத விசுவாசம் வெளிப்படையாய்த் தெரிகிறது.

சந்திர சூரியர் தம் நிலைதவறி உதித்தாலும் நமது சத்தியமறை அழியாதென்பது நமது சித்தாந்தம். அதற்கேற்ப நமது சத்திய திருச்சபைக்கு உலகம் உண்டானதுமுதல் நேர்ந்த ஆபத்துக்கள் கொஞ்சமல்ல. எனினும் அதனுடைய பரிசுத்ததன்மை அன்றிருந்தவாறே இன்றளவுமிருந்துவருகிறதே தவிர கடுகளவுங் குறையவில்லை. ஏன்? உண்மைக் கடவுளால் உண்டான திருச்சபையல்லவா? இந்த அற்ப சுய வாசு கிடைத்தால் அது அழிந்துவிடுமோ என்று அவரை நான் கேட்கிறேன்.

2-வது லிகிதராகிய Mr. காஸ்மீர் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தில் நடக்கும் நியாய முறையை வெகுவாய்ப் புகழ்ந்து பேசுவதோடு நில்லாமல் அற்ப காரணங்களைக்கொண்டு சுய வாசு பெற

நாம் பக்குவமடையவில்லை என்கிறார். சரி, இந்தியர்கள்தான் ஜாதி மதபேதத்தால் பக்குவம் அடையவில்லை. ஆதலால் அவர் சொல்வதை உண்மை என்றே வைத்துக்கொள்வோம். ஐரிஷ்காரரில் எத்தனை ஜாதி? எத்தனை மதம்? எத்தனை நிறம்? கூவிப்பார்த்தும், உயிரைக் கொடுத்தும் பொருளைக் கொடுத்தும் இன்னும் கவர்ன்மெண்டார் அமுலாகிய சுயராஜ்ஜியம் நடத்துவதேன்? சுயநலத்தின் பொருட்டல்லவா? இச்சுயநலப் பிரியர்களை நம்பி 400 வருடங்களிருந்தாலும் "அந்த பேச்சு பேசாதே அப்பா, அடுத்த வார்த்தை தொடுத்திடு சுப்பா" என்பார்கள். கப்பலையும் ரயிலையும் தந்தியையும் போட்டுத் தந்த கவர்ண்மெண்டாருக்கு இரண்டகம் செய்யலாமா? என்பதுதான் அன்னவரின் கூற்று. அதே ரயிலில், அதே கப்பலில் தந்தியில் ஏழை ஜனங்களின் பணத்தை வாரிக்கொண்டுபோகலாமா? என்பதே என் கேள்வி? நிற்க, கத்தோலிக்காகிய நாம் ஒரு கட்சியிலும் சேராதிருப்பதே நலமென நம் தலைவர்கள் கூறினால் எல்லோரும் அதன்படி நடக்கத் தடையில்லை. ஒரு கட்சியை தூஷிப்பதென்றால் அது பிரியமான காரிய மாகமாட்டாது. ஏனெனில், கத்தோலிக்காகிய நாம் எல்லா வகுப்பினருக்கும் பொதுவானவர்கள். நமது இலட்சியத்தை சாதிக்க வேண்டுமே தவிர பிராமணக் கட்சி, அல்லாதார் கட்சி என்பதே கூடாது.

Talyiontota, 11—5—21. Ceylon.

இங்ஙனம்,
புலி. M. J. பர்னந்தீஸ்.

கோளும்பு பரதகுல சங்கத்தின் 1920—21-வது வருஷப் பொதுக்கூட்டம்.

கொளும்பு பரதகுல சங்கத்தின், 12-வது வருஷாந்தப் பொதுக்கூட்டம், சென்ற எப்ரல்மீ 24உ ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு புறக்கோட்டை சென்ற் மேரீஸ் கலாசாலை மண்டபத்தில், சங்கத்தின் கௌரவ பிரசிடெண்டாகிய கேப்டன் லேயோ எஸ். மச்சாது, F. R. C. S, D. P. H. Etc. அவர்கள் அக்கிராசனத்தின்கீழ், மிக்க ஆரவாரச் சிறப்புடன் நடைபெற்றது.

சபையின் அங்கத்தினர் 300க்கு அதிகமாய் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே, இலங்கையின் பற்பல இடங்களிலுமிருந்துவந்து மண்டபத்தினுள் குழுமியிருந்தனர்.

திவ்ய இஸ்பிரீத்துசாந்து சர்வேஸ்பரனின் மந்திரம் செபிக்கப்பட்டு, கூட்டம் வெகு விமரிசையுடன் ஆரம்பமாயிற்று. ஸ்ரீமான் ஜோசப் தவத்த அவர்கள், சபா நாயகருக்குப் பூமாலையிட்டதும், சபா மண்டபம் கரகோஷத்தினால் முழங்கிற்று.

கரகோஷம் நின்றதும், கூட்டம் நன்கு நடைபெறவேண்டுமாய் ஆசி கூறி, இந்தியாவிலும், இலங்கையிலுமிருந்து சங்கத்துக்கு நண்பர்களால் அனுப்பப்பட்டிருந்த, தந்திகளையும், கடிதங்களையும் அக்கிராசனாதிபதியவர்கள் வாசித்தனர். அதன்பின் கௌரவ காரியதரிசி ஸ்ரீமான் ஜோசப் பாய்வ அவர்கள், வருஷாந்தர யாதாஸ்தை வாசித்து முடித்ததும், கௌரவ போக்கிஷதார் ஸ்ரீமான் I. X. பெரைரா அவர்களால் சங்கத்தின் வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டு, எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது. அப்பால் கல்துறை பரத ஐக்ய சங்கத்தின், மாஜி காரியதரிசி, ஸ்ரீமான் ஜோசப் மோத்தா அவர்கள் "அபிமானம்" என்னும் விஷயத்தின்பேரில் தக்க மேற்கோள்களுடனும், சொற்சுவை பொருட்சுவைகளுடனும், எவர் மனதிலும் பதியத் தக்கவாறு அரியதோர் உபந்நியாசஞ் செய்தனர்.

வித்துவான் J. R. மிராந்தா அவர்கள், "மனமே உனக்கு எது வேண்டும்" என்னும் அரிய செய்யுளை, அன்பாய்ப் பாடி அரங்கேற்றி அரும் பதவுரையுடன் வியாக்கியானஞ்செய்தனர்.

ஸ்ரீமான் J. M. மொராயிஸ் அவர்கள் ஒற்றுமையின் அவசியத்தைப்பற்றி மிக்க சாதுரியமாய் உபந்நியாசித்தார்.

பிறகு புதிய உத்தியோகஸ்தரின் நியமனம் நடைபெற்றது. ஸ்ரீமான் ஸ்டீபன், வி. மோத்தா அவர்கள் (தூத்துக்குடி) காரியதரிசியாகவும்; ஸ்ரீமான் J. P. A. தமேல் அவர்கள் (வேம்பார்) உப காரியதரிசியாகவும்; ஸ்ரீமரன் லேயோ தெரோஸ் அவர்கள் (மணப்பாடு) பொக்கிஷதாரராகவும்; இன்னும் 37 பேர் ஒரு நிர்வாக கமிட்டியாராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

சபாநாயகர் எழும்பி, நம் ஜனசமூகம் ஒற்றுமையாலும், ஒற்றுமைப்பாலுமேதான் துவக்

கும் கருமங்களை சாதிக்கக்கூடுமென்றும், அவ்வொற்றுமையை ஸ்தாபிக்கவும், நிலைநிறுத்தவும், நம்மவர்கள் வசிக்கும் ஊர்களில் கொழும்பே தக்க இடமென்றும், ஏகோபித்து பொது நன்மைக்காக உழைக்கவேண்டுமென்றும் கூறி, இந்தியாவில் மிஸ்டர் காந்தி யென்பவரால் பரப்பப்படும் "ஒற்றுழையாமை" கட்சியினரோடும், "கிலாபத்" கமிட்டியாரோடும், நம் ஜனசமூகம் எவ்விதத்தாலும் சம்மந்தப்படக்கூடாதென்றும் வெகுவாக வற்புறுத்திப் பிரசங்கித்தனர்.

இறுதியில் ஸ்ரீமான் J. M. மொராயிஸ் அவர்கள், அக்கிராசனாதிபதி அவர்களுக்கும், உபந்நியாசகருக்கும், சங்கத்தை இதுவரை திறமையுடன் நடத்திவந்த உத்தியோகஸ்தருக்கும், சபையோருக்கும், இனிய கீதங்களாலும், பியன்னோ கருவியின் இன்னிசையாலும், சபையோரை உற்சாகப்படுத்திய ஸ்ரீமான் J. N. பாய்வ அவர்களுக்கும் சங்கத்தின்பேரால் வந்தனம் சமர்ப்பித்தனர்.

பாப்பரசரின் வாழ்த்துப்பாடலுடனும், கடவுள் நம்மரசரைக் காப்பாராக என்னும்கீதத்துடனும் கூட்டம் நன்கு முடிவெய்தியது.

கொழும்பு, 9—5—1921.

ஜோசப் பாய்வ,
காரியதரிசி.

மைசூர் அர்ச். சூசையப்பர் அடைக்கலத் திருவிழா.

சங்கைக்குரிய பத்திராதிபரே,

மைசூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த, மைசூர் இராஜதானியில் அர்ச். சூசையப்பர் ஆலயத்தில் வழக்கம்போல், இவ்வருடம் ஏப்ரல்மீ 8உ சாயரட்சை 6½ மணிக்கு கொடியேற்றப்பட்டு, அன்று தொட்டு மற்றும் 9 நாட்களிலும் காலையில் திவ்யபூசையும், மாலையில் தேர் சுற்றுப் பிரகாரமும், பிரசங்கமும் நடத்தப்பட்டு திவ்ய நற்கருணை ஆசீர்வாதமும் அளிக்கப்பட்டது. மைசூர் பங்கு விசாரணைக் குருப்பிரசாதிகளாகிய (Revd. Laurent) சங். லோரான் சுவாமியாரவர்கள், கல்வியிலும், புத்தியிலும், பக்தியிலும் சிறந்து புதிதாய் குருப்பட்டம் தரித்து விசாரணை உதவி குருவாகத் துலங்கி நிற்கும் பிரான்சீஸ் நோரேனா (Revd. Francis Noronha) சுவாமியாரவர்களை, நவநாள் பிரசங்கத்துக்கு தெரிந்துகொண்டார்கள். இவ்வாலிப குருவோ, மனிதனுடைய முக்கிய அலுவலாகிய ஆத்தும இரட்சண்ணியமும், அதை நிறைவேற்ற எத்தனங்களும், மனிதனுடைய கடைசி கதியாகிய சாவும், அதற்குப்பின் சம்பவிக்கும் தீர்வை, தீர்வைக்குப்பின் நல்லவர்களுக்கு மோட்சமும், தீயவர்களுக்கு நரகமும், இவைகளைப்பற்றி தெளிவாயும், பயங்கரமாயும், ஒவ்வொருவரின் இருதயத்திலும் நன்றாய்ப் பதியும்படியாக பிரசங்கித்து, கடைசியில் நல்ல பாவசங்கீர்த்தனத்தைப்பற்றியும் அதின் அதி உத்தமமான பிரயோஜனத்தையும், அதைச் செய்யவேண்டிய முறையையும் வெகு சமர்த்தாய் விளக்கிக்காட்டி, மனிதனுடைய இரட்சண்ணியம் நல்ல பாவசங்கீர்த்தனத்தினால் அடையலாகுமென்றும், இன்னும் பலவாறாக எப்பேர்ப்பட்ட கல்லான இருதயமுடைத்தானவர்களையும் இளகச் செய்யும்விதத்தில், உணர்வாகப் பிரசங்கித்ததை அநேகர் (ஏறக்குறைய எல்லோருமாக) நன்றாய்க் கண்டுணர்ந்தார்கள் என்று சொல்ல கிஞ்சித்தேனும் ஐயமில்லை. இதன்பின் அநேகர் திருநாளுக்கு முந்தின தினமாகிய சனிக்கிழமையன்று சம்மனசுகளின் போசனமாகிய சற்பிரசாத பந்திக்குப்போக நல்ல பாவசங்கீர்த்தனத்தினால் ஆயத்தம்பண்ணினார்கள். மறுநாள் 17உயாகிய ஞாயிற்றுக்கிழமையன்று, காலை 8 மணிக்கு சங். விசாரணைக் குரு சுவாமியாரவர்களுக்கு உதவியாக (Revd. J. B. Argant) சங். ஆர்கோ சுவாமியாரவர்கள் டீக்கனாகவும் சங். பிரான்சீஸ் நோரேனா சுவாமியாரவர்கள் சப்-டீக்கனாகவும் நின்று பெரிய பாடற்பூசை செய்து அநேகருக்கு திவ்யசற்பிரசாத போசனத்தை அளித்து திவ்யபூசையை முடிக்க 10 மணி ஆகிவிட்டது. அன்று சாயரட்சை 6½ மணிக்கு சங். பிரான்சீஸ் நோரேனா சுவாமியாரவர்கள், அர்ச். சூசையப்பர் யார் என்பதையும், அவருக்கு சர்வ வல்லப கடவுளால் அளிக்கப்பட்டிருக்கும் வல்லபத்தையும், திருச்சபைக்கும் குடும்பங்களுக்கும் பாதுகாவலரென்றும், அவரால் அடையக்கூடாத உபகார சகாயங்கள் ஒன்றுமில்லையென்றும், தீர்க்கமாய் எடுத்துக்காட்டினபிறகு, பலவித புஷ்பங்களாலும், வத்திகளாலும் மின்சார விளக்குகளாலும் அலங்காரமாய் ஜோடிக்கப்பட்ட பீடத்தின்பேரில் திவ்ய சற்பிரசாத ஆண்டவர் ஸ்தாபிக்கப்பட்டிருந்த

அரிய காட்சியானது அனைவோரையும் ஆனந்தப் பரவசத்தராக்கிவிட்டது. பிறகு சர்வேசுரனுக்குத் தோத்திரமாக (Te Deum) தேதேயும் என்னும் பாடலையும், திவ்ய சற்பிரசாதத்துக்குரிய பாடல்களையும் பாடி விசாரணை குருப்பிரசாதியவர்கள் டீக்கன் சப்-டீக்கன்களுடன் திவ்ய சற்பிரசாத ஆசீர்வாதம் அளித்தார்கள். கடைசியாக அர்ச். சூசையப்பர் சுரூபம் விசித்திரமும், விநோதமுமான வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்ட ஓர் பெரிய ரதத்தின்மீது எழுந்தருளச்செய்து, முன்னாலே அனேக விசுவாசிகள் அணி அணியாக கையில் ஜெபமாலை ஏந்தி செபித்துக்கொண்டு செல்ல, பாட்டுக்காரர்கள் அருமையான லத்தீன், இங்கிலீஷ், தமிழ் பாட்டுகளைப் பாடிக்கொண்டு ரதத்தின்பின் தொடர்ந்துவர, பாணவேடிக்கைகளுடனும், பாண்டுவாத்தியங்களுடனும், அநேக அஞ்ஞானிகள், துலுக்கர் பதிதர்கள் வியக்கும்படியாய் அதிக ஆரவாரச் சிறப்புடன் திருநாள் கொண்டாட்டம் முற்றுப்பெற்றது.

திருக்குடும்பத்துக்கு தலைவராகிய அர்ச். சூசையப்பரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

Mysore, 20—4—21 } M. S. Iyadoray.

மகிமையிலிலங்கிய அர்ச். சூசையப்பரின் சொர்ண ஜூபிலியின் மகோற்சவச் சிறப்பு.

பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பர் திருச்சபையின் பாதுகாவலராய் நியமிக்கப்பட்ட ஐம்பதாம் வருஷத்திய சொர்ண ஜூபிலி பரிசுத்த பாப்பாரசரின் கருத்துப்படி பெங்களூர் சிடி அர்ச். சூசையப்பரின் ஆலயத்தில் அதிக சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

இவ்வேப்பிரல் மாதம் 13-ந் தேதி புதன்கிழமை மேற்குறித்த ஆலயத்தில் மூன்று குருப்பிரசாதிகளால் ஒரு பெரிய பாடற்பூசை நடைபெற்றது. அந்நாளில் பாப்பரசரின் கருத்தின்படி பரிபூரண பலனை அடைய திவ்யசற்பிரசாதத்தை யுட்கொண்டவர்கள் அநேகம் பேர். மாலையில் திவ்யநற்கருணை ஆசீர்வாதம் முடிவுபெற்றவுடன் "வேனி கிரெயாத்தோர் ஸ்பிரீத்தூஸ்" என்னும் இஸ்பிரீத்துசாந்துவின் கீர்த்தனை பாடி அர்ச். சூசையப்பரின் திருச்சுரூபத்தின் சுற்றுப்பிரகாரம் அதிக வரிசைக்கிரமத்துடன் ஸ்திரிபூமான்கள் அணியணியாகப் பின்செல்ல, பாண்ட் வாத்தியங்களுடன் விமரிசையாய் நிறைவேறிற்று. சங். J. டிசோசா சுவாமியாரவர்களால் அர்ச். சூசையப்பரின் 50-ம் வருஷத்திய ஜூபிலி மஹோற்சவத்தை முன்னிட்டு ஓர் இனிய பிரசங்கம் செய்யப்பட்டபின் "தே ஜோசப், மாக்னிபிகாத், தே தேயம்" என்னும் ஞானகீர்த்தனைகளைப் பாடினார்கள். பிறகு இதற்கென்று போடப்பட்டிருந்த பந்தரில் அர்ச். சூசையப்பரின் திருச்சுரூபத்தை ஸ்தாபித்து, அலங்கார சம்மனசு உடை தரிக்கப்பட்ட ஆறு சிறுபிள்ளைகளால் அவருக்கு வந்தனோபசாரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்பின் அர்ச். சூசையப்பரின் மகிமைகளைக் குறித்து ஓர் இனிய வந்தனோபசாரப் பத்திரிகை வாசிக்கப்பட்டு, இந்த ஜூபிலி ஞாபகார்த்தமாக இதற்கென்று விசேஷமாய் அச்சிடப்பட்ட அர்ச். சூசையப்பரின் திருவுருவப் படங்கள் பக்தர்களுக்குப் பரிசளிக்கப்பட்டன.

"அர்ச். சூசையப்பருக்கு மகிமையுண்டாவதாக" என்னும் வாக்கியம் இங்கிலீஷ் அட்சரங்களில் மின்சார தீபங்களால் பிரகாசிக்கச் செய்யப்பட்டிருந்தது மிக மனோகரமாயிருந்தது. பலவர்ண விளக்குகளைப் பிடித்துக்கொண்டு நூறு சிறுவர்களால் பாண்ட்வாத்தியத்துடன் மிக்க ஆடம்பரமாய் ஒரு பவனி நிறைவேறியது. கடைசியாக வாணவேடிக்கைகளும், ஐம்பதாம் வருஷ மஹோற்சவத்தைத் குறிக்க 50 அதிர்வெடிகுண்டுகள் தீர்க்கப்பட்டன. மேற்கூறிய பவனி செய்த சிறுவர்களுக்கு சங். J. டிசோசா சுவாமிகளால் ஓர் உபசரிப்பு அளிக்கப்பட்டது.

மற்றும் 17-ந் தேதி ஞாயிறுவாரம் காலை 8 மணிக்கு சரி. வந். P. Sigean v.g. சுவாமி அவர்களாலும், சங். Faisandier சுவாமிகளாலும், P. Lazarus சுவாமிகளாலும் ஓர் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டது. பிறகு மைசூர் மேற்றிராசனத்தின் அதிபதியாகிய மிக. வந். H. Teissier ஆண்டவர் அவர்களால் ஆசீர்வாதம் அளிக்கப்பட்டது. அந்நாள் முழுவதும் அர்ச். சூசையப்பரின் ஆலயம் காணிக்கைகளால் நிரப்பப்பெற்று, வாத்திய முழக்கத்தால் சப்திக்கப்பட்டது. அன்று மாலை திவ்யசற்பிரசாத

ஆசீர்வாதம் அளிக்கப்பட்டவுடன் மறுபடியும் பாண்ட்வாத்தியத்துடன் படை மீட்சி சிறப்பும், விளக்கு பவனியும் மஹா சிறப்பலங்காரமாய் நடத்தப்பட்டன. சுமார் 9 மணிக்கு நேர்த்தியாய் சோடினைசெய்த எழு தேர் சுற்றுப்பிரகாரமானது விசுவாசிகள் பின்தொடர, முக்கிய தெருக்களில் சுற்றித் திரும்பவும் ஆலயத்தினுள் பிரவேசிக்க, பாணவேடிக்கைகளுடன் முடிவுபெற்றது.

விளக்கு பவனிசெய்த சிறுவர்களுக்கு மனஉல்லாசத்தை உண்டாக்கும்பொருட்டு சங்கைக்குரிய விசாரணை குரு, P. M. பிரியாண்டு முனிவர்களால் 20-ந் தேதி புதன்கிழமை மாலையன்று ஓர் சிறந்த "Garden Party" எனும் "வனப்போஜனம்" அளிக்கப்பட்டதுடன், திருச்சபையின் பாதுகாவலரான அர்ச். சூசைமாமுனிவரின் மகோற்சவம் இனிது நிறைவேறியது.

Bangalore City, 24—4—21. } R. P. Rasa Pillai.

கடித நேயர்களுக்கு அறிவிப்பு.

"பரதரின் பரிதாபம்".—"பரதன்" பத்திரிகைக்கு எழுதிக்கொள்க.

"வைகை வாசி".—"வைப்பார் வாசகசாலைக் கம்மிட்டியா"ருக்கு நேரே எழுதிக்கொள்க.

"மரியாயின் தாசன்" அவிசாவேல்ல.—உமது வியாசம் மிகவும் நீண்டது. பத்திரிகை இடந்தராது. திருநாள் வைபவங்கள் மிகச் சுருக்கமாய் எழுதப்படல்வேண்டும்.

"பரதன்" கல்துறை.—இதுவும் நீண்டமையால் சுருக்கமாய் எழுதல்வேண்டும்.

தென் இந்திய (ஜாதிபேதமற்ற) கத்தோலிக்கு சகோதர ஐக்கிய சங்கம், திருநெல்வேலி.—அடுத்த மாத சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

பத்திராதிபர்.

மோன்சிஞ்ஞோர் பட்டம்.

பத்திராதிபரே,

இவ்வருஷாரம்பத்தில் சென்னையில் மிகப் பிரக்யாதியுடன் நடைபெற்ற மரியாயின் மகாசங்க விஷயமாய்ப் பிரயாசையெடுத் துழைத்தவர்களுக்கும், நமது சத்திய வேதம் பரவ கத்தோலிக்குப் பத்திரிகைகள், பிரசுரங்கள் ஆகிய இவைகள் விஷயமாய் உழைத்தவர்களுக்கும் நமது பரிசுத்த பிதாவானவர் கௌரதாபட்டங்கள் அளித்தனர் என்றும், அத்தகைய சன்மானம் பெற்றவர்களில் நமது "நல்லாயன்" பத்திராசிரியராகிய சங். எ. ஆர். ஜான் சுவாமிகள் ஒருவரென்றும், அவர்களுக்கு "மோன்சிஞ்ஞோர்" பட்டம் அருளப்பட்டதென்றும் நான் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் பார்வையிட்டேன். சநதாதாரர்களுக்கு மிக்க சந்தோஷத்தைத் தரக்கூடிய இச்சுபசெய்தி நல்ல ஆயனில் காணாமைபற்றி வியசனிக்கிறேன். கௌரதாப்பட்டம் பெற்ற மற்றவர்களைப்பற்றி எழுதியிருந்ததே யொழிய, நமது சங். ஜான் சுவாமிகளைப்பற்றி ஒருவார்த்தையும் எழுதப்படவில்லை. தற்பெருமை சிறிதும் பாராட்டாத மிகத் தாழ்ச்சியுள்ளகுணம் படைத்த நமது சுவாமிகள் தம்மைப்பற்றித் தாமே எழுதுவது அனுசிதமென எண்ணி அதைக் குறியாமல் விட்டார்போலும். அது சரியன்று. கௌரவம் உரியவர்களுக்கு கௌரவம் தரவேண்டுமல்லவோ? உண்மையானது யாதொருவருக்கும் கெடுதி விளைவிக்காதவரையில் அதை வெளிப்படுத்தத்தான்வேண்டும். பத்திராசிரியர் தாமே அதை வெளியிடப் பிரியப்படாவிட்டாலும், இக்கடிதத்தையாவது "நல்லாயனில்" பிரசுரிக்கத் தயைசெய்வாரென அவரை மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

பண்ணுருட்டி, 26—5—21. }

இப்படிக்கு,
எம். பி. மரியதாஸ்.

மிகவும் சங்கைக்குரிய

மோன்சிஞ்ஞோர் எ. ஆர். ஜான் சுவாமிகளின்

வெள்ளி ஜூபிலி நிதி.

"நல்ல ஆயன்" பத்திராசிரியராகிய சங். எ. ஆர் ஜான் சுவாமிகளின் ஜூபிலி மகோற்சவக் கமிட்டியார், தங்கள் வேண்டுகோளுக்கிசைந்து நன்கொடை யனுப்பியுள்ள நண்பர்களுக்கு நன்றியறிந்த வந்தனஞ் செலுத்துகிறார்கள். ஷை கமிட்டியார் கோரியபடி போதுமான நண்பர்கள் நன்கொடை யளிக்க முன்வாராதது விசனத்துக்குரியதாயிருக்கிறது. இப்போதுள்ள ஏறக்குறைய ஈராயிரம் சந்தாதாரர்களில் கமிட்டியார் வேண்டுகோளுக்கிசைந்து நாளதுவரையில் நன்கொடை யனுப்பியுள்ளவர் 411 பேரேயாவர். இன்னுமற்ற நண்பர்களும், குறைந்தபட்சம் இருநூறு போ

வது நன்கொடை யளித்தாலன்றி ஜூபிலி மகோற்சவத்தைத் தக்கபடி கொண்டாட முடியாதென் பதை நண்பர்களுக்கு விநயத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். "செய்வன திருந்தச் செய்" என்பதற்கேற்ப "நல்ல ஆயன்" சந்தாதாரர்கள் மேற்கொண்ட கருமத்தை கூடியவரையில் நன்கு நிறைவேற்றுவதற்கு இன்னும் அதிக நிதி வேண்டும். ஆகையினால் அதிகமான பேர்கள் உதவ வேண்டுமெனக் கோருகிறேன்.

மகோற்சவ தினம்.—கோடைகால விடுமுறையுள்ள பள்ளிக்கூடம், கோர்ட்டு முதலிய ஸ்தாபனங்களிலுள்ளவர்களின் சௌகரியத்தை முன்னிட்டு ஷை ஜூபிலி மகோற்சவத்தை அடுத்த ஜூலைமீ மத்தியில் கொண்டாடலாமென்று கமிட்டியார் உத்தேசித்திருக்கிறார்கள். ஜூபிலி கொண்டாட்ட தினம், காலம் முதலிய விவரங்களடங்கிய சூசிகை அடுத்த ஜூலைமீ முதல் தேதி வெளியாகும் "நல்ல ஆயன்" பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

விசேஷக் குறிப்பு.—ஜூபிலிக்காக நன்கொடை யனுப்ப விரும்புகிறவர்களுக்கு இதுவே கடைசி மாதமாகும். அதாவது, இந்த ஜூன்மீ முடிவுக்குள் நன்கொடைகளை அனுப்பிக்கொள்ள வேண்டும் என்பதை நண்பர்கள் கவனிக்கவேண்டும். ஆனதினால் இதுவே கடைசி வேண்டுகோள். அதன்பிறகு அனுப்பப்படுவது பிரயோஜனப்படாது.

நிதிக் கணக்கு.—வசூலாகும் பூராத் தொகைக்கும் செலவு விவரம் ஒரு காசும் பிசகாது கணக்கு ஆகஸ்டுமீ ப் பத்திரிகையில் வெளிப்படுத்தப்படும்.

2/74, பிராட்வே, மதராஸ்,
28—5—21.

எம். பி. குழந்தைசாமி,
பொக்கிஷதாரன்.

10 ரூபாய்.—கத்தோலிக்கு ரீடிங் ரூம் காரியதரிசி, மெசொபொட்டோமியா.

5 ரூபாய்.—Mr. T. P. S. மூர்த்திப் பிள்ளை, பாக்டாட்; சங். ஆந்திரே சுவாமியார், வடவலூர்; Messrs. கே. தங்கசாமி பிள்ளை, திருமயம்; எஸ். கபிரியேல், கொழும்பு.

3 ரூபாய்.—Messrs. S. சந்தனமுத்து, பினாங்; ஆர். எம். அந்தோனி, குவாலாலம்பூர்; சங். பெல்லாரி கன்னியர்மடத்து சிரேஷ்ட தாயார்.

$2\frac{1}{2}$ ரூபாய்.—Mr. P. A. துரைசாமி நாயகர், ஊர்காம்.

2 ரூபாய்.—Messrs. M. S. பிள்ளை, நாட்டாண்டியா; P. A. ஞானப்பிரகாசம் பிள்ளை, திருவுளர்த் தோட்டம்; F. S. பீற்றர்ஸ், இரங்கூன்; J. M. வியாகுலம, கெகல்லா; மிக்கேல் மொரெல், இரங்கூன்; J. S. பிச்சைமுத்துப் பிள்ளை, காரைக்கால்; பி. ஜியார்ஜ் அந்திக், மஸ்கேலியா; வி. சின்னப்பா பிள்ளை, நந்திதுருகம்; டி. ஐயாசாமி முதலியார், பழவேற்காடு; மிஸ்ஸஸ் அன்னு பிரான்சிஸ், செக்கந்திராபாக்கம்; சங். பால் ஆரோக்கியம் சுவாமியார், புதுவை.

$1\frac{1}{2}$ ரூபாய்.—Mr. R. முத்துப் பிள்ளை, மெசொபொட்டோமியா.

1 ரூபாய்.—Mr. T. S. அருளப்பன், வயலூர்; சங். C. பொன்னுதம்பிநாத சுவாமியார், சங். சவரிநாதர், கூரையபட்டி; Messrs. P. S. முத்துப் பிள்ளை, B.A., L.T., பாளையங்கோட்டை; M. A. இரத்தினசாமி, ஈரோட்; A. S. இஞ்ஞாசி, மாண்டலே; ஸ்ரீமதி அபிஷேகம்மாள், பெங்களூர்; Messrs. A. M. பரிபூரணம் பிள்ளை, இரங்கூன்; D. M. மங்களம் பிள்ளை, கோயம்பத்தூர்; ஸ்ரீமதி சிந்தாத்திரி அம்மாள், ஜார்ஜ்டவுன்; Messrs. S. N. பெர்னாண்டெஸ், திருவநந்தபுரம்; D. ஜோசெப், ஐப்பல்பூர்; G. தொரை, சிங்கப்பூர்; A. தங்கம் செட்டியார், குவாலாலம்பூர்; A. M. இராயலு செட்டியார், ஜார்ஜ்டவுன்; சங். பிரான்சீன் அம்மாள், பெஜவாடா; Messrs. S. T. பெர்னாண்டெஸ், தூத்துக்குடி; K. M. M. மிக்கேல்; B. F. தோமாஸ், குள்ளகம்பி; மிஸ் லில்லி பெர்னாண்டெஸ், திருவநந்தபுரம்; Messrs. ஏ. மரியதாஸ், மாண்டலே; பி. அர்மூடோர், தூத்துக்குடி; பி. எஸ். தமெல், பழையகாயல்; மிஸ்ஸஸ் பி. எஸ். தமெல், பழையகாயல்.

12 அணா.—சங். நொரானா சுவாமியார், பெங்களூர்; Messrs. சின்னப்பையர், திருவுளர்த் தோட்டம்; பிரான்சிஸ் அற்புதம், மையிட்கீனா, பர்மா.

10 அணா.—Mr. S. சூசை ஆரோக்கியம், திண்டுக்கல்.

8 அணா.—Messrs. D. P. ஜொவாக்கீம் பிள்ளை, பண்டதெருப்பு; A. பிரபலசாமி உடையார், மாரனேரி; M. ஜோசெப், பெங்களூர்; அந்தோனிமுத்து, கோக்குடி; T. L. தோமாஸ, பெங்களூர்.

4 அணா.—Mr. பொன்னையாப் பிள்ளை, தென்காசி.

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

வால் நட்சத்திரம்.—இந்த ஜூன்மீ 27-ம் தேதியன்று பூமியானது ஒரு வால் நட்சத்திரத்தோடு மோதிக்கொள்ளப் போகிறதென்றும், அப்போது பூமிக்கு யாதோர் ஆபத்து நேரிடலாமென்றும் ஒரு வான சாஸ்திரி அபிப்பிராயப்படுகிறார்.

ஒரு நூதன பத்திரிகை.—நெடுந்தூரம் போகும் ஆகாய விமானங்களில் கம்பியில்லாத தந்திமூலமாய் வரும் சமாசாரங்களை ஆகாய விமானங்களிலேயே அச்சிட்டுப் பிரசுரஞ் செய்வதற்கு "ஆகாயத் தபால்" என்னும் பத்திரிகை ஒன்றை நடத்திவர லண்டனில் பெரும்பிரயத்தனஞ் செய்கிறார்களாம்.

யூதாஸ்மரம்.—காருண்ய கர்த்தரைக் காட்டிக்கொடுத்த கன்னெஞ்சனான யூதாஸ் நான்றுகொண்டு செத்த மரமானது அதற்கு முன் நற்கந்தம் வீசும் வெண்மலர் பூத்திருந்ததென்றும், அக்கொடிய செயலுக்குப்பின் அது துர்க்கந்தம் வீசும் இரத்தக் கறையையொத்த சிவப்பான புஷ்பத்தைத் தருகிறதென்றும், அதை யூத ஜாதியார் நாளது வரையில் யூதாஸ் மரமென்று அழைக்கிறார்களென்றுஞ் சொல்லப்படுகிறது.

பாப்பானவரின் ஆரஞ்சுபழத் தோட்டம்.—நமது பரிசுத்த பிதாவின் வத்திக்கான் தோட்டத்தில் 10,000 ஆரஞ்சு அல்லது கிச்சிலி மரங்கள் இருக்கின்றனவென்றும், இவ்வருஷம் அவைகள் அபரிமிதமான பழங்களை யளித்தனவென்றும், பரிசுத்த பிதா அப்பழங்களை வருஷந்தோறும் ஐரோப்பாவெங்குமுள்ள தமது விசேஷ சிநேகிதர்களுக்கு அனுப்புவது வழக்கமென்றும் ஒரு ஆங்கிலப் பத்திரிகைமூலமாய்த் தெரிய வருகிறது.

சென்னையில் கத்தோலிக்கு மாணாக்கர் விடுதி.—வெளி ஜில்லாக்களிலிருந்து சென்னைக்கு கல்வி கற்கும் விஷயமாக வரும் மாணாக்கர் ஒரு சிலரே தங்கியிருக்க, அரமனைக்காரர் தெருவிலிருக்கும் அர்ச். கபிரியேல் பாடசாலையில் விடுதி அறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இருக்க இடமேயன்றி சாப்பாட்டுக்கு ஏற்பாடில்லை. ஆனால் அவைகளில் தங்கும் மாணாக்கர்கள் சாப்பாட்டுக்குத் தங்கள் சொந்த ஏற்பாடு செய்துகொள்ளலாம். அதற்காக விசாலமான சமையல் அறையொன்று சித்தப்படுத்தப்பட்டிருக்கிறது. இது விஷயமாய் மற்றும் விவரங்கள் அறிய விரும்புவோர்கள் ஷை பாடசாலைத் தலைவருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

இராயப்பர் காசு.—1920-ம் வருஷத்தில் கிழக்கு இந்திய ஸ்தானாதிபதியின் ஞானாதிகாரத்துக்குள் அடங்கிய தேசங்களிலிருந்து வசூலித்து, அர்ச். பாப்பானவருக்கு அனுப்பப்பட்ட இராயப்பர் காசின் மொத்த தொகை ரூ. 20,062-15-9 என்று தெரிகிறது. அடுத்த வருஷம் அதாவது இந்த 1921 வருஷத்தில் அதிக தொகை வசூலித்து அனுப்ப வேண்டுமென்று ஸ்தானாதிபதியவர்கள் விரும்புகிறார்கள்.

பாப்பானவரும், தேசத்தரசர்களும்.—அர்ச். பாப்பானவரின் இராஜாங்க மண்டபமாகிய "வத்திக்கான்" மாளிகையில், பற்பல தேசத்தரசர்களின் ஸ்தானாபதிகள் தற்காலம் 31 பேர் இருக்கிறார்கள். திருச்சபை உண்டானது முதல் இதுகாறும் வத்திக்கானில் வேற்றரசரின் ஸ்தானாபதிகள் இத்தனை பேர் இருந்ததில்லை. இது, தற்போதிய பாப்பானவராகிய பதினைந்தாம் ஆசீர்வாதப்பருக்குள்ள நடுவுநிலைமையின் திறத்தையும், இராஜ தந்திர நிபுணத்துவத்தையும் நன்கு விளக்குகின்றதல்லவா?

சங். ஹொபேர் சுவாமியார் காலஞ்சென்றார்.—சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்தவரும், அம்மேற்றிராசனத்தைச்சேர்ந்த வெளியூர்களிலும், விசேஷமாய் சென்னப்பட்டணத்திலும் பற்பல பங்கு விசாரணைகளிலும் விசாரணை குருவாகவும், அர்ச். கபிரியேல் பாடசாலைத் தலைமை உபாத்தியாயராகவும், கடைசியாய் அர்ச். சவேரியார் கோவில் பங்கு சுவாமியாராகவுமிருந்துவந்த சங். J. J. ஹொபேர் சுவாமியார், சடுதியில், "அப்பாபிளக்சி" என்னும் உஷ்ண ஜன்னிகண்டு, எவ்வித சிகிச்சையாலுங் குணப்படாமல் மேமீ 27-ம் தேதி காலை 3 மணிக்கு மரணமாயினரென விசனிக்கிறோம். இவருக்கு வயது 57. இவர் தமிழ் படித்தவர், தமிழில் நன்றாய்ப் பிரசங்கஞ்

செய்யவல்லவர். தமக்கு ஒப்புவிக்கப்பட்ட எந்தக் காரியத்தையும், மிகத்திறமையாகவும், கண்டிப்பாகவும் நடத்திவந்தார். இவர் மரித்த அன்று சென்னை யதிமேற்றிராணியார் அவர்கள் இவரது ஆத்தும இளைப்பாற்றிக்காக திவ்யபூசை செய்து ஒப்புக்கொடுத்ததுந்தவிர, அன்று முழுதும் அவர் பிரேதத்தருகேயிருந்து செய்ய வேண்டுவனவெல்லாம்செய்து, அன்று சாயந்திரம் 6 மணிக்கு, அநேக குருமார்கள், திரளான கிறீஸ்துவர்கள் புடைசூழ பிரேதத்தை, அர்ச். ஆரோக்கியநாதர் கல்லறைக்குக் கொண்டுசென்று, நல்லடக்கம் செய்வித்தார்கள். இதை வாசிக்கும் நண்பர்கள் ஒவ்வொருவரும் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி., திரி., வேண்டிக்கொள்ளக் கோருகிறோம்.

ஒரு புது குருவானவர்.—புதுச்சேரி குருமடத்தில் படித்துவந்த சங். எருவ நோயப்ப சகோதரருக்கு சென்ற௴ 21-ம் தேதியன்று சென்னை யதிமேற்றிராணியாண்டவர் அவர்களால் குருப்பட்டம் அளிக்கப்பட்டது. அதற்கு அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று, சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள அர்ச். தெரெசம்மாள் ஆலயத்தில் அவர் தமது முதல் பூசை செய்தார். அப்பூசையில், அவர் தந்தை தம் தநயனின் கரத்தால் திவ்யநன்மை வாங்கினார். இதனால் தந்தைக்கும் தநயனுக்கும் எவ்வளவு ஆறுதல் கிடைத்திருக்குமென்று சொல்ல வேண்டுவதில்லை. இவ்வாறு தமது குமாரர்களிடம் நன்மைவாங்கப் பாக்கியம்பெற்ற தந்தைமார், கத்தோலிக்கருக்குள் வெகு சிலரே; நூற்றுக்குக் கால்கூட காணாது. மேற்றிராணிமார்களை நியமிக்கும் விஷயத்திலும் மற்றும் ஞானாதிகார அலுவல்களைப்பகிர்ந்து கொடுக்கும் விஷயத்திலும் ஐரோப்பியருக்கும், இந்தியருக்கும் யாதொரு வித்தியாசமும் பாராட்டக்கூடாது என்னும் உணர்ச்சி உண்டாயிருக்கு மிக்காலத்தில், அதிக சுதேசக் குருக்கள் அவசியம் வேண்டும்.

ஒத்துழையாமை.—ஒருவருக்கும் தீங்கிழைக்காமல், பலாத்காரமில்லாமல், முரட்டு வழியிலிறங்காமல், சாத்வீகமாய் கவர்ண்மென்டாரை யெதிர்க்கவேண்டுமென்பது மிஸ்டர் காந்தியின் கட்சி. ஆனால் பலாத்காரமற்ற ஒத்துழையாமையானது நாளடைவில் பலாத்காரமுற்ற ஒத்துழையாமையாய் விடும் என்பதில் சந்தேகமில்லை. கவர்ண்மென்டாரை எதிர்ப்பது தகுதியென்று ஒரு பெரிய மனுஷன் உபதேசஞ் செய்துவிட்டால், அதைக் கேட்கும் சிறியோர்கள் (தருமம் அதருமம் அறியாதவர்கள், கல்வி முதிர்ச்சியடையாதவர்கள், வாலிப முறுக்குடையவர்கள்) துணிவுகொண்டு, நன்மையோ, தின்மையோ, சாத்வீகமோ, பலாத்காரமோ, எப்படியோ எதிர்த்துவிடுதல் என்கிற மூர்க்கங்கொண்டவராய் அடாது செய்துவிடுகிறார்கள். சாத்வீக எதிர்ப்பில் சீக்கிரம் பயன் கிடைக்கிறதாகக் காணவில்லை, மூர்க்க எதிர்ப்பில்தான் துரிதத்தில் சுயராஜ்ஜியங் கிடைக்குமென்று ஒத்துழையாமைக்காரர்கள் எண்ணிவிட்டார்கள்போலும். சமீபத்தில் நாகப்பூரில் சாராயக்கடைகளைக் கொள்ளையடித்துச் சேதம்விளைவித்ததற்காக ஒத்துழையாமைக்காரரில் ஐவர் குற்றஞ் சாட்டப்பட்டு, தண்டனை யடைந்தனர். மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் கீழ் கோர்ட்டு தீர்மானம் ஊர்ஜிதஞ் செய்யப்பட்டது. கட்டாக் தேசத்தில், காலேஜ் மாணவனாகிய ஜனானந்த தாஸ் என்பவன் தன் காலேஜ் கட்டிடத்துக்கு தீவைக்க எத்தனித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு 6 மாதங் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான். ஆத்திர புத்தி கொண்ட சிறுபான்மையோர் தற்காலம் இராஜாங்கத்தாரை எதிர்ப்பதானது, அதிக வேகமாய் வரும் பொம்பாய் மெயில் வண்டியாகிய நீராவியந்திரத்தை ஒரு எருது வழிமறித்ததற்கொப்பாகும்.

ஒத்துழையாமைக்காரரால் ஒரு நன்மை.—விசேஷமாய் வட இந்தியாவில் பல கிராமங்களில் ஒத்துழையாமைக்காரரின் முயற்சியால் மதுபானம் அறவே ஒழிந்துபோயிற்றென்று கேட்டு வெகுவாய் சந்தோஷிக்கிறோம். ஆனால் ஒத்துழையாமைக்காரருடைய விசேஷக் கொள்கையாகிய பலாத்காரங் காட்டாமையாலல்ல, பலாத்காரத்தாலேயே ஷை நன்மை சித்தித்ததாகத் தெரிகிறது. மதுபானக் கடைகளின் அருகே நின்றுகொண்டு, அவைகளை நோக்கி வருகிறவர்களை அதட்டி, வெருட்டி யோட்டினதினால் மதுபானிகள் வாராதொழிய, மதுபானக்கடைகள் மூடப்பட்டுப் போயினவென்று தெரிகிறது.

கர்த்தர் உயிர்த்தெழுந்த திருநாள்.—இந்தத் திருநாள் மாறுந் திருநாட்களிலொன்றென்று, அதாவது மார்ச்சு௴ 22-ம் தேதி முதற்கொண்டு ஏப்பிரல்௴ 25-ம் தேதிக்குள் எந்த ஞாயிற்றுக்கிழமையிலாவது மாறி மாறி வருந் திருநாளென்று நம்மவர்க்கு நன்கு தெரியும். இந்த மாறுந்திருநாளை மாறாத திருநாளாக, அதாவது வருஷா வருஷம் யாதொரு குறித்த மாதம், குறித்த தேதியில் கொண்டாடுவதற்கான திருநாளாக மாற்றிவிட வேண்டுமென்று பலத்த முயற்சி இங்கிலாந்தில் நடப்பதாகத் தெரிகிறது. "ஹவுஸ் ஆப் லார்ட்ஸ்" என்னும் பிரபுக்கள் சபையில், டெஸ்பரோ பிரபு அவர்கள், "1922௵ முதற்கொண்டு ஏப்ரல்௴த்தில் வரும் இரண்டாம் ஞாயிறை உயிர்த்த ஞாயிறாக ஸ்தாபிதப் படுத்திவிட வேண்டு" மென்று ஒரு மசோதா சட்டத்தை பிரேரித்திருக்கிறார்கள். இப்படிச்செய்வது, புரோடஸ்டான்டாரைப் பொறுத்தமட்டில் கிரமமாகக் கருதப்படலாமாயினும், கத்தோலிக்காகிய நம்மை பார்லிமென்டு சட்டம் இவ்விஷயத்தில் ஒருகாலும் பாதிக்கமாட்டாது. அதற்கு நாம் கட்டுப்பட வேண்டிய அவசியமில்லை. இவ்வித மாறுதல் செய்ய யோசிப்பவர்கள் கிறிஸ்துவர்களில் பெரும்பான்மையோராகிய கத்தோலிக்கருக்குத் தலைமையாய் விளங்கும் அர்ச். பாப்பானவருடைய சம்மதத்தையும் பெற்று செய்வார்களாகில், கிறிஸ்துவர்கள் எல்லோரும் இத்திருநாளை ஒரே நாளில் அநுசரிக்கலாம். இவ்விஷயத்தில் அர்ச். பாப்பானவரும் பலத்த ஆட்சேபனை செய்வாரென்று எண்ணுவதற்கு இடமில்லை.

உலக சமாதானம்.—உலகமுழுவதையும் ஆட்டி அலங்கோலப்படுத்திய ஐரோப்பா யுத்தம் முடிவடைந்து, சமாதான உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டு இத்தனை காலமாகியும், இதுவரையிலும், சமாதானம் நிலைநிற்குமோ, அல்லது மறுபடியும் சண்டை கிளம்புமோவென்று ஏக்கமுங் கவலையுங் கொள்ள வேண்டியதாயிருந்தது. ஆனால் இப்போது ஐரோப்பாவிலிருந்து கிடைத்துள்ள தந்தி சமாசாரங்களினால், இனி உலகெங்கும் சமாதானம் நிலை கொள்ளுமென்பதற்கு ஐயமில்லை. நேச தேசத்தார் ஜெர்மனியின் ஈடேற்றத்தை யநுசரித்து, யுத்த நிறுத்த உடன்படிக்கையின் ஷரத்துக்களை பெருநோக்காகவே திருத்தியமைத்து அனுப்பிய இறுதிக்கடிதத்தை, ஜெர்மனி மந்திராலோசனை சபையார் ஏற்றுக்கொண்டுவிட்டனர். இனி சண்டைகிடையாது, சமாதானம் நிலைத்துவிட்டது. இனி வியாபாரமும் கைத்தொழிலும் முட்டின்றி விருத்தியாகும். ஜெர்மனியார் ஏராளமான சாமான்களைச்செய்து வைத்துக்கொண்டு ஏற்றுமதிக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இனி கூடிய சீக்கிரத்தில் ஜெர்மன் சரக்குகள் நாடெங்கும் வந்து குவிந்துவிடும்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

புதுவை.

எனது நேய மனையாள் மாணிக்க அரசு என்றழைக்கும் மற்கரீத் ரொஜினா அம்மாள் சில மாத காலமாக கடின வியாதியுற்று யெவ்வித சிகிச்சையாலும் குணப்படாமல் கடந்த ௴ 30௳ நடு இரவு $12\frac{3}{4}$ மணிக்குக் கர்த்தருக்குள் நித்திரையானாள். இவளுடைய சடலம் அன்று சாயரட்சை பூமிதானம் செய்யப்பட்டது. இதை கண்ணுறும் நண்பர்கள் இவளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக 1 பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ள மன்றாடும் நிர்ப்பாக்கியன்,

A. F. SOLOMON,
Government Pensioner,
7—5—21. F. M. S.

பண்ணூர்.

சர்வேசுரன் தயவால் கிடைத்த என் அருமைச் செல்வப்புத்திரனாகிய ஞானப்பிரகாசம் சில மாத காலமாய் வியாதியாயிருந்து, எவ்வித சிகிச்சை செய்தும் குணப்படாமல் கடைசித் தேவத்திரவிய அநுமானங்கள் யாவுங் குறைவறப்பெற்று, 1921௵ ஏப்பிரல்௴ 18-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு, தனது 25-ம் பிராயத்தில், சேசு மரி சூசை எனுந் திவ்ய நாமங்களை யுச்சரித்தவண்ணமாய்ப் பரலோக பிராப்தியடைந்தனன். அவனது ஆத்தும இளைப்பாற்றிக்காக நல்லாயன் நண்பர்களே, எங்கள் உறவினரே, சிநேகிதரே, ஒரு பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ள தங்களைத் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
தநயனை யிழந்து தவிக்கும் துர்ப்பாக்கிய தந்தை
N. இன்னைய ஐயர்,
உபதேசியார்.

பம்பாய்.

கனம்பொருந்திய மூ. கிருஷ்ணசாமி தாவீது அவர்களின் கனிஷ்ட புதல்வியும், பெல்காம் வாசி கனம்பொருந்திய பிச்சை பண்டாரம் சீமோன் பிரான்சீஸ் அவர்களின் நேச மனைவியும், எனது அருமை சகோதரியுமாகிய ரங்கம்மாள் ஜுவான் மேரி 22 வருஷகாலமாக துரைசானிகளிடம் பம்பாயிலும் - சீமையிலும் ஆயா வேலை பார்த்துவருஞ் சமயத்தில் பாண்டுரோகத்தாலோ, வேறென்ன காரணத்தாலோ யானைக்கால் ரோகங்கண்டு எந்த மருந்திலுங் குணப்படாமல் கடைசி தேவத்திரவியானுமானங்களை சங். எல். பாஞ்சோதிநாதர் சுவாமிகளின் கரங்களால் பெற்று சென்ற மார்ச்சு மாதம் 31-ம் தேதி வியாழக்கிழமை இரவு 7½ மணிக்கு இம் மண்ணுலகைவிட்டு விண்ணுலகஞ் சென்றாள். மறுநாள் இவளது சடலம் ஷை சுவாமியவர்களால் வீட்டில் மந்திரிக்கப்பெற்று சிவரியென்ற கல்லறையில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இதனைக் கண்ணுறுங் கிறீஸ்துவ சகோதரரனைவரும் இவளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ளும்படி மன்றாடும்,

சகோதரியை யிழந்து பரிதபிக்கும்,

மி. தே. அந்து.

மின்னல்.

சேலம் சேர்வராயன்மலை ஏர்காட்டில் வசித்துக் காலஞ்சென்ற ஜார்ஜி அவர்களின் குமாரத்தியும், எனது பிரிய மனைவியுமாகிய சற்குண அடைக்கலமரியம்மாள் 1907-ம் வருஷம் என்னைத் திருமணவாளனாய் மாங்கல்யமாலை அணிந்து சுமார் 14 வருஷம் இல்லறத்திற்கும் இனபந்து ஜனங்களுக்கும் ஓர் கதிரவனைப்போல் ஜொலித்து தனது இளவயதில், கர்த்தனருளால் ஓர் ஆண்மகவை ஈன்று வாழ்ந்துவருங்கால், 1921-ம் வருஷம் பெப்ரவரி மாதம் விஷபாண்டு என்னும் வியாதி கண்டு, அவுஷதங்களாலும் வைத்தியர்களாலும் குணப்படாமல், ஆத்தும காரியத்துக்கடுத்த கடைசி தேவத்திரவிய அநுமானங்களைப் பெற்று, சேசு மரி சூசையெனும் திருநாமங்களை ஓயாமல் பயபக்தியுடன் உச்சரித்து, 1921-ம் வருஷம் எப்ரல் மாதம் 22-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு தனது இனஜன பந்துக்களும், கணவனும் கதறி புலம்பி அழும்படியாய்த் தான் ஆசித்துக்கொண்டிருந்த கர்த்தரின் திருப்பாதவடியிற் போய்சேர்ந்தனள். இப்புண்யவதியின் சடலத்தை மறுநாள் காலை Rev. Father L. Sacre குருசுவாமியவர்களும் ஏராளமான கிறீஸ்துவ சகோதரர்களும் சூழ்ந்து பின்தொடர, திருச்சபையின் ஆசாரப்படியே ராயவேலூர் அர்ச். ஆரோக்கியமாதா கோவிலில் நல்லடக்கஞ்செய்யப்பட்டது. இதை வாசிக்கும் எனது சகோதரர் சகோதரிகளே! மரித்துப்போன சற்குண அடைக்கலமரியம்மாளின் ஆத்தும இளைப்பாறுதலுக்காக உங்கள் அநுதின ஜெபத்தில் மறவாது ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ள மிக்க விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

மனைவியை யிழந்து பரிதபிக்கும்,

R. ஞானப்பிரகாசம் பிள்ளை,

Assistant Station Master,

M. & S. M. Ry., Minnal.

ஓர் கோவில் கட்ட தருமம் செய்யுங்கள்!!

செங்கற்பட்டு பங்கு விசாரணைக்குட்பட்ட வாலாஜபாத் என்னும் ஊரில் சுமார் 60 கத்தோலிக்கு குடும்பங்கள் உண்டு. இவர்கள் பரம ஏழைகள். அர்ச். பிரான்சீஸ்கு அசீசியார் பாதுகாவலிலிருந்த இவர்களுடைய சிறிய கோவில் சென்ற வருடம் பெய்த அகோர மழையினால் இடிந்து தரைமட்டமாய்ப்போனதினால், இவ்வேழை ஜனங்கள் ஒன்று கூடி ஜெபஞ்செய்ய இடமில்லாமல் தவிக்கிறார்கள். இதுவரையில் இவர்கள் தங்களூரிலேயே தோல் பதனிடும் ஷாப்புகளில் கூலிவேலை செய்து ஜீவனம் செய்துவந்தவர்கள். ஆனால், இப்போது இவ்வேலையும் நிறுத்தப்பட்டு, ஜீவனோபாயத்துக்கு ஒரு வழியுமில்லாமல் பசியும் பட்டினியுமாய் வருந்துகின்றார்கள். இவர்களுடைய கஷ்டங்கள் ஒருவாறு நீங்க இவர்கள் மத்தியில் ஒரு கோவில் கட்ட தீர்மானித்திருக்கிறோம். இக்கட்டிடம் துவக்கினால், இச்சனங்களுக்கு சிறிது காலமாகிலும் வேலையும் கூலியும் கிடைக்குமென்பதற்கு ஐயமில்லை. ஆகவே, இதனை வாசிக்கும் நண்பர்களே! தர்மிஷ்டரே! கனதனவான்களே! இவ்வேழை மக்களை ஆதரிக்க முன்வாருங்கள். நீங்கள் அளிப்பது "தினைத்துணையாயினும் பனைத்துணையாகப்" "பயனடைவீர்கள். ஏழைகளின் பரம பிதாவாகிய சர்வேசுரன் ஒன்றுக்கு நூறாகச் சம்பாவனை அளிப்பாரென்பது திண்ணம்.

PETER ALOYSIUS,

விசாரணைக் குரு,

செங்கல்பட்டு.

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 19. ஜூலை 1921. இலக்கம் 7.

FEAST OF MOUNT CARMEL.
கர்மேல் உத்தரியமாதா திருவிழா.

கர்மேல் உத்தரிய பக்தியானது கி. பி. 700 வருஷங்களுக்குப்பின் ஆரம்பித்ததென்று தெரிய வருகிறது. அதெவ்வாறெனில், இங்கிலாந்து தேசத்தில் தெய்வபக்தியுள்ள புருஷோத்மர் ஒருவரிருந்தார். அவர் பேர் சிமோன். இவர் தேவ சிநேகத்தில் மிகுந்து, உலோக சந்தோஷ நன்மைகளைப் புறக்கணித்து மனுஷ சம்பாஷணை சந்தடி முதலியவைகளை விட்டு விலகித் தமது பட்டணத்துக்குத் தூரமாயிருந்த ஓர் காட்டிற்சென்று பிரமாண்டமானதோர் மரத்தின் பொந்தில் ஏகாந்தியாய்ச் சீவித்து ஜெபத்தியானங்களையும் தவக்கிருத்தியங்களையும் உத்தமமா யனுஷ்டித்து சர்வேசுரனுக்குத் தொண்டுபுரிந்துவந்தார். இதைப்பற்றி அவ்வூரார் அவரை சிமோன் ஸ்டாக் என்று அழைப்பார்கள். இவர் தேவமாதாவின்பேரில் மிக்க பக்தி கொண்டு அவளை பக்தி யுருக்கத்துடன் நேசித்து அவளுக்கு உகந்த பிள்ளையாய் ஒழுகிவந்தார்.

ஒரு நாள் இவர் தேவமாதாவைப்பார்த்துப், பக்தியுடன் ஜெபித்துக்கொண்டிருக்கையில், பலஸ்தீனாவிலிருந்து இங்கிலாண்டில் சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட இருக்கும் ஒரு புது சபையில் இவரும் சேரவேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. அவ்வாறே மேற்படி புண்ணிய நாட்டுக் கர்மேல் மடத்திலிருந்து சில சந்நியாசிமார் 1205-ம் வருஷத்தில் இங்கிலாண்டில் கர்மேல் மடத்தை ஸ்தாபித்தார்கள். சிமோனும் தேவ ஏவுதல் பிரகாரம் அம்மடத்தில் சேர்ந்தார். சிமோன் ஜெபத்தியானத்திலும் தவக்கிருத்தியத்திலும் எவ்வளவு சிறந்து விளங்கினாரெனில், அம்மடத்துக்குச் சிரேஷ்டராகவும், சில வருஷங்களுக்குப்பின் ஷை சபை மடங்களுக்கெல்லாம் அதிசிரேஷ்டராகவுந் தெரிந்துகொள்ளப்பட்டார். இப்பேர்ப்பட்ட மேலான பட்டத்துக்கு உயர்த்தப்பட்டபின், சிமோன் பட்ட பிரயாசையால், இங்கிலாண்டிலும் ஐரோப்பா தேசமெங்கும் அனேக கர்மேல் சபை மடங்கள் ஸ்தாபகமாகி அவற்றால் எண்ணிறந்த ஞான நன்மைகளுண்டாயின.

1251௵ ஜூலை௴ 16௳ தேவதாயார் ஒரு உத்தரியத்தைக் கையிலேந்தினபிரகாரம் சிமோனுக்குக் காணப்பட்டு, "பிரிய குமாரனே! உன் சபையின் உத்தரியமாகிற இதைப்பெற்றுக்கொள்; இது உனக்காகவும் கர்மேல் மடத்தாரான உன் பிள்ளைகளுக்காகவும் நான் பெற்றடைந்த வரப்பிரசாதத்தின் விசேஷ அடையாளமாகும். இதைத் தரித்

துக்கொண்டு சாகிறவர்கள் நரக நெருப்புக்குத் தப்பித்துக்கொள்வார்கள்' இது இரட்சண்யத்தின் அடையாளமும், அபாயங்களில் ஆதரவும், விசேஷ சமாதானத்தினுடையவும், பரிபாலனத்தினுடையவும் வாக்குத்தத்தமுமாகும்" என்று மொழிந்தாள்.

இந்தத் தரிசனத்துக்குப்பின், சிமோன் முன்னிலும் அதிக பிரயாசைப்பட்டு பெரிய பட்டணங்களிலும் நாடுகளிலும் கர்மேல் உத்தரிய சபையை ஸ்தாபித்தார். இவர் மூலமாக சர்வேசுரன் அனேக புதுமைகளைச் செய்யச் சித்தமானதால், இந்தச் சபை வெகுசீக்கிரம் பரவ, அரசர்களும் பிரபுக்களும் சாதாரண பிரஜைகளும் இச்சபையில் சேர்ந்தார்கள்.

இது நடந்தேறின 50 வருஷங்களுக்குப்பின் தேவமாதா 22-ம் அருளப்பர் என்னும் பாப்பானவருக்குத் தோன்றி கர்மேல் உத்தரிய சபையை ஆதரிக்கும்படி கற்பித்து, உத்தரிய சபையில் சேர்ந்து மரணமானவர்களுடைய ஆத்துமங்களுக்கு உத்தரிக்கிறஸ்தலத்தில் உதவி புரிந்து, அவர்களிறந்த மறுசனிக்கிழமையில் அவர்களாத்துமத்தை அவ்விடத்தில் நின்று விடுதலைசெய்வதாக அறிவித்தாள். அர்ச். பாப்பானவரும் தாம் கண்ட தரிசனத்தை ஒரு பொது நிருபத்தின்மூலமாய் சகல விஸ்வாசிகளுக்குந் தெரியப்படுத்தி அந்தச் சபையாருக்கு அநேக ஞானப்பலன்களை யருளச் சித்தமானார். மற்றப் பாப்புமாரும் திரு உத்தரியத்தைத் தரித்துக்கொள்ள விசுவாசிகளுக்கு புத்திமதி புகட்டி வேறு ஞானப்பலன்களையும் கட்டளையிட்டார்கள்.

கர்மேல் உத்தரியந் தரிப்பவர்கள் பரிபூரண பலன் அடையக்கூடிய நாட்களாவன: 1—அவர்கள் உத்தரியந் தரித்துக்கொள்ளும் நாள், 2—ஜூலை மாதம் 16-ம் தேதி, 3—மரண நேரம், 4—அமலோற்பவமாதா திருநாள், 5—தேவமாதா பிறந்த திருநாள், 6—காணிக்கைமாதா திருநாள், 7—மங்கள வார்த்தை திருநாள், 8—தேவமாதா எலிசபேத்தம்மாளை மினவின திருநாள், 9—தேவமாதாவின் சுத்திகரத் திருநாள், 10—தேவமாதா மோட்சத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திருநாள், 11—அர்ச். சூசையப்பர் திருநாள், 12—அர்ச். சிமோன்ஸ்டாக் திருநாள், 13—அர்ச். அன்னம்மாள் திருநாள், 14—அர்ச். மிக்கேல் சம்மனசு திருநாள், 15—அர்ச். தெரேசம்மாள் திருநாள், இவை முதலிய திருநாட்களில் பரிபூரண பலன் அடையலாம். இதுவுமன்றி அனேக சில்லறைப் பலன்களும் கட்டளையிடப்பட்டிருக்கின்றன.

கர்மேல் உத்தரியத்தின் பக்தி உலகமெங்கும் பரம்பி சகல கிறீஸ்துவர்களும் அதனால் ஞானப்பிரயோசனம் அடையக் கோரி, உத்தரியமாதா திருவிழா நாளாகிய ஜூலை மாதம் 16-ம் தேதியன்று கர்மேல் சபையாரின் கோவிலை கிறீஸ்துவர்கள் எத்தனை விசை சந்தித்து வேண்டிக்கொள்வார்களோ அத்தனை விசைக்கும் பரிபூரண பலனை பரிசுத்த 13-ம் சிங்கராயரென்ற பாப்பானவர் அளித்திருக்கிறார்.

நாம் தரித்துக்கொள்ளும் உத்தரியமானது பலவாறாக அழுக்காகி சீக்கிரத்தில் கெட்டுப்போகிறதினால், அதற்குப் பதிலாக, உத்தரிய சுரூபத்தைத் தரித்துக்கொள்ள 10-ம் பத்திநாத பாப்பானவர் உத்தரவளிக்கச் சித்தங்கொண்டதுடன், உத்தரியத்துக்குக் கொடுத்த சகல பலன்களையும் உத்தரிய சுரூபத்துக்கும் அளித்திருக்கிறார்.

கர்மேல் உத்தரியத்தை தரித்திருக்கிறவர்கள் அனுசரிக்கவேண்டிய ஒழுங்குகளாவன: இச்சபையிலுட்பட்டவர்கள் நாடோறும் தேவமாதாவின் மந்திரமாலை ஜெபிக்கவேண்டும். அதைச் செய்யக்கூடாதவர்கள் 7 பரமண்டல மந்திரம் 7 பிரியதத்த மந்திரம் செபிக்கவேண்டியது. புதன்கிழமையிலும் சனிக்கிழமையிலும் சுத்த போசனம் அனுசரிக்கவேண்டும். அந்த நாட்களில் சுத்த போசனத்தை அனுசரியாவிட்டால், வேறு 7 பரமண்டல மந்திரம் 7 பிரியதத்த மந்திரம் செபிக்கவேண்டும். கடைசியாய், சபையாரனைவோருந் தங்களந்தஸ்துக்குத் தகுந்தபடி கற்பை அனுசரிக்கவேண்டும். இவை எவ்வளவு லேசான ஒழுங்குகள்! இவ்வொழுங்குகளை பெரியோரும் சிறியோரும் புருஷர்களும் ஸ்திரீகளும் வாசிக்கத் தெரிந்தவர்களும் வாசிக்கத் தெரியாதவர்களும் கஷ்டமின்றி அனுசரிக்கலாம்.

உத்தரிய சபையில் உட்பட்டவன் சாகுந்தருவாயில் நரகாக்கினைக்குத் தப்பித்துக்கொள்வானென்னும்தேவதாயாருடைய வாக்கியத்தைக் கேட்கும் அறிவற்ற சிலர்

"யாதாம் ஒருவன் தேவ கற்பனைகளையுந் திருச்சபைக் கற்பனைகளையும் மீறி சகலவிதமான பாவாக்கிரமங்களையுங் கட்டிக்கொண்டபோதிலும், உத்தரியந் தரித்து மரிப்பானாகில் இரட்சிக்கப்படுவானென்பதால் மோட்சம் சூட்சத்திலிருக்கிற"தென்று சொல்லி, பாவ வழியில் மூர்க்கராய் நடப்பார்கள். இப்பேர்ப்பட்ட எண்ணம் தவறானதும் தேவதூஷணமுமான கொள்கையென்பதற்கையமில்லை. ஏனெனில், ஓர் வாலன் நமது கர்த்தரை யணுகி மோட்ச இராச்சியம் போய்ச் சேருவதற்கு நான் செய்யவேண்டியதென்னவென்று வினவியபோது, உன் சர்வேசுரனை உன் முழு இருதயத்தோடும் சத்துவத்தோடுஞ் சிநேகிப்பாயாகவென்று திருவுளம்பற்றினார். இதன்படி சர்வேசுரனை ஸ்நேகிக்கிறவனே அவர் கற்பனைப்படி நடந்து மோட்சப்பிராப்தியாவான். ஆனால் தேவ கற்பனையை மீறி நடப்பவன் சர்வேசுரனை ஸ்நேகிக்கிறானில்லை. ஆகையால் அப்பேர்ப்பட்டவன் பாவத்தோடு மரித்தால் இரட்சண்ணியம் அடையமாட்டான்.

"உத்தரியந் தரித்து சாகிறவன் நரக நெருப்புக்குத் தப்பித்துக்கொள்வான்" என்பதன் அருத்தம் யாதெனில்: உத்தரியந் தரித்தவன் கனமான பாவத்தில் விழுந்தருவாயில், தேவதாயாரின் வேண்டுதலால், சர்வேசுரனுடைய உதவி வரப்பிரசாதத்தை அடைந்து அந்தப் பாவத்தில் விழாதபடிக்கு நல்லுணர்ச்சிகளை அவன் கிடைக்கப்பெறுவான். அவன் ஒருகால் தேவ ஏவுதலுக்குக் காதுகொடாமல் அதில் விழுந்தால், அதைக் கூடியசீக்கிரத்தில் விட்டொழிக்கும்படியான தேவசகாயம் அவனுக்கு அருளப்படும். அவன் அதற்கும் இணங்காமல் பாவத்தில் மூர்க்கனாய்ச் சீவித்து இறப்பானாகில், அவன் தரித்திருக்கும் உத்தரியத்தால் அற்ப பிரயோசனமுமின்றி நிற்பாக்கியனாவான். இந்த உண்மையை நமதிருதயத்தில் நன்றாய் ஊன்றச்செய்ய 15-ம் ஆசீர்வாதப்பரென்னும் அர்ச். பாப்பானவர் திரு உத்தரியத்தைப் பற்றி பிரசித்தப்படுத்தியிருப்பதை இங்கு எடுத்துக்காட்டுவோம்.

"தேவதாயார் அர்ச். சிமோன்ஸ்டாக் என்பவருக்கு தரிசனையானது மெய்யான விருத்தாந்தமென்று நாம் உறுதியாய் நம்பியிருப்பதுபோல், சகல கிறீஸ்துவர்களும் அதை நம்பவேண்டும். உண்மையான இந்த தரிசனைப்பிரகாரம், உத்தரியந் தரித்து சாகிறவர்கள் தேவ கிருபைபெற்று நரக நெருப்பினின்று காப்பாற்றப்படுவார்கள். ஏனெனில் பரிசுத்த கன்னிமரியாயி தமது வாக்குப்பிரகாரம், உத்தரிய சபையில் சேர்ந்த தமது பக்தர்கள் தேவ இஷ்டப்பிரசாதத்தில் நிலைக்கொள்ளவும், அல்லது பாவத்தை விட்டு மனந்திரும்புவதற்கான வரப்பிரசாதத்தைத் தமது திருக் குமாரனிடம் மன்றாடி அடைந்தருளவாளென்றும் நம்புகிறோம். ஆனால் சாகுமட்டும் பாவ வழியில் மூர்க்கராய் நடக்கும் பாவிகளுக்கு மேற்கூறிய சகாயங் கிடைக்காது. தேவதாயாராகிற பரிசுத்த கன்னிகையின் காருண்ய சனுகை திரஸ்கரிக்கிறவன் நூறு உத்தரியங்களைத் தரித்திருந்தபோதிலும் நரக நெருப்புக்குத் தப்பித்துக்கொள்ளமாட்டான்" என்று கூறியுள்ளார். ஆகையால் பாக்கியமான மரணமடைய விரும்புகிறவர்கள் திரு உத்தரியத்தைப் பக்தியுடன் தரித்து, உத்தரிய சபையின் ஒழுங்குகளைப் பிரமாணிக்கமாய் அனுசரித்துத் தர்ம வழியில் ஒழுகக்கடவார்கள்.

தேவதாயாருடைய வார்த்தையை உறுதியாக நம்பி, பாப்புமாரும் மேற்றிராணிமாரும் குருக்களும் கணக்கில்லாத கிறீஸ்துவர்களும் திரு உத்தரியத்தை இரவும் பகலும் பூச்சியமாய்த் தரித்துவருகிறார்கள்.

திரு உத்தரியத்தால் எத்தனையோ பேர் பாவத்துக்குத் தப்பித்துக்கொண்டார்கள். ஜலம், நெருப்பு முதலிய விபத்துகளினின்று காப்பாற்றப்பட்டார்கள்! போர்க்களத்தில் எத்தனையோ சேவகர் உத்தரியத்தால் சாவுக்குத் தப்பித்துக்கொண்டார்கள்! துஷ்டமிருகங்கள், விஷஜந்துக்களினின்று காப்பாற்றப்பட்டவர்கள் எத்தனையோ பேர்!

ஆகையால், ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் அநேக நன்மைகளைப் பொழிந்து கடைசியாய் நரக நெருப்புக்குத் தப்புவிக்கச்செய்யும் தேவதாயாரின் போர்வையாகிற இந்த திரு உத்தரியத்தை நாம் பூச்சியமாய்த் தரித்துக்கொண்டு, உத்தரிய சபையின் ஒழுங்குகளைப் பிரமாணிக்கமா யனுசரித்து, நல்ல கிறீஸ்துவர்களாய் மரிப்போமாகில் தேவமாதாவின் வார்த்தைப்பாட்டின் பலத்தால் நித்திய நரக நெருப்பினின்று காப்பாற்றப்படுவோம்.

ENCOURAGING THE DIVINE VOCATION.

தேவ ஊழியத்திற்கழைக்கப்படுகிறவர்களை ஆதரித்தல்.

(மரியாயின் மகா சங்கத்தின்போது உபந்நியாசிக்கப்பட்டது.)

நன்கோடை.

(முன் தொடர்ச்சி.)

தேசாபிமானம் பற்றியெரியும் இக்காலத்தில்—சுயராச்சியம் ஒலிக்கும் இக்காலத்தில் — இந்திய குருக்கள் வேண்டுமென்று அபயமிடும் இக்காலத்தில்—இந்திய மேற்றிராணிமார்களே எங்களை ஆள வேண்டுமென்னும் அபிலாசை முளைத்துள்ள இக்காலத்தில்—நம்மிந்தியாவில் திருச்சபை யபிவிருத்தியாவதற்கு அடிப்படையாயுள்ள தேவ ஊழியர்களை ஆதரிக்க நாம் முன்வராவிடில் நாம் எண்ணுவதும் பேசுவதும் வீண் மனோராச்சியமே. நாம் உரத்தி யுரத்தி ஓலமிட்டுக் கிரிகைகளினால் நமது மதாபிமானத்தையுந் தேசாபிமானத்தையுங் காட்டாவிடின் யாது பிரயோஜனம்? எல்லாம் ஆகாயக்கோட்டையேயாம், அல்லது கானல் நீராம்.

இதுகால்பரியந்தம் ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களினின்று பொருள் உதவி அபரிமிதமாய் வந்துகொண்டிருந்தனவென்று சொல்வது மிகையாகாது. இன்னுமா நாம் அவர்களது உதவியை எதிர்பார்த்திருக்கவேண்டும்? நமக்கு சுயமதிப்பில்லாதுபோயிற்று! இந்திய கிறீஸ்துவர்களில் பெரும்பாலார் எழைகளே. ஆயினும் தனவந்தரும் இல்லையென்று சொல்லத் துணியமுடியாது. அது எப்படியாயினும், எத்தரத்தாரும் மனம் வைத்தால், வேதவைராக்கியம் அவர்களிடம் இருக்குமானால், தேசாபிமானத்தால் தூண்டப்பட்டால் எவ்விதத்திலாவது எல்லாரும் உதவி செய்யக்கூடும். "உனக்கு மிகுதியான சம்பத்திருந்தால் ஏராளமாய்க் கொடு. கொஞ்சமாகின் கொஞ்சங் கொடு." அற்பமாகிலும் கொடுக்கக்கூடியவர்கள் நம்மத்தியில் இல்லையென்பது உண்மையாகாது. ஐரோப்பாவில் மும்முரமாய் வேலைசெய்துவரும் விசுவாசப் பரம்புதல் சபை, விசேஷமாய் பரிசுத்த பாலர் சபைகள், எளியோராலேயே போஷிக்கப்பட்டுவருகின்றனவென்று சொல்லப்படுகிறது. அமெரிக்கா அந்நிய போதக சபை மேரினால் என்னுமிடத்தில் சில வருஷங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்டுளது. அங்கிருந்து சீன தேசத்திற்கு குருக்கள் போயிருக்கின்றனர். அப்புதிய சபை துரிதமாய் விருத்தியடைந்துவருகிறது ஓர் ஆச்சரியமாயிருக்கின்றது. ஏன் அப்படி? பண உதவியைக்கொண்டுதான். எங்கிருந்து பணம் பெரும்பாலும் வருகிறது? தனவந்தரிடமிருந்தா? இல்லையென்றே சொல்லவேண்டும். "பில்ட் அபார்" என்னும் பத்திரிகையில் 1921௵ ஆக்டோபர்௴ சஞ்சிகையில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது:

"ஓர் தனவந்தரின் கேள்விக்கு நம்முடைய மறுவுத்தாரம் என்னவென்றால். மெய்யாகவே தனவந்தரிடமிருந்து சொற்ப உதவியைப் பெற்றுள்ளோம். இந்தச் சபை துவக்கப்பட்டகாலத்தில் தனவந்தர்களில் 25 பேர் நமக்கு உதவி செய்தார்கள். Fr. Price அவர்களைப்போய்ச் சந்திக்க முன்வந்தார். அவர்களிடம்போய் பொருள் பெற்றுவருவதற்காக பல தடவைகளில் பிரயாணஞ்செய்து காலத்தை யிழக்கவேண்டியதாயிற்று. கடைசியாகக் கிடைத்த பலன் என்ன 25 டாலரே! அதிலிருந்து தனவந்தர்களைத் தேடிப்போகப் பிரயத்தனப்படவில்லை. விசுவாசத்தில் நிரம்பி உலக செல்வத்தில் குறைந்துள்ளவர்களிடமிருந்தே ஆரம்ப உதவி பெறவேண்டியதென்று கடவுளுக்குச் சித்தமாயிற்று. மனமுவந்து கொடுக்குங் கொடையோடு அவர்களது ஜெபமும் தொடர்ந்துவந்து இந்தச் சபையின் மட்டில் பிரீதியை யுண்டாக்கி அதன் பயனால் தேவ அழைப்பு அதிகரிக்கவும், பொருளுதவி பெறவும் ஏற்றதென்பதை யுணர்ந்து திருப்தியடைந்துள்ளோம்."

அப்படியானால் எளியோராகிய நாமும் நம்மாலியன்ற அளவு உதவி புரிய பின்வாங்கலாகாது. பல துளி பெருவெள்ளமன்றோ? நம்மிடத்தில் இதுகாரியத்தின்மட்டில் பற்றுதலிருக்குமேயானால் ஐயமற உதவி செய்வோம். நம்மிந்தியாவில் சிலர் சமயம் நேர்ந்தபோது வேத விஷயமாய்ப் பண உதவி புரிந்துள்ளாரென்பது வாஸ்தவம். ஆனால் எல்லொரும் தேவ ஊழியர்மட்டில் ஊக்கமுடன் உழைப்பின், மனமுவந்து இயன்ற அளவு அளிப்பின் எவ்வளவோ நன்று. திருநெல்வேலியிலுள்ள C. M. S. புரோட்டெஸ்டாண்டு கிறீஸ்துவர்கள் தொகையிலுஞ் சம்பத்திலும் கத்தோலிக்கருக்கு மேலானவர்களல்ல. ஆயினும் அவர்கள் தமது சொந்தப்பொருளைக்கொண்டே தமது போதகர்களையும் கோவில்களையும் பராமரித்துவருகின்றனர். இதுமட்டுமன்று. தெலுங்கு நாட்டில் புதிதாய் எற்படுத்திய தோர்னக்கல் மிஷனையும் ஆதரிக்கின்றனர். அவர்கள் அவ்வளவு செய்யக்கூடுமாயின் நாம் அதைவிட அதிகமாய்ச் செய்யலாமென்றால் பொய்யாகுமோ?

பொருள் ஸ்தாபனம் ஏற்படுத்த நம்மிடத்தில் பணமில்லையென்று சொல்லமுடியாது. ஏனெனில் தென்னிந்தியாவில்மட்டும் நிலபுலம் உள்ளவர் அநந்தம்பேர். தகுந்த உத்தியோகம் வகித்துள்ளவருமுளர். வியாபார துறைகளில் க்ஷேமமாய் ஊழியந் தேடுவோர் சொற்பமல்ல. பின்னும் எல்லோரும் ஏராளமாய்க் கொடுக்க வேண்டியதில்லையே! கொடுக்கக்கூடியவராயினும் கொடுக்க மனசில்லாதவர்களென்றுஞ் சொல்லமுடியாது. ஏனெனில், திருநாள் பெருநாள் உற்சவ நாட்களில் எவ்வளவு பணம் செலவிடுகிறார்கள். ஆனால் நமக்குள் முக்கியமாய் (Organization) முயற்சியும் இயக்கமும் உண்டாகவேண்டியது. நிதிஸ்தாபனத்திற்காக ஒழுங்கோடும் கட்டுப்பாட்டோடும் உழைக்கவேண்டும். அப்போது சாத்தியமாகும். அமெரிக்காவில் 1920௵ அந்நியதேசத்தில் வேதம் போதிப்பதற்காக 110,000,000 = 11 கோடி டாலர் (22 கோடிக்கு அதிகமான ரூ) மெதடிஸ்ட் சபையார் சில மாதங்களுக்குள் வசூலித்தனர். அவ்வளவு பாரித் தொகை சேர்க்க நம்மால் இயலாதுபோயினுங் கொஞ்சமாகிலுஞ் சேர்க்கலாம். மரியாயின் சங்கத்திற்காக 40,000 ரூ ஏறக்குறைய 1 வருஷத்துக்குள் எப்படி சேர்க்கப்பட்டது? கத்தோலிக்கு சத்தியாபிமான சபைக்குப் பொருள் எப்படி சேர்க்கப்பட்டது? அதுபோல் அதிகாரிகள் தூண்ட, நாம் முயல, எல்லாம் இலகுவாகும்.

ஒவ்வொரு கத்தோலிக்கனும் வருஷமொன்றுக்கு 1 அணாவாகிலுங் கொடுக்கவேண்டும் எனும் நிபந்தனை டயஸிசில் இல்லை. இஃது இந்தியா முழுமையுமே ஏற்படுத்தப்படவேண்டும். ஒரு டயஸிசில் 50,000 கிறீஸ்துவர்களானால் ஒரு ஆளுக்கு ஒரு அணா வீதம் வருஷத்திற்கு 3,750 ரூ. 10 வருஷங்களுக்கு வட்டியோடு 50,000. இது பொது நிதியாக இருக்கட்டும். பின் வருஷங்களில் வருந் தொகை இதோடு சேர்க்கப்படவேண்டியது. இத்தொகையிலிருந்து வரும் வட்டியைக்கொண்டு தேவ ஊழியர்களை சவாக்ஷணை செய்யவேண்டும். வட்டி வருஷம் ஒன்றிற்கு 2,500 ரூ. அதில் 500 ரூ கன்னியர்களாவோர்க்கு சீதனமாக அளிக்கலாம். ஒருவருக்கு 250 ரூ வீதம் வருஷமொன்றுக்கு 2 பேரை மடத்துக்கு அனுப்பலாம். எஞ்சிய 2,000 ரூ மாதம் 25 ரூ வீதம் 7 மாணக்கரைக் குருவந்தஸ்திற்குப் படிக்க வைக்கலாம். நிதியும் வட்டியும் ஏற, ஏற, மென்மேலும் தேவ ஊழியரை அதிகமாக்கலாம். 50,000 கிறீஸ்துவர்களிருந்தால் 10,000 தலைக்கட்டு. தலைக்கட்டு 1க்கு 1 ரூ வீதம் வருஷம் 1க்கு 10,000 ரூ. வட்டியோடு 10 வருஷத்திற்கு 115,000 நிதி. அதின் வட்டி 5,750; குருக்களுக்கு 4,000, 14 பிள்ளைகளை மடத்திற்கனுப்பலாம். கன்னியர்களுக்கு 1750 ரூ. ஒவ்வொருவருக்கு 300 ரூ வீதம 5 அல்லது 6 பெண்களை மடத்திற்கனுப்பலாம். மற்றோர் வழி. ஒவ்வோர் பங்கிலும் குருமட நிதி சேகரிக்குஞ் சபை என்று ஓர் சபை ஏற்படுத்தவேண்டும். அவற்றின் அங்கத்தினர் வருடம் ரூ 1 கொடுப்பது கடமையாகும். இந்தச் சபையில் சேரும்படி கிறீஸ்துவர்களைத் தூண்டுவது பங்கு சுவாமிமார்கள். சிரத்தை செலுத்தினால் கோரிய கருமஞ் சித்திபெறும். பிராஞ்சு தேசத்தில் தற்போது இப்பேர்க்கொத்த சபையை யுண்டுபண்ணி, எல்லா மேற்றிராணிமார்களும் அதை ஆதரித்துவருகிறார்கள். அவர்களது நல்முயற்சியால் பல்லாயிரம் பேர் சேர்ந்துள்ளனர். ஒவ்வொருவரும் வருடம் ஒன்றுக்கு 1 பிராங்கு (ஏறக்குறைய 8 அணா) தான் கொடுக்கிறார்கள். அப்படிச் சேருந் தொகையைக்கொண்டு 500 புதின பத்திரிகைகள் நடைபெறுகின்றனவாம்.

இத்தொகையை எப்படி வசூலிக்கிறது? அதற்கு உகந்த வழி ஒவ்வொரு பங்கிலுமுள்ள குருவானவர் எடுக்கும் முயற்சியே. அசட்டையாயிருப்போரின் வரியை அக்குடும்பங்களில் நேரி

டுஞ் சுபாசுப காலங்களில் சேகரிப்பது கஷ்டமல்ல. அல்லது இந்நிதிக்காக மாதம் ஒரு முறை முன்னரே சொல்லிவைத்து ஞாயிறுவாரங்களில் தண்டல் பண்ணலாம். கத்தோலிக்கருக்கு தேவ ஊழியரை யாதரிக்கவேண்டிய கடமையை நன்கு விளக்கிக்காட்டி, இந்தக் கிளர்ச்சியை எழுப்பியபின் சர்வேசுரனது உதவியை இரந்து மன்றாடித் தண்டல்செய்யத் துவக்குவோம்; தடையின்றி சித்தி பெறுவோம்.

இந்தியா முழுதுந் தேர்ந்த குருக்களையனுப்ப, 13-ம் சிங்கராயர் கண்டி மாநகரில் ஓர் பெரிய குருமடத்தை ஸ்தாபித்தார். விசுவாசப் பரம்புதல் சபை அதின் விர்த்தியின்மேற் கவலைகொண்டுள்ளது. அச்சபையே மடத்துக்குப் பொருளுதவி கொடுத்தாதரிக்கின்றது. ஆனால் தற்சமயம் பிரதேசக் காசு மாற்றுதலில் பணங் குறைவாய்க் கிடைப்பதால் பணம்வந்தும் முழுப் பிரயோஜனமாயில்லை. அதற்காக அம்மடத்துக்குத் தலைவர் மடத்தை யாதரிக்க கஷ்டப்படுகிறார். பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இதையறிந்து 15-ம் ஆசீர்வாதப்பர் 50,000 Livres தானங் கொடுத்துள்ளார். அது இக்காலத்திய மாற்றுதலுக்கு 8,000 ரூ.க்கு குறையும். ஆகையால் அது இங்கு வரவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் இந்தியர்களாகிய நாம் அம்மடத்தை கைநெகிழ விடக்கூடாது. திருச்சபை யதிகாரிகளும் விசேஷமாய்க் குருக்களும் 9,000 ரூ. வரையில் ஈந்துள்ளார். சில கனதனவான்களுங் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்திய கத்தோலிக்கர் ஒருமிக்கக் கொடுக்கவில்லையென்றே சொல்லவேண்டும். ஆகையால் ஸ்திரீ புமான்கள் இம்மடத்தின்மட்டில் கிருபைகூர்ந்து உங்களாவியன்றயதை உதவி செய்யுங்கள். தேர்ந்த இந்திய மக்களே உங்கள் மத்தியில் தேவ ஊழியஞ் செய்ய விரும்புகிறீர்களென்று உங்களது தாராள கொடையாற் காட்டுங்கள்.

ஸ்திரிபுமான்களே! உங்களது மதாபிமானத்திலுந் தேசாபிமானத்திலும் முழு நம்பிக்கை கொண்டு நீங்கள் கொடுப்பீர்களென்று உறுதியாய் நம்புகிறேன். ஆகையால் பின்வாங்காதேயுங்கள். தாராளமாய்க் கொடுங்கள். தர்மம் தலைகாக்கும். தேவ ஊழியர்கள் புரியும் எண்ணற்ற நன்மைகளிலும் பலனடைவீர்கள். உங்களது ஜெபதான தர்மங்களால் தேவ ஊழியர்கள் தழைத்து அவர்களால் சர்வேசுரனது இராச்சியம் இந்தியாவிற் பெருகி விர்த்தியடைய கருணையக் கடவுள் கண்ணோக்குவாராக.

முற்றிற்று.

L. D. S. M.

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

11-ம் அதிகாரம்.

உண்மையான தடை — அத்தடையை முறிக்க அர்ச். மோனிக்கம்மாள் சுசீலத்துடன் எடுத்துக்கொள்ளும் அரும் பிரயாசைகள்—அகுஸ்தீன் ஆத்துமத்தில் விசுவாசத்தின் உதயம்.

(முன் தொடர்ச்சி.)

அவருடைய வைப்பாட்டி விஷயமாய் சரித்திரத்தில் நாம் ஒன்றுங் காணவிட்டாலும், அவளது விதனமும் வியாகுலமும் அச்சமயத்தில் எப்படியிருந்திருக்குமென்று நிதானிப்பது சுலபம். இத்தனை வருஷபரியந்தம் தன்மட்டில் பற்றுதல்கொண்டிருந்த அகுஸ்தீன் தன்னைவிட்டு நீங்கியபிறகு அவள் தேவ வரத்தினால் தூண்டப்பட்டு உலக பாச பற்றுதல்களைத் துறந்து, கடவுள் பாரிசமாய் முற்றிலும் தன் எண்ணங்களைத் திருப்பினாள். மேலும் ஒரு மடத்தில் சேர்ந்து தான் பதினைந்து வருஷகாலம் அகுஸ்தீனுடைய இருதயத்தை அடிமையாக்கிக்கொண்டு அவரது புத்தி சூட்சமத்தினாலும் மனோசக்தியினாலும் திருச்சபைக்கு உண்டாகவிருந்த மகிமைப்பிரதாபத்தைப் தடைப்படுத்தினதற்காகத் தனக்குக் கடவுள் பொறுத்தல் அளிக்கும்படியாக மீதியான தன் ஆயுசு நாட்களை ஜெபத்திலும் தவத்திலும் செலவழித்தாள். அர்ச். அகுஸ்தீன் சொல்வது "அவள் புண்ணிய வொழுக்கத்தில் காட்டிய தைரியத்தையும், கடவுள்மட்டில் காட்டிய உதாரகுணத்தையும் கண்டுபாவிக்க என்னால் ஏலாமற்போயிற்று. என்னைவிட அவள் உத்தமியென்பதற்குச் சந்தேகமில்லை."

இந்தப் பெண்பிள்ளை அகுஸ்தீனைவிட்டுப் பிரிந்ததற்காக அர்ச். மோனிக்கம்மாள் தன் முழு இருதயத்துடன் கடவுளுக்கு நன்றிசெலுத்தி, இனிமேல் காரியங்கள் யாவும் அநுகூலமாய் முடிவுபெறுமென்று நம்பிக்கையுடன் காத்திருந்தாள். அகுஸ்தீனுடைய ஆசாபாசங்கள் இப்போது அமர்ந்தன. தன் வைப்பாட்டியை விலக்கி கடவுளுக்காக இந்தப் பரித்தியாகம் செய்தபிறகு, அவர் சத்தியத்தை நாடி நல்லொழுக்கத்தை யநுசரிக்கத் தடையானதொதுவுமில்லை. இதை யோசிக்கும்போது அவர் சீக்கிரத்தில் கத்தோலிக்கு மதத்தைத் தழுவுவாரென்று மோனிக்கம்மாள் மனதில் நம்பிக்கை பிறந்தது. இந்த நம்பிக்கையை யடைய அவள் பட்டபாடு எத்தனை? கொண்ட ஆவல் எவ்வளவு? அநுபவித்த விதனம் எம்மட்டு? புரிந்த ஜெபம் என்ன?

மேலும் இரண்டு புசல்கள் மோதியடிக்கும்போது மேகங் கிழிந்து மழை பொழிவதைப் போல், இக்காலத்தில் ஒரு சமாதானக்கதிர் அவரது ஆத்துமத்தில் இறங்கவே, அது இதுவரைக்குமில்லாததான ஓர் நிலைமையை யடைந்தது. அவரது தாயார் முகம் ஆனந்தத்தினால் கதிர்விட்டு வீச, அவரது பாரிசத்தில் இருந்தாள். அவரது தோழர்கள் அவரைச் சூழ்ந்து அத்தியந்த வைராக்கியத்துடன் தத்துவசாஸ்திர ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். அவருடைய சுய நாட்டாருள் சிலர் ஒவ்வொரு நாளும் தங்கள் புதிய உபாத்தியாயருக்கு ஆசாரஞ் செய்யவோ, அல்லது பழய நேசனை வாழ்த்தவோ வருவார்கள். உரோமானியானுஸ் என்பவனும் வெகுகாலமாய்த் தொடர்ந்துவந்த ஒரு வியாச்சியமுகாந்திரமாய் மிலான் நகருக்குவந்து அகுஸ்தீன் மட்டில் முன்போலவே பிரமாணிக்கங் கொண்டிருந்து தனது திரண்ட ஆஸ்தியை அவர் வசம் ஒப்புவித்தான். அலிப்பியூஸ் என்பவனும் உருக்கமுள்ள நேசனாக அகுஸ்தீனோடேயே வசித்துக் கொண்டிருந்து அவருக்குத் தேற்றரவளித்துவந்தான். நெப்ரிதியூஸ் என்பவன் தனது தந்தையின் காணியாட்சிகளையும் தன் வீடுவாசலையும் தன் மாதாவையும் விட்டுவிட்டுத் தத்துவசாஸ்திரம் கற்கும்படியாய்க் கார்த்தேஜ் நகரிலிருந்து வந்திருந்தான். இவன் அகுஸ்தீனுக்கு இளையவனாயிருந்தபோதிலும் கூர்மையான புத்திசாலி. அத்தியந்த விவேகி. ஆயினும் அவரைப்போலவே சர்வமும் சந்தேகம் என்னும் அபிப்பிராயங்கொண்டு சத்தியத்தின் விஷயமாய்த் தனக்கெதுவும் திட்டமாய்த் தெரியாதிருப்பதைப்பற்றி விதனிப்பான். இவனென்றால் அகுஸ்தீனுக்கு மெத்தப் பிரியம். இவர்களன்றி வேறு எழெட்டுப் பேர்வழிகள் முக்கியமாய் ஆப்பிரிக்காவிலிருந்துவந்து, அகுஸ்தீனோடு வசித்துக்கொண்டு, ஓரேவிதமான சாஸ்திரங்களை ஆராய்ச்சிசெய்துவந்தார்கள். இவர்களெல்லோரும் இலக்கியங்களைப் படித்துக் கடவுள் சம்பந்தமாயும் ஆத்தும சம்பந்தமாயும் பெருத்த காரியங்களைப்பற்றிச் சம்பாஷித்து, மனோதியமுள்ள மனப்பால் குடித்துவருவார்கள். அவைகளில் அடியில் வருவதும் ஒன்று. அர்ச். அகுஸ்தீன் சொல்வது "எனது நேசர்களுள் அநேகர் உலகத்தின் தொந்தார்த்தங்களையும் சஞ்சலங்களையும் கண்டு சலித்துப்போனதால், நாங்கள் அனைவரும் உலகத்தைத் துறந்து வனாந்தரத்தில் சமாதானமாய்ச் சீவிக்கத் தீர்மானித்துவிட்டோம். எங்களுடைய ஏற்பாடு என்னவென்றால் ஓர் சபையை ஸ்தாபிப்பது. ஒவ்வொருவனும் தனக்குள்ளவற்றைக் கொண்டுவந்து அனைவருக்கும் பொதுவான பொருளாக அச்சபைக்குக் கொடுத்துவிடுவது. மேலும் நேர்மையான நேசபாசத்தினால் தூண்டப்பட்டு, இது என்னுடையது, அது உன்னுடையதென்று பிரித்துப் பேசாமல் எல்லாம் ஒவ்வொருவனுக்குஞ் சேர்ந்தது, எல்லாம் எல்லோருக்கும் சேர்ந்தது, என்று அனைவரும் பொது உரிமையைப் பாராட்டுவது. இப்படிப்பட்ட சபையிற் சேரத் தயாராய் எமக்குள் பத்துப்பேர் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் என் சுய நாட்டாரும் சிறுவத்திலிருந்து என் தோழருமாயிருந்த உரோமானியானூஸ் என்பவர். வெகு ஆஸ்திவந்தர். இவ்விஷயத்தில் இவருக்கு மெத்தப் பற்றுதல். மேலும் மற்றவர்களைவிட இவர் கையில் அதிக திரவியம் இருந்தபடியால் இவ்வேற்பாட்டை முன்னுக்குக் கொண்டுவர இவரால் கூடுமாயிருந்தது. எங்களுக்குள் வருஷத்திற்கு இருவர் அதின் காரியஸ்தர்களாயிருந்து சபையை நடத்திவரவேண்டுமென்றும், மற்றவர்கள் யாதொரு தொந்தார்த்தமுமின்றி

அமைதியாய் ஞானக் காரியங்களை ஆராய்ச்சி செய்துகொண்டுவரவேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று."

இதுவே அகுஸ்தீனுடைய சொர்ப்பனம். இதுவே அவர் ஆகாசத்தில் கட்டின கோட்டை. பூர்வீக யுகங்களிலிருந்த பெரிய மேதாவிகளெல்லாரும் மனப்பால் குடித்துவந்ததும் இப்படியே. பிளாட்டோ, சாக்ரேட்டீஸ், பித்தகோராஸ், ஸிஸரோ இன்னும் மற்றவர்களும். அவர்கள் எவ்யுகத்தில் சீவித்துவந்தவர்களாயிருந்தாலும் தங்கள் இயற்கையான பெருமிதகுணத்தினால் தூண்டப்பட்டோ, அல்லது உலக காரியங்களில் வெறுப்படைந்தோ, உலகத்தைவிட்டுத் துறந்து சாஸ்திராதிகளை ஆராய்ச்சிசெய்வதிலேயே தங்கள் வாழ்நாட்களை கழித்துவரவேண்டுமென்று இவ்விதமாக ஆவல்கொண்டனர்.

அழகான சொர்ப்பனம்போலிருந்த இந்த ஏற்பாட்டை நடத்தும்படி அநேகந்தடவை ஆலோசனை செய்தார்கள். முடியாத காரியமென்று அநேகந்தடவை விட்டுவிட்டார்கள். ஆனால் கடைசியாய்க் கைகூடிவருகிறாப்போலிருந்தது. தோழர் யாவரும் கூடினார்கள். தலைவரையும் ஸ்தாபித்தாயிற்று. பணத்திற்கும் குறைவில்லை. ஆனால் அர்ச். அகுஸ்தீன் சொல்வது "எங்களுக்குள் அநேகர் கலியாணக்காரராயிருந்தபடியால் தங்கள் பெண்சாதியார்களை என்ன செய்வதென்று யோசிக்கத் தொடங்கியபோது, இவ்வளவு நன்றாக ஆலோசிக்கப்பட்ட ஏற்பாடு மணல்மேல் கட்டிய கோட்டையைப்போல் அன்றோடு ஒழிந்தது. நாங்கள் யாவரும் விசனத்தோடு பெருமூச்சுவிட்டுக்கொண்டு எங்களெங்கள் நிர்ப்பாக்கிய உலக சீவியததிற்குத் திரும்பிப் போய்விட்டோம்."

உண்மையாகவே இந்த உசிதமான யோசனையை நடத்த அவசியமான இரண்டு விசேஷமான காரியங்கள் குறைவாயிருந்தன. ஐம்பொறிகளை யடக்கிக் காப்பவன் மோட்சத்துக்குரியவன் என்னுங் கருத்தை உள்ளடக்கிய "உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான் வரனென்னும் வைப்புக்கோர் வித்து" என்று சொல்லியபடி உலக காரியங்களின்மேல் பற்றுதல்யாவையும் துறந்துவிட்டு எவ்வித தொந்தார்த்தமுமில்லாமல் அதிக சுலபமாகச் சோதியுடன் ஜொலிக்கும் செல்வ நாட்டை நாடிப்போக ஆசிக்கும் இப்படிப்பட்ட புண்ணியவான்கள் அடங்கப்பெற்ற சிறந்த சபைக்கூட்டம் தேவநேசம் என்னும் சுவர்களால் கட்டப்பட்டு கற்பென்னும் வேலியால் காக்கப்பட்டு வரவேண்டியது. இன்னுஞ்சில வருஷங்கள்வரையிலும் இது அகுஸ்தீனுக்குச் சொர்ப்பனம்போலிருந்தது; அநுஷ்டானத்திற்கு வருவதாயிருந்தது. அகுஸ்தீன் பிராயத்தில் சிறுவராயிருந்தபோதிலும் அவருடைய தோழர்கள் அவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டு ஒரு சபையாய் வாழ உடன்பட்டார்கள். மேலும் அவர்களுடைய அனுசரணைக்காக அகுஸ்தீன் அப்போது ஏற்படுத்திய சட்டம் உலகத்தின் எப்பாகங்களிலும் அங்கீகரிக்கப்பட்டுப் பின்சந்ததியாவற்றிற்கும் பிரமிப்பை விளைவிப்பதாயிருக்கிறது. அர்ச். சாமிநாதராவது, அர்ச். கயெத்தாராவது, அர்ச். பிராஞ்சீஸ்கு சலேசியாராவது சந்நியாச சபைகளை ஏற்படுத்த விரும்பினபோது, அர்ச். அகுஸ்தீனுடைய முறைகளையும் சட்டங்களையும் ஒழுங்குகளையுமே கையாடினார்கள்.

ஆனால் ஐயோ மனிதனுடைய இருதயம் எவ்வளவு நொய்மையானது. அவனது ஆசாபாசங்கள் எவ்வளவு கொடியவை. தனது இருதயத்தில் நவமாய் உதயமடைந்த விசுவாசத்திற்குப் பலியாகத் தன் வைப்பாட்டியின்மேலுள்ள நேசத்தை அகுஸ்தீன் வெறுத்துவிடவே, அவருடைய ஞானக்கண்கள் திறந்தன. அவருடைய ஆத்துமத்திற்குச் சமாதானமுண்டாயிற்று. ஆனால் இவ்வாத்துமத்தை மறுபடியும் பாவச்சங்கிலியினால் பந்தனம் செய்துகொண்டார். இது நமக்கு நம்பக்கூடாத விஷயமாய்த் தோன்றும். தன் தாயார் தனக்கு மனைவியாகத் தெரிந்தெடுத்த இளங்கன்னிகைக்காக இரண்டு வருஷங் காத்திருக்க இவரால் கூடாமல் போயிற்று. அந்த இளங்கன்னிகை தனிவாசமாய்க் கிறீஸ்துவ சீவியம் சீவித்துக்கொண்டு, தனக்குப் பத்தாவாகக் குறிக்கப்பட்ட அகுஸ்தீனுக்குத் தக்க பத்தினியாயிருக்கத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டுவந்தாள். ஆனால் இந்தக் காமாதுரனோவெனில், இன்னும் இரண்டு வருஷம்வரைக்கும் தன் துராசையை யடக்கமுடியாமல் இன்னொரு வைப்பாட்டியோடு சம்பந்தங்கொண்டான். இந்தச் சம்பந்தம் எல்லாத்திலும் வெட்கக்கேடான சம்பந்தம். ஏனெனில் அவ்வளவு அரும் பிரயாசையுடன் தன் வைப்பாட்டியை விட்டுப்பிரிந்து, ஒரு நற்குலத்துப் பெண்ணை மணமுடிப்பதற்குள், ஈனமான முகாந்திரங்களைப்பற்றி இப்பாவ நேசம் உண்டாயிற்று.

(இன்னும் வரும்.)

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா
அல்லது
மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—7.

யூலோஜியஸ்.

மேற்கூறிய சம்பவங்கள் நடந்த சில நாளைக்குப் பின்னர், வெண்போர்வையால் பாதாதிகேசபரியந்தம் மூடிய அந்த அதிசய உருவம் சிறைச்சாலையின் தாழ்வாரங்களில் மீண்டுந் தென்பட்டது. கொஞ்சகாலமாய் அவ்வுருவம் அங்கே தோன்றாததால், காவற்காரர் சற்றுத் தைரியமாயிருந்தனர். வழக்கப்படி அவ்வுருவம் கார்சியாஸ் பிரபு அடைபட்டிருந்த அறைக்குள் நுழைந்தது. அங்கே பிரபு வருத்தத்தால் மனமுடைந்து தலைகுனிந்த வண்ணமா யுட்கார்ந்திருந்தார்; தன்னறையின் வாசற்படியண்டை நிகழ்ந்த போருக்குப்பின்னர், செபஸ்தியான் பிரபுவின் கதி யென்னாயிற்றென்று அவருக்குத் தெரியாமையால் அவர் மிகவும் வருந்தியிருந்தார். அப்போரில் யௌவன வீரன் ஒன்று உயிரிழந்திருக்கவேண்டும், அல்லது பிடிபட்டுத் தன்னைப்போல் சிறையில் அடைபட்டிருக்கவேண்டும் என்று அவர் நினைத்திருந்தார்.

"பிரபு, இவ்வளவு துக்கத்துடன் நான் தங்களை யிதுகாறும் பார்த்ததில்லையே! என்ன காரணத்தால் தாங்கள் இவ்வாறிருத்தல்வேண்டும்? தாங்கள் கிறீஸ்துவரல்லவா? அப்படியிருக்க, தாங்கள் ஏன் இப்படி மனம் நொந்து வாடவேண்டும்? தேவனிடத்தில் தங்களுக்கிருக்கவேண்டிய விசுவாச நம்பிக்கை இவ்வளவுதானா?" என்றது அவ்வதிசய உருவம்.

"அந்தோ! இவ்வறையின் வாசற்படியிலேயே மிகப் பிரமாணிக்கமுள்ள என் பிராண நண்பர் அஞ்ஞானிகள் கையிலகப்பட்டு மாண்டபின், இனி எனக்கு நம்பிக்கையென்பதேது?"

"தாங்கள் அவ்வாறு நினைப்பது தவறு. உமது நண்பர் உயிருடனிருக்கிறார். நீர் நினைப்பதற்குமாறாய், உமது மீட்பு நாள் நெருங்கிவிட்டது. உம்மை மீட்பதற்குப் போதுமான தொகை ஏற்கெனவே உமது மனையாளிடம் சேர்ந்திருக்கலாம். ஆதலால் நீர் நம்பிக்கையிழந்து தைரியத்தைக் கைவிடுவது உம்மைப்போன்ற உத்தம வீரர்க் கடுக்காது."

காஸில்டா இப்படிப் பேசியதின் காரணம் யௌவன வீரன் தன்னிடம் பெற்ற முத்துமாலையை விற்று போதுமான பணத்தை உரேக்காள் கையில் சேர்த்திருப்பான் என்று நம்பியதே. அவள் வார்த்தைகளைச் செவியேற்ற கார்சியாஸ் பிரபு, தான் சுமக்கமுடியாமல் சுமந்துகொண்டிருந்த இருப்புச் சங்கிலிகளின் பாரத்தையுங் கவனியாமல் சரேலென எழுந்து நின்று முகத்திலுங் கண்களிலும் பிரகாசம் வீச வெகு உற்சாகத்துடன் சொன்னதாவது "நீ யாராயிருப்பினும் சரி, நான் உன்னைக் கெஞ்சி மன்றாடுகிறேன். உன் வார்த்தைகளால் எனக்கு நம்பிக்கை யுண்டாக்கி என்னைத் தத்தளிக்கச்செய்யாதே. வீணான நம்பிக்கையால் என்னைப் பரிகாசஞ்செய்யாதே. என்னால் இனிச் சகிக்க முடியாது; இனி என் நம்பிக்கை வியர்த்தமாயின், மரணமே என் முடிவு. நான் இதுகாறும் அநுபவித்த கஷ்டம் போதுமானது!"

"யான் தங்களை எப்போதேனும் ஏமாற்றியதுண்டா?" என்று சொல்லி முகமூடியணிந்த அவ்வதிசய உருவம் உடனே மறைந்துவிட்டது.

பின்னர் அவ்வுருவம் மற்ற கைதிகளைப் போய்ச் சந்தித்து அவர்கள் ஒவ்வொருவருக்குந் தக்க ஆறுதல்மொழி யன்புடன் கூறி, வேண்டிய உதவியும் புரிய வழக்கம்போற் சென்றது. அந்த நிர்ப்பாக்கிய மனிதர் தமக்கு ஆறுதலை வருத்தும் அவ்வதிசய உருவம் கொஞ்சகாலமாய் சிறைச்சாலையில் தோன்றாததால், மழைமுகங் காணாப் பயிர்போல வாடியிருந்தனர்; ஆதலால் அவ்வுருவம் மீண்டுந் தம்முன் தோன்றவே, அவர்களுக்குண்டான ஆனந்தத்துக்களவேயில்லை. அவ்வுருவம் இன்னுமொன்று அவர்களுக்குத் தெரியாத

போதிலும், அவளால் தங்களுக்குண்டாகும் நன்மையிலீடுபட்டு, அவர்கள் அவளைக் கண்டதும், அவள் காலில் வீழ்ந்து கும்பிடுகிறவர்களும், ஆடையைத் தொட்டு முத்தமிடுகிறவர்களுமாய் அவளை வாயாரப் புகழ்ந்து துதிப்பாராயினர். சிலர் அவள் ஆடையைப் பிடித்துக்கொண்டு, இனிமேல் தங்கள் விஷயத்தில் பாராமுகமாய் இருத்தலாகாது என்றும் தங்களைவந்து அடிக்கடிப் பார்த்துப்போகவேண்டுமென்றுங் கெஞ்சி மன்றாடினார்கள்.

கடைசி வேண்டுகோளைக் கேட்டதும், அம்மாதுசிரோன்மணி பெருமூச்செறிந்து, கண்களில் நீர்ததும்ப, மிக்க விசனத்துடன், "ஒரு சிருஷ்டியிடம் உங்கள் நம்பிக்கையை வைப்பதில் என்ன பயன்? என்னை உங்களிடம் அனுப்பியவரோ தம்மிடம் வரும்படி யழைக்கச் சித்தமானால், உங்களுக்கு வேண்டிய ஆறுதலை யளிக்க வேறொருவரை யனுப்ப அவரால் முடியாதா? நீங்கள் யாவருங் கிறீஸ்துவர்கள்; ஆதலால் உங்கள் இரட்சகரை நாடி அவருடைய உதவியைத் தேடுங்கள். அவர் எல்லாம் வல்லவர், உங்களுக்குக் கட்டாயம் உதவி செய்வார்" என்றாள். இந்தப் பக்திக்குரிய வார்த்தைகளை மொழிந்து, அம்மாதரசி அவ்விடத்தைவிட்டு அகன்றாள். தாழ்வாரங்களைக் கடந்து, சுரங்கம் போன்று இருளடர்ந்துள்ள ஒரு நிலவறைக்கு இறங்கிச் சென்றாள். அங்கே வேகமாயோடு நீரினுண்டாகும் அலைகளின் ஓசை கேட்டது, அந்நிலவறையின் சுவரின் பக்கத்தில் தேகஸ் நதியோடியதால், அதனலைகள் சுவரில் மோதிக்கொண்டிருந்தன. அங்கே மிருகங்களின் கர்ச்சிப்பாலுண்டாகும் பயங்கரமான ஓசை கேட்டது. ஆல்டீமனுடைய சிங்கங்கள் அடைபட்டிருக்குங் கெபிகள் அங்கேயிருந்தன. நங் கதாநாயகி பயப்படாமல் நடந்து ஒரு சிற்றறையை நெருங்கி அதன் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தாள். நீண்ட கருப்பு அங்கி தரித்தவரும், மார்பளவு தொங்கிய நரைத்த தாடியையுடையவருமான ஒரு வயோதிபர் அவ்வறையில் முழந்தாட்படியிட்டு, சங்கிலியாற் பிணிக்கப்பட்ட கரங்களில் ஒரு மரச்சிலுவையை ஏந்தி ஜெபித்தவண்ணமிருந்தார். அவள் கொண்டுவந்த விளக்கின் வெளிச்சம் அவ்வயோதிபருடைய முகத்திற்பட்டு, அவரை இன்னாரெனக் காட்டிற்று. அவர்தான் யூலோஜியஸ் என்னும் வயதுசென்ற குருப்பிரசாதி. அவர் தம் பரிசுத்த ஜீவியத்தின் நன்மாதிரிகையாலும், வாய்ச்சாதுர்யமாய்ப் பேசிச் செய்துவந்த பிரசங்கங்களாலும் டொலிடோ நகரின் கிறீஸ்துவர்கள் அநேகரை வேதத்தில் திடப்படுத்தியதன்றி, மகம்மதிய மார்க்கத்தின் மாயவலையில் அகப்பட்டுழன்ற அநேகரை கிறீஸ்துவின் மந்தைக்குள் கொண்டுவந்ததால், ஆல்டீமன் அவர்பேரிற் கோபங்கொண்டு அவரைச் சிறையிலடைத்தான். கிறீஸ்துவ வேதத்தின் ஆபரணம்போன்ற இந்த ஸ்துதியாகிய வயோதிப குருவானவர் அச்சமயத்தில் ஜெபித்துக்கொண்டிருந்த ஒழுங்கையும் அவரிடம் விளங்கிய பக்திரசத்தையும் கண்ட அவ்வரசிளங்குமரி ஆச்சர்யத்தால் நிரப்பப்பட்டு இன்னது செய்வதென்று தோன்றாமல் பிரமித்தவளாய் அப்படியே அசைவற்றுக் கொஞ்சநேரம் நின்றுவிட்டாள். யூலோஜியஸ் திரும்பிப் பார்த்தார். உடனே காஸில்டா அவரை யணுகி முழந்தாட்படியிட்டு மிக்க மேரைமரியாதையுடன் அவருடைய கரங்களைப் பற்றி முத்தமிட்டாள். அக்குருவானவரும் அருளும் அன்பும் நிறைந்த பார்வையால் அவளை நோக்கி, "மகளே, நின்னை மறுபடியும் யான் காணும்படி அநுக்கிரகித்த தேவன் ஸ்துதிக்கப்படுவாராக! அவருடைய நாமம் எங்கும் ஸ்துதிக்கப்படுவதாக!" என்று உரைத்து, "மகளே! நினக்கு ஏதோ ஒரு பெரும் விபத்துச் சம்பவிக்கிறதாக என் மனதிற் படுகிறது!" என்று தீர்க்கத்தரிசனமாய் மொழிந்தார்.

"தேவனுக்குகந்த பரிசுத்தவானாகிய குருமுனியே! தேவரீர் கூறுவது உண்மையே! என் தந்தையாகிய ஆல்டீமன், சாரகோசா நகர அதிபதியை மணக்கும்படி என்னை வற்புறுத்துகிறார். நான் மனப்பூர்வமாய் நேசிப்பவைகளை அவமதித்து, நான் வணங்கி யாராதிப்பவைகளை நிந்தித்துக் காலால் மிதிக்கும் ஒரு மனிதனுக்கு நான் மனையாளாவது முற்றிலும் கூடாத காரியம் என்பது தேவரீரே அறிவீர். தந்தையிடஞ் சென்று இந்தக் கல்யாண ஏற்பாட்டை ரத்து செய்யும்படி வேண்டினேன். ஆ! அவருக்கு அச்சமயத்தில் வந்த கோபத்தை என்னென்பேன்! அவர் என்னைக் கடிந்து பேசியதையும், பயமுறுத்தினதையும் தேவரீர் கேட்டிருந்தால் என்ன சொல்லுவீரோ, அறியேன்."

குருவானவருடைய முகத்தில் ஒருவிதப் பிரகாசம் தோன்றியது. சோதனையின் நேரம் நெருங்கிவிட்டது. என் பிரிய மகளே, நீ கிறீஸ்துவளாவதற்கு யோக்கியதை வாய்ந்தவள் என்று காட்டுவதற்கு இதுவே தகுந்த சமயம்! கடைசித் துளிபரியந்தம் தமது இரத்தத்தைச் சிந்தி நமக்காக சகல நிந்தை யவமானங்களையும் பொறுமையுடன் அநுபவித்த நமது ஆண்டவருக்குரியவள் என்னும் நாமத்துக்குப் பாத்திரமானவள் நீ என்று காட்ட இதுவே தருணம். 'நீ அவருடைய பரிசுத்த பாதுகாவலில் இருக்கவில்லையா? வானமும் பூமியும் வணங்கிப் பணிவிடை செய்ய, சம்மனசுக்களை நித்தியத்துக்கும் ஏவல் கொள்பவராகிய அநாதிக்கடவுளுக்கு முன், ஆல்டீமன் வல்லமை எம்மாத்திரம்; உலக வல்லபம் அனைத்தும் ஒருங்கு கூடினும் அவரை வெல்லக்கூடுமா? மகளே, தைரியமாயிரு, நம்பிக்கையைக் கைவிடாதே. நின் விசுவாசமே நின் கேடயமென்பதை மறவாதே; நின் பாதுகாவலரும், நின் மீட்பரும், நின் நித்திய முடியுமாயிருப்பவர் நமதாண்டவரே!"

"துன்பதுரிதங்களுக்கு நான் அஞ்சவில்லை. கிறீஸ்துவர்களை வருத்தி வேதகலாபனை யுண்டுபண்ணுவதற்குக் காரணரும், என் இரட்சகரை நான் பின்பற்றாமல் தடுப்பவரும் என் சொந்த தந்தையே என்று நினைக்க என் மனம் நடுங்குகின்றது. இவ்வுலக பெருமைசிலாக்கியங்களையும், இன்ப சுகபோகங்களையும் சந்தோஷமாய் என் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவின் பாதங்களில் காணிக்கையாக வைத்துவிடுவேன். இந்த பூமியின் பெருமை யனைத்தினும் என் ஆண்டவரின் முகதரிசனம் என் ஆத்துமாவிற்கு மிகவும் விலையுயர்ந்ததன்றோ; என் நேசப்பிதாவே, கலகம் நெருங்கிவிட்டது; என் அநேகமாய்த் துவக்கிவிட்டதென்றே சொல்லலாம். இனித் தாமதித்தலாகாது; ஞானஸ்நானத்தால் என்னைத் தேவனுடைய பிள்ளையாக்கும்படித் தேவரீரைக் கெஞ்சி மன்றாடுகிறேன், என் ஆத்துமா இதுகாறும் ஆவலாய் அடைய விரும்பிய, நமது ஆண்டவரின் பரிசுத்த சரீரத்தை நான் உட்கொள்ளும் பாக்கியத்தை எனக்குத் தந்தருளும்! எனக்குக் கொடுக்கவிருக்கும் கசப்பான பாத்திரத்தை நான் பானம்பண்ணுமுன், இந்தத் தெய்வீக உணவால் நான் திடனடைய வேண்டியதவசியம்."

"நல்லது, மகளே! நின் ஆத்துமாவின் ஆவலைப் பூர்த்திசெய்வதில் இனி தாமதித்தல் கூடாது. ஆதலால் நாளை யிரவு இங்கே வருவாயாக; அப்போது வானத்தினின்று வரும் சம்மனசுக்களின் உணவை நீ யருந்தி, இவ்வுலகில் மனிதன் அநுபவிக்கக்கூடிய பாக்கியங்களனைத்தினும் மேலான ஆனந்த பாக்கியத்தை யடையும்படிச் செய்கிறேன்."

(இன்னும் வரும்.)

ச. செல்வன்.

USEFULNESS OF NEWS PAPERS.
பத்திரிகையின் பயன்.

உலக முழுவதையுஞ் சுற்றிப்பார்க்க உன்னிடம் பணமுண்டா? இல்லை எனில், அத்தகைய விருப்பத்தைப் பூர்த்திசெய்துகொள்ள சுலபமான ஒரே ஒரு வழிதானுண்டு. மெய்ஞ்ஞானிகளையும், மதங்களையும், மற்றும் உலக விவகாரங்களையும் அறிய விரும்புகிறாயா? அதற்கும் ஒரே ஒரு வழிதானுண்டு. எத்தகைய போதனா முறைகளாலும் நல்வழி யடையாதவரை, நாகரிகமற்ற தேசத்தாரை, பஞ்சத்தால் பட்டினிகிடப்போரை, பரோபகார சிந்தையற்றவரைப் பக்குவப்படுத்தி அவர்களுக்குள் பரஸ்பர ஒற்றுமையை உண்டுபண்ணுவது அவசியமா? அதற்குங் கருவி ஒன்றேயாகும். அதுவே வர்த்தமான பத்திரிகை.

நாகரிகம் படைத்த எந்தத் தேசத்திலும் அதன் நாகரிகத்தின் அறிகுறி அவ்விடத்தில் உலவும் பத்திரிகைகளின் வியாபகமாகும். ஏனெனில், அத்தேசத்தில் எவ்விதமான ராஜாங்க விவகாரங்களையும், சமூக சீர்திருத்தங்களையும், இதர பொதுக்காரியங்களையும் திருத்தியமைத்து, செவ்வனே நடைபெறச்செய்வது பத்திரிகைகளே. ஓர் பிரமாண்டமான தேச ஜனத்திற்கு குருவாயிருப்பது, இராஜாவாயிருப்பது, நடுநாயகமாய் விளங்குவது பத்திரிகையே தவிர வேறொன்றுமில்லை. இதுபற்றியே, தனக்கு நிகருண்டோவென புஜபல பராக்கிரமம் படைத்த தளகர்த்தனும், தன் ஆயுள் முடியும்வரை பயமென்ற பதத்திற்கு அர்த்தம் விளங்கவில்லை என்று சொன்ன வீரனுமாகிய நெப்போலிய சக்கரவர்த்தி ஒரு சமயம், பத்திரிகை என்றமாத்திரத்தில் அவன்

உடல் நடுங்கி பயங்கரத் தோற்றங்கொண்டதுண்டென சரித்திராசிரியர் கூறுகின்றனர். இதுபற்றியே, பிரிட்டானியா தேசத்தில் முதன் மந்திரியாயிருப்பதும், பத்திரிகையின் ஆசிரியராயிருப்பதும் ஒன்றே என்று இன்னோர் மேதாவியர் கூறியுள்ளார்.

இத்தகைய முதன் மந்திரி பதவியைவிட பத்திரிகாசிரியரின் பதவி மேலானதெனத்தகும். ஏனெனில், உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் துறந்துவிட்டு, தேசாபிவிருத்தி யொன்றையே குறியாகக்கொண்டு தேசத்தொண்டு புரியும் பரோபகார சிந்தையுடையவர்களே பத்திரிகாசிரியராவர். ஆகவே, பத்திரிகையின் பயனும் அதனுடைய ஆசிரியரின் பதவியும் இவ்வாறாக, இனி சந்தா நேயர்களின் இலக்கணத்தைச் சற்று ஆராய்வோம்.

சுமார் 30 வருடங்களுக்குமுன் ஜப்பானில் (Oska) ஒஸ்கா என்ற தேசீய பத்திரிகையொன்று வருடமிருமுறை பிரசுரமாய்வந்தது. அப்போது அதன் சந்தா நேயர் சுமார் 1,000 நபருக்கு மேலில்லை. இத்துணை சுவல்ப சந்தாதாரரைக்கொண்ட பத்திரிகையின் ஆசிரியர் தம்மால் கூடியவரை விஷயங்களைச் செவ்வனே புகட்டிவந்தார். இதை அறிந்த பொது ஜனங்கள் அதை மாத மொருமுறை பிரசுரிக்க பத்திராதிபரை வேண்டினார்கள். அவர் அவ்வேண்டுகோளுக்கிணங்கி, மறு சஞ்சிகையில் கீழ்காணும் விஷயத்தை வெளியிட்டார்.

“சகோதர சகோதரிகளே, ஓர் தேசத்தையோ, வேதத்தையோ முன்னுக்குக் கொண்டுவருவது பத்திரிகைகளால் என்பது நீங்கள் அறிவீர்கள். சுடர்விளக்கானாலும் தூண்டுகோலவசியம். அதுபோல் உங்களில் யார் யார் தேசம் முன்னேற்றமடையவேண்டுமென்ற விருப்பங்கொள்ளுகிறீர்களோ அவர்கள் ஒவ்வொருவரும் இன்றே 5 சந்தா நேயரைச் சேர்த்துத்தரவேண்டும். இவ்வாறு செய்வீர்களானால் இரண்டு மகத்தான புண்ணியங்களைச் செய்தவராகிறீர்கள். 1-வது பாமர ஜனங்கள் ராஜீய ஞானத்தைப் பெறுதல். 2-வது தான் அடையும் நன்மையைப் போல் பிறரும் அடைதல். இதுவுமன்றி என்னை உற்சாகப்படுத்துதல். ஆகவே, உங்கள் வேண்டுகோளுக்கு நான் இணங்கவேண்டுமானால் என் வேண்டுகோளை நீங்கள் ஆதரிப்பீர்களென்று நம்புகிறேன்” என்பதே. இந்த பத்திராதிபர் குறிப்பைப் பார்த்தமாத்திரத்தில் அதே மாதத்தில் பத்திராதிபர் வேண்டுகோளை முதற் கடமையாகக்கொண்டு பழைய சந்தா நேயர் ஒவ்வொருவரும் 10 புதிய சந்தாதாரரைச் சேர்த்து அநுப்பவே, அப்பத்திரிகை தினப் பதிப்பாய் நாளதுவரை உற்சாகப் பத்திரிகையாய் உலவி வருகிறது. நம் தேசத்திலோ, இவ்வாறு ஆதரிக்கும் ஜனங்களில்லாததால்தான் நம் பத்திரிகைகள் க்ஷீணதசையடைந்துவருகின்றன. உதாரணமாக, நமது “நல்ல ஆயனை” சந்தா நேயர் நினைத்தமாத்திரத்தில் மாதம் இருமுறையாவது பிரசுரிக்கச்செய்யலாம். ஒவ்வொருவரும் ஒரு புதிய சந்தா நேயரைச் சேர்த்துவிட்டால் நாளையே நமது “ஆயன்” மாத மிருமுறை நம் வீடுவந்து நம்மைச் சந்திப்பான். ஆதலால், “நல்ல ஆயன்” சந்தா நேயர்களே! தேசாபிமானிகளே! வேதாபிமானிகளே! பரோபகாரிகளே! நாளை என்பது நம் நாளல்ல; இன்றே நம்மில் ஒவ்வொருவரும் செய்து காண்பிப்போமாக?

புலி. எம். இந்நாசி பர்னாந்தீஸ்.

ECONOMY.
சிக்கனம்.

சிக்கனம் என்பது சுருங்கச் செலவுசெய்தல் எனப் பொருட்படும். சிக்கனம் என்பதற்கு எதிர்மொழி ஊதாரித்தனம். சுருங்கச் செலவுசெய்தல் என்பதனால் “செய்வன திருந்தச் செய்” என்பதற்கேற்ப செய்யவேண்டியவைகளைச் செவ்வனே செய்யாமல் செலவைக் குறைத்துக் காரியத்தைப் பங்கப்படுத்தினால் பாதகமில்லையென எண்ணப்படாது. செய்யவேண்டிய விஷயங்கள் சம்பந்தமாய் வீண் செலவுசெய்யாமல் “வளவனாயினும் அளவறிந்தழித்துண்” என்றபடி அளவுடன் மிதமாய்ச் செலவிடுவதே சிக்கனமாகும். “அளவறிந்தழி” என்றால், ஒருவன் தன் வருமானத்துக்கும், அந்தஸ்துக்கும் தக்கபடி செலவுசெய்யவேண்டுமென்பது. ஐம்பது ரூபாய் வருமானமுள்ளவன், ஐந்நூறு ரூபாய் வருமானமுள்ளவனைப்போல் செலவழிக்கப்படாது. சாதாரண குமஸ்தாவேலையாயிருப்பவன், மானேஜர் பதவி வகிப்பவனைப்போல் செலவுசெய்யவொண்ணாது. தற்காலத்தில் வெளிடம்பமும், வீண் படாடோபமும் விஸ்தாரமாய்க் காணப்படுகின்றன. ஒவ்வொருவனும் தன் சுய அந்தஸ்துக்கு அதிகமாய் பிறரால் மதிக்கப்பட விரும்பிக் காரியாதிகளைச் செய்கிறான். வீண் டம்ப வேஷம்போடுகிறான். முப்பது ரூபாய் சம்பாதிக்கும் ஒருவன் ஹைகோர்ட்டு நியாயாதிபதி, அல்லது நியாயவாதி உடுத்தும்வண்ணம் உடுத்துகிறான். கலியாணம் பண்ணிக்கொள்ள கையில் காசொன்றுமில்லாதவன் கடன்கொண்டு, குபேரன் வீட்டுக் கலியாணத்தைப் போல் கம்பீரமாயும், ஆரவாரமாயும், டம்பமாயுங் கடிமண முடிக்கக் கருதுகிறான். பெரும்பாலும் இத்தகைய வரம்புகடந்த செலவுகளே மனிதனை தரித்திரனாக்கி, அவனைத் தலையெடுக்கவொட்டாமற் செய்து, அதோகதிக்காளாக்கிவிடுகின்றன. “வேஸ்ட் நாட் வான்ட் நாட்” என்றொரு ஆங்கிலப் பழமொழியுமுண்டு. அதாவது: கையில் பொருள் இருக்கிறதேயென்று மனம் போனமட்டும் செலவழிக்காதே. அப்படிச் செலவழித்தால் பிறகு வருந்துவாய். ஆனதினால் “முன்னர் செலவழிக்காதே, பின்னர் வருந்தாதே” என்பதே. சுவாதீனத்தை அடைய அபேட்சிப்போர் சிக்கனமாய்ச் செலவுசெய்யப் பழகிக்கொள்வது அத்தியாவசியம். உண்மையான ஊக்கத்தாலும், மாண்புடைய ஒழுக்கத்தாலும், இடையறா சுறுசுறுப்பாலும் சிக்கனத்தைப் பெற்றுப் பொருளீட்டலாம்.

சுத்த கருத்தும், தக்க மேல்விசாரணையும், உகந்த மனையாட்சியும், நல்ல ஒழுங்கும், தூய நட்க்கையும், நுண்ணிய நிர்ணயமும், வீண் பெருமை விரும்பாமையும், உண்மைத் தாட்சியும் உலக வியவகாரங்களுக்கு உற்ற குணங்களாம். சிக்கனம் வறுமையை ஒழிக்கும், அந்தஸ்தை உயர்த்தும், திரவியத்தைச் சேர்க்கும், கீர்த்தியை உண்டாக்கும், பெரியோர் பரிச்சயத்தைப் பெறுவிக்கும், தருமசிந்தையைத் தரும், புண்ணியத்தை விளைவிக்கும்.

சிக்கனத்தை ஞானத்தின் மகனென்றும், மதுவிலக்கின் சோதரியென்றும், சுவாதீனத்தின் தாயென்றும் சொல்லலாம். சுருங்கச்சொல்லின், ஒருவன் இகத்திலும் பரத்திலும் மேம் பதவியை அடைய சிக்கனமே சிறந்த கருவியென்பதை நாம் பலகாலும் சிந்தித்து, அதை அப்பியசிக்கப் பிரயாசைப்படுவோமாக.

இங்ஙனம்,
M. A. P. FERNANDO,
Vembar

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

கல்துறை.

கல்துறை பாத ஐக்கிய சங்கத்தின் பத்தாவது வருடப் பொதுக்கூட்டம் சென்ற மேமீ 22-ம் திகதி ஞாயிறுவாரம் மாலை 5½ மணியளவில் திவ்யசற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் பலவித சோடினைகளால் சிங்காரிக்கப்பெற்றிருந்த “சாந்தக் குருசு” பாடசாலை மண்டபத்தில் “இஸ்பிரீத்துசாந்துவே வாரும்” என்னும் தேவ கீர்த்தனையோடு ஆரம்பமாயிற்று.

சங்கத்தின் கௌரவ உப-பிரசிடெண்ட், ஸ்ரீமான் ஜோசேப் மோத்தா அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். தமது அக்கிராசன உரையில் சங்கத்தில் ஏற்கெனவே விசேஷமாக அமைந்துள்ள வேதாபிமானத்தைப்பற்றி மகிழ்வுகாட்டி, சங்கத்தினர் எவ்வளவு தூரம் லௌகிக முன்னேற்றத்தில் அக்கரை யெடுத்துக்கொண்டபோதிலும், எப்போதும் வேதாபிமானத்தில் தளர்வுறாமல் ஸ்திரப்பட்டுக்கொண்டே வரவேண்டுமென்று வற்புறுத்திச் சொன்னார்கள்.

கௌரவ உப-காரியதரிசியாகிய ஸ்ரீமான் நசரேத் கோமுஸ் அவர்கள் சங்கத்தை வாழ்த்தி, கொளும்பு பாலிய தர்ம சம்ரக்ஷண சங்கத்தின் கௌரவ காரியதரிசி அவர்களிடமிருந்தும், கொளும்பிலும் இலங்கையிலும் வேறு பாகங்களிலிருந்தும் சங்கத்தின் அங்கத்தினர் அபிமானிகளிடமிருந்தும் வந்த தந்திக்கடிதங்களை வாசித்து, சத்திய வேத பாதுகாவலனின் சங். பத்திராதிபர் முன்னொருகால் தமது விலையேறப்பெற்ற சஞ்சிகையொன்றில் இச்சங்கத்தைப்பற்றிக் குறிப்பிட்ட நல்லபிப்பிராயத்துக்குப் பங்கமில்லாமல்

கடந்துபோகும் பத்தாவது வருடத்தில் சங்கம் வேதாபிமானம் இனாபிமானமாய்ச் செய்துள்ள அரிய பல கருமங்கள் அடங்கிய யாதாஸ்தை வாசித்து முடித்தனர்.

கௌரவ பொக்கிஷதார் ஸ்ரீமான் ஜே. ஜே. கோஸ்தா அவர்கள் தந்த வரவு செலவுக் கணக்குப்படி, அங்கத்தினர்களுடைய அயரா ஊக்கத்தின்பயனாக சங்கத்தின் பொக்கிஷம் ஒன்றுக்கு ஐந்து பங்கு மேலாக அபிவிர்த்தியடைந்திருப்பது பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

கொழும்பிலிருந்து இவ்வைபவத்துக்கென வந்திருந்த அபிமானிகளிலொருவராகிய ஸ்ரீமான் ஜே. எம். முருயிஸ் அவர்கள் "நாம் எதற்காக வந்தோம்" என்ற வசனத்தை மகுடமாகக் கொண்டு மதுரமான ஓர் உபந்நியாசம் செய்து யாவரையும் மிகவே மகிழச்செய்தனர்.

பின், வரும் 11-வது வருஷத்திற்குப் புதிய உத்தியோகஸ்தராக ஸ்ரீமான் எஸ். டி. அல்வாரஸ் அவர்கள் பிரசிடெண்டாகவும், ஸ்ரீமத். ஐ. எம். சோரீஸ் கம்பேனியார் பொக்கிஷதாராகவும், ஸ்ரீமான் ஜோசேப் மோத்தா அவர்கள் காரியதரிசியாகவும் பிரேரிக்கப்பட்டு, சபையோரின் கரகோஷங்களினால் ஆமோதிக்கப்பெற்றனர்.

முந்திய கௌரவ உப-பிரசிடன்ட் அவர்கள் தமது உத்தியோக காலம் இனிது முடிவடைந்ததற்காக ஆண்டவரைத் தோத்திரம் பண்ணி, அக்கிராசனத்தை விட்டகலவே, புதிதாய்த் தெரிந்துகொள்ளப்பெற்ற பிரசிடெண்ட் அவர்கள் தற்காலம் தம் ஜென்ம தேசத்திலிருப்பதால், சங்க ஒழுங்குப்படி ஸ்ரீமான் ஜோசேப் பர்னாந்து அவர்கள் உப-பிரசிடெண்டாக பிரேரிக்கப்பட்டு, சபையாரால் ஆதரிக்கப்பெற்று, சபாநாயகம் வகித்து, கடந்த வருடத்து உத்தியோகஸ்தருக்கு வந்தனமளித்து, புதிய உத்தியோகஸ்தருக்குவரம் விரும்பி, உபந்நியாசகருக்கும், சபையோருக்கும், பாடகருக்கும் நன்றி கூறியதும் "பாப்பாண்டவர் வாழ்க" "கடவுள் நமதரசரைக் காப்பாராக" என்னும் மங்கள கீதங்களோடு கூட்டம் முற்றுப்பெற்றது.

பாரதன்.

தென் இந்திய (ஜாதிபேதமற்ற) கத்தோலிக்கு சகோதர ஐக்கிய சங்கம்.

I

(திருநெல்வேலி ஜில்லாக் கிளை.)

தென் இந்திய ஜாதிபேதமற்ற கத்தோலிக்கு சகோதர ஐக்கிய சங்கத்து, திருநெல்வேலி ஜில்லாக் கிளையின் ஆதரணையில் 1921-ம் வருஷம் ஏப்ரல்மீ 21-ம் உ கொழும்பு கொள்ளுப்பிட்டி கிறீன்பாத் 4/2 நெ. காம்பவுண்டு நிலத்தில் ஸ்ரீமான் அ. ம. சவரி அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஜாதிபேதமற்ற கத்தோலிக்கரின் பொது மகா நாடொன்று கூட்டப்பட்டு, அதில் பின்வரும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவ்வமயத்தில் 100 பெயருக் கதிகம் விஜயஞ்செய்தனர்.

(1) சமீபத்தில் சென்னை தாய் சங்கத்தார் சென்னை அரசாங்கத்தாருக்கு சமர்ப்பித்த பொது மனுவில் கண்டுள்ள அதிமுக்கிய அம்சங்கள் அதிசீக்கிரம் கவனிக்கப்படவேண்டுமென்றும், கல்வியின்மையாலேயே ஜாதிபேதமற்ற கத்தோலிக்கர் நூற்றுக்கணக்காய் அயல் நாடுகளுக்குப் போய் சொல்லொணா கஷ்டங்கள் அனுபவிக்கவேண்டியிருக்கிறதாதலால், ஜாதிபேதமற்ற கத்தோலீக்கர் கல்வியில் விர்த்தியடைவதற்கான வழிப்பாடுகளை சர்க்கார் துரிதத்தில் செய்யவேண்டுமென்றும் இக்கூட்டம் விண்ணப்பித்துக்கொள்ளுகின்றது.

(2) திண்டுக்கல்லிலிருந்து பாளையங்கோட்டை அர்ச். சவேரியார் ஹைஸ்கூலில் வாசிக்கும் ஜாதிபேதமற்ற மாணவர் ஒருவர் உபகாரச் சம்பளம் வேண்டுமென்பதாய் திருநெல்வேலி கிளைச் சங்கத்துக்குச் செய்துள்ள விண்ணப்பத்தைக் கவனிக்காது போனால் ஜாதிபேதமற்ற கத்தோலிக்கரின் கல்வி பின்னடையுமாதலால், தற்சமயம் இக் கிளைக்குப் போதுமான நிதியில்லாக் குறைவைப்பற்றி இக் கிளையின் அங்கத்தினரில் தர்ம சிந்தையுள்ள புண்ணிய சிலர் 25 பேர் மாதமாதம் 4 அணா வீதம் ஒருவருஷமளவும் கொடுத்துதவ முன்வருவார்களானால் பேருபகாரமாயிருக்குமென்று இக்கூட்டம் அபிப்பிராயப்படுகின்றது.

(3) திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள அதிமுக்கிய இடங்களில் ஜாதிபேதமற்ற கத்தோலிக்கருக்காக சர்க்கார் ஆங்கிலேய ஆரம்பப்பாடசாலைகளும், ஐக்கிய நாணயச் சங்கங்களும் ஏற்படுத்தவேண்டுமென்றும், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி விஷயமாய் இனி அதிக ஊக்கம் எடுத்துவரவேண்டுமென்றும், திருநெல்வேலி ஜில்லாவில் அந்தந்த பங்கு விசாரணைக்குருக்களும் ஜாதிபேதமற்ற பிள்ளைகளின் கல்வி விஷயமாய் முன்னின்று உதவி செய்யவேண்டுமென்றும் இக்கூட்டம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றது.

(4) ஷை தீர்மானங்கள் சென்னை தேசாதிபதி, அர்ச். பாப்புவின் ஸ்தானாதிபதி, உழைப்பாளிகளின் விசேஷ உத்தியோகஸ்தர், திருச்சி மேற்றிராணியார், பாளையங்கோட்டை சிரேஷ்டர், திருநெல்வேலி கலெக்டர், சங்கத்தின் பிரதம காரியதரிசி, மதுரை, திருவாங்கூர், கனகவயல், விரகானூர் போன்ற வெளியூர் கிளைச் சங்கக் காரியதரிசிகள் ஆகிய சகலருக்கும் அனுப்பப்படவேண்டும்.

இங்ஙனம்,

கொழும்பு, 25—4—21.

ம. அ. செபஸ்தியான்,
காரியதரிசி.

II

(கோலார் கனகவயல் கிளை.)

மேற்படி சங்கத்தின் ஆதரவில் சென்னை தாய்ச் சங்கத்தின் தலைவர் ஸ்ரீமான் S. M. ஞானப்பிரகாசம் B.A., அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நிகழும் ஜூன் மீ 7உ சாம்பியன்ரீவ்ஸ் அர்ச். லூர்துமாதா பஜனைக்கோவிலுக்கு அடுத்த வட்டாரத்தில் பகிரங்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் திருவனந்தபுரம் கிளைச் சங்கத்திலிருந்துவந்த பிரதிநிதியாகும் சின்னையா அவர்களாலும், ஷை கனகவயல் கிளைச் சங்கத்தின் பிரஸிடெண்டு ஸ்ரீமான் A. L. மனுவேல் அவர்களாலும் உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. பின்னர் அக்கிராசனாதிபதியவர்களால் சுமார் $1\frac{1}{2}$ மணிவரையில் பேசப்பட்டப் பிரசங்கத்தின் ஆழ்ந்த கருத்துக்களை ஆங்குக் குழுமியுள்ள எல்லாரும் நிசப்தமாகவும், வெகு அமைதியுடனும் கேட்டானந்தித்தார்கள். அதன் பிறகு இதனடியிற் கண்ட தீர்மானங்கள் சங்கத்தாரால் ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டன.

1-வது. சங்கத்தின் கருத்துகளையும் பொது நலமாய்ச் செய்துவருகிற காரியங்களையும், ஆங்காங்கு தலைமைச் சங்கமும் அதனைச் சேர்ந்த கிளைச் சங்கங்களும் நிறைவேற்றிவருகிற கூட்டங்களின் விஷயங்களையும் தவறாமல் மாதம் ஒரு முறையோ, இருமுறையோ, மும்முறையோ, நான்கு முறையோ பிரசுரித்து வருகிறதற்கு ஒரு பத்திரிகை அவசியமானதால், அப்பத்திரிகையை வெளிப்படுத்துவதற்குச் சென்னையிலுள்ள எந்தப் பிரஸ் அச்சியந்திரசாலையிலாவது அச்சிட்டு வெளியிடவேண்டியதைப்பற்றித் தலைமைச் சங்கமுதல் கிளைச்சங்கங்களும் முயற்சியெடுக்கவேணும் என்று இச் சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

2-வது. நமது சத்திய ரோமன் கத்தோலிக்கு வேதச்சட்டங்குகள்பிரகாரம் தேவத்திரவிய அநுமானங்களில் ஒன்றாகிய ஞானஸ்நானம் நிறைவேறியபின்பு குருவானவர் ரிஜிஸ்தரில் பெயரை எழுதுகையில் இன்ன ஜாதியென்று குறிப்பிடுவதை இனி அப்படி எந்த விசாரணையைச் சேர்ந்த குருக்களும் ரிஜிஸ்தர் பதிவு புஸ்தகத்தில் எழுதக்கூடாதென்றும், தேவாலயங்களில், ஜாதி வித்தியாசங்களும் இவ்வித்தியாசங்களுக்குச் சான்றாகக் கோவில்களின் உட்சாலைகளில் குறுக்குச் சுவர்கள் அல்லது இடம் பிரத்தியேகமாகப் பிரித்துவைத்தல் எதுவும் இருக்கப்படாது என்றும், இது விஷயங்களைப் பற்றிச் சிரேஷ்ட குருக்கள், மேற்றிராணிமார்களுக்கும், அர்ச். பாப்புவின் ஸ்தானாதிபதி அப்போஸ்தோலிக்கு டெலிகேட்டு ஆண்டவர் அவர்களுக்கும், மனு அல்லது விண்ணப்ப மூலியமாய் அறிவித்து ஒழுங்குகள் செய்யப்படவேண்டுமென்றும் இச்சங்கம் முழு அபிப்பிராயப்படுகிறது.

3-வது. சென்னைத் தலைமைச் சங்கமானது சென்ற ஏப்பிரல் மாதம் 21-ந் திகதியன்று வருஷோற்சவம் கொண்டாடப்படுகிறதென்பதைப் பற்றி இக்கிளைச் சங்கத்திற்கு முன்னமே தெரிவித்ததும், இதற்கு மறுமொழியாக இச்சங்கமானது அத்தேதியில் தந்திதபால் மூலியமாகத்தான் வந்தனம் கூறியதைத் தலைமைச் சங்கமானது அன்புடன் ஏற்றுக்கொண்டதையும், வந்தனமுமளித்ததையும் இச்சங்கம் சந்தோஷமாய் அங்கீகரித்துக்கொண்டது.

4-வது. சென்னைத் தலைமைச் சங்கமானது சென்ற ஏப்பிரல் மாதம் 21-ந் திகதியில் கொண்

டாடப்படுவதாயிருந்த வருஷோற்சவத்தை அன்றையத்தினம் தவிர்த்து, நிகழும் ஜூன் மாதத்தில் சென்னை தேசாதிபதி கவர்னர் லார்டு வில்லிங்டன் அவர்களை அழைப்பித்து, இவரது அக்கிராசனத்தின்கீழ் நமக்கு வேண்டிய பொது நல விஷயங்களைப்பற்றிப் பேசிப் பயனடைய வேண்டுமென்றும், அப்போது கோலார் கனக வயல் கிளைச் சங்கத்திலிருந்தும், மற்றக் கிளைச் சங்கங்களிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதியை வரவழைப்பித்து, வருஷோற்சவத்தின்போது வாசிப்பதற்காக கவர்னர் பிரபுவுக்குத் தயாரித்துள்ள வந்தனோபசாரப் பத்திரத்தை வாசித்து வெகு சிறப்புடன் ஷை (ஆனிவெர்ஸெரி) கொண்டாட்டத்தை முடிக்கவேணுமென்றும், தலைமைச் சங்கம் கேட்டுக்கொண்டதை இச்சங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. இத்தீர்மானங்கள் பேசுகையில் இடைக்கிடையே கரகோஷங்கள் நடந்தன. குழுமியுள்ளோர் 500க்கு மேற்பட்டிருப்பார்கள். பின்பு சகலருக்கும் தேத்தண்ணீர் பானமும் பிஸ்கட்டும் கொடுக்கப்பட்டு சபை இனிது கலைவுற்றது.

டி. ஜி. ஆர். சிகாமணி,
காரியதரிசி,
ஆன்டர்ஸன் பேட்டை, K. G. F.

"ஓர் பாரதகுல மாது".—"பாரதகுல மாதர்களின் உடைமாற்றம்" என்னும் விஷயமானது, பாரதகுல முன்னேற்றத்திற்கென்றே பிரசுரமாகும் "பாரதன்" பத்திரிகைக்கே உரியது. அப்பத்திராதிபர் அவ்வியாசத்தைப் பிரசுரியாவிட்டால் அதன்பின்னர் நமக்கெழுதிக்கொள்க.

"சந்தாதாரரில் ஒருவன்".—உமது கடிதத்தில், "சுயராஜ்ஜிய" கட்சிக்கு விரோதமாக ஏற்கெனவே சொல்லியுள்ளவைகளைவிட நூதனமான கருத்துக்கள் ஒன்றுங் காணாமையாலும், அக்கடிதம் நமது நிபந்தனைகளின்படி, "ஒரே பக்கத்திலும், வலது பக்கத்தில் நான்கு விரற்கடை இடம் விட்டும்" எழுதாமல் இரு பக்கத்திலும், போதுமான இடம் விடாமலும் எழுதப்பட்டிருப்பதாலும் பிரசுரிக்கப்படவில்லை.

பத்திராதிபர்.

மிகவும் சங்கைக்குரிய

மொன்சிஞ்ஞோர் ஏ. ஆர். ஜான் சுவாமிகளின்

வெள்ளி ஜூபிலி நிதி.

"நல்ல ஆயன்" பத்திரிகாசிரியராகிய சங். ஏ. ஆர். ஜான் சுவாமிகளின் ஜூபிலி மகோற்சவக் கமிட்டியார், தங்கள் வேண்டுகோளுக்கிசைந்து நன்கொடை யனுப்பியுள்ள நண்பர்களுக்கு நன்றியறிந்த வந்தனஞ் செலுத்துகிறார்கள். ஷை கமிட்டியார் கோரியபடி போதுமான நண்பர்கள் நன்கொடை யளிக்க முன்வாராதது விசனத்துக்குரியதாயிருக்கிறது. இப்போதுள்ள ஏறக்குறைய ஈராயிரம் சந்தாதாரர்களில் கமிட்டியார் வேண்டுகோளுக்கிசைந்து நாளதுவரையில் நன்கொடை யனுப்பியுள்ளவர் 448 பேரே யாவர். இன்னுமற்ற நண்பர்களும், குறைந்தபட்சம் இருநூறு பேராவது நன்கொடை யளித்தாலன்றி ஜூபிலி மகோற்சத்தைத் தக்கபடி கொண்டாட முடியாதென்பதை நண்பர்களுக்கு விநயத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். "செய்வன திருந்தச் செய்" என்பதற்கேற்ப "நல்ல ஆயன்" சந்தாதாரர்கள் மேற்கொண்ட கருமத்தை கூடியவரையில் நன்கு நிறைவேற்றுவதற்கு அதிக நிதி வேண்டும். ஆகையினால் இன்னும் அதிகமான பேர்கள் உதவ வேண்டுமெனக் கோருகிறேன்.

ஜூபிலிக் கமிட்டியார் சென்றமீ 12-ந்தேதி கூடிய கூட்டத்தில், நமது பத்திராதிபருக்கு பரிசுத்த பாப்பானவர் அளித்த "மொன்சிஞ்ஞோர்" பட்டத்தின் அதிகாரப் பத்திரம், உரோமாபுரியிலிருந்து வருமளவும் ஜூபிலி கொண்டாட்ட தினத்தை ஒத்திவைக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர். இந்த ஜூலை மாதத்துக்குள் அது வந்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படியானால் அநேகமாய் ஆகஸ்டு மாதத்தில்தான் கொண்டாட்டம் நிறைவேறலாம். ஆகையினால், இதுவரையில் இந்த நல்ல முயற்சியில் கலந்துகொள்ளாதவர்களும் கலந்துகொள்வதற்குச் சமயங் கிடைத்திருக்கிறது. நன்கொடை அனுப்பப் பிரியமுள்ளவர்கள் இந்த ஜூலை மாதத்துக்குள் அனுப்பிக்கொள்ளல்வேண்டும்.

2/74, பிராட்வே, மதராஸ்,
28—6—21.

எம். பி. குழந்தைசாமி,
பொக்கிஷதாரன்.

7 ரூபாய்.—Mr. ஜேகொப் பெர்னாண்டோ, மணப்பாடு. (இது ஏழு நண்பர்களிடமிருந்து வசூலித்த தொகையாகும்.)

5 ரூபாய்.—Messrs. D. S. பாஸ்தியான் பிள்ளை, விண்டுயுலா; ஒரு நலங்கோருவோன், பூர்ணை; J. அந்தோனி, மென்றகால், பாஹால்.

3 ரூபாய் 6 அணா.—Mr. B. J. சவியேர், கம்பார்.

3 ரூபாய்.—Messrs. பால் பாண்ட், காரைக்கால்; C. M. மிக்கேல், இரங்கூன்; ஞானப்பிரகாசம் பெர்னாண்டோ, கொழும்பு.

$2\frac{1}{2}$ ரூபாய்.—கத்தோலிக்கு மடம், ரேய்ச்சூர்.

2 ரூபாய்.—Messrs. K. ஜான் ஆரோக்கியம், செய்காங்; T. A. லூர்துசாமி பிள்ளை, கோயம்பத்தூர்; சங். D. M. அன்துவான் சுவாமியார், பொள்ளாச்சி; Messrs. F. A. சாமி, கியாக்டோ; I. X. பெர்னாண்டோ, மதுரை; சங். D. தோமாஸ் சுவாமியார், பண்ணூர்.

$1\frac{1}{4}$ ரூபாய்.—Mr. C. ஆரோக்கியசாமி, கொரோமான்டல்.

1 ரூபாய்.—Messrs. L. மதுரை, நைசமாபாத்; S. A. சின்னப்பா, காரைக்குடி; A. T. S. பஸ்தியான், மஸ்கேலியா; A. மரிய பிள்ளை. கொத்தகிரி; A. அப்புதாஸ், ஒத்தை; J. L. கில்லியர், திருவனந்தபுரம்; D. S. ஆரோக்கியசாமி பிள்ளை, செக்கந்திராபாத்; S. பிரான்சிஸ், பூனா; ஜான், பூனா; J. M. சாவியேர், வத்தெகாமா; P. S. ஞானம், மஸ்கேலியா; P. ஆரோக்கியதாஸ், குவாலாலம்பூர்; ஜமேதார், S. ஜோசெப், வேப்பேரி; A. பிரபலநாத பிள்ளை, நாகப்பட்டணம்; L. F. இராயப்பன், ஷோளாப்பூர்; லா மார்டின், லாஷியோ; J. S. பெர்னாண்டோ, மதுரை; M. லா மான்டேகு, செக்ரடேரியெட், புதுவை.

12 அணா.—சங். தோமினிக் சுவாமிகள், இருண்டை.

8 அணா.—Messrs. V. சவேரிமுத்து வாத்தியார், தேவதானம்; L. அலெக்சாண்டர், பூர்ணை.

4 அணா.—Mr. A. தோமாஸ், பூர்ணை; Mr. M. குருஸ் பெர்னாண்டோ, பழயகாயல்.

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

ஓர் அற்புத யந்திரம்.—ஒருவன் பாதத்தைப்பார்த்து அவன் குணத்தைக் கூறக்கூடிய ஒரு புது யந்திரத்தை அமெரிக்க நிபுணரொருவர் கண்டுபிடித்திருக்கிறாராம். இது எவ்வளவுதூரம் சாத்தியமோ அறியோம். ஒரு மனுஷனே இன்னொருவனுடைய குணத்தைக் கண்டுபிடிக்கமுடியாதிருக்கையில், ஒரு யந்திரம் மனுஷன் குணத்தைக் கண்டுபிடிக்கிறதென்றால் இது ஒரு பேராச்சரியமேயாகும்!

காந்தியின் தெய்வசக்தி.—ஒத்துழையாமைக் குருவாகிய மிஸ்டர் காந்திக்கு தெய்வசக்தி யுண்டென்று அக்கட்சியார், பத்திரிகைமூலமாயும், பிரசங்கமேடைமூலமாயும் சாமான்ய ஜனங்களை ஏமாற்றிவருகிறார்கள். "மகாத்துமா ஜீ" யென்று காந்தியை ஸ்மரணைசெய்து வேண்டிக்கொண்டதால் ஓரிடத்தில் மாமரத்தினின்றும் மாம்பழம் விழுந்ததென்றும், இன்னோரிடத்தில் ஊற்று கிடைக்காத விடத்தில் ஊற்று உண்டாகி நீர் பெருகி வழிந்ததென்றும், மற்றோரிடத்தில் காணாமற்போன நோட்டு கண்டெடுக்கப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. என்னே புதுமை யிது!!! இதுவும் நம்பத்தக்கதா?

ஒரு நல்ல உத்தரவு.—ஜில்லா உத்தியோகஸ்தர்களுடைய ரிப்போர்ட்டினால் தள்ளப்பட்டுப்போன உத்தியோகஸ்தர்கள் மேல் அதிகாரிகளுக்கு எழுத்துமூலமாய் அப்பீல் மனுசெய்துகொள்ளவேண்டுமென்பது இதுவரையில் நடைபெற்றுவந்த ஒழுங்கு. இப்போது ரிவினியூ இலாக்காவுக்கு அதிகாரியாயிருக்கும் ஆனரபில் கான்பஹதூர் அபிபுல்லா சாயபு அவர்கள் அப்படிப்பட்ட மனுதாரர்கள் இஷ்டப்பட்டால் தங்கள் விஷயங்களை யாதோர் வக்கீல்மூலமாகவும் தம்மிடத்தில் விவரித்துக்காட்டி நியாயம் பெறலாமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இது உண்மையில் அநியாயமாய்த் தள்ளப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு அநுகூலமான உத்தரவாகும்.

இந்தியாவின் இறக்குமதி.—இந்தியாவானது, வருஷந்தோறும் அயல் தேசங்களிலிருந்து 94 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களை இறக்குமதி செய்கிறது. அதன் விபரம் பின்வருமாறு :—

பொருள்	மதிப்பு
பருத்தித்துணிகள்	62 கோடி ரூ.
சர்க்கரை	16 ,,
பட்டுத்துணிகள்	4½ ,,
மது வினங்கள்	3 ,,
மற்ற சில்லறைச் சாமான்கள் ...	8½ ,,
	94 ,,

பாலுக்குப் பதில்.-சீன தேசத்தில், பசுவின் பாலுக்குப்பதிலாக யாதோ ஓர் செடியின் கொட்டையிலிருந்து எடுக்கும் பாலை உபயோகிப்பதாகவும், அது பசும்பாலைவிட அதிககுணமும், உருசிகரமுங் கொண்டிருப்பதோடு பசும்பாலைவிட அதிக நயமுள்ளதெனவும் சொல்லப்படுகிறது. குணமும் பணமும் அநுகூலமாயிருப்பதால் அதை சீனர்கள் பெரும்பாலும் உபயோகிக்கிறார்கள். அமெரிக்காவிலும், செடிகளிலிருந்தும், கொட்டைகளிலிருந்தும் தேகாரோக்கியத்துக்கடுத்த பால் பெறக்கூடிய வசதியிருக்கிறதென்றும், அதை யெடுத்துப் பால் வியாபாரஞ்செய்வதற்கு யந்திரசாலை யொன்றை ஸ்தாபிக்க ஒரு அமெரிக்கர் முயற்சி செய்கிறாரென்றும் சொல்லப்படுகிறது.

திருச்சூருக்குப் புது மேற்றிராணியார்.—சங். பிரான்சிஸ் வாழப்பில்லி சுவாமியார் அவர்கள் பிலாடெல்பியா மேற்றிராணியாராகவும், திருச்சூருக்கு விக்கர் அப்போஸ்தொலிக்காகவும் அர்ச். பாப்பானவரால் நியமிக்கப்பட்டு, இந்த ஜுலையீ 6உ யாகிய புதன் கிழமையன்று, அர்ச். பாப்பு ஸ்தானாதிபதியவர்களால் மேற்றிராணியார் பட்டம் அளிக்கப்படுவார்கள். இந்த நல்ல மேய்ப்பருக்கு தேவன், திடகாத்திரமும், தீர்க்காயுசும், திறமையும், திடச்சித்தமும், தந்து தமது மந்தையை செவ்வழி நடத்தி நன்மை புரியச் செய்வாராக.

அர்ச். பாப்பானவரும், பிரான்சும்.—நாம் ஏற்கெனவே எதிர்பார்த்திருந்தபடி, கடைசியாய், பிரான்சுக் குடியரசின் அதிகாரிகள், பரிசுத்த பாப்பானவரிடம் தங்கள் ஸ்தானாதிபதி ஒருவர் இருப்பது அவசியமெனத் தீர்மானித்து, அப் பதவிக்கு, மிஸ்டர் எம். ஜோனார்ட் என்னும் மந்திராலோசனை சங்கத்து அங்கத்தவரை நியமித்திருக்கிறார்கள். சத்திய திருச்சபையின் மூத்த மகள் என்று சொல்லத்தக்க விதமாய் அவ்வளவு பயபக்தியுடனிருந்து, தேச கலகக்காலத்தில் திருச்சபையைத் திரஸ்கரித்து, விரோதித்துக்கொண்ட பிரான்சு தேசமானது மறுபடியும் பரிசுத்த தந்தையிடம் நேசம் பாராட்டி உறவாடுவதைக்கண்டு நாம் பெரிதும் அகமகிழ்ச்சி கொள்ளுகிறோம். இந்த சமாதான உணர்ச்சி என்றும் நிலைத்திருக்க வேண்டுமெனக் கோருகிறோம்.

குறுந்தடிகள் நீண்டுவிட்டன.—போக்கிரிகள் கலகம்பண்ணி பிறருக்குத் துன்பம் விளைவிக்குங் காலங்களில் அவர்களைத் தடுத்தடக்குவதற்காகப் போலீஸ் சேவகர்களுக்குக் கொடுக்கப்பட்டு, அவர்கள் இடையில் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும் பேட்டன் என்னுங் குறுந்தடிகளுக்குப்பதிலாக, இப்போது பித்தளைப்பூண் போட்ட நீண்ட தடிகள் (பாணாத்தடிகள்) கொடுக்கப்பட வேண்டுமென்று அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும், "நாண்-கோவாப்பரேஷன்" என்னப்படும் ஒத்துழையாமை சம்பந்தமாய் இப்போது அடிக்கடி வேலை நிறுத்தங்களும், கலகங்களும், நிகழும் இக்காலத்தில் அவைகளை நிர்வகிப்பதில் குறுந்தடிகளால் குணமில்லையென்றே, நெடுந்தடிகளை யுபயோகிக்க உத்தரவாயிருக்கிறதென்று தெரிகிறது.

பேசும் படம்.—"ஜியார்ஜ் வெப்" என்னும் அமெரிக்கா சாஸ்திரி யொருவர் பயாஸ்கோப் அல்லது சினிமா என்னும் காட்சிப் படங்கள், அசையும்போதே பேசுவதையுங் காட்டும் நூதன யந்திரமொன்றைக் கண்டுபிடித்திருக்கிறாராம். சமீபத்தில் அந்த நூதன காட்சியை அவர் லண்டன் நகரவாசிகளுக்குக் காண்பித்து அவர்களால் பெரிதும் பாராட்டப்பெற்றார். யாதொரு கதை அல்லது சம்பவத்தைப் படம் எடுக்கும்போதே, கிராமபோன் ரிக்கார்டு எடுக்கிறதுபோல் அவர்கள் பேசுவதையும் எடுத்துக்கொண்டு, பிறகு ஷை படங்களைக் காட்ட ஆரம்பிக்கும்போது, இந்த கிராமபோன் ரிக்கார்டுகளைக்கொண்டு ஏககாலத்தில் தொடர்ச்சியாய் தோரணையாய்

Supplement to the "Good Pastor" 1—7—21.

ஓர் விண்ணப்பம்.

1. இதோ உங்கள் கண்களை ஏறெடுத்து, வயல் நிலங்கள் இப்பொழுது அறுப்புக்கேற்ற வெண்மையாயிருக்கிறதைப் பாருங்கள். அறுக்கிறவன் கூலியைப் பெற்று நித்திய ஜீவியத்திற்காகப் பலனைச் சேகரிக்கின்றான். (இதனால்) விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவருமே சந்தோஷமடைகிறார்கள். (அர்ச். அரு. IV. அதி. 35-36 வச.)

2. சென்ற 1920-ம் வருஷம் செப்டம்பர் மாதத்திலே, தென்னிந்தியா ரெயில்வே மார்க்கத்திலுள்ள வண்டலூர் ஸ்டேஷனிலிருந்து ஆறு மயில் தூரத்திலிருக்கும் ஆரம்பாக்கம் என்னும் ஊரில், சுமார் 150 ஆன்மாக்களடங்கிய ஓர் அஞ்ஞானக் கிராமம் முழுதும் சத்திய வேதத்தை விசுவசித்துக் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களானார்கள். இவர்களனைவரும் பரிசுத்த தேவமாதா பிறந்த திருநாளாகிய செப்டம்பர் மாதம் 8-ந் தேதி ஞானஸ்நானம் பெற்றபடியால், இவர்கள் கிராமத்துக்கு மரியம்பாக்கம் என்னும் பெயர் கொடுக்கப்பட்டது.

3. இப் புதுக் கிறீஸ்துவர்களின் முன்மாதிரியைக் கண்டுபாவித்து ஷை கிராமத்தையடுத்த பால்நெல்லூர் பங்கு விசாரணைக்குட்பட்ட கிராமங்களாகிய போந்தூர், எறையூர், எழிச்சூர் முதலிய இன்னும் பற்பல கிராமங்களிலுமுள்ள அஞ்ஞானிகளநேகர், தாங்களும் கத்தோலிக்கராக வேண்டுமென்னும் ஆசைகொண்டு, 1921-ம் வருஷம் மார்ச் மாதம் 21-ம் தேதி மயிலை மேற்றிராணியாண்டவரவர்கள் தமது ஞான விசாரணைக்காக மேற்சொன்ன இடங்களுக்குப் போயிருந்தபொழுது பெருந்திரளாய்க் கூடிவந்து, ஷை ஆண்டவரைச் சந்தித்துத் தங்கள் ஆசையை அவரிடம் தெரிவித்து, விண்ணப்பம் செய்துகொண்டார்கள்.

4. இவ் வதியுன்னத வேலையைக் கைக்கொண்டு நிறைவேற்றுவதற்கு முந்தமுந்த அவர்களுக்கு ஞான உபதேசஞ் செய்யத்தக்க திறமையுள்ள உபதேசிகளை ஏற்படுத்தவும், அவர்கள் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்கவும், அவர்கள் தேவாராதனை நடத்துவதற்காக ஜெபக்கூடங்களைக் கட்டவும் செய்வது முக்கியமானது. இன்னமும் கஷ்ட ஜீவனஞ்செய்யும் ஏழைகளான அவ் வினத்தவருக்குப் பயிரிட நிலங்களும், வீடு கட்டிக்கொள்ள இடங்களும் மானியமாய் சர்க்கார் அதிகாரிகள் கொடுக்க இசைந்து வராவிட்டால், அவர்கள் பிழைப்புக்கு

வேண்டிய வேறு வழிகளைச் செய்வதுவும் கோவில் அதிகாரிகளையே பொறுத்த கடமையாயிருக்கிறது.

5. பதினாயிரம் ஆன்மாக்களுக்குமேல் மனந்திரும்பிக் கரையேறக் கூடிய இந்த அதிமுக்கிய அலுவலை முடிப்பதற்குப் பெருந் தொகையான பணம் வேண்டுமென்பதை அறியாதாரொருவரும் இருக்கமாட்டார்கள். சர்வ வல்லபக் கடவுளே இதைச் சம்பூரணமாய் நிறைவேற்றத்தக்க துணையாய் இருப்பாரென்பது எங்கள் முழு நம்பிக்கை.

6. ஆகவே, எல்லாம்வல்ல சர்வேசுரன்பேரில் எங்கள் முழு நம்பிக்கையையும் வைத்து, பரிசுத்தமும் உன்னதமுமான இக் கைங்கிரியத்தை நிறைவேற்றுவதற்கு, தருமசிந்தையும் உதாரகுணமுமுள்ள கிறீஸ்துவர்கள் தங்களாலான பொருளுதவி தந்து ஆதரிப்பார்களென நம்பிக்கையுடன் விண்ணப்பம் பண்ணிக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,

எஸ். மரியானந்தம்,
அஞ்ஞானிகளை மனந்திருப்புவதற்காக நியமிக்கப்பெற்ற
சிரேஷ்ட குரு.

ஆர். எல். சஞ்சீவிநாதர்,
அஞ்ஞானிகளை மனந்திருப்புவதற்காக நியமிக்கப்பெற்ற
விசாரணை குரு.

மயிலை மேற்றிராணியாண்டவர் அவர்கள் அளித்த உத்தாரம்.

நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய இராச்சியம் எல்லாவிடத்தும் பரவி அபிவிருத்தியடையும்படி ஆசைப்படும் யாவரும் இவ் விண்ணப்பத்துக்கு செவிசாய்க்கும்படி நாம் விரும்பி, இவ்வுத்தம கைங்கிரியத்துக்காக சிறிதளவேனும் பொருளுதவி புரிபவர் அனைவரையும் ஆசீர்வதிக்கிறோம்.

(ஒப்பம்)

✠ தோம் தியத்தோனியுஸ்,
மயிலாப்பூர் மேற்றிராணியார்.
சந்தோமே, 23—4—21.

இவ்விஷயமாய் உதவிசெய்ய விரும்பும் தருமசிந்தையுள்ள பரோபகாரிகள் தங்கள் நன்கொடைகளை, அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விலாசம்—சங். ஆர். எல். சஞ்சீவிநாத சுவாமிகள்,
பால்நெல்லூர், இச்சூர் போஸ்டு, செங்கல்பட்டு.

செய்துள்ள நூதன இயந்திர பலத்தால் பேச வைக்கிறார். படங்கள் அசைவதும், கிராமபோன் பேசுவதும் ஒன்றுக்கொன்று பேதப்படாமல், படங்களே பேசுவதுபோல் தற்சொரூபமாய்க் காணப்படுகிறதாம். இது நூதன காட்சியன்றோ? இது நமது இந்தியா தேசத்துக்கு சிலகாலத்துக்குள்ளாக கொண்டுவரப்படுமென்பதிற் சந்தேகமில்லை. அப்போது அக்காட்சியைப் பிரத்தியட்சமாய்க் கண்டு களிக்கலாம்.

ராவ் சாகேப் கயித்தான் வில்லவராயர்.—இவ்வருஷம் நமது சக்கரவர்த்தியின் ஜனன தின கௌரதா பட்ட மளிப்பு ஜாபிதாவில், நமது கத்தோலிக்கு இந்தியரின் நாமதேயங்கள் வெகு சிலவே காணப்பட்டன. தூத்துக்குடியில் பிரபல வர்த்தகரும், பொதுநலப்பிரியரும், பரோபகாரியும், தேசாபிமானியுமாகிய ஸ்ரீமான் கயித்தான் வில்லவராயர் அவர்களின் பொதுநல ஊக்கத்தை சன்மானித்து் காருண்ய பிரிட்டிஷ் இராஜாங்கத்தார் அவர்களுக்கு "ராவ் சாகேப்" பட்டம் அளித்ததை நாம் பெரிதும் பாராட்டி, ராவ் சாகேப் கயித்தான் வில்லவராயருக்கு நாம் சுபசோபன வாழ்த்து கூறுகிறோம். இவர் இதுமுதலாக இன்னும் பல கௌரதா பட்டங்கள் பெற்று நமது வகுப்புக்குத் திலகமாகவும், தாரகமாகவும் விளங்கவேண்டுமெனக் கோருகிறோம்.

மரித்துயிர்க்க யத்தனித்த சந்நியாசி மாண்டார்.—மெய்யான சர்வேசுரனும், மெய்யான மனுஷனுமொன்றான நமது கர்த்தர் மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த விருத்தாந்தத்தைக் கேட்ட ஒரு பிராமண சந்நியாசி அசூயை கொண்டவனாய், தன் சீஷனை அழைத்து "கிறீஸ்துவர்கள் வணங்கும் சேசுநாதர் உயிர்த்தெழுந்தார் என்கிறார்களே அதென்ன ஒரு பெரிய அதிசயமா? நானும் அப்படிச் செய்ய வல்லவன். பார்க்கிறாயா? நான் சொல்லுகிறபடி செய்" என்று ஒரு குழி தோண்டச்செய்து, தான் அதிற் படுத்துக்கொள்ளப்போவதாயும் படுத்துக்கொண்டபின் தன்னை முழுதும் மூடுமட்டும் மண்ணைத் தள்ளும்படி சீஷனுக்குப் பணித்துவிட்டு, அக் குழியில் படுத்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டான். பிறகு சீஷன் குரு சொன்னதை சரியாய்த் தெரிந்துகொள்ளாதவனாய்த் திரேகம் மறையுமட்டும் சுமார் அரையடி ஆழம் மண்ணைத் தள்ளுவதற்குப்பதிலாய் குழி நிறையத் தள்ளிவிட்டு மூன்றாம் நாள் குரு உயிர்ப்பாரென்று காத்திருந்தான். சந்நியாசியைத் தேடிவந்தவர்களுக்கு அவர் ஊருக்குப் போயிருக்கிறார், மூன்று நாள் பொறுத்து வருவாரென்று சொல்லிவந்தான். மூன்றாம் நாள் குரு உயிர்க்காததனால் திகில்கொண்டு, ரிஷியைத் தேடி வருபவர்களுக்கு தக்க மறுமொழி சொல்லமுடியாதவனாய்த் தயங்குவதைக் கண்டவர்கள் போலீசுக்கு அறிவித்தார்கள். போலீசார் வந்து சீஷனை அதட்டி பயமுறுத்த, அவன் உண்மையைச் சொல்லி, குழியைக் காண்பித்தான். குழியைத் தோண்டிப் பார்த்தபொழுது, சந்நியாசியார் சரீரம் அழுகிச் சகிக்கொண்ணா துர்நாற்றம் வீசிற்று. இப்படியன்றோ அற்புதஞ் செய்ய வேண்டும்! இச்சம்பவம் நடந்த விடம், சென்னை மாகாணத்திலுள்ள "ஹிந்து ரதி" யென்றும், அச்சந்நியாசியின் பெயர் கிருஷ்ணசுவாமியென்றுஞ் சொல்லப்படுகிறது.

சர்க்கரைக்கு வரப்போகும் கிராக்கி.—இப்போது நாளுக்குநாள் நம் தேசத்தில் பெருக்கமடைந்துவரும் மோட்டார்வண்டிகள் ஓடுவதற்கு சக்தியுண்டாக்குவதில் உபயோகப்படும் "பெட்ரோல்" என்னும் எண்ணெய்க்குப் பதிலாக "நெட்டாலைட்" என்னும் ஒரு புதுப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது சர்க்கரைப் பாகிலிருந்து செய்யப்படுகின்றதாம். அது சக்தியுண்டாக்குவதில், எல்லாவிதத்திலும் பெட்ரோல் எண்ணெய்க்குச் சமானமானதென்று சொல்லப்படுகிறது. அப்படியானால், சர்க்கரை சாப்பிடுகிறவர்கள் பாடு திண்டாட்டந்தான். இவ்விஷயத்துக்காக இத்தேசத்தில் உண்டாகும் சர்க்கரை ஏராளமாய் உபயோகப்பட்டுப் போனால், உணவுக்கு வேண்டிய சர்க்கரை எங்கிருந்துவரும்? போதுமான அளவு வாராமற்போனால் சர்க்கரையின் விலை அபாரமாய் ஏறிவிடுமென்பதற்கு ஐயமில்லை. சாமான்ய ஜனங்களுக்குப் பெருஞ் சங்கடம் ஏற்படும், ஷை "நெட்டாலைட்" என்னும் எண்ணெய், முதல் முதல் நெட்டாலில் புதிதாய்ச் செய்யப்பட்டதாம். அதனால்தான் அதற்கு அப்பெயர் கொடுக்கப்பட்டது. இப்போது இந்தியாவிலும், கிழக்கு ஆபிரிக்காவிலும், ஆஸ்டிரேலியாவிலும் உற்பத்தி செய்யப்படுகிறதாம். உணவுப் பொருளுக்கு உதவும் சர்க்கரை இவ்வாறு வேறு காரியங்களுக்கு எடுத்

துக்கொள்ளப்பட்டால் விலை யேறுமென்பதில் ஐயமில்லை. சர்க்கரையின் எதிர்காலம் கவலைக்குரியதாயிருக்கிறது.

ஓர் அருமையான புத்தகம்.—" The Hand of Xavier in the Pearl Fishery Coast " " முத்துக்குளிக்கரைச் சீமையில் அர்ச். சவேரியாரின் கைவேலை " என்னும் மகுடம் பூண்டதோர் ஆங்கிலப் புத்தகம் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. அதை நாம் அவகாசக்குறைவால் துரிதமாய் வாசித்தமட்டில், கிறீஸ்துவர்கள் எல்லோரும், அர்ச். சவேரியார் தாசர்கள் அனைவரும் விசேஷமாய், முத்துக்குளிச் சீமைக்குரியவர்களான பரதகுலத்தவர்கள் ஒவ்வொருவரும் வாசித்தறியத்தக்க ஓர் அரிய புத்தகமென்றே சொல்வோம். தென்னிந்தியாவில் இந்த சிந்து தேசத்து அப்போஸ்தலர் செய்துள்ள மகத்தான வேலைகள் இப்படிப்பட்டவையென்பது அவ்வப்போஸ்தலர் அவ்வப்போது தம் தலைவருக்கோ, நேசருக்கோ எழுதியுள்ள கடிதங்களைக்கொண்டு நிரூபித்துக்காட்டப்பட்டிருக்கின்றன. அவர் மணப்பாடு, தூத்துக்குடி, ஆலந்தலை, திருவனந்தபுரம், புன்னைக்காயல், கொச்சி, நாகப்பட்டணம், மயிலாப்பூர், மலாக்கா முதலிய ஊர்களைப்பற்றியும், ஜனங்களைப்பற்றியும், ஆங்காங்கு செய்துள்ள அற்புத வேலைகளைப்பற்றியும், அதில் குறிப்பிட்டிருக்கிற விவரங்களை இங்கே எடுத்தெழுதுவது அசாத்தியம். அவைகளையெல்லாம் அப்புத்தகத்தை வாசித்தே அறியவேண்டும். அதில் அர்ச். சவேரியாருடைய நிஜ ஸ்ரூபத்தின் படம், அவரது அழியாச் சரீரத்தின் படம், அது வைக்கப்பட்டிருக்கும் திருப்பீடம், திருக்கோவில் முதலியவற்றின் படங்கள், மற்றும் படங்கள் அநேகம் அதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் வேண்டுவோர்கள். " நல்ல ஆயன் " அச்சுக்கூடத் தலைவருக்காவது, கொழும்பு, கன்சிஸ்டரியில் டிங்ஸிலுள்ள மெஸர்ஸ். எக்ஸ். பி. பாய்வஅன்டு சன்ஸுக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். விலை பிரதி ஒன்றுக்கு ரூ. 1–12–0. தபாற் செலவு பிரத்தியேகம்.

வேல்ஸ் இளவரசர் விஜயம்.—மகாமேன்மைதங்கிய ஜியார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் ஜேஷ்ட புத்திரனும் பட்டத்திளவரசருமாகிய வேல்ஸ் இளவரசர் சென்ற மாரி காலத்தில் இந்தியாவிற்கு விஜயஞ் செய்வாரென்று முதல் சொன்னபடி வரவில்லையல்லவா? இவ்வருஷம் நவம்பர் மாதத்தில் பம்பாய் வந்திறங்குவாரென்று, இப்போது அறிவிக்கப்படுகிறது.

மதுவிலக்குப் பிரசாரம்.—மதுபானத்தை ஒருவாறு மட்டுப்படுத்தி, அதைக் கூடியவரையில் ஒழிக்கும் நோக்கத்துடன் சட்ட நிரூபண சபை யங்கத்தவருள் ஒருவராகிய திவான் பஹதூர் இராமச்சந்திர ராவ் அவர்கள் ஒரு புது மசோதா சட்டம் தயாரித்திருக்கிறார்கள். அது சட்ட நிரூபண சபையாரின் அங்கீகாரத்துக்குக் கொண்டு வரப்படும். மதுபானத்தினால் மானுடருக்கு நேரும் கேடுகளை யறிந்தோர், தேச க்ஷேமத்தைவிரும்புவோர் ஆகிய அனைவரும் அம்மசோதா சட்டம் நிறைவேறுமாறு முயற்சி செய்யவேண்டும். மதுவிலக்குச் சங்கங்கள், பரோபகார சங்கங்கள் ஒவ்வொன்றும், அதை அங்கீகரித்ததின் அடையாளமாகத் தீர்மானங்கள் செய்து கவர்ண்மெண்டாருக்கு அனுப்பவேண்டும். மதுபானத்தை முற்றும் உடனே ஒழிப்பதென்றால் சாத்தியமான காரியமல்ல. அதைக் கொஞ்சங் கொஞ்சமாக நாளாவட்டத்தில் குறைத்துக்கொண்டு வரவேண்டும். ஆனதினால் தற்போது, கள்ளுக்கடைகள் விஷயத்திலும், மேனாட்டுச் சாராயக்கடைகள் விஷயத்திலும் பிரவேசியாமல், நாட்டுச் சாராய விற்பனையைமாத்திரம் கட்டுப்படுத்துவது ஷை மசோதா சட்டத்தின் நோக்கம். இதைப்பற்றிய முழு விவரங்கள் வேண்டுவோர் சென்னை, பிராட்வே, 2/74 நெ. வீட்டிலுள்ள எம். பி. குழந்தைசாமிப் பிள்ளைக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இரண்டு பெண்மணிகள்.—ஸ்ரீமான் திவான் பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளையவர்களின் குமாரத்தியாகிய மிஸ். இசபெல்லா என்னும் பெண்மணி பீ. ஏ. பட்டப்பரீட்சையில் இங்கிலீஷ் பாஷைப் பகுதியிலும், மிஸ். மார்கரித்தா என்னும் இன்னொரு குமாரத்தி (சிறிது காலத்துக்கு முன்னே எப். ஏ. என்னப்பட்ட) இண்டர்மீடியட் பரிட்சை முழுவதிலும் தேறிவிட்டார்களெனக் கேட்டு சந்தோஷமானோம். இப்பெண்மணிகள் மேன்மேலும் கல்வியில் தேர்ச்சிபெற்று பெண்கள் நாயகமென விளங்கி, கத்தோலிக்கு இந்திய ஸ்திரிகளுக்குள் கல்வி யபிவிருத்திக்கு உற்சாக மூட்டுவார்களென நம்புகிறோம்.

கையறுநிலை.

சென்னை, அர்ச். காபிரியேல் பாடசாலையில் தலைமை ஆசிரியராயிருந்து, பின்னர் அர்ச். சவேரியார் கோவில் பங்கு சுவாமியாராகிய சங். ஹோபார் சுவாமியார் மரணத்துக்காற்றுமல் இரங்கிப் பாடியது.

ஓரே வோரடிமிக்கு வேறுபடவந்த கொச்சக வொருபோது.

1 சென்னையினிலே பழுத்த சிறந்த மரம் வேரோடு
தன்னிருப்பிற் றானகத் தளர்வெய்திச் சாய்ந்ததென
மன்னுமுயர் வேதகுரு மண்ணிற் பெயரோபா
ரென்னுமுயர் மாதவனே யேகனடிச் சார்ந்தனையோ!
எந்தன் குருமணியே யேகனடிச் சார்ந்தனையோ!

2 மன்னுபுகழ் சாலும்வள நகராஞ் சென்னையினிற்
றன்னுபுகழ் பெற்றிலங்குந் தூயமறை நாயகனே
தன்னயமே பாராத் தனிக்கருணை வள்ளானீ
பொன்னகரை நாடிப் புகுந்தனையோ ஐயாவே!
பூதலம் விட்டேவான் புகுந்தனையோ ஐயாவே!

3 அணிமருவுஞ் சென்னையினு மாந்திரம் பல்லாரியினு
மணிமருவுஞ் சத்யமறை மாந்தர்க் குருமுனியாய்க்
கணிமருவுங் கல்லூரி கழகத் தலைமைவகித்
தணிமருவி நின்றவனே யந்தோ மறைந்தனையோ!
அமலபரன் பாதம்போ யந்தோ மறைந்தனையோ!

4 மேனாட்டை விட்டிங்கு மேவியெமைச் சீர்படுத்தி
மேனாட்டுக் கேகும் வினைதரைக் காட்டியவா
தானாட்டு மிந்தத் தரையிலினித் தரியலென
மேனாட்டை நோக்கிவழி மீளேனென் றேகினையோ!
மேலவனை நாடிவழி மீளேனென் றேகினையோ!

5 அஞ்ஞானமல்குமெம தாரியநன் னாட்டினிலே
மெய்ஞ்ஞான மாங்கதிரை வீசிநின்ற செஞ்சுடரே
பொய்ஞ்ஞானத்தைக்கடிந்த புங்கவனே புண்ணியனே
மெய்ஞ்ஞானபானுவிட மெய்மறந்து சென்றனையோ!
மெய்ப்பதவி விண்ணென்று மெய்மறந்து சென்றனையோ!

(இன்னும் வரும்.)

Madras,
22nd June 1921.

S. SELVA RAJU, B. A.,
St. Gabriel's High School, Madras.

ஸ்ரீமான் Y. M. ஜான் பிள்ளையவர்களின் தேகவியோகம்.

திரைகடல்சூழ் பூவுலகின்கண் தெண்ணீர் தடாகங்களும், தெங்கு, மா, பலா, அடர் சோலைமுதலிய தாபர நந்தவனங்களும் நிறைந்து விளங்காநின்ற சென்னை தேவனாம்பேட்டை நிவாசரும், மயிலைக் காட்டுக்கோவில் அர்ச். ஞானப்பிரசாதமாதாவின் ஆலய சபைத் தலைவரும், Messrs Manuel & Co., Bakers and Confectioners சொந்தக்

காரரில் ஒருவரும், சங். குருப்பிரசாதிகளால் புகழ்பெற்றவரும், தர்மசிந்தையுள்ளவரும், ஏழைகளுக்கு அன்னதானம் வஸ்திரதானம் கொடுத்து ஆதரித்தவரும், ஐரோப்பியர், இந்துக்கள், கிறீஸ்துவர்கள் பலராலும் நன்கு மதிக்கப்பட்டவருமாகிய ஸ்ரீமான் Y. M. ஜான் பிள்ளை அவர்கள் தமது 53-வது வயதில் " Road side Villa " என்ற தமது நிவாசத்திலே கடைசி தேவத்திரவிய அநுமானமாகிய அவஸ்தைப்பூசுதல் சடங்கை குறைவற முடித்து, ஜூன்மீ 15உ புதன்கிழமை இரவு 11½ மணிக்கு தேகவியோகமானார்.

இவர் 1920ஆ அக்டோபர்மீ கால் இடறிவிழுந்து, வலது கை மூட்டுப் பிசக, ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு சுகமடைந்தார். சில நாட்களுக்குப் பிறகு திரேக பெலவீனமடைந்து நோய் அதிகரிக்க, தேர்ந்த இங்கிலீஷ் வைத்தியர்களாலும் தமிழ் வைத்தியர்களாலும் எவ்வித சிகிச்சை செய்வித்தும் குணப்படவில்லை. இவர் தன் மரணத்தை ஏற்கெனவே தெரிந்துகொண்டு நல்ல மரணத்துக்குவேண்டிய ஆயத்தம் செய்து அடிக்கடி திவ்யநற்கருணை உட்கொண்டுவந்தார். பங்கு விசாரணைக்குருவாகிய சங். சோமா சுவாமிள் அவர் சுகப்படும் கருத்துக்காக மே மாதத்தில் பீடத்தை விசேஷித்த விதமாகச் சிறப்பித்து, தேவதாயைப் பிரார்த்தித்துவந்தார்கள். நல்ல சர்வேசுரன் தமது தாசனை தம்மண்டை அழைக்கச் சித்தங்கொண்டதினாலே, மரணத்தறுவாயில் சங். சோமா சுவாமிகள், மோதாவாஸ் சுவாமிகள், மெர்க்கஸ் சுவாமிகள் ஆக மூவரும் அழைக்கப்பட்டு கடைசி ஆசீர்வாதம் அளித்தார்கள். ஜூன்மீ 15உயன்று ஜெபங்களும், பிரார்த்தனைகளும் செய்துகொண்டேயிருந்தபோது இரவு 11½ மணிக்கு மெத்த அமைதியாய்ப் பிராணவியோகமானார். மறுநாள் 16உ வியாழக்கிழமை சவப்பெட்டியுடன் கண்ணாடி இரதம் ஆஜராய் வந்திருக்க, மாலை 3½ மணிக்கு சொந்தக்காரரும், பந்துமித்திரர்களும் அன்பும் அநுதாபக் குறியுமாக சவப்பெட்டியை அரை மையில்தூரம் தங்கள் தோள்மேற் சுமந்துகொண்டுபோய் இரதத்தில் வைத்து கோவிலை நெருங்குகையில் கோவில் மணிகள் துக்க குறியாக தொனிக்க, சங். சோமா சுவாமிகள் பிரேதத்தை ஆசீர்வதித்தானபின் பாடகர்கள், திரளான ஜனக்கும்பல் முன்னும் பின்னுமாகச் சென்று மயிலை இளைப்பாற்றுமாதா கோவில் கல்லறையில் சங். சோமா சுவாமிகள், சங். மோதாவாஸ் சுவாமிகள் இவ்விருவரால் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஸ்ரீமான் Y. M. ஜான் பிள்ளை மரணத்தால் கண்ணீர் விடாதார் ஒருவரும் இல்லை. இதை வாசிக்கும் சகோதரர் சகோதரிகள் இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளப் பிரார்த்திக்கின்றேன்.

வேளாள தேவனும்பேட்டை, 27—6—21. C. V. T.

ஓர் கோவில் கட்ட தருமம் செய்யுங்கள் !!

செங்கற்பட்டு பங்கு விசாரணைக்குட்பட்ட வாலாஜபாத் என்னும் ஊரில் சுமார் 60 கத்தோலிக்கு குடும்பங்கள் உண்டு. இவர்கள் பரம ஏழைகள். அர்ச். பிரான்சீஸ்கு அசீசியார் பாதுகாவலிலிருந்த இவர்களுடைய சிறிய கோவில் சென்ற வருடம் பெய்த அகோர மழையினால் இடிந்து தரைமட்டமாய்ப்போனதினால், இவ்வேழை ஜனங்கள் ஒன்று கூடி ஜெபஞ்செய்ய இடமில்லாமல் தவிக்கிறார்கள். இதுவரையில் இவர்கள் தங்களூரிலேயே தோல் பதனிடும் ஷாப்புகளில் கூலி வேலை செய்து ஜீவனம் செய்துவந்தவர்கள். ஆனால், இப்போது இவ்வேலையும் நிறுத்தப்பட்டு, ஜீவனத்துக்கு யாதொரு வழியுமில்லாமல் பசியும் பட்டினியுமாய் வருந்துகின்றார்கள். இவர்களுடைய கஷ்டங்கள் ஒருவாறு நீங்க இவர்கள் மத்தியில் ஒரு கோவில் கட்ட தீர்மானித்திருக்கிறோம். இக்கட்டிடம் துவக்கினால், இச்சனங்களுக்கு சிறிது காலமாகிலும் வேலையும் கூலியும் கிடைக்குமென்பதற்கு ஐயமில்லை. ஆகவே, இதனை வாசிக்கும் நண்பர்களே ! தர்மிஷ்டர்களே ! கனதனவான்களே ! இவ்வேழை மக்களை ஆதரிக்க முன்வாருங்கள், நீங்கள் அளிப்பது " தினைத்துணையாயினும் பனைத்துணையாகப்" பயனடைவீர். ஏழைகளின் பரம பிதாவாகிய சர்வேசுரன் ஒன்றுக்கு நூறாகச் சம்பாவனை அளிப்பாரென்பது திண்ணம்.

PETER ALOYSIUS,
விசாரணைக்குரு,
செங்கல்பட்டு.

The Good Pastor

நல்ல ஆயன்

" நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 19. ஆகஸ்டு 1921. இலக்கம் 8.

DO WELL WHAT YOU DO.
" செய்வன திருந்தச் செய்."

" செய்வன திருந்தச் செய்" என்பது ஔவையார் இயற்றிய ஆத்திச்சூடியிலுள்ள தோர் வாக்கியமென்றும், செய்யத்தக்க காரியங்களைத் திருத்தமாக அல்லது செவ்வையாகச் செய்வாயாகவென்பது அதன் பொருள் என்றும், அது பெரும்பாலும் இலௌகிக விஷயங்களைக் குறித்தே எழுதப்பட்டதென்றும், ஏறக்குறைய எழுத்துவாசனை யறிந்த எல்லோருக்குமே தெரிந்த விஷயம். " செய்யவேண்டிய காரியங்களைச் செவ்வனே செய்" என்னும் இந்தக் கற்பனை இலௌகிக காரியங்கள் விஷயத்தில் பொருத்தமாவதுபோல, ஞானகாரியங்கள் விஷயத்திலும் பொருத்தமாகிறதென்று சொல்லத்தேவையில்லை. ஏனெனில், இலௌகிக விஷயத்திலாவது, ஞான விஷயத்திலாவது செய்யப்படுகிற காரியங்கள், செவ்வையாக, திருத்தமாக, பயன்பட, கோரிய சித்திபெறும்படியாகச் செய்யப்படாமற்போனால் அவற்றைச் செய்வதாலாவதென்ன ? அவ்வாறு பயனிலாக் காரியத்தைச் செய்பவன் பைத்தியக்காரனன்றோ? ஆயினும், அந்தோ, இம்மாதிரி பைத்தியக்காரர்கள் நம்மில் அநேகர் இருக்கிறார்கள். இதை மறுப்பது கூடாத காரியம். இது உண்மையிலும் உண்மை.

கிறீஸ்துவர்களில், எங்கேயோ ஆயிரம் பேர்களில் ஒருவர் இருவர் நீங்கலாக ஏறக்குறைய எல்லோரும் ஜெபஞ் செய்கிறார்கள், தபஞ் செய்கிறார்கள், தானதருமஞ் செய்கிறார்கள், கோவிலுக்குப் போகிறார்கள், திருப்பலிபூசை காண்கிறார்கள், பாவசங்கீர்த்தனஞ் செய்கிறார்கள், திவ்யநன்மை வாங்குகிறார்கள், மெய்விவாகம் முதலிய தேவத்திரவிய அநுமானங்களைப் பெறுகிறார்கள், இன்னுமற்ற நற்கிருத்தியங்களையும் ஏராளமாய்ச் செய்கிறார்கள். இவைகளைச் செய்கிறவர்கள் எவ்லோரும் அவ்வவற்றால் பெறக்கூடிய முழுப் பலன்களையும் அடைகிறார்களா என்பதுதான் இப்போது கேள்வி. இக்கேள்விக்கு, நாம் பின்னால் குறிப்பிடப்போகிற விஷயங்களை யுத்தேசித்து அவரவர் மனசாட்சியே விடைபகரவேண்டுமானாலும், பொதுப்பட, அநேகர், தாங்கள் செய்யுங் கருமங்களைச் செவ்வனே செய்யாத காரணத்தால் பலனடையாமல் வீணர், அல்லது நாம் மேலே சொன்னபடி பைத்தியக்காரர்களாகிறார்கள் என்பது எமது துணிபு.

எந்த ஞானக்கிருத்தியத்தையும் சித்தி பெறச்செய்வதற்கு ஐந்து காரியங்கள் வேண்டும். அவையாவன: சுத்த கருத்து, உண்மையான பக்தி, உயிருள்ள விசுவாசம், தேவ இஷ்டப்பிரசாதம், நீங்காத கவனம் ஆகியவைகளே.

கேவலம் உலக பெருமைக்காகவாவது, பிறர் மெச்சுதலுக்காகவாவது, வழக்கத்தையொட்டியாவது, பெரியோர் கட்டாயத்துக்கஞ்சியாவது, அல்லது யாதோர் இலௌகிக லாபத்தைக் கருதியாவது செய்யாமல், சர்வேசுரனுக்குத் தோத்திரமாகவும், ஆத்தும லாபத்தைக் கருதியும், சுயேச்சையாயுஞ் செய்வது, சுத்த கருத்துடன் செய்வதாகும். இப்படி சுத்த கருத்தில்லாமல், உலகத்தார் நம்மைப் பெருமையாகப் பேசுவார்களென்றும், எண்ணுவார்களென்றும், உற்றார் பெற்றார் உறவினர் முதலியோர் மெச்சுவார்களென்றும், அதனால் நாம் இன்ன லாபத்தைப் பெறலாமென்றும், நம் அயலார் செய்கிறார்களே நாம் செய்யாமற்போனால் நம்மையவர்கள் மதிக்கமாட்டார்களேயென்றும், பெரியோர் இப்படிச் செய்யச்சொல்லுகிறார்களே நாம் செய்யாமற்போனால், அவர்களுடைய மனஸ்தாபத்துக்கும், கோபத்துக்கும், தண்டனைக்கும் பாத்திரமாகவேண்டுமேயென்றும், இன்னும் ஞான லாபத்தையன்றி வேறு எந்த இலௌகிக லாபத்தைக் கருதியும் செய்யப்படும் ஜெபதபம், தானதருமங்கள் முதலிய எல்லாக் கருமங்களும் பயனற்றவையாகும். அவைகளுக்காகப் பட்ட சிரமம், செலவிட்ட காலம், பொருள் முதலியவை வியர்த்தமாய்ப்போகும்.

இரண்டாவது: உண்மையான பக்தி வேண்டும். அதாவது, ஆசை, ஆவல், ஊக்கம், உருக்கத்துடன் செய்வதே பக்தியுடன் செய்வதாகும். அஃதின்றி அசட்டையாய், வேண்டாவெறுப்பாய்ச் செய்வது உண்மையான பக்தியுடன் செய்ததாகமாட்டாது. இப்படிச் செய்யப்பட்ட ஜெபதபம் முதலியவை பயன் தரா; வீண் வியர்த்தமாகும்.

மூன்றாவது: உயிருள்ள விஸ்வாஸம் வேண்டும். "கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்" என்றும், "ஒன்றுக்கு நூறு அருளப்படும், அமுக்கியும் குலுக்கியும் அளக்கப்படும்" என்றும், திருவாய்மலர்ந்தருளிய சர்வேசுரனாகிய எம் நேச தந்தை, நாம் கேட்டதைக் கொடுப்பார் என்ற உறுதியான விசுவாசத்துடனும் திடனான நம்பிக்கையுடனும் ஜெபித்தல்வேண்டும், நற்கிருத்தியங்களைச் செய்தல்வேண்டும். இப்படிச் செய்தால்தான் கோரிய பலன் கிடைக்கும். இப்படி உயிருள்ள விஸ்வாஸத்துடன் செய்யாதது பலிக்காது; வீணும் விழலுமாகும்.

நான்காவது: தேவ இஷ்டப்பிரசாதம் வேண்டும். சாவானபாவத்தால் தேவ இஷ்டப்பிரசாதத்தை யிழந்து பாவ அந்தஸ்திலிருப்பவர்கள் செய்யும் ஜெபதப முதலிய கிருத்தியங்கள் பேறுபலனற்றவைகளாகும். ஆகவே, நாம் செய்கிற ஜெபதபம் முதலியவை பலன்தரவேண்டுமானால், நாம் எப்போதும் சாவானபாவமில்லாமல் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் இருக்கப் பிரயாசைப்படவேண்டும். எப்போதாவது நாம் சாவான பாவத்தில் விழும் நிர்ப்பாக்கியம் நேரிட்டால், உடனே பச்சாத்தாபத்தால் மறுபடியும் இஷ்டப்பிரசாத அந்தஸ்தை அடையவேண்டுமென்பதை மறக்கவொண்ணாது.

ஐந்தாவது: நீங்காத கவனம் வேண்டும். நாம் யாதோர் நற்கிருத்தியத்தை, விசேஷமாய் ஜெபத்தைச் செய்யும்போது, நாம் சர்வேசுரன் சமுகத்திலிருக்கிறோம், அவரை நோக்கி ஜெபம் பண்ணுகிறோமென்பதை கவனத்தில் வையாமல், வாயொன்று சொல்ல மனதொன்று சிந்திப்பதாயில்லாமல், மனமும் வாக்கும் கிரியையும் ஒத்து கிருத்தியத்தைச் செய்தல்வேண்டும். அநேகம் பேர், ஓயாமல் நெடுஞ் செபம் செய்கிறார்கள். ஆனால், அவர்கள் வாயானது ஜெபங்களை யுச்சரிக்க, மனதானது தங்கள் குடும்ப காரியங்களிலேயோ, மற்றக் காரியங்களிலேயோ, வெகுதூரஞ் சென்று சஞ்சாரஞ் செய்யும். இப்படிப் பராக்குடனும், கவனமில்லாமலும், வாயொன்று சொல்ல மனமொன்று நினைக்கச் செய்யும் ஜெபம் சர்வேசுரனுக்கு ஏற்குமோ? ஒருபோதும் ஏற்காது. மனதை ஒரு விஷயத்தில் அடக்கி வைப்பது மகாப் பிரயாசையான காரியமானாலும், மனதுபொருந்தி அசட்டையாயும், கவனக்குறைச்சலாயும் ஜெபம்பண்ணுவது சர்வேசுரனை அவமதித்தலாகும். பராக்குகளும், வேறு யோசனைகளும் ஜெபம்பண்ணும் நேரத்தில் வருவது சகஜம். அவைகளை உடனே விலக்கிவிட்டு நாம் ஜெபத்தின் மேலே முழு கவனத்தையும் செலுத்த வேண்டுமே தவிர, பராக்குக்கும் சோதனைக்கும் இடங்கொடுத்துக்கொண்டு, அதிமுக்கியமான ஜெபத்தின்மேல் கவனம் வைக்காமல் அசட்டைசெய்வது தகாது. அப்படிச் செய்யும் ஜெபம் பிரயோஜனத்தைத் தாராது.

ஆகவே, மேற்குறித்த ஐந்து காரியங்களையும் நுணுநுணுக்கமாகக் கவனித்து அவற்றின் பிரகாரம் நற்கிருத்தியங்களைச் செய்கிறவர்களே அவற்றால் அடையக்கூடிய முழுப் பலனையும் அடைவார்களே தவிர மற்றப்படியல்ல. அநேகர் சுத்த கருத்தில்லாமலும், பக்தியில்லாமலும், விசுவாசமில்லாமலும், பாவ அந்தஸ்திலும், அசட்டைத்தனமாயும், வாடிக்கையாகவும், பிரதிதினமும் கிரமமாய் நீண்ட ஜெபங்களைப் பொழிகிறார்கள், தானதருமங்கள் செய்கிறார்கள், ஒருசந்தி பிடிக்கிறார்கள், உபவாசம் அனுசரிக்கிறார்கள், பூசை காண்கிறார்கள், பச்சாத்தாபம் நற்கருணை முதலிய தேவத்திரவிய அநுமானங்களைப் பெறுகிறார்கள், தானதருமங்களைச் செய்கிறார்கள். இவ்வாறு செய்கிற கிருத்தியங்களை யுத்தேசித்து, அவர்கள் தங்கள் மறுமைக்கு ஞான ஆஸ்தியைத் தேடி வைத்திருக்கிறோமென்று தங்களுக்குள்ளே சந்தோஷமும், மனோ ஆறுதலும் கொள்ளலாம். ஆனால் உள்ளபடி பார்க்குமிடத்தே அவர்கள் ஞான ஆஸ்தி ஈன நாஸ்தியாய்த்தான் முடியும். அன்னோர்கள் தங்கள் ஆயுள் கால முழுவதும் இவ்வாறு தங்கள் காரியங்களைச் செவ்வனே செய்யாமற்பேவார்களேயாகில், அவர்கள் கடைசியில் உண்மையை அறிந்து மோசம்போவார்கள். அவர்கள் தங்கள் ஆயுசுகால முழுதும் செய்த கிருத்தியங்களெல்லாம், விழலுக்கிறைத்த நீரும், கடலில் கரைத்த காயமும், காட்டில் எரித்த நிலவும் போல வீணும் விழலுமாய்ப்போனதைக் கண்டு ஆற்றொணாத் துயரம் அநுபவிக்கும்படியாகும். இவ்வாறு தான் செய்த கிருத்தியங்களையெல்லாம் நாம் மேலே சொல்லியபடி செவ்வனே செய்யாத ஒருவனுக்குச் சம்பவித்ததைப்பற்றி இங்குக் குறிப்பிடுவோம். அதாவது, போலண்டு தேசத்து இராஜகுடும்பத்தைச்சார்ந்த ஒரு பிரபு, தன் தேச நன்மைக்காக வெகு உற்சாகமாக சிரமப்பட்டு நெடுங்காலம் உழைத்துவந்தானெனினும், தேவ தோத்திரத்துக்காகவாவது, தன் ஆத்தும ஈடேற்றத்தைக்கருதியாவது யாதொரு காரியத்தையும் செய்தவனல்ல. இவன் ஒரு நாள் இரவு ஒரு கனவுகண்டான். தான் எங்கேயோ ஒரு அழகான தேசத்திற் போயிருப்பதாகவும், அங்கு சம்மனசு போன்ற அழகிய ரூபிகள் அநேகர், பெரிய புத்தகங்களை வைத்துக்கொண்டு, வெகு அவசரமாக எதையோ எழுதிக்கொண்டிருப்பதாகவும் கண்டான். அவர்களில் ஒருவரை அணுகி, அவர்கள் அவ்வாறு அக்கரையுடன் எழுதுவது என்னவென்று வினவினான். அதற்கு அவர் "நாங்கள், தேவதூதர்கள், மனிதர் செய்யும் புண்யக்கிருத்தியங்களை இப்புத்தகங்களில் குறிப்பிடுகிறோம்" என்று சொல்ல, அப்பிரபு, "அப்படியானால், என்னைப்பற்றி எழுதப்பட்டது இன்னதென்று நான் அறியலாகுமோ?" என ஆவலுடன் கேட்டான். "ஓ! அதற்கென்ன, அறியலாம். இதோ பார்த்துச் சொல்லுகிறேன்" என்று உடனே புத்தகங்களைப் புரட்டிப் பார்த்து, அவனுடைய ஏட்டைக் கண்டுபிடித்து எடுத்துக் காண்பிக்க, அதில் ஏதுமில்லாமல் வெறுமையாயிருக்கக்கண்டு அப்பிரபு திடுக்கிட்டு, பொறுக்கொண்ணா கஸ்திக்குள்ளாயினான். அவன் அத் தேவதூதர்களை நோக்கி, "ஐயோ! நான் இத்தனை காலமாய், எவ்வளவோ நற்கிருத்தியங்களைச் செய்திருக்கிறேன். எவ்வளவோ வைராக்கியமாகவும், உற்சாகமாகவும் உழைத்திருக்கிறேன். அப்படியிருக்க என்னுடைய நித்திய சீவியத்துக்கான நன்மை யாதொன்றும் என்னுடைய தஸ்திரத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் இது எப்படியாகும்?" என்று வினவ, தேவதூதன் "என் நண்பனே, நான் சொல்வதைக் கேள்; மானுடர்கள் சர்வேசுரனுக்காகவும், அவரது நேசத்துக்காகவும் செய்கிறவைகள் தவிர வேறொன்றும் இப்புத்தகத்தில் பதியப்படுகிறதில்லை" என்று விடைபகர்ந்ததும் அக்கனவு மறைந்துபோயிற்று. இக்கனவு கற்பித்த நற்போதனையானது, அப்பிரபு மனதில் ஆழமாய்ப் பதிந்துபோக, அவன் அந்நாள் தொடங்கி செய்வதெல்லாம், சர்வேசுரனுக்காகவும், அவருடைய திருநாமத்தின் மகிமைக்காகவும், செய்யலானான். இவைகளையெல்லாம் உத்தேசித்து இதுவரையில் இப்படிச் செய்யாத கிறீஸ்துவர்கள், கடந்ததைக் கருதாது இனியாகிலும் தங்கள் கிருத்தியங்கள் சொற்ப

மாயினும், அவைகளைச் செவ்வனே திருந்தச்செய்யும் அப்பியாசங்கொள்ளப் பிரயாசைப்படுவார்களாக.

DEATH & BURIAL OF THE B. V. M.

அர்ச். கன்னிமரியாயின் மரணமும் அடக்கமும்.

அர்ச். கன்னிமரியாயி இவ்வுலகிலிருந்தபோது அவள் சஞ்சாரஞ்செய்த நசரேத், ஜெருசலேம், எபேசஸ் முதலிய நகரங்களில் அத்திருக் கன்னிகையைப்பற்றி பூர்வகாலந்தொட்டுப் பாரம்பரையாய் வழங்கிவரும் வர்த்தமானங்களைக் கண்டறியும் கருத்துடன், சேசு சபை குருக்களில் ஒருவராகிய சங். வில்லிஜெர் சுவாமியார் அப்பரிசுத்த நாடுகளுக்குத் திருயாத்திரையாய்ப்போனார். அந்நாடுகளில், வேத ஆரம்பகாலத்தில், மலைகளிலும், கெபிகளிலும், கணவாய்களிலும், ரஸ்தாக்களிலும் நடந்தேறிய அதிசய வர்த்தமானங்களை ஞாபகப்படுத்தும்படி, அவ்விடங்களில் கற்களைக் குவித்தும், சிலுவை அடையாளங்களைச் செதுக்கியும், அவ்வதிசய சம்பவங்களை எழுத்தால் வரைந்தும் வைப்பதுண்டு. அவ்விடங்களுக்குப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுடன் செல்லும்போது, அங்கு காணப்படும் ஞாபகக் குறிப்புகளை அவர்களுக்கு விவரித்துக் காட்டுவார்கள்.

சங். வில்லிஜெர் சுவாமியார், அர்ச். கன்னிமரியாய் அடக்கம்பண்ணப்பட்ட திருக்கல்லறையைப்பற்றி எழுதிய விருத்தாந்தத்தை இங்கு சுருக்கிக் காட்டுகிறோம். இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் அப்போஸ்தலர்கள்மேல் இறங்கிவந்தபின் அப்போஸ்தலரான அர்ச். அருளப்பர் தேவதாயாரை எபேசு நகருக்குத் தம்மோடு அழைத்துக் கொண்டுபோனார். தேவமாதா அந்த ஊரில் வசித்திருந்த காலத்தில், அந்த நகரிலும் அதைச்சுற்றிலுமுள்ள நாடுகளிலும் எண்ணிக்கையில்லாத பேர் சத்திய வேதத்தைக் கைக்கொண்டார்கள். எபேஸ் நகரில் தேவமாதாவே கன்னியரின் ஓர் சபையை ஸ்தாபித்து அதை நடத்திவந்தாள். அக்காலத்தில் அர்ச். யாகப்பர் வேதசாட்சியாகக் கொல்லப்பட்டார். அர்ச். இராயப்பர் சிறையினின்று ஒரு சம்மனசால் மீட்கப்பட்டார். தனக்கு தேவாராதனையை ஆசித்த எரோது அரசன் பயங்கரத்துக்குரிய மரணத்தால் தண்டிக்கப்பட்டான். அக்காலத்தில்தான், அர்ச். சின்னப்பரும், பரனபாசும் ஆசியாவிலுள்ள பல நாடுகளில் சத்திய வேதம் போதித்துவந்தார்கள்.

அர்ச். இராயப்பர் சிறையினின்று அற்புதமாக மீட்புப்பெற்றபின், யூதருக்குப் பயந்து ஜெருசலேமைவிட்டு வேறூருக்கு ஓடிப்போனார். அர்ச். இராயப்பர் ஜெருசலேமைவிட்டுப் போனபின், ஜெருசலேமிலும் அந்தியோக்கியாவிலுமுள்ள புதுக் கிறீஸ்துவர்களுக்குள் மோசேசின் முறைமைகளின் அநுசரிப்பைப்பற்றி தர்க்கமுண்டாயிற்று. இதைப்பற்றிக் கேள்விப்பட்ட அர்ச். இராயப்பர் ஜெருசலேமுக்குச்சென்று அவ்விடத்தில் ஒரு சங்கத்தைக் கூட்டி ஷை வாக்குவாதங்களைத் தீர்க்கும் நோக்கத்துடன், எபேசு நகருக்குத் தூதர்களை யனுப்பி, தேவமாதாவும் அர்ச். அருளப்பரும் ஷை சங்கத்துக்கு வரும்படி தெரிவித்தார். அவ்வாறே அவ்விருவரும் ஜெருசலேமுக்குப் போய்ச் சேர்ந்து சங்கம் முடிவுபெற்றது. அதுமுதற்கொண்டு தாம் சாகுமட்டும் தேவமாதா ஜெருசலேமிலேயே தங்கியிருந்தாள்.

தேவதாயாரின் மரணத்தையும் அடக்கத்தையும்பற்றிய வர்த்தமானங்கள், அக்காலத்தில் அவ்விடத்தில் வசித்த புண்யவாளராலும் சரித்திர ஆசிரியராலும் எழுதப்பட்டவை. இப்பாரம்பரைச் சரித்திரப்பிரகாரம், கபிரியேல் சம்மனசானவர் சர்வேசுரனால் அர்ச். கன்னிமரியாயிடம் அனுப்பப்பட, அவர் அவளுக்கு மரணகாலம் சமீபித்திருக்கிறதென்றும், அவள் தமது தேவகுமாரனிடம் போய்ச்சேருவாளென்றும் அறிவித்து, அவர் சர்ப்பத்தின் தலையை நசுக்கி ஜெயங்கொண்டதின் அடையாளமாக, ஒரு குருத்தோலைக் கொத்தையும் அவள் கையில் கொடுத்தார்.

தேவதூதன் அதரிசனமான பின், தேவமாதா தமக்கு மரணங்கிட்டியிருப்பதை அர்ச். அருளப்பருக்கு அறிவித்தாள். அவரும், அந்நகரிலுள்ள விஸ்வாசிகளுக்கு அதை

அறிவித்தார். அர்ச். தோமையார் தவிர மற்ற அப்போஸ்தலர்களனைவோரும் தேவ ஏவுதலால் ஜெருசலேமில்வந்து கூடினார்கள். அப்போஸ்தலர்கள் தேவமாதாவைச் சூழ்ந்துகொண்டு துக்கிக்கையில், அப்பரம கன்னிகை கிறீஸ்துநாதருடைய திருச்சபையின் தலைவர்களான அப்போஸ்தலர்களின் ஆசீர்வாதத்தை முழங்காலிலிருந்து பெற்றுக்கொண்டு, அவர்கள் பாதங்களை முத்திசெய்தாள். மேலும் தம்மைச்சுற்றிலும் கூடி துக்கித்துப் புலம்பும் விசுவாசிகளுக்கு ஆறுதல் சொல்லி, தாம் மோட்சத்துக்குப்போனபின் அவர்களுக்கு உதவி செய்வதாக வாக்களித்தாள். தம்மை அழைக்கும்படி வந்திருக்கும் தமது தேவகுமாரனைத் திருஷ்டிக்கவே, திருக்கன்னிகை, தலைகுனிந்து, "என்னாண்டவரே என்னாத்துமத்தை உமது கரங்களில் ஒப்புக்கொடுக்கிறேன்" என்று மொழிந்தமாத்திரத்தில் அவளுடைய பரிசுத்த ஆத்துமம் அவளுடலை விட்டுப்பிரிந்து, அவளுடைய சிருஷ்டிகர் கையில் சென்றது. யாதொரு வியாதியும் நோவுமின்றி, தேவஸ்நேக பெருக்கத்தால் திருக்கன்னிகையின் உயிர் அவளுடலை விட்டுப்பிரிந்ததென்று, அர்ச். தமாசேன் அருளப்பர் எழுதியிருக்கிறார்.

அந்நேரத்தில் தேவதூதர், தங்கள் இராக்கினியின் ஆத்துமத்தைப் புடைசூழும்படி அங்கு இறங்கி, இன்பமான மோட்சப் பாடல்களைப் பாடினார்கள். அங்கு இருந்தவர்கள் இந்த இன்பமான சங்கீதத்தைக் கேட்டார்களே ஒழிய சம்மனசுக்களைப் பார்த்தவர்களல்ல. தேவமாதா கல்லறையில் அடக்கஞ்செய்யப்படுமட்டும் பரலோக கீர்த்தனைகள் தொனித்துக்கொண்டேயிருந்தன. அப்போஸ்தலர்களோ இவ்வரியபாடல்களால் சந்தோஷ மகிழ்ச்சிகொண்டு, மாமிசமெடுத்த கடவுளைச் சுமந்த பெட்டகமாகிய கன்னித்தாயைப் பூச்சியமாய் வணங்கி, அவளுடைய திருப்பாதங்களைப் பத்தி வணக்கத்துடன் முத்திசெய்தார்கள்.

மேலும் அவ்வூரிலிருந்த பிணியாளிகள் அநேகர் தேவமாதாவின் திருச் சரீரத்தை பக்தி விசுவாசத்துடன் அண்டி வேண்டிக்கொண்டக்ஷணமே சொஸ்தப்பட்டதுமன்றி, குருடர் பார்க்கவும், செவிடர் கேட்கவும், ஊமைகள் பேசவும், சப்பாணிகள் நடக்கவுந் தொடங்கினார்கள்.

அடக்கத்துக்குக் குறிக்கப்பட்ட நேரம் சமீபிக்கவே, அப்போஸ்தலர்கள், தங்கள் இராக்கினியின் திருச் சடலத்தை ஒரு ஆசந்தியில் பூச்சியமாய் வைத்து, அவர்களே அதைச் சுமந்துகொண்டு பட்டணத்து தெருவீதிகள் வழியாகச் சென்றார்கள். விசுவாசிகளனைவோரும் எரியும் பந்தங்களை கையில் பிடித்துக்கொண்டு ஆசந்தியைச் சூழ்ந்து பவனிசென்றார்கள். திருச் சரீரம் கொண்டுபோகப்பட்ட வீதிகளில் சுகந்த வாசனை கமகமவென்று பரிமளித்துக்கொண்டிருந்தது. பெருஞ் ஜனக்கூட்டத்தால் சூழப்பட்ட இச்சுற்றுப்பிரகாரம் கயிப்பாஸ் அரண்மனையைச் சமீபித்தபோது, யூதர் அங்கு கூட்டமாய்க்கூடி சுற்றுப்பிரகாரத்தைத் தடுக்கவும், விசுவாசிகளை நிந்தித்து அவமானப்படுத்தவுந் தலைப்பட்டார்கள். யூத குருக்களில் ஒருவன் கர்வங்கொண்டு, தன் இரண்டு கரங்களையும் ஆசந்தியின்மேல் நீட்டி, அதைப் பிடித்தக்ஷணமே, அவ்விரு கரங்களின் விரல்களுந் துண்டித்து கீழே விழுந்தன. இந்த அதிசயத்தைக்கண்ட அந்த நிர்ப்பாக்கிய மனிதன் பயப்பிராந்திகொண்டவனாய்த் துக்க துயரத்துடன் தன் பாதகத்தை அங்கிருந்தவர்களுக்கு அறிக்கையிட்டு, அதற்காகப் பொறுத்தலளிக்க மன்றாடினான். அப்போது அர்ச். இராயப்பர் அவனை நோக்கி: "தாழ குனிந்து விரலற்ற கைகளை அறுந்து கீழே கிடக்கும் விரல்கள் கிட்டவை" என்றார். அவனும் அவருக்குக் கீழ்ப்படிந்து அவர் சொன்னபிரகாரஞ் செய்யவே, என்ன அதிசயம்! விரல்கள் கையோடு ஒட்டிக்கொண்டன. பாரம்பரையாய் வழங்கிவருகிற இவ்வதிசயத்தை அர்ச். தாமாசேன் அருளப்பர் விவரித்துக் காட்டியிருப்பதுடன் அந்த யூத குரு கிறீஸ்து வேதத்தைக் கைப்பற்றிக் கொண்டதாகவும் எழுதிவைத்திருக்கிறார்.

சுற்றுப்பிரகாரம் ஜெத்சமனி என்னும் ஸ்தலத்துக்குச் சென்றபோது, பாறையில் வெட்டப்பட்ட கல்லறையில் அத்திருச்சடலத்தை பூச்சியமாய் ஸ்தாபித்து, அதன் வாயிலை ஒரு பிரமாண்டமான கல்லால் மூடினார்கள். அன்றையத்தினமும், அடுத்த நாட்களிலும் அப்போஸ்தலர்கள் திருக் கல்லறையை முறைப்பிரகாரம் காவல் காத்தார்கள். அந்த நாட்களில் தேவதூதர் தங்கள் இராக்கினி வைக்கப்பட்டிருந்த கல்லறையைச்சுற்றி பாடிக்கொண்டிருந்தார்கள்.

அர்ச். கன்னிமரியாயி அடக்கம்பண்ணப்பட்ட மூன்றும் நாள் அர்ச். தோமையார் ஜெருசலேமுக்கு வந்துசேர்ந்தபோது தேவமாவின் மாணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டுத் துக்கப்பட்டு, கல்லறையைத் திறந்து தேவமாதாவின் முகத்தைத் தமக்குக் காட்டும்படி அப்போஸ்தலர்களை மன்ருடினதின் மேல், அப்போஸ்தலர்கள் கல்லறைக்குச் சென்று அங்கு சற்றுநேரம் ஜெபித்தபின், கல்லறையின் வாசலை மூடியிருந்த பெரும் பாரைக்கல்லைப் புரட்டினர்கள். புறட்டின க்ஷணமே அதினின்று சுகந்த பரிமளவாசனை புறப்பட்டது. ஆனுல் அதில் தேவமாதாவின் சரீரத்தைப் பொதிந்திருந்த வஸ்திர மாத்திரம் இருந்ததே ஒழிய, அவளுடைய திருச்சரீரம் அங்கு காணப்படவில்லை. ஆகையால் தமது திருத்தாயாருடைய் சரீரம் அழியாமலிருக்க நமது கர்த்தர் சித்தங்கொண்டு, அத்திருக்கன்னிகையை ஆத்தும சரீரத்துடன் மோட்சத்துக்கு அழைத்துக்கொண்டாரென்று அப்போஸ்தலர்கள் நம்பி ஜெருசலேமுக்குத் திரும்பிப்போனுர்கள்.

தேவதாயார் ஆத்தும சரீரத்தோடு மோட்சத்துக்கு எடுபட்ட திருவிழாவன்று உப்பரம நாயகியை நமது ஞானக்கண்ணுல் திருஷ்டித்து "மோட்ச இராக்கினியே! நீர் ஏகும்போது, 'உங்களை மறவாமல் உங்களுக்குவேண்டிய உதவி ஒத்தாசைசெய்வோ' மென்று புது கிறீஸ்துவர்களுக்குக் கொடுத்த வாக்கை நினைவுகூர்ந்து, எங்களாத்தும சரீரத்துக்கு அவசரமான உதவி ஒத்தாசை புரிந்து, நாங்கள் எங்களாத்தும சத்துருக்களுடன் பொருதும் போரில் ஜெயங்கொண்டு, நல்ல மரணமடைந்து உம்மையும் உமது திருக்குமாரனையும் நித்தியகாலமாய்த் தரிசிக்கும் பாக்கியத்தை அடைந்தருளும்படி உம்மை மன்ருடுகிறோம்.

மேலும், இந்த எங்கள் நிர்ப்பாக்கிய தேசத்தை ஆசீர்வதித்து, அதை உமது ஆதரவில் சேர்த்துக் காப்பாற்றும்படி உமது பால் கூடின சங்கத்தின் நோக்கத்தை மறவாமல், இத்தேசம் சீக்கிரத்தில் ஞான அந்தகாரத்தைவிட்டுநீங்கி, திருமறையைக் கைப்பற்றி, 'சேசுவே, உமக்கு ஸ்துதி ஸ்தோத்திரம் நமஸ்காரம்; மரியே, வாழ்க' என்னும் சத்தம் இத்தேசத்தின் நான்கு கோடிகளிலிருந்து மோட்சமட்டுந் தொனிக்கும்படி செய்தருளும். 'மரியாயின் மாசற்ற இருதயமே! இந்தியாவுக்காக வேண்டிக்கொள்ளும்.'"

WHAT IS CHOLRA & HOW TO PREVENT IT.

கால்ரா என்பது என்ன, அதை எப்படித் தடுக்கிறது.

(பப்ளிஸிடி பீரோவிலிருந்து.)

கால்ரா என்பது ஒரு தொத்து வியாதி. அது சாதாரணமாய் கண்ணுக்குத் தெரியாத புழுக்களினுல் உண்டாகிறது. ஆனுல் அவைகளைப் பெரிய பூதக் கண்ணுடிகளைக்கொண்டு பார்க்கலாம். கால்ராவினுல் அவஸ்தைப்படும்மனிதர்களுடைய மலத்திலும், மூத்திரத்திலும், வாந்தியிலும் அந்தப் புழுக்கள் கோடிக்கணக்காக இருக்கின்றன. அந்தப் பூச்சிகள் கொதிக்கவைப்பதினுலும், கடுமையான வெய்யிலில் சுமார் ஒரு மணிநேரம் போடுவதினுலும், அல்லது அவைகளை நாசஞ்செய்யும் மருந்துகளினுலும் கொல்லப்படுகின்றன.

கால்ராவினுல் பாதிக்கப்பட்டிருக்கிற ஒரு மனிதனுடைய மலம், மூத்திரம், வாந்தி இவைகளை ஒட்டி ஏதாவது ஒரு பதார்த்தம் இருந்தாலாவது அல்லது அவைகளுக்குச் சமீபத்தில் இருந்தாலாவது, கால்ரா புழுக்கள் அந்த வஸ்துவில் தொத்தி கால்ராவை பரவச்செய்யலாம். மேலும் சீக்காளிகள் மல ஜலங்கள், வாந்திகள் இவைகளைப் போட்டிருக்கிற இடத்திலிருந்து காற்ருல் கிளப்பப்பட்ட தூசி அல்லது புழுதியினுலாவது அல்லது கால்ரா இருக்கிற இடத்திலிருந்து பறந்துவருகிற ஈக்களினுலாவது அந்தப் புழுக்கள் பரவி கால்ராவை அதிகரிக்கலாம்.

சாதாரணமாக அவைகள் ஆகாரத்தையும் தண்ணீரையும் பின்வருமாறு கெடுக்கின்றன. (1) குடிதண்ணீருக்காக உபயோகப்படுத்தப்படும் ஆறு, குளம் அல்லது கிணறு இவைகள் சமீபத்தில் ஷை சீக்காளிகளினுடைய பாய்கள் அல்லது துணிகளைக் கழுவுவது. (2) சீக்காளிகளின் மலஜலங்கள், வாந்திகள் இவைகளை வீடுகளின் சமீபங்களிலும் குடிதண்ணீருக்கு உபயோகப்படுகிற கிணறு வகையருு சமீபங்களிலும் போடுவது. (3) கால்ராநோய் வந்திருக்கும் வீடுகளிலிருந்து தண்ணீர் பாத்திரங்கள் ஷை கிணறு வகையருுக்களில் தண்ணீர் மொள்ளுவதற்காக உபயோகப்படுத்துவது. (4) ஷை அசுசியான பாத்திரங்களில் உட்காரும் ஈக்கள் நாம் சாப்பிடக்கூடிய ஆகாரங்களில் உட்கார்ந்து அவைகளைக் கெடுப்பது.

இவ்விதமாக, கடைகளில் வியாபாரத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் பக்ஷணங்களும் பலகாரங்களும் ஈக்களினுலும் கால்ரா ஹேதுகரமாய்ச் செய்யப்படுகின்றன. ஈக்கள்வந்து உட்காருவதினுலும் மேற்சொல்லியபடி கெட்டுப்போன தண்ணீர்களைக் கலப்பதினுலும் பாலும் கெட்டுப்போகிறது.

கால்ராநோய் வாாதிருக்கும்பொருட்டு பின்வருமாறு நடந்துகொள்ளவேண்டும்:—

(1) குடிதண்ணீருக்கு சமீபத்தில் ஷை சீக்காளிகளின் சமான்களைக் கழுவக்கூடாது. அவைகளைக் கொதிக்கும் தண்ணீரைக்கொண்டு தூரத்தில் சுத்தம் செய்யவேண்டும். கொதிக்கும் தண்ணீரானது எல்லா சீக்குகளையும் போக்கிவிடும். (2) கால்ராவினுல் அவஸ்தைப்படும் சீக்காளிகளின் மலமூத்திரங்களையும் வாந்திகளையும் கண்ட இடத்தில் போடக்கூடாது. ஆனுல் கால்ராவை பரவச்செய்யாமலிருப்பதற்காக அவைகளை சுத்தப்படுத்த ஒரு சுகாதார உத்தியோகஸ்தரின் உதவியைத் தேடினுல் உத்தமம். இது முடியாவிட்டால் நெருப்பு சாம்பலுடனுவது கலந்து ஜலம் அருகாமையிலில்லாத இடத்தில் அவைகளை புதைக்கவேண்டும். இந்த அசுத்தங்களால் கெடுக்கப்பட்ட தரையை வைக்கோல் அல்லது உமியைக் கொளுத்துவதினுல் சுத்தம் செய்யலாம். (3) வீட்டில் உபயோகப்படும் எல்லாப் பாத்திரங்களையும் தண்ணீரை கொதிக்கவைத்து அதினுல் கழுவவேண்டும். அதே மாதிரிதான் தண்ணீரை கொதிக்கவைத்து சாப்பிடவேண்டும். (4) ஆகாரத்தை சூடாயிருக்கும் போழுதே சாப்பிடவேண்டும். பழய ஆகாரமாவது, ஆறிப்போனதையாவது, ஈக்கள் உட்கார்ந்ததையாவது தூசிகள் பட்டதையாவது சாப்பிடக்கூடாது. (5) ஈக்கள் உட்காரும்படி திறந்து வைத்த பக்ஷணங்களையாவது தூசி விழுந்த பக்ஷணங்களையாவது சாப்பிடகூடாது. (6) வீடுகளைச்சுற்றி மிகவும் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும் (7) வீட்டுக்கு சமீபத்தில் யாதொருவிதமான அசுசிகளையும் செய்யக்கூடாது. (8) இரவுகாலங்களில் கண்விழிக்கக்கூடாது. (9) ஜாஸ்தி ஆகாரமாவது செரிக்கக்கூடாத ஆகாரமாவது சாப்பிடகூடாது. (10) கால்ராவினுல் பீதி அடையக்கூடாது. சாதாரணமான முன் ஜாக்கிரதையினுல் கால்ரா வாாமல் நிச்சயமாய் காப்பாற்றிக்கொள்ளலாம். (11) கால்ரா சம்பவிக்கும்பட்சத்தில் ஸமீபத்திலுள்ள சுகாதார உத்தியோகஸ்தரிடம் சொல்லி வீட்டை மருந்துகளைக்கொண்டு சுசிகரமாய் செய்துகொள்ள வேண்டியது முக்கியம். (12) சீக்கு சம்பவித்தவுடனே வைத்தியம் தொடங்கவேண்டும். காலதாமதம் கூடாது. (13) கால்ரா கண்டவனை தொடும்படி நேரிடும்பக்ஷத்தில் கைகளை கொதிக்கவைத்த தண்ணீரிலாவது அல்லது மருந்துகளினுலாவது சுத்தம் செய்யவேண்டும்.

ஏதாவது ஒரு வீட்டில் கால்ரா கண்டால், அந்த வீட்டின் சொந்தக்காரன் உடனே அந்த விஷயத்தை சமீபத்தில் இருக்கிற சுகாதார உத்தியோகஸ்தரிடமாவது அல்லது ரெவினியூ ஆபீசரிடமாவது ரிபோர்ட்டு செய்யவேண்டும். அப்படி அவன் செய்யத் தவறினுல், அக்கம்பக்கத்திலுள்ள வீடுகளுக்கு அது நிச்சயமாய்ப் பரவும். அதற்கு அவன்தான் பாத்திரனுவான்.

[குறிப்பு.—இந்தத் துண்டுப் பிரசுரத்தின் காப்பிகள் இன்னும் தேவையானுல், சென்னை பப்ளிஸிடி பீரோவிற்கு எழுதிக்கொள்ளவும்.]

உமது சமுகத்தில் சமஸ்த சாஸ்திரிகளும் வாய்பேசாதிருக்கக்கடவார்கள். சிருஷ்டிகள் அனைத்தும் மவுனமாயிருக்கக்கடவது; நீர் ஒருவரே என்னிடம் பேசும்.

ஒருவன் எவ்வளவுக்கதிகமாய்த் தன்னேடு ஒன்றித்தும், உள்ளத்திற்கபடற்றுமிருக்கிருனே, அவ்வளவுக்கு அனேகானேகச் சிறந்த காரியங்களைப் பிரயாசையின்றிக் கண்டுபிடிக்கிருன்; ஏனெனில் பாமண்டலத்தினின்று அறிவின் ஒளியையடைகிருன்.

தன்னைச் செயிக்கப் பிரயாசப்படுகிறவனைவிட வேறு எவன் அதிக பலமான யுத்தஞ்செய்கிருன்?

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.)

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

11-ம் அதிகாரம்.

உண்மையான தடை — அத்தடையை முறிக்க அர்ச். மோனிக்கம்மாள் சுசீலத்துடன் எடுத்துக்கொள்ளும் அரும் பிரயாசைகள்—அகுஸ்தீன் ஆத்துமத்தில் விசுவாசத்தின் உதயம்.

(முன் தொடர்ச்சி.)

அவர் சொல்வது "நான் எப்படிப்பட்ட நிர்ப்பாக்கியன்! ஆசாபாசத்தின் அடிமையாகிய நான் கொஞ்சகாலம் பொறுக்கமுடியாமல், கலியாண நாள் வருமளவும் என் ஆத்துமத்தின் வியாதியாகிய துரிச்சைகளுக்கு வழக்கப்படி திருப்திகொடுத்துவரும்படியாக, இன்னொரு வைப்பாட்டியைத் தேடிக்கொண்டேன். என் பழைய வைப்பாட்டியை விட்டுப்பிரிந்ததினால் என் இருதயத்தில் உண்டான காயம் இன்னும் ஆறவில்லை. ஆனால் அக்காயத்தினால் எனக்குக் கொடிய நோயுண்டானபிறகு அது அழுகிப்போய்ச் சொரணையற்றிருந்தபோதிலும் பெருத்த ரணமாயிற்று.

இதைக் கேட்கும்போது நாம் வெட்கத்தினால் முகத்தை மூடிக்கொள்ளவேண்டியிருக்கிறது; நாணத்தினால் தலையை நட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. மனுஷ சுபாவம் கடவுளை விட்டுப்பிரிந்திருக்கும்போது அதின் கதியைப் பாருங்கள். அத்தியந்த புத்தி சூட்சுமமுள்ளவர், நேசம் பொங்கும் நல்ல இருதயமுள்ளவர், தன்னிருதயம் பாவச்சேற்றின் அடிபாதாளத்தில் புரண்டுருளாதபடி காத்துக்கொள்ள ஏலாதவராயிருக்கிறார். மேலும் பாவத்தின் ஏதோ ஒரு இரகசியமான ஏற்பாட்டின்படி, அகுஸ்தீனுடைய புத்தி அவரது இருதயத்தை முதலில் கெடுத்ததுபோலவே, இப்போதும் அவருடைய கேடுகெட்ட இருதயம் அவர் புத்திக் கண்ணை மறைக்கவே, ஒரு பயங்கரமான பாவச் சங்கிலியால் கட்டுப்பட்டுப்போகிறார். அப்பாவத் தளைகளைக் கடவுளொருவரே சேதிக்கக்கூடும். ஆம், கடைசியாக கடவுள்தான் அத்தளைகளை முறித்தெடுக்கிறார்.

சத்தியமாகவே, அகுஸ்தீன் பாவமென்னும் தன் பழைய நுகத்தடியில் மாட்டிக்கொண்டது தான் தாமதம், அவரது ஆசாபாசங்கள் யாவும் புது உயிரடைந்தாப்போல் மூர்க்கத்துடன் கிளம்பின. மனிதனுடைய ஆத்துமத்தில் ஈனமானவையாவும் தம் அடிபாதாளத்தைவிட்டு மேலே கிளம்பி, இதுவரைக்கும் அவர் சொல்ல நாம் கேட்டிராத எண்ணங்களையெல்லாம் அவரிருதயத்தில் பிறப்பித்தன. அவர் நவமாயடைந்த விசுவாசத்தின் உன்னத கொடுமுடியிலிருந்தல்ல, ஆனால் பிளாட்டோவென்னும் தத்துவசாஸ்திரியின் உன்னத கொடுமுடியிலிருந்து, எப்பிக்குரூஸ் என்னும் தத்துவசாஸ்திரியின் வெட்கங்கெட்ட சுகபோக பாதாளத்தில் விழுந்து உலக சம்பந்தமான காரியங்களிலேயே தன் நாட்டத்தை முற்றிலும் செலுத்திவந்தார். அவர் சொல்வது, "என் தோழர்களாகிய அலிப்பியூஸ் நெப்ரிதியூஸோடு நான் அடிக்கடி சம்பாஷணை செய்து, தின்பதிலும் குடிப்பதிலும் இச்சைகளுக்குத் திருப்தி கொடுப்பதிலுமே எல்லா பரமானந்தமும் அடங்கியிருக்கின்றனவென்று போதித்து வந்த எபிக்குரூஸ் என்னும் தத்துவசாஸ்திரியே சகல தத்துவசாஸ்திரிகளுள்ளும் என் மனதுக்கிசைந்தவன் என்றேன். நான் சொன்னது "நாம் காயாசித்தி யென்னும் சாகாவரம் பெற்று ஓய்வு வொழிவுமின்றி சிற்றின்ப சந்தோஷத்திலேயே சதா மூழ்கி, அச்சந்தோஷம் தப்பிப்போகும் என்னும் பயம் சற்றேனும் அற்றிருப்போமேயானால் நாம் பாக்கியவான்களென்பதில் சந்தேகமென்ன?" ஆதியும் அந்தமுமற்ற மெய்க் கடவுள்மட்டில் மேலான வுணர்ச்சிகளைக் கொண்டிருந்த இவரது மகத்துவமுள்ள ஆத்துமம் உன்னத உயாத்திலிருந்து எப்படிப்பட்ட அடிபாதாளத்தில் விழுந்தது. உலக சுகபோகத்தையே அது ஏற்றுக்கொண்டு, அச்சுகபோகம் நிலையாயிருக்கும்பட்சத்தில் அதிலேயே சம்பூரணத் திருப்திகொள்வதாயிருந்தது. அவர் சொல்வது "எங்கே செத்துப்போவேனோவென்னும் அச்சமும் தேவ தீர்வை யொன்றுண்டே என்னும் நடுக்கமுமேயன்றி நான் சிற்றின்ப சந்தோஷத்தில் இன்னும் ஆழ்ந்து மூழ்கிப்போகாதபடி

வேறெதுவும் எனக்குத் தடையாய்த் தோன்றவில்லை. நான் எவ்வளவுதான் அபத்த அபிப்பிராயங்களைக்கொண்டவனாயிருந்தபோதிலும், மேற்படி பயமும் திகிலும் முழுதுமாய் என்னுள்ளத்தைவிட்டு நீங்கவில்லை."

இதோ சற்றுப் பொறுங்கள். அகுஸ்தீனுக்கு இன்னும் மனச்சாட்சியுண்டு. அர்ச். மோனிக்கம்மாளின் அதிசயத்துக்குரிய கிருத்தியத்தை அடியோடு அழிக்க எதினாலும் முடியாது. கிறீஸ்துவத் தாய் போதித்த ஓ! போதனையே! நீ எவ்வளவு சத்துவமுள்ளதாயிருக்கிறாய். ஏனெனில் அகுஸ்தீன் இப்படிப்பட்ட பயங்கரத்துக்குரிய அடிபாதாளத்தில் மூழ்கிப்போயிருந்தபோதிலும், இன்னும் அவரது ஆத்துமத்தைக் கைதூக்கி இரட்சிக்க உனக்கு சக்தியுண்டே.

மேலும் அவர் அவ்வளவு வெட்கங்கெட்ட விதமாய் நெறிதவறி விழுந்ததைப்பற்றியும், அவரது புத்தியும், இருதயமும், புலன்களும் பாவக் கறைபட்டுப்போனதைப்பற்றியும் முன்னையவிட அதிக துயரமும் மனக்கலக்கமுங்கொண்டார். அவர் சொல்வது "கடவுளை விட்டுப்பிரிந்த பிறகு, அவரைவிட மேலானதாகிய வேறொன்றையடைய வீண் நம்பிக்கைகொள்ளும் கருவமுள்ள ஆத்துமத்திற்கு ஐயோ, கேடாம். அப்படிப்பட்ட ஆத்துமம் ஆறுதலையடைய இப்பக்கத்திலும் அப்பக்கத்திலும் அலைந்து திரிகின்றது. ஆனால் எல்லாம் வியர்த்தமே. எங்கும் ஆறுதல் கிடையாது. கர்த்தாவே! நீர் ஒருவரே அதன் ஆறுதல்." "நான் அப்படிப்பட்ட சமயத்தில் எப்பேர்ப்பட்ட உபத்திரவங்களை அனுபவித்தேன் என்பதை நீர் ஒருவரே அறிவீரல்லாமல் மற்றப்படி எந்த மனிதனும் அறியான். ஏனெனில் என் ஆத்துமத்தின் போராட்டமனைத்தையும், என் பிராண சிநேகிதர்களுக்குமுதலாய் எப்படிச் சொல்லக்கூடும்? எந்த நாக்கால் விவரிக்கக்கூடும்? ஆனால் என் புலம்பல் யாவையும் நீர் கேட்டிருக்கிறீர்." "ஐயோ, நான் இளைப்பாற்றியைத் தேடியும் அதை அடைந்தேனில்லை. சில சமயங்களில் நான் ஒரு சிருஷ்டியை நாடி அதில் இளைப்பாற்றி ஸ்தலத்தைக் கண்டடைந்ததாக எண்ணிக்கொண்டு 'சரி, நல்ல காரியம், இங்கேயே தங்குவேன்' என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன். ஆனால் நீரோவெனில் நான் என் உண்மையான நிலைமையை யுணர்ந்து உருகும்படியாக உமது மறைவான தாற்றுக்கோலால் என்னைக் குத்தி யெழுப்பினீர்."

"உமது அற்புத அஸ்தத்தினால் என்னைத் தொடவே, என்னாத்துமம் சவுக்கியமடைந்தது."

தாம் கொண்டிருந்த ஆழ்ந்த துயரத்தினாலும், சமாதானத்தைத் தேடுவதில் தாம் எடுத்த முயற்சி யாவும் பலிக்காமற்போனபோதிலும், நல்ல மனதுடன் தாம் காட்டிய தைரியத்தினாலும், அவர் கொஞ்சங்கொஞ்சமாய்த் தமது ஆத்தும பிணியிலிருந்து சுகப்பட்டுவருகிறாரென்பதாகத் தெரியவந்தது. முதல் வைப்பாட்டியுடன் அவர் 15 வருஷம் பாவச்சிநேகமாயிருந்தார். இரண்டாவது வைப்பாட்டியுடனோவெனில் சில மாதங்கள்மாத்திரந்தான். அர்ச். மோனிக்கம்மாள் அவருடைய துர்நடத்தையைப்பற்றி மறுபடியும் அவரோடு பேசினாள். தான் முன் எப்பொழுதும் அழாத அவ்வளவு அழுதாள். நெறிதவறிப்போகும் தன் குமாரனுக்கு அதிக உருக்கத்துடன் புத்தி சொன்னாள். நிச்சயார்த்தம் செய்யப்பட்டிருந்த பத்தியுள்ள இளங்கன்னிகைக்கு அவருடைய நடத்தை யெப்படியிருக்குமென்றும், அப்படி நடப்பது சற்றேனும் சரியல்லவென்றும் எடுத்துக்காட்டினாள். விபசாரத்தில் அவருக்குப்பிறந்த தேவதத்தன் என்பவன் சம்மனசுக்கடுத்த மாசற்றத்தனத்தில் வளர்ந்துவருகிறபடியால், தனது தகப்பன் நடக்கும் நிர்ப்பாக்கியமான நடத்தை அவனுக்குத் துர்மாதிரிகையாயிருக்குமென்றும் வற்புறுத்திச் சொல்லுவாள். மேலும் கடவுளுடைய திவ்ய வரப்பிரசாதங்களை அவர் இகழ்ந்து வருவதால், தேவ கோபம் கண்டிப்பாய் அவர் மேல் இறங்குமென்று பயங்கரத்துடன் எடுத்துக் காட்டுவாள். அகுஸ்தீனோவெனில் தூர்த்தத்தனமுள்ள நடத்தையில் சற்றேனும் கிடைக்கக்கூடாதமனப் பாக்கியத்தைத் தேடித்தேடி ஆயாசங்கொண்டு கடைசியாக அவளுடைய நியாயங்களுக்கிசைந்து தன் பாவத் தளைகளை முறித்தெறிந்து சீக்கிரத்தில் நிறைவேறப்போகும் கலியாணத்திற்குக் காத்திருப்பதாக வாக்களித்தார்.

அவர் முதல் வைப்பாட்டியை நீக்கியதில் காட்டிய சுயப்பரித்தியாகத்திற்கு பலனாகக் கடவுள் அவருக்கு ஒரு கைந்நொடிப்பொழுதில் சமாதானத்தைக் கொடுத்து திவ்ய காந்திக் கதிரை அவராத்துமத்தில் வீச விட்டதுபோல், இப்போதும் அதைப்போலொத்தது [illegible]

ளதுமான பலனை அவருக்கு ஆயத்தஞ்செய்து வைத்தார். அகுஸ்தீன் தன் பாவ நேசத்தை வெறுத்ததுதான் தாமதம். அவருடைய ஆத்துமத்தின் கடைசி அந்தகாரம் தொலைந்துபோயிற்று. விசுவாசத்தின் வெளிச்சம் நிர்மலமான ஆகாயத்தில் துலங்கும் பூரணச்சந்திரனைப்போல் அதில் விளங்கிவந்தது.

இதை வாசிப்பவர்களுக்குத் தெரியுமாப்போல், வெகுகாலத்திற்கு முன்னமேயே அவருக்கு ஞானோதயம் உண்டாயிற்று. கோடைகாலத்து மாலைநேரத்தில் ஒரு பெருங்கொந்தளிப்புக்குப்பிறகு கார்மேகம் கலைந்து மறைய நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாய் மினுக்கு மினுக்கென்று தோன்றி ஜொலிப்பதுபோல், சிலகாலம்வரைக்கும் கத்தோலிக்கு வேதத்தின் பிரதம சத்தியங்கள் அகுஸ்தீனுடைய கலக்கங்கொண்ட ஆத்துமத்தில் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றத் துவக்கின. அவர் தன் சந்தேகங்களை மேற்கொண்டார். அதாவது கடவுளைப்பற்றியும், அவருடைய திருவுளத்தைப்பற்றியும், ஆத்துமத்தின் சாகாவரத்தைப்பற்றியும், நன்மைக்கும் தீமைக்கும் உண்டான பேதாபேதத்தைப்பற்றியும், நடுத்தீர்வையைப்பற்றியும், அவர் தாயார் அவருக்குச் சிறுபத்தில் போதித்த போதனைகளை மறக்கடிக்க அவரால் கூடாமற்போயிற்று. வேண்டாமென்றாலும் அப்போதனைகள் அப்போதைக்கப்போது அவர் மனதில் உதிக்கும். அவர் ஒரு சந்தேகத்திற்குப்பிறகு இன்னொரு சந்தேகப்பட்டு, ஒரு தப்புப் போதனைக்குப்பிறகு இன்னொரு தப்புப் போதனையைப் பற்றிக்கொண்டு வந்தபடியால், தன் சுயமுயற்சியால் சத்தியத்தை யறிவது கூடாமையென்று கண்டுணர்ந்தார்.

"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான—
மனக்கவலை மாற்ற லரிது" என்று சொல்லப்பட்டிருக்கிறபடி, கடவுளே சத்தியத்தைப் போதிப்பது அவசியமென்றும், அப்போதனை எத்தகைத்துள்ளதா யிருக்கவேண்டியதென்றும், கத்தோலிக்குத் திருச்சபையே அப்போதனையின் உறைவிடமென்றும் அறிந்து வியப்படையத் தொடங்கினார். ஒரே நிலையாய்ப் பிரகாசித்து எரியும் தீபத்தைப்போல் அவர் ஆத்துமத்தில் துலங்கிவந்த நட்சத்திரங்கள் இவைகளே. ஆயினும் இவைகளின் பிரகாசம் இன்னும் மங்கலாகவேயிருந்தது.

அந்நட்சத்திரங்கள் சுந்தரமுள்ளனவாயினும், அகுஸ்தீனைக் கிறீஸ்துவனாக்க அவைகளின் வெளிச்சம் போதாமையாயிருந்தது. ஏனெனில் உலகத்திலிருக்கும் எல்லா மனிதர்களையும் பிரகாசிப்பிக்கும் சோதியுள்ள ஞான சூரியனின் மெய்யான வெளிச்சம் அவர் ஆத்துமத்தின் அடிவானத்தில் இன்னும் உதயமாகவில்லை. அந்த மெய்யான தேஜோமயக் கடவுளை அகுஸ்தீன் முற்றிலும் மறந்துவிட்டாரென்பதல்ல. தன் தாய்ப்பாலோடேயே அவரது திருநாமத்தை அதி ஆசையோடு அருந்தியிருந்தபடியால், ஒருபோதும் அதை மறக்கவேயில்லை. ஆனால் அவர் வாசித்த கெட்ட புஸ்தகங்களும், கைப்பற்றிய தகாத போதனைகளும், அவரை அடிமையாகக்கொண்ட ஆசாபாசங்களும் ஒரு மூடுபனியைப்போலிருந்து நரதேவனின் தெய்வீகரூபத்தை அவரது புத்திக் கண்ணுக்கு முற்றிலும் மறைத்துவந்தன. மனுஷாவதாரப் பரம ரகசியத்தையாவது, இரட்சண்யப் பரம ரகசியத்தையாவது, கிறீஸ்துநாதரின் தெய்வத்துவத்தையாவது, அவரால் கண்டுபிடிக்கக் கூடாமற்போயிற்று. இதுமாத்திரமன்று. கடவுள் இருக்கிறாரென்பதும் அவர் அரூபியாயிருக்கிறாரென்பதும் அவருக்குச் சந்தேகமாய் விட்டன.

பூர்வீக கிரேக்கர்கள் பிரபலமாய் வாழ்ந்து வந்தகாலத்தில் ஒரு வாலிபனிருந்தான். அவன் இனியில்லாத புத்திசாமார்த்தியங்கொண்டவன். அவன் வாக்குச்சாதுரியத்திற்கு இணையென்பதே கிடையாது. அவன் சாக்ரேடீஸுக்குச் சீஷன். தனது சாமர்த்தியத்தினாலே தன் குருவின் பெயரை உலகம் முடியும்பரியந்தம் நிலைநிறுத்தினவன். ஆரிஸ்டோட்டல் இயற்றிய புஸ்தகங்கள் யாவையும் படித்துத் தேர்ந்த நிபுணன். சாஸ்திரப் பயிற்சியின்மட்டில் தனக்குள்ள பற்றுதலை ஆரிஸ்டோட்டலுக்குமாத்திரம் ஊட்டக்கூடுமாயிருந்திருந்தால், அவனது புத்தித்திறமையை மும்மடங்கு அதிகரிப்பித்திருப்பான். உலகத்தை அவன் முதல் முதலாகச் சிந்தித்தபோதே, அது வெறும் சாயலென்றும், குறிப்பென்றும், நிழலென்றும் கண்டுகொண்டு அவ் ஆதாரத்தின்மேலேயே தனது தத்துவசாஸ்திரத்தை ஸ்தாபித்தான். மேலும் பிரசன்னமான இவ்வுலகத்திற்குப்பிறகு அப்பிரசன்ன உலகம் ஒன்றுண்டென்றும், பிரசன்ன உலகத்திற்கு உருவகமாயிருக்கும் அப்பிரசன்ன உலகத்திற்றான் பிரசன்ன உலகத்தின் காரியாதிகள் விவரமாய்க் கண்டுபிடிக்கக்கூடுமென்றுஞ் சாதித்தான். இரண்டாம் முறை அதன் விசேஷாதிகளைச் சிந்தித்தகாலையில், அதிலும் சிறந்த காரியங்கள் சிலவற்றை யறிந்தான். மனிதனையும், பிறகு கடவுளையும் யோசித்து இருவருக்கும் உண்டான சம்பந்தத்தை விளக்கமாய்க் கண்டுகொண்டு, மனிதன் கடவுளிடமிருந்து புறப்பட்டுவந்து திரும்பக் கடவுளிடமே போய்விடுகிறானென்றும், இங்கிருக்கும் சொற்பகாலத்தில் அவன் கடவுளை விட்டுப்பிரிந்திராமல் அவருடன் சம்பந்தங்கொண்டு வேரோடு தொங்குஞ் செடியைப்போல் கடவுளிடமிருந்து தொங்குகிறானென்றும் சொன்னான். மேலும் இவ்வுலகத்தில் மனிதனுடைய கதி எவ்வளவு நிர்ப்பாக்கியமுள்ளதாயிருந்தபோதிலும், தான்விட்டுப் புறப்பட்டுவந்த மோட்சத்திற்குத் திரும்பிப்போகப் போதுமான சகாயத்தை யவனுக்களிக்கும் சக்தியைத் தன் இருதயத்தில்கொண்டிருக்கிறானென்றும், இந்தச் சக்தியே யவன் கடவுளை யுணரும் உணர்ச்சியென்றும், அவரை ஆசித்து விரும்பும் விருப்பமென்றும், அவரை நாடும் நாட்டமென்றும் சொன்னான். இதைத்தான் அவன் தேவ அறிவென்று சொன்னது. இத்தேவ அறிவும் அப்பிரசன்ன உலகத்தைப்பற்றி யுண்டான உணர்ச்சியுமே, அவனது தத்துவசாஸ்திரத்திற்கு, அல்லது மனிதன் ஆராயத் தகுதியான எல்லா தத்துவசாஸ்திரங்களுக்கும் ஆதாரப்பொருட்களாய்த் துலங்குகின்றன.

சுத்தமும், கபடற்றதும் நிலைமையுள்ளதுமான மனது பல வேலைகளால் அலைக்கழிக்கப்படுவதில்லை; ஏனெனில் சர்வேசுரனுடைய மகிமைக்காகச் சகலமுஞ் செய்கின்றது; அமரிக்கையாயிருப்பதால் ஒருபோதும் தன் சுய நன்மையை தேடமாட்டாது.

உன் இருதயத்திலுள்ள ஒறுத்தல் செய்யப்படாத பற்றுதல் உன்னை அதிகமாக வாதித்துத் தொந்தரைசெய்யுமேயன்றி, மற்றப்படியில்லை.

நல்லவனும் புத்தியுள்ளவனுமான மனிதன், வெளியரங்கமாய்ச் செய்யவேண்டிய வினைகளை, முன்னமேதானே உள்ளத்தில் சீர்ப்படுத்துகிறான்.

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.)

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா
அல்லது
மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—7.
யூலோஜியஸ்.
(முன் தொடர்ச்சி.)

அவர் இவ்வாறு பேசி முடியாமுன், அவ்வறையின் கதவை யாரோ படாரென்று திறந்தனர். உடனே ஆல்டீமனும் அவனுடைய உத்தியோகஸ்தரான ஹக்கீமும், அலியும் நுழைந்தார்கள். காஸில்டாவை அங்கே கண்டதும் ஆல்டீமனுடைய கண்கள் கோபத்தால் சிவந்தன; அம்மாதரசியோ தன் தந்தையைக் கண்டதும் இடியொலி கேட்ட சர்ப்பம்போல் நடுநடுங்கினாள். ஆனால் மிக்க அமைதியைக் காட்டும் முகத்துடன் கொஞ்சமும் அஞ்சாமல் தைரியமாய்த் தன் தகப்பன்முன் வந்த வயோதிபராகிய அந்த குருவானவரை ஏறெடுத்துப்பார்த்ததும் அவ்விள நங்கை மனதிற் றோன்றிய அச்சம் போய் தைரிய முதித்தது.

கோபாக்கினி பொங்கி ஆல்டீமன் தொண்டையை யடைக்கச் சுலபமாய்ப் பேசமுடியாமல் தன் மகளைப் பார்த்துச் சொல்வான். "குலத்தைக் கெடுக்க வந்தவளே! உன் தந்தையை இவ்வாறு நிந்திக்க உனக்கென்ன தைரியமடி? எங்கள் யாவரையும் இதுவரையில் பயமுறுத்தியேமாற்றிய அதிசய உருவம் நீதானா? உன்னை மகளென்று கூப்பிட எனக்கே வெட்கமாயிருக்கிறது. மோட்சத்துக்கு நம்மைக் கொண்டுபோகக்கூடிய ஒரே வேதமாகிய நமது தீர்க்கதரிசியின் வேதத்தைவிட்டு, அல்லாவாற் சபிக்கப்பட்ட இந்தக் கேவலமான இந்த நாய் காயங்களை வேதத்திற் சேர விரும்புகிறாய்! இதைலாயின. அவன் கத்துக்குரிய காரியம் வேறுண்டசங்கீத வசனத்தை மென்னும் பதத்துக்குப் பெனை நம்பியிருக்கிறபடிலும்! ஏ! பேதைப்பெண்ணேட்டுக் காப்பாற்றுவேன், தக் கெடுமதி?" இவ்வாசாமத்தை நீ அங்கீகரித்தாய்."

பின்னர் அவன் ஜெபிக்க ஆரம்பித்தான். கொஞ்சம் பொறுத்து யூலோஜியஸ் பக்கந் திரும்பி, "நான் உம்மை நம்பத்துணியலாமென்று நினைக்கிறேன்; ஏனெனில் நீர் ஒரு கிறீஸ்துவ குரு. குருக்கள் இரகசியத்தை வெளிவிடமாட்டார்கள் என்றெனக்குத் தெரியும். இந்தக் கடிதத்தைத் தயவுசெய்து எனக்காகப் படித்துப்பாரும். என்னை இவ்விருட்டறைக்குள் தள்ளுவதற்குச் சற்று முன்புதான் இது என் கைக்குவந்தது. என் கண்பார்வை மங்கியிருக்கிறது; மேலும் இவ்விருட்டில் எனக்கொன்றுமே தெரியவில்லை" என்றான்.

யூலோஜியஸ் அக்கடிதத்தை வாங்கிப் பின்வருமாறு வாசித்துக்காட்டினார்:—என் ஆசை நேசக் காதலருக்கு அடியாள் மிரியாம் கண்ணீர் விட்டழுது வரைவது. கிறீஸ்துவ வீரர் தங்களுக்காக சங்கத்துடன் போரிட வருவார். அடியாளும் நமது ஜனங்களும் தங்களை மீட்பதற்கான வழி வகைகளைத் தேடிவருகிறோம். ஆண்டவர் தங்களைக் காப்பாற்றுவாராக! தங்கள் நம்பிக்கை யாவும் அவர்பேரில் இருக்கட்டும்! தங்களுக்கு வரும் பொல்லாப்புகளனைத்தும் பரிதிமுன் பனிபோல் நீங்கிவிடும் என்பது திண்ணம்!

பென்தாவீதன் மிக்க நன்றியறிதலுடன் வானத்தை நோக்கினான்; அவன் மனதில் நம்பிக்கை மீண்டும் ஜனித்தது. சிங்கத்துடன் போரிடும் அந்தப் பயங்கர தினம் எப்போது வருமென்று ஆவலாய் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

அவன் மனதில் அப்போது அமைதி குடிகொண்டது; அவனோடிருந்த அந்த நல்ல குருவானவர் சொன்ன ஆறுதல் மொழிகள் அவனைத் திடப்படுத்தின. இவ்வாறு அந்த யூதன் யூலோஜியஸ் என்னுங் குருமுனிவருடன் அச்சிறையில் வசிக்க நேர்ந்து பத்து தினங்களாயின. அந்தச் சிறைவாசம் அவனுக்கு அளவற்ற நன்மையைப் பயப்பதாயிற்று. வேத விஷயங்களைப் பற்றி அவனுக்குங் குருவானவருக்கும் நடந்த அநேக சம்பாஷணைகளால் சத்திய வேதக்கொள்கைகளின் மகத்துவத்தைக் கொஞ்சங்கொஞ்சமாயுணரலானான். அந்த யூதன் மனதில் எற்கெனவே அந்த நல்ல குருவானவர் கொளுத்தியிருந்த ஞான தீபம் இப்போது நன்கு தூண்டப்பெற்றுக் கொழுந்துவிட்டு எரியவே, மனிதர் பாவத்துக்காக ஒரு நேசனைப்போல் சிலுவையிற்றொங்கிய தேவனுடைய பாதங்களை நாடியடைவதே சரியான மார்க்கமென்று அவன் மனதிற்பட்டது.

(இன்னும் வரும்.)

ச. செல்வன்.

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

புன்னைக்காயலில் ஓர் பொதுக்கூட்டம்.

பொல்லாரைத் திருத்தி, நல்லாரைப் பொருத்தி,
எல்லாரையும் இணக்கி, உல்லாசப்படுத்த
வல்லானாகிய ஓ! நல்லாயனே!

பல்லாண்டுகாலமாய் பலத்த கக்ஷிப்பிரிவினையை நாட்டி, தவறான விவரங்களை எடுத்துக்காட்டி, பகையை மூட்டி, பாதகுலத்தின் ஒரே குடும்பத்தை இரு பிளவாக்கி, இடர்படச்செய்த புரட்சியாளர் தலைகவிழ்ந்து நாணும்படி, இந்நாளில் புன்னைமாநகரம் எந்நாளுமில்லாத சமாதானத்தோடிலகுவதை எமது கண்ணாரக்கண்டு இங்ஙன மெம்மவரை இணக்கிவைத்த எம்பெருமானின் இணையடிகளை இடையறா திறைஞ்சி ஏற்றுகின்றோம்.

இவ்வூரின்கண் சென்ற ஜூன்மீ 11வ சனிக்கிழமையன்று "பதுர்வாதோ" "புரப்பக்காந்தோ" என்னும் பழய, புதிய, பங்கிரண்டிலுமுள்ள சங். தாமஸ் செல்வராய சுவாமிகளும், சங். பங்கார் சுவாமிகளும் பக்ஷத்தோடு சமுகந்தந்து அக்கிராசனமமர்ந்து வீற்றிருக்க பாதகுலத்தவரின் பாரிய பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் கனம் பங்கார் சுவாமிகள் குழுமியிருந்த புருஷ பூவையரின் பெருமிதத்தைக் குனித்து நோக்கி "இவ்விதமான ஒற்றுமை எந்நாளு மிவ்வூரில் நிலைத்திருக்க வேண்டும்" என்னும் விஷயத்தை மகுடமாகக் கொண்டு எல்லாரும் மகிழும்படியாய் இனியதோர் பிரசங்கஞ்செய்தார்கள். இரண்டாவதாக, ஸ்ரீமாந் மனுவேல் லூயிஸ் உபாத்தியாயரவர்கள்

"பள்ளிக்கூடத்தின் அபிவிருத்தியும் மாதா பிதாக்களின் கடமையும்" என்னும் விஷயத்தையும், 3-வதாக, ஸ்ரீமான் சிங்கராய லோப் அவர்கள் "நாம் இவ்வண்ணம் ஒற்றுமையாயிருக்கும்பொழுது இவ்வூருக்கு இரண்டு பள்ளிக்கூடங்கள் அவசியந்தானா" என்னும் விஷயத்தையும், 4-வதாக இவ்வூர் கிராம முனிசீப்பு ஸ்ரீமான் T. P. பெர்னாந்து கோமஸ் அவர்கள் "மதுபானக் கடைகளை நம்மவர்கள் மத்தியிலிருந்து அறவே ஒழித்துவிட வரவிருக்கும் 2-வது பாத மகா நாட்டில் ஒரு பிரேரணையை நம்மூரார் கொண்டுவரவேண்டும்" என்னும் விஷயத்தைப்பற்றியும் வெகு விரிவாயும் தெளிவாயும் பிரசங்கித்தார்கள். இன்னும் பலரும் தங்களுக்குத் தோன்றிய பற்பல விஷயங்களைச் சுருங்கச் சொன்னபின் இப்போதுண்டான ஒற்றுமையைப்பற்றி ஒரே மனதாய் புகழ்ந்து பேசினார்கள். அதன்பின் கனம் தாமஸ் செல்வராய சுவாமிகள் மேற்கூறிய ஒவ்வொருவர் உபன்னியாசத்தையும் தாங்கிப்பேசிய பின்னர் இனிமேலாக நாங்கள் உங்கள் ஆத்தும இரக்ஷண்யத்தின் பொருட்டாய் மாத்திரமல்லாது, லௌகீக முன்னேற்றத்துக்காகவும் உழைப்போம் என்று சொல்லி எல்லாரும் சந்தோஷித்துக் கைகொட்டி ஆர்ப்பரித்து அகமகிழாநிற்க தமது முடிவுரையை முடித்தார்கள். இக்கூட்டமானது மூன்று மணிநேரம் நீடித்து யாவரும் மகா சந்தோஷ பூரிப்படையும்படி மிக்க சம்பிரமமாய் முடிவுபெற்றது.

இவ்வூரில் இவ்வித சமாதானத்துக்கும் ஒற்றுமைக்கும் காரணமாய் நிற்கும் கனம் பங்கார் சுவாமிகள், கனம் தாமஸ் செல்வராய சுவாமிகள் ஆகிய இவ் இருவருக்கும் நிமலன் நீண்ட ஆயுளைத் தந்து நெடுநாள் எம்மத்தியில் நிலைத்திருக்கக் கிருபை பாலிப்பாராக.

ம. சூ. பி.

அறியாமைக்கோர் ஔஷதம்.

"ஆனந்தபோதினி"யெனும் பத்திரிகை சென்ற சிலகாலமாக தேவதூஷணையிலிறங்கியிருக்கின்றது.

இதனுண்மையை நிர்ணயிக்க இப்பத்திரிகையின் கிறீஸ்துவ சந்தா நேயர்களே யருகர். ஆதலின் இதை யவர்களின் ஆராய்ச்சிக்கு விட்டுவிடுகிறேன். உண்மையை யறிந்துகொள்வார்களாக "ஆனந்தபோதினி"யின் "ஆறாவது" தொகுதி "மூன்றாவது" பகுதியில் "பொய்" என்னும் மகுடத்தின்கீழ் K. R. விஸ்வநாதன் என்ற கைச்சாத்தோடும், அதே தொகுதி "ஏழாவது" பகுதியில் "பாலுக்குப் பூனையைக் காவல் வைக்கலாமா" என்ற மகுடத்தின்கீழ் வை. நடேசன் என்ற கைச்சாத்தோடும், அதன் "குறிப்பையும்" ஆனந்தபோதினியின் கிறீஸ்துவச் சந்தா நேயர்கள் இன்னொரு முறை வாசித்துப் பார்த்தால் இதனது உண்மை "உள்ளங்கை நெல்லிக்கனி" போல் விளங்கும். இன்னும் இவைபோன்றவை இதில் அறியப் பொதிந்து கிடக்கின்றன. இதை விவரிக்கிற் பெருகும்.

ஆகவே, தமது இந்து மதத்தின் கொள்கையை யறிந்த இவ் "ஆனந்தபோதினி" யாசிரியர் கிறீஸ்துவ மதத்தின் மகிமையை யறிந்திருப்பாராகில், அவ்வித தூஷணையைத் தம்மை ஆசிரியராகக்கொண்ட இப்பத்திரிகையின்வாயிலாக வெளிப்படுத்த முன் வரமாட்டாரென்பது திண்மை.

ஆதலின், இப்பேர்ப்பட்ட மததூஷணையுள்ள ஓர் பத்திரிகையை கிறீஸ்துவர்களாகிய நாம் அதனை யாதரிப்போராகிய கிறீஸ்துவச் சந்தாநேயர்களிடம் உண்மையை அறிவித்து, மேற்படி பத்திரிகையை பகிஷ்காரம் செய்துகொள்ளும்படிச் செய்வதே இவ் "ஆனந்தபோதினி"யின் அறியாமைக்கு ஔஷதமாகும். நம் உயிரினும் சிறந்ததாகக் கருதும் நம் கிறீஸ்துவ மதத்தின் மகிமையை கண்டறியாது தூஷிப்பதாயிருந்தால், "அந்தோ" பார்ப்போரின் மனநிலைமை எவ்வாறிருக்குமென்பதை இதைக் கண்ணுறும் நண்பர்கள் ஆராய்ந்து தெரியப்பெறுவர்களாக. எனவே, இப்பத்திரிகையை பகிஷ்காரம் செய்வதற்கு கிறீஸ்துவர்களாகிய நாம் எல்லோரும் முயற்சி செய்யவேண்டியது நமது முக்கிய கடமையாகும். இதுவே என் கிறீஸ்துவச் சகோதரர்கள் அனைவருக்கும் ஈண்டு இன்னுமொருமுறை ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறேன்.

யானும் கடந்த ஆறு ஆண்டுகளாக "ஆனந்தபோதினி"யின் சந்தாதாரர்களில் ஒருவனாக இருந்து இப்போது இதனது மததூஷணையை முன்னிட்டு, இதின் ஏழாவது ஆண்டோடு இதனை பகிஷ்காரம் செய்துகொண்டேன். இனி

மேலாவது இவ்வாசிரியரும் உண்மையைக் கண்டறிந்து, தாம் நடப்பிக்கும் பத்திரிகையை நல்வழியில் நடப்பிப்பாராக. அப்போது பத்திரிகை நீடூழி வாழும்.

D. G. A. Fernandes,
14—7—21. வைகைவாசி.

தென் இந்திய (ஜாதிபேதமற்ற) கத்தோலிக்கு சகோதர ஐக்ய சங்கம்.

முதலாம் வருடாந்த மகோற்சவம்.

மேற்படி சங்கத்தின் முதலாம் வருடாந்த மகோற்சவமானது 1921ஞு ஜுலைமீ 3உ மாலை 3 மணிக்கு சென்னை ஒய். எம். வி. எ. ஆடிற்றோரியத்தில் மிக்க விமரிசையாய் நிறைவேறியது. ஏற்கெனவே தீர்மானித்தபடி மாட்சிமைதங்கிய சென்னை தேசாதிபதி (கவர்னர்) அவர்கள் வரக்கூடாமையைத் தெரிவித்துவிட்டதன்பேரில், "சோஷியல் ரிபார்மர்" பத்திராதிபரும் தாழ்த்தப்பட்ட ஜனசமுக முன்னேற்றத்திற்காக உழைத்துவருபவருமான ராவ் பஹதூர் ஸ்ரீமான் ஓ. கந்தசாமி செட்டியார் அவர்கள் அக்கிராசனராகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். ஆடிற்றோரியத்தில் தஞ்சாவூர் வாத்தியம் கோஷிக்க, குறிக்கப்பட்ட நேரத்தில் திருநெல்வேலி, திருவாங்கூர், கோலார் முதலிய இடங்களிலிருந்து பிரதிநிதிகளாய் வந்திருந்த Messrs. M. A. செபஸ்தியான், A. L. மனுவேல், D. G. R. சிகாமணி, R. S. K. சுந்தரம், மதலை, S. A. சின்னையா முதலாயினோருடன் திரளான கத்தோலிக்கரும் மற்றவரும் குழுமியிருக்க, அவர்கள் கரகோஷத்தினிடையே அக்கிராசனர் எழுந்து தமது முகவுரையில் இந்தியாவின் க்ஷீண நிலைமைக்கும், ஒற்றுமைக் குறைவிற்கும் ஜாதிபேதமே முக்கிய காரணமென்றும், ஜாதிபேதம் இந்தியாவில் நுழைந்தபின்பே ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு வகுப்பாய்ப் பிரியலாயினரென்றும் முஹம்மதிய மார்க்கத்தில் சேரும் எவ்வருணத்தோரும் மகம்மதியர்களாகிறார்களென்றும் அதுபோலவே கிறீஸ்துமதத்திற் சேருவோரும் கிறீஸ்துவர் என்றழைக்கப்படவேண்டுமேயன்றி வேறு விதமாய் அழைக்கப்படுதல் விசனிக்கத்தக்க விஷயமென்றும், இதனை ஒழிக்காவிடில் இவ்வகுப்பினர் முன்னேறமுடியாதென்றும் மிக விரிவாய்ப் பேசினார்.

சங்கத்தலைவர் ஸ்ரீமான் S. M. ஞானப்பிரகாசம் B.A. அவர்கள் முதல் வருட ரிப்போர்ட்டைத் தெளிவாய் இடையிடையே கரகோஷங்கள் கோஷிக்க வாசிக்கையில் குறிப்பிட்டிருந்த சங்க உத்தியோகஸ்தர்களுக்கும், சங்கத்தின் சார்பாய் உழைத்தவர்கட்கும், சிலோன், திருநெல்வேலி, கோலார், திருவாங்கூர் முதலிய கிளைகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளுக்கும் அவர்கள் உழைப்பிற்கு நன்றியறிதலாக புஷ்ப ஆரங்கள் சூட்டப்பட்டன.

பின்னர் தாய் சங்கத்தின் உப-சபைத்தலைவர் மிஸ்டர் R. A. தாஸன் அவர்களும், கோலார் கனகவயல் கிளைச் சங்கத்தின் தலைவரும் பிரதிநிதியுமாகிய ம-ா-ா-ஸ்ரீ A. L. மனுவேல் அவர்களும், திருநெல்வேலி கிளைச் சங்கக் காரியதரிசி ம-ா-ா-ஸ்ரீ M. A. செபஸ்தியான் அவர்களும் J. M. மரியதாஸன் அவர்களும், தாய் சங்கத்தின் பிரதம உத்தியோகஸ்தராகிய டாக்டர் சாம். சாலமோன் அவர்களும், தாய் சங்கத்தின் புதிய பிரஸிடெண்டும் சென்னை மெர்க்கண்டையல் ஹோட்டல் புரோப்ரைட்டருமாகிய ஸ்ரீமான் ஞானதிக்கம் டேவிட் அவர்களும் உபந்நியாசங்கள் செய்தனர். புரோகிராமில் குறித்தபடி இந்திய இரவு வாசகசாலையின் காரியதரிசி மிஸ்டர் J. B. எலியேசர் அவர்களாலும் அவரது மாணவர்களாலும் இடைக்கிடையே சங்கீதப் பாடல்கள் பாடப்பட்டு வந்திருந்தோர் யாவருக்கும் சிற்றுண்டி, தாகபானம், தாம்பூலம் வழங்கப்பட்டன.

பிறகு சபாநாயகர் முடிவுரை கூறி யமர்ந்ததும், ஸ்ரீமான் S. M. ஞானப்பிரகாசம் அவர்களால் வந்தனோபசாரங் கூறப்பட்டு இராஜ வாழ்த்துக் கீதத்துடன் கூட்டம் முடிவுபெற்றது. கூட்ட முடிவில் சங்க உத்தியோகஸ்தர், வெளியூர் பிரதிநிதிகள் ஆங்கு ஒரு தனிக்கூட்டங் கூடி சங்கத்தின் பெயரால் ஓர் பத்திரிகையை ஆகஸ்டு மாதம் 15-ந் திகதியில் வெளியிடத் தீர்மானம் செய்தனர். அடுத்த நாள் மாலை மெர்க்கண்டையல் ஹோட்டல் கட்டிடத்தில் சபாநாயகர், சங்க உத்தியோகஸ்தர் பிரதிநிதிகள் சேர்ந்த புகைப்படம் ஒன்று பிடிக்கப்பட்டது.

A. K. சாமுவேல்,
பிரதம காரியதரிசி.

பெரிய தாழையான்.—நீர் எடுத்த விஷயம் விவாதத்துக்குரியது. அதைப் பிரசுரிப்பது நாவிதன் குப்பையைக் கிளறுவதாய் முடியும். ஆகவே விடுக்கப்பட்டது. ப—ர்.

மிகவும் சங்கைக்குரிய
மொன்சிஞ்ஞோர் ஏ. ஆர். ஜான் சுவாமிகளின்
வெள்ளி ஜுபிலி நிதி.

"நல்ல ஆயன்" பத்திரிகாசிரியராகிய சங். ஏ. ஆர். ஜான் சுவாமிகளின் ஜுபிலி மகோற்சவக் கமிட்டியார், தங்கள் வேண்டுகோளுக்கிசைந்து நன்கொடை யனுப்பியுள்ள நண்பர்களுக்கு நன்றியறிந்த வந்தனஞ் செலுத்துகிறார்கள். நமது பத்திராதிபருக்கு, பரிசுத்த பாப்பானவர் அளித்த "மொன்சிஞ்ஞோர்" பட்டத்தின் அதிகாரப் பத்திரம், உரோமாபுரியிலிருந்து இன்னும் வாராததால் ஜுபிலி கொண்டாட்ட தினத்தை ஒத்திவைக்கவேண்டியதாகிறது. அது வந்தவுடன் கமிட்டியார் கொண்டாட்டதினத்தை முடிவுசெய்வார்கள். அப்போது அதைப்பற்றி நண்பர்களுக்கு அறிவிக்கப்படும். அதுவரையில் இந்த நல்ல முயற்சியில் கலந்துகொள்ளாதவர்களும் கலந்துகொள்வதற்குச் சமயங் கிடைத்திருக்கிறது. நன்கொடை அனுப்பப் பிரியமுள்ளவர்கள் இந்த ஆகஸ்டு மாதத்துக்குள் அனுப்பிக்கொள்ளல்வேண்டும்.

2/74, பிராட்வே, மதராஸ்,
28—7—21.

எம். பி. குழந்தைசாமி,
பொக்கிஷதாரன்.

10 ரூபாய்.—Mr. A. கஸ்பார் பெர்னாண்டோ, சிலாபம்.

$7\frac{1}{2}$ ரூபாய்.—Mr. ரத்னம் M. ஜோசெப், பினாங்.

5 ரூபாய்.—Messrs. J. ரோச், நியாங்குலா; S. M. J. பெர்னான்டோ, வீரபாண்டியன் பட்டணம்.

3 ரூபாய்.—Mr. M. பிரான்சிஸ், பஞ்சாப்; சங். A. M. J. மரியநாதர், பெரியதாழை.

2 ரூபாய்.—Messrs. ஜோசெப் அண்டு கம்பெனி, குன்னூர்; Messrs. B. C. பெர்னாண்டோ, சிலாபம்; S. H. துரைசாமி பிள்ளை, வெல்லிங்டன்; C. அந்தோனி, புரோம்; ஞானப்பிரகாசம், பெங்களூர்; J. F. சாவியெர், செகுன்டெராபாட்; S. அருளானந்தம் பிள்ளை, B.A., L.T., மைலாப்பூர்.

$1\frac{3}{4}$ ரூபாய்.—Mrs. ரத்னம்மாள், தர்மாவரம்; J. மிக்கேல் பிள்ளை, குவாலாலம்பூர்; R. T. உத்தரியம், குவாலாலம்பூர்; பாஸ்தியான், குவாலாலம்பூர்; செல்லையா, குவாலாலம்பூர்.

$1\frac{1}{4}$ ரூபாய்.—Mr. K. P. ஜான், பெல்காம்.

1 ரூபாய்.—Messrs. A. மரியான் அந்தோனி பிள்ளை, புன்னைவனம்; பால் ஆரோக்கியம், மாண்டலே; P. S. ஆரோக்கியசாமி, மாண்டலே; V. அமலதாஸ், குவாலாலம்பூர்; A. மலயப் பிள்ளை, குவாலாலம்பூர்; R. A. சவரிநாத முதலியார், குவாலாலம்பூர்; G. சவரிமுத்து, குவாலாலம்பூர்; A. கிறிஸடி, பெல்காம்; F. சனேஸ், H. E. பாண்ட், ஒத்தை; R. அந்தோனி, ராயப்பேட்டை; S. A. கோஸ்தா, காலி; S. ஆரோக்கியசாமி, அருவஙகாடு; P. தம்பிராஜா, கொளும்பு; C. மரியசூசை செட்டியார், திருப்பூர்; C. ஆரோக்கியசாமி பிள்ளை, சாம்பியன்ரீவ்ஸ்; A. D. M. சந்தியாகு, கலியான்; M. சில்வெஸ்டர், புத்தன்துறை.

12 அணா.—Messrs. M. சவேரியார், ஷிமோகா; G. அருளானந்தம் சேர்வை, மிக்கேல் பட்டி.

8 அணா.—Mr. S. F. லூர்துசாமி பிள்ளை, வேளாங்கண்ணி.

2 அணா.—Mr. L. ஜேகப், பெங்களூர்.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

அரசிளங்குமாரர்.—நமது பிரிட்டிஷ் பட்டத்திளங்குமாரர் இந்தியாவுக்கு விஜயஞ் செய்ய வரும்போது ஜப்பானுக்கும் வந்து போகும்படி ஜப்பான் அரசாங்கத்தார் கேட்டுக்கொண்டதின்மேல், அவர் இந்தியாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டு, வருகிற மார்ச்சு அல்லது ஏப்பிரல் மாதத்தில் ஜப்பானுக்குச் செல்லுவாரென்று தெரிகிறது.

விபசாரத்தை ஒழிக்கச் சட்டம்.—பம்பாயில் விபசாரம் பெருகிவருகிறபடியால்,

ருள்ள விபசாரிகளின் வீட்டை அழிக்க
சட்டம் ஏற்படுத்த அடுத்த சட்ட
பக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் கொண்
ரப்படுமென்று தெரிகிறது. இம்மாதிரி
டம் இம்மாகாணத்திலும் ஏற்படுத்தினுல்
தமமாகும்.

மிஸ்ஸஸ் பேசன்ட் அம்மையார்.—
ம் அரசாங்கத்துக்கு விரோதமான காரி
செய்தாரென்று, "டெய்லி கிராபிக்"
திரிகையில் எழுதப்பட்டிருந்ததற்காக,
பத்திராதிபர்மீது ஆயிரம் பவுன் நஷ்ட
டுக்காக எடுத்த வழக்கு விஷயமாகச்
ப்த விசாரணையில், பத்திரிகையின்மீது
றமில்லையென்று நியாயாதிபதி வழக்
த் தள்ளிவிட்டார்.

கிரீக்கும் துருக்கியும்.—கிரேக்கருக்கும்
க்கியருக்கும் சென்ற சிலகாலமாய் நடந்
ந்த யுத்தத்தில், துருக்கியர் தோல்வி
டந்துவிட்டார்களென்று தெரிகிறது.
க்கியரால் 160 பீரங்கிகளுடன் காக்கப்
டுவந்த குதையா என்னும் நகரமானது
ரக்கரால் பிடிபட்டுப்போயிற்றென்றும்,
000 பேர் சிறையாக்கப்பட்டாரென்றும்
தி கூறுகிறது.

சர். சங்கர நாயர்.—இந்தியா மந்திரி
ப யங்கத்தினராகிய சர். சங்கர நாயர்
ர்கள் "சென்ட்ரல் பிராவின்சஸ்" என்
ம மத்திய மாகாணத்துக்கு கவர்னராக
மிக்கப்படுவாரென்றும், அப் பதவியை
ர் ஏற்றுக்கொள்ள சம்மதித்திருக்கிறு
ன்றும் "டிரிபியூன்" பத்திரிகை கூறுகி
. இவர் அந்நியமனம் பெறுவாராளுல்,
ர்னர் பதவி வகித்த இந்தியரில் இவர்
ண்டாவதாவர். சின்ன பிரபு முதல்
ல் கவர்னர் பதவியை வகித்தார்.

25 லட்சம் ரூபாய் கடன்.—சென்னை
நிருமாண வேலைகளுக்காக, சென்னை
பரிபாலன சபையார், சமீபத்திற் கூடிய
டத்தில், 25 லட்சம் ரூபாய் கடன்
கவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.
தொகை, ஜலவசதி, வடிகால் வசதி,
சார சக்தி வசதியாகியவைகளை அதிகப்
த்தவும், மற்றும் நகரை அபிவிருத்தி
ப்யவும் உபயோகிக்கப்படுமென்று தெரி
து.

நற்கருணைச் சங்கம்.—இவ்வருஷம்
ன்னையில் மகா வைபவத்துடன் நடத்தப்
பட்ட மரியாயின் மகா சங்கத்தைப்போல,
பரம தேவநற்கருணையைப்பற்றிய மகா சங்
கமொன்று உரோமாபுரியில் அடுத்த வருஷத்
தில் நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்
பட்டுவருகிறது. இச்சங்கத்திற்கு பரிசுத்த
பாப்பரசரும் சமுகமாவாரென்று எதிர்பார்க்
கப்படுகிறது. இவ்வைபவக் காட்சியைக்
காணும் பாக்கியமே பாக்கியம்.

தீர்த்தத் தொட்டிகளும் புழுக்களும்.—
சில கோவில்களில் கோவில் ஊழியர்களின்
அஜாக்கிரதையாலும் சோம்பேறித்தனத்தா
லும், தீர்த்தத் தொட்டிகளை செம்மையாய்க்
கழுவாததாலும், பல மாதங்கள்வரையில்
புதுத் தீர்த்தம் ஊற்றுமல், சுத்தமற்ற கிணற்
றுத்தண்ணீர் முதலியவற்றைக் கலத்தலா
லும் அதில் புழு உண்டாவதைக் காணலாம்.
இம்மாதிரி புழு உண்டாகாமலிருப்பதற்கு
தீர்த்தத் தொட்டிகளில், ஒரு துண்டு கர்ப்பூ
ரத்தைப் போட்டுவைக்கவேண்டும். இப்ப
டிச்செய்தால் எத்தனை நாளிருந்தாலும் புழு
உண்டாகாது.

**பொது நிதியும், கவர்ண்மேண்ட் உத்தி
யோகஸ்தர்களும்.**—பொது விஷயமான
நிதிக்காவது, அல்லது ஸ்தல சம்பந்தமான
நிதிக்காவது, பணம் வசூல் செய்யும் விஷ
யத்தில் கவர்ண்மெண்டாரின் உத்தரவில்லா
மல் கவர்ண்மெண்ட் உத்தியோகஸ்தர்கள்
கலந்துகொள்ளக்கூடாது. அவ்வாறு உத்த
ரவு பெற்றுலும், தங்கள் கீழிருக்கும் உத்தி
யோகஸ்தர்களைப் பணம் வசூலிக்கவோ,
பணம் செலுத்தும்படியோ வற்புறுத்தக்
கூடாது, என்று கவர்ண்மெண்ட் உத்திரவு
வொன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

உலகத்தில் இராணுவ பலம்.—உல
கத்திலுள்ள அந்தந்த இராஜ்ஜியமும், தம்
தம் தேசப் பாதுகாப்புக்கு எவ்வளவு இரா
ணுவம் அத்தியாவசியமாக வேண்டுமோ அவ்
வளவு இராணுவத்தைமாத்திரம் வைத்துக்
கொள்ளவேண்டுமே தவிர அதிகம் வைத்தி
ருக்கக்கூடாதென்கிறதை உத்தேசித்து,
எல்லா தேசத்து இராஜதந்திரிகளும் ஒருங்கு
கூடி ஒரு சமரச ஏற்பாட்டுக்கு வரவேண்டு
மென்று பேச்சு நடக்கிறது. இவ்விஷயமாய்
அமெரிக்கா ஐக்கிய மாகாணத்துத் தலைவரே
முன்னின்று முயற்சிசெய்துவருகின்றார். பிரி
டிஷ்தேசம், பிரஞ்சு தேசம், அமெரிக்கா தே
சம் ஆகிய மூன்று நாடுகளும் இதற்கு தற்

பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

காலம் ஒத்திருக்கின்றன. இப்போது ஜப்
பான் தேசமானது கப்பற்படை, தரைப்
படை, ஆகாயப்படை ஆகிய மூன்றுவகைப்
படைகளையும் அபரிமிதமாக அதிகப்படுத்
திக்கொண்டுபோவதே இவ்வெழுச்சிக்குக்
காரணமாகும்.

**ரீம்ஸ் நகர் மேற்றிராசனக்
கோவில்.**—பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த
ரீம்ஸ் என்னும் நகரிலுள்ள அழகிய சிறப்பு
வாய்ந்த தேவாலயமானது கடந்த
ஐரோப்பா யுத்தத்தின்போது சின்னபின்
னமாக்கப்பட்டுப்போயிற்று. அதை இப்
போது புதுப்பிக்க எத்தனஞ்செய்கிறுர்கள்.
அதைத் திரும்பவுங் கட்டி முடிக்க 15 வரு
ஷங்கள் செல்லுமென்றும், இருபது லட்சம்
பிராங்கு செலவு பிடிக்குமென்றும், மதிப்பி
டப்படுகிறது. இதனுல் அக்கோவிலின் மகி
மையும் சிறப்பும் அழகும் ஒருவாறு ஊகித்
துக்கொள்ளலாம்.

ஐர்லாந்து தேசமானது நெடுநாளாக
தனக்குச் சுயராஜ்ஜியம் வேண்டுமென்று
கலகம்பண்ணி, உயிர்களுக்கும், பொருட்க
ளுக்கும், சொல்லொண்ணு கேடு விளைவித்
துக்கொண்டுவந்தது உலகமெல்லாம் அறிந்த
விஷயம். அதற்கு இப்போது, ஆஸ்திரே
லியா கனடா முதலிய நாடுகளுக்கு கொடுக்
கப்பட்டுள்ளதுபோல சுதந்திரம் கொடுக்
கப்பட்டிருக்கிறது. இவ்விஷயமாய் இங்கி
லாந்துக்கும் ஐயர்லாந்துக்கு ஒருவித சமா
தான ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டதென்று
கேட்டு சந்தோஷமடைகிறோம். ஐர்
லாந்து ஒரு கத்தோலிக்கு நாடு; அது சமா
தானமாய் வாழவேண்டுமென்பதே நமது
அபேட்சை.

நோட்டுகளில் மரியாயின் படம்.—
ஐரோப்பாவிலுள்ள ஹங்கேரி தேசத்துக்கு
நமது பரிசுத்த கன்னிமரியாயி பரிபாலினி
யாகப் போற்றப்பட்டுவருகிறுள். இதற்கு
அத்தாட்சியாக, ஷே தேசத்தில் வழங்கு
கிற 50 கிரவுன், 100 பவுன் நோட்டுகளில்
பரிசுத்த தேவமாதா திருக்குழந்தையைக்
கையிலேந்திய பாவனையான படம் சித்திரிக்
கப்பட்டிருக்கிறதாம். என்னே மனோகரமான
காட்சி! இதுவன்றே கிறீஸ்துவ தேசம்!
இம்மாதிரி காட்சி நம்மிந்தியாவில் காண்ப
தெப்போ! அர்ச். மரியாயே, இந்த இந்திய
நாடு முழுவதும் மனந்திரும்பி சத்திய திருச்
சபையிற் சேரும்படி உமது திருக்குமார
வேண்டிக்கொள்ளும்.

**பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வாத
ரின் படம்.**—சித்திர வித்தையில் தேர்
வரான அன்தோன் வான்வெலி என்
டச்சுக்காரர் ஒருவர் நமது பரிசுத்த தந்
யின் சாயல் படமொன்றை வரைந்து
போது தான் முடித்திருக்கிறுராம். அ
பரிசுத்த தந்தையவர்கள் உயிருடனிருப்ப
போல் காணப்படுகிறுர்களாம். ~~கட~~
சென்ற பாப்பானவராகிய பத்தாம் ப
நாதர் படத்தையும் இந்த நிபுணர் மி
மெச்சத்தக்க விதமாய் எழுதியுள்ளாராம்.

குரும்பாகரம்.—இவ்வூர் விசாரணை
குருவாகிய சங். அல்போன்ஸ் சுவாமிகள
பெருமுயற்சியால் இவ்வூர் கோவிலுக்
ஏற்படுத்தப்பட்டுள்ள "மாதர்கள் சாஸ்
கோவில் பண்டு"க்கு தற்போது ரூ. 9
3–6 வசூலாயிருக்கின்றதென்றறிந்து
தோஷிக்கிறோம். இன்னும் பணம்
லிக்கப்பட்டுவருகிறதென்றும் நம்புகிறோ
இப்பங்கு கிறீஸ்துவர்களின் முன்மா
கையை ஏனைய பங்கு கிறீஸ்துவர்களும்
பற்றி தத்தம் பங்கு கோவிலுக்கு ஓர் ச
வத நிதி ஏற்படுத்தி, அதைத் திருச்ச
சட்டப்படி திருச்சபை அதிகாரிகளின்
வாகத்தில் வைப்பார்களாளுல், நம்
இந்தியாவில் கத்தோலிக்குத் திருச்ச
விருத்தியாகுமென்பதற் கையமில்லை.

பசுவும் நரபக்ஷணியா?—குயிலே
எனும் ஊரிலுள்ள ஜில்லா ஆஸ்பத்திரி
நர்சு வேலை செய்யும் கன்னியாஸ்திரிக
கண்காணிப்பிலிருந்த 4 வயதுள்ள சிறு
ஒருவன் சிகிச்சை செய்யப்பட்டுவந்த
இவன் சென்றமீ 12உ பக்கத்திலிருந்த
குசுக்குப் போகையில் ஒரு பசுமாடு இ
முட்டிக் கீழே தள்ளி, இவனுடைய ஒ
கத்துக் கன்னத்து சதையைக் கடித்துத்
பதைக் கண்டவனொருவன் மாட்டை வி
டிப் பையனை வாரித் தூக்கிக் காப்பா
னுன். பசுமாடோ மறுபடியும் அவ்வி
துக்குச்சென்று கீழே சிந்திக்கிடந்த இ
தத்தை நக்கிக்கொண்டிருந்ததாம்.
வும் காலத்துக்கேற்ற கோலமே.

300 நாள் பலன்.—சென்ற ஜனவ
மிக்கச் சிறப்பாய் நிகழ்ந்த மரியாயின்
சங்கத்தைக் காலாகாலத்துக்கும் ஞாப

படுத்தும்படியாய் விசுவாசப் பரம்புதல் சபையின் விசாரணைத் தலைவராகிய மி. சங். வான் ரோஸ்ஸம் கர்தினல் அவர்கள் ஷை சங்கத்தின் ஞாபகச் சின்னத்தில் வரையப்பட்டிருந்த "மரியாயின் மாசற்ற இருதயமே! இந்தியாவுக்காக வேண்டிக்கொள்ளும்" என்னு மனவல்லய ஜெபத்துக்குப் பலனளிக்கும்படி தமக்கு நாளது ஜுன்மீ 2உ கிடைக்கப்பெற்ற அர்ச். பாப்பானவரின் பேட்டியில் விண்ணப்பஞ் செய்துகொள்ளவே, பரிசுத்த தந்தையும் அந்த மனவல்லய ஜெபத்தைச் செபிக்கும் ஒவ்வொரு விசைக்கும் 300 நாள் பலனளிக்கச் சித்தமானார். நம் இந்தியா தேசத்தை அடர்ந்திருக்கும் அஞ்ஞான அந்தகாரம் நீங்கி மெய்ஞ்ஞான ஒளிர் பிரகாசிக்க ஷை மனவல்லய ஜெபத்தை அடிக்கடி ஜெபிக்க நமது சந்தாதாரர்களைக் கேட்டுக்கொள்வதுமல்லாமல், அவர்கள் அதை ஜெபிக்கும் ஒவ்வொரு விசைக்கும் ஷை பலனை அடையுங் கருத்துடன் ஜெபிக்கவுங் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ரெயில்வே போர்டு மெம்பர்.— ரெயில்வே போர்டு மெம்பராகிய மிஸ்டர் இ. ஏ. எஸ். பெல் என்பவர் ஜுலை மாதக் கடைசியில் சென்னைக்கு விஜயஞ்செய்தார். அக்காலையில் தென்னிந்தியா வாசிகளுக்கு ரெயில்வே நிர்வாகத்திலுள்ள குறைகளைத் தெரிவித்துக்கொள்ளுவதற்காக, தென்னிந்தியா வியாபார சங்கத்தார் அவரை பேட்டி கண்டுபேசியதில், குறைகளொன்றும் நிவர்த்தியாகக்கூடியதான பதில் வரவில்லை. இந்த பேட்டியிலிருந்து, பின்வரும் விஷயங்கள் வெளியாகின்றன. ரெயில்வே உத்தியோகஸ்தர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சம்பளங்கள் உயர்த்திக்கொடுத்ததற்காக, ரெயில்வே கட்டணங்களை உயர்த்தவேண்டியதாயிற்று. ரெயில்வேயின் மொத்த வருமானத்தில், 10ல் 9 பாகம் கவர்ண்மெண்டாரைச் சேருகிறது. இங்கிலாந்திலுள்ள ரெயில்வே கம்பெனிகளுக்கு 100க்கு 2 முதல் 7 வரை லாபம் கிடைக்கிறது. இந்தியாவில் 100க்கு 9 வீதங் கிடைக்கிறது. பன்ருட்டி, திருச்சி, ராமநாதபுரம் பாதை விஷயமும், திண்டுக்கல், பழனி, பாலக்காடுப் பாதை விஷயமும், பணமில்லாக் குறையால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. பழய பாதைகள் சீர்கேடாயிருக்கையில் அவற்றைச் செப்பனிடாமல், புதுப் பாதைகளைப் போட முயல்வது உசிதமல்ல. மற்றபடி பிரயாணிகள் படும் நெருக்கடிகளைப்பற்றி விசாரணைசெய்து கூடிய பரிகாரஞ் செய்யப்படும்.

மிக. சங். ஏ. மேர்க்கஸ் சுவாமிகள்.— சென்னை அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த மிக. சங். ஏ. மெர்க்கஸ் சுவாமிகளின் குருப்பட்டாபிஷேக வெள்ளி ஜுபிலி, சென்றமீ 24, 25-ம் தேதிகளில், அவர்களின் விசாரணைக் கிறீஸ்துவர்களாலும், சிநேகிதர்களாலும் மிக்க வைபவமாய்க் கொண்டாடப்பட்டது. அத் தினங்களில் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரமாக பெரிய பாட்டுப் பூசையும், மாலைப் பிரார்த்தனையும், ஜெபங்களும் செய்யப்பட்டதுடன், 300 ஏழைகளுக்கு அமுதுபடி அளக்கப்பட்டது. சென்னை அதிமேற்றிராணியாராகிய மிக. வந். அருளப்ப அல்ன் ஆண்டவரவர்களின் அக்கிராசனத்தில் பங்குக் கிறீஸ்துவர்களும், சிநேகிதர்களுமாக ஒரு பெருங் கூட்டங் கூடி, அச்சுவாமிகளுக்கு வந்தனோபசார வாழ்த்துப் பத்திரங்கள் பல வாசித்து அவர்களுக்குப் பல்லாண்டு கூறினார்கள். இந்த வெள்ளி ஜுபிலியின் ஞாபகார்த்தமாக அர்ச். தெரெசம்மாள் கோவிலுக்கு அப்பங்குக் கிறீஸ்துவர்கள், தூண்டாவிளக்கொன்று சமர்ப்பித்தார்கள். புதுப்பேட்டை மரியாயின் மக்கள் சபையார், சுவாமிகளுக்கு விலையுயர்ந்த அரிய பல புத்தகங்கள் பரிசளித்தார்கள். இவையன்றி சுவாமிகளின் நண்பர் பலரிடமிருந்து வெகுமதிகள் வந்து குவிந்தன. சுவாமிகள், வந்தனோபசாரப் பத்திரம், வாசித்துக் கொடுத்தவர்களுக்கும், வெகுமதிகள் அளித்தவர்களுக்கும் நன்றியறிந்த வந்தனஞ்செலுத்தி, அன்னோர்கள் அனைவரையும் அசீர்வதித்தார்கள். மேலும், தாம் வெகுவாய் ஆசித்த பள்ளிச்சிறார்களின் கல்வி நிதிக்காக, தாம் இதுகாறும் எடுத்த முயற்சி, கிறீஸ்துவர்களின் ஒத்துழைப்பினால் ஒருவாறு சித்திபெறலாமென்றும், அதற்காக வெகுசீக்கிரத்தில் ரூ 20,000 சேர்ந்த ஒரு நிதி முடிவாயிற்று என்று பிரசித்தஞ் செய்யக்கூடிய நிலைமையிலிருக்கிறதென்றும் சொன்னார்கள். இந்தச் சுவாமிகளுக்கு சர்வேசுரன் திடகாத்திரமும் தீர்க்காயுசும் தந்து அவர்களைக் காப்பாற்றும்படி வேண்டி, "நல்ல ஆயன்" போரால் மனமார சுபசோபன வாழ்த்துக் கூறுகின்றோம்.

ஸ்ரீமான் நசரேத் கோமஸ் அவர்களின்

தேகவியோகம்

சில காலத்திற்குமுன் தூத்துக்குடி அர்ச். பிரான்சிஸ்கு சவேரியார் கல்விச்சாலையின் தலைமை உபாத்தியாயராயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீமான் ஜி. ஆர். கோமஸ் அவர்களின் புதல்வரும், எமது நேச சகோதாருமாகிய ஸ்ரீமான் நசரேத் கோமஸ் அவர்கள் 1894-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ந் திகதி ஜனனமாகி "இளமையிற் கல்" என்பதிற்கொப்ப, சிறுபிராயத்திலே கல்வியுடன் நல்லொழுக்கங்களையும் கற்றுணர்ந்து 1914-ம் ஆண்டு ஸ்கூல் பைனல் பரீட்சையில் தேர்ச்சியடைந்து, ஸ்ரீமான் எம். ஜீ. கோமஸ் அவர்களின் புதல்வியாம் ஸ்ரீமதி லூர்துமரி கோமஸ் அம்மாளை 1919-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ம் திகதி திருமணஞ்செய்யப் பாக்கியம்பெற்று, மணஞ்செய்த 71-ம் நாளாகிய மேற்படி வருஷம் மே மாதம் 12-ம் திகதி தன்னருமை மனைவியை இழக்க நேரிட்டது பரிதாபத்திலும் பரிதாபமே.

பரிதாபம் நிறைந்த இச்சம்பவம் நிறைவேறவே, உலகத்தை வெறுத்து குருமடத்திற் சேர எண்ணங்கொண்டார் எம் சகோதார். அவ்வெண்ணத்திற்கிணங்க 1920-ம் வருஷம் ஜுன் மாதம், திருச்சி அர்ச். சூசையப்பர் கலாசாலையிற் சேர்ந்து லத்தீன் பாஷையைக் கற்கத் தொடங்கினர். இவ்வருஷம் மார்ச்சு மாதம் கொடிய நோயாம் ஜ்வரத்தின் வசப்பட்டு, அஃது க்ஷயரோகமாக மாறியதே, தம் ஜனன நாடாம் தூத்துக்குடிக்குவந்து, எவ்வித சிகிச்சைகளாலும் நோய் குணப்படாது தேவத்திரவிய அநுமானங்களை நல்லறிவுடன் குறையறப் பெற்று, திருச்சி புது குருமடத்தில் தாம் சேர்ந்து வஸ்திரம் அணியத் தெரிந்துகொள்ளப்பட்ட நாளாகிய நாளது வருஷம் ஜுன் மாதம் 21-ம் திகதியாகிய அர்ச். ஞானப்பிரகாசியார் திருநாளன்று இரவு 10 மணியளவில், எம் சகோதாராம் கனம் கோமஸ் பிரதாவர்களும், இந்நகர்க் குருவாம் சங். பெரியநாயகம் சுவாமியவர்களும் அருகில் நிற்க, மனவல்லய ஜெபங்களை உச்சரித்தவண்ணமாய்த் தம் அருமைத் தாய், சகோதார் சகோதரிகள் இன்னும் உறவின் முறையார் பலரையும் இம்மாய உலகிற் பரிதபிக்கவிட்டு, தாமடையவேண்டுமென இதுகாறும் ஆவலோடு காத்திருந்த பரமபதம் சேர்ந்தனர்.

இதைக் கண்ணுறும் சகோதர சகோதரிகாள் இவ்வேழை ஆத்தும நித்திய இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி வெகுவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
சகோதாரை இழந்து பரிதபிக்கும்
எஸ். டீ. கோமஸ்.

கையறு நிலை

சென்னை, அர்ச். காபிரியேல் பாடசாலையில் தலைமை ஆசிரியராயிருந்து, பின்னர் அர்ச். சவேரிய கோவில் பங்கு சுவாமியாராகிய சங். ஹோபார் சுவாமியார் மரணத்துக்காற்றமல் இரங்கிப்பாடிய

ஒரே வோரடிமிக்து வேறுபடவந்த கோச்சக வோநுபோத.

(முன் தொடர்ச்சி.)

6 காலன் வருநேரங் காசினியி லாரறிவர்
தாலமுறு மாந்தர்தமை சாதற்றிண்ணமெனுங்
காலமொழி மேய்க்கக் கடிதி னுயிர்துறந்து
சாலவுனை நேசித்த தாசரை மறந்தனையோ!
தரையிலுனை நேசித்த தாசரை மறந்தனையோ!

7 உண்மைநெறிக் காட்டியுல குய்விக்க வந்தவனே
அண்மினு ருள்ளத்தி லன்பு விதைப்பவனே
கண்மையிடுங் காரிகையர் கண்வலைப் படாதவனே
மண்மடிய விட்டென்னை வானுலகம் போந்தனையோ!
மாயவுட னீத்துயர் வானுலகம் போந்தனையோ!

8 உன்முகத்தைக் கண்டோ ருளநடுங்கச் செய்திடினுஞ்
சொன்முகத்தா லுன்னோடு தூய்முறையிற் சாருநரே
வின்முகத்திற் கீழிருக்கும் வாலிதயம் பொன்னிகர்க்குந்
தன்மையெனக் கூறவருந் தாதையரே மாண்டனையோ!
தனயரெமைப் பாராமற் றூதையரே மாண்டனையோ!

9 சென்னைநக ரின்கலனே செந்தாமரை வதனு
அன்னையைப்போல் வந்தவரை யாதரிக்குந் தாதாவே
என்னை யென்றுநேசித்த ஏகமறை மாமுனியே
உன்னை யலைசூழுலகி லுள்ளுவக்கக் காண்பதெப்போ!
ஒப்புவமை யில்லானே யுள்ளுவக்கக் காண்பதெப்போ!

10 நற்றவனே வேதியனே நற்புனித நாதனருள்
பெற்றவனே புண்ணியனே பேசுமறை நூற்பயனைக்
கற்றவனே காருண்ய மாமுகிலே யிந்தியரை
யுற்றவனே பற்றதனை யற்றதின்வீ டுற்றனையோ!
உண்மையொளிக் கண்பா னுயரியவீ டுற்றனையோ!

Madras, 22nd June 1921.

S. SELVA RAJU, B. A.,
St. Gabriel's High School, Madras.

ஓர் கோவில் கட்ட தருமம் செய்யுங்கள்!!

செங்கற்பட்டு பங்கு விசாரணைக்குட்பட்ட வாலாஜபாத் என்னும் ஊரில் சுமார் 60 கத்தோ லிக்கு குடும்பங்கள் உண்டு. இவர்கள் பரம ஏழைகள். அர்ச். பிரான்சீஸ்கு அசீசியார் பாதுகாவ விருந்த இவர்களுடைய சிறிய கோவில் சென்ற வருடம் பெய்த அகோர மழையினால் இடிந் தரைமட்டமாய்ப்போனதினால், இவ்வேழை ஜனங்கள் ஒன்று கூடி ஜெபஞ்செய்ய இடமில்லாம தவிக்கிறார்கள். இதுவரையில் இவர்கள் தங்களூரிலேயே தோல் பதனிடும் ஷாப்புகளில் கூ வேலை செய்து ஜீவனம் செய்துவந்தவர்கள். ஆனால், இப்போது இவ்வேலையும் நிறுத்தப்பட் ஜீவனத்துக்கு யாதொரு வழியுமில்லாமல் பசியும் பட்டினியுமாய் வருந்துகின்றார்கள். இவர்க டைய கஷ்டங்கள் ஒருவாறு நீங்க இவர்கள் மத்தியில் ஒரு கோவில் கட்ட தீர்மானித்திருக்கிறே இக்கட்டிடம் துவக்கினால், இச்சனங்களுக்கு சிறிது காலமாகிலும் வேலையும் கூலியும் கிடைக் மென்பதற்கு ஐயமில்லை. ஆகவே, இதனை வாசிக்கும் நண்பர்களே! தர்மிஷ்டர்களே! கனதனவா களே! இவ்வேழை மக்களை ஆதரிக்க முன்வாருங்கள். நீங்கள் அளிப்பது "தினைத்துணையாயினு பனைத்துணையாகப்" பயனடைவீர். ஏழைகளின் பரம பிதாவாகிய சர்வேசுரன் ஒன்றுக்கு நூ கச் சம்பாவனை அளிப்பாரென்பது திண்ணம்.

Mr. Daniel, Rs. 5; S. A. D. Manager (Well), Rs. 2; Mr. P. S. Lourdusamy Nayager, Rs. 5 Mr. Gnanapragasam, Rs. 1; Mr. M. S. Lazarus (K. G. F.) Rs. 10; Total Rs. 23-0-0.

PETER ALOYSIUS, விசாரணைக் குரு. செங்கல்பட்டு.

SEP 1921

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11-16).

புத்தகம் 19. செப்டெம்பர் 1921. இலக்கம் 9.

EXALTATION OF THE HOLY CROSS.

திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாள்.

நமது திவ்ய கர்த்தாகிய சேசுக்கிறீஸ்து நாதர் மரித்து உயிர்த்தபின், அவர் செய்த அதிசயங்களையும், அவர் மரிக்கும்போது நடந்த புதுமைகளையும், அவர் மரித்த மூன்றாம் நாள் உயிருடன் எழுந்ததையும், நாற்பதாம் நாள் எண்ணிறந்த ஜனங்களுக்குமுன் அவர் பரலோகத்துக்கு ஆத்தும சரீரத்துடன் எழுந்தருளினதையும், அவர் பேரால் அப்போஸ்தலர்களும் விஸ்வாசிகளும் அனேக அதிசயங்களை செய்ததையுங்கண்ட யூதர் பிரமித்து திகைத்தார்கள். மேலும் சேசுநாதர் ஸ்தாபித்த புது வேதம் பிரபலியமானால் தங்கள் மதம் அழிந்துபோகுமென்றஞ்சி, இப்புது வேதத்தை முற்றிலும் அழிக்க எண்ணங்கொண்டு, அப்போஸ்தலர்களைப் பிடித்து சிறைப்படுத்தி, அவர்களை யடித்துத் தூஷணித்து, கிறீஸ்து நாதருடைய பெயரைக் குறித்துப் பேசாதபடிக்குத் தாக்கீதுசெய்தார்கள். அப்போஸ்தலர்கள் தங்கள் தாக்கீதை அலக்ஷியஞ்செய்வதை யூதர் கண்டு, கோபாவேசங்கொண்டு, அவர்களில் சிலரைக் கொலைசெய்து, புதுக் கிறீஸ்துவர்களையும் பலவிதத்திலும் நெருக்கிடைசெய்து, உபாதித்துக் கொன்றார்கள்.

கர்த்தர் அறையுண்ட திருச்சிலுவை மகா பூச்சியமாய் வணங்கப்பட்டுவந்ததினால் ஆழமான ஒரு பள்ளம் வெட்டி, அதில் நமது கர்த்தர் பாடுப்பட்டு மரித்த சிலுவையையும், கள்ளர்கள் இருவரும் மரித்த சிலுவைகளையும் புதைத்துவிட்டு, அதனமேல் பெரும் மண்குவியலைப்போட்டு, அதை ஓர் உயர்ந்த குன்றாக்கிவிட்டார்கள். சில வருஷங்களுக்குப்பின் பொய் வேதக்காரர் அந்த மேட்டின்மேல் தங்கள் தேவர் பேரால் ஒரு கோவிலையுங் கட்டி யெழுப்பினார்கள்.

புதிதாய் உண்டான வேதத்தை யடியோடழிக்க யூதர் பட்ட பிரயாசை சபலமாயிற்று. அரசரும் சக்கரவர்த்திகளும் அந்த வேதத்தை முற்றிலும் தொலைத்துப்போடுங் கருத்துடன், அதில் சேர்ந்தவர்களை வாளால் வெட்டியும், நெருப்பிலேபோட்டு சுட்டெரித்தும், துஷ்டமிருகங்களுக்கு இரையாக்கியும், கடலில் எறிந்தும், சித்திரவதைசெய்தும் கொன்றார்கள். புது வேதமோ, அழியாமல் நாளுக்கு நாள் செழித்தோங்கி பிரகாசித்துவந்தது.

300 வருஷங்களாக உரோமைச் சக்கிரவர்த்திகளால் கூடிய முயற்சியெல்லாம்

செய்தும், அந்த வேதத்தை வேரோடு பிடுங்கிப்போட தலைப்பட்டும், அவர்களால் அது இயலாமற்போனது. 3-ம் நூற்றாண்டில் உரோமை இராஜ்ஜியங்களை யாண்டு வந்த தைரிய இராயனென்றழைக்கப்படும் கான்ஸ்டான்டைன் என்னும் சக்கரவர்த்திக்கு அற்புதமாய்க் காணப்பட்ட திருச்சிலுவை அவரைச் சத்திய வேதத்தில் சேர உடன்படுத்தியது. தனக்குமுன் அரசுபுரிந்த சக்கரவர்த்திகள் கிறீஸ்துவர்களுக்கு விரோதமாய் விளம்பரப்படுத்தியிருந்த இராஜ சட்டங்களை இரத்துசெய்து இஷ்டமுள்ளவர்கள் கிறீஸ்துவர்களாகலாமென்று அறிக்கைசெய்தார்.

இதற்குப்பின் இந்த நல்ல இராயன் திருச்சிலுவையின்பேரால் ஒரு கோவில் கட்ட தீர்மானித்து, கர்த்தர் பாடுபட்ட திருச்சிலுவையைத் தேடி அதைக் கொண்டு வரும்படி தமது தாயாராகிய எலேனம்மாளுக்கு உத்தரவுகொடுத்தார். அவ்வாறே இப்புண்ய இராணி ஜெருசலேமுக்குப் பிரயாணஞ்செய்து, அபரிமிதமான திரவியத்தைச் செலவிட்டு, அக்கியான கோவிலை யிடித்து, பிரமாண்டமான குன்றையும் வெட்டித் தரைமட்டமாக்கி, ஆழமான குழியில் புதைபட்டிருந்த மூன்று சிலுவைகளையும் தோண்டி எடுக்கச்செய்தாள்.

அந்த மூன்று சிலுவைகளில், கர்த்தர் அறையப்பட்டது எதுவென்று அறியக்கூடாமையாயிருந்ததால், ஒரு புண்யவாளருடைய ஆலோசனைப்படி அந்நகரில் மரணமான ஒரு ஸ்திரியின் பிரேதத்தின்மேல் இச்சிலுவைகள் ஒன்றின்பின் ஒன்றாய் வைக்கப்பட்டன. மூன்றாவது சிலுவையை பிரேதத்தின்மேல் வைத்தக்ஷணமே, அதற்கு உயிர்வந்தது. இவ்வற்புதத்தால், அதுவே கர்த்தர் அறைபட்ட திருச்சிலுவையென்று தெரியவந்தது. பிறகு அத்திருச்சிலுவையை எலேனா இராணி பூச்சியமாய்க் கொண்டுபோய் தன் குமாரனுக்குக் கொடுத்தாள். அவரும் அதைப் பெற்றுக்கொண்டு தாம் கட்டிவைத்த பிரமாண்டமான சிலுவைக் கோவிலில் அதை ஸ்தாபித்தார். கிறீஸ்துவர்களும் அதை மகா பூச்சியத்துடன் வணங்கிவந்தார்கள்.

6-ம் நூற்றாண்டில் கோழைத்தனமும் குரூரகுணமுமுள்ள போரேஸ் என்னும் சக்கரவர்த்தி உரோமை இராஜ்ஜியங்களை அநியாயமாக அபகரித்து, அவ்விராச்சியங்களில் அரசுபுரிந்துவந்தான். இவனுடைய புத்தியீனத்தையும் துர்க்குணங்களையும் அறிந்திருந்த பெர்சியா தேசத்தின் இராயனான 2-ம் கோஸ்ரோஸ் என்பவன் உரோமை இராச்சியங்களின்மீது படையெடுத்து, அனேக பட்டணங்களைப் பிடித்துக் கொள்ளையடித்து, சுட்டெரித்தான். உரோமைச் சேனா சங்கத்தாருடையவும், அதிபதிகளுடையவும் வேண்டுகோளின்மேல் எராகிளியஸ் இராஜ அபிஷேகம் பெற்று, குரூரகுணமுடைத்தான போகாசுடன் போர்பொருதி, அவனை ஜெயித்தடக்கியபின், பெர்சிய இராயனிடம் ஸ்தானாதிபதிகளை அனுப்பி சமாதான உடன்படிக்கைசெய்ய முயற்சித்தார். துஷ்டனும், குரூரகுண முடைத்தானவனுமான கோஸ்ரோசோவெனில் கருவத்தால் பொங்கி, ஸ்தானாதிபதிகள் தன் முன்னிலையில் வரச் சம்மதியாமல் உரோமை இராச்சியங்களின்மீது படையெடுத்து ஊர் ஊராய்ப் பிடித்துக்கொள்ளையடித்து, அவைகளை நெருப்பால் பாழாக்கி, கிறீஸ்துவர்களை அற்ப ஈவிரக்கமின்றி வாளுக்கிரையாக்கினான். மேலும் தான் கொண்ட ஜெயத்தால் அகங்கரித்து, ஜெருசலேமுக்கு முற்றிகையிட்டு, கிறீஸ்துவர்களை நாவால் கூறக்கூடாதவிதமாக உபாதித்து, அட்டூழியங்களைச்செய்து, ஆயிரக்கணக்கான குருக்கள், கன்னியர் முதலிய தேவ ஊழியரையும், கணக்கில்லாத வங்கிஷபதிகளையும், பிரஜைகளையும் குரூரமாய்க் கொன்று 90,000 பேரை யூதருக்கு அடிமைகளாக விற்று, வேறு அநேகாயிரம் பேரைச் சிறைப்படுத்தி, தன் தேசத்துக்குக் கொண்டுபோனான். இவர்களுக்குள் பிதாப்பிதாவாகிய சக்காரி என்பவர் ஒருவர். இத்துடன் அந்தச் சண்டாளப் பாவி திருப்திகொள்ளாமல், ஜெருசலேமிலுள்ள தேவாலயங்களைக் கொள்ளையாடி, சுட்டெரித்துத் திருப் பண்டங்களையும் அசுசியப்படுத்தத் துணிந்தான். திருச்சிலுவைக் கோவிலையும் இடித்து, அதிலிருந்த திரண்ட திரவியத்தையும், பொருத்தனைப் பண்டங்களான ஏராளமான பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள் முதலியவற்றையும் அபகரித்து, திருச்சிலுவையை எடுத்துக்கொண்டு, பிடிபட்ட கிறீஸ்துவர்களுடன் தன் தேசத்துக்குப் புறப்பட்டான்.

புதிதாய் சக்கரவர்த்தியாகத் தெரிந்துகொள்ளப்பட்ட எராகிளியஸ் இராயர் உரோமை இராஜ்ஜியத்துக்கும், விசேஷமாக திருப்பட்டணத்துக்கும் நேர்ந்த அபரிமிதமான நஷ்டங்களையும் அவமானத்தையுங் கண்டுதுக்கங்கொண்டுஜெபதபத்தாலும்ஒருசந்தி உபவாசத்தாலும் கண்ணீர் அழுகையாலும் தேவஉதவியை மன்றாடி, ஒரு சிறுபடையைச் சேகரித்தார். பார்சீய தேசத்தின் மீது படையெடுக்க சகல முஸ்திப்புஞ் செய்தபின், இப்புண்ய இராயர் தன் படைக்கு முன் நின்றுகொண்டு, தேவதுரோகியான கோஸ்ரோசால் உரோமை இராஜ்ஜியங்களுக்குண்டான பெரும் நஷ்டங்களையும், உயிர்ச்சேதங்களையும், அட்டூழியங்களையும், தேவதுரோகங்களையும் அவர்களுக்கு விவரமாய் எடுத்துரைத்தார். பிறகு எராகிளியஸ் இராயர் கர்த்தருடைய திருப்படத்தை ஒரு கையிலும், பட்டயத்தை வேறு கையிலும் பிடித்துக்கொண்டு இவ்வாறு மொழிவார்: "நண்பர்களே! இப்பேர்ப்பட்ட பாவாக்கிரமங்களைக் கட்டிக்கொண்ட சத்துருவுடன் போர்பொருதி, திருச்சிலுவையை மீட்கும்படி என்னிரத்தத்தைச் சிந்தி உயிரிழக்கத் தயாராயிருக்கிறேன். நீங்களும் என்னைப் பின்செல்வீர்களாக" என்றதைக் கேட்ட சேவகர் உற்சாகங்கொண்டு இராயனைப் பின்சென்றுபோய்ப் புலிகளைப்போல் சத்துருக்கள்மீது தைரியத்துடன் பாய்ந்து ஜெயங்கொண்டு, ஒவ்வொரு பட்டணத்தையும் பிடித்து சத்துருக்களைப் பின்னடையும்படிச் செய்தார்கள். கோஸ்ரோஸோ இப்பெருந் தோர்வையால் அவமானமும் வெட்கமுங்கொண்டு, தன் பெண்சாதி பிள்ளைகளுடன் ஒரு வீட்டில் ஒளிந்துகொண்டிருக்குஞ் சமயத்தில், அவனுடைய சிரேஷ்ட குமாரனால் நிஷ்டூரமாயுபாதித்துக் கொல்லப்பட்டான். இவ்வாறு மாண்ட கோஸ்ரோஸின் மூத்த குமாரன் இராஜமுடி தரித்துக்கொண்டு, எராகிளியுஸ் இராயருடன் சமாதான உடன்படிக்கைசெய்து, குரூரனான தன் தகப்பன் பிடித்த உரோமை இராஜ்ஜியங்களைத் திரும்பக் கொடுத்துவிட்டு, சிறையாக்கப்பட்ட கணக்கில்லாத கிறீஸ்துவர்களை விடுதலைசெய்து, ஜெருசலேமிலிருந்து கொண்டுவரப்பட்ட திருப்பண்டங்களையும் திருச்சிலுவையையும் எராகிளியஸ் இராயனுக்குக் கையளித்தான்.

எராகிளியஸ் இராயரோ சர்வேசுரன் தமக்குக் கட்டளையிட்ட இவ்வற்புத ஜெயத்துக்காக அவருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செலுத்தி, தன் படையோடும், சிறையினின்று மீட்கப்பட்ட கிறீஸ்துவர்களோடும் மிக்கச் சந்தோஷ மகிழ்ச்சியுடன் தன் தேசத்துக்குத் திரும்பிப்போனார். தன் இராஜ நகரமாகிற கொன்ஸ்தாந்திநோபளிக்குப் போய்ச்சேர்ந்து, சர்வேசுரன் தமக்குப் புரிந்த உபகாரங்களுக்கு நன்றியறிதலாக ஓர் பெரும் திருநாளைக் கொண்டாடினார்.

629௵ எராகிளியஸ் இராயர் திருச்சிலுவையை ஜெருசலேமுக்குக் கொண்டுபோய், அதைச் சிலுவைக் கோவிலில் ஸ்தாபிக்க இராஜபீதாம்பரங்களையும், விலையுயர்ந்த ஆடையாபரணங்களையும் தரித்துக்கொண்டு தலையில் முடிபூண்டு, பிதாப்பிதா, மேற்றிராணிமார், குருக்கள், ஏராளமான பிரஜைகள் ஆகிய இவர்களால் புடைசூழப்பட்டவராய் திருச்சிலுவையைத் தமது தோள்மேல் சுமந்துகொண்டுசெல்லப் புறப்பட்டார். ஆனால், என்ன அதிசயம்! எராகிளியஸ் இராயர் ஒரு அடிமுதலாய் எடுத்துவைக்கக்கூடாதவராய் மலைப்புற்று நின்றார். அப்போது அருகாமையில் நின்றுகொண்டிருந்த பிதாப்பிதாவாகிய சக்காரி யென்பவர் இராயனை நோக்கி: இராஜேந்திரனே! நமது திவ்ய கர்த்தர் சிலுவை சுமந்ததற்கும், நீர் அதை சுமப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம்!! அவர் நிந்தை யவமானத்துடன் இந்த வீதியில் சிலுவையைச் சுமந்துசென்றார். நீரோ ஒட்டோலக மகிமையுடன் அதைச் சுமக்கிறீர். அவர் முள்முடியுடன் நடந்தார். நீரோ மகுடந்தரித்து நடக்கிறீர். அவர் வெறுங்காலால் நடந்தார். நீரோ பாதரட்சைதரித்து நடக்கிறீர். அவருடைய சிலுவையைச் சுமக்க ஆசிப்பீராகில், அவரைக் கண்டுபாவிப்பீராக, என்றார்.

உடனே இராயன் தமது இராஜ உடைகளைக் களைந்துவிட்டு, முடியைக் கழற்றிவிட்டு, பாதரட்சையின்றி திருச்சிலுவையைத் தம் தோளின்மேல் சுமந்துகொண்ட மாத்திரத்தில் அந்தச் சிலுவை கோவிலுக்கு யாதோர் தடையுமின்றி நடந்துபோய் அதில் அதைப் பூச்சியமாய் ஸ்தாபிக்கலானார். இந்த அற்புத சம்பவத்தின் ஞாபகமாக செப்டம்பர் 14௳யில் திருச்சிலுவை உயர்த்தப்-

பட்ட திருநாள் கொண்டாடப்பட்டுவருகிறது.

உரோமையர் இராஜ்ஜியபாரஞ் செய்த காலத்தில், மரணத்துக்கினைக்குரிய குற்றஞ்செய்தவர்களை சிலுவையில் அறைந்து கொல்வார்கள். ஆகையால், சிலுவையை அவர்கள் நிந்தனை யவமானத்துக்குரிய ஆயுதமாக எண்ணிவந்தார்கள். ஆனால் நமது திவ்ய கர்த்தர் சிலுவையிலறையுண்டு பாடுபட்டு, அதைத் தமது திருவிரத்தத்தால் அர்ச்சித்து, நரகத்தை ஜெயித்து மோட்ச வாசலைத் திறந்தபடியால், சிலுவையானது அதுமுதல் பூச்சியத்துடன் வணங்கப்பட்டுவருகிறது. அரசர் சிலுவையைத் தங்கள் கிரீடத்தில் மாணிக்கத்தைப்போல வைத்துக்கொள்ளுகிறார்கள். கிறீஸ்துவர்களும் அதை ஒரு சிறந்த ஆபரணமாகப் பூச்சியத்துடன் தரித்துக்கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு கோவிலின் முகப்பிலும் சிலுவையானது சுக்கிரன்போல் பிரகாசிக்கிறது. மேலும் திருச்சபையில் கொடுக்கப்படும் தேவத்திரவிய அனுமானங்களிலும், திருச்சடங்கு சாங்கியங்களிலும் திருச்சிலுவை அடையாளம் பல முறை உபயோகப்பட்டுவருகிறது.

கடைசியாய், பொதுத்தீர்வை நாளில், இறந்துபோன சகல மனிதரும் உயிர்த்துத் தங்கள் பாவ புண்யங்களுக்குக் கணக்குக் கொடுக்க இருக்கையில், சேசுநாதர் மேக சிம்மாசனத்தின்மீது எழுந்தருள, அவர் பாடுபட்ட திருச்சிலுவை அவருக்குமுன் காணப்படுமென்று சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், நாம் திருச்சிலுவை யடையாளத்தைப் பக்தி விஸ்வாசத்துடன் நமதுபேரில் வரைந்துகொண்டும், அதைக் கண்ணால் பார்க்கும்போது, அதனால் நமக்கு ஆறுதலும் சமாதானமும் இரட்சண்யமுங் கிடைக்குமென்று உறுதியாக நம்பியும், நாம் உயிர்விடும்போது பக்தி உருக்கத்துடன் அத்திருச்சிலுவையை முத்திசெய்தும் பாக்கியமான மரணமடைய சிலுவையில் பாடுபட்டு மரித்த நமது ஆண்டவரைப் பிரார்த்திப்போமாக.

அர்ச்சியசிஷ்டவர்களெல்லோரும் வெகு உபத்திரவம் இடுக்கண்களையுந் தந்திர சோதனைகளையும் அனுபவித்துப் புண்ணியத்தில் விருத்தியாகி அதனால் பிரயோசனமடைந்தார்கள்.

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.)

CATHOLICS AND GOOD MANNERS.

கத்தோலிக்கரும் நல்லொழுக்கமும்

சென்னையில் அனேக கத்தோலிக்குக் கிறீஸ்துவ தாய் தந்தையர்கள் பிள்ளைகளை வளர்ப்பதெப்படியென்று அறியாத குறையால், எத்தனையோ பிள்ளைகள் படிப்பும் நல்லொழுக்கமுமின்றி வீதிகளில் நாள் முழுமையும் திரிந்து அலைந்து கெட்டுப்போகிறார்கள். அநேக கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் நன்றாய்க் கஷ்டப்பட்டு சர்வேசுரனுடைய கிருபையினால் ஏராளமாய்ச் சம்பாதித்தும், குடியிலும், விபசாரத்திலும் இன்னும் பல வீண்செலவுகளிலும் அழித்துவிடுகிறார்கள். நல்ல வழியில் செலவு செய்யும்படியான புத்தி இவர்களுக்கு கிஞ்சித்தேனும் கிடையவே கிடையாது.

பிள்ளைகளுக்கு பகுத்தறிவு உண்டான பிறகு அவர்களைப் பள்ளிக்கூடத்திற்கு, அதாவது கத்தோலிக்குப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவைக்க வேண்டியது. எறக்குறைய எழுத, வேத புஸ்தகங்களை வாசிக்க அறியும்படி பார்க்கவேண்டியது. இப்படிச் செய்யாமல் சேரிகளிலிருக்கும் கத்தோலிக்குக் கிறீஸ்துவ பெற்றோர்களில் சிலர், குடியராகவும், விபசாரிகளாகவுமிருந்து தங்கள் பிள்ளையையும் துர்ப்பழக்கத்தில் வளர்க்கிறார்கள். ஆ! இது என்ன பரிதாபமான விஷயம். கிறீஸ்துவ சகோதரர்கள் இவ்விதமாய் அறிவில்லாத பெற்றோர்களால் கெட்டுப்போகின்றார்கள். இப்படிப்பட்டவர்களுக்குப் பெற்றோரென்கிற பெயர் தகுமா? நாங்கள் ஏழை எளியவர்கள், எங்களால் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பமுடியாது என்கிற சாக்குப்போக்கு இக்காலத்தில் கொஞ்சமேனும் செல்லாது. ஏழை எளியவர்களென்று சொல்லி மதுபானம் அருந்தாமலும், விபசாரம் செய்யாமலும் அபிநயசாலைக்குக் குடும்பத்தோடு சென்று வீண்செலவு செய்யாமலும் இருக்கின்றார்களா? ஒருபோதுமில்லை.

உயர்தரக் கல்வியைப் படிப்பிக்க எல்லாராலும் சாத்தியப்படாதுதான்; அது எல்லாருக்கும் அவசரமுமில்லை. ஆனால் தாய்ப் பாஷையிலாவது வாசிக்கவும் எழுதவும் கற்றிருப்பது யாவருக்கும் அத்தியாவசியம்; இது யாவரும் எளிதில் கற்றுக்கொள்ளக்கூடியது. சேரியில் வசிக்கும் கத்தோலிக்குக் கிறீஸ்துவ தாய்தந்தையர்கள் எப்பொழுதுதான் தங்கள் பிள்ளைகளாகிய என் சகோதரர்களுடைய கல்வியின் அவசரத்தைக் கண்டுணர்வார்களோ தெரியவில்லை!! பிள்ளைகளைப் படிக்கவைப்பது பெற்றோர்மேற் சுமந்த பெருங் கடமைகளில் பிரதானமானதொன்று. ஓர் நாள் சர்வேசுரன் பெற்றோர்களைக் கணக்கு கேட்பாரென்பதை அவர்கள் மறந்துபோகலாகாது. இந்தக் கடமை எவ்வளவு முக்கியமானதென்பதைப்பற்றி இவர்கள் கொஞ்சமேனும் உணர்கிறதில்லை. மனிதருடைய ஆத்தும சரீர நன்மைகளுக்குப் படிப்பினால் உண்டாகும் நன்மை இவ்வளவு அவ்வளவென்று கிறீஸ்துவ தாய் தந்தையர்கள் கிஞ்சித்தேனும் கணித்துப் பார்ப்பதுமில்லை. "கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்றபடி படிப்பினால் அடையக்கூடிய பிரயோசனங்கள் பலவாயினும், பின்கண்டுள்ளவைகள் பிரதானமானவையாகும்:—

1. வாசிக்கத் தெரிந்தவர், ஆத்தும இரட்சணியத்தைப்பற்றிய யாவும் எளிதில் புஸ்தகங்கள் வழியாய் அறிந்துகொள்ளலாம்;

2. சரித்திரங்களையும், பக்திக்குரிய பத்திரிகைகளையும் வாசிப்பதினால், புண்ணியவழியில் நடக்கத் தைரியமும், தீயவழியிற் பிரவேசியாதிருப்பதற்கு வேண்டிய விமரிசையும் அடைந்துகொள்ளலாம்;

3. இவர்களுக்கு வேதசத்தியங்களை விளக்கிக்காட்டுவதும் இலகுவாயிருக்கும். வாசிக்கப் படிக்கத் தெரியாததினால் கத்தோலிக்கு கிறீஸ்துவ பிள்ளைகளுக்கு குருவானவர்களால் வேத விஷயங்களைகற்றுக்கொடுப்பது மகா கடினமும் பிரயாசையுமாயிருக்கிறது.

4. இலௌகீக விஷயங்களிலும் நன்மை அடைவதற்குக் கல்வி வெகு பிரயோசனமானதென்பதை விஸ்தரித்துரைக்கவேண்டிய அவசியமில்லை. எனெனில், படிப்பின்றி கண்ணியமாய் வாழக்கூடிய காலம் இதுவல்ல. தன் மரியாதையைக் காப்பாற்ற விரும்பும் பிள்ளைகள் இக்காலத்தில் கொஞ்சமாகிலும் கல்வி கற்றிருப்பது அகத்தியம்.

"மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற விடமெல்லாஞ் சிறப்பு."

என்பதாகப் பாடியிருப்பது உண்மையிலும் உண்மையென்கினும், இக்காலத்தில்

"மன்னனுக்குத் தன்றேசத்தில்முதலாய்
கல்வியில்லர் தாயின் சிறப்பில்லை."

என்பதேதகும்.

இது இவ்விதமிருக்க, அறிவில்லாத பெற்றோர்களினால் ஏற்கெனவே கெட்டுப்போன பிள்ளைகள் கெட்ட பிள்ளைகளோடு சிநேகிதம் செய்து முற்றிலும் கெட்டு, எக்காலமும் துன்பத்தில் வாழ்கிறார்கள்.

பிள்ளைகள் நல்லவரின் சேர்க்கையினால் இன்பமும், தீயவருடைய சேர்க்கையினால் துன்பமும் அடைவார்களென்பதை மறந்துப் போகப்படாது. "நல்லாரோடிணங்கியிரு" என்பது போல நல்லவர்களைச் சார்ந்து சிநேகமாயிருக்க வேண்டியது. "தீயாரோடிணங்கியிருப்பது தீது" என்றபடி தீயவரை நோய்போல், அல்லது நாகப் பாம்பைப்போலெண்ணி விலக்கிவிட வேண்டியது. "கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்து முழம், வெம்புகரிக்காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி தீங்கினர்தங் கண் தெரியாத தூரத்து நீங்குவதே நல்ல நெறி" என்றும் நீதி நூல் சாற்றுகின்றது. நல்ல கிறீஸ்துவர்களுக்குத் தன்னைச் சார்ந்தவர்களைக் கெடுக்க வேண்டுமென்ற எண்ணம் ஒருபோதும் கிடையாது. சமயம் வாய்த்தபொழுது நன்மையைச் செய்துகாட்டிச் செய்த குற்றத்தை உணர்த்துவார்கள்.

சில கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள்—அதாவது சேரியிலிருக்கும் அஞ்ஞானிகளோடு வாசஞ் செய்வோர்கள்—வீடுகளில் அசுத்தவார்த்தைகளை வெகு சாதாரணமாய் உபயோகப்படுத்தி வருகின்றார்கள். சந்தோஷமாயிருக்கும்பொழுது ஒரு கெட்ட பேச்சு, விசனமாயிருக்கும்பொழுது ஒரு கெட்ட பேச்சு, கோபமாயிருக்கும்பொழுது ஒரு கெட்ட பேச்சு. இவர்கள் தங்கள் ஊற்றை வாயைத் திறந்து கக்கும் உதாசினங்களைக் காது கொடுத்துக் கேட்கமுடியாது. இப்படிப்பட்ட கிறீஸ்துவர்கள் குடித்தபிறகோ—அவர்கட்கு முறை துறையென்பது கிடையவே கிடையாது.

கடவுளைப்பற்றிக் கடுகளவுங் கருதார்களாயினும், அண்டை வீட்டார் என்ன சொல்லுவார்கள் அல்லது என்ன நினைப்பார்களென்று கொஞ்சமேனும் நினைக்கிறதுமில்லை. குடியினால் சேரியில் வசிக்கும் கிறீஸ்துவர்களின் வீட்டில் இராக்காலங்களில் சண்டை சச்சரவுகள் மும்முரமாகிறது. போலீஸ்காரர் முதலாய் அவைகளெல்லாம் சேரியில் வசிக்கும் நாமதேயக் கிறீஸ்துவர்களுக்குச் சாதாரணமானவையென்று அவ்விஷயங்களில் தலையிடுகிறதில்லை. இப்படிப்பட்ட கிறீஸ்துவர்கள் வீட்டில் உபயோகிக்கிற அஞ்சாச வார்த்தைகளைப் பிள்ளைகள் பல தடவை கேட்பதினால் அவைகளைத் தாங்களும் உபயோகப்படுத்தத் தலைப்படுகிறார்கள். ஆ! இது என்ன நிர்ப்பாக்கியம்!! நல்ல கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களாய் ஜீவிக்கவேண்டும் என்ற எண்ணம் யார் யாருக்குண்டோ அன்னவர்கள் அத்தகையான இடங்களை வெறுத்துத் தள்ளி நல்லவர்கள், உத்தமர்கள், யோக்கியர்கள் மத்தியில் குடியேறவேண்டும். வாடகை இரண்டு ரூபாய் அதிகமானாலும் பரவாயில்லை. நல்லவர்கள் மத்தியில் ஜீவித்துவந்தால் "பூவோடு கூடிய நாரும் மணம் பெறும்" என்னும் பழமொழியின்படி நாமும் அவர்களுடைய நல்லொழுக்கத்தைக் கண்கூடாய் கவனித்துப்பார்க்க நமது நடத்தையில் மாற்றமுண்டாகும்.

அநேக கிறீஸ்துவர்கள் பிறரைக் காணாத விடத்தில் அவர்மீது குறைகூறி அவரை இழிவாகப் பேசுவதையே பெரும் வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களென்று வெளிவேஷம்போடுகிறார்கள். இப்படிப்பட்ட இவர்களைக் கள்ளக் கிறீஸ்துவர்கள், வேஷக் கிறீஸ்துவர்கள் என்றே சொல்லவேண்டும். இப்படி அன்னியர்களைப் பழிக்கின்றவர்கள் குற்றமற்றவர்களோ வென்றால், அவர்களிடத்தில் எவ்வளவோ ஆசாபாசங்கள் குடிகொண்டிருக்கின்றன. தன் குற்றமுணரும் புத்திமான்கள் பிறரை ஒருபோதும் நிந்திக்கமாட்டார்கள். அவ்வாறின்றி படிப்பில்லாத மூடன் படித்தோனை நோக்கிப் "படிப்பில்லாதவன்" என்றும், வாயாடித்தனமாகப் பேசுகிறவன் வேறொருவனை "வாயாடி" என்றும், துர்க்குணன், நற்குணமுடையோனை "துர்க்குணன்" என்றும், புறங்கூறித் திரியலாகாது.

> "பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
> மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர் பிறர்
> சீரெல்லாந் தூற்றிச் சிறுமைப் புறங்காத்து
> யார் யார்க்குந் தாழ்ச்சி சொலல்"

என்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

எப்பொழுதும் பிறரிடமுள்ள நற்குணங்களையே எடுத்துப்பேசுகிறதுதான் சத்திய வேத கிறீஸ்துவர்களாகிய நமக்கு அழகு.

குடியென்பது, சேரியில் வசிக்கும் அநேக கிறீஸ்துவர்களைத் தன் வசப்படுத்தி, விபசாரத்தில் பிரவேசிக்கச்செய்து, பெரியோரென்றும் சிறியோரென்றும், கற்றோரென்றும், மூடரென்றும், பாராமல் அனைவரையும் கெடுத்து நாசப்படுத்திவருவதை அறிந்திருக்கின்றோம். இதனால் வருவனவெல்லாம் நஷ்டமேயாம். சரீர நஷ்டம், செல்வநஷ்டம், மானநஷ்டமாகிய இவைகளாம். அநேகர் தரித்திரர்களாயும், ஒழுக்கக்குறைவுள்ளவர்களாயும், யாவராலும் இகழப்படுகிறவர்களாயும், இருப்பதற்குக் காரணம் குடியே யாகும். நாம் பார்த்துவந்திருக்குமாப்போல் எத்தனையோ பணக்காரர்கள், படித்தவர்கள், படியாதவர்கள் பெரிய உத்தியோகஸ்தர்கள், அப்போதைக்கப்போது தனவந்தர்களாய்த் தோன்றி குடியென்னும் மிடியின்வசப்பட்டு வீணே கெட்டார்கள். எத்தனையோபேர் விசேஷமாய்ச் சேரியில் வசிக்கும் கிறீஸ்துவர்களில் அநேகர் தங்கள் நல்லசம்பாதனையைக்கொண்டுநாலுபேர் பார்த்து நல்ல யோக்கியமாய் வாழ்ந்து பிள்ளைகளை நற்பயிற்சியில் வளர்க்காமல் குடியில் இறைக்கின்றார்கள். குடிகாரன் உள்ள எந்தக்குடித்தனம் உருப்பட்டிருக்கிறது? குடியன் மதுபானத்தினால் தன்னையே மயக்கிக்கொள்ளுகிறான். தன்னை மயக்கிக்கொண்டு தான் இன்னானென்று அறிய சக்தியற்றவன், சர்வேசுரனைப்பற்றி யறிவதெங்ஙனம்? இவர்களா கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள்? குடியன் தன் பெண்சாதி பிள்ளைகளைக் கவனிக்கிறதில்லை. இதனால் மதுபானி குடும்பஸ்தனல்லவென்று யாதொரு சந்தேகமில்லாமல் சொல்லலாம். குடிகாரன் கீழ்ச்சாதியான்! அவனுடைய கீழ்ச்சாதியிலும் கேடுகெட்ட கீழ்ச்சாதியான் ஒருவருமில்லை. கேவலம், குடிகாரன் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பாயிருக்கின்றபடியால், அவன் வீட்டில் உண்பன தின்பன வைத்துக்கொள்ளவாவது, கொள்ளக் கொடுக்கவாவது

இருந்தால் ஜாதி முற்றிலும் கெட்டுப்போகும். குடிகாரருடைய சம்பாத்தியமெல்லாம் பெண்சாதி பிள்ளைகளுக்குச் சொந்தமல்ல; ஆனால் சாராயக் கடைக்காரனுக்கும், கள்ளுக்கடைக்காரனுக்குமே சொந்தம். ஓ! குடிகாரர்களே மதுபானிகளே! குடிக்கிறதற்காக நீங்கள் தொலைக்கும் பணத்தால் நீங்களும், உங்கள் மனைவிமக்களும், ஏன் நன்றாய்ச் சாப்பிட்டு, சுத்தமாய் உடுத்தி நாணயமாய் ஜீவிக்கக்கூடாது? வேண்டாம்! கனவான்களே, இன்னும் கெடுபுத்தி வேண்டாம். ஒரே கண்டிப்பாய் குடியென்னும் துர்ப்பழக்கத்தை உங்களிடமிருந்து விரட்டியோட்டி, என் சகோதரர்களாகிய உங்களுடைய பிள்ளைகளின் கல்வியைப்பற்றி யோசித்துப் பார்ப்பீர்களென்று நம்புகிறேன்.

மனமுண்டானால் வழியுமுண்டு. மனமில்லாவிட்டால்தான் இல்லாத சாக்குப் போக்குகளெல்லாம் புறப்படும். இதற்குமேல் உங்களுடைய இஷ்டம்.

M. A. Dasan.

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

11-ம் அதிகாரம்.

உண்மையான தடை — அத்தடையை முறிக்க அர்ச். மோனிக்கம்மாள் சுசீலத்துடன் எடுத்துக்கொள்ளும் அரும் பிரயாசைகள்—அகுஸ்தீன் ஆத்துமத்தில் விசுவாசத்தின் உதயம்.

(முன் தொடர்ச்சி.)

பிளாட்டோ இவ்வளவு காரியங்களை யறிந்தபிறகு, பூர்வ ஜனங்களின் வாசஸ்தலங்களுக்கும் போய், அவர்களுடைய கோவில்களைச் சந்தித்து, அவர்களுடைய குருக்களோடு சம்பாஷணைசெய்து, ஐதிக ஞாயங்களை மனஞ்சலிக்குமட்டும் படித்து, அவைகளுடைய உள்ரகசியங்கள் யாவையும் உணர்ந்தறிந்து, மாறுபட்டுப்போன மத சம்பிரதாயங்களை யாராய்ந்து, அவைகளின் பிரதம ஆதாரங்களைக் கண்டுகொண்டான். இப்படியாகத் தான் அடைந்த அநுபவஞானத்தினால் திடங்கொண்டு, ஆத்தும காரியங்களை எவ்வளவு ஆழ்ந்த கருத்துடன் விசாரணைசெய்தானென்றால், திருச்சபையின் வேதபாரகர்கள் அவனது பிரபந்தங்களைப் படித்து வியந்து, அவனை என்ன பெயரிட்டழைப்பதென்று தெரியாமல் திகைப்பார்கள். சிலர் அவனை அஞ்ஞான மோயீஸன் என்றும், சிலர் கர்த்தரால் ஏவப்பட்ட தீர்க்கதரிசியென்றும், சிலர் மரண நிழலில் உட்கார்ந்திருக்கும் சாதி ஜனத்திற்குச் சுவாமியால் அனுப்பப்பட்ட தேவதூதனென்றும், அனைவரும் தெய்வீக பிளாட்டோவென்றும் சர்வ சம்மதமாய் வந்தித்து வாழ்த்துவார்கள்.

அகுஸ்தீன் பிளாட்டோ எழுதிய புஸ்தகங்களை வாசித்தவரல்ல. ஏனென்றால் அவருக்கு கிரீக்கு பாஷை நன்றாய்த் தெரியாது. ஆயினும் பிளாட்டோவின் அபிப்பிராயங்களைச் சிஸரோ மூலமா யறிந்திருந்தார். கடவுள் சடப்பொருளும் ஆவியும் சேர்ந்த ஒரு வஸ்துவென்று இதுவரைக்கும் நம்பிவந்தார். இப்போதோவெனில் மனேக்கியர்கள் தன் மனதில் மூட்டிய கடைசி சந்தோஷத்துடன் போராடி, கடவுள் சுத்த அரூபியென்று கண்டுணரப் பிரயாசைப்பட்டுவருங்காலையில், அவரது நேசர்களில் ஒருவன் பிளாட்டோ புஸ்தகத்தின் மொழிபெயர்ப்பொன்றை யவருக்குக் கொண்டுவந்து கொடுத்தான். அப்புஸ்தகம் விக்தோரியானூஸ் என்னும் ஒரு சிறந்த சாதுரியவானால் அப்போதுதான் உரோமாபுரியில் பிரசுரிக்கப்பட்டது.

அகுஸ்தீன் அப்புஸ்தகத்தை யெடுத்து வாசித்ததுதான் தாமதம். பிரிவினைச் சபை போதனையால் ஞான அந்தகாரமடைந்திருந்த அவரது கண்கள் துலாம்பரமாய்த் திறக்கப்பட, கடவுள் பரிசுத்த அரூபியாயிருக்கிறாரென்பதையும் வார்த்தையானவர் இருக்கிறாரென்பதையும் கண்டுணரச் சக்தியடைந்தார்.

உண்மையாகவே அவர் வாசித்தது சுவிசேஷமன்று; ஆனால் மனிதன் ஞானக் காரியங்களில் தன் சுயசக்தியினால் அடையக்கூடிய உந்நத எழுச்சியை யடைந்த ஒருவனால் எழுதப்பட்ட ஒரு முகவுரையாக்கும். அம்முகவுரையானது அவ்வளவு சிறந்ததாயிருந்தபடியால், அகுஸ்

தீன் அதை வாசித்து இனியில்லாத அதிசயமுற்ருர்.

அவர் சொல்வது "அக்காலத்தில் எனக்கு ஒரு புஸ்தகம் கிடைத்தது. பூர்வீக கிரந்தகர்த்தா ஒருவர் சொன்னதுபோல், அப்புஸ்தகமானது அரேபியா தேசத்தின் சிறந்த வாசனைதிரவியங்களினுல் சுகந்தமுள்ளதாயிருந்தது. அதை நான் அறிந்ததுதான் தாமதம். கொஞ்சத்திற்குமுன் என்னிருதயத்தில் பற்றிய நுண்ணிய சுவாலையானது நேச அக்கினியினுல் திடீரெனக் கொழுந்துவிட்டெரிந்தது. உரோமானியானுரேஸ, இதை நீ சரியாய்க் கண்டுபிடிக்க ஏலாது; என்னுல் திட்டமாய் விவரித்துரைக்கவும் கூடாது. என்னுத்துமத்தைத் தனது பிரகாச வெள்ளத்தினுல் மூழ்கடிக்கத் துவக்கிய அந்தச் சோதியின்முன், கீர்த்தியென்பதும், உலகப் பெருமையென்பதும், மகிமையென்பதும், பிரபஞ்ச வாழ்க்கையில் மனிதனுடைய மனதை மயக்கும் யாவும் சூரிய வெளிச்சத்தின்முன் மின்மினிப்பூச்சைப்போல் வெறுமையாய்த் தோன்றின."

இன்னும் அவர் கண்டுபிடித்த விஷயங்களையவரே விவரமாய்ச் சொல்லக்கேட்போம். சிற்சில ஆத்துமங்கள் கிறீஸ்து வேதத்தைக் கைக்கொள்ள எவ்விதமாக தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுகின்றனவென்று இதனுல் நமக்குத் தெரியவரும். அவர் கண்டுபிடித்த விஷயங்கள் இன்னும் கருகலாயிருந்தபடியால், அவைகள் துலாம்பரமாய்த் தோன்ற தேவப் பிரகாசம் அவசியமாயிருந்தது. அவர் சொல்லுவது: "இப்புஸ்தகங்களில் நான் வாசித்தவைகள் எல்லாம் இதே வார்த்தைகள் அல்லவாயினும் நான் வாசித்ததில் இப்பொருளே அடங்கியிருந்தது. மேலும் அப்பொருளை நான் பலவாறு அர்த்தஞ்செய்து பார்த்தபோதிலும் எனக்குத் திருப்தியேயுண்டாயிற்று. நாம் அறிந்திருப்பதுபோல் இதுவே, அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தின் உந்நத ஆரம்பம். 'ஆதியிலே வார்த்தையானவர் இருந்தார். வார்த்தையானவர் சர்வேசுரனிடத்திலுமிருந்தார். வார்த்தையானவர் சர்வேசுரனுகவுமிருந்தார். அவர் ஆதியிலே சர்வேசுரனிடத்திலிருந்தார். அவரால் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டதொழிய, சிருஷ்டிக்கப்பட்டவைகளில், அவரின்றி சிருஷ்டிக்கப்பட்டதொன்றுமில்லை. சீவன் அவரிலேயிருந்தது. அச்சீவன் மனுக்குலத்தோருக்கு வொளியாயிருந்தது. அவ்வொளியும் அந்தகாரத்தினிடையே துலங்குகின்றது. அந்தகாரமோ அதை ஒப்புக்கொள்ளவில்லை' என்றும், 'மனிதனுடைய ஆத்துமம் வெளிச்சத்திற்கு சாட்சி கொடுப்பதாயிருந்தாலும், அது தன்னிலே தானே வெளிச்சமல்லவென்றும், கடவுளின் வார்த்தையானவரே உலகத்திற்கு வரும் எல்லா மனிதருக்கும் வெளிச்சத்தை வீசும் சரியான தீபமென்றும், உலகம் அவரால் சிருஷ்டிக்கப்பட்டதென்றும் ஆனுல் உலகமோ அவரை ஒப்புக்கொள்ளவில்லை' என்றும் அதில் கண்டிருந்தது. In principio, erat Verbum. ஆனுல் அவர் தன் சொந்த ஜனத்திடம் வந்தாரென்றும், தேவ மக்களாகும் சக்தியை தன்னை யேற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு அருள்புரிந்தாரென்றும் நான் அதில் வாசிக்கவில்லை."

"மேலும் தேவ்வார்த்தையான கடவுள் மாங்கிஷத்தினுல்லல, இரத்தத்தினுலல்ல, மனிதனின் சித்தத்தின்படியல்ல, மாங்கிஷத்தின் சித்தத்தின்படியல்ல; ஆனுல் கடவுளால் ஜனித்தாரென்றும் நான் அதில் வாசித்தேன். ஆனுல் இந்த வார்த்தையானவர் மாங்கிஷமாகி, நம்மிடையில் வாசஞ்செய்தாரென்றும் அதில் வாசிக்கவில்லை."

"மேலும் சுதன் பிதாவின் சாயலாயிருக்கிருரென்றும், அவருக்குச் சரியொத்த சுபாவமுள்ளவராயிருப்பதைப்பற்றி அவர் கடவுளுக்குச் சமானமாயிருப்பது சர்வ நியாயமுள்ளதென்றும், அப்புஸ்தகத்தில் திருப்பித்திருப்பி வெவ்வேறு விதமாய்ச் சொல்லப்பட்டிருப்பதைக் கண்டேன். ஆனுல் அவர் தன்னைத் தாழ்த்திக்கொண்டு, மனுருபந்தரித்து, அடிமை வேஷம் பூண்டு, சிலுவையில் மாணிக்குமட்டும் கீழ்ப்படிந்தாரென்பதை நான் அப்புஸ்தகத்தில் வாசிக்கவில்லை."

"கர்த்தாவே உம்மிடம் ஜனித்த உமது ஏக புத்திரன் எவ்வித பேதமுமின்றி உம்முடன் நித்தியாயிருக்கிருரென்றும், ஆத்துமங்கள் பாக்கியமாயிருக்கவேண்டுமானுல் அவரது அருளையடையவேண்டுமென்றும், அவைகள் விவேகமாயிருக்கவேண்டுமானுல் அவரிடம் என்றும் நிலையாயிருக்கும் ஞானத்தில் பங்கடையவேண்டுமென்றும் அதில் கண்டேன். ஆனுல் குறிக்கப்பட்ட காலத்தில் அவர் பாவிகளுக்காக மரணமடைந்தாரென்றும், அவர் உமது ஏக புத்திரனென்றுமுதலாய் நீர் பார்க்காமல் எங்களுக்கு முழுதுமாய் அவரைக் கையளித்தீரென்றும் நான் அதில் காணவில்லை. ஏனெனில் வருந்திச் சுமை சுமப்பவர்களைத் தேற்றும்படியாகவும், சாந்தமும் தாழ்ச்சியும் நிறைந்த இருதயமுள்ளவர்களை நன்னெறியில் நடத்தும்படியாகவும், விவேகிகளுக்கு இக்காரியங்களை மறைத்துவைத்துப் பாமரராகிய பேதைகளுக்குத் தெரிவித்தீர்."

அதாவது, அகுஸ்தீன் பிளாட்டோ இயற்றிய கிரந்தங்களை வாசித்தபோது, வார்த்தையானவருடைய மட்டற்ற நேசத்தையும் தாழ்ச்சியையும் அப்புஸ்தகங்களில் காணுமற்போனபோதிலும், அவரது மகிமையையும் நித்திய ஜனிப்பையும் சகல ஆத்துமங்களுக்கும் மெய்ச்சோதியாயிருக்கும் அவர் அவ்வாத்துமங்களில் ஜொலிக்கும் ஜொலிப்பையும் கண்டறிந்தார். இதை வாசிக்கவே மயங்கிப்போனுர். தனது 19-வது வயதில் சிஸரோ இயற்றியுள்ள ஆர்டென்ஸியூஸ் என்னும் பிரபந்தத்தை வாசித்தகாலையில் அவருணர்ந்த சந்தோஷத்தில் கொஞ்சம், இப்போதவருக்குண்டானது. ஆனுல் இச்சந்தோஷம் அச்சந்தோஷத்தைவிட ஆழ்ந்ததாயும் தூய்மையுள்ளதாயுமிருந்தது. ஏனெனில் இப்போதவர் சிற்றின்ப நுகர்ச்சியிலிருந்து விடுபட்டிருந்தார். மேலும் சிஸரோவைப் பார்க்கிலும், பிளாட்டோவானவன் ஞானத்தை நாடி மேலுக்கெழும்பவும், ஆத்துமங்களை உந்நத எழுச்சிக் குயர்த்தவும் வல்லவன். அவர் சொல்வது "நான் என்னைத் தானே ஆராய்ந்துபார்த்தேன் (அதாவது தனது 19-ம் வயதில் தான் பிரவேசிக்கத் துணியாத தன் ஆத்துமத்தின் இரகசிய விச்சிரமங்களைப் பற்றி யிங்கு பேசுகிருர்.) உடனே வெளிச்சத்தைக் கண்டேன். எல்லா மனிதர்களுக்கும் தோன்றும் சாதாரண வெளிச்சத்தையன்று, அல்லது சாதாரண வெளிச்சமே சற்றுப் பருத்ததாயும் அதிக துலாம்பரமாயும் காணப்பட்டதென்பதுமன்று, ஆனுல் நான் கண்ட வெளிச்சம் முழுதும் வேறுவிதமான வெளிச்சம்." அவர் கூவிச்சொல்வது "எவன் சத்தியத்தை யறிகிருனே அவன் இவ்வெளிச்சத்தைக் காண்கிருன். மேலும் இவ்வெளிச்சத்தைக் காண்கிறவன் நித்தியத்தையும் கண்டடைகிருன். அவ்வெளிச்சம் பிறசிநேகமுள்ளவர்களுக்குமாத்திரம் தெரியும் ஏனெனில் பிறசிநேகம் ஒன்றே அதை அறியக் கூடுமாயிருக்கிறது."

இந்த மெய்யான வெளிச்சத்தின் உதயத்தினுல் அகுஸ்தீன் மனக்கவர்ச்சிகொண்டு "ஓ! நித்திய சத்தியமே, உண்மையான பிறசிநேகமே, இன்பகாமான நித்திய தேவனே, நீரே என் கடவுள், உம்மை நினைத்தே நான் அல்லும்பகலும் பெருமூச்சுவிடுகிறேன்" என்று கூவிச்சொல்லுகிருர்.

மீளவும் அவர் தாழ்ச்சியுடன் சொல்வது "ஆனுல் ஐயோ நான் உம்மை அறிய முயன்றபோது இரண்டு காரியங்கள் எனக்குப் புலப்பட்டன. அவையாவன அறியவேண்டிய காரியங்கள் அதிகமுண்டென்பது ஒன்று. நான் அவைகளையெல்லாம் அறிய சக்தியற்றவனுயிருக்கிறேனென்பது இன்னென்று. இந்த இரண்டு விஷயங்கள் அத்தனை துலக்கமாயெனக்குத் தெரியவந்தபடியால், ஒரு பக்கத்தில் எல்லாம் அறியவேண்டுமென்னும் ஆசையினுலும், மறுபக்கத்தில் எல்லாம் அறியமுடியாதென்னும் அவநம்பிக்கையினுலும், சரீரஞ் சிலிர்ப்படைந்து, என் பாவங்கள் என்னை மூழ்கடித்த படுகுழி பாதாளத்தில் கிடந்தேன். 'ஆனுல் தைரியங்கொள். பலமுள்ளவர்கள் உண்ணும் உணவு நாமே. நம்மை நெருங்கிவா, நம்மில் போஷணையடைவாய். மனிதர்கள் உண்ணும் உணவைப்போல், நாம் உனக்கொப்ப மாறுபாடடையமாட்டோம். ஆனுல் நீயே நம்மில் மாறுபாடடைவாய்' என்று உமது குரல் வாக்கு என் காதில் விழாதிருந்தால், நான் முழுதும் அதைரியப்பட்டுப்போய், என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப்போயிருப்பேன்" என்று சொல்வார்.

பிறகு அவரது இருதயம் பற்பல சிந்தனைகளால் அலைக்கழிக்கப்பட்டபோது, அதே தேவகுரலொலி அதிகார சக்தியுடன் சொன்ன "நாமே சுயம்பு" என்னும் திருவாக்கு அவரது இருதயத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. அவர் சொல்வது "உடனே என் சந்தேகங்கள் யாவும் காற்றின்முன் புகைபோலும், சூரியன்முன் இருள்போலும், தீமுன் பஞ்சுபோலும், மெய்முன் பொய்போலும், வேங்கைமுன் மான்போலும், ஒழிந்தன. ஆத்துமக் கண்ணுக்கு அவ்வளவு ஸ்பஷ்டமாய்த் தெரியவந்த சத்தியத்தைப்

பற்றி இனி சந்தேகிப்பதைவிட என்னைப்பற்றியே சந்தேகித்திருப்பேன்."

சத்தியமானது ஆத்துமத்தில் உதயமாகும் விதம் எத்தன்மையென்று இங்கு நமக்குத் திட்டமாய்த் தெரியவருகிறது. சத்தியம் எங்கு கிடைக்குமென்று அவர் வெகுகாலம் தேடியும், அநேகப் புஸ்தகங்களை வாசித்தும், பிறரோடு அதன் விஷயமாய் ஆவலுடன் சம்பாஷித்தும், அதைபபற்றித் தீர்க்கமாய் விசாரணைசெய்தும், அது கிடைக்கவில்லை. ஆனால் அவர் எப்போது கடவுளுக்காகத் தன்னாசையை வெறுத்தாரோ, அப்போதே திடீரென்று கடுங்காற்று அமர்ந்து, மேகங்கள் கலைந்து, சோதியுடன் சூரியன் தோன்றுவதற்கொப்ப அவரது சந்தேகங்கள் யாவும் தொலைந்தன. உடனே சத்தியமானது யாதொரு மனுவுதவியுமில்லாமலே அவரது ஆத்துமத்தில் உதயமாயிற்று. தேவ தயவினால், வேத சத்தியங்களுக்கடுத்த காரியங்கள் யாவும் இப்போது நமக்கு அவ்வளவு துலக்கமாயிருக்கிறபடியால், அவ்விஷயமாய் எப்போதாவது நமது ஆத்துமத்தில் யாதாமொரு சந்தேகம் உண்டாயிருக்குமோவென்று அதிசயிக்கிறோம். அப்படிப்பட்ட சந்தேகம் உண்டாயிருந்து பிறகு தெளிந்தால் நமக்கு உண்டாகும் சந்தோஷமானது, காரிருளுக்குப்பிறகு காந்தியுள்ள சோதியைக் கண்டால், பேரிரைச்சலுடன் கொந்தளிப்புகொண்டிருந்த சமுத்திரம் அமர்ந்தால், நாம் அநுபவிக்கும் சந்தோஷத்தைவிட நூறு மடங்கு அதிகமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

ஆனால் முதல்முதலாக அவரது ஆத்துமத்தில் வீசிய இஞ்ஞான வெளிச்சம் அதிக துலக்கமுள்ளதாயிருந்தபோதிலும், போதுமானதன்று. ஏனெனில் நாம் சொல்லக்கூடுமானவரையில் அவ்வெளிச்சமானது சேசுக்கிறீஸ்துநாதருடைய தெய்வீக வதனத்தின் ஒரு பாகத்தைமாத்திரம் காட்டியது. கடவுள் சுத்த அரூபியென்றும், வார்த்தையானவர் இருக்கிறாரென்றும் பிளாட்டோ எழுதிய கிரந்தங்களில் அகுஸ்தீன் வாசித்திருக்கிறார். ஆயினும் அவதரித்த வார்த்தையானவர் மனுமக்கள்மட்டில் கொண்டிருக்கும் நேசத்தையும், மனுமக்களுக்காக அவர் தம்மைத் தாழ்த்திக்கொண்ட விதத்தையும், அக்கிரந்தங்களில் படித்தறிய அவரால் ஏலாமற்போயிற்று. சகல சிருஷ்டிகளுக்கும் மேற்பட்ட சுத்த அரூபியான மகிமையுள்ள கடவுள் ஒருவரிருக்கிறாரென்றும், தேவ சுபாவத்தின் காந்தியுள்ள சோதிமூலமாய்த் தேவ சுபாவத்திற்குச் சம்மந்தப்பட்ட இன்னொன்று உண்டென்றும் பிளாட்டோ கண்டுபிடித்திருந்தான். அது, சோதியிலிருந்து புறப்பட்டுவந்து அச்சோதிக்குச் சமானமாயிருக்கும் இன்னொரு சோதியேயாம். இவைகளெல்லாம் மகத்தான காரியங்களே. இவைகள் எவ்வளவு மகத்தான காரியங்களென்றால், பழமையிலிருந்து பாரம்பரையாய்ச் சொல்லப்பட்டுவந்த வழுவாத சத்தியத்தை பிளாட்டோ எடுத்துக்காட்டுகிறானென்று நாம் அறியாதிருந்தால், மனிதன் தன் சுயபுத்தியினால் ஒரு அற்ப உதவியுமின்றி இப்பெருத்த சத்தியங்களையெப்படி கண்டுபிடித்திருக்கக்கூடுமென்று அதிசயிக்க வேண்டியிருக்கும். ஆனால் கடவுளானவர் மனிதன்மட்டில் கொண்டிருக்கும் நேசத்தின் மிகுதியினால், மனிதனுடைய வேஷந் தரித்து தாரித்திரக் கோலங்கொண்டு அவ்வளவாகத் தம்மைத் தாழ்த்திக்கொண்டாரென்றும், மனுஷாவதார பரமரகசியமும், மனிதர்களுக்காகப் பாடுபட்டு மரணிக்கும்படியான அவ்வளவு நேசப்பெருக்கத்துடன் அவர்களை நேசித்துவந்தாரென்னும் இரட்சண்யப் பரமரகசியமும், பிளாட்டோ, சாக்ரேட்டீஸ், ஸிஸரோ, விர்ஜில் முதலான ஞானிகளுக்கு முற்றிலும் எட்டாத காரியம். அப்பரமரகசியங்களை நம்பக்கூடியவர்கள்மாத்திரம் அவைகளைக் கண்டுபிடிக்கக்கூடும்.

ஆதலால் அகுஸ்தீனுடைய புத்தி, விசேஷமாய் அவருடைய இருதயம், அதிசயத்துக்குரிய அந்தப் பரமரகசியங்களை ஏற்றுக்கொள்ளும்படி அவைகளைப் பரிபக்குவப்படுத்த, பிளாட்டோவைவிட நிபுணரும் பரிசுத்தருமானவர் அவருக்குச் சகாயமாக வரவேண்டியதாயிற்று.

(இன்னும் வரும்.)

தன்னைத்தானே அற்பன் என்றெண்ணி எவ்வித மேன்மை சிலாக்கியத்தையும் ஒருபொருட்டாய் மதியாதவன் எவனோ, அவனே மெய்யான மாட்சிமையுடையவன்.

"கிறீஸ்துநாதரைப் பின்பற்றுகிறதற்காக சகதியைப்போல" இலௌகீக காரியங்களை எல்லாம் எண்ணுகிறவனே, மெய்யான ஞாயமுடையவன்.

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.)

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா

அல்லது

மூரிய இராஜகுமாரி.

5 SEP 1921

(முன் தொடர்ச்சி.)

அதிகாரம்—8.

போர் நிகழ்ச்சி.

செபஸ்தியான் பிரபு முத்துமாலையை யூதனிடம் விற்கக் கொடுத்தபிறகு, ரியாஸா என்னும் சிற்றூரைவிட்டு, ராடரீகஸ் பிரபுவின் கோட்டைக்குவந்து சேர்ந்தான். ஆனால் திரும்புகையில் தன்னுடன் வந்திருந்த போர்வீரர்களில் ஒருவன் வியாதியாயிருந்தமையால், அவனைத் தான் தங்கியிருந்த சத்திரத்திலேயே விட்டுவரும்படி நேர்ந்தது.

மிரியாம் என்னும் யூத மாது தன் கணவனைப் பிடித்துச் சிறையிலடைத்திருக்குஞ் செய்தி கேள்விப்பட்டதும், சத்திரத்தில் தங்கியிருந்த போர்வீரனைத் தேடிப்போய், செபஸ்தியானிருப்பிடத்தைக் கேட்டறிந்து, உடனே அவ்விடம் விரைந்துசென்றாள். அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் பிரலாபித்துத் தன்னெதிரில் வந்து நின்ற யூதப் பெண்பிள்ளையைப் பார்த்த செபஸ்தியான் நிகழ்ந்தவற்றை விசாரித்தான். "பிரபுவே, நடந்த செய்தியை நான் என்னவென்று சொல்லுவேன்! என்னிலும் நிர்ப்பாக்கிய ஸ்திரீ இவ்வுலகில் எவரேனும் உண்டா? நகையைக் கொண்டுபோன என் கணவரை, ஆல்டீமன் சிறையிலடைத்து, சிங்கத்தோடு அவருக்காக எவரேனும் பொருதி வெற்றியடைந்தால்மட்டுமே, அவரை விடுவிப்பதாகச் சொல்லுகிறான். இல்லாவிட்டால் அவரையே சிங்கத்துக் கிரையாக்கிவிடுவானாம். என்ன நிர்ப்பாக்கியம்! நான் என்ன செய்வேன்! ஆண்டவனே நான் தடுத்ததையுங் கேளாமல் தங்கள் உறுதிமொழியை நம்பிப் போன என் கணவரைக் காப்பாற்றும், காப்பாற்றும்!" என்று மிரியாம் வீரனுடைய பாதங்களில் விழுந்து கதறினாள்.

செபஸ்தியான் நடந்தவற்றை விபரமாய்த் தெரிந்துகொண்டு, அந்த நிர்ப்பாக்கிய ஸ்திரீயின்மேல் இரக்கங்கொண்டவனாய், "அம்மா, ஒன்றுக்கும் அஞ்சாதே! என்னால் கூடிய பிரயாசைப்பட்டு உன் கணவனை மீட்பேன்! கடவுளிருக்கிறார்! அவர் பலத்துக்குமுன் நம்மைப்போன் மனிதரின் பலம் எம்மாத்திரம்?" என்றான்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ராடரீகஸ் பிரபு குறுக்கிட்டு, "ஆல்டீமனுடைய சிங்கத்துடன் யுத்தம் செய்ய டொலிடோ நகருக்கு போகிறாயா, என்ன? நண்பா, ஜாக்கிரதை துஷ்டமிருகங்களுக்கு நாம் பயப்படவேண்டியதில்லை; அவைகளை கொன்றுவிடலாம். ஆனால் ஆல்டீமனுடைய வஞ்சகம் ஒன்றிருப்பதை மறக்கலாகாது. அதற்குத் தப்புவதருமை! அவன் வாக்குறுதியை நம்பவே கூடாது. அவன் ந வஞ்சகத்தால் உன்னைப் பிடிக்கப் பார்க்கிறான். மேலும் நீ அங்கே போனதும், ஒரு காலத்தி தன்னிடம் அலுவல் பார்த்துத் தப்பியோடி மெய்க்காப்பாளனென்று உன்னைப் பார்த்து தெரிந்துகொள்ளமாட்டானா?" என்று கேட்டான்.

"மானம் போனபின் உயிருடனிருக்க வேண்டுமோ? அவமானத்துட னுயிர்வைத்திருப்பதினும், மானத்தோடு உயிர்துறந்தால் உத்தமமல்லவா? ஆபிரிக்கா தேசத்திலுள்ள துஷ்ட மிருகங்களையெல்லாம் ஒன்றுசேர்த்துக்கொண்டு ஆல்டீமன் என்னைவந்து எதிர்த்தபோதிலும் நான் போயே தீருவேன். கடவுள் என்னை கைவிடார்; அவர் திருவருள் உள்ளவரையில் எனக்கொரு கெடுதியும் நேரிடாது. அவருடைய திருத் தாயாகிய கன்னிமரியம்மாள் எனக்கா அவரிடங் கட்டாயம் மன்றாடுவாள்."

"சபாஷ்! நன்றாய்ச் சொன்னீர்! ஓ கிறீஸ்துவ போர்வீரர் செய்யத் தகுந்தது இ வன்றோ! நண்பா, டொலிடோவுக்கு உட புறப்பட்டுப்போ; தேவதூதர் உனக்குத் து யாய் நிற்பார்கள். இதற்கிடையில் என்னாலா உதவி செய்ய ஏற்பாடு செய்கிறேன்."

இரண்டு வாரங்கள் கழிந்தன. ஒரு நா அஞ்சாத சிங்கமாகிய நமது யௌவன வீர குதிரை யேறிப் புறப்பட்டான். ஆயுதபாணி ளான ஆறு போர்வீரர் அவனுடன் சென்றன

ராட்ரீகஸ் பிரபுவும் தன் பரிவாரங்களுடன் அவனைப் பின்பற்றி டொலிடோ நகரின் எல்லைச் சுவர்வரையில் வந்தார்.

போர் நிகழவேண்டிய தேதியன்று, நகர் முழுவதும் பெருங் கோஷ்டமாயிருந்தது. யாரைப் பார்த்தாலும் இதே பேச்சு. கிறீஸ்துவர்களும், யூதர்களும், துலுக்கரும், மற்ற நாட்டுப்புற ஜனங்களும் ஆல்டீமனுடைய அரண்மனையின் முன்பாக உள்ள விசாலமான மைதானத்தில் முன்னதாகவே வந்து கூடிவிட்டார்கள். அம்மைதானத்தின் ஒரு பாகத்தைமட்டும் மூங்கிற் கழிகளால் நாலா பக்கத்திலும் சதுரமாக அடைப்பு அடைத்திருந்தார்கள். அரண்மனை மாடியின்மேல் ஆல்டீமனுக்கு ஒரு சிறந்த சிம்மாசனமும், மற்ற உத்தியோகஸ்தர்களுக்கு சில ஆசனங்களும் அமைக்கப்பட்டிருந்தன. ஜனங்களுக்குள் கலகம் எற்படாமலிருக்கும்பொருட்டு, போர் வீரர்கள் பலரை ஆங்காங்கு நிறுத்தியிருந்தனர். ஏகலவோனிய வீரர்களின் பட்டாளம் ஒரு பக்கத்தில் யுத்தசன்னத்தமாய் நின்றது. ஜனங்கள் யாவரும் ஆல்டீமனிருந்த விடத்தையும், சிறைச்சாலை வாசலையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டேயிருந்தனர். அச்சமயத்தில் திடீரென காவற்கூடக் கதவுகள் திறக்கவே, பென்தாவீதன் மிக்க அமைதியுடன் வெளியில் அடைப்புச் சதுரத்துக்குள் வந்து நின்றான். சதுரத்தைச்சுற்றி நின்ற ஜனங்களில் தன்னினத்தாரிருப்பதைக் கண்டு, அவர்களைத் தலையசைத்து நமஸ்கரித்து, அங்கே அவனுக்கென்று போட்டிருந்த ஒரு ஆசனத்தில் உட்கார்ந்தான்; பின்னர் தன் இரு கரங்களையுங் கூப்பி, தன் இருதயத்தை ஏற்கெனவே காளை கொண்டவராகிய சேசுக்கிறீஸ்து ...தரை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தான். யூலோஜியஸ், கடைசியாக அந்த யூதனை ஆசீர்வதித்து அனுப்புமுன், "மெய்யான தேவனின் குமாரனு...ய சேசுக்கிறீஸ்துவின் உதவியை முழு நம்பிக்கையுடன் நாடுவாயாக! அவர் கட்டாயம் உனக்கனுகூலமாய்த் தமது மேலான வல்லமையையும் இரக்கத்தையும் அற்புதமாய்க் காட்டுவார்!" என்று கூறிய வார்த்தைகளை அவன் மறக்கவில்லை.

பென்தாவீதன் நமதாண்டவர்பால் தன் முழு மனதையுஞ் செலுத்தியிருந்தமையால், அவனைச்சுற்றி நடந்தவை யொன்றும் அவனுக்குத் தெரியாது. ஜனங்களின் பேரிரைச்சலும், ஆல்டீமன் வருகையின் அறிகுறியாக ஊதிய எக்காளத்தொனியும் அவன் செவிகளில் படவில்லை. இவ்வாறு அவ் யூதன் மெய்மறந்திருக்கையில், சில ஏவலாளர் ஒரு சிங்கத்தைக் கொணர்ந்து அவன் முன் விட்டனர். கோடையிடிக்குச் சமானமாய்க் கர்ச்சித்து நிற்கும் சிங்கத்தைக் கண்டதும், யூதன் நடுநடுங்கினான்; ஆனால் உடனே தன் கண்களையுயர்த்தி வானத்தை நோக்கியதும் அவன் மனது அமைதியடைந்தது; நடுக்கலும் நின்றது.

ஆல்டீமன் காட்டிய சைகையால் ஏவப்பட்ட இரண்டு சேவகர், பென்தாவீதன் அரசனுடைய விலையுயர்ந்த ஆபரணமொன்றை திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பெற்றுத் தண்டனை தீர்ப்படைந்தபோதிலும், அவ்வரசர்பெருமான் இரக்கங்கொண்டு, அவ் யூதன் தான் குற்றவாளியல்லவென்று ரூபிக்க தானாவது அல்லது தனக்குப் பதிலாய் வேறு யாராவது சிங்கத்தோடு யுத்தம் செய்து ஜெயமடைந்தால் விடுதலை யடையலாமென்று செய்திருந்த ஏற்பாட்டை பகிரங்கமாய் யாவருமறிய மொழிந்தார்கள். யுத்தஞ்செய்ய வேண்டிய காலம் நெருங்கிவிட்டது; ஆரம்பகாலம் சரியாய்ப் பகல் பன்னிரண்டு மணியெனக் குறிக்கப்பட்டிருந்தது; மணி பன்னிரண்டாக இன்னும் பத்தே நிமிஷங்களிருந்தன.

சேவகர்கள் மேற்கூறிய குற்றத் தீர்ப்பைச் சொல்லி முடித்ததும், பென்தாவீதன் தன்னிருக்கை விட்டெழுந்து, "யாவர் மனதையும் அறியும் சக்திவாய்ந்த எல்லாம் வல்ல சர்வேசுரனறியச் சொல்லுகிறேன்; நான் திருடியதாகக் கூறப்படும் அந்த முத்துமாலையை ஒரு கிறீஸ்துவ வீரரிடமிருந்து விலைக்கு வாங்கினேன்; மேலும் அந்த உத்தம வீரரே, என்னைக் காப்பாற்றுவதற்கு இங்கே வருவாரென்று நிச்சயமாய்க் கூறுகிறேன்!" என்று உரத்த சத்தமாய் மொழிந்தான்.

(இன்னும் வரும்.)

ச. சேல்வன்.

நன்மார்க்கத்தில் நடப்பதைவிடச் சாஸ்திரங்களைக் கற்பதில் அனேகர் அதிக ஊக்கங்கொண்டிருப்பதால், அனந்த முறை மோசம்போகிறார்கள். அனேகமாய் யாதோர் பலனும் அடைவதில்லை, அல்லது அடைந்தாலும் அது மகா சொற்பம். —(கிறீஸ்துநாதர் அநுசாரம்.)

SOLOMON'S THRONE.
சலமோன் சிம்மாசனம்.

இந்த மகா இராசாவானவர் சிம்மாசனங் கட்டவேணுமென்று ஆக்கியாபித்தவுடனே பச்சைப் படிகம், முத்து, கோமேதகம், இரத்தினம் இன்னும் விலையேறப்பெற்ற கற்களை நடுவில் வைத்து பளிங்கான சலவைக்கல்லின்பேரில் கடைக்கால் போட்டுக் கட்டினார்கள். இப்பேர்க்கொத்த அதிசயமான ஆசனத்தைப்போல் இதுபரியந்தம் எந்த இராசாக்களுஞ் சக்கிரவர்த்திகளும் உடைத்தாயிருந்ததுமில்லை, அதின் சாயலாகப் பாவித்ததுமில்லையென்பதற்குத் தடைகளிராது. ஆசனத்தில் ஏறுவதற்குப் படிகள் ஆறு. படி ஒவ்வொன்றின்பேரில் பொன்னால் செய்யப்பட்ட சிங்கங்கள் பன்னிரண்டு. இராஜாளி பட்சிகள் பன்னிரண்டு. சிங்கம் ஒவ்வொன்றுக்கெதிரில் பட்சி ஒவ்வொன்றும் விரோதித்து இடதுசிறகை சிங்கத்தின் வலது முன்காலின்பேரிலும் சிங்கத்தின் வலது முன்கால் பட்சியின் வலதுசிறகின்பேரிலும் வைத்திருக்கிறதாக சூட்சமாய்ச் செய்யப்பட்டிருந்த ஆக மொத்த சிங்கங்கள் 72; பட்சிகள் 72. இந்தப் படிகள் ஆறையுங் கடந்தமாத்திரத்தில் விருத்தமான இராஜபீடமொன்றுண்டு. இந்தப் பீடத்தைக் கடந்து மேலே போகப் படிகள் ஆறு. இவைகளின்பேரிலும் பொன்னால் செய்யப்பட்ட ஜெந்துக்களுமுண்டு. முதல் படியின்பேரில் எருது ஒன்று இதற்குமுன் சிங்கம் ஒன்று விரோதியாகவும், இரண்டாம் படியில் ஓனாய் ஒன்று இதற்குமுன் செம்மறியாட்டுக்குட்டி ஒன்று எதிரியாகவும், மூன்றாம் படியின்பேரில் ஒட்டகம் ஒன்று இதற்குமுன் யாளி ஒன்று விரோதியாகவும், நான்காம் படியின்பேரில் இராஜாளி பட்சி ஒன்று இதற்குமுன் மயில் ஒன்று எதிரியாகவும், ஐந்தாம் படியின்பேரில் பூனை ஒன்று இதற்குமுன் சேவல் ஒன்று எதிரியாகவும் ஆறாம் படியின்பேரில் பைரி ஒன்று இதற்குமுன் புறா ஒன்று எதிரியாகவுஞ் செய்து வைக்கப்பட்டிருந்தன. இவைகளுக்குமேல் பொன்னால் செய்யப்பட்ட புறா ஒன்று பைரியை இரண்டு கால்களின் இடையில் பிடித்தடக்கிக் கொண்டிருக்கிறதாக இருந்தது. இதற்குமேல் பொன்னால் செய்த விநோதமான மணித்தொங்கல்களையும் நீடிய கிளைகளையும் நேர்த்தியான சித்திரப் புஷ்பங்களையுமுடைய கத்திரிசால் ஒன்று அதற்கு வேண்டிய தட்டுமுட்டு சாமானோடு வைக்கப்பட்டிருந்தது. இந்த சொர்னமயக் கத்திரிசாலிலிருந்து ஒரு பக்கத்தில் பிரிந்த கிளைகள் ஏழு. இவைகளின்பேரில் நமக்கெல்லாம் பிதாப்பிதாக்களாகிய ஏழு பேரின் பெயர்களும் எழுதியிருந்தது. அவர்கள் யாரென்றால்: ஆதி மனுஷனாகிய ஆதாம், பெரியசெம், அபிரகாம், ஈசாக்கு, யாக்கோப்பு, ஜோசேப்பு. இன்னும் மற்றொரு பக்கத்திலிருந்து பிரிந்த கிளைகளும் ஏழு இவைகளின்பேரில் மிகுந்த பக்தி விசுவாசிகளாகிய ஏழு பேரின் பெயர்களும் எழுதியிருந்தது. இவர்களாரென்றால்: லேவி, கெயாத்து, ஆம்றாம், மோசேசு, ஆரோன், எல்டாத்து, மேதாத்து. இவர்களுடன்கூட மகா தீர்க்கதரிசியாகிய அர் என்பவருடைய பெயரும் எழுதியிருந்தது. கத்திரிசாலுக்குமேல் கோவிலில் இருக்கும் விளக்குகளுக்கெல்லாம் வார்த்துக் கொளுத்தும்படியாக விலையுயர்ந்த எண்ணெயால் நிரப்பப்பட்ட பொன் ஜாடி ஒன்று வைத்திருந்தது. இதற்கடியில் ஷை எண்ணெய் வார்த்திருந்த பொன் பீப்பாயொன்றிருந்தது. இந்தப் பீப்பாயின்பேரில் சிரேஷ்ட குருவாகிய இலாய் என்பவருடைய சுரூபமொன்றிருந்தது. அதிலிருந்து இரண்டு சீத விருட்சக் கிளைகள் பிரிந்தன. அவைகளின்பேரில் இலாய் என்பவருடைய பிள்ளைகளாகிய ஒப்னி, பீனியஸ் என்பவர்களுடைய சாயல்போல் சித்திரமாகச் செதுக்கியிருந்தது. கிளைகள் ஒவ்வொன்றின் கடைசியில் தீபங்களிருந்தன. இவைகளின்பேரிலும் ஆரோன் என்பவருடைய புத்திரர்களாகிய நாடப்பு, அபியு என்பவர்களைப்போல் சித்திர வேலையில் காட்டியிருந்தன. இந்த பொற்சாடிக்கருகில் சிரேஷ்ட குருவாகிய இலாய் என்பவர்க்கோர் ஆசனமும், ஊர்க்குடிகளுக்கெல்லாம் ஓர் ஆசனமும் போட்டிருந்தது. நியாயம் அநியாயமென்று பகுத்தறியக்கூடிய விவேகசாலிகளாகிய மத்தியஸ்தர்கள் 70 பேருக்கும் இராஜபீடத்தைச் சுற்றிலும் 70 பொன்னாற்காலிகள் போடப்பட்டிருந்தன. இராஜாதி இராஜருடைய முகத்துக்கு நிழல் தரும்

படிக்கு பொன்னாற் செய்த திராட்சக்கொடிகள் இருபத்தைந்து இவர் சிரசிற்குமேல் படர்ந்திருக்கிறதாகவும், இவருடைய இராச்சியபரிபாலனம் வெகு காலத்துக்கு நீடித்திருந்து பயன்கொள்ளும்படியாக சிரசுக்குமேல் வலதுபக்கத்திலும் இடதுபக்கத்திலும் பொன்னால் செய்யப்பட்ட மச்சங்களிரண்டு தொங்கவைத்திருந்தது. சிம்மாசனத்தின்பேரில் உட்கார்ந்திருக்கும்போது மகா இராசாவானவர் மற்ற விடங்களுக்குப்போகவேணுமென்றெண்ணினமாத்திரத்தில் சாமர்த்தியமாகவும் மகா சூட்சமாகவுஞ் செய்யப்பட்ட ஆசனமானது அசைவுகொடுக்கிறதுண்டு. இவர் இந்த ஆசனத்தின் முதற் படியின்பேரில் கால்வைத்தவுடனே யதிலிருக்கும் பொன்னால் செய்யப்பட்ட எருது ஒன்று அவரை சுமந்துகொண்டு இரண்டாம் படிக்குக் கொண்டுசேர்க்கும். இரண்டாம் படியின்பேரிலிருக்கும் ஓநாய் ஒன்று மூன்றும்படிக்கு சுமந்துபோய்விடும். இவ்வண்ணமாகவே மற்றப் படிகள் நாலின்பேரிலும் பொன்னால் செய்யப்பட்ட வெவ்வேறு மிருகங்களிருந்து ஆசனம் ஏறுகிறபரியந்தங் கொண்டுசேர்ப்பதுண்டு. படிகள் ஆறையுங்கடந்து ஆசனத்தருகில் போனதட்சணமே இராஜாளி பட்சிகள் சிறகை விரித்துக்கொண்டு கீழே யிறங்கி இவரையாசனத்தின்பேரில் தூக்கி யுட்காரவைக்கும். இப்பேர்க்கொத்த சூட்சமான காரியங்களைச் செய்வதற்குரிய கருவிகள் அசைவுகொண்டு ஆடும்படியாக அந்த ஆசனத்தினடியில் வெள்ளியால் செய்யப்பட்ட பெரிய இராட்சத சிலையொன்றிருந்தது. மற்ற திசைகளிலிருக்கும் இராசாக்கள் விஜித்திரக் கொலுவின் சிறப்பையும் பெருமையையுங் கேள்விப்பட்டு மிகுந்த ஆவலுடனே பார்க்கப் பிரயாணப்பட்டு சலமோன் பதியில்வந்து சேர்ந்தார்கள். வந்த இராசாக்களெல்லாமொன்றாய்ச் சேர்ந்து மகா இராசாவினுடைய திருக்கொலுவையும், அவரையுஞ் சந்திக்கவேணுமென்று கருதி ஒரு நாள் அவர்களெல்லோரும் தத்தம் கூடாரத்தைவிட்டு வெகு ஆரவாரத்துடன் அரண்மனையைக் கிட்டி,—திருக்கொலுவைக்கண்டு அகமகிழ்ந்து, கெம்பீர இராசாவினுடைய சமுகத்தின்முன்பு சாஷ்டாங்கமாக விழுந்து, இவரைப் புகழ்ந்து ஓ! இறைவா! ஓ! இராஜாதியிராசனே! ஆதிமுதல் தொடுத்து இது பரியந்தம் இதையொத்த இராசபீடத்தைப் பார்த்ததுண்டென்று நாங்கள் கேள்விப்பட்டதுமில்லை. எங்கள் கண்ணால் பார்த்ததுமில்லையென்று சொல்லிப் பிரமிப்படைந்து சகலத்தையும் படைத்த பரம கடவுளுக்கு வந்தனம்புரிந்தார்கள். பிறகு சலமோன் படிகளைக் கடந்து வட்டமான பீடத்திலேறி யுட்கார்ந்தார்; உடனே இராஜாளி பட்சியொன்று கிளம்பி யிவருடைய தங்கக் கிரீடத்தை சிறகாலேந்தி யிவர் சிரசின்பேரில் சூட்டினது. தட்சணமே கடலையொத்த இராட்சதன் ஆசனத்தினடியிலிருந்து கருவிகளையெல்லாம் அவையவைகளுடைய வேலைகளை நடத்தும்படியாக சுற்றத் துவக்கினான். திடீரென சிங்கங்கள் மற்ற மிருகங்கள் பட்சிகளெல்லாம் எழும்பி யோடிவந்து இவரைச் சூழ்ந்துகொண்டன. அப்பொழுது பொன்னாற் செய்யப்பட்ட புறு பறந்துபோய் கூடாரத்தைத் திறந்து அதிலிருந்த "இவருடைய ஆளுகையும் இவருடைய சந்ததியாருடைய ஆளுகையும் இசரவேலரின்பேரில் நீடித்திருக்கும்படி திருவேதாகம நூலை வாசித்தறியவேணுமென்கிற" வார்த்தை நிறைவேறும்பொருட்டு ஓர் புஸ்தகத்தை யெடுத்துவந்து இவர் முன்னிலையில் வைத்தது. பொன்னாற் செய்யப்பட்ட சில சிங்கங்களெழும்பி இராஜசபையின்பேரில் ஓயாமல் மிகுந்த வாசனைபொருந்திய பன்னீர் தெளித்துக்கொண்டிருந்தன. சலமோன் தன்னுடைய ஆலோசனைக் கர்த்தர்களாகிய போர்ந்த பெரிய விவேகிகளுடன் கொலுவேறி நீதிசெலுத்திவருகையில் அவ்வூர் சிரேஷ்டகுருவானவர் இவரைக் கண்டுகொண்டு போவதுமுண்டு. வியாச்சியங்களில் யாதாமொருத்தர் பொய்ச்சாட்சி சொல்லவருவார்களேயாகில் அங்குள்ள பெரிய மிருகங்களெல்லாம் குலை நடுக்கங்கொள்ளும்படியான பெருஞ் சப்தமிடும். எருமைகள் வீரிட்டுக் கூவும். சிங்கங்கள் கெர்ஜிக்கும். ஓநாய்கள் பெருங் குரலிடும். வேங்கைகள் மிகவாய்ச் சீறும். பட்சிகள் சிறு கூச்சலிடும். காகங்கள் கரையும். இவைகளைக் கண்டு தப்புசாட்சி சொல்லவந்தவர் உள்ளங்கலங்கி பேதலித்து நாமிந்தப் பாவத்துக்குள்ளாவதினால் ஊர்முழுமைக்குந் தின்மையை வருத்திவிப்போமென்றெண்ணி தான் நினைத்து வந்த கருத்தை மாற்றி நிச்சயத்தையே பேசிவந்தார்கள்.

இசரவேலர் கொடும் பாவத்துக்குட்பட்ட பிறகு, பாபெல் பட்டணத்தை யாண்டுவந்த

கொடிய இராசனாகிய நெபுக்தொநேசர் பலாக்கிரமத்தில் விர்த்தியாகி இசரவேலரின்பேரில் போர்புரிந்து ஜெயசீலனாகி ஜெருசலேம் பட்டணத்தை கொள்ளையாடி பரிசுத்த ஆலயத்தையெரித்து இசரவேலரை யடிமைகளாக்கி காமாத்துநாடாகிய இருபிளா பட்டணத்துக்கழைத்துக்கொண்டு போகும்பொழுது, விஜித்திரக் கொலுவையும் பறித்துகொண்டேகினன். பிறகு இந்தக் கொடிய இராசன் இதன்பேரிலுட்காரக் காதல் கொண்டான். யாவரும் பிரமிக்கத்தக்க இராஜபீடத்தின் அடியிலிருக்குஞ் சூட்சமான கருவிகளினுடைய குணப்பயிர்ச்சி யறியாதபடியினால் மிகுந்த வாஞ்சையோடு காலைப் படியின்பேரில் வைத்தேறினன். உடனே அதின்பேரிலிருந்த சிங்க ரூபமொன்றெழும்பி வலது கையால் இவனிடது இடுப்பிலறைந்த நாள்முதல் மரணபரியந்தம் முடமாகவே யிருந்திறந்தான். கொஞ்ச காலத்துக்குப்பிறகு மசடோனியா பட்டணத்தானாகிய அலெக்சாண்டர் என்பவன் பாபேல் பட்டணத்தின்பேரில் படையெடுத்து வெற்றிகொண்டு தன் நகரத்துக்குத் திரும்பிப்போகையில் சலமோன் சிம்மாசனத்தையும் எடுத்துப்போனான். அப்போது எஜிப்து தேசத்தை யாண்டுவந்த ஷிக்சாக்கெனப் பெயர்படைத்த இராசன் இந்தக் கொலுவின் விநோதத்தைப் பார்த்திருந்ததினால் மிகவாயாசைகொண்டு அதன்பேரில் உட்காரத் தன்னிடதுகாலைப் படியின்பேரில் வைத்தமாத்திரத்தில் சிங்கரூபமொன்று கெர்ஜித்துக்கொண்டு கிளம்பி யிடதுகையால் இவர் வலதுகெண்டைக்கால் சதையின்பேரில் அறைந்தது. அதுமுதல் கால் ஊனமாகி முடஇராசனெனப் பயன்கொள்ளும்படியாக பேரோ நெக்கோ எனும் பெயர் இவருக்கு வந்தது. பிறகு அந்தியோகஸ் என்பவருடைய புத்திரன் எஜிப்து தேசத்தின் மகா இராசாவானவரின்பேரில் படையெடுத்து பெருங் கொடிய உக்கிரமான யுத்தஞ்செய்து ஜெயித்து ஊர்முழுதிலும் முற்றுகைபோட்டுப் பிரசைகளை சிறைப்படுத்திக்கொண்டு சலமோன் சிம்மாசனத்தையும் பறித்துகொண்டுபோகையில் ஆசனத்தின் பொன் காலிலொன்றில் பிகித்திருந்த சங்கிலிக் கட்டை முறித்துகொண்டு பலக்குறையுற்றது. அதை மறுபடியும் பலப்படச் சேர்க்கும்படியாக பற்பல தேசத்திலிருந்து கீர்த்திபெற்ற கைத்தொழிலாளிகளை யழைப்பித்து இதை பழுதுபார்க்கச் சொன்னவிடத்தில் அவர்களால் கூடாமையால் பிரமித்து எங்களால் முடியாதென்று சொல்லிவிட்டார்ரான். இந்த இராச்சியத்துக் கழிவு நேர்ந்த பிறகு பெர்சிய தேசத்தரசனாகிய சீரஸ் தன் சௌந்திரியத்தை யிழந்த பழுதுள்ள விஜித்திரக்கொலுவிலேறி நீதிசெலுத்த சுவாமிக்குப் பிரியமிருந்ததால் அதிலுட்காரப் பாத்திரவானாகினார். இதற்குப்பிறகு அதிரூப கொலுவுக்குற்றதை யாரு மறிந்திலர்.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

தென் இந்திய (ஜாதிபேதமற்ற) கத்தோலிக்கு சகோதர ஐக்கிய சங்கம்.

(திருநெல்வேலி ஜில்லாக் கிளை)

கொழும்பு, கொள்ளுப்பிட்டி, கிறீன்பாத் ரோட் 4/2 நெ. காம்பவுண்டு ஸ்தலத்தில் ஸ்ரீமான் மி. வி. மாசில்லாமணி (உப-சபைத்தலைவர்) அக்கிராசனத்தின்கீழ் பொது நாடொன்று கூட்டப்பட்டது.

பின் நமது தலைமைச் சங்கம் தன் முதலாம் வருடாந்த மஹோற்சவத்திற்கு அனுப்பப்பட்ட பிரதிநிதியாகிய ஸ்ரீமான் மி. அ. செபஸ்தியான் (காரியதரிசி) அவர்கள் அங்கு நடைபெற்ற முக்கிய விஷயங்களைப்பற்றி சுமார் ½ மணிவரையில் விளக்கிச்சொல்ல அங்கு குழுமியுள்ளோர் யாவரும் கேட்டானந்தித்தனர்.

அதன்பிறகு இதனடியிற்கண்ட தீர்மானம் எல்லோராலும் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது:—

"வருட சந்தா அணா 12 (சதம் 75) ஆக இருந்துவருவதை 1921௵ ஜூலை௴ 29௳ முதல் ரூபாய் ஒன்றாக உயர்த்தி அதை ஒவ்வொரு அங்கத்தினரும் முன்பணமாகக் கொடுத்துவரவேண்டும்."

பிறகு புறங்கூறாமை, ஊக்கம், ஒற்றுமை, பொருள் நிதி ஆகிய இவைகளைப்பற்றி முறையே

ஸ்ரீமான்கள். அ. மா. ஜேகப், மி. வி. மிக்கேல்; பி. ஜான் தாமஸ், பொன்னுசாமி ஆகிய இவர்களால் உபந்நியாசங்கள் செய்யப்பட்டன.

ஷை கிளையின் உப-சபைத்தலைவர் ஸ்ரீமான் மி. வி. மாசில்லாமணி அவர்கள் உழைப்பிற்கு நன்றியறிதலாக புஷ்ப ஆரம் சூட்டப்பட்டு திருநெல்வேலிக் கிளைச் சங்கத்தார்பேரால் ஸ்ரீமான் மி. அ. இஞ்ஞாசி அவர்களால் ஒரு வந்தனோபசாரப் பத்திரிகை வாசிக்கப்பட்டது.

ஸ்ரீமான் மி. வி. மாசில்லாமணி அவர்கள் பிரதி வந்தனம் அளித்து, அர்ச். கன்னிமரியாயின்பேரில் தோத்திரமாக வெண்பா ஒன்று பாட அங்குள்ளோர் யாவரும் மகிழ்ந்தனர். இதன்பின் சங்கீத பாடல்கள் பாடப்பட்டு இறுதியாய் மங்கல வாழ்த்தலுடன் கூட்டம் முடிவு பெற்றது.

உத்தரவின்படி
மி. அ. சேபஸ்தியான், காரியதரிசி.

மிகவும் சங்கைக்குரிய
மொன்சிஞ்ஞோர் ஏ. ஆர். ஜான் சுவாமிகளின்
வெள்ளி ஜுபிலி நிதி.

"நல்ல ஆயன்" பத்திரிகாசிரியராகிய சங். ஏ. ஆர். ஜான் சுவாமிகளின் ஜுபிலி மகோற்சவக் கமிட்டியார், தங்கள் வேண்டுகோளுக்கிசைந்து நன்கொடையனுப்பியுள்ள நண்பர்களுக்கு நன்றியறிந்த வந்தனஞ் செலுத்துகிறார்கள். நமது பத்திராதிபருக்கு, பரிசுத்த பாப்பானவர் அளித்த "மொன்சிஞ்ஞோர்" பட்டத்தின் அதிகாரப் பத்திரம், உரோமாபுரியிலிருந்து இன்னும் வாராததால் ஜுபிலி கொண்டாட்ட தினத்தை ஒத்திவைக்கவேண்டியதாகிறது. அது வந்தவுடன் கமிட்டியார் கொண்டாட்டதினத்தை முடிவுசெய்வார்கள். அப்போது அதைப்பற்றி நண்பர்களுக்கு அறிவிக்கப்படும். அதுவரையில் இந்த நல்ல முயற்சியில் கலந்துகொள்ளாதவர்களும் கலந்துகொள்வதற்குச் சமயங் கிடைத்திருக்கிறது. நன்கொடை அனுப்பப் பிரியமுள்ளவர்கள் இந்த மாதத்துக்குள் பின் கண்ட விலாசத்துக்கு அனுப்பிக்கொள்ளல்வேண்டும்.

2/74, பிராட்வே, மதராஸ்,
28—8—21.

எம். பி. குழந்தைசாமி,
பொக்கிஷதாரன்.

5 ரூபாய்.—Messrs. எஸ். அந்தோனிசாமி பிள்ளை, கோலாலம்பூர்; எம். பி. குழந்தைசாமி பிள்ளை, சென்னை; டாக்டர் ஜே. பெனலன், லெமக்கான்.

3 ரூபாய்.—Mr. கே. எம். இன்னாசிமுத்து நாடார், ஸ்லேவ் ஐலாண்டு.

2 ரூபாய்.—Mr. எஸ். வி. ஞானமுத்து, மதுரை.

$1\frac{1}{4}$ ரூபாய்.—Mr. எஸ். ஜி. அந்தோனி, அகரபட்டணம்.

1 ரூபாய்.—Messrs. டி. பி. கபிரியேல், மாதுல்கெல்லே; ஏ. டி. பெர்னாண்டோ பிரதர்ஸ், கொச்சிக்கடை; எ. எஸ். எம். பிச்சை பெர்நாண்டோ, கொழும்பு; எஸ். வி. ஏ. அந்தோனி நெவிஸ்காகு, கொழும்பு;

8 அணா.—Mr. வி. வெனாயி பெர்நான்டஸ்.

"ஆனந்தபோதினி"யும், கிறீஸ்துவர்களும்.

"ஆனந்தபோதினி" ஆசிரியர் தமது ஆகஸ்டு மாத சஞ்சிகையில் "நல்ல ஆயன் தவறுதல்" எனும் தலைப்பிட்டு ஒரு குறிப்பு எழுதியுள்ளதை நமது நண்பர்களிலொருவர், நாம் நமது பத்திரிகையை எழுதி முடித்துக்கொண்டிருக்கையில் நமக்குக் காண்பித்தார். அதற்குத் தக்கபடி மறுப்பு எழுத காலமும், பத்திரிகையில் இடமும் போதாமையால், இவண் அதைப்பற்றி வெகு சுருக்கமாகவே எழுதவேண்டியதாகிறது.

ஷை ஆசிரியர் நம்மீது கொண்டுவந்திருக்கும் குற்றமாவது அவர் குறிப்பிட்ட ஒரு கடிதக்காரரின் கூற்று உண்மையா அல்லவா என்று ஆராய்ந்தறியாமல் நாம் அதை வெளியிட்டோம் என்பதே. உண்மையையும், இன்மையையும் ஆராய நமக்கு அவகாசமில்லை.

அது எப்படியாயினுமாகுக. ஆனால் பொதுவாக ஒரு இந்து மதப் பத்திரிகையை நமது கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் படிப்பதால் அவர்களுக்குள்ள வேத விசுவாசத்துக்குப் பலவகையால் பங்கம் நேருமென்பதுபற்றி, "ஆனந்தபோதினி"யின் பஹிஷ்காரத்தைப் போதித்த கடிதத்துக்கு நம் பத்திரிகையில் இடந்தரலானோம். இதுவே நமது நோக்கு. இதற்குமேல் இதைப்பற்றி எழுத எமக்கு இஷ்டமில்லை,

இது நிற்க, "ஆனந்தபோதினியின் பஹிஷ்காரமும், உண்ட சோற்றுக்கு இரண்டகமும்" என்னும் மகுடம் பூண்டதோர் கடிதமும் எமக்குக் காட்டப்பட்டது. இதைப்பற்றியும் இரண்டொரு வார்த்தை சொல்ல விரும்புகிறோம். இதை எழுதியதாக கைச்சாத்திட்டிருக்கும் 'S. S. Pillai' என்பார் உண்மையான கத்தோலிக்குக் கிறீஸ்துவரோ அல்லரோ என்று சந்தேகம் எமக்கு உதிக்கிறது. "எம்மதமும் சம்மதம்" என்கிற கொள்கையை அவர் ஆதரிக்கிறவரானால் அவர் அல்லரென்றே சொல்லவேண்டும். ஏனெனில் உண்மைக் கத்தோலிக்கரெவரும் எம்மதமும் சம்மதமெனக்கொள்ளார். மெய்யான கடவுள் ஒருவரே. சத்திய வேதம் ஒன்றே, உண்மை யொன்றே.

கத்தோலிக்கு வேதத்தையாவது, கத்தோலிக்குக் குருக்களையாவது, அவர்கள் தங்கள் வேதம் பரம்புதல் விஷயமாகச் செய்யும் ஏற்பாடு, நடவடிக்கைகளையாவது கண்டித்து, அல்லது அவமதித்துப் பேச அல்லது எழுதப்படுவதைக் கேட்க, பார்க்க எந்தக் கிறீஸ்துவனும் சகியான். அப்படிப் பேசும் நபரை, எழுதும் பத்திரிகையை பஹிஷ்காரம் செய்யாமலிரான். அப்படிச் செய்யாதவன் உண்மைக் கத்தோலிக்குக் கிறீஸ்துவனல்லன்.

பத்திராதிபர்.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

பயாஸ்கோப் படங்கள். — சுவிசேஷ சரித்திரத்தின் ஆதிமுதல் நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் ஜனனம்வரையிலுள்ள சரித்திரங்களையெல்லாம் பயாஸ்கோப் வழியாய்க் காட்டுவதற்கு 15 மைல் நீளமுள்ளதும் 23 மணி நேரம் காட்டப்பட வேண்டியதுமான படங்கள் [illegible] தயாரிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

பென்ஷன் நிறுத்தப்பட்டது.—பென்ஷன் டிப்டி கலெக்டர் முகமதுர்ஸா பெல்காமீ சாகேப் தீவிரமான ஒத்துழையாமைக் காரரென்று தமது நடத்தையில் காட்டிவிட்டதால் அவருடைய பென்ஷனை நிறுத்திவிட்டதாகக் கெஜட்டில் இராஜாங்க அறிக்கை கூறுகிறது.

கனம் சாஸ்திரியவர்கள்.—செர்வன்ட் ஆப் இந்தியா சொஸைட்டியின் கனம் சீனிவாச சாஸ்திரி அவர்கள் சக்கரவர்த்தியவர்களின் பிரிவி கவுன்சல் அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கிறாரென்ற செய்தி எட்டியிருக்கிறது. சென்னை வாசிகளில் முதல் முதல் இவருக்கே இந்த மகிமை தங்கிய நியமனம் கிடைத்திருக்கிறது.

ஓர் அபூர்வ வித்தை.—ஓர் அறைக்குள் இருப்பவர்களைப் படம்பிடிக்கும் வகையை பாரிஸ் நகரிலுள்ள பிரான்ச் சாஸ்திரியொருவர் கண்டுபிடித்திருக்கிறாராம். இது சாதாரணமாய் படம்பிடித்துக்கொள்ளுபவர்களையேயன்றி, அப்படி விரும்பாத திருடர் முதலியோரையும் படம்பிடிக்கக் கூடுமாதலால் போலிசாருக்கு இக் கருவி பெரிதும் பிரயோஜனப்படுமென்பதில் ஐயமில்லை.

போலீஸ் உத்தியோகஸ்தர் சம்பளம்.—சென்னைநகர் போலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 225-ம் 325-ம்; சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 95, 125, 150; வெளியூர் இன்ஸ்பெக்டர்களுக்கு 150, 175, 200, 250; சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு 65-3-110; 115-5-125. நியமனமாகும்போது இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 80-ம் கீழே இருந்து உயர்த்தப்பட்ட இன்ஸ்பெக்டர்களுக்கு 30-ம்; சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 50-ம். உடுப்புகளும் கொடுக்கப்படும்.

தலைவாரிப் பின்னும் இயந்திரம்.—அமெரிக்கா டாக்டர் ஜேம்ஸ் தாம்ஸன் என்பார் பெண்கள் தலைமயிரை வாரிப் பின்னக்கூடிய இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறாராம். இனி நம் நாட்டுப் பெண்களுக்குத் தலைசீவிப் பின்னிவிடும் சிரமங்கூட

இராது. கைதவறிக் கீழே விழவிட்ட பொருளைக் குனிந்து எடுக்கக் கஷ்டப்படும் காரிகைகளுக்கு இது பெரிய சந்தோஷ செய்தியே.

13-ம் சிங்கராயரின் சரீரம்.—காலஞ்சென்ற பதின்மூன்றாம் சிங்கராய பாப்பானவரின் தேகம் அடுத்த செப்டம்பர்மீ இத்தாலிய கத்தோலிக்கு இளைஞர் சங்கத்தார் கூடும்பொழுது, வத்திக்கான் மாளிகையினின்று அது அடக்கப்பட நியமிக்கப்பட்டிருக்கும் அர்ச். அருளப்பர் லட்டிரின் கோவிலிலுள்ள கல்லறைக்குக் கொண்டுபோகப்பட்டு அடக்கப்படுமென்றும் அக்காலை அச்சடங்குக்கு இருபதினாயிரம் கிறீஸ்துவர்கள் விஜயஞ் செய்வார்களென்றும் அறிகிறோம்.

சப் அசிஸ்டெண்டு சர்ஜன்கள்.—இவர்களின் சம்பளம் ரூ. 75—5—175 வரையில் உயர்த்தப்பட்டிருக்கிறதென்றும், அதற்கப்பால் ரூ. 200 முதல் செலக்ஷன் கிரேட் என்ற பதவியும் கொடுக்கப்படுமென்றும், படி ரூ. 30 முதல் ரூ. 50 வரையில் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதென்றும், இது முகாந்தரமாக, இதுவரையில் கொடுபட்டுவந்த பஞ்சப்படி ரூ. 10 நிறுத்தப்பட்டுவிடுமென்றும் விளம்பர சபை அறிவிக்கிறது.

திருநாள் கொண்டாட்டங்கள்.—அந்தந்த ஊர்களில் நடைபெறும் திருவிழாக் கொண்டாட்டங்களைப்பற்றி விஸ்தரித்தெழுதப்பட்ட கடிதங்கள் பல நம் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக அனுப்பப்படுகின்றன. அப்படிப்பட்ட கடிதங்கள் வரவர தொகையில் அதிகரித்துவிட்டன. அவைகளை நம் பத்திரிகையில் பிரசுரிப்பதனால் பத்திரிகையின் பக்கங்களும் செலவும் பெருக்கமடைந்துவிடும். நிர்வகிக்க முடியாததாகும். இனிமேல் அத்தகைய கொண்டாட்டங்களை பத்து வரிக்குள் அடங்குமாறு சுருக்கி எழுதினாலொழிய அவைகள் பிரசுரிக்கப்படமாட்டாவென்பதை நம்நேயர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

முதல் சமாசாரப் பத்திரிகை.—உலகத்தில், அச்சுப் பதித்த சமாசாரப் பத்திரிகை முதல்முதல் பெல்ஜிய தேசத்தில்தான், 1605-வது வருஷத்தில் பிரசுரிக்கப்பட்டதென்றும் அதற்குப்பின் 14 வருஷங்கள் கழிந்தபிறகே, இங்கிலீஷ்காரர் தங்கள் சமாசாரப் பத்திரிகை வெளியிடலானார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆதலினால் பத்திரிகைப் பிரசுர விஷயத்தில், பெல்ஜியத்தாரே மற்ற தேசத்தாரைவிட முற்போக்கடைந்தவர்களானார்கள். ஆனால், அது தற்காலத்தில் இவ்விஷயத்தில் எந்தப் படியிலிருக்கிறதென்று சொல்லப்படவில்லை.

அந்தமான் தீவு. — தீவாந்தரசிட்சை இனி கூடாது என்று சட்ட நிரூபண சபையால் தீர்மானிக்கப்பட்டுவிட்டது நண்பர்களுக்குத் தெரியும். அதை யநுசரித்து, அந்தமான் தீவிலிருந்து 26 பெண் கைதிகளை சமீபத்தில் சென்னைக்குக் கொணர்ந்து உள்ளூர் சிறைச்சாலையில் வைத்திருக்கிறார்கள். இவர்கள் போக இன்னும் அங்கிருக்கும் ஆயிரத்துக்கதிகமான ஆண் கைதிகளைக் கொண்டுவந்து சிறையில் வைக்கவேண்டிய வசதிகள் கட்டப்படுகின்றபடியால், அவை கட்டி முடிந்தவுடன் ஷெ கைதிகள் கொண்டுவரப்படுவார்கள்.

உரோமாபுரி லூர்து திருயாத்திரை.—மற்ற மற்ற தேசங்களிலிருந்து உரோமாபுரி, லூர்து நகர் முதலிய திருஸ்தலங்களுக்கு திருயாத்திரைக்காரர் கூட்டமாய் ஒன்றுசேர்ந்து போகிறதுண்டு. ஆனால் இதுவரையில் இந்தியாவிலிருந்து அப்படிப்பட்ட திருயாத்திரைக்காரர் கூட்டம் போனதில்லை. இப்போது முதன் முதல் அத்தகைய கூட்டமொன்று இந்தியாவிலிருந்து புறப்படுவதற்கு பிரேரணை செய்யப்படுகிறது. அடுத்த 1922௵ எப்பிரல்மீ இனி குறிக்கப்படுந் தேதியில் இந்தியாவின் பல பாகங்களிலிருந்து திருயாத்திரைக்காரர்கள் பம்பாயில் கூடுவதென்றும், அங்கிருந்து எல்லோரும் ஒரு கப்பலில் பிரயாணமாகிறதென்றும் பிரேரிக்கப்படுகிறது. இந்தத் திருயாத்திரைக்குப் போதுமான பணமும், சௌக்கியமும் சௌகரியமும் கிடைக்கப்பெற்றுள்ளவர்களுக்கு இந்தப் பிரேரணை அநுகூலமானதாகும்.

ஓர் அதிசயம்.—கண் தெரியாத குருடர் காதினால் எழுத்தை வாசிக்கக்கூடிய ஆச்சரியத்துக்குரிய வோர் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதென்று "ஈஸ்டர்ன் மெயில்" பத்திரிகை எழுதுகிறது. இந்த இயந்திரம், "ஆடோபோன்" எனப்படுகிறது. இதன்மேல், எழுத்தை வைத்துவிட்டால் ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு பிரத்தியேகமான தொனி உண்டாக, அதன்மூலமாய் ஒரு அந்தகன் யாதோர் புத்தகத்தையாவது பத்திரிகையையாவது எளிதில் படிக்கக்கூடுமென்றும், ஒரு நிமிஷத்திற்கு 25 வார்த்தைகள் வாசிக்கலாமென்றும் சொல்லப்படுகிறது. குருடருக்கு இது ஒரு சந்தோஷமான செய்தியே.

கௌரதா பட்டங்கள்.—மரியாயின் மகா சங்கம் சம்பந்தமாய் மிக. சங். ஏ. எம். டெக்செய்ரா சுவாமிகளுக்கும் மிக. சங். எப். எக்ஸ். கர்வாலோ சுவாமிகளுக்கும், மிஸ்டர் எப். ஏ. டிக்ரூஸ் அவர்களுக்கும் அர்ச். பாப்பானவரால் அருளப்பட்ட கௌரதாபட்டங்களின் அதிகாரப் பத்திரங்கள், மிக. வந். மயிலை மேற்றிராணியாண்டவரவர்கள் அர்ச். பாப்பானவரைச் சந்திக்கப்போயிருந்தபோது அவர்களிடம் நேரே கொடுக்கப்பட்டனவென்றும், அவற்றை அவர்கள் போர்த்துக்காலுக்கு கொண்டுபோய், இந்தியாவுக்குத் திரும்புகையில் தம்முடன் கொண்டுவருவார்களென்றும் தெரியவருகிறது.

புரோபகாந்த சபைக் காரியதரிசி.—இப்போதிருக்கிறவருக்கு முன் பாப்பானவரின் கிழக்கிந்திய ஸ்தானாதிபதியாயிருந்து ஜப்பானுக்குச் சென்ற மேன்மை தங்கிய பியுமசோனி பயாந்தி ஆண்டவரவர்கள், இப்போது புரோபகாந்தா காரியதரிசியின் உத்தரவாதமான பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்களென்ற செய்தி கேட்டு சந்தோஷமானோம். இவர்கள் இந்தியாவிலிருந்து இந்தியர்களின் நிலைமையையும், அவர்களின் தேவையையும் நன்கு அறிவார்களாதலின், இவர்களுக்கு தமது உத்தியோக ஹோதாவில் நன்மை யாதேனும், செய்யக்கூடிய சமயம் வாய்ப்பின் செய்யத் தவறார்கள் என்பதை முன்னிட்டு இந்தியர்கள் திருப்தியடையலாம். இவ்வாண்டவரவர்களுக்குத் திடகாத்திரமும் தீர்க்காயுளும் தந்து சர்வேசுரன் அவர்களைக் காப்பாற்றுவாராக!

இரண்டு புதிய நாவல்கள்.—சென்னை, ஜெனரல் போஸ்ட் ஆபீஸ் கிளார்க், ஸ்ரீமாந் ஏ. தாவீது (A. David) உடையாரால் இயற்றப்பெற்ற, "ஜெயசீலி," "ஞானானந்தன்" என்னும் இரண்டு புதிய நாவல்கள் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டன. அவைகளை நாம் வாசித்துப் பார்த்ததில் அவை இனிய தமிழ் நடையில் நல்லொழுக்கத்துக்கும் சத்ய வேதக் கோட்பாட்டுக்கும் விரோதமான தொன்றின்றி அவைகளுக்கு அநுசரணையாய் சமயோஜித மேற்கோள்களுடன் எழுதப்பட்டிருக்கின்றனவென்று தெரியலானோம். அவைகளை நம் கத்தோலிக்கர் யாதோர் காலப்போக்குக்காகவாவது, அல்லது தமிழ் வசனநடை கற்றுக்கொள்வதற்காகவாவது வாங்கி வாசிக்க யாதோர் ஆட்சேபணையில்லை. அவற்றின் பிரதிகள் வேண்டுபவர்கள் நமது "நல்ல ஆயன்" ஆபீசுக்காவது சென்னை, பிராட்வே, 2/74-வது நெ. வீட்டிலுள்ள நமது நண்பர், மிஸ்டர் எம். பி. குழந்தைசாமிப் பிள்ளைக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

செப்டெம்பர்மீ முடிவில் சுய ராஜ்ஜியம்.—சுய ராஜ்ஜியம் பெற்றுத் தருவதாக மிஸ்டர் காந்தி இதுவரையில் சொல்லிவந்த கெடுவுகளெல்லாம் தவறிவிட்டன. இப்போதும் ஒரு கெடுவு கொடுத்திருக்கிறார். அதாவது, அந்நிய நாட்டு ஆடைகளை அடியோடே அகற்றி பஹிஷ்கரித்துவிட்டால் செப்டெம்பர்மீக் கடைசியில் தாம் சுய ராஜ்ஜியம் வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லுகிறார். சமீபத்தில் அலிகாரில் கூடிய ஒரு கூட்டத்தில் பேசும்போது இப்படி வாக்களித்திருக்கிறார். இது "சாம்பலும் மிளகாயுங் கொடு, செப்புக்குடத்தை விழுங்கிவிடுகிறேன்" என்று சொன்னவன் கதைக்குச் சமானமாயிருக்கிறது. "ஜாண்பல்லும், முழவாயும்" உண்டானால் யார்தான் செப்புக்குடத்தை விழுங்கமாட்டார்கள்? அந்நிய நாட்டு ஆடைகளை அடியோடே அகற்றுவது ஆராலாவது ஆகுமா? அப்படி நீ அந்த ஆகாத காரியத்தை ஆக்குவாயானால், நானும் இந்த ஆகாத காரியத்தை ஆக்கிக்காட்டுவேன் என்று காந்தி சொல்லுகிறார். இதோ செப்டெம்பர் மாதம் தொடங்கிவிட்டது. சுய ராஜ்ஜியமும் நெருங்கிவிட்டது!!

5 ரூ. இனாம்.—"கத்தோலிக்கு இந்தியரும், கோவாப்பரேடிவ் சொஸைட்டிகளும், ஸ்டோர்களும்" என்னும் விஷயத்தைப்பற்றி சிறந்ததோர் வியாஸம் எழுதுவோருக்கு, பெங்களூர் கத்தோலிக்குக் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியார், ரூ.

5 இனாம் அளிக்கத் தீர்மானித்திருக்கிறார்களென்று, ஷெ சொஸைட்டியின் காரியதரிசி தெரிவிக்கிறார். கத்தோலிக்கு இந்தியர்கள் முன்னேற்றமடைய ஷெ சொஸைட்டிஸ்டோர்கள் எவ்வளவு உதவியாயிருக்குமென்றும், அவைகளை ஸ்தாபித்து நடத்துவது எங்ஙனமென்றும், அவைகள் விருத்தியடைய அல்லது க்ஷீணதசை யடைய உண்டான காரணங்கள் அல்லது பரிகாரங்கள் இன்னவையென்றும், வியாசத்தில் விவரமாய்க் காட்டப்படவேண்டும். வியாசங்கள், அக்டோபர்மீ 31-ந் உக்குள், பெங்களூர், கிளவிலான் டவுன் போஸ்டு, "பெங்களூர் கத்தோலிக்குக் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி"யின் காரியதரிசிக்கு அனுப்பப்படவேண்டும். அனுப்பப்படும் வியாசங்களில் சிறந்ததும், இனாமுக்கு உரியது மெது வென்னும் விஷயத்தில், ஷெ சொஸைட்டியார் செய்யும் தீர்மானமே முடிவானது. இனாம் பெற்ற வியாசம் அதை யெழுதினவர் நாமதேயத்துடன், "நல்ல ஆயன்" முதலிய கத்தோலிக்குத் தமிழ்ப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.

கலகக்காரர்களை யடக்க சுலபமான வழியொன்று அமெரிக்க நிபுணர் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கிராமத்தில் பலர் கலகஞ்செய்ய ஏற்பட்டுவிட்டால் அவர்களை யடக்க அவ்வூர் போலீஸ் சேவகர்களால் முடியாமற்போய்விடுகிறது. வெளியூரிலிருந்து போலீஸ்காரர்களையும், இராணுவங்களையும் அழைக்கவேண்டியதாகிறது. வெளியூர், இராணுவங்கள், போலீஸ் சேவகர்கள் வந்து சேருவதற்குள்ளாக கலகக்காரர்கள், ஜனங்களுக்கும் பொருள்களுக்கும் கனத்த சேதங்களை விளைவித்துவிடுகிறார்கள். இப்படிக்கெல்லாம் நடவாதபடி, கலகக்காரக் கூட்டத்தை உடனே அடக்கி, அவர்கள் யாதொன்றும் செய்யமுடியாமல் அவர்களை அழச்செய்யும்படிக்கான ஒரு நூதன வழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ஒருவித துன்பம் விளைக்கும்படியான காற்று அடங்கிய குண்டுகளைக் கலகம் நடக்கும் இடத்தில் பிரயோகித்து வெடிக்கச்செய்வதினால், அதனுள்ளிருந்து வெளிப்படுங் காற்று பட்டவுடன் கண்ணெரிச்சல் காண கண்களினின்று ஓயாமல் நீர் வடிவதுடன், உடுத்தியிருக்கும் வஸ்திரங்களெல்லாம் மஞ்சள் நிறமாய்விடுகின்றனவாம். வேறுவித கெடுதியொன்றும் செய்வதில்லையாம். அக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் தப்பியோடப் பார்த்தாலும் அவர்கள் உடையிற் பட்ட மஞ்சள் நிறம் அவர்களை கலகக்காரர்கள் என்று காட்டிவிடும்.

"இலக்கண தீபம்" என்னும் மகுடம் பூண்டதோர் இலக்கணப் புத்தகம் நமது மதிப்புரைக்காக அனுப்பிய சங். இன்னாசிநாத சுவாமிகளுக்கு வந்தனங்கூறுகின்றோம். சென்ற ஜூன் மாதத்தில் அனுப்பப்பட்ட இப்புத்தகத்தைப்பற்றி பல சோலியின் நிமித்தத்தால், இவ்வளவு காலந் தாழ்ந்து எழுத நேர்ந்ததற்காக வருந்துகின்றோம். இப்புத்தகம் நூல் நடையிலும், பாகுபாட்டிலும் விஷயங்களைச் சிறுவர்க்கு விளக்கிக்காட்டுந் தன்மையிலும், இத்தென்னாட்டில் உலவா நிற்கும் அத்தகைய இலக்கணப் புத்தகங்கள் எல்லாவற்றையும்விட, மிகச் சிறந்ததென நாம் மதிக்கிறோம். சிறுவர் சிறுமியர்க்குத் தெற்றென விளங்கக்கூடிய உதாரணங்களைக் காட்டியும், ஆங்காங்கே நன்னூற் சூத்திரங்களைக் கூட்டியும், விஷயங்கள் நன்கு விளக்கப்பட்டிருக்கும் பாங்கு பெரிதும் பாராட்டற்குரியது. இது முதற் பாகம். எழுத்தியலும், பதவியலுமே கொண்டுள்ளது. ஆறும் வகுப்பு மாணாக்கருக்கென வரையப்பட்டது. அதன் இரண்டாம் பாகத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இத்தென்னிந்தியாவிலுள்ள பாடசாலைகளில் இப்புத்தகத்தை உபயோகிப்பார்களானால் பெரும் பிரயோஜனமுண்டாகும். தமிழ் கற்கும் மாணாக்கர்கள் இலக்கணத்தை அலக்கணாகப் பாவித்து அதை அலட்சியம் செய்து, அறியாமையெனும் அந்தகாரத்தில் உழலு மிக்காலத்தில் இப்புத்தகம், அதன் பேர் குறிப்பிடுகிறபடி, அன்னாருக்குத் தீபம் போல் உதவுமென்பதில் ஐயமில்லை. இவ்வரிய புத்தகத்தை ஆக்கியோன் இன்னாரென்பது அதில் புலப்படவில்லை. அவர் தமிழ் உலகுக்குப் பேருதவி புரிந்திருக்கின்றார். சில காலத்துக்குமுன் நம் பார்வைக்கு வந்த "பால போத வாசகம்" என்னும் புத்தகத்தின்மட்டிலும் நாம் நல்ல அபிப்பிராயங் கொண்டுள்ளோம். யாழ்ப்பாணத்து கைத்தொழிற் கல்விச்சாலையின் அச்சுக்கூடத்தினின்று வெளிவரும் புத்தகங்கள் புகழ்ச்சிக்குரியனவாயிருத்தல் பற்றி நாம் பெருமகிழ்ச்சி யடைகின்றோம்.

திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருவிழா.—இத்திருவிழாவானது திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள "மணப்பாடு" என்னும் ஊரில் சிறு மலைமீதுள்ள அர்ச். சிலுவைக் கோவிலில், இம்மாதம் 4-ம் தேதி துவஜாரோகணம் செய்யப்பட்டு, 14-ம் தேதியன்று அதி ஆடம்பர அலங்காரத்துடன் கொண்டாடப்படுமென்றும், தற்போது அவ்வூரிலாவது அதன் அயலூர்களிலாவது வியாதி வருத்தங்கள் இல்லையென்றும் ஷெ செப்டம்பர் 4உ முதல் 14உ வரையில் அக்கோவிலைச் சந்திக்கிற திருயாத்திரைக்காரருக்கு அர்ச். பாப்பானவர் பரிபூரண பலன் அளித்திருக்கிறாரென்றும், பத்தியுள்ள கிறீஸ்துவர்கள் சகலரும் வந்து ஷெ பலனடைய விரும்பப்படுகிறார்களென்றும், ஷெ கோவில் பங்கு சங். ரோச் சுவாமியார் தெரிவிக்கிறார்.

பிரான்சும், கத்தோலிக்குப் பள்ளிக்கூடங்களும்.—பிரான்ஸைப்போல வேத வைராக்கியமும் தேவ பக்தியுங்கொண்ட தேசமுமில்லை; அதைப்போல் நாஸ்திகமும், வேதத் துவேஷமுங்கொண்ட தேசமுமில்லை யென்பதற்கிலக்காக, அது சிலகாலம் அப்படியும், சிலகாலம் இப்படியும் நடந்துகொண்டிருப்பது நண்பர்கள் அறியாத விஷயமல்ல. அது பக்தியுள்ள நாடு என்பதற்கு பூர்வகாலந்தொட்டு அதிலுள்ள எண்ணிறந்த கோவில்களும், மடங்களும், லூர்து ஆண்டவள் கெபிபோன்ற திருஸ்தலங்களும், திவ்ய க்ஷேத்திரங்களும், அதினின்று உற்பத்தியான அர்ச்சியசிஷ்டவர்களுமே சாட்சி. அது பக்தியற்ற லௌகிக நாடு என்பதற்கு, சமீபகாலத்திலே, அதாவது ஐரோப்பிய மகா யுத்தந் தொடங்குவதற்கு சற்று முன்னமே இராஜாங்கத்துக்கும், திருச்சபைக்கும் நெடுங்காலமாயிருந்த சம்பந்தத்தை நீக்கி, அது கோவில்களையும், மடங்களையும் அழித்து அவற்றின் சொத்துக்களையெல்லாம் பராதீனப்படுத்தி, குருக்களையும், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளையும் இம்சித்து வெருட்டி யோட்டின விஷயம் ஜெகத்பிரசித்தமானது. இந்தக் கொடூரச் செய்கைக் காக்கினையாகவே சர்வேசுரன் அந்தப் பயங்கர யுத்தத்தை வரவிடுத்தாரென்றும் உலகம் சொல்லாமலிருக்கவில்லை. ஆனால், அது இப்போது யுத்தத்திற்குப்பின் பழயபடி திருச்சபையின் சிரேஷ்ட புதல்வியென்னும் பேரைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டதென்பதற்கு அத்தாட்சிகள் வேணவுண்டு. அர்ச். பாப்பானவரிடத்தில் ஸ்தானாதிபதி அனுப்பியது, குருக்கள் சந்நியாசிகள் முதலியோருக்கு மீண்டும் சுவாதீனமளித்தது முதலிய பிறவுமாம். இவைகளுக்குள்ளே பெரிதுங் குறிப்பிடத்தக்கதான ஒரு விஷயம் நமக்கு எட்டுகிறது. அதாவது, தற்போது பிரான்சு தேசத்திலிருக்கும் பொது பள்ளிக்கூடங்களில், 10 மாணாக்கர்களுக்குக் குறைந்துள்ள பள்ளிக்கூடங்கள் 3,569 இருக்கின்றனவென்றும், அவைகளில் ஐந்து முதல் பத்து பேருள்ளவைகள் 2,522 என்றும், ஐந்துக்குக் குறைந்தவர்கள் உள்ளவைகள் 1,047 என்றும் தெரியவருகிறது. இவ்வாறு பொதுப் பள்ளிக்கூடங்களில் மாணாக்கர்கள் குறைந்துபோனதின் அர்த்தமென்ன? கோவில் பள்ளிக்கூடங்களிலும் மடத்துப் பள்ளிக்கூடங்களிலும் மாணாக்கர்கள் சேர்ந்துவிடுகிறார்கள் என்பதே. இதனால் பிரான்சுகாரர்கள் வேத வைராக்கியங் கொண்டிருக்கிறார்கள் என்று விசிதமாகிறதல்லவோ? சர்வேசுரனுக்குத் தோத்திரமுண்டாகக்கடவது!

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

மோவ்.

செக்குந்திராபாக்கத்தில் வசிக்கும் கனம். ஏசப்பனுடையவும் திமிங்கம்மாளுடையவும் குமாரத்தியும் எனது அருமை மனைவியுமான அந்தோணியம்மாள் தனது எட்டாம் பிரசவத்தில் கண்ட நோய் எவ்வித அவிழ்தத்தினாலும் சிகிச்சையினாலும் குணமுண்டாகவில்லையென்று கண்டு, நல்லறிவோடிருக்கும்போதே கடைசி தேவத்திரவிய அனுமானங்களைக் குறையறப் பெற்று சேசு மரியே சூசையென்னும் பரிசுத்த நாமங்களை யிடைவிடாது பத்தியோடு உச்சரித்துக் கடந்த ஜூலை மாதம் 25-ம் தேதி திங்கட்கிழமை காலை ஏழரைமணியளவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தாள். இதைக் கண்ணுறும் சகோதரர் சகோதரிகள் இவ்வேழையின் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளும்

அருமை மனைவியை யிழந்து பரிதபிக்கும்
பிராஞ்சிஸ் டேவிட்.

☞ இந்த விண்ணப்பத்தை தயையுடன் வாசியுங்கள்

The Catholic Indian Philanthropic Society, Madras.

கத்தோலிக்கு இந்தியர் பரோபகார சபை, சென்னை.

ஜாதிபேதமற்ற கத்தோலிக்கு கிறீஸ்துவர்களுக்குள் ஒற்றுமை, பிறர்சிநேகம், அன்னியோன்னியம், பொருள்சகாயம், கல்வியபிவிருத்தி, குருபக்தி, இராஜவிசுவாசம் என்னும் முக்கிய சாதனங்களைச் செய்யவும், அநாத பிள்ளைகளுக்கு மடமும் (Orphanage) மற்றும் ஏழைச் சிறுவர்களுக்குக் கல்வி, கைத்தொழிற்சாலையும் (Industrial School) ஏற்படுத்துவதற்குமே 1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது.

சபையின் ஆதரணைக் கர்த்தாக்கள்.

அர்ச். பாப்பானவரின் ஸ்தானாதிபதி, சென்னை அதிமேற்றிராணியார், திருமயிலை மேற்றிராணியார் ஆகிய ஆண்டவரவர்கள்.

அப்போஸ்தோலிக்கு ஸ்தானாதிபதி அவர்களின் அங்கீகாரப் பத்திரம்.

பெங்களூர், 30–1–21.

சென்னை, கத்தோலிக்கு இந்தியர் பரோபகார சபையின் நோக்கங்களை நாம் மனப்பூர்வமாய் அங்கீகரிப்பதோடு அதனுடைய மெம்பர்களையும் உதவி கர்த்தாக்களையும் ஆசீர்வதிக்கின்றோம்.

✠ பேதுரு பைசானி,

கான்ஸ்டான்ஸாபதி அதிமேற்றிராணியாரும் இந்தியா கீழ்த்திசை நாடுகளுக்கு அப்போஸ்தோலிக்கு ஸ்தானாதிபதியும்.

கொள்கை.—"தம்மைத்தாம் ஆதரிக்கிறவர்களைத் தற்பரன் ஆதரிக்கிறார்."

கருத்து.—"அன்பு, சகோதரத்துவம், தருமம்." "ஏழைகளுக்கிடுகிறவன் சர்வேஸ்வரனுக்குக் கடனளிக்கிறான்."

முடிவாகாத கோவில் கட்டிடம்.

நிதி உதவிக்காக விண்ணப்பம்.

"சந்தோஷத்தோடே கொடுக்கிறவன்பேரில் சர்வேசுரன் பிரியப்படுகிறார்." (அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கெழுதிய II-வது நிருபம், 9-ம் அதிகாரம், 7-ம் வசனம்.)

சென்னை பெரம்பூருக்கடுத்த மாதவரத்தில் சுமார் 11 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தை அதிற் கட்டியுள்ள மேற்காட்டிய முடிவாகாத கோவில் கட்டிடத்தோடு, சென்னை அதிமேற்றிராணியாராகிய மிகவும் வந்திக்கத்தக்க அருளப்ப ஆலன் ஆண்டவரவர்கள் நமது அநாத பிள்ளைகளுக்கும் ஏழைச் சிறுவர்களுக்கும் மடமும், கல்வி, கைத்தொழிற்சாலையும் கட்டுவதற்காக சபைக்கு அளித்திருக்கின்றனர்.

சென்னை திருமயிலை மேற்றிராணியாராகிய சரியாய் வந்திக்கத்தக்க தியோடோனியஸ் தே காஸ்ட்ரோ ஆண்டவரவர்கள் பிரதம போஷகராய் சபையை ஆதரித்துவருகிறார்.

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

6- OCT 1921
MADRAS

புத்தகம் 19. } அக்டோபர் 1921. { இலக்கம் 10.

GUARDIAN ANGELS.
காவலான சம்மனசுக்கள்.

பெரியதோர் அரசன் தன் விருப்பங்களையுந் தாக்கீதுகளையுந் தன் பிரஜைகளுக்கு அறிவிக்கும்படி அநேக தூதரை நியமிப்பதுபோல், மட்டற்ற ஞானமுடைத்தான சர்வேசுரனும் தமது திருச்சித்தத்தை மனிதருக்கு அறிவிக்கும்படி தேவதூதர்களை ஏற்படுத்தியுள்ளார்.

மனிதனுடைய மரண சத்துருவாகிய நரகப் பேயானது, ஆதிமனிதன் சர்வேசுரனுடைய கட்டளையை மீறி நித்தியமாய்க் கெடும்படி சர்வ பிரயாசையும்பட்டதென்று வேதாகமத்தால் அறிகிறோம். அதுமுதற்கொண்டு சகல மனிதரையுந் தந்திர சோதனைகளால் கெடுத்துத் தன்னுடன் நித்திய நரகத்தில் வேதனைப்படும்படி இடைவிடாமல் முயற்சித்துவருகிறது அத்துர்மனப் பசாசு. இதை நமக்கு உணர்த்தும்படிதான், "சகோதரர்களே! யாரைப் பிடித்து விழுங்கலாமென்று கர்ச்சித்து திரியும் சிங்கத்தைப் போல், உங்கள் சத்துருவாகிய பசாசும் அலைந்து திரிவதால், நீங்கள் விழித்திருந்து ஜெபியுங்கள்" என்று நம்மை எச்சரிக்கிறார் அர்ச். இராயப்பர்.

சர்வ ஞானமுடைத்தான சர்வேசுரன் நமது பலவீனத்தை யறிந்து, அந்த சதிமான சாத்தானுடைய வலையில் நின்று நம்மைக் காப்பாற்றும்படி, நம்மில் ஒவ்வொருவருக்கும் ஒரு சம்மனசை நியமிக்கச் சித்தமானார். நாம் யாதொரு துர்க்கிருத்தியத்தைச் செய்யும்படி துர்மனப் பசாசால் ஏவப்படுந்தருவாயில், நமது இருதயத்தில் ஒருவித அச்சமுந் திகிலுமுண்டாகிறதல்லோ? இப்பேர்ப்பட்ட அச்சம் யாராலுண்டாகிறது? நமது காவல் சம்மனசால்தான். அவர்தான், நாம் கட்டிக்கொள்ளத் துணியும் பாவத்தில் விழாதபடிக்கான நற்புத்தியை நமதிருதயத்தில் வாவிடுகிறார். நாம் துரதிஷ்டமாய் அந்தப் பாவத்தைக் கட்டிக்கொண்டபின்னும் நமது இருதயத்தில் ஒருவித துக்க துயரத்தையுண்டாக்கிறவரும் நமது காவலான சம்மனசுதான்.

நாம் பசாசின் சோதனைக்குள்ளாகி பாவத்தைக் கட்டிக்கொள்ளும் சமயத்தில் பசாசு சந்தோஷித்து மகிழ, சம்மனசானவர் நற்புத்திகளை நமது இருதயத்தில் வருவித்து, அதை விட்டுவிலகி, பாவத்தால் நாம் போக்கடித்த தேவ இஷ்டப்பிரசாதத்தை பாவசங்கீர்த்தனத்தால் பெற்றுக்கொள்ளும்படிக்கான நல்லாலோசனைகளால் நம்மைத் தூண்

டுகிறார். ஆகையால் இப்பேர்ப்பட்ட உத்தம சிநேகிதரான சம்மனசானவரின் ஆலோசனையைத் தட்டிவிட்டு, பாவத்தின்மேல் பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறவன் பெரும் ஆபத்துக்குள்ளாவானென்று அர்ச். இலாரியார் கூறுகிறார். ஆகையால் அனேக வருஷகாலமாய்ப் பாவசங்கீர்த்தனம், தேவநற்கருணை முதலிய தேவத்திரவிய அனுமானங்களை அசட்டைசெய்யுங் கிறீஸ்துவர்களே! குடி, விபசாரம் முதலிய பாவச்சேற்றில் மூழ்கிக் கெட்டழியும் பாவிகளே! பகை, மனஸ்தாப முதலிய பாவத்தில் மூர்க்கத்தனமாய் சலஞ்சாதிக்கும் ஆத்துமங்களே! உங்கள் நல்ல சம்மனசு உங்களுடைய இருதயத்தில் கொடுத்த ஏவுதலை எத்தனையோவிசை தட்டிவிட்டீர்கள்! அந்தப் பாவவழியை விட்டுவிலகும்படி அவர் உங்களுக்குத் தந்த நல்லாலோசனைக்கு நீங்கள் காதுகொடுக்காமற்போனீர்கள்! இதனாலவருக்கு துக்கத்தையும், பசாசுக்கு அகமகிழ்ச்சியையும் உண்டாக்கி, உங்களுக்கு நித்தியகேட்டை வருவித்துக்கொண்டீர்கள்! இனியாகிலும், உங்கள் உத்தம சிநேகிதாகிய நல்ல சம்மனசானவரின் சொற்படி நடக்க முயலுவீர்களாக.

நம்மை துஷ்டப் பேயின் தந்திரசோதனைகளினின்று காப்பாற்றும்பொருட்டு சர்வேசுரன் சம்மனசுக்களை நம்மிடத்திலனுப்புவதுடன், நல்லோருக்கு துஷ்டரால் உண்டாகும் தின்மையினின்று அவர்களை யிரட்சிக்கும்பொருட்டும் பற்பல சமயங்களில் சர்வேசுரன் அவர்களை அனுப்புவதுண்டு. ஜெருசலேம் தேவாலயத்திலுள்ள விலையுயர்ந்த பாத்திரங்களையும், ஏராளமான திரவியத்தையுங் கொள்ளையடிக்கும்படி ஒரு துஷ்ட மந்திரி அதில் பிரவேசித்தபோது, சம்மனசுக்கள் அங்குகாணப்பட்டு, அந்த மந்திரியை எப்படி அடித்தார்களெனில், அவன் அங்கேயே குற்றுயிராய் விழுந்துவிட்டான். வேறொரு அரசன் யூதர்மேல் அநியாயமாய்ப் படையெடுத்து அவர்களைத் தாக்கினபோது சம்மனசுக்கள் போர்வீரர்களைப்போல்காணப்பட்டு, சத்துருக்கள் படையை முறியடித்தார்கள். வேதத்தினிமித்தம் சிறைப்படுத்தப்பட்ட அர்ச். இராயப்பரையும், வேறு அநேக வேதசாட்சிகளையும் சம்மனசுக்கள் விடுதலைசெய்தார்கள். சீரிய அரசன்மீது அவனுடைய சத்துரு ஏராளமான படையைத் திரட்டிக்கொண்டு அவனைத் தாக்கிய போது, ஷெ நல்ல அரசன் சர்வேசுரனை நோக்கி தன்னைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டதன்மேல், சர்வேசுரனுடைய உத்தரவுப்படி சம்மனசுக்கள் தோன்றி துஷ்ட அரசனுடைய படையை நாசப்படுத்தினார்கள்.

மேலும் நமக்குண்டாகும் ஆபத்து அவசரங்களில் நமக்கு உதவி ஒத்தாசை புரியும்படி சர்வேசுரன் சம்மனசுக்களை அனுப்புவதுண்டு. இசரேலித்தார் வனாந்தரத்தில் பிரயாணஞ்செய்த காலத்தில், பகலில் மேகத் தூணாகவும், இரவில் அக்கினித் தூணாகவும் ஓர் சம்மனசு தோன்றி அவர்களுக்கு வழிகாட்டினார். லோத்தென்பவரையும் அவர் குடும்பத்தையும் சோதோம் கொமோராவின் அழிவினின்று ஓர் சம்மனசானவர் காப்பாற்றினார். வனாந்தரத்தில் அலைந்து திரிந்த ஆகாரென்பவளைத் தேற்றி யிரட்சித்ததும் ஒரு சம்மனசே. சின்ன தோபியாசை தூரமான ஊருக்கு அபாயமின்றி அழைத்துக்கொண்டு போய், அவருக்குச்சேரவேண்டிய பாகத்தை அவருக்குப் பெற்றுக்கொடுத்து, அவருக்கு மணமுடித்துவைத்து, அவரைத் திரும்பதன் தகப்பனிடம் கொண்டுவந்து சேர்த்ததும் ஓர் சம்மனசே. பிறகு அந்தகனான பெரிய தோபியாசைக் குணப்படுத்தினதும் ஓர் சம்மனசே. சிங்கக்குகையில் எறியப்பட்ட தனியேல் துஷ்டமிருகங்களுக்கு இரையாகாமல் காப்பாற்றப்பட்டதும் ஓர் சம்மனசாலேயே. ஒரு சம்மனசின் உதவியால்தான் அக்கினிச் சூளையில்போடப்பட்ட மூவ்வாலர்களும் அற்பமோசமுமின்றி காப்பாற்றப்பட்டார்கள்.

விஸ்வாசிகள் வேதத்தினிமித்தம் தண்ணீரில் அமிழ்த்தப்பட்டபோதும், துஷ்ட மிருகங்களுக்கு இரையாகப் போடப்பட்ட போதும், நெருப்பில் சுட்டெரிக்கப்பட்ட போதும், ஈயக்கொப்பரையில் தள்ளப்பட்டபோதும், இன்னும் பற்பல வேதனைப்படுத்தப்பட்டபோதும், சம்மனசுக்களால்தான் அவ்வேதசாட்சிகள் ஆறுதல் அடையப்பெற்றுக் காப்பாற்றப்பட்டார்கள். புண்யவாளரும் சம்மனசுக்களால் அடைந்த நன்மை யுபகாரங்கள் இத்தனையென்று கணக்கிடமுடியாது. சம்மனசுக்கள் நமக்குப் புரியும் நன்மை யுபகாரங்களை கண்ணால் பார்த்தறியாவிடினும், நாம் அறியாத விதமாய் எத்தனையோதரங்களில் அவர்களால் நாம் காப்பாற்றப்பட்டிருக்கிறோம். பலதடவை ஜலம், நெருப்புமுதலிய

விபத்தினின்று தப்பித்தது அந்த சம்மனசுக்களுடைய உதவியால்தான். நாம் படுத்து நித்திரைசெய்யும்போது, பாம்பு, தேள் முதலிய விஷஜந்துக்களின் மோசத்தினின்று அவர்கள் நம்மைக்காப்பாற்றியிருக்கிறார்கள். துஷ்டருடைய சகவாசத்தை விட்டுவிலகவும், பாவமுண்டாகத்தக்க இடம், மனிதர் சமய முதலியவற்றை விட்டுவிலகும்படிச் செய்ததும் நமது காவல் சம்மனசுக்களே. நாம் அடிக்கடி ஜெபஞ்செய்து, பூசைகண்டு, தேவத்திரவிய அனுமானங்களை யடிக்கடி பெற்று சர்வேசுரனுக்கு உகந்த பிள்ளைகளாய் நடக்க நல்லபுத்தி ஆலோசனை கொடுத்துவருவதும் நமது காவலான சம்மனசுக்களே.

ஆகையால் நமக்கு இவ்வளவு பேருபகாரங்களைப் புரிந்துவரும் நல்ல சம்மனசுக்களை நமக்கு சர்வேசுரன் கட்டளையிட்டதற்காக அவருக்கு நாம் எவ்வளவு நன்றிபுரியக் கடமைப்பட்டிருக்கிறோமென்று யோசித்துப்பார்ப்போமாக. ஆ! சர்வேசுரா! சர்வ வல்லபமும் மகிமைப்பிரதாபமுமுள்ள கர்த்தரே! மோட்ச சிம்மானத்தில் தேவரீருக்குத் தொண்டுபுரியும் உன்னதமும் பரிசுத்தமும் மகத்துவந் தங்கியதுமான சம்மனசுக்களை எங்களுக்குக் காவலாகக் கொடுத்ததற்காக உமக்கு எங்களால் என்ன நன்றிகூறக்கூடும்! அருவருப்புக்குரிய புழுக்களாகிய அடியோருக்கு இவ்வளவு மேலான—பரிசுத்தமான—சம்மனசுக்களைத் துணையாகக் கொடுத்ததற்கு எங்களால் என்ன பிரதிநன்றி காட்டக்கூடும்! மனிதனுக்குத் தமது சம்மனசை காவலாக நியமிக்கச்சித்தங்கொண்ட சர்வேசுரனுடைய மட்டற்றசிநேகப்பெருக்கம் எப்பேர்ப்பட்டது என்று அதிசயிக்கிறார் அர்ச். பெர்நார்து. ஆகையால் சர்வஜீவதயாபர சர்வேசுரனுடைய பரிசாரகரும் அசரீரி வஸ்துக்களுமான பரிசுத்த சம்மனசுக்களால் காத்துக் காவல்செய்து ஊழியஞ்செய்யப்படுவதற்கு ஓ! மனிதா! நீ யார்? அற்ப வஸ்துவல்லவோ? புழுவுக்கு இரையல்லவோ நீ? மண்ணோடு மண்ணாய்ப்போகும் மண்ணல்லோ நீ? இவ்வளவு அற்பனாகிய உனக்கு சர்வ வல்லபரான கடவுள் மோட்ச சிம்மாசனத்தில் தமக்குப் பரிசாரகஞ்செய்யும் பரிசுத்த தூதரை உன்னிடம் அனுப்பி, பசாசின் சோதனையில் நீ அகப்படாதபடி உதவி செய்து, உனக்குண்டாகும் ஆபத்து விபத்துக்களினின்று உன்னைக் காப்பாற்றி, பாவவழியைத் தவிர்த்துப் புண்யமார்க்கத்தைக் காட்டி, கடைசியாய் உன்னை மோட்சத்துக்கு அழைத்துக்கொண்டுபோகச்செய்யும் இந்த மேலான உபகாரங்களுக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரம் புரியக்கடவாய்.

இரவும் பகலும் நம்மோடுகூட இருந்து ஆத்தும விஷயமாகவும் சரீர விஷயமாகவும் நமக்கு வரக்கூடிய தின்மைகளினின்று நம்மைக் காப்பாற்றி, நமக்கு நல்லாலோசனை தந்து, நமது நன்மையைக் கோரிவரும் சர்வேசுரனுடைய மந்திரிகளாகிற நமது காவல் சம்மனசுக்களை அன்புடன் நேசிக்க கடமைப்பட்டிருக்கிறோம். அரூபிகளான இந்த உத்தம சிநேகிதரைவிட, இப்பதவியில் உகந்த சிநேகிதர் நமக்கு யாருமில்லை. இப்பேர்ப்பட்ட மெய்யான சிநேகிதரை நாம் உண்மையாக சிநேகிக்கவேண்டும். அவர் நமது இருதயத்தில் உதிக்கச்செய்யும் நல்ல எண்ணங்களுக்குச் செவிசாய்க்கும்போதெல்லாம் அவரை நேசிக்கிறோம். அவர் நமது இருதயத்தில் எழுப்பிவிடும் ஏவுதலுக்கிணங்கும்போதெல்லாம் அவரை நேசிக்கிறோம். அவரால் நமதிருதயத்தில் எழும்பும் உணர்ச்சிகளுக்கு அமைந்து நாம் பாவத்தை விட்டுவிலகும்போதெல்லாம் அவரை நாம் சிநேகிக்கிறோம். ஆனால் காவல் சம்மனசின் ஏவுதலுக்கு காதுகொடாதவன் அவரை நிந்தித்து, அவசங்கைப்படுத்தி, மரண சத்துருவாகிய துஷ்டப் பசாசுக்குப் பிரியப்பட்டு, அந்தப் பேயை நேசிக்கிறான். இது எப்பேர்ப்பட்ட அக்கிரமம்! நன்றிகெட்டத்தனம்! நாம் இவ்வாறு செய்யாமல் நமது பிராண சிநேகிதரான காவல் சம்மனசுக்களை அன்புடன் நேசித்து சங்கித்து கனப்படுத்துவோமாக.

மேலும் நாமவர்களுடைய நன்மாதிரிகையை பின்பற்ற முயலவேண்டும். அந்தப் பரிசுத்த சம்மனசுக்கள் தேவ கட்டளைக்கு இணங்கி நீசரான நம்மிடம்வந்து இரவும் பகலும் நம்முடன் வசித்து, நமக்கு உதவிபுரிந்து பாவசோதனையினின்று நம்மைக் காப்பாற்றி, நமது செபத்தை சர்வேசுரனுடைய சந்நிதியில் ஒப்புக்கொடுத்து, அவர் கொடுக்கும் தேவ உதவியை நமக்குக் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். அவ்வாறே நாமும் சர்வேசுரனுடைய கட்டளைப்படி நடக்கப் பிரயாசைப்படவேண்டும்.

நாம் நமது நல்ல சம்மனசை நேசித்து சங்கித்து அவரைக் கண்டுபாவிப்பதுடன் அவரைப்பார்த்து அடிக்கடி வேண்டிக்கொள்ளவும்வேண்டியது. காவலான சம்மனசுக்கள் இடைவிடாமல் நம்மோடு இருந்தபோதிலும் சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசித்துவருகிறதைப்பற்றி நமக்காக சர்வேசுரனைப் பார்த்து வேண்டிக்கொள்ளும்படி அவர்களை நாம் மன்றாடவேண்டும். நாம் பசாசு சோதனையால் துன்பப்படும்போதும், கஸ்தி துன்பத்தால் அவதிப்படும்போதும், வியாதிநோவால் வருந்தும்போதும் சம்மனசுக்களை நோக்கி மன்றாடவேண்டும். நாம் நித்திரைசெய்யுமுன், நம்மை யவர்கள் கையில் ஒப்பித்து அவர்கள் உதவியைத் தேடுவது நல்ல வழக்கமாகும். சம்மனசுக்களின் திருநாளாகிய அக்டோபர் மீ 2உ பாவசங்கீர்த்தனஞ்செய்து நன்மை வாங்கி அவர்களைப்பார்த்துபக்தியோடுவேண்டிக்கொள்வார்கள் நல்ல கிறீஸ்துவர்கள்.

மேலும் அர்ச்சியசிஷ்ட சம்மனசுக்கள் நம்மோடு இடைவிடாமலிருப்பதால், அவர்கள்சமுகத்தில் மேரை மரியாதையை யனுசரித்து அவர்கள் முன்னிலையில் எந்தப் பாவத்தையுஞ்செய்ய அஞ்சிக் கூசவேண்டும். சம்மனசுக்கள் அற்பமாசுமற்ற பரிசுத்த வஸ்துக்களாகையால், அவர்கள் சமுகத்தில் பரிசுத்தனத்துக்கு விரோதமான எந்தக் கிரிகையையுஞ்செய்யப் பயப்படவேண்டும். பயணத்துக்குமுன் அவர்கள் உதவியை மன்றாடுங்கள். மேலும் உங்கள் வீட்டிலுள்ள சிறுபிள்ளைகளுக்கும் காவலான சம்மனசுக்களைப் பற்றிச் சொல்லி, அவர்களுக்கு உகந்த பிள்ளைகளாய் நடக்கவும், அவர்களைப் பார்த்து நாடோறும் வேண்டிக்கொள்ளவும் அவர்களுக்குப் புத்திசொல்லவேண்டும்.

இவ்வாறு நாம் நமது காவலான சம்மனசுக்கள்மட்டில் பக்திவைத்துவருவோமாகில், அவர்கள் சகலஅத்துமசரீர அபத்துக்களினும் நின்று நம்மைக் காப்பாற்றி, மரணநேரத்தில் நரகச் சாத்தானுடைய சோதனையினின்றும் நம்மை யிரட்சித்து, நமதாத்துமம் உத்தரிக்கிற ஸ்தல நெருப்பில் வேதனைப்படும்போது, புறத்தியாராலுண்டாகும் ஞான நன்மைகளை நமக்குப் பெற்றடைந்துகொடுத்து, கடைசியாய் நமதாத்துமத்தை நித்தியானந்த பாக்கியம் நிறைந்த வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோவார்களென்று அறியக்கடவோமாக.

SELF HELP.
சுய முயற்சி.

ஏதோ, நாமிவ்வுலகில் பிறந்துவிட்டோம்; இன்னுமொருமுறை பிறப்பதில்லை; ஒருநாளிறப்பது மாத்திரம் உண்மையிலுமுண்மை. மனிதராய் ஜனனமெடுத்த பேர்கள் தமக்காவது பிறருக்காவது பிரயோஜனத்தைத் தரத்தக்க மகத்தான காரியங்களைச் செய்யவேண்டுமென்று உலகம் எதிர்பார்க்கிறது. என்ன காரியத்தை எதிர்பார்க்கிறதென்பது வீண் கேள்வி; ஏனெனில் தற்புகழ்ச்சிக்காக தர்க்கமாடி காலத்தை வீணில் போக்கிவிட்டோம். எஞ்சி நிற்கும் சொற்ப காலத்திற்குள் ஒவ்வோர் மனிதனும் செய்துமுடிக்கவேண்டிய காரியங்கள் பலவுள. பெரியவனோ, சிறியவனோ, கற்றவனோ, மற்றவனோ, தனவந்தனோ, தரித்திரனோ எல்லோருக்கும் கடவுளால் கொடுக்கப்பட்ட இயற்கை அறிவும் சக்தியும் உண்டென்பது உண்மை விஷயம். அத்தகைய நிச்சய சக்தியோ நம் மனமெனும் தெளிவான ஜலத்தில் பாசி என்னும் போர்வையால் மூடப்பட்டு மறைந்துகிடக்கின்றது. அம்மாசு, மறு, நமக்கு இயற்கையாய் இருந்ததல்ல. ஆனால் இடைநடுவில் நாமே யுண்டாக்கிக்கொண்ட குருட்டாட்டம். எப்படியானாலும் அதை அகற்றவேண்டியது அகத்திய சந்தர்ப்பமாயிருப்பதால் எத்தகைய கருவியால் அதை அகற்றவேண்டுமென்பதே முக்கியமான அம்ஸம். அதை எப்படித் தேடுவது, யாரிடம் வாங்குவது என்றாலோ, யாரிடமும் வாங்கவும் தேடவும் வேண்டிய அவசியமேயில்லை. அது நம்முள்ளே சுவாலிக்கு முயற்சியாலுண்டாகும் சக்தியின் ஔஷதமே அவ்வந்தகாரத்தை ஒழிக்கவல்லது. மனமெனும் பூமியில் முயற்சியெனும் மண் வெட்டியால் கிளறி, ஆழமாய்த் தோண்டினால் அச்சக்தியின் கனகனத்தைக் கண்டறியலாம்.

அதன் லட்சியத்தைக் கைப்பற்றிய ஜப்பானின் தற்கால நாகரிகத்தைப்பற்றி யாவருங்கேள்வியுற்றிருக்கலாம். உலக வல்லரசுகளுள் நாங்களும் ஒன்றெனக் கூறும் பெருமை ஜப்பானுக்கு எதனால் வந்தது? அது ஜனத்திலும் பணத்திலும் விசாலத்திலும் தனக்கு நிகரில்லை என எண்ணிய ருஷியாவை முறியடித்து, வெற்றிமாலை சூடி, வீரப்பிரதாபம் பெறச்செய்தது யாது? பெரிய ஐரோப்பா யுத்தத்தின்போது ஜப்பானியர் நம்மிந்தியாவுக்கு அனுப்பிய பொருள்கள் இன்னும் மூலைமுடுக்குகளிலும், சாலை ஷாப்புகளிலும் காணலாமே; உலக வியவகாரங்களிலும், கிருஷிகம் வியாபார முதலிய விஷயங்களிலும் பீடுபெறச்செய்தது யாது? சுய முயற்சியல்லவோ குலமகன்முதல் குப்பைக்காரன்வரை சகலரும் சமமென அவர்களை நினைக்கச்செய்தது? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளென்ற பாடத்தைக் கற்பிக்கச்செய்தது? மோசமூட்டையாகிய ஜாதிமூட்டையை அவிழ்த்தெறியச்செய்தது? சுருங்கச் சொல்லுமிடத்து, க்ஷேமமுறச் செய்தது, நாடு செழிக்கச்செய்தது. சமாதானமாய் ஜனங்கள் வாழ்வதற்கும் தன் முயற்சியே காரணம். ஆனதுபற்றி அத்தேசத்தைப்போல் நம் தேசமும் முன்னுக்கு வரவேண்டுமென்ற சிந்தனை தேசாபிமானிகள் ஒவ்வொருவர் இடத்தும் உதிக்கவே உதிக்கும். ஒவ்வொருவனும் நாலுபேருக்குமுன் தான் மனுஷனெனக் காட்டிக்கொள்ள சந்தர்ப்பமுண்டு. ஆனால் சந்தேகமெனும் தோஷம் அவனுக்கு முட்டுக்கட்டையாயிருக்கலாம். அந்த முட்டுக்கட்டையை உதைத்துத் தள்ளிவிட கீழ்கண்ட இரண்டொரு உதாரணம் உதவும்.

தற்போது நம்மிந்தியாவிற்கு ராஜபிரதிநிதியாய் வந்திருக்கும் (ரீடிங்) பிரபு அவர்கள் ஓர் பரம ஏழைக் குடும்பத்தார்தான். கொஞ்சகாலத்திற்குமுன் ஓர் நீராவிக் கப்பலில் பித்தளை சாமான் விளக்கும் தொழிலிலிருந்தவரே இம் முப்பதுமூன்று கோடி ஜனங்களை ஆளவந்திருக்கிறார். எவ்வாறு இப்பதவியை அடைந்தாரென்று எவரும் ஆச்சரியப்படலாம். சந்தேகப்படலாம். சந்தேகமும் ஆச்சரியமும்படவேண்டிய காரியமே இல்லை. ஏனெனில், சுய முயற்சியானது இதைவிட பெரிய அந்தஸ்த்தில் சேர்க்கும் தன்மையுடையது. இன்னும் மேனாட்டில் பூத பௌதிக சாஸ்திரங்களிலும், நவீன இயந்திரத் தொழில்களிலும், புஜபல வீரபராக்கிரமங்களிலும், கவிசிரேஷ்டர்களிலும் சிறந்து விளங்கிய ராபர்ட்சன் சிமித், ஓல்ட்பீல்ட், பர்ட்டன், வொயிட், ஷேக்ஸ்பியர், கிளைவ், கிச்சினர் முதலியவர்கள் சுய முயற்சியால்தான் மேன்மை பெற்றிருந்தார்களென்பது வெளிப்படை. இன்னும் உலகத்தில் தோன்றியிருக்கும் உன்னத புருஷர்களின் சரித்திரத்தை நோக்குமிடத்து எல்லோரும் சுய முயற்சியால்தான் பேரும் புகழும் படைத்தனரென்று விளங்கும்.

இத்தகைய முயற்சியின் நுட்பத்தை கண்டறிந்தவர்கள்தான் காலத்தின் அருமையையுந் தெரிந்தவர்களாவர். ஒரு நிமிஷநேரத்தை ஒரு யுகமாய் நினைத்த பெய்லியுடைய சரித்திரம் அறியத்தக்கதாகும். பகுத்தறிவைப் பெற்ற நாள் தொடங்கி 66 வருடமாய் அவர் உலகோபகாரமாகச் செய்துள்ள நவீன கருவிகளும் புஸ்தகங்களும் கொஞ்சமா? நாகரீக தேசமெங்கும் உலவும் பேச்சு யந்திரமாகிய பத்திரிகையின் தோற்றத்திற்கு இவரும் ஓர் காரணபூதராவர். இம்மேதாவி தன் மரணத்தருவாயில் வைத்தியனிடம் நான் இன்னும் எத்தனை மணிநேரம் ஜீவிப்பேனென்று கேட்க ஒரு நிமிஷமென்று விடை பகரப்பட்டதும் சட்டென படுக்கையைவிட்டு எழுந்து இந்த சுவல்ப நேரத்தில் எவ்வளவோ காரியம் செய்துவிடலாமெனக் கருதி ஏதோ எழுதப் போகுமுன் உயிர்துறந்துவிட்டனராம். ஆ! “என்ன வியப்பு”; அல்லும் பகலும் ஓய்வின்றி 66 வருடமாய் உத்கிருஷ்ட விஷயங்களில் செலவழித்து கடைசி நிமிஷத்தையும் பெரிதாக எண்ணிய இம்மேதாவியை என்னென்று சொல்லுவது? கேவலம் தினேதினே உண்டு, உடுத்தி உறங்கும் தொழிலிலேயே பிரவர்த்திக்கும் நமக்கு இச்சம்பவம் வியப்பிலும் வியப்பாகத்தான் தோற்றும். ஏனெனில், காலத்தின் சீலத்தை நாம் அறியோம். அவர்களே அறிந்தவர்கள். ஆகவே, அவர்களே இப்பதவிகளுக்கு லாயக்கானவர்கள். எனினும் நாம்தான் காலத்தை வீணில் போக்கிவிட்டோமே என்று மனச்சோர்வடையவொண்ணாது. அணைகடந்த வெள்ளம் அழுதாலும் திரும்பாதென்பது உண்மைதான். ஆகிலும் காலமெல்லாம் போய்விட்டதென்றுங் கவலைப்படுவதில் பிரயோஜனமில்லை. அதற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ள இடமுண்டு. மனமுண்டானால் இடமுண்டு. இன்றே வைராக்கியமெனும் மரத்தை மனதில் புகவிட்டு நாம் ஏன் மேற்கூறியவர்களைப்போல் ஆகக்கூடா

தென்று எண்ணியவுடன் நம் மனதில் முயற்சி யெனுமோர் புதிய சக்தி புலப்படும். அம்முயற்சியைத் தளரா மனதோடு செய்துபார்த்தால் இன்னும் ஓர் புதிய சக்தி உதயமாகும். அதற்குப் பின்னமாக சந்தேக அசக்தி சார்ந்து நிற்கும். அதை உடனே கழற்றி எறிந்துவிடவேண்டும். அதற்கப்பால் நாம் முதலாவது செய்யப்புகும் முயற்சியில் பல விக்கினங்கள் நேரலாம். பொறுத்துக்கொண்டு மறுமுறை ஆரம்பித்துப்பார்க்கவேண்டும். அதிலும் தவறலாம், காரியமில்லை. மறுமுறை விடாமுயற்சிசெய். அது எதிரிடையாய் முடிந்தாலும் முடியலாம்; அதை மாயை என்றெண்ணு. இன்னும் ஊக்கத்தோடு செய்துபார். சிலசமயம் உனக்கு மனோ வியாதியையும் சரீர ஆயாசத்தையும் கொடுத்து உன்னைத் துன்புறச்செய்யலாம்; அதைரியப்படாதே; மனத்திடங்கொள். ஏனென்றால் துன்பத்திற்கு சந்துஷ்டியே முடிவு. ஆகவே, இன்றுதொடங்கி ஓர் சிறிய காரியத்தில் உன் முயற்சியைச் செலுத்தப் பழகு. அது சித்திக்கும். மறுமுறை உன் படிப்பிலோ, ஞானத்திலோ, வியாபாரத்திலோ, கிருஷித் தொழிலிலோ, யாதாமொன்றின்மேல் முயற்சியெனும் திருஷ்டியைச் செலுத்து. அது உனக்குக் கைகூடும். இன்னும் விடாமுயற்சியானது சத்கருமங்களைச் செய்ய உன்னைத் தூண்டும். அதன்படி நட. எடுத்த எந்தக் காரியத்தையும் நாளாவட்டத்தில் சாதிக்கும் சக்திவாளனாய் உன்னை ஆக்கிவிடும். அப்பால் உன்னை உலகம் புகழும். நீ க்ஷேமமடைவாய்; சுகமுறுவாய்; மேன்மைபெறுவாய்; இகத்தில்மாத்திரமல்லாமல் பரத்திலும் உனக்கு சன்மானமுண்டு. ஏனெனில் முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். முயற்சி திருவினையாக்கும்.

புலி. எம். இஞ்ஞாசி பர்ணந்தீஸ்.

தன்னைத்தானே அற்பன் என்றெண்ணி எவ்வித மேன்மை சிலாக்கியத்தையும் ஒருபொருட்டாய் மதியாதவன் எவனோ, அவனே மெய்யான மாட்சிமையுடையவன்.

"கிறீஸ்துநாதரைப் பின்பற்றுகிறதற்காக சகதியைப்போல" இலௌகீக காரியங்களை எல்லாம் எண்ணுகிறவனே மெய்யான ஞானமுடையவன்.

மேலும் சர்வேசுரனுடைய சித்தத்தை நிறைவேற்றித் தன் மனதை வெறுப்பவனே மெய்யான கல்விமான்.

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

11-ம் அதிகாரம்.

உண்மையான தடை — அத்தடையை முறிக்க அர்ச். மோனிக்கம்மாள் சுசீலத்துடன் எடுத்துக்கொள்ளும் அரும் பிரயாசைகள்—அகுஸ்தீன் ஆத்துமத்தில் விசுவாசத்தின் உதயம்.

(முன் தொடர்ச்சி.)

அகுஸ்தீன் மெய்ம்மறையின் பாதையைத் தேடிக்கொண்டு வெகுகாலம் அலைந்து திரிந்திருந்த காலையில், அரூபியான கடவுளல்லவோ அவருக்குக் கைலாகுகொடுத்துச் சன்மார்க்கத்திற்குப் போகும் வழியைக் காட்டினார். இப்போதும் அதேபரம கடவுளின் ஏவுதலினாலேயே, அவர் அர்ச். சின்னப்பர் நிருபங்களை வாசிக்கத் திறந்தார். இத்திரு நிருபங்களை வாசிப்பதினால் தன் பாவச் சந்தோஷங்களைப் பரித்தியாகம் செய்யவேண்டிவருமே யென்னும் முன்னுணர்ச்சி கொண்டு, அவரது மனங் கலங்கிற்று. அவரது இருதயத்தில் வெறுப்பு தட்டிற்று. இருந்தாலும் நடுநடுக்கத்துடன் அதனை வாசித்தார். அவர் சொல்வது "நான் பாலனாயிருக்கும்போது என்னிருதயத்தில் அவ்வளவு ஆழமாய்ப் பதிந்திருந்த அந்தப் பரிசுத்த வேதத்தின் பாரிசமாய் என் இஷ்டத்திற்கு விரோதமாகவே எனது கண்கள் திரும்பின. யாரோ பலவந்தமாய்க் கட்டாயப்படுத்தி அவைகளை யிங்ஙனம் திருப்பினாற்போல் உணர்ந்தேன். ஏதோ ஒரு அசரீரி வாக்கியம் அந்நிருபத்தை "வாசி, வாசி" என்று என்னைக் கட்டாயப்படுத்தியபோதிலும், நான் தாமதித்து, அதை வாசிப்பதோ, அல்லது வாசியாமல் விடுவதோவென்று தெரியாமல் தத்தளித்தேன். கடைசியாய் என்ன செய்வதென்று தெரியாமல், ஒரு பக்கம் ஆசையிருந்தும், இன்னொரு பக்கம் வெறுப்பிருந்தும், நடுநடுக்கத்துடன் அந்நிருபங்களை வாசிக்க எடுத்தேன்.

இங்கேயே கடவுள் அகுஸ்தீனுக்காகக் காத்துக்கொண்டிருந்தார். பிலெச்சியர் என்பவர் சொல்வதுபோல், மேலான வேதபாரகராகிய அகுஸ்தீன், மேலான அப்போஸ்தலராகிய சின்னப்பராலேயே ஜெயிக்கப்படவேண்டியிருந்தது. இதுவுமன்றி அவதரித்த வார்த்தையானவரைப்பற்றிப் பிரசங்கித்த வேதசாஸ்திரி அர்ச். சின்னப்பர்தான். அர்ச். அருளப்பர்மாத்திரம் முன்னதாகவே அங்ஙனம் பிரசங்கித்திராவிடில், அவதரித்த வார்த்தையானவரின் வேதசாஸ்திரி என்னும் பட்டம் அர்ச். சின்னப்பருக்கே கிடைத்திருக்கும். ஆனால் இரட்சகர் உலகத்திலிருந்தபோது, நேசபாச மிகுதியால் அவரது மார்பின் பேரில் சாய்ந்துகொண்டிருந்த அர்ச். அருளப்பர், அவதரித்த வார்த்தையானவரின் பெருமைப் பிரதாபத்தைப்பற்றி வற்புறுத்திப் பேசியிருக்க, தமாஸ்குஸ் நகருக்குப் போகும் பாதையிலும், பிறகு மூன்றும் வானத்தின் பரவசத்திலும், தாம் சொல்வதுபோல், அவதரித்த வார்த்தையானவருடைய மகிமைப்பிரதாபத்தினால் உபத்திரியப்பட்ட அர்ச். சின்னப்பர், அனைவருக்கும் மேலாக அவருடைய தாழ்மையைப்பற்றிப் பேசியிருப்பது அதிசயமே. இரட்சகருடைய அப்போஸ்தலராவதற்குமுன், அவ்விரட்சகரையே வாதித்துக்கொண்டிருந்த அர்ச். சின்னப்பர், ஆதாம் தேவ கட்டளையை மீறின பரமரகசியம், மனுஷாவதாரப் பரமரகசியம், இரட்சணியப் பரமரகசியம் ஆகிய இப்பேர்கொத்த ஆழ்ந்த பரமரகசியங்களை அனைவரும் அதிசயங்கொள்ளும்படியானவிதமாய் விளக்கிக்காட்டியிருக்கிறார்.

அவைகளையவர் எவ்வளவு கண்டிப்போடும் பாஷா சக்தியோடும் விளக்கிக்காட்டியிருக்கிறாரென்றால், அப்பரம ரகசியங்களை ஏற்றுக்கொள்ளமனமில்லாதவர்களுக்குமுதலாய், அவருடைய நிருபத்தை வாசிக்கும்போது ஒருவித மனக்கலக்கம் உண்டாகிறது. அந்நிருபத்தைத் திருப்பித் திருப்பி வாசிப்பதினால், கொஞ்சங் கொஞ்சமாய் அவருடைய வாசகப் போங்கு நமது பழக்கத்திற்குவர, அதிசயத்தினால் பிரமிப்படைகிறோம். பாஷா சக்தியில், அல்லது வாசகப் போங்கில், அர்ச். சின்னப்பர், தாவீது ராசா, இஸாயாஸ், அர்ச். அருளப்பர், முதலியவர்களுக்குச் சமம் என்னத்தகும். கடவுள் அவரைக் குப்புற விழத் தாட்டியபோது, அவரது இருதயம் கிறீஸ்துநாதரை வாதிக்கவேண்டுமென்று ஆரூப் பகைவர்மத்தினால் பொங்கிக்கொண்டிருந்தபடியால் மனிதன் தன் பூர்வீக நிலைமையைவிட்டுத் தவறிவிழுந்ததை, இவரைவிட நன்றாய்க் கண்டுபிடித்தவர் யாருமில்லை. ஆதலால் ஒரு கடவுளே, நீச வேஷந்தரித்துப் பாடுபட்டு மரணித்து மனிதனை யிரட்சிக்கவேண்டியிருந்த அவசரத்தை, இவரைவிட விளக்கத்துடன் எடுத்துக்காட்டியவர் யாருமில்லை.

நிருபத்தின் முதல் வரியை வாசித்தபோதே, அகுஸ்தீன் அதிசயமுற்றார். அவர் உரோமானியானூஸுக்கு எழுதிய தேதெனில், ஆ! "ஜென்மக் குருடனுக்குக் கண் அகப்பட்டதுபோல எப்படிப்பட்ட வெளிச்சம் திடீரென உதயமாயிற்றென்று உனக்குத் தெரிந்தால், இப்படிப்பட்ட வெளிச்சத்தைக் காணப் பிரியங்கொண்ட உனக்குமாத்திரமன்று, உன் பொருளைப் பறிக்கும்படி ஒவ்வொரு நீதிஸ்தலத்திலும் உன்மேல் அத்தனைகாலம் வியாச்சியம் தொடுத்த அந்த உன் கொடிய சத்துராதிக்கும், அதைக் காட்டியிருப்பேன். எனக்குத் தோன்றுவதுபோல் அவன்மாத்திரம் அவ்வெளிச்சத்தையும் அச்சவுந்தரியத்தையும் கண்டானோ, சந்தேகமின்றி தோட்டந் துரவுகளையும், மாடமாளிகைகளையும், விருந்து களியாட்டங்களையும், மனதுக்கு மருட்சியுண்டாக்கும் மற்றெல்லாவற்றையும் துறந்துவிட்டு, பிரமாணிக்கமும் பெருந்தன்மையுமுள்ள காதலனைப்போல் பரவசமடைந்து பறந்தோடி வருவானே."

முதல் முதலாக அகுஸ்தீன் கண்டது இது மாத்திரமே. இரண்டாம் முறை இன்னும் அதிகம் அவருக்குத் தெரியவந்தது.

இருக்கும் என்று கனவில்முதலாய் அவருக்குத் தோன்றாத ஒரு பெருத்த பரம ரகசியத்தை மறைத்திருந்த திரைச்சீலை நீங்கவே, அப்பரம ரகசியம் வெளிப்படுவதைக் கண்டார். அப்பரம ரகசியத்தை பிளாட்டோ முற்றிலும் அறியாதவனாகையால்தான் அகுஸ்தீனைச் சன்மார்க்கத்தில் நடத்த அவனால் கூடாமற்போயிற்று. இப்பரம ரகசியத்தைத்தான் மனேக்கியர்கள் விளக்கிக்காட்டத் தொடங்கி, உலகத்தில் இரண்டு பிரமாணங்கள் உண்டென்று போதித்தார்கள். ஆனால் அவர்கள் பிரயாசை பயனற்றதே. இந்தப் பரம ரகசியத்தை அர்ச்.

சின்னப்பர் ஒருவரே சோதிப் பிரபையுடன் அகுஸ்தீனுக்கு விளக்கிக் காட்டினார். கடவுள் ஆதியில் மனிதனைச் சிருஷ்டித்த ஸ்திதியில் அவனில்லையென்றும், அவன் தூய பரிசுத்த அந்தஸ்தில் ஞானமும் புத்தியும் நிறைந்தவனாய் தேவப் பெருமையை யுணரும் திறமையோடு சிருஷ்டிக்கப்பட்டானென்றும், ஆனால் தன்னைத் தானே சிரேஷ்டமாய் எண்ணிக்கொண்டு, ஆங்காரத்தினால் கடவுளை விட்டுப்பிரிந்து, சுவாதீனமடைய விரும்பித் தன் திவ்ய நிலைமையை யிழந்தானென்றும், அவன் கடவுளால் கைநெகிழப்பட்டு, ஞானக் குருடனாகி, தேவ சமுகத்திலிருந்து வெகு தூரமாய்ப்போய் அவ்வளவாகப் பதங்குலைந்து ஊசலடைந்திருக்கிறபடியால், பாவமே அவனில் குடிகொண்டிருக்கிறதென்றும், பாவத்திற்குச் சார்புள்ளதும் புண்ணியத்திற்குச் சார்பற்றதுமான நிர்ப்பாக்கியம்பொருந்திய நீசப் பிரமாணம் ஒன்று என்றும் சத்தியத்தை விரோதித்துக்கொண்டு அவனில் வியாபித்துவருகிறதென்றும் அறிந்தார். இந்தப் பிரமாணத்தையே அர்ச். சின்னப்பர் ஒரு இடத்தில் பாவம் நிறைந்த மனிதனென்றும் இன்னொரு இடத்தில் பழய மனிதனென்றும் அழைக்கிறார். இவ்வார்த்தைகள் வீண் தோற்றத்தை குறிக்கின்றபோதிலும், அத்தியந்த துயரத்தை விளைவிப்பனவாயிருக்கின்றன. ஆகிலும் அவைகளில் மகத்தான நம்பிக்கையுண்டு. எப்படியெனில் மனிதனில் இன்னொரு புதிய சிருஷ்டியுமுண்டென்று அவைகள் காட்டுகின்றன. அகுஸ்தீன் அர்ச். சின்னப்பர் நிருபங்களை வாசித்ததும் அவருக்குத் தெரியவந்த காரியம் இதுவே. இந்தப் பழய மனிதனை, அதாவது: "ஆங்காரம், மோகம், குழப்பம் நிறைந்த இந்த வெறுப்புக்குரிய சிருஷ்டியை ஜெயிக்கும்படியாகவே, வார்த்தையானவர் மாம்ஸமாக நீச வேஷந்தரித்து, மனிதனுடைய பாவத்திற்குப் பரிகாரஞ்செய்து, அவனைக் கடவுளுக்குச் சரியொத்தவனாக்க விருப்பங்கொண்டு தாழ்ச்சி, கீழ்ப்படிதல், சுயப்பரித்தியாகம் நிறைந்த ஜீவியம் ஜீவித்துவந்தார். மனுஷாவதாரப் பரம ரகசியம், இரட்சண்யப் பரம ரகசியம், முழுதும் தீர்க்கமாய் அகுஸ்தீனுடைய கண்களுக்குப் புலப்படவே, அதிசயத்தால் நிரப்பப்பட்டார். அவர் உலக சிந்தனைகள் யாவற்றையும் பற்றறவிட்டு நீங்கி ஆச்சரியப் பரவசத்தில் அமிழ்ந்தி, மனிதன் மறையக் கடவுள் தோன்றும் அந்த உந்நத அந்தஸ்தில் தாம் சேர்ந்துபோனதாக உணர்ந்து, பயபக்தியுடன் கடவுளை வணங்கினார். அவர் அதிசயத்துடன் கூவிச் சொல்லுவது "தத்துவ சாஸ்திரிகளின் கிருத்தியங்களுக்கும், கடவுளுடைய ஸ்தானாதிபதிகளின் கிருத்தியங்களுக்கும் உண்டான பாராதூர வித்தியாசம் கவனிக்கத்தக்கது. தத்துவசாஸ்திரிகளிடம் இருக்கும் நன்மைத்தன்மையாவும் தேவ ஸ்தானாதிபதிகளிடம் உண்டு. ஆனால் இன்னொரு விசேஷ காரியமும் தேவ ஸ்தானாதிபதிகளிடம் உண்டு. அதேதெனில் தேவ வரத்தின் அறிவேயாம். ஓ! என் கடவுளே! உம்மை அறிகிறவன் தன்னைப்பற்றிப் பெருமைபாராட்டுவதை விட்டுவிட்டு, பாவவியாதியிலிருந்து சொஸ்தமடைந்து திடங்கொண்டு உம்மை நாடும்படியே அவ்வறிவை யவனுக்களித்திருக்கின்றீர்."

"இதுவுமன்றி நம்மில் வியாபித்து, மேலாங்கிஷத்துடன் போராடி, நம்மைப் பாவத்தின் அடிமைகளாக்கும் கீழாங்கிஷத்தைப்பற்றி இந்தச் சிறந்த தத்துவசாஸ்திரிகளுக்கு தெரிந்திருக்கிறதென்ன? நமது நித்திய கேட்டிற்குக் காரணமான தேவ சாபத்தைத் தமது இரத்தத்தினால் துடைத்தெடுத்த அந்த மாசற்ற பலியாகிய சேசுக்கிறீஸ்துநாதரின் இஷ்டப்பிரசாதத்தைப்பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? இக்காரியங்களைப்பற்றி அவர்களுடைய புஸ்தகங்களில் ஒன்றும் சொல்லாமலிருக்கிறதேன்? கிறீஸ்துவப் பக்தியின் இரகசியத்தையாவது, பச்சாத்தாபத்தின் கண்ணீரையாவது, தாழ்ச்சியும் மனஸ்தாபமும் நிறைந்த இருதயத்தின் பலியையாவது, நமது இரட்சண்யத்தின் கிரயம் நிறைந்திருக்கும் விலைமதிக்கப்படாத பாத்திரத்திலிருந்து பெருகி யோடும் இஷ்டப்பிரசாதத்தையாவது, நாம் அப்புஸ்தகங்களில் கண்டறியக்கூடுமாயில்லை. நான் அடியில் சொல்லும் கீதங்கள் முதலாய் அவைகளிலில்லையே. அவையாவன: "என் ஆத்துமமே, கடவுளுக்கு அமைந்து நட; ஏனெனில் அவரே உன் கடவுள், அவரே உன் இரட்சகர், அவரே உன் தாபரம். அவர்மேல் நீ சார்ந்திருக்கும்போது உனக்கு பயமென்ன?" இந்த மதுரமான அழைப்பு முதலாய் அப்புஸ்தகங்களிலில்லை. 'வருந்திச் சுமைசுமக்கிறவர்களே நம்மிடம் வாருங்கள், நாம் உங்களுக்குத் தேறுதலளிப்போம்.' அவதரித்த வார்த்தையானவர் சாந்தமும் இருதயத் தாழ்ச்சியுமுள்ளவராயிருக்கிறாரென்று உலக ஞானிகளுக்குத் தெரியாது. என் கர்த்தாவே விவேகிகளுக்கும் புத்திமான்களுக்கும் நீர் மறைத்துவைத்த தேவ ரகசியங்களைத் தாழ்ச்சியுள்ளவர்களுக்கும் அற்பர்களுக்கும் வெளிப்படுத்தினீரே."

அப்போஸ்தலர்களில் கடையானவரென்று தம்மை அழைத்துக்கொள்ளும் அர்ச். சின்னப்பருடைய நிருபங்களை வாசித்தபோது, இந்தச் சத்தியங்கள் அகுஸ்தீனுடைய இருதயத்தில் ஆழமாய்ப் பதிந்து அவருக்கு அத்தியந்த ஆச்சரியத்தை யுண்டுபண்ணின. அப்புஸ்தகத்தை மூடும்போது அவர் சொன்னதாவது: "ஒரு காடுமுரடான கற்பாறையின் உச்சியிலிருந்து வெகுதூரத்திலுள்ள சமாதானப்பட்டணத்தைக்கண்டு எவ்வளவு பாடுபட்டும் அதனையடைய ஏலாதிருப்பது ஒரு காரியம். அப்பட்டணத்திற்குப் போகும் வழியைக் கண்டடைந்து அங்கு இட்டுக்கொண்டு போகவும், போகும் பாதையில் வழிமறிப்பவர்களிடமிருந்து தன்னை பாதுகாக்கவும், ஓர் நம்பிக்கையுள்ள இராதாதாரியையுடைத்தாயிருப்பது இன்னொரு காரியமன்றோ?"

இதில் நாம் கண்டுபிடிப்பதேதெனில், சந்தேகத்தின் கடைசி சாயை அகுஸ்தீன் ஆத்துமத்திலிருந்து விட்டுப்பிரிவதாயிருந்தது. அவரது இருதயத்தில் தேவ வெளிச்சம் வீசத் தடங்கலாயிருந்த மூடுபனி கரைவதாயிருந்தது. விசுவாசத்தின் வெளிச்சத்தோடு இருதய உருக்கமும் அவருக்குண்டானது. அபத்தம் என்னும் திரைச்சீலையால் கண்ணுக்கு இதுவரைக்கும் மறைக்கப்பட்டிருந்த ஞான சுய நாட்டின் எல்லைகள் அவருக்குத் தெரியவந்தன. அவர் பச்சாத்தாபம் என்னும் துவஜத்துடன் சீக்கிரம் அப்பட்டணத்திற்குள் பிரவேசம் செய்வாரென்று எதிர்பார்ப்பது சுலபமாயிற்று.

கல்வியாவது அல்லது எந்த காரியத்தின் சாதாரண அறிவாவது குற்றமெனக்கொள்ளலாகாது; ஏனெனில் அது தன்னிலே தானே நல்லதும், சர்வேசுரனால் ஏற்படுத்தப்பட்டதுமாயிருக்கின்றது. ஆனால் நல்ல மனசாக்ஷியையும் புண்ணிய நடத்தையையும் எப்போதும் மேலாக மதிக்கவேண்டியது.

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.)

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா
அல்லது
மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—8.
போர் நிகழ்ச்சி.
(முன் தொடர்ச்சி.)

"அதோ வருகிறார்! அதோ வருகிறார்!" என்று அங்கே நான்மருங்குங் கூடியிருந்த கிறீஸ்துவர்களும் யூதர்களும் பேரிரைச்சலிட்டு ஆரவாரித்தனர். அச்சமயத்தில் பாதாதிகேசபரியந்தம் போர்க்கவசத்தால் மூடப்பட்டு ஆயுதபாணிகளாய் சில வீரர் வாயுவேகமாய் ஓடக்கூடிய குதிரைகளின் மீது கூட்டத்தை நோக்கி வந்துகொண்டிருந்தனர். கொஞ்சநேரத்தில் வந்த வீரர்களில் ஒருவன் தலைச்சீராவால் தன் முகத்தை மூடிக்கொண்டு, ஆறு துணை வீரருடன் அடைப்புச் சதுரத்தை நெருங்கித் தன்னை உள்ளே விடும்படிக் கேட்டான். பின்னர் அவன் உரத்த சத்தமாய் அங்கிருந்தவர்கள் அனைவருக்கும் நன்றாய்க் கேட்கும்படிப் பின்வருமாறு பேசினான்: "ஆல்டமா, கேள்! டொலிடோ நகரவாசிகளாகிய கிறீஸ்துவர்களே, யூதர்களே, மூரியர்களே, நான் சொல்வதைச் சாவதானமாய்க் கேளுங்கள்! பென் தாவீதன் நிரபராதி; அவன்மேல் சாட்டிய குற்றம் தவறு! அவன் நகையைத் திருடவுமில்லை, திருட்டுடைமையை வாங்கவுமில்லை! அதை ஒரு கிறீஸ்துவ வீரனிடமிருந்து விலைக்கு வாங்கினதுண்மை! அவ்வீரனிடம் அந்த நகை எவ்வாறு வந்ததென்பதை அவன் சொல்லக் கடமைப்பட்டவனல்ல. ஆனால் இதுமட்டும் அவன் நிச்சயமாய்ச் சொல்வான்; அது அவனால் சரியான வழியிற் சம்பாதிக்கப்பட்ட பொருளாம். நிரபராதியான ஒரு மனிதனுடைய உயிரைக் காப்பாற்றும்பொருட்டு அவன் எவ்விதமான யுத்தமும் செய்வதற்குத் தயாராயிருக்கிறான்!"

"நீர் சிங்கத்துடன் சண்டைசெய்ய அடைப்புச் சதுரத்துக்குள் வருகிறீரா?" என்று அங்கிருந்த சேவகர்கள் கேட்டார்கள்.

"ஆம், அதற்காகவே நான் இங்கு வந்திருப்பது?" என்றான் முகமறைத்துவந்த வீரன். ஆல்டீமனுடைய முகம் சிவந்தது; அவன் கண்களில் கோபத்தினறிகுறியாய்த் தீப்பொறி பறந்தது. கதவைத் திறந்து வீரனை உள்ளே விடும்படி சைகைசெய்தான். தன்னை எதிர்ப்பதற்கு பகைஞன் ஒருவன் வந்திருக்கிறான் என்றறிந்ததும், சிங்கம் மிக்கப் பயங்கரமாய்க் கர்ச்சித்து ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து நடுவில்வந்து குதித்தது. சிங்கத்தைக் கண்டதும் செபஸ்தியான் குதிரை பயத்தால் பின்னடைந்து அவனைக் கீழே தள்ளிவிட்டு ஓட்டம்பிடிக்க முயன்றது. ஆனால் நமது வீரன் அதை அவ்வாறு செய்யவொட்டாமல் அடக்கி, அந்தத் துஷ்டமிருகத்துக்கு இருபது அடி தொலையில் தன் குதிரையை நிறுத்தி, வெகு ஜாக்கிரதையாய் அதனை நோக்கிக்கொண்டிருந்தான். சிங்கமோ அவனை நன்றா யூன்றிப்பார்க்கும்போது, சற்றே யோசிப்பதுபோல் தோன்றிற்று; பின்னர் ஆச்சர்யமுங் கோபமும் ஒருங்கே கொண்டதுபோல், உருமிக்கொண்டே தலையைப் பூமியில் தாழ்த்தி யாட்டியவண்ணம் தன் வாலால் தரையை யடித்துப் புழுதியை யெங்கும் பாவச்செய்தது.

சேவகர் தம் வில்லினால் கூரிய அம்புகளை அதன்மேல் எய்து அதைக் கோபமூட்டித் தூண்டினர். அப்படி யெய்த கணைகளில் ஒன்று, அம்மிருகத்தின் மார்பிலும், மற்றொன்று செபஸ்தியான் ஏறியிருந்த குதிரையின்மேலும் பாய்ந்தன. நோய் பொறுக்கமாட்டாமல் அக்குதிரை மீண்டும் முரட்டுத்தனமாய்ப் பின்னிடைந்து நமது வீரனைக் கீழே தள்ளிவிடும்போலிருந்தது. அச்சமயத்தில்தான் சிங்கமும் தான் கிளப்பிய புழுதிப் புகையில் தன்னை மறைத்துக்கொண்டு எதிர்ப்பதுபோல் ஒரே பாய்ச்சலாய் வீரன்மேற் பாய்ந்தது. நமதிளவல் கதி யதோகதியென்றே யாவரும் நினைத்தார்கள். வீரன் தன் வேலை நீட்டத்தான் நேரமிருந்தது; அதற்குள் அத்துஷ்டமிருகம் அதன்மேற் பாய்ந்து அதை முறித்துவிட்டது. வேலின்மேல் பாய்ந்ததால் உண்டான பெருங் காயத்தையுங் கவனியாமல் அச்சிங்கம் குதிரைமேற் பாய்ந்து, அதைக் கீழே தள்ளிவிட்டது. குதிரை விழுந்ததும் செபஸ்தியான் தன் தைரியத்தைக் கைவிடாமல், உடனே வெகு சாமர்த்தியமாய் மறுபக்கங் குதித்து, சிங்கத்தின் பிடிக்குள் அகப்படாமல் தப்பித்துக்கொண்டான். மின்னலினும் விரைவாய் தன்னுடைவாளை உருவி, ஒரு தடவை சுழற்றவே, அது சிங்கத்தின் வலதுகாலில் பட்டுக் காயப்படுத்திற்று. ஆனால் அம்மிருகம் அதையுஞ் சட்டைபண்ணாமல், தன்னையே தான் ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு, கடைசி தடவையாய் அவனைக் கொல்வதே சரியெனப் பாய்ந்தது. அதற்குள் செபஸ்தியான் தன்னிரு கரங்களாலும் கத்தியைப் பிடித்தோங்கிப் பாய்ந்துவரும் சிங்கத்தை வெட்டினான். வெட்டு அம்மிருகத்தின் தோள்பட்டையில் வேகமாய்த் தாக்கவே அடியற்ற மரம்போல் சிங்கம் பூமியில் வீழ்ந்தது.

இந்தப் பயங்கரக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த கிறீஸ்துவர்களும் யூதர்களும் உடனே கரகோஷஞ்செய்து ஆர்ப்பரித்தனர். வீரனுடைய அதிசயச் செயலைக்கண்டு ஆச்சரியப்பட்டுப் புகழாமலிருக்கத் துலுக்கராலும் முடியவில்லையென்றால் நமதிளவலின் வீரச் செய்கையைப்பற்றி வேறென்ன சொல்லக்கிடக்கிறது! இப்படி எங்குமே நிறைந்திருந்த பேரிரைச்சலையுமீறி யாவர் செவிகளிலும் நன்றாய்க் கேட்கும்படியாக, "தேவன் நீதியுள்ளவர்! அவரே தீர்ப்பு செய்துவிட்டார்! பென்தாவீதன் மாசற்றவனென்று அவரே காட்டிவிட்டார். தேவன் துதிக்கப்படுவாராக!" என்று ஜயதுங்கனாகிய செபஸ்தியான் கூவினான்.

பின்னர், தான் எதிர்பாராத விதமாய் காரியம் நடந்துவிட்டதே என்று மிகவுங் கோபாவேசத்துடனிருந்த அரசன் பக்கல் அவன் திரும்பி, "ஏ! ஆல்டீமன் என்னும் அரசனே! நீ நின் தலையில் அணிந்திருக்குங் கிரீடத்துக்கு யோக்கியதையுடையவன் என்று காட்ட, நீ சொன்ன சொல் தவறாமல் நடந்துகொள்ள வேண்டியவனாயிருக்கிறாய்! முத்து மாலையைக் கொடுத்து இந்த வயோதிப யூதனை விட்டுவிடுவதுமன்றி, நீ வாக்களித்தபிரகாரம் என்னையும் உன் இராச்சியத்தைவிட்டு யாதொரு இடைஞ்சலுமின்றி வெளியேற இடந்தருவாயென்று நினைக்கிறேன்" என்றான்.

ஆல்டீமனுக்கு இவ்வார்த்தைகள் செவியில் நாராசத்தைக் காய்ச்சி யூற்றியதுபோலிருந்தன. கோபத்தை மறைக்கமுடியாமல், அப்பாதகன், "ஏ! கிறீஸ்துவ நாயே! என்ன சொன்னாய்? நாவை யடக்காமல் இனி ஏதேனும் பேசுவையேல் உன்னை என்ன செய்கிறேன் பார்! ஒரு கிறீஸ்துவனிடத்தில் ஆல்டீமன் கற்றுக்கொள்ள வேண்டியதொன்றுமில்லை!" என்று தன்னிருக்கைவிட்டெழுந்து விரைவாய் அரண்மனை சென்றான். ஆயினும், அவன்தான் சொன்னதுபோல் பென்தாவீதனைச் சிறையினின்றும் விட்டுவிடும்படிக் கட்டளையிட்டனன். யூதனும் விடுதலை பெற்று, தன் மைத்துனன் ஆரோன் வீட்டுக்குப்போய் அங்கே தனக்காக ஆவலுடன் காத்திருந்த தன் மனைவியையும் மற்றுமுள்ள பந்துமித்திரர்களையுங்கண்டு அவர்களோடு ஆனந்தங் கொண்டாடினான்.

தன் நிர்ப்பாக்கிய நண்பர் கிடந்து மடியும் சிறைச்சாலையை மிக்க விசனத்துடன் ஒரு தடவை பார்த்துப் பெருமூச்செறிந்து, செபஸ்தியான் பிரபு அந்த அடைப்புச் சதுரத்தைவிட்டு வெளியேவந்து தானும் தன்னாட்களுந் தங்கியிருக்க ஒரு சத்திரத்தைத் தேடிச்சென்றான். கிறீஸ்துவர்கள் ஒருவர்மேல் ஒருவர் விழுந்துகொண்டு அவனை நெருங்கி அவனைப் புகழ்ந்து முகமன் கூறினார்கள். அவர்களுக்கெல்லாம் தகுந்தவாறு வந்தனமளித்து அன்பாய்ப் பேசி, அவர்கள் எவ்வளவுதான் பரிந்தழைத்தபோதிலும், தான் அவர்களிடம்போய்த் தங்கியிருத்தல் அந்த ஜனங்களுக்கே கெடுதலாய் முடியுமெனவறிந்து, அவர்களுக்குப் பல சாக்குப்போக்குகளைச் சொல்லி அவர்களை விட்டுப்பிரிந்தான்.

நமது வீரர்திலகமாகிய செபஸ்தியான் பிரபு தான் தங்கியிருந்த சத்திரத்தில் இளைப்பாறியிருக்கையில், அவனை அவசரமாய்ப் பார்க்கவேண்டுமென்று ஓர் ஆள் அவன் அறைக்குள் புகுந்தான். வந்தவன் ஒரு கடிதத்தை எடுத்து அவனிடங் கொடுக்க, அவன் அதை வாங்கிப் பிரித்துப்பார்க்கவே, அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

"தன்னைக் கொடிய மரணத்தினின்றுங் காப்பாற்றிய பிரபுவுக்கு பென்தாவீதன் மனப்பூர்வமாய் நன்றி செலுத்துகின்றான். தேவன் அவருக்குச் சம்மானம் அளித்து அவரைக் காப்பாற்றுவாராக!"

"என் ஆண்டவனே! தங்கள் உயிர் ஆபத்திலிருக்கிறது. டொலிடோ நகரைவிட்டு நீங்க முயற்சி செய்யவேண்டாம். மாலைவரையில் தாங்களிருக்குமிடத்திலேயே இருக்கவும். இதைக் கொண்டுவரும் ஆளே மீண்டும் வருவான். அவனைப் பின்பற்றினால், தங்களை அபாயமின்றி ஓரிடங்கொண்டு சேர்ப்பான். ஆல்டீமன் தங்களை எப்படியாவது கொல்வதெனத் தீர்மானித்திருக்கிறான். நானும் அப்படியே அவனுடைய கோபத்துக்குப் பயந்து ஓடவேண்டியவனாயிருக்கிறேன்."

செபஸ்தியான் ஒன்றுக்குமஞ்சாத தைரியசாலியென்பது மெய்தான். ஆனால் அவர் வந்திருந்தவிடம் அன்னிய நாடு; பகைவர் நிறைந்த பட்டணம். ஆதலால் யூதனுடைய எச்சரிக்கைக் கிணங்கி, அவன் சொற்படி நடப்பதே யுக்தமென, சத்திரத்திலேயே மாலைவரையில் தங்கிவிட்டான். அன்று மாலை இருட்டியதும் யூதன் சொல்லியவாறு, காலைவந்த மனிதனே சத்திரத்துக்குவந்து செபஸ்தியான் பிரபுவையும், அவன் ஆட்களையும் அழைத்துக்கொண்டு, ஜன நடமாட்டமில்லாத பல தெருக்கள் வழியாய் நடந்து, யூதர்கள் தங்கள் வியாபாரத்துக்கென்று ஏற்படுத்தியிருந்த ஒரு அந்தரங்கக் கட்டிடத்துக்குக் கொண்டுபோய்விட்டான். அவர்கள் அவ்விடத்திலேயே மறுநாள் இரவளவுந் தங்கினார்கள். பின்னர் அதே மனிதன் வந்து, அவர்களை குறுக்கு வழியாய் தேகஸ் நதியோரங் கொண்டுபோய்விட்டான். அங்கே அவர்களுக்காக காத்திருந்த ஒரு படகிலேறி நதியைக் கடந்து அக்கரை சேரவே, என்ன ஆச்சர்யம், அவர்கள் சத்திரத்தில் விட்டுவந்த குதிரைகள் அங்கே நின்றுகொண்டிருந்தன. உடனே அவற்றின்மேலேறிக்கொண்டு பொழுதுவிடிவதற்குள் இனி யவர்களை ஆல்டீமன் ஒன்றும் செய்யமுடியாதென்னும்படியான அவ்வளவு தூரம் போய்விட்டனர்.

செபஸ்தியான் பிரபு, கார்சியாஸ் பிரபுவையும், காஸில்டாவையும்பற்றியே சதா சிந்தித்து வருத்தப்பட்டுக்கொண்டிருந்தான். அந்த இராஜகுமாரி தானிருக்குமிடத்துக்கருகாமையில் இருப்பாளென்றும், அவளைத் தானே அந்த நாள் முடிவதற்குள் காப்பாற்ற நேரிடுமென்றும் அவன் கனவிலும் நினைக்கவில்லை.

(இன்னும் வரும்.)

ச. சேல்வன்.

ANANDABODHINI & OURSELVES.

ஆனந்தபோதினியும் நமது பத்திரிகையும்.

"ஆனந்தபோதினி" எனும் ஓர் இந்து மதப் பத்திரிகையின் ஆசிரியர் நமது ஆகஸ்டு மீ "ஆய"னில் அவரது பத்திரிகையைக் கிறீஸ்துவர்கள் பவிஷ்காரம் செய்யும்படி ம-ா-ா-ஸ்ரீ D. J. A. பர்ஞண்டஸ் அவர்கள் எழுதின கடிதத்தை யாம் பிரசுரித்ததினால், தமது ஆகஸ்டுமீ சஞ்சிகையில் "நல்ல ஆயன் தவறுதலும், D. J. A. என்பாரின் பொய்க்கூற்றும்" என்னும் தலைப்பெயரிட்டு எழுதிய வியாசத்திற்கு நாம் சென்ற மாத ஆயனில் வரைந்துள்ள பதிலை நண்பர்கள் வாசித்திருப்பார்கள். அப்பதிலின் அருத்தம் ஆசிரியர் அவர்கட்கு எட்டுணையும் புலப்படாததினால், தாம் சென்றவிசை மகா-ா-ா-ஸ்ரீ S. S. பிள்ளை * என்பாரைத் தமக்குப் பக்கபலமாகக்கொண்டு, தம்முடைய கட்டுரையை வெளியாக்கினதுடன் நின்றுவிடாமல், மறுபடியும் இப்போது குன்னூர், பீ. தாமஸ் பாலையா பிள்ளை என்று கைச்சாத்திட்டுத் தமக்கு சனுகாக எழுதியுள்ள அப்பிள்ளை அவர்களையுந் தமக்குத் துணையாகக்கொண்டு சென்ற மாத "போதினி"யில் தம் புத்தியில் வந்தவைகளையெல்லாம் வரைந்துவிட்டது மிக்க விசனிக்கத்தக்கதே.

இவ் வாசிரியர் பன்னிப்பன்னி வகைதொகையின்றி வரைந்துள்ளவைகளை நமது ஆயனில் அப்படியே பிரசுரிக்க இடமில்லையாதலால், அவைகளின் சாராம்சத்தைமாத்திரம் இங்கெடுத்துரைத்து, அவருடைய அறியாமையை விளக்கிக்காட்டுவோம்.

(1) இவ் வாசிரியர் தம் போதினியில் மததூஷணையான வார்த்தைகளை இதுகாறும் வெளியிட்டதில்லை; அப்படி வெளியிட்டிருந்தால் அதை நிரூபிக்கவேண்டுமென்பது;

(2) எமக்குள்ள இந்து மதத்துவேஷத்தால் மகா-ா-ா-ஸ்ரீ D. J. A. பர்ஞண்டஸ் என்பார் கடிதத்தை நாம் ஆயனில் பிரசுரித்ததுமல்லாமல், உலகப்பிரசித்திப்பெற்ற ஆன்றோர்களனைவரும் ஒப்புக்கொள்ளும் "எம்மதமும் சம்மதம்" என்னும் கொள்கையைப் பற்றியும் எம் குறுகிய மனதில் என்ன நினைக்கிறோமோவென்பது;

(3) பொதுவாய் ஒரு இந்து மதப் பத்திரிகையை நம் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் வாசிப்பதால் அவர்களுக்குள்ள வேத விசுவாசத்துக்குப் பலவகையால் பங்கம் நேருமென்று நாம் ஆயனில் பிரசுரித்ததின் நிமித்தம், நமக்கு "ஞானம்" என்பது இன்னதென்றே தெரியவில்லையாதலின் அன்னிய மதத்தினரை அஞ்ஞானிகளென்று தூஷிக்கிறோமென்பது ஆகிய இவையே முக்கிய சாராம்சங்களாம்.

முதன்முதலாக இவ் வாசிரியர் தாம் மததூஷணையான வார்த்தைகளைப் பிரசுரித்ததில்லையென்றும், அப்படிப் பிரசுரித்திருந்தால் அதை நிரூபிக்கவேண்டுமென்றும் சொல்லுகிறார். அப்படியாயின் மததூஷணை யாவதென்ன? ஓர் மதத்தார் மற்றோர் மதத்தாரின் கொள்கைகளை, படிப்பினைகளை, சட்டதிட்டங்களை, சாங்கிய சடங்குகளை, ஏற்பாடுகளைத் தப்பறை அல்லது பொய்யென்பது, அவைகளின்பேரில் குறைகூறுவது, அவைகளை ஏற்றுக்கொள்ளாமல் தங்கள் மனத்திலும், நடத்தையிலும் அலட்சியஞ் செய்வது ஆகிய இவைகளேயாம் மததூஷணை. வாஸ்தவத்தில் தத்தம் மதத்தில் மெய்யான பற்றுதல், உருக்கம், நேசம், விசுவாசம், பிரமாணிக்கம் உள்ளவர்கள் பிற மதத்தைத் தங்கள் மனத்திலாகிலும் துவேஷிப்பார்களென்பது வெளிப்படை. இச்சத்தியத்தையே போதினி ஆசிரியரும் தம்முடைய நாளது ஆகஸ்டு மாத சஞ்சிகையின் 68-ம் பக்கத்தில் நிரூபித்திருக்கிறார். அவர் ஆங்குக் கூறியுள்ளதாவது :—"அவரவர்கள் தத்தம் மதத்தை விர்த்திசெய்ய முயல்வது இயல்பே" என்பதாம். இயல்பு என்றால் அவரவர்களும் தத்தம் மதத்தையே பாராட்டி அதைப் பெருமிதப்படுத்திப் பிற மதத்தைத் அலட்சியஞ்செய்யத் தத்தம்மாலேயே தூண்டப்படுவார்களென்பதே அருத்தம். ஆகவே, நமது ஆசிரியர் மெய்யான

இந்து மதத்தினராயிருப்பாரேயானால், இதர மதங்களை அவர் அலட்சியஞ் செய்யாதிரார். இல்லையேல், அவர் மெய்யான இந்துவல்லர். ஆயினும், அவர் தம் போதினியில் பிறமத தூஷணை யாதொன்றும் வரைந்ததில்லை என்றும், வரைந்ததாக நிரூபிக்கமுடியாதென்றும் தாம் சொல்வதைத் தாமே யறியாமல் கூறுகிறார். கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன்? அவருடைய நாளது செப்டம்பர்மீ போதினியின் 83-ம் பக்கத்தில் வரைந்துள்ளதென்ன? "அன்னிய மதாசாரங்களைப்பற்றிய நூல்களை வாசிப்பதாலும், சுயமத ஆராய்ச்சியின்மையாலும் எம்மதப் பற்றுமின்றி நாஸ்திகத்திற்கடுத்தபடியில் சேர்கிறார்கள்" என்று தம் மதத்தவர்களுக்கு எழுதியுள்ளார். அதனால் அவர் தம் இந்து மதமே மெய்யென்றும், இதர மதங்கள் பொய்யென்றும் சொல்வது வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது. அவருடைய ஆகஸ்டு மாத சஞ்சிகையின் 69-ம் பக்கத்தில் "கிறீஸ்து மதம் பொய், அதில் கூறப்பட்டது மெய்யான கடவுளல்ல. அல்லது அதில் மோட்சமில்லை. ஏசுக்கிருஸ்து கூறியது பொய்........"என்பன போன்றவை மததூஷணைகளென்று ஏற்றுக்கொள்ளுகிற இவர், அன்னிய மதாசாரங்களைப்பற்றிய நூல்களை வாசியாதேயுங்கள்........என்று எழுதியுள்ளவையையும் என் மததூஷணையாக ஏற்றுக்கொள்ளார்? அவர் தம் மதப் புத்தகங்களைமாத்திரம் வாசிக்கச்சொல்லுகையில், இதர மதப் புத்தகங்களை இகழ்ச்சியாக எண்ணுகிறானன்றோ? அவைகளைத் துவேஷிக்கச் சொல்லுகிறானன்றோ? இவரல்லோ ஜாடையாய்த் தம்மதத்தைப் போதிக்கிறார். இதர மதத்தைக் குறித்துத் தூஷணையாய் எழுதியும் எழுதவில்லையென்று வாதிக்கிறார், சாதிக்கிறார். இவர் அப்படி எழுதுகிறாரென்று நிரூபிக்க முடியுமேயன்றி எழுதவில்லையென்று நிரூபிக்க முடியாது.

இரண்டாவது :—எமக்குள்ள இந்து மதத் துவேஷத்தினால்தான் ம-ா-ா-ஸ்ரீ பர்ஞண்டஸ் அவர்களின் கடிதத்தை நாம் பிரசுரஞ் செய்துவிட்டோமென ஆசிரியர் கூறியுள்ளார். ஆ! ஆ! அதற்குச் சிறிதும் ஆட்சேபணையில்லை. மேலே யாம் எடுத்துக்காட்டிய நியாயப்படி இந்து மதத்தையாயினும் வேறு எந்த மதத்தையாயினும் துவேஷியாமல் எம்மால் இருக்கமுடியாது. நாமோ ஓர் கத்தோலிக்குக் கிறீஸ்துவராகமாத்திரமல்ல, ஆனால் ஓர் கத்தோலிக்குக் குருவுமாகவுமிருக்கிறோம். உலகப்பிரசித்திபெற்ற ஆன்றோர்களனைவரும் ஒப்புக்கொள்ளும் "எம்மதமும் சம்மதம்" என்னும் கொள்கையின்படியும், அக்கொள்கையையே தமக்கு ஆதாரமாகக் கொண்டு எம்மதத்தையும் தூஷணிக்கிறதில்லையென்று சாதிக்கும் நமது ஆசிரியர் கூற்றின்படியும்—(ஆனால் அவரோ கிறீஸ்து மதத்தைத் தம்மை யறியாமலே வெள்ளை வெள்ளையாய்த் தூஷிக்கிறார்)—எல்லா மதமும் ஒன்றுதான், எல்லா மதமும் மெய்யானதுதான், எல்லா மதத்திலும் சுவர்க்கம் உண்டு—என்று எம்மால் நம்பவும், கூறவும், ஒப்புக்கொள்ளவும், ஒரு குருவென்னும் முறையில் இக்கொள்கையைப் போதிக்கவும் எம் மனசாட்சி எம்மை விடாது. அது எவ்வளவும் எமக்கு ஏற்காது. ஆகவே, யாம் இந்து மதத்தைமாத்திரமல்ல, ஆனால் எமது கத்தோலிக்கு வேதத்தைத்தவிர வேறு எம்மதத்தையும் துவேஷியாமல் இருக்கமுடியாதென்பது உண்மை. இவ்வாறு நாம் வற்புறுத்திக் கூறுவதினால் நாம் அன்னிய மதத்தினரை துவேஷிக்கிறோமென்று; ஆனால் அவர்களுடைய பொய்க் கொள்கைகளையும் அனுச்சார ஆசாரங்களையுமே துவேஷிக்கிறோமென்றறிக.

நமது பத்திரிகை முடிவடையுஞ் சமயம் ஆனந்தபோதினியின் ஆட்சேபத்திற்குரிய வியாசம் நமது நண்பர் ஒருவரால் நமக்கு காட்டப்பட்டதென்று நாம் சொல்லியிருப்பதை அவ்வாசிரியர் நம்பாமல் தாம் ஏற்கெனவே பத்திரிகை அனுப்பிய தேதியைக் குறிப்பிட்டுக்காட்டி நம்மைப் பொய்யராக்கப்பார்க்கிறார். எத்தேதியில் அப்பத்திரிகை அனுப்பப்பட்டால்தானென்ன? அதை எடுத்து வாசித்தாலன்றோ, அதில் உள்ளவை இன்னவை என்றறியலாகும். நாம் வாஸ்தவத்தில் அப்பத்திரிகையை விரும்பியெடுத்து வாசிப்பதே கிடையாது. ஆனதினால் அதை இனி மாற்றுப் பத்திரிகையாகவாவது, வேற்றுப் பத்திரிகையாகவாவது அவ்வாசிரியர் எமக்கு அனுப்பாதிருப்பாராக.

மேலும் ஆனந்தபோதினியின் பஹிஷ்காரத்திற்கு ஆதாரமாகச் சொல்லப்பட்ட நமது கிறீஸ்து மததூஷணை பொய்யோ

* இவரோ "போதினி"யில் பிரசுரித்திருக்கிறபடி கிறீஸ்துவராவார். ஆயினும் போதினியின் ஆசிரியர் இப்பெயருடையோர் உண்டோ இல்லையோவென்று ஆராய்ந்தறியாமல் இவருடைய கடிதத்தை பிரசுரித்ததினால் தம் ஆசிரியர் கடமையை வெகு நேர்மையாய்ச் செய்துள்ளார்போலும்.

மெய்யோவென்று ஆராயாமல் பஹிஷ்காரத்தைப் போதித்த கடிதத்தை பிரசுரித்துவிட்டதினால் நாம் நமது கடமையில் நெறி தவறிவிட்டோமெனப் புகலுகிறார். நாம் எழுதியதை வாசித்தறிந்துகொள்ள சக்தியில்லாத இவர் நமக்குப் புத்திபுகட்ட வருகின்றார். நாம் எழுதியதை அவர் இன்னொரு முறை வாசிக்கட்டும். குறிப்பிட்ட மததூஷணை உண்மையல்லவாயினும், (ஆனால் அது இப்போது உண்மையென்றே மேலே எண்பித்துக் காட்டிவிட்டோம்) வேறொரு அதிமுக்கிய (அதாவது, இந்து மதப் பத்திரிகையைப் படிப்பதால் கிறீஸ்துவர்களுடைய வேத விசுவாசத்திற்குப் பங்கம் நேருமென்கிற) காரணம்பற்றி போதினியின் பஹிஷ்காரத்தைப் போதித்த பிரஸ்தாபக் கடிதத்துக்கு நமது பத்திரிகையில் இடந்தரலானோம்.

கடைசியாக ஆசிரியர் சொல்வதாவது: நாம் எமது கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுக்கு இந்து மதப் பத்திரிகைகளை வாசியாதீர்களென்பதினால் நாம் அவர்களை ஞானத்தில் விருத்தியடையவொட்டாமல் தங்கள் குருட்டாட்டத்திலேயே அமிழ்ந்துகிடக்கும்படிச் செய்வதற்காகவே என்கிறார். இவர் இவ்வாறு கூறுவது தம்முடைய அறியாமையினாலேயோ அல்லது வஞ்சகத்தினாலேயோ யாம் அறியோம். ஏனெனில், இவர்மாத்திரம் தம்முடைய போதினியின் செப்டம்பர் சஞ்சிகை 83-ம் பக்கத்தில் நாம் ஏற்கெனவே எடுத்துக்கூறியபடி "அன்னிய மதாசாரங்களைப்பற்றிய நூல்களை வாசிப்பதாலும், சுய மத ஆராய்ச்சியின்மையாலும் எம்மதப்பற்றுமின்றி நாஸ்திகத்திற்கு அடுத்தபடியில் சேர்கிறார்கள்" என்று தம் மதத்தவர்களுக்குள்ள வேத விசுவாசத்தைக் காப்பாற்றும்படி புத்தி புகட்ட, வரிவரியாய் வரைந்துதள்ளுவது ஞானமாம். ஆனால் நாம் எமது கிறீஸ்துவர்களுக்குள்ள வேத விசுவாசத்துக்குப் பங்கம் நேராமலிருக்க இந்து மதப் பத்திரிகைகளை வாசியாதேயுங்களென்றால் அது எமக்கு ஞானமின்மையும், ஞானத்தை யுணராதிருத்தலுமாம். என்னே! இவருக்கு ஞானமிருந்தவாறு!

நேயர்களே! இப்போது நாம் உங்களுக்கு ஓர் வார்த்தை புத்தியாகக் கூறுகிறோம். நமக்குள்ள வேத விசுவாசமோ சர்வேசுரனால் நமக்குத் தயவாய் அருளப்பட்ட ஓர் அரிய வரமாம். இவ்வரத்துக்காக நாம் எந்நாளும் அவருக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். நம் இந்தியாவின்கண் இன்னும் எத்தனையோ இலட்சக்கணக்கான பேர்கள் இவ்வரம் கிடைக்கப்பெறாமல் அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்துகிடக்கிறார்கள். அந்தோ, பரிதாபம்! இவர்களெல்லோரும் தங்கள் அஞ்ஞான இருளிலிருந்து மெய்ஞ்ஞான வெளிச்சத்தை யடைய நல்ல ஆயன் கிருபைபாலிப்பாராக. இதற்காக நாம் எல்லோரும் நம்மிந்துதேசத்தின் அப்போஸ்தலராகிய அர்ச். சவேரியார் அருளிச்செய்த ஜெபத்தை அநுதினமும் வேண்டிக்கொள்வோமாக. மேலும், நமக்கருளப்பட்டிருக்கும் வேத விசுவாசத்தை யிழக்கும் நிர்ப்பாக்கியம் நேராமலிருக்க அந்நிய மத நூல்களையும் பத்திரிகைகளையும் வாசியாமலிருப்பீர்களாக. அவைகளைப் பஹிஷ்காரஞ் செய்வீர்களாக. "ஆனந்தபோதினி" யில் நமது சத்திய வேதத்துக்கு விரோதமான பல கொள்கைகளும் போதனைகளுமுள. ஆதலால் அப்பத்திரிகை விஷயத்தில் எச்சரிக்கையாயிருங்கள். அப்பத்திரிகையை ஆதரியாதீர்கள். இலவசமாய் அனுப்பப்பட்டாலும் அதை வாசியாதீர்கள். அல்லாமலும் நமது சத்தியமறை நூல்களையும் பத்திரிகைகளையும் ஆதரித்து, அவைகளை கண்ணுங்கருத்துமாய் வாசித்து, வாசிப்பவைகளை கிரகித்து, உங்கள் விசுவாசத்துக்குப் பழுது நேராமல் அதைப் பாதுகாத்துக் கொள்ளுவீர்களாக.

நமது ஆசிரியருக்குச் சனுகாகக் கடிதம் எழுதிய S. S. பிள்ளை யவர்களைப்பற்றி ஸ்ரீமான். எம். ஐ. பர்னாந்திஸ் அவர்கள் வரைந்துள்ள கடிதத்தை இதனடியில் பிரசுரிக்கிறோம். அதை நீங்கள் வாசித்து அந்த நாமதேயமுடையவர் இருப்பாரேல், அவர் ஓர் போலிக் கிறீஸ்துவரேயென்று அறிந்துகொள்ளுங்கள். நமது ஆசிரியருடைய மற்றொரு நண்பராகிய ம-ா-ா-ஸ்ரீ தோமாஸ் பாலைய பிள்ளையவர்களும் இவரைப்போன்ற ஓர் போலிக் கிறீஸ்துவரேயாவர்.

(கடிதம்.)

"ஒருவன் அந்நியனுடைய பொருளை கவர்ந்துசெல்ல நினைத்தாலும், எடுத்து அபகரித்தாலும் களவெனுங் குற்றத்திற்கு ஆளாகின்றான். அவ்வாறே ஒரு புஸ்தகத்திலுள்ள விஷயத்தைத் தான் எழுதியதாக வெளியிடுபவனும், ஒருவனுக்குரிய சின்னத்தைத் தனக்குரியதென நினைத்து, பத்திரிகைக்குத் திருட்டுத்தனமாய் எழுதுபவனும், அத்திருட்டுப் பெயரை பத்திரிகையிற் பிரசுரிப்பவனும் திருட்டெனும் குற்றத்திற்கு ஆளாகிறார்கள்.

அவ்வாறே நாளது ஆகஸ்டுமீ வெளிவந்துள்ள "ஆனந்தபோதினி" எனும் பத்திரிகையில் எனக்குரிய சின்னத்தைக்கொண்டு (வைப்பார் புலி) S. S. Pillai எனக் கைச்சாத்திட்டு உண்டசோற்றுக்கு இரண்டகமென்றும் எழுதிய வாசகத்தைப் பார்த்த நான் இதை பொய்க்கூற்றெனவே நம்பவேண்டியிருக்கிறது. ஏனெனில், வைப்பார் என்ற ஊரில் S. S. பிள்ளை எனும் நாமமே கிடையாதென்பதொன்று. புலி எனும் பட்டம் என்னைத் தவிர வேறு எந்த நபருக்கும் அவ்வூரில் கிடையாதென்பது மற்றொன்று. ஆகவே, மேற்படி பேப்பருக்கெழுதிய நண்பர் S. S. பிள்ளையாவது, "ஆனந்தபோதினி" பத்திரிகாசிரியராவது இப்பெயர்வழி யாரென்று சொல்லமுடியுமா? அன்றேல், இஃது அநாமதேயப்பேர்வழிகளால் சிருஷ்டிக்கப்பட்ட கல்பனா கதை என்று யூகிக்க நேரிடும். ஆகவே, நமது நல்ல ஆயன் சந்தாநேயர்கள் உண்டசோற்றுக்கு இரண்டகமெனும் வாசகம் என்னால் எழுதப்பட்டதல்லவென்று கவனிப்பார்களாக.

இங்ஙனம்,

புலி. எம். ஐ. பர்னாந்தீஸ்.

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

"ஆனந்தபோதினியும், S. S. Pillai" என்பூவரின் பெருங்கூற்றும்.

கடந்த ஆகஸ்டு மாதத்து ஆனந்தபோதினியில், "நல்லாயன் தவறுதலும்" "பொய்க்கூற்றும்" என்ற தலையங்கத்தின்கீழ், ஆனந்தபோதினி ஆசிரியரவர்கள் ஓர்கட்டுரையை வரைந்துள்ளார். அதில் தாம் தமது பத்திரிகையில், கிறீஸ்துவமதத் தூஷணையானவைகள் ஒன்றும் வெளிவந்ததில்லையென்றும் கூறி, பொய் என்று துவக்கி கடைசியாக கூற்றென்றே முடித்துள்ளார்கள். அக்கட்டுரையில், யாம் போதினியை அவதூறு செய்ததாகவும், எம்மை குறுகிய நோக்கமும் தவறான நியாயமுமுடையவராகவும் கூறியுள்ளார். இஃதுண்மையாயின், போதினியின் 6-வது ஆண்டில் பல கிறீஸ்துவச் சந்தா நேயர்கள், போதினியின் மததூஷணையையிட்டுப் பல கடிதங்கள் எழுதியுளார்களாவென்பதுவே கேள்வி. உதாரணமாக, போதினியின் 6-வது ஆண்டின் 10-வது பகுதியில் 392–393-ம் பக்கத்தில், ரெவரெண்ட் S. M. தேவதாஸ் ஆனந்தபோதினியின் கடந்த இரண்டு வருடங்களாக, கிறீஸ்து மதத்தூஷணையான காரியங்கள் இருப்பதால் வாசிக்க மனவருத்தமுண்டானதாகவும், அப்படிப்பட்ட இதர மார்க்கக் கண்டனங்கள் இனிமேல் அச்சடிக்காதிருக்கவேண்டுமென்று வரைந்துள்ளதும், இதே காரணத்தையிட்டு கடிதமெழுதிய கிறீஸ்துவ நண்பர்களெல்லோரும் குறுகிய நோக்கமும் தவறான நியாயமுமுடையவர்களானால், இதில் எவர்கள் நியாயமுடையவர்களென்பதையும், எவர் கூற்று உண்மை என்பதையுமறிய விரும்புகிறேன். ஆகவே இதன் பொய்மெய் இன்னதென்று அறிந்தும் போதினி யாசிரியரவர்கள், "நல்லாயன் தவறுதலும் பொய்க்கூற்றும்" என்ற ஓர் கட்டுரையை வரைந்துள்ளது, விசனிக்கத்தக்கது! விசனிக்கத்தக்கது!! சாலவும் விசனிக்கத்தக்கதே.

D. J. A. Fernando, வைகைவாசி.

ஷாஸ்ய கண்ணோட்டம்.

அப்பப்பா "விதிப்பலன், ஊழ்வினை, மறுபிறப்பு" ஆகிய இம்மூன்றும் மூடக்கொள்கைகள் என உணர்ந்தாலொழிய இந்தியாவிற்கு விமோசனமே இல்லை.

சோம்பேறியாய், முயற்சியற்றவனாய், தன்னம்பிக்கை இல்லாதவனாயிருப்போருக்கெல்லாம் ஷை கொள்கைகள் "நொண்டிக்குதிரைக்கு சருக்கினது சாக்கு" என்பதுபோல் உதவுகின்றன. ஏன் தேம்பித்திரிகிறாய் என்று சோம்பேறியைக் கேட்டால் ஊழ்வினை என்கிறான்; ஏன் எடுக்குங் காரியமெல்லாம் ஒழுங்காக முடிகிறதில்லை என்றால், அது விதிப்பலனாம், என்கிறான்; ஏன் இந்த யௌவன பிராயத்தில் இத்தகைய தரித்

திர கோலத்தை யடைந்திருக்கிறாய் என்றால் மறுபிறப்பில் தனவந்தனாவதற்கு இது முன் குறியல்லவோ வென்கிறான்!

இத்தகைய கொள்கைகள் சாதாரணமாய் இந்துக்களுக்குரித்தாயிருந்தாலும், விதிப்பலனென்ற விஷயம் நம் கிறீஸ்துவ சகோதரர்களுக்குள்ளுங் காணப்படுவது விசனிக்கத்தக்கது. பொதுவாக விதிப்பலன் என்பது கடவுளை மறந்தவர்களின் வாயில் வருமேயல்லாமல், கடவுளை நம்பியிருப்பவர்கள் வாயில் வராது. உதாரணமாக ஒருவன் இன்னொருவனோடு வழக்காடி நியாயஸ்தலத்தில் ஜெயம்பெற்றானானால்—பார்த்தீர்களா "வேறெவனாயிருந்தாலும் இதில் ஜெயம்பெறமுடியுமா? முடியவே முடியாது. எனது வாக்குச்சாதுர்யத்தாலும், வாக்குத்திடத்தாலும் ஜெயித்துவிட்டேன்" என்று மீசையை முறுக்கி நெஞ்சைத் தட்டி ஒய்யாரமாக தற்பெருமைபேசுவான். அவ்வேளை கடவுளால் என்ற பேச்சே அவன் வாயில் வராது. அதை நினைக்கவுமாட்டான். தோல்வியடைந்தாலோ, எவ்வளவு பிரயாசைப்பட்டாலும் விதி விலகுமா? விலகாது. அவன் இட்டபடி நடக்குமேயல்லாது நம்மால் செய்யகூடியது யாதுளதென்பான். ஆகவே, வெற்றி தன் கெட்டித்தனத்தாலும், தோல்வி தேவன் செயலாலுமாய்ப் போகிறது. இத்தகைய கொள்கையுடையவருக்கு விதிப்பலன் என்பது வீண்பேச்சன்றி வேறில்லை. ஆனதுபற்றி, சந்தோஷமும் துக்கமும் சரிசமமென எண்ணுவோருக்கும், தொடுத்து ஆரம்பிக்கும் சகல விஷயங்களையும் சர்வேசுரன்பால் ஒப்புவித்து எந்நேரமும் கடவுளைப் பூசனை செய்வோருக்குமே அவர் கருணை கிட்டுமேயல்லாது மற்றவர்களுக்கல்லவென்பது வெள்ளிடைமலைபோல் தெளிவாகிறது—நிற்க,

விதி பெரிதா?—மதி பெரிதா?—வென்ற சிக்கலான பிரசனைக்கு ஓர் பத்திரிகை கீழ்கண்டவாறு பதிலளிக்கிறது * * * * *

கடவுள் ஒரு மனுஷனை உண்டுபண்ணுகையில் அவனின் எதிர்கால சம்பவத்தை நிர்ணயித்துவிடுவதால், அவன் கடவுள் நிர்ணயித்தபடி கெட்டவனாகவும் நல்லவனாகவும் பிரவர்த்திக்கிறான். கடவுள் நியமனத்தை மாற்றக்கூடிய சக்தி மனிதனுக்கில்லாததால், மதியால் செய்யக்கூடியது யாதொன்றுமில்லை. எல்லாம் விதிப்பயனே என்று கூறுகிறது. ஆகவே, திருடனாக—கர்மாரனாக—பொய்யனாக—குடியனாகச் செய்வதும் கடவுள். நல்லவனாக—நானா குணங்களில் சிறந்தவனாகச்—செய்வதும் கடவுள் என்பது கருத்து. பேஷ் "பேச்சு பல்லக்கில் தம்பி கால்நடை" என்றவாறு, சொற்பொலிவு "வரிப்பெருக்கு" முதலிய வெளிப்பகட்டுகள் சாதாரணமாய் இப்பத்திரிகையில் காணப்படினும், விஷய ஞானங்களைச் சீர்தூக்கி நோக்குமிடத்து வழவழப்பான விளக்கெண்ணெய்தான்—ஏன் என்பீரோ? ஓரறிவுள்ள மிருகமும் பகுத்தறிவுள்ள மனிதனும் ஒன்றென்று தீர்மானிக்கிறது— தீர்மானிக்கிறதென்றால் மதியால் செய்யக்கூடியது யாதொன்றுமில்லை என்றாகிறது. இதன் கொள்கைப்படியே ஒவ்வொரு விஷயமும் ஒன்றுக்கொன்று ஒவ்வாததாய் முரண்படுகிறது. உதாரணமாக: குடியால் வரும் கேடுகளை விஸ்தாரமாயெழுதுகிறது, இந்து மதத்திலிருந்து கிறீஸ்துவர்களானவர்களைத் தாக்கி எழுதுகிறது முதலியன. இவ்வாறு எழுதுவதே அதன் கொள்கைக்கு மாறாகப் போகிறது. ஏனெனில், கள்குடியனாக படைத்த கடவுளின் நியமனத்தைக் குடியால் வருங்கேடென்ற போதனையால் நல்வழியாக்கலாமென்று எழுதுவதின் நோக்கமென்ன? இந்துக்கள் கிறீஸ்துவர்களாகவேண்டுமென்று கடவுள் நிர்ணயித்தபடிதானே கிறீஸ்துவர்களானார்கள். இதிலென்ன குற்றம்? அப்படியிருக்க அன்னவர்களைத் தாக்கி எழுதுவதின் அர்த்தமென்ன? நேரத்திற்கும் சமயத்திற்கும் தாளம் போடும் இத்தகையவர்களுக்கு உண்மையான சத்திய வேதபோதம் என்று கிட்டுமோ, அன்றே இவ்வந்தகாரக் கொள்கை வேறுபடுமல்லாது, இதைப்போன்ற நியாயங்களை எத்தனை எடுத்துச் சொல்லினும் அவர்கள் செவியில் ஏறாது. ஏனெனில், இருகிருப்பான மறுபிறப்பு கொள்கை அதை மறைந்துக்கொண்டிருக்கிறதென்பதே அதற்குக் காரணம்.

Yatiyantota, 3—8—21.

இங்ஙனம்,
வைப்பார் புலி.

உத்தரிக்கிற ஆத்துமாக்களின் பரிகாரக் கிருத்திய சபை.

குன்றுகளின் இராணியென்றழைக்கப்படும் நீலகிரி ஜில்லாவின் திலகம்போல் விளங்கும் உதகமண்டலத்தில் மேல் கடைவீதித் தெருவில்

உத்தரிக்கிற ஆத்துமாக்கள் அநித்ய நிவாரண சபை ஏற்படுத்தப்பட்டு நடந்துவருகிறது. அதின் ஐந்தாம் வருட பூர்த்தி விழா நிகழும் செப்டம்பர் மாதம் முதல் தேதி கொண்டாடப்பட்டது. அன்று காலை இவ்வூர் மோக்ஷவிராக்கினி திருவாலயத்தில் சங். மரியலூயிஸ் குருவானவரால் மேற்படி சபையாரின் கோரிக்கைக்கிணங்கி பொதுவாக உலகில் மரித்த ஆத்துமங்களுக்காக பாடற்பூசை செய்யப்பட்டது. பின்னர் 2½ மணிக்குமேல் கடைவீதி தெருவில் ஏழைகளுக்கு சாப்பாடும் வஸ்திரமும் வழங்கப்பட்டன. இரவு 8 மணிக்கு அர்ச். தமதிரித்வதியான சபைக் கட்டடத்தில் சபையின் கௌரவ காரியதரிசி ஸ்ரீமான் சா. அருளானந்தம் அவர்களின் வேண்டுகோளின்பேரில் ஸ்ரீமான் ஆ. த. அந்தோனிசாமி அவர்கள் சபையின் ஐந்தாம் வருடாந்த யாதாஸ்தை வாசித்தனர். பின்னர் காரியதரிசியவர்களின் கோரிக்கைக்கிணங்கி ஸ்ரீமான்களாகிய மு. த. அந்தோனிசாமியவர்களும், ஞா. ச. மிக்கேல் ராஜு அவர்களும் ஆத்துமங்களைப்பற்றியும் பூசைசெய்விப்பதனால் வரும் நன்மைகளைப் பற்றியும் சபையைப்பற்றியும் உபன்னியாசித்தனர். முடிவில் தாம்பூலம் வழங்கப்பட்டு சபை கலைந்தது.

மேற்படி சபையார் வாரத்திற்கு அரையணா ஒரு அணாவாகக் கொடுக்கும் தொகையைச் சேகரித்து பூசைகள் செயவித்துவருகிறார்கள். அச்சபை துவக்கி இதுவரையிலும் பொதுவாக உத்தரிக்கிற ஆத்துமாக்கள் அவதிகுறைய 144 பூசைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் பெரிய பாடற்பூசைகள் ஆறு. இதை கண்ணுறும் நேயர்கள் தங்கள் ஊர்களிலும் இதைப்போல சபைகள் ஏற்படுத்தி மேற்படி ஆத்துமங்கள் படும் சொல்லொண்ணா வேதனைகளை திவ்யபூசை பலியினால் நீக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். உதாரணமாக பிரான்சு தேசத்தில் மோந்துலீழோன் பட்டணத்தில் சங். சின்னப்ப சுவாமிகளால் ஏற்படுத்தப்பட்ட பரிகாரக் கிருத்திய சபையானது மெம்பர்கள் கொடுக்கும் வருஷ சந்தாவாகிய அரையணாவைக்கொண்டு வருஷத்தில் லட்சக்கணக்கான பூசைகள் நடத்திவருகின்றது. அவற்றினால், எத்தனையோ ஆத்துமங்கள் மோட்சத்திற்கு செல்லுவார்கள். அதைப்போல நமது தேசத்திலும் சபைகள் ஏற்பட்டால், இன்னும் அதிக ஆத்துமாக்கள் நித்தியானந்த ஸ்தலத்துக்குள் சேர்க்கப்படுவார்களன்றோ?

G. S. மிக்கேல் ராஜு.

மிகவும் சங்கைக்குரிய
மொன்சிஞ்ஞோர் ஏ. ஆர். ஜான் சுவாமிகளின்
வெள்ளி ஜூபிலி நிதி.

நமது பத்திரிகாசிரியராகிய மிக. சங். ஏ. ஆர். ஜான் சுவாமிகளின் ஜூபிலி இந்த அக்டோபர்மீ முடிவில் கொண்டாடப்படவேண்டுமென்று கமிட்டியார் தீர்மானித்திருக்கிறார்கள். இதற்குள் அர்ச். பாப்பானவரிடமிருந்து "பிரீப்" என்னும் அதிகாரப்பத்திரம், வந்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வந்தவுடன் நாள் நிர்ணயிக்கப்படும். சுவாமிகளுக்கு மொன்சிஞ்ஞோர் பட்டத்துக்குரிய உடுப்பைச்செய்து கொடுத்து கொண்டாட்டத்தின் செலவு, சுபசோபன வாழ்த்துப் பத்திரத்தின் செலவு முதலியவைபோக மிகுதியாயுள்ள தொகையை சுவாமிகள் தம்மிஷ்டப்படி செலவிடும்படி அவர்களுக்கு ஒருமுடிப்பாக அளித்துவிட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகையோடு இம்மாதத்தில் பின் குறிக்கப்பட்டுள்ள நன்கொடைகள் நன்றியறிதலுடன் வரவேற்கப்பட்டன:—

10 ரூபாய்.—ம-ா-ா-ஸ்ரீ, ராய் சாஹிப், கா. அருளைய நாயுடுகாரு, கீழ்ச்சேரி.

5 ரூபாய்.—சங். எம். ஜே. மிக்கேல் சுவாமியார், இராயபுரம்.

2 ரூபாய்.—ம-ா-ா-ஸ்ரீ, எஸ். எம். தாசன், கொள்ளுபிட்டியா; வின்சென்ட் பெரோரா, மாஸ்கேலியா.

1 ரூபாய்.—ம-ா-ா-ஸ்ரீ, கே. எம். ஞானப்பிரகாசம் நாவலர், பம்பாய்; எஸ். எஸ். வி. சூசை அடுத்தாரைக்காத்தார், ஹொரானை; புட்டி சின்னைய நாயுடு, மௌளகூர்.

2/74, பிராட்வே, மதராஸ், 29—9—21.

எம். பி. குழந்தைசாமி,
பொக்கிஷதாரன்

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

ஐ. சி. எஸ். பரீட்சை.—கலெக்டர் முதலிய ப்பாரிய உத்தியோகஸ்தர்களுக்கான ஐ. சி. எஸ். பரீட்சை அடுத்த வருஷத்தில் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஏககாலத்தில் நடைபெறுமெனக் கேள்விப்படுகிறோம். பாரிஸ்டர் பரீட்சையும் இந்தியாவில் நடைபெறவேண்டுமென கோரப்படுகிறது.

மாப்பிள்ளைமார்களின் பயமுறுத்தல்.—கத்தி செய்துகொடுக்க மறுத்ததற்காக இரண்டு கருமார்களை மாப்பிள்ளைமார்கள் கொல்லவந்தார்களென்று, அக் கருமார்கள் அதிகாரிகளிடம் பிராது செய்தனராம். என்னே மாப்பிள்ளைகளின் கொடூரம்! மலையாளக் குழப்பத்தில் சம்பந்தப்பட்ட 16 மாப்பிள்ளைமார்களில் 7 பேருக்கு 7 வருஷங் கடுங்காவலும், மற்றவர்களுக்கு 5 வருஷங் கடுங்காவலும் தண்டனை விதிக்கப்பட்டது.

கீழ் ஆபிரிக்காவில் இந்தியர்கள் சரியாய் நடத்தப்படவில்லையென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இவ்விஷயமாய் சமீபத்தில் இராஜாங்க சபையில் கேள்வியுண்டானபோது, ஓட்டுரிமை, நிலம் வாங்குதல், வியாபாரம் முதலிய விஷயங்களில் இந்தியரை சரிசமத்துவமாக நடத்தவேண்டுமென்று பிரிட்டிஷ் கவர்ண்மெண்டார் நிர்ணயம் செய்துவிட்டார்களென்று கவர்ண்மெண்ட் தரப்பில் பதில் சொல்லப்பட்டது. இது ஒரு திருப்திகரமான செய்தி. தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் நிலைமை எவ்வாறு பரிகரிக்கப்படுமோ தெரியவில்லை.

ஒரு தங்க ஜூபிலி.—எங்கள் ஞான தந்தையாகிய இவ்வூர் பங்கு சுவாமியாராகிய சங். கொன்ஸ்தாந்தின் பியோலி குருவானவருடைய குருப்பட்டம் பெற்ற 50-ம் வருடத்திய தங்க ஜூபிலி இம்மாதம் 25௳ கொண்டாடப்போகிறோம். அதற்காக ஜூபிலி கமிட்டி நியமித்து காரியாதிகள் நடந்துவருகின்றன. மேற்படி ஜூபிலியின் ஞாபகார்த்தமாக இவ்வூர் மோக்ஷ இராக்கினி மாதாக்கோவிலில் பெரிய பீடத்தை சலவைக்கல்லால் கட்ட யோசித்து, அதற்காக வேண்டிய சலவைக்கற்களை ஐரோப்பாவினின்று தருவித்து வேலை துவக்கியாய்விட்டது என்று உதகமண்டல நண்பரொருவர் தெரிவிக்கிறார்.

வேல்ஸ் இளவரசர் விஜயம்.—இவர், ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறபடி, நவம்பர்௴ 17-ம் தேதி பம்பாயில் வந்திறங்குவார். இந்தியாவின் பிரதான நகரங்களையெல்லாம் பார்வையிட்டுவிட்டு கடைசியாக மார்ச்சு௴ 17-ம் தேதி கராச்சியிலிருந்து கப்பலேறுவார். ஆக இவர் சரியாய் 4 மாதங்கள்வரையில் இந்தியாவில் தாமதிப்பாரென்று தெரியவருகிறது. இவருடைய வரவேற்பு செலவுக்காக இந்தியா கவர்ன்மெண்டாரால் 20 லட்சம் ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

சென்னையில் கத்தோலிக்கு காலேஜ்—ஒன்றை ஸ்தாபிப்பதற்கு வேண்டிய நிதி சேகரஞ் செய்ய திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலர்சாலையைச் சேர்ந்த சேசுசபைக்குரு சங். பெர்ட்ராம் சுவாமிகள், ஐரோப்பா அமெரிக்கா முதலிய தேசங்களுக்குச் சென்றிருப்பது நண்பர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அந்த சுவாமிகள் இம்முயற்சி கைகூடுமாறு பரிசுத்த பாப்பானவரின் ஆசீர்வாதத்தைக் கேட்டபொழுது அவர் அதி சந்தோஷத்துடன் அம்முயற்சியை ஆசீர்வதித்ததுடன், அதைக் கத்தோலிக்கர் ஆதரிக்க வேண்டுமென்பதை வற்புறுத்திக் காண்பிக்க தாந்தாமே, 27,000 ரூபாய் நன்கொடையளித்தனராம். என்னே நமது பரிசுத்த பிதாவின் அன்பும், தயையும் உதாரகுணமும்!

கிலாபத் இராஜ்ஜியம்.—மலையாளத்தில் மாப்பிள்ளைமார்களால் நடந்த அநியாயக் கொலைகளும், கொள்ளைகளும், அட்டூழியங்களும் நண்பர்களுக்குத் தெரிந்த விஷயங்கள். அதிற் சம்பந்தப்பட்ட அநேக குற்றவாளிகள் நூற்றுக்கணக்காய்ப் பிடிபட்டு தண்டனை யடைந்துவருகிறார்கள். இன்னுஞ் சிற்சில பாகங்களில் கொள்ளைகளும் கொலைகளும், பிரிட்டிஷ் ராணுவத்தாருடன் சண்டைகளும் சிறிது நடந்துவருகின்றன. இவை மத்தியில் நீலாம்பூரில் மிக்க செல்வாக்குள்ள ஒரு மாப்பிள்ளை சீதிகொய்யாதாங்கல் என்னும் பெயரினர், "கிலாபத்து இராஜ்ஜியம்" என்று ஒரு இராஜ்ஜியத்தை ஸ்தாபித்து, அதற்கு தான் கவர்னர் என்று பறைசாற்றி, அதன்படியே, மூன்று குற்றவாளிகளைப் பிடித்து தன் கோர்ட்டில் விசாரணை செய்து அவர்களுக்குத் தண்டனை விதித்துவிட்டாரென்று சொல்லப்படுகிறது. இது எத்தனை நாள் ராஜ்ஜியமோ தெரியவில்லை. "செங்கோலுக்குமுன் சங்கீதமா?"

ஆயுள் ரகசியம்.—மருந்தினால் அல்ல, ஆனால், மனத்தை இளமையாய் வைத்திருப்பதால், ஒருவன் நீண்டகாலம், இளமையுடன் உயிர்வாழ்ந்திருக்கலாமென்று நியூயார்க் வாசியான வார்னர் என்ற வைத்தியர் கூறுகிறார். 'உறுதியான திரேகக்கட்டு, ஒழுக்கந் தவறாத சுத்த வாழ்க்கை, ஆகிய இவ்விரண்டும் இருந்தால், ஒருவன் நூற்றைம்பது வருஷங்கூட வாழலாமென்றும் அவர் சொல்லுகிறார். மனோதர்மமும் நெறிதவறாத வாழ்க்கையுமே முக்கியமென்று அவர் கூறுகிறார்.

பறக்கும் மனிதர்.—இப்பொழுது பறக்கிற ஆகாய விமானங்களை நாம் பார்க்கிறோம். ஆனால் இனி, கந்தர்வர்கள்போல, ஆகாயத்தில் பறக்கும் புருஷர்களையும் ஸ்திரீகளையும் பார்க்கலாம். ஸ்ரீ போஸன் என்ற ஒருவர் ஜினோதவாவில் ஒருவித ஆகாய விமானத்தைச்செய்துக்கொண்டிருக்கிறாராம். அதன் உதவியால் மனிதன் தனது சக்தியினாலேயே பறக்கலாம். இறக்கை இருந்தால் பறந்துவருவேன் என்று கூறும் ஜனங்கள் இனி உண்மையிலேயே அவ்வாறு செய்யலாம்.

"பேப்பல் ஸ்டேட்ஸ்" என்னும் ஊர்கள் சில வருஷங்களுக்குமுன்னே அதாவது 1870-ம்வருஷத்துக்குமுன் நமது பரிசுத்த பாப்பானவர் ஆளுகைக்குள் இருந்துவந்தன. அவற்றிலிருந்து வரியிறை முதலியவைகளை மற்ற தேசத்தரசர்கள் வசூலித்து ஆண்டுவருவதுபோலவே நமது பாப்பானவரும் ஆண்டுவந்தார். அதையிட்டே அவருக்கு "பாப்பரசர்" என்ற பேர் உண்டாயிற்று. அந்த அரசுரிமையை, இத்தாலிய இராஜ குடும்பத்தார் அநியாயமாக அபகரித்துக் கொண்டனர். அந்த சுதந்தரத்தை மீண்டும் பரிசுத்த தந்தையவர்களுக்கு அளிக்கும் வண்ணம் ஒரு ஆலோசனை கிளம்பியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த நாட்டின் விஸ்தீரணம் 10,000 ஏக்கரா கொண்டிருக்கவேண்டுமென்றும், அது நமது ஞானத் தந்தை வாசஸ்தலமாகிய வத்திக்கான் மாளிகையைச்சுற்றி அல்லது அடுத்து இருக்கவேண்டுமென்றும், அதற்கு ஒரு துறை முகமும் இருக்கவேண்டுமென்றும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆலோசனை உறுதிப்பட்டு நிறைவேறுமானால் நமது பரிசுத்த பிதாவுக்கு எவ்வளவு பிரயோஜனமாகுமென்று நாம் சொல்லத்தேவையில்லை.

அர்ச். ஆரோக்கியமாதாவின் திருவிழா.—கல்கத்தா அர்ச். சூசையப்பர் கோவிலில் திருக்குடும்ப சங்கத்தார் ஷெ திருவிழாவுக்குமுன் நவநாள் கொண்டாடினார்கள். கொடியேற்றமானதிலிருந்து முடிவு வரையில் செலுத்தப்பட்ட பொருத்தனைகளுக்குக் கணக்கில்லை. "இதோ உன் தாயார்" என்று மாதா பீடத்திலும் "மரியாயின் மக்களே! மனமகிழுங்கள்" என்று கோவிலின் முகப்பிலும் பெரிய எழுத்துகளால் எழுதப்பட்டிருந்ததுடன் கோவிலின் உள்ளும் புறமும் வெகு நேர்த்தியாக ஜோடிக்கப்பட்டுமிருந்தது. சங்க ஸ்தாபகரின் தந்தையாகிய சென்னை C. ஞானப்பிரகாசம் பிள்ளையவர்கள் தம் சொந்த செலவில் மாதாவுக்கு ஓர் அழகிய விமானஞ் செய்தளித்தார். 4௳ நடந்த சுற்றுப்பிரகாரத்திற்கு ஏறக்குறைய 1,500 பேர் விஜயஞ்செய்தார்கள். நவநாட்களில் பிரசங்கஞ்செய்த சங்கைக்குரிய C. லிம்பர்க், S.J., J. டிசோசா H. வில்லியம்ஸ் குருசாமிமார்களையும், ஞான சங்கீதங்கள் பாடிவந்த அந்தோனியார், திரு இருதயநாதர் பஜனைகளையும் திருக்குடும்ப சங்கத்தின் மெம்பர்களையும் பரிசுத்த ஆரோக்கிய மாதா ஆசீர்வதிப்பாளாக என்று ஒரு நேயர் வரைகிறார்.

ஸ்ரீமான் எம். இரத்தினசாமி முதலியார், எம். ஏ. பாரிஸ்டர் அட்லா.—இந்தக் கத்தோலிக்குக் கனவான், சென்னை நகர் பரிபாலன சபையில் ஒரு அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டுவிட்டார் எனக் கேள்வியுற்று சந்தோஷமானோம். இவரைப்பற்றி நமது சந்தாதார நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். இவர் சென்னை பச்சையப்பன் கலாசாலையின் (பிரின்சிபால்) தலைமை உபாத்தியாயராவர். சமீபத்தில், தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் கௌரவ காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டார். இவருடைய கல்வித்திறமைக்கும், வாக்குச்சாது

ரியத்துக்கும், அநுபவ ஞானத்துக்கும், இவர் சென்னை இராஜாங்க சட்ட நிரூபண சபையிலும், இந்திய இராஜாங்க சபையிலும் இடம் பெறுவதற்குப் பெரிதும் அருகராவர். அப்பதவிகள், சமயம் வாய்க்கும்போது, இவருக்குக் கிடைக்காமற்போகாவென்பது எமது நம்பிக்கை.

பேங்களூர் கத்தோலிக்கு கோவாப்பரேடிவ் கிரடிட் சொசைட்டியின்—நான்காவது வருடத்திய அறிக்கை வரப்பெற்றோம். அதன் பிரகாரம் பிரஸ்தாப வருஷக்கடைசியில் 439 மெம்பர்களும், 2,477 ஷேர்களும் இருந்தன. மெம்பர்களுக்கு உதவிய கடன் தொகை ரூ. 16,491—7—0. இதில் கலியாணங்கள் நடத்த ரூ. 3,230; வீடுகட்ட, மராமத்து செய்ய ரூ. 1,793; பழய கடன்களைத் தீர்க்க ரூ 9,545; மற்ற தொகை வேறு பல சில்லறைக் காரணங்களுக்காக வாங்கப்பட்டன வெனச் சொல்லப்படுகிறது. 1920-ம் வருஷத்தில் எல்லா செலவும் போக வந்த லாபம் ரூ. 1,218; மெம்பர்களுக்கு 100க்கு 7½ வீதம் டிவிடெண்டு கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. ரிசர் பண்டு ரூ. 1665. இந்த சொசையிட்டியின் வரவுசெலவு கணக்குகளைப் பரிசோதித்த கோவாப்பரேட்டிவ் சொசைட்டி ரிஜிஸ்ட்ராரின் ரிப்போர்ட்டு திருப்திகரமானதாயிருக்கிறது. அவர் தமது ரிப்போர்ட்டை "இவ்வருஷத்தில் பொதுவாய் சொசையிட்டி நன்றாய் நடந்துவந்திருக்கிறது என்று முடிக்கிறார். இந்த கத்தோலிக்கு முயற்சி நாளுக்கு நாள் விருத்தியடைந்து வருவதைப்பார்க்க நமக்குப் பெரிதும் சந்தோஷமுண்டாகிறது.

இதை இவ்வளவு நல்ல விதமாய் நடத்திவரும் அதிகாரிகளின் நன் முயற்சி கத்தோலிக்கரால் மிகவும் பாராட்டப்படத் தக்கது.

இந்த சொசையிட்டியில் கத்தோலிக்கர் இன்னும் ஏராளமாய்ச் சேர்ந்து இன்னும் அதிக பிரயோஜனம் அடையப் பிரயாசைப்படவேண்டுமென்பது எமது கோரிக்கை.

தீபச் செடிகள்.—இவ்வுலகத்தில் சாப்பிடுகிற குடிக்கிற செடிகளிருக்கின்றன. கத்தியால் கீறினால் இரத்தஞ் சிந்துகிற செடிகளுமிருக்கின்றன. மெக்சிகோ மாகாணத்தில் ஓர் விதச் செடி இருக்கிறது. காலையில் அச்செடி வெண்மையாகவும் மத்தியானத்தில் சிகப்பாகவும் சாயங்காலத்தில் நீல நிறமாகவும் மாறிவிடும். சில நேரத்தில் அச்செடியில் பரிமள சுகந்தம் வீசிக்கொண்டிருக்கும். மற்றச்சமயங்களில் அச்சுகந்த மற்றதாயிருக்கும். தென் அமெரிக்காவில் ஆர்கிட் வர்க்கத்தைச்சேர்ந்த ஓர்வித செடியுண்டு. அச்செடி தாகமாயிருக்கும்போது குழாயை நிகர்த்த அதன் நீளக் கொடிகளிலொன்றைத் தண்ணீரில் விட்டு உறிஞ்சி ஜலபானம்பண்ணும். அதன்பின் அக்கொடியானது சுருண்டு பந்துபோலாகி அச்செடியின் உச்சியிலிருந்துவிடும். அரேபியாவில் ஓர்வித செடி யிருக்கிறது. அதன் விதைகளைச் சாப்பிடுகிறவர்களுக்குச் சிரிப்பையுண்டாக்கும். காஸ் வாயுவை சுவாசித்தவர்களைப் போன்று ஒரு மணிநேரமாகச் சிரித்து விளையாடி கூத்தாடிக்கொண்டிருப்பார்கள். சிரிக்காத தூங்குமுஞ்சியினர் கூட அவ்விதைகளைச் சாப்பிட்டால் சிரித்துக் கூத்தாடுவார்கள். ஒரு மணிநேரத்திற்குப் பிறகு விதைகளை யருந்தினவன் இளைத்துக் களைத்து நித்திரைசெய்வான். விழித்து அவன் முன் நிகழ்ந்ததை முற்றிலுமே மறந்துவிடுவான். இந்தியாவின் மத்திய பாகங்களிலுள்ள மின்சாரச் செடிகளின் இலைகளை எவனாவது தொடுவானேல் சரீர அதிர்ச்சியும் நடுக்கமுமுண்டாகும். அமெரிக்காவில் பிரேசில் மாகாணத்தில் பிரகாசமுடைய செடிகளிருக்கின்றன. இராத்திரிகாலங்களில் ஒரு மைல் தூரத்திலிருந்தாலும் அவ்வெளிச்சமுடைய செடியைக் காணலாம். அச்செடியின் பக்கத்தினின்று மிகச் சிறிய அச்செழுத்துகளடங்கிய புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் எளிதாய் வாசிக்கலாம்.—"தேச நேசன்."

"பூனைப் பாதம்".—அமெரிக்க ஐக்ய நாடுகளில் மதுவிலக்குப் பிரசாரஞ்செய்து பேர்பெற்ற மிஸ்டர் டப்ளியு. இ. ஜான்சன் என்ற பரோபகாரி, இந்தியாவிலும் அப்பிரசார வேலைசெய்யும் நோக்கத்துடன், பம்பாய் நகரம் வந்துசேர்ந்துள்ளார். இவருக்குப் "பூனைப் பாதம்" (Pussy-Foot) என்ற மற்றொரு நாமமும் உண்டு. இவர் இந்தியாவின் வடக்குப் பாகங்களிலெல்லாம் சுற்றுப் பிரயாணஞ்செய்து, அங்கங்கே மதுவிலக்குப் பிரசங்கங்கள் செய்துவிட்டு, தெற்குப் பக்கம் திரும்புவார். சென்னைக்கு அக்டோபர்மீ 28உ வந்து, மூன்று நாள் தங்கியிருப்பார். தென்னாட்டில் அவரது சுற்றுப்பிரயாணத்தின் கால அட்டவணை பின்வருமாறு:

பெங்களூர்	...	நவம்பர்மீ ௲ தேதி
ஈரோடு	...	ஷை 2-ம் தேதி
திருச்சினாப்பள்ளி	...	ஷை 3-ம் தேதி
மதுரை	...	ஷை 4, 5-ம் தேதி
கொழும்பு கண்டி முதலிய இலங்கை ஊர்கள்		7 முதல் 14உ வரையில்

இந்நாட்டிலுள்ள மதுவிலக்குப் பிரசாரர்கள் தங்கள் ஊர்களில் அவர் பிரசங்கஞ் செய்யவேண்டுமென்று விரும்புவார்களானால், கூடுமானமட்டும் அவ்விருப்பத்தைப் பூர்த்திசெய்ய பிரையாசைப்படுவார். இவ்விஷயமாய் திட்டமான செய்தியறிய விரும்புபவர்கள், பின்கண்டவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

சென்னையில் :—Mr. C. Selvaraju, 18, Parish, Vankatachala Aiyar Street, G. T. Madras.

இலங்கையில் :—Mr. D. B. Jayatilaka, 14, Regent Street, Colombo.

கலால் இறக்குமதி.—1919-20 வருஷத்தில் இந்தியாவுக்குள் இறக்குமதியான அந்நிய நாட்டு சாராய தினுசுகள் 12 லட்சத்து 83 ஆயிரத்து 674 காலன்கள் என்றும், அவற்றின் விலை இரண்டு கோடியே ஐம்பது லட்சத்து எண்பத்தேழாயிரத்து அறுநூற்று நாற்பத்தைந்து ரூபாய் என்றும் அதிகாரிகள் கணக்கிட்டுச்சொல்லுகிறார்கள். இதிலிருந்து இந்தியாவின் கேட்டுக்காக எவ்வளவு பணம் செலவழிக்கப்படுகிறதென்று தெரிகிறது.

ஓர் அற்புதம்.—பெங்களூர், அர்ச். காணிக்கை மாதாக் கோவிலின் விசாரணையைச் சேர்ந்த ஒரு உத்த மஸ்திரீ ஆண் குழந்தை யில்லாது மிக்க வருத்தமுற்று பரிசுத்த தேவதாயாரின் வேண்டுதலால் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். இந்த பேருபகாரத்தை மறவாது அக்குடும்ப முழுமையும் அமலோற்பவ கன்னிகைக்கு நன்றி செலுத்தினார்கள். அக்குழந்தைக்கு நான்கு வயதானபோது இன்புலுவென்சா என்னும் விஷக் காய்ச்சல் கண்டு ஆபத்தான விதமாய் வருந்தின சமயம், இவன் தாயார் மீண்டும் அமலோற்பவ இராக்கினியையண்டி தன் ஒரே மகனுக்கு சௌக்கியம் கொடுத்தருள மன்றாடினாள். இவள் மன்றாட்டால் குழந்தை சுகப்பட்டாலும் நாக்கு விழுந்து ஊமையாய்விட்டான். இப்படியே இரண்டு வருஷங்களாயிருந்தது. பெற்றோர்கள் மனநொந்து பரிசுத்த கன்னித்தாயாரை மன்றாடிவந்ததோடு அடிக்கடி நவநாள் செபம், திருநாள் கொண்டாட்டங்கள் செய்து ஒப்புக்கொடுத்துவந்தார்கள். இதன் பலனாக தேவமாதா பிறந்த தினத்திற்கு முந்தின நாளாகிய செப்டம்பர் மாதம் 7-ம் தேதி அர்ச். காணிக்கைமாதா கோவிலின் வருஷோத்ஸவத்தின்போது ஷை சிறுவன் தன் வீட்டு வாசலில் உட்கார்ந்துகொண்டிருக்கையில், ரோட்டில் இரண்டு ஆட்டுக்குட்டிகள் சண்டைபோட்டுக்கொண்டு, மே என்று கத்தினதைக்கண்டு திடீரென்று தன் தாயாரை "அம்மா" என்றழைத்து "ஆட்டுக்குட்டிகள் மே என்று கத்துகிறது" என்று சொன்னான். அதிலிருந்து அவன் நாக்கு சரிப்பட்டு பேச ஆரம்பித்தான். ஷை சிறுவனின் தாயார் சந்தோஷத்தால் பூரித்து தேவதாயாருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தி ஷை 2 ஆடுகளில் ஒன்றை விலைக்கு வாங்கி மடத்துப் பிள்ளைகளுக்குச் சாப்பாடு செய்து கொடுக்கும்படி விசாரணைக் குருசுவாமியாரிடம் கொண்டுவந்து கொடுத்தாள். "மிகவும் இரக்கமுள்ள தாயின் அடைக்கலமாக ஓடிவந்து, அவளுடைய உபகார சகாயத்தை யிரந்து, அவள் மன்றாட்டைக் கேட்ட ஒருவனாகிலும் அவளால் கைவிடப்பட்டதாக ஒருபோதும் உலகத்திற் சொல்லக் கேள்விப்பட்டதில்லை" யென்று அர்ச். பர்னார்து திருவாய் மலர்ந்தருளிய வாக்கு பொய்யாகாதென்று ஒரு நண்பர் எழுதுகிறார்.

அருமையான ஒரு புது புத்தகம்!!

இஃது எல்லோருக்குமே, பெரியோருக்கும் சிறியோருக்கும், இல்லறத்தோருக்கும் துறவறத்தாருக்கும் உபயோகப்படக்கூடிய புத்தகம். [illegible]ளாது வருஷம் மிக்கச் சிறப்பாய் நிகழ்ந்த "மரியாயின் மகா சங்கத்"தின் ஞாபகார்த்தமாய் பிரசுரிக்கப்படுவது. அர்ச்சியசிஷ்டவர்களின் சித்திர சரித்திரம் என்பது இதன் பெயர். வருஷத்தின் ஒவ்வொரு நாளிலும் திருச்சபையால் கொண்டாடப்படும் ஒரு அர்ச்சியசிஷ்டவருடைய சீவிய சரித்திரம் சுருக்கமாயும் அவருடைய சீவி

யத்தின் பிரதான சம்பவங்களைக் குறித்துக்காட்டும் படத்துடனும் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. மேலும் அந்தந்த தேதியில் கொண்டாடப்படும் அந்தந்த அர்ச்சியசிஷ்டவரிடத்தில் விளங்கிய புண்யத்தை நாம் சிந்திப்பதற்காக யோசனைகளும், அதேதேதியில் கொண்டாடப்படும் வேறு அர்ச்சியசிஷ்டவர்களுடைய நாமதேயங்களும் ஆங்கிலத்திலும் தமிழிலும் கொண்டுள்ளது. இத்தகைய அர்ச்சியசிஷ்டவர்களின் சரித்திரம் இதுவரையிலும் தமிழில் பிரசுரிக்கப்படவில்லை. இப்புத்தகம் சமீபத்தில் துடங்கப்போகும் புது வருஷமாகிய 1922-ம்வருஷத்தின் முதல் தேதியிலிருந்து ஒவ்வொருவருடைய அனுதின உபயோகத்துக்கு உதவும்படியாக விற்பனைக்குத் தயாராயிருக்கும். வேண்டியவர்கள் உடனே "நல்ல ஆயன்" ஆபீசு மானேஜருக்கு ஆர்டர் கொடுப்பார்களானால் அன்னோர்களுடைய பெயர் பதிவு செய்யப் பெற்று புஸ்தகம் தயாரானவுடன் அவரவர்களுக்கு அனுப்பப்படும்.

இப்புத்தகம் உயர்ந்த காகிதத்தில் சுத்தமாய் அச்சிடப்பெற்று, 366 படங்களுடன் 700 பக்கங்களுக்கதிகமுள்ளது.

புல்கலிக்கோ பைண்டு ... ... ரூ. 2-8-0
இமிடேஷன் கலிக்கோ பயிண்டு ரூ. 2-4-0
தபாற் செலவு பிரத்தியேகம்.

பெரியதாழை அர்ச்- பிரான்சீஸ் சவேரியார் வாசகசாலைக் கட்ட நிதி.

ஜாபிதா நெ. 360. மார்ட்டின் வாயிஸ் அவர்கள், பதுளை ரூ. 107·40; நெ. 381. சம்மனசுப் பெர்னாந்து அவர்கள் ரூ. 5·30; நெ. 358. பீற்றர் பெர்னாந்து, மட்டக்களப்பு ரூ. 134·00; நெ. 365. Messrs K. M. பெர்னாந்து அன் கம்பெனி, நுவரேலியா ரூ. 27·61; நெ. 401. Messrs. R. A. M. பெர்னாந்து அன் கம்பெனி, நுவரேலியா ரூ. 25·41; நெ. 364. K. S. P. பெர்னாந்து அவர்கள், நுவரேலியா ரூ. 10·16; நெ. 363. Messrs பெர்னாந்து அன் லேன், நுவரேலியா ரூ. 57·25; நெ. 391. E. A. பெர்னாந்து அவர்கள், கொழும்பு ரூ. 210·00; நெ. 411. M. X. மோத்தா அவர்கள், பானந்துறை ரூ. 5·30; நெ. 396. S. A. பெர்னாந்து அவர்கள், நேபோட ரூ. 33·75; விசேஷ ஜாபிதா நெ. 10. M. இஞ்ஞாசிப் பெர்னாந்து அவர்கள், கந்தப்பாளை ரூ. 7·60; நெ. 12. Messrs. குரூஸ் லேன் அன் நசரேன் பெர்னாந்து, கந்தப்பாளை ரூ. 11·27; சில்லறை வசூல் ரூ. 00·35. ஆக மொத்தம் ரூ. 635·40.

Jebamalai Vayis, *Hon. Treasurer.*
S. Croos Fernando, *Hon. Secretary,*
Neliya, 15—9—1921.

ஜாபிதா வைத்திருக்கிற கனவான்கள் வசூலான தொகையை கௌரவ பொக்கிஷதாரவர்கட்கு கூடிய சுருதியில் அனுப்பிவைக்கும்படியாக வெகு விநயமாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தூத்துக்குடியில் வசூலான தொகை விபரம் கிடைக்காதபடியால் பிரசுரிக்கப்படவில்லை.

S. C. F.

திரு இருதய ஆண்டவர் சங்கம்.

சத்துவகுணத்திற் சிறந்த வுத்தம சீலர்கள் அனைவருக்கும் அதி விநயமாகத் தெரிவித்துக் கொள்வதாவது:—

ஐயன்மீர்!

இகத்திற் குரிமையாகிய நல்லொழுக்கங்களில் ஈடு படுவது கல்வியென்பதும், பரத்திற்குரிய மார்க்கத்தைப் பிரதிபலிப்பது பக்தி என்பதும் ஆன்றோர் துணிபாதலின், இவ்விருவகையாக இகபர சாதனங்களை நம்மனோர் அடைவதற்கியன்ற ஏதாவதொரு முயற்சி அடியேனால் நிலைபெறச் செய்யவேண்டுமென்று பன்னாள் சிந்தித்ததில் எனது சிற்றறிவுக்குப் புலப்பட்டவாறு ஷை சங்கத்தை ஸ்தாபித்து பக்திக்குரிய காரியங்களை நடத்திவரவும், அதேசங்கத்தின் பெயரால் ஒரு புத்தக நிலயமும் ஏற்படுத்தி அதில் கல்வியறிவை யபிவிர்த்திச்செய்யும் இலக்கண இலக்கிய, சரித்திர தமிழ் நூற்களையும், நீதி சாஸ்திரங்களையும், தமிழ் நாவல்களையும் பலவிடங்களினின்றும் என் சொந்த செலவில் தருவித்து அவைகள் பலருக்கும் பயன்படுமாறு செய்துவைப்பதே பலவகையினுஞ் சிறந்ததாகவும், எனக்கும் என்னைச் சார்ந்த பலருக்கும் இவை பயன்படுமெனவும் உத்தேசித்துப் போதுமான அளவு பூர்த்திசெய்துள்ளேன்.

ஆகவே, இதனைக் கண்ணுறும் அன்பர்கள் யாவரும் இச்சங்கத்திற் சேரவும், கல்வி, பக்தியாதிய விஷயங்களில் முன்னேறவும் பிரயாசப்படுவதுடன் அடியேனின் கோரிக்கையையும் நிறைவேற்றி அதனால் வரும் புண்ணியப் பலனையும் அடையுமாறு பிரார்த்திக்கின்றனன்.

N.B.—இந்தச் சங்கத்தைப்பற்றியதும், புத்தக நிலயத்தைப்பற்றியதுமான எந்த விஷயங்களும் என்னிடம் நேரில் தெரிந்துகொள்ளவும், இன்னும் இவைகளின் அபிவிருத்தியைப்பற்றிக் கலந்து யோசிக்கவும் அன்பர்களின் பகிர்முக தரிசனத்துக் கெதிர்பார்க்கின்றனன்.

இப்படிக்கு,
பாதுர் K. M. ஞானப்பிரகாஸம் நாவலர்,
ஷை சங்கத்தின் காரியதரிசி.
North Coli House Appalla Bunder,
Bombay.

The Good Pastor

நல்ல ஆயன்

5 NOV 1921 MADRAS

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 19. | நவம்பர் 1921. | இலக்கம் 11.

FEAST OF ALL SAINTS AND ALL SOULS' DAY.

சகல அர்ச்சியசிஷ்டவர்கள், உத்தரிக்கிற ஆத்துமாக்கள் திருநாட்கள்.

வருஷத்தில் வரும் பிரதி தினத்திலும் ஒரு அல்லது பல அர்ச்சியசிஷ்டவர்களைக் குறித்து திருவிழா திருச்சபையில் கொண்டாடப்பட்டுவருகின்றது. ஆனால் மோட்ச ஜெருசலேமில் நித்தியானந்த பாக்கியத்தைச் சுகித்துவரும் எண்ணிறந்த மோட்சவாசிகளைக் கொண்டாடுவதற்கு வருஷத்திலுள்ள நாட்கள் போதாததினால், திருச்சபையானது இம்மாதத்தின் முதல் திகதியை அதற்காக நியமித்து அந்நாளில் சகல மோட்சவாசிகளின் திருநாளைக் கொண்டாடி வருகின்றது.

நமது பரிசுத்த தாயாகிய திருச்சபையானது பல காரணங்களை முன்னிட்டு அர்ச்சியசிஷ்டவர்களுடைய திருநாட்களைக் கொண்டாடும்படி நமக்குக் கற்பிக்கின்றது. 1-வது: இத்தனை கோடானகோடி புண்யவாளரை சர்வேசுரன் தமது சன்னிதிக்கு வரவழைத்து அவர்களை நித்தியானந்த மகிமைக்குள்ளாகும்படி செய்ததற்கு கைம்மாறாக, நாம் அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ்செலுத்தவும், 2-வது: இந்தக் கண்ணீர்க் கணவாயினின்று, பாவத்தை விலக்கி, தங்களைத்தானே பரித்தியாகஞ்செய்து, தங்களாத்தும சத்துருக்களுடன் தைரியத்துடன் போர்பொருதி, தேவ கட்டளைப்பிரகாரம் பிரமாணிக்கமாய் ஒழுகிய அந்தப் பரிசுத்த ஆத்துமாக்களைக் கண்டுபாவித்து அவர்களைப் போல் தர்மவழியில் நாமும் ஒழுகும்படிக்கும், 3-வது: சர்வேசுரனுடைய சிநேகிதர்களாகிய அந்த அர்ச்சியசிஷ்டவர்கள் சர்வேசுரனிடத்தில் நமக்காகப் பரிந்து பேசி நமக்காக அவரிடத்தில் வேண்டிக்கொள்ளும்படிக்கும் 4-வது நமது பாவங்களால் சர்வேசுரனுக்கு துரோகம் செய்திருந்தால் அதை விட்டொழிக்கும்படிக்கும், அல்லது நமது அந்தஸ்தின் கடமைகளை யநுசரிப்பதில் அசட்டையாயிருந்தால் அதைத் திருத்துப்பாடு செய்துகொண்டு புண்யவழியில் சுறுசுறுப்பாயொழுகும்படிக்கும் நமது சத்திய திருச்சபை அர்ச்சியசிஷ்டவர்கள் போரால் திருநாட்களைக் கொண்டாட நம்மை ஏவுகின்றதென்று அறியக்கடவோம்.

நாம் இன்று கொண்டாடுகிற அர்ச்சியசிஷ்டவர்கள் யாரென்று யோசித்துப்பார்ப்போமாக. அவர்களார்? அவர்கள் பிறக்கும்

போதே அர்ச்சியசிஷ்டவர்களாய்ப் பிறந்தார்களோ? பரிச்சேதமில்லை. அல்லது சம்மனசுக்களைப்போல் பரிசுத்தரா யுண்டாக்கப்பட்டார்களோ? இல்லை. அவர்களும் நம்மைப்போன்ற பலவீனமுள்ள மனிதரே! நமது கீழாங்கிஷம் மேலாங்கிஷத்தைத் தின்மைக்கு இழுப்பதுபோல அவர்களையு மிழுத்தது. நமக்கு ஆசாபாசங் கிளம்புவதுபோல் அவர்களுக்கும் கிளம்பின. உலகம், பசாசு, சரீரமாகிற ஞான சத்துருக்கள் இடைவிடாமல் நம்மைக் கெடுக்கப் பார்ப்பதுபோல் அவர்களையுங் கெடுக்கப் பார்த்தன. ஆனால் அவர்கள் நம்மைப்போல் ஆசாபாசங்களுக்கு இடங்கொடுத்து, தேவ கட்டளையை மீறி பாவத்துக்குள்ளாகாமல் ஜெபதபத்தால் அவைகளை ஜெயித்து வெற்றிகொண்டார்கள். துக்கத்துரிதமுண்டாகும் போதும், வியாதி நோவு வரும்போதும், தரித்திரம் வறுமை உண்டாகும்போதும் நாம் அவைகளைச் சகியாமல் கலங்கி முறைப்படுவதுபோல அவர்கள் செய்யாமல், அவைகளைப் பொறுமையுடன் சகித்து வந்தார்கள். நமக்கு யாதொரு உலக நன்மை யுண்டாகும்போது கர்வித்து அதை துர்ப்பிரயோகஞ்செய்கிறோம். நமக்கு இருக்கும் படிப்பு, திறமை, சாமர்த்தியம், அழகுமுதலியவைகளைப்பற்றி பெருமைபாராட்டுகிறோம். அவர்களோ, உலக நன்மை சர்வேசுரனால் அருளப்பட்டதென்றெண்ணி அகங்காரங்கொள்ளாமலும் அவைகளைத் துர்ப்பிரயோகஞ்செய்யாமலும் இருந்து அதனால் ஞானத்திரவியத்தைச் சேகரித்து வந்தார்கள்.

மேலும், நம்மைவிட அர்ச்சியசிஷ்டவர்களுக்கு எளிதும் சுலபமுமான மோட்சவழியிருந்ததென்றும், அவர்களுக்கு நம்மிலும் உன்னதமும் மேலானதுமான அரிய வரங்கள் அருளப்பட்டனவென்றும் நினைக்கக்கூடாது. அவர்கள் சேசுநாதர் காட்டிய கல்லும் முள்ளும் நிறைந்த சிலுவைப்பாதையில் நடந்தார்கள் மோட்சம்போய்ச் சேர. நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் 10 கற்பனைகள் அவர்களுக்குங் கொடுக்கப்பட்டிருந்தன. சர்வேசுரன் நமக்குத் தயையுடன் பாலித்திருக்கும் தேவத்திரவிய அனுமானங்கள் அவர்களுக்குங் கொடுக்கப்பட்டிருந்தன. அவைகளை யவர்கள் தகுந்தவிதமாய்ப் பிரயோகித்து மோட்சம் போய்ச்சேர்ந்தார்கள். நாமும் அவர்களுடைய தர்மமாதிரிகைகளை பிரமாணிக்கமாய்ப் பின்செல்லுவோமாகில், சந்தேகமின்றி ஒருநாள் நாமும் அவர்கள் கூட்டத்தில் சேர்ந்து நித்தியானந்தத்தைச் சுகிக்கும் பாக்கியம் பெறுவோம்.

இந்த மகா நாளில் நமது ஞானக் கண்ணைத்திறந்து மோட்சத்தில் வாழும் பரிசுத்தவாளர்களைச் சற்று திருஷ்டித்துப்பார்ப்போமாக. அதோ! பரம திரித்துவ சர்வேசுரன் உன்னத சிம்மாசனத்தில் வீற்றிருந்து, அங்குள்ள சகலரையும் பேரின்பத்தால் நிரப்புகிறார். தேவதாயார் சம்மனசுகளுக்கும் மனிதருக்கும் இராக்கினியாக ஸ்தாபிக்கப்பெற்று மோட்சானந்தத்தால் பிரகாசித்துத் துலங்குகிறாள். கர்த்தருடைய ஞானத் தந்தையான அர்ச். சூசையப்பரும் மோட்ச பேரின்ப பாக்கியத்தைச் சுகித்து மகிழுகிறார். கணக்கில்லாத சம்மனசுக்கள் இடைவிடாமல் சர்வேசுரனை ஸ்துதித்து ஆராதித்து மோட்சவாசிகளை நாதகீதங்களால் பரவசமாகச்செய்கிறார்கள். தங்களுயிரைவிட சர்வேசுரனை யதிகமாகநேசித்து அவருக்காக தங்கள் இரத்தத்தைச் சிந்தின அப்போஸ்தலர்களும் வேதசாட்சிகளும் மோட்ச பேரின்ப சந்தோஷத்தால் பூரிக்கிறார்கள். சர்வேசுரனைப்பற்றிச் சகலத்தையும் துறந்து சர்வேசுரனுக்கு ஊழியம் புரிந்த குருக்கள், துறவிகள்முதலிய புண்யாத்துமாக்கள் அழிந்துபோகும் நன்மைக்குப் பதிலாக மோட்சத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, சந்தோஷித்து மகிழுகிறார்கள். இவ்வுலகில் வறுமை, சிறுமை, பஸ்தி, துன்பம்முதலியவைகளைப்பொறுமையுடன் சகித்துத் தங்கள் ஞானப் போராட்டத்தில் வெற்றிகொண்ட இல்லறத்தாரும் ஞான ஆறுதல் கொண்டு களித்து, நாவால் கூறமுடியாத நித்திய பேரின்பத்தால் சந்தோஷித்து மகிழ்ச்சிகொள்ளுகிறார்கள். மேலும் அவர்கள் நம்மைப் பார்த்து, "எங்கள் நேச சகோதரர்களே! நாங்கள் மண்ணுலகிலிருந்தபோது அழிவுக்குரிய உலக நன்மைகளின் மட்டில் பற்றுதல் வையாமல், ஒருபோதும் அழியாத ஞான நன்மைகளைத் தேடி ஆத்துமசத்துருக்களுடன் இடைவிடாமல் போர்பொருதினோம். பற்பல தருணங்களில் பலவீனத்தால் யாதொரு தப்பிதத்தைக் கட்டிக்கொண்டபோது தாமதியாமல் தேவத்திரவிய அனுமானங்களால் தேவ இஷ்டப்பிரசாதத்தைப்பெற்று, சர்வேசுரனுக்கு நல்லூழியஞ்செய்து, பாக்கியமான மரண

மடைந்து இப்போது ஒருபோதும் சூரியன் அஸ்தமியாத தேவலோகத்தில் சகலவித சந்தோஷபாக்கியத்தையும் சுகித்துவருகிறோம். பேரின்ப இராட்சியத்துக்குள் பிரவேசிக்க உங்களுக்கும் மனமிருந்தால் நீங்களும் எங்களைப் பின்பற்றுங்கள். உலக வாழ்வு அநித்தியமும் மோட்ச வாழ்வு நித்தியமுமென்று நிச்சயித்து உங்களாத்தும சத்துருக்களுடன் தைரியத்துடன் போராடுங்கள். இவ்வாறு செய்வீர்களாகில் நீங்களும் ஒரு நாள் எங்கள் கூட்டத்தில் சேர்ந்து நித்திய மோட்சானந்தத்தைச் சுதந்தரித்துக்கொள்வீர்களென்பது சத்திய"மென்று கூறும் மோட்சவாசிகளின் புத்திமதிக்கு நாம் காதுகொடுத்து, இதுமுதல் நமது ஆத்தும அலுவலின்பேரில் உருக்கமும் உற்சாகமும் நிறைந்த கவலை செலுத்திவருவோமாக.

உத்தரிக்கிற ஆத்துமாக்களின் திருநாள்.

நமது பரிசுத்த தாயாரான திருச்சபையானது இம்மாதம் முதல் திகதியில் மோட்சவாசலைத் திறந்து அதில் என்றென்றும் முடியாத நித்தியானந்த பேரின்பத்தில் மூழ்கியிருக்கும் அர்ச்சியசிஷ்டவர்களின் மகிமைபாக்கியத்தை விளக்கிக்காட்டி, நாமும் அவர்களைப்போல் நமது ஞானப் போராட்டத்தில் வெற்றிகொண்டால் ஒரு நாள் நாமும் மோட்சானந்த பாக்கியத்தைத் சுதந்தரித்துக் கொள்வோமென்று நமக்கு நற்புத்தி கூறினபின், அடுத்த நாளாகிய இரண்டாம் திகதியில் உத்தரிக்கிற ஸ்தலத்தின் வாசலை நமக்குத் திறந்துகாட்டி அதைப்பற்றி சற்று யோசனை செய்ய நம்மை ஏவுகின்றது.

ஆ! எவ்வளவு பயங்கரத்துக்குரிய பாதாளம் உத்தரிக்கிற ஸ்தலம்! பயங்கரத்துக்குரிய அக்கினி சுவாலித்தெரிகிறது.! அந்தக் கொடிய அக்கினி சமுத்திரத்தில் ஆத்துமங்கள் படுங் கொடிய வேதனை எப்பேர்ப்பட்டதென்று நாவால் விவரிக்க முடியாது. பயங்கரத்துக்குரிய அந்த கிடுகிடு பாதாளத்தினின்று அழுகைச் சத்தமும் பற்கடிப்புங் கேட்கப்படுகிறது. "சர்வேசுரனைத் தக்கபடி நேசியாமல் அவருடைய கற்பனையை மீறி நடந்தேனே" என்னும் பெருங்கூக்குரல் கேட்கப்படுகின்றது. "பாவசங்கீர்த்தனத்தால் பொறுக்கப்பட்ட பாவங்களுக்குத்தகுந்த பரிகாரஞ் செய்யாமல் போனேனே! அற்பசொற்ப பாவங்களைத் தண்ணீர் குடிப்பதுபோல் கட்டிக்கொண்டேனே! ஜெபதபங்களை பக்தியுங் கவனமுமின்றிச்செய்து யாதொரு பலனடையாமல் போனேனே! திவ்யபூசையை ஆசாரக்குறைவாய்க் கண்டு திவ்யநற்கருணையை அசட்டையாய் வாங்கி, ஞானப் பலனடையாமல்போனேனே! என்னாத்துமத்தையுஞ் சரீரத்தையும் அடக்கி ஒறுத்தல் முயற்சி செய்யாமல்போனேனே! நான் செய்த நற்காரியங்களைத் தக்க கருத்தின்றி செய்ததினால் அவற்றால் அடையக்கூடிய பலன்களை அடையாமல்போனேனே! இந்த ஸ்தலத்தில் ஒரு குற்றத்துக்காக வெகுகாலம் உத்தரிக்கவேண்டியிருப்பதை என் சீவிய காலத்தில் ஒரு மனவல்லய ஜெபத்தால், அல்லது ஒரு விசை திவ்யநன்மை வாங்குவதால், அல்லது ஒரு ஞான முயற்சியால் உத்தரிக்கக்கூடுமாயிருந்தும் அதை அசட்டைசெய்து நெருப்பில் வாதைப்படுகிறேனே" என்று பேரொலியாய்க் கதறி யழுது புலம்புகிறார்கள் ஆத்துமாக்கள்.

மேலும் தங்கள் பெற்றோர் உறவினர் முதலியவர்களால் அற்ப சகாயமும் பெறாததை நினைத்து துக்கித்துப் பதைக்கிறார்கள். "என் பிள்ளைகளே! உங்களைப் பெற்று அன்போடு வளர்த்த எங்களை மறந்தீர்களோ!" என்று தாய் தந்தையர் துக்கிக்கிறார்கள். "எங்களை யன்புடன் வளர்த்துக்காப்பாற்றி எங்களுக்கு யாதொரு துன்ப துரிதமுண்டான போது நீங்களும் எங்களுடன் துக்கித்து, எங்கள் நோவு நொடிகளில் இராப்பகலாய்க் கண்விழித்து அழுதகண்ணும் சிந்திய மூக்குமாயிருந்து அங்கலாய்த்த எங்கள் பெற்றோரே! நாங்கள் இந்த பயங்கரத்துக்குரிய அக்கினி சமுத்திரத்தில் மூழ்கி வேவதைப் பார்ப்பது உங்களுக்கு தர்மமா?" என்று புலம்பியழுகிறார்கள் பிள்ளைகள். "என் சகோதரர் சகோதரிகளே, சிநேகிதரே! நாங்கள் உலகிலிருந்தபோது எங்களை யன்னியோன்னியமாய் ஸ்நேகித்து, தேவகோப தண்டனைக்குள்ளான எங்களை இப்போது முற்றிலும் மறந்தீர்களே; ஐயோ! எங்களுக்கு உதவிபுரியக்கூடாதா? ஆ! சர்வேசுரனுடைய கோபாக்கிரம் எங்கள்மேல் காட்டப்பட்டு சொல்லிமுடியாத வாதைப்படும் எங்களை மறந்துவிட்ட தாய் தகப்பனே! சகோதரர் சகோதரிகளே! அன்புள்ள பிள்ளைகளே, எங்கள் நேச சிநேகிதர்களே தீவிரியுங்கள். எங்கள்

குரூர வாதனையைப் போக்க. இச்சமயத்தில் நீங்கள் உதவிபுரியாவிடில் நாங்கள் அனேக வருஷகாலம் இந்தப் பயங்கர நெருப்பில் வெந்து எங்கள் பாவத்துக்கு உத்தரிக்க வேண்டியிருக்கிறது" என்னுந் துக்கத்துக்குரிய முறைப்பாடுகள் நமது காதில் விழுவதாக நினைத்துக்கொள்வோமாக.

ஆகையால், இருதயத்தை ஊடுருவத்தக்க இந்த வார்த்தைகள் நமது காதில் விழுந்தபின், இனி நாம் சும்மாயிருப்பது சரியல்ல. உங்கள் பெற்றோர் அல்லது பிள்ளைகளிருக்கும் வீடு நெருப்புபிடித்து வேகும்போது, அந்த நெருப்பை யவித்து அவர்களுயிரைக் காப்பாற்ற பிரயாசைப்படமாட்டீர்களா? அவ்வாறே நீங்களும் பிரயாசைப்பட்டு உத்தரிக்கிறஸ்தல நெருப்பில் வேகும் உங்களுடையவர்களுக்கு வேண்டிய உதவி புரிவீர்களாக.

அவர்களுக்கு எப்படி உதவிசெய்யலாமென்று கேட்பீர்களோ? (1) அவர்களுக்கு திவ்ய பூசைப்பலியை செய்விப்பதாலும் அல்லது திவ்யபூசைகண்டு அதை அந்த ஆத்துமங்களுக்கு ஒப்புக்கொடுப்பதாலும் அவர்கள் வாதனையைத் தணிக்கலாம். (2) திவ்யநன்மை பத்தி விஸ்வாசத்துடன் வாங்கி அவர்களுக்கு ஒப்புக்கொடுப்பதாலும் அவர்களுக்கு உதவிபுரியலாம். (3) சிலுவைப்பாதை சேவிப்பதாலும், ஒருசந்தி பிடிப்பதாலும், ஜெபமாலை சொல்லுவதாலும், யாதொரு ஞான முயற்சி அல்லது ஜெபஞ்செய்வதாலும், அவர்கள் வாதனையைக் குறைக்கலாம். (4) பரிபூரண பலன், சில்லறைப் பலன்களைப் பெற்று அவர்களுக்கு ஒப்புக்கொடுக்கலாம். அவர்கள் பேரால் ஏழைகளுக்கு தர்மங்கொடுப்பதால் அவர்களுக்கு உதவிபுரியலாம். (5) கடைசியாக நமது கண், காது முதலிய பஞ்சேந்திரியங்களையும் உள்ளிந்திரியங்களையும் அடக்கி ஒறுப்பதினாலும் அந்த ஆத்துமங்களுக்கு சகாயம்புரியலாம்.

இப்பேர்ப்பட்ட ஞானக் கிருத்தியங்களை உத்தரிக்கிற ஆத்துமாக்களின் திருநாளில்மாத்திரமல்ல, ஆனால் நாடோறும் அவைகளை அனுஷ்டிக்க முயற்சிப்போமாக. இவ்வாறு செய்வோமாகில், சர்வேசுரனுடைய விசேஷ கிருபை நமக்கு ஏராளமாய் உண்டாகும். உத்தரிக்கிற ஆத்துமாக்களின் இராக்கினியாகிற தேவதாயாருடைய விசேஷ சனுகுமுண்டாகும். உத்தரிக்கிற ஆத்துமாக்களும் நம்முடைய ஆத்தும சரீர நன்மைக்காக சர்வேசுரனைப்பார்த்து மன்றாடுவார்கள். கடைசியாய் நாம் உத்தரிக்கிறஸ்தலத்திலிருக்கும்போது நாம் உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்குப் புரிந்த உபகாரத்துக்குக் கைம்மாறாக சர்வேசுரன் நமது வேதனையைக் குறைத்து நம்மை மோட்சத்துக்கு அழைத்துக்கொள்வார்.

MY VALOUR.
என் பராக்கிரமம்.

எனக்கு நல்லவர்களென்றால் வேம்பு; கெட்டவர்களென்றால் கரும்பு. மெய் என்பது மருந்துக்குக்கூட என்னிடம் அகப்படாது. நான் பொய்யிலேதான் பிழைக்கிறேன். "பொய்சொன்னால் போஜனங் கிடையாது" என்று புண்ணியவான்கள் பேசுவார்கள். நானோ "மெய்சொல்வதில் பிரயோஜனமில்லை, பொய் பேசினால்தான் பிழைப்புண்டு" என எத்தனையோ பேரை ஏமாற்றியிருக்கிறேன். என்னோடு பழகினவர்கள் என்னைவிட்டு விலகுவது வெகு பிரயாசை. ஏனென்றால், நேசமென்னும் பாசக்கயிற்றினால் அவர்களை இறுகக் கட்டி, சற்றேனும் அவர்கள் என்னைவிட்டு அகலாது இழுத்துப் பிடித்துக்கொள்வேன். ஆயிரங் கலம் நெல்லை அழிக்க ஒரு அந்துப்பூச்சி போதும் என்றவாறு, சம்மனசுக்களையொத்த ஜனங்கள்கூட என் சகவாசத்தால் சாத்தான்களாக மாறிவிடுவார்கள். ஏனெனில் "கையில் ஜெபமாலை கக்கத்தில் கன்னக்கோல்" என்ற பழமொழிக்கேற்ப, நான் அவர்களோடு சிநேகஞ்செய்து, அவர்களைச் சன்னஞ்சன்னமாய் சீரழியச்செய்வேன்.

நான் அப்படிப்பட்ட அக்கிரமியாயிருந்தபோதிலும், எரிகிற நெருப்புடன் விளையாடும் ஈசற் பூச்சிகள்போல், என் கொடிய குணத்தைக் கொஞ்சமேனும் அறியாதவர்களாய் ஜனங்கள் என்னையே அடுத்துவருகிறார்கள். எனது

நட்பைப் பெறவேணுமென்று, விலைமதிக்கப்படாத ஒரு பொருளை (1) எனக்கு வெகுமானமாகத் தருகிறார்கள். அந்த விலையேறப்பெற்ற வஸ்துவை எனக்குக் கொடுக்கிறவர்கள் எவர்களோ அவர்களுடன்தான் நானும் சேர்வேன். என் சிநேகமானது அந்த விலையுயர்ந்த சாமானைவிட அதிக மேலானதாய் அவர்களுக்குத் தோன்றுகிறது. "கழுதை அறியுமோ கந்தப்பொடி வாசனை" என்றாற்போல், இந்த ஜனங்களுக்கு அந்த சிறந்த வஸ்துவின் மதிப்பு இன்னதென்று தெரியாததால், நான் அதைக் கேட்ட உடனே தந்துவிடுகிறார்கள்.

என் மித்திரர்களுக்கு நான் தேனினும் இனிப்பு; ஆனால் சற்குணர்களாகிய என் சத்துருக்களுக்கு நான் எட்டிக்காயினும் கசப்பு. என் விரோதிகள் பாம்பைத் தீண்டுவதென்றாலும் பயப்படாமல் தீண்டுவார்கள்; ஆனால் என்னிடம் அண்டுவதற்கோ அஞ்சுவார்கள். என் சிநேகிதர்களோவெனில் எந்நாளும் என் நட்பையே நாடி நிற்பார்கள். என்னைத் தொட்டாலே தோஷமென்று தூர விலகிப்போவார்கள் என் விரோதிகள். என் நண்பர்களோ என்னை விட்டுப் பிரிந்தால் நீரைவிட்டுப்பிரிந்த மீன்போல் தவிப்பார்கள். சுவாமியைப்பற்றித் தியானிப்பதென்றால் என் சத்துருக்கள் சர்வ சந்தோஷங்கொள்வார்கள்; என் மித்திரர்களுக்கு சுவாமி பேச்சென்றால் தர்மசங்கடம். வேதபுஸ்தகங்களைக் கற்கண்டினும் இனிதாய் விரும்புவார்கள் என் விரோதிகள். என் சிநேகிதர்களோவெனில் சிற்றின்பப் புஸ்தகங்களைத் தான் சீனிசக்கரை சாப்பிடுவதுபோல் ஆசையுடன் வாசிப்பார்கள். என் சிநேகிதரில் சிலர் என்னை கடவுளுக்குமேல் உயர்த்துகிறார்கள்; பாட்டுகளால் என்னைப் புகழ்கிறார்கள் பலர். நடிக்கும் நாடகங்களில் நானில்லாவிட்டால், என் சிநேகிதர்களுக்கு நன்றாயிராது.

அடுத்துக்கெடுப்பதே என் அலுவல் என்று முன்னமே சொன்னேன். என்னோடு பழகப் பழகி, என் சிநேகிதர்களும் என்னைப்போல் சோம்பேறிகளாய், குடியர்களாய், திருடராய், கொலையாளிகளாய், நாடோடிகளாய், காமாதுராய் மாறிவிடுவார்கள். என் சிநேகிதரில் சிலரைத் தூக்குப்போட்டிருக்கிறார்கள், தேசாந்திரம் அனுப்பியிருக்கிறார்கள், துப்பாக்கியால் சுட்டிருக்கிறார்கள், சிறைச்சாலையில் அடைத்திருக்கிறார்கள். என்றாலும் என்னோடு வாழ்வதென்றால் என் சிநேகிதர்களுக்கு ஆனந்தம். பாவம், அவர்கள்மேல் குற்றமில்லை. நான்தான் அவர்களைக் காந்தத்தைப்போல் இழுத்துக்கொள்கிறேன். ஆனால் என்னிடத்தில் சொக்குப்பொடியாவது, மாயமந்திரமாவது ஒன்றுங் கிடையாது.

உயிர்போகிறவரைக்கும் என் உற்ற சிநேகிதர்களாய் இருக்கிறவர்களை நான் கைவிடமாட்டேன். நகமும் சதையும்போல் நாங்கள் எப்போதும் ஒன்றுசேர்ந்திருப்போம். செத்தாலும் பிரியமாட்டோம். விசேஷமாய் அவர்கள் மரணவேளையில், நான் அவர்கள் அண்டையிலிருந்துகொண்டு, அந்தக் கடைசி நேரத்தில் அவர்கள் என் சிநேகத்தை முறிக்காதபடி, என் விரோதிகள் அவர்களைக் கைக்கொள்ளாதபடி, கண்ணுங் கருத்துமாய்க் காவல் செய்வேன். ஏனெனில், அந்தச்சமயம்தான் ஒரு மனிதனின் சீவியகாலத்திலெல்லாம் சிறந்த அருமையான சமயம். அச்சமயம் தப்பினால் வேறெச்சமயமும் வாய்க்காது. அதோடு நான் பட்டபாடெல்லாம் வியர்த்தமாய்ப்போய்விடும். அவர்கள் என் சிநேகத்தில் செத்தவுடனே, அவர்களை என் தகப்பன் வீட்டுக்குக் குதூகலத்துடன் கூட்டிக்கொண்டு போவேன். அவர்களை அவரிடம் அழைத்துக் கொண்டுவரும்படியாகத்தான் என் தகப்பன் என்னை இங்கே அனுப்பியிருக்கிறார்.

என் தந்தை நிரம்பவும் பிரக்கியாதிபெற்றவர். முன்காலத்தில் அவர் தமக்கு நிகர் ஒருவருமில்லையெனும்படி ஒரு பெரிய பராக்கிரமசாலியாய் விளங்கினார். உலகத்தையே தம் சுண்டுவிரலால் ஆட்டிவைக்க, அவருக்கு சத்தியிருந்தது. ஒரு ராஜாதிராஜனிடம் (2) தளக்கர்த்தராய் சேவகம் செய்தவர். ஒரு நாள் அந்த மகாராஜன் கொடுத்த கட்டளையை நிறைவேற்றமாட்டேனென்று எதிர்த்துப்பேசினதினால், என் தகப்பனையும் மற்ற கீழ்ப்படியாத வீரர்களையும், அந்த ராஜா உத்தியோகத்தைவிட்டு நீக்கி, தமது அரண்மனையைவிட்டும் துரத்திவிட்டார். அப்

(1) ஆத்துமம்.

(2) சர்வேசுரன்.

போது துவக்கி நாளதுவரையிலும் என் தகப்பனும் அவருடன் சேர்ந்த போர்வீரர்களும் வேருேரிடத்தில் வசித்துவருகிருர்கள். இந்த இடத்திற்குத்தான் என் சிநேகிதர்களைக் கூட்டிப்போவேன்.

இந்த இடம் மிகவும் விஸ்தாரமும் விசாலமுமான இருப்பிடம். என் சிநேகிதராய் மரித்த இலட்சக்கணக்கான ஜனங்கள் இப்போது அந்த வீட்டில் இருக்கிருர்கள். எத்தனை பேர்கள் வந்தாலும் என் தகப்பன் வீட்டில் இடம் அகப்படும். அவர் இருகாம் விரித்து அவர்கள் எல்லோரையும் ஆவலோடு தழுவி அரவணைத்து ஆலிங்கனஞ்செய்து அங்கீகரித்துக்கொள்வார். அங்கே நூதனமான கடியாரம் ஒன்று உண்டு. அது எப்போதும் ஒரே மணிதான் காட்டும். என் தகப்பன் வீட்டுக்கு ஏழு பெரிய வாசல்கள் உண்டு. இவ்வாசல்கள் வழியாகத்தான் என் சிநேகிதர்களை அவர்கள் இறந்தபிற்பாடு நான் அழைத்துக்கொண்டுபோவேன். என் சோம்பேறிச் சிநேகிதர்களை ஒரு வாசல்வழியாயும், மோகச் சிநேகிதர்களை வேருெரு வாசல்வழியாயும், போசனப்பிரிய நண்பர்களை மற்ருெரு வாசல்வழியாயும், இப்படியாய் என்னுடைய விசேஷித்த ஏழு வகையான சிநேகிதர்களையும் ஏழு பெரிய வாசல்களின்வழியாய் என் தகப்பனிடம் அழைத்துக்கொண்டுபோவேன்.

என் சிநேகிதர்கள் வருகைக்காக என் தகப்பனுர் சந்திரோதயத்துக்காகக் காத்திருக்கும் சாதகப்பட்சிபோல் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருர். என் தகப்பனுருடைய பிறசிநேகத்தைப் பாருங்கள். தாமும் தம் போர்வீரர்களும் அனுபவிக்கிறதை என் சிநேகிதர்களும் அனுபவிக்கவேண்டுமென்று வெகுவாய் விரும்புகிருர். என் சிநேகிதர்களை அவரிடம் நான் அழைத்துக்கொண்டுபோனுல், ஒரு நாள் அல்லது இரண்டு நாள் தம்மிடம் வைத்திருந்துவிட்டு அனுப்பிவிடுவாரோ? பரிச்சேதமில்லை. சதாகாலமும் தமது அரண்மனையிலேயே வைத்திருப்பார். ஏனெனில், என்னை இப்போது சிநேகிக்கிறவர்கள் என் தகப்பனுரையே சிநேகிக்கிருர்களென்று தாட்டீகமாய்ச் சொல்லலாம். என் சிநேகிதர்கள் அவர் சிநேகிதர்கள். ஆதலால் அவர் வீட்டுக்குள் இவர்கள் நுழைந்துவிட்டால், திரும்ப அவர்களை வெளியே விடவேமாட்டார். தம் அடைக்கலத்தில் வந்தவர்களைக் கைவிடுவது அவருடைய சுபாவமேயில்லை.

என் சிநேகிதர் மத்தியில் நான் இப்போது சஞ்சரிப்பது வெகுபேருக்கு இஷ்டமில்லை. ஆதலால் இவ்விடத்தைவிட்டு என்னைத் துரத்தும்படி அவர்கள் எத்தனையோ உபாயங்களெல்லாம் எடுத்துப் பார்க்கிருர்கள். முன்னெரு காலத்தில் ஒரு ராஜன் (3) இருந்தார்; அவருக்கு நானென்ருல் ஆகாது. எனக்கும் அவரென்ருல் பிடியாது. ஆனுல் புண்ணியத்தையே ஆபரணமாகப் பூண்டவர் அவர். என்னை எப்படியாவது இவ்விடத்தைவிட்டுத் தொலைத்துவிடவேண்டுமென்று தம்மலான பிரயத்தனமெல்லாம் செய்துபார்த்தார். ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில் அவரைச் சாகடித்தது நான்தான்.

என்னுடைய கடைசி வார்த்தை யென்னவென்ருல், என்னை அசைக்க யாராலும் ஆகாது. நான் இங்கேதான் எக்காலமும் இருப்பேன். யாரையும் கெடுப்பேன். முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல், மெய்யைப் பொய்யாக நான் பிதற்றினுலும், சலமோனைப்போன்ற சர்வ ஞானிகள்முதலாய் என்னை நம்பி ஏமாந்துபோனுர்கள். இப்போதும் அநேகர் ஏமாறுகிருர்கள்; எப்போதும் ஏமாறுவார்கள். இது என் சபதம். இப்படிப்பட்ட பிரதாபமுள்ள என் பெயரைக் கேட்க எல்லோரும் பிரியப்படுவார்கள். அதாவது:—

என் பெயர்: சாவானபாவம்.

என் தகப்பன்: லூசிப்பேர் பசாசு.

எங்கள் வீடு: நித்திய நாகம்.

M. Gnanam,
St. Mary's Tope.

(3) சேசுநாதர்.

நல்ல சீவியம் மனிதனைச் சர்வேசுரனுக்கு ஏற்க விமரிசையுள்ளவனுகவும், பல காரியங்களிற் பண்பட்டவனுகவும ஆக்குகின்றது.

ஒருவன் எவ்வளவுக்குத் தாழ்ச்சியுள்ளவனுகவும், சர்வேசுரனுக்குக் கீழ்ப்படிதலுள்ளவனுகவும் இருப்பானே, அவ்வளவுக்குச் சகலத்திலும் விமரிசையும் அமரிக்கையுமுள்ளவனுய் இருப்பான்.

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

12-ம் அதிகாரம்.

தேவ வெளிச்சம் இல்லாத குறையாலன்று, ஆனுல் புண்ணியத்தை யநுசரிக்கவேண்டுமே யென்னும் பயத்தினுல், அகுஸ்தீன் ஞானஸ்நானம் பெற தத்தளிப்பதை மோனிக்கம்மாள் கண்டு படும் கடைசி விதனம்—ஒப்பு உவமையற்ற இந்தத் தாயாரின் துயரக்கண்ணீர்கள் — கடைசியாக சந்தோஷக்கண்ணீர்களாக மாறுதல்—அகுஸ்தீன் மனந்திரும்புதல்.

தான் இதுவரைக்கும் பெருமூச்சுவிட்டு அலைந்து தேடினதும், தன் தாயார் தனக்காக அத்தனைகாலம் அழுகைக் கண்ணீருடன் கர்த்தரைப் பார்த்து மன்ருடிவந்ததுமான ஞான வெளிச்சம் இதோ அகுஸ்தீனுக்குச் சொந்தமாயிற்று. தன் கண்களை மறைத்திருந்த திரைச்சீலை கடைசியாய் நீங்கவே, அவர் எழுந்து தன் தாயாரிடம் ஓடி, "என் தாயே இனி அழவேண்டாம், ஏனெனில் நான் கிறீஸ்துவனுயிருக்கிறேன்" என்று அவர் சொல்வது ஒன்றுதான் குறைவாயிருந்தது.

ஆனுல் இந்தக் கடைசிக் காரியத்தைச் செய்ய அவர் இன்னும் முஸ்திப்பாயில்லை. வெளிச்சமானது மேகங்களை யூடுருவிப்பாய்ந்ததேயன்றி, அம்மேகங்களை கலைக்கவில்லை. அகுஸ்தீன் இன்னும் தப்பானவையும் தெளிவற்றவையுமான பலஎண்ணங்களைக்கொண்டிருந்தார். அவைகளை யொழிப்பது அவருக்குப் பெருத்த தொந்தரையாயிருந்தது. அவிசுவாசத்தின் கடைசி சாயை ஒழிவது சற்று நிதானமாயிருந்தது.

அகுஸ்தீன் முழங்காலூன்றி தான் செய்த பாவாக்கிரமங்களைச் சிந்தித்து "அறிந்தே செய்தேன், அறிந்தும் அறியாமற் செய்தேன்" என்று தன் மார்பை யடித்துக்கொண்டு பாவசங்கீர்த்தனஞ்செய்து சற்பிரசாதம் பெறுவதற்கு ஆயத்தம்பண்ண அவருக்குத் தைரியம்மாத்திரம் இருந்திருக்குமேயானுல், அவ்வெண்ணங்கள் சூரியனைக்கண்ட பனிபோல் பற்றற ஒழிந்தேபோயிருக்கும். ஏனெனில் சத்தியத்தைத் தேடும்போது ஒரு காலம்வரும். அக்காலத்தில் தாழ்ச்சியுடன் தன்னைத் தேவ திருவுளத்திற்கு ஒப்படைத்தால்மாத்திரம் அதிக ஞான வெளிச்சம் அடையக்கூடுமாயிருக்கும். அஞ்ஞானம் என்பதும் அந்தகாரமென்பதும் முழுதுமே ஒழியவேண்டுமானுல், நாம் எல்லாவற்றையும் பரித்தியாகம் செய்ய முஸ்திப்பாயிருக்கவேண்டியது. அப்போதுதான் கடவுள் தயைபுரிவார்.

அகுஸ்தீனுக்கு இது கிஞ்சித்து தெரியவந்தது. ஆனுல் பயந்தார். பச்சாத்தாபப்படுமுன் இன்னமும் திட்டமாய்க் காரியங்களை யறிய விரும்பினுர். அப்படிக் காரியங்களைத் திட்டமாயறியவேண்டுமானுல், அவர் பச்சாத்தாபப்படுவது அவசரமாயிருந்தது. இதனிடையில் தன்னிடம் உதயமான வெளிச்சம் அதிகரிக்கும்படியாக மேலும் மேலும் பற்பல புஸ்தகங்களை வாசித்துவந்தார்.

அவருக்கு வெளிச்சம் உதயமானதைக் கண்டு மோனிக்கம்மாள் சந்தோஷித்து, இன்னும் அவருக்கு வேண்டிய உதவிசெய்ய ஆவல்கொண்டு அவர் சம்பூரணமாய் ஆத்துமரட்சண்யத்தை யடைய ஆசைப்பட்டாள். பீடத்தினடியிலும், தேவநற்கருணை வாங்கும்போதும், எத்தனையோதரம் கடவுளைப் பார்த்து "கடவுளே உமது சித்தத்தை நிறைவேற்றியருளும். பலாத்காரமாயானுலுஞ்சரி, என் மகனுடைய ஆத்துமத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்" என்று மன்ருடுவாள். தன் மகன் மனந்திரும்புவானென்று தனக்குண்டான நம்பிக்கையை யெத்தனையோமுறை அர்ச். அமிர்தநாதருக்குத் திரும்பத் திரும்பச் சொல்லுவாள். அவரோவெனில் உருக்கப் பெருக்கத்துடன் நாம் நேசிக்கும் ஓர் வியாதியஸ்தனை எவ்வளவு தயாளத்தோடும் பொறுமையோடும் மதுர குணத்தோடும் சாவதானத்தோடும் நடத்துவோமோ, அவ்விதமாகவே, வெளிச்சத்திற்கு ஏக்கம்பிடித்திருக்கும் அகுஸ்தீன்மட்டிலும் நடந்துகொள்ளவேண்டுமென்று மோனிக்கம்மாளுக்குச் சொல்லுவார். மோனிக்கம்மாள் அகுஸ்தீன் சன்மார்க்கத்தில் அடையும் அபிவிருத்தியைக்கண்டு நம்பிக்கைகொண்டு அவரைப் பார்த்து "வா, என் மகனே, ஒரே தீர்மா

னம் செய்; இப்போது நீ விசுவாசிக்கிறாயல்லவா? பின் ஏன் உன் விசுவாசத்திற்கொத்த வண்ணம் நடக்கமாட்டாய்" என்று எத்தனையோ முறை கேட்பாள்.

ஏன் அவர் தன் விசுவாசத்திற்கேற்றபடி நடக்கவில்லை? ஐயோ! தான் ஏன் அப்படி நடக்கவில்லையென்று அவரே தாழ்ச்சியுடன் சொல்லுகிறாரே. ஏனென்றால், புண்யத்தை நாடிச்செல்லவும், அல்லது கொஞ்சகாலமாவது ஒருவன் சன்மார்க்கத்தில் நடக்கவும், அவசியமான இரண்டு இறக்கைகள் அவருக்கில்லாதிருந்தன. அதாவது மனதின் இறக்கையான தாழ்ச்சியும், இருதயத்தின் இறக்கையான கற்புமேயாம்.

அவர் சொல்வது: "திருச்சபையின் போதனைகள் யாவும் சத்தியமானவையென்று யா[illegible] திட்டமாய் நம்பினேன்; ஆயினும் அந்நம்பிக்கையால் நான் எவ்வித மனச்சந்தோஷமும் அநுபவிக்கவில்லை. ஏனெனில், என் ஆத்துமம் ஆங்காரம், வீண்பெருமை, அகந்தையால் நிரம்பியிருந்தது. நான் நிர்ப்பாக்கியம் நிறைந்தவனாயிருந்த போதிலும், பெரிய சாஸ்திரியைப்போல் நடந்துகொள்ள விரும்பினேன். என்னுடைய அக்கிரம தோஷங்களை நினைத்து மனோ விதனப்படுவதை விட்டு, விழலான உலகக் கல்வியில் பெருமையைத் தேடினேன்." மேலும் அவர் தாழ்ச்சியில்லாதவராயிருந்தபடியால், சேசுக்கிறீஸ்துநாதரின் பரிபூரண மாட்சிமை அவருக்கு மறைந்திருந்தது. அவர் சொல்வது: "என் சர்வேசுரா எனது தாழ்ச்சி நிறைந்த கர்த்தாவாகிய சேசுக்கிறீஸ்துநாதரை நான் இன்னும் கிரகிக்கவுமில்லை; அல்லது அவரது பலவீனத்தில் அடங்கியிருந்த ஆழ்ந்த பரம இரகசியங்களை யின்னும் கண்டுபிடிக்கவுமில்லை. ஏனெனில் உமது சிருஷ்டிப்பின் மகத்துவம்பொருந்திய கிருத்தியங்களுக்கு மேற்பட்டு, உந்நத அந்தஸ்திலிருக்கும் நித்திய சத்தியமாகிய உமது வார்த்தையானவர், தமக்குக் கீழ்ப்பட்ட மனிதர்களைத் தமது பாரிசமாயிழுத்துக்கொள்ளுகிறார். மேலும் தமது பிரஜைகளாயிருக்கத் தாம் பிரியங்கொள்பவர்களின் பெருமையைக் குலைக்க இப்பூவுலகில் ஒரு கேவலமான உறைவிடத்தைத் தமக்கென்று தேடிக்கொண்டார். என்னத்திற்கென்றால், தேவத்துவம் மனுவேஷம் பூண்டு தங்கள் காலடியில் பலவீனங்கொண்டிருப்பதை, அம்மனிதர்கள் கண்டு, தங்கள் உலக இச்சைகளில் சலிப்படைந்து அவரையே தாபரமயத் தேடவும், அவர் எழுந்தருளி அவர்களை யுமது பாரிசமாய்த் திருப்பவுமேயாம்."

சேசுக்கிறீஸ்துநாதர் மூலமாக கடவுளை நாடி யெழும்பும்படி வேண்டிய இறக்கைகள் இரண்டில் ஒன்று அகுஸ்தீனுக்குப் பக்குவமாயிற்று. ஆனால் இன்னொன்றோ அவருக்குக் குறைவாயிருந்தது. ஏனெனில் தனது காம விகாரத்துக்கடுத்த அக்கிரமமும் பழிபாவமும் நிறைந்த தலைகளை யவர் அறுத்தெறிந்திருந்த போதிலும், அவரது இருதயத்தில் இன்னும் அநேக காயங்களிருந்தன. அவர் வாய்ப்பிறப்பாலேயேநாம் அதைக்கேட்போம். அவரது தாழ்ச்சி விஷயமாய் நாம் இதுவரைக்கும் படித்தறிந்ததைவிட இதனால் நமக்கு அதிகம் தெரிகின்றது. அவர் சொல்வது "ஓ! என் கர்த்தாவே, இப்போது நான் உம்மை நேசிக்கத் தொடங்கி சந்தோஷத்தால் பூரிக்கப்பட்டேன். ஆனால் ஒரே நிலையாயிருந்து உமது சகவாசத்தில் அச்சந்தோஷத்தைத் தேடவில்லை. உமது சவுந்தரியத்தினால் நான் வேகத்தோடு உமது பாரிசமாய் இழுக்கப்பட்டபோதிலும், என் சொந்தப் பளுவினாலும் என் பாவப் பழக்கம், ஆசாபாசம் ஆகிய இவைகளின் பளுவினாலும் சீக்கிரத்தில் கீழே விழுந்து, கீழாங்கிஷத்திற்கடுத்த காரியங்களில் உழன்று பெருமூச்சுவிட்டுப் புலம்பினேன். சரீரத்தின் ஆசாபாசம் என் ஆத்துமத்தை அழுத்திப் பிடித்தது. உயரப் பறக்க விருப்பங்கொண்டிருந்த என் மனதை, உலகமானது நெருக்கி யமிழ்த்தினது. நான் உம்மையே நாடித் தாவும்படியான ஸ்திதியில் இன்னும் இல்லாதிருந்த போதிலும், நான் உம்மை முழுதுமாய் மறக்கவுமில்லை. நான் நாடித் தாவவேண்டியவர் நீரேயென்று நான் சந்தேகங்கொள்ளவுமில்லை" என்கிறார்.

அகுஸ்தீனுக்குத் தெய்வீக இறக்கைகள் பரிபூரணமாய் இன்னும் இல்லாதிருந்தபோதிலும், அப்போதே வெளிச்சத்தின்மார்க்கமாய் எழும்பத் துவக்கினார். அடிக்கடி அவர் சிருஷ்டிக்கப்பட்ட பொருட்களைத் தாண்டி கொஞ்சங்கொஞ்சமாயும் படிப்படியாயும் உயர ஏறி சரீரம் நிறைந்த உலகத்திலிருந்து ஆத்துமம் நிறைந்த உலகத்திற்கும், அங்கிருந்து தேவ தூதர்கள் நிறைந்த உலகத்திற்கும், கடைசியாய் எல்லா தடைகளையும் ஊடுருவி மின்னலுக்கொத்த காட்சியால் நாம் நடுக்கங்கொள்ளும் வல்லமையுள்ள சுத்த சுயம்பான கடவுளிடமும் சேர்ந்தார். அவர் சொல்வது! "ஆனால், ஐயோ நான் உம்மை உற்றுப்பார்க்க முடியவில்லை. என் பலவீனத்தின் காரணத்தினால் உலக சிந்தனைகளில் அமிழ்ந்திப்போகவே, உம்மில் நான் அடைந்த பரவசத்தின் கியாபகமேயன்றி வேறொன்றும் எனக்கிருந்ததில்லை. மேலும் நான் மோப்பம் பிடித்த சுவாசனையுள்ள ஞான பட்சணங்களைச் சாவகாசமாய்ப் பட்சித்துக் களிப்படையக்கூடவில்லையேயென்று விசனித்தேன்."

ஆயினும் ஞான வெளிச்சம் அவருக்கு அதிகமாகவே, அதற்கேற்றாப்போல் மனச்சாட்சியின் கண்டனமும் அதிகமாயிற்று. இப்போது நாம் சொல்லப்போகும் வாக்கியங்கள் இடிக்கொப்ப அவரது காதுகளில் சப்திக்குமட்டும், அவரது மனச்சாட்சியானது அவ்வாக்கியங்களைச் சுட்டிச் சுட்டிக்காட்டி அவரை உபாதிக்கும். அஃதேதெனில் "இதுவரைக்கும் சத்தியமான தின்னதென்று உனக்கு நிச்சயமாய்த் தெரியாதிருந்ததினால் உன் கடமைகளை நிறைவேற்றாதிருக்க உனக்கு ஒரு சாக்கிருந்தது. இப்போதோவெனில் எல்லாம் தெளிவாயிருக்கிறது. சத்தியம் உனது நேத்திரங்களின் முன் ஜொலிக்கின்றது. இன்னும் தாமதிப்பதேன்?" என்பதாம். அவர் சொல்வது "இக்கண்டன வார்த்தைகள் என் காதில் விழுந்தன; ஆனால் நான் அவைகளைச் சட்டைசெய்யவில்லை. எவ்வித சாக்குபோக்கும் எனக்கில்லாதிருந்தபோதிலும், நான் முன்னுக்குப்போக உடன்படவில்லை. என் சாக்குப்போக்குகளெல்லாம் அற்பமும் செல்லாமற்போகவே, நான் இதுவரைக்கும் நடந்துவந்த தீய வழியிலிருந்து தடுக்கப்பட்டு நீச சந்தோஷங்களை யிழந்துபோவேனோவென்னும் ஒருவித அச்சம் என்னில் குடிகொண்டிருந்தது."

விசுவாச சத்தியங்களை நம்ப வெகுகாலம் வரைக்கும் அகுஸ்தீனுக்குத் தைரியமில்லாதிருந்தது. ஆனால் அச்சத்தியங்களை இப்போது நம்பியும், தன் நம்பிக்கைக்கொத்தபடி நடந்துகொள்ளத் தைரியமற்றிருந்தார். சத்தியம் திட்டமாய்த் தெரியாதது அவருக்கு முதலில் தடையாயிருந்தது. ஆனால் இப்போது அச்சத்தியத்தின்படி "ஒழுக்கம் விழுப்பந் தரலானொழுக்கம் உயிரினு மோம்பப்படும்" என்பதை யறிந்திருந்தும் புண்ணிய ஒழுக்கம் ஒழுகவேண்டுமேயென்பது அவருக்குப் பயத்தை மூட்டியது. அவர் சொல்வது "என்னிடம் உள்ளதையெல்லாம் விற்றுவிட்டு வாங்கவேண்டிய ஆணிமுத்தைக் கண்டேன். ஆனால் சகலத்தையும் விற்று அவ்வாணிமுத்தை வாங்க இருமனங்கொண்டிருந்தேன்" என்பதாம்.

அகுஸ்தீன் ஒன்றையும் திட்டமாய்த் தீர்மானிக்காமல், மனக்கலக்கங்கொண்டிருந்தார். ஒருபக்கம் மோனிக்கம்மாள் அவரைத் தூண்டுவாள். மறுபக்கம் தன் மனச்சாட்சி யவரை வாதிக்கும். என்ன செய்வதென்று தெரியாமல் அகுஸ்தீன் சிம்பிலிஸியான் என்னும் ஒரு பரிசுத்த குருவானவரிடம் ஆலோசனை கேட்கத் தீர்மானித்தார். இக்குருவானவருடைய பரிசுத்த சீவியத்தை அகுஸ்தீன் கவனித்து வெகுகாலமாய் ஆச்சரியப்பட்டுவந்திருந்தார். சிம்பிலிஸியான் என்பவர் கத்தோலிக்குத் திருச்சபையில் அடிக்கடி காணக்கூடிய சங்கைபொருந்திய வயோதிப குருக்களுள் ஒருவர். இவர் வாலிபத்திலும் வயோதிபத்திலும் கற்பையே பூஷணமாய் அணிந்திருந்தவர். இவர் புண்ணியப் பயிற்சியிலுண்டாகும் சமாதானம் விளங்கும் சுந்தரவதனமுடையவர். இவரைக் கண்ட மனிதர் சங்கையால் நிரப்பப்பட்டு இவருக்கு ஆசாரஞ்செய்வார்கள். வாலிபர்கள், விசேஷமாய் ஆசாபாசப் போராட்டத்தினால் வாதிக்கப்படும் வாலிபர்கள், வயதினால் பனிக்கொப்ப நரைகொண்டிருக்கும் இந்தச் சமாதான சுரூபியிடம் ஆசையுடன்போய், அவருடன் சகவாசம் செய்வதில் மன அமரிக்கை கிடைக்கலாகுமென்று நம்புவார்கள்.

(இன்னும் வரும்.)

எவனிடத்தில் தேவ சிநேகம் மிகுதியாயிருக்கின்றதோ, அவனே மெய்யான மாட்சிமையுள்ளவன். எவ்வித பேச்சையும் நம்பலாகாது; எவ்வித அபிப்பிராயத்திற்கும் இணங்கலாகாது. ஆனால் எச்சரிக்கையுடனும் விமரிசையுடனும் எதையும் சர்வேசுரனுக்கு ஏற்கச் சீர்தூக்கி யோசிக்கவேண்டும்.

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா

அல்லது

மூரிய இராஜகுமாரி.

(முன் தொடர்ச்சி.)

அதிகாரம்—9.

எதிர்பாராத சம்பவம்.

யூலோஜியஸ் என்னுங்குருவானவர் அடைபட்டிருந்த காவலறையிற் காஸில்டாவை, அவள் தந்தை ஒருநாளிரவு காண நேர்ந்த விஷயம் இதை வாசிப்போர் ஞாபகத்திலிருக்கலாம். அன்றுமுதல் ஆல்டிமன், தன் மகள் நடவடிக்கைகளை ஒன்றும் விடாமல் கவனித்து, தனக்கு அவ்வப்போது செய்தி கொண்டுவரும்படி தன் ஏவலரிற் சிலரை யமர்த்தியிருந்தான். அவளைச் சந்தித்துப் பேசும்படி ஒருவரையும் விடுகிறதில்லை. அவளுடைய தாதியரும் பணிப்பெண்களுங் கூட, அவளோடு பேசக்கூடாதென்று கண்டிப்பாய் கட்டளையிட்டிருந்தான். அந்நாள் முதற்கொண்டு, டொலிடோ நகரில் நடப்பவையொன்றும் அவளுக்குத் தெரியாது. பட்டணத்தில் சம்பவிக்கப்போகும் சிம்ம யுத்தத்தையாவது அதற்குக் காரணமாயிருந்த மற்ற சம்பவங்களை யாவது அவள் அறிந்திலள். கூண்டிலகப்பட்ட கிளியைப்போலவும், வேடன் வலைப்படுமான் போலவும், செய்வதொன்றுந் தெரியாமல் திகைத்தாள் நங் கதாநாயகியாகிய காஸில்டா.

செபஸ்தியான் பிரபு சிங்கத்துடன் சண்டை செய்ய நேர்ந்ததன் ஆதிகாரணம், தான், என்பது அவளுக்குத் தெரியாது. யுத்தம் நடக்கப்போவதே அவளுக்குத் தெரியாமலிருக்கும்போது அதன் காரணத்தை யவள் அறிவதெங்ஙனம்? இவ்வாறு அம்மாதரசி ஒன்று மறியாதவளாய்த் திகைத்து நிற்கையில், ஒரு நாள், அதாவது யுத்தம் நிகழ்வதற்கு முந்தின தினம் மாலை, ஆல்டிமன் திடீரென அவளறைக்குள் பிரவேசித்தான். "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்" என்பதுபோல் அவன் மனதிற் கொதித்துக்கொண்டிருந்த கோபமும் பொறாமையும் அவன் முகத்திற் றோன்றி, அதை விகாரப்படுத்தின. அவன் முகக் குறிகளால், அவன் அங்கு வந்திருப்பது நன்மைக்கல்ல, தின்மைக்கென்றே நன்கு விளங்கிற்று.

கடோரமும் குரூரமும் நிறைந்த பார்வையை அம்மாதின்மேல் செலுத்தி, ஆல்டிமன் சொல்வான்: "காஸில்டா, காஸில்டா, இன்னும் எவ்வளவு காலம் இப்பிடி வாதம்? நமது பரிசுத்த தீர்க்கதரிசியின் ஒழுங்குகளையும் கோட்பாடுகளையும் இன்னும் அவமதித்துக்கொண்டுதானிருப்பாயோ? நமக்கு அடிமைகளாயிருக்கும்படி அல்லாவால் சபிக்கப்பட்ட கெட்ட ஜாதியாரான கிறீஸ்துவ நாய்களின்மேல் உன் அன்பையும் அநுதாபத்தையும் வீணில் செலவழித்துக்கொண்டிருப்பாயோ? என்ன, வாய்திறவாமல் மௌனஞ் சாதிக்கிறாய்! உன் பிடிவாதத்தை விட்டு நல்வழிக்கு வருவாயா? விபரீதகாலத்துக்கு விநாசபுத்தி என்பதுபோல், உனக்குக் கட்டாயம் கெடுதல் சம்பவிக்கும்! ஆதலால் காஸில்டா, இந்தப் புத்தியை விட்டுவிட்டு, நமது பரிசுத்த வேதத்தைக் கடைப்பிடித்தொழுகு!"

காஸில்டா.—தந்தையே! முன்னையவிடப் பதின்மடங்கு உம்மை நேசிக்கிறேன். உமது சித்தத்துக்குப் பணிந்து எல்லா விஷயங்களிலும் உமதிஷ்டப்படி நடந்துகொள்ளத் தயாராயிருக்கிறேன். என்னிடம் எது வேண்டுமானாலுங் கேளுங்கள்! ஆனால் நான் ஒரு கிறீஸ்துவள்! கிறீஸ்துவர்களின் தேவனாகிய கிறீஸ்துவை மெய்யாகவே விசுவாசிக்கிறேன்! அவ்விசுவாசத்தை நான் ஒருபோதும் கைவிடப்போகிறதில்லை. இது நிச்சயம்! உயிருள்ள தேவனின் பரிசுத்த குமாரனாகிய சேசுக்கிறீஸ்துநாதர் உலகத்தின் அந்தகாரத்தை விளக்குவதற்குக் காரணமாயிருந்த சத்தியத்தை, ஓ! தந்தாய்! நீருங் கண் திறந்து பார்க்கும்படி உமக்கும் அந்த ஞான வெளிச்சத்தை ஆண்டவர் அருள்புரிந்தால், ஆ! எவ்வளவு நன்றாயிருக்கும்! உலக இரட்சகராகிய சேசுவின் அன்பால் தூண்டப்பட்ட மகாத்மாக்களுக்குக் கிடைக்கும் விலைமதிக்கப்படாத ஆஸ்தியாகிய மோட்சானந்தத்தை, கங்குகரையில்லா அந்த உன்னத பேரின்பத்தை, நீரும் கூட அநுபவிக்கும்படி ஆசிக்கிறேன்! அப்ப

டியே ஆகக்கடவது என்று, தந்தையே உமது நேசக் குமாரத்தியாகிய நான், நீசமனிதர்க்காகத் தம் உதிரத்தைக் கடைசித் துளிபரியந்தம் சிந்தி உலகத்தை மீட்டு இரட்சித்த சேசுக்கிறீஸ்துவின் பாதகமலங்களை அநுதினமும் மன்றாடிவருகிறேன்.

ஆல்டிமன்.—ஐயோ, நிர்ப்பாக்கியமே! இஃதென்ன அநியாயம்! உன் வார்த்தைகளும் செய்கையும் அல்லாவுக் கேற்குமா? உன் தந்தைக்கு நீ உண்டாக்கும் அவமானம் எவ்வளவென்று நீ கண்டுபிடிக்கிறாயா? நமது பரிசுத்த தீர்க்கதரிசியாகிய மகம்மதுவால் ஸ்தாபிக்கப்பட்ட வேதத்தை ஆல்டிமனுடைய குலத்திலுதித்த குமாரத்தி யொருவள் அவமதித்துத் தள்ளி, அல்லாவினால் இகழ்ந்தொதுக்கப்பட்டவர்களின் மாயவலையிற் சிக்கிக் கெட்டாள்! இத்தகைய அவமானத்துக்குரிய காரியத்தை எவ ரேனும் இதுகாறுஞ் செய்ததுண்டா? இத்தகைய அசம்பாவிதமான விஷயம் எப்போதாவது நேர்ந்ததாகக் கேள்விப்பட்டதுண்டா? என்ன அநியாயம்! என்ன தைரியம்! ஆல்டிமன் ஒருவன் இருக்கிறான் என்பதை மறந்தனையோ? ஓ! காஸில்டா! உனக்கேனடி இந்தக் கேடுகாலம்? உன் தந்தையின் மனதை உன் பிடிவாதத்தால் புண்படுத்தாதே! வேண்டாம், நான் சொல்வதைக் கேள்!" என்று நயத்தாலும் பயத்தாலும் நல்ல வார்த்தைகளாலும் கோப மொழிகளாலும் அவள் மனதைத் தன் வயப்படுத்தப்பார்த்தான். அவன் ஆட்டமனைத்தும் நம்மாதரசிமுன் பலிக்கவில்லை. இளவரசியின் மனம், அசைக்க முடியாத கற்பாறையைப்போல் நிலையாய் நின்றது. அவள் தன் தீர்மானத்தினின்றும் அணுவளவு மசையாள் என்றறிந்த ஆல்டிமன், ஹக்கீம் என்பவனைக் கூப்பிட்டு, "இவளைக் கொண்டுபோய் ஜனசஞ்சாரமில்லாத காட்டிலிருக்கும் அந்தப் பாழ்ங்கோட்டையில் ஒரு தனி அறையில் அடைத்துவைப்பாயாக! அவளுக்கு எப்போது நல்லபுத்திவந்து, தான் செய்தது தவறு என்று உணருகிறாளோ, அப்போதுதான் அவளை விடுவிக்கலாம்! நான் சொல்வது தெரிகிறதா? இவள் இனி ஒரு கணமேனும் என் சந்நிதியில் இருக்கக்கூடாது! இவளிருக்குமிடத்தில் நானிருப்பதுகூட பாவமாகும்! ஆதலால் உடனே இவளைக் கொண்டுபோய், நான் சொன்ன இடத்தில் கடுங்காவலில் வை, போ!" என்று அம்பு தைத்துக் கஷ்டப்படும் புலியைப் போல் கதறினான். நங் கதாநாயகியாகிய காஸில்டாவோ தன் தந்தையால் விதிக்கப்பட்ட தண்டனையை, மெய்யான கிறீஸ்துவர்களுக்குரிய மன அமைதியுடனும் பொறுமையுடனும் அநுபவிப்பதே சரியெனத் தீர்மானித்தாள். தேவ சித்தம் இதுவாயின் நான் செய்யக்கிடப்பது ஒன்றுமில்லை! அவருடைய திருச்சித்தமே எனது பாக்கியம்! அதற் கமைந்து நடப்பதே என் மேலான கடமை! இருளடர்ந்த சிறைச்சாலையில்கூட, என் நேசராகிய சேசு எனக்குப் பிரகாசந் தந்தருள்வார்!" என்று தைரியமாய்ப் பேசினாள்.

மறுநாள் காலையில் அவளை ஒரேவொரு வேலைக்காரியுடன் ஒரு சாதாரண வண்டியில் வைத்து, ஹக்கீமும் சில வீரர்களும் ஆல்டிமன் கூறிய பாழ்மண்டபத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

டொலிடோ நகரின் கோட்டை வாயிலைத் தாண்டி வருகையில் காஸில்டாவின் மனது இருந்த நிலைமையை என்னென்போம்! அவள் மிகவாய் நேசித்த கைதிகளின் மேற்சென்றது; அவர்களை இனிமேல் பார்க்கமுடியாதே என்று விசனித்தாள்; அவர்கள் படுங் கஷ்டத்தை ஒருவாறு போக்கி, அவர்களுக் கினி யார் ஆறுதலாயிருப்பார்கள் என்று நினைத்து வருந்தினாள். பின்னர் அவள் மிக்கப் பக்தியுடன் ஆண்டவரைப் பார்த்து அவர்களைக் காத்து இரட்சிக்கும்படி வேண்டிக்கொண்டாள். அச்சமயத்தில்கூட அம்மாது சிரோன்மணி தன் தந்தையை மறந்தவளல்ல. அவன் எவ்வளவுதான் கடின சிந்தையுடையவனாயிருந்தபோதிலும், அவன் தன்னை எவ்வளவுதான் குரூரமாய் நடத்திவந்தபோதிலும், அவளுக்கு அவன்மேல் இருந்த காதல் கொஞ்சமுங் குறையவில்லை. தான் அப்போது அநுபவிப்பதைவிடப் பதின்மடங்கு துன்பதுரிதங்களையுங் கஷ்ட நிஷ்டூரங்களையும் அநுபவித்தாலும் அவசியமில்லை, தன் தந்தைமட்டும் மனந் திரும்பிக் கிறீஸ்துவனானால் போதுமென்று நினைத்தாள். உடனே வானத்தை நோக்கி, "ஆண்டவரே, என் தேவனே! என் தந்தை மேல் இரக்கமாயிரும். அவர் அறியாமற் செய்வதை மன்னித்து, அவர் உமது மந்தைக்

குள் வந்துசேரும் நல்வரத்தைத் தந்தருளும்!" என்று பிரார்த்தித்தாள்.

பொழுதுவிடியுந் தருணம்; இருள்போய், வெளிச்சம் பரவி நிலந் தெளியும் சமயத்தில், காஸில்டாவும் அவளைச் சூழ்ந்து காவல் புரிந்து வந்த வீரர்களும் மெதுவாய்ப் போய்க்கொண்டிருந்தனர்; நகரைத் தாண்டிக் கொஞ்சதூரந்தான் போகும்படியாயிருந்தது. ஏனென்றால் பாதைகளெல்லாம் கரடுமுரடாகவும் வண்டிகள் வேகமாய்ச் செல்வதற்குத் தகுதியற்றனவாகவும் இருந்தன; மேலும் சாரஸன் வீரரும் சாதாரணமாய் வேகமாய்ச் சவாரிசெய்யப் பழகினவர்களல்ல. இவ்வாறு அவர்கள் போய்க்கொண்டிருக்கையில் வெகுதூரத்தில் ஒரு கிறீஸ்துவப் படை தங்களை நோக்கி வேகமாய் வருவதாகத் தோன்றிற்று; அதுதான் ரடெரீகஸ் பிரபுவின் சேனை. செபஸ்தியான் பிரபு சிங்கத்தோடு போர்புரிந்து, ஆல்டீமனுடைய துரோக வஞ்சகத்துக்குத் தப்பும் மார்க்கத்தைத் தேடிக்கொண்டிருக்கையில், அந்த சேனை டொலிடோ நகர் மதிற்சுவருக்கு வெளியில் நின்றுகொண்டிருந்ததாக முன்னமே சொல்லியிருக்கிறோம். அந்தச் சேனையே இச்சமயத்தில் வேறொரு வழியாய் வந்துகொண்டிருந்தது. துலுக்கர் படையைக் கண்டதும் அக்கிறீஸ்துவ வீரர் வழக்கப்படி, அதை யெதிர்ப்பதே சரியென, காசில்டாவின் பரிஜனம் போகும் வழியில் குறுக்காய் வந்து நின்றனர்.

ஹக்கீம் ஒருவாறு திடுக்கிட்டபோதிலும் தன்னிடம் எதிரியைவிட இருமடங்கு சேனாபலம் இருந்தமையால், தான் அவர்களைச் சுலபமாய் வென்றுவிடலாம் என்னும் நம்பிக்கையுடன், உடனே அவர்களைத் தாக்கும்படிக் கட்டளையிட்டான். ஆனால் சண்டை ஆரம்பித்ததும், துலுக்கர் எதிர்பாராத அவ்வளவு தீரத்துடன் கிறீஸ்துவ வீரர் போர்செய்தனர்; துலுக்கரை யவர்கள் வென்றுவிடுவார்கள்போலிருந்தது. ஆனால் கடைசியில் தொகையில் மிகுந்தவரான துலுக்கர் அந்தக் காரணத்தினாலேயே ஜெயமடைந்தனர். ராடரீகஸ் பிரபுவின் சரீரத்தில் பல காயங்கள்பட்டு, அவர் பலங்குன்ற வாரம்பித்தது. அவர் வீரர்களில் பலர் படுகாயம் பட்டிறந்தனர். கிறீஸ்துவர்கள் தோல்வியடைந்து துலுக்கர் கையில் கட்டாயம் சிக்கிக்கொள்வார்கள் என்றிருக்குந் தருணத்தில், ஒரு சிறிய குதிரைப் பட்டாளம் ஒரு குறுக்குப் பாதையாய் வந்து அங்கே திடீரெனத் தோன்றி, "சேசுமரியே" என்று கூவிக்கொண்டு துலுக்கர்பேரிற் பாய்ந்து தாக்கியது. உதவிக்கு வந்த வீரரின் தொகை ஏழே; ஆயினும் அவர்கள் ஒவ்வொருவரும் இருப்புத்தசையுடையவர்களோ அல்லது தேவதூதரோ என்று சொல்லும்படி ஒருவருக்கொருவர் கொஞ்சமுந் தாழாமல் வெகு உற்சாகத்துடன் சண்டைசெய்தனர். அவர்கள் கையிற் பிடித்த வாளை நாலாபக்கமும் வீசி எதிரிகளைச் சங்காரஞ்செய்ய ஆரம்பித்தனர். இவர்களுக்குத் தலைவனாய் வந்திருந்த வீரனுடைய பராக்கிரமத்தையும் போர்த் திறனையும் என்னென்போம். அவன் மனிதனோ, அல்லது தேவனால் அநுப்பப்பட்ட தூதனோ என்று எவரும் சந்தேகிக்கும்படியான அவ்வளவு சாமர்த்தியமாகப் பொருதினான். வண்டியைச் சுற்றித் துலுக்க வீரர் நின்றுகொண்டு, அதை எந்த விதத்திலும் எதிரிகள் கையில் சிக்கவிடாமல் காப்பாற்றுவதே சரியென்று சண்டைசெய்துகொண்டிருந்தனர். வந்த வீரர் தலைவன் மற்ற விஷயங்கள் ஒன்றையுங் கவனியாமல் தன் வாளை வேகமாய் வீசி எதிரிலிருந்த கும்பலைக் கலைத்துக்கொண்டு வண்டியினருகிற் சென்றான். உடனே துலுக்கர் தலைவனைப் பார்த்து, "ஹக்கீம்! கார்சியாஸ் பிரபு அடைபட்டிருக்கும் சிறைக்கூடத்தண்டை அன்று நடுச்சாமத்தில் நடந்த சண்டை உன் ஞாபகத்திலிருக்கிறதா? தோல்வியடைந்ததாக ஒத்துக்கொண்டு என் கட்டளைப்படி நடக்கிறாயா, அல்லது உன் உயிரை உடனே என் வாளுக் கிரையாக்கட்டுமா?" என்று கூவினான். இவ்வாறு திடீரெனத் தோன்றி துலுக்கரைத் தாக்கிக் கலங்கும்படிச்செய்த வீரர் திலகம் நங் கதாநாயகனாகிய செபஸ்தியான் பிரபுவென்று இதைப் படிப்போரே தெரிந்துகொண்டிருக்கலாம்.

(இன்னும் வரும்.)

ச. செல்வன்.

மனிதர் கடந்துபோகிறார்கள்; ஆனால் "ஆண்டவருடைய சத்தியம் என்றென்றைக்கும் நிலைநிற்கின்றது."

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

"நல்ல ஆயன்" மேன்மையும் "தாமஸ் பாலையா பிள்ளை என்பவரின் அபாண்டமும்."

நம்மை அஞ்ஞான அசத்தியமெனும் காரிருளிலிருந்து மெய்ஞ்ஞான சத்திய வேதத்தில் திருப்பி, நமக்கு எந்நாளும் மெய்ஞ்ஞான சத்திய வேதத்தைப் போதித்துச் சத்திய வேதமொன்றையே அடிப்படையாகக் கொண்டுலவும் நமது "நல்ல ஆயனை"ப்பற்றி கடந்த செப்டெம்பர் மாதம் வெளிவந்த ஆனந்தபோதினியில், "நல்லாயன் நலமின்மை" என்ற தலையங்கத்தின்கீழ் (குன்னூர்) தாமஸ் பாலையா பிள்ளை என்பார் ஓர் கடிதம் வரைந்துள்ளார். அதில் நமது "நல்ல ஆயனை" அவமதித்து அவதூறாகவும் எழுதியதோடு, கிறீஸ்துவ மதத்தையும் தம் வாயில்வந்தபடி காரணங்கள் கண்டறியாது பிதற்றி எழுதி, "நல்லாய"னில் இப்பிள்ளையவருக்கு யாதொரு பயனில்லையென்றும் இதில் (Bible) போதனை வாக்கியங்கள் வரையப்பட்டு வெளிவருவதாகவும், உலக இஹலௌகீக அநுபோகங்கள் அனுவளவும் இதில் கிடையாதென்றும், நமது "நல்ல ஆயனை" ஒரு வருஷத்திற்கு முன்னதாகவே பகிஷ்கரித்துவிட்டதாகவும் பிதற்றி மமதையடைகின்றார். அந்தோ! "நல்ல ஆயன்" என்ற சொற்சுடருக்கு நண்பர் பிள்ளையவர் தவறான அபிப்பிராயம் கொண்டோ, அல்லது நமது "நல்லாய"னில் வெளிவரும் அரிய நன்னெறியுடைய வியாசங்களை கிரகித்துக்கொள்ளக்கூடாதவராகவோ பகிஷ்கரித்துக்கொண்டனர். ஆ! என்னே இவரின் பிதற்றுதல்.

நமது "நல்ல ஆயன்" என்ற இவ்வினிய வயசில் கிறீஸ்துவர்களை சத்திய வேத அனுஷ்டான முறைகளில் ஸ்திரப்படுத்தி அவர்கள் நல்லொழுக்கத்திலிருந்து தவறி பிசகி விழாதபடி அவர்களைக் காப்பாற்ற எதுவாயிருக்கும் பல அற்புத ஞான வழிகளும், அவர்களுடைய முன்னேற்றத்துக்கான தெய்வபக்தி—கிருபை, காருண்யம் இன்னும் இவைபோன்ற புண்யங்களை விளைவிக்கும் அரிய வியாசங்களும் வேத ஞான சரித்திரங்களும் காணக்கிடக்கையில் அஃது பிள்ளையவர் போன்றவர்களுக்கு வேப்பங்காயாகத்தான் தோன்றுமென்பது உண்மையிலும் உண்மை! ஆகவே இவர் கடிதத்தை வெளியிட்ட போதினியாசிரியரவர்கள் பிள்ளையவர் கூறுவது உண்மையாவென்று அறிந்தனரோ, அந்தோ! அக்கீடிதமானது இவ்வாசிரியரவர்களை மயக்கிவிட்டதுபோலும்!

உண்மையான பகிஷ்காரக் கடிதத்தை வெளியிட்ட மேன்மைதங்கிய நமது "நல்லான்" ஆசிரியரவர்களை தமது நெறிதவறிவிட்டதாகக் கூறி, கடந்த ஆகஸ்டுமீ வெளிவந்த ஆனந்தபோதினியில் "நல்லாயன் தவறுதலும்" "பொய்கூற்றும்" என்ற கட்டுரையை எழுதிய போதினியாசிரியரவர்கள் தாமஸ் பாலையா பிள்ளை என்பாரின் அபாண்டமான இப்பொய் பிதற்றுதலின் கடிதத்திற்கும் தமது பத்திரிகையில் இடங்கொடுக்கவேண்டுமென்பது ஆசிரியரவர்களின் துணிவுபோலும்! அதிலும் ஓர் ஆசிரியரெனும் பதவியிலிருந்து அபாண்டமான இப்பொய் பிதற்றுதலின் கடிதத்தை வெளியிட்டதினால் புலப்படுவதென்னை? போதினி யாசிரியரவர்கள் தம் "ஆசிரியர்" பதவியை நெறிதவறாமல் நடாத்தினரோ வென்பதுவே? இவ்வாசிரியரவர்கள் கொண்ட "நீதி" தமக்கே நீதியற்றதாகத் தோன்றுவதாயின் இஃதென்ன நீதி? தமக்கொரு நீதி பிறருக்கொரு நீதியோ?

D. J. A. FERNANDO,
வைகைவாசி.

"ஆனந்தபோதினி!" "கிறீஸ்து மத துவேஷி, நீ"

"ஆனந்தபோதினி"யின் தொகுதி 7, பகுதி 3, பக்கம் 108, 109, 114ல் கிறீஸ்து மத துஷணையே இல்லையென்றும், கிறீஸ்து மத துவேஷத்தை யகற்றித் தேசத்தொண்டே செய்துவருகிறதென்றும், முழுப் பூசணிக்காயைச் சோற்றுள் மறைப்பதுபோல் மறைத்துக் கூறப்பட்டிருக்கிறது. போதினியை சிறிதும் தளரவிடாமல் தாங்கும் தாமஸ் பாலையா பிள்ளை யவர்களும் அதனைச் சென்ற வருடம்

பூராவும் வாசித்தும், மத துவேஷமே இல்லையென்று வாதஞ்செய்கின்றார். ஆயின் கிறீஸ்து மத துவேஷம் உண்டா, இல்லையாவென்பதைச் சிறிதாராய்வாம்; அந்நிய மதம் புகுந்தாரையும் தூஷிக்கின்றதா இல்லையா என்பதையும் நடுநிலையினின்று நோக்குவாம்.

(1) ஷை போதினியின் தொகுதி 6, பகுதி 1, பக்கம் 21ல் "இந்துக்கள் ஜாதி வித்தியாசத்தால் புறக்கணிக்கப்பட்ட பஞ்சம சகோதரர்களே பெரும்பான்மையோராக, (கிறீஸ்துவர்களாக) இருக்கின்றனர். அவர்களும் பஞ்சகாலத்தில் ஆகாரத்தினிமித்தம் வேறு மதத்திற் சேர்ந்துகொண்டனர். இதனால் நம் மதத்தினர் ஒருபோதும் குறைந்தவர்களல்ல. ஒருபோதும் குறையாது பெருகும்" என வரையப்பட்டுளது. இதன்பின் :—

ஷை தொகுதி 6, பகுதி 7, பக்கம் 248ல் "கிறீஸ்துவ சந்நியாசினிகள், உபாத்திமார்களாக இருந்து கல்வி போதித்தால், அந்தோ! நமது மதத்தின் முடிவுகாலம் சமீபித்தது" என்பதன் நோக்கமென்னே! "குறையாது, பெருகும்" என்றதன் அருத்தந்தான் என்னே! எது மெய், எது பொய், இவ்விதம் முன்னுக்குப்பின் முரண்பட எழுத, சொல்ல, வைத்தது எது? ஐயோ! கிறீஸ்துவர்களாகின்றனரே, என்ற பொறாமையால் தூண்டப்பட்ட துவேஷமன்றோ?

இந்து மதம் உண்மை மதமானால், அதை ஆட்கொள்ளுங் கடவுள் உண்மையங் கடவுளேயானால், மாணவர் கல்விகற்பதாலேயே அழிந்துவிடுமோ? இங்ஙனம் பொறாமையால் அழிந்துபோகும் வேதமும் ஒரு வேதமா? இதுவெல்லாம் அபத்தக் களஞ்சியத்தின் ஆர்ப்பாட்டமன்றோ? ஆகவே பொறாமையால் எழுந்த துவேஷமே இப்படி எழுதவைத்ததென்பது அனைவரும் அறியக்கிடத்தல் அறிக.

(2) தொகுதி 6, பகுதி 7, பக்கம் 252ல் "இன்னும் மாதர்க்கே அத்தகைய கல்வியைப் போதிப்பதாயின், கடவுளே சகிக்காமல், நம்மை அடியோடு அழித்துவிடுவார்; இப்போது பெண்களையும் அவ்வழியில் ஆண்களைப்போல் கிறீஸ்துவ கலாசாலைகளில் விடுவதாயின், கடவுளால் நமக்கு அழிவு நேர்வது திண்ணம்" என வரையப்பட்டுளது.

எல்லா மதங்களிலும் அவரவர் தொழுந் தெய்வமாக நிற்குங் கடவுள், வேறொரு மதத்திற் சேர்ந்து தொழுதாலும், தம்மை தாமென்றும் அறியாமலும், சேர்ந்தவரைத் தண்டிக்காமலும், குற்றமற்று அம்மதத்திலிருக்குனரையே, அழித்துவிடுவர் என்றால், மூடனுக் கிருக்கும் ஞானங்கூடவா அன்னோர் தொழுங் கடவுளுக் கில்லாமற் போய்விட்டது! பளா! பளா!! நன்றாயிருக்கிறது இவரின் கடவுள் தன்மை! கிறீஸ்து மத துவேஷமன்றோ இவர்களை இவ்வாறு எழுதத் தூண்டினது? குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா?

(3) ஷை தொகுதி 6, பகுதி 7, பக்கம் 248ல் "கிறீஸ்துவ, அரசாங்கக் கலாசாலைகள் மாணவர்களை நாஸ்திகராகவும் மதாபிமானமில்லாதவர்களாகவும் சுயாபிமானமற்றவர்களாகவும், சேவகா விருத்தியையே கௌரவமெனக் கொள்ளுவோராகவும் ஆக்கிவிடுகின்றன" என்றெழுதப்பட்டிருக்கிறது.

(4) இவ்விரு கலாசாலைகளில், வாசித்துத் தேர்ந்து தற்காலத்தில் மிக்க மேதாவிகளாக நிற்போரெல்லாம் நாஸ்திகர்கள்தாமா? தற்காலத்தில் சுயாபிமானமிருந்து, சுயராஜ்ஜியம் வேண்டும் வேண்டுமெனக் கூவி நிற்பது, செவிடன் காதும் கிழியவும், நாற்றிசையும் பேரிடியென முழங்குவதையுங்கூட அறியாது, சுயாபிமானமற்றவர்களாகச் செய்கின்றன என்ற, அறிவுதானென்னே! சுயாபிமானமற்ற ஜனங்கள் ஜெயிலில் நிறைகின்றனர்? நல்லறிவுடையோருக்கு மேற்படி கல்லூரிகளே சுயாபிமானமுண்டாக்கிவைத்தது, சுயராஜ்யம் கேட்கவைத்தது, மேலோரெனப் பேரெடுக்க வைத்தது, திக்விஜயம் செய்யவைத்தது, மேடைமீது நிற்கவைத்தது, உண்மைக் கடவுளை உணரவைத்தது. ஆனால், தம்மதத்திற் பற்றில்லாமலுஞ் செய்திருக்கலாம், அது கலாசாலையின் குற்றமாமோ? ஞான சூரியனுதிக்க, ஈனவிருளகலுமன்றோ? இதுவென்னே ஆச்சரியம்! அறிவுடையோர் நன்கறிவர். இன்னும் இவைபோன்ற துவேஷங்கள் கணக்கற்றவை எடுத்துக்காட்டலாம். வேண்டுமானால், ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறுபதம் பார்த்தால் போதுமன்றோ. ஆகையால் இவ்வாறு மத துவேஷங்கொண்ட "ஆனந்த போதினி"யை கிறீஸ்துவர்கள் எல்லோரும்

அதாவது மெய்யான கிறீஸ்துவர்கள் ஒவ்வொருவரும் வாங்காமல், வாசியாமல் முற்றும் பஹிஷ்கரிக்கவேண்டுமென்பதே எனது வேண்டுகோள்.

இப்படிக்கு,
T. பொன்னுசாமி.

தென்னிந்தியா (ஜாதிபேதமற்ற) கத்தோலிக்கு சகோதர ஐக்கிய சங்கம்.

கோலார் கனகவயல் கிளைச் சபையின் 40-வது கூட்டம் அக்டோபர்மீ 6உ வியாழக்கிழமை மாலை 6½ மணிக்குச் சாம்பியன் ரீவ்ஸ் அர்ச். லூர்துமாதா பஜனை கோவிலில் ஸ்ரீமான் A. L. மனுவேல் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடந்தபோது, இதனடியிற்கண்ட உபந்நியாசகர்களால் பின்வரும் விஷயங்கள் பேசப்பட்டன.

முதலாவது, உபந்நியாசகர், கனம் ஜோ. ஆரோக்கியசாமி அவர்கள் பிறர்சிநேகம் என்பதைப்பற்றி நமது இரட்சகராகிய சேசுக்கிறீஸ்துநாதசுவாமி திருவாய்மலர்ந்தருளி, அர்ச். லூக்காசால் எழுதப்பட்ட சுவிசேஷம் 10-ம் அதிகாரம் 25-ம் வசனத்தை மேற்கோளாகக்கொண்டு வெகு திறமையாகவும், அருத்தம் தெள்ளிதில் விளங்கும்படியாகவும் மிக இனிமையாகப் பேசினதோடு, தேம்பாவணியென்னும் பெருங் காப்பியத்தினின்றும், மேற்கோள்களை யெடுத்துக் காட்டி நம்மவர்களுக்குப் பிறர்சிநேகம் இருந்தால் அன்றி; நமது சங்கத்தின் நோக்கங்களில் ஒருக்காலும் சித்தியடையமாட்டோமென்றும் வற்புறுத்தி கடைசியாய் பிறர்சிநேகம் நமக்கு முக்கியமாய் வேண்டியதென பேசி முடித்தார்.

2-வது, உபந்நியாசகராகிய கனம் எ. சூசைநாதன் என்பவர் கல்வி யென்பதைப்பற்றி 20 நிமிஷங்கள்வரையில் இனிய தமிழ் நடையில் நாயனார் குறளினின்றும், ஔவையார் பாக்களினின்றும், இன்னுஞ் சில நீதி நூல்களினின்றும் எடுத்து மேற்கோள் ஆதாரத்துடன் கல்வியின் மகிமை இன்னதென்றும், அக்கல்வியின்மையே நம்மவர்களின் சீர்குலைவுக்குக் காரணமென்றும் செவ்வென விளக்கியதோடு, நாம் கோரிய பொதுநல சுதந்தரக் காரியாதிகளனைத்தும், அக்கல்வியின் காரணத்தால், சுயமுயற்சியின் வன்மையாலடையக்கடவோம் என்றும் வெகு அழகாய் சுருக்கி விளக்கிப் பேசினார்.

3-வது, உபந்நியாசகர், கனம் P. P. இலாசரஸ் என்பார் சற்சங்கத்தில் சேரல் என்பதைப்பற்றி வெகு அலங்காரமாகவும், எவர்களுக்கும் சங்கம் என்பது இன்னதென்றும், அச்சங்கத்தினால் இன்னின்ன பயன்களுண்டாவதென்றும், உதாரணமாக அநேக சங்கங்களின் காரிய சித்தியையும், உவமானமாக சில சிறிய கதைகளையும் விளக்கமாகச் சாதாரண செந்தமிழ் நடையில் விஸ்தாரமாய் உபந்நியாசித்தபின்னர், நம்மவர்களில் அநேகர் முகத்தாட்சண்யமின்றி சத்திய கத்தோலிக்கு வேதத்துக்குப் பங்கமும், திருச்சபைக்கு அவமானமும் வருவிக்காத நல்ல சங்கங்களில் சேராது, வீணே சுயநலத்தையும், ஜாதி அபிமானத்தையும் கருதி விளங்கும்படியான சில சங்கங்களில் சேர்ந்து, கேவல புத்தி படைத்து, நற்சங்கங்களைத் தூஷிக்கத் தலைப்படுகிறார்கள் என்றும், நாமொவ்வொருவரும், இகத்திற்குரித்தான நன்மைகளையும் பரத்திற்குரித்தான சுதந்தரங்களையும் அடைவதற்கு நற்சங்கத்தில் சேர்ந்து உழைப்பது அத்தியாவசியமென்றும் பேசி முடித்தார்.

4-வது, கனம் A. L. அந்தோனி குரூஸ் அவர்களும் சில நிமிஷங்கள்வரை உபந்நியாசித்தார்கள். கடைசியாக அக்கிராசனரவர்கள் ஷை பிரசங்கிகள் சொன்ன பல அரிய விஷயங்களை சபையினர்க்கு சங்க்ஷேபமாய் எடுத்துரைத்து, பின்னர், இச்சங்கமானது ஆரம்பமாகி இப்போது எந்தப் பருவநிலையிலிருக்கிறதென்றும், இனி நாம் குழந்தைப்பருவமுடைத்தான சங்கத்தினிடத்து என்னென்ன விதமாய் நடந்துவரவேண்டியதென்றும், அப்படிச் செய்வதற்கு நமக்குள் விசேஷமாக என்னென்ன வேண்டியதென்றும் சிறிய விஷயமானாலும் செவ்வென முடிய முயற்சிப்பதற்குக் காரணம் என்னவென்றும், நாம் தளர்வுறாமலும், ஊக்க முறிந்திடாமலும், பிறர்சிநேகம் அகன்றுபோகாமலும், ஒற்றுமை ஒதுங்கிப்போகாமலும், சுயமுயற்சிச் சுருங்கிப்போகாமலும், மேற்படி நமது சங்கத்தை நடத்திவருவோமேயானால் நாம் கோரிய நலங்களனைத்தையும் பெற்று சித்திபெறுவோமென்றும் வற்புறுத்திக் கூறினார். கடைசியாக ஜெபமுடிந்ததும் சபை இனிது கலைந்தது. இக்கூட்டத்துக்கு விஜய மெய்தியவர்கள் சுமார் 70 பேருக்கிருக்கலாம்.

பி. ஜி. ஆர். சிகாமணி, காரியதரிசி.

ஓர் தங்க ஜூபிலி.

உதகமண்டலத்தில் சங்கைக்குரிய கொன்ஸ்தாந்தின் பியோலி சுவாமியார் குருப்பட்டம் பெற்ற ஐம்பதாம் வருடத்திய தங்க ஜூபிலி மஹோற்சவம் 1921-ம் வருடம் செப்டம்பர் மாதம் 25-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இனிது நிறைவேறியது.

அன்றையத்தினம் காலை ஐந்தரை மணிக்கு ஊதுகொம்பின் ஓசை, உறங்கிக்கொண்டிருந்த ஒவ்வொருவரையுந் தட்டி எழுப்பியது. அர்ச். மோக்ஷ இராக்கினிமாதா ஆலயத்தைச் சுற்றிலும், குருப்பிரசாதிகள் இல்லத்தின் எதிரிலும் பந்தர்கள் போடப்பட்டிருந்தன. எங்குபார்த்தாலும் கால்கள் நட்டுத் தோரணங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அலங்கரித்த பந்தர்கள் பேரிலும் உப்பரிகைகள்பேரிலும் பஞ்சவர்ணக் கொடிகள் போடப்பட்டிருந்தன. கோவிலுக்குப்போகும் ஜனங்களில் கொஞ்சம்பேர் சுவாமியார் அறைவாசலில் வந்து கூடினார்கள். 8¾ மணிக்கு சங். பியோலி தேசிகர், குருப்பிரசாதிகள் புடைசூழ, ஜனங்கள் முன்னும் பின்னுஞ் செல்ல, ஒரு பக்கம் பேரிகை முழங்க, இன்னொரு பக்கம் ஊதுகொம்பு சப்திக்க, வேறொரு பக்கம் நாகசுரம் இசைக்க, கோவில் மணிகள் அடிபட, கோவிலினெதிரில் (Band) வாத்தியம் வாசிக்கப்பட, இவ்வளவு கோஷ்டத்துடன் கோவிலுக்குப் புறப்பட்டார்.

கோவிலோ சொல்லொண்ணா அலங்காரத்துடன் நசரேத்து மடத்தின் கன்னியர்களால் ஜோடினை செய்யப்பட்டிருந்தது. அந்த ஜோடினையின் அழகைக்கண்ட யாவரும் பிரமிப்பையடைந்து இமைக்கொட்டுதலையும், வாய்ப்பேச்சையும் இழந்தனர்.

ஜூபிலிதாரர் தேவாலயத்தினுள் நுழைந்து பீடத்தைக் கிட்டியபோது மகா. வந்திக்கத்தக்க கோயமுத்தூர் மேற்றிராணியார் அவர்கள் அவருக் கெதிர்வந்து நல்வரவு கொடுத்தார். அதன்பிறகு ஜூபிலிதாரரும் ஒன்பது மணிக்கு டீக்கன், ஸப்-டீக்கனோடு பாட்டுப்பூசை நிறைவேற்றினார். அன்று தேவ பந்தியில் அமர்ந்தவர் அநேகர்.

சங். இன்னசிநாதசுவாமிகள் தம் முதிர்ந்த வயதைக் கவனியாமலும், உதகமண்டலத்திலுள்ள காற்று, மழை, குளிருக்குப் பயப்படாமலும் வெகுதூரத்திலிருந்து இங்கு வந்து, குருத்துவத்தின் மகிமையைப்பற்றி ஓர் அருமையான பிரசங்கஞ்செய்தார். அப்பிரசங்கத்தின் சுருக்கம் பின்வருமாறு:—

"பியோலி சுவாமியார் பிரான்சு தேசத்தில் மேன்மையான கோத்திரத்திலுதித்தவர். சேசுநாதசுவாமி அப்போஸ்தலர்களைப் பார்த்து "என் பிறகே வாருங்கள், நான் உங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாகச் செய்வேன்" என்று திருவுளம்பற்றிய வாக்கியம் இவர் காதில் விழுந்தாற்போல், தேவ ஏவுதலினால் பூவுலகத்தை வெறுத்து அவ்வூரிலுள்ள அன்னிய போதகச் சபையைச் சேர்ந்தார். இவர் குருப்பட்டம் பெற்றபின் இந்தியாவிற்குவந்து ஜனங்களுடைய ஆத்தும ஈடேற்றத்திற்காகவும், பொதுநன்மைக்காகவும் உழைத்த இந்த ஐம்பது வருஷகாலத்தில் ஏறக்குறைய நாற்பது வருடத்திற்குமேல் இங்கேயே நம்மத்தியில் காலத்தைக் கழித்தனர்.

சகோதரர்களே, குரு என்றால் யார்? சர்வேசுரனுக்கும் மனிதனுக்கும் நடுநின்று இருவரையும் உறவாக்கும் மத்தியஸ்தர். இவரே சர்வேசுரனுடைய மந்திரி. இவரே அஞ்ஞான இருளை நீக்கும் ஞான ஒளி. குரு இல்லாவிட்டால் சேசுநாதசுவாமி நம்மத்தியில் வாசஞ்செய்யமுடியாது.

எங்கே ஒரு ஏழை குருவானவர் இருக்கிறாரோ அங்கே சேசுநாதசுவாமியும் இருக்கிறார். இப்பொழுது நான் உங்களுக்கு குருவினுடைய இரண்டு பெரிய வேலையைப்பற்றி மாத்திரம் சொல்ல ஆசித்திருக்கிறேன். முதலாவது: பரலோகத்தில் சம்மனசுக்களோடு நித்தியானந்தத்தில் வீற்றிருக்குஞ் சர்வேசுரனை, இனிமையான வார்த்தைகளைச்சொல்லி பூவுலகத்திலுள்ள பலிபீடத்தின்மேல் இறங்கச்செய்கிறார். இப்படிப்பட்ட வேலையைச் செய்ய ஒரு சம்மனசுவினாலும் முடியாது. சேசுவைப் பெற்று வளர்த்த தாயாராலும் முடியாது. இக்காரணத்தைக் கொண்டே அர்ச். பிரான்சீஸ்கு "ஒரு சம்மனசையும், ஒரு குருவானவரையும் நிறுத்திவைத்தால் முதன்முதல் குருவானவர் காலில் விழுந்தபின் தான் சம்மனசை வணங்குவேன்" என்று சொல்லியிருக்கிறார்.

2:-வது பாவக்கட்டுகளினால் நிறைந்த மனிதனைக் கட்டவிழ்த்து மறுபடியும் சருவேசுரனிடத்தில் சேர்க்கிறார் குருவானவர். இவை இரண்டு வேலைகள் தான் குருவானவர் செய்யும் பெரிய வேலைகள்.

கடைசியாக, சகோதரர்களே, நாம் இந்த ஜூபிலி தினத்தைக் கண்டது ஒரு பாக்கியம். இன்னும் இன்று ஜூபிலிதாரராயிருக்கும் சங். பியோலி சுவாமியும் பாக்கியம் பெற்றவர். அக்காலத்தில் கிறீஸ்து நாதரைப்பார்த்து "உம்மைப்பெற்ற உதரமும், அமுதூட்டியக் கொங்கைகளும் பாக்கியமுள்ளவைகள்" என்று சொன்னதுபோல, நாமும் நமது பியோலி சுவாமியாரைப்பெற்று வளர்த்த தாய் தந்தையரும் பாக்கியவான்கள் என்றே சொல்லவேண்டும். இந்த சுபதினத்திலே சர்வேசுரன் பியோலி சுவாமியாருக்குச் செய்த நன்மைகட்காக அவருடன் ஒன்று சேர்ந்து சருவேசுரனுக்கு நன்றி செலுத்தக்கடவோம்."

பிரசங்கம் முடிவானதும் முன்போல் ஜூபிலிதாரரை ஆரவாரத்துடன் அழைப்பு மண்டபத்திற்கு (St. Joseph's School Hall) கூட்டிவந்து, ஐரோப்பியர்களால் வந்தன உபசாரம் செய்யப்பட்டு, 1000 ரூபாயும் பரிசாகக் கொடுக்கப்பட்டது. பின்பு மகா வந். கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள், சங். பியோலி தேசிகரது ஜீவிய சரித்திரத்தைச் சுருக்கமாய்ச் சொன்ன பிறகு உரோமாபுரியிலிருந்து பரிசுத்த பாப்பானவரால் அனுப்பப்பட்ட வெகுமதியையும் அவருக்கு அளித்தார்கள்.

பிற்பகல் 3 மணிக்கு அர்ச். உத்தரியமாதாவின். பஜனையோர்கள் சுவாமியாரைக்கண்டு, மரியாதைசெய்து அவருடைய உருவப்படம் பெரிய அளவில் (Enlarged bust) ஞாபகார்த்தமாகக் கொடுத்து ஆசீரைப் பெற்றுச்சென்றனர். மாலை நாலேகால் மணிக்கு மிகவும் சங். பெஷ்யு (The Very Revd. L. Bechu, v. G., Coimbatore) சுவாமியாரவர்களால் இங்கிலீஷில் ஒரு பிரசங்கஞ் செய்யப்பட்டது. நாலரை மணிக்கு திவ்யநற்கருணை ஆசீர்வாதமும், தேதேயம் என்கிற நன்றியறிந்த தோத்திரப் பாடலோடு முடிவானது. பிறகு சுதேசக் கிறீஸ்துவர்கள் மறுபடியும் குருவானவரை ஆரவாரத்துடன் அழைப்பு மண்டபத்திற்குச் கூட்டிவந்து ஒரு புகைப்படம் எடுத்து பின் அவருக்குச் செய்ய வேண்டிய மரியாதை செய்து, வந்தனோபசார பத்திரிகை வாசித்து, பூசை புத்தகம் ஒன்று வெகுமானஞ்செய்தார்கள். மேலும் இந்தத் தங்க ஜூபிலி ஞாபகார்த்தமாக இத்தாலியா தேசத்திலிருந்து வரவழைத்து சுமார் 4000 ரூபாய் விலையுள்ள சலவைக்கல் பீடமொன்றைக் கட்டினார்கள். இப்பீடத்தில்தான் ஜூபிலிதாரரும் பலி பூசை நிறைவேற்றினார்.

அன்றிரவு குருப்பிரசாதிகளின் மனையின் பேரிலும் அதைச்சுற்றிலும் பந்தங்களும் விளக்குகளும் பிரகாசித்தன. கடைசியாக எட்டு மணிக்கு வாணவேடிக்கை முடிவானவுடன் ஜனங்களெல்லாம் தங்கள் தங்கள் இல்லந் திரும்பினர். மறுநாட் காலை அர்ச். சூசையப்பர் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஜூபிலிதாரரை கோலாட்டத்தோடு அறைவீட்டிலிருந்து அழைப்பு மண்டபத்திற்குக் கூட்டிவந்து, வந்தனோபசாரமளித்து சங். தேசிகரது ஆசீரைப் பெற்றனர்.

மாலை ஐந்து மணிக்குக் கத்தோலிக்குப் பாலிய சங்கத்தினர், குருவானவரையும், மகா வந்தி. மேற்றிராணியாரவர்களையும், இன்னும் அங்கு விருந்தினராகவந்த சங். சுவாமிமார்களையும், அழைப்பு மண்டபத்திற்கழைத்து, வந்தன வழிப்பாடுகள் செய்து, ஊன்றுகோல் ஒன்றையும், புருசா (Bursa) ஒன்றையும் பரிசளித்தார்கள். பிறகு ஆறு மணிமுதல் ஏழரை மணிவரை "Triumph of Justice" என்னும் நாடகத்தை ஆங்கிலேய பாஷையில் நடித்து, பாப்பு வாழ்த்து, இராஜவாழ்த்தலோடு முடித்தனர்.

இருபத்தேழாந் தேதி நசரேத்து மடத்தின் அலங்காரமாய்ச் சிறப்பித்த கோவிலில் காலை எட்டு மணிக்கு பூசை நிறைவேற்றினார். அன்று மத்தியானம் சுவாமியாருக்கு கன்னியர்களால் விருந்தளிக்கப்பட்டது. மாலை திவ்யநற்கருணையாசீர்வாதமும் "தேதேயம்" என்னுந் தோத்திரப்பாடலோடு முடிவானது. அதன்பின் மடத்திலேயே, தேயிலைப்பானம் பருகியபிறகு, ஆங்கிலேயப் பள்ளிப் பெண்களால் ஒரு நாடகம் நடை பெற்றது. இரவு எட்டு மணிக்குமேல் அழைப்பு மண்டபத்தில் "மோக்ஷ வழி காட்டி" என்னுந் தமிழ் நாடகம் அர்ச். உத்தரியமாதா பஜனைப் பிள்ளைகளால் நடிக்கப்பட்டது.

மிக. சங். மோன்சிஞ்ஞோர் ஜான் சுவாமிகளின் வெள்ளி ஜூபிலி கமிட்டியாருக்கு ஓர் வேண்டுகோள்.

ஐயா, நமது சங். பத்திராதிபர் அவர்களுக்கு மோன்சிஞ்ஞோர் பட்டம் கிடைத்த தன் ஞாபகச் சின்னமாக தாங்கள் செய்யப்போகும் காரியங்களில் சுவாமிகளது உருவப்படம் ஒன்று "நல்லாயன்" சந்தா நேயர் ஒவ்வொருவருக்கும் அம்மாதப் பத்திரிகையோடு அனுப்பிவைக்கக் கோருகிறோம். வேண்டுமானால், அதற்குப் பிரத்தியேகமான கட்டணமும் நல்லாயன் சந்தாவோடு சேர்த்தனுப்ப எல்லோரும் பிரியப்படுவார்களென்பதை விநயத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

வைப்பார் புலி. இந்நாசி.

மிகவும் சங்கைக்குரிய

மோன்சிஞ்ஞோர் ஏ. ஆர். ஜான் சுவாமிகளின்

வெள்ளி ஜூபிலி நிதி.

நமது பத்திரிகாசிரியராகிய மிக. சங். ஏ. ஆர். ஜான் சுவாமிகளின் ஜூபிலி சென்ற அக்டோபர் மீ முடிவில் கொண்டாடப்படவேண்டுமென்று கமிட்டியார் தீர்மானித்திருந்தபடி நிறைவேற்றுவதற்குக் கூடாமற் போய்விட்டது. எதிர்பார்த்தவாறு அர்ச். பாப்பானவரிடமிருந்து "பிரீப்" என்னும் அதிகாரப்பத்திரம் வாராமையே காரணம். அந்த அதிகாரப்பத்திரம் வந்ததும், அந்த ஆதிக்கப்பட்டில் நிர்ணயிருக்கிற "மோன்சிஞ்ஞோர்" பட்டத்தின் உடுப்பு முதலிய சின்னங்களோடு சுவாமிகளை சபைக்கு அழைப்பித்து, அவர்களுக்கு உபசார மரியாதைகள் நடத்த வேண்டுமென்பது அநேகருடைய அபிலாஷையாயிருக்கிறது. இதனையும், காலம், பொதுஜன சௌகரிய முதலியவற்றையும் உத்தேசித்து, ஜூபிலி கொண்டாட்டத்தை அடுத்த ஜனவரி மீ த்தில் நடத்தலாமென கமிட்டியார் தீர்மானித்திருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகையோடு இம்மாதத்தில் பின் குறிக்கப்பட்டுள்ள நன்கொடைகள் நன்றியறிதலுடன் வரவேற்கப்பட்டன :—

5 ரூபாய்.—Mr. A. Y. அருளானந்தசுவாமி நாடார், தஞ்சாவூர்.
2 ரூபாய்.—Messrs. வி. கோஸ்தா, மாத்தளை ; எஸ். டி. பொர்ஞண்டோ, தூத்துக்குடி.
1 ரூபாய்.—Mr. ஆ. மாசிலாமணி, ஜம்மலமடுகு.

2/74, பிராட்வே, மதராஸ்,
30—10—21.

எம். பி. குழந்தைசாமி,
பொக்கிஷதாரன்.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

பசிபிக் கப்பற்படை.—கப்பற்படை அதிகாரிகள் பசிபிக் கப்பற்படையை சிங்கப்பூரில்தான் ஏற்படுத்த வேண்டுமெனத் தீர்மானித்துவிட்டனர். முன்னிருந்ததைவிட இப்போது சிங்கப்பூர் இதனால் அதிக பெருமையும் சிறப்பும் பெறும்.

அர்ச். அருளப்பர் கல்லறை.—கிரீஸ் நாட்டின் தலைநகராகிய அதென்ஸிலிருந்து வந்த தந்தியினால், அங்கு பூமியைத் தோண்டிக்கொண்டு போகையில் புராதனக் கல்லறையொன்று கண்டுபிடிக்கப்பட்டதென்றும், அதை ஆராய்ச்சிசெய்து பார்த்ததில், அது அர்ச். அருளப்பர் கல்லறையென்று ஊகிக்கப்படுகிறதென்றும் தெரியவருகிறது.

சென்னைக்குப் புதிய சீப் ஜஸ்டிஸ்.—சென்னை ஐகோர்ட்டின் தலைமை நியாயாதிபதியாயிருந்து மைசூர் சமஸ்தானத்திற்கு மாற்றப்பட்ட ஜஸ்டிஸ் எயிலிங் என்பவருக்குப் பதிலாக மிஸ்டர் வால்டர் ஜார்ஜ் சார்லிஸ் ஷ்வாபி, கே. சி. என்பவர் நியமிக்கப்பட்டதை மாட்சிபொருந்திய அரசர்பெருமான் அங்கீகரித்துவிட்டார்.

யுத்தக்கடன்.—இங்கிலாந்து, பிரான்சு இத்தாலி, பெல்ஜியம் முதலிய நாடுகள் அமெரிக்காவுக்குக்கொடுக்கவேண்டியகடன் தொகை கோடி பவுனுகும். இங்கிலாந்துக்கு மேற்குறித்த நாடுகள் கொடுக்கவேண்டிய கடனே 194 கோடி பவுனுகும். ஆகவே இங்கிலாந்துக்கு சுத்தமாக கடனில்லையென்றே சொல்லவேண்டியதாகிறது. மற்ற நாடுகளிடமிருந்து வாங்கி அமெரிக்காவுக்குக் கொடுத்துவிட வேண்டியதுதான்.

கல்விக்காக கவர்ண்மென்ட் கிராண்ட்.—கோயம்புத்தூர் விவசாயக் கல்லூரிக்கு ரூபாய் ஒரு லட்சமும், மதுரை தொழிற் கல்விச்சாலைக்கு 85 ஆயிரமும், சென்னையில் வியாபாரப் பள்ளிக்கூடம் கட்ட 70 ஆயிரமும், கள்ளிக்கோட்டை சோப் இயந்திரசாலைக்கு 50 ஆயிரமும், சென்ற சட்ட நிரூபண சபைக் கூட்டத்தில் சாங்ஷன் செய்யப்பட்டது.

பரீட்சை காலம்.—சாதாரண பரீட்சைகளை வழக்கம்போல் மார்ச்சு, ஏப்ரல் மாதங்களிலும், இரண்டாவது பரீட்சைகளை அக்டோபர், நவம்பர் மாதங்களிலும் நடத்த வேண்டுமென்று, ஸ்ரீமான் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் சென்ற மாதம் 17-ம் தேதி கூடிய சர்வகலாசாலை சங்கத்தார் கூட்டத்தில் கொண்டுவந்த பிரேரணை அங்கீகரிக்கப்பட்டுவிட்டது.

ஐர்லாண்டு சமாதான விஷயமாக மாட்சிமைதங்கிய ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்கள் எடுத்துக்கொண்டுவரும் முயற்சிகள் முற்றும் நற்பயனோடு முடியவேண்டுமாறு தாம் எல்லாம் வல்ல சர்வேசுரனை வேண்டுவதாக நமது பரிசுத்த பாப்பானவர் சக்ரவர்த்திக்குத் தந்திமூலமாய் தெரிவித்ததில் சக்ரவர்த்தியும் அந்த தந்தியைப்பெற்று சந்தோஷமடைந்து நமது பரிசுத்த தந்தைக்குப் பதில் தந்தி யனுப்பினர்.

பெரிய திருட்டு.—புதுக்கோட்டை ராஜா வீட்டில் திருடர் புகுந்து பொன் கடிகாரம், வைர மோதிரங்கள், தங்க சிகரெட் பெட்டி, வைரக் காதணி முதலிய பல விலையுயர்ந்த பொருட்கள் ஒன்பதினாயிரம் ரூபாய் பெறுமானவைகளை திருடிக்கொண்டுபோயினராம்.

ஒரு கெட்டிக்கார மாணவர்.—சமீபத்தில் இங்கிலாந்தில் நடைபெற்ற இந்தியன் சிவில் சர்விஸ் பரீட்சையில், அதாவது கலெக்டர் முதலிய உயர்தர உத்தியோகத்துக்கு வேண்டிய பரீட்சையில், மிஸ்டர் சிவசங்கரமேனன் என்னு மாணவர் எல்லாருக்கு முதலாகத் தேறினர். இதுவரையில் இந்த பரீட்சையில் இந்தியரெவரும்முதலாகத் தேறினதில்லை. இவர்தான் முதல்முதல் அப்படித் தேறியிருக்கிறார். இவர் சமீபத்தில் எம். ஏ. பட்டமும் பெற்றார். இவர் சென்னையில் வசிக்கும் பாரீஸ்டர் மிஸ்டர் ஏ. பி. கோபாலமேனன் என்பவருக்குச் சொந்தக்காரராவர்.

40,000 அடி உயரம் செல்லுதல்.—அமெரிக்காவைச்சேர்ந்த ஓஹியோவில் லெப்டினன்ட் மாக்ரெடி என்பவர் ஆகாய விமானத்தில் ஏறிக்கொண்டு, இதுவரையில் எவருமே சென்றில்லாத 40,800 அடி உயரம் சென்றதாகவும், 39,000 அடி சென்றபோது பனிக்கட்டி விமான இயந்திரத்தில் உறைய ஆரம்பித்துவிட்டதாகவும், மேற்படி உயரம் போனவுடன் எஞ்ஜின் பிளவுபடவே மாக்ரெடி யாதோர் ஆபத்தின்றிக் கீழே இறங்கி வந்துவிட்டதாகவும் அமெரிக்க தந்தி ஒன்று கூறுகிறது.

ஒரு இந்திய சிரேஷ்ட குரு.—திருச்சினாப்பள்ளி மேற்றிராசனத்தில் இப்போதுதான் முதன்முறையாக ஒரு இந்திய குருவானவர் சிரேஷ்ட குருவானவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அதாவது, "பிஷ்ஷரி கோஸ்ட்" என்னும் கரைதுறைப் பட்டணங்களிலுள்ள 18 பங்கு விசாரணைகளுக்கு சங். மரியகுசைநாதர் அதி சிரேஷ்டராக நியமிக்கப்பட்டிருக்கிறாரெனக் கேள்விப்படுகிறோம்.

ஐ. சி. எஸ். பரீட்சை,—இங்கிலாந்தில் சமீபத்தில் நடந்த ஷை பரீட்சையில் தேறின 16 பேர்களில் 13 பேர் இந்தியர்களென்றும், இவர்களில் எழுவர் சென்னை சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டம் பெற்றவர்களென்றும், இந்த எழுவரில் நால்வர் சென்னை "பிரசிடென்சி காலேஜ்" என்னும் இராஜாங்க உயர்தரக் கலாசாலையைச் சேர்ந்தவர்களென்றும் தெரிகிறது. இவர்களில் ஒருவரேனும் தென்னிந்திய கத்தோலிக்கராயிராதது பெருங் குறையே. நம்மனோர்கள் இத்தகைய உந்நத பதவியைப் பெறுவதெப்போவெனுங் கேள்வியை ஆராயப் புகின் அவர்களுக்குள் ஒற்றுமையும், பரஸ்பர நேசமும், தாழ்மையும் எப்போது உண்டாகுமோ அப்போதுதான் அது சித்திக்குமென்று சந்தேகமறச் சொல்லலாம்.

ஒரு புது ஆமை.—நமது இந்தியாவில் எக்காலத்திலும் காணாத ஒரு நவீன ஆமை புறப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, கள்ளுண்ணாமை, கொல்லாமை, களவாணாமை, பொய் சொல்லாமை, பிறர் பொருள் கவராமை, நன்றிமறவாமை முதலிய ஆமைகளை எழுத்திலும், செய்கையிலும் கண்டிருக்கிறோம். ஆனால், இப்போது ஒத்துழையாமையென்னும் ஒரு புது ஆமை புறப்பட்டு ஊரில் கலகத்தையும், குழப்பத்தையும் உண்டு பண்ணி, நூற்றுக்கணக்காக ஆயிரங்கணக்காக உயிர்களைக் கொன்றுகொண்டுவருகிறது. இந்தப் பொல்லாத ஆமையைக் கொல்லாதுவிடலாமோ? இதைக் கொல்ல ஒவ்வொருவரும் முயற்சிசெய்யவேண்டும்.

13 ௵ எரியும் மெழுகுவத்தி.—இத்தாலியாவைச்சேர்ந்த நேப்பில்ஸ் நகரத்திலுள்ள பொம்பேமாதாவின் கோவிலில், உத்தரிக்கிற ஆத்மாக்கள் திருநாளன்று என்ரிக்கோ கருசோவெனும் ஒரு பிரபுக்காக ஒரு பிரமாண்டமான மெழுகுவத்தி கொளுத்தப்படுமாம். அவ்வத்தி ஆயிரம் பவுன் எடையுள்ளதென்றும் ஓயாமல் எரிந்தால் 13 வருஷம் 7 மாதம் எரியுமென்றும், ஆனால், அது வருஷத்தில் ஒரு நாள்தான், அதாவது உத்தரிக்கிற ஆத்துமாக்கள் திருநாளன்று மாத்திரம் எரிக்கப்படுமென்றும் அவ்வாறு அது அநேக நூற்றாண்டுகள் எரியுமென்றும் சொல்லப்படுகிறது. மேற்படி தனவான் தங்களுடைய பராமரிப்புக்காக 10,000 டாலர் நன்கொடை யளித்ததற்கு நன்றியறிதலாக, நியூயார்க் அநாதசாலைப் பிள்ளைகளால் அவ் வத்தி செய்துவைக்கப்பட்டதாம்.

இரண்டு பெரிய விருத்தர்கள்.—அமெரிக்காவைச் சேர்ந்த கென்டக்கி என்ற ஊரிலுள்ள மிஸ்டர் ஜான் ஷேல் என்பவருக்கு 133 வயதாம். அவர் இந்த வயதிலும், நல்ல தேகஸ்திதியில், நல்ல ஞாபகசக்தியுடையவராக இருக்கிறாராம். கான்ஸ்டான்டிநோபிளுக்கருகில் குர்டு என்னும் ஜாதியைச் சேர்ந்த ஒருவருக்கு வயது 146 ஆகிறதாம். அவருக்கு 97 வயதுள்ள ஒரு பிள்ளை இருக்கிறாரென்று சொல்லப்படுகிறது. இந்த செய்தி அபூர்வமானதானாலும், ஒருவன் தன் வயதை வளர்த்திக்கொள்வதோ அல்லது குறைத்துக்கொள்வதோ, இரண்டும் அவன் கையிலேயே இருக்கிறது. யாதோர் மனிதன் எவ்விஷயத்திலும் மிதத்தை அநுசரித்து, தேகத்தையும், மனசையும் சுத்தமாய் வைத்து தேகப்பயிற்சி செய்து வருவானானால், அவன் ஷையாரைப்போல் நெடுங்காலம் ஜீவிப்பான் என்பதற்கு யாதோர் ஆட்சேபனையில்லை.

மனந்திரும்புதல்.—கோலார் சாம்பியன் ரீப்ஸ் அர்ச். ஜெயமாதாவின் ஆலயத்தில், சென்ற அக்டோபர் மாதம் 16-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை 4-30 மணிக்கு, கனம் கோபால்சாமி அய்யங்கார் என்னும் பிராமணரும், நாராயண நாயர் என்னும் மலையாளத்தாரும் சங். ராஜரிஷி T. F. பெசியன் குருசுவாமியாரவர்களால் ஞானதீட்சை பெற்றார்கள். சடங்கு முடிய அரைமணி நேரம் சென்றது. இந்துக்களில் சிலர் கோவிலின் உட்புறமும், சிலர் வெளிப்புறமுமாக நின்றுகொண்டு வெகு மரியாதையாய் சடங்கை நோக்கிய வண்ணமாயிருந்தார்கள். போன வருடம் மனந்திரும்பின இராமநாத அய்யர் என்னும் தேவசகாய அய்யர் இவர்கள் இருவரையும் ஞானப் பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டார்.

மைசூரில் அர்ச். பாப்புஸ்தானபதி.—இம் மேன்மைதங்கிய ஸ்தானபதிகளாகிய மிக. வந். (Pisani) பைசானி ஆண்டவர் அவர்களை மைசூர் மஹா இராஜா தம்முடைய இராஜதானிக்கு அதிதியாக வரவழைத்துத் தக்க மரியாதையுடன் சன்மானித்தார். இவரின் வரவை எதிர்நோக்கி மைசூர் மஹா இராஜா அவர்களின் அந்தரங்க காரியதரிசி முதலான பாரி உத்தியோகஸ்தர்கள் ரைல்வே ஸ்டேஷனில் சந்தித்து நல் வரவு கூறி, அரசாங்க அதிதிகளின் விடுதிக்கு அழைத்துச் சென்றனர். பிறகு மஹா இராஜாவும் அவரின் தம்பியாகிய யுவராஜாவும் ஸ்தானாதிபதியவர்களுக்குத் தனித்தனியே பேட்டி கொடுத்தனர். இவ்வாண்டவரவர்களை 3 நாள் வைத்திருந்து, தம் இராஜ்யத்து பிரதான ஸ்தலங்களையும், பேர்போன கன்னம்பாடி அணைக்கட்டையும் காண்பித்து, சந்தோஷத்துடன் அனுப்பிவைத்தார்.

கார்ல் சக்கரவர்த்தி.—ஹங்கேரி தேசத்தின் மாஜி சக்கரவர்த்தியான கார்ல் என்பவர், தாம் இதுகாறும் அடைக்கலம் புகுந்திருந்த சுவிட்சர்லாந்து தேசத்தை விட்டு, இப்போது தம் தேசமாகிய ஹங்கேரிக்குத் திரும்பிவந்து, மறுபடியும் சிம்மாசன மேறும்படி யுத்தசன்னத்தராய் முயற்சி செய்கிறார். இவர் சைன்னியத்துக்கும், ஹங்கேரிய குடியரசு சைன்யத்திற்கும் ஆங்காங்கே சிறு சண்டை நடந்தது. ஐரோப்பிய யுத்த உடன்படிக்கையின்படி இவராவது இவர் குடும்பத்தைச்சேர்ந்த வேறு யாராவது சிம்மாசனத்தி லேறலாகாது. இதையநுசரித்து ஹங்கேரியிலுள்ள அந்நியநாட்டு தானீகர்கள் கூட்டங்கூடி ஆட்சேபனை செய்திருக்கிறார்கள். இதற்குள்ளாக அவர் குடியரசு சைன்யங்களால் பிடிபட்டு விட்டாரென்று சொல்லப்படுகிறது.

அகில இந்திய சுதேச பொருட்காட்சி சாலை.—அகில இந்திய சுதேசப் பொருட்காட்சி யொன்று 1922-ம் வருஷம் ஜனவரி மாதம் பம்பாயில் நடைபெறும். அதில் கையால் நூற்கப்பட்ட பருத்தி பட்டு நூலும், கைத்தறியில் நெய்யப்பட்ட பருத்திபட்டு ஆடைகளும் வைக்கப்பட்டிருக்கும். சர்க்கரை செய்யும் விதங்கள் காட்டப்படும். பண்டைக் காலத்தில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்ட விதமும் காட்டப்படும். கையால் நெய்த கம்பளங்களும் கடைக்குக் கொண்டுவரப்படும். இவைகளிற் சிறந்தவைகளாகக் கொண்டுவருபவர்களுக்குப் பரிசளிக்கப்படும்.

மிக, சங். மோன்சிஞ்ஞோர், ஏ. ஆர். ஜான் சுவாமிகளின் ஜூபிலி.—இந்த ஜூபிலிக் கொண்டாட்டம் அர்ச். பாப்பானவரிடமிருந்து "மோன்சிஞ்ஞோர்" பட்டத்தின் அதிகாரப் பத்திரம் எதிர்பார்த்திருந்தபடி இன்னும் வாராததனால் தடைபட்டு நிற்கிறதென்றும், காலம், பொதுஜன சௌகரியம் முதலியவற்றை யுத்தேசித்து, அதை அடுத்த ஜனவரிமாதத் தொடக்கத்தில் நிறைவேற்றலாகுமென்றும், அதன் நாள், நேரம் முதலிய விவரங்கள் ஷை அதிகாரப்பத்திரம் வந்தவுடன் அறிவிக்கப்படுமென்றும் ஷை ஜூபிலிக் கமிட்டியார் சென்றமீ 23-ம் தேதி கூடிய கூட்டத்தில் தீர்மானித்தார்களென்று அக்கமிட்டியின் காரியதரிசி தெரிவிக்கிறார்.

ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு.—என்பதற்கிணங்க, திருப்பத்தூர் தாலுக்கா நரசம்பட்டி வாசியாகிய தாணு சலார் சாயபு தனக்கு கவர்ண்மெண்டாரால் 1913௵ கொடுக்கப்பட்ட "கான்சாகிப்" பட்டத்தை கிலாபத்து கமிட்டியார் தீர்மானத்தின்படி பஹிஷ்கரித்து, அதற்குரிய பட்டத்தையும் சன்னத்தையும் திரும்ப வாபீஸ் செய்துவிட்டார். பிறகு என்ன நினைத்தாரோ தெரியவில்லை; ஒத்துழையாமைக்காரர்களின் ஹிம்சை பொறுக்கமாட்டமலே தான் பட்டத்தை பஹிஷ்கரிக்க நேர்ந்ததென்றும், தான் பரம இராஜவிசுவாசியென்றும், இனி தனக்கு என்ன ஆபத்துவந்தபோதிலும் தன் இராஜ விசுவாசத்தை இனி யாரும் கெடுக்க முடியாதென்றும் சொல்லித் திரும்பவும் அப்பட்டத்தைக் கேட்க, கவர்ன்மெண்டார் மீண்டும் அதைக் கொடுத்துவிட்டார்கள். என்ன அவசரபுத்தி!

கிறீஸ்துவ ஐகோர்ட்டு ஜட்ஜி.—சென்னை ஐகோர்ட்டு என்னும் உயர்தர நீதிமன்றத்தின்கண் நியாயவாதியும், சென்னை சட்ட நிரூபண சபை யங்கத்தவருள் ஒருவராயும் இருந்துவரும் ஸ்ரீமாந் எம். டி. தேவதாஸ், பி. ஏ, பி. எல், பாரிஸ்டர் அவர்கள் ஷை உயர்தர நீதிமன்றத்தின் நியாயாதிபதிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கிறாரெனக் கேள்வியுற்று மிக்க சந்தோஷமானோம். இந்திய கிறீஸ்துவர்களில் ஒருவராவது இதுவரையில் இந்த உந்நத பதவிக்கு நியமனம் பெற்றதில்லை. இவரே முதல்வராவர். இதனால் இந்திய கிறீஸ்துவ சமூகத்துக்கு ஒருவாறு கௌரவ மேற்பட்டது. ஸ்ரீமாந் தேவதாஸ் பிள்ளையவர்கள் அப்பதவிக்கு எவ்வாற்றாலும் ஏற்றவரென்பதற்கு எட்டுணையுஞ் சந்தேகமில்லை. இவருக்கு எம் மனமார ஆசி கூறுகிறோம்.

காலஞ்சென்றார்.—திருநெல்வேலி, மணப்பாட்டுப் பரதர் குலத்தவரும், "பரதன்" பத்திரிகாசிரியரும், பிரபல வர்த்தகரும், சிறந்த தேசாபிமானியும், குலாபிமானியும், மதாபிமானியும், தமிழ்ப் பாஷாபிமானியுமான ஸ்ரீமாந் கபிரியேல் மிராந்தா அவர்கள் கண்டியில் காலமாயினார்களென்று கேள்வியுற்று மிக்க வருந்துகின்றோம். அத்தகைய சற்குண சீலர்கள் அவனியிற் காண்பதரிது. இந்த சீமானின் மரணத்தால் பரதகுலமும், தமிழுலகமும்பெருநஷ்டமடைந்துவிட்டன வென்போமானால் அது மிகையாகாது. அவரது குடும்பத்துக்கு நமது உள்

ளப்பூர்வமான அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மலையாளக் குழப்பம்.—இன்னும் அடங்கினபாடில்லை. 5,000 பேர் வரையில் சிறைப்படுத்தப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு, பலவிதமாய்த் தண்டிக்கப்பட்டும், நாளது வரையில் மாப்பிள்ளைமார்கள் காடுகளில் ஒளிந்துகொண்டிருந்து, சமயம் பார்த்து வெளியே வந்து சமாதானமாய் வாழுங் குடித்தனக்காரர்களை இம்சித்து, கொன்று, பொருள்களைக் கொள்ளையடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். எதிர்ப்படும் பிரிடிஷ் சேனைகளோடும் எதிர்த்து நின்று போராடுகிறார்கள். இருதரப்பிலும் சில உயிர்ச்சேதங்கள் உண்டாகின்றன. ஆயினும் இக்கலகம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்துகொண்டு வருகிறதென்றே சொல்லவேண்டும். ஆனால் இக்கலகக்காரர்களின் அட்டூழியங்களால் ஊணின்றி, இல்லிடமின்றி தவிக்கும் பல்லாயிரம் ஏழை ஜனங்களுக்குப் போதுமான பரிகாரஞ் செய்ய பத்து லட்சம் ரூபாய் வேண்டும் எனச் சொல்லப்படுகிறது. இதற்கு எல்லாரும் உதவி செய்யவேண்டும்.

ஐந்து பெருவாரி நோய்கள்.—சென்ற வருஷம் கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்தினநாள் கர்தினால்மார்கள் அர்ச். பாப்பானவரைக்கண்டுகொள்ளப் போனபோது அவர் அவர்களுக்குச்சொன்ன பிரசங்கத்தில் உலகத்தில் தற்போது ஐந்து பெருவாரி நோய்கள் மானிடரை வருத்துகின்றனவென்று குறிப்பிட்டார். அவையாவன:—(1) ஒன்றுமில்லாதபடி அதிகாரிகளை எதிர்த்தல் (2) மனிதருக்குள் என்றுமில்லாத விதமாய் ஒருவன்மேல் ஒருவன் பகைமை பாராட்டுதல் (3) வேலையின்மேல் அளவுக்கு மிஞ்சின வெறுப்பு (அதாவது சோம்பல்) (4) மானுடப்பிறவியின் ஏக நோக்கம் இதுவே என்றாற்போல இன்பத்தின்மேல் அளவு கடந்த ஆவல் (5) பெருத்த லோகாயத மதம், அதாவது மனிதனுக்கு என்றும் அழியாத ஆத்துமம் ஒன்றிருக்கிறதென்பதை மறுத்து, இம்மைச் சுகாநுபவத்தையே நாடுதல்.

சட்ட நிரூபண சபையில், ஸ்ரீமான் தேவதாஸ் பிள்ளையவர்கள் ஐகோர்ட் நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டு விட்டபடியால், அவருடைய ஸ்தானத்தில் ஒரு இந்திய கிறீஸ்துவர் அமரவேண்டியதாகிறது. இந்திய கிறீஸ்துவர்கள் சங்கத்துக்கும் தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்துக்கும் ஆதியில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி முந்தின சங்கத்தின் சார்பினராகிய புரொடெஸ்டான்டார் நடக்கத் தவறிவிட்டபடியால், இப்போது அது பிந்தின சங்கத்தைச் சார்ந்தவர்களை பாதிக்கப் மாட்டாது. ஆகவே இப்போது காலியாகும் ஸ்தானத்துக்கு கத்தோலிக்கு இந்தியர் தாராளமாய் வாலாம். கத்தோலிக் இந்தியர் சங்கத்தின் கௌரவ காரியதரிசியாகிய ஸ்ரீமாந் மரியதாஸ் இரத்தினசாமி முதலியார் எம். ஏ. (பாரிஸ்டர்) அவர்கள் ஏற்கெனவே அந்தஸ்தானத்துக்கு ஒரு அபேட்சகராக நிற்கிறாரெனக் கேள்விப்படுகிறோம்.

சந்தா உயர்வு.—நமது "நல்ல ஆயனின்" சந்தாவை 1922 ௵ ஜனவரி ௴ முதல் ஒரு சிறிது உயர்த்தியிருக்கிறோம். அதாவது இனி ஷை சந்தா ரூபா 1-8-0 ஆகும். இவ்விஷயமாக நாம் இச்சஞ்சிகையோடு வைத்தனுப்பியிருக்கும் அநுபந்தத்தை நமது நண்பர்கள் யாவரும் வாசித்து, சந்தா உயர்வுக்குக் காட்டியுள்ள காரணங்களை ஒப்புக்கொண்டு, உயர்த்தப்பட்ட சந்தாவை முன்னதாகவே செலுத்தி, நம்மை இது வரையிலும்போல் சன்மானிப்பார்களென நம்புகிறோம்.

பரிசுத்த பாப்பானவர் தாம் வத்திக்கான் தோட்டத்தில் உலாவுவது, தமது மாளிகையில் தினந்தோறும் தம் சொந்த அலுவலைச் செய்வது, அங்குள்ள லூர்து மாதா பீடத்தில் திவ்ய பூசை செய்வது முதலியவைகளை, பயாஸ்கோப் காரர்கள் படம் பிடித்துக்கொள்ளுமாறு சமீபத்தில் உத்தரவு கொடுத்தாராம். இம்மாதிரி அவர் அநுமதித்தது இதுதான் முதல் விசையென்றும், அந்தப் படங்கள் வெகு நேர்த்தியாய் அமைந்திருக்கின்றனவென்றும் சொல்லப்படுகிறது. நமது பரிசுத்த பிதா இதற்குச் சம்மதித்தது தற்பெருமையின் பொருட்டாலல்ல, ஆனால் தம்மை நேரே காண்பதற்கு முடியாத நிலைமையில் உலகெங்கும் பரவியுள்ள தமது எண்ணிறந்த ஞானமக்களின் ஆசையை ஒருவாறு பூர்த்தி பண்ணும் எண்ணத்தாலேயாகும்.

இது நமது ஞானத் தந்தையின் இரக்கத்தையும் அன்பையும், பெருந்தகைமையையும் குறிப்பிக்கின்றதன்றோ? இந்தப் படங்களை இவ்விராஜதானிக்குக் கொண்டுவந்துகாட்ட எத்தனை நாள் செல்லுமோ!

சுகாதாரமும் தொழிலாளரும்.—தொழிலாளர் முக்கியமாய் சரீரத்தால் பாடுபட்டு ஜீவனம் செய்கிறவர்கள் தேகாரோக்கியத்தைப்பற்றிச் சிறிது கவனிக்க வேண்டும். மனோசுத்தியாவதற்குமுன் சரீர சுத்தியே பிரதானம். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து, சற்று தூரம் நடந்து மல ஜலம் நீக்கிய பிறகு சரீரத்தை நன்றாய்த் தேய்த்து ஜலத்தால் சுத்தி செய்ய வேண்டும். ஒவ்வொரு நாளும் உடையை நனைத்துத் துவைத்து உலர்த்தி உடுத்த வேண்டும். இவ்விதம் நாள்தோறும் செய்துவரின் வியாதி சரீரத்தை அண்டாது. காலையில் ஸ்நானம் செய்வதால் மனம் தெளிவுபடும். சோம்பல் ஒழிந்துபோகும். புதிய ஊக்கம் உண்டாகும். காலையில் ஸ்நானம் செய்யாவிடில் சோம்பலுண்டாகும். எந்த வேலையும் செய்ய உற்சாகமுண்டாகாது. நோய் கொண்டவன்போல் தோன்றும். முகத்தில் தேஜசு தோன்றாது. மனதில் சந்தேகம் அடுக்கடுக்காய்த் தோன்றும். காலையில் ஸ்நானம் செய்து உலர்த்திய புது உடையை அணிந்துகொள்வதால் எவ்வளவோ நன்மையுண்டாகும். புது மனிதனாகவே தோன்றும். பசித்தாலொழிய புசிக்கக்கூடாது. அளவுக்குமிஞ்சி புசித்தால் மயக்கம் உண்டாகும். சரீரம் கனமாகத் தோன்றும். படுத்துக்கொள்ளவே இஷ்டமுண்டாகும். ஆகையால் மிதபோஜனமே சிலாக்கியமானது. அற்ப நோய் உண்டாகிற காலத்தில் ஆகாரத்தை பத்திய முறையில் திருத்திக்கொள்ளவேண்டும். சிலவேளை ஆகாரம் புசிக்காமல் லங்கணம் போடுவது சிலாக்யமானது. கைத்தொழிலுக்கும் வியாதிக்கும் விசேஷ சம்பந்தமுண்டு. ஆகையால், தேக திடத்திற்கும், மனோசக்திக்கும் ஏற்ற தொழிலில் அமர்ந்துகொள்வது நலம். நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம். தொழிலாளர் எவ்வளவுக்கு சுகாதாரத்தைக் கவனிக்கிறார்களோ அவ்வளவுக்கு இல்லற வாழ்க்கை சிறப்புற்றோங்கும்.

எல். எல். டி. பட்டம்.—கல்கத்தா யூனிவர்சிட்டியென்னும் சர்வ கலாசாலை சங்கத்தார் மிஸஸ் சரோஜினி நாயுடுக்கு, இலக்கிய பண்டிதர் பட்டமாகிய எல். எல். டி. என்னும் பட்டத்தை இனாமாக அளிக்கப்போவதாக உத்தேசித்திருந்ததாகவும், அவ்வுத்தேசத்தையறிந்த "வங்காளி" பத்திரிகை அதைப்பற்றி அதிருப்தியாக எழுதியிருந்ததை வாசித்த ஷை சரோஜினியம்மாள் அவ்வுத்தேசம் உண்மையோ அல்லவோவென்று தமக்குத் தெரியாதென்றும், அப்படி உண்மையாயிருந்தபோதிலும் அதைப் பெற்றுக்கொள்ள தமக்கு விருப்பமில்லையென்றும் தெரிவித்ததாகவும் "சர்வன்ட்" பத்திரிகை கூறுகிறது. அவ் வம்மையார் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டவராதலின் இத்தகைய முடிவுக்கு வந்தனர் போலும்.

வேல்ஸ் இளவரசரின் பிரயாணம்.—நெடும் பிரயாணத்திற்கு ரினௌன் கப்பல் தயாராய்க் கொண்டிருக்கின்றது. அதன் 65 உத்தியோகஸ்தரில் பெல்ஜியம் அரசனின் இரண்டாவது குமாரர் சார்லஸ் கோமான் ஒருவராம். பத்திரிகைப் பிரதிநிதிகள் மூவர் இளவரசரோடு பிரயாணம் செய்கின்றார்கள். கப்பல் வேலையாட்கள் 1,250 பேரில் 16 மேளம் பாண்டு வாசிப்பவர்கள். விருந்துகளுக்காக கப்பலில் அநேக ஆயிரம் கோப்பைகளும், தட்டுகளும், உண் கலங்களும், கத்திகளும், முள்ளுகளும், கரண்டிகளும் கொண்டு வரப்படுகின்றன. சாப்பாட்டு வகையறா பண்டங்கள்: 142,000 ராத்தல் மாவு. 15,600 ராத்தல் மாட்டிறைச்சி, 6,000 ராத்தல் மீன், 2,000 ராத்தல் பிஸ்கோத்துக்கள், மற்றும் 19,500நி சிகரெட்களும், 2,000 டஜன் ஒயின் புட்டிகளும், 900 சுருட்டுகளும், அவை தவிர இளவரசரால் தன் சொந்த உபயோகத்திற்காகத் தானே எடுத்துச் செல்லும் 5,000 சுருட்டுகளும் ஆட்களுக்காக 5,860 காலன் ரம் சாராயமும், 4,000 காலன் எலுமிச்சை ரசமும் லைம்ஜூஸ் ஏற்றப்படுகின்றனவாம்.

சர் சங்கரன் நாயர்.—இண்டோர் சமஸ்தானத்தின் மந்திரியாக ஸர் சங்கரன் நாயர் இந்தியாவுக்கு திரும்பிவந்து, மாதம் 10,000 ரூ சம்பளம் பெறுவார். ஆனால் ஒரு வருஷத்துக்குள் ஷை பதவியை காலிசெய்வதாகயிருந்தால் லட்சம் ரூ நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதென வதந்தி உலாவுகின்றது.

நன்மரண அறிக்கை.

ஸ்ரீமதி மரிய வியாகுலம் கோமஸ் அம்மாள் தூத்துக்குடி.

இலங்கை, பாலங்கோடா, தேயிலைத் தோட்டத்து முதலாளியும், பிரபல வர்த்தகருமாகிய ஸ்ரீமாந் எம். ஜி. கோமஸ் அவர்களின் துவிதிய புத்திரியாகிய மரிய வியாகுலம் அம்மாள், மங்களூர் அர்ச். அன்னம்மாள் மடத்தில் இன்பிளுவென்ஸா என்னும் கொடிய ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு, ஷை கன்னியர்களின் அன்பான சிகிச்சையாலும், பராமரிப்பினாலும் குணமடையாமல், திருச்சபையின் கடைசித் தேவத்திரவியாநுமானங்கள் யாவையும் குறையறப்பெற்று, 1921ஆம் செப்டெம்பர் 5-ந் தேதி, தாய் தந்தையர் சகோதரர் சகோதரிகளானோர் தூரதேசத்திலிருக்க தனிமையாய் இளம்பிராயமாகிய 21-ம் வயதில், ஷை கன்னியர்கள், ஆத்துமம் கேவுகிறபோது சொல்லப்படும் பிரார்த்தனையைச் செபித்துக் கொண்டிருக்கையில், தன்னாத்துமத்தை அம்பரன் திருக்கரங்களில் ஒப்புவித்து, சமாதானத்துடன் அமரிக்கையாய் மரித்தனள்.

இக்கன்னிகை, 1900ஆம் ஜூன்மீ 29உ தூத்துக்குடியில், பரதகுலத்தில் பக்தியுள்ள நல்ல தாய் தந்தையரிடமாகப் பிறந்து, இளமையிலேயே அன்னோரால் தெய்வபயம், வாய்மை, விமரிசை முதலிய சற்குணங்களை ஊட்டி வளர்க்கப்பெற்று, ஏழு வயதான போது தன் தமக்கையாருடன் திருவனந்தபுரம், "பரிசுத்த சம்மனசுக்கள்" மடத்துப் பாடசாலையில் படித்து, 1916ஆம் ஸ்கூல் பைனல் பரீட்சையில் தேறினாள். தான் பிறந்தது முதல் தன் இன்னுயிர்த் தோழியாயிருந்த தன் தமக்கைக்குக் கலியாணஞ்செய்த இரண்டு மாதங்களுக்குள்ளே நேர்ந்த மிக்க துக்ககரமான அகாலமரணத்தினால் இவ்வுலக வாழ்வின் அநித்தியத்தை அங்கை நெல்லிக்கனி யெனக் கண்ட மரிய வியாகுலம் அம்மாள், தனது ஆயுள் முழுமையையும் சர்வேசுரன் ஊழியத்திற் செலவழிக்கத் தீர்மானித்து, கர்மேல் கன்னியர் மடத்தில் பிரவேசித்து, கன்னியாஸ்திரியாகவும், உபாத்தியாயினியாகவும் உழைப்பதற்கு வேண்டிய பயிற்சி பெறுமாறு, மங்களூர் அர்ச். அன்னம்மாள் மடத்தைச் சேர்ந்த போதனாமுறைப் பாடசாலையிற் படித்துவந்தனள். இளமையில் இவளது வீட்டுப் பயிற்சியினுடையவும், பின் மடத்துப் பயிற்சியினுடையவும் விசேஷத்தினால் இவள் சாந்தம், பொறுமை, தானம், தயை, சுயபரித்தியாகம், சாதுரியவாக்கு, மதுர பாஷியம், இவையாவற்றுக்கும் மேலாக, தெய்வபக்தி நிறைந்த சுசீல ஒழுக்கம் முதலிய சுகுணங்கள் விளங்கப்பெற்றமையால், இவளிடத்தில் பழகினவர்களெல்லோரும் இவள்மட்டில் மாறா அன்பும், பற்றுதலும், வியப்புங் கொள்வாராயினர். இத்தகைய அரிய குணங்கள் அமையப்பெற்ற கன்னிகாரத்தினம் இக்கண்ணினீர்க் கணவாயிலிருக்கத் தகாதென்று சர்வேசுரன் அவளைத் தம்மண்டைக்கு அழைக்கச் சித்தமானார். இக்கன்னிகைமீதுள்ள அன்பிற்கும், அபிமானத்துக்கும் அறிகுறியாக அவள் மரித்த தினத்திலும், அவள் சரீரம் அடக்கம் செய்யப்பட்ட தினத்திலும் ஷை மடத்துப் பாடசாலை மூடப்பட்டதுடன், அப்பள்ளிச் சிறுமிகளெல்லோரும், ஷை கன்னிகையின் ஆத்தும இளைப்பாற்றிக்காகச் செய்யப்பட்ட திவ்ய பலி பூசையைக்கண்டு அவ்வாத்துமத்துக்கு ஒப்புக்கொடுத்தபின், அப்பிரேதத்தின் அடக்கத்துக்குக் கல்லறைமட்டும் நெடியதோர் சுற்றுப்பிரகாரமாகச் சென்று, பிரேதம் வைக்கப்பட்டிருந்த வெள்ளைப்பெட்டி கல்லறைக்குள் விடப்பட்டபோது, அவர்களெல்லோரும் ஒரே கூக்குரலிட்டுக் கதறியழுது அங்கலாய்த்தனர். இவ்வாறாக ஏழை மரிய வியாகுலம் கோமஸ் அம்மாள் தான் எதிர்பார்த்திருந்ததைவிட அதிசீக்கிரத்தில் பரமநாயகனுக்குப் பத்தினியாயினாள். உத்தமியாகிய இவள் ஆத்துமம் நித்திய இளைப்பாற்றி யடையக்கடவது! எல்லாம்வல்ல இறைவன் இவளது பெற்றோருக்கு ஆறுதலளிப்பாராக! இதனைக் கண்ணுறும் கிறீஸ்துவ சகோதரர் சகோதரிகள் ஷை கன்னிகையின் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பா., பிரி., திரி. வேண்டிக்கொள்வார்களாக!

ஓர் அநுதாபி.

பெல்காம்.

சென்னை மீர்சாபேட்டையில் வசித்துக் காலஞ்சென்ற Mr. D. M. மரியான் அவர்களின் புதல்வரும், என் அருமைச் சகோதரருமாகிய Mr. M. ஆரோக்கியசாமி கடந்த ஒரு வருஷமாக வியாதியாயிருந்து, அஃது க்ஷயரோகமாக மாறியதே, தம் தந்தையின் நாடாகிய சென்னைக்கு வந்து, எவ்வித சிகிச்சைகளாலும் நோய் குணப்படாது, தேவத்திரவிய அநுமானங்களை நல்லறிவுடன் பெற்று, நாளது வருஷம் அக்டோபர் மாதம் 7-ம் தேதியாகிய அர்ச். ஜெபமாலை மாதா திருநாளன்று, பகல் $1\frac{3}{4}$ மணியளவில், மனவல்லய ஜெபங்களை உச்சரித்தவண்ணமாய் தம் அருமைத் தாய், மனைவி, சகோதரர், சகோதரி இன்னும் உறவின்முறையார் பலரையும் இம் மாய உலகிற் பரிதபிக்கவிட்டு கர்த்தருள் நித்திரையடைந்தார். இதைக் கண்ணுறும் சகோதர சகோதரிகள் இவ்வேழை ஆத்தும நித்திய இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி வெகுவாய்க் கேட்டுகொள்கின்றேன்.

இங்ஙனம்,
சகோதரரை இழந்து பரிதபிக்கும்
M. P. AROKIASAWMY.

சென்னை.

சென்னை, எழும்பூர் பெருமாள் ரெட்டி தெரு 16-ம் நெம்பரில் வசிக்கும் லாயர் நார்ட்டன் துரை பட்ளர் P. D. துரைசாமி ஆரோக்கியதாஸ் செல்வ மனைவி, சூசைமரி அம்மாள் சிலகாலம் வியாதியாயிருந்து, இந்திய ஆங்கில வைத்திய சிகிச்சைகளாலும் சுகப்படாமல், கலியாணஞ் செய்யப்பெற்ற இரண்டு வருஷத்துக்குள் தன் ஏழைக் கணவனையும், மாமியார் முதலிய பந்துக்களையும் பரதவிக்கவிட்டு, 1921-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 14-ந் தேதி புதன் கிழமை மாலை $4\frac{1}{2}$ மணிக்கு, கடைசித் தேவத்திரவிய அநுமானங்கள் யாவையும் குறைபறப்பெற்றுக் கர்த்தரிடம் சேர்ந்தனள். இதை வாசிக்கும் சகோதரர் சகோதரிகளே! தயைகூர்ந்து இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பா., பிரி., திரி. வேண்டிக்கொள்ளக் கோரும்,

மனைவியை இழந்த
நிர்ப்பாக்கியன்
P. D. துரைசாமி ஆரோக்கியதாஸ்.

துலுக்கன்தோட்டம்.

சென்னை, துலுக்கன்தோட்டத்தில் வசிக்கும் மகா-ள-ள-ஸ்ரீ கிராமம் சி. பிரான்சீஸ் அவர்களின் பௌத்திரியும், மகா-ள-ள-ஸ்ரீ S. T. ஆரோக்யசாமி அவர்களின் குமாரத்தியும், எழும்பூரில் வசிக்கும் மகா-ள-ள-ஸ்ரீ A. V. ஜான் பிள்ளை அவர்களின் பிரிய மனைவியுமாகிய ஏசம்மாள், தனது 16-ம் வயதில், நிகழும் 1921-ம் வருஷம் அக்டோபர் மாதம் 24-ம் தேதி திங்கட்கிழமை காலையில் $9\frac{1}{2}$ மணிக்கு, குளிர்சுரத்தால் பீடிக்கப்பட்டு, எவ்வித சிகிச்சையாலும், குணப்படாமல் தானீன்ற ஒரு வருஷம் 5 மாதத்திய மகனையுந் தந்தை தாயாரையும், பந்து சுற்றத்தாரையும் பாதவிக்கவிட்டுக் கர்த்தருக்குள் நித்திரையடைந்தாள். இவளது சடலம் மறுநாள் செவ்வாய்க்கிழமை திருச்சபையின் ஆசாரத்தின்பிரகாரம் கீழ்ப்பாக்கம் செமிடேரியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதை வாசிக்கும் நண்பர்களே! இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள கேட்டுக்கொள்ளும் மேற்படியாளின் நன்மாமன்,

20—10—21. C. F. பிரகாசம் பிள்ளை.

தேம்பாவணி = = = கீர்த்தனை
2-ம் பாகம்.

இது தஞ்சை சமஸ்தானம் மகா வித்துவானும், பரசமய குஞ்சரன பஞ்சான சோடாசாவதான அருளப்ப முதலியாரவர்களால் எழுதப்பட்டது. விலை தபாற் செலவோடு ரூ. 1—6—0
காவலன் விடுதூது ... ,, 0—6—0

சைவமகத்துவ திமிரபாநு, விவிலிய விரோத திக்காரம்.

இந்நூல் வெகு சமத்காரமான தர்க்க நீதியில் பெயர்பெற்றதும், விசேஷ ஞானத்தைத் தரக்கூடியதுமான ஓர் ஜீவ பொக்கிஷமேயாகும். இதுவும் மேற்படி சோடாசாவதனியாரவர்களால் எழுதப்பட்டது. விலை வி. பி. பி. தபால் செலவுடன் ரூ. 2—4—0.

உரிமைச்செல்வத்தை இழந்த ஊதாரிப்பிள்ளை டிராமா.

நாடக நவரசங்களும் பொருந்தியது, நல்ல புத்தி போதனைகளையும், நீதி கருத்துகளையும் புகட்டக்கூடியது. சுகமான இராக தாளங்களுடன் இனிமையான செந்தமிழ் பாடல்கள் அமைத்துப் படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை வி. பி. தபால் செலவுடன் ரூ. 1.

பச்சிம காண்டம்—புராந்திம காண்டம்

சத்தியவேதப் புதைப்பொருளை எடுத்துரைக்கும் பச்சிமா காண்டம் புராந்திம காண்டம் வி. பி. தபால் செலவோடு ரூ. 2—0—0.

ஏ. எப். சைமன்,
கமிஷன் ஏஜண்ட்,
மஹா விகடதூதன் ஆபீஸ்,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.

THE RELIABLE FAMILY MEDICINES SUPPLY AGENCY

2/74, Broadway, Madras.

நம்பிக்கைக்குரிய குடும்ப ஔஷதங்கள் சப்ளை ஏஜென்ஸி

2/74, பிராட்வே, மதராஸ்.

குடும்ப உபயோகத்துக்கு உண்மையான நல்ல மருந்துகள் வேண்டுபவர்கள் கீழ்கண்ட மருந்துகளை ஒரு முறையேனும் வாங்கிப் பரீட்சித்துப்பார்ப்பார்களாக!

மருந்து	ரூ.	அ.	மருந்து	ரூ.	அ.
1. ஆஞ்ஜெல்லா கஸ்தூரி மாத்திரை. 100 கொண்ட சீசா	0	12	6. சுத்தமான அசல் நீலகிரி யூக்கலிப்டஸ் ஆயில் (முதல்தரமானது) அவுன்ஸ் சீசா	0	5
2. ஆஞ்செல்லா தீபாக்கினி மாத்திரை. 100 கொண்டது	0	8	7. ஆஞ்செல்லா சந்தனுதிச் சூரணம் உடம்பில் பூசிக்கொள்வது டப்பி	0	6
3. ஆஞ்செல்லா தாம்பூல மாத்திரை. 100 கொண்டது	0	5	8. ஆஞ்செல்லா சுகபேதி மாத்திரை (50 கொண்டது) சீசா	0	8
4. ஆஞ்செல்லா பற்பொடி, நெ. 1. (30 நாள் உபயோகத்துக்கு) டப்பி	0	4	9. ஆஞ்செல்லா பரிமளக் கூந்தல் தூபம் (நறுமணமுள்ளது) டப்பி	0	4
5. ஆஞ்செல்லா பற்பொடி, நெ. 2. (பல்வலி முதலியதுக்கு) ...	0	4			

மேற்படி மருந்துகளின் முழு விவரங்களையும் அறிய விரும்புவோர்கள் மேற்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொண்டால் முழு விவரக் கேட்லாக் ஒன்று அனுப்பப்படும்.

மேற்படி மருந்துகள் வி. பி. தபால் மூலமாகவும் அனுப்பப்படும். தபாற் செலவு பிரத்தியேகம். இரண்டு மூன்று மருந்துகளைச் சேர்த்து வாங்குபவர்களுக்கு தபாற் செலவு கூடிவரும்.

வேதச் சுரூபங்கள்.

புதிய சுரூபங்கள்! வெகு அழகானவை!!

திரு இருதயநாதர் சுரூபம், மாதாச் சுரூபம் (குழந்தையுடன்), சூசையப்பர், லூர்து மாதா, அந்தோனியார், செபஸ்தியார், ஆரோக்கியநாதர், சவேரியார், அன்னம்மாள், மிக்கேல் சம்மனசு முதலானோர் சுரூபங்கள், மிக நேர்த்தியானவைகள் அடியிற்கண்ட சுலபமான விலைக்குக் கொடுக்கப்படும்:—

8½ அங்குலமுள்ள சுரூபம் ஒன்றுக்கு ரூ. 1. 12 அங்குலமுள்ள சுரூபம் ஒன்றுக்கு ரூ. 3.

CRIB STATUES.

சுவாமி பிறந்ததைக் குறிப்பிக்கும் தேவமாதா, சூசையப்பர், திருக் குழந்தையாகிய மூவரின் சுரூபங்கள் அடங்கிய செட் ஒன்றுக்கு விலை :—

4 அங்குலமுள்ளவை ...	ரூ.	2	8	0	10 அங்குலமுள்ளவை ...	ரூ.	7	8	0
6 அங்குலமுள்ளவை ...	ரூ.	5	8	0	12 அங்குலமுள்ளவை ...	ரூ.	11	8	0

வணங்கும் சம்மனசு சுரூபங்கள்.

6 அங்குலம் ஜதை 1-க்கு ... ரூ. 2 8 0 8 அங்குலம் ஜதை 1-க்கு ... ரூ. 3 0 0

ரெயில் சார்ஜ், அல்லது தபால் சார்ஜ், பாக்கிங் சார்ஜ் பிரத்தியேகம். டி சுரூபங்கள் வேண்டியவர்கள், கிரயத்தில் பாதிப் பணமாவது அனுப்பித்தான் ஆர்டர் கொடுக்கவேண்டும். நம்பிக்கையுடன் பணம் அனுப்பலாம். சுரூபங்கள் வெகு ஜாக்கிரதையுடன் பந்தோபஸ்தாய் பார்சல்செய்து அனுப்பப்படும்.

PROPRIETOR,
2/74, Broadway,
Madras.

புரோப்ரைட்டர்,
நெ. 2/74, பிராட்வே,
மதராஸ்.

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சோராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 19. டிசம்பர் 1921. இலக்கம் 12.

THE FEAST OF THE LOWLY.
ஏழை எளியவர்களின் திருநாள்.

நமது கர்த்தராகிய சேசுக் கிறீஸ்துநாதர் பேரால் திருச்சபையில் கொண்டாடப்படுந் திருநாட்களில், அவர் அற்புதமாய்ப் பிறந்த திருநாளே நமக்கு மிக்க சந்தோஷத்துக்குரியதும் படிப்பினைக்குரியதுமாயிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. பரலோக பூலோகமாகிய சகலத்தையும் படைத்த சர்வஜீவ தயாபர சர்வேசுரன் மற்றக் குழந்தைகளைப்போல பலவீனராய்ப் பிறந்து, கந்தை வஸ்திரங்களால் பொதியப் பெற்று, மாட்டுத்தொழுவத்தைத் தமது மாளிகையாகவும், முன்னீட்டியைத் தமது சிம்மாசனமாகவும், ஒரு ஏழைப் பெண்பிள்ளையையும், ஒரு தச்சனையும், பேதைகளான சில இடையரையும் தமது தோழர்களாகவுந் தெரிந்துகொண்டிருப்பதை நாம் கவனிக்கும்போது அதிசய ஆச்சரியத்தால் பிரமிக்க இடமுண்டாகிறது. மேலும் உலக இரட்சகர் பிறந்தபோது காணப்பட்ட விஷயாவிஷயங்களையும், அவரிவ்வாறு பிறப்பதற்கான காரணங்களையும்பற்றி யோசிக்கையில் உலோக சிந்தனையாலும் ஆசாபாசத்தாலும் நிறைந்த நமது இருதயத்தை அடக்கி நடத்த அனேக ஞானப் படிப்பினைகளைக் கண்டுகொள்வோமென்றுரைக்கத் தேவையில்லை.

நாம் அனேக முறை கேட்டிருப்பதுபோலவும் வாசித்திருப்பதுபோலவும் அர்ச். கன்னிமரியாயும் சூசையப்பரும் பெத்லேம் ஊருக்குச் சென்றபோது, அவ்விடத்தில் தங்க இடமில்லாமையால், ஆடு மாடுகள் ஒதுங்கும் ஒரு மலைக்கெபிக்குச் சென்றார்கள். அவ்விடத்தில்தான் இசாயல் குமாரத்திகளுக்குள் தெரிந்துகொள்ளப்பட்ட கன்னித்தாயார் வெகுகாலம் எல்லோரும் எதிர்பார்த்திருந்த யூதருடைய இராசாவும், மனுக்குலத்தின் இரட்சகருமான மெசையாஸ் என்னும் உலக இரட்சகரை அற்புதமாய்ப் பெற்றெடுத்தாள்.

இராஜாதி இராஜனும் சர்வ வல்லப மகிமைப்பிரதாபத்துக் குரியவருமானவர் மிருகங்கள் வசிக்குமிடத்தில் பிறப்பதற்குக் காரணம் ஏது? அவர் மனிதர்மட்டில் வைத்த சிநேகத்தைப்பற்றியே இவ்வளவு நிர்ப்பாக்கிய ஸ்திதியில் பிறக்கச் சித்தமானார். அவர் திக்கற்றவரும் சக்தியற்றவருமான ஒரு பலவீனமுள்ள பாலனைக் கண்ணுக்குக் காணப்பட்டபோதிலும், உலக வல்லமைக்குக் கீழ்ப்பட்டவராகத் தோன்றினபோதிலும், காலவித்தியாசத்தால் சங்கடப்பட்டு வருந்தியபோதிலும், அவரே—அப்பாலனே, திரித்

துவத்தின் இரண்டாமாளாகிற சுதனாகிய சர்வேசுரன்; அவரே மூவுலகிலுஞ் செங்கோல் செலுத்தும் சர்வ வல்லபமுள்ள கடவுள்.

திவ்ய பாலகன் தமது கன்னித்தாயின் அன்புக்குரிய அரவணைப்புக்குள்ளானதும், மோட்சப் பிரகாசத்தால் ஜொலித்துத் துலங்கும் தேவ தூதனொருவர், பெத்லகேமின் காட்டில் தங்கள் ஆட்டு மந்தையைக் காவல் செய்துகொண்டிருந்த இடையருக்குத் தோன்றினார். இவ்வற்புத காட்சியைக்கண்ட இடையர் பயந்து அஞ்சவே, தேவதூதன் அவர்களை நோக்கி "பயப்படாதேயுங்கள்; நான் உங்களுக்கோர் சுபசெய்தி அறிவிக்க வந்திருக்கிறேன். இந்தச் செய்தி உங்களுக்கும் சகல மனிதருக்கும் சந்தோஷக் களிப்பையுண்டாக்கும். ஏனெனில் இன்றுதினம் தாவீதின் நகரில் உலக இரட்சகர் பிறந்திருக்கிறார். அந்தக் குழந்தை கந்தை வஸ்திரங்களால் பொதியப்பட்டு, ஒரு மாட்டுக்கொட்டிலில் கிடத்தப்பட்டிருப்பதைக் காண்பீர்க" ளென்றார். மோட்சத்திலிருந்து சம்மனசுக்களின் கூட்டமொன்று சடுதியில் காணப்பட்டு "உந்நதத்தில் சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரமும், பூமியில் நல்ல மனதுள்ளோருக்குச் சமாதானமுமுண்டாக" என்று துத்தியம்பாடி சர்வேசுரனை ஸ்துதித்தார்கள். மிகவும் இழிவும் ஈனமுமான ஸ்திதிக்குள்ளான இரட்சகரை சர்வேசுரனிவ்வாறு மகிமைப்படுத்தச் சித்தமானார். மரியாயின் குமாரன் ஒரு சாதாரணமான குழந்தையாகக் காணப்பட்டபோதிலும், இவரே—பலவீனராகக் காணப்படும் இக்குழந்தையே—மனுக்குலத்துக்கு வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட இரட்சகரென்றும், பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் மத்தியஸ்தரென்றும், மனிதர் போக்கடித்த சமாதானத்தை மறுபடி கொடுக்கும்படி விஜயஞ்செய்த சமாதான தேவனென்றும் தேவதூதர் உலகத்துக்குப் பிரசித்தப்படுத்துகின்றார்கள்.

வானுலக சேனையின் படையானது சர்வேசுரனை வாழ்த்தி ஸ்துதித்து சங்கீதங்களைப்பாடியபின் அதரிசனமாகவே, இடையர்கள் தங்களுக்கு அறிவிக்கப்பட்டவைகளை சந்தேகியாமல், உடனே எழுந்துபோய் மலையடிவாரத்துக்குச்சென்று மாட்டுத்தொழுவத்தில் திருக்குழந்தையையும், கன்னிமரியாயையுஞ் சூசையப்பரையுங்கண்டு அதிசயசந்தோஷ பரவசங்கொண்டார்கள்.

கர்த்தருடைய பிறப்பின் சரித்திரத்தை நாம் கேட்கும்போது, அதிசயப்படஇடமுண்டாகிறது. மகிமைப்பிரதாபத்துக்குரிய கடவுள் இவ்வளவு நீசமாய்த் தம்மைத் தாழ்த்துவதற்குக் காரணம், அவர் நம்மட்டில் வைத்த நிகரற்ற நேசமேயன்றி வேறல்ல. ஆயினும், நமது இரட்சகர் இவ்வளவு ஈனமும் இழிவும் இடுக்கணும் நிறைந்தகோலமாய்ப் பிறப்பதற்கான முகாந்தரங்களைப்பற்றி யோசித்துப்பார்ப்போமாக.

இவர் இராஜாதி இராஜனானபடியால், இவர் உலகிலுள்ள மற்ற மன்னர்களிலும் அதிகமகிமைப்பிரதாபத்தோடும்வல்லப மகிமையோடும், சிறப்பு வைபவத்தோடும் இவ்வுலகில் விஜயஞ் செய்யாமல் அடிமைபோல பிறப்பதற்குக்காரணம், மனிதருடைய பாவாக்கிரமங்களை பரிகரிப்பதற்கே என்று அறியக்கடவோம். மனிதர்மட்டில் சர்வேசுரனுக்குள்ள கோபத்தைத் தணிக்கும்படி இவர் மனித சுபாபத்தைக்கொள்ளச் சித்தங்கொண்டார். "இதைப்பற்றியே சேசுநாதர் இவ்வுலகில் பிரவேசித்தபோது தமது நித்திய பிதாவை நோக்கி, "பிதாவே! உமது மகிமைப்பிரதாபத்துக்கு யோக்கியமான பரிகாரத்தை யுமக்குச் செலுத்துகிறேன். உமக்கு நேர்ந்த கோபத்தைத் தணிக்க மனிதரால் கூடாமற்போய்விட்டது. நான் எடுத்திருக்குமிந்த சரீரத்தை தேவரீரே அமைத்தீர்; ஆகையால் இதை தேவரீருக்கு சமர்ப்பிக்கிறேன்" என்று கர்த்தர் வசனித்ததாக அர்ச். சின்னப்பர் எழுதியிருக்கிறார்.

கிறீஸ்துநாதர் பிறந்த இன்றையத்தினமே அவர் தமது பிராயச்சித்தப் பலியைத் தம்முடைய பிதாவுக்கு ஒப்புக்கொடுக்கிறார். மேலும் அவர் மாட்டுக்கொட்டிலில் பிறந்தபடியால், நமது தாறுமாறுகளை அதியோக்கிய பரிகாரத்தால் நிவர்த்திக்கச் சித்தமானார். தற்போது கூறப்பட்ட தாறுமாறுகளின் காரணம்: சுகபோகம், ஆஸ்திபாஸ்தி, பேர்பெருமை முதலிய அழிவுக்குரிய உலக நன்மைகளின்மட்டில் நமக்குள்ள மிதமிஞ்சின பாசப்பற்றுதலே என்று உண்மையாக உரைக்கலாம். ஆகையால் உலக மகிமை பாக்கியத்தின்மட்டில் மனிதருக்குள்ள மிதமிஞ்சின பற்றுதலையே சீர்ப்படுத்தும்பொருட்டு சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையானவர் மிகவும் இழிவும் ஈனமுமான ஸ்திதியைத் தெரிந்துகொள்ளச் சித்தமானார். பணவாசையால் பைத்தியங்கொண்ட மனிதர் கட்டிக்கொண்டுவரும் பாவாக்கிரமங்களைப் பரிகரிக்கும்பொருட்டு, கர்த்தர் அஷ்டதரித்திரத்தை பிதிரார்ஜிதமாகத் தெரிந்துகொண்டார். சிற்றின்ப சுகபோகத்தால் மதிமயங்கி மனுக்குலத்தார் கட்டிக்கொள்ளும் கணக்கற்ற சண்டாள தோஷ துரோகங்களைப் பரிகரிக்கும்படி திவ்ய இரட்சகர் இவ்வுலகில் வந்தது முதற்கொண்டு குரூரமான துன்பதுரிதங்களையும் வாதனை வேதனைகளையும் அனுபவிக்க மனங்கொண்டார். இவ்விதமாக உலக இரட்சகர் தம்மைப் பாதாளம்வரைக்குந் தாழ்த்தி சொல்லிமுடியாத கஷ்ட தரித்திரங்களுக்குள்ளாகி கொடிய வேதனையை யனுபவித்தற்குக் காரணம், மனிதர் சர்வேசுரனுக்குப் புரிந்த பாதகங்களைப் பரிகரிப்பதற்கேயன்றி மற்றப்படியல்லவென்பது நிச்சயம். ஆகையால் இவர் மனிதருக்கு இதிலும் அருமையான வேறென்ன நேசத்தைக் காட்டக்கூடும்!!

தேவகுமாரன், தாம் மனிதனாகப் பிறந்தபோது, தமது உன்னத மகிமைப்பிரதாபத்தை மறைத்து பரம ஏழையாகத் தோன்றினது, நமது பாவங்களைப் போக்கி தேவ கோபத்தை அமர்த்துவதற்குமாத்திரமல்ல. ஆனால் மனிதர் அறியாமையினால் கொண்டிருந்த ஒரு பெருந் தப்பறையான எண்ணத்தை யொழிக்கவும் பிறந்தாரென்னலாம். அது எவ்வாறெனில், கர்த்தர் பிறக்குங்காலமட்டுமிருந்த சகல மனிதரும், இக்காலத்திய மனிதரில் பெரும்பாலோரும், ஆஸ்திபாஸ்தி, சுகசெல்வம், மகிமை கீர்த்தி, சுகபோக முதலிய அழிவுக்குரிய இவ்வுலக நன்மைகளை மெய்யான பாக்கியமென்று எண்ணுகிறவர்களாவர். இவ்வித தப்பறையெண்ணத்தை யொழிக்கும்படிக்கே நமது கர்த்தர் இவ்வளவு ஈனஸ்திதியில் பிறக்கச் சித்தமானார். ஆம், அழிவுக்குரிய ஆஸ்திபாஸ்தியும் மகிமை கீர்த்தியும் சுகபோகமும் மெய்யான பாக்கியமல்ல. ஆனால் மனத்தரித்திரம், தாழ்ச்சி, பரிசுத்தத்தனம் முதலியவையே அழியாத பாக்கியம், மெய்யான பொக்கிஷமென்று காட்டும்பொருட்டு, மாட்டுத்தொழுவத்தை தமக்கு அரண்மனையாகவும், முன்னீட்டியை தமக்கு சிம்மாசனமாகவும், கந்தை வஸ்திரங்களைத் தமக்குபீதாம்பரமாகவும், ஒரு கன்னிகையை தமக்கு மாதாவாகவும், ஒரு தச்சனை தம்மை வளர்க்குங் கைத்தாதையாகவும், ஏழைகளான இடையரை தமக்குத் தோழர்களாகவும் தெரிந்துகொள்ளச் சித்தமானார்.

ஆ! என்ன ஆச்சரியம், கிறீஸ்து சகோதரர்களே, மாட்டுக்கொட்டிலை யணுகி, சற்று எட்டிப்பாருங்கள். என்ன தரித்திரம்! எவ்வளவு வாதை! தேவபாலன் குளிரால் நடுங்கித் துடிக்கிறார். தேவதாயாரும் சூசையப்பரும் திருக்குழந்தையின் வாதையைக் கண்டு மனங்கலங்கித் துக்கிக்கிறார்கள். எவ்வளவு துக்கத்துக்குரியதும் பரிதாபத்துக்குரியதுமான காட்சியிது! ஆனால் சடுதியில் மாட்டுத்தொழுவம் மோட்சமாகமாறி, அற்புத பிரகாசத்தால் ஜொலித்துத் துலங்க, வானதூதர் தோன்றி தங்கள் சிருஷ்டகரைப் பணிந்து ஸ்துதித்து தேவஸ்துதிகளைப்பாடி சர்வேசுரனை வாழ்த்திப் போற்றிப் புகழுகிறார்கள். நாமும் நமக்குண்டாகும் சிறுமை வறுமை துன்பதுரிதம், வியாதி நோவு முதலியவைகளைப் பொறுமையுடன் சகித்து தேவ சித்தத்துக்கு அமைந்துபோவோமாகில், நமது இருதயத்தில் ஞான சமாதானமும் அமரிக்கையுமுண்டாகுமென்பது தப்பாது.

துன்பதுரிதத்தால் நொந்து, வறுமை சிறுமையால், வருந்தி, வியாதிநோவால் துக்கித்து குடும்பத்தொல்லையால் மனஞ்சோர்ந்து பதைக்கும் மானிடரே, இந்தப் பெருந்திருவிழா உங்களுடையதே என்னலாம். ஏனெனில், நமது தேவ உபாத்தியாயர், தமது மாதிரிகையாலும் படிப்பினையாலும் காட்டின ஸ்திதியில் நீங்களிருப்பதைப்பற்றியே இந்த நாளைப் பெரும் நாளென்னலாம்.

ஆனால் ஐசுவரியவான்கள், சாஸ்திரிகள், பாரிய உத்தியோகம் அல்லது தொழிலுடைய கனவான்களுக்கும் இந்த நாள் பெரும் நாளல்லவோ? இப்பேர்ப்பட்டவர்கள், தங்களுக்குண்டாயிருக்கும் உலக நன்மைகள் சர்வேசுரனால் அருளப்பட்டதென்று எண்ணி, அதன்மட்டில் ஒழுங்கற்ற பற்றுதல் வையாமலும் அதைத் துர்ப்பிரயோகஞ்செய்யாமலும் ஏழை எளியவர்களுக்கு தாராளமாயுதவிபுரிந்து மனத்தரித்திரமுள்ளவர்களாயிருப்பார்களேயாகில் அவர்களுக்கும் இந்த நாள் மகா நாளாகுமென்பதற்கு ஐயமில்லை.

ஆனால், பிரபஞ்ச நன்மைகளால் மகிழ்ந்து பெருமைகொள்ளும் இலௌகிக புத்தியுடைத்தானவர்களுக்கு இந்த மகாநா

ளால் அற்பப்பயனுமுண்டாகாது. அவர்கள் சலாக்கியமாயுடுத்தி, திருப்தியாய் தின்று குடித்து, ஆடிப்பாடி சந்தோஷங்கொண்டாடினபோதிலும், இந்தப் பெருந் திருநாளின் ஞானப் பலனை யடையாமல்போவதுடன் பெத்தலேமின் பாலகன் அவர்களுக்கு நீதிகர்த்தாயிருப்பாரே ஒழிய இரட்சகராய் இரார்.

ஆகையால் மாட்டுக்கொட்டிலில் சகல துன்பத்துரித்தாலும் வறுமை சிறுமையாலும் துக்கதுயரத்தாலும் நிறைந்து பிறந்திருக்குந் திருக்குழந்தையின் சுகிர்த மாதிரிகையைப் பின்பற்றி ஒழுகும் ஏழை யெளியவர்களே, மூடரென்றும் ஈனரென்றும் அறிவீனரால் இகழப்படும் மானிடரே, பசி தாகத்தால் நொந்து, நோவின் வாதையால் வருந்தும் ஆத்துமங்களே; இந்த மகாநாளில் சந்தோஷித்து மகிழுங்கள். ஏனெனில் உங்களுக்கு உண்டாயிருக்கும் இக்கட்டு இடையூறுகளைப் பொறுமையுடன் சகிக்கும்படிக்கான தைரியத்தையும் பலத்தையுங் கொடுக்கப் பிறந்திருக்கிறார் மரியாயின் குமாரனான கிறீஸ்துநாதர்.

இதுவரையில் நாம் தேவ சித்தத்துக்கு அமையாமலும் நமக்குண்டாகும் துன்பதுரிதம், வியாதிமுதலியவைகளைப் பொறுமையுடன் சகியாமலும் சிற்சிலவிசைகளில் சர்வேரன்மட்டில் முறையிட்டிருக்கலாம். ஆனால் இதுமுதல் மாட்டுக்கொட்டிலில் பிறந்த நமது திவ்ய கர்த்தரை நினைவுகூர்ந்து, அவர் அங்கு நமக்குக் கற்பிக்கும் படிப்பினையைக் கவனமாய் உன்னி யோசித்து அவருடைய திவ்ய மாதிரிகையைப் பின்செல்லக்கடவோம்.

GOD IS OMNIPRESENT.
கடவுள் சர்வ வியாபகர்.

ஓர் மனிதன் பிறர் பொருளை அபகரித்தும் கொலைவிபசாரங்கள், தாய்தந்தை, குரு நிந்தைகளைப் புரிந்தும், தனக்கு யாதோர் ஆக்கினையும் வராததைக் கண்டு, தெய்வமேயில்லையென்று நிச்சயித்துக்கொண்டு, தன் ஊரைவிட்டு தேசாந்திரியாக எதேச்சையாய் நடந்துவந்தான். அப்படியிருக்க, ஓர் நாள் ஓர் காட்டில் ஒருவன் அநேக மாடுகளை மேய்த்துக்கொண்டிருக்க, வேறொருவன் வந்து மாட்டுக்காரனைச் சாகவடித்து மாடுகளையெல்லாம் ஓட்டிக்கொண்டு போய்விட்டதை இவன் கண்டு இந்த அனியாயத்தை யாரும் கண்டுபிடித்து இவ்வக்கிரமஞ்செய்தவனை தண்டியாமல் விட்டதனால், தான் தெய்வமில்லையென்று நினைத்த நினைப்பு பின்னும் இவனுக்கு உறுதிப்பட்டது. வேறொரு நாள் சிறு பாதையில் ஒருவன் மற்றொருவனைக் கீழே தள்ளி தன் கையிலிருந்த கத்தியால் அவன் மார்பில் குத்திவிட்டு ஓடிவிட்டான். கத்தியினால் குத்தப்பட்டவன் அவஸ்தைப்படுகிறதைக் கண்ட ஓர் வழிப்போக்கன் மனமிரங்கி அந்தக் கத்தியைப் பிடுங்கவே குத்தப்பட்டவன் இறந்துபோக இதைப் பார்த்திருந்த இரண்டு சேவகர்கள் இவன்தான் அவனைக்குத்திவிட்டானென்று பிடித்து நீதியாசனத்தில் நிறுத்திச் சாக்ஷிசொல்ல, நீதி யதிபதி அவனைக் கொன்றுபோடும்படியாகச்செய்த தீர்மானமும் இவனை கடவுள் இல்லையென்னுங்கொள்கையில் உறுதிப்படுத்தினது. வேறொரு ஊரில் பத்துப்பேர் கூடி தங்கள் சத்துராதியான ஒருவன்பேரில் அபத்த சீட்டெழுதி பொய்ச்சாக்ஷிகள் ஏற்படுத்தி ஆயிரம் ரூபாய் அவன் தங்களுக்கு கொடுக்கவேண்டியதாக பிரியாதுசெய்தார்கள். மேற்சொன்ன நாஸ்திகன் இது எவ்விதம் தீர்ப்பாகுமோவென்று அறிய நீதியாசனத்திற்குப் போனான். நீதியதிபதி ஆயிரம் ரூபாயை அந்த பத்துப்பேருக்குங் கொடுக்கும்படியாகத் தீர்மானஞ் செய்தான். அனியாய தீர்ப்பு செய்ததைக் கண்ட இவனுக்கு தெய்வமே யில்லையென்ற எண்ணம் முன்னிலும் அதிகம் ஸ்திரப்பட்டது. அன்று சாயந்திரம் இவன் இளைத்துத் தவித்து நீரில்லாத ஓர் ஆற்றின் நடுவிற் சென்று, மெத்த யோசனையோடு உட்கார்ந்துகொண்டு, தன் தாகத்தைத் தணிக்க சலம் எடுக்க ஆற்றில் ஊற்று ஒன்றைத் தோண்டினான். அதில் முந்தின நாள் இராத்திரி புதைக்கப்பட்ட ஓர் மனிதனின் பிரேதம் இவன் கையில் தட்டுப்பட்டது. அந்நேரத்தில் இறந்தவனின் உறவின்முறையார் இறந்தவனைத் தேடிக்கொண்டு அந்த வழியே வரவே, சிந்தைகலங்கியிருக்கும் இவன்பேரில் சமுசயப்பட்டு இவனை நெருங்க, இவன் கை பிரேதத்தின்மேலிருக்கக்கண்டு இவனைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு பிரேதத்தைத் தோண்டி எடுத்து இவனை நீதிக்காரருக்கு ஒப்புக்கொடுத்துவிட, மரணத் தீர்ப்பிடப்பட்டான். "அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்" என்ற பழமொழியை அவன் நினைத்துக்கொண்டு தெய்வந் தனக்கு உதவியாக வரவேண்டுமென்று கூக்குரலிட்டழுதான். உடனே ஆகாசத்திலிருந்து ஓர் சத்தம் பிறந்து "ஓ! மதியில்லாதவனே! தெய்வத்தின் சர்வ வியாபகத்தை இப்போதுதான் கண்டாயோ? தன் புறத்தியான் மாடுகளை அபகரித்துக்கொண்டு அவனைக் கொலைசெய்தவனும், வழியிற் போனவனை மறித்து அவனை மார்பில் குத்தினவனும், ஆயிரம் ரூபாய்க்காக அநியாய வழக்காடி அதைப் பெற்றுக்கொண்டவர்களும் உன்னைப்போல தேவ கோபாக்கினைக் குள்ளானார்களென்று அறியாயோ? அவ்விதமே கொலை, களவு, காமாதுரம் முதலிய அக்கிரமங்களுக்குள்ளான நீயும் இப்போது ஆக்கினைப்படப்போகிறாய்" என்றது.

ஆகையால் உலகத்தில் நிகழும் சகல காரியங்களும் சர்வ வியாபகரான சர்வேசுரனுக்கு வெளிச்சமென்றும், என்றைக்கிருந்தாலுந் தின்மைசெய்கிறவர்கள் தவறாமல் தண்டனையடைவார்கள் என்றும் அறிந்து எச்சரிக்கையாக பயந்து நடந்துவருவோமாக.

சிலவேளைகளில் துன்பதுரிதங்களும் விரோதங்களும் நேரிடுகிறது நமக்கு நன்மையாகவேயிருக்கின்றது. ஏனெனில் மனிதன் தான் பிரதேச வாசதில் இருப்பதை அறிந்துகொள்ளவும், இப்பிரபஞ்ச காரியம் ஒன்றின்பேரிலுந் தன் நம்பிக்கையை வைக்காதிருக்கவும், அவன் இருதயத்தில் சுகிர்த நினைவுகளை அவைகள் அடிக்கடி வருவிக்கின்றன.

நாம் யாதொன்றை நன்றாய்ச் செய்தாலும் நல்லெண்ணங்கொண்டிருந்தாலும், சில சமயங்களில் நமக்கு விரோதங்கள் நேரிடுவதும், மற்றவர்களால் கெடுதலாயும் குறைவாயும் அவமதிக்கப்படுவதும் நமக்கு நன்மைதான்.

நாம் தாழ்ச்சியடைய அவைகள் பெரும்பாலும் உதவுகின்றன; வீண் பெருமையினின்று நம்மைக் காப்பாற்றுகின்றன.

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.)

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

12-ம் அதிகாரம்.

தேவ வெளிச்சம் இல்லாத குறையாலன்று, ஆனால் புண்ணியத்தை யநுசரிக்கவேண்டுமே யென்னும் பயத்தினால், அகுஸ்தீன் ஞானஸ்நானம் பெற தத்தளிப்பதை மோனிக்கம்மாள் கண்டு படும் கடைசி விதனம்—ஒப்பு உவமையற்ற இந்தத் தாயாரின் துயரக்கண்ணீர்கள் — கடைசியாக சந்தோஷக்கண்ணீர்களாக மாறுதல்—அகுஸ்தீன் மனந்திரும்புதல்.

(முன் தொடர்ச்சி.)

ஆதலால் அகுஸ்தீனும், சீவியத்தின் தொந்தார்த்தங்களையும் வெளிச்சத்தையுங் கண்டல்ல, ஆனால் புண்ணியத்தைக் கண்டு தன்னைப் பின்னுக் கிழுக்கும் தனது இரகசிய பலவீனத்தை அவருக்குத் தெரிவிக்கும்படிச் சென்றார்.

"நல்லோர் வரவானகைமுகங்கொண்டின்புறீஇ—யல்லோர் வரவானழுங்குவார்" என்றபடி அந்தப் பரிசுத்த விருத்தாப்பியர், மதுரம்பொருந்திய புன்னகையுடன் அவருக்கு நல்வரவு கொடுத்து அவர் ஊதாரிப் பிள்ளையைப் போல் திரிந்தலைந்ததை ஒரு ஆச்சரியமுமின்றிக் கேட்டு, அவர் நாஸ்தீகர் மற்றும் லோகாயதர்களுடைய புஸ்தகங்களை வாசிக்காமல் மனதையும் இருதயத்தையும் உயர வெழுப்பும் பிளாட்டோ, சாக்ரேடீஸ் ஆகிய இப்படிப்பட்டவர்கள் இயற்றியுள்ள கிரந்தங்களை வாசித்ததைப்பற்றி அவரை வாழ்த்தினார். சாதாரணமாய் விருத்தாப்பிய குருக்களைப்போல், சிம்பிலிஸியானும் மனிதர்களுக்கும் உலகத்திற்கும் அடுத்த காரியங்களை விஸ்தாரமாய் அநுபவத்தில் அறிந்திருந்தார். அவர், தாம் நன்னெறியில் பயிற்றி ஞானஸ்நானங் கொடுத்த அர்ச். அமிர்தநாதரைமாத்திரமன்று, அநேக தத்துவசாஸ்திரிகளையும், புலவர்களையும் உரோமை வாசாலக சாஸ்திரிகளையும்,

விசேஷமாய் அகுஸ்தீன் அக்காலத்தில் வாசித்து வந்த பிளாட்டோவின் கிரந்தங்களை மொழி பெயர்த்த விக்தோரியானுஸ் என்பவரையும் அறிந்திருந்தார். மேலும் எல்லா விருத்தாப்பியர்களைப்போல் சிம்பிலிஷியானுக்கும், தாம் தமது அநுபவத்தில் கண்ட காரியங்களை எடுத்துக் காட்ட விருப்பம். இதுவுமன்றி உலகத்தின் மனிதனைப்போல், ஒவ்வொரு காரியத்தையும் உற்றுப்பார்க்கும் குணம் அவரிடமிருந்தபடியால், தாம் போதிக்கும் போதனை ஒவ்வொன்றுக்கும் மேற்கோளாக சாமர்த்தியத்துடன் ஒரு உபகதை சொல்லுவது அவருக்கு வழக்கம்.

அகுஸ்தீன் நல்ல மனதும் பெருமித குணமுமுள்ளவர். தேவப்பிரசாதத்தினுல் அப்போதே சன்மார்க்கத்தை நாடினவர். ஆயினும் அத்தேவப் பிரசாதத்திற்குத் தன்னை முழுதும் ஒப்படைத்து அது காட்டும் வழியாய்ச் செல்லத் தாமதித்தார். அகுஸ்தீன் விக்தோரியானுஸ் என்பவரின் பெயரை அக்குருவானவருக்குச் சொல்லவே, அவர் தாம் அந்த வாக்குச்சாதுரியவானை முன் உரோமையில் அறிந்திருந்ததாக வெளிப்படுத்தி, கிறீஸ்துவ தைரியத்தையும் சன்மானத்தையும் அடையும் பாதையை அகுஸ்தீனுக்குக் காட்டும்படி அம்மகானுக்கடுத்த விஷயங்களை அடியில்வருமாறு தெரிவித்தார்.

அகுஸ்தீன் எந்தப் பயிற்சியில் தன் மனதைச் செலுத்திவந்தாரோ, அதே பயிற்சியில் விக்தோரியானுஸும் பிரபலமடைந்தவர். அவர் வாக்கலங்கார சாஸ்திரியாயிருக்கும்போது, உரோமை நகருக்குச்சேர்ந்த சகல வாலிபர்கள் மாத்திரமன்று, ஆனுல் மந்திராலோசனை சபையாரும் பெருங்கூட்டமாய் அவரது ஆசனத்தைச் சூழ்ந்துகொண்டு அவரது பிரசங்கத்தைக் கேட்டு ஆனந்தங்கொள்ளுவார்கள். அவர் பூர்வீக தத்துவசாஸ்திரத்திற் கடுத்த சிறந்த கிரந்தங்களை மொழிபெயர்த்து வியாக்கியானித்து விளக்கமான விருத்தி யுரையுடன் பிரசுரித்தார். அவரது வாக்குச்சாதுரியத்தைப்பற்றி நியாயஸ்தலத்தில் அவரது சிலையொன்று செய்து ஸ்தாபிக்கப்பட்டது அருமையிற் பெருமையே. மனிதன் தன் அறிவு சாமர்த்தியத்தினுல், இயற்றியுள்ள பல புஸ்தகங்களையும் அவர் வாசித்துத் தீர்த்தபிறகு, வேதாகமங்களைப் பரீட்சைசெய்ய வேண்டுமென்று எண்ணங்கொண்டார். அவர் கவனத்துடன் அதனை வாசித்து அந்தரங்கத்தில் சிம்பிலிஷியானை நோக்கி: "நான் கிறீஸ்துவனென்பதை அறிவீரோ?" வென்று கேட்டார். அதற்குச் சிம்பிலிஷியான் மாறுத்தாரமாக, "உம்மைக் கிறீஸ்துநாதரின் கோவிலில் யான் காணுமட்டும் நீர் சொல்லுவதை நம்பமாட்டேன்" என்று பதிலுரைத்தார். அப்போது விக்தோரியானுஸ் நகைத்து "அப்படியானுல் ஒருவனைக் கிறீஸ்துவனுகச்செய்வது கிறீஸ்துவக் கோவில் சுவர்கள்தானே?" என்று பரிகாசத்துடன் சொன்னுர். உண்மையில் அஞ்ஞானிகளான தன் சிநேகிதர்களை விட்டுப்பிரிய அவருக்குத் தைரியமிருந்ததில்லை. ஏனெனில் கடவுள் இன்னும் சங்காரஞ்செய்து நாசப்படுத்தாத அஞ்ஞான மதத்தின் லிபானுஸ் தேவதாரு விருட்சங்களுக்கொப்பாயிருந்த அச்சிநேகிதர்கள், கோபாவேசங்கொண்டு தன்மேல் விழுந்து எங்கே தன்னை நாசப்படுத்துவார்களோவென்று பயந்தார்.

இதனிடையில் அவர் மேலும் மேலும் வேதாகமங்களைப் படித்தும், கர்த்தரைப்பார்த்து மன்றுடியும்வரவே, அவரது இருதயம் கொஞ்சங்கொஞ்சமாய் தைரியமும் பலமும் வடைந்தது. கடைசியாய் ஒருநாள் வந்தது. தான் தன் சிநேகிதர்களால் பரிகாசிக்கபபட்டு இகழ்ச்சி செய்யப்படுவதைவிட, சேசுக்கிறீஸ்துநாதரால் மறுதலிக்கப்படுவது எப்படிபபட்ட பயங்கரமான காரியமென்று உணர்ந்தார். தான் எங்கே சத்தியத்தை மறுதலிக்க நேரிடுமோவென்று அச்சங்கொண்டு, சிம்பிலிஷியானிடம்போய், "வாரும் நாம் கோவிலுக்குப் போவோமாக. நான் கிறீஸ்துவனுக விரும்புகிறேன்" என்றுர். இதைக் கண்டவுடன் உரோமாபுரி முழுதுமே இதென்னவென்று வாய்மேல் கையை வைத்துக்கொண்டு ஆச்சரியங்கொண்டது. திருச்சபையோவெனில் ஆனந்த சந்தோஷத்தில் அமிழ்ந்திப்போயிற்று.

கிறீஸ்துவர்களனைவர்முன் தன் விசுவாசப் பிரமாணத்தை வெளிப்படுத்தவேண்டிய நேரம் வாய்த்தது. யார் யார் பகிரங்கமாய் ஞானஸ்நானம் பெற்று விசுவாசப் பிரமாணத்தை யுச்சரித்தால் தேசத்தில் அமளியுண்டாகுமென்று பயமிருந்ததோ, அப்படிப்பட்டவர்கள் இரகசியத்தில் அங்ஙனம் செய்வது வழக்கம். ஆதலால் விக்தோரியானுஸும் அப்படி இரகசியத்தில் விசுவாச மந்திரத்தை யுச்சரிப்பது உசிதமென்று

ஆலோசனை கொடுத்தார்கள். ஆனுல் அவரோவெனில் ஒரே பிடிவாதமாய் அவ்வாலோசனையை வெறுத்துத்தள்ளி மேடைமேலேறினுர். ஜனங்கள் மேடைமேல் அவரைக் கண்டதும் அவர் பேரை உச்சரியாதிருந்தவர்கள் யாருமில்லை. அனைவரும் முகமலர்ச்சிகொண்டு சந்தோஷத்தால் பொங்கி, தங்கள் சந்தோஷத்தை அடக்கமுடியாமல் கடைசியாய், விக்தோரியானுஸ்! விக்தோரியானுஸ்!! என்று இரைச்சலிட்டுக் கூவினுர்கள். ஆயினும் அவர் குரலைக் கேட்க ஆசைகொண்டவர்களாய் அனைவரும் நிர்சப்தமாகவே, விக்தோரியானுஸ் அதிசயத்துக்குரிய பயபக்தியுடன் விசுவாச மந்திரத்தை யுச்சரித்தார். அங்கிருந்த கிறீஸ்துவர்களனைவரும் அவரது தைரியத்தைக்கண்டு மெத்த சந்தோஷங்கொண்டு, அன்றையத்தினத்திலிருந்து அத்தியந்த நேசத்துடன் அவரை நேசிக்கத் தொடங்கினுர்கள். அவர்மட்டில் அவர்களுக்கிருந்த சந்தோஷமும், அவரை யவர்கள் நேசித்த நேசமும் இத்தன்மையானதென்று வாக்கினுல் விவரிக்கவுங்கூடுமோ?

"அப்போதிருந்து இந்தப் பிரபலம் பொருந்திய மனிதன், சேசுக்கிறீஸ்துநாதரின் பள்ளிக்கூடத்தில், அதாவது கத்தோலிக்குத் திருச்சபையில் ஒரு குழந்தையைப்போலிருப்பதிலேயே பெருமைகொண்டார். அவர் திருச்சபையின் போதகத்திற்குத் தாழ்மையுடன் கீழ்ப்படிந்து அநேக ஜெயமாலைகள் சூடிய தமது சிரசில் முண்முடிகளை யணிந்துவந்தார். அதேனெனில், மதப்பிரஷ்டனுகிய ஜூலியானென்பவன் கிறீஸ்துவர்களுக்கு வித்தியார்த்தி வேலை கொடுக்கத் தகாதென்று விலக்கஞ்செய்திருந்தபடியால், இவரும் தன் உத்தியோகத்தை யிழக்க வேண்டியிருந்தது. கடைசியாய் இவர் சுகிர்த சீவியம் சீவித்து மகா கொடூரமான வாதைகளை யநுபவித்து மோட்ச முடியை யடைந்தார்." என்று ஒவ்வொரு வார்த்தையையும் அக்குருவானவர் அசையூன்றி அகுஸ்தீனுக்கு வெளிப்படுத்திச் சரிதையை முடித்தார்.

அகுஸ்தீன் தனது தற்கால நிலைமைக்குத் தகுதியான இச்சரிதையைச் செவியுற்றவுடன் அவருக்கு உடம்பு சிலிர்த்தது. அவர் தமது பலவீனத்தையும் கோழைத்தனத்தையும் கண்டு தம்மைத்தாமே இகழ்ந்துகொண்டு, மதாபிமானத்துடன் வீட்டுக்குத் திரும்பினுர். தம் வீடு போய்ச் சேருமுன், உடனே விக்தோரியானுஸைக் கண்டுபாவித்துத் தாமும் உலகப்போராட்டத்தை முடிப்பதே தகுதியென்று முழு தீர்மானங்கொண்டு ஆனந்தபாவசத்தில் அமிழ்ந்தி சப்தத்துடன் சொன்னதாவது: "ஓ! என் கர்த்தாவே எனக்குச் சகாயமாய் வாரும். என்னுண்டவரே! என்னை யுற்சாகப்படுத்தி உமதுபக்கம் அழைத்தருளும். என் இருதயத்தில் ஞானத் தீயை மூட்டி அது சுவாலித் தெரியச்செய்யும். உமது சுகந்த வாசனையை எங்கள்மேல் ஊதி எங்களுக்கு மதுரமாயிரும். நாங்கள் உம்மை நேசித்து உமது பிறகாலேயே தொடர்ந்து ஓடிவாச்செய்தருளும்."

ஆனுல் ஐயோ! அத்தனை வருஷகாலங்களாக, அகுஸ்தீன் பூண்டிருந்த தளையானது, அவர் முதலில் நினைத்ததைவிட அதிக இறுக்கமாயிருந்தது. அத்தளைகளை முறிக்க முயன்றும் போதுமான பலம் அவருக்கிருந்ததில்லை. இல்லையென்று சொல்வதை என்னமோ விட்டுவிட்டார். ஆனுல் ஆம் என்று சொல்லவும் அவருக்குத் தைரியமிருந்ததில்லை. அவர் சொல்வது: "நான் அநுசரித்த பாவச் சீவியமும் அக்கிரமப் பழக்கங்களும் எனக்கு ஒரு தளைபோலிருந்து, என்னைக் கொடிய அடிமைத்தனத்தில் நெருக்கிப் பந்தனம் செய்துவைத்தன. உத்தம பரிசுத்தத்தனம் நிறைந்த நேசத்துடன் கடவுளுக்கு ஊழியஞ்செய்து, அவரில்மாத்திரம் என் சந்தோஷத்தைத் தேட நான் ஆசித்தது உண்மையே.

ஆனுல் நீடிய பழக்கத்தின் பலத்தினுல், என்னில் உரமடைந்திருந்த அந்தத் துர் ஆசையை இந்த நல்ல ஆசையானது ஜெயிக்க இன்னும் போதுமான பலமுள்ளதாயிருந்ததில்லை. ஆகவே, என்னில் இரண்டு ஆசைகளிருந்தன. ஒன்று பழையது, மற்றென்று புதியது. ஒன்று சரீரத்திற்கடுத்தது, மற்றென்று ஆத்துமத்திற்கடுத்தது. இவ்விரண்டும் ஒன்றோடொன்று வாதுபுரிந்து என் ஆத்துமத்தைப் பிரித்துப் போட்டன."

இதனிடையில் அவர் தன் மனச்சாட்சியைச் சாந்தப்படுத்த வருந்தி, அது இரண்டிலொன்றைத் தீர்மானிக்கவேண்டுமென்று தனக்குள் சொல்லிக்கொண்டார். ஆனுல் அரை தூக்கத்

துடன் படுத்திருக்கும் சோம்பேறியை எழுப்பினால், "இதோ ஆச்சுது, கொஞ்சம் பொறு, அப்புறம்" என்று தன் படுக்கையிலேயே புரண்டுகொண்டிருப்பதைப்போல், இவரது மனச்சாட்சியும் உடனே, "அப்புறம், கொஞ்சம் பொறு" என்று பதிலுரைத்தது. ஆனால் உடனே யென்றபடி உடனே ஆகவில்லை. கொஞ்சம் பொறுவென்றதற்கு வெகுகாலம் பொறுக்கவேண்டி வந்தது.

அகுஸ்தீன் பரிசுத்த குருவாகிய சிம்பிலிஷியானைப்போய்ச் சந்தித்தது, அர்ச். மோனிக்கம்மாள் இருதயத்தில் நம்பிக்கையை உற்பத்திசெய்திருக்குமென்று யாவரும் சீக்கிரத்தில் நினைப்பார்கள். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் அப்படிச் செய்தது முழுதும் மனந்திரும்புவதற்கு முன்னடையாளம் என்றும் தோன்றும். எப்படியாவது அகுஸ்தீன் ஞானஸ்நானம் பெறும்படி இந்தப் பரிசுத்த விருத்தாப்பிய சுவாமியார் ஏற்பாடுசெய்துவிடுவாரென்பதைக் குறித்து அவள் சந்தேகிக்கவேயில்லை. உண்மையாகவே அங்ஙனம் ஞானஸ்நானம் பெற அகுஸ்தீனும் சந்தோஷங்கொண்டிருப்பார். ஆனால் அவர் அச்சுவாமியாரைப்போய்க் கண்டபிறகும், ஒரு தீர்மானமும் திட்டமாய்ச் செய்யாதிருக்கிறதைக் கண்டபோது, அவளுக்குவிதனம் அதிகமாயிற்று. ஆயினும் அவர் இன்னும் தன் மனச்சாட்சியுடன் போராடுகிறாரென்பதையும் அவர் மனது இன்னும் அமைதியடையவில்லை யென்பதையும், தேவாராதனைகளுக்குக் கோவிலுக்குப்போவதில் முன்னையவிட அதிசாக்கிரதையாயிருக்கிறாரென்பதையும், தன் மாணாக்கர்களுக்குச் செய்யவேண்டிய உபந்நியாசங்களை முஸ்திப்புசெய்யும் நேரம்போக மற்ற நேரங்களில் அர்ச். சின்னப்பர் நிருபங்களை வாசித்துவருகிறாரென்பதையும் யோசித்தபோது, அவள் மனது ஒருவாறு ஆறுதலடைந்தது.

காரியம் இப்படியிருக்குங்காலையில், அகுஸ்தீனுடைய பூர்வசிநேகிதனாகிய பொந்திஷியானூஸென்பவன் அவரைச் சந்திக்கவந்தான். இருவரும் ஆப்பிரிக்கா கண்டத்தாராகையால், ஒருவரையொருவர் அங்கு நன்றாய் அறிந்திருந்தார்கள். அகுஸ்தீன் கடவுளை மறந்து பிரிவினை சபையிற் சேர்ந்து பாவத்தில் சீவித்துவந்தார். பொந்திஷியானூஸென்பவனோவெனில், உத்தம கிறீஸ்துவனாய் மிலான் நகரில் சக்கரவர்த்தியிடம் முதன்மையான இராணுவ உத்தியோகம் வகித்திருந்தான். அவன் இவ்வுத்தியோகம் வகித்து, இராஜமாளிகையில் வசித்துவந்தபோதிலும், எவ்வித சோதனைகளுக்கும் உட்படாமல் சத்தியமறையில் சன்மார்க்கத்தில் ஒழுகிவந்தபடியால் இப்படிப்பட்ட திடவிசுவாசியை அர்ச். மோனிக்கம்மாள் இங்கு திரும்ப கண்டு சந்தோஷித்தாள். மேலும் அகுஸ்தீன் அலிப்பியூஸ், நெப்ரிதியூஸ் ஆகிய இவர்களோடும், இன்னும் இவர்களைப்போல் தங்கள் விசுவாசத்தில் திடமில்லாத மற்ற வாலிபர்களோடும், இவரைச் சிநேகம் செய்துவைக்க விரும்பினாள்.

பொந்திஷியானூஸ் ஒரு நாள் அகுஸ்தீனோடும் அலிப்பியூஸோடும் பேசிக்கொண்டிருக்கச்சே பில்லியர்ட் என்னும் ஆட்டம் ஆடும் மேஜையின்பேரில் ஒரு புஸ்தகம் இருக்கக் கண்டான். நாம் யாதாமொரு சம்பாஷணை செய்யும்போது நமது கைகள் சும்மாயிராமல் அருகிலிருக்கும் அதையும் இதையும் நோண்டிக்கொண்டிருப்பதைப்போல், இவனும் அப்புஸ்தகத்தைத் திறந்தான். திறக்கவே, அது தான் நினைத்தபடி ஸிஸரோ அல்லது குயந்திலியான் முதலிய தத்துவசாஸ்திரிகள் எழுதிய புஸ்தகமாயிராமல் அர்ச். சின்னப்பர் எழுதிய நிருபங்களாயிருப்பதைக்கண்டு அதிசயித்து, அகுஸ்தீனை ஏறெடுத்துப்பார்த்து புன்னகைசெய்யவே, அவர் ஆம் கொஞ்சகாலமாய் நான் வேதாகமங்களை அத்தியந்த வணக்கத்தோடும் சந்தோஷத்தோடும் வாசித்துவருகிறேனென்று உரைத்தார். பிறகு கிறீஸ்து வேதசம்பந்தமாய் சம்பாஷணைசெய்து வந்தார்கள்.

(இன்னும் வரும்.)

வெளியரங்கமாய் மனிதர்கள் நம்மை நிந்திக்கும்போது அல்லது எண்ணக்குறைவாய் மதிக்கும்போது நமது மனசாட்சியை அறியும் சர்வேசுரனை நாம் அதிகமாய் தேடுகிறோம்.

ஆகையால் ஒரு மனிதன் கடவுளிடத்தில் முழுமையும் தகுந்தவிதமாய் தன்னை உறுதிப்படுத்திக்கொண்டால் மற்ற மனிதர்களிடத்திலிருந்து ஆறுதல்களை கொஞ்சமேனுந் தேடவேண்டிய அவசியமில்லை.

—(கிறீஸ்துநாதர் அநுசாரம்.)

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா

அல்லது

மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—9.

எதிர்பாராத சம்பவம்.

(முன் தொடர்ச்சி.)

ஹக்கீம் செபஸ்தியான் சொன்னவைகளைத் திரணமாய் மதித்து, ஒன்றும் பதில் சொல்லாமல் போரை நடத்தினான். ஆனால் அவன் பலமெல்லாம் நம் யௌவன வீரன்முன் பயன்படவில்லை. இரண்டொரு நிமிஷத்தில் செபஸ்தியான் வாள், ஹக்கீமுடைய தேகத்தைத் தாக்கி அவனைக் கீழே வீழ்த்தியது. துலுக்க வீரனுடைய கதி யின்னதென்றறிந்ததும், அவனுடன் வந்திருந்த மற்ற வீரர்களில் செத்தவர்கள் போக மீதியாயிருந்தவர்கள் யாவரும், தந்தலைவன் மடிந்தபின் இனிப் போரை நடத்துவது மதியீனமென, தங்கள் ஆயுதங்களைப் பூமியில் எறிந்து செபஸ்தியான் காலில் வீழ்ந்து தங்களைக் காப்பாற்றவேண்டுமென்று மன்றாடினர்.

நினையாமல் குறியால் சம்பவித்த இந்தப் பெரும் வெற்றியைக்கண்டானந்தித்தவராய், ராடிரீகஸ் பிரபு, அஞ்சாத சிங்கமாகிய தன் நண்பனைத் தழுவிக்கொண்டு, "நம்முடைய எதிரிகளின்மேலும், சிங்கத்தின்மேலும் நீ கொண்ட வெற்றியானது, உன்னுடைய வீரத்துவத்தைக் கனப்படுத்தும் ஓர் முடியாகும்! நீ எங்களைக் காப்பாற்றினாய்; இதை நான் என்று ம[illegible]ன்; இது நிச்சயம்!" என்றார்.

"நான் உம்முடைய மாதிரியைப் பின்பற்றினேனேயன்றி வேறொன்றுமில்லை! என்னைக் காப்ப[illegible]றும் எண்ணத்துடன் புறப்பட்டுவந்தவரை நானே காப்பாற்றும்படி திருவுளம்புரிந்த சர்வேசுரனுக்கு நான் மனப்பூர்வமாய் நன்றி செலுத்துகிறேன். நாங்கள் வழிதப்பி இந்த மலைப்பிரதேசத்தில் திரிந்துகொண்டிருக்கையில் அகஸ்மாத்தாய் இங்கே வர நேர்ந்தது கடவுள் சித்தமல்லாது வேறென்ன? ஆ! அந்த வண்டியிலிருக்கும் அபூர்வ பொருள் யாது?" என்று செபஸ்தியான், வண்டியின் ஜன்னலில் தொங்கவிட்டிருந்த திரைச்சீலையை விலக்கிப் பார்த்தான். ஆ! என்ன ஆச்சர்யம்! தலைமுதல் பாதம் வரையில் மூடியணிந்துள்ள இரண்டு பெண்பாலர் உட்கார்ந்திருந்தனர். அவர்களில் ஒருவள் பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்தாள். மற்றவளோ, வெளிக்குப் பயம் தோன்றாத முகத்தினளாய், மிக்க அமைதியுடனும் கௌரவத்துடனும் அமர்ந்திருந்தனள். பின்னையவள் உடனே நமது யௌவன வீரனையும் அவன் நண்பனையும் பார்த்து, "ஐயன்மீர், தங்களுடைய உதாரகுணத்தையும் கௌரவத்தையும் நம்பி, அடியேன் தங்களிடம் சரணாகதி யடைகின்றேன். என்னைக் காப்பாற்றுவது தங்கள் பாரம்!" என்று மிக்க அமைதியுடன் விமரிசையாய் மொழிந்தாள்.

"ஆ! என்ன காசில்டா இராஜகுமாரியா? ஆல்டீமன் புத்திரியா?" என்று அவனுக்குண்டான ஆச்சரியத்தை யடக்கமுடியாமற் கூவினான் செபஸ்தியான்.

"ஆம், நான்தான் ஆல்டீமனுடைய மகள், பெண்பாலரிடத்தில் கிறீஸ்துவ வீரர் காட்டுவதாகச் சொல்லும் மரியாதையுடன் என்னை நீங்கள் நடத்துவீர்கள் என்று நம்பியிருக்கிறேன். அந்த நம்பிக்கை வீண்போகாதென்று நினைக்கிறேன்."

"அம்மா, ஆல்டீமன் சிறைச்சாலையில் எங்கள் கிறீஸ்துவக் கைதிகளை மிக்க அன்பும் அநுதாபமுங்காட்டி, ஆதரித்துக் காப்பாற்றிவந்த தங்களையோ நாங்கள் அவமதித்துக் கேவலம் ஒரு கைதியைப்போல் நடத்துவோம்! விசேஷமாய் தங்கள் ஊழியனாகிய யான், தாங்கள் எனக்கும், என் நண்பனாகிய கார்சியாஸ் பிரபுவுக்கும் செய்திருக்கும் நிகரற்ற நன்றியை மறக்கவுங்கூடுமா? "நன்றி மறப்பது நன்றன்று!" இந்த மூரிய வீரர்கள் தங்களுக்குத் துணையாய் வந்தார்கள் என்று எங்களுக்குத் தெரிந்திருந்தால், தங்கள் மெய்க்காப்பாளரை இவ்வாறு நாங்கள் எதிர்ப்பதற்குப் பதிலாய், முன்வைத்த காலைப் பின்வைத்துக்கொண்டு எங்கள் வழியே போயிருப்

போம். நாங்கள் செய்த தப்பிதத்தை மன்னிக்கும்படிக் கேட்டுக்கொள்வதுடன், தங்களுக்கு டொலிடோ நகர் திரும்பிப்போக விருப்பமானால், தங்களை அங்கே கொண்டுபோய்விடத் தயாராயிருக்கிறோம்!" என்று செபஸ்தியான் பேசி நின்றான்.

"இல்லை, இல்லை, நான் இனித் திரும்பிப் போகேன்! டொலிடோ நகரை யான் பார்க்கவு மாட்டேன்!" என்று காசில்டா மிக்க விசனத்துடன் விடைபகர்ந்தாள்.

பின்னர் அவள் தான் ஞானஸ்நானம் பெறுவிட்டாலும், அந்தக்கரணத்தில் கிறீஸ்துவளென்றும், அதனால் தன் தந்தை, தம்முகத்தில் விழிக்கக்கூடாதென்று தன்னை நகரைவிட்டு அப்புறப்படுத்திவிட்டதாகவும் சொன்னாள். இந்த இராஜகுமாரி மனந்திரும்பிக் கிறீஸ்துவளாய்விட்டதாகக் கேட்டதும், செபஸ்தியானுக்கும் அவன் சிநேகிதனுக்கும் உண்டான ஆச்சரியத்துக்கும் ஆனந்தத்துக்கும் அளவேயில்லை. உடனே அவர்களிருவரும் அவ்விடத்திலேயே முழந்தாட்படியிட்டு இளவரசியின்மேல் இவ்வளவு இரக்கங்காட்டிய தேவாதி தேவனுக்கு நன்றி செலுத்தினார்கள். தன் மகளை எப்படியாவது இருக்குமிடந் தேடி யறிந்து அவளை மீட்பதற்கான முயற்சி எதுவுண்டோ, அதைச் செய்ய ஆல்டீமன் பின்வாங்கான் என்பது நிச்சயம். ஆதலால் இளவரசிபோய்த் தங்கியிருக்கத் தகுந்த வசதி யாதென அவ்விருவரும் யோசித்தனர். அம்மாதரசி ஆல்டீமன் கையிலகப்படக்கூடாத இடத்தி லிருக்கவேண்டும். அத்தகைய விடம் யாதென நினைத்துப்பார்த்தனர். கடைசியில் கார்சியாஸ் பிரபுவின் கோட்டையே அவள் தங்கியிருப்பதற்குத் தகுதியான வசதியென செபஸ்தியான் அபிப்பிராயப்பட்டான். அக்கோட்டையின் மதில்சுவர்களே காசில்டாவைக் காக்கக் கூடிய பலமுடையவை; மேலும் ராடரீகஸ் பிரபுவின் வீரரிற் சிலரை அக்கோட்டையிலிருத்தி, அதைக் காவல் காக்கும்படி ஏற்பாடு செய்வதே சரியென்று நினைத்தான். தன் கணவனுக்கு அளவற்ற நன்மைகள் புரிந்த மாதுசிரோன்மணியை, உரேக்காள் என்னுஞ் சீமாட்டி மிகவும் சந்தோஷத்துடன் வரவேற்று உபசரிப்பாள் என்று அவனுக்கு நிச்சயமாய்த்தெரியும். ஆதலால் நமதிளவல் காசில்டாவை, கார்சியாஸ் கோட்டைக்கு அழைத்துச்செல்வதாக அவளிடஞ் சொன்னான். அப்பெண்மணியும் அதற்குச் சம்மதிக்கவே, எல்லோரும் கோட்டையிருக்குந் திசையை நோக்கிப் பிரயாணப்பட்டார்கள். புறப்பட்ட மூன்றாம் நாள் வழியில் யாதொரு சங்கடமுமின்றித் தேவ கிருபையால் குறித்த விடம்வந்து சேர்ந்தார்கள்.

செபஸ்தியான் பிரபு இளவரசியைக் கோட்டைக்குள் அழைத்துப்போய், "ஆல்டீமனுடைய புத்திரியாகிய இந்தக் கன்னிகை உமது அடைக்கலத்தையும் பாதுகாவலையும் நாடிவந்திருக்கிறாள்; தன் மகம்மதிய மதத்தைப் புறக்கணித்து, மெய்யான தேவனை வணங்குகிறாள். சேசுக்கிறீஸ்துவின் நேசத்தை விரும்பி, அவளுக்குவரவிருக்கும் பிதிரார்ச்சிதமாகிய டொலிடோ நகரின் சிம்மாசனத்தைப் பரித்தியாகஞ்செய்துவிட்டாள். இந்த மாதரசி, இந்த இளங்கன்னிகை, இவ்விளவரசி, ஆல்டீமனுடைய சிறைச்சாலையிற் கிடந்தழியும் கிறீஸ்துவர்களை அடிக்கடி போய்ச் சந்தித்து, அவர்களுக்கு வேண்டியவற்றை உதவி, ஆறுதல் கொடுத்துவந்தாள். கார்சியாஸ் பிரபுவை, உம்முடைய நேசக் கணவரை அடிக்கடிப் போய்ப்பார்த்து, அவருக்கு வேண்டியவற்றைக் கொடுத்து உதவினதுமன்றி, விலைமதிக்கப்படாத தன் முத்துமாலையைத் தந்து, அதை விற்றேனும் அவரை மீட்டுக்கொள்ளும்படிப் பேருபகாரஞ்செய்த உதாரகுணசீலியும் இவளே!" என்று செபஸ்தியான் பிரபு காசில்டாவை உரேக்காள், அவள் இரு மக்கள்முன் கொண்டுபோய் விடவே, அவர்களுக்கு அச்சமயத்தில் உண்டான ஆச்சரியம் எத்தகையினதென்று இதை வாசிப்போரே தெரிந்துகொள்ளலாம்.

இதைக் கேட்டதும், உரேக்காள் கண்ணீர் விட்டழுது இளவரசியைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "சிறைச்சாலையிலிருக்கும் என் காதலனுக்குக் காவலான சம்மனசாக உன்னை நேமித்த சர்வேசுரனுக்கு என் நன்றியறிதலைக் காட்ட எனக்குப் போதிய நாவன்மையுண்டா? இந்த உன்னத உதாரகுணத்துக்கு நான் எவ்வாறு நன்றி செலுத்தக்கூடும்? இந்தக் கோட்டையும் அதிலடங்கியன அனைத்தும், ஏ! பெண்மணீ! உனக்கே சொந்தம்! என் மக்களுக்குத் தம் தந்தையின் உயிரைக் காப்பாற்றி யுதவியவ

ளுடைய விருப்பத்தை முன்னதாகச் சொல்லாமலே தெரிந்து நடப்பதே எனக்குப் பேரானந்தம்!" என்று உரத்த சத்தமாய் மொழிந்தாள்.

காசில்டா, "எனக்கு அபயந்தந்து காத்த அம்மணீ! நான் தங்களைக் கேட்டுக்கொள்ளும் இரண்டு வரங்களை எனக்குத் தந்தருளவேண்டும். நம்மை மீட்டு இரட்சித்த நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருக்கு நான் சொந்தமாகும்பொருட்டு கூடியசீக்கிரத்தில் எனக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். இரண்டாவது (இங்கே அவள் தன் சிரத்தை உயர்த்தி உரேக்காளின் முகத்தை மிக்க வசீகரத்துடன் நோக்கி) தங்கள்முன் நிற்பவள் தாயில்லா ஒரு ஏழைப்பெண், அந்தோ, அவளுக்கு இனித் தாயுமில்லை தந்தையுமில்லையென்பதைத் தாங்கள் நன்கறியவேண்டியது!" என்று தன்பேச்சை முடிக்காமுன்னரே அந்தச் சீமாட்டி அவளைக் கட்டிப் பிடித்து மார்போடணைத்துக் கொண்டாள்.

"என்னேசக் குழந்தாய்! நீ சொன்னவற்றை நான் எப்போதும் மறவேன். உன்னை என் சொந்த மகளாய்ப் பாவித்து, உன் வாயினின்றும் வரும் "அன்னை" யென்னும் ஆப்த மொழியை நான் பெறுவதே எனக்கானந்தம்; அதுவே எனக்குப் பெருமை! மேலும் கூடிய சீக்கிரத்தில் நீ ஞானதீட்சை பெறும்படியான ஏற்பாட்டைச் செய்து முடிக்கிறேன்" என்றாள் அவ்வீட்டெஜமானியாகிய உரேக்காள். அவள் புத்திரிகள் இருவரும் பின்னர் காசில்டாவை நெருங்கி, அவளைத் தம் சுவீகாரச் சகோதரியாய் அங்கீகரித்ததற் கடையாளமாய்க் கட்டியணைத்து முத்தமிட்டார்கள்.

"இச்சமயத்தில் என் காதற் கணவர்மட்டும் இங்கே இருந்தால்!" என்று உரேக்காள் பெருமூச்செறிந்தாள்.

"அவர் வெகுசீக்கிரத்தில் வந்துவிடுவார் அம்மணி. இது விஷயத்தில் கவலையாவது சந்தேகமாவது கொள்ளவே வேண்டியதில்லை. அவர் தம் மனைவிமக்களை மீண்டும் அகமகிழ்ந்தக்களிக்கும்படிச் செய்ய இனி ஒரு கணமுந் தாமதியார் என்றெனக்குத் தெரியும்" என்றான் நமது யௌவன வீரன்.

அதிகாரம்—10.

மனந்திரும்புதல்.

இராஜகுமாரி மனந்திரும்பி கிறீஸ்துவளாகும் எண்ணத்துடன் தன் நாடுநகரத்தையும், சுகபோகங்களையுந் துறந்து, கார்சியாஸ் பிரபுவின் கோட்டைக்குவந்து அடைக்கலம்புகுந்திருக்கும் சுபசெய்தியை, காஸ்டைல் அரசனுக்குத் தெரிவித்து, அவளைக் காப்பாற்றும்படிக் கேட்டுக்கொண்டார்கள். அவ்வரசனும் அப்படியே அவளைக் காப்பதாக வாக்களித்ததுடன், அவளை யுடனே தன் அரண்மனைக்குக் கூட்டிவர வேண்டுமென ஆக்யாபித்தான். ஆனால் ஞானஸ்நானம் பெறுமுன் அரசனைப்போய்ப் பார்க்க காசில்டாவுக்குப் பிரியமிருக்கவில்லை; ஆதலால் அவள் உடனே ஞானஸ்நானம் பெறுவதற்கு வேண்டிய ஆயத்தஞ்செய்ய ஆரம்பித்தாள். அந்தக் கோட்டை கோவிலின் விசாரணைக் குருவாகிய இசிடோர் சுவாமியார் அவளுக்கு மந்திரோபதேசம் சொல்லிக்கொண்டுவந்தார்.

காசில்டா இவ்வாறு அந்தக் கோட்டைக்கு வந்த சில தினங்களுக்குப்பின், ஆல்டீமன், காசில்டாவை உடனே விட்டுவிட்டால், கார்சியாஸ் பிரபுவைத் தான் கோட்டைக்குத் திரும்பி அனுப்பிவிடுவதாகவும், இந்த ஏற்பாட்டுக்கிணங்காவிட்டால் தான், எந்த விதத்திலும் பழிவாங்கிக் கிறீஸ்துவர்களையெல்லாம் நாசமாக்கி அழித்துவிடப் பின்வாங்கானென்றும் பயமுறுத்தி, ஒரு தூதன் மூலமாய், ஒரு நிருபம் விடுத்தான். அந்தக் கடிதத்தைக் கண்டதும் உரேக்காள் வெகு காம்பீரத்துடன், "அப்பா, தூதுவா" இராஜகுமாரி தன்னிச்சையாகவே என்னிடம்வந்து அடைக்கலம் புகுந்தாள். அவளைப் போகக்கூடாதென்று யாரும் பலவந்தப்படுத்தவில்லை. அவள் இதை விட்டுப்போவதும் இருப்பதும் அவள் இஷ்டம். அடைக்கலம்புகுந்த ஒரு மாதை நான் எப்படிப் போவென்று சொல்லக்கூடும்? அவளைக் காட்டிக்கொடுத்து, எதிரிகள் கையில் ஒப்படைப்பதிலும் பெரும் பாதகம் வேறுண்டா? சிறையிலிருக்கும் என்னேசக் காதலன், தேவனுடைய பாதுகாப்பிலிருக்கிறார். அவர் ஆல்டீமன் சொல்லும் ஏற்பாட்டின்படித் தன் சுயேச்சையைப் பெறுவதற்கு ஒருபோதும் சம்மதியார்! அடைக்கலம் புகுந்தவரைக் காட்டிக்கொடுத்துத் தான் சுயேச்

சையடைவதினும், உயிர்துறத்தல் மேலென நினைக்கும் கொள்கையைக்கொண்ட குணசீலர் என் கணவர்! காசில்டா தன் நகரைவிட்டு ஓடி வந்ததற்காக, ஆல்டீமன் என் காதலரைப் பழி வாங்குவானேல், கிறீஸ்துவ நாடுகளிலுள்ள வீர தீர பராக்கிரமமனைத்தும் ஒன்றுகூடி அவனை இரத்தப்பிரவாகத்தில் கொண்டுவந்து நிறுத்திக் கண்டிப்பான கணக்குக் கேட்கும் என்பது நிச்சயம்! இதைப்போய் அவனிடஞ் சொல்லு!" என்றாள்.

தூதுவன் காசில்டாவை நேரிற் பார்க்க வேண்டுமென்று விரும்ப, அப்படியே அநுமதியளிக்கப்பட்டது. அவன் தன்னாலான பிரயாசையெல்லாம் பட்டு அவளை எப்படியாவது டொலிடோ நகருக்கு வந்துவிடும்படிக் கேட்டுப் பார்த்தான்; ஒன்றும் பயன்படவில்லை. கடைசியாய் அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட பின், "நான் இவ்விஷயத்தில் மட்டும் என் தந்தை சொல்லுக்கு மீறி நடப்பதற்காக என்னை மன்னிக்கும்படி, அவர்தம் பாதங்களில் விழுந்து மன்றாடுகிறேன் என்று சொல்! ஏ! தூதா! கிறீஸ்துவின் மந்தையிற் சேர எனக்குப் பிரியம், ஆனால் என் தந்தையோ அதற்கிணங்கேன் என்கிறார். என் தேவனும் இரட்சகருமான கிறீஸ்துவை வணங்கும் சுதந்தரத்தை எனக்களிக்க என் பிதா மறுக்கிறார். பெற்றோரிடம் பிள்ளைகள் காட்டவேண்டிய கடமைகளை நான் மறந்துவிடவில்லை என்று என் பிதாவிடம் சொல்லு. என்னைப் படைத்தளிக்கும் கடவுளுக்குப்பின், என் தந்தையே என் நேசத்துக்குரியவர் என்பது நிச்சயம்! சத்தியப் பிரகாசமும், தேவ இஷ்டப் பிரசாதமும் அவருக்குக் கிடைக்கும்படி என் ஆண்டவரைத் தினமும் மன்றாடிவருவேன்!" என்று காசில்டா மிக்க அமைதியாகவும் தைரியமாகவும் பதில் கூறினாள்.

தூதன் டொலிடோ நகருக்குத் திரும்பி வந்து நடந்தவற்றை ஆல்டீமனுக்குரைத்தான். இன்னது செய்வதென்று தோன்றாமல் திகைத்தவனாய் அவ்வரசன் கொஞ்ச நாள் பொறுத்து மறுபடியும் "என் மகளை எப்படியாவது என்னிடம் திருப்பியனுப்பிவிட்டால், நான் கார்சியாஸ் பிரபுவைச் சிறையிலிருந்து விட்டுவிடுவதுடன், அவருக்காகக் கேட்டிருந்த மீட்புப்பணத்தை நானே கொடுக்கத் தயாராயிருக்கிறேன். இதற்கேனும் இணங்கி என் மகளை யனுப்பிவிடுவீர்கள் என்று நம்புகிறேன்" என்று நயமாகவே சொல்லியனுப்பினான். உரேக்காள் இதற்கும் சம்மதிக்கவில்லை. இதற்கிடையில் அல்பான்சோவென்னும் காஸ்டைல் அரசன், ஆல்டீமன் ஆதியில் சொல்லியனுப்பிய செய்தியின் விபரத்தையறிந்து, கார்சியாஸ் பிரபுவை ஏதாவது தொந்தரை செய்ததாகக் கேள்விப்பட்டால், ஆல்டீமன் மேல் உடனே யுத்தந் தொடுக்கத் தயாராயிருப்பதாகப் பயமுறுத்தி ஆல்டீமனுக்கு நிருபம் விடுத்தான். உரேக்காள் தன் கணவன் துலுக்கர்கையில் சிக்கியபின் நடந்த சம்பவங்களனைத்தையும் ஒவ்வொன்றாய் நினைத்துப் பார்க்கும்போது அவற்றை இவ்வாறு நடத்திக்கொண்டுவருப்வர் கடவுளே என்று நம்பி அளவில்லா ஆச்சர்யமும் அகமகிழ்ச்சியுங்கொண்டாள். அவள் மனதில் தைரியம் ஜனித்து, கூடியசீக்கிரத்தில் தன் கணவர் கட்டாயம் மீட்படைந்து தன்னிடம் வந்துசேர்வார் என்னும் பூரண நம்பிக்கை, அவளுடைய துக்கம் நிறைந்த இருதயத்தில் குடிகொண்டது.

(இன்னும் வரும்.)

ச. செல்வன்.

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

நல்லாயன் பத்திராதிபருக்கு அனந்தானந்த வந்தனம்.

தங்களது பத்திரிகையில் விளம்பரப்படுத்தியுள்ள "கத்தோலிக்கருக்கு நல்லொழுங்குகள்" என்னும் அருமைவாய்ந்த புத்தகத்தை வாசித்துப் பார்த்ததில், கிறீஸ்துவ குடும்பங்களுக்கு அது மிகவும் பலன் தரத்தக்கதென ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. கோவிலிலோ, குடும்பத்திலோ, ஜன சங்கத்திலோ, உத்தியோக சாலையிலோ, தெருவிலோ, புறமதஸ்தர்கள் இடையிலோ எங்ஙனம் நடந்துகொள்ளவேண்டியதெனத் திட்டமாய்க் காட்டப்பட்டிருக்கிறது. பிரதி குடும்பத்திலும் இப்படிப்பட்ட புத்தகம் ஒன்றிருந்தால் ஒருவன் உத்தம கிறீஸ்துவனாகவும், உத்தம பிரஜையாகவும், உத்தம குடியாகவும் வாழ உதவியாயிருக்கும்.

R. P. அருள்நாதன்.

என் அன்புடைய சகோதரர்களே!

நாம் இவ்வுலகில் மானுடராய் அவதரித்தும், நமது தாய்ப்பாஷையாகிய அருமையான தமிழை அவமதித்தும், சுதந்தரம், சகோதரத்துவம், ஞான விசுவாசம், பெரியோர்களுக்குக் கீழ்ப்படிதல் முதலியவைகளில் மிகவும் ஊக்கமில்லாமலும், நாம்—பெரியவர்களும் சிறியவர்களும், ஏராளமான வரும்படி உள்ளவர்களும், சொற்ப வரும்படி உள்ளவர்களும்—நமது விலையுயர்ந்த நாட்களை வீணில் அறியாமையில் கழிக்கின்றோம் என்று சொல்லுவதில் ஆக்ஷேபமில்லை. இவ் விந்தியாதேசத்தில் கோடிக்கணக்கான இந்திய கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் இருந்தும், 100க்கு 5 பேருக்கே கல்வியின் அருமை தெரிந்திருப்பதைப் பார்த்தால், நாம் இன்னும் ஓயாமல் தூங்கிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லுவதற்கு ஆக்ஷேபமில்லை.

நமது ஜென்ம சத்துருவாகிய பசாசு ஆத்துமங்களை வஞ்சித்து மோசஞ்செய்ய இக்காலத்தில் பிரதானமாய் உபயோகித்துவரும் சாதனங்களில் ஒன்று கெட்ட புத்தகங்களாம். கெட்ட புத்தகங்களைக்கொண்டு பசாசு அநந்தம்பேர்களுடைய புத்தியை மயக்கி, விசுவாசத்தைப் பறித்து, இருதயத்தைப் பாழாக்கி, அவர்களை நித்திய தீக்குழிக்கிரையாக்குகிறது. இக்காலத்தில் பிரசுரமாகும் பலவகைப்பட்ட புத்தகங்கள், மாதாந்தர பத்திரிகைகள், துண்டுப் பத்திரிகைள் முதலியவைகளுக்குக் கணக்குண்டா? அவைகள் நம் கண்ணுக்கு வெகு அழகாயும், பகட்டாயுமிருக்கின்றன. ஆனால் அவைகள் பெரும்பாலும் நமது ஞான உயிரைக் கொல்லும் படுவிஷம் நிறைந்தவை. இதை உத்தேசித்துத்தான் நமது மிக. சங். மொன்சிஞ்ஞோர் A. R. ஜான் சுவாமிகள் அச்சியந்திரசாலைக்கு வேண்டுவனவாகிய காகிதம், மை, அச்செழுத்துக்கள் முதலியவற்றின் விலைகள் அபாரமாய் ஏறியிருந்தும் "நல்ல ஆய"னுடைய மந்தையிலிருப்பவர்கள் ஆத்தும லாபத்தை இழந்துவிடுவார்களே என்ற எண்ணத்தை மேற்கொண்டவராய், அதன் சந்தாவை உயர்த்தாமல், இத்தனை வருடங்களாக தளராத வீரத்துடன் பத்திரிகையை அச்சிட்டு வழங்கி "நல்ல ஆயன்" பிரதி மாதம் முதல் தேதியன்று நம் வீட்டிற்கு வந்து நம்மைச் சந்தித்து நமக்கு ஞானத்தை யூட்டும்படிச் செய்கிறார்கள். நாளுக்கு நாள் அச்சியந்திரசாலைக்கு வேண்டுவனவாகிய பொருட்களின் விலை அபாரமாய் ஏறி, நஷ்டத்தை வருவிக்கும் நிலைமைக்குவந்ததின் நிமித்தம், வருகிற 1922-ம் ௵ ஜனவரி மாதம் முதற்கொண்டு ரூபா 1—8 யாக உயர்த்தப்பட்டிருக்கிற "நல்ல ஆயன்" சந்தாவைத் தவறாமல் செலுத்தி, நாம் இதுவரையில் ஆதரித்துவந்ததுபோல் இனிமேலும் அதை ஆதரித்துவருவோமாக.

சகோதரர்களே! நாம் மேற்படி பத்திரிகையை ஆதரிப்பதோடுகூட "நல்ல ஆயன்" மந்தையில் சேராத மற்ற சகோதரர்களையுஞ் சேர்க்கப் பிரயாசைப்படுவோமாக.

சகோதரர்களே! தற்காலத்தில் கிறீஸ்து வேதம் பரம்புதல், கிறீஸ்துவர்களுக்குள் ஒற்றுமை, ஞான அறிவு, நல்லொழுக்கம் முதலியவைகளுக்காக இந்தத் தென்னிந்தியாவில் உலவிவரும் தமிழ் பத்திரிகைகள் வெகு சிலவே. அவற்றில் இந்த "நல்ல ஆய"னும் ஒன்று. இப்படிப்பட்ட கத்தோலிக்குப் பத்திரிகைகளை ஆதரிப்பது கத்தோலிக்கரின் கடமையாகும். ஆதலால், சந்தா சற்று உயர்த்தப்பட்டதையிட்டு, இதைக் கைநெகிழவிடாமல் ஆதரிக்கவேண்டுமென்றும், இன்னும் நமது சிநேகிதர்களையும் இதை வாங்கும்படித் தூண்டவேண்டுமென்றும், "நல்ல ஆயன்" சந்தா நேயர்கள் ஒவ்வொருவரையுங் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

M. ANTONY DASAN.

ஷாஸ்ய போக்கு.

கேப்பையில் தேன்வடிகிறதென்றால் கேட்பாருக்கு மதிவேண்டும். கடவுள் உண்டெனில் என்முன் காட்டு என்பது நாஸ்தீகக் கொள்கை. இதற்கு எத்தனை நியாயங்களை எடுத்துக் கூறினும் பழைய கறுப்பனே கறுப்பன் என்கிற கதைக்கும், விழலுக்கிறைத்த நீருக்கும் ஒக்கும். இஃது மாயை. இந்த மாயையின் கயிற்றில் சிக்குண்ட ஆனந்தன் : "என் பெயர் நல்ல பாம்பு:

எவருக்கும் இது தீங்கு செய்யாது ; ஏனெனில், பெயருக்கேற்ற நாமமாகிய நல்ல என்பதை வாயில் உச்சரித்தாலும், அதன் குணங்கள் செவ்வெனப் புலப்படும். ஆகவே, பயமின்றி அனைவரும் வாருங்கள், அருகிலிருந்து அழகான சம்பாஷணை புரியலாம்'' என்கிறான். அப்பா, மகனே, அகத்தினழகு முகத்தில் தெரியும். பெயரென்றால் பெரும் பெயர்தான். அருகில் போகாதே. அண்டையில் நிற்காதே. ஆயிரம் கொடுத்தாலும் அடி எடுத்து வைக்கவோ பேசவோ, பழகவோ, எண்ணம் வைக்காதே. ஏனெனில், நல்ல பாம்பின்வாயில் நச்சுப் பற்களிருக்கின்றன. என்றைக்கானாலும் ஒரு நாள் அதன் தொழிலைக் காட்டிவிடும்; அப்போது பரிதபிப்பாய், அங்கலாய்ப்பாய், கதறுவாய், பதறுவாய். வெள்ளம் வருமுன் அணைகட்டுவதே சிலாக்கியமாகும். ஆகவே, அத்தகைய விஷஜந்துவோடு நீ சிநேகம்பண்ணாதே, என்று தகப்பனுக்குரிய ஹோதாவில் நின்று ஓர் கத்தோலிக்க ஆசிரியர் தம் பிரஜைகளுக்குத் தெரிவிக்கிறார். இது முக்கிய கடமை.

நான் பிடித்த முயலுக்கு மூன்றே காலென ஆனந்தன் அதட்டுகிறார். பிதற்றுகிறார். அதோடு நிற்காமல் அடுத்தடுத்து அடுக்கிப் பதங்களைப் பிரயோகித்து, கிறீஸ்து மததூஷணை தமது பத்திரிகையில் எந்த ஆண்டு திகதியுடைய பக்கத்தில் உள்ளதெனக் குறிப்பிட வினவுகிறார்.

ஆனால், அவன் கெட்டான் குடிகாரன். எனக்கு இரண்டு திராம் சாராயம் ஊற்று என்பதுபோல்: கிறீஸ்துவ நேயர்களே, என்கிறார் ஒரு சமயம். உண்மை மதத்தி லீடுபட்ட இந்து சகோதரர்களை இனியாவது அந்நிய மதபோதனைகளை (கிறீஸ்து மதபோதனைகளை) பொய்யென உதறித்தள்ளி நாம் ஈடேற வழிதேடவேண்டுமல்லவா என்று ஷாஸ்யமாய் சொல்லுகிறார் மறு சமயம். மேலே கூறிய மதங்களை சேர்ந்தவர்களாவது, சேராதவர்களாவது, பொதுவாக நடைபெறும் பத்திரிகையில் ஜாதி, மதபேதமிருக்கக் கூடாதென்று கண்டித்தால் எம்மதமும் சம்மதமென்கிறார். ஆகவே, இத்தகைய கொள்கையுடையோர் எந்த நோக்கத்தோடு பத்திரிகைகளை நடத்துகிறார்களென்பதை சற்று ஆராயவேண்டும். ஆராய்ந்தபின் உண்மை என்ற திராசில் நீதி என்ற படிக்கல்லால் நிறுத்து, பாரபட்சமின்றி உண்மையை வெளியிட்டு, தர்க்கத்திற்கு வழியில்லாமல் தீர்ப்புச் சொல்லவேண்டும்.

1-வது.—பொதுவான லட்சியங்களில் ஈடுபட்டுழைக்கும் பத்திரிகையின் லட்சணம் கல்வி, கைத்தொழில், வியாபாரம், கிருஷித்தொழில், சன்மார்க்கம், ஒற்றுமை, சுகாதார முதலியவற்றை ஆதரிப்பதாகும்.

2-வது.—தத்தம் மதவிருத்தியை அபேட்சிக்கும் பத்திரிகைகள் தம்மதத்திலிருக்கும் நற்போதனைகளை எடுத்துக்காட்டி, ஏனைய மதங்களைப்பார்க்கிலும் தம்மதம் சிலாக்கியமானதென்று எல்லோரும் அறியும்படி செய்வதோடு உண்மையான மதமென்று அனைவரும் ஒப்புக்கொள்ளும்வண்ணம் மதத்தின் கோட்பாடுகளைக் எண்பிக்கவேண்டும்.

3-வது.—எம்மதமும் சம்மதமென்கிற கொள்கையுடையதானால் நடுநிலைமை வகிக்கவேண்டும்—இது போலிக் கொள்கை—இவ்வாறின்றி நேரத்திற்கு நேரம் பச்சோந்தி நிறமாறுவதுபோல், உண்மையான உறுதியின்றி, கூழுக்கும் மாவுக்கும் ஆசைகொண்டு, எல்லா மதத்தாரையும் சரிபண்ணுவதொரு நேரமும், தூஷிப்பது மறுநேரமுமாகிய கொள்கையுடைய பத்திரிகைகள் யாதார்த்தத்தை விலைக்கு விற்று, பொய்யும் மெய்யுங்கலந்து, மௌனமும் புரட்டும் சேர்ந்து நடைபெறும் எந்த பத்திரிகையானாலுஞ் சரி, வயிற்றுப் பிழைப்புக்காக வெளிவரும் பத்திரிகையே என்று உணரவேண்டும். உணர்ந்தபின் அத்தகைய பத்திரிகைகளை சீனி சுற்றும் பொட்டலத்திற்கு உபயோகிக்கவேண்டுமேயல்லாது, அதனை எவரும் வாங்கி வாசிக்கக்கூடாது. ஏனெனில், ஒரு மதத்தை விருத்திசெய்யவந்த பத்திரிகை அதன் போதனையை போதிக்காமல் இதர மதத்தைத் தூஷிக்கிறது. ஏன் தூஷிக்கிறீர் என்றால் எம்மதமும் சம்மதமென்று பேச்சளவில் சொல்லி கிரியாம்சையில் மறந்துவிடுகிறது. ஆகவே, இதைக் கிறீஸ்துவர்கள் முன்னணியில் நின்று பஹிஷ்கரித்துவிடவேண்டும். அப்படிச் செய்வோமானால் பத்திரிகையை செவ்வனே நடத்த நாம் முன்மாதிரி காட்டியவர்களாவோம்.

நிற்க, இரண்டொரு மாதத்திற்கு முன் ஆனந்தன் ஆசிரியருக்கும் நல்லாயன் ஆசிரியரவர்களுக்கும் நடந்தேறிய தர்க்கத்தில் இந்துக்களும் கிறீஸ்துவர்களும் அறியவேண்டிய விஷயங்களில் பலவற்றுள் ஒன்றை பிரஸ்தாபிப்போம். அதாவது ஆனந்தன் ஆசிரியர், இந்து மதமே உண்மையானது, சிலாக்கியமானதென்று கூறவில்லை. இதனால் தம் மதத்திலேயே திடமான நம்பிக்கையின்றி இருதலைக்கொள்ளி எறும்பு போலிருக்கிறார். எம்மதமும் சம்மதமென்கிற கொள்கையை ஆதரிக்கிறவரானால் வேறு எம்மதத்தையேனும் போற்றவோ, தூஷிக்கவோ கூடாது. ஆனால் இவரோ கிறீஸ்து மதத்தை தூஷிக்கிறார். இந்து மதத்தைப் போற்றுகிறார். இதிலும் தம் கொள்கையை விட்டுவிலகுகிறார். இவ்வாறு ஒவ்வொன்றையும் தீர்க்க ஆலோசித்தால் ஆனந்தன் பத்திராதிபர் சொல்லும் விஷயங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. கிறீஸ்து வேதமோ, கத்தோலிக்கு மதமே மெய், ஏனைய மதங்களெல்லாம் பொய் என்று பன்னிப் பன்னி உரைக்கிறது. அ[illegible] கடைப்பிடித்தொழுகும் நல்லாயன் ஆசிரியரவர்கள், உலகத்தை உலகமென்றே சாதிக்கிறார், வாதிக்கிறார். ஏனெனில், உண்மையான மதத்திற்காக உயிரையும்விட [illegible]ய வேதம் போதிக்கிறது. அதற்கு கடுகளவும் மாறாக நடிக்கவோ, போலிவேஷம் போடவோ சத்திய வேதம் சற்றும் இடங்கொடுக்காது. ஆகவே, ஆனந்த ஆசிரியர் ஒப்புக்கொள்ளுவதும் கொள்ளாததுமான எம்மதமும் சம்மதமென்கிறது கோவிலைப் பாரென்றால் குட்டிச்சுவரைப் பார்ப்பதொக்கும். மேலும் உலகத்தை மூட உலை மூடி கிடையாது. முழுபூசணிக்காயை சோற்றில் வைத்து மறைப்பது எப்படி அசாத்தியமான காரியமோ, அவ்வண்ணமே சத்திய வேதத்திற்கு முன் ஏனைய மதபோதனைகளெல்லாம் வெயில் முன் பனிபோலாகும்.

ஆகவே, இந்த உண்மையான உணர்தலை இந்தியா என்று கிடைக்கப்பெறுமோ !! அந்த நாளே சுபதின நாள். அந்த நாள் இந்தியாவிற்கு சீக்கிரம் கிடைக்கும்பொருட்டு இந்து அப்போஸ்தலரை வேண்டுவோமாக.

வைப்பார்புலி. இஞ்ஞாசி.

“ ஆனந்தபோதினியும் ” “ நல்ல ஆயன் ” உண்மையும்.

கடந்த நவம்பர்மீ வெளிவந்த “ஆனந்தபோதினி”யில் “நல்லாயனும் நம் சம்பந்தமும்” என்ற மகுடத்தின்கீழ் போதினி ஆசிரியர் ஓர் கட்டுரையை வரைந்துளார். அக்கட்டுரையில் இவ்வாசிரியர் கூறின கூற்றைப்பற்றி நாம் சிறிது ஆராய்வோம். இவ்வானந்தபோதினி யாசிரியர் கூறுவதாவது :—“ கடந்த அக்டோபர்மீ நல்ல ஆயன் ஆசிரியரவர்கள் வெளியிட்ட கட்டுரை மொத்தத்தில் சாரமற்ற பதரை யொக்குமென்றும், இதனால் ஆசிரியர் அவர்களின் தன்மையும், குருத்தன்மையும், விளங்குகின்றனவென்றும் ; இரண்டாவது, குருக்கள் யாவரும் கூலிக்காகத் தமது மதத்தை பரவச்செய்யும் தொழில்புரிவோராதலின், எவ்வளவு உண்மையைக் கூறினும், இவர்கள் மனசாட்சிக்கு அவை சம்மதப்படினும், இவர்கள் தாம் பிடித்த முயலுக்கு மூன்று காலே என்று ஒரே பிடியாயிருக்கப்பட்டவர்களென்றும், இவர்கள் “ ஞானம் ” என்பது என்னவென்றறியாமலே இருக்கிறார்களென்றும், குருடர்கள் எல்லாம் சூரியன் இருள்மயம் என்பதால் ஒரு குறையுமில்லையென்றும், நியாயத்தை யொட்டிய விஷயத்தைக் கூறுவது கஷ்டம், மனம்போனபடி முன்பின் பாராது வரைவதுமிகச்சுலப”மென்றும் வரைந்துள்ளார். இக்கட்டுரையில் நமக்கு விளங்குவதென்னை ? நமது மேன்மைதங்கிய நல்லாயன் ஆசிரியரவர்கள் அக்டோபர்மீ வெளியிட்ட உண்மையுள்ள நியாயமான கட்டுரையைப் போதினி யாசிரியர் ஒப்புக்கொள்ள இயலாமல் இடர்ப்படுவது இவர் எழுதிய கட்டுரையில் தெற்றென நமக்குப் புலப்படுகின்றது.

நமது நல்லாயன் ஆசிரியர் அவர்களின் உண்மை நிறைந்த கட்டுரையின் கருத்தை உள்ளதை யுள்ளபடி போதினி யாசிரியர் வெளியிட்டிருப்பாராயின், இதில் எவர்பால் உண்மை நியாயம் உளதென்று அறிவுடையோர்க்கு நன்கு புலனாகும். வீணான விபரீத மொழிகளைத் தமது பத்திரிகையில் வெளியிடுவதைப்பார்க்கிலும், நமது நல்லாயன் ஆசிரியரவர்களின் உண்மை நிறைந்த நியாயத்தை ஒப்புக்கொண்டிருப்பாராயின் வீண் வாதத்திற்கு இடமுண்டோ ? இதனால் எவரிடம் ஞானம், நியாயம், ஆசிரியரின் தன்மை உண்டென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது. ஞான சத்தின் சமுத்திரமாகிய நம்மை, ஞானம் இன்னதென்று அறியாதவர்களென்றுங் கூறுகிறார்.

அந்தோ! என்னே இவ்வாசிரியருக்கு ஞானம் இருந்தவாறு? நமது ஞான சமுத்திரத்தின் மேன்மையையும், வல்லமையையும், உண்மையான நியாயத்தையும் அவர் கண்டறியாது ஆத்ம இரக்ஷண்ய வேலை வகிக்கும் சங்கைக்குரிய நம் பிதாக்களை கூலிக்குத் தமது மதத்தைப் பரவச்செய்பவர்களென்றும், இன்னும் இவ்வித விபரீதமான சொற்களுடனும் எழுதத் தூண்டியது இவ்வானந்தபோதினி யாசிரியரின் அறியாமையேயன்றோ?

நமது ஞானத்தையும், உண்மையையும், சத்தியத்தையும் நம் சங்கைக்குரிய பிதாக்களின் வல்லமையையும் உலகம் "அறியுமே" அல்லாது போதினி யாசிரியர் எள்ளளவும் அறியவல்லாரல்லர். "நியாயத்தை யொட்டி விஷயத்தைக் கூறுவது கஷ்டம். மனம்போனபடி முன்பின் கருதாது வரைவது மிகச் சுலபம்" என்று கூறிய போதினி யாசிரியர் இவ்வாக்கியத்தை ஆதாரமாகக்கொண்டே, "எல்லாயனும் நம் சம்பந்தமும்" என்ற கட்டுரையை வரைந்துளார் போலும். நமது மேன்மைதங்கிய நல்ல ஆயன் ஆசிரியரவர்கள் உண்மை நிறைந்த நியாயத்தை எடுத்துக்காட்டியும் அவ்வுண்மைகளை யேற்றுக் கொள்ளாது விபரீதமான சொற்களால் ஆயாசப் படுத்தும் இவருக்கு நாம் எத்தகைய உண்மையான நியாயங்களை எடுத்துக் கூறினும், அவை யாவும் "செவிடன் காதில் சங்கூதியதாகவே" முடியும். ஆகவே அவர் கூற்றை நாம் பொருட்படுத்தாதிருப்பதே சாலச் சிறந்ததாகும். கற்றறிவாளிகளுக்கு இவ்வுண்மை புலனாகும். எம் கத்தோலிக்குக் கிறீஸ்துவச் சகோதரர்களே, "ஆனந்தபோதினியை" பகிஷ்காரம் செய்யுங்கள்! கிறீஸது மததூஷணைகள் அதில் பலவுள.

A. G. A. FERNANDO, வைகைவாசி.

["ஆனந்தபோதினி"யின் அறியாமை விஷயமாய் எழுதப்படும் கடிதங்கள் இனிப் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.]

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

அகில இந்தியா கத்தோலிக்கு மகாநாடு.—இவ்வருஷம் பம்பாயில் இநத டிசம்பர்ய்[r] 27, 28, 29-ந் தேதிகளில் நடைபெறுமென்று அறிவிக்கப்படுகிறது.

பூவலஞ் செய்தல்.—இத்தாலியிலுள்ள ஜெனிவா நகரத்திலிருந்து உலகத்தை முழுதுஞ் சுற்றிவர 1914ஹு ஜனவரிய்[r] புறப்பட்ட மூவர்களில் ஒருவராகிய, மாக்சிமிலார்ட் என்பவர் எல்லாதேசத்தையும் சுற்றிப் பார்த்துவிட்டு மற்றிருவர்களைவிட சீக்கிரம் ஜெனிவாவுக்குத் திரும்பிவந்துவிட்டார். ஆகவே, உலகத்தைச் சுற்றிவர 7 வருஷம் 9 மாதங்கள் பிடிக்கின்றதெனத் தெரிகிறது.

ஒரு புது வக்கீல்.—இவ்வருஷம் பி. எல். என்னும் நியாயவாதப் பரீட்சையில், மிஸ்டர் சூசைமாணிக்கம் என்னும் கத்தோலிக்கு இந்திய ஸ்ரீமான் ஒருவர் தேறினர். இவர் மதுரை ஜில்லா சிலுக்குவார்பட்டி வன்னிய முத்திரியர் வம்சத்தைச் சேர்ந்தவர். இந்தக் குடும்பத்தில் இவர்தான் முதல் முதல் பி. எல். பரீட்சை கொடுத்தவராவர். இவர் திண்டுகல்லில் தமது நியாயவாதத் தொழிலை நடத்தப்போவதாக அறிகிறோம். நமது கத்தோலிக்கு இந்தியர்களுக்குள், நியாயவாதிகளானோர், வெகு சிலரேயாவர். இந்தப் புது வக்கீலுக்கு நமது மனமார்ந்த ஆசி கூறுகிறோம்.

இன்னொருமுறை இங்கிலாந்து போகிறார்.—மகா-ா-ா-ஸ்ரீ திவான் பகதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள், அடுத்த ஏப்பிரல் மாதத்தில் இங்கிலாந்துக்குப் போகிறார்கள். அங்குள்ள பார்லிமெண்ட் என்னும் பாராளும் மன்றத்தில் காரியங்கள் நடத்தும் விதத்தின் விவரங்களை யறிந்துவர, கவர்ன்மெண்டாரால், கவர்ன்மெண்டு செலவில் அநுப்பப்படுகிறார்கள். பிரன்ச்சு தேசத்துத் தலை நகரமாகிய பாரிஸ் நகரத்துக்குஞ் சென்று, அங்கு சட்ட சபையில் விஷயங்கள் விவகரிக்கப்படும் விதத்தையும் தெரிந்துகொண்டுவருவார்களென அறிகிறோம். 1922ஹு ஏப்பிரல்ய்[r] முதல் ஜுலைய்[r] வரையில் அவர்கள் ஐரோப்பாவிலிருப்பார்களென்று தெரிகிறது.

தெ. இ. கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.—இச்சங்கத்தின் இருபத்துநான்காவது வருஷத்திய, அதாவது 1921ஹு ஜுன்ய்[r] 30உயோடு முடிவாகிய வருஷத்தின் வரவு செலவு கணக்குகளையும், யாதாஸ்தையும் அங்கீகரிப்பதின் பொருட்டு, அங்கத்தவர்களின் பொதுக்கூட்டம், நிகழும் 1921ஹு டிசம்பர்ய்[r] 28உபாகிற புதன்கிழமையன்று மாலை 5 மணிக்கு, சென்னை அரமனைக்காரர் தெருவிலுள்ள அர்ச். கபிரியேல் பாடசாலை மண்டபத்தில் கூட்டப்படும். அக்கூட்டம், அவசியமானால் அடுத்தநாளிலும் தொடர்ந்து நடத்தப்படுமென்றும், அக்காலை சென்னை அதிமேற்றிராணியாரும், சங்கத்து அக்கிராசனாதிபதியுமாகிய மிக. வந்திக்கத்தக்க அருளப்ப ஆலன் ஆண்டவரவர்கள் தலைமை வகிப்பார்களென்றும் அதன் கௌரவ காரியதரிசி அறிவிக்கிறார்.

ஸ்ரீமாந் எம். இரத்தினசாமி, எம். ஏ. பாரிஸ்டர்.—இவர், கனம் கவர்னர் அவர்களால், சென்னை சர்வகலாசாலை அங்கத்தினரில் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கிறாரெனக் கேள்வியுற்று சந்தோஷமானோம். இவர், எற்கெனவே, சென்னை நகரபரிபாலன சபையங்கத்தினருள் ஒருவரும், சென்னை பச்சையப்பன் கலாசாலைத் தலைவரும், தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்து கௌரவ காரியதரிசியும், கனந்தங்கிய எம். டி. தேவதாஸ் அவர்கள், ஐகோர்ட்டு நியாயாதிபதியாய் நியமனம் பெற்ற காரணமாக, சென்னை சட்ட சபையில் காலியாயுள்ள இந்திய கிறீஸ்துவ அங்கத்தினரின் ஸ்தானத்துக்கு அபேட்சகரும் என்று நமது நண்பர்களுக்குத் தெரிந்த விஷயம். சட்ட சபை ஸ்தானம் இவருக்குக் கிடைக்கும்படி கத்தோலிக்கு ஓட்டர்கள் எல்லோரும் இவருக்கு ஓட்டு கொடுப்பார்களெனக் கோருகிறோம்.

தூத்துக்குடி துறைமுகம்.—தென்னிந்தியாவில் தூத்துக்குடி பெரியதோர் துறைமுகமாகிவிடும் என்று சொல்லப்படுகிறது. வட இந்தியாவில் பம்பாய்க்குள்ள வியாபாரப் பெருக்கம், தூத்துக்குடிக்கும் அமையலாமென யூகிக்கலாம். தூத்துக்குடிக்கடுத்தபடியில் நாகப்பட்டணம், காக்கிநாடு, மங்களூர், ஆகிய இம்மூன்றும் பெரிய துறைமுகங்களாகுமென்றும் அறிவிக்கப்படுகிறது. எற்கெனவே கொச்சி ராஜ்ஜியத்தின், முக்கிய நகரமாகிய எர்ணாகுளத்தில் துறைமுக வேலை நடைபெற்றுவருகிறது. நம் நாடு இதர நாடுகளுடன் செய்யும் வர்த்தகம் பெருக்கமடைந்தால்தான் நம் நாட்டின் செல்வம் அதிகரிக்கும்.

மூச்சுத்திணறி மாண்டனர்.—மலையாளக் கலவரத்தில் கைதியாக்கப்பட்டவர்களை ரெயில் எற்றிக்கொண்டுபோனதில், அவர்கள் போதுமான வெளிச்சமில்லாத சாமான் வண்டியிலடைக்கப்பட்டிருந்தார்களாதலால், மூச்சுத்திணறி, 70 பேர் மாண்டனர். இது சம்பவித்தது போத்தனூர் ஸ்டேஷனில். இந்த அஜாக்கிரதையும், கொடூரமுமான செய்கைக்குக் காரணர் யாரென்பதை விசாரிக்க, மிஸ்டர் நாப் அவர்களைத் தலைமையாகக்கொண்ட ஒரு சபை நியமிக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கரை மரம்.—அமெரிக்காவைச் சேர்ந்த பிரிட்டிஷ் கொலம்பியா தேசத்தில் "டக்ளஸ் பர்" என்னு மரமொன்றிருக்கிறதாம். அம்மரத்தின் இலைகளில் சர்க்கரை தானாகவே உற்பத்தியாகி கால் இஞ்சுமுதல் இரண்டு இஞ்சுவரை அப்பளமாக [க்ரஸ்டு] உறைகிறதாம். அது வெண்மையாகவும் வெகு இனிப்பாகவுமிருக்கிறதாம். வாயிற்போட்ட சற்று நேரத்துக்கெல்லாம் கட்டியாகி உடனே கரைகிறதாம். இதிலிருந்து சர்க்கரை செய்யப்பட்டு எற்றுமதிக்குத் தயாராய்விடுமாகில், கரும்பின் ராஜ்ஜியமே அழிந்துவிடும்போலும். நந்தேசத்திலும் சரியான ஆராய்ச்சி செய்யப்படுமானால், சர்க்கரை தரக்கூடிய மரம், செடி, கிழங்கு, காய் முதலியன நமது விஸ்தாரமான காடுகளில் கிடைக்கலாகும. பொருள் ஆராய்ச்சிசெய்யும் ஸ்தாபனங்கள் அதிகமாய் எற்பட்டு வேலை செய்தால்தான் நம் நாடு ஈடேறும்.

இரு பக்கத்திலும் இடி.—பம்பாய் கலகத்தின்போது ஒத்துழைப்பவர், ஒத்துழையாதார் ஆகிய இரு கட்சியிலும் சேராத ஒரு பார்சி டாக்டர் பட்டபாடு கேட்கத்தகுந்தது: அவர் ஐரோப்பிய தோரணையில் உடை உடுத்திக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் செல்லுகையில், ஹிந்து முஸ்லீம்களால் தாக்கப்பட்டனர். அவரது தொப்பியைக் கலகக்காரர்கள் பிடுங்கிக்கொண்டனர். அவருக்கு அடியும் விழுந்தது. அவர் ஆஸ்பத்திரிக்குச் சென்றபின் வெள்ளைக் குல்லாய் போட்டுக்கொண்டால் அதிக ஆபத்து நேரிடாதெனவெண்ணி, வெள்ளைக் குல்லாய் ஒன்று தருவித்து அதைத் தரித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினர். வழியில் முரட்டு பார்சிகள் சிலர் கையில் அகப்பட்டார். அவர்கள் தங்கள் வகுப்பினர் என்று அறியாமலே வெள்ளைக் குல்லாயைக் கண்டவுடன் அவரை அடிக்க ஆரம்பித்துவிட்டனர். இத்தகைய சம்பவங்கள் பல நடைபெற்றன. அந்தோ

கலகத்தின்போது. இதுவன்றோ இரு பக்கத்திலும் இடி.

கத்தோலிக்குப் பட்டதாரிகள்.—இவ் வருஷம் சென்னை சர்வகலாசாலையில் பட்டப் பரீட்சைகளில் தேறின கத்தோலிக்குப் பட்டதாரிகளுக்கு, தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தார் சென்றமீ 10௳ ஒரு விருந்தளித்து வுபசரித்தார்கள். மிக. வந். சென்னை யதிமேற்றிராணியார் அவர்கள், ம-ா-ா-ஸ்ரீ, திவான்பஹதூர் சுவாமிக்கண்ணுப் பிள்ளை அவர்கள், மிஸ்டர் மரியதாஸ் இரத்தினசாமி முதலியார் மற்றும் பிரபலஸ்தர் அநேகரும் விஜயஞ்செய்திருந்தார்கள். இவ்வருஷம் தேறின பட்டதாரிகளில் 35 பேர் கத்தோலிக்காரவர். 3 எம். ஏ., 5 பி. எல்., 4 எல். டி; 4 எம். பி. பி. எஸ்., 19 பி. ஏ. இவர்களில் 1 எம். ஏ., 3 எல். டி., 7 பி. ஏ. ஆக 11 பேர் பெண்பிரலாவர். நமது ஸ்திரிகள் இவ்வளவு தூரம் முன்னுக்குவந்தது மெச்சத்தக்கதே. ஆயினும், ஷை பட்டதாரிகளில், பெரும்பாலார் மங்களூர், மலையாளக் கத்தோலிககர் என்னும் உண்மையை அழுத்தமாய்ச் சொல்லவேண்டியிருக்கிறது. தென்னிந்தியாவிலுள்ள ஏனைய கததோலிக்கர் கல்வியில் அவ்வளவு ஊக்கத்தை செலுத்தவில்லை என்பதை விசனத்துடன் குறிப்பிடுகிறோம்.

சந்திரன்மீது குண்டேறிதல்.—அமெரிக்க ஐக்கிய நாட்டு வாசியாகிய ப்ரொபஸர் ஆர். எச். காடார்டு என்பவர், சந்திரன்மீது குண்டெறிவது சாத்தியமெனச் சாதிக்கிறார். 637 சேர் கனமுள்ள ஒரு குண்டைச்செய்து அதில் அதற்குஞ் சிறியதோர் குண்டை வைத்து, அதற்குள் இன்னுஞ் சிறிய குண்டைவைத்து, இவ்விதமாக பல குண்டுகளை வைத்து இவைகளடங்கிய பெரிய குண்டை பெரியதோர் பீரங்கியில் வைத்து சந்திரனிருக்குந் திசையை நோக்கி ஆகாயத்தில் சுட, அது எவ்வளவு தூரம் செல்லக்கூடுமோ அம்மட்டுஞ்சென்று வெடிக்க, அதிலுள்ள குண்டு அதற்கப்பால் சென்று வெடிக்க இவ்வாறு கடைசி குண்டு 2 லட்சத்து 40 ஆயிரம் மைலுக்கப்பாலுள்ள சந்திரனைத் தாக்குமென்றும், தாக்கும்போது அதில் வைக்கப்பட்டுள்ள வேறொரு மருந்து குபீரென்று பற்றி யெரியுமென்றும், அத்தீயை நாம் பூமியிலிருந்தே பார்க்கலாகுமென்றும் சொல்லுகிறாராம். இது அசாத்தியமானதென்றும் பைத்தியக்காரன் பேச்சாக மதிக்கலாமென்றும் சொல்லலாமாயினும், கல்வி அறிவும் சாஸ்திர ஆராய்ச்சியும் அபார விருத்தியடைந்துவரு மிக்காலத்தில், எதையும் அசம்பாவிதமென்று சொல்வதற்கில்லை. நமது முன்னோர்கள் காலத்தில் அசாத்தியமென்று கருதப்பட்ட அநேக விஷயங்கள் இக்காலத்தில சர்வ சாத்தியமாய்விட்டன.

இராட்சஸ மீன் என்னும் ஒருவித மீன் சமுத்திரத்தில் சஞ்சரிக்கிறதாம். அதன் அகலம் 20 அடி, நீளம் 12 அடியென்றும், பாரிய தலையையும், பருதத பாம்புபோன்று நீண்ட கைகளையும், நீண்ட பற்களையும் உடையதாயும், திருக்கை மீன் போல் தட்டையாயும், வெளவால் போன்று இறக்கைகளைக்கொண்டு பறக்கக்கூடியதாயுமிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. இத்தகைய மீன்கள் தலையைமட்டும் நீட்டிக்கொண்டு, உடல் முழுவதையும் சேற்றில் புதைத்துக் கொண்டிருக்கின்றனவாம். அவை யெழுந்து ஆகாரந் தேடப் புறப்படும்போது தம் இறக்கைகளைக்கொண்டு, யானை தன் தும்பிக்கையினால் துளாவுவதுபோல ஜலத்தைத் துளாவிக்கொண்டு செல்லுமாம். அவை ஆகாரம் செய்யும் வகை விநோதமானது; அதாவது மீன் கூட்டங்கள் சற்றுத் தூரத்தில் வருவதைக்கண்டு தம் அகன்ற வாயைத் திறந்துகொண்டு யாதும் அறியாததுபோல் அசைவற்றிருக்குமாம்; ஜலத்துடன் சிறுமீன்கள் வாய் நிறையவந்தவுடனே அவை தப்பியோட வகையில்லாமல் ஒரே க்ஷணத்தில் வாயை அபக்கென்று மூடிக்கொண்டு, பற்களின் சந்து வழியாய் ஜலத்தை வெளிவிட்டு மீன்களை பட்சணம் செய்துவிடுமாம். இந்த மீன்கள், கப்பலையும் கவிழ்க்க வல்லவையென்றும், ஒரு சமயம், ஒரு கப்பலின் நங்கூரத்தைப் பற்றியிழுத்து அதைக் கவிழ்த்துவிட்டதென்றும் சொல்லப்படுகிறது. இவைபோன்ற இராட்சஸ உருவமும் தன்மையும்வாய்ந்த ஜலப் பிராணிகள், ஜலத்துக்குள் இன்னும் எத்தனையிருக்கின்றனவோ அறிவார் யார்?

பம்பாய் கலகம்.—சென்ற நவம்பர்மீ 17௳ நமது வேல்ஸ் இளவரசர் பம்பாயில் வந்து இறங்கினதினத்தில், ஊர்கோலச் சிறப்பும், ஆரவாரமும் ஒரு பக்கத்தில், இருக்க,

இன்னொரு பக்கத்தில், ஒத்துழையாமைக்காரருக்கும், ஒத்துழைக்கிறவர்களுக்கும் சிறு சண்டைகளுண்டாகி, தென்றல் முற்றி பெருங்காற்றானாற்போல, பெருஞ்சண்டைகளாகி, இரத்தஞ்சிந்தலும், உயிர்ச்சேதமும் உண்டாயின. இதற்குக் காரணம் காந்தியாகும். அரசிளங்குமாரரை பகிஷ்கரிக்கவேண்டுமென்றும், விதேசி வஸ்திரங்களைத் தீக்கிரையாக்கவேண்டுமென்றும் ஜனங்களுக்கு பலகால் வற்புறுத்திச் சொல்லிவந்ததோடு, இளவரசர் வந்த அன்றைக்கே ஒரு பெருங் கூட்டத்தைக் கூட்டி, அவருடைய பஹிஷ்கார போதனையைப் போதிக்கவே, ஏதுமறியாத பாமர ஜனங்கள் பஹிஷ்கார ஆவேசங்கொண்டு, அந்நிய நாட்டு உடை உடுத்திஇருக்கிறவர்களையும், தங்களுடன் சேர்ந்து உழைக்காதவர்களையும், பெண்களையும், குழந்தைகளையுங்கூட வலியப் பிடித்தடித்து அலங்கோலஞ்செய்தார்கள். இதைக் கண்ட பார்சிகள், கிறீஸ்துவர்கள், யூரேஷியர்கள் முதலானோர்கள் எல்லோரும் ஒருங்குசேர்ந்து ஒத்துழையாமைக்காரர்களை மொத்த ஆரம்பிக்க சண்டை பலத்துவிட்டது. போலீசாரால் சமாளிக்கமுடியவில்லை. இராணுவத்தாரை அழைக்கவேண்டியதாயிற்று. துப்பாக்கி பிரயோகமும் அவசியமாயிற்று. இதனால் இறந்துபட்டவர்கள் 36பேர். காயம் பட்டவர்கள் 150 பேர். பிந்தினவர்களில் இன்னும் சில பேர் மிக்க ஆபத்திலிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இறந்தவர்களில் இருவர் ஐரோப்பியர், மூவர் பார்சிக்காரர், 14 பேர் மகம்மதியர், 17 பேர் இந்துக்களாவர். நல்ல காலமாக, கிறீஸ்துவர்கள் யாருமில்லை. இவையனைத்துக்கும் காரணம் நானேயென்று மிஸ்டர் காந்தி ஒப்புக்கொள்ளுகிறார். இனியாகிலும் புத்திவருமோ அறிகிலோம்!

வேல்ஸ் இளவரசர் சென்ற நவம்பர் மீ 17௳ பம்பாயில் வந்திறங்கினார். அவருக்கு மிக ஆடம்பரமான நல்வரவு அளிக்கப்பட்டது. அவர் இப்போது வட இந்தியாவின் பல ஊர்களைப் பார்த்துக்கொண்டு வருகிறார்; அடுத்த ஜனவரிமீ 13௳யாகிய வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சென்னைத் துறைமுகத்தில் இறங்குவார். அப்போது அவருக்கு உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்படும். 11 மணிக்கு கவர்ன்மெண்டு மாளிகையில் ஜெமீன்தார்கள் வரவேற்று பத்திரம் வாசித்துக் கொடுக்கப்படும். அப்பொழுது நிலச்சுவான்தார்கள் சங்கத்தாரும் பத்திரம் வாசித்துக் கொடுப்பார்கள். பகல் $1\frac{1}{2}$ மணிக்கு கவர்ன்மெண்டு மாளிகையில் விருந்து கச்சேரி. மாலை 5 மணிக்கு கெண்டியில் போலோ விளையாட்டும் தோட்டக் கச்சேரியும். இரவு $9\frac{1}{2}$ மணிக்கு கவர்ன்மெண்டு மாளிகையில் உபசரிப்பு.

14௳ சனிக்கிழமை காலை 11 மணிக்கு கவர்ன்மெண்டு மாளிகையில் சுதேச மன்னர்களுக்குப் பேட்டிகொடுத்துப் பேசுதல். 12 மணிக்கு சட்ட சபைக் கூட்டத்திற்கு விஜயஞ்செய்வது. $12\frac{1}{2}$ மணிக்கு செனேட் சபை மண்டபத்தில் மாணவர்களது வரவேற்பு. பிற்பகல் $1\frac{1}{2}$ மணிக்கு விருந்துக்கச்சேரியானபின் கண்டிக்கு குதிரை பந்தயத்தைப் பார்வையிடச் செல்லுதல். மாலை $6\frac{3}{4}$ மணிக்கு காஸ்மபாலிட்டன் கிளப்பிற்குச் செல்லுதல். இரவு $8\frac{1}{2}$ மணிக்கு விருந்துக் கச்சேரி.

15௳ ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கோவிலுக்குச் செல்லுதல். பிற்பகல் $1\frac{1}{2}$ மணிக்கு சிற்றுண்டி அருந்துதல். இரவு $8\frac{1}{2}$ மணிக்கு அட்மிரலோடு விருந்துண்ணுதல்.

16௳ திங்கட்கிழமை காலை 8 மணிக்குப் பள்ளிக்கூட மாணவர்களையும் வாலிபச் சாரணர்களையும் பெண்சாரணர்களையும் பார்வையிடுதல். $11\frac{1}{2}$ மணிக்கு லீன்ஸ்டர் படையைப் பார்வையிடுதல். 12 மணிக்கு போலீசார் கவாத்து பழகுவதைப் பார்வையிடுதல். $12\frac{1}{2}$ மணிக்கு யுத்த ஊழியஞ்செய்து பென்ஷன் பெற்றவர்களைப் பார்வையிடுதல். பிற்பகல் $1\frac{1}{4}$ மணிக்கு லீன்ஸ்டர் படையுடன் சிற்றுண்டி அருந்துதல். மாலை $4\frac{1}{2}$ மணிக்கு கிண்டியில் போலோ விளையாட்டும் தோட்டக் கச்சேரியும். இரவு 8-20 மணிக்கு கவர்ன்மெண்டு மாளிகையில் விருந்தும். அடையாறு கிளப்பில் நர்த்தனமும்.

17௳ செவ்வாய்க்கிழமை பிற்பகல் $1\frac{1}{2}$ மணிக்கு கவர்ன்மெண்டு மாளிகையில் சிற்றுண்டி. மாலை 3 மணிக்கு குதிரைப் பந்தயங்கள். இரவு $8\frac{1}{2}$ மணிக்கு மதராஸ் கிளப்பில் விருந்து. இரவு 11மணிக்கு பெங்களூருக்குப் புறப்படுவார்.

The Catholic Indian Philanthropic Society, Madras.

கத்தோலிக்கு இந்தியர் பரோபகார சபை, சென்னை.

(அர்ச். பாப்பானவரின் ஸ்தானாதிபதி, சென்னை அதிமேற்றிராணியார், திருமயிலை மேற்றிராணியார் ஆகிய ஆண்டவர்களானவர்களின் அங்கீகாரமும் ஆதரணையும் பெற்றுள்ளது.)

கத்தோலிக்கு இந்தியரின் முயற்சியால் ஸ்தாபிக்கப்போகும், அர்ச். செபஸ்தியார் மடமும் (Orphanage) கல்வி, கைத்தொழிற்சாலையும் (Industrial School).

நமது சத்திய திருச்சபையின் சகோதரர்களாகிய நண்பர்களே! இந்த "நல்ல ஆயன்" பத்திரிகையின் ஒரு பக்கம் பிரசுரித்திருக்கும் ஷை சபையின் பொது விண்ணப்பத்தை தயையுடன் இம்முறையும் வாசிக்கத்தங்களை வெகுவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். கத்தோலிக்கு இந்தியருக்குள் மிகவும் ஏழைகளும் தரித்திரருமாகிய குடும்பங்கள் சென்னையிலுள்ள அநேக சேரிகளிலுண்டென்பது அனைவரும் அறிந்த விஷயமே! இந்தக் குடும்பங்களில் தாய் தந்தையற்ற அநேக பிள்ளைகள் உடுக்க வஸ்திரமும் உண்ண போசனமும் இல்லாமல் கஷ்டத்தையடைந்து, சொற்ப கல்வியேனும், யாதாமொரு கைத்தொழிற் பயிற்சியேனுமில்லாமல் ஏதேச்சையாய் வளர்ந்து வீணாய் கெட்டுப்போகும் நிர்ப்பாக்கியத்தினின்று அச்சிறுவர்களை மீட்டு, பாதுகாக்கும்பொருட்டு, ஒரு மடமும் கல்வி, கைத்தொழிற்சாலையும் ஏற்படுத்துவது சபையின் தரும நன்னோக்கங்களில் பிரதானமானதென ஷை பொது விண்ணப்பத்தால் தாங்கள் அறிந்திருக்கின்றீர்கள்.

இவ்வருடம் மார்ச்சு மாதம் முதற்கொண்டு இந்த சஞ்சிகையில் பிரசுரமாகிவரும் சபையின் பொது விண்ணப்பத்தின் பலனாய் இன்றுவரையில் சபை நன்றியறிதலுடன் பெற்றுள்ள உதவி அடியில் வருமாறு.

"பிரதம போஷகர்களாய்" சேர்ந்த நண்பர்களிடமிருந்து ... ரூ.	400	0	0
"ஜீவகால மெம்பர்களாய்" ... ... "	55	0	0
"சாதாரண மெம்பர்களாய்" ... ... "	37	8	0
"அபிமானிகளாகிய" மற்றும் நண்பர்களிடமிருந்து ... "	76	0	0
ஆக ... "	568	8	0

மேற்குறித்த தொகையைக்கொண்டும், சபையின் நிதியிலிருந்தெடுத்த தொகையைக்கொண்டும், பொது விண்ணப்பத்தில் குறித்திருக்கும், ஒரு சிறிய கட்டிடம் தொடங்கியிருக்கின்றது. இந்தக் கட்டிடம் முடிவானவுடன், உதவிக்கெதிர் பார்த்திருக்கும் திக்கற்ற சில சிறுவர்களை மடத்தில் சேர்த்து ஆதரிக்கக்கூடுமாயிருக்கும். இக்கட்டிடத்தைப் பூர்த்தி செய்யவோ இன்னும் ரூ. 2,000 வேண்டியதாயிருக்கிறது. இன்னும் 7 கனவான்கள் பிரதம போஷகர்களாகவாயினும், 20 கனவான்கள் முதல் வகுப்பு ஜீவகால அங்கத்தவர்களாகவாயினும், அல்லது 40 கனவான்கள் இரண்டாம் வகுப்பு ஜீவகால அங்கத்தவர்களாகவாயினும், தயையுடன் முன்வந்து உதவி புரிவார்களாகில் வருகிற மார்ச்சு மாதத்திற்குள் கட்டிடம் முடிவாகிவிடும். உதவி புரிதற்கேற்ற சமயம் இதுவே! நன்கொடைகள் செலுத்தும்விதமும், உபகாரிகள் பெறக்கூடிய நன்மைகளும் பொது விண்ணப்பத்தில் குறித்திருக்கின்றன. மேற்குறித்த மூன்று வகுப்பில் சேராமலே, அநேக நண்பர்கள் தங்களாலியன்ற உதவியைப் புரியக்கூடுமாகையால் அன்னவர்கள் தயை செய்தனுப்பும் நன்கொடைகள் எவ்வளவு சிறியதாயினும் நன்றியறிதலோடு ஏற்றுக்கொள்ளப்படும்.

சர்வேசுரனுடைய சித்தத்தால், கத்தோலிக்கு இந்தியரில் கனதனவான்களும், சிறந்த வியாபாரிகளும், உயர்ந்த உத்தியோகஸ்தர்களும் ஆயிரங்கணக்காயிருக்கின்றமையால், இந்த நல்லுதவியை சமயத்தோடு பெறுவோமென்னும் முழு நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம்.

எல்லாம்வல்ல இறைவன் திருக்கருணையால் இந்த விண்ணப்பம் நற்பயனடையவும், இந்த தரும விஷயமாய் உதவி புரிபவர்களெல்லோரும் சர்வேசுரனுடைய திரு ஆசீர்வாதத்தைப் பெற்றுய்யும் வரத்தைப்பெறவும், அவரின் திருவடிகளை நமஸ்கரித்து வேண்டுகிறோம்.

கடிதங்களும், பொருளுதவியும் சபையின் காரியதரிசி அவர்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு * அனுப்ப தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு,
(காரியநிர்வாக சபையாருக்காக)
ம. இரா. மகிமைதாஸன், சபைத்தலைவர்.
M. R. MAHIMADOSS, *President.*
(Retired Dy: Presidency Postmaster, Madras).
22—11—1921.

* பா. [illegible]யம், காரியதரிசி.
B. [illegible]IAM, *Secretary*, C.I.P.S.,
Post Box 178, P. T. O. Madras.

161986